
மிகயீல் ஷோலகவ்
கன்னி
நிலம்

மிகயீல் ஷோலகவ்

கன்னி நிலம்

இரண்டு பாகங்கள்

இரண்டாவது பாகம்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: தா. பாண்டியன் எம்.ஏ.
திருந்திய வடிவம்: நா. முகம்மது செரீபு எம்.ஏ.
ஓவியர்: இரீனா மர்காரவா

Михаил Шолохов

ПОДНЯТАЯ ЦЕЛИНА

В двух книгах

КНИГА ВТОРАЯ

На тамильском языке

Mikhail Sholokhov

VIRGIN SOIL UPTURNED

In two volumes

VOLUME TWO

In Tamil

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் **ராதுகா பதிப்பகம்** மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Ш $\frac{4702010200-273}{031(01)-86}$ 288-86

ISBN 5-05-000918-9
ISBN 5-05-000920-0

பொருளடக்கம்

அத்தியாயம் ஒன்று

மழை நீரால் நிலம் விரிந்து, காற்று மேகங்களைக் கலைக்கும் போது பளபளப்பான சூரியக் கதிரில், ஒளியில் திளைத்து நீலநிற ஆவியை உமிழ்ந்தது. நதியிலிருந்தும், நீர் தேங்கிய சதுப்புத் தாழ்நிலங்களிலிருந்தும் பனி மூட்டங்கள் எழுந்தன. அவை கிரெமியாச்சி லோக் கிராமத்தின் வழியாக அலை அலையாக உருண்டு, தாழ்வான ஸ்டெப்பி நிலக்குன்றுகளின் மீது சென்று, அங்கே பனியார்ந்த நிலையில் புலப்படா நுண் பொருளாய்க் கரைந்து போயின. எல்லா இடங்களிலும் மரங்களின் இலைகளிலும், கூரை வேய்ந்த குடிசைகளின் கூரைகளிலும், களஞ்சியங்களிலும், சிதறிய ஈயக்குண்டுகள் போல, பனித்துளிகள் படிந்திருந்தன; அவற்றின் சுமையால் புல் இதழ்கள் குனிந்துநின்றன.

ஸ்டெப்பி படுக்கை சமவெளியில் முழங்கால் அளவு புல் வளர்ந்திருந்தது. ஊர்ப் பொது நிலத்திற்கு அப்பால் நறுமணமுள்ள வாசனைச் செடி பூத்திருந்தது. மாலை நேரத்தில் அதன் தேன்மணம் கிராமம் எங்கும் பரவி, பெண்களின் இதயத்தில் ஏக்கத்தை நிரப்பியது. மாரிக்கால தானியக் கதிர்கள் அடிவானத்தைத் தொடும் கரும் பச்சைப் பரப்பாக விரிந்து கிடந்தன. வசந்தகாலத்தில் விதைக்கப் பெற்ற வயல்கள், வழக்கத்திற்கு மாறாக நிறைந்த விளைச்சலால் கண்ணை மகிழ்வித்தன. மணற்பாங்கான நிலத்தில் இளம் சோளக் கதிர்கள் நிமிர்ந்து நின்றன.

ஜூன் மாத இடையில், பருவம் நன்றாக இருந்தது. விண்ணில் ஒரு மேகம்கூடக் காணப்படவில்லை. பூமழை நீரில் குளித்து மலர்ச்சியுற்றிருந்த ஸ்டெப்பி சமவெளி, சூரிய

காரணம் உண்டென்றும் அவன் நன்றாக அறிவான். அநேகமாக, ஒவ்வொரு இரவும், தொலைதூரக் கிராமங் களிலிருந்தும் பட்டி தொட்டிகளிலிருந்தும், அவனது பழத் தோட்டத்திற்குப் பின்னாலுள்ள குன்றின் அடிவாரத்திற்குத் தூதுவர்கள் வந்தார்கள். குன்றின் மீதுள்ள மரத்தடியில் குதிரைகளைக் கட்டிவிட்டு, அவர்கள் கீழே நடந்தே வந் தார்கள். அவர்கள் அமைதியாகத் தட்டும் அடையாளத் திற்கு, பதிலளிப்பது போல, விளக்கை ஏற்றாமல் கத வைத் திறந்து வீட்டின் பின் அறையில் இருக்கும் பொலவ்த் ஸெவைக் காண, அவர்களை அழைத்துச் செல்வான். முற் றத்தைப் பார்த்திருக்கும் அந்த அறையின் இரு சன்னல் களும் நாள் முழுவதும் மூடியிருக்கும்; அவற்றின் உட்புறம் கனத்த சாம்பல் நிறக் கம்பளிப் போர்வையால் முடியிருக் கும். வெயில் காலத்திலும்கூட அந்த அறையில், ஒரு நில வறை போல கெட்ட காற்றும், இருட்டும், ஈராகசிவும், பூஞ்சைக்காளான் நெடியும் புரையோடியிருக்கும். பகல் பொழுதில் பொலவ்த்ஸெவும், லியதியேவ்ஸ்கியும் வெளியே செல்ல மாட்டார்கள். விரும்பியே கைதிகளாகிக் கொண்ட இவர்களின் இயற்கைத் தேவையை நிறைவு செய்ய மண் போடப்பட்ட தரையில் ஒரு வாளி வைக்கப் பட்டிருந்தது.

இரவில் நடமாடும் பார்வையாளர்கள் வரும் போது, யாக்கவ் லுக்கீச் நடைப் பத்தியில் தீக்குச்சியைக் கொளுத்தி, அவர்கள் ஒவ்வொருவரையும் அவசரமாக விசாரிப்பான். ஆனால் ஒரு முறை கூட அவன் அறிமுகமான முகத்தைச் சந்தித்ததில்லை. அவர்கள் எல்லாருமே அந்நியர்கள். நெடுந் தொலைவிலிருந்து வருகிறவர்கள் என்பதைத் தோற் றமே காட்டிவிடும். ஒரு முறை அவன் அஞ்சாது கிசுகிசுத் தான், ''கஸாக் நண்பா, எங்கிருந்து நீ வருகிறாய்?''

தீக்குச்சியின் மங்கல் ஒளி, ஒரு வயதான தாடி வைத் திருந்த, நல்ல இயல்புடையவனாகத் தோன்றிய கஸாக்கின் முகத்தில் படர்ந்த பொழுது, அவனுடைய கண்கள் சுருங்கு வதையும், பற்கள் பரிகாசச் சிரிப்பில் மின்னுவதையும் ஒஸ்த்ரவ்னோவ் கண்டான்.

''வேறு உலகத்திலிருந்து வருகிறேன், கஸாக்கியே!'' என்று அந்த மனிதன் மெல்லக் கிசுகிசுத்தான். பின்னர், ''வேகமாகத் தலைவரிடம் அழைத்துப்போ; கேள்விகள் கேட்காதே!'' என்று கடுமையாக மொழிந்தான்.

''ஸெதோய்க்கு என் நன்றியைத் தெரிவியுங்கள். இக் கடிதத்திற்குப் பதில் கிடையாது. பன்னிரண்டாம் தேதிக்குப் பிந்தாது அவரிடமிருந்து செய்தியை எதிர்ப்பார்ப்பேன். இப்போது நீங்கள் போகலாம். விடியற்காலத்தில் நீங்கள் சிக்கிக்கொள்ள மாட்டீர்கள் அல்லவா?''

''ஒருகாலும் மாட்டோம். எங்களிடம் பாய்ந்து செல் லும் நல்ல குதிரைகள் உண்டு'' என்றான் தாடிக்காரன்.

''சரி, போய் வாருங்கள். உங்களது பணிகளுக்கு நன்றி.''

''பணியாற்றுவதில் நாங்கள் மகிழ்வடைகிறோம்!''

அவர்கள் இருவரும் ஒரே ஆளைப் போலத் திரும்பி நின்று குதிகால்களைத் தொட்டுவிட்டுப் புறப்பட்டார்கள். லுக்கீச் பெருமையாக நினைத்துக் கொண்டான்: ''அவர் கள் பழைய முறையைச் சேர்ந்த ராணுவ வீரர்கள் என்று பார்த்தால் தெரியுமே!.. ஆனால் அவர்கள் ஏன் தங்க ளுடைய பதவியைக் குறிப்பிடுவதில்லை?..''

பொலவ்த்ஸெவ் அவன் அருகே வந்து, தமது உரம் வாய்ந்த கரத்தை அவன் தோள்மீது வைத்தான். யாக்கவ் லுக்கீச் தன்னையறியாமலே நெஞ்சை நிமிர்த்தி, கரங்க ளைப் பக்கவாட்டில் அழுத்தி, விறைப்பாக நின்றான்.

''என்ன வீரர்கள் பார்த்தாயா?'' என்று மெல்ல நகைத் தான் பொலவ்த்ஸெவ். ''இவர்கள் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். வோய்ஸ்கவோய் கிராமத்து சில கோழைகளையும், காலிகளையும் போல அல்லாமல், இவர் கள் நரகத்துக்குக்கூட என்னைப் பின்பற்றி வருவார்கள். இவர்கள் நமக்கு என்ன கொண்டுவந்திருக்கிறார்கள் என்று பார்ப்போம்...''

ஒரு காலை முழந்தாளிட்டு பொலவ்த்ஸெவ் அந்தக் கறுப்பு அங்கிப் பொட்டலத்தின் தோல் வாரை மெல்ல அவிழ்த்து, பூட்டுப் பூட்டாகக் கழற்றி வைக்கப்பெற்றி ருந்த ஓர் எந்திரத் துப்பாக்கியின் பாகங்களையும், வழ வழப்பான சாக்குத் துணியில் மெல்லிய ஒளி வீசிக்கொண் டிருந்த நான்கு ரவை மருந்துத் தட்டுகளையும் வெளியே எடுத்தான். பின்னர், கவனமுடன் இரண்டு வாட்களை உறை யிலிருந்து உருவினான். ஒன்று, நாள்பட்ட, நன்கு பயன் பட்ட உறையிலிருந்த சாதாரண கஸாக்கிய வாள். மற்றது, அதிகாரிகளின் வாள்; அதன் கைப்பிடியில் வெள்ளிப் பூச்சு

வேலைகள் அதிகம்; மங்கிப்போன செயின்ட் கியோர்கி சின்னமும் அதில் உண்டு. அதன் உறையானது கறுப்பு காக்கஸஸின் வாரிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது.

இரண்டு கால்களையும் மண்டியிட்ட வண்ணம், அந்த வெள்ளிப் பூச்சுமானத்தின் மங்கிய பளபளப்பை ரசிப்பதற்காகத் தனது தலையைப் பின்னுக்குத் தள்ளி, பொலவ்த்ஸெவ் வாளை வெளியே தூக்கிப்பிடித்தான்; பிறகு அதை மார்போடு சேர்த்து அணைத்து, நடுங்கும் குரலில் கூறினான்: ''என் அன்பே! பேரழகே! எனது மெய்யான பழைய நண்ப! நீ ஈடுபாடுகொண்ட பணியை எனக்காக இன்னமும் செய்கிறாய்!''

அவனது பரந்து அகன்ற மோவாய் சிறிது நடுங்கியது; கண்களில் வெறிசேர்ந்த ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. ஆனால், அவன் தன்னை ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டான். யாக்கவ் லுக்கீச்சை நோக்கி, வெளுத்துத் திரித்த முகத்துடன் அவன் உரக்க வினவினான்: ''லுக்கீச்! இதை உனக்கு அடையாளம் தெரிகிறதா?..''

யாக்கவ் லுக்கீச் குறுகி நெளிந்து, தலையை ஆட்டினான். அவன் அந்த வாளை அடையாளம் கண்டு கொண்டான். ஆஸ்திரியப் போர்முனையில் இளம் குதிரைப்படை அதிகாரி பொலவ்த்ஸேவ், 1915ஆம் ஆண்டில் அதை அணிந்திருந்தான்...

தன் படுக்கையில் மௌன அலட்சியத்துடன் படுத்திருந்த லியதியேவ்ஸ்கி காலைத் தொங்கவிட்டு, எழுந்து உட்கார்ந்தான். எலும்புகள் சொடக்கு விடுமாறு சோம்பல் முறித்தான்; தனது ஒற்றைக் கண்ணில் விரக்தி ஒளிர, அக்காட்சியைக் கண்டான்.

''உள்ளமுருக்கும் மறு சந்திப்பு! கலகக்காரனின் அற்புதக் காதல்! சீச்சீ! இது போன்ற போலி உணர்ச்சி நிறைந்த காட்சிகளை நான் வெறுக்கிறேன்!'' என்று கரகரத்த குரலில் சொன்னான்.

''சும்மா இருங்கள்!'' என்று கண்டித்தான் பொலவ்த்ஸெவ்.

''நான் ஏன் சும்மா இருக்க வேண்டும்? எதற்காக?'' என்று தோள்களைக் குலுக்கினான் லியதியேவ்ஸ்கி.

''தயவு செய்து சும்மாயிருங்கள்!'' என்று மெதுவாகக் கூறிய பொலவ்த்ஸெவ் எழுந்திருந்து, மெல்ல மெல்ல,

நரம்புத் தளர்ச்சி என்றால், அது அவமானம்! வெட்கக் கேடானது! ஆனால், நீங்கள் பாசாங்கு செய்கிறீர்கள், பொலவ்த்ஸெவ். உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி எதுவும் இல்லை. அது வெறும் கற்பனை! நான் உங்களை நம்பவில்லை ஓர் அதிகாரி என்ற முறையில் நான் நம்பவே மாட்டேன்!''

''நீங்கள் ஓர் அதிகாரியல்ல. நீங்கள் ஒரு பன்றி!''

''இந்த வார்த்தையைப் பல முறை உம்மிடமிருந்து நான் கேட்டிருக்கிறேன். இருந்தாலும், உம்மை நான் வாள் சண்டைக்கு அழைக்கப் போவதில்லை. நாசமாய்ப் போக! அதற்கான காலமும் இடமும் கடந்து போய்விட்டன. அதை விட முக்கியமான அலுவல்கள் இப்போழுது உள்ளன. மேலும், என் மதிப்புக்குரிய நண்பரே, வாள் சண்டை என்பது, கொடுவாள்களால் செய்யப்பட வேண்டிய சங்கதி. நீர் உருக்கமாகவும் நளினமாகவும் உமது மார்போடு அணைத்துக் கொண்டிருந்தீரே ஒரு போலீஸ்காரனின் ஈ ஓட்டும் பட்டாக் கத்தி, அதனால் செய்யப்பட வேண்டியதல்ல. அநுபவம் மிக்க பீரங்கிப் படைவீரன் என்ற முறையில், நான் இது போன்ற பயனற்ற அழகுச் சாதனங்களை விரும்பவில்லை. உம்மை வாள்சண்டைக்கு இழுக்க வேண்டாம் என்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு: நீர் சாதாரணக் குடியில் பிறந்தவர்; நான் பழம் பெரும் போலந்துச் சீமான்களின் வழியில் வந்தவன்...''

''ஓய், போலந்துப் பன்... யே! அல்ல, அல்ல, பண்ணை யாரே! இங்கே பாரய்யா!'' என்று பட்டென்று இடை மறித்தான் பொலவ்த்ஸெவ்; அவனது குரலில் பழைய உறுதியும், கணீரென்று அதிகாரமிடுக்கும் ஏறின. ''செயின்ட் கியோர்கி முத்திரை பொறித்த வாளையா நீ கேலி செய்யத் துணிந்தாய்? இன்னும் ஒரு வார்த்தை நீ பேசினால் உன்னை நாய் போல வெட்டி எறிவேன்!''

லியதியேவ்ஸ்கி படுக்கையில் நிமிர்ந்தான். அவனது உதட்டிலே நெளிந்த கிண்டல் சிரிப்பு மறைந்துவிட்டது. அவன் மிகுந்த அக்கறையுடன் கூறினான்: ''இதை நான் நம்புகிறேன்! உமது நோக்கங்களின் முழுமையான நேர்மையை, உமது குரல் நன்கு எடுத்துக்காட்டுகிறது. ஆகவே, நான் வாயை மூடிக்கொள்ள வேண்டியது தான்.''

அவன் மீண்டும் படுத்த வண்ணம், பழைய கம்பளிப் போர்வையைக் கழுத்துவரை இழுத்து மூடிக்கொண்டான்.

''நீ என்ன சொன்னாலும், உன்னைக் கொன்றே தீருவேன்'' என்று காளையைப் போல தலையைக் குனிந்த வண்ணம், லியதியேவ்ஸ்கியின் படுக்கையின்மீது ஏறி நின்றுகொண்டு பிடிவாதமாகக் கூறினான் பொலவ்த்ஸெவ். ''இந்த வாளால் உன்னுடைய போலந்துப் பணக்காரப் பன்றியை இரண்டு துண்டாக்குவேன். எப்பொழுது செய்வேன் என்று உனக்குத் தெரியுமா? தோன் நதி வட்டாரத்தில் சோவியத் ஆட்சியை நாம் தூக்கி எறிந்த பிறகு!''

''அப்படியானால் நான் பழுத்த கிழமாக வாழ்வேன். ஒருவேளை சிரஞ்சீவியாக வாழ்ந்தாலும் வாழ்வேன்'' எனச் சிரித்தான் லியதியேவ்ஸ்கி. பிறகு ஏதோ சபதமிட்டுக் கொண்டு, சுவரை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

கதவருகில் நின்ற யாக்கவ் லுக்கீச் தீக்கங்கின்மீது நிற்பது போல, காலை மாற்றி மாற்றி வைத்துக்கொண்டு நின்றான். பல முறை அவன் அந்த அறையிலிருந்து நழுவ முயன்றான். ஆனால், பொலவ்த்ஸெவ் அவனைச் சைகை காட்டித் தடுத்தான். கடைசியில், அவனால் மேலும் பொறுக்க முடியாது போகவே, அவன் கெஞ்சினான்: ''எஜமான்! என்னைப் போக அநுமதியுங்கள்! பொழுது விடியப் போகிறது. நான் முன்னதாகவே வயலுக்குப் போக வேண்டும்...''

பொலவ்த்ஸெவ் ஒரு நாற்காலியில் அமர்ந்தான், வாளை எடுத்து முழங்கால்களின் குறுக்கே, மடியில் வைத்தான். அதைக் குனிந்து பார்த்த வண்ணம், நீண்ட அமைதியில் மூழ்கிப் போனான். மேசை மீதுள்ள பெரிய பைக்கடிகாரத்தின் ஒலியையும், அவனது வலிய பெருமூச்சையும் தவிர, அறையில் வேறு ஓசையில்லை. அவன் உறங்குகிறான் என யாக்கவ் லுக்கீச் எண்ணினான். ஆனால் அவன் தனது பருத்த உடலை உலுப்பிக்கொண்டு எழுந்திருந்து சொன்னான்: ''லுக்கீச், இந்தச் சேணங்களை எடுத்துக்கொள். மற்றவற்றை நான் எடுத்துக்கொள்கிறேன். நாம் போய் காய்ந்து போன பாதுகாப்பான ஓர் இடத்தில் ஒளித்து வைக்கலாம். ஒருவேளை அந்த இடத்தில்... என்ன சொல்லித் தொலைப்பது—நீ விறகு போட்டிருக்கிறாயே... அந்தக் கொட்டகையில் வைக்கலாம் அல்லவா?''

''அது நல்ல இடம்தான்'' என்றான் யாக்கவ் லுக்கீச்.

வெளியேற வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருந்ததனால் மகிழ்ச்சியோடு ஒத்துக் கொண்டான்.

அவன் ஒரு சேணத்தின் மீது கை வைத்தானோ இல்லையோ, லியதியேவ்ஸ்கி தன்மீது வெந்நீர் ஊற்றப்பட்டது போல படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தான்.

''நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்ன எண்ணிக்கொண்டு செய்கிறீர்கள் என்று நான் கேட்கலாமா?'' என்று தனது ஒற்றைக்கண் அனல் வீசச் சீறினான் அவன்.

அந்த அங்கியை எடுக்கக் குனிந்த பொலவ்த்ஸெவ் நிமிர்ந்து, கடுகடுப்பாகக் கேட்டான்: ''ஏன்? என்ன விஷயம்? உங்கள் ஆத்திரத்துக்குக் காரணம் என்ன?''

''உமக்குப் புரியவில்லையா என்ன? சேணங்களையும் அந்தத் துருப்பிடித்த இரும்பையும் வேண்டுமானால் ஒளித்து வையும். ஆனால், எந்திரத் துப்பாக்கியும், தோட்டாத் தட்டுகளும் இங்கே இருக்கட்டும்! நீர் ஒரு நண்பனின் கிராமிய வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கவில்லை. எந்திரத் துப்பாக்கி நமக்கு எந்த நிமிடத்திலும் தேவைப்படலாம். நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.''

சிறிது சிந்தித்துவிட்டு, பொலவ்த்ஸெவ் இணங்கினான்: ''ஏ, போலந்து ரத்ஸிவிலுடைய வேசி மகனே. நீர் சொல்வது சரிதான். அப்படியானால் எல்லாம் இங்கே இருக்கட்டும். லுக்கீச், நீ உறங்கச் செல்லலாம். உனக்கு இப்போது விடுதலை.''

பழங்கால ராணுவப் பயிற்சி எவ்வளவு நிலைத்து நிற்கிறது! ஒஸ்த்ரவ்னோவ் சிந்திக்கு முன்பே, அவனது வெறுங் கால்கள், தன்னுணர்வின்றி, ஒரு ''இடப்பக்கமாக பின்புறம் திரும்பின'' அவனது மரத்துப்போன குதிகால்கள் வறண்ட, ஓசையற்ற முறையில் ஒன்று சேர்ந்தன. பொலவ்த்ஸெவ் இதனைக் கவனித்து மெல்ல நகைத்தான். ஆனால் யாக்கவ் லுக்கீச் கதவை இழுத்து மூடியதும், தன் தவறை உணர்ந்தான். ''அந்தத் தாடிக்காரப் பிசாசின் சுறுசுறுப்பான ராணுவ வணக்கம், தன்னை சிரமத்திற் குள்ளாக்கி விட்டதே'' எனப் பொருமினான் அவன்.

யாக்கவ் லுக்கீச் பொழுதுவிடியும் வரை கண்களை மூடவில்லை. சோவியத் ஆட்சிக்கு எதிரான காலத்தின் வெற்றி தோல்வி பற்றிய நம்பிக்கையும் அவநம்பிக்கையும், இந்த

இரு கலகக்காரர்களுடன் சிறிதும் முன்யோசனையின்றிச் சேர்ந்தது குறித்த காலம் தாழ்ந்த வருத்தமும் அவனை மாறிமாறி வதைத்தன. ''நான் மிகவும் அவசரக்காரன். நான் பலிகடா ஆகிவிட்டேன்; வெட்டரிவாளின் முன் கழுத்தை நீட்டிவிட்டேன்!'' எனத் தனக்குள் அரற்றினான் அவன். ''நான் கொஞ்சம் பொறுத்து இருந்திருக்க வேண் டும். சிறிது பின்னணியில் நின்றிருக்க வேண்டும். சட் டென்று அலெக்சாந்தர் அனீசிமவிச் பொலவ்த்ஸெவிடம் ஆணையிட்டு அணிசேர்ந்திருக்கக் கூடாது. கிழட்டு மூடம் நான்! இவர்கள் கம்யூனிஸ்டுகளை விடக் கெட்டிக்காரர் களாய் இருந்தால், நான் இவர்களுடன் சேர்ந்து பயன் அடைந்திருக்கலாம். ஆனால், நான் என்னையும் அறியாமல் இவர்கள் வண்டியில் பயணம் செய்யத் துவங்கிவிட்டேன்... சிறிது இப்படியும் எண்ணிப் பார்க்கலாம். நான் பின்வாங்கி விடுகிறேன்; மற்றவர்களும் என்னைப் போலவே செய் கிறார்கள். அப்பொழுது என்ன நடக்கும்? இந்தப் பீடை பிடித்த சோவியத் ஆட்சி, வாழ்நாள் முழுவதும் எங்கள் மீது சவாரி செய்வதைச் சகித்துக்கொள்வதா? அது எந்த வகையிலும் கூடாது! அதனுடன் போர் புரியாமல், அதை ஒழிக்க முடியாது! அழிக்கவே முடியாது! இரண்டில் ஒன்று தீர்மானமானால் நல்லது... அலெக்சாந்தர் அனீசிமவிச் அயல் நாட்டுப் படைகள் வருமென்றும், குபானிடமிருந்து உதவி கிட்டுமென்றும் உறுதி கூறுகிறான். கேட்பதற்கு எல் லாம் இனிமையாகத்தான் இருக்கிறது. ஆனால், என்ன நடக்கப் போகிறதோ? ஆண்டவனுக்கே வெளிச்சம்! அயல் நாட்டினர் நம் மண்ணின்மீது படை எடுக்கும் எண்ணத் தைக் கைகழுவிவிட்டால்? பிறகு என்ன? அவர்கள் 1919இல் செய்ததைப் போல, பெரிய ஆங்கில புறமேற்சட்டைகளை மட்டும் அனுப்பிவிட்டு தமது வீடுகளில் இருந்துகொண்டு காபி குடித்துக்கொண்டும், மனைவிமாருடன் இன்பமாகப் பொழுதைப் போக்கிக்கொண்டும் இருப்பார்கள். அப்போது அந்தப் பெரிய புற மேற்சட்டைகள் நமக்கு என்ன உத வும்? நமது மூக்கில் வழியும் இரத்தச் சளியைத் துடைக்க நன்றாக உதவும். அவ்வளவு தான். போல்ஷெவிக்குகள் நம்மைத் தூள்தூளாக்கி விடுவார்கள். துளியும் சந்தேக மில்லை! அதில் அவர்கள் கைநேர்ந்தவர்கள். அவர்களுக்கு எதிராகக் கலகம் செய்யும் நம் கதி, அதோ கதிதான்.

தோன் நதிப்பிரதேசத்தில் எல்லாமே புகைந்து போய் விடும்!''

இந்தச் சிந்தனைகள் யாக்கவ் லுக்கீச்சைத் துயரத்தில் அழுத்தின. அவனுக்கு அழுகை வரும் போலிருந்தது. அவன் நெடு நேரம் பெருமூச்சு விட்டுக்கொண்டும், முணகிக்கொண்டும் இருந்தான். சிலுவைக் குறியிட்டு வழிபாடு செய்தான்; பிறகு அவனது துயர நெஞ்சம் உலக விவகாரங்களுக்குத் திரும்பியது, ''அலெக்சாந்தர் அனீசிமவிச்சும், போலந்து ஒற்றைக்கண்ணனும் ஏன் ஒற்றுமையாக இருக்கக் கூடாது? எதற்காக அடிக்கடி ஒருவன் குரல்வளையை ஒருவன் நெரிக்கிறார்கள்? அவர்களை ஒரு மாபெரும் பணி முன்னோக்கி இருக்கிறது. அவர்களோ பட்டியில் அடைபட்ட வெறி நாய்கள் போல வாழ்கிறார்கள். எப்பொழுதும் அந்த ஒற்றைக்கண்ணன் தான் சண்டையைத் தொடங்குகிறான். அவன் ஒரு குள்ள நரி. ஒரு வேளை ஒன்று சொல்கிறான், மறு வேளை மற்றொன்று சொல்கிறான். அவன் மோசக்காரன். அவனை ஓர் அங்குலத்திற்கும் நான் நம்ப மாட்டேன். 'ஒற்றைக்கண்ணனையும், கூனனையும், சொந்த மனைவியையும் நம்பாதே!' என்று சும்மாவா சொல்கிறார்கள்? அலெக்சாந்தர் அனீசிமவிச் அவனைக் கொல்வான்; நிச்சயம் அவனைத் தீர்த்துக் கட்டுவான்! பரவாயில்லை, அவன் நம் மதத்தைச் சார்ந்தவன் அல்ல. எப்படியும் தொலைந்து போகட்டும்.''

இவ்வாறாக நம்பிக்கையூட்டும் எண்ணங்களில் ஊசலாடி, அமைதி குலைந்த சிறு உறக்கத்தில் ஆழ்ந்தான் யாக்கவ் லுக்கீச்.

அத்தியாயம் இரண்டு

யாக்கவ் லுக்கீச் கண் விழித்துப் பார்க்கும் போது வெச்சமாக இருந்தது. ஒரு மணி நேரத்திற்குள் பல கனவுகளைக் கண்டுவிட்டான். ஒவ்வொரு கனவும் அதற்கு முந்தியதை விட அபத்தமாகவும், அருவருப்பாகவும் இருந்தது.

அவன் இளமையுடனும் துடிப்புடனும், மணமகன் போல உடையணிந்து கம்பீரமாக, மாதாகோவிலின் சாய்வு மேசையருகே நிற்கிறான். அவன் அருகே நீண்ட திருமண ஆடை அணிந்து, வெண் மேகம் போன்ற முகத்திரையிட்டு, குலுக்கு

நடையுடன், கண்களில் காமக் குறும்பு நடம்புரிய லியதி யேவ்ஸ்கி நிற்கிறான். ''வாத்ஸ்லவ் அவ்குஸ்தவிச், நாம் இருவரும் மணம் புரிந்துகொள்வது சரியல்ல. நீ ஒன்றுக்கும் உதவாதவன். எனினும் நீயும் ஓர் ஆண்தான். ஆகவே, என்ன பயன்? மேலும், எனக்கு ஏற்கெனவே மணம் ஆகிவிட் டது. நாம் பாதிரியாரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடு வோம். இல்லாவிடில், அவர் நம்மை இணை சேர்த்து விடு வார். நாம் இந்தக் கிராமத்தாரின் ஏளனத்துக்கு ஆளா வோம்!'' இவ்வாறு கனவில் பேசினான் யாக்கவ் லுக்கீச். ஆனால், மணப்பெண் வடிவில் நின்ற லியதியேவ்ஸ்கி, தனது குளிர்ந்த அகங்கையில் யாக்கவ் லுக்கீச்சின் கையை இணைத்துக் கொண்டு, அவனை நோக்கிக் குனிந்த வண் ணம் ரகசியமாகச் சொன்னான்: ''உனக்குத் திருமணம் ஆகி விட்டதென்று யாரிடமும் சொல்லாதே! நான் உனக்குப் பெண்டாட்டி ஆகி, உன்னைத் திணற அடிப்பேன்!'' ''ஒற் றைக்கண் பேயே! நீ நாசமாய்ப் போக!'' என்று திட்டிய வாறு தன் கையைப் பிடுங்கிக்கொள்ள முயன்றான் யாக் கவ் லுக்கீச். ஆனால், லியதியேவ்ஸ்கியின் விரல்கள் உருக் கைப் போன்று உறுதியாக இருந்தன. யாக்கவ் லுக்கீச்சின் குரல் வியக்கத்தக்க முறையில் ஒலி இழந்துவிட்டது. அவ னது உதடுகள் கம்பளப் பஞ்சுபோல் உருமாறிவிட்டன... அவன் காறித் துப்பிக்கொண்டு எழுந்தான். அவனது தாடியும், தலையணையும் எச்சில் வடிந்து பிசுபிசுத்தன...

அவன், 'கர்த்தர் எங்களைக் காப்பாராக!' என்று சிலு வைக் குறியிட்டு முணுமுணுத்த உடனேயே மீண்டும் உறங் கினான். உடனே மற்றொரு கனவு. அவனும் அவனது மகன் செமியோனும் அகஃபோன் துப்த்ஸோவுடனும் ஏனைய கிராம மக்களுடனும் ஒரு பெரிய தோட்டத்தில் திரிந்து அலைந்து தக்காளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார் கள். அவர்களை வெண்ணுடை தரித்த பெண் மேற்பார் வையாளர்கள் கவனித்துக்கொண்டனர். அச்சமயம் என்ன காரணத்தாலோ, அவனும் அவனது கூட்டாளிக் கஸாக்கு கள் எல்லாரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால் அவனைத் தவிர வேறு யாரும் இதற்காக வெட்கப்பட்டதாகத் தெரிய வில்லை. துப்த்ஸோவ் தனது முதுகைக் காட்டிய வண்ணம், குனிந்து தக்காளி பறித்தான். யாக்கவ் லுக்கீச்சுக்குக் கோப மும் சிரிப்பும் திணறிக்கொண்டு வந்தன. ''அடே! காயடிச்ச

பிள்ளைக் குதிரையே! இங்கே பெண்கள் இருக்கிற நினைவு இருக்கட்டும்! அந்த மாதிரிக் குனிவதையாவது கொஞ்சம் நிறுத்து!''

யாக்கவ் லுக்கீச், உருமாற்றத்துடன் குந்திக் கொண்டு தக்காளிகளை வலது கையால் பறித்தான். தண்ணீரில் ஆடையின்றி குளிக்கச் செல்கிறவனைப்போல இடது கையை வைத்திருந்தான்...

யாக்கவ் லுக்கீச் கண் விழித்ததும், வெறித்த பார்வை யுடன் தன் எதிரே நோக்கிக்கொண்டு நெடு நேரம் படுக்கை யில் அமர்ந்திருந்தான். ''இம்மாதிரிக் கெட்ட கனவுகள் சும்மா வருவதில்லை. ஏதோ தொல்லை வரப் போகிறது!'' என்று அவன் தனக்குள் எண்ணிக் கொண்டான். அவன் இதயம் வேதனையால் கனத்தது, பின்னர், நன்றாக உறக் கம் கலைந்ததும், கனவில் கண்டவைகளை நினைந்து மீண் டும் காறித் துப்பினான்.

தெளிவற்ற மன நிலையில், அவன் உடை அணிந்து கொண்டான். உறுமிக்கொண்டு காலைச் சுற்றிய பூனையை எட்டி உதைத்தான். உணவு வேளையில், காரணமின்றி அறிவுகெட்டவள் என்று மனைவியைத் திட்டினான். வெகு ளித்தனமாக வீட்டு விஷயங்களை தன்முன் பேசியதற்காக தன் மருமகள் பெரிய பெண் என்றும் பாராமல், சிறுமி யாகப் பாவித்து, அவளை நோக்கிக் கோபத்துடன் கரண் டியை ஆட்டினான். தந்தையின் சீற்றத்தைக் கண்டு, செமி யோனுக்கு வியப்பு உண்டாயிற்று. அவன் நடுங்கியவன் போல் முகத்தைக் கோணங்கித்தனமாக வைத்துக்கொண்டு, மனைவியைப் பார்த்துக் கண்ணடித்தான். அவள் அமைதி யாக உடல் குலுங்க நகைத்தாள். உடனே எரிமலை வெடித்துவிட்டது. யாக்கவ் லுக்கீச் கரண்டியை மேசை மீது எறிந்துவிட்டுக் கோபம் தொண்டையை அடைக்கக் கத்தி னான்: ''ஒரு நாள் ஒரு கன்னத்தில் சிரிப்பு வரும் போது மறு கன்னத்தில் அறை விழும்!''

அவன் காலைச் சாப்பாட்டை அரைகுறையாக வைத்து விட்டு எழுந்தான், ஆனால் துரதிருஷ்டவசமாக, சூப்புக் கிண்ணத்தின் விளிம்பில் அவன் கைபட்டு சூடான சூப்பு முழுவதும் அவன் காற்சட்டையில் கொட்டிவிட்டது. அவன் மருமகள் முகத்தைக் கையால் மூடிய வண்ணம் எழுந்து ஓடிவிட்டாள். செமியோன் தலையைக் கையில் புதைத்த

வண்ணம், இடத்தை விட்டு அசையாமல் இருந்தான்; அவனது வாளிப்பான முதுகும், தோள்களும் சிரிப்பு மிகுதியால் குலுங்கிக் கொண்டிருந்தன. யாக்கவ் லுக்கீச்சின் அடக்க ஒடுக்கமான மனைவியாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''உனக்கு இன்று என்ன நேர்ந்துவிட்டது ஐயா? திசை மாறி இன்று படுக்கையிலிருந்து உறங்கினாயா? அல்லது, தீய கனாக் கண்டாயா?'' என்றாள்.

''கிழட்டுப் பிசாசே! அதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?'' என்று ஆங்காரத்துடன் உறுமியவண்ணம், வேகமாக வெளியேறினான் யாக்கவ் லுக்கீச்.

அவன் சமையலறையிலிருந்து வெளியேறிய வேகத்தில் அவனது புதிய பட்டுச் சட்டை கதவு நிலையில் இருந்த ஆணியில் மாட்டிக்கொண்டு, முழங்கையிலிருந்து மணிக் கட்டுவரை கிழிந்துவிட்டது. அவன் தன் அறைக்குச் சென்று பெட்டியில் வேறு சட்டையைத் தேடத் துவங்கினான். அச் சமயம் அவன் கவனமின்றிச் சுவரில் சாய்த்து வைத்திருந்த பெட்டியின் மூடி, சடாரென்று சரிந்து அவன் தலையின் பின்புறத்தைப் பதம் பார்த்துவிட்டது.

''அட சனியனே! என்ன நாள் இது!'' என்று சோர்வாகச் சொல்லிக் கொண்டு, ஒரு நாற்காலியில் நிலை குலைந்து விழுந்தான் யாக்கவ் லுக்கீச். மண்டையில் நன்றாய் வீங்கிப் புடைத்திருந்த இடத்தை விரல்கள் தடவின.

எவ்வாறோ அவன் சூப்புச் சிந்திய காற்சட்டையையும், கிழிந்த சட்டையையும் மாற்றி முடித்தான். ஆனால், மிகுந்த அவசரத்தில் இருந்ததால், காற்சட்டையின் பொத்தான்களை மாட்ட மறந்துவிட்டான். இந்த அலங்கோல நிலையில், யாக்கவ் லுக்கீச் கூட்டுப்பண்ணை நிர்வாக அலுவலகத்தை நோக்கி நடந்தான். தன்னைப் பார்த்துப் பெண்கள் ஏன் ஒரு மாதிரியாகச் சிரிக்கிறார்கள் என்றும், ஏன் விரைந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்றும் அவனுக்கு விளங்கவில்லை... அவனது குழப்பத்தை அட்டகாசமாய்த் தீர்த்துவைத்தான் ஷ்சுக்கார் தாத்தா.

''என் மகனே, யாக்கவ் லுக்கீச், கிழவனாகி விட்டாயோ?'' என்று அவன் முன்னால் நின்று பரிவுடன் கேட்டான்.

''இளமை திரும்பிவிட்டதென்று உனக்கு நினைப்போ?

முயலைப்போல் சிவந்து, நீர் படர்ந்த உன் கண்களைப் பார்த்தால், அப்படித் தோன்றவில்லையே!''

''இரவில் வாசிப்பதால் என் கண்ணில் நீர் வடிகிறது. சாகப்போகிற காலத்தில் நான் படிக்கத் தொடங்கி, உயர் தரக் கல்வி கற்று வருகிறேன், ஆனால் நான் சுத்தமாக இருக்கிறேன். கிழவனைப்போல உனக்குத்தான் மறதி வந்து விடுகிறது...''

''எது உன்னை அப்படி எண்ண வைத்தது?''

''நீ வாசலை அடைக்க மறந்துவிட்டாய்; கால்நடையை வெளியே மேய விட்டுவிட்டாய்...''

''செமியோன் வாசலை அடைத்துவிடுவான்'' என்று மறதி யாகக் கூறினான் லுக்கீச்.

''உனக்காக உன் வாசலைச் செமியோன் வந்து அடைக்க மாட்டான்...''

அசம்பாவிதத்தைச் சட்டென்று புரிந்துகொண்டு, தன் காற்சட்டையைக் குனிந்து பார்த்தான் யாக்கவ் லுக்கீச். வியப்பினால் பெரு மூச்சுவிட்டு, தன் விரல்களால் நளின மாகப் பொத்தான் போட்டுக் கொண்டான். அன்று காலை யில் நிகழ்ந்த துரதிர்ஷ்ட சம்பவங்களுக்கு முத்தாய்ப்பு வைப்பதைப்போல, அவன் நிர்வாக அலுவலக முற்றத்தில் நுழையும்போது, ஒரு பெரிய உருளைக்கிழங்கை மிதித்து, நிலைகுலைந்து நிலத்தில் உருண்டு வீழ்ந்தான்.

அவனுக்குப் 'போதும், போதும்' என்றாகிவிட்டது. நிச் சயமாக கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்திதான் இந்த விபரீதங்களுக்கெல்லாம் காரணம்! மூட நம்பிக்கை கொண்ட யாக்கவ் லுக்கீச்சுக்கு ஏதோ பெரிய துன்பம் தனக்காகக் காத்திருக்கிறது என்று உணர்ந்தான். வெளுத்து நடுங்கும் உதடுகளுடன் அவன் தவீதவின் அறையில் நுழைந்து கூறினான்: ''எனக்கு மனசு சரியில்லை, தோழர் தவீதவ். நான் இன்றைக்கு வேலைக்கு வராவிட்டால், உங்களுக்கு வருத்தம் இல்லையே? பொருள் காப்பாளர் என் வேலை யைப் பார்த்துக்கொள்வார்''.

''சரி, லுக்கீச். உன்னைப் பார்த்தால் நலமில்லை என்று தெரிகிறது. வீட்டுக்குப் போய், படுத்துக்கொள். நீயே மருத்துவரைப் பார்க்கிறாயா? நான் அவரை அங்கு அனுப் படுமா?''

''மருத்துவரால் எனக்கு உதவ முடியாது. நன்றாகப்

படுத்து உறங்கினால், எல்லாம் சரியாகிவிடும்...'' என்று சோகமாகத் தலையை ஆட்டினான் யாக்கவ் லுக்கீச்.

அவன் வீடு சேர்ந்ததும், படுக்கை அறையின் சன்னல் கதவுகளை மூடுமாறு உத்தரவிட்டான். ஆடைகளைக் களைந்து படுக்கையில் கிடந்த வண்ணம் தனக்கு வரவிருக்கும் ஆபத்தை அமைதியாக எதிர் நோக்கினான்... ''இந்த நாசமாய்ப் போகிற ஆட்சிதான் இத்தனைக்கும் காரணம்!'' என்று அவன் தனக்குத்தானே முணுமுணுத்தான். ''இந்த ஆட்சியில் இரவும் பகலும் எனக்கு நிம்மதியில்லை! இத்தனை வயதிலும் வராத முட்டாள்தனமான கனவுகள் எல்லாம் இப்போது வருகின்றன, பகல் வேலையிலே தொடர்ச்சியாக ஒரே தொல்லை... இந்த ஆட்சியிலே, ஆண்டவன் எனக்கு அளித்த வாழ்நாள் போதாது! காலம் வரும் முன்பே நான் போய்விடுவேன்! இது உறுதியிலும் உறுதி!''

அன்று அவன் பயந்ததுபோல, ஒன்றும் நிகழவில்லை. விபத்து, தாமதித்தே வந்தது. இரண்டு நாள் சென்று சற்றும் எதிர்பாராத இடத்திலிருந்து வந்தது...

படுக்கச் செல்லுமுன், யாக்கவ் லுக்கீச் ஒரு குவளை வோத்காவினால் தன் நெஞ்சுக்கு மேலும் வலுவூட்டிக் கொண்டான். எவ்விதக் கனவும் இன்றி, இரவை சுகமாகக் கழித்தான். காலையில் அவனுக்குப் பழைய தெம்பு வந்தது. ''தொல்லை தீர்ந்தது!'' எனக் களிப்புற்றான் அவன். அன்றைய நாளை அவன் வழக்கமான சுறுசுறுப்புடன் கழித்தான். ஆனால், மறு நாள் ஞாயிற்றுக்கிழமையில், அவன் மனைவி ஏதோ கவலையாக இருப்பதைக் கண்டான்.

''நீ வழக்கம்போல் இல்லையே, என்ன விஷயம்? பசுவுக்கு ஏதாவது கோளாறா? நேற்று மந்தையிலிருந்து வந்ததும் அது உற்சாகமாக இல்லை என்பதை கவனித்தேன்.''

அவன் மனைவி, செமியோனைப் பார்த்துச் சொன்னாள்: ''செமியோன்! சற்று வெளியே போகிறாயா? உன் அப்பாவுடன் நான் பேச விரும்புகிறேன்...''

கண்ணாடியின் முன் தலைவாரிக்கொண்டிருந்த செமியோன் அதிருப்தியுடன் சொன்னான்: ''எதற்காக இந்த ரகசியம்? அப்பாவின் நண்பர்களை—அவர்களைப் பிசாசுதான் இங்கே பிடித்திழுத்து வந்ததோ!—அறையில் இரவும் பகலும் கிசுகிசுத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நீங்

களும்... வெகு விரைவில் இந்த வீடு மனிதர்கள் வசிக்க லாயக்கு அற்றதாகிவிடும். இது வீடல்ல; கன்னிகா ஸ்திரீ மடம். இந்த வீடு முழுவதும் முணுமுணுப்பும் கிசுகிசுப்பும் தான்...''

''அடே, இது உன் புறா மூளைக்கு எட்டாத விஷயம்!'' என்று எரிந்து விழுந்தான் யாக்கவ் லுக்கீச். ''சொன்னது காதில் விழுந்ததா? போ, வெளியே! கொஞ்ச காலமாக நீ வாயாடி ஆகி வருகிறாய்... நாவை அடக்கு. இல்லா விடில் ஒரு நாள் உனக்குத் துன்பம் வந்து சேரும்!''

செமியோனின் முகம் சிவந்தது. அவன் தந்தையின் பக் கம் திரும்பினான்.

''உங்களுடைய பயமுறுத்தலால் ஒன்றும் நடக்காது, அப்பா! இக்குடும்பத்தில் கோழைகளோ, பச்சைக் குழந் தைகளோ இல்லை. நாம் ஒருவருக்கொருவர் பூச்சாண்டிக் காட்டத் தொடங்கினால், எல்லாருமே தொல்லையில் மாட்டிக் கொள்வோம்...'' என்று கரகரத்த குரலில் கூறி விட்டு, கதவை அடைத்து சென்றான் அவன்.

''நீ அவனைக் கண்டு பெருமைப்படுவாய் என்று நினைக் கிறேன்! வேசி மகன்! பெரிய வீரனாகிவிட்டான்!'' என்று மனைவியைப் பார்த்து வெறுப்புடன் இரைந்தான் யாக் கவ் லுக்கீச்.

அவனை ஒருபோதும் எதிர்த்துப் பேசி அறியாத அவள் மெல்லக் கூறினாள்: ''லுக்கீச், அது உன்னுடைய பார்வை யைப் பொருத்தது, புல்லுருவிகளான உன் இரு நண்பர்கள் இருக்கிறார்களே — அவர்களாலும் நமக்குப் போதிய மகிழ்ச்சி இல்லை. நாம் பிடி கொடாமல் அவர்களுடன் இங்கே வாழ வேண்டியிருப்பதே, உங்களை நோயாளி ஆக்கப் போதுமானதாகும்! எந்த நிமிடத்திலும் கிராம அதிகாரி கள் நம்மைச் சோதனையிடலாம்; அப்போது எல்லாம் அம்பலமாகிவிடும்! வாழ்க்கை நீண்ட கவலை மயமாகிவிட் டது. ஒவ்வொரு சிறு அரவத்தையும், ஓசையையும் கேட்டு நாம் அஞ்சுகிறோம். நம்மைப் போல் யாருக்குமே இப் படி ஒரு வாழ்க்கை வேண்டாம்! உனக்காகவும், செமி யோனுக்காகவும் நான் நெஞ்சு குமைந்து கொண்டிருக் கிறேன். நம் வீட்டில் தங்கியிருப்போரைப் பற்றி அதிகாரி களுக்குத் தெரிந்துவிட்டால், அவர்களுடன் உங்கள் இரு வரையும் கைது செய்துவிடுவார்கள். பிறகு பெண்களாக நாங்

கள் என்ன செய்வது? வெளியே சென்று பிச்சை எடுப்பதா?''

''போதும்!'' என்று இடைமறித்தான் யாக்கவ் லுக்கீச். ''நீயும், உன் மகனும் சொல்லாமலே—என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும். என்னிடம் என்ன சொல்ல விரும்புகிறாய்? அதை முதலில் சொல்லு!''

அவன் அறையின் இரு கதவுகளையும் நன்றாகச் சாத்திவிட்டு, அவள் அருகில் அமர்ந்தான். துவக்கத்தில், அவள் பேச்சைக் கேட்கும்போது அவன் பயத்தை வெளிக் காட்டவில்லை. இறுதியில், தனது நிதானத்தை இழந்து, பெஞ்சிலிருந்து துள்ளிக் குதித்து, ''நாம் நாசமாய்ப் போனோம்! எனது சொந்தத் தாயாலேயே மோசம் போனேன்!'' என்று பித்தனைப்போல முணுமுணுத்த வண்ணம் சமையலறையில் சுழன்றான் யாக்கவ் லுக்கீச்.

சிறிது தெளிந்ததும், ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு பெரிய குவளைத் தண்ணீர் குடித்தான். பின்னர் பெஞ்சில் அமர்ந்து கவலை தேங்கிய சிந்தனையில் ஆழ்ந்தான்.

''இப்பொழுது என்ன செய்யப் போகிறாய் அப்பா?'' என்று கேட்டாள் அவன் மனைவி. இக்கேள்வி அவன் காதில் விழவில்லை...

அவன் மனைவி சொன்ன விவரத்திலிருந்து சில நாட்களுக்கு முன் நான்கு கிழவிகள் அவன் வீட்டுக்கு வந்து, அலுவலக கனவான்களைப் பார்க்க வேண்டுமென்று அவர்களை இடைவிடாது வற்புறுத்தியதாகவும் அவன் அறிந்தான். அவனையும் அக்கிராமத்திலுள்ள மற்ற கஸாக்குகளையும் ஒன்று சேர்த்து, அந்த அலுவலர்கள் நாஸ்திக சோவியத் ஆட்சியைக் கலகம் செய்து எப்போது வீழ்த்துவார்கள் என்று அக்கிழவிகள் ஆவலுடன் கேட்டார்களாம். யாக்கவ் லுக்கீச்சின் மனைவி அப்படி யாரும் அலுவலர்கள் அந்த வீட்டில் இல்லையென்றும், அவர்கள் ஒருக்காலும் அங்கு வந்ததில்லை என்றும் சொன்னாளாம். அதற்கு லொஷ்சீலினா என்னும் கெடு மனக்கூனி இவ்வாறு சொன்னாளாம்: ''பெண்ணே! என்னை ஏமாற்றுவதற்கு உனக்கு வயசு பற்றாது! குளிர்க்காலத்திலிருந்தே அந்த அலுவலர்கள் உங்கள் வீட்டில் இருக்கிறார்கள் என்று உன் சொந்த மாமியார் கூறினாள். அவர்கள் இங்கே ஒளிந்திருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், நாங்கள் இதை யாரிடமும் சொல்ல மாட்டோம். அலெக்ஸாந்தர் அனீசி

மவிச் என்று அழைக்கப்படும் தலைவரிடம் எங்களை அழைத்துச் செல்!''

...பொலவ்த்ஸெவைக் காணச் சென்றதும், யாக்கவ் லுக் கீச்சுக்கு வழக்கம் போல் அச்சம் உண்டாயிற்று. இவ்விஷ யத்தைக் கேட்டதும் அவன் ஆத்திரமடைந்து தன்னை முட் டியால் குத்துவான் என்று எண்ணினான். அவன் தண்ட னையை எதிர்நோக்கி, நாய் போல ஒடுங்கி நின்றான். ஆனால், தன் மனைவியிடம் கேட்ட விவரத்தைத் தட்டுத் தடுமாறி, ஒன்றையும் ஒளிக்காமல் அவன் கூறி முடித்ததும், அவன் வெறுமனே ஏளனமாக நகைத்தான்.

''உம், நீங்கள் எல்லாரும் அற்புதமான சதிகாரர்கள்... இதெல்லாம் நான் எதிர்பார்த்தேன். உன் தாய் நமக்குக் குழிபறித்துவிட்டாள் இல்லையா? இப்போது நாம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறாய்?''

அவனுடைய எதிர்பாராத, சாதகமான பதிலைக் கேட் டதும், யாக்கவ் லுக்கீச்சுக்குத் தெம்பு வந்தது. ''அலெக் சாந்தர் அனீசிமவிச்! நீங்கள் இங்கிருந்து புறப்பட வேண்டி யதுதான்!'' என்று உறுதியாகக் கூறினான் அவன்.

''எப்போது?''

''சீக்கிரம் புறப்பட்டால், மிகவும் நல்லது; யோசிப் பதற்கு இனிமேல் நேரமில்லை.''

''அதை எனக்கு நீ சொல்ல வேண்டியதில்லை. எங்கே போக வேண்டும்?''

''எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால், தோழர் எங்கே?... மன்னிக்க வேண்டும், வாய் தவறி வந்துவிட்டது! அவர்தான், வாத்ஸ்லவ் அவ்குஸ்தவிச், அவர் எங்கே?''

''அவன் இங்கே இல்லை. இன்றிரவு திரும்புவான். அவனைப் பழத்தோட்டத்துக்கு அருகில் நீ சந்திக்கலாம். அதமன்சுகோவ் இக்கிராமத்தின் எல்லையில் தானே வசிக் கிறான்? இன்னும் சில நாட்களுக்கு அவருடன் நானும் தங்குவேன்... அங்கே என்னை அழைத்துச் செல்!''

அவர்கள் திருட்டுத்தனமாக கிராமத்தின் வழியே சென் றார்கள். பிரியும்போது யாக்கவ் லுக்கீச்சிடம் பொலவ்த் ஸெவ் கூறினான்:

''லுக்கீச், உனக்கு அதிருஷ்டம் உண்டாகட்டும்! உன் தாயைப் பற்றிக் கொஞ்சம் சிந்தனை செய், லுக்கீச்... அவள் நம் திட்டங்கள் அனைத்தையும் கவிழ்த்து விட

லாம்... அதைப்பற்றி எண்ணிப்பார்... லியதியேவ்ஸ்கியைச் சந்தித்து, இப்போது நான் இருக்குமிடத்தைக் கூறு.''

அவன் யாக்கவ் லுக்கீச்சைத் தழுவினான். அவனது முடிவளர்ந்த முரட்டுக் கன்னத்தில் தனது வறண்ட உதடுகளைப் பதித்தான். பின்னர், காரை உதிர்ந்த சுவர்களுக்கு அப்பால் எங்கோ மறைந்துவிட்டான்...

யாக்கவ் லுக்கீச் வீடு திரும்பினான். படுக்கையில் சாய்ந்து வழக்கத்துக்கு மாறான முரட்டுத்தனத்துடன் மனைவியைச் சுவர்ப்பக்கம் தள்ளியவாறு சொன்னான்: ''இதைக் கேள்... வந்து... அம்மாவுக்கு இனி ஆகாரம் கொடுக்காதே... குடிப்பதற்கும் ஒன்றும் தர வேண்டாம்... எப்படியோ அவள் சீக்கிரம் செத்து ஒழிய வேண்டும்...''

அவனுடன் நெடுநாள் கடின வாழ்க்கை நடத்திய யாக்கவ் லுக்கீச்சின் மனைவி, இதைக் கேட்டதும் வாய்விட்டுக் கூவினாள்:

''யாக்கவ்! லுக்கீச்! நீயே அவள் பெற்ற பிள்ளை!''

அவர்களது அன்பு கெழுமிய இவ்வாழ்க்கையில், அன்று தான் முதல் முறையாகத் தனது வயதான மனைவியைப் பலம் கொண்ட மட்டும் அறைந்து விட்டு கரகரத்த குரலில் கிசுகிசுத்தான்: ''வாயை மூடு! அவள் நம்மை நாசம் செய்து விடுவாள்! பேசாதே! நாடு கடத்தப்பட நீ விரும்புகிறாயா?''

யாக்கவ் லுக்கீச் தள்ளாடிக் கொண்டு எழுந்தான். சுவர் அருகில் இருந்த பெட்டியின் சிறிய தாழ்ப்பாளை எடுத்த வண்ணம், கவனமாக வெதுவெதுப்பான நடைபாதையில் சென்று, அவன் தாய் உறங்கிக்கொண்டிருந்த அறைக் கதவைப் பூட்டினான்.

அக்கிழவி அவன் காலடி ஓசையைக் கேட்டாள். அந்த ஓசையைக் கேட்ட மாத்திரத்தில் அவன் இருப்பதைக் கூறுவது அவளது நெடுநாள் பழக்கம்... தூரத்தில் வரும்போதே தன் மகனின் காலடியோசையை அறியும் அவள், எப்படி அறிந்து கொள்ள முடியாமற் போவாள்? ஐம்பது ஆண்டுகள் அல்லது அதற்கு முன்பு அவள் ஓர் அழகான இளம் கஸாக்கியப் பெண். வீட்டு வேலையோ, சமையலோ செய்யும் போது அவள் அதைச் சற்று நிறுத்தி, பெருமிதம் கலந்த ஆனந்தப் புன்னகையோடு அடுத்த அறையில் தத்தித் தத்தித் தளர் நடைபோடும், அந்த வெற்றுப் பாதங்களை. தனது தலைப்பிள்ளையின் சின்னஞ்சிறு பாதங்களை, தனது

ஒரே கண்மணியான யாக்கவின் பாதங்களை, அப்பொழுது தான் நடக்கத் துவங்கியிருந்த பிஞ்சு மதலையின் பஞ்சுச் சீரடிகளை, அவற்றின் செவ்விய நாதத்தைக் கேட்டுச் சிலிர்ப்பாள். பின்னர் அவன் பள்ளியிலிருந்து திரும்பும் பொழுது, படிகளின்மீது துள்ளி ஏறும் அவனது காலணி கள் ஓசையைக் கேட்டு மகிழ்வாள். அந்தக் காலத்தில் இளம் ஆட்டுக்குட்டியைப் போல, அவனுக்கு ஒரே குதியாட்ட மும், கும்மாளமும்தான். அந்த வயதில் அவன் நடந்து சென்றதாக அவளுக்கு நினைவு இல்லை. ஒரே ஓட்டம் தான் அவனுக்கு. அவன் ஓடவா செய்தான்? இல்லை; துள்ளிக் குதித்தான் இளமறியைப் போல... வாழ்க்கை உருண் டோடியது; பிறர் வாழ்வைப் போல, துன்பம் மிகுந்தும் இன்பம் குறைந்தும், அவள் வாழ்வும் கழிந்தது. விரைவில் அவள் மூப்பு நிறைந்த அன்னையாகி விட்டாள். இளமைத் துடிப்பு நிறைந்த யாக்கவின் மெல்லிய, திருட்டுத்தனமான காலடியோசையை இரவில் குறுகுறுப்புடன் கேட்பாள் அவள். அவன் காதலியைப் பார்த்துவிட்டு, இரவில் நெடு நேரம் கழித்துத் திரும்பும்போது, அவனது காலணிகள் மரத் தரையில் பதிவதாகவே தெரியாது. அந்த இளைமையின் காலடி ஓசை அவ்வளவு மென்மையாகவும், துடிப்பாகவும் இருக்கும். மகனின் காலதாமதம் அவளுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், உள்ளுக்குள்ளே அவளுக்கு மிகுந்த பெருமை தான். இப்பொழுது அந்த இளைஞன் அவள் அறியாமலே, வயதுவந்த குடும்பத் தலைவன் ஆகிவிட்டான். அவன் காலடி யோசையில் ஆழ்ந்த நம்பிக்கை ஒலித்தது. அந்த வீட்டில் ஒரு கிழவனின், வயது முதிர்ந்த எசமானனின், காலடியோசை ஒலிக்கத் தொடங்கி நெடுங்காலம் ஆகிவிட் டது. ஆனால், அவளுக்கு மட்டும், அவன் சின்ன யாக்கவ் தான். அவள் அவனை இன்னும் சிறுவனாகவே, தலையில் கயிறு கட்டி விளையாடுவதாக அடிக்கடி கனவுகள் கண் டாள்...

இப்பொழுது தன் மகனின் காலடியோசை காதில் விழுந் ததும், அக்கிழவி கீச்சுக் குரலில் கேட்டாள்: ''யாக்கவ்! நீதானா?''

அவள் மகன் ஒன்றும் பேசவில்லை. அவன் கதவருகில் ஒரு கணம் நின்று பின்னர், வேகமான நடையில் முற்றத் துக்குச் சென்றான். ''நான் ஒரு சிறந்த கஸாக்கை, சிக்கன

மான குடும்பத் தலைவனைப் பெற்று வளர்த்திருக்கிறேன். கர்த்தரின் கருணையே கருணை!'' என்று எண்ணியவாறு உறங்கினாள் அக்கிழவி. ''எல்லாரும் உறங்கும்போது, அவன் மட்டும் அலைந்து திரிந்து பண்ணையைக் காவல் காக்கிறான்'' என்ற ஒரு பெருமிதம் கலந்த தாயின் புன்னகை அவளது வெளிறிச் சுருங்கிய உதடுகளில் தவழ்ந்தது...

அன்றிரவுக்குப் பிறகு, அந்த வீடு ஓர் அருவருக்கத்தக்க இடமாகப் போய்விட்டது...

அந்தக் கிழவி பலவீனமாக, நாதியற்ற நிலையில் இருந்தாலும், இன்னும் உயிர் போகவில்லை. ஒரு ரொட்டித் துணுக்குக்காகவும் ஒரு துளி தண்ணீருக்காகவும் அவள் மன்றாடினாள். இடைக் கழியின் வழியாகத் திருட்டுத்தனமாகச் செல்லும் பொழுது, யாக்கவ் லுக்கீச் தன் தாயின் மூச்சு முட்டிப் போன, மெல்லிய முணுமுணுப்பைக் கேட்பான்:

''கண்ணே யாக்கவ்! என் செல்வ மகனே! உனக்குநான் என்ன செய்தேன்?! கொஞ்சம் தண்ணீராவது கொடு!''

...அந்த வீட்டின் பெரிய அறையைப் பயன் படுத்திக் கொள்வதையே இப்பொழுது அந்தக் குடும்பம் தவிர்த்தது. செமியோனும், அவன் மனைவியும் தமது பொழுது அனைத்தையும் முற்றத்திலேயே கழித்தார்கள். யாக்கவ் லுக்கீச்சின் மனைவி குடும்ப காரியமாக உள்ளே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், குலுங்கக் குலுங்க அழுது கொண்டே வெளியில் வருவாள். இரண்டாம் நாள் இரவில் அவர்கள் கோடைக் காலச் சமையல் அறையில் உண்ணும் பொழுது, நெடுநேர அமைதிக்குப் பிறகு யாக்கவ் லுக்கீச் கூறினான்: ''நாம் தற்சமயம் இங்கே குடியிருக்கலாம்.'' இதைக் கேட்டதும், செமியோன் ஆத்திரத்தால் உடல் குலுங்க எழுந்திருந்தான்; யாரோ பிடித்துத் தள்ளியது போல, தடுமாறி வெளியே நடந்தான்...

...நான்காம் நாள், அவ்வீட்டில் அமைதி குடிகொண்டது. நடுங்கும் விரல்களுடன் யாக்கவ் லுக்கீச் பூட்டைத் திறந்தான். அவன் தாய் ஒரு காலத்தில் வாழ்ந்த அறைக்கு, மனைவியுடன் சென்றான். அந்தக் கிழவி கதவு அருகில் தரையில் கிடந்தாள்; மாரிக்காலத்தில் மறதியாகச் சாய்வு நாற்காலியில் போடப்பட்டிருந்த ஒரு கந்தலான தோல் கையுறையை, அவளது பொக்கை வாய் குதப்பியிருந்தது...

கண்ணாடி சன்னல் வழியாக எப்படியோ அவளுக்குச் சிறிது தண்ணீர் கிடைத்தது. அங்கே ஒரு சில மழைத் துளிகள்— கண்ணால் பார்க்கவோ, காதால் கேட்கவோ முடியாத மழைத் துளிகள்—சன்னல் கதவு இடுக்கின் வழியாக உள்ளே வழிந்திருந்தன; அது கோடைக்காலமாதலால், ஒன்றிரண்டு பனித்துளிகளும் உருண்டு வந்திருந்தன...

காலமான கிழவியின் வறண்டு வற்றிப்போன உடலை, அவளது சிநேகிதிகள் குளிப்பாட்டினார்கள். அவளுக்கு புதைப்பதற்கான ஆடையுடுத்தி, அழுது அரற்றினார்கள். ஈமச்சடங்கின்போது, யாக்கவ் லுக்கீச்சைப் போல எவரும் ஆறுதல் கூறித் தேற்ற முடியாதபடி, கதறி அழவில்லை. அந்த இழப்பினால் ஏற்பட்ட வேதனை, இதயத்தைக் குடையும் வருத்தம், ஆற்ற இயலாத சோகம் ஆகியவை அன்று அவன் ஆன்மாவைக் கொடுஞ்சுமையாக அழுத்தின...

அத்தியாயம் மூன்று

உடல் உழைப்பு வேண்டும் என்ற ஏக்கத்தால் பீடிக்கப் பட்டான் தவீதவ். அவனது வலுவுள்ள, நோயற்ற உடலின் ஒவ்வொரு தசைநாரும் உழைப்புக்காக, அந்திப்போதில் அவனது தசைகளெல்லாம் இன்பத் தளர்ச்சி பெற்று, ஓய்வுபெற்று இரவில் படுக்கச் செல்லும்பொழுது, கனவுகள் அற்ற, எளிதான உறக்கம் தரும் வேலைக்காக, ஏங்கித் துடித்தன.

ஒரு நாள் கூட்டுப்பண்ணையைச் சேர்ந்த அறுவடை எந்திரங்கள் எவ்வாறு பழுது பார்க்கப்படுகின்றன என்பதைக் காண்பதற்காகக் கொல்லன் பட்டறைக்குள் நுழைந்தான் அவன். அனல் வீசும் கரியும் இரும்பும், உமிழ்கின்ற திராவக நெடியும், பட்டறையில் அடிபடும் இரும்பின் எதிரொலியும், பழைய துருத்தியின் ஓங்கார நாதமும், அவனுக்குப் புல்லரிப்பைத் தந்தன. அவன் அந்தப் பட்டறையின் அரைகுறை இருளில், சில நொடிகள் இன்ப மயக்கத்தில் கண்களை மூடி நின்றான். பிள்ளைப்பருவத்திலிருந்து நுகர்ந்த வாசனைகளில், அவனது நெஞ்சில் ஆர்வக்கனல் மூட்டி அவியாது நின்ற வாசனைகளில், ஒன்றி நின்றான். பிறகு, ஆர்வத்தை அடக்க இயலாமல், அவன் ஒரு சம்மட்டியைக் கையில் எடுத்தான்... இரண்டு நாட்கள் சூரிய உதயம்

தொட்டு மறையும் வரை, அவன் அங்கே இடைவிடாது வேலை செய்தான். அவன் குடியிருந்த வீட்டுக்காரி அவனுக்கு உணவு கொண்டுவந்தாள். ஆனால், அரை மணிக்கொரு தரம் யாராவது ஒருவர் குறுக்கிடும்பொழுது, அதனால் குறடுகளின் சூடு தணிந்து இரும்பு கருகிப்போய்விடும் பொழுது, அவன் எங்ஙனம் சரியாக வேலை செய்ய முடியும்? ஆகவே, சீதரவிச் கிழவன்—கொல்லன்—முணுமுணுத்தான். தவீதவின் சோர்வுற்ற கரங்கள் மண்தரையில் பென்சிலைக் கீழே போடுவதையும், கையெழுத்து இடவேண்டிய ஆவணங்களில் தெளிவாகக் கையெழுத்து இடமுடியாமல், அவன் கோணல் மாணலாகக் கிறுக்கித்தள்ளுவதையும் கண்டு, அந்த ஊது உலைச்சிறுவன் கொல்லென்று நகைத்தான்.

அத்தகைய நிலைமைகளில் வேலை செய்ய முயற்சிப்பது நல்லதல்ல. மேலும் சீதரவிச்சுக்கு இடையூறாக இருக்க விரும்பாமல், தன்னைத்தானே திட்டிக்கொண்டு, பட்டறையை விட்டு அகன்றான். ஆத்திரத்துடனும் கவலையுடனும் அவன் பண்ணை அலுவலக அறையில் நுழைந்தான்.

பண்ணைக்குத் தேவையான, சாதாரணமான, ஆனால் இன்றியமையாத காரியங்களில் நாள் முழுவதும் ஈடுபட வேண்டியதே அவன் வேலை. கணக்காளரின் கணக்குகளைச் சரி பார்ப்பது, குழுத் தலைவர்களின் அறிக்கைகளைக் கேட்பது, கூட்டுப்பண்ணை உறுப்பினரின் பல தரப்பட்ட மனுக்களைப் பரிசீலனை செய்வது, உற்பத்தி—குறித்த மாநாடுகளுக்குத் தலைமை தாங்குவது; சுருங்கச் சொன்னால், அகன்ற கூட்டுப் பொருளாதாரம் நிலை பெற வேண்டிய அனைத்திலும், அவன் நாள் முழுதும் ஈடுபட வேண்டியிருந்தது. இத்தகைய அலுவல் தவீதவ் உள்ளத்துக்கு எழுச்சி தருவதாய் இல்லை.

தவீதவுக்கு இப்பொழுது இரவில் அயர்ந்த தூக்கம் இல்லை; காலையில் எழுந்திருக்கும் போது பெரும்பாலும் தலைவலியுடனே எழத்தொடங்கினான். அவன் வேளை தவறிச் சாப்பிட்டான்; பசியின்றிப் புசித்தான். இதற்கு முன் இல்லாத ஒரு விநோதமான மந்த உணர்ச்சி நாள் முழுவதும் தன்னை வருத்துவதைக் கண்டு அவன் வாடினான். எப்படியோ, தன்னை அறியாமல், தவீதவ் சிறிது சோம்பேறியாகிவிட்டான். அவனது நடத்தையில் இதற்குமுன் இல்

லாத ஒரு எரிச்சல் காணப்பட்டது. கிரெமியாச்சி லோக் கிராமத்திற்கு அவன் முதன்முதலில் வந்த பொழுது இருந்த சுறுசுறுப்பும், திண்மையும் வெளித் தோற்றத்தில்கூட இப் பொழுது தென்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த லூஷ்கா நகூல்னவா இருக்கிறாளே, அவளைப் பற்றிய பலவித நினைவுகள் அவனுக்கு எப்போதும் இருந்தன... ஆமாம், இந்தச் சனியனின் நினைவு ஏற்பட்டால் அன்று, அவனுக்குக் கெட்ட நாள்தான்!

தவீதவின் மெலிந்த முகத்தைக் குறும்புத்தனமாகப் பார்த்தவண்ணம் ஒரு நாள் ரஸ்மியோத்னவ் கூறினான்: ''வரவர மெலிந்து வருகிறாயே, செமியோன்? மோசமான குளிர்காலத்திற்குப் பிறகு இருக்கும் கிழட்டு எருது போல ஆகிவிட்டாய். நீ பாதையிலேயே சீக்கிரம் துவண்டு விழுந்து விடுவாய். சொறி பிடித்தவனைப் போலிருக்கிறாய்... பற வைகள் இறக்கை உதிர்ப்பதைப் போல, நீயும் தோலை உதிர்த்துக்கொண்டிருக்கிறாயே?.. நம் பெண்களின் மீது, குறிப்பாகச் சமீபத்தில் மணவிலக்குச் செய்த பெண்களின் மீது, பார்வையைச் சுழல விடாமலிருப்பது நல்லது. இது போன்ற செயல் உன் உடலுக்கு மிகவும் கெட்டது...''

''சீச்சீ! நீயும், உன் முட்டாள் யோசனைகளும்!''

''சீறி விழாதே பெரியவரே. எல்லாம் உனது நன்மைக் குத்தான் சொல்கிறேன்.''

''எப்பொழுதும் கிறுக்கு யோசனைகளே உன் மூளையில் தோன்றும். இது உண்மைதான்!''

தவீதவின் முகம் மெல்லக் கன்றிச் சிவந்தது. தனது தத்தளிப்பை மறைக்க முடியாமல், தட்டுத்தடுமாறிப் பேச்சை வேறு திசையில் திருப்ப முயன்றான். ஆனால், ரஸ்மியோத்னவ் அதற்கு இடம் தரவில்லை.

''கடற்படையில் உனக்கு இவ்வாறு நாணிக்கோணச் சொல்லித் தந்திருக்கிறார்கள் போலும். அல்லது, இது உன் தொழிற்சாலையில் கற்றதோ? அடடா! முகத்தோடு கழுத் தும் கன்றிச் சிவந்து விடுகிறதே! ஒருவேளை, உடல் முழுதும் இப்படி ஆகின்றதோ? எங்கே பார்க்கலாம்? உன் சட்டை யைக் கழற்று!''

தவீதவின் ஒளியிழந்த கண்களில்—எரிச்சல் மூண்டதை உணர்ந்த ரஸ்மியோத்னவ், திடீரென்று தன் பேச்சை மாற்றினான். மெதுவாகக் கொட்டாவி விட்டவண்ணம், புல்

அறுப்பதைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். அவன் இமைகளை அரை குறையாகத் தாழ்த்தி களைப்புற்றவன் போல் பாவனை செய்து, தவீதவைக் கவனித்தான். ஆயினும், தனது அழகிய மீசைக்கு அடியில் குமிழியிடும் குறும்புப் புன்னகையை அவனால் மறைக்கவே முடியவில்லை.

அவனுக்கு லூஷ்காவுடன் தவீதவ் கொண்டிருக்கும் தொடர்பைப் பற்றிச் சந்தேகமா? அல்லது, அவனுக்கு அதைப் பற்றித் தெரியுமா? அது அவனுக்குத் தெரியும் என்றே தோன்றியது! ஒரு வகையில், அவன் அதை அறிவான்! அந்த மானங்கெட்ட லூஷ்காதான் அதை மறைத்து வைக்க விரும்பவில்லையே. அவள் தறிகெட்டு உலகெங்கும் அதை முரசு அறைந்தால், அது எப்படி ரகசியமாக இருக்கும்? மணவிலக்குச் செய்யப் பெற்ற, கட்சி செயலாளரின் முன்னாள் மனைவியான அவள், ஒரு சாதாரண கூட்டுப்பண்ணை விவசாயியுடன் இல்லாமல், அதன் தலைவருடனேயே உறவு கொண்டிருந்தாள்; விரட்டி அடிக்கப்படாமல் நெருங்கிப் பிணைந்திருந்தாள். லூஷ்காவின் மட்டரகமான தற்பெருமை இதை எண்ணிப் பெருமைப்பட்டது போலும்.

கண்டிப்பான கிராமப் பழக்க வழக்கத்துக்கு மாறாக, தவீதவின் கையைப் பற்றிக்கொண்டும், சில வேளை அவன் தோளோடு தோள் இலேசாக இணைந்து கொண்டும், அவள் பன்முறை நிர்வாக அலுவலகத்தை விட்டு வெளியே வந்திருக்கிறாள். தவீதவ், அவளது முன்னாள் கணவனான மக்கார் கண்ணில் பட்டுவிடுவாமோ என்ற பதைப்புடன், அங்குமிங்கும் நோக்குவான். ஆனால், தன் கையை அவளிடமிருந்து விடுவித்துக் கொள்ள மாட்டான். ஈடுபாடு இன்றி, அவன் நொண்டிக் குதிரை போல், லூஷ்காவுடன் நடப்பான்; வழியில் ஒன்றுமில்லாவிடினும், சில வேளைகளில் தட்டுத் தடுமாறுவான்... காதலர்களுக்குக் கொள்ளை நோய் போன்ற குறும்புக்காரக் கிராமத்து சிறுவர்கள், இவர்கள் பின்னால் பலவிதமாகப் பழிப்புக் காட்டிக் கொண்டும், கீச்சுக்குரலில் கத்திக்கொண்டும் செல்வர்:

காதலன் ஒருவனும்
காதலி ஒருத்தியும்
இருந்தார்கள்.
ஒன்று, புளித்த பிசைந்த மாவு!
மற்றது, மோர்!

கிராமத்து குறும்புக்காரப் பையன்கள் இதை ஆலாபனம் செய்து ஆரவாரித்தார்கள். அந்த முட்டாள்தனமான பாடலை எத்தனையோ விதமாக மாற்றி மாற்றிப் பாடினார்கள். தவீதவுக்கு வியர்த்துக் கொட்டியது, அந்தத் தெருச் சிறுவர்களையும், லூஷ்காவையும், தனது பலவீனத்தையும் அவன் மனமார நொந்துகொண்டான். ஆனால், அவளும் அவனும் இரண்டு திருப்பங்களைக் கடந்தவுடன், 'புளித்த பிசைந்த மாவு' இறுகி, தட்டையாகி, நிறைந்து, கனிந்து, தித்திக்கத் தொடங்கிவிட்டது. இறுதியில், தவீதவின் பொறுமை அகன்றுவிடும். தனது முழங்கையை இறுகப் பற்றியிருந்த பழுப்பு நிற விரல்களை நெகிழ்த்தி, அவன் லூஷ்காவிடம் கூறுவான்: ''மன்னித்துக்கொள். அவசரமாய் நான் போக வேண்டும்.'' இவ்வாறு சொல்லிவிட்டு, அவன் வேகமாக நடையை எட்டிப்போட்டு விடுவான். ஆனால், அந்தப் பிடிவாதக்காரச் சிறுவர்களின் கிண்டலுக்குத் தப்ப இயலாது. அவர்கள் இரு கும்பலாகப் பிரிந்து நிற்பார்கள்: ஒன்று, லூஷ்காவுக்கு ஆத்திரமூட்ட அவள் பின்னால் நிற்கும்; மற்றொன்று, இடை விடாது தவீதவைப் பின்தொடரும்.அவர்கள் நையாண்டியிலிருந்து தப்ப ஒரேயொரு வழிதான் உண்டு. தவீதவ் வேலியோரம் சென்று, ஒரு குச்சியை ஒடிப்பது போல பாவனை செய்வான்; அந்தப் பையன்கள் காற்றாய் மறைந்து விடுவார்கள். அப்பொழுதுதான் அந்தக் கூட்டுப்பண்ணைத் தலைவனுக்கு, இந்தத் தெரு முழுவதும், அதைக் சுற்றியுள்ள இடங்களும் தன் வசமாக இருக்கும்...

சில காலத்துக்குமுன், ஸ்டெப்பி சமவெளியில், ஒரு காற்றாலை அருகே, விடியற் கருக்கலில், லூஷ்காவும் தவீதவும் ஒரு காவல்காரனைச் சந்திக்க நேர்ந்தது. அவன் பெயர் வெர்ஷீனின். அந்தக் கூட்டுப்பண்ணைக் கிழவன் ஒரு மண்மேட்டின் பின்னால், மேல் அங்கியை இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்திருந்தான். அந்த ஜோடி தன்னை நோக்கி நேராக வருவதைக் கண்டதும், அவன் துள்ளி எழுந்து நிமிர்ந்து நின்று, ராணுவ முறையில், ''நில்லுங்கள்! அங்கே போவது யார்?'' என்று கேட்டான். தோட்டா நிரப்பாத ஒரு பழைய துப்பாக்கியால் அவர்களைக் குறிபார்த்தான்.

''வெர்ஷீனின், நான்தான்!'' என்று தவீதவ் வேண்டா வெறுப்பாகப் பதில் அளித்தான்.

அவன் லூஷ்காவை இழுத்துப்கொண்டு சட்டென்று திரும்பி நடந்தான். ஆனால் வெர்ஷீனின் அவர்களை ஓடிப் பிடித்தான். ''தோழர் தவீதவ், உங்களிடம் துளியூண்டு புகையிலை இருக்கிறதா? புகைபிடிக்க வேண்டுமென்று ஏங்கிக் கிடக்கிறேன். அதனால் செவிகள் கூட வீங்கிப்போய் விட்டன!'' என்று கெஞ்சினான் அவன்.

அச்சமயம் லூஷ்கா தனியாக ஒதுங்கவோ, பின்வாங்கி நிற்கவோ, சால்வையால் முகத்தை மறைக்கவோ இல்லை. தவீதவ் தன் பையிலிருந்து கொஞ்சம் புகையிலையைக் குலுக்கி எடுப்பதை அவள் அமைதியாகக் கவனித்தாள். பின் அதே அமைதியுடன் பேசினாள்: ''செமியோன், போக லாம். நிக்கலாய் மாமா, நீ திருடர்களைக் கண்காணிக்க வேணும். ஸ்டெப்பியில் காதலை நாடிவருவோரை அல்ல. இங்கே இரவிலே சுற்றித் திரிகிறவர்கள், கெட்டவர்கள் மட்டுமல்ல...''

நிக்கலாய் மாமா,சிரிப்பை அடக்கியவண்ணம் லூஷ்காவின் தோளைத் தட்டிக்கொடுத்தான். ''என்னருமை லூஷ்கா... இங்கே இரவில் நடப்பது எனக்கு எப்படித் தெரியும்? சிலர் காதலைத் தேடி அலையலாம்; மற்றவர்கள் பிறர் பொரு ளின் மீது ஆசைப்பட்டுத் திரியலாம். நான் காவல்காரன். என் வேலை, எல்லாரையும் யார் என்று கேட்பதும், இந்த ஆலையைக் காவல் காப்பதும் ஆகும். ஏனென்றால், இதில் இருப்பது, கூட்டுப்பண்ணையின் தானியம்; சாணிக்குவியல் அல்ல. சரி, புகையிலைக்கு நன்றி, வாழ்த்துக்கள். போய் வாருங்கள்! மங்களம் உண்டாகட்டும்...''

''நீ ஏன் குறுக்கே பேசித் தொலைத்தாய்? நீ ஒதுங்கி நின்று போயிருந்தால் அவன் உன்னை அடையாளம் கண் டிருக்கவே மாட்டான்'' என்று அவர்கள் இருவரும் தனியாக இருந்த போது அடக்க முடியாத எரிச்சலுடன் குமுறினான் தவீதவ்.

''நான் பதினாறு வயசுப் பாவையோ, ஒன்றுமறியாத கன்னியோ அல்ல, ஒவ்வொரு கிழட்டு மூடத்தின் பேச்சைக் கேட்டு நடுங்குவதற்கு'' குத்தலாகப் பதில் அளித்தாள் லூஷ்கா.

''என்ன இருந்தாலும்...''

''என்ன, 'என்ன இருந்தாலும்?'''

''எல்லாவற்றையும் நீ வெட்டவெளிச்சமாக்க வேண் டுமா?''

''அவன் என்னுடைய அப்பாவோ, மாமனாரோ அல்லவே?''

''என்னால் உன்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை...''

''அதற்குச் சிறிது கடின முயற்சி தேவை.''

தவீதவுக்கு இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. ஆனால், லூஷ்காவின் குரலில் இருந்து, அவள் சிரித்துக்கொண்டிருக்கிறாள் என்று யூகித்தான். பெண்ணின் பெருமையை அவள் புறக்கணிப்பதையும், பெரிய மனிதத்தனம் என்பதை அவள் அடியோடு வெறுப்பதையும் கண்டு தவீதவுக்கு ஆத்திரம் வந்தது.

''முட்டாள் பெண்ணே! இதைக் கேள். உன்னைப்பற்றித் தான் நான் கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறேன்!''

''உனக்கு அந்தக் கவலை வேண்டாம். நான் எப்படியும் சமாளித்துக்கொள்வேன். உன் கவலை உன்னோடு இருக்கட்டும்'' என்று எரிச்சலோடு லூஷ்கா பதிலளித்தாள்.

''நான் என்னைப்பற்றியும் கவலைப்படுகிறேன்.''

லூஷ்கா திடீரென்று நின்று, அவனை நெருங்கி வந்தாள். அவள் சிரிப்பில் கெடு நோக்கான வெற்றி உணர்வு இருந்தது.

''என் அன்பே, அப்படி வா வழிக்கு. உன்னைப் பற்றித் தான் உனக்குக் கவலை! உன் எரிச்சலுக்குக் காரணம் என்ன? இரவு வேளையில் நீ ஒரு பெண்ணுடன் ஸ்டெப்பியில் தவறு செய்ததைப் பிறர் கண்டு விட்டார்கள். இரவிலே நீ யாருடன் படுக்கிறாய் என்று நிக்கலாய் மாமா கவலைப் படுவது போல நினைக்கிறாய்?''

''ஏன் 'தவறு செய்ததை'?''

''பின்னே என்னவாம்? நிக்கலாய் மாமா ஒன்றும் பச்சைக் குழந்தை இல்லை. நீயும், நானும் இரவிலே இங்கே நாவல்பழம் பொறுக்க வரவில்லை என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் கிரெமியாச்சி கூட்டுப்பண்ணையிலுள்ள நல்லவர்கள், நேர்மையான விவசாயிகள் என்ன நினைப்பார்கள் என்று உனக்குப் பயம். அப்படித்தானே? என்னைப்பற்றி உனக்கு அணுவளவும் அக்கறை இல்லை! நான் இல்லாவிட்டால் வேறு எவளையாவது இங்கே கூட்டிக்கொண்டு வந்திருப்பாய். ஆனால் நீ அமைதியாகப் பாவம் செய்ய விரும்புகிறாய்: அதை இரகசியமாக வைத்திருக்கவும் விரும்புகிறாய். ஏனெனில் உன்னுடைய தவறுகள் வேறு யாருக்கும்

தெரியாதல்லவா? இப்பேர்ப்பட்ட மோசக்காரன் நீ! ஆனால் அது நடக்காது, கண்ணே, நடக்காது. உன் ஆயுள் முழுவதும் விஷயங்களை மறைத்து புதைத்துவைக்க முடியாது. நீ ஒரு மாலுமி என்று கூறிக்கொள்கிறாய்! உன்னால் எவ்வாறு இப்படி இருக்க முடியும்? நான் பயப்படவில்லை; ஆனால் நீ பயந்து சாகிறாய். ஆகவே, நான் ஆண்; நீ பெண். அப்படித்தானா?''

ஹூஷ்காவின் பேச்சில், கோபத்தை விட வேடிக்கைதான் அதிகம் தொனித்தது. ஆனால் அவள் தன் காதலனின் நடத்தையால் வேதனையுற்றிருக்கிறாள் என்பது தெளிவு. சிறிது நேர அமைதிக்குப் பிறகு அவள் வெறுப்புடன் ஓரக் கண்ணால் அவனை அளந்தாள். சட்டென்று தனது கறுப்புநிற பட்டு குட்டைப் பாவாடையை நழுவ விட்டு, தவீதவைப் பார்த்து அதிகாரக் குரலில் சொன்னாள்:

''ஆடைகளைக் களை!''

''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? எதற்காக இது?''

''நீ என் குட்டைப் பாவாடையையும் நான் உன் கால் சராயையும் அணிந்துகொள்ளலாம். அதுதான் பொருத்தம்! நாம் எப்படி நடந்துகொள்ளுகிறோமோ அப்படித்தான் ஆடை அணிய வேண்டும். ம்... நேரமாகிறது!''

ஹூஷ்காவின் சொற்களும், அவளது ஆடைமாற்ற உத்தரவும் மனத்தைப் புண்படுத்தினாலும் தவீதவ் நகைத்தான். தனது வருத்தத்தை அடக்கியவண்ணம் அவன் அமைதியாகக் கூறினான்: ''முட்டாள்தனமாக விளையாட வேண்டாம், ஹூஷ்கா! உனது ஆடையை அணிந்துகொள்; நாம் போகலாம்.''

அலட்சியமான, அதிருப்தி நிறைந்த பாவத்துடன், ஹூஷ்கா குட்டைப் பாவாடையை அணிந்து கொண்டாள்; சால்வைக்கு அடியில் தலைமுடியைச் சரிசெய்து கொண்டாள். திடீரென்று, விநோதமான துயரங்கலந்த ஏக்கத்துடன் அவள் சொன்னாள்: ''ஓ! பகட்டுக்கார மாலுமியே! நீ ஒரு பெரும் அசடு!''

பிறகு, அவர்கள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், நெடுந் தூரம் நடந்து கிராமத்தை அடைந்தார்கள். பேசிக் கொள்ளாமலேயே ஒரு சிறிய சந்துக்குள் நுழைந்து, பிரிந்து சென்றார்கள். தவீதவ் அடக்கமாகத் தலைவணங்கினான்;

லூஷ்கா இலேசாகத் தலையை ஆட்டிவிட்டு, முதிய நிழல் தரும் மரத்தின் நிழலோடு கரைந்தாற் போல, வாசல் வழியாக மறைந்து விட்டாள்...

சில நாட்களுக்கு அவர்கள் சந்திக்கவேயில்லை. பின்னர் லூஷ்கா ஒரு நாள் நிர்வாக அலுவலகத்திற்கு வந்து, கடைசிப் பார்வையாளர் செல்லும் வரை பொறுமையுடன் வழியில் காத்திருந்தாள். அலுவலகத்தைப் பூட்டும் வேளையில் லூஷ்கா இருப்பதைக் கவனித்தான் தவீதவ். அவள் ஒரு பெஞ்சில் அமர்ந்திருந்தாள்; ஆண்மகனைப் போல, கால்களை அகல விரித்திருந்தாள்; அவளது குட்டைப் பாவாடை வாளிப்பான தொடைகளின் மீது இறுக்கமாகப் படிந்திருந்தது. அவள் சூரியகாந்தி விதைகளை மென்றுகொண்டிருந்தாள்; அவள் முகத்தில் சாந்தமான புன்னகை படர்ந்திருந்தது.

''தலைவர், கொஞ்சம் விதைகள் வேண்டுமே?'' என்று தணிந்த, கிளுகிளுக்கும் குரலில் மொழிந்தாள். அவளது அழகிய புருவங்கள் இலேசாக நெளிந்தன; கண்களில் பளிச்சென்று குறும்பு மின்னியது.

''நீ ஏன் களைபிடுங்கச் செல்லவில்லை?''

''நான் அங்கே தான் போய்க்கொண்டிருக்கிறேன். அதற்கு வேண்டிய உடுப்பு அணிந்து கொண்டிருப்பதைப் பாரு. உன்னிடம் ஒரு விஷயம் பேசுவதற்காக உள்ளே வந்தேன்... பொழுது சாய்ந்ததும், இன்றிரவு ஊர்ப் பொது இடத்திற்கு வா. லெயோனவின் களத்து மேட்டில் உனக்காகக் காத்திருப்பேன். அந்த இடம் தெரியுமல்லவா?''

''தெரியும்.''

''அங்கே வருவாயா?''

தவீதவ் மௌனமாகத் தலையசைத்துவிட்டு, கதவை இறுகச்சாத்தினான்.

மேசையின்மேல் கன்னத்தில் கையூன்றிய வண்ணம், தன் எதிரே பார்த்துக்கொண்டு, சோகமயமான எண்ணங்களில் ஆழ்ந்திருந்தான். உண்மையில், அவன் சிந்திக்க வேண்டியது ஏராளம்!

அவர்களது முதல் பூசலுக்கு முன்பு, லூஷ்கா அவன் அறைக்கு அந்தி வேளையில் இரு முறை வந்திருக்கிறாள். அச்சமயம், அவனுடன் சிறிது நேரம் இருந்துவிட்டு, உரக்கக் கூறினாள்: ''செமியோன், என்னை வீடுவரையில் கொண்டு

வந்து விடு! தனியே செல்ல எனக்குப் பயமாக இருக்கிறது. நான் ரொம்பப் பயந்தவள், சிறுபிள்ளையாயிருக்கும் போதே, இருட்டை கண்டால் எனக்கு நடுக்கம்...''

அப்போது அவன் முகத்தைப் பயங்கரமாக வைத்தவாறு, அடுத்த அறையின் சுவற்றுப் பக்கம் கண்களை உருட்டினான். அங்கே வீட்டுச் சொந்தக்காரி சமய ஈடுபாடுள்ள கிழவி-பூனையைப் போல கோபத்தினால் சீறிக் கொண்டு, பண்டபாத்திரங்களை உருட்டித் தள்ளி, தன் கணவனுக்கும், தவீதவுக்கும் இரவுச் சாப்பாடு தயாரித்தாள். லூஷ்காவின் நுட்பமான செவியில், வீட்டுக்காரியின் சீறல் நன்கு விழுந்தது: ''பயமாமே பயம்! இவள் பெண் அல்ல; சூனியக்காரி! நரக லோகத்தில் இருந்தாலும் ஒரு இளையப் பிசாசுவின் மனத்தை வலை வீசிப் பிடிப்பதற்கு அவள் அறிவாள். அவன் அவளைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. கடவுளே! இவ்வாறு சொன்னதற்கு என்னை மன்னியும்! பயமாம் அவளுக்கு! அந்தக் கெடுதல்காரி! இருட்டைக் கண்டு அஞ்சுவதை நான் காண வேண்டும்!''

தன்னைப் பற்றிய இந்த வர்ணனையைக் கேட்டதும், லூஷ்காவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஏதாவது ஒரு பத்தாம் பசலிக் கிழவியின் ஏளன மொழிகளைக் கேட்டு, மனம் தடுமாறிவிடுகிறவள் அல்ல அவள்! இது போன்ற ஒப்பாரி வைக்கும் வேடதாரிகளை அவள் என்றும் மதித்ததே இல்லை! அவளுடைய குறுகிய இல்லற வாழ்வில், அச்சமற்ற லூஷ்கா இதைவிட மோசமான சிக்கல்களில் எல்லாம் அகப்பட்டிருக்கிறாள்; கிரெமியாச்சி கிராமப் பெண்களுடன் முரட்டுச் சண்டைகள் போட்டு வென்றிருக்கிறாள். கதவுக்கு அப்புறம் இருக்கும் வீட்டுக்காரி, அவளைச் சூனியக்காரி என்றும் தெருச்சுற்றி நாய் என்றும் சொன்னால் என்ன? எனவே இது போன்ற சாரமற்ற அடைமொழிகள் எல்லாம், லூஷ்கா இதுவரை கேட்டிருக்கும் அல்லது பேசியிருக்கும் வசைச் சொற்களுக்கு முன் எம்மாத்திரம்? கிரெமியாச்சி கிராமத்துப் பெண்கள் தமது கணவர்களுடன் காதல் செய்யத் தமக்கு மட்டுமே உரிமையுண்டு என்று குருட்டுக் கற்பனை செய்யும் அப்பாவிகள்! தன்னை எப்படிக் காத்துக்கொள்வது என்று லூஷ்காவுக்குத் தெரியும்; அவள் எப்போதும் எதிரியைச் சரியானபடி மூக்கறுத்து விடுவாள். அவளுக்கு ஒருபோதும் வார்த்தைப்

பஞ்சம் ஏற்பட்டதேயில்லை. லூஷ்காவின் தலையிலுள்ள கைக்குட்டையைப் பறித்து, அவளை அவமானப்படுத்த அக் கிராமத்திலே எந்தப் பொறாமைக்காரியாலும் இயல வில்லை... ஆயினும், சும்மாயிராமல், அந்த வீட்டுக்காரக் கிழவிக்கு ஒரு பாடம் கற்பிக்க முடிவு செய்தாள்; எவ்விஷ யத்திலும் கடைசி வார்த்தை தன்னுடையதாகவே இருக்க வேண்டும் என்னும் தனது வாழ்க்கை நியதியை உறுதிப் படுத்தத் தீர்மானித்தாள் அவள்.

மறுபடியும் அவள் அங்கு வந்தபோது, தவீதவை முன் னால் செல்லவிட்டு, அவள் வீட்டுக்காரியின் அறைமுன் ஒரு விநாடி தயங்கி நின்றாள். அவனுடைய காலணி ஓசை அவன் தெருவாசலில் படி இறங்குவதைக் காட்டியது. அச்சமயம் லூஷ்கா அப்பாவித்தனமாக முகத்தை வைத்துக்கொண்டு வீட்டுக்காரியின் திசையில் திரும்பினாள். லூஷ்காவின் கணக்குச் சரிதான். வீட்டுக்காரக் கிழவி நீர் ஒழுகும் தனது உதடுகளை நக்கிக்கொண்டு, மூச்சுவிடாமல் பேசினாள்: ''லூஷ்கா! நீ ஒரு வெட்கம் கெட்ட படைப்பு, உன்னைப் போன்றவளை நான் கண்டதேயில்லை!'' நாணம் கொண் டது போல லூஷ்கா கண்களைத் தாழ்த்திக் கொண்டு, அந்த அறை நடுவில், தன் செயலுக்கு மிக வருந்துவது போல் நின்றாள். அவளது இமைகள் மிக நீண்டும் கறுத் தும் இருந்தன; அவற்றை இயற்கை என்று நம்புவது கடி னம். அவள் கண் இமைகளைத் தாழ்த்தி நின்றபோது, ஓர் அடர்ந்த நிழல் அவளது வெளுத்த கன்னங்களின் மீது பரவியது.

இந்தப் பாவனையைக் கண்டு ஏமாந்த கிழவி ஃபிலி மோனிஹா ஆத்திரம் தணிந்து மெல்ல முணுமுணுத்தாள். ''அடி பெண்ணே! நீயாகவே பார். நீ மணவிலக்கு செய்யப் பட்டிருக்கலாம். ஆனால், தனியாக இருக்கும் ஆண்பிள் ளையை அவன் வீட்டில் பார்க்க வரலாமோ? அதுவும், இருட்டிய பிறகு? உன் மன சாட்சி எங்கே போயிற்று? கடவுளுக்காகவாவது கொஞ்சம் வெட்கம் மானம் வேண் டாமா?''

அவளுடைய நளினமான குரலை அப்படியே பின்பற்றி, லூஷ்கா பேசினாள்: ''சர்வ வல்லமையுள்ள கடவுள், நமது ரட்சகர்...'' தன் பேச்சைத் திடீரென்று எதையோ எதிர்

பார்த்து நிறுத்தியவாறு, மேலே நோக்கினாள் லூஷ்கா. அந்தி ஒளியில் அவள் கண்கள் சுடரிட்டன.

கடவுளின் திருநாமம் கேட்டதும், பக்தையான அக் கிழவி, தலை தாழ்த்தி வேகமாகச் சிலுவைக் குறியிடத் தொடங்கினாள். லூஷ்கா கனத்த ஆண் குரலில் வெற்றி கரமாகத் தன் பேச்சை முடித்தாள்: ''... சர்வ வல்லமை யுள்ள கடவுள் மனச்சாட்சியை எல்லாருக்கும் பங்கீடு செய்து வழங்கும்போது, நான் வீட்டில் இல்லை. நான் இளைஞர் களுடன் மகிழ்ச்சியாகவும், முத்தமிட்டுக் கொண்டும் உல் லாசமாக இருந்தேன். எனவே, என் பங்கைத் தவறவிட்டு விட்டேன். தெரிந்ததா? ஏன் வாயைப் பிளக்கிறாய்? உன் னால் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்க முடியா தோ? நான் சொல்வதைக் கேள். உன் வீட்டில் வசிப்பவர் என்னோடு வெளியே இருக்கும் பொழுதும், என்னுடைய உறவினால் தொல்லைப் பட்டுக்கொண்டிருக்கும் பொழு தும், கிழட்டுப் பசுவே, பாவிகளாகிய எங்களுக்காகப் பிரார்த்தனை செய்!''

வியப்பும், திகைப்பும் மேலிட்டு நின்ற வீட்டுக்காரக் கிழவியின்மீது ஒரு வெறுப்புப் பார்வைகூட வீசாமல், வெளியே பறந்துவிட்டாள் லூஷ்கா.

தவீதவ் வெளி முற்றத்தில் அவளுக்காகக் காத்து நின் றான். ''உள்ளே என்ன பேசிக்கொண்டு நின்றாய் லூஷ்கா?'' என்று சிறிது கலவரத்துடன் வினவினான்.

''ஓ! பெரும்பாலும் கடவுளைப் பற்றித்தான்!'' என்று அமைதியாகச் சிரித்த வண்ணம் அவனோடு ஒட்டிக்கொண் டாள் லூஷ்கா. அவளது முன்னாள் கணவனது பழக்கம் போல; தேவையில்லாத விஷயங்களை ஒரு கிண்டல் மூலம் ஒதுக்கித் தள்ளிவிட அவள் பழகி இருந்தாள்.

''விளையாடாதே. அந்தக் கிழவி என்ன ரகசியம் பேசி னாள்? உன்னிடம் கடுமையாக நடந்து கொண்டாளா அவள்?''

''அவள் என்ன முயன்றாலும், என்னிடம் பலிக்காது, அதற்கு வேண்டிய துணிச்சல் அவளிடம் இல்லை. இடை வெளிப் பல் அழகா, நீ என்னைக் காதலிப்பதால், அவளுக்கு ரொம்ப பொறாமை!'' என்று மேலும் நகைத்தாள் லூஷ்கா.

''அவள் நம்மைச் சந்தேகிக்கிறாள். அது உண்மை தான்!'' என்று வருத்தத்துடன் தலையை ஆட்டினான் தவீ

தவ். ''என்னை நீ இங்கே பார்க்க வந்திருக்கக் கூடாது. அதனால் தான் இந்தத் தொல்லை!''

''ஒரு கிழவியிடம் பயமா?''

''எனக்கு என்ன பயம்?''

''நீ சுத்த வீரன் என்றால் அதைப் பற்றியே பேசுவானேன்?''

ஹூஷ்காவைப் போன்ற சஞ்சலமுள்ள, தான் தோன்றித் தனமான ஒரு பெண்ணுடன் வாதாடுவதால் பயனில்லை. மின்னல் அடித்துக் கண்ணைக் குருடாக்குவது போன்ற, அழுத்தமான, சிறிதும் எதிர்பாராத உணர்ச்சியால் உந்தப் பெற்று, தான் ஏன் மக்காரைச் சந்தித்து எல்லாவற்றையும் விளக்கிச் சொல்லி, ஹூஷ்காவை மணந்து கொள்ளக் கூடாது எனப் பல முறை தீவிரமாக எண்ணியிருக்கிறான் தவீதவ். நான் அகப்பட்டுக் கொண்டிருக்கும் தவறான நிலைக்கு இதுதான் மாற்று! என் பெயரைச் சுற்றி எழும் வம்புப் பேச்சுக்கு இதுவே முற்றுப்புள்ளி வைக்கும். ''நான் அவளைச் சீர்திருத்துவேன்! அவ்வாறானால், அவள் என்னுடன் பல முறை துள்ளிக்குதித்து விளையாட மாட்டாள்! நான் வற்புறுத்தியாவது அவளைப் படிக்க வைப்பேன்; சமூகப் பணியில் அக்கறை காட்டச் செய்வேன். அவள் சீர்திருந்தி விடுவாள்; இது உண்மைதான்! அவள் முட்டாள் இல்லை; அவள் தனது ஆங்காரத்தை எல்லாம் போக்கிவிடுவாள். இவ்வளவு கோபம் கூடாதென்று நான் அவளுக்குக் கற்பிப்பேன்! நான் மக்காரைப் போன்றவன் அல்ல. மக்காரும், அவளும் இரு துருவங்கள். நான் வேறு மாதிரியானவன். நான் அவளிடம் புதுமாதிரியாக அணுகுவேன்.'' இவ்வாறு சிந்தித்தான் தவீதவ். ஆனால் அவன் தன்னுடைய திறமையையும், ஹூஷ்காவின் திறமையையும் மிகைப்படுத்தி மதிப்பிட்டான் என்பது தெளிவு.

அன்று அவர்கள் லெயோனவின் களத்து மேட்டில் சந்திக்கும் நாள். அவன் பிற்பகல் உணவை உண்டதும், கைக் கடிகாரத்தை அடிக்கடி பார்க்கலானான். ஆனால், அவனுக்கு முதலில் வியப்பும், பின்னர் கோபமும் பொங்கின. ஏனெனில் குறித்த நேரத்திற்கு ஒரு மணி முன்பாகவே, ஹூஷ்காவின் மெல்லிய காலடியோசையை வாசல்படியில் கேட்டான். பிறகு, ''தோழர் தவீதவ் வீட்டில் இருக்கிறாரா?'' என்ற கணீர்க் குரலும் கேட்டது.

வீட்டுக்கார அம்மாளும், அவள் கணவனும் உள்ளே தான் இருந்தார்கள். ஆனால் பதில் சொல்லவில்லை. தவீதவ் தன் குல்லாயைப் பற்றி எடுத்தான்; விரைந்து வாசல் பக்கம் ஓடினான்; அங்கே குறுநகை மிளிர லூஷ்கா நின்று கொண்டிருந்தாள். அவள் ஒதுங்கி நின்றாள். அவர்கள் மௌனமாக வெளிவாசலைத் தாண்டி நடந்தனர்.

''எனக்கு இந்த விளையாட்டெல்லாம் பிடிக்காது!'' என்று கடினமாக மொழிந்தான் தவீதவ். அவனுக்கு ஆத்திரத்தால் மூச்சு வாங்கியது; அவன் கைவிரல்கள் மடங்கி இறுகின. ''நீ ஏன் இங்கு வந்தாய்? நாம் எங்கே சந்திப்பதாக ஒப்புக்கொண்டிருந்தோம்? பதில் சொல்லு!...''

ஆயினும், லூஷ்கா நிதானம் தவறவில்லை. ''எதற்காகக் கூப்பாடு போடுகிறாய்? என்னை யாரென்று நினைக்கிறாய்? நான் உன் மனைவியா வண்டிக்காரனா?'' என்று பதிலடி கொடுத்தாள் அவள்.

''நிறுத்து! நான் கூச்சல் போடவில்லை. காரணம் தான் உன்னிடம் கேட்கிறேன்.''

லூஷ்கா ஒரு குலுக்கலுடன் ஆளைக்கிறங்கச் செய்யும் அமைதியுடன் பேசினாள்: ''நீ கூச்சல் போடவில்லையென்றால், அது வேறு விஷயம். நீ இல்லாமல் என்னால் ஒரு கணம்கூட தனித்து இருக்க முடியவில்லை. ஆகவே, சீக்கிரமாக வந்தேன். உனக்கும் மகிழ்ச்சிதானே? இல்லையா?''

''நாசமாய் போச்சு! என்ன 'மகிழ்ச்சி'? என் வீட்டுக்காரக் கிழவி, கிராமம் முழுவதும் இதைப் பரப்பி விடுவாள்! போன தடவை நீ அவளிடம் என்ன பேசினாயோ, அதிலிருந்து அவள் என் முகத்தைக்கூட ஏறிட்டுப் பார்ப்பதில்லை. ஒரே ஆங்காரம்! மிக நல்ல சூப்பு கிடைக்கும், கழுநீர்த்தண்ணியைத் தருகிறாள். அவளிடம் கடவுளைப் பற்றிப் பேசினேன் என்கிறாயே? அது பெரிய வேதாந்தப் பேச்சாகத்தான் இருந்திருக்கும்! ஏனென்றால், உன் பெயரைக் கேட்டாலே கிழவிக்கு மூச்சு அடைத்து,முகம் கன்றிப் போய் விடுகிறது! நான் உனக்கு இதைப் பற்றி சொல்கிறேன், இது உண்மைதான்!''

லூஷ்கா தன்னை அடக்க முடியாமல், இளமை குலுங்க நகைத்தாள். எனவே, தன் இதயம் தன்னை அறியாமலே இளகுவதை உணர்ந்தான் தவீதவ். ஆயினும் இம்முறை அவனுக்குக் கிண்டலை ரசிக்கும் மன நிலை இல்லை.

லூஷ்கா ஆனந்தக் கண்ணீர் ததும்ப, அவனிடம் மீண்டும் கேட்டாள்:

''அவளுக்கு மூச்சு முட்டி, முகம் கன்றுகிறதா? அந்தக் கிழட்டு மாய்மாலக்காரிக்கு அது தான் வேணும்! அப்படி யானால்தான், பிறர் காரியங்களில் தலையிடக் கூடாது என்ற புத்திவரும். என் நடத்தையைக் கண்காணிக்கிறா ளாம் அவள்!''

தவீதவ் கடுகடுப்புடன் குறுக்கே பேசினான்:''நம்மைப் பற்றி கிராமத்தில் அவள் எந்த வதந்தியைப் பரப்பினாலும் உனக்குக் கவலையில்லைதானே?''

''அவளுடைய நலத்திற்கு அது தேவையென்றால், செய் யட்டுமே'' என்று அலட்சியமாகப் பதிலளித்தாள் லூஷ்கா.

''உனக்கு எல்லாம் ஒன்றுபோலத்தான்; ஆனால் எனக்கு நிச்சயமாக அப்படியில்லை. இது உண்மைதான்! நீ இந்தக் கோமாளித்தனத்தை எல்லாம் விட்டு விடு; நம்மைக் கண் காட்சியாக்குவதை நிறுத்திவிடு! நாளை நான் மக்காரிடம் பேசுவேன். நாம் திருமணம் செய்ய வேண்டும்; அல்லது, அதற்கு ஒரு கும்பிடு போட வேண்டும். எந்நேரமும் மக்கள் என்னைப் பற்றி கேலி பேசுவதை என்னால் பொறுக்க முடி யாது. இதோ, லூஷ்காவின் காதலன் கூட்டுப்பண்ணைத் தலைவன். நீ இவ்வாறு எல்லார் முன்னிலையிலும் பழகு வது, என் அதிகாரத்துக்குக் குழிபறிப்பதாகும். உனக்கு புரிகிறதா?''

லூஷ்கா மிகவும் நாணமுற்றாள்; அவனை அப்பால் தள்ளினாள்.

''நீ ஓர் அருமையான மணமகன் தான்! உன்னைப் போன்ற அழுக்குப்பிடித்த கோழையுடன் எனக்கு ஏன் உறவு? உனக்குச் சில நம்பிக்கைகள் உண்டு! கிராமத்தில் என்னுடன் சேர்ந்து நடக்க அச்சம், ஆனால் திடீரென்று 'என்னைத் திருமணம் செய்ய வேண்டும்' என்ற பேச்சு வேறு! யாரைக் கண்டாலும் உனக்குப் பயம். தெருவிலுள்ள சிறுபயல்களைப் பார்த்தாலும் ஒரே நடுக்கம். சரி, சரி. லெயோனவின் களஞ்சியத்துக்குப் பின்னால், புல்தரையில் நீ உன் அதிகாரத்தை ஒன்றுசேர்த்தபடி படுத்துக் கொள். ஓ, காட்டுமிராண்டியே! நீ எனக்குத் தகுந்த ஆள் என நினைத்தேன். ஆனால், நீயும் எனது பழைய மக்காரைப் போலவே இருக்கிறாய். அவன் உலகப் புரட்சியைத் தவிர,

வேறு எதையும் சிந்திக்க மாட்டான். உனக்கும் அதிகாரம் பற்றியே சிந்தனை. எந்தப் பெண்ணாலும் இத்தகைய தொணதொணப்பைத் தாங்கி வாழ முடியாது!''

லூஷ்கா ஒருகணம் சும்மா இருந்தாள். பிறகு, எதிர் பாராமல் குழைந்துவிட்ட உணர்ச்சி அலைபாயும் குரலில் சொன்னாள்: ''என் அன்பே, செமியோன்! போய் வரு கிறேன்; வணக்கம்.''

சில விநாடிகள் அவள் தயங்கி நின்றாள், பிறகு விரை வாகத் திரும்பி, தெரு வழியே வேகமாக நடந்தாள்.

''லூஷ்கா!'' என்று கரகரத்த குரலில் கூவினான் தவீதவ்.

தெரு முனையில் அவளது வெள்ளைக் கைக்குட்டை, தீப்பொறி போல மின்னியது ஒரு கணம்; அது பின்னர் இருட்டில் மறைந்துபோயிற்று. தன் விரல்களை முகத்தில் பதித்தான் தவீதவ்; என்ன காரணத்தாலோ அவை சூடாக இருந்தன; அவன் அப்படியே குழப்பத்துடன் புன்னகை யுடன் நின்றான். ''ம்... நான் ஒரு மடையன். திருமணப் பேச் சுக்கு நல்ல நேரம் பார்த்தேன்! திருமணம் ஆவதற்கு உண் மையிலேயே அற்புதமான வழி இது! நான் ஒரு முட்டாள், உண்மையாகத்தான்!'' என்று எண்ணினான் அவன்.

* * *

இந்தக் காதலர்களின் ஊடல் முற்றிப்போய்விட்டது. உண்மையில், இதை ஊடலாகவோ, வாய்ச்சண்டையாக வோ இல்லாது ஒரு முழுமையான பிளவானது. லூஷ்கா, தவீதவைச் சந்திப்பதை அறவே நிறுத்திவிட்டாள். அவன் வேறு இடத்திற்குக் குடிபெயர்ந்தான். இதை அவள் அறிந்தும்; அவனோடு உடன்பாடு செய்ய விரும்பவில்லை.

''ஓ! இத்தகைய மனோவியாதி பிடித்தவளாயிருந்தால், அவள் ஒழிந்து போகட்டும்!'' என்று சீற்றம் கொண்டான் தவீதவ். காதலி லூஷ்காவை எங்கேயாவது தனியாகச் சந் திக்கும் நம்பிக்கையை இழந்துவிட்டான் அவன். தவீதவின் நெஞ்சில் கசப்பு நிறைந்தது. அக்டோபர் மாத மழைக் காலத்தைப் போல, அவன் உள்ளத்தைச் சோகமூட்டம் கவிந்து கருக்கியது. லூஷ்காவுக்கும் தவீதவின் எளிய, காதல் விஷயத்தில் அநுபவமற்ற இதயத்தை அணுகும் பாதைப் புலப்பட்டுவிட்டது...

உண்மைதான், காதலை முறித்துக் கொள்வதில், கவர்ச்சியான அம்சங்கள் உண்டுதான். முதலில், அவன் மக்கார் நகூல்னவிடம் கடினமான விளக்கங்கள் கொடுக்க வேண்டியதில்லை. இரண்டாவதாக, அண்மைக் காலத்தில், சில ஒழுங்கீனமான நடவடிக்கைகளால் சிறிது பழுதுற்றிருக்கும் அவனது அதிகாரத்திற்கு யாதொரு ஆபத்தும் வராது. இத்தகைய தெம்பு தரும் கருத்தோட்டங்களில் மூழ்கினான் தவீதவ். எனினும் இவை மனமொடிந்த அவனுக்குச் சிறிதும் அமைதி தரவில்லை. அவன் தனியாக இருந்தால், எதிலும் இலயிப்பு இல்லாமல் எதிர்த் திசையில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பான். லூஷ்காவின் உதடுகளின் மயக்கும் நறுமணத்தை எண்ணும்போதும், எப்போதும் வறண்டு, உயிர்த்துடிப்புடன் தவழும் அந்த அதரங்களின் இனிமையை எண்ணும்போதும், ஆர்வம் மிகுந்த அவள் கண்களில் விளையாடும் உணர்ச்சிக் கோலங்களை நினைக்கும் போதும் அவன் முகத்தில் நிராசை படர்ந்த சிரிப்புத் தோன்றும்.

லூஷ்காவின் கண்கள் எவ்வளவு அற்புதமானவை! அவள் சிறிது தலை குனிந்து ஏறிட்டுப் பார்க்கும்போது, அவைகளில் ஓர் உருக்கம் தோன்றும்; அவள் பார்வையில் குழந்தையின் இயலாத்தன்மை தோன்றும்; இதுபோன்ற வேளைகளில், அவள் குமரிப் பெண்ணாகத் தோன்றுவாளே தவிர, வாழ்க்கை அநுபவம் மிக்க, காதற் கலை பயின்ற பெண்மணியாகத் தோன்ற மாட்டாள்.ஆனால், மறு கணத்தில் தனது தூய்மையான, வெளிறிய கைக்குட்டையை லேசாகச் சரிசெய்தவாறு, தலை நிமிர்ந்து ஒருவரைச் சவால் விடும் கசப்புடன் பார்ப்பாள்; அச்சமயம் அவளது விநோத ஒளி மிகுந்த பார்வையில், குற்றங் காண்கின்ற நோக்கு நிறைந்திருக்கும்.

தன்னை ஒரு கணத்தில் உருமாற்றிக் கொள்வது என்பது, லூஷ்காவுக்குப் பயிற்சியினால் கைவந்த காதற் கலை அல்ல; அது இயற்கை தந்த பரிசு; அவ்வளவுதான். இவ்வாறெல்லாம் தோன்றியது தவீதவுக்கு. காதல் மயக்கத்தில், தன் காதலியானவள் தேவைக்கு அதிகமாக, வழக்கத்திற்கு மாறாக,சுயநலம் உள்ளவளாயும், ஐயத்திற்கிடமின்றி அகங்காரியாகவும் இருக்கிறாள் என்பதை அவன் கவனிக்கத்

தவறிவிட்டான். அவன் கவனிக்கத் தவறிய விஷயங்கள் எத்தனையோ இருந்தன.

ஒரு நாள் லூஷ்காவின் முகச்சாயம் பூசிய, மெல்லிய மணம் தவழும் கன்னத்தில் முத்தமிட்ட வண்ணம் அவன் கவிதை பேசினான். ''கண்ணே! லூஷ்கா, நீ என்னுடைய ஒரு மலர்! உன்னுடைய கன்னத்துத் தேமல்களுக்குக்கூட வாசமுண்டு. இது உண்மை தான்! என்ன வாசனை என்று உனக்குத் தெரியுமா?''

லூஷ்கா ஆர்வத்துடன், முழங்கையை ஊன்றி, நிமிர்ந்து கொண்டு கேட்டாள்: ''என்ன வாசனை?''

''பனித்துளியைப் போல புதுமை; மலர்ச்சி... பனித் தூவலைப் போல. நாம் அதை நன்கு நுகர முடியாது; ஆனால் அது நன்றாக இருக்கும்.''

''என்னிடம் அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று பெருமிதத்தோடும், முழுமனத்தோடும் கூறினாள் லூஷ்கா

தவீதவ் ஒன்றும் சொல்லவில்லை. அவனுக்கு இந்த ஆடம்பரமான பெருமிதத்தைக் கண்டு களிப்பு வரவில்லை; வியப்புத் தோன்றியது. சிறிது நேரம் கழித்து அவன் கேட்டான்: ''உன்னிடம் ஏன் அப்படி?''

''ஏனெனில், நான் அழகி.''

''அழகாயிருப்பவர்கள் எல்லாம் நறுமணம் வீசுகிறார்கள் என்று எண்ணுகிறாயா?''

''எல்லாரைப் பற்றியும் எனக்குத் தெரியாது. நான் அவர்களை முகர்ந்ததில்லை. அதெல்லாம் எனக்கு ஏன்? நான் என்னைப்பற்றிதான் பேசுகிறேன். அற்பம்! அழகாயிருப்பவர்களுக்கெல்லாம் இத்தேமல் வராது. இது வசந்த காலத்தில் வரும். எனவே, இத்தேமல்களில் பனித்துளியின் மணம் வீசத்தானே வேண்டும்.''

''உனக்குத் தலை கொழுத்துப் போய்விட்டது, இது உண்மைதான்!'' என்று ஏமாற்றத்தோடு சொன்னான் தவீதவ். ''உன் கன்னங்களில் என்ன வாசனை அடிக்கிறது என்று சொல்லட்டுமா? அவற்றிலே பனித்துளியின் நறு மணம் இல்லை. முள்ளங்கியும், வெங்காயமும், சூரியகாந்தி எண்ணெயும் கமகமக்கின்றன.''

''பின்னே ஏன் அவற்றில் முத்தமிட வளைய வருகிறாய்?''

''எனக்கு வெங்காயமும், முள்ளங்கியும் ரொம்பப் பிடிக்கும்...''

''சிறு பையனைப் போல, ரொம்ப உளறுகிறாய், செமி யோன்'' என அதிருப்தியுடன் மொழிந்தாள் லூஷ்கா.

''ஒரு புத்திசாலி பேசுவதற்குப் புத்திசாலியைத்தான் தேடுவான் என்பது உனக்குத் தெரியுமா?..''

''புத்திசாலி முட்டாளுடன் இருந்தாலும், புத்திசாலி தான். ஆனால் முட்டாள் எப்போதும் முட்டாள்தான்; யாருடன் இருந்தாலும் முட்டாள்தான்'' என்று திருப்பிக் கொடுத்தாள் லூஷ்கா.

அவர்கள் அப்போதும் வாய்ச் சண்டை இட்டுக்கொண் டார்கள்; ஆனால் அது நெடுநேரம் நீடிக்கவில்லை. சில நிமிடங்களில் முழுமையாக சந்துசெய்து கொள்வார்கள். இம்முறை அது முற்றிலும் மாறுபட்டிருந்தது. தானும் லூஷ் காவும் சேர்ந்திருந்ததெல்லாம், அற்புதமான, தொலைதூர, மீண்டுவராத இறந்த கால நிகழ்ச்சிகள் என்று எண்ணி னான் தவீதவ். அவளைத் தனியாகச் சந்திக்கும் நம்பிக் கையும் மூழ்கிப் போய்விட்டது. தங்களுக்குள் நிலவிய புதுச் சூழ்நிலையைப் பகுத்து ஆராய்ந்தபோது, அவன் மிகவும் தெம்பு இழந்துவிட்டான். ரஸ்மியோத்னவைத் தனது பிரதிநிதியாக நியமித்து விட்டு, கூட்டுப்பண்ணை யின் தொலைதூர வயல்களில் வசந்தகால உழவுக்குச் செல் லும் இரண்டாம் குழுவுடன் சேரத் தீர்மானித்தான் அவன்.

அங்கே அவனுக்கு எவ்வித அலுவலும் இருந்து புறப் படவில்லை. அவன் தப்பி ஓடுகிறான். காதல் முடிச்சை அவிழ்க்க ஆசைகொண்டு, ஆனால் அங்ஙனம் செய்வதற்குப் பயந்து சாகும் ஓர் ஆணின் மானங்கெட்ட ஓட்டம் அது. தவீதவ், விலகி நின்று, தனது சுயத்தன்மையை அடிக்கடி கணித்தவன்; அவனுக்கு இது மிக நன்றாகத் தெரியும். ஆனால் கடிவாளம் அறுந்துவிட்டது. தும்பு தெறித்து விட்டது ஆற்றாமை வந்துவிட்டது. எனவே, தனது மனத் துக்கு உகந்த முடிவுக்கு வந்தான். ஏனெனில், அங்கேதான் அவன் லூஷ்காவைக் காண முடியாது. அங்கே தான் ஒரு சில நாட்கள் அவனால் ஓரளவு அமைதியாக வாழ முடியும்.

அத்தியாயம் நான்கு

ஜூன் மாதத் தொடக்கத்தில் அதிகமான மழை இருந் தது. ஆனால் கோடை மழைபோல இல்லை. அது மென்

மையாகவும், இடைவிடாமலும், கூதிர்காலத்தைப் போல், காற்றோ, இடியோ இல்லாமல் பெய்தது. காலை நேரங்களில் நீலச்சாம்பல் நிற மேகம் கருவானத்தின் கீழ், தனது வெந்நிறத்துடன் தோன்றும், தூரத்து மலைகளின் பின்னிருந்து இம்மேகம் மெல்லத் தோன்றி வெளிவந்து, கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து, வானத்தில் பாதியை மூடி மறைத்துவிடும். பின்னர் மேகம் மெதுவாக இறங்கித் தொங்கும், சில இடங்களில் மஸ்லின் துணிபோல மேகத்துணுக்குகள் கத்தை கத்தையாகத் தொங்கி வழியும்; புல்வெளி மேட்டிலிலுள்ள காற்றாலைகளின் கூரைமீது நின்றால், அவற்றைக் கையால் பிடிக்கலாம். சில சமயம் மெதுவான இடிக் குரல் கேட்கும்; அதன் பின்னர் மிக அருமையாக பலத்த ஆரவாரமின்றி நல்ல மழை பெய்யும்.

வெதுவெதுப்பான துளிகள், பசுவின் பால் சிதறி விழுவதைப் போல, ஊறி நனைந்திருந்த மண்மீது தெறித்து விழுந்தன. முன்னர் பெய்த மழையில் நுரை தள்ளிக்கொண்டிருந்த குட்டைகளின்மீது இதுவும் விழுந்து முட்டை முட்டையாக குமிழியிட்டு நின்றது.இந்தக் கோடை மழை மிகவும் லேசாக இருந்ததால், மலர்ந்திருந்த பூக்கள் கூட நனைந்து குனியவில்லை; முற்றத்தில் ஓடி விளையாடிய கோழிகள் கூட ஒதுக்குப்புறத்துக்கு ஓடவில்லை. மிக அவசர உணர்வுடன் கொட்டடியிலும் வேலியடியிலும் உணவுக்காகக் கிளறிக் கொண்டு சில கோழிகள் திரிந்தன. நனைந்து, இறகு தொங்கியவண்ணம் மழையைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து கூவிக் கொண்டிருந்தன சில சேவல்கள். ஒன்றன்பின் ஒன்றாய் மற்ற சேவல்களின் கூவல்களும் தொடர்ந்தன; இக் கூவல்களுடன் சிட்டுக்குருவிகளின் கிசுகிசுச் சத்தமும் கலந்து; புழுதியாலும், மழையாலும் ஈர்த்து இழுக்கப்பட்டதைப் போல தரையை நோக்கிப் பாய்ந்து, போகிற போக்கில் குட்டைகளில் குளிக்கும் கரிக் குருவிகளின் சத்தமும் இத்துடன் கலந்தது.

கிரெமியாச்சி லோக் கிராமத்திலேயே அதிசயமான பல்வகைச் சேவல்களின் குரல் அபூர்வமாகக் கேட்டது. நடுச்சாமத்தில் எழுந்து முதன் முதலில் கூவத் தொடங்குவது லூபிஷ்கினுடைய சேவல்தான். அதனுடைய கூவல், ஒரு சுறுசுறுப்பு மிக்க இளம் படைப் பிரிவுத் தலைவரின் ரீங்காரக் குரலாக இருக்கும். அதனுடைய குரலுக்கு அக

ஃபோன் துப்த்ஸோவின் முற்றத்திலிருந்து கர்னல் போல அடித்தொண்டையிலிருந்து பதில் கூவல் கேட்கும். அப் புறம் ஒரு ஐந்து நிமிடங்களில் கிராமமே ஒரே கொக்கரக் கோ கூவலாகிவிடும். இப்படி ஒவ்வொன்றும் தங்களது தடித்த கூவலை முடித்தபின்னர், மய்தானிக்கவின் செஞ் சேவல், தொண்டை கம்மிய, ஆனால், அதிகாரமிக்க தொனி யில் காது செவிடுபடுகிறாற் போலக் கடைசியாக அடித் தொண்டையில் கூவும்.

காதலர்களையும், நோயாளிகளையும் தவிர, (நகூல் னவைப் பொருத்தமட்டில் இரு வகையினரும் ஒன்றே) அந்த கிராமத்திலேயே மிகப் பிந்தித் தூங்கப் போகிறவன் நகூல் னவ் தான். இரவில் கிடைக்கும் ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு அக்கறையுடன் ஆங்கிலம் படித்துவந்தான். அவ னுடைய நாற்காலியின் பின்புறத்தில் ஒரு துண்டு தொங்கும். அறையின் ஒரு மூலையில் கிணற்றுத் தண்ணீருடன் ஒரு வாளி இருந்தது. மக்காருக்கு படிப்பு வருவது மிகக் கஷ்ட மாகத்தான் இருந்தது! சன்னலை நன்கு திறந்துவிட்டுக் கொண்டு மேசையின் முன்னால், கொட்டும் வியர்வையுடன், சட்டைப் பொத்தானை மாட்டாமல் கழற்றி விட்டு விட்டு உட்கார்ந்திருப்பான். நெற்றி, முழங்கை, மார்பு, முதுகு ஆகியவற்றிலிருந்து வியர்வையைத் துடைத்துக்கொள்வான். சன்னல் வழியாக வெளியே தலையை நீட்டி, வாளித் தண் ணீரை எடுத்துத் தலையில் அடித்துக் கொண்டு, மனநிறை வுடன் மூச்சுவிடுவான்.

செய்தித்தாளின் மடிப்பு வளைவுகளின் கீழ் எண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பூச்சிகள் அதனைச் சுற்றி வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தன. பக்கத்து அறை யில் படுத்திருந்த வீட்டுக்காரக் கிழவி குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். படிப்பதற்கு மிகவும் சிரமமான அந்த மொழியைக் கற்க, வார்த்தைக்கு வார்த்தை போ ராடிக் கொண்டிருந்தான் மக்கார்... ஒரு நாள் நள்ளிரவு, சன்னல் படிமேல், ஓய்வுக்காக உட்கார்ந்து சிகரெட் பிடிக்க அமர்ந்திருந்தான் நகூல்னவ். முதன் முறையாக சேவல்கள் சேர்ந்தாற் போலக் கூவுவதைக் கேட்டான். மக்கார் வியப் படைந்துபோய், ‘‘இது ஏதோ ஓர் அணிவகுப்பைப் பார்வை யிடுகிறாற் போல இருக்கிறதே! இது ஒரே அற்புதம்!..’’ என்றான்.

அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் சேவல் கூவுவதைக் கேட்பதற்காகக் காத்திருக்கத் தொடங்கினான். இவனுக்குக் குயிலின் குரலைக் கேட்டால்கூட வெறுப்புத்தான். ஆனால் இந்த சேவல்களின் கூவலை மட்டும் மகிழ்வுடன் கேட்கத்தான் செய்தான். குறிப்பாக மய்தானிக்கவினுடைய செஞ்சேவலின் அடித்தொண்டைத் 'தளபதிக் குரலை'த் தான் அவன் மிகவும் ரசித்தான். இதுதான் சேவல்களின் கூவலில் இறுதிக் கூவல் போலத் தெரிந்தது. ஆனால் ஒரு நாள் இரவு சேவல்கள் கூவுகிற முறைமாறி, வழக்கத்தில் அவனுக்குப் பிடித்துப் போயிருந்த முறைக்கு நேர்மாறாக அவமானப் படுத்தக்கூடிய முறையில் ஒன்று நடந்துவிட்டது. இந்த முரட்டுக் குரலுக்கு அடுத்து, கொடுக்கல் வாங்கல்காரன் அர்காஷ்கா மெனோக்கின் கொட்டடியில் இருந்து, ஓர் இளஞ்சேவல் தனது கீச்சுக் குரலில் உச்சக்குரலில் கூவிவிட்டு, பிறகு வெகு நேரம் கோழி மாதிரி கொக்கர கொக்கர என்று கூவிக் கொண்டிருந்தது. இது அந்த முறைக்கு முரணான 'கிரீச்' சப்தங்களைக் கிளப்பிற்று. அதற்குப் பின்னர் நிலவிய அமைதியில், அந்தப் பறவை கூவும்போது தன்னுடைய நிலை தடுமாறி நின்று மீண்டும் உறுதியாக உட்கார்ந்துகொள்ள இறக்கைகளால் உடம்பில் படபடவென்று அடித்துக் கொள்வதைக் கேட்டான்.

ஒழுங்கு விதிகளுக்குப் புறம்பாக, உத்தரவுக்குப் பணிய மறுத்து, தளபதியையே எதிர்த்து ஒரு தறுதலை, உத்தரவு போடுவதுபோலத் தோன்றியது மக்காருக்கு. இந்த முறை கேட்டை அவனால் பொறுக்க முடியவில்லை. அவனுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. ''மூச்ச்!..'' என்று அந்த இருளில் உறுமினான் மக்கார். கோபத்தோடு சன்னலை மூடினான்.

மறுநாள் இரவும், அதனைத் தொடர்ந்து அடுத்த நாள் இரவும் இதே நிகழ்ச்சி நடந்துகொண்டே இருந்தது. ''மூச்ச்!'' என்று இருளில் ஓரிரு முறை மக்கார் உறுமி இருக்கிறான். அவன் உறுமல் கேட்டு வீட்டுக்கார அம்மாகூட அலறி எழுந்திருக்கிறாள். சேவல்களின் தலைமையைத் தரவாரி பிரித்தது போல, கூவி வந்த அந்த வரிசை முறையை இது உடைத்து வந்தது. நள்ளிரவிலேயே மக்கார் தூங்கப் போய் விட்டான்... அயல்நாட்டு வார்த்தைகளையும், வாயில்புகாச் சொற்றொடர்களையும் விடாமல் மனப்பா

டம் செய்து என்ன பயன்? அவனுடைய நினைவெல்லாம் அந்த போக்கிரிச் சேவலைச் சுற்றியே சுழன்றது. இந்தச் சேவலுக்கும், அதனுடைய சொந்தக்காரனைப் போலே மண்டையில் நிச்சயமாக மூளை இருக்காது என ஆத்திர மடைந்தான். அந்த ஒன்றுமறியாத, அப்பாவிச் சேவலை 'அயோக்கியன், விஷப்பூச்சி, திடீர்த்தலைவன்' என்றெல் லாம் திட்டினான். தளபதிக்கு முன்னால் குரல் கொடுப் பதா — என்பதுதான் மக்காரை கடுங் கோபமடையச் செய்துவிட்டது. ஆங்கிலம் படிப்பதில் இருந்த முன்னேற்றம் படிப்படியாகக் குறைந்தது. அவனது உணர்ச்சியும் ஒவ் வொரு நாளும் திடீர் கோபத்துக்கு ஆளாகி வந்தது... இந் நிலையைத் திருத்த வேண்டியது மிகவும் அவசியமாகி விட்டது!

நான்காம் நாள் காலையில் அர்காஷ்கா மெனோக்கின் வீட்டுக்குப் போய், வணக்கம் தெரிவித்துவிட்டு, ''இங்கே வாப்பா. வந்து, உன் சேவலைக் காட்டு'' என்றான் மக்கார்.

''அதை எதற்காக விரும்புகிறாய்?''

''அது எப்படியிருக்கிறது என்று பார்க்க விரும்பு கிறேன்.''

''அது எப்படியிருந்தால் தான் உனக்கென்ன?''

''சரி வா பார்க்கலாம்! இங்கு உன்னுடன் கண்ணாமூச்சி விளையாட எனக்கு நேரமில்லை!'' என்று மக்கார் எரிச்ச லுடன் சொன்னான்.

மக்கார் ஒரு சுருட்டைச் சுற்றிக் கொண்டிருந்தபோது, அர்காஷ்கா ஒரு குச்சியை எடுத்து, பல வண்ண அழகிய தோகைகளுடைய கோழிகளை, களஞ்சியத்தின் அடியிலிருந்து சிரமமில்லாமல் விரட்டினான். மக்கார் நினைத்தது சரி தான்! பன்னிரண்டு, பருத்த உல்லாசமான கோழிகளிடையே ஒரு பரட்டைச் சிறு சேவல் தென்பட்டது. தனது அரு வருப்பை மறைக்காமல் முறைத்து பார்த்தான் மக்கார்.

''அச்சிறு சேவலின் கழுத்தைத் திருகிப்போட்டால்!'' என்று புத்தி சொன்னான் மக்கார்.

''எதற்காக?''

''உங்கள் வீட்டுக் குழம்புக்குத்தான்'' என்று சுருக்க மாகப் பதில் சொன்னான் மக்கார்.

''எதற்காக? அது ஒன்றுதான் கோழியில் விழுந்து கொண்டு இருக்கிறது. ரொம்ப நல்ல சேவல்.''

மக்கார் கிண்டலாகச் சிரித்தான். உதடுகள் நெளிந்தன.

''கோழியில் விழுகிறதா? மிக முக்கியம்தான்! ஆனால் அதற்குப் புத்திசாலித்தனம் தேவையில்லையோ.''

''அதனிடம் நாம் அதைத்தான் எதிர்பார்க்கிறோம். உழவுக்கு அது தேவையில்லை. ஒரு சால் கூட அதனால்...''

''சும்மா கேலி செய்ய முயலாதே! இந்த விளையாட்டில் இருவரும் விளையாடலாம் தெரியுமோ?..''

''சரி, இந்த சேவல் உனக்கு என்ன கெடுதல் செய்தது?'' அர்காஷ்கா பொறுமையிழந்தவனாய் கேட்டான். ''ஏதாவது உன் வழியில் அல்லது எதிலாவது குறுக்கிட்டதா?''

''அது ஒரு முட்டாள். ஒழுங்கைப் பற்றி அதற்குக் கவலையே இல்லை.''

''என்ன ஒழுங்கு? உன் வீட்டுக்கார அம்மாளின் தோட்டத்துக்குள் பறந்து வந்ததா? இல்லை வேறு ஏதாவது?''

''இல்லை, அது அதைச் செய்யவில்லை, ஆனால்...''

அதற்கு மேல் மக்காரால், தன் மூளையிலிருந்த அந்த ஒழுங்கு என்ன என்பதை விவரிக்க முடியவில்லை. ஒரு நிமிடம் அமைதியாக நின்றான். கால்களை அகலப் பரப்பி நின்றவண்ணம், அந்தத் தூரதிர்ஷ்டம் பிடித்த பறவையையே பார்த்துக்கொண்டிருந்தான். பின்னர் திடீரென்று ஒரு எண்ணம் பிறந்தது.

''நண்பரே, உனக்குத் தெரியுமா?'' என்று அர்காஷ்காவிடம் பேச்சைத் தொடங்கி, ''நாமிருவரும் சேவல்களை மாற்றிக்கொள்வோமா?'' என்றான்.

''கோழியே இல்லாத உன் வீட்டில் சேவலுக்கு எங்கே போவது?'' என்று அக்கறை கொண்டு கேட்டான் அர்காஷ்கா.

''ஒன்று உண்டு, ஆனால் இதுமாதிரி சேவல் அல்ல!''

''அப்படியானால் கொண்டுவா. உன் சேவல் பரவாயில்லாமல் இருந்தால், மாற்றிக்கொள்வோம். எனக்கு ஒன்றும் பிடிவாதமில்லை.''

அரை மணி நேரம் கழித்து அக்கீம் பெஸ்ஹிலேப்னவ் வீட்டுக்கு ஏதோ தற்செயலாக வந்தவனைப் போல மக்கார் போனான். அவனிடம் ஏராளமான கோழிகள் இருந்தன. ஏதேதோ பேசிக்கொண்டிருந்த போதும், மக்கார் கோழிகளையே கூர்மையாக கவனித்துக்கொண்டிருந்தான். அவை முற்றத்தில் கொத்திக்கொண்டு திரிவதையும், அவைகளின் குரலையும் கவனித்தான். அவனுடைய ஐந்து சேவல்களும்,

நல்ல வடிவத்துடனும், நல்ல நிறத்துடனும், சீரான குரலுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கமான பறவைகளாகத் தென்பட்டன. புறப்படுவதற்கு முன்னர், ''உனது சேவல்களில் ஒன்றை எனக்கு விற்பாயா?'' என்று மக்கார் கேட்டான்.

''உன் இஷ்டப்படியே, தோழர் நகூல்னவ், ஆனால் சூப்புக்கு என்றால் பெட்டைக் கோழிதான். முட்டைக்கோசில் போட்டால் நன்றாக இருக்கும். கோழிகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடு. ஒரு முடியே இல்லாமல் வைத்திருக்கிறாள் எங்கள் வீட்டுக் கிழவி!''

''இல்லை, எனக்கு ஒரு சேவல்தான் வேண்டும். சேவலைக் கொண்டுபோக எனக்கு ஒரு கோணிப்பையும் வேண்டும்.''

சிறிது நேரத்தில் அர்காஷ்கா வீட்டு முற்றத்தில் நின்று சாக்கை அவிழ்த்துக் கொண்டிருந்தான் மக்கார். கொடுக்கல் வாங்கல் பேரத்தில் பெயர்போன அர்காஷ்கா, எதிர்பார்க்கும் ஆர்வத்துடன் சுற்றிச்சுற்றி வந்து முணகிக் கொண்டு: ''எங்கே பார்க்கலாம், உன்னுடைய சேவல் எப்படி இருக்கிறது, என்று?'' எனச் சொல்லியவண்ணம் கைகளைத் தேய்த்துக்கொண்டே இருந்தான். ''அநேகமாக உன் சேவலை வாங்கிக்கொண்டு, அதற்கும் மேலாகக் கொஞ்சம் ஈடுகேட்க நேரிடலாம் போலத் தோன்றுகிறது. சாக்கைச் சீக்கிரம் கழற்றேன்! அதை வைத்துக்கொண்டு என்ன நோண்டிக் கொண்டிருக்கிறாய்? ஒரு நிமிடத்தில் என்னுடைய சேவலைப் பிடித்துவிடுவேன். நம்முடைய சேவல் இரண்டையும் சண்டை போட விடுவோம். யாருடைய சேவல் வெற்றி பெறுகிறதோ அவர்களுக்கு குடிக்க மது—பந்தயம். சரிதானா? நிச்சயமாக இதை நான் மாற்ற மாட்டேன்! உன்னுடைய சேவல் எப்படி இருக்கும்? மிகப் பெரியதா?''

''சரியான போர்வீரன்!'' என்று சொல்லிக் கொண்டே இறுக்கிப்போட்டிருந்த சாக்கு முடிச்சைப் பல்லால் கடித்துக் கழற்றிக் கொண்டிருந்தான் மக்கார்.

அர்காஷ்கா தனது காற் சட்டையை சரியாக இழுத்துவிட்டுக்கொண்டு கோழிக்கூட்டை நோக்கி நடந்தான். உள்ளே இருந்து சேவல் ஒன்று கூவுவது கேட்டது. அர்காஷ்கா திரும்பியபொழுது, இறக்கைகளைப் பறக்க விரித்துப் பரிதாபமாகத் தொங்கிக்கொண்டிருந்த சேவலை மார்போடு

அணைத்துக் கொண்டு திறந்திருந்த கோணிப் பையின் மேல் நின்றான் மக்கார். 'போர்வீரன்' இறக்கைகளைத் தொங்கப் போட்டு, தனது ஆரஞ்சுநிறக் கொண்டையையும் வலிதாங்காமல் சாய்த்துத் தொங்க விட்டிருந்தது.

''அதற்கு என்ன?'' என்று வியப்போடு கேட்டான் அர்காஷ்கா.

''ஏதோ தவறு நிகழ்ந்துவிட்டது!''

''என்ன, உடல் நலம் கெட்டதா?''

''தவறு நிகழ்ந்துவிட்டது என்று சொன்னேன்.''

''சேவல் என்ன தவறு செய்துவிட்டது? விசித்திரமாகப் பேசுகிறாய்!''

''சேவல் அல்ல. நான்தான் தவறு செய்துவிட்டேன். இதைச் சாக்கில் போட்டுக் கட்டிக்கொண்டு வந்தேன். நிர்வாக அலுவலகத்திற்கு முன்னால் வரும்பொழுது இது கூவிவிடுமோ எனப் பயந்து, கழுத்தைத் திருகினேன், இலேசாகத்தான் திருகிவைத்தேன்... ஆனால் என்ன நடந்து விட்டது பார்த்தாயா? கத்தியை சீக்கிரம் எடுத்துக் கொண்டு வா. இல்லையென்றால் ஒன்றுக்கும் பயனில்லாமல் போய் விடப் போகிறது.''

தலையை வெட்டிவிட்டு அந்தச் சேவலை வேலிக்கு மேலே வீட்டை நோக்கி வீசி எறிந்தான். வீட்டுக்கார அம் மாவிடம், ''அம்மா! இதனுடைய உரோமத்தையெல்லாம் பறித்துவை. நாளைக்குக் குழம்பு வைத்துக்கொள்வோம்!'' என்று சத்தம் போட்டான்.

அர்காஷ்காவிடம் ஒரு வார்த்தை கூடப் பேசிக்கொள் ளாமல் திரும்பவும் பெஸ்ஹிலேப்னவ் வீட்டை நோக்கி நடந் தான். முதலில் அவன் மறுத்தான். ''இப்படியே செய்து கொண்டு போனால், என் கோழிகளை எல்லாம் நீ விதவை ஆக்கி விடுவாய்'' என்று முணகினான். கடைசியாக மற்று மொரு சேவலை விற்க உடன் பட்டான். அர்காஷ்காவிட மும் கொடுக்கல் வாங்கலைப் பேசி முடித்துவிட்டான். சில நிமிடங்கள் கழித்து, அர்காஷ்காவின் தலையிழந்த சேவலை வேலிக்கு மேலாக மக்கார் வீட்டை நோக்கி வீசி எறிந் தான். ''இந்தச் சனியனையும் எடுத்துக் கொள் அம்மா! இந்த ஒழுக்கங்கெட்ட சேவலையும் இறக்கைகளைப் பறித்து பானையில் போட்டு வேக வை!'' என்று மக்கார் பெரும் மகிழ்ச்சியோடு கத்தினான்.

தேவையான மிகப் பெரிய பணியை முடித்துவிட்ட வனைப் போல மக்கார் தெருவிலே நிம்மதியாக நடந்தான். தன் வீட்டில் மக்கார் சேவல்களை ஈவிரக்கமின்றி அறுத்து வீசிய காட்சிகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்து போயிருந்த அர்காஷ்காவின் மனைவி, அவன் போவதைப் பார்த்து கவலையுடன் தலையை ஆட்டிக்கொண்டு நின்றாள். அவளுடைய அமைதியான கேள்விக்குப் பதில் சொல்கிறவனைப் போல அர்காஷ்கா நெற்றிமேல் விரலை வைத்துச் சுழற்றிக் காண்பித்தான். பிறகு மெதுவான குரலில், ''மூளை கழன்று விட்டது! நல்ல மனிதன் தான், ஆனால் கழன்று போச்சு. மண்டையை விட்டே போய்விட்டது. இரவெல்லாம் உட்கார்ந்து படிக்கிறான்! ஆங்கிலம் படிப்பதன் வினை! சனியன் என்ன செய்துவிட்டது பார்த்தாயா?'' என்றான் அர்காஷ்கா.

அதன் பிறகு தனது தன்னந்தனிமையையும் பொருட் படுத்தாமல் சேவல்கள் கூவுவதை மக்கார் கேட்டு வந்தான். பகலெல்லாம் பெண்களுடனும் குழந்தைகளுடனும் சேர்ந்து களைபறிப்பான். மாலையில் கரியில்லாமல் முட்டைக் கோஸ் மற்றும் பால் குடித்துவிட்டு நள்ளிரவு வரை ஆங்கில பாடப் புத்தகத்தை அமைதியாகப் படிப்பான்.

இவனுடன் ஷ்சுக்கார் தாத்தாவும் சேர்ந்துகொண்டான். ஒருநாள் இரவு மெதுவாகக் கதவைத் தட்டி, ''நான் உள்ளே வரலாமா?'' எனக் கேட்டான் ஷ்சுக்கார்.

''உள்ளே வா. என்ன வேண்டும்?'' என்று வரவேற்பு உணர்வில்லாமல் கேட்டான் மக்கார்.

''இது... வந்து... எப்படிச் சொல்வதென்று தெரிய வில்லை...'' என்று தயங்கித் தயங்கித் தொடங்கினான் ஷ்சுக்கார். ''உன்னைக் காணவில்லையே மக்கார். உன்னைப் பார்க்க ஆசை. இங்கே விளக்குத் தெரிந்தது. எனவே என்ன செய்கிறாய் என்று பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்.''

''நீ என்ன பெண்ணா? எனக்காக ஏன் உருகுகிறாய்?''

''பெண்ணைக் காட்டிலும் சில சமயங்களில் கிழவன் அதிகமாகத் தனிமையில் வாடுவதுண்டு. என்னுடைய வேலையோ ஒரே மந்தமானது. முழுக்க முழுக்கக் குதிரை யைக் காவல் காத்துக்கொண்டிருக்க வேண்டியது தானே. பார்த்துப் பார்த்துக் கண்கூடப் பூத்துப் போச்சு! நாம்

என்ன தான் அன்பாகப் பேசினாலும் அது பதிலுக்குப் பேசுமா? சும்மா ஒட்சை அசை போட்டுக் கொண்டு வாலையும் ஆட்டிக் கொண்டிருக்கும். அதனால் எனக்கு என்ன பயன்? அப்புறம் அந்தப் பேய்க்கிடாய் இருக்கிறதே அது ஓர் ஆட்டுக்கடா! மக்கார், அது எப்பொழுதாவது தூங்குகிறது என்று நினைக்கிறாயா? நான் கண்ணை மூடினால் போதும், உடனே அது வந்துவிடும். தூங்கும்பொழுது எத்தனை தடவை என்மேல் நடந்து இருக்கிறது தெரியுமா? வாழ்க்கை எல்லாம் இதற்குப் பயந்தே கழித்து விட்டேன், இத்துடன் மாரடித்துவிட்டு, அதற்குப் பிறகு கண்ணைக் கட்டிக்கொண்டு தூங்கினாலும் தூக்கம் வராது! இப்படித் தொல்லை கொடுக்கும் ஒன்றை இதுவரை நான் பார்த்தது இல்லை! இதிலிருந்து எனக்கு அமைதியே கிடைக்காதோ? கொட்டடியை இரவு முழுவதும் சுற்றிக்கொண்டே திரிகிறது. அதனுடைய கழுத்தை வெட்டி விடலாமா, மக்கார்?''

''இப்படிப்பட்ட பேச்சை இங்கு வைத்துக்கொள்ள வேண்டாம்! கூட்டுப்பண்ணையின் ஆட்டுக் கடாக்களுக்கு நான் ஒன்றும் மேற்பார்வை செய்யவில்லை. தவீதவ்தான் அதற்குப் பொறுப்பு. அவரை வேண்டுமானால் போய்ப் பார்த்துப் பேசு.''

''தெய்வமே வேண்டாம்! மக்கார், நான் ஆட்டுக்கடா பற்றிப் பேச வரவில்லை. நான் உன்னைப் பார்க்கத் தான் வந்தேன். ஏதாவது விருவிருப்பான புத்தகமிருந்தால் கொடு, எலி மாதிரி மூச்சுவிடாமல் உட்கார்ந்து படிக்கிறேன். அது உனக்கும் மகிழ்ச்சியைத் தரும். எனக்கும் நல்லது. உன்னை எள்ளவும் தொந்திரவு செய்ய மாட்டேன்!''

மக்கார் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு தனது இசைவைக் தெரிவித்தான். கனத்த ருஷ்ய மொழி அகராதி ஒன்றைக் கையில் கொடுத்து, ''இங்கே என்னுடன் உட்கார்ந்து படி. வாயைத் திறந்து படிக்காதே. உனக்குள் மட்டும் படித்துக்கொள். தும்மவோ, இருமவோ கூடாது. மூச்சு வரக் கூடாது, புரிகிறதா? நான் சொல்லும்போது புகை பிடிக்கலாம். என்ன விளக்கமாகச் சொல்லிவிட்டேனா?'' என்றான்.

''நன்றாக விளங்குகிறது, மக்கார். தும்முவதற்கு என்ன செய்வது? ஏதாவது ஒன்று ஏற்பட்டு, நான் தும்மநேரிட்

டால் என்ன செய்வது? என்னுடைய இந்த வேலையில் என் மூக்கில் எப்பொழுதும் உலர்ந்த புல் தூசி அடைத்தே இருக்கிறது. நான் தூக்கத்தில்கூட சில சமயம் தும்முகிறேன். அதற்கு நாம் என்ன செய்யலாம்?''

''குண்டு பாய்வது மாதிரி, நீ வெளியே ஓடிவிட வேண்டும்!''

''ஏ, மக்கார் நீ என்னைக் குண்டாகச் செய்ய முடியாது, நான் ரொம்பத் துரு ஏறிப் போயிருக்கிறேன்! நான் வெளியே ஓடுவதற்குள் பத்துத் தடவை தும்மிவிடுவேன், ஐந்து தடவை மூக்கு வெடித்துவிடும்.''

''அப்படியானால் நீ வேகமாகப் போயாக வேண்டும்!''

''ஒரு பெண் கல்யாணம் செய்துகொள்ள அவசரப்பட்டாள், ஆனால் மாப்பிள்ளை கிடைக்கவில்லை. உதவும் எண்ணங்கொண்ட, அந்தப் பக்கம் வந்த ஒருவன் அவளுக்கு ஆபத்தில் உதவினான். அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகாமலே, என்ன நடந்தது தெரியுமா? ஊதிப்போன பெரிய பெண்ணாக மாறிவிட்டாள்! இதுதான் எனக்கும் நேரும். நான் அவசரப்படத் தயார். ஆனால் நான் அவசரப்பட்டு உடம்பை அலட்டிக் கொண்டால் என்ன நேரம் என்று என்னால் சொல்ல முடியாது. அப்புறம் ஓடு ஓடு என்று துரத்தியடிப்பாய். உன் முகத்தில் மூக்கு இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை நீ துரத்தியடிக்கப் போவதும்!''

மக்கார் அடக்க முடியாமல் சிரித்தான். ''அவசரப்படுவதிலும் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீ உன் கௌரவத்தை அப்படி அசட்டை செய்துவிடக் கூடாது. சுருங்கச் சொன்னால் பேசாமலிரு. என்னைத் தொந்தரவு செய்யாதே. ஒழுங்காகப் படித்து பண்பாடுமிக்க கிழவனாக நடக்கப்பார்.''

''மேலும் ஒரே ஒரு சிறு கேள்வி கேட்கலாமா? கோபிக்காதே மக்கார். கடைசிக் கேள்வி.''

''என்ன? கேட்டுத் தொலை!''

ஷ்சுக்கார் தாத்தா இருக்கையிலே நெளிந்து மாறி உட்கார்ந்தான்.

''ஏதாவது... வந்து... இது மாதிரித்தான்'' என்று முணகினான் ஷ்சுக்கார் தாத்தா. ''ரொம்ப ஒன்றும் இல்லை. ஆனால் நீ பார்க்க வேண்டும்—என் வீட்டுக்கிழவிக்கு இது பொறுக்காது படுகோபம் வரும்; 'உன்னால், எனக்குத் தூக்

கமே இல்லை!' என்கிறாள். ஆனால் அதற்கு நான் என்ன செய்வது என்று கேட்கலாமா?''

''கேட்ட விஷயத்தில் நில்!''

''இது பற்றி நான் சொல்கிறேன். இந்த முறிவினாலோ வேறு ஏதோ ஒரு வியாதியினாலோ, வயிற்றில் இந்தக் குளிர் வந்து விடுகிறது. அப்புறம் ஒரே இடிமேகம் போலத் தான்! இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்யலாம்? அதுவும், உன் படிப்பின் கவனத்தைத் திருப்பும், இல்லையா?''

''நேராக அதோ அந்தப் பாதை வழியே போ! உன் இடியும் வேண்டாம், மின்னலும் வேண்டாம்! நான் சொல்வது புரிகிறதா?''

ஷ்சுக்கார் அமைதியாகத் தலையை ஆட்டிவிட்டு, நீண்ட பெரும் பெருமூச்சுடன் அகராதியைப் புரட்டினான். நள்ளிரவில் மக்காரின் விளக்கத்துடன், முதன் முறையாக, சேவல்கள் கூவுவதை கேட்க வேண்டிய முறையில் கேட்டான் ஷ்சுக்கார். மூன்று நாட்களுக்குப் பிறகு இருவரும் சன்னலடியில் தோளோடுதோள் இடித்துக்கொண்டு நின்ற வண்ணம் கேட்டனர். ஷ்சுக்கார் ஆச்சரியங்கலந்த மகிழ்ச்சியுடன், ''அட ஆச்சரியமே! இப்படிக் கேட்டதே இல்லையே! இந்தச் சேவல்களின் வால்களிலேயே மிதித்துக் கொண்டு திரிந்திருக்கிறேன். கோழிக் குஞ்சுகளிடையே சிறு பையனாக இருந்தது முதல் வாழ்ந்திருக்கிறேன். இந்தக் கொக்கரக்கோவில் இவ்வளவு அழகிருப்பதை நான் உணரவே இல்லையே. ஆனால் இப்பொழுது உணருகிறேன்! மக்கார், அந்த மய்தானிக்கவின் சேவல் இருக்கிறதே, அதற்கு என்ன குரல் கேட்டாயா? ஜெனரல் பிருஸீலவ் குரல் மாதிரி!''

மக்கார் முகத்தைச் சுளித்தான். ஆனால் குசுகுசுப் பேச்சுக்குமேல் குரலை உயர்த்தவில்லை. ''தாத்தா! நீ நம்முடைய ஜெனரல்களின் குரல்களைக் கேட்டிருக்க வேண்டும். உண்மையான குரல்கள் இருக்கின்றன! உன் பிருஸீலவ் குரல் எம்மட்டு? முதலாவதாக பிருஸீலவ் பழைய ஜார் தளபதி, எனவே என்னைப் பொருத்த மட்டில் சந்தேகப் படுகிறேன். இரண்டாவதாக, அவன் ஒரு கண்ணாடி போட்ட அறிவாளி. நாம் விருந்து சாப்பிட்டோமே அர்காஷ்காவின் சேவல், அதனுடைய குரல் மாதிரிதான் அவன் குரல் இருந்தது. அரசியல் கண்ணோட்டத்தில் இருந்து தான் குரல்

களையும் மதிப்பிட வேண்டும். உதாரணமாக நம்முடைய டிவிஷனில் கீழ்க் குரலுடைய தளபதி ஒருவன் இருந்தான். நம்முடைய ராணுவத்திலேயே சிறந்தவன்! ஆனால் அவன் அயோக்யனாகி, எதிரிக்குக் காட்டிக் கொடுக்கத் தொடங்கி விட்டான். இப்பொழுது கீழ்க் குரலுடைய அவனை சிறந் தவன் என்று நான் கருதுவேனா? ஒரு கணமும் அவ்வாறு நினையேன்! இப்பொழுது தலைவனாக அல்ல, சாதாரண துக்கடாவாகக் கருதுகிறேன்!''

''மக்கார், சேவல்களுக்கும், அரசியலுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?'' ஷ்சுக்கார் தாத்தா அமைதியாகக் கேட்டான்.

''அவைகளுக்கும் உண்டு! இது மய்தானிக்கவினுடைய சேவலாக அல்லாமல், ஒரு குலாக்கினுடைய சேவலாக இருந் தால் அந்தப் பூச்சியின் குரலை நான் கேட்பேன் என்று நினைக்கிறாயா? இன்றைய குலாக்குகளை எனக்கு ஒரு துளிக்கூடப் பிடிக்காது!.. சரி, பேச்சுப் போதும்! உட்கார்ந்து உன் புத்தகத்தை எடுத்துப் படி. நான் என்னுடைய புத்த கத்தைப் படிக்கிறேன். இனிமேல் பைத்தியக்காரத்தனமான கேள்விகளைக் கேட்காதே. கேட்டால் இரக்கமின்றி துரத்தி விடுவேன்!''

சேவல்கள் கூவுவதைக் கேட்பதிலும், கவனிப்பதிலும் அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கிவிட்டான் ஷ்சுக்கார் தாத்தா. இவன்தான் மக்காரை வற்புறுத்தி மய்தானிக்க வின் சேவலைப் போய்ப் பார்க்கத் தூண்டினான். ஏதோ காரியமாக வந்தவர்களைப்போல மய்தானிக்கவ் வீட்டு முற் றத்தில் இருவரும் நுழைந்தனர். இளவேனிற்கால உழவுக்குப் போயிருந்தான் கொந்திராத். மக்கார் மய்தானிக்கவின் மனைவியிடம் பேசினான். அவள் ஏன் களையெடுக்கப் போகவில்லை என்று கேட்டுகொண்டிருந்தபோதே, முற் றத்தில் நடைபோட்டுக்கொண்டிருந்த சேவலை உற்றுக் கவ னித்தான். பார்க்க எடுப்பாக அழகாக, செங்கொண்டை யுடன் காட்சி தந்தது அந்தச் சேவல். இதைப் பார்வையிட்ட பிறகு மன நிறைவுடன் போனான் மக்கார். வெளி வாயி லைத் தாண்டிப் போகும்பொழுது, ஷ்சுக்காரின் தோளில் ஓர் இடி இடித்து, ''அதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''அதன் சத்தம் போலவே, அது பார்க்கவும் நன்றாக இருக்கிறது. சரியான ஆர்ச் பிஷப் மாதிரி!''

இந்த ஒப்புமையைக் கேட்டு மிகவும் அதிருப்தியடைந் தாலும் மக்கார் எதுவுமே சொல்லவில்லை. நிர்வாக அலு வலகத்துக்கருகில் போய்க்கொண்டிருந்தபோது, மிகவும் பயங்கலந்த கண்களுடன் மக்காரின் சட்டை நுனியைப் பிடித்து நிறுத்தினான் ஷ்சுக்கார்.

''மக்கார், அவர்கள் அதைக் கொல்லக் கூடும்!''

''எதை?''

''கடவுளே! என்னை அல்ல, அந்தச் சேவலைத்தான்! கடவுளே இரக்கம் கொள்ளும்! அவர்கள் அதைக் கண் சிமிட்டுவது போலக் கொல்லத்தான் போகிறார்கள்! நிச்சய மாக!''

''கொல்லவா? எதற்காக? ஏன் உளறுகிறாய்? நீ என்ன சொல்கிறாய் தெரியவில்லையே!''

''நீ அதைப் பார்க்கவில்லையா? அது சாணக்குவியல் அளவுக்கு வயதானது. அதற்கு என்னைக் காட்டிலும் அதி கம் இல்லாவிட்டாலும், என் வயதாவது இருக்கும். நான் சிறு பையனாக இருந்த காலத்திலிருந்து அந்தச் சேவலைப் பார்க்கிறேன்!''

''பொய் சொல்லாதே தாத்தா! சேவல்கள் எழுபது வயது வாழ்வதில்லை. அது இயற்கையே அல்ல. உனக்குப் புரிகிறதா?''

''அதனாலென்ன? அது கிழடுதான். அதனுடைய சிறகு மயிர் பூராவும் நரைத்துவிட்டது. அதைப் பார்த்தாயா?'' என்று பதிலடி கொடுத்தான் ஷ்சுக்கார் தாத்தா.

மக்கார் திடீரென்று நடையைத் திருப்பினான். நீளடி யிட்டு, வேகமாக நடந்ததால், அவனைத் தொடர்ந்த ஷ்சுக் கார், இடையிடையே ஓட வேண்டியதாயிற்று. சில நிமிடங் களில் அவர்கள் மீண்டும் மய்தானிக்கவின் முற்றத்திற்குள் நுழைந்தார்கள். நெற்றியில் துளிர்த்து நின்ற வியர்வையை, லூஷ்கா விட்டுச் சென்ற கைக்குட்டையால், மக்கார் துடைத்துக் கொண்டான். ஷ்சுக்கார் கிழவன் அரை நாள் நரி வேட்டைக்குப் பின் இளைத்துப்போய் நாய் மாதிரி வாய்திறந்து கொண்டு நின்றான். பழுப்பேறிய அவனுடைய நாக்கில் இருந்து, தாடிவரை சொட்டுச் சொட்டாக எச்சில் விழுந்து கொண்டிருந்தது.

கொந்திராத்தின் மனைவி அவர்களை நோக்கி புன்னகை செய்தபடி இன்சொல்லில் பேசினாள்.

''எதையாவது மறந்துவிட்டீர்களா?''

''பிரோஹரவ்னா, உன்னிடம் ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். அது இதுதான்: உன்னுடைய சேவலைக் கொன்றுவிடாதே.''

ஷ்சுக்கார் கிழவன் நெஞ்சை உயர்த்தி, கையை நீட்டி, விரலை நேராகச் சுட்டிய வண்ணம். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, ''கடவுள் தடுப்பாராக!..'' என்றான்.

மக்கார் அவனை அருவருப்போடு பார்த்துக்கொண்டு, ''நாங்கள் கூட்டுப்பண்ணைக்கு அதை வாங்க விரும்பு கிறோம். அல்லது மாற்றுச் சேவல் கொடுத்தாவது வாங்க விரும்புகிறோம், கூட்டுப்பண்ணைக்குக் கோழி பெருக வேண் டும். அதனுடைய இறகுகளைப் பார்க்கும்போதே, அது சுத்தமான ரத்தமுடையது என்பது தெரியவில்லையா? இத னுடைய முன்னோடிகள் ஒருவேளை இங்கிலாந்து அல்லது ஹாலந்து போன்ற நாடுகளிலிருந்து, ஒரு புதிய இனவிருத் திக்காக இங்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். டச்சு வாத்துகளுக்கு மூக்கின்மேல் சதைப்பற்று இருக்கும், இல்லையா? ஆமாம் இருக்கும். இந்தச் சேவலும் ஹாலந் தில் இருந்துதான் வந்திருக்கக் கூடும். உனக்குத் தெரியாதா? எனக்கும் தெரியாது. எனவே அது எந்தச் சூழ்நிலையிலும் கொல்லப்படக் கூடாது.''

''ஆனால் இது விருத்திக்கு உதவாது. ரொம்பவும் கிழண்டுவிட்டது. நாங்கள் பண்டிகை ஞாயிறன்று இதைக் கொன்றுவிட்டு, இதற்குப் பதிலாக ஓர் இளஞ்சேவலை வாங்கப்போகிறோம்.''

இந்த சமயம் ஷ்சுக்கார், மக்காரின் தோளை இடித் தான். 'என்ன நான் சொன்னது சரியா?' என்பது போல இடித்தான். ஆனால் இதைப் பொருட்படுத்தாமல் மக்கார், அந்த சேவல் சொந்தக்காரியை சரிக்கட்டும் முயற்சியில் இருந்தான்.

''வயதானதால் ஒன்றுமில்லை. பெருக்கிற்கு நாங்கள் வைத்துக் கொள்கிறோம். வோத்காவில் கோதுமையை ஊறப் போட்டு இதை வளர்க்கிறோம். அதன் பிறகு மீண் டும் கோழியை விரட்டத் தொடங்கிவிடும்! என்ன காரணத் திற்காகவும் பெரு மதிப்பு வாய்ந்த அந்த சேவல் அழிக்கப்

படக் கூடாது. நான் தெளிவாகச் சொல்லிவிட்டேனா? சரி, நல்லது. ஓர் இளஞ் சேவலைப் பொருத்த மட்டிலும், ஷ்சுக்கார் தாத்தா இன்னும் கொஞ்ச நேரத்தில் ஒன்றைக் கொண்டு வருவான்.''

அன்றைக்கே தியோம்கா உஷ்க்கோவின் மனைவியைப் பார்க்கப் போனான் மக்கார். அவளிடம் கூடுதலாக நின்ற சேவல்களில் ஒன்றை நியாயமான விலை கொடுத்து வாங்கி, ஷ்சுக்கார் கிழவன் மூலமாக மய்தானிக்கவ் வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

கடைசித் தடையையும் தாண்டிவிட்டதாகத் தோன்றியது. ஆனால் இந்தச் சமயத்தில் ஊர் முழுவதும் ஒரு வதந்தி பரவியது. மக்கார் நகூல்னவ் மொத்த விலைக்கும் சில்லறை விலைக்கும், என்ன காரணத்திற்காகவோ கண் மண் தெரியாத விலை கொடுத்துச் சேவல்களை வாங்கி வருவதாக வதந்தி பரவியது. எப்பொழுதும் கேலிசெய்து சிரிக்க வாய்ப்புக் கிடைத்தால் தவற விடாத ரஸ்மியோத்னவ், இதை நழுவ விடுவானா? இந்த அசாதாரணமான செயலைக் கேட்ட அவன், இதன் முழு விபரத்தையும் விசாரித்துத் தெரிந்துகொள்ள, அன்று மாலை நேரத்தில் அவன் நண்பரின் வீட்டில் போய் நிற்க முடிவு செய்தான்.

மக்காரும் ஷ்சுக்காரும் மேசையருகில் உட்கார்ந்து கனத்த புத்தகங்களில் மூழ்கி இருந்தனர், விளக்குத் திரி மிகவும் பெரிய அளவில் ஏற்றிவிடப் பட்டிருந்தது. பெரிய கருப்புப் புகை மண்டலங்கள் அறையில் பறந்து கொண்டிருந்தன. விளக்கைத் தொட்டுக் கொண்டிருந்த காகித மடிப்பு எரிந்து கருகி புகை நாறிக் கொண்டிருந்தது. ஆரம்பப் பள்ளியில் முதல் எழுத்துப் பாடம் நடக்கும் பொழுது நிலவும் அமைதி அந்த அறையில் நிலவியது. கதவைத் தட்டாமல் திறந்து நின்ற ரஸ்மியோத்னவ் உறுமினான். கவனமாகப் படித்துக் கொண்டிருந்த இரு மாணவர்களில் யாரும் இவனைப் பொருட்படுத்தவில்லை. வாயிற்படியில் நின்றவண்ணம், சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியாத நிலையில் பலத்த குரலில், ''தோழர் நகூல்னவ் இங்கு குடியிருக்கிறானா?'' என்று கேட்டான்.

மக்கார் தலையைத் தூக்கி ரஸ்மியோத்னவ் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். வந்திருந்த விருந்தாளி குடித்திருக்கவில்லை. ஆனால் அவனுடைய உதடுகள் சிரிப்பை அடக்க

முடியாமல் துடித்துக் கொண்டிருந்தன. சுருங்கியிருந்த நகூல் னவின் கண்கள் கோபத்தைக் காட்டின. ''அந்திரேய், நீ போய் கிராமத்துப் பெண் பிள்ளைகளுடன் உட்கார்ந்திரு. உன்னுடன் என் நேரத்தை நான் வீணாக்க முடியாது'' என்றான் அமைதியாக மக்கார்.

தன்னுடைய நகைச் சுவை நிலையைப் புரிந்து கொள்ளும் நிலையில் மக்கார் இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட ரஸ்மியோத்னவ் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நாற்காலியின்மீது அமர்ந்தான். அதன் பிறகு சற்று வினயமாகவே கேட்டான்:

''உண்மையாகத்தான் கேட்கிறேன். அவற்றை எதற்காக வாங்கினாய்?''

''குழம்பு வைக்கவும், சூப்புக்காகவும் தான். இந்தக் கிராமத்துப் பெண்களுக்கு ஐஸ்கிரீம் செய்ய என்று நினைத்தாயா?''

''நான் அப்படி நினைக்கவில்லை. ஆனால் எனக்கு வியப்பாக இருந்தது. இத்தனை சேவல்கள், அதுவும் சேவல்களாகத்தான் வேண்டுமா என்று நினைத்தேன்.''

மக்கார் முறுவலித்தான். ''எனக்குச் சேவல் கொண்டைகளைக் குழம்பில் போட்டால் பிடிக்கும். அவ்வளவுதான். நான் சேவல்கள் வாங்கியதைப் பற்றி நீ பெரிதும் ஆச்சரியப் பட்டிருக்கிறாய். நீ களையெடுக்க வராதது பற்றி நான் பெரிதும் ஆச்சரியப்பட்டுப் போனேன்.''

''அங்கு வந்து என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? பெண்களைக் கவனிக்கவா? அதற்குத் தான் குழுத் தலைவர்கள் இருக்கிறார்களே.''

''நீ அவர்களைக் கவனிக்க வேண்டாம். நீ களை எடுக்கலாமே.''

ரஸ்மியோத்னவ் ஒரு சிரிப்புச் சிரித்து அதைத் தட்டிக் கழித்துவிட்டான்.

''அவர்களோடு சேர்ந்து நானும் களையைப் பிடுங்கிக் கொண்டிருக்க வேண்டுமா? இல்லவே இல்லை! அது ஓர் ஆண்மகன் வேலையல்ல. மேலும் நான் ஒன்றும் ஏனோதானோப் பேர்வழி அல்ல. கிராம சோவியத்தின் தலைவன் நான்.''

''அப்படி ஒன்றும் அது ஒரு பெரிய கொம்பு இல்லை. 'பெரிய' இல்லாத மூட்டைப் பூச்சி! நான் பெண்களுடன்

சேர்ந்து புல்லைப் பிடுங்கும்பொழுது, நீ பறித்தால் என்னவாம்?''

ரஸ்மியோத்னவ் தோள்களை குலுக்கிக் கொண்டான்.

''என்னால் முடியாது என்பது அல்ல. மற்ற கஸாக்குகளின் முன்னால் என்னை முட்டாளாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை.''

''தவீதவோ, நானோ எந்த வேலையைக் கண்டும் மூக்கைச் சுளிப்பதில்லை. குல்லாவைக் காதுவரை இழுத்து விட்டுக் கொண்டு எதற்காக அப்படி அந்த அலுவலகத்தையே கட்டி அழுகிறாய். அல்லது அந்தச் சின்னப் பெட்டியை கட்கத்தில் இடுக்கிக்கொண்டு உள்ளத்தைப் பறிகொடுத்தவன் மாதிரி ஊரைச் சுற்றி வளையம் வந்து கொண்டே இருக்கிறாய். நீ இல்லாமல் உன்னுடைய செயலாளரால் ஒரு குடும்பத்துக்குச் சீட்டுக் கொடுக்க முடியாதா? இந்தச் சிறு விளையாட்டுக்களை எல்லாம் விட்டுவிடு, அந்திரேய்! நாளையே அந்த முதற் குழுவில் சேர்ந்து, உன் நாட்டுப் போர்க்கால வீரர்கள் எப்படி வேலை செய்வார்கள் என்பதை அந்தப் பெண்களுக்கு நீ காட்ட வேண்டும்!''

''உனக்கென்ன பைத்தியமா? கேலி செய்கிறாயா? நீ இந்த இடத்திலேயே என்னைக் கொன்றுபோடு. ஆனால் நான் போக மாட்டேன்!'' ரஸ்மியோத்னவ் சிகரெட்டின் கடைசித் துண்டை தரைமீது வீசிக் கோபமாக எறிந்துவிட்டு குதித்து எழுந்தான். ''என்னை ஒன்றும் பைத்தியமாக்க முடியாது! களையெடுப்பது ஆண்மகன் வேலையல்ல! நாளைக்கு உருளைக் கிழங்கு எடுத்துச் சுத்தம் செய்ய அனுப்புவாய் போல இருக்கிறதே!''

மேசைமீது பென்சிலால் அமைதியாகத் தட்டிக் கொண்டே, ''கட்சி உனக்கு எந்த வேலை கொடுத்தாலும், அது ஆண்மகனுடைய வேலைதான். உதாரணமாக, 'நகூல்னவ், நீ போய் எதிர்புரட்சிக்காரர்களை வெட்டிவீழ்த்து' என்று சொல்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். நான் மகிழ்ச்சியோடு போவேன்! உதாரணமாக, 'போய் உருளைக் கிழங்கு பக்குவம் செய்' என்று சொன்னால், மகிழ்ச்சியோடு போக மாட்டேன், ஆனால் நிச்சயம் வேலைக்குப் போவேன். உதாரணமாக, 'பசுவில் போய்ப் பால் கற' என்றால், நான் பற்களைக் கடிக்கத்தான் செய்வேன், ஆனால் என் சக்திக்கு ஏற்பப் பால் கறக்கத்தான் செய்வேன்!''

ரஸ்மியோத்னவின் கோபம் இறங்கியது. அவனுடைய நல்லியல்பு மீண்டும் திரும்பியது. ''உன்னுடைய இரண்டு முட்டிகளையும் வைத்துக்கொண்டு பால் கறப்பாயா? நீ ஒரு குத்துக் குத்தித் தீர்த்தாலும் தீர்த்துவிடுவாய்!''

''நான் குத்தித் தள்ளினாலும், அதைத் திரும்பப்பற்றி, ஒரு சொட்டு இல்லாமல் கறக்கும் வரை விடவே மாட்டேன். புரிகிறதா?'' பதிலுக்குக் காத்திராமல் மக்கார் தொடர்ந்தான். ''நான் சொன்னவற்றை யோசித்துப் பார், அந்திரேய். பெரிய ஆண்மகன், கஸாக் என்றெல்லாம் வீணான சிந்தனையில் உழலாதே. நான் பார்க்கிறபடி அது அல்ல கட்சிக் கௌரவம் என்பது. அன்றொரு நாள் மாவட்டக் கட்சிக் குழு அலுவலகத்துக்குப் புதிய செயலாளரைப் பார்க்கப் போனேன். போகிற வழியில் துபியான்ஸ்கி கிளைச் செயலாளர் ஃபிலோனவைச் சந்திக்க நேர்ந்தது. 'எங்கே போகிறாய்?' என்று கேட்டான். 'மாவட்டக் கட்சிக் குழு அலுவலகத்துக்கா?' 'ஆமாம்' என்றேன். 'புதிய செயலாளரைப் பார்க்கவா?' என்றான். 'ஆமாம்' என்றேன். 'அப்படியானால் அந்த வயல் பக்கம் திரும்பிப் பார், அவர் அங்கு இருக்கிறார்' என்றான். சாலையின் இடது புறம் சாட்டையை நீட்டிக் காட்டினான். அந்தத் திக்கில் மொத்தம் ஏழு புல் அறுவடை எந்திரங்களில் புல் செதுக்கிக் கொண்டிருந்தார்கள். 'என்ன இவ்வளவு அதிகாலையில் புல் செதுக்கத் தொடங்கிவிட்டீர்களே, பேராசையா?' என்று கேட்டேன். அதற்கு அவன், 'அது புல் அல்ல. அது புல் வெளியில் களையும், மற்றவையும் முளைத்துக்கிடக்கிறது. அதைக் குழியில் போடுவதற்காகச் செதுக்குகிறோம்' என்று சொன்னான். 'இதை நீங்களாகவேதான் நினைத்தீர்களா?' என்று கேட்டதற்கு, 'இல்லை' என்று சொன்னான். 'செயலாளர் நேற்று வந்தார். வயல்களை எல்லாம் பார்வையிட்டார். இந்தப் புதரையும் கண்டார்.' 'இதை என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டார். 'நாங்கள் உழுது விடப் போகிறோம்' என்று சொன்னோம். அதற்கு அவர் சிரித்து, 'அது நல்ல யோசனை அல்ல. அறுத்துக் குழியில் போட வேண்டும்' என்று சொன்னார்.''

ரஸ்மியோத்னவைப் பார்த்தவாறே மக்கார் அமைதியாக இருந்தான்.

''நீ அவரைப் பார்த்தாயா?'' என்று பொறுமையிழந் தவனாகக் கேட்டான் ரஸ்மியோத்னவ்.

''பார்த்தேனே! சாலையை விட்டு விலகி ஒன்றரை மைல் தூரம் நடந்து சென்ற பின் இரண்டு வண்டிகளைப் பார்த்தேன். ஒரு கிழவன் எதையோ நெருப்பில் காய்ச் சிக் கொண்டிருந்தான்; இன்னொருவன் நல்ல காளை மாதிரி வலுவுடைய இளைஞன், வண்டியடியில் கால்களைத் தூக்கியவாறு படுத்துக் கொண்டு ஒரு குச்சியால் ஈக்களை விரட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய வெண்ணெய் மாதிரி உருண்ட முகத்தையும், செருப்பில்லாத கால்களை யும் பார்த்து, இவன் செயலாளனாக இருக்க முடியாது என்று எண்ணி செயலாளர் எங்கே என்று கேட்டேன். அந்த இளைஞன் என்னைப் பார்த்து நெளிந்தான். 'காலை யிலிருந்து என்னுடைய புல் அறுவடை எந்திரத்தில் இருக் கிறார்' என்றான். 'அதோ புல்வெளியில் புல் அறுவடை செய்து கொண்டிருக்கிறார்' என்றான். எனவே குதிரையை விட்டிறங்கி, அதை வண்டிகளில் ஒன்றில் கட்டினேன். பிறகு புல் அறுவடை செய்பவர்களிடம் போனேன். முதல் எந் திரத்தில் ஒரு கிழவன், ஒரு கோரைக் குல்லாயை அணிந்து, கிழிந்த சட்டையையும் கெட்டித் துணியால் ஆன காற் சட்டையையும் அணிந்து, முழுக்க எண்ணெய் பட்ட மேனி யுடன் காணப்பட்டான். இவன் செயலாளராக நிச்சயமாக இருக்க முடியாது என்பது தெளிவு. அடுத்ததில் தலையை வழுக்க அடித்த இளைஞனொருவன், சட்டை இல்லாமல் எண்ணெய் தடவியதைப் போல உடம்பு முழுவதும் வியர்த்து சூரிய ஒளியில் கத்திபோல மின்னினான். இவனும் செயலாளராக இருக்க முடியாது என்று நான் நினைத்தேன்; செயலாளர் எவராவது சட்டை இல்லாமல் புல் அறுவடை எந்திரத்தை ஓட்டுவாரா? நான் எல்லாரையும் கவனித்த பொழுது யாருடைய உடலிலும் சட்டை இல்லை! இது ஒரு பெரிய சிக்கலாகிவிட்டது. இதில் யார் செயலாளராக இருக்க முடியும் என்று யூகிக்க வேண்டும்! முகத்தில் காணும் அறிவுத் தோற்றத்தை வைத்து யார் செயலாளர் என்று சொல்லலாம்! ஆனால் அதற்கு அவர்கள் அனைவரை யும் வரிசையாக நிறுத்திவைக்க வேண்டுமல்லவா? இதில் யார் என்றும் சொல்ல முடியவில்லை. எல்லாருடைய முது கும் தெரிந்தது. எல்லாரும் ஒரே மாதிரி, செப்புக்காசு

மாதிரி. இதில் செயலாளர் என்று அடையாளச் சீட்டா ஒட்டியிருக்கிறது! முகத்தில் காணும் அறிவுத் தோற்றம் பற்றி! அவர்கள் எல்லாருமே அறிவாளிகளாக இருக்கக் கூடும். நீண்ட தலைமயிரையுடைய பாதிரியின் முடியை வெட்டிவிட்டு பட்டாளத்து வீரர்களுடன் சேர்த்து நிறுத்தி விட்டால், முகத்தைப் பார்த்துக் கண்டுபிடித்துவிட முடியுமா? அது போலத்தான் இங்கும்.''

''மதத் தலைவர்களைப் பற்றிய பேசாதே மக்கார், அது பாவம்!'' என்று இதுவரை அமைதியாக இருந்த ஷ்சுக்கார் கிழவன் குறுக்கிட்டு எதிர்த்துச் சொன்னான்.

மக்கார் அவனைக் கோபமாக முறைத்துப் பார்த்துவிட்டு, ''வண்டிக்குத் திரும்பிவந்து, 'அங்கு புல் செதுக்குபவர்களில், யார் செயலாளர்?' என்று கேட்டேன். நல்ல கொழுத்த பூசணி மாதிரி முகமுடைய அந்த இளைஞன், 'சட்டையில்லாமல் இருக்கிறாரே அவர் தான் செயலாளர்' என்றான். 'நன்றாகக் கண்களைத் துடைத்துப்பார். கண்ணில் நூலாம்படை கட்டிவிட்டதா? அங்கே அறுவடை செய்பவர்களில் அந்தக் கிழவனைத் தவிர சட்டை போடவில்லையே' என்றேன். எனவே அந்த இளைஞன்வண்டியை விட்டு வெளியே வந்தான். கண்களைத் தேய்த்தான். அப்புறம் சிரித்தான்! நான் திரும்பிக் கொண்டிருந்த போது அந்தக் கிழவனும் தனது சட்டையையும், குல்லாவையும் கழற்றிவிட்டான். வெறுங்கால் சட்டையுடன் மட்டும் எந்திரத்தை ஒட்டிக் கொண்டிருந்த அவனது தாடியில் காற்றடித்து அதைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருந்தது. மொட்டைத் தலை மின்னியது. அன்னம் நீந்துவதுபோல் புல்வெளியில் தன்னந்தனியாக அவன் காட்சி தந்தான். இது ஒரு பெரிய செய்தி தான் என்று நான் நினைத்தேன்! நகரப் பழக்கத்தை இந்த செயலாளர் இங்கும் கொண்டு வந்துவிட்டார். அரை நிர்வாணத்துடன் புல் அறுவடையா? இந்தக் கிழவர்கூட அந்த ஆசைக்கு இரையாகிவிட்டார். அதன் பின்னர் இளைஞன் என்னை அழைத்துப் போய் செயலாளரைக் காட்டினான். நான் அவரிடம் போனேன். அவருடைய எந்திரத்தின் ஓரமாக நடந்தேன். என்னை நான் அறிமுகம் செய்துகொண்டேன். அவரைப் பார்க்க மாவட்டக் குழுவுக்குப் போய்க் கொண்டிருப்பதாகச் சொன்னேன். அவர் சிரித்தார். குதிரையை நிறுத்தினார். 'உட்கார், ஓட்டு, தோழர் நகூல்

னவ். நாம் இதை ஓட்டியபடி புல்லை அறுத்துக்கொண்டே ஒருவருரொடு ஒருவர் பேசிக்கொள்வோம்' என்றார். எந் திரத்தை ஓட்டிக் கொண்டிருந்த பையனை அனுப்பிவிட்டு நான் அவனிருந்த இடத்தில் ஏறிக்கொண்டேன். நாங்கள் மேலுங்கீழுமாக நான்கு முறை போய்வருவதற்குள்ளாக ஒரு வரையொருவர் புரிந்துகொண்டோம்... அவர் நல்ல ஆள் தான்! இவரைப் போன்ற ஒரு செயலாளர் நமக்கு இருந் ததே இல்லை. 'ஸ்தாவ்ரொபொல் பகுதியில் எப்படி வேலை செய்கிறார்கள் என்று காட்டுகிறேன்!' என்று சொன்னார். 'நீங்கள் கௌரவமாகத் தோன்ற விரும்புகிறீர்கள். நாங் கள் பூமியைப் பார்க்க விரும்புகிறோம்.' அவர் சிரித்தார். வீழ்ச்சிக்கு முன்னால்தான் பெருமை போகும் தெரியுமா என்று எல்லாவற்றைப் பற்றியும் ஓரளவு கேட்டார். அப் புறம், 'வீட்டுக்குப் போ நகூல்னவ். நான் உங்களை விரை வில் வந்து பார்க்கிறேன்' என்று சொன்னார்.''

''அவர் வேறு என்ன சொன்னார்?'' என்று ரஸ்மியோத் னவ் ஆர்வத்துடன் கேட்டான்.

''சிறப்பாக ஒன்றுமில்லை. ஆமாம், ஹப்ரோவைப் பற்றிக் கேட்டார். அவன் தீவிர ஊழியனா என்று கேட் டார். தீவிர ஊழியன் இல்லையென்று சொன்னேன் நான்.''

''அதற்கு அவர் என்ன சொன்னார்?''

''எதற்காக அவனையும், அவன் மனைவியையும் கொன் றார்கள் என்று கேட்டார். இந்தக் குலாக்குகள் என்ன காரணங்களுக்கெல்லாம் கொல்லக் கூடுமோ அவற்றையெல் லாம் சொன்னேன். அவர்களுக்கு அவன் ஒத்துவரவில்லை. எனவே கொன்றார்கள்.''

''அப்புறம் அவர் என்ன சொன்னார்?''

''ஏதோ புளித்த ஆப்பிளைக் கடித்து விட்டவர் மாதிரி உதட்டைக் கடித்துக் கொண்டு உம்ம்... ம்ம்... என்று ஏதேதோ சொன்னார். ஒன்றும் புரியவில்லை.''

''ஹப்ரோவைப் பற்றி அவர் எப்படிக் கேள்விப்பட் டார்?''

''எனக்கெப்படித் தெரியும்? மாவட்ட ரகசியப் போலிஸ் சொல்லியிருக்கக் கூடும்.''

ரஸ்மியோத்னவ் மேலும் ஒரு சிகரெட்டை அமைதி யாகப் புகைத்தான். அவன் எதையோ மிக ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்ததால் எதற்கு இங்கே வந்தோம்

என்பதைக்கூட மறந்துவிட்டான். அவன் புறப்படும் பொழுது நகூல்னவைப் பார்த்து புன்சிரித்துக் கொண்டே, ''நான் எல்லாவற்றையும் பிரித்துவிட்டேன்! நாளை அதிகாலை முதல் குழுவோடு நான் இருப்பேன். கவலைப்படாதே, மக்கார். முழுமனத்தோடு களை எடுப்பதில் ஈடுபடுவேன். ஆனால் ஞாயிறன்று எனக்கு நீ வோத்கா வாங்கித் தர வேண்டும். மறந்துவிடாதே!''

''நான் வாங்கித் தருகிறேன். நீ மட்டும் ஒழுங்காகக் களை எடுத்தால், நாம் இருவரும் சேர்ந்தே குடிப்போம். நாளை அதிகாலையில் போ; போய் எப்படி வேலைக்கு விரைவாக வர வேண்டுமென்பதைப் பெண்களுக்குக் கற்றுக் கொடு. சரி, நல்லது, வணக்கம்!'' என்று கூறிவிட்டு மக்கார் மீண்டும் படிப்பில் மூழ்கிவிட்டான்.

நள்ளிரவில், ஓசையற்ற அந்தக் கிராம அமைதியில் மக்காரும், ஷ்சுக்காரும் முதல் சேவல் கூவுவதைக் கேட்டனர். அவரவர் விருப்பப்படி இருவரும் அதை ரசித்தனர்.

''ஆர்ச் பிஷப் பாடகர் குழு மாதிரி!'' என்று மரியாதையுடன் முணுமுணுத்தான் ஷ்சுக்கார்.

''குதிரைப்படையில் இருப்பது போல!'' என்று கனவு காண்பதைப்போல புகைமண்டல விளக்கு வெளிச்சத்தைப் பார்த்து சொன்னான் மக்கார்.

இவ்வாறு ஒரு விநோதமான அசாதாரணமான ஆர்வத்தை, மக்கார் வளர்த்துக் கொண்டான். இது ஏறத்தாழ அவன் உயிரையே சாப்பிட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அத்தியாயம் ஐந்து

தவீதவ் குழுவுக்குப் பயணமாகப் புறப்பட்டபோது ரஸ்மியோத்னவ் மட்டும்தான் வழியனுப்பினான். கூட்டுப் பண்ணை பண்டசாலையிலிருந்து உழவர்களுக்கு உணவு கொண்டு வருவதும், வீடுகளிலிருந்து சலவை செய்த துணி இருந்தால் எடுத்து வருவதுமாக அந்த வண்டி இருந்தது.

வண்டியின் கடைசி ஓரத்தில் உட்கார்ந்திருந்தான் தவீதவ். கால்கள் உராய்ந்தன. கிராமப்புறத்து முரட்டுக் காலணிகள் ஒரு பக்கம் ஆடிக் கொண்டிருந்தன. அவனுடைய

தோள்கள் கிழவன் மாதிரி வளைந்து கூன் விழுந்து விட்டது. அவன் தன்னைத்தானே பரிதாபத்தோடும் அக்கறையில்லாமலும் பார்த்துக்கொண்டான். தோள்களில் மாட்டப்படும் பட்டைகள் கிழிந்த சட்டைக்கும் வெளியே துருத்திக் கொண்டிருந்தது, நீண்ட நாட்களாக முடி வெட்டிக் கொள்ளவில்லை. கருஞ்சுருள் சுருளான முடிக்கத்தை குல்லாய்க்குக் கீழே தலையின் பின் புறம் தொங்கி ஆடிக்கொண்டிருந்தது. அது அவனது கழுத்துவரை தொங்கி, சட்டைக் கழுத்துப்பட்டையைத் தொட்டுக் கொண்டிருந்தது. அவனுடைய முழுத் தோற்றத்திலும் ஏதோ ஒருவித கவலை, மகிழ்ச்சியின்மை. முழுமையாகத் தென்பட்டது...

ஏதோ வலியால் முகத்தைச் சுளித்துக் கொண்டவனைப் போல் சுருக்கிக்கொண்டு தவீதவை கவனித்தான் ரஸ்மியோத்னவ். ''லூஷ்கா இவனை இழுத்தடித்துச் சின்னா பின்னப்படுத்திவிட்டாளே!'' என்று நினைத்துக் கொண்டான். ''அந்தப் பொம்பிளை தொலையணும்! இந்த ஆளை எவ்வளவு கெடுத்துவிட்டாள்! இனி இவனிடம் என்ன மிச்சமிருக்கிறது. இதோ: அது காதல்தான்! இப்படித்தான் அது உன்னையும் செய்யும். ஒரு காலத்தில் மனிதனாக இருந்தான். இப்பொழுது முட்டைக்கோசுத் தண்டுதான்.''

'காதல் எங்கு கொண்டுபோய்விடும்' என்பதன் நுணுக்கத்தையெல்லாம் தெரிந்த எவனாவது ஒருவன் உண்டென்றால் அவன் ரஸ்மியோத்னவ். மரீனா பொயார்கவா இன்னும் ஓரிருவருடனான அநுபவத்தை நினைத்துப் பார்த்துக் கொண்டான். பின்னர் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு புன்னகை செய்துகொண்டே, கிராம சோவியத்தில் என்ன நடக்கிறது எனப் பார்க்கப் போனான். போகிற வழியில் மக்கார் நகூல்னவைச் சந்தித்தான். வழக்கம் போல் நிமிர்ந்து கம்பீரமாக ராணுவ முறையில் முழுக்க உடையணிந்து நின்ற நகூல்னவ், ரஸ்மியோத்னவுக்குக் கைகொடுத்து விட்டு, வண்டி சென்ற திசையில் தலையை ஆட்டினான்.

''தோழர் தவீதவ் என்ன நிலைக்கு வந்துவிட்டான் பார்த்தாயா?''

''அவன் கொஞ்சம் எடையை இழந்து விட்டான்'' என்று தப்பிக்கும் வகையில் பதில் சொன்னான் ரஸ்மியோத்னவ்,

''அவனுடைய நிலையில் நான் இருந்தபொழுது நானும் நாள்தோறும் எடையை இழந்துதான் வந்தேன். அவன் ஏற்கெனவே நோஞ்சான்! ஏற்கெனவே ஒரு காலை கல்லறையில் வைத்துவிட்டான்! என் வீட்டில் குடியிருந்தபோதே, அந்த உள்நாட்டு எதிர்ப் புரட்சிக்காரப் பேயோடு நான் எப்படி போரடித்தேன் என்பதைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, இப்படிப்போய் இவனும் மாட்டிக்கொண்டானே! அதுவும் எப்படி! அவனை நான் இப்பொழுது பார்த்தபொழுது என் இதயம் உண்மையிலே அவனுக்காக ரத்தம் வடித்தது, ஒடிந்து விழுகிறாப்போல் மெலிந்துபோய் ஒரு குற்றம் செய்த அச்சத்துடன் குறுகிப்போய் கண்கள் அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் பார்த்துக்கொண்டு, அவருடைய கால் சட்டைகளைக்கூட, கடவுளே எப்படித் தான் போட்டுக்கொண்டிருக்கிறானோ? என் கண் முன்னேயே இப்படிக் கரைந்து கொண்டிருக்கிறானே! குலாக்குகளை ஒழித்தபோதே என் முன்னாள் மனைவியின் பெயரையும் சேர்த்து திமஃபேய் ரிவானியுடன் குளிர் பிரதேசத்துக்கு அனுப்பியிருக்க வேண்டும். அங்கு போயிருந்தால் கொஞ்சம் குளிர்ந்தாவது திரும்பியிருப்பான் என்று நினைக்கிறேன்.''

''ஆனால் உனக்குத் தெரியாது என்றல்லவா நான் நினைத்தேன்...''

''ப்பூ! 'தெரியாது'! எல்லாருக்கும் தெரிந்திருக்கும்போது எனக்கு மட்டும் தெரியாமல் போய்விடுமா? கண்களை மூடிக்கொண்டா போய் வருகிறேன்? அந்தப் பன்றிகுட்டி யாரோடு போனாலும் எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் தவீதவின் மீது கைவைக்க நான் அநுமதியேன்! என்னுடைய நண்பனை அவள் சீரழிப்பதா? இப்பொழுது உள்ள விஷயம் அவ்வளவுதான்!''

''நீ அவனை எச்சரித்திருக்க வேண்டும். நீ ஏன் எதுவும் சொல்லவில்லை?''

''என்னால் அதைச் செய்ய முடியாதே! பொறாமையால் அவளுக்கு எதிராக இவனைக் கிளப்பிவிட முயல்கிறேன் என்று அவன் நினைத்துக் கொள்ளலாம் அல்லவா! ஆனால் ஆர்வமில்லாத நீ ஏன் பேசவில்லை? நீ ஏன் கண்டிப்பாக எச்சரிக்கவில்லை?''

''கண்டிப்போடு இல்லையா?'' என்று முறுவலித்தான் ரஸ்மியோத்னவ்.

''அக்கண்டிப்பை அவன் எங்காவது வாங்கத்தான் போகிறான். அந்திரேய், நீயும் நானும்தான் நட்பு மிகுதியால் கண்டிக்கத்தான் வேண்டும். இழக்க நேரம் இல்லை. லூஷ் காவைச் சுற்றிக்கொண்டு திரிந்தால் உலகப் புரட்சியைத் தவறவிடுவதுடன் ஆளே காலியானாலும் ஆகிவிடுவான். என் வார்த்தையைக் கவனி. அவனுக்குப் பெண் வியாதி, வயிற்றுப் பொருமல் வேறு, ஏதாவது வரப் போகிறது! அவளை விட்டுப் பிரிந்தது எனக்கு மறு பிறவி மாதிரி. எனக்கு அத்தகைய பெண் வியாதியைப் பற்றிக் கவலையில்லை. ஆசிரியர் உதவி இல்லாமலே ஆங்கிலத்தைப் படித்து அதில் முன்னேற்றம் கண்டு வருகிறேன். கட்சி விவகாரங்களையும் சரியாக வைத்திருக்கிறேன். நான் வேறு விவகாரத்தில் தலையிடவே மாட்டேன், ஒரு வார்த்தையில் சொல்வது என்றால் நான் பிரம்மச்சாரி, என்ற முறையில் எனது கைகளும் கால்களும் சுதந்திரமாக இருக்கின்றன. என் மூளையும் தெளிவாக இருக்கிறது. ஆனால் அவளுடன் நான் வாழ்ந்த காலத்தில், வோத்கா குடிக்கா விட்டாலும் கூட, அந்தப் போதை மயக்கம் அடுத்த நாளும் தொடர்வதைப் போல இருக்கும். புரட்சிவாதிகளாகிய நமக்கு மக்களிடத்திலே காணப்படும் அபின் பெண்கள் தான்! என் வழிப்படி விட்டால், கட்சி சட்ட திட்டத்திலேயே இதைக் கொட்டை எழுத்துக்களில் போடுவேன். இதை ஒவ்வொரு நாளும் படுக்கப்போகும் முன்னர் மூன்று முறையும், காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் மும்முறை படிக்க வேண்டும் என்று கட்டளை இடுவேன். அப்படிச்செய்தால் எந்த அப்பாவித் தோழனும், நம் தோழர் தவீதவ் மாதிரி மாட்டிக்கொண்டு விழிக்க நேரிடாது. நீயே அந்திரேய் சனியன் பிடித்த பெண்களிடம் எவ்வளவு நல்ல மனிதர்கள் சிக்கித் தவித்திருக்கிறார்கள், தெரியுமா? உன்னால் எண்ண முடியாது! எவ்வளவு பேரிடம் கையாடல் செய்திருக்கிறார்கள், எத்தனை பேரைக் குடிகாரர்கள் ஆக்கியிருக்கிறார்கள்; எத்தனையோ நல்ல தோழர்களை இவர்கள் காரணமாக கண்டிக்க நேரிட்டுள்ளது: இன்னும் எத்தனையோ பேர் சிறைச்சாலைகளில், அப்பப்பா! இதை நினைத்தாலே பயமாக இருக்கிறது!''

ரஸ்மியோத்னவ் சிந்தனையில் ஆழ்ந்தான். கொஞ்ச நேரம் அமைதியாகவே நடந்தார்கள். சமீப காலத்திலும்,

வெகுநாட்களுக்கு முன்னரும் நடந்த பல சம்பவங்களையும், தாங்கள் சந்தித்த, சந்திக்க நேரிட்ட பெண்களையும் நினைத்துக் கொண்டே நடந்தனர். மக்கார் நகூல்னவ் மூக்கைப் பிடித்து அழுத்திக்கொண்டு, உதட்டைக் கடித்தவாறு பட்டாளத்தாருடன் சேர்ந்து நடப்பதைப்போல ஒரே நிதானமாக உறுதியாக நடந்தான். தனிமையின் உருவத் தோற்றமாய் அவன் விளங்கினான். ரஸ்மியோத்னவோ இப்போழுது சிரித்தான், இப்பொழுது கைகளைக் கவலையின்றி வீசினான். அப்பொழுது சுருள் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டான், கண்களைப் பூனை போலச் சுருட்டிக்கொண்டான்; சில சமயங்களில் ஏதாவது ஒரு பெண்ணைப் பற்றிய பசுமையான எண்ணங்களை நினைவு கூர்வான். ஒரு குவளை வோத்காவை விழுங்கியவன் போல செருமிக்கொண்டான்; பிறகு இடைவெளி விட்டுவிட்டு, ''நான் தொலைந்தேன் என்ன பொம்பிளை! சின்னக்குட்டிச் சாத்தான்!..'' என்று அவர்களுடைய உரையாடல்களுக்கு இடையே அவன் எண்ணி வியந்தான்.

* * *

ஒரு சிறிய மேட்டுவளைவின் பின்னால் கிரெமியாச்சி லோக் கிராமமே மறைந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பரவி நின்ற புல்வெளியில் கைகளைக் கட்டியவாறு அதன் மார்பில் சாய்ந்திருப்பவரைப் போல தவீதவ் காணப் பட்டான். புல்லின் நெடி வாசனையும், ஈரநிலத்தின் வாடையும், தவீதவின் மூக்கைத் துளைத்தன. தூரத்தே இருந்த சுடுகாட்டின் புதை குழிகள் தென்பட்டன. நீலநிற வரப்பு மேடுகள் புயலில் கொந்தளிக்கும் பால்டிக் கடல் அலை போல் தவீதவுக்குத் தோன்றியது. திடீரென்று பீறிட்டுக் கொண்டு வந்த கவலையையும் வேதனையையும் அடக்க, கண்ணீர் மல்கிய கண்களை மறு பக்கம் திருப்பிக்கொண்டான்... வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த அவரது கண்கள் விண்வெளியில் தெரிந்த ஒரு மங்கலான புள்ளியையே உற்றுநோக்கின. புதைகுழி மேட்டில் வாழும் ஸ்டெப்பியின் ஒரு கருப்புக் கழுகு, வானவெளியில் மெதுவாக வட்டமிட்டபடியே பூமியை நோக்கிக் கீழே இறங்கிவந்தது.

அதன் அகன்ற, கூர்மையான சிறகுகள், ஆட்டாமல் விரிக்கப் பட்டிருந்தன. மேகத்திற்குக் கீழே அது காற்றில் மிதந் தது. அதன் எலும்பு, அடிவயிற்றைக் காற்று வருடிக் கொடுத்தது. காற்றடித்ததால் அதன் கொண்டை அலைந் தது. அது கீழ்த் திசையை நோக்கி திரும்பியபோது, சூரியக் கதிர்கள் அதன் கீழும், முன்னாலும் பட்டன. தவீதவுக்கு அதன் இறகின் கீழுள்ள வெண்ணிறத்தில் அது பட்டு மின்னு வதைப்போல் தோன்றியது.

... புல்வெளி! எல்லையற்ற, முடிவற்ற புல்வெளி. பழங்கால வரப்புத்திட்டுகள் நீலநிற நீர் மூட்டமாகத் தோன்றியது. வானவெளியில் ஒரு கருப்புக் கழுகு. காற் றிலே சலசலக்கும் புல்... தவீதவ் மிகச் சிறுவனாகத் தோன் றினான். விரிந்து பரந்த வெளியில் மூழ்கிப்போனான். முடி வற்ற அந்த வெட்ட வெளியைப் பார்த்துக்கொண்டே இருந் தான். லூஷ்கா மீது கொண்டிருந்த காதல், அவளை விட்டுப் பிரிந்த துயரம் அவளைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தும் நிறைவேறாத ஆசை, எல்லாம் சாதாரண மாகவும், அற்பமாகவும் தென்பட்டன... தனிமையால் அவன் வாடினான். உலகிலிருந்தே பிரித்து ஒதுக்கப் பட்டதைப் போல வருந்தினான். கப்பலில் இரவு நேரத்தில் காவல் காக்கும்பொழுது இதே போன்ற எண்ணத்தில் வருந்தியது உண்டு. அது எவ்வளவோ காலத்துக்கு முன்னால் எப்பொ ழுதோ நடந்த, பாதி மறந்துவிட்ட கனவாகத் தோன்றி யது!..

சூரிய ஒளியின் வெதுவெதுப்பு இப்பொழுது நன்றாகத் தெரிந்தது. தென் காற்று இதமாக வீசியது. அதனைக் கூடக் கவனியாமல் தலையைத் தொங்கப்போட்டு, புல் வெளியில் கவனிக்கப்படாத சாலையில் இருந்த குண்டி லும் குழியிலும் வண்டி விழுந்து விழுந்து குலுங்கிச் செல் லும்போது தவீதவ் தூங்கிவிட்டான்.

அவனுக்குக் கொடுக்கப்பட்ட குதிரைகள் நல்ல குதி ரைகள் அல்ல. வண்டி ஓட்டியோ வயது முதிர்ந்த கூட்டுப் பண்ணை விவசாயியான இவான் அர்ழானவ். அவன் ஓர் அசமந்தம். அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த குதிரைகளை அவன் மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்து வந்தான். குதி ரைகளை வண்டியில் பூட்டியது முதல் இது வரை அவன் அமைதியாகவே வந்ததால், பாதியில் விழித்துக்கொண்ட

தவீதவ், ''இவான் மாமா, வண்டியில் பானைகள் ஏற்றிக் கொண்டு போகிறோம் என்று நினைத்தாயா? உடைந்து போகும் என்று பயப்படுகிறாயா? எதற்காக அப்பொழுதி ருந்து குதிரைகளை நடக்க விட்டுக்கொண்டே வருகிறாய்?'' என்றான்.

அர்ழானவ் அந்தப் பக்கமாகப் பார்த்தபடி வெகுநேரம் வரை பேசவே இல்லை. ''எப்படிப்பட்ட பானையை ஏற்றிக் கொண்டு போகிறோம் என்பது எனக்குத் தெரியும்'' என்று கடைசியாக ஒருவாறு முரட்டுத் தொண்டையில் பதில் சொன்னான்: ''நீ, கூட்டுப்பண்ணையின் தலைவராக இருக்கலாம். ஆனால் காரணமில்லாமல் குதிரையை விரட்டவைக்க, உன்னால் முடியாது.''

''தேவையில்லாமல் உன்னை யார் பாய்ச்சலில் விரட்டச் சொன்னது? மலையிலிருந்து கீழ் நோக்கிப் போகும் போதாவது கொஞ்சம் ஓட விட்டிருக்கலாம். வண்டியில் நீ எதையும் ஏற்றிச்செல்லவும் இல்லை. வண்டி ஏறத்தாழ காலி தானே. அதுதான் உண்மை!''

மீண்டும் வெகுநேர அமைதிக்குப் பின்னர், விருப்பமில் லாமல், ''எப்போழுது நடக்க வேண்டும், எப்பொழுது குதித்தோட வேண்டும் என்பது, குதிரைக்கே நன்றாகத் தெரியும்'' என்றான் அர்ழானவ்.

தவீதவுக்கு உண்மையாகவே சங்கடமாகப் போய் விட்டது. கோபத்தை மறைக்காமலே, ''ஆகா! அது அருமை! நீ எதற்காக இருக்கிறாய்? உன் கைகளில் எதற்காகக் கடிவாளம்? எதற்காக இந்த இருக்கையில் உட்கார்ந்து அதை நீ தேய்த்துக் கொண்டிருக்கிறாய்! கடிவாளத்தை இப்படிக் கொடு!''

அர்ழானவ் மிகுந்த விருப்பத்தோடு பதில் சொன்னான்: ''என்னுடைய கைகளில் கடிவாளம் இருப்பதற்குக் காரணம், அவை எங்கு போக வேண்டுமோ அங்கு போவதற்கும், எங்கு போகக் கூடாதோ அங்கு போக விடாமல் தடுப்பதற்குமே. உனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இந்த இருக்கையை நான் தேய்ப்பது பிடிக்கவில்லை என்றால், நான் இறங்கி, வண்டிக்குப் பக்கத்திலேயே கால்நடையாக வரத் தயார், ஆனால் கடிவாளத்தைக் கொடுக்க மாட்டேன். நிச்சயமாக முடியாது சகோதரனே!''

''ஏன் முடியாது?'' என்று கேட்ட தவீதவ் தலையை

வேண்டுமென்றே திருப்பிக்கொண்ட வண்டிக்காரனின் முகத்தைப் பார்க்க முயன்றான்.''

''உன்னுடைய கடிவாளத்தை என்னிடம் கொடுப்பாயா?''

''என்ன கடிவாளம்?'' என்று உடனே விளங்கிக்கொள்ள முடியாமல் கேட்டான் தவீதவ்.

''அட என்ன தெரியாதவன் மாதிரி! இந்தப் பண்ணையின் கடிவாளமே உன்னுடைய கையில் இருக்கிறது. நாங்கள் வைத்திருப்பதை எல்லாம் கொடுத்து உன்னை நிர்வாகம் நடத்தச் சொல்லி விட்டோம். வேறு யாரிடமாவது அந்தக் கடிவாளத்தைக் கொடுப்பாயா? நிச்சயமாக நீ கொடுக்க மாட்டாய். 'என்னால் முடியாது!' என்று நீ சொல்வாய். நானும் அப்படித்தான். நான் உன்னுடைய கடிவாளத்தைக் கேட்கிறேனா? எனவே நீ என்னுடையதைக் கேட்காதே!''

தவீதவ் சிரித்துக் குலுங்கினான், கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

''சரி! ஊரிலே தீப்பிடித்தாலும் இதே வேகத்தில் தான் தண்ணீர்த் தொட்டியை ஏற்றிக்கொண்டு வருவாயா?'' என்று பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தவனாகக் கேட்டான் அவன்.

''தீப்பிடித்தால் என்னைப்போன்ற ஆட்களைத் தண்ணீருக்கு அனுப்ப மாட்டார்கள்...''

அந்தச் சமயம், அர்ழானவைப் பக்கவாட்டில் பார்த்த போது, அவனது வெளிறிய தாடைகளுக்கடியில், வெடித்த சிரிப்பை அடக்கிக்கொண்டு அவன் பேசுவது தெரிந்தது.

''பிறகு யாரை அனுப்புவார்கள் என்று நினைக்கிறாய்?''

''உன்னையும், மக்கார் நகூல்னவ் போன்றவர்களையும்.''

''ஏன் அப்படி?''

''ஏனெனில், இந்த ஊரிலேயே நீங்கள் இருவரும் தான் வேகமாக வண்டியை ஓட்ட விரும்புகிறவர்கள். நீங்களே பாய்ச்சல் வேகத்தில் வாழ்கிறவர்கள் தானே...''

தவீதவ் பலமாகச் சிரித்தான். முழங்காலில் தட்டிக்கொண்டு தலையைப் பின்னால் ஆட்டியவாறு சிரித்தான், சிரிப்பு அடங்குவதற்குள்ளாகவே, ''ஊரில் தீப்பிடித்தால், அதை அணைக்க நானும் மக்காரும் தான் இருக்க வேண்டுமா'' என்று கேட்டான்.

''ஏன் இருக்க வேண்டும்? நீயும், மக்காரும் வண்டியில் தண்ணீர் கொண்டுவருவீர்கள். குதிரைகளை ஒரேயடியாக விரட்டுவீர்கள். அவை வாய் நுரை எல்லா இடங்களிலும் சிதறும். ஆனால் கூட்டுப்பண்ணையைச் சேர்ந்த நாங்கள் தான் தீயை அணைப்போம். சிலர் வாளிகொண்டும், சிலர் கொரண்டியை வைத்தும், சிலர் கோடரி கொண்டும் நெருப்பை அணைப்போம்... ரஸ்மியோத்னவ் இதற்கு மேற்பார்வையாளராக இருப்பான். வேறு யாருமே அந்த வேலைக்குத் தகுதியில்லை...''

''ஏது ஆத்திரப்பட்டிருக்கிறான் போல இருக்கிறதே!'' என்று தவீதவ் நினைத்துக்கொண்டான். அவன் வியந்து போனான். ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு, ''ரஸ்மியோத்னவை எதற்காகத் தனியாக, தீயணைப்புப் படைக்குத் தேர்ந்தெடுத்தாய்?'' என்று கேட்டான்.

''நீ புத்திசாலிதான். ஆனால் விஷயத்தைப் போகிற போக்கில் ஊகித்துகொள்ள மாட்டேன் என்கிறாய்'' என்றான் அர்ழானவ். ''தீ பிடிக்கும் பொழுதுதான் ஒவ்வொரு மனிதனுக்கும், அவனவன் வாழ்க்கைக் குணத்திற்கேற்ப வேலை கிடைக்கும். நீயும், மக்காரும் ஒரே வேகத்தில் வாழ்கிறீர்கள். பகலோ, இரவோ நீங்கள் அமைதியாக இருப்பதில்லை. மற்றவர்களையும் அமைதியாக இருக்க விடுவதில்லை. எனவே, உணர்ச்சித் துடிப்பு மிக்க, தொந்தரவு செய்துகொண்டே இருக்கும் உங்களுக்கு, சுறுசுறுப்புடன் தண்ணீர் கொண்டுவர வேண்டியது தான் சரியான வேலை. உங்களால் தண்ணீர் இல்லாமல் நெருப்பை அணைக்க முடியுமா? இப்பொழுது முடியுமா? ஆனால் அந்திரேய் ரஸ்மியோத்னவ் சுறுசுறுப்பாக வாழ்கிறான். மெதுவாக எதையும் செய்கிறான். தேவைக்கு மேல் எதையும் செய்ய மாட்டான். சாட்டையை நீட்டினால் தான் கொஞ்சம் வேகம் காட்டுவான்... எனவே இன்றுள்ள பெரிய கௌரவமான தகுதியில் அவனுக்கு வேறு என்ன வேண்டும்? இடுப்பில் கையை வைத்துக்கொண்டு, உத்தரவு போட வேண்டியது தானே. எல்லாருடைய விஷயத்திலும் தலையிட வேண்டியது, அநாவசியமாக அலட்டிக் கொள்ள வேண்டியது, இது தான் அவன் வேலை. ஆனால் நாங்களோ, அதாவது மக்கள் மெதுவாக செய்யவேண்டிய விஷயங்களை செய்ய வேண்டிய வேகத்தில் ஆடி அசைந்து செய்துகொண்டு திரி

கிறோம். எனவே நாங்கள் தான் தீயை அணைக்கத் தகுதி...''

அர்ழானவ் முதுகில் ஒரு தட்டுத்தட்டி, தாடிமுகத்தைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பி தந்திரமாகச் சிரிக்கும் அவன் கண்களுக்குள் உற்று நோக்கினான் தவீதவ். எச்சரிக்கையுடன் சிரித்துக்கொண்டே, ''இவான் மாமா, நீ ஒரு புத்திசாலி போலத் தெரிகிறது!''

''நீயும் தவீதவ் ஒன்றும் சாதாரண ஆசாமி அல்ல!'' என்று குதுகலமான சொன்னான் இவான்.

இப்பொழுதும் நத்தை வேகத்தில் தான் அவர்கள் வண்டி ஊர்ந்து கொண்டிருந்தது. ஆனால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த தவீதவ், அர்ழானவை வற்புறுத்தவில்லை.

வண்டியை விட்டிறங்கி சிறிது தூரம் நடந்தே வருவான். பழையபடியும் ஏறிக்கொள்வான். அவர்கள் கூட்டுப்பண்ணையைப் பற்றிப் பேசி, பிறகு மெல்லமெல்ல பொதுவான வாழ்க்கை குறித்தும் பேசினார்கள். அவன் பேச்சிலிருந்து அவன் மூளை குழம்பியவன் அல்ல என்பது தவீதவுக்குத் தெரிந்தது. இவான், எல்லா விஷயங்களையும் தன்னுடைய கண்ணோட்டத்திலேயே பார்த்தான்.

குழுவினரின் கூடாரத்திலிருந்து சமையல் புகை மேலே படர்வது தெரிந்தது. அப்பொழுது தவீதவ் கேட்டான்: ''இவான் மாமா, உன் வாழ்க்கை முழுதுமே குதிரைகளை கால்நடை வேகத்தில் தான் ஓட்டிச் செல்கிறாயா?''

''ஆமாம், அப்படித்தான்.''

''இந்த விநோதத்தை இதற்கு முன்னாலேயே சொல்லியிருக்கக் கூடாதா? நான் உன்னுடன் வந்திருக்கவே மாட்டேனே, அதுதான் உண்மை!''

''எதற்காக நானே என்னைப் புகழ்ந்து கொள்ள வேண்டும்? இப்பொழுது நான் எப்படி ஓட்டுகிறேன் என்பதை நீயே பார்த்து விட்டாய். ஒரு தடவை என்னுடன் வந்துவிட்டால் மறு முறை என்னுடன் வரவே மாட்டாய்.''

''எது உன்னை இப்படிச் செய்துவிட்டது?'' என்று புன்முறுவலோடு சொன்னான் தவீதவ்.

நேரடியாகப் பதில் சொல்லாமல், சுற்றி வளைத்து அர்ழானவ் பதில் சொன்னான்: ''முன்பு, எனக்குப் பக்கத்து வீட்டில் ஓர் ஆள் இருந்தான். அவன் ஒரு தச்சன். அவனுக்குக் குடிப் பிரியம் உண்டு. நல்ல திறமைசாலி,

ஆனால் மீன் மாதிரிக் குடிப்பான். கொஞ்சக்காலம் குடிக்காமல் இருப்பான். ஆனால் சரக்குக் கிடைத்தவுடன் பழைய படியும் ஒரு மாதம் அதிலேயே மூழ்கிவிடுவான். அவனது கடைசிச் சட்டையையும் குடிக்காக விற்றுவிடுவான்!''

''சரி.''

''ஆனால் அவன் மகன் ஒரு சொட்டுக்கூட குடித்தது இல்லை.''

''பழங்கதை போதும். விஷயத்துக்கு வா.''

''இதைக் காட்டிலும் சுருக்கமாகச் சொல்ல முடியாது. என்னுடைய தந்தை இருந்தாரே அவருக்கு வேட்டை ரொம்பப் பிடிக்கும். அதைக் காட்டிலும் குதிரைச் சுவாரி செய்வதில் ஒரே பைத்தியம், அவர் பட்டாளத்திலிருந்த போது, கத்திச் சண்டை, குதிரை ஓட்டம் தந்திரமாக ஓட்டுதல் ஆகிய எல்லாவற்றிற்குமான பரிசுகளையும் அவரே தட்டிக் கொண்டு போய்விடுவாராம். பட்டாளத்திலிருந்து திரும்பிய பிறகும் நகரக் குதிரைப் பந்தயத்தில் எல்லாப் பரிசுகளையும் தட்டிக்கொண்டு போய்விடுவார். ஆனால் மிகவும் சிக்கலான மனிதர். அவர் என் அப்பாவாக இருந்தாலுங்கூட நான் இதைக் சொல்லியாக வேண்டும்! சரியான துணிச்சல்கார கஸாக்தான்... ஒவ்வொரு நாள் காலையிலும் ஆணியைச் சுடவைத்து, தனது பூனை மீசைமயிரை சுருட்டிவிட்டுக் கொள்வார். ஆட்களுக்கு முன்னால் தனது பகட்டைக் காட்ட விரும்புவார். குறிப்பாக பெண்களின் முன்னால் அப்படிச் செய்வார்... அவர் எப்படி சவாரி செய்வார் தெரியுமா? அப்படி இன்னொரு ஆள் சவாரி செய்ய முடியாது! நகரத்துக்கு ஏதாவது வேலையாகப் போகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருடைய பட்டாளத்துக் குதிரையைக் கொண்டு வந்து, சேணத்தைப் பூட்டி, குண்டு மாதிரி பாய்ந்துவிடுவார்! முற்றத்தைச் சுற்றியும், வேலிகளைத் தாண்டியும் தனக்குப் பின்னால் பெரும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பாய்ச்சலில் செல்வார். இருபத்து நான்கு மைல் தூரம் ஒரே பாய்ச்சலில் போய்விடுவார். முயல்களைத் துரத்திச் சவாரி செய்வதில் அவருக்கு அலாதி விருப்பம். ஓநாய்களைத் அல்ல, முயல்களை விரட்டிக் கொண்டு தான்! ஏதாவது புல்லில் இருந்து அந்த முயலைத் துரத்துவார். புதருக்குள் போக விடாமல் தடுத்து, கீழ் நோக்கித் துரத்திக் கொண்டே போய், சாட்டையால்

அடித்து வீழ்த்துவார் அல்லது குதிரைக் குளம்பால் மிதித்தே நசுக்குவார். எத்தனையோ தடவை இப்படிப் பாய்ந்து போகும் பொழுது விழுந்து மோசமாகக் காயம் பட்டும் இருக்கிறார். ஆனால் அந்த விளையாட்டை விடவே மாட்டார். இதனால் எங்களுக்குக் குதிரைக்காகச் செலவாயிற்று. எனக்குத் தெரிய ஆறு குதிரைகளை இப்படிச் செய்தார். ஒன்று விரட்டியடித்து கொன்றுவிடுவார். அல்லது நொண்டியாக்கி விடுவார். இதனால் நாங்களும் சீரழிந்தோம்! குளிர்காலத்தில் இரண்டு குதிரைகளைக் கொன்று விட்டார். முழுப்பாய்ச்சல் வேகத்தில் போய்க்கொண்டிருந்த போது தடுமாறி விழுந்துவிட்டது. உறைந்திருந்த தரையில் விழுந்தது. அப்படித்தான் நடந்தது! நாங்கள் சன்னல் வழி பார்த்தோம். தோளில் சேணத்தைப் போட்டுக்கொண்டு அப்பா நடந்து வந்துகொண்டிருந்தார். செத்துப்போன குதிரைக்காக அம்மா ஒப்பாரி வைப்பாள். ஆனால் அப்பா பொருட்படுத்த மாட்டார்! மூன்று நாட்களுக்குப் படுத்த படுக்கையாகக் கிடப்பார். முணகுவார். சிராய்ப்புக் காயங்கள் ஆறுவதற்குள்ளாக, வேட்டைக்குக் கிளம்பி விடுவார்...''

''குதிரைகள் சாகடிக்கப்பட்டன என்றால், அவர் மட்டும் எப்படி உயிருடன் வந்தார்?''

''குதிரை பெரிய மிருகம் அல்லவா? அது ஒரு முறை விழுந்தால், எழுவதற்குள் மூன்று குட்டிக்கரணங்கள் போட்டு விடும். ஆனால் அப்பாவைப் பொருத்த மட்டில், சேணத்தை விட்டுவிட்டு குருவி பறப்பது மாதிரி பறந்துவிடுவார். ஆனால் அவரும் பொத்தென்று தான் வந்து விழுவார். விழுகிறவர் வெகுநேரம் அப்படியே, மயக்கம் தெளிந்து சுய உணர்வு வரும் வரை கிடப்பார். அப்புறம் எழுந்து வீட்டுக்கு நடந்தே வந்து விடுவார். அவர் ஒரு பெரிய துணிச்சல்காரப் பேர்வழி! எலும்புகளெல்லாம் இரும்புக் கிராதிகள் தான்.''

''ரொம்ப முரட்டு ஆளாக இருந்திருப்பார்!'' என்று வியப்புடன் சொன்னான் தவீதவ்.

''ஆமாம். ஆனால் அவருடன் மற்றவர்களும் கூடி வாழத் தான் செய்தனர்...''

''என்ன செய்தார்கள்?''

''எங்கள் கிராமத்து கஸாக்குகளால் அவர் கொல்லப் பட்டார்.''

''எதற்காக அவர்கள் அப்படிச் செய்தார்கள்?'' என்று ஆர்வத்துடன் கேட்டுவிட்டு சிகரெட் ஒன்றைப் பற்றவைத்தான் தவீதவ்.

''எனக்கும் ஒரு சிகரெட்டுக் கொடு, நல்ல மனிதனே.''

''நீ சிகரெட் புகைப்பதில்லையே இவான் மாமா, இல்லையா?''

''உண்மையாகக் குடிப்பதில்லை. ஆனால் எப்போதாவது இப்படி ஓர் உணர்வு வரும். என் தந்தையினுடைய பழைய கதையை நினைவு கூர்ந்தேன். ஆகவேதான்... எனக்கு வாயில் ஏதோ உப்புக் கரிப்பது போல தண்ணீர் தாகம் எடுத்தது... அவரை எதற்காகக் கொன்றார்கள் என்று கேட்டாயா? அவ்வாறு அவர் நடந்திருக்க வேண்டும்...''

''இன்னும் தெளிவாகச் சொல்.''

''எல்லாம் ஒரு பெண்ணால்தான். அவருடைய வைப்பாட்டியால்தான். அவள் திருமணமானவள். அவள் கணவன் இவர்களைக் கண்டு பிடித்துவிட்டான். அவன் என் தந்தையை நேருக்கு நேராகச் சந்திக்கப் பயந்தான். தந்தை ரொம்பப் பெரிய ஆள் அல்ல, ஆனால் ரொம்ப பலசாலி. எனவே அவன் தன்னுடைய இரு சகோதரர்களையும் துணைக்கு அழைத்துக்கொண்டான். குளிர்கால விழாவில் அது நடந்தது. உறைந்து போன ஆற்றுக்கு அருகில் அவர்கள் மூவரும் இவருக்காகக் காத்து இருந்தார்கள்... அட கடவுளே! எப்படி அடித்துப் போட்டார்கள் தெரியுமா? பெரிய தடிகளையும், இரும்புக் கம்பியையும் கொண்டு தாக்கினர்... காலையில் தூக்கி வந்தபோதும் உணர்வில்லாமல் தான் கிடந்தார். உடம்பு எல்லாம் கருத்துக் கன்றிப் போய் இருந்தது. இரவு முழுவதும் பனியில் உணர்வற்றுக் கிடந்தார். பாவம் மிக மோசம் இல்லையா? அதுவும் பனிக்கட்டியில்! ஒரு வாரத்தில் பேசத் தொடங்கினார். நாங்கள் சொல்வதையும் விளங்கிக்கொண்டார். சுருங்கச் சொன்னால், நலமடைந்தார், ஆனால் இரண்டு மாதங்களுக்கு எழுந்து நடமாடவே முடியவில்லை. அவர் ரத்தங் கக்கினார். மெதுவாகத்தான் பேசினார். உள் உடம்பு நொறுங்கித் தூள் தூளாகிவிட்டது அவருடைய நண்பர்கள் அவரிடம் வந்து, 'யாரென்று சொல்லு ஃபியோதர். நாங்கள் அவர்களை...' என்று கேட்டார்கள். ஆனால் அவர் பேசவே மாட்டார், லேசாகச் சிரித்துவிட்டு சுற்று

முற்றும் பார்ப்பார். அம்மா அறையை விட்டுப் போன வுடன், 'எனக்கு நினைவு இல்லை, நண்பர்களே. நான் பல கணவன்மார்களுக்குத் தவறு செய்து விட்டேன்' என்பார் இலேசாக முறுவலித்தபடி.

''எத்தனை முறை அம்மா அவருக்கு முன்னால் மண்டி யிட்டுக் கெஞ்சுவாள்: 'உன்னைக் கொல்ல முயன்றவர்கள் யார் என்று எனக்காவது சொல்லேன். இயேசுவுக்குப் பொதுவாக எனக்கு மட்டும் சொல். யாருடைய அழிவுக் காக நான் ஜெபிக்க வேண்டும் என்பதாவது எனக்குத் தெரிய வேண்டாமா?' ஆனால் அப்பா அம்மாவின் தலை மீது தன் கையை வைத்து சிறு பிள்ளைக்குத் தட்டிக் கொடுப்பது போலத் தட்டிக்கொடுத்துவிட்டு, 'அது ஒரே இருட்டு. எனக்கு யார் என்றே தெரியவில்லை. என்னைப் பின்னால் இருந்து அடித்துவிட்டார்கள். ஆகையால் பனிக்கட்டியில் தள்ளியவன் யார் என்பது எனக்குத் தெரிய வில்லை...' என்பார். இல்லை யென்றால் வழக்கம் போலச் சிரித்து விட்டு, 'பழைய குற்றங்களை நாம் ஏன் நினைத் துக் கொண்டிருக்க வேண்டும்? என்னுடைய பாவங்களுக்கு நானே பதில் சொல்கிறேன்...' என்பார். பாதிரியாரிடம் ஒப்புதல் கொடுக்கட்டும் என்று பாதிரியாரை அழைத்து வந்தார்கள். ஆனால் அவரிடமும் எதுவும் சொல்லவில்லை. அவ்வளவு பயங்கர உறுதியுடைய ஆள் அவர்!''

''அந்தப் பாதிரியாரிடம் என்ன சொன்னார் என்பது உனக்கு எப்படித் தெரியும்?''

''ஏனென்றால் படுக்கைக்கடியில் படுத்து நான் கேட் டுக் கொண்டிருந்தேன். எங்கள் அம்மா தான் அப்படிச் செய்யும்படிசெய்தாள். 'பாதிரியாரிடமாவது அந்தக் கொ லைகாரர்கள் யார் என்று சொல்வார்' என்று அம்மா சொன் னாள். ஆனால் கொலைக்காரர்களைப் பற்றி அப்பா ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. பாதிரியாருடைய கேள்வி களுக்கு ஐந்து முறை 'குற்றவாளி போதகரே? என்று மட் டும் தான் சொன்னார். பிறகு பாதிரியாரிடம், 'என்ன பாதிரி திமீத்ரி, அடுத்த உலகத்தில் குதிரைகள் உண்டா?' என்று கேட்டார். இதைக் கேட்டதும் பாதிரியார் பயந்து போனார். 'ஃபியோதர், கடவுளின் அடிமையே! என்ன வெல்லாமோ பேசுகிறாய்! அடுத்த உலகில் குதிரைகள் எப் படி இருக்க முடியும்? நீ உன்னுடைய ஆத்மாவின் விடுதலைக்

காக சிந்தனை செய்!' என்றார். வெகுநேரம் அப்பாவுடன் வாதிட்டுக் கொண்டே இருந்தார். வெகுநேரம் கேட்டுக் கொண்டே இருந்துவிட்டு, 'அங்கே குதிரைகள் இல்லை என்றா சொல்கிறீர்கள். அட பாவமே! அங்கே குதிரைக் காரன் வேலையாவது கிடைத்திருக்கும்... அங்கே அதுவும் இல்லையென்றால் எனக்கு வேலை செய்ய ஒன்றும் இராதே. எனவே நான் சாகப் போவதில்லை. அவ்வளவு தான் அதைப் பற்றி!' என்றார் என் தந்தை. பிறகு சீக்கிரமாக இறை வாக்குறுதி கொடுத்து விட்டு, மிகவும் அதிருப்தி யோடு வெளியே போய் விட்டார் பாதிரியார். இவை எல் லாவற்றையும் அம்மாவிடம் சொன்னேன். 'ஐயோ வாழ்க்கை பூராவும் பாவியாக வாழ்ந்து விட்டார். பாவியாகவே சாகப் போகிறார், இப்படித்தானே சாகப் போகிறார் நம்முடைய ஊட்டுவோன்!' என்று வேதனைப்பட்டாள்.

''அப்பா எழுந்தபொழுது பனியெல்லாம் உருகி, இள வேனிற்காலம் தொடங்கிவிட்டது. இரண்டு நாட்கள் வீட் டைச் சுற்றிசுற்றி நடந்தார். மூன்றாம் நாள் தன்னுடைய சவாரி அங்கியையும், குல்லாயையும் போட்டுக்கொண் டிருந்தார். 'போய் குதிரைக்குச் சேணம் போடு, இவான்' என்று என்னிடம் சொன்னார். அந்நேரம் லாயத்தில் எஞ்சி இருந்தது மூன்று வயது பெண் குதிரைதான். இதைக் கேட்ட அம்மா கண்ணீர் மயமானாள், 'ஃபியோதர், இப் பொழுது சவாரி செய்கிறாற் போலவா இருக்கிறாய்? இப் பொழுதுள்ள நிலையில் உன் கால்களில் நிற்கவே உன்னால் முடியாது! நீ உன் மீது இரக்கப்படா விட்டாலும், என் மீதும் குழந்தைகள் மீதாவது இரக்கம் காட்டு!' என்றாள். ஆனால் அவரோ சிரித்துவிட்டு, 'அம்மா, என் வாழ்க்கை யில் என்றுமே கால்நடை வேகத்தில் சவாரி செய்ததே இல்லை. எனவே சாகும் முன் மீண்டும் ஒரு முறை இந்த வீட்டைச் சுற்றி நடக்கும் வேகத்தில் சவாரி செய்துவிடு கிறேன். இந்த வீட்டை இரண்டு முறை சுற்றிவிட்டு இப் படியே வீட்டுக்குள் வந்துவிடுகிறேன்' என்றார்.

''நான் போய்க் குதிரையைச் சேணம் மாட்டி வீட்டின் முற்றத்துக்கு இழுத்து வந்தேன். தனது கையில் சாய்ந்த வண்ணம் அப்பாவை, அழைத்து வந்தாள். கடந்த இரண்டு மாதங்களாக அவர் முகச்சவரம் செய்துகொள்ளவே இல்லை. எங்களது இருண்ட சின்ன வீட்டில் எவ்வளவு மாறியிருக்

கிறார் என்பதையும் எங்களால் கண்டுகொள்ள முடிய வில்லை... சூரிய வெளிச்சத்தில் அவரைப் பார்த்தபொழுது, என் கண்களில் வெந்நீர் பெருகி ஓடியது! இரண்டு மாதங் களுக்கு முன்னர் அண்டங்காக்கைப் போல இருந்த அவர் மாறியிருந்தார். அவரது தாடி பாதி நரைத்துவிட்டது, மீசையும் வெளுத்துவிட்டது, தொண்டைக் குழி மீதிருந்த ரோமமும் நரைத்துவிட்டது... வேதனையுடனான முறு வலித்தலை அவர் காட்டாது இருந்திருந்தால் நிறுத்த முடியாத அளவுக்கு அழுதிருப்பேன்... கடிவாளத்தை என் னிடமிருந்து வாங்கிக்கொண்டு, குதிரையின் பிடரிமயிரைப் பிடித்தார். ஒடிந்த அவரது இடது கை இப்பொழுதுதான் ஆறியிருந்தது. நான் உதவ விரும்பினேன், ஆனால் அவர் என்னை விடவில்லை. பயங்கரமான கர்வம் உடையவர்! எவ்வளவு பலவீனமாக இருக்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்ளக்கூட வெட்கப்பட்டார். ஒருவகையில் அவர் முன்பு பறவை பாய்ந்து உட்காருவதைப்போல, பாய்ந்து ஏற விரும் பினார். ஆனால் முடியவில்லை... கால் மிதிப்படி மேல் ஏறி இடது கையால் சேணத்தை பிடித்தார். ஆனால் கையால் பிடிக்க முடியாததால் நழுவ விட்டுவிட்டு முதுகுப் புறமாக கீழே வீழ்ந்தார்... நானும் அம்மாவும் வீட்டுக்குள் அவரைத் தூக்கிக்கொண்டு சென்றோம். ரத்தத்தை முன் போலக் கக்கத் தொடங்கினார். ஆனால் இப்போது பசு விலிருந்து பால் சுரப்பது போல் வாயில் ரத்தம் சுரந்தது. அம்மா, கழிவு வாளியை முழு நாளும் விட்டு வைத்திருக்க வில்லை. அடிக்கடி அம்மாவால் வாளியைக் கழுவ முடிய வில்லை. பாதிரியாரை அழைத்தோம். கடைசி திருமுழுக் காட்டப் பட்டார். ஆனால் என் அப்பா கம்பி மாதிரி உறு தியாக நின்றார்! மூன்றாம் நாள், படுக்கையில் புரண்டார். எழுந்து உட்கார்ந்து நீர் மல்கும் கண்களுடன் அம்மாவைப் பார்த்து, 'திருமுழுக்காட்டப்பட்ட பிறகு வெறுங்காலுடன் தரையில் நிற்கக் கூடாது என்பார்கள். ஆனால் இங்கு கொஞ்சம் நிற்க விரும்புகிறேன்... இந்த பூமி முழுவதும் குதிரையில் பிரயாணம் செய்திருக்கிறேன். இதைவிட்டுப் பிரிவதற்கு எனக்கு வருத்தமாக இருக்கிறது... கொஞ்சம் உன் கையைக் கொடு. இது எவ்வளவு வேலை செய்திருக் கிறது தெரியுமா!...' என்றார்.

''அம்மா போய் அவருடைய கையைப் பிடித்துக்கொண்

டாள். அவர் மல்லாந்து படுத்திருந்தார். கொஞ்ச நேரம் கழித்து மிகத்தாழ்ந்த தொனியில், 'உன் கண்கள் உதிர்த்த கண்ணீருக்கெல்லாம் பொறுப்பான குற்றவாளி நான்தான்...' என்று கூறிவிட்டு சுவர்ப்பக்கம் திரும்பிப்படுத்தவர் இறந்து விட்டார். மறு உலகத்தில் புனித விலாசிய்க்குக் குதிரைப் பந்தயத்தைப் பார்க்கப் போய்விட்டார் போலும்...''

அந்த நினைவுகளில் மூழ்கியவனாக சிறிது நேரம் அமைதியானான் அர்மானவ். தவீதவ் செருமிவிட்டு, ''இவான் மாமா, அந்தப் பெண்ணுடைய கணவன்தான் கொன்றான் என்று எப்படித் தெரியும்?... அந்தப் பெண் ணின் கணவனும், அவன் சகோதரர்களும்தான்! இதை நீ எப்படி யூகித்தாய்?'' என்று கேட்டான்.

''யூகமா? இல்லை. சாவதற்கு முதல் நாள் என்னை அழைத்து என்னிடம் என் அப்பா சொன்னார்.''

இது கேட்டு தவீதவ் தன்னுடைய இருக்கையை விட்டே எழுந்துகூட விட்டான்:

''என்ன! உன்னுடைய அப்பாத்தான் சொன்னாரா?''

''ஆமாம், இப்படித்தான் இருந்தது. காலையில் அம்மா பால் கறக்கப் பசுவிடம் போய்விட்டாள். நானோ பள்ளி செல்வதற்கு முன்பாக மேசையில் உட்கார்ந்து பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தேன், 'இவான், இங்கே வா!' என்று அப்பா என்னை மெதுவாக அழைத்தார். நான் அவரிடம் போனேன். 'கீழே குனிந்து கேள்' என்று முணுமுணுத்தார். நானும் அவர் பக்கம் குனிந்தேன். 'இதோ மகனே, கவன மாகக் கேள். உனக்கு இப்பொழுது பன்னிரண்டு வயதாகி றது. நான் இறந்த பிறகு நீ தான் இந்த வீட்டுக்குத் தலை வன். இதை நினைவில் வைத்துக்கொள். அவெரியான் அர்ஹீபவ், அவனுடைய இரு சகோதரர்கள், அஃபனாசி, மாறுகண்ணன் ஸெர்கேய் ஆகியோர் தான் என்னை அடித் தார்கள். என்னை நேரடியாக அடித்துக் கொன்றிருந்தால் அவர்கள் பேரில் எனக்கு வெறுப்பு இராது. ஆற்றோரத் தில் நினைவோடு கிடந்தபோது அதைத்தான் நானும் சொன் னேன். ஆனால் அவெரியான் 'நாயே, நீ அப்படிச் சாதா ரணச் சாவு சாகக் கூடாது! முடமாகக் கொஞ்ச நாள் வாழ வேண்டும், உன் ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டே இருந்துவிட்டுச் சாக வேண்டும்!' என்றான். அதனால் தான் அவெரியானுக்கு விரோதமாக இருக்கிறேன். சாவு

என்னை நெருங்கிவிட்டது. இருந்தாலும் அவன்மீது வெறுப்பாக இருக்கிறேன்! நீ இப்பொழுது சிறுவன், ஆனால் வளர்ந்து பெரியவன் ஆனதும் இதை மறந்துவிடாதே. அவெரியானைக் கொல்ல மறக்காதே! நான் சொன்னதை யாருக்கும் நீ சொல்லிவிடாதே. உன் அம்மாவிடம் கூடச் சொல்லாதே. யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்' என்றார். நான் சத்தியம் செய்துவிட்டு, அவர் கழுத்தில் போட்டிருந்த சிலுவையில் முத்தமிட்டேன்...''

''அடேயப்பா! காக்கஸஸியர்களின் செர்கேஸ்ஸுகள் பழிவாங்குதல்போல அல்லவா இருக்கிறது!'' என்று பலத்த குரலில் கிளர்ச்சியுற்றவனாய் வியந்து சொன்னான் தவீதவ்.

''செர்கேஸ்ஸீகளுக்கு மட்டுந்தான் இதயம் இருக்கிறது என்று நினைத்தாயே? ருஷ்யர்களின் இதயம் என்ன கல்லா? எல்லா மக்களுமே ஒரே மாதிரிதான், தோழரே.''

''சரி, பிறகு என்ன நடந்தது?'' என்று பொறுமை இழந்தவனாகக் கேட்டான் தவீதவ்.

''அப்பாவைப் புதைத்துவிட்டோம். கல்லறையிலிருந்து திரும்பியவுடன் சுவர் ஓரத்தில் நின்று என் உயரத்தைக் குறிக்க பென்சிலால் ஒரு கோடு வரைந்து கொண்டேன். ஒவ்வொரு மாதமும் இவ்வாறு என் உயரத்தைக் குறித்துக் கொள்வேன். அவெரியானை அடித்து நொறுக்குவதற்காக நான் வளர விரும்பினேன்... நான் வீட்டுக்குத் தலைவன் ஆனேன், என்னிலும் இளைய ஏழு சகோதரர்கள் இருந்தார்கள். அப்பா சாவுக்குப் பிறகு அம்மா அடிக்கடி காய்ச்சலாகப் படுக்க ஆரம்பித்தாள். எவ்வளவு கவலை! எவ்வளவு தொல்லை! எங்கள் அப்பா எதற்கு மஞ்சாத பேர்வழியாக இருந்ததோடு, வேலை செய்யவும் கற்றிருந்தார். சிலருக்கு அவர் ஒன்றுக்கும் பயனற்றவராகத் தோன்றினார். ஆனால் எங்கள் குடும்பத்துக்கு அவர்தான் தந்தை. எங்களுக்கு உடை கொடுத்தார், உணவு கொடுத்தார். எங்களுக்காக இளவேனிற்காலம் முதல் மாரிக்காலம் வரை முதுகை வளைத்து வேலை செய்வார்... என் தோள்கள் அப்பொழுது விரிவாக இருக்கவில்லை. முதுகும் பலமாக இல்லை. இருந்தும் குடும்பப் பொறுப்பு முழுவதையும் ஏற்று வேலை செய்தேன். நன்கு வளர்ந்த கஸாக்குப் போல வேலை செய்தேன். எங்கள் அப்பா உயிரோடு இருந்த போது, நாங்கள் நால்வர் பள்ளிக்குப் போய் வந்தோம்.

ஆனால் அவர் இறந்த பின் நாங்கள் அனைவரும் பள்ளியை விட்டுவிட்டோம். என்னுடைய பத்து வயதுத் தங்கை நியூர்காவை அம்மாவுக்குப் பதிலாக பால் கறக்க, சமைக்க வைத்தேன். என்னுடைய சகோதரர்கள் தோட்ட வேலையில் உதவினர். ஆனால் ஒவ்வொரு மாதமும் சுவரில் குறித்து வைக்க நான் மறக்கவே இல்லை. அந்த ஆண்டு மெதுவாகத் தான் வளர்ந்தேன். வறுமையும் வேதனையும் சரியான படி வளர உதவவில்லை. ஆனால் ஓர் ஓநாய் புதரிலிருந்து பறவையைப் பார்ப்பதைப் போல அவெரியானைக் கவனித்துவந்தேன். அவன் செய்கிற ஒவ்வொன்றையும், எங்கு போகிறான், என்ன செய்கிறான், என்று எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருந்தேன்...

''என் வயதுப் பையன்கள் எல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் எல்லாவித விளையாட்டும் விளையாடுவார்கள். ஆனால் எனக்கு நேரமேது? நான் தான் குடும்பத் தலைவனாயிற்றே. வார நாட்களில் அவர்கள் பள்ளிக்கூடம் போவார்கள், நான் மாட்டுக் கொட்டடியைக் கழுவுவேன்... வாழ்க்கைத் தொல்லையை நினைத்து அந்நாட்களில் நான் அழுதிருப்பேன்! நாட்கள் செல்லச் செல்ல என் வயதுப் பையன்களை விட்டு விலகியிருந்தேன். நான் சமூகத்தோடு ஒட்டாத பாராங்கல் போலானேன்... பின்னர் கிராமத்து மக்கள் என்னைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்: இவான் அர்ழானவ் கொஞ்சம் மூளை மந்தம், தொட்டால் சுருங்கி மாதிரி என்று பேசிக் கொண்டார்கள். 'சனியன்களே! உங்களுக்கென்ன? என் நிலையில் இருந்து பார்க்க வேண்டும்! என் போன்ற வாழ்க்கை நடத்தினால் ஒருவேளை அது உங்களை இன்னும் புத்திசாலியாக்கக் கூடுமா?' கிராமத்து மக்களை நான் வெறுக்கத் தொடங்கினேன். அவர்களைப் பார்க்கவே பிடிக்கவில்லை!... சரி நல்ல மனிதரே, இன்னும் ஒரு சிகரெட் கொடு.''

அர்ழானவ் சிகரெட்டைத் தட்டித்தடவி பிடித்துக் கொண்டான். அவனுடைய கைவிரல்கள் தெரியும் படியாகவே நடுங்கிக் கொண்டிருந்தன. உதடுகளை மடித்துக் கொண்டு மூச்சிழுத்து அவன் தவீதவிடம் சிகரெட்டைப் பற்றவைக்க வெகுநேரம் பிடித்தது.

''அப்புறம், அவெரியானைப் பற்றி என்ன?''

''அந்த அவெரியானுக்கு என்ன? அவன் இஷ்டப்படி

அவன் வழியில் போய்க்கொண்டிருந்தான். என் அப்பாவைக் காதலித்ததற்காகத் தன் மனைவியை அவன் மன்னிக்க முடியாமல், இடைவிடாது அடித்ததால் அவள் ஓர் ஆண்டிற்குள்ளாகவே இறந்துவிட்டாள். அடுத்த வேனிற்காலத்திலேயே எங்கள் ஊரைச் சேர்ந்த வேறொரு இளம் பெண்ணை மணந்து கொண்டான். 'ஓ, அவெரியானே! உன் இளம் மனைவியுடன் நீண்ட காலம் நீ வாழ முடியாது...' என்று அந்த நேரத்தில் நினைத்துக் கொண்டேன்.

''அம்மாவிடம்கூடச் சொல்லாமல் பணம் சேர்க்கத் தொடங்கினேன். வேனிற்காலத்தில் பக்கத்துக் கிட்டங்கியில் போய் விற்காமல், எங்களுடைய கோதுமையை கலாச் என்ற இடத்துக்கே கொண்டுபோய் விற்றுவிட்டு அங்கு ஒருவனிடம் ஒரு ரைபிளும், பத்து ரவைகளும் வாங்கிவந்தேன். திரும்புகிற வழியில் சுட்டுப் பார்த்து மூன்று ரவைகளை வீணாக்கினேன். அது ஒரு மோசமான ரைபிள். தாழ்ப்பாள் சரியாக வேலை செய்யவில்லை. மூன்றில் இரண்டு ரவை வீணானது. மூன்றாவது ரவைதான் ஒழுங்காக வெடித்தது. வீட்டுக்குப் போனவுடன் களஞ்சியத்திற்கடியில் அதை ஒளித்து வைத்து விட்டு யாரிடமும் சொல்லவில்லை. பின்னர் அவெரியானைத் தனியாகப் பிடிக்க வாய்ப்பை எதிர்பார்த்து இருந்தேன்... வெகுநாட்களாக எனக்கு யோகமே இல்லை. ஒன்று, ஏராளமான ஆட்கள் அவனுடனிருப்பார்கள், அல்லது வேறு ஏதாவது ஒன்று நடந்து அவனைத் தாக்குவதிலிருந்து என்னைத் தடுத்துவிடும். கடைசியில் நான் எதை எதிர்பார்த்தேனோ அது நடந்துவிட்டது! விஷயம் என்னவென்றால், அவனை நான் கிராமத்தில் கொல்ல விரும்பவில்லை. அதுதான் சிக்கல்! இடைவெளி நாளின்போது ஒரு பெரிய ஊர் திருவிழாவுக்குப் போனான். அவன் மனைவி இல்லாமல் தனியாகத்தான் போனான். அவன் தனியாகப் போனதைக் கேட்டு நானே சிலுவைக் குறியிட்டுக் கொண்டேன். இல்லையெனில் இருவரையுமே நான் கொல்ல நேரிட்டிருக்கும். பாதை ஓரமாக இரண்டு நாட்களும், கண் துஞ்சாது, சாப்பிடாமல், தண்ணீர் குடிக்காமல் கிடந்தேன். கஸாக்குகளுடன் கூட்டமாக வராமல் தனிமையில் வர வேண்டும் என் ஆண்டவனை நான் தொழுதேன். இரக்கமுள்ள கடவுள் குழந்தையின் வேண்டுகோளுக்கு இணங்கினார்! இரண்டாம் நாள் மாலை சாலையில் ஏறிட்டுப்

பார்த்தபொழுது அவெரியான் தனிமையில் வண்டியில் வந்து கொண்டிருந்தான். எத்தனை வண்டிகளை எத்தனை தடவைகள், அவெரியான் வந்துவிட்டானோ, போய்விட் டானோ எனப் பார்த்துப் பார்த்து என் மனசு எப்படித் துடித்திருக்கிறது தெரியுமா?... அவன் எனக்கு நேராக வந்த வுடன் குழியை விட்டுக் குதித்து வெளிவந்து, 'அவெரி யான் மாமா, கீழே இறங்கு! கடவுளை வணங்கிக் கொள்!' என்று சத்தம் போட்டேன். அவன் சுண்ணாம்பு மாதிரி வெளுத்துவிட்டான். கடிவாளத்தைப் பிடித்தபடி உட்கார்ந் திருந்தான். அவன் ஒரு பருத்த பெரிய கஸாக் தான். ஆனால் என்னிடம் என்ன செய்ய முடியும்? என் கையிலோ ரைபிள் வைத்திருந்தேன். 'ஏ சின்னப் பாம்பே, என்னடா நினைச்சுக் கிட்டே?' என்று கத்தினான். 'இறங்கி, மண்டியிடு! ஒரு விநாடியில் விஷயத்தைப் புரிந்துகொள்ளப் போகிறாய்' என்று நான் கூறினேன். அவன் ஒரு துணிச்சல்காரன்! வண்டி யிலிருந்து குதித்து என்னை நோக்கி வெறுங் கைகளுடன் ஓடி வந்தான்... என் அருகில் வரட்டும் என விட்டேன். அதோ அந்தப் புல்தூரம் வரை குறிக்குத் தெரிகிறாற் போல விட்டு... மார்பின் மையப் பகுதியைக் குறிவைத்துச் சுட் டேன்.''

''ஒருவேளை தவறியிருந்தால்?''

அர்ழானவ் முறுவலித்தான். ''இப்படியிருந்தால். என் அப்பாவுடன் சேர்ந்து என்னையும் குதிரையை மேய்த்துக் கொண்டிருக்க அடுத்த உலகிற்கு அனுப்பியிருப்பான்.''

''பிறகு என்ன சத்தம்?''

''வேட்டுச் சத்தம் கேட்டு குதிரைகள் மிரண்டன. ஆனால் என்னால் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. காற்றிலே அசையும் இலை போல தளர்ந்து போன என் கால்கள் நடுங்கின. என் முன்னால்தான் அவெரியான் கிடந் தான். என்னால் அவனிடம் போகவே முடியவில்லை. கால் களை எடுத்து மாறிமாறி வைத்துக்கொண்டே இருந்தேன். நான் விழுந்துவிடுவேன் போல இருந்தது. நான் கலங்கிப் போயிருந்தேன்! எப்படியோ சமாளித்துக்கொண்டு அவன ருகில் போய், முகத்தில் காரி உமிழ்ந்துவிட்டு அவன் பை களைச் சோதனை போடத் தொடங்கினேன். அவனுடைய பணப்பையைக் கண்டு பிடித்தேன். அதில் இருபத்தி எட்டு ரூபிள் நோட்டும், ஐந்து ரூபிள் தங்க நாணயமும், இரண்டு

மூன்று ரூபிள் சில்லறையும் இருந்தன. அதை வீட்டில் வைத்து பிறகு எண்ணிப் பார்த்தேன். பாக்கிப் பணத்தை அவனது இளம் மனைவிக்குப் பரிசுவாங்கிக் கொடுக்கச் செலவழித் திருப்பான்... அதை சாலையில் வீசி எறிந்துவிட்டு, பள் ளத்திற்குள் குதித்து, ஓடிப் போய் விட்டேன்! இது நடந்து எவ்வளவோ நாளாகிவிட்டாலும், நேற்று நடந்ததைப்போல எல்லாம் தெளிவாக நினைவிருக்கிறது. ரைபிளையும் தோட் டாக்களையும் பள்ளத்தில் புதைத்துவிட்டேன். முதற் பனி காலம் வந்தவுடன் நான் வெளியில் போய் என்னுடைய சொத்துக்களைத் தோண்டி எடுத்துக் கொண்டுவந்து, ஒருவர் வீட்டுக்குப் பின்னால் இருந்த மரத்துவாரத்தில் ஒளித்து வைத்தேன்.''

''எதற்காக பணத்தை எடுத்தாய்?'' என்று கோபத் தோடு கேட்டான் தவீதவ்.

''ஏன் கூடாது?''

''ஏன் எடுத்தாய் என்று கேட்கிறேன்?''

''எனக்குத் தேவைப்பட்டது'' என்று சாதாரணமாகப் பதில் சொன்னான் அர்ழானவ். ''அப்பொழுதெல்லாம் வறுமை சீலைப்பேன் மாதிரி என்னை அரித்துத்தின்று கொண் டிருந்தது.''

தவீதவ் வண்டியை விட்டுக் குதித்திறங்கி வெகுதூரம் அமைதியாகவே நடந்து சென்றான். அர்ழானவும் அமைதி யாகவே நடந்தான். அதன் பிறகு, ''அவ்வளவுதானா?'' என்று கேட்டான் தவீதவ்.

''இல்லை, நல்ல மனிதனே. புலனாய்வாளர்கள் வந்து எல்லா இடங்களிலும் மோப்பம் பிடித்துப்பார்த்து விட் டார்கள்... அப்படியே வெறுங்கையுடன் திரும்பிப் போ னார்கள். என்னை யார் சந்தேகப்பட்டிருப்பார்கள்? அவெரி யானுடைய சகோதரன் ஸெர்கேய் வெட்டிய மரச்சில் ஒன்று அடித்துச் செத்துப்போனான். அது அவன் நுரையீரல் களுக்குள்ளேயே போய்விட்டது. எனக்கு மிகவும் சங்கட மாகப் போய்விட்டது. அஃபனாசியும் இயற்கையாகத் தானா கவே செத்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத் தேன். என் அப்பா சொன்னபடி என் கையால் அடிபடாமல் அவர்கள் தப்புவதா? எவ்வளவு விரைவாக முடியுமோ அவ் வளவுக்கு அவன் கதையை முடிக்க முயன்றேன்...''

''ஒரு நிமிடம் பொறு'' என்று தவீதவ் குறுக்கிட்டான்:

''உன்னுடைய அப்பா, அவெரியானைப் பற்றி மட்டுந் தானே சொன்னார். ஆனால் நீயோ மூன்று பேரையும் சேர்த்து கொண்டது போலத் தெரிகிறதே, இல்லையா?''

''என் அப்பா எத்தனையோ விஷயங்களைச் சொன்னார், அது வல்ல விஷயம்... அவருக்கென்று சொந்த விருப்பங் கள் உண்டு, ஆனால் எனக்கென்று சுயமான எண்ணம் இருந் தது. சரி, அப்பொழுது நான் மிகவும் அவசரப்பட்டுவிட் டேன்... அஃபனாசி சாப்பிட்டுக் கொண்டிருந்த போது சன்னல் வழியாக அவனைச் சுட்டுக்கொன்றேன். அன்று இரவு தான் கடைசியாக சுவரில்கோடு வரைந்தேன். அதற்குப் பிறகு ஒரு துணியால் எல்லாவற்றையும் அழித்து விட்டேன். ரைபிளையும், தோட்டாக்களையும் ஆற்றில் வீசி எறிந்துவிட்டேன். இனி அவை எனக்குத் தேவையில் லையே... என்னுடைய அப்பாவின் எண்ணத்தையும், என் ஆசையையும்தான் நிறைவேற்றிவிட்டேன். சீக்கிரமாகவே சாவதற்கும் என்தாய் தயாரானாள். ஒரு இரவில் என்னை அழைத்து, 'இவான், அவர்களைக் கொன்றது நீ தானா?' என்று கேட்டாள். 'நான்தான், அம்மா' என்று நான் உண் மையைக் கூறினேன். அம்மா ஒன்றும் சொல்லவில்லை. எனது வலது கையை எடுத்து நெஞ்சின் மீது வைத்துக் கொண்டாள்...''

அர்ழானவ் கடிவாளத்தைச் சுண்டினான். குதிரைகள் வேகமாகப் புறப்பட்டன. தவீதவை சின்னக் குழந்தையின் கண்களுடன் குறும்புச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டு, ''ஏன் வேகமாக ஓட்டுவதில்லை என்று இனிமேல் கேட்க மாட்டாயா?'' கேட்டான்.

''எனக்கு எல்லாம் தெரியும். மாட்டு வண்டியில் தண்ணீர் கொண்டு வரத்தான் நீ லாயக்கு. அதுதான் விஷ யம், இவான் மாமா'' என்று பதிலளித்தான் தவீதவ்.

''எத்தனை தடவை யாக்கவ் லுக்கீச்சை அப்படி ஆக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். ஆனால் அவன் அப்படிச் செய்ய மாட்டான். இவன் என்னை வைத்துக் கடைசிவரை சிரித்துக் கொண்டிருக்கலாம்...''

''ஏன்?''

''நான் சிறுவனாக இருந்தபொழுது அவனிடம் ஒன் றரை ஆண்டுக் காலம் வேலை செய்து இருக்கிறேன்.''

''அப்படியா!''

''அப்படித்தான், நல்ல மனிதனே. ஒஸ்த்ரவ்னோவிடம் எப்பொழுதும் வேலை செய்ய ஆட்கள் வைத்திருந்தான் என்பது உனக்குத் தெரியாதா?'' அர்ழானவ் கண்களைப் போக்கிரித்தனமாக சுழற்றினான். ''அவன் ஆட்கள் வைத் திருந்தான்; ஆமாம், நல்ல மனிதனே... சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் அவனை வரிகள் உறிஞ்சத் தொடங்கியவுடன்தான், ஆட்களைக் குறைத்துக்கொண் டான். அந்த அடி விழுவதற்கு முன்னால், பாம்பு சுருண்டு கொள்வது மாதிரி அவன் சுருண்டுகொண்டான். கூட்டுப் பண்ணை முறை வராமலிருந்து, வரித்தொல்லையும் இல்லா திருந்தால், யாக்கவ் லுக்கீச் கொம்புகளை உயர்த்திக் காட்டியிருப்பான்! அவன் ஓர் உண்மையான தீய குலாக். அவனைத்தான் வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள் நீங்கள்...''

நீண்ட அமைதிக்குப் பிறகு, ''அதை நாம் சரி செய் வோம். ஒஸ்த்ரவ்னோவ் விஷயத்தில் ஆழமாக விசாரிப் போம். ஆனால் நீ ஒரு விபரீதமான பேர்வழிதான், இவான் மாமா'' என்றான் தவீதவ்.

வெகுதூரத்தில் உற்று நோக்கிக்கொண்டே அர்ழானவ் சிந்தனையோடு முறுவலித்தான்.

''ஆனால் விபரிதமான பேர்வழி—இது எப்படி சொன் னால்... இதோ பல கிளைகளையுடைய செர்ரி மரம் இருப் பதாக வைத்துக் கொள்வோம். நான் வந்து ஒரு கிளையை வெட்டி, சாட்டைக் கம்பு செய்கிறேன். செர்ரி கம்பு சாட் டைப் பிடிக்குக் கெட்டியாக இருக்கும். இது வளரும்போது நெளிவும் சுளிவும், முண்டும் முடிச்சுமாகத் தானிருந்தது. அது அழகாகவும் இருந்தது. இப்பொழுது சீவி செதுக்கி விட்டேன். இதோ இதுபோல...'' தான் உட்கார்ந்திருந்த இடத்திற்கடியிலிருந்து சாட்டைப் பிடியை எடுத்து தவீதவிடம் காட்டினான். ''இதோ! இப்பொழுது எதுவும் இல்லை! இது போலத்தான் மனிதனும். விபரீதம் இல்லா விட்டால், மனிதனும் இந்தக் கைப்பிடி மாதிரி ஒரு மொட் டைதான். நகூல்னவைப் பார். அவன் ஏதோ ஒரு விநோத மொழியைக் கற்றுக் கொண்டிருக்கிறான். இது என்ன? அதே விபரீதம். கிழவர் கிரம்ஸ்கோவ் கடந்த இருபது ஆண்டு களாக எல்லாவகையான தீப்பெட்டிகளைச் சேர்த்துக் கொண்டே திரிகிறான். அது என்ன? அதே விபரீதம். நீயோ லூஷ்கா நகூல்னவாவுடன் திரிகிறாய். அதே விபரீ

தம். ஒரு குடிகாரன் தெருவில் நடந்து போகிறான். வேலியில் தனது முதுகைத் தேய்ப்பான். இது என்ன? மறுபடியும் விபரீதம். ஓ, என்னுடைய நல்ல மனிதனே, அன்புள்ள தலைவரே! மனிதனுக்கு ஏதாவது ஒரு விபரீதம் இல்லையென்றால் அவனும் இந்தக் கைப்பிடி மாதிரிதான், ஆடையற்ற நிலையில் துளைத்துக் கொண்டிருப்பான்.''

சாட்டையை தவீதவிடம் நீட்டியவாறே, ஆழ்ந்த புன்னகையுடன், ''இதை வைத்துக்கொள், கொஞ்ச நேரம் சிந்தி. உன் தலைவில் ஏதோ விஷயங்கள் தெளிவாகப் புரியக்கூடும்...''

தவீதவ் அர்ழானவின் கையை எரிச்சலுடன் தள்ளிவிட்டான். ''நீ நாசமாய்ப் போக! அது இல்லாவிட்டாலும் அது பற்றிச் சிந்திக்கவும், ஒவ்வொன்றையும் புரிந்து கொள்ளவும் என்னால் முடியும்!''

...அதற்குப் பிறகு முகாமுக்குப் போகும் பாதையில் பேசாமல் அமைதியாகவே போனார்கள்...

அத்தியாயம் ஆறு

உழுது பணியாற்றிய குழு மதிய ஓய்விலிருந்தது. தற்காலிக நீண்ட மேசையில் எல்லா உழவர்களும், வண்டி ஓட்டுநர்களும் இருந்ததால் நெருக்கியடித்து இருந்தனர். இடையிடையே சாப்பிடும் பொழுதே உணர்ச்சி தூண்டுகிற பாலுணர்வு நகைச் சுவைகளையும் உணவின் தரம் பற்றியும் ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தனர்.

''எப்பொழுதும் போதுமான உப்பு இருப்பதில்லை! அவள் என்ன சமையல்காரியோ? ஒரே பாவி!''

''உப்புக்கொஞ்சம் குறைவது உனக்குத் தீங்கு செய்துவிடாது. நீயே உப்புப் போட்டுக் கொள்.''

''இப்பொழுது நானும் வாஸ்காவும் ஒரே கோப்பையில் சாப்பிடுகிறோம். அவனுக்கு கொஞ்சம் உப்பு பிடிக்கும். எனக்கு நிறைய உப்பு வேண்டும். இப்பொழுது நாங்கள் இரண்டு பேரும் என்ன செய்வது? மிக புத்திசாலி என்றால் கொஞ்சம் யோசனை சொல்லேன் பார்ப்போம்!''

''நாளைக்கு ஒரு கட்டையை எடுத்து, கோப்பையை இரண்டாகப் பிளந்துவிடுவோம். போதுமா? இதைச் செய்யக்

கூட நினைக்க முடியாத அளவுதானா உனது மூளை இருக்கிறது!''

''உனக்கு, உன்னுடைய உழவு மாட்டுக்கு இருக்கிற மூளை இருக்கிறது. அதற்கு மேல் நிச்சயமாக இல்லை.''

இந்த விவாதமும், சிரிப்பும் மேலும் தொடர்ந்திருக்கும். ஆனால் தொலைவில் வண்டி வருவதைப் பார்த்துவிட்டனர். நல்ல பார்வையுடைய பிரியானிஷ்னிகாவ், கைகளை நெற்றியில் வைத்துப் பார்த்துவிட்டு, ''அவன்தான் ஆமாம், முட்டாள் இவான் அர்ழானவ், தவீதவை அழைத்துவருகிறான்'' என்று சொல்லி அமைதியாக சீழ்க்கை செய்தான்.

கரண்டிகளேல்லாம் மேசைமீது படபடவென்று வீழ்ந்தன. எல்லாக் கண்களும் வண்டி வந்து கொண்டு இருந்த திசையை நோக்கின. வண்டி சிறிது நேரம் பார்வைக்குப் படாமல் மறைந்துவிட்டது.

''ஓ, இது என்ன? தவீதவ் பழையபடியும் நம்மை நெட்டிபோட வந்துவிட்டான் அய்யைய்யோ!'' என்று அகஃபோன் துப்த்ஸோவ் கட்டுப்பட்ட வெறுப்புடன் சொன்னான். ''இல்லை, எனக்குப் போதும்! நீங்கள் நின்று அவனுக்காக விழித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் எனக்கு அவன் முன்னர் நிற்பது கூட வெட்கமாக இருக்கிறது! இனிமேல் எனக்கு வேண்டாம்!''

தன்னைப் பார்த்தவுடன் வரவேற்க எல்லாரும் எப்படி மேசையிலிருந்து எழுகிறார்கள் என்பதைப் பார்த்தவுடன், தவீதவே ஆச்சரியப்பட்டுப் போனான். அவன் அவர்களை நோக்கி நடந்தபொழுது, கன்றிப்போன கருத்த முகத்துடன் ஆண்களும், வாடிய முகத்துடன் பெண்களும், குமாரிகளும் கைகளை நீட்டிப் புன்முறுவல் பூத்தவண்ணம் வரவேற்றனர் பெண்கள் முகம் வெயிலில் கன்றிப் போயிருக்கவில்லை. ஏனெனில் வேலை செய்யும்பொழுது, கண்களுக்கு மட்டும் வழிவிட்டு, முகத்தையெல்லாம் வெள்ளைக் கைத்துண்டால் மூடிக்கொள்ளவார்கள். அறிமுகமான அந்த முகங்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான் தவீதவ். இந்த ஆட்கள் இவனை இன்னும் நன்றாகத்தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் உண்மையாகவே அவனை அவர்களில் ஒருவனாக மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். திடீரென்று தவீதவுக்கு நினைவு வந்தவுடன், மகிழ்ச்சியோடு, சற்று கரகரத்த குரலில், ''ஊம், வணக்கம், பின்தங்கிய விவசாயி

களே! உங்கள் விருந்தினனுக்கு ஏதாவது சாப்பிட வைத்திருக்கிறீர்களா?'' என்று அவன் கேட்டான்.

''அது அவர் இங்கு வந்து தங்கும் நாளைப் பொறுத்து உள்ளது. ரொம்ப காலம் தங்குவதானால், சாப்பாட்டுக்கு ஏதாவது பார்ப்போம். அரை மணி நேரத்தில் போவது என்றால், தலையைக் குனிந்து வணங்கிவிட்டு விட்டுவிடுவோம். இதுதானே உண்மை. இல்லையா, குழுத்தலைவரே?'' என்று எல்லாருடைய சிரிப்புக்கும் இடையே பிரியானிஷ்னிகாவ் சொன்னான்.

''நான் உங்களுடன் அதிக நாள் இருப்பேன் என்று நினைக்கிறேன்'' என்று புன்முறுவலோடு சொன்னான் தவீதவ்.

துப்த்ஸோவ் தன்னுடைய முரட்டுத் தொண்டையில், ''மேஸ்திரி! இன்றிலிருந்து இவனுக்கு முழு ரேஷன் போட்டுவிடு. சமையல்காரியே இப்பொழுது இவனுக்கு நிறைய வயிறுகொள்ளக் கொடு!'' என்று கத்தினான்.

தவீதவ் மேசையைச் சுற்றிவந்து ஒவ்வொருவரும் வழக்கம்போல தங்களது கைகளை உறுதியோடு குலுக்கினர். பெண்களோ வெட்கத்துடன் எல்லா விரல்களையும் ஒன்றாகச் சேர்த்து விறைக்க நீட்டினர். அந்த ஊரிலேயே இருக்கும் கஸாக்குகள், பெண்களைச் சமமாகப் பாவித்து கைகுலுக்கியதே மிகவும் அரிது.

துப்த்ஸோவ் தவீதவைத் தன் அருகில் உட்காரவைத்து அவனது கால் மேல் தனது கனத்த கையை வைத்தான்.

''உன்னைக் காண்பதிலே மகிழ்ச்சி, எங்கள் நண்பர் தவீதவ்!''

''என்னால் பார்க்க முடிகிறது. நன்றி!''

''உடனே எடுத்த எடுப்பிலேயே திட்டத் தொடங்கிவிடாதே...''

''நான் உங்களைத் திட்டுவதாகவே இல்லை.''

''இல்லை, உன்னால் அது இல்லாமல் முடியாதே. அது கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். அதோடு அது கொஞ்சம் இருந்தால் தான் எங்களுக்கும் நல்லது. ஆனால் கொஞ்ச நேரத்துக்குச் சும்மா இரு. அவர்கள் மகிழ்ச்சியோடு சாப்பிட்டு முடிக்கட்டும்.''

''நான் காத்திருக்கத் தயார்'' தவீதவ் முறுவலித்தான். ''நாம் அப்புறம் முழுக்கப் பேசுவோம். மேசையில் உட்

கார்ந்து அதை ஆரம்பிக்க வேண்டாம். எனவே பொறுமையாக இருப்போம், இல்லையா?''

''நாம் கட்டாயம் பொறுமையாக இருக்க வேண்டும்!'' என்று எல்லாரது சிரிப்புக்குமிடையே கூறிவிட்டு கரண்டியை முதலாவதாக எடுத்தான் துப்ஸோவ்.

தவீதவ் அமைதியாகச் சாப்பிட்டான். சாப்பாட்டில் மிகக் கவனமாக இருந்த அவன் தட்டைவிட்டுத் தலையைத் தூக்கிக்கூடப் பார்க்கவில்லை. மேசையில் தன்னுடன் உட்கார்ந்திருந்த நண்பர்களின் பேச்சை அவன் கேட்கவே இல்லை. ஆனால் தன்னையே ஒருத்தி தொடர்ச்சியாக உற்று நோக்குவதை உணர்ந்தான். சாப்பாட்டைத் திருப்தியான பெருமூச்சுடன் முடித்தான். பல நாட்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் அவன் உண்மையாகவே வயிறு முட்டச் சாப்பிட்டான். மரக் கரண்டியைச் சின்னப் பையனைப்போல நக்கிக் கொண்டே ஏறிட்டுப் பார்த்தான். ஓர் இளம் பெண்ணின் சாம்பல் நிறக் கண்கள், வெளியிட முடியாத காதல் உணர்வை வெளியிட்டுக் கொண்டிருந்தது. அதில் ஆர்வம்,நம்பிக்கை,எதையும் செய்யத் துடிக்கும் பணிவு எல்லாம் கலந்திருந்தது. தவீதவ் ஒரு கணம் திகைத்துப் போனான். இந்தப் பதினேழு வயது நிறைந்த, கட்டான உடலுடைய, இளம் பெண்ணை இதற்கு முன்பும், கிராமத்துக் கூட்டங்களிலும் தெருக்களிலும் பார்த்திருக்கிறான். அப்பொழுது அவளுடைய பார்வையில் வெட்கமும், கலக்கமும் நிறைந்திருந்தது. அவளது பார்வையில் ஒரு முதிர்ந்த தன்மை தென்பட்டது. அருத்தம் நிறைந்து இருந்தது.

அந்தப் பெண்ணின் வெட்கி நாணிக்கோணிய முகத்தைப் பார்த்தவாறே, ''நீ எங்கிருந்து முளைத்தாய், அன்புக் குழந்தாய்? உனக்கு நான் எதற்காகத் தேவை?'' என்று பலவாறாக நினைத்துக் கொண்டிருந்தான். ''உன்னைத் தொடர்ந்து பல இளைஞர்கள் சுற்றுகிறார்கள். ஆனால் நீ ஒரு குருட்டுப் பெண் என்னைப் போய்ப் பார்க்கிறாயே! எனக்கு உன்னைப்போல இரண்டு மடங்கு வயதாகிவிட்டது. ஒரே தழும்பு மயம். முன்பல் பாதி போய்விட்டது, அதை எல்லாம் நீ பார்க்கவில்லை... நீ எனக்கு வேண்டாம் வார்யா! நான் இல்லாமலே நீ வளர்க கண்ணே'' என்று நினைத்துக் கொண்டான்.

அவள் கண்களைக் கீழே கவிழ்த்து தவீதவ் கண்களைச்

சந்திக்காமல் விலகிக்கொண்டாள். அவளுடைய கூந்தல் கற்றைகள் ஆடின. சட்டை துணியைப் பிடித்து விரல்களால் இழுந்தபோது அது நடுங்கியது தெளிவாகவே தெரிந்தது. கொஞ்சங்கூட இதம் இல்லாமல், மூடிமறைக்க முடியாமல் உணர்ச்சிகளை அவள் காட்டிக்கொண்டதை, குருடனைத் தவிர வேறு எவனாலும் பார்க்காமல் இருந்திருக்க முடியாது.

கொந்திராத் மய்தானிக்கவ் ஒரு சிரிப்புடன் தவீதவிடம், ''வார்யாவைப் பார்க்காதே வெட்கத்தால் அவளது தலை ரோமத்து வேர் கூட வியர்த்துப் போகப்போகிறது! வார்யா, போய்க் குளிக்கிறாயா. அது கொஞ்சம் சூட்டைத் தணிக்கும். ஆனால் அவளால் எப்படி முடியும்? அவள் கால்கள் நடுநடுங்குகின்றன... இவள் தான் எனக்கு வண்டி ஓட்டி. எனக்கு இனி நிம்மதியே தர மாட்டாள். தவீதவ் எப்பொழுது வருவார் எப்பொழுது வருவார் என்று கேட்டுத் தொந்தரவு செய்து கொண்டிருந்தாள். 'ஆனால் எனக்கு எப்படித் தெரியும், என்னை விட்டு விடம்மா' என்று நான் சொன்னேன். ஆனால் மரங்கொத்திக் குருவி மாதிரி காலை முதல் மாலை வரை விடாமல் நச்சரித்துக் கொண்டேதான் இருந்தாள்.''

தன் கால்கள் நடுங்கவில்லை என்பதைக் காட்ட நினைத்ததுபோல பக்கவாட்டில் திரும்பி பெஞ்சைத் தாண்டி, பந்தலை நோக்கி போகும்பொழுது மய்தானிக்கவைக் கோபத்துடன் பார்த்துக்கொண்டு, அவளது வெளிறிய உதடுகளில் எதையோ முணகிக்கொண்டே போனாள். குடிசையை அடைந்தவுடன், இவர்களிருந்த மேசைப் பக்கம் திரும்பி, ''கொந்திராத் மாமா... நீ சொல்வது... உண்மையல்ல!'' என்று கீச்சுக் குரலில் கத்தினாள்.

அதற்குப் பதிலாக எல்லாரும் ஏககாலத்தில் சிரித்தார்கள்.

''ரொம்ப தூரத்திலிருந்து கொண்டு தன்னைத் தற்காத்துக்கொள்கிறாள். அதுதான் பாதுகாப்பான வழி'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் துப்த்ஸோவ்.

''நீ எதற்காக அந்தப் பெண்ணைத் திணறடிக்கிறாய்? இது நன்றாக இல்லை!'' என்றான் தவீதவ் அங்கீகரிக்காதபடி.

''இன்னும் அவளை உனக்குத் தெரியாது'' என்றான்

மய்தானிக்கவ். ''உன்னிடம்தான் இவ்வளவு பணிவுடன் நடந்துகொள்கிறாள். நீ இல்லாவிட்டால், ஓர் ஊசிக்காகக் கூட எங்களில் இரண்டு பேரை அடித்து வீழ்த்தி விடுவாள். அவள் கடிப்பாள்! தெரியுமோ? படுபயங்கரம்! இப்பொழுது குதித்துவிட்டுப் போனதைப் பார்த்தாயா? மலை ஆடு மாதிரி!...''

இந்தக் குழந்தையின் காதலைக் கேட்டு தவீதவுக்குப் பெரிய உற்சாகம் ஒன்றும் பிறந்துவிடவில்லை. இந்தக் காதல்பற்றி அந்தக் குழு முழுவதற்குமே தெரியும். தவீத வுக்கு இப்போழுதுதான் தெரியும். இதேபோல் வேறு இரண்டு கண்கள் பரிவோடும், காதலோடும் பார்த்திருந் தால் நடந்திருக்கும் சமாச்சாரம் வேறு...

இந்தப் பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பி யவனைப் போல, ''சமையற்காரி, ரொம்ப நன்றி! மரக் கரண்டியே உனக்கும் நன்றி! எனக்கு நல்ல சாப்பாடு'' என்று சொன்னான்.

''உன் வலது கைக்கும், பெரிய வாய்க்கும் நன்றி சொல்லு, தலைவரே. சமையற்காரிக்கும் கரண்டிக்கும் எதற்காக நன்றி சொல்ல வேண்டும்? இன்னொருவர் உதவி உனக்கு வேண்டுமோ?'' என்று சொல்லிக்கொண்டே தடித்துப் பருத்திருந்த கம்பீரமான சமையற்காரப் பெண் எழுந்தாள்.

அவளது வளைந்த தோள்கள், தோள் பட்டைகள் இழுத்துக் கட்டியிருந்த பட்டைத் துணிகள் எல்லாவற்றை யும் வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றான் தவீதவ்.

''இவளை எங்கே பிடித்தீர்கள்?'' என்று துப்த்ஸோவி டம் கம்மிய குரலில் கேட்டான் அவன்.

''தகன்ரோக் நகரத்தில் இருக்கிற இரும்பு எஃகுத் தொழிற்சாலையில் எங்கள் விஷேட உத்தரவுக்காகச் செய்யப்பட்டது'' என்று மேற்போக்கான மேஸ்திரி இளை ஞன் சொன்னான்.

''அது எப்படி, இதற்கு முன்னால் உன்னை நான் பார்த்த தில்லையே! உன்னைப்போல் இவ்வளவு பருமனான தாயை நான் எப்படிப் பார்க்காமல் போனேன்'' என்று திகைப் புடன் கேட்டான் தவீதவ்.

''தாயா? உனக்கு எப்படி நான் தாயாக இருக்க முடி யுமா? எனக்கு இப்பொழுது நாற்பத்தி ஏழு வயதுதானே

ஆகிறது. நீ இதற்கு முன்னால் என்னைப் பார்த்ததில் லையா? நான் கூதிர் காலத்தில் வீட்டை விட்டு வெளியே போவதே இல்லை. இவ்வளவு பெரிய உருவத்துடன், குட்டைக்கால்களுடன் பனியில் நடக்க முடியுமா? இரண்டு எட்டு எடுத்து வைப்பதற்குள் நான் மாட்டிக்கொண்டுவிடு வேன். கூதிர் காலம் பூராவும் வீட்டிலிருந்துகொண்டு கம் பளி, சால்வை நெய்துகொண்டு இருப்பேன். என்னால் மண் ணிலும் வேலை செய்ய முடியாது. நான் ஓர் ஒட்டகம் மாதிரி, கால் வழுக்கி விடுமோ என ஒரே பயம். ஆனால் வெயிற் காலத்தில் சமையல்காரியாக வெளியே வந்துவிடு வேன். தலைவரே, நான் ஒன்றும் உன் அம்மா இல்லை! என்னிடம் ஒழுங்காக நடந்து கொண்டு, பசியில்லாமல் இருக்க விரும்பினால் தாரியா குப்ரியானவ்னா என்று அழைக்க வேண்டும்!'' என்றாள்.

''உன்னோடு இருப்பதில் மிக்க மகிழ்கிறேன், தாரியா குப்ரியானவ்னா'' என்று புன்சிரித்துக்கொண்டே சொல்லி எழுந்து, முழு மரியாதையுடன் தலை வணங்கினான் தவீ தவ்.

''சரி, அதுதான் உனக்கும் எனக்கும் நல்லது. குவ ளையை இப்படி நீட்டு. சாப்பிட்டு முடிப்பதற்கு நன்கு புளித்த பால் கொடுக்கிறேன்'' என்றாள், தவீதவின் செய் கையால் மனம் நெகிழ்ந்து போயிருந்த அவள்.

மிகவும் தாராளமான கையால் குவளை நிறைய நன் றாகப் புளித்த அருமையான பாலை தலை வணங்கி ஊற்றி னாள்.

''வயலில் வேலை செய்யாமல் நீ ஏன் சமையல் வேலை செய்கிறாய்? உன்னுடைய கனத்துக்கு நீ கலப்பையில் கை வைத்தால் போதும், அது அரை மீட்டர் ஆழம் பதிந்து விடுமே. ஆமாம் அதுதான் விஷயம்!''

''எனக்கு பலவீனமான இருதயம்! கொழுப்பு அதிகரிப் பால் என் இருதயச் செயல்பாடுகள் கெட்டிருப்பதாக மருத்துவர்கள் சொல்கிறார்கள். சமையல்காரியாக இருப் பதுகூடக் கெடுதல்தான். இரண்டு மூன்று சட்டி பானை களைத் தூக்குவதற்குள்ளாகவே, இருதயம் தொண்டைக்கு வந்துவிடுகிறது. நான் எப்படித் தோழரே உழுவதற்கு முடி யும் தோழர் தவீதவ்? அது என் வேலையல்ல.''

''எப்பொழுது பார்த்தாலும் இருதயக் கோளாறு

பற்றித்தான் புகார் கூறுவாள். ஏற்கெனவே மூன்று கணவன்களைப் புதைத்து விட்டாள். மூன்று கஸாக்குகளை விழுங்கிய பிறகு இப்பொழுது நாலாவது கணவனைத் தேடிக் கொண்டிருக்கிறாள். ஆனால் யாரும் கிடைப்பதாகத் தெரியவில்லை. நாலாவது ஆளாக இவளிடம் சாக யாரும் தயாரில்லை!'' என்றான் துப்த்ஸோவ்.

''ஏ அம்மைத் தளும்பு! புளுகிணி! அந்த மூன்று கஸாக்குகளும் தொடர்ந்து வாழாவிட்டால் அதற்கு நானா பொறுப்பு? அவர்கள் பிறப்பிலேயே நோஞ்சான்கள். கடவுள் அவர்களை வாழ விடாவிட்டால் அதற்கு என்னைக் குறை சொல்லி என்ன பயன்?'' என்று மிகவும் எரிச்சலுடன் சீறினாள் அவள்.

''ஆனால் அவர்கள் சாக நீ தான் உதவினாய்'' என்று அழுத்திச் சொன்னான் துப்த்ஸோவ்.

''எப்படி?''

''எப்படி என்று உனக்குத் தெரியும்...''

''அறிவோடு பேசு!''

''நான் அறிவோடுதான் பேசிக்கொண்டு இருக்கிறேன்...''

''இல்லை, நீ தெளிவாகப் பேசுவது நல்லது. உன் நாக்கை வைத்து உளறிக் கொட்டுவதால் பயனில்லை!''

''எப்படி நீ உதவினாய் என்பது எல்லார்க்கும் தெரியும். உன்னுடைய காதலால்தான் '' துப்த்ஸோவ் எச்சரிக்கையுடன் சொல்லிவிட்டுச் சிரித்தான்.

''நீ ஒரு வடிகட்டிய முட்டாள்!'' என்று உறுமிய சமையல்காரி மேசையிலிருந்து ஒரு கையில் சுட்ட களிமண் கலத்தை எடுத்தாள்.

ஆனால் இதற்கெல்லாம் அசைந்து கொடுப்பானா துப்த்ஸோவ். அவன் எஞ்சிய பாலை அமைதியாகக் குடித்து முடித்துவிட்டு, மீசையை வருடிக்கொண்டே, ''நான் முட்டாளாக இருக்கலாம். ஒருவகையில் வடிகட்டிய ஆளாகவும் இருக்கலாம். ஆனால் இதுபோன்ற விஷயங்களில் என்ன பேசுகிறேன் என்பதை தெரிந்துதான் பேசுவேன்.''

இதைக் கேட்ட சமையல்காரி போட்ட அலறலில் மேசையே கிடுகிடுத்தது. தவீதவ் சிரித்து முகஞ்சிவந்து காணப்பட்டான். ''இது என்ன சகோதரர்களே! கப்பற்படையில்கூட இப்படிப் பேச நான் கேட்டதே இல்லையே?...''

முறைப்புடனேயே காணப்பட்ட துப்த்ஸோவ், ''நான்

சத்தியம் பண்ணத் தயார்! சிலுவையில் முத்தமிடத் தயார்! ஆனால் நான் சொல்வது உண்மை, தாரியா. தாரியா, உன்னுடைய காதல்தான் அந்த மூவரையும் அடுத்த உலகிற்கு அனுப்பிவிட்டது! மூன்று கணவர்கள் — இதைப் பற்றிக் கொஞ்சம் யோசிக்கத்தானே வேண்டும்... எதற்காக வலோத்யா கிரசோவ் போன ஆண்டு இறந்தான்? அவன் வந்து உன்னை அடிக்கடி பார்த்தான்...''

இதை துப்த்ஸோவ் சொல்லி முடிப்பதற்குள் அவன் பதுங்க வேண்டியதாகி விட்டது. அகப்பைக் காம்பு ஒன்று அவன் தலைக்குமேல் சர்ரேன்று விசிறிப் பறந்தது. இளமைத் துடிப்புடன் பெஞ்சின்மீது காலை வைத்துக் குதித்தான் துப்த்ஸோவ். பத்து நீளடிகள் போட்டு ஒரே பாய்ச்சலில் பாய்ந்தான். நாலா பக்கமும் புளித்த பால் சிதறியது. அவனும் ஒரு வளைவு வளைந்து கால்களை அகலப் பரப்பி நின்றுகொண்டு, ''தாரியா, எச்சரிக்கை! நீ எதைக் கொண்டு வேண்டுமானாலும் எறி. ஆனால் மண் பானைகளை விட்டு வீசாதே! உன் சம்பளத்தில் இதற்கெல்லாம் காசு பிடித்துவிடுவேன்! வேண்டுமானால் வார்யா மாதிரி குடிசைக்குப் பின்னால் போய் நின்று எதையாவது பேசிக் கொண்டிரு!.. ஆனால் நான் சொல்வதெல்லாம் உண்மை: நீ மூன்று கணவன்மாரையும் மேலுலகிற்கு அனுப்பியது உண்மைதான். இப்பொழுது என் மீது சீறுகிறாய்...'' என்றான்.

அமைதியை நிலை நாட்ட தவீதவ் சிரமப்பட வேண்டியதாகிவிட்டது. குடிசைக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து புகைபிடிக்கத் தொடங்கினர். சிரித்துக்கொண்டே இருந்த கொந்திராத் மய்தானிக்கவ், ''ஒவ்வொரு நாளும் மதிய உணவின் போதாவது அல்லது இரவுச் சாப்பாட்டின் போதாவது இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கத்தான் செய்கிறது. அகஃபோன் கண்களில் தாரியா ஒரு குத்துவிட்டு, ஒரு வாரம் அவனுக்கு அது கன்றிக் கருத்துப் போயிருந்தது. இருந்தாலும் அவளுடன் வம்பிழுக்காமல் இவனிருக்க மாட்டான். அகஃபோன், ஒரு விபத்தில்லாமல் இந்த உழவை முடித்துக் கொண்டு நீ போகப்போவதில்லை. உன் கண்களில் ஒன்றை அவள் பிடுங்கி விடுவாள் அல்லது உன் காலைத் திருகிவிடுவாள். நீ அவளிடம் அடிக்கடி வம்பிழுக்கிறாய்...''

''அவள் ஒரு 'போர்ட்சன்' டிராக்டர்— பெண்ணல்ல!''

என்று பெருமதிப்போடு கூறிய துப்த்ஸோவ், அவள் வருவதைப் பார்க்காதவன் உரக்கப் பேசினான்.

''சகோதரர்களே, எதற்காக நா ரகசியமாக வைத்திருக்க வேண்டும்? எனக்கு ஏற்கெனவே திருமணமாகாமலிருந்தால் நான் இன்றைக்கே தாரியாவை திருமணம் செய்துகொண்டிருப்பேன். ஆனால் ஒரு வாரம்தான். அதற்குப் பிறகு ஓடிவிடுவேன். எனக்கிருக்கிற பலத்தில் ஒரு வாரத்துக்கு மேல் நீடிக்க முடியாது. இப்பொழுது சாகவும் நான் விரும்பவில்லை. நானாகச் சாவதிலே எனக்கு என்ன மகிழ்ச்சி? உள்நாட்டுப் போரையெல்லாம் தாண்டிவிட்டு, கடைசியாக ஒரு பெண்ணிடம் சாவதா?... இல்லை. நான் ஒரு வடிகட்டிய முட்டாளாக இருக்கலாம். ஆனால் நான் தந்திரசாலி! ஒரு வாரத்தை தாரியாவுடன் எப்படியோ கழித்துவிட்டு, பிறகு ஒரு நள்ளிரவில் படுக்கையை விட்டு இறங்கி, வயிற்றிலேயே தவழ்ந்து வெளியேறி துப்பாக்கிக் குண்டுமாதிரி வீட்டை நோக்கிப் பாய்ந்து விடுவேன்... உண்மையைச் சொல்கிறேன் தவீதவ். இங்கு பிரியானிஷ்காவும் என் வார்த்தைகளை உறுதிப் படுத்துவான். நானும் அவனும் தாரியாவின் நல்ல சமையலுக்காக அவளுக்கு நன்றி கூறப் போனோம். அவன் முன்னாலும், நான் பின்னாலும் போனோம். இருவரும் கையைக் கோர்த்துப் பார்த்தோம். ஆனால் எங்கள் கைகளால் சுற்றி வளைக்க முடியவில்லை. அவள் கொஞ்சம் பருமன் அதிகம்! நாங்கள் மேஸ்திரியை அழைத்தோம். ஆனால் அவனோ இளைஞன். வெட்கப் படக் கூடியவன். தாரியாவுக்கருகில் வரவே பயந்துவிட்டான். இப்பொழுதும் யாரும் கட்டித் தழுவ முடியாத நிலைமை...''

''அந்தப் புளுகர் சொல்வதை நம்பாதே, தோழர் தவீதவ்!'' என்று இப்பொழுது மகிழ்ச்சியோடு சிரித்தாள் தாரியா. ''இன்றைக்கு அவன் ஒழுங்காக உண்மையைச் சொல்லாவிட்டால், நாளைக்கு இருதயத்தையே சாப்பிட வேண்டி நேரிடலாம். இவன் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு பொய். இவனை ஒன்றும் காப்பாற்ற முடியாது! ஏனெனில் இவன் பிறப்பே அப்படி.''

அவர்கள் ஓய்வெடுத்து புகைத்த பிறகு, ''இன்னும் எவ்வளவு உழவேண்டி இருக்கிறது?'' என்று கேட்டான் தவீதவ்.

''அது ஏராளமாகக் கிடக்கிறது'' என்று துப்த்ஸோவ் வேண்டா வெறுப்பாகப் பதில் சொன்னான். ''150 ஹெக்டருக்கும் மேல் கிடக்கிறது. நேற்று 158 ஹெக்டர் இருந்தது.''

''ஆகா, அருமையான வேலை என்று தான் சொல்ல வேண்டும்! இங்கே என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இது மாதிரிக் காட்சிகளை சமையல்காரியுடன் நடத்திக் கொண்டிருந்தீர்களா?'' என்று கடுப்புடன் கேட்டான் தவீதவ்.

''நீ அப்படிக் கேட்பது சரியல்ல.''

''இரண்டாவது குழுவும், மூன்றாவது குழுவும் ஏற்கெனவே உழவை முடித்து விட்டார்கள். நீங்கள் ஏன் முடிக்கவில்லை?''

''இன்று மாலை எல்லாரையும் சேர்த்துக் கூட்டிவைத்து, மனம்விட்டுப் பேசுவோம். ஆனால் இப்பொழுது போய் உழலாம்'' என்று யோசனை கூறினான் துப்த்ஸோவ்.

இது ஒரு புத்திசாலித்தனமான யோசனை. எனவே சிறிது நேரம் யோசித்துவிட்டு ஏற்றுக்கொண்டான் தவீதவ்.

''எனக்கு எந்தக் காளைகளைக் கொடுப்பார்கள்?''

''என்னுடையதை வைத்துக் கொள்'' என்று புத்தி சொன்னான் கொந்திராத் மய்தானிக்கவ். ''அவை அருமையான எருதுகள். அவை தானாகவே வேலை செய்யும், இளம் எருதுகள் இரண்டும் விடுமுறையில் இருக்கின்றன.''

''விடுமுறையா? அப்படி என்றால் என்ன?'' தவீதவ் வியப்புடன் கேட்டான்.

''அவை ரொம்பவும் மெலிந்துவிட்டன'' என்று துப்த்ஸோவ் முறுவலித்துக் கொண்டே விளக்கினான். ''அவை நின்று நின்று சண்டித்தனம் செய்தன. உழவு சாலிலேயே படுத்துக்கொள்கின்றன. எனவே கழற்றிவிட்டு புல்வெளியில் மேய விட்டு விட்டோம். அங்கே சத்துள்ள அருமையான புல் இருக்கிறது. அந்த எருதுகள் கொஞ்சம் கொழுக்கட்டும். இப்பொழுது இருப்பன போல விட்டால் ஒன்றும் பயனில்லை. கூதிர்காலத்திற்குப் பின்னர் அவை மெலிந்து விட்டன. இப்பொழுது நாள்தோறும் வேலை செய்ததால், அவை படுமோசமாகிவிட்டன! அவற்றால் கலப்பையை இழுக்க முடியாது; அதுதான் நிலைமை, பழகிய பழைய மாடுகளோடு சேர்த்துப் போட்டுப் பார்த்தோம், ஒன்றும்

பயனில்லை, நீ கொந்திராத் மாட்டை வைத்தே உழு, அவன் யோசனைதான் நல்ல யோசனை.''

''அப்புறம் அவன் என்ன செய்வான்?''

''இரண்டு நாட்களுக்கு அவனை ஊருக்கு அனுப்பு கிறேன். அவன் மனைவி படுத்த படுக்கையாக இருக்கிறாள். சட்டை துணிமணிகளைக் கூடத் துவைத்து அனுப்பவில்லை. வீட்டிற்கு வருமாறு மட்டும் சொன்னாளாம்.''

''ஓ அப்படியா? அதுசரி. அவனையும் விடுமுறையில் அனுப்ப நீ முயற்சிக்கிறாய் என்று நினைத்தேன். நீங்கள் இங்கு ஓய்வுநாள் மனநிலையில் மூழ்கியிருப்பதாகத் தெரிகிறது...''

துப்த்ஸோவ் கண் சைகை காட்டியவுடன் எல்லாரும் எழுந்து எருதுகளைப் பூட்டப்போனார்கள்.

அத்தியாயம் ஏழு

சூரியன் மறையும் வேளையில் தவீதவ் எருதுகளை உழவு சாலில் கழற்றி மேய விட்டுவிட்டான். ஓர் உழவு சாலின் ஓரத்தில் புல்மீது அமர்ந்தான். நெற்றி வியர்வையைச் சட்டை நுனியால் துடைத்துக் கொண்டான். நடுங்கும் விரல்களால் சிகரெட்டைச் சுற்றினான். அப்பொழுது தான் எவ்வளவு களைத்துப் போயிருக்கிறோம் என்பதை உணர்ந்தான் அவன். முதுகெல்லாம் வலித்தது. முழங்காலுக்குப் பின்னால் வெடிப்புகள் இருந்தன. கிழவன் போல கைகள் ஆடின.

''காலையில் நமது எருதுகளைக் கண்டுபிடித்துவிட முடியுமா?'' என்று வார்யாவிடம் கேட்டான் அவன்.

உழுத புழுதியில் அவனுக்கு எதிரில் அவள் நின்று கொண்டிருந்தாள். மிகப்பழையதாகிவிட்ட பெரிய காலணிகளை அணிந்திருந்த அவளது சிறிய பாதங்கள், உழுத புழுதியில் மறைந்திருந்தன. அழுக்குச் சாம்பல்நிற தலைக்குட்டையை முகத்திலிருந்து எடுத்துக்கொண்டே, ''அவைகளை நாம் கண்டு பிடித்து விடலாம். ஏனெனில் ரொம்ப தூரம் போவதில்லை'' என்றாள்.

தவீதவ் கண்களை மூடிக்கொண்டே புகை பிடித்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண்ணை அவன் பார்க்க விரும்பவில்லை. களைத்துப்போயிருந்தும், சிரித்த முகத்துடன்,

தலைவழுக்கை விழுந்த கிழவன் ஒருவன் நின்று, பச்சை குத்தியிருப்பதைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். தவீதவ் மெதுவாகவே தண்ணீரை ஊற்றிக் கொண்டு மரத் தொட்டி மட்டும் வழுக்கைத் தலையனுக்குத் தெரிவது போல் விட்டுவைத்தான். படத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததை முடிக்காத அந்தக் கிழவன் கண்களை மூடிக்கொண்டு கீழே வீழ்ந்துவிட்டான். இப்பொழுதும் அவசரமில்லாமல் தவீதவ் குளித்துவிட்டு, ஆடை அணிந்து கொள்ளும் அறைக்குப் போனான். அதன் பிறகு, ருஷ்ய வழக்கத்திற்கேற்ப பொது குளியறையில் வெந்நீரில் முழுக்கக் குளிக்கும் பழக்கத்தை விட்டுவிட்டு, வீட்டிலேயே குளிக்கத் தொடங்கினான்.

வார்யா தன் வயிற்றில் குத்தப்பட்டுள்ள பச்சையைப் பார்த்துவிடக்கூடும் என்று நினைத்த மறு விநாடியே, தவீதவுக்கு உடம்பெல்லாம் சூடேறிவிட்டது. இருந்த கிழிசலை இறுக்கமாகப் போர்த்திக்கொண்டான்.

''மாடுகளைக் கழற்றிவிடு, மேயட்டும். நான் புறப்படுகிறேன்'' என்று பெருமூச்சுடன் சொன்னான். உழுத காட்டைச்சுற்றி மூன்று கிலோமீட்டர் தூரம் அல்லது உழுத புழுதி வழியாக ஒன்றரை கிலோமீட்டர் தூரம், பைத்தியக்காரத்தனமாக சட்டையைக் கிழித்துவிட்டதால் நடக்க வேண்டியிருக்கிறதே என்பதை நினைத்து அவனுக்கே கஷ்டமாக இருந்தது. எல்லாம் ஒரு விபத்தால் வந்த வினை.

ஆனால் வார்யா, அவனது உணர்வுகளைத் தன் வழியில் அருத்தப்படுத்திக்கொண்டாள். ''என் அன்பர்க்கு என் அருகில் சட்டை இல்லாமல் வேலை செய்ய முடியவில்லை'' என்று அவள் முடிவு செய்தாள். இதை நினைத்தவுடன், காலணிகளை எட்டி எறிந்து விட்டு, ''நான் உன்னைக் காட்டிலும் விரைவாகப் போய்விடுவேன்!'' என்றாள்.

தவீதவ் ஒரு வார்த்தை சொல்வதற்கு முன்பாக அவள் ஒரு பறவை மாதிரி முகாமை நோக்கிப் பறந்து கொண்டிருந்தாள். உழுத காட்டில் அவளது தடித்த கால்கள் பளிச்சென்று தெரிந்தன. வெந்நிறக் கைக்குட்டை காற்றில் பின்னோக்கி படபடத்துக்கொண்டிருந்தது. முன் பக்கமாக சற்றே சாய்ந்தபடி ஓடினாள். தனது இளம் மார்பை கைகளால் அழுத்திக்கொண்டு ஓடினாள். அவளுக்கு ஒரே ஒரு சிந்தனை தான். ''நான் ஓடிப்போய் அவனுடைய ஜாக்கெட்டை எடுத்து வருவேன்... நான் வேகமாக எடுத்து

வந்து அவனை மகிழச் செய்வேன். பிறகு ஒரு தடவையாவது என்னை அன்புடன் ஏறிட்டுப்பார்த்து 'நன்றி வார்யா!' '' என்று சொல்லக்கூடும் என எதிர்பார்த்தாள்.

அவன் அவளையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் எருதுகளைக் கழற்றி விட்டு உழுத நிலத்தை விட்டு அகன்றான். கடந்த ஆண்டு அறுத்துப் போட்ட புல்லில், ஓர் அருகம்புல் பற்றிப்படர்ந்திருப்பதைக் கண்டான். அதைப்பிடுங்கி தோகைகளை நீக்கிவிட்டு, ஈக்கியால் கிழிந்த சட்டையைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான். பின்னர் அப்படியே மல்லாந்து படுத்துவிட்டான். தூக்கம் அவனைக் கவ்வியது. பூமியின் இன்ப வாசனையில் ஏதேதோ பழைய நினைவுகளில் சுழன்றன...

ஓர் எட்டுக்கால் பூச்சியோ, விட்டிலோ அவன் நெற்றியில் ஊர்ந்ததால் அவன் எழுந்தான். முகத்தைச் சுளித்த வண்ணம் கையால் நெற்றியைத் தடவிவிட்டு மீண்டும் அயர்ந்து தூங்கிவிட்டான். திரும்பவும் ஏதோ ஒன்று மேல் உதட்டில் ஊறி மூக்கின்மீது உராய ஆரம்பித்தது. ஒரு தும்மல் தும்மிவிட்டு விழித்துப்பார்த்தான். வார்யா அவனுக்கு முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு, சிரிப்பை அடக்க முடியாமல் சிரமப்பட்டுக்கொண்டிருந்தாள். தவீதவின் முகத்தில் ஒரு காய்ந்த புல்லால் உரசிக் கொண்டிருந்தாள். தவீதவ் விழித்துக்கொள்வதற்கு முன்பாக அவளால் தனது கையை எடுத்துக்கொள்ளக்கூட முடியவில்லை. அவளுடைய தளிர்க் கரத்தைப் பிடித்தான். அவள் விடுவித்துக்கொள்ள முயலவில்லை. அவள் தனது தொடையின்மேல் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். அவளுடைய சிரிப்புமாறி முகம் ஆர்வத்தோடு பணிவைக் காட்டியது.

''நான் உன் ஜாக்கெட்டைக் கொண்டுவந்து விட்டேன். எழுந்திரு'' என்று மெதுவாக காதில் கேட்பது போலச் சொன்னாள். தனது கையை விடுவித்துக்கொள்ள லேசாக முயன்றாள்.

அவன் தனது விரல்களைத் தளர்த்தினான். சூரியவெப்பத்தில் கன்றிப்போன அவளது பெரிய கை அவளது தொடையில் வீழ்ந்தது. கண்களை மூடிக்கொண்டு வேகமாகத் துடிக்கும் தனது இதயத் துடிப்பைக் கவனமாகக் கேட்டாள். அவள் இன்னும் காத்துக்கொண்டிருந்தாள், இன்னும் எதையோ நம்பிக் கொண்டிருந்தாள்... ஆனால்

தவீதவ் அமைதியாக இருந்தான். அவனுடைய மார்பு மட்டும் விம்மிப்புடைத்து அடங்கிக்கொண்டிருந்தது. முகத்தில் எவ்விதச் சலனமும் இல்லை. பின்னர் எழுந்து உட்கார்ந்து வலது காலை மடக்கிப்போட்டு வசதியாக உட்கார்ந்து கொண்டு, பைக்குள் புகையிலையைத் தேடினான். இப்பொழுது இருவரது தலைகளும் ஏறத்தாழ உரசிக்கொண்டிருந்தன. அவளுடைய கூந்தல் வாசனையை நுகர்ந்த அவனது மூக்குகள் விடைத்து நின்றன. அவளுடைய உடம்பு முழுவதும் மதிய வெயில் பட்டு, புல் வாசனையும், யாரும் வார்த்தைகளால் வருணிக்க முடியாமல் போன இளமையின் போதை தரும் மெல்லிய மணமும் கலந்திருந்தது அவனை ஈர்த்து இழுத்தன...

''என்ன இனிமையான குழந்தை!'' என்று நினைத்த தவீதவ் பெருமூச்சு விட்டான். இருவரும் ஏறத்தாழ ஏக காலத்தில் எழுந்து நின்றனர். சில விநாடிகள் ஒருவர் கண்களை ஒருவர் மௌனமாக உற்று நோக்கினர். பிறகு அவளிடமிருந்து ஜாக்கெட்டை வாங்கிக்கொண்டான். அவன் கண்கள் மட்டும் சிரித்தன.

''நன்றி வார்யா!''

ஆமாம். அவளுக்கு அவன் நன்றி கூறிவிட்டான். அவள் ஜாக்கெட்டை எடுக்க ஓடியபோது எதிர்பார்த்தது நடந்துவிட்டது. பின்னர் ஏன் அவளது சாம்பல் நிறக்கண்களில் நீர் தேங்கி நிற்கிறது? அதை அடக்க அவள் முயலும்போது அவளது கரிய இமைகள் விரைந்து அடித்துக்கொள்வானேன்? எதற்காக அழுகிறாய் அன்பே? ஒரு குழந்தை போல, அடக்கிக்கொள்ள முடியாமல் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே ஓசையின்றி அழுதாள். ஆனால் தவீதவ் ஒன்றையும் கவனிக்கவில்லை. புகையிலைத் துணுக்கு ஒன்றையும் வீணாக்காது கவனத்தோடு சிகரெட்டைச் சுற்றிக்கொண்டிருந்தான். அவனிடம் சிகரெட்டுகள் இல்லை. புகையிலையும் காலியாகிக்கொண்டிருந்தது. எனவே சிறிய அளவில் சிக்கனமாகச் சுற்றி நாலு அல்லது ஆறு இழுவைக்கு மட்டும் வருவது போலச் செய்து கொண்டிருந்தான்.

சிறிது நேரம் தன்னைத்தானே அமைதிப்படுத்திக் கொள்ள நின்றாள். ஆனால் முடியவில்லை. திடீரென்று

திரும்பி நடக்க ஆரம்பித்தாள். ''நான் எருதுகளைப் பிடித்து வருகிறேன்'' என்றாள்.

அதற்குப் பிறகும்கூட, நடுங்கும் குரலில் தொனித்த உணர்ச்சியை தவீதவால் புரிந்துகொள்ள முடியவில்லை. தலையை ஆட்டிவிட்டு, சிகரெட்டைப் பற்றவைத்தான். இந்தக் குழு முழுவதையும் உழுது முடிக்க எவ்வளவு நாள் பிடிக்கும்; பலமான மூன்றாவது குழுவிலிருந்து மூன்று ஏர்களை இதில் சேர்த்துவிட்டால் என்ன என்று பலவாறாக நினைத்துக்கொண்டிருந்தான்.

இப்பொழுது அவள் அழலாம். ஏனெனில் அவளது கண்ணீரை அவனால் பார்க்க முடியாது. அவள் இன்னல் விருப்பார்வத்தோடு அழுதாள். அவளது வழவழப்பான கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. அவள் நடந்து போகும் போதே கைக்குட்டை நுனியால் துடைத்துக்கொண்டாள்...

அவனுடைய அசட்டைக்கு எதிராக அவளுடைய கன்னிக் காதல் பீறிட்டுப்பொங்கியது. ஆனால் காதல் விவகாரங்களிலேயே தவீதவ் ஒருவகையில் குருடன்தான். பல விஷயங்கள் அவனுக்கு ஏற்பட்டதே இல்லை. அப்படியே தெரிந்தாலும், ரொம்பக் காலதாமதத்துக்குப் பிறகுதான் தெரியும். சில சமயங்களில் இந்தக் காலதாமதம் முறிவிலும், இழப்பிலும் கொண்டுபோய்விட்டுள்ளது...

தவீதவ் காளைகளைப் பூட்டிய போது அவள் சற்று முன்னர் அழுதுவடித்த கண்ணீர்த் தாரையாக அவளது கன்னங்களில் வடுவோடி இருந்ததை அவன் பார்த்தான். கண்டிக்கிற தொனியில் தவீதவ் பேசினான்: ''ஓ, வார்யா! பெண்ணே, நீ இன்றைக்குக் குளிக்கவே இல்லையா?''

''எப்படி தெரிந்தது?''

''உன் முகத்திலெல்லாம் ஏதோ கோடுகள் இருக்கின்றன. நாள்தோறும் கழுவ வேண்டும்'' என்று புத்தி சொல்லுகிற குரலில் சொல்லி முடித்தான்.

... களைப்புடன் முகாமுக்குத் திரும்பும்பொழுது சூரியன் மறைய ஆரம்பித்தது. புல்வெளியில் அவர்களது நிழல் நீளமாக விழுந்தது. கருங்குன்று பனி மூட்டத்தில் மூடியிருந்தது. கருநீலநிற மேற்கும், கருப்பு மேகங்களும் நிறம் மாறின. முதலில் கீழ் நுனிப்பாகம் மங்கலான பழுப்பாக மாறியது. பின்னர் ரத்தச்சிவப்பு நிறம் எல்லா பகுதிகளுக்கும் பாய்ந்தது. வானப் பகுதியே ஆரஞ்சு வண்ணமாகத்

தோன்றியது. தனது சிவந்த உதடுகளைக் கடித்தவண்ணம், ''என்னை இவன் என்றைக்கும் காதலிக்க மாட்டான்'' என்று நினைத்துக்கொண்டாள் வார்யா.

''நாளைக் காற்றடிக்கும். காய்ந்த தரையில் மாடுகளுக்கு உழுவது மிகவும் சிரமமாக இருக்கும்'' என்று மறைகிற சூரியனைப் பார்த்து வருத்தமாக நினைத்துக்கொண்டிருந்தான் தவீதவ்.

இந்நேரத்தில் எதையாவது சொல்ல வார்யா முயன்று கொண்டிருந்தாள். ஆனால் ஏதோ ஒரு சக்தி அவளைத் தடுத்துவிட்டது. முகாமுக்கு அருகில் வந்தவுடன் அவளுக்கு அந்தத் துணிச்சல் வந்தது.

''உன்னுடைய சட்டையைக் கொடு'' என்று கெஞ்சல் தொனியில் மெதுவாகக் கேட்டாள். மறுத்துவிடுவானோ எனப் பயந்து, ''தயவுசெய்து கொடு!'' என்று வேண்டினாள்.

''எதற்காக?'' என்று வியப்புடன் கேட்டான் தவீதவ்.

''நான் தைத்துக்கொடுக்கிறேன். தையலே தெரியாதபடி நன்றாகத் தைத்துக்கொடுக்கிறேன். துவைத்தும், கொடுக்கிறேன்.''

அவன் பலமாகச் சிரித்தான். ''வியர்த்துக் கெட்டுப் போயிருக்கிறது. ஊசி நுழைய அதில் இடம் இல்லை. சின்ன துயர வார்யா, இந்தச் சட்டை போதுமான காலம் சேவை செய்துவிட்டது. பந்தலில் இருக்கும் மரத் தரையைக் கழுவ குப்ரியானவ்னாவுக்குப் பழைய துணிக்குக் கொடுக்கலாம், அவ்வளவுதான்'' என்றான்.

''நீ என்னிடம் கொடு. நான் முயன்று பார்க்கிறேன். பிறகு எப்படி இருக்கிறது என்று நீ பாரு'' என்று வலியுறுத்தினாள்.

''சரி, உன் விருப்பப்படியே வைத்துக்கொள். ஆனால் உனக்கு வீண் வேலை'' என்று இணங்கினான் தவீதவ்.

தவீதவின் சட்டையைக் கைகளில் பிடித்துக்கொண்டு முகாமுக்குப் போக அவள் விரும்பவில்லை. அது வீண் பேச்சுக்கும் கேலி கிண்டலுக்கும் தேவையற்று இடம் கொடுப்பதாகும்... தவீதவைப் பார்த்துக்கொண்டே, மறுபுறம் சிறிது திரும்பி, சற்று வெதுவெதுப்பான சட்டையை தன் சட்டைக்குள் திணித்துக்கொண்டாள்.

அந்தச் சட்டை அவள் இளம் மார்பைத் தொட்டபோது

அவளுக்கு வேடிக்கையான, அலைக்கழிக்கும் உணர்ச்சிகள் தோன்றின. ஆண் மகனின் உடல் வெப்பம் எல்லாம் அதில் ஊறிப் பெருக்கெடுத்தோடுவது போலத் தோன்றியது... அவளுடைய உதடுகள் திடீரென்று வறண்டுவிட்டன. அவளது குறுகிய வெண்ணிற நெற்றியில் வியர்வை முத்துக்கள் துளிர்த்து நின்றன. நடைகூட எச்சரிக்கையாகவும், தடுமாற்றமும் அடைந்தது.

ஆனால் தவீதவ் எதையும் பார்க்கவும் இல்லை, கவனிக்கவும் இல்லை. ஒரு நிமிடங்கழித்து, அவள் கையில் தனது அழுக்குச் சட்டையைத் திணித்ததை மறந்தே விட்டான். ''அங்கே பார் வார்யா, வெற்றி பெற்றவர்களை எப்படி கௌரவிக்கிறார்கள் என்று! மேஸ்திரி குல்லாயை நம்மை நோக்கி ஆட்டுகிறார். நாம் இன்றைக்கு நல்ல வேலை செய்து முடித்து விட்டோம் போல இருக்கிறது. அதுதான் விஷயம்!'' என்றான்.

* * *

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு பந்தலுக்கு அருகில் ஆண்கள் நெருப்பு வளர்த்து அதைச் சுற்றி புகை பிடிப்பதற்காக உட்கார்ந்தார்கள்.

''சரி, இப்பொழுது உண்மையாகப் பேசி முடித்துவிடலாம். ஏன் இவ்வளவு மோசமாக வேலை செய்துகொண்டிருந்தீர்கள்? உழவிலே ஏன் இவ்வளவு காலதாமதம்?'' என்று கேட்டான் தவீதவ்.

''மற்றக் குழுக்களிடம் அதிகமான எருதுகள் இருக்கின்றன'' என்றான் இளைஞன் பெஸ்ஹிலேப்னவ்.

''எவ்வளவு அதிகம் இருக்கும்?''

''உனக்குத் தெரியாதா? மூன்றாவது குழுவிடம் எட்டு ஜோடி அதிகம் இருக்கின்றன. அதாவது நான்கு ஏர்கள் அதிகம் என்று அருத்தம்! முதல் குழுவிடம் இரண்டு ஏர்கள் அதிகம் இருக்கின்றன. ஆகையால் அவர்களும் எங்களைக் காட்டிலும் பலமாக இருக்கிறார்கள்.''

''மேலும் நமது திட்டமோ பெரிது'' என்று இடையே கூறினான் பிரியானிஷ்னிகாவ். தவீதவ் புன்னகை செய்துக் கொண்டே, ''எவ்வளவு பெரிது?'' என்று கேட்டான்.

''இருபத்தைந்து ஹெக்டர்தான் அதிகம் என்றாலும்

அது பெரிதுதானே. அதை உன்னுடைய மூக்கால் உழ முடியாது.''

''மார்ச் மாதம் இந்தத் திட்டத்தை நீங்கள் ஏற்கவில்லையா? இப்பொழுது ஏன் முணங்குகிறீர்கள்? நிலத்திற்கேற்பத்தான் குழு அமைத்தோம் இல்லையா?''

துப்த்ஸோவ் அமைதியாகச் சொன்னான்: ''இங்கு யாரும் முணகவில்லை, தவீதவ். அதுவல்ல விஷயம். நம்மிடமுள்ள எருதுகள் போன கூதிர்கால முடிவிலேயே மிகவும் மோசமாக இருந்தன. இவை எல்லாம் கூட்டுப்பண்ணைச் சொத்தாக்கப் பட்டபோது, எங்களுக்குக் குறைவான வைக்கோலும் புல்லும்தான் கொடுத்தார்கள். எனக்குத் தெரிவதுபோலவே இது உனக்கும் தெரியும். இதில் எங்களைக் குறை சொல்லி பயனில்லை. ஆமாம், நாங்கள் பிந்தி இருக்கிறோம், எருதுகளும் மோசமாக உள்ளன. எங்களுக்கு அதிகத் தீவனம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். நீயும் ஒஸ்த்ரவ்னோவும் திட்டமிட்டுக் கொடுத்ததைப் போல இருந்திருக்கக் கூடாது. தனிக் குடும்பங்களிலிருந்து பறிமுதல் செய்ததை வைத்து தீனி போட்டுக்கொள்ளுங்கள் என்றா விடுவது? ஆகவேதான் இப்படி வேலை நடந்து இருக்கிறது. சிலர் உழவை முடித்து, புல் அறுவடைக்குப் போய் விட்டார்கள். நாங்களோ இங்கு இந்தப் பொட்டலைக் கட்டி அழுது கொண்டிருக்கிறோம்.''

''அப்படியானால் உங்களுக்கு உதவுகிறோம். லூபிஷ்கின் உங்களுக்கு உதவுவான்'' என்று தவீதவ் முன்மொழிந்தான்.

''நாங்கள் வேண்டாம் என்று சொல்ல மாட்டோம்'' என்றான் துப்த்ஸோவ். மற்றவர்களின் அமைதி துப்த்ஸோவின் இந்த யோசனையை ஏற்பதாக இருந்தது. ''நாங்கள் கர்வம் பிடித்த கூட்டம் அல்ல'' என்றான்.

''சரி, ஒரு விஷயம் தெளிவாகிவிட்டது'' என்று தவீதவ் சிந்தனையுடன் சொன்னான். ''நாமும், நிர்வாகமும் சேர்ந்து தவறு செய்துவிட்டோம். இளவேனிற்காலத்தில் வட்டார வாரியாக தீவனத்தைப் பிரித்துக்கொடுத்தோம். அது தவறுதான்! நம்முடைய மனித சக்தியையும், கால் நடை சக்தியையும் தவறாக ஒதுக்கினோம். அது இரண்டாவது தவறு! ஆனால் நாம் நம்மைத்தான் குறை சொல்லிக்கொள்ள வேண்டும். நாம்தானே தவறு செய்தோம்.

நாமே சரி செய்து விடுவோம். காகிதத்தில் எழுதப்பட்டுள்ள படி பார்த்தால், ஒவ்வொரு நாள் வேலையும் நன்றாகத் தானிருக்கிறது. ஆனால் மொத்தத்தில் பார்த்தால் நன்றாக இல்லை. இந்தச் சிக்கலில் இருந்து தப்பிக்க கூடுதலாக இன்னும் எத்தனை ஏர்கள் வேண்டும் என்று கணக்குப் பார்ப்போம். இதையெல்லாம் எண்ணிக் கணக்கிட்டு, காகிதத்தில் எழுதியும் வைத்துக்கொள்வோம். அப்படி இருந்தால்தான் புல் அறுவடைக் காலத்தில் தவறு செய்ய மாட்டோம். சரியான முறையில் நம் சக்தியைப் பயன்படுத்துவோம். இதே மாதிரி நாம் எவ்வளவு காலத்துக்குத் தவறு செய்துகொண்டிருக்க முடியும்?''

சுமார் இரண்டு மணி நேரம் நெருப்பைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு விவாதித்துக்கொண்டும், பொருமிக் கொண்டும், ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டும் இருந்தனர். அங்கு அதிக உற்சாகத்துடன் பேசிய ஆள் அதமன்சுகோவ் தான். அவன்தான் காரசாரமாகப் பேசினான். சில நல்ல யோசனைகளையும் முன்வைத்தான். ஆனால் அவனுடைய கண்களை தவீதவ் தற்செயலாகப் பார்த்து விட்டான். பெஸ்ஹுலேப்னவ் நுனிநாக்கால் துப்த்ஸோவிடம் சைகை காட்டுகையில், அதமன்சுகோவின் கண்களில் பொறாமை, வெறுப்பு கொழுந்து விட்டெரிவதைப் பார்த்துவிட்டான். அதமன்சுகோவ் பார்வையை வேறு பக்கம் திருப்பிவிட்டான். தொண்டை முடிச்சைத் தொட்டுக் கொண்டு, ஒரு நிமிடம் கழித்து மீண்டும் தவீதவின் கண்களைச் சந்தித்தான். அவன் கண்கள் நட்புணர்வுடன் ஒளி வீசின. முகமும் நல்லுணர்வுடன் தோன்றியது. ''அருமையான நடிகன்!'' என்று தவீதவ் நினைத்தான். ''எதற்காக இப்படிப் போக்கிரித்தனமாக என்னைப் பார்க்கிறான்? போன மாரிக்காலத்தில் அவனைக் கூட்டுப்பண்ணையை விட்டு விரட்ட முயன்றதற்கு அவன் இன்னமும் காழ்ப்புணர்வோடு இருக்கக் கூடும்.''

அதமன்சுகோவை, கூட்டுப்பண்ணையை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று முன்மொழிந்த அன்று இரவே, பொலவ்த்ஸெவ் அவனை வரவழைத்து, தாடையை நெறித்து பற்களை நரநரவென்று கடித்துக்கொண்டு, ''நீ என்ன செய்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய், நாயே? ஏ குழப்பக்காரா? நான் உன்னைக் கூட்டுப்பண்ணை

யிலேயே முன்மாதிரியானவனாக நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லவில்லையா? ஒரு காரியமும் இல்லாமல் வீணாக உன்னையும் கெடுத்துக்கொண்டு எங்களையும் கெடுத்து, ரகசியப் போலீஸ் விசாரணைக்கு ஆளாக்கப் பார்க்கிறாயா? கூட்டுப்பண்ணையின் அடுத்த பொதுக்குழுக் கூட்டத்தில் மண்டியிட்டுக் கெஞ்சி, குழு எடுத்த முடிவை பொதுக்குழு அங்கீகரித்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏ நாயே! புரிகிறதா? நாம் தொடங்கும் வரையில் நம்முடைய ஆட்களைப் பற்றி சந்தேக நிழல்கூட படக் கூடாது, தெரிகிறதா?'' என்று அவன் சொல்லியனுப்பியது தவீதவுக்குத் தெரியாது, தெரிந்து இருக்கவும் முடியாது.

அதமன்சுகோவ் முழந்தாளிட வேண்டிய அவசியம் நேரவில்லை. பொலவ்த்ஸெவின் தூண்டுதலின் பேரில் ஒஸ்த்ரவ்னோவும் மற்ற கூட்டாளிகளும் சேர்ந்து ஒரேமுகமாகப் பேசியதால் குழுவின் தீர்மானம் அங்கீகரிக்கப்படவில்லை. அதமன்சுகோவ் பொதுக் கண்டனத்துடன் தப்பினான். அதிலிருந்து அவன் அமைதியாக இருந்தான். வேலை செய்யாதவர்களுக்கும் கூட அவன் முன்மாதிரியாக மாறிவிட்டான். பொதுவேலைகளிலும் தனி ஆர்வம் காட்டினான். ஆனால் கூட்டுப்பண்ணை மீதும், தவீதவ் மீதும் இருந்த வெறுப்பை அவனால் மூடிமறைக்க முடியவில்லை. இது அடிக்கடி பீறிட்டு வெளிவந்தது. ஒரு முறை கவலையின் போது ஒரு சொல் மூலம் வரும், ஒரு முறை கபடச் சிரிப்பில் வெளிப்படும். ஆனால் சில சமயம் குபீரென்று வெளிக் கிளம்பி, கண்களிலேயே அடங்கிவிடும்.

இந்தக் குழுவிற்குத் தேவைப்படும் உதவியின் அளவு, உழுது முடிக்க வேண்டிய காலம், இவையெல்லாம் நள்ளிரவு வரை இறுதியாகப் பேசி முடிக்கப்படவில்லை. அவர்கள் நெருப்பைச் சுற்றி உட்கார்ந்திருந்தபோதே தவீதவ் ரஸ்மியோத்னவுக்கு ஒரு குறிப்பு எழுதினான். துப்த்ஸோவ் உடனே கிராமத்திற்குப் போக ஒப்பு கொண்டான். லூபிஷ்கினுடைய உதவியுடன் நல்ல உழவர்களைப் பொறுக்கி மாடுகளுடன் மறுநாள் மதியச் சாப்பாட்டுக்குள் திரும்பி விடலாம் என நினைத்தான். அணைந்துகொண்டிருந்த நெருப்பைச் சுற்றிலும் மேலும் சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு படுப்பதற்காகப் போனார்கள்.

அதே சமயம் பந்தலுக்குப் பக்கத்திலேயே வேறு ஒரு

விதமான உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு பழைய தகர வாளியில் தவீதவின் சட்டையைச் சலவை செய்து கொண்டிருந்தாள் வார்யா. அவளுக்குப் பக்கத்தில் சமையல்காரி தனது முரட்டு ஆண்குரலில் பேசிக் கொண்டிருந்தாள்:

''ஏ முட்டாள் சிறுமியே! எதற்காக அழுகிறாய்?''

''இது ஒரே உப்பு நாற்றமாக...''

''அதனாலென்ன? வேலை செய்கிற ஒவ்வொரு ஆள் சட்டையும் இப்படித்தான் வியர்த்து உப்பேறிப் போயிருக்கும். இது நறுமணம் கமழும் என்று நினைத்தாயா? எதற்காக ஊளை இடுகிறாய்? உனக்கு அவன் ஏதாவது தீமை செய்துவிட்டானா?''

''இல்லை. இல்லவே இல்லையம்மா!''

''பிறகு எதற்காக முட்டாளே முக்கி முணகிக்கொண்டிருக்கிறாய்?''

''நான் யாரோ ஒருவருடைய சட்டையைத் துவைக்கவில்லை, எனக்கே உரிய, என் அன்பரின் சட்டையைத் தான் சலவை செய்கிறேன்...'' என்று தொட்டி வாளிக்குள் தலையை வளைத்துப் பெருமூச்சை விட முயன்றாள் அந்தப் பெண்.

வெகுநேர அமைதிக்குப் பின்னர் தனது இடுப்பில் கைகளை வைத்து நின்றுகொண்டு வியப்போடு பேசினாள் சமையல்காரி:

''எனக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது, வார்யா! இப்பொழுது உடனே தலையை நிமிர்ந்து பார்!''

எருதுகளை ஓட்டும் அப்பாவிப் பெண்! பதினேழு வயது தான்! தலையை நிமிர்த்தினாள். நீர் தேங்கி நின்ற, ஆனால் மகிழ்ச்சி ததும்பிய கண்களில், தீண்டப்படாத இளமையின் பொலிவு பொங்கி அவளை நோக்கிற்று.

''அவன் சட்டையில் உள்ள உப்பு கூட எனக்குப் பிரியமானதுதான்...''

தாரியா குப்ரியானவ்னாவின் பருத்த நெஞ்சு சிரிப்பால் குலுங்கிற்று.

''இப்பொழுதுதான் நீ உண்மையான பெண்ணாகிவிட்டதைப் பார்க்கிறேன்.''

''இதற்கு முன்னால் என்னவாம்? அப்பொழுது பெண்ணில்லையா?''

''இதற்கு முன்பா! இதற்கு முன்பு நீ ஒரு காற்றுக் குமிழி, இப்பொழுது உண்மையான பெண். தான் காதலிக்கும் பெண்ணுக்காக ஓர் இளைஞன், மற்றொரு இளைஞனை அடித்து வீழ்த்தாத வரைக்கும் அவன் அரை இளைஞன் தான். கண்களைக் கசக்கி, உருட்டிக்கொண்டு இருந்தால் மட்டும் அவள் பெண்ணல்ல. அவளொரு காற்றடைத்த பை அவ்வளவு தான். அவள் கண்கள் எப்பொழுது காதல் ஏக்கத்தால் அழுது நனைந்து நிற்கிறதோ, எப்பொழுது அவள் தலையணை காயாமல், காதல் கண்ணீரால் ஈரமாகவே இருக்கிறதோ, அப்பொழுதுதான் அவள் முழுப்பெண் ஆகிறாள். புரிந்ததா முட்டாளே?''

பந்தலில் தவீதவ் கைகளைத் தலைக்கு அடியில் வைத்துப் படுத்திருந்தான். தூக்கம் வரவில்லை. ''கூட்டுப் பண்ணையில் இருக்கும் ஆட்களை இன்னும் எனக்குத் தெரியவில்லை. அவர்கள் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதும் புரியவில்லையே'' என்று கவலையுடன் நினைத்துக் கொண்டிருந்தான்.''முதலில் குலாக்குகளை உடைமை அற்றவர்களாக்குவது, பின்னர் கூட்டுப்பண்ணையைக் கட்டுவது, அதற்குப் பிறகு கூட்டுப்பண்ணை வேலை அனைத்தையும் கவனிப்பது; இப்படியாகவே பொழுது போய்விட்டதால், ஆட்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. மக்களைத் தெரிந்துகொள்ளவும், அவர்களைப் புரிந்துகொள்ளவும், நேரங்காண முடியாமல் போனால், நான் தான் என்ன தலைவனோ? எல்லாரையும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படியும் அநேகம் பேர் இல்லை. ஆயினும் பார்வைக்குத் தோன்றுவது போல அது அவ்வளவு எளியது அல்ல... இந்த அர்ழானவ் எப்படிப்பட்ட ஆளாகத் தெரிகிறான். இவனை எல்லாரும் ஒரு முட்டாள் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவன் அப்படி அல்ல, கொஞ்சங்கூட அப்படி இல்லை! இந்தத் தாடிவைத்த சனியனை உடனடியாக ஆழங்காண முடியாது. இவன் சிறு குழந்தையாக இருந்த பொழுதே, ஒரு கூட்டுக்குள் போய் தானாகவே மூடிக் கொண்டு அதற்குள்ளே இருந்துவிட்டான். இப்பொழுது முயன்று அவனது உள்ளத்தைக் காண முயலலாம் என்ற ஒரு சிறு நம்பிக்கை கிடையாது! யாக்கவ் லுக்கீச்சும் இதோ போலத்தான். இவனை முழுக்க ஒழுங்கு பண்ணியாக வேண்டும். ஒரு காலத்தில் இவன் ஒரு குலாக்கு என்பது

தெளிவு. ஆனால் இப்பொழுது ஒழுங்காக வேலை செய்கிறான். அவனிடம் கடந்த காலத்தைப் பற்றிக் கலக்கம் இருக்கிறது... விநியோக நிர்வாகியாக அவனை இனி இருக்க விடாது, சாதாரண கூட்டுப்பண்ணை விவசாயியாகத் தான் விட வேண்டும். அதமன்சுகோவும் ஒரு விபரீத விநோத மீன். ஏதோ தூக்குப் போடப்பட வேண்டிய மனிதனை தூக்குப்போடுகிறவன் மாதிரி பார்க்கிறான். ஏன்? எனக்கே வியப்பாக இருக்கிறது. ஒரு வகையில் அவன் ஒரு சரியான நடுத்தர விவசாயி. அவன் வெள்ளையர்களுடன் இருந்தான். ஆனால் அவர்களில் யார்தான் இருக்கவில்லை? அது பதிலாகாது. இனிமேல் எல்லாவற்றையும் ஒழுங்காகக் கவனிக்க வேண்டும். இருட்டிலே வேலை செய்தது போதும். யாரை நம்பலாம், யாரை நம்பிக்கையுடன் சார்ந்து நிற்கலாம் என்பதெல்லாம் தெரிய வேண்டும். ஓ மாலுமி, பாவம்! நான் எங்கோ வழுக்குகிறேன்! தொழிற்சாலையில் உள்ள தோழர்கள் இங்கே எப்படி நான் நிர்வாகம் நடத்திக் கொண்டிருக்கிறேன் என்பது அறிந்தால் உயிருடன் என் தோலை உரித்துவிடுவார்கள்!''

பெண் ஓட்டுநர்கள் பந்தலுக்கு அருகிலேயே திறந்த வெளியில் படுத்துத் தூங்கினார்கள். தவீதவ் அயர்ந்து தூங்கிய போது, வார்யா உச்சக்குரலில் கத்தியதும், குப்ரியானவ்னாவின் அடித்தொண்டைக் குரலும் கேட்டன.

''கன்றுக்குட்டி மாட்டை நெறுக்குவது மாதிரி என்னை எதற்காக நெறுக்குகிறாய்?'' என்று சிரித்துக்கொண்டே மூச்சு விட முடியாத நிலைமையில் கேட்டாள் சமையல்காரி. ''உரசியது போதும். வார்யா, கேட்கிறதா? என்ன இது அடுப்பு சுடுவது மாதிரி! அனலாக உன் மூச்சு சுடுகிறதே, நான் சொல்வதைக் கேட்டாயா? உன்னை என்னுடன் படுக்கவிட்டிருக்கவே கூடாது... அடேயப்பா எவ்வளவு சூடு. உனக்கு உடம்புக்கு ஏதாவது?''

மணிப்புறா கூவுவது மாதிரி வார்யா சிரித்தாள்.

தூக்கத்தில் சிரித்தவாறே அவர்கள் இருவரும் ஒன்றாகப் படுத்திருப்பதை தவீதவ் கற்பனை செய்துகொண்டான். ''எவ்வளவு நல்ல பிள்ளை'' என்று அவன் தூங்கப் போவதற்கு முன்னர் நினைத்தான். ''மணப்பெண்ணாக ஆகுமளவுக்கு வளர்ந்துவிட்டாள், எனினும் இன்னும் சின்னஞ்

சிறிய குழந்தையின் உள்ளம் அவளுக்கு. நல்ல யோகம் பிறக்கட்டும் வார்யா!'' என்று முணுமுணுத்தான்.

அவன் விடிந்த பின்னர் எழுந்தான். பந்தலில் யாரும் இல்லை. வெளியில் இருந்தும் ஆண்களின் குரல்கள் கேட்கவில்லை. உழுபவர்கள் எல்லாரும் அவரவர் உழவு சாலில் இருந்தனர். தவீதவ் மட்டும்தான் வசதியாக அறையில் நெளித்து கொண்டிருந்தான். பின்னர் வேகமாக எழுந்து உட்கார்ந்தான். கால் உறைகளையும் காலணிகளையும் வேகமாக மாட்டினான். அப்பொழுதுதான் அவனது தலை மாட்டில், அவனது சட்டை சுத்தமாகச் சலவை செய்து தைத்து, உலர்த்தி இருப்பதையும், பட்டுச் சட்டையும் சுத்தமாக இருப்பதையும் பார்த்தான். ''இந்தச் சட்டை இங்கே எப்படி வந்தது? இங்கே எவ்விதச் சட்டையும் இல்லாமல் வந்தேன். அதுதான் உண்மை. இந்தச் சட்டை இங்கே எப்படி வந்தது? இது வேடிக்கைதான்!'' என்று தவீதவ் வியப்பாக முணுமுணுத்தான். இது கற்பனையல்ல என உறுதி செய்துகொள்ள, குளிர்ச்சியான அந்தப் பட்டுச் சட்டையைத் தடவிப் பார்த்துக்கொண்டான்.

சட்டையைப் போட்டுக்கொண்டு பந்தலை விட்டுக் கிளம்பும்போது தான் என்ன நடந்தது என்பது புலப்பட்டது. நீலநிற சட்டையும் நன்றாகத் தேய்க்கப்பட்ட கருப்பு நிற குட்டைப் பாவாடையும் போட்டுக்கொண்டு, தண்ணீர் தொட்டி அருகில் கால்களைக் கழுவிக்கொண்டிருந்தாள் வார்யா. இளஞ்சிவப்பு நிறத்தில், அதிகாலைபோல பொலிவுடன் காணப்பட்டாள். அவளது ரோஜா இதழ்களைத் திறந்து இவனைப் பார்த்துச் சிரித்தாள் முதல் நாளைப் போலவே. இன்றும், அவளது அழகிய அகன்ற கண்கள், உள்ளூரப் பொங்கிய மகிழ்ச்சியைக் கொட்டிக்கொண்டிருந்தன.

''தலைவரே, நேற்று ரொம்பக் களைத்து விட்டாயா? அதிகம் தூங்கி விட்டாயா?'' என்று சிரித்துக்கொண்டே உரக்கக் கேட்டாள்.

''நேற்று இரவு எங்கு போனாய்?''

''கிராமத்துக்கு.''

''எப்பொழுது திரும்பினாய்?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தான்.''

''நீ தான் சட்டையைக் கொண்டு வந்தாயா?''

அவள் ஆமாம் என அவசரமில்லாமல் தலையை ஆட்டினாள். கண்களில் எதையோ எச்சரிக்கும் உணர்ச்சி பளிச்சிட்டது.

''ஒருவேளை நான் சரியாகச் செய்யவில்லையா? ஒருவேளை நான் உன் அறைக்குள் நுழைந்திருக்கக் கூடாதா? ஆனால் கோடு போட்ட உன் சட்டை தாக்குப் பிடிக்காது என்று நினைத்தேன்...''

''வார்யா, நீ ஒரு செங்கல்! நீ செய்த எல்லாவற்றுக்கும் நன்றி. ஆனால் எதற்காக இப்படி உடையணிந்து இருக்கிறாய்? என்னை வீழ்த்தவா? அய்யோ! விரலில்கூட மோதிரம் போட்டு இருக்கிறாயே!''

நாலாவது விரலில், வெள்ளி மோதிரத்தை எப்படியோ திருகித் திணித்துக்கொண்டே, ''நான் போட்டிருந்த எல்லாமே ஒரே அழுக்கு. ஆகையால் அம்மாவைப் போய்ப் பார்த்து உடை மாற்றிக்கொண்டு வந்தேன்...'' அவளுடைய குழப்பத்தைச் சரிக்கட்டிக் கொண்டு அவனைக் குறும்புத்தனமாகப் பார்த்தாள். ''என்னுடைய நல்ல செருப்புக்களைக்கூட மாற்ற நினைத்தேன். ஒரு நாளில் ஒரு தடவையாவது பார்க்க மனமிரங்கலாமல்லவா? ஆனால் அவற்றைப் போட்டுக்கொண்டு மாடுகளை வெகு நேரம் ஓட்ட முடியாது.''

தவீதவ் சிரித்தான். ''அட, சப்பட்டைக் கால்காரி! இனி கண்களை எடுக்காமல் உன்னையே பார்த்துக்கொண்டிருப்பேன். போய் எருதுகளைப் பூட்டு. நான் குளித்து விட்டு ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்.''

அன்றைக்கு தவீதவுக்கு வேலை செய்யவே நேரம் இல்லை. அவன் குளித்து முடிப்பதற்குள் கொந்திராத் மய்தானிக்கவ் வந்துவிட்டான்.

''நீ தான் இரண்டு நாட்களுக்கு ஊருக்குப் போனாயே. அதற்குள்ளாக இவ்வளவு விரைவில் ஏன் திரும்பிவிட்டாய்?'' என்று தவீதவ் புன்னகையுடன் கேட்டான்.

பொருள் பொதிந்த முறையில் கையை விரித்துச் சைகை காட்டினான் கொந்திராத். ''அங்கு இருக்கவே சங்கடமாக இருந்தது. என் மனைவி நடக்கத் தொடங்கிவிட்டாள். அவளுக்கு லேசான காய்ச்சல்தான். பிறகு எதற்காக அங்கு நான் இருக்க வேண்டும்? எனவே திரும்பி வந்துவிட்டேன். வார்யா எங்கே?''

''எருதுகளைப் பூட்டப்போயிக்கிறாள்.''

''அப்படியானால் சரி, நீ இங்கேயே இரு. நான் போய் உழுகிறேன். விருந்தினர் வருகின்றனர். லூபிஷ்கின் எட்டு ஏர்களைக் கொண்டு வருகிறான். இங்கு வரும்பொழுது பாதி வழியில்'அவர்களைக் கடந்து வந்தேன். அகஃபோன் தான் எல்லாருக்கும் முன்னால் ஒரு வெண்ணிறக் குதிரைக் குட்டியில், தளபதி குதூஸவ் மாதிரி வருகிறான். மேலும் சில செய்திகளும் இருக்கின்றன. நேற்று மாலை இருள் படர்ந்தவுடன் யாரோ நகூல்னவ் மீது சுட்டிருக்கிறார்கள்.''

''என்ன? சுட்டார்களா?!''

''இப்படித்தான். ஒரு ரைபிளால் யாரோ ஒரு தரங் கெட்ட தத்தாரிப்பயல் வேலை. விளக்கைப் போட்டுவிட்டு சன்னல் ஓரமாக நகூல்னவ் உட்கார்ந்திருந்தபோது யாரோ குறிபார்த்திருக்கிறான். குண்டு தோலில் உராய்ந்து சென்றது, நகூல்னவின் தொண்டை முடிச்சைத் தடவி விட்டுச் சென்றுவிட்டது. கொஞ்சம் திகைப்பாகவும், கலக்கமாகவும் இருக்கிறான். ஆனால் அது அதிர்ச்சி அல்லது கோபத்தின் காரணமாகவும் இருக்கலாம். மற்றபடி நன்றாகத்தான் உயிரோடு இருக்கிறான். மாவட்ட மிலீஷியாக்காரர்கள் அங்கு வந்து துப்பு துலக்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அது நேரத்துக்குப் பிடித்த கேடு என்று நினைக்கிறேன்...''

''சரி. நாளைக்கு உங்களிடமிருந்து விடைபெற வேண்டும். நான் கிராமத்துக்குத் திரும்புகிறேன்'' என்று தவீதவ் தீர்மானித்துவிட்டான். ''எதிரி தலையைக் காட்டத் தொடங்கி விட்டான், இல்லையா கொந்திராத்?''

''அப்படிக் காட்டினால் மிகவும் நல்லது. காட்டும் தலையை நொறுக்குவது சுலபம்'' என்று மய்தானிக்கவ் அமைதியாகச் சொல்லிவிட்டு காலணிகளை மாற்றிக்கொண்டிருந்தான்.

அத்தியாயம் எட்டு

நள்ளிரவுக்குப் பின்னர் கனத்த மேகக்கூட்டங்கள், நட்சத்திரங்கள் நிறைந்தவானில் தோளோடுதோள் சேர்ந்து வந்தன. அருமையான இளவேனிற்காலத் தூறல் விழ ஆரம்பித்தது. விரைவில் அது கருக்கத் தொடங்கிற்று. புல்வெளியின் அமைதியில், ஆழமான ஈரப்பதமான நிலவறையில் விழுவது போல, அது இருந்தது.

விடிவதற்கு ஒரு மணி முன்னதாக காற்று அடிக்கத் தொடங்கிற்று. மேகங்கள் அங்குமிங்குமாக வேகமாக கலக்கி யடிக்கப்பட்டன. சாதாரணமாக விழுந்துகொண்டிருந்த மழை, மேகங்களின் கீழ்பாகத்திலிருந்து பூமிவரை கிழக்குப் பக்கமாக சாய்ந்து விழுந்தது. பின்னர், தொடங்கியதைப் போலவே திடீரென்று நின்றும் விட்டது.

கதிரவன் எழும்முன், குதிரையில் ஒருவன், குழுவின் பந்தலை நோக்கி வந்தான். அவன் அவசரமில்லாமல் மெது வாக இறங்கி, பக்கத்திலிருந்து முள் செடி ஒன்றில் குதி ரையைக் கட்டிவிட்டு, மீண்டும் அவசரம் ஏதுமில்லாமலே, நடக்கும் பொழுதே கைகால்களை விரித்து சொடக்கு விட்டுக்கொண்டு, தரையில் தோண்டப்பட்டிருந்த அடுப்பில் நெருப்பைப் பற்றவைக்கப் பெரும்பாடு பட்டுக்கொண்டு இருந்த சமையல்காரியிடம் வந்து, அமைதியான முறையில் வணக்கம் கூறினான். குப்ரியானவ்னா பதிலே சொல்லவில்லை. அவள் கைகளை ஊன்றி கால்களை மடக்கிப் படுத்தவண்ணம் விறகுக் கட்டைகளில் தீப்பற்ற வைக்க, அவளது பருத்த நெஞ்சு தரையைத் தொடுகின்றாற்போல, தலையை ஒரு பக்கம் சாய்த்து, சக்தியை எல்லாம் பயன்படுத்தி ஊதிப் பற்றவைக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள். மழையிலும் ஈரமாகி, காலைப் பனியிலும் நனைந்துபோயிருந்த விறகு எரியமறுத்து, புகைந்து கொண்டேதான் இருந்தது. புகையும், மங்களான ஒளி கற்றையும் அவளது பழுப்பு நிற முகத்தில் படர்ந்தன.

''ஐயோ! இது சமையலா? சனியனைத் தொலைக் கணும்!'' என்று கோபமடைந்த சமையல்காரி, இருமலிலும் புகையிலும், மூச்சுவிட முடியாமல் முணுமுணுத்தாள். தனது கூந்தலை, தலையில் கட்டியிருந்த கைத்துண்டுக் குள் தள்ளி விட்டு சரி பண்ண அவள் நிமிர்ந்த போது தான் வந்திருந்த புதிய ஆளைப் பார்த்தாள்.

''இரவில் விறகை பந்தலில் போட்டு வைத்திருக்க வேண்டும் அம்மா! ஈரமான விறகைப் பற்றவைக்க உன் மூக்கிலே காற்று ஏது? சரி, இப்பொழுது நான் உதவு கிறேன்'' என்று கூறிய வண்ணம் அவளை சற்றே அப்பால் மெதுவாகத் தள்ளிவிட்டான்.

''இப்படிப்பட்டவர்களைப் போல 'எல்லாம் தெரிந்த வர்கள்' பலர் இந்த ஸ்டெப்பியில் சுற்றிக்கொண்டு திரிகி

றார்கள். நீ வேண்டுமானால் நெருப்பைப் பற்றவைத்துப் பார். எவ்வளவு மூச்சு உன்னிடம் இருக்கிறது என்று பார்த்து விடலாம்'' என்று சமையல்காரி சளிப்புடன் சொல்லிவிட்டு, விருப்புடன் விலகி நின்றாள். வந்திருந்த அந்நியனை கவனத்துடன் உற்று நோக்கினாள்.

வந்திருந்தவன் உயரமான ஆள் அல்ல, பார்ப்பது மாதிரியாக ஒன்றும் இல்லை. அவனுடைய அலங்கோலமான சட்டை, மார்பிலே பட்டாளத்து வீரனின் வாரல் இறுக்கப் பட்டு, ஒரு மாதிரியாகப் பொருந்தியிருந்தது. காக்கிக் காற் சட்டையின் கிழிசல்கள் நூலோடிப் பின்னப்பட்டிருந்தது. கிழிசல் அருமையாகத் தைக்கப்பட்டிருந்தது. முழங்கால் வரை சாம்பல்நிறச் சேறுபடிந்திருந்தது. போட்டிருந்த பழைய காலணிகள் நீண்ட கால சேவை புரிந்தவையாகத் தோன்றின. எதிர்பாராத முறையில் இந்தப் பாழ்பட்ட உடைத் தோற்றத்துக்கு நேர் எதிர்மாறாக மினுமினுக்கும் வெள்ளிச் சாம்பல் நிற ஆஸ்த்ரகன் குல்லாயைத் தலையில் எடுப்பாக அணிந்து, கண்வரை இழுத்துத் தொங்கவிட்டு இருந்தான். ஆனால் வந்திருந்த அந்நியனின் பழுப்புநிற முகம் நல்லியல்பைக் காட்டிற்று. அவனுடைய சப்பட்டை மூக்கில், சிரிக்கும்பொழுது வேடிக்கையாக ஒரு கோடு விழும். அவனுடைய பழுப்புநிறக் கண்களோ, உலகினை அன்பு அரவணைப்புடனும், புத்திசாலித்தனமான புன்முறுவலுடனும் பார்க்கும்.

கால்களை மடக்கி குதிமேல் உட்கார்ந்து, பையிலிருந்து சிகரெட் பற்றவைத்ததும், ஒரு சப்பட்டையான புட்டி ஒன்றையும் எடுத்தான். ஒரு நிமிடத்திற்குள் குச்சிகள் மீது பெட்ரோலை ஊற்றிப் பற்றவைத்ததும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

''இப்படித்தான் செய்ய வேண்டும், அம்மா!'' என்றான் வந்தவன். அவளது பெரிய தோள்களில் விளையாட்டாக ஒரு தட்டுத்தட்டினான். ''இந்தப் புட்டியைப் பொருத்த மட்டில் இதை நீ பத்திரமாகத் தேவைக்காக வைத்துக் கொள்ளலாம், சிறிது பதப்பட்டுப் பற்றவைக்க முடியாமல் போனால், இதனை ஊற்றிப் பற்றவைத்துவிடு, எல்லாம் சரியாகிவிடும். இதோ இந்தப் பரிசை எடுத்துக்கொள். நீ சமைத்து முடித்தவுடன் எனக்குக் கொஞ்சம் கஞ்சிகொடு,

ஒரு கோப்பை நிறைய, சிறிது நல்ல முறையில் கொடுப் பாயா!''

குப்ரியானவ்னா, நெஞ்சுக்குள் அந்தப் புட்டியைத் திணித்துக்கொண்டாள். தேனொழுக அவனுக்கு நன்றி கூறி னாள். ''நீ ரொம்ப நல்ல மனிதர். உனக்கு மிக்க நன்றி! உன்னை மகிழ்விக்க நான் எல்லாம் செய்வேன். இந்தப் புட்டி உன்னிடம் எதற்காக வந்தது? நீ என்ன, கால்நடை வைத்தியனா? இல்லையே? மாட்டு வைத்தியம் பார்ப்பது உண்டோ?''

''நான் மாட்டு வைத்தியர் அல்ல'' என்று தப்பிக்கிறார் போல, வந்தவன் பதில் சொன்னான். ''உழுபவர்கள் எங்கே? அவர்கள் இன்னும் தூங்குகிறார்களா?''

''கொஞ்சப் பேர் குளத்திற்கு எருதுகளைத் தேடிப் போயிருக்கிறார்கள். சிலர் ஏற்கெனவே தூரத்து வயல் களுக்குப் போய்விட்டனர்.''

''தவீதவ் இங்கிருக்கிறாரா?''

''அவர் பந்தலில் இருக்கிறார். பாவம்! இன்றைக்குத் தூங்குகிறார். நல்ல வேலைக்காரர் அல்லவா? நேற்றைய வேலைக் களைப்பில் தூங்குகிறார். படுக்கைக்குத் தாமத மாகத்தான் போனார்.''

''எதற்காக அவ்வளவு நேரம் விழித்திருந்தார்?''

''என்னவோ எனக்கெப்படித் தெரியும்? உழுதுவிட்டு மிகவும் சுணங்கித்தான் வந்தார். வந்தவுடன் இளவேனிற் காலக் கோதுமை விதைப்பு எப்படி இருக்கிறது என்று பார்க்கப் போனார். மலை இடுக்கு வரை போய் வந்தார்.''

''இருட்டிலா போய் பயிரைப் பார்க்கப் போவது? யார்?'' புன்னகை செய்துக் கொண்டே கேட்டவன், மூக்கை நெளித்துப் புன் முறுவலித்தவாறு, சமையல்காரியின் வட்ட முகத்தைப் பார்த்தான்.

''அவர் வெளிச்சம் இருக்கும்போதுதான் அங்கு போ னார். ஆனால் காலதாமதமாகத் திரும்பினார். ஏன் அப்படி வந்தார் என்பது எனக்கு எப்படித் தெரியும்? குயில்கள் கூவுவதை ஒருவேளை கேட்டுவிட்டு வந்திருக்கலாம். கருமுள் குன்றில் அந்தப் பறவைகள் வாழ்கிற முறையை உங்க ளால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது! அவை பாடும் இசைக்கு, நீங்கள் இமை மூடித் தூங்கவே முடி யாது உங்களுடைய இதயத்தையே எடுத்து வெளியில்

போட்டுவிடும்! ஆமாம், அவை அப்படித்தான் செய்கின் றன, மிகப் பொல்லாதவை! சில சமயங்களில் அவற்றைக் கேட்கவென்றே அழுது கண்களைக் கெடுத்துக்கொண்டுள் ளேன்...''

''எப்படி?''

''எப்படியா? என்னுடைய இளமைக் காலத்தையும், அப் பொழுது நடந்த எல்லாவற்றையும் நினைத்துப் பார்க் கிறேன். நான் இளம் பெண்ணாக இருந்தபோது நடந்ததை நினைத்துப் பார்க்கிறேன்... ஒரு பெண்ணை அழ வைக்க பெரிதாக ஒன்றும் தேவையில்லை, தெரியுமா?''

''கோதுமையைப் பார்க்க தவீதவ் தனியாகவா போ னான்?''

''அவனை யாரும் அழைத்துக்கொண்டு போகவேண்டி யது இல்லை. கடவுள் புண்ணியத்தில் அவர் ஒன்றும் குருடு அல்ல. அது சரி, நீ யார்? எதற்காக இங்கு வந்தாய்?'' குப்ரியானவ்னா தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொண் டாள், உதடுகளைப் பல்லால் கடித்துக்கொண்டாள்.

''தோழர் தவீதவை ஒரு விஷயமாக நான் சந்திக்க வேண்டும்'' என்று மீண்டும் பட்டுக்கொள்ளாமல் சொன் னான் அந்நியன். ''ஆனால் எனக்கு ஒன்றும் அவசரமில்லை. அவன் எழும் வரை நான் காத்திருக்க முடியும். கடும் உழைப் பாளி நன்றாகத் தூங்கட்டும். அடுப்பு எரிந்துகொண்டிருக் கும்போதே நாம் ஓரிரு விஷயங்களைப் பேசலாம் என்று நினைக்கிறேன்.''

''உன்னோடு நான் நின்று பேசிக்கொண்டிருந்தால், அவ் வளவு பெரிய கூட்டத்திற்கு நான் எப்படி உருளைக் கிழங்கு உரிப்பதாம்?'' என்று கேட்டாள் குப்ரியானவ்னா.

ஆனால் அன்பு மிக்க அந்தப் புதியவன் அதற்கும் ஒரு பதிலைக் கண்டு பிடித்தான், பையிலிருந்து பேனாக் கத் தியை எடுத்து, கட்டைவிரல் நகத்தால் அதன் கூர்மை யைச் சோதித்துக்கொண்டான்.

''கிழங்குகளை இங்கே கொண்டு வா. உரிக்க நான் உதவுகிறேன். இவ்வளவு கவர்ச்சிகரமான சமையல்காரிக்கு நான் வாழ்க்கை முழுதுமே உதவத் தயாராக இருக்கிறேன்... ஆனால் இப்பொழுது பகலில் சிரிப்பதைப்போலவே இர விலும் அவள் சிரிக்க வேண்டும்'' என்றான்.

குப்ரியானவ்னாவுக்கு மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

ஆனால் போலியான வெறுப்புடனே தலையை ஆட்டினாள்: ''நீ ரொம்பவும் தோலாக இருக்கிறாய். பார்க்கையில் உன் மார்புக்கூட ஒரே தோலாகத்தானே இருக்கிறது. நான் ஏதாவது ஒரு இரவில் சிரிக்கத்தான் செய்வேன். ஆனால் அதைத் தெரிந்துகொள்ளக் கூடிய அளவிற்கு நீ நெருங்கி வர முடியாது...''

ஓக் மர வெட்டுக் கட்டையில் வசதியாக உட்கார்ந்து கொண்டு சிரித்துக்கொண்டிருந்த சமையல்காரியைக் கண் களைச் உருட்டிப் பார்த்தான்.

''ஆந்தை மாதிரி இருட்டிலும் என்னால் பார்க்க முடியும்.''

''உன் கண்கள் கூர்மையானவையாக இருக்கலாம். ஆனால் அவற்றாலும் பார்க்க முடியாது. ஏனெனில் உன் கண்களில் நீர் தேங்கி இருக்கும்...''

''ஓகோ அப்படிப்பட்ட பெண்தானா நீ'' என்று சொல்லிக் குலுங்கினான் புதியவன். ''அம்மா குண்டு, கண்ணீரில் குளிப் பவர்களில் நீ தான் முதல் பெண் என்று நினைக்காதே. நான் பகலில் தான் கருணையோடு இருப்பேன். இரவு நேரங்களில் உன்னைப் போன்ற பருமனான பெண்களிடம் நான் கருணையே காட்டுவதில்லை. நீ எவ்வளவு வேண்டு மானாலும் கெஞ்சலாம், அழலாம்!''

குப்ரியானவ்னா முறைத்தாள், சிணுங்கினாள். ஆனால் விடாக்கண்டனாகப் பேசும் இந்தப் பேச்சாளனை நிதான மாக, ஏற்றுக் கொள்ளும் உணர்வுடன் கவனித்தாள்.

''அன்பரே கவனமாக இரு. வீழ்ச்சிக்கு முன்னோடி தற்பெருமை.''

''அதைக் காலையில் பார்த்துவிடுவோம். யார் வீழ் கிறார்கள்; யார் படுக்கையில் இன்பமாகத் தூங்கிக்கொண் டிருக்க வேண்டியிருக்கிறது என்பதைப் பார்த்துவிடுவோம். வாய் அரட்டை, கொஞ்சம் உருளைக்கிழங்கை என்னிடம் கொடு. நாம் போதுமான நேரத்தை வீணாக்கிவிட்டோம்!''

பந்தலுக்குப் பின்புறமிருந்து, ஒரு வாளி நிறைய உருளைக் கிழங்குகளைச் சுமந்துகொண்டு, தள்ளாடி வந்த குப்ரியானவ்னா சிரித்துக்கொண்டே, அந்நியனுக்கு எதிராக இருந்த குட்டையான முக்காலியில் உட்கார்ந்தாள். தடித்த பழுப்பு நிற விரல்களுக்கு இடையில் உரிந்து விழுந்து கொண்டிருந்த மெல்லிய உருளைக் கிழங்குத் தோல்களைப்

பார்த்த தாரியா, ''உன் கூர்மையான நாக்கைப் போலவே, வேலையிலும் கூர்மையாக இருக்கிறாயே. எனக்கு நல்ல ஆள் உதவிக்குக் கிடைத்திருக்கிறது!'' என்று மனநிறைவுடன் சொன்னாள்.

வந்திருந்தவன் கத்தியை வைத்துக்கொண்டு சில நிமிடங்கள் ஒன்றும் பேசாமல் வேலை செய்தான். சில நிமிடங்களுக்குள்ளே, ''என்ன தவீதவ் எப்படி? கஸாக்குகளுக்கு அவரைப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டான்.

''நன்றாகச் செய்கிறார். உன்னைப் போலவே மிக நேர்மையான, அருமையான மனிதர். கர்வியாக இல்லாதவர்களை எங்கள் ஆட்களுக்குப் பிடிக்கும்.''

''ஆகவே, நேர்மையானவர் என்கிறாயாக்கும்?''

''மிகவும் நேர்மையானவர்!''

குல்லாயைச் சாய்த்து ஒரு மாதிரியாக அவளைப் பார்த்தவாறு, ''கொஞ்சம் சாதாரணமான அப்பாவி ஆள், அப்படித்தானே?''

''நீ உன்னை அப்பாவி என்று கருதுகிறாயா?'' என்று வெறுப்புடன் குப்ரியானவ்னா கேட்டாள்.

''நான் அப்படிச் சொல்ல மாட்டேன்...''

''பிறகு ஏன் தவீதவை முட்டாளாக்கப் பார்க்கிறாய்? உங்களிருவரிடையே அதிக ஒற்றுமை இருக்கிறது...''

அந்த அந்நியன் மீண்டும் அமைதியானான். தனக்குத் தானே புன்னகை செய்து கொண்டான். இடையிடையே அந்த வாயாடி சமையல்காரியைச் சாடையாகப் பார்த்துக் கொண்டான்.

மேகம் மூடியிருந்த கீழ்த்திசையில் சூரியோதய செவ்வொளி படர்ந்து பரவிற்று. இரவெல்லாம் ஓய்வெடுத்திருந்த காற்று, இறகு கட்டிப் பறந்து. அதன் வேகத்தில் கருமுள் குன்றிலிருந்து நைட்டிங்கேலின் இனிமையான இசையையும் இழுத்துவந்தது. அவ்வந்நியன் கத்தியை கால்சட்டையில் துடைத்துக்கொண்டே, ''போய் தவீதவை எழுப்பு. மிச்சத் தூக்கத்தை குளிர்க்காலத்தில் வைத்துக்கொள்ளலாம்'' என்று கேட்டுக்கொண்டான்.

பந்தலை விட்டு வெறுங்காலுடன் வெளிவந்தான் தவீதவ். அவன் தூக்கம் கலையாமல், அசந்து போயிருந்தான். போகிற போக்கில் வந்திருந்த புதியவனைப் பார்த்துக்

கொண்டே, கரகரத்த தொனியில், ''மாவட்டக் கட்சிக் குழுவிடமிருந்து தகவலா? கொடுக்கலாமே'' என்றான்.

''என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை. ஆனால் நான் மாவட்டக் கட்சிக் குழுவிலிருந்துதான் வருகிறேன். காலணிகளைப் போடு, தோழர் தவீதவ். நாம் பேச வேண்டியுள்ளது.''

பச்சை குத்திய அகன்ற மார்புகளைச் சொரிந்து கொண்டே, வந்திருந்தவரை அக்கறையுடன் நோட்டம் பார்த்தான் தவீதவ்.

''உனது கம்பீர வருகை மாவட்டக் கட்சிக் குழுவின் பிரதிநிதி என்பதாக எனது இதயம் எண்ணுகிறது... நிமிடம் பொறுத்துக்கொள் தோழரே!''

மிக வேகமாக உடைகளைப் போட்டுக் கொண்டான் அவன். வெறுங்காலில் காலணிகளை மாட்டிக்கொண்டான். மூக்கைத் துளைக்கும் வாசனை வந்த ஒக் மரத்தொட்டியிலிருந்து தண்ணீரை முகத்திலே இறைத்துக்கொண்டான். பிறகு ஒரு மாதிரி சுறுசுறுப்புடன் தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டான்.

''ஸ்தாலின் கூட்டுப்பண்ணைத் தலைவர், செமியோன் தவீதவ் நான்தான்.''

அந்த அந்நியன் தவீதவ் அருகே வந்து அவனது அகன்ற பரந்த முதுகில் கைகளால் தழுவினான்.

''ஓ, நீ உன்னை இம்மாதிரி அலுவலக முறையில் அறிமுகம் செய்து கொள்கிறாயாக்கும்? நான்தான் இவான் நெஸ்தெரேன்கோ, மாவட்டக் கட்சிக் குழுவின் செயலாளர். இப்பொழுது நாம் அறிமுகம் செய்து கொண்டோம். நடந்தபடி பேசிக்கொண்டே போகலாம், தோழர் கூட்டுப் பண்ணைத் தலைவரே. இன்னும் உழ வேண்டியது நிறைய இருக்கிறதோ?''

''நிறைய இருக்கிறது...''

''தலைவர் எங்கோ வழுக்கி இருக்கிறார்?''

நெஸ்தெரேன்கோ, தவீதவின் கரத்தைப் பற்றிக் கொண்டு, மெதுவாக உழுத நிலத்தை நோக்கி நடந்தான். அவனைப் பக்கவாட்டில் பார்த்துக்கொண்டே மிகவும் சுருக்கமாக, ''நான் தவறாக மதிப்பிட்டுவிட்டேன்'' என்றான் தவீதவ். திடீரென்று உணர்ச்சி பொங்கியவனாய், அவனே வியப்படையக்கூடிய முறையில், மிகவும் சூடாகவே,

''அன்புள்ள தோழர் செயலாளர், பண்ணைத் தொழிலில் நான் ஒரு குழந்தைதான். என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும். நான் ஒன்றும் சாக்குப்போக்குச் சொல்லவில்லை; ஆனால் இது என்னுடைய தவறு மட்டும் அல்ல... இது ஒரு புதிய சமாசாரம்...''

''நான் பார்க்கிறேன், எனக்கும் புரிகிறது. ஒன்றும் அலட்டிக்கொள்ளாதே.''

''நான் ஒருவன் மட்டும் தவறு செய்தவன் அல்ல. நான் நம்பிய பேர்வழிகளும் குழப்பி விட்டார்கள். எங்களுடைய சக்திகளை நான் சரிவரப் பங்கீடு செய்யவில்லை. புரிகிறதா?''

''எனக்குப் புரிகிறது. அதில் ஒன்றும் பெரிய பயங்கரம் இல்லை. நீங்கள் போகப்போக சரிசெய்து விடுவீர்கள். ஈடு செய்ய உதவியாக கால்நடைகளும் ஆட்களும் வந்துவிட்டார்களா? நல்லது. உங்கள் கூட்டுப்பண்ணையின் சக்திகளைப் பங்கீடு செய்யும் பொழுது குழுக்களுக்கு ஒரே சீராகப் பிரித்துக்கொடு. அவற்றைக் குறித்துவைத்துக் கொள். இது வருங்காலத்தில் வைக்கோல் சேர்ப்பதற்கும், குறிப்பாக தானிய அறுவடைக் காலத்துக்கும் மிக உதவியாக இருக்கும். எல்லா விஷயங்களைப் பற்றியும் முன்கூட்டியே முறையாகச் சிந்தித்தும் வைத்துக்கொள்ள வேண்டும்.''

''அது சரிதான்!''

''இப்பொழுது நாம் போய் நீ உழுத இடத்தைப் பார்ப்போம். எது உன் உழவு சால்? தோன் நிலப்பகுதியில் லெனின் கிராட் வட்டாரத் தொழிலாளி எப்படி வேலை செய்கிறார் என்பதை நான் பார்க்க விரும்புகிறேன்... புத்தீலவ் கட்சிக் குழு செயலாளருக்கு, உழவு கீறிவிட்டது போலக் கூட இல்லை என்று நீ புகார் செய்ய நேரிடுமோ, என்னவோ?''

''அதுபற்றி முடிவு செய்ய வேண்டியது உன் பொறுப்பு.''

தனது சிறிய ஆனால் சக்திமிக்க கரத்தால் நெஸ்தெரேன்கோ, தவீதவ் முழங்கையை இறுக்கமாகப் பற்றினான். தவீதவ் பக்கவாட்டில் சாடையாகப் பார்த்தபொழுது, செயலாளரின் வெள்ளந்தியான நேர்கொண்ட முகத்தைப் பார்த்தவுடன், மனம் ஆறுதலடைந்தது. தன்னையறியாமலே அவனது உறுதியான உதடுகளில் புன்முறுவல் அரும்பிற்று. கட்சி மேல்மட்டத்தில் உள்ள தோழர் ஒருவர் இவ்

வளவு நட்புறவுடனும், எளிய முறையிலும், ஒருவரோடு ஒருவர் உணரும்படி மனித உணர்வைப் புரிந்து கொண் டும், தவீதவுடன் பேசுவது, வெகுநாட்களுக்குப் பிறகு இது தான் முதல் தடவை...

''தோழர் நெஸ்தெரேன்கோ, என் வேலையைச் சோ தனை செய்து பார்க்கப் போகிறாயா? அது அவ்வளவு வினயமானதுதானா?''

''கொஞ்சங்கூட அப்படி இல்லை! தொழிலாளி வர்க கம் கடைசல் கருவியிலோ, நாற்காலியிலோ வேலை செய் யாமல் நிலத்தில் வேலை செய்யும் பொழுது எப்படிச் செய்கிறார்கள் என்று பார்க்க விரும்பினேன். அவ்வளவு தான். உனக்குத் தெரியவேண்டுமா? நீ விரும்புகிறாய் என் றால், நான் ஸ்தாவ்ரொபொலிலேயே பிறந்து வளர்ந்த விவசாயி. கஸாக்குகள் உனக்கு எப்படிச் சொல்லிக் கொடுத் திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள ஆசை. கஸாக் பெண் யாராவது உழவும், வரப்புகளைத் தாண்டிச் செல் லவும் சொல்லிக் கொடுத்திருப்பாளோ? கவனமிருக்கட்டும்! கிரெமியாச்சி கிராம கஸாக் பெண்களின் தீய செல்வாக்கில் சிக்கிவிடாதே! அவர்களிலே ஒரு சிலர் உனக்கு, நீ கிழட்டு மாலுமியாக இருந்தாலும் கூட ஓரிரண்டு 'மாய' வேலை களைச் சொல்லித்தரக்கூடும்... அவர்கள் உன்னை மிக எளிய முறையில் பாதையை விட்டு அப்பால் இழுத்துச் செல்ல முடியும்! அல்லது ஏற்கெனவே யாராவது அவ்வாறு செய்துவிட்டார்களா?''

நெஸ்தெரேன்கோ மிகுந்த உணர்ச்சியுடன், கவலை யற்ற இன்ப உணர்வில் பேசிக்கொண்டே போனார். அவர் வார்த்தைகளை நிதானமாகப் பொறுக்கியெடுத்துப் பேச வில்லை. ஆனால் அவர் பேச்சிய குரலில் ஏதோ ஒன்றைச் சுட்டிக் காட்டுவது விளங்கிற்று. தவீதவுடைய உடலின் ஒவ்வொரு உறுப்பும் விறைத்துப் போயிற்று. ''லூஷ்காவைப் பற்றி இவருக்கு ஏதாவது தெரியுமா? சும்மா இருட்டிலே குருட்டு வேட்டுவிட்டு பார்க்கிறாரா?'' இவ்வாறு சிந்தித்த பொழுது அவன் திடுக்கிடாமல் இல்லை. ஆனால் பேச் சைத் தொடர்ந்து தொனி மாறாமல் கூறினான்: ''பெண் தான் முதலில் நிதானமிழந்து பாதையை விட்டு விலகி, 'ஐயோ! என அலறி விடுகிறார்கள்!' ஆனால் ஓர் ஆண்மகன்,

உண்மையான ஆண்மகனைக் குறிப்பிடுகிறேன், நிதானமாக இருப்பான், கவனமாக காரியத்தில் கண்ணாக இருப்பான். அதுதான் உண்மை!''

''நீ ஓர் உண்மையான ஆண்மகன் தானே? இல்லையா?''

''செயலாளர் தோழரே, நீ இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''உண்மையான ஆண்களைத்தான் எனக்கு காலாடிகளைக் காட்டிலும் அதிகம் பிடிக்கும். தவீதவ், எப்பொழுதாவது நீ பாதையை விட்டு விலகிச் செல்ல நேரிட்டால், அது பற்றி பெரிய இரைச்சல் ஒன்றும் போட வேண்டாம். ஆனால் ரகசியமாக வந்து என் காதில் குசுகுசுத்துவிட்டால் போதும். நான் மீண்டும் நல்ல பாதைக்குத் திரும்ப எப்படியாவது உதவி புரிவேன். என்ன பேரம் சரியா?''

''உன் நல்ல சொல்லுக்கு நன்றி'' என்று உணர்வுடன் சொன்னான் தவீதவ். ஆனால் தனக்குள் ''என்ன சனியன்! எல்லாவற்றையும் மோப்பம் பிடித்துவிட்டது போல இருக்கிறதே...'' என்று நினைத்தான். கடைசியாகக் குறிப்பிட்ட விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது போல, ''நமக்கு மாற்றத்துக்கு ஒரு வியப்புக்குரிய செயலாளர் வந்து கிடைத்திருக்கிறார்!'' என்று கூறினான்.

நெஸ்தெரேன்கோ திடீரென நின்றான். தவீதவ் பக்கம் திரும்பினான். தனது பெரிய ஆட்டுத்தோல் குல்லாயைத் தலையின் பின்னால் தள்ளிவிட்டான். சிரிப்பில் மூக்கு துடித்தது, ''நான் அன்பாக இருக்கிறேன். ஏனென்றால் நான் இளைஞனாக இருந்த பொழுது எப்பொழுதும் நேர் பாதையிலேயே போய் கொண்டிருக்கவில்லை... பட்டாளத்தார் நடை போடுவதைப் போல நாம் சில சமயம் நேராகவே போய்க்கொண்டிருப்போம். பின்னர் நழுவி எங்கோ சுற்றத் தொடங்கி விடுகிறோம். எங்கே நழுவுகிறோம் என்பது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். திக்குத் தெரியாத காட்டில் போல கால்தடுமாறித் தள்ளாடித் திரியும் முட்டாள் இளைஞனுக்கு யாராவது ஓர் அன்பான மனிதர் இது தான் பாதை எனக் காட்டுவார். என்னுடைய அன்பு எங்கிருந்து வருகிறது என்பது இப்பொழுது தெரிகிறதா, மாலுமி? ஆனால் நான் எல்லாரிடமும் உதவாக்கரைகளிடமும் அன்பாக இருப்பதில்லை...''

''குதிரைக்கு நான்கு கால்கள் இருக்கின்றன. இருப்பினும்

அது கூட தடுமாறுகிறது என்று சொல்வார்கள்'' என்று எச்சரிக்கையுடன் சொன்னான் தவீதவ்.

ஆனால் நெஸ்தெரேன்கோ எவ்வித உணர்வும் இல்லாமல் அவனைப் பார்த்தான்.

''குதிரை ஒரு தடவை அல்லது இரு தடவை தடுமாறினால் மன்னித்துவிடலாம். ஆனால் சில வேளைகளில் ஒவ்வொரு எட்டுக்கும் தடுமாறும் குதிரை உனக்குக் கிடைத்தால்... நீ எவ்வளவு பயிற்சி அளித்திருந்தாலும் சரி, நீ என்ன செய்த போதிலும், அது பாதையை விட்டுத் தடுமாறி விழுந்து, மூக்கால் தரையைத் தட்டிக்கொண்டே செல்லும். அப்படிப்பட்ட பயனற்ற குதிரையைக் கொட்டடியில் வீணாக வைத்திருப்பானேன்? தொலைத்துக்கட்ட வேண்டியதுதானே!''

தவீதவ் நறுக்குத் தெறித்தாற்போல புன்னகை செய்தான். பதில் சொல்லவில்லை. சாடையாகக் குத்திச் சொன்னதற்கு விளக்கம் தேவைப்படவில்லை...

உழுத காட்டின் மேலே இருவரும் மெதுவாக நடந்தார்கள். நீலநிறமும், செந்நிறமும் கலந்த வானின் பின்னணியில் ஆதவன் மெதுவாக எழுந்தான்.

''அது தான் என் உழவுசால்'' என்றான் தவீதவ். நீண்ட நெடிய தூரம் உழுது கிடந்த நிலத்தின் ஒரு பகுதியை வெளிப்படையாகவே அலட்சியமாகச் சுட்டிக் காட்டினான்.

தலையைப் பட்டென்று ஆட்டி தலையிலிருந்த குல்லாயைத் தனது கண்களை மூடுகிறாற்போல கொண்டுவந்த நெஸ்தெரேன்கோ உழுத ஈரப் புழுதியில் விழுபவனைப் போல தள்ளாடினான். சிறிது தூரத்திலேயே தவீதவ் செயலாளரை பின் பற்றினான். செயலாளர் காலணியில் மாட்டிக் கொண்ட புல்லை எடுப்பதைப் போல, சில முறை குனிந்து குனிந்து பார்த்துக்கொண்டே உழவு சாலின் ஆழத்தை அளந்துகொண்டிருந்தார். தவீதவால் அதைப் பொறுக்க முடியவில்லை.

''பாசாங்கு செய்யாமலேயே அளந்து பார்க்கலாம்! என்னுடன் ராஜதந்திர விளையாட்டு எதற்காக?''

''நீ என்னைப் பார்க்காததைப் போல பாவனை செய்திருக்கலாமே'' என்று முணுமுணுத்தபடி சொன்ன நெஸ்தெரேன்கோ நகர்ந்து சென்றான்.

உழவு சாலின் மறு புறம் போனவுடன் நின்று, புண் படுத்தும் இரக்கத்துடன் பேசினான்:

''சரி, இது ஒன்றும் மோசமில்லை. ஆனால் உழவு ஒரே சீராக இல்லை. ஏதோ சின்னக் குழந்தை செய்ததைப் போல இருக்கிறது. சில இடங்களில் மேடாகவும், சிற்சில இடங்களில் அதிக ஆழமாகவும் இருக்கிறது. இதற்குத் திற மையின்மை ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது உழு தவர் உழும்பொழுது சரியான மனநிலையில் இல்லாது இருந்திருக்கலாம். தவீதவ், இதை மனத்தில் பதித்துக் கொள். கோபமுள்ள மனிதன் இருக்க வேண்டிய ஒரே இடம் போர்க்களம்தான். கோபம் அங்கே சண்டைபோட உதவும். ஆனால் உழும்பொழுது அன்புள்ளத்துடன் இருக்க வேண்டும். ஏனெனில் நிலம், தன்னை மென்மையாக நடத் தவே விரும்புகிறது. அப்படித்தான் காலஞ்சென்ற என் அப்பா சொல்வது வழக்கம்... வறட்டு நிலத்து மாலு மியே, நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?!'' என்று பலத்த குரலில் கத்திவிட்டு, தவீதவை வேகமாகத் தோளில் இடித்துத் தள்ளினான்.

தவீதவ் தள்ளாடினான். தான் ஒரு மல்சண்டைக்காக சவால் விடப்பட்டுள்ளதை அவன் முதலில் தெரிந்து கொள்ளவில்லை. இரண்டாம் முறையாக நெஸ்தெரேன்கோ சிரித்துக்கொண்டே மோத வந்தபொழுது, தவீதவ் கால் களை அகல விரித்து முன்பக்கமாகக் குனிந்தான்.

இருவரும், ஒருவர் மற்றவருடைய இடை வாரைப் பிடிக்க நெருங்கினார்கள்.

''எப்படிச் செய்யலாம்? வார் உடன் இல்லாமலா?'' என்று சிரமப்பட்டுக்கொண்டிருந்த நெஸ்தெரேன்கோ கேட் டான்.

''எப்படி விரும்புகிறாயோ அவ்வாறு செய்யலாம். ஆனால் இடறிவிடக் கூடாது.''

''தலை கீழாகத் தூக்கிப் போடவும் கூடாது'' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னான் நெஸ்தெரேன் கோ. எதிரியைத் தூக்கப் பெரும்பாடுபட்டு மூச்செறிந்து கொண்டிருந்தான்.

நெஸ்தெரேன்கோவின் கனத்த உடலைச் சுற்றி தவீதவ் தனது கைகளை நீட்டினான். அவர் நின்ற உறுதியிலிருந்தே, அவனொரு அநுபவப்பட்ட மல்யுத்தக்காரனைச் சந்தித்

திருக்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டான். இருவரில் தவீதவ் தான் பலம் மிக்கவன். ஆனால் நெஸ்தெரேன்கோ விருவிருப்பும் சுறுசுறுப்பும் உடையவனாய் இருந்தான். ஓரிரு முறை, இருவர் முகங்களும் மிக நெருங்கி வந்து பார்த்துக்கொள்ள நேரிட்டபோது, அவனது சாம்பல் நிறக் கன்னங்களையும், குறும்புத்தனமாகச் சிரித்த கண்களையும் கண்டான் தவீதவ். மிகவும் குசுகுசுக்கும் தொனியில், ''தொழிலாளி வர்க்கமே, வா! எதற்காக இன்னும் நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று சொல்லியது கேட்டது.

உழுதகாட்டில் இருவரும் முன்னும் பின்னுமாக சுமார் எட்டு நிமிட நேரம் சுழன்றார்கள். தன் சக்தி குன்றுவதை உணர்ந்த தவீதவ் ''புல் தரைக்குப் போய்விடுவோம். இந்த சகதியில் நாம் செத்தே விடுவோம்...'' என்று மூச்சுத் திணற கூறினான்.

''நாம் தொலைந்தாலும் அதுவரை இங்குதானிருக்க வேண்டும்'' என்று நெஸ்தெரேன்கோ பெரும்பாடுபட்டு மூச்சு விட்டுக்கொண்டே முணகினான்.

தவீதவ் தன்னுடைய சக்தி முழுவதையும் கடைசியாகப் பயன்படுத்தி, தனது போட்டியாளரை உறுதியான தரைக்குத் தள்ளிக்கொண்டு போய்விட்டான். அங்கே மல் யுத்தம் முடிந்தது. இருவரும் கீழே வீழ்ந்தனர். ஆனால் விழுவதற்குள்ளாக நெஸ்தெரேன்கோவை கீழே தள்ளிவிட்டான் தவீதவ். கால்களை அகல விரித்து நின்று, தனது போட்டியாளரையும் கீழே தனது முழு பளுவையும் கொண்டு அமுக்கி ''என்ன எப்படியிருக்கிறது செயலரே?'' என்று தவீதவ் கேட்டான்.

''நான் ஏற்றுக் கொள்கிறேன்... நீ பலசாலிதான், தொழிலாளி வர்க்கம்... என்னைத் தோற்கடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. நான் இந்த விளையாட்டைச் சிறு பிள்ளைப் பருவந் தொட்டு விளையாடி வருகிறேன்...''

தவீதவ் அலட்டி உலுப்பி எழுந்து, தோற்றவனிடம் கையை நீட்டினான். ஆனால் சுருள் கம்பி மாதிரி தெஸ்தெரேன்கோ திடீரெனக் குதித்து எழுந்து, முதுகுப் புறத்தைக் காட்டினார்.

''அழுக்கைத் துடைத்துவிடு!''

மிகுந்த அன்புடனும், ஆண்மகனின் பரிவுடனும், மிகவும் கவலையுடன் ஒட்டியிருந்த சேறு, புல் எல்லாவற்றை

யும் நெஸ்தெரேன்கோவின் முதுகிலிருந்து தனது பெரிய கைகளால் துடைத்தான் தவீதவ்! பின்னர் இருவர் கண்களும் சந்தித்தன. இருவரும் சிரித்தனர்.

''எனக்குக் கட்சியிலுள்ள இடத்தைக் கருதியாவது, நீ விட்டுக்கொடுத்திருக்கலாம்! அது உனக்கு என்ன வேறு பாட்டைக் காட்டப் போகிறது? ஏ லெனின்கிராட் கரடியே! உன்னிடம் மெதுத்தன்மையும், பெரியவர்களிடம் மரியாதையும் இல்லை... ஆனால் புன்முறுவலைப் பார்! காதுக்கும், இளம் மணப்பெண் போல மனநிறைவோடு சிரிக்கிறாய்!'' என்றான்.

தவீதவோ உண்மையாக விரித்த புன்முறுவலோடு இருந்தான்.

''நான் அடுத்த முறை நினைவில் வைத்துக் கொள்கிறேன். அதுதான் உண்மை! ஆனால் நீ அவ்வளவு கடினமாக சண்டை போடக் கூடாது. நீ முழங்கால் வரை சேற்றுக்குள் போய்விட்டாய். இருந்தும் நீ விட்டபாடில்லையே. ஏ, நெஸ்தெரேன்கோ, நெஸ்தெரேன்கோ! மக்கார் நகூல்னவ் சொல்வது போல, ஏ அழிந்துகொண்டிருக்கும் நடுத்தர ஸ்தாவ்ரொபொல் விவசாயியே! சொத்துடைமைக்காரனே! கட்சிச் செயலர் என்ற முறையில், எல்லாவற்றிலும் தொழிலாளி வர்க்கம்தான் மேலே வருவார்கள் என்பது தெரிந்திருக்க வேண்டும். இது வரலாற்று ரீதியாக நிரூபிக்கப் பட்டுள்ளது. அதுதான் விஷயம்!''

இகழ்ச்சியாக நெஸ்தெரேன்கோ சீழ்க்கையடித்துக் கொண்டு தலையை ஆட்டினான். அவருடைய ஆஸ்த்ரகன் குல்லாய் தலையின் பின்னால் நழுவி அங்கு அதிசயமாக தங்கி நின்றது.

''அடுத்த முறை வெற்றிபெறத்திடம் செய்துகொள்வேன்!'' என்று குலுங்கிக்கொண்டு சொன்னான். ''அப்புறம் அதற்கு என்ன மார்க்சீய விளக்கம் கொடுப்பாய் எனப் பார்க்கலாம்! இதில் சங்கடம் என்னவென்றால், நாம் விழுந்தடித்துக் கொண்டிருந்ததை எல்லாம் சமையல்காரி பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நம்மைப் பற்றி என்ன நினைப்பாளோ? நம்மை குறும்புக்காரர்கள் என்று நினைப்பாள்...''

தவீதவ் இதைக் கவனமில்லாமல் விட்டு விட்டான். ''நாங்கள் இளைஞர்கள், ஆகவே தான் இப்படி என நாம்

சொல்வோம். அவள் புரிந்துகொள்வாள், நாமும் போய் விடலாம்... ஆனால் அந்தப் பேச்சைப் பற்றி என்ன, தோழர் நெஸ்தெரேன்கோ? நேரம் பறந்து கொண்டிருக்கிறது, தெரியுமல்லவா? இதுதான் விஷயம்!''

''நாம் உட்கார ஒரு காய்ந்த இடம் பாரேன்.''

எலிவளையாக இருந்து தோண்டிப் போட்ட களி மண் மேட்டின் மீது இருவரும் அமர்ந்தனர். நெஸ்தெரேன்கோ அவசரமின்றித் தொடங்கினான்.

''இங்கு வருவதற்கு முன்னர் கிரெமியாச்சிக்குப் போனேன். அங்கு ரஸ்மியோத்னவையும், தீவிர ஊழியர்களையும் சந்தித்தேன். எனக்கு நகூல்னவை ஏற்கெனவே தெரியும். அவன் மாவட்டக் கட்சிக் குழுவுக்கு வந்திருக்கிறான். ரஸ்மியோத்னவுக்கும், நகூல்னவுக்கும் சொல்லிவிட்டேன். அதையே தான் உனக்குத் திரும்பவும் சொல்கிறேன். நீங்கள் நம்முடைய லட்சியத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துள்ள பல நல்ல கூட்டுப்பண்ணை விவசாயிகளை கட்சிக்குள் இழுப்பதன் மூலம் தவறான வேலை செய்துகொண்டு இருக்கிறீர்கள். மிகவும் தவறான வேலை! பண்ணையில் சில நல்ல இளைஞர்கள் இருக்கிறார்கள், இல்லையா?''

''அது உண்மைதான்!''

''பிறகு என்ன சங்கடம்?''

''நல்லவர்களும் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள்...''

''எதற்காக?''

''கூட்டுப்பண்ணைப் பற்றிய கருத்து எவ்வாறு வேலை செய்கிறதென்று பார்க்கத்தான்... இப்போதைக்கு அவர்கள் தங்களது வேலைகளை மட்டும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.''

''நீ தான் அவர்களைத் தட்டி எழுப்ப வேண்டும். அவர்களது மயக்கத்திலிருந்து உலுக்கி எடுக்க வேண்டும்!''

''நாங்களும் கொஞ்சம் செய்கிறோம். ஆனால் காட்டுவதற்கு நிறைய இல்லை. கூதிர்காலத்தில் எங்கள் குழு வளர்ந்து விடும். அதுதான் உண்மை!''

''எனவே கூதிர்காலம் வரும்வரை வெறுமனே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா?''

''ஏன்? எதற்காக அப்படிச் செய்ய வேண்டும்? நாங்

கள் செயல்படுவோம். ஆனால் நெருக்குதலைப் பயன்படுத்த மாட்டோம்.''

''நான் நெருக்கடி பற்றிப் பேசவில்லை. விஷயம் என்ன வென்றால், நீங்கள் கிடைக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தைக் கூட நழுவவிடாமல், கடுமையாக உழைக்கும் கூட்டுப்பண் ணைத் தொழிலாளரிடம் நம் கட்சியின் கொள்கைத் திட் டத்தை அவர்கள் புரியக்கூடிய முறையில் சொல்லி அவர் களை நம் பக்கம் இழுக்கத் தவறவே கூடாது.''

''தோழர் நெஸ்தெரேன்கோ, நாங்கள் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்'' என்று தவீதவ் உறுதி கூறி னான்.

''அதைச் செய்து கொண்டிருக்கிறீர்கள், ஆனால் கட்சிக் குழு அதிகரிக்கவில்லையே. இதைப் பார்க்கும் பொழுது செயலற்ற தன்மையாகக் காணப்படுகிறதேயன்றி செயல் பட்டதாகத் தெரியவில்லை... சரி, எதிர்காலத்தில் என்ன முன்னேற்றம் ஏற்படுகிறதென்று பார்ப்போம். இப்பொழுது நாம் வேறு விஷயத்தைப் பற்றிப் பேசலாம். வேறு வகை யான சில குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இங்கு வந்ததே ஏன்? உன்னைத் தெரிந்து கொள்ளவும், இந்தப் பகுதியை ஒரு முறை பார்த்து விட்டு, சில விஷயங் களையும் பேசலாமே என்று தான் வந்தேன். நாம் எதற் காக நிற்கிறோம் என்பது உனக்குத் தெரியும். எனவே குறை களுக்கு இளமையை ஒரு சாக்காகச் சொல்ல முடியாது. இப்பொழுது நீ இளைஞனுமல்ல. எட்டிப்பிடிக்க முடியாத தூரத்துக்கப்பால் அந்த இளமை போயே போய்விட்டது. திரும்பக் கொண்டு வரவும் முடியாது! உன்னுடைய பாட் டாளிவர்க்கப் பிடிப்புக்காகவும், அநுபவமின்மைக்காகவும், விட்டுக் கொடுத்து நடப்பேன் எனக் கருதாதே. நம்முடைய கட்சித் தலைவர்கள் சிலர் வெளிக்காட்டுவது போல கடு கடுத்த சிடு மூஞ்சித்தனம் இங்கு இருக்காது.'' நெஸ்தெரேன் கோ பேசப் பேச மேன்மேலும் உணர்ச்சி வயப்பட்டவரா னார். ''நம்முடைய கட்சியில் தகுதியற்ற முறையில் சில வேலைகளைச் செய்யும் பழக்கம் வேர் விட்டிருக்கிறது. இதனை எடுத்துச் சொல்ல பொருத்தமான தொடர்ச் சொற்களும் நம்மிடம் உள்ளன. 'முகம் மழிப்பதை', 'அவனிடமிருந்தே நீக்கி விடுவதாகவும்', 'மணல் தாள் போட்டுத் தேய்ப்பதாகவும்' மற்றபடி ஏதோ துருப்பிடித்த

இரும்புத் துண்டைப் பற்றிப் பேசுவதைப்போல் பேசுகிறோமேயன்றி, மனிதனைப் பற்றிப் பேசுவதைப் போல பேசுகிறோமா? இது என்ன? இது சரியா? நான் உன்னைக் கேட்கிறேன், இப்படிப்பட்ட வார்த்தைகளை அதிகமாகப் பயன்படுத்துகிறவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு தடவை கூட ஒரு மரத்துக்கோ, ஓர் உலோகத் துண்டிற்கோ 'மழித்தறியாதவர்கள், சாணைக் கல்லை, தங்கள் கையிலேயே ஏந்தி அறியாதவர்கள். ஒரு மனிதன் மிகவும் உணர்ச்சி வயப்பட்டவன். எனவே நீ அவனை எப்படி நடத்துகிறாய் என்பதில் நீ எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!

''ஒரு கதை சொல்கிறேன். 1918 ஆண்டில் நான் இருந்த பிரிவில், ஒழுங்கும் கட்டுப்பாடும் எவ்வளவு மோசமாக இருக்க முடியுமோ அவ்வளவு மோசமாக இருந்தது. அது செஞ்சேனைப் பிரிவு அல்ல. அது மஹ்னோ அராஜகவாதியின் கூட்டம். உண்மையாகவே அப்படித்தான்! அப்புறம் 1919இன் ஆரம்பத்தில் எங்களுக்கு தொனேத்ஸ்க் நகரத்திலிருந்து சுரங்கத் தொழிலாளி ஒருவர் கமிசாராக வந்தார். அவர் ஒரு கம்யூனிஸ்டு. நல்ல வயதான ஆள். கொஞ்சம் கூன்வளைவு. தராஸ் ஷெவ்சேன்கோ * மாதிரி தொங்கும் மீசை. அவர் வந்தவுடன் காரியங்கள் வேறு மாதிரியாக நடந்தன. அந்த சமயம்தான் இந்தப் பிரிவு செஞ்சேனையின் ஒரு ரெஜிமெண்டாக ஆக்கப்பட்டது. அதே ஆட்கள்தான் அந்தப் பிரிவில் இருந்தார்கள். ஆனால் அவர்கள் மாறத் தொடங்கினார்கள். அவர்கள் மறு பிறவி எடுத்திருப்பதைப் போல தோன்றியது. புரட்சி ராணுவக் குழுவிற்கு முன்னால் விசாரணை என்ற பேச்சுக்கிடமில்லாமல், ஓர் ஒழுங்கு நடவடிக்கைகூட எடுக்காமல் தான் இத்தனையும் நடந்தன. அதுவும் அந்தச் சுரங்கக் கமிசார் வந்த ஒரு மாதத்தில் இத்தனையும் நடந்தது! இதை எப்படிச் சமாளித்தார்? அந்தத் தந்திரக் காரப் பேர்வழி தனது பெரிய மனத்தால்தான் இத்தனையும் செய்தார்! ஒவ்வொரு செஞ்சேனை வீரனிடமும் பேசுவார். எல்லாருக்கும் அன்பான நல்ல வார்த்தைகள் வைத்திருப்பார். போரின் இறுதிக்

---

* **தராஸ் ஷெவ்சேன்கோ (1814-1861)-** மிகப் பெரும் உக்ரேனிய புரட்சிக் கவிஞர், கட்டுரையாளர் மற்றும் ஓவியர்.—**மொ-ர்.**

கட்டத்திற்கு அவர்களில் ஒருவர் நிற்பது போல அவனிடம் அமைதியாகப் பேசி உற்சாகம் ஊட்டிவிடுவார். தலை கால் புரியாத பேர்வழிகளை எங்கே வைக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். எந்த இடத்தில் வைத்தால் குறும்புத்தனம் இராது என்பதும் தெரியும். அவர்களில் ஒருவரிடம் காதில் கிசுகிசுப்பார். 'ஏ, முட்டாளே, வெளியில் நீட்டாதே! நீட்டினால் கொல்லப்படுவாய், பிறகு நாங்கள் என்ன செய்வது? நீ இல்லாமல் இந்தப் பிரிவே, ஏன் இந்த முழுப் பட்டாளமே கொஞ்சம் பொடிக்குப் பயன்படாது'. கமிசார் இது போல பேசுவதைத்தான் அந்த இளைஞனும் விரும்புகிறான். எனவே தேவையற்ற ஆபத்தில் தலை நீட்டாமல் ஒழுங்காகச் சண்டை போடுவான்... ஆனால் எங்கள் கமிசாரிடம் ஒரே குறை இருந்தது. ஏதாவது ஒரு கிராமத்தையோ கஸாக் ஊரையோ கைப்பற்றினால் உடனே தடங்களைத் தேடத் தொடங்கி விடுவார்...''

தவீதவ் அடைந்த திடீர் அதிர்ச்சியால், அவன் காற்றுக் குடைந்த மேட்டிலிருந்து வழுக்கி கீழேயே உருண்டு விட்டான். தனது கைவிரல்களால் வழுக்கிவிடாமல் இருக்க ஈரக் களிமண்ணில் ஊன்றி உட்கார்ந்துகொண்டு, ''என்ன சொல்கிறாய்? தடங்களைத் தேடுவாரா? என்ன உளறுகிறாய்?''

நெஸ்தெரேன்கோ அமைதியாகச் சிரித்தார்: ''அது சரியான வார்த்தை இல்லைதான்! முகட்டில் தேடுவது என்பது சரியான வார்த்தை அல்ல. பெரிய பணக்கார வியாபாரிகள், நிலப்பிரபுக்கள், அந்தக் காலத்தில் புத்தகம் வைத்திருக்கக் கூடிய யார் வீடாக இருந்தாலும், அவர்கள் வீட்டு புத்தக நிலையத்தில் நுழைந்து தேடத் தொடங்கி விடுவார். அவருக்கு வேண்டிய புத்தகங்களைத் தேடி எடுத்து, எவ்வித விவாதமுமின்றி பறிமுதல் செய்துகொள்வார்! நீ நம்பக்கூட மாட்டாய்: அவரிடம் நான்கு வண்டிப் பாரம் புத்தகங்கள் இருந்தன. சக்கரம் போட்ட நூல் நிலையமே தான். போர்த் தளவாடங்களை எவ்வளவு அக்கறையுடன் கவனித்துக் கொண்டாரோ, அவ்வளவு கவலையுடன் புத்தகங்களையும் கண்காணித்து வந்தார். ஒவ்வொரு வண்டியையும் மூடிவைக்க ஒரு கருங்கித்தான் இருந்தது. புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன, கடைசிக்கும் கடைசியை மூடி, கீழேகூட வைக்கோல் போட்டு வைக்கப்

பட்டிருந்து. எங்காவது இரவு தங்கினால் அல்லது ஓய்வு எடுத்தால், அல்லது சண்டை போடாமலிருந்தால், கிடைத்த நேரத்திலெல்லாம், தளவாடங்களைத் துடைந்து முடித்து சாப்பிட்டு உட்கார்ந்தவுடன், புத்தகத்தைக் கொடுத்து ஒவ்வொருவரையும் படிக்கும்படி உத்தரவிடுவார். அதன் பிறகு நீ என்ன படித்திருக்கிறாய் என்பதையும் கவனித்துப் பார்ப்பார்...

''அந்த நாட்களில் இளைஞனாகிய நான் இளம் பெண் களிடம் அக்கறை காட்டினேன். நான் படிப்பதிலிருந்து தப் பித்துக் கொண்டு போய்விட முயன்றேன் என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும்... எனக்கு எழுதவோ, படிக்கவோ வராது. அது வருவதைப் போலத்தான் நானும் மந்தமாக இருந்தேன். ஒரு நாள் அவர் கொடுத்த புத்தகத்தை நான் படிக்கவில்லை என்பதைக் கண்டு பிடித்துவிட்டார். இன் றைக்கும் அந்தப் புத்தகத்தின் பெயரும், ஆசிரியரின் பெய ரும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது... இரண்டு நாட் கள் கழித்து அந்தப் புத்தகம் எதைப் பற்றியது என்று கேட்கத் தொடங்கினார். நான் திகைத்துக் கலங்கிப் போ னேன். அவர் என்னிடம் சொன்னார், ஆனால் சொல்லும் பொழுது யாரும் இல்லாதபடி பார்த்துக் கொள்வார், இப்படிப்பட்ட விஷயங்களில் இது விளம்பரப் படுத்துப்படா மலிருக்குமாறு பார்த்துக்கொள்வார். 'உன்னுடைய வாழ் நாள் முழுக்க முட்டாள் இவானுஷ்கா மாதிரியே வாழ்ந்து விடலாம் என நினைக்கிறாயா? நேற்று மாலை நீ ஒரு பெண் பிள்ளையுடன் குதியாட்டம் போட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். நல்லது, இதை உனது மர மண்டைக்குள் வாங்கிப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள். புத்திசாலித் தனமான பெண் யாரும் உன்னைப் போன்றபடியாத முட் டாளை விரும்ப மாட்டாள். ஐந்து நிமிடங்களில் அவளுக்கு உன்னிடம் சலிப்புத்தட்டிவிடும். அந்தப் பெண்ணும் முட் டாளாக இருந்தால், அதிலே ஒரு பிரசினையும் இல்லை. ஏனெனில் உன்னிடமும் விஷயம் இல்லாததால் அவள் உன் னிடமிருந்து எதுவுமே கற்றுக்கொள்ளப் போவதில்லை. நீ தான் நீண்ட நாள் அவளுடன் வாழ முடியாதே. ஆண்மை என்று பேசினாலோ, படிக்காதவனுக்கு உள்ள ஆண்மைத் தன்மை அத்தனையும் படித்தவனுக்கும் உண்டு. எனவே இவையனைத்தையும் கருத்திற்கொண்டு நோக்கினால்,

படித்தவனே சிறந்து காணப்படுகிறான். இது புரிகிறதா? ஏ மரமண்டையே விளங்கிற்றா?' என்றார்.

''நான் என்ன பதில் சொல்ல முடியும்?..

''பதினைந்து நாட்கள் என்னை இடித்துக் கேலி செய்துக் கொண்டே இருந்தார். என்னை அழவே வைத்து விட்டார். ஆனால் படிக்கவும் வைத்து விட்டார், அதன் பிறகு புத்தகத்தில் எனக்கு ஒரே கவனம். பிறகு அதிலிருந்து யாராலும் என்னை அப்பால் இழுக்கவே முடியாது. இந்த நாள்வரை, நான் அவருக்கு நன்றி செலுத்தி வருகிறேன். எனக்குக் கிடைத்த அறிவுக்காகவும் நான் யாருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன் —தந்தைக்கா, கமிசாருக்கா, என்பதை இன்னமும் அறியாது இருக்கிறேன்.''

நெஸ்தெரேன்கோ சிந்தனையில் ஆழ்ந்தார். சிறிது நேரம் கவலையுடன் காணப்பட்டார். கொஞ்ச நேரம் கழித்து, ஒரு தந்திரமான புன்முறுவலை அடக்க முடியாமல் உதிர்த்துக் கொண்டே தவீதவிடம் கேள்விகளைத் தொடுக்கத் தொடங்கினார்.

''ஓய்வு நேரத்தில் நீ ஏதாவது படிக்கிறாயா? பத்திரிகைகளை மட்டும் புரட்டுவாய் போலும்? நேரங் கிடைப்பதும் மிக அரிதுதான், இல்லையா? அதோடு கூட, உங்கள் ஊர்ப் புத்தக நிலையத்தில் ஏதாவது விருவிருப்பான புத்தகம் உண்டா?... உனக்குத் தெரியதா?!. அது குறித்து நீ வெட்கப்பட வேண்டும், சகோதரனே! எப்பொழுதாவது நீ அங்கே உள்ளே போனது உண்டா?.. இரு முறையா? அட கிழமே! அது போதவே போதாது. லெனின்கிராட் தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதி என்று உன்னைப் பற்றி நல்ல கருத்தல்லவா வைத்திருந்தேன்! இது பற்றிதான் உன்னுடைய தொழிற்சாலைக்குக்கூட நான் எழுதலாம் போல இருக்கிறதே! ஆனால் நீ கவலைப்படாதே. இதைத்தான் நான் எழுதுவேன்: 'இருபத்தைந்தாயிரம் பேரில் ஒருவரான தவீதவ், உங்கள் தொழிற்சாலையின் முன்னாள் தொழிலாளி, இன்றைய ஸ்தாலின் கூட்டுப்பண்ணையின் தலைவர் அவருக்கும் அவரது நிர்வாகத்தின் கீழுள்ள கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கும் உடனடியாகப் புத்தகங்கள் தேவைப்படுகிறது. அவர்களுக்குப் பொதுவாகத் தேவைப் படுகிற புத்தகங்கள் என்னவென்றால், அரசியல், பொருளாதாரம் பற்றிய, பொது மக்களுக்கான விவசாயம் பற்றிய நூல்கள்,

கால்நடை வளர்ப்பு—அபிவிருந்தி பொதுவாக பண்ணை முறை இவைப் பற்றிய நூல்கள் வேண்டும். கதைத் தொகுப்பு, பழங்காலத்தியதும், புது நூல்களும் இருந்தால் நல்லது. முந்நூறு புத்தகங்களைக் கொண்ட ஒரு சிறு நூல் நிலையத்திற்காக விரைவில் உதவுமாறு வேண்டுகின்றேன். இந்த முகவரிக்கு அதை அனுப்புக' தரிதானா? நான் இப் படி எழுதட்டுமா?.. நான் எழுத வேண்டாம் என்கிறாயா அது சரி! அப்படியானால் அந்த வேலையை நீயே செய். கூட்டுப்பண்ணைப் பொது நிதியிலிருந்து இருநூறு அல்லது முந்நூறு புத்தகங்களாவது வாங்கு. பணம் இல்லையென்று சொல்கிறாயா? சீச்சீ! நீ எங்கிருந்தாவது பணம் பெற லாம்! கிழட்டு மாடுகள் இரண்டை விற்றுவிடு. அதனால் ஒன்றும் குடிமுழுகி விடாது! ஆனால் உனக்கு நூல்நிலையம் கிடைக்கும். அதுவும் எப்படிப்பட்ட நூல்நிலையம் தெரி யுமா? நேற்று அலுவலகத்தில் நான் எண்ணிப்பார்த்த போது தேவைக்கு அதிகமான கால்நடைகள் இருக்கக் கண் டேன். இவற்றிற்கு ஏன் வீணாக தீவனத்தை விரயம் செய்து கொண்டிருக்கிறீர்கள்? அவற்றை விற்றுவிடுங்கள்! உங்களிட முள்ள மாடுகளில் எத்தனைக்குப் பத்து வயதுக்கு மேல் ஆகிவிட்டது தெரியுமா?.. உனக்குத் தெரியாது? பரிதாபம். நான் உனக்கு உதவி செய்கிறேன். கிழட்டு மாடுகள் உங் களிடம் பத்து வயதுக்கும் மேற்பட்ட ஒன்பது ஜோடிகள் இருக்கின்றன. ஒரு நல்ல விவசாயி இப்படிப்பட்ட மாடு களை வைத்துத் தீவனம் போட்டுக்கொண்டிருக்க மாட் டான். நன்றாக ஊட்டம் கொடுத்து வளர்த்து அவன் விற்று விடுவான். புரிகிறதா?''

''எனக்கு எல்லாம் புரிகிறது. கூதிர்காலத்துக்குப் பயன் படாத எல்லாக் கால்நடைகளையும் விற்றுவிடுவது என்று முடிவு செய்துள்ளோம். இதில் கிழட்டு மாடுகளும் உண்டு. அநுபவமுள்ள விவசாயிகளிடமிருந்து கிடைத்த யோசனை தான் இது.''

''அந்தக் கால்நடைக்கு இப்பொழுது ஊட்டம் கொடுத்து வருகிறீர்களா?''

''இல்லை. கிழட்டு மாடுகள் இன்னும் வேலை செய்து கொண்டிருக்கின்றன. அது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.''

''கூதிர்காலத்தில் விற்க வேண்டுமென்று சொன்ன அந்த அநுபவம் மிக்க விவசாயி யார்?''

''நம்முடைய விநியோக மேலாளர் ஒஸ்த்ரவ்னோவும், இன்னும் யாரோ ஒருவரும்தான். எனக்குப் பெயர் நினைவு இல்லை.''

''ஊஹூம், விருவிருப்பாக இருக்கிறது... உன்னுடைய மேலாளர் கூட்டுப்பண்ணைக்கு வருவதற்கு முன்னர் எவ் வளவு நல்ல குலாக், அதாவது நல்ல எசமானாக இருந்தான். அவன் மிகத் திறமையுள்ள விவசாயியாகத்தான் இருக்க வேண்டும்? அவன் எப்படி இவ்வளவு மோசமான யோச னையைச் சொல்ல முடிந்தது? கூதிர்காலத்தில் மாடுகளை விற்க வேண்டும். ஆனால் அதுவரை அவற்றை ஏரிலேயே பூட்டியிருக்கலாமா? ஏராளமான எலும்பையும் தோலையும் நீங்கள் விற்கலாம். என்னுடைய அறிவுரை வேறுவிதமாக இருக்கும். விற்கப் போகும் மாடுகளை எல்லாம் இப்பொ ழுதே மேய விடுங்கள். பிறகு நல்ல புண்ணாக்குப் பருத்தி விதை வையுங்கள். நன்றாக வளரவிட்டு, கறி நல்ல விலை விற்கக் கூடிய, மாடுகள் கிடைக்காத கோடைக் காலத்தில் விற்பனைக்குக் கொண்டு செல்லுங்கள். நல்ல விலை கிடைக்கும். கூதிர்காலத்தில் பாரம் பாரமாக உன்னுடைய மாடு இல்லாமலே கறி கிடைக்கும். விலையும் குறைவாக இருக்கும். உங்களிடம் உபரி தானியம் உண்டு. பிறகு எதற் காகக் காத்துக் கொண்டிருக்கிறாய்? அது சரி, அது உங் கள் பாடு. உங்கள் விஷயத்தில் நான் தலையிட விரும்ப வில்லை. ஆனால் இது பற்றி யோசித்துப்பார்... வேண்டு மானால், ஒரு ஜோடி மாடுகளை வளர்த்து இப்பொழுதே விற்றுவிடலாம். எப்படியோ பணத்தைப் புத்தகங்களுக் காகத்தான் செல விடப் போகிறோம், சாராயத்திற்கு அல்ல! சுருங்கச் சொன்னால், இரண்டு மாதங்களுக்குள்ளாக ஒரு நூல்நிலையம் இருப்பது போல பார்த்துக்கொள். இது ஒன்று! இடிந்து விழுவது போலிருக்கும் அந்தக் குடிசையிலிருந்து யாராவது ஒரு குலாக்கின் நல்ல வீட்டுக்கு இதை இடம் மாற்ற முயற்சி செய். மிக நல்ல வீட்டை எடுத்துக் கொண்டால் இது விஷயத்தில் உன்னை யாரும் தப்பாக நினைக்க மாட்டார்கள்! இது இரண்டாவது விஷயம்! சுறு சுறுப்பான ஓர் இளம் நூலகரை அனுப்புகிறேன். அவன் ஒவ்வொரு நாள் மாலையும் நன்றாகச் சத்தம் போட்டு வாசிப்பான். அது மூன்றாவது விஷயம்!''

''உன் விஷயங்களைக் கொஞ்சம் நிறுத்து!'' என்று குழப்

பத்தால் சிவந்த முகத்துடன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான் தவீதவ்.''ஒரு நூல்நிலையம் விரைவில் இருக்கும் என்று உறுதி கூறுகிறேன். முதலாவது விஷயம் முடிந்தது! நாளைக்கே ஒரு நல்ல வீட்டிற்கு அதை மாற்றி விடுகிறேன். இரண்டாவது விஷயமும் சரியாகப் போய்விட்டது! ஆனால் மூன்றாவது விஷயம் கொஞ்சம்... எனக்கு ஒரு நூலகரைத் தெரியும் இளைஞன். மிக நல்ல பிரச்சாரகன்! ஆனால் அவன் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கிறான். அதுதான் தொல்லை... எப்படியாவது மாவட்ட இளைஞர் கம்யூனிஸ்ட் கழகம் நமக்கு அதில் உதவக்கூடும். எப்படியேனும் சமாளித்து அவனைக் கொண்டுவந்து விடுகிறேன்!''

நெஸ்தெரேன்கோ கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். தலையை ஆட்டிக்கொண்டே கண்களால் மட்டுமே சிரித்துக் கொண்டிருந்தார்.

''தளபதி ஆர்வத்தோடு போவதையும். சரியான முடிவு எடுப்பதையும் எனக்கு ரொம்ப பிடிக்கும்... ஆகையால் படிக்கும் அறையைப் பற்றி நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நேற்று நான் அங்கு போயிருந்தேன். அது எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி தருவதாக இல்லை... ஒரே பாழடைந்த இடம்! சன்னல் விழிம்பெல்லாம் ஒரே புழுதிமயம். தரையை ஒரு கழுதை வயதிற்குக் கழுவியதாகக் காணோம். ஒரே ஈரக்கசிவு நாற்றம். என்னவோ சனியன் ஒன்றும் புரியவில்லை, ஏதோ சமாதி மாதிரி இருக்கிறது, உண்மையாகத்தான்! இதில், அங்கு இரண்டோ மூன்றோ புத்தகங்கள்தான் இருந்தன. அவையும் பழைய புத்தகங்கள். ஓர் அலமாரியின் மேல் மஞ்சள் பழுப்பேறிப்போன சுருட்டி வைக்கப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்றைக் கண் டேன். அதை எடுத்துப் படத்தைப் பார்த்தேன். அதில் இப்படித் தான் எழுதியிருந்தது:

> நமது அணிகண்டு கன்னியர் கண்கள் மகிழ,
> பொக்கைவாய்க் கிழவிகள் வியந்து பெருமூச்சுவிட,
> தந்தையர் முகமெல்லாம் மின்னிட:
> 'புறப்படு இளைஞனே! நன்றே நீ செய்வது!'
> பகைவெல்ல இறுதிவரை அடித்து நொறுக்கு
> உழவனே, உழும்போதே அறிவாய்,
> உன் உழைப்பையும், நிலத்தையும் காத்திடு,
> உழைக்கும் எல்லா மக்களும் காத்திடுவர்!

'' 'அது சரி!' என்று நினைக்கிறேன். 'இது ஏதோ பழைய தொடர்!' நான் சுவரொட்டியைப் படித்தேன்— எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. விராங்கெலில் நாங்கள் சண்டை போடும் பொழுது என்று நினைக்கிறேன்; அது 1920ஆம் ஆண்டில் இருக்கும்! பாட்டாளிக் கவிஞன் தெமியான் பெத்னியின் வார்த்தைகள் இன்றைக்கும் பொருந்துவனதான். ஆனால் 1930ஆம் ஆண்டில் நம் காலத்திற்கேற்ப, உதாரணமாகக் கூட்டுப்பண்ணை பற்றிச் சொல்லக் கூடியது இருக்க வேண்டாமா?..''

''கண்களை நன்கு திறந்து பாருங்கள். சும்மா பிடிவாதம் பிடிக்காதே'' என்று குழப்பத்திலிருந்து இன்னும் மீளாத தவீதவ், ஆமாம் என்பது போல தலையை ஆட்டிக் கொண்டே சொன்னான்.

''என்னுடைய கண்களைத் திறந்து கொண்டு, காணும் தவறுகளைத் திருத்துவதே என் வேலையாகும், செமியோன். இதையெல்லாம் நான் உன்னிடமுள்ள நல்லெண்ணத்துடன் தான் செய்கிறேன். இது கதையின் தொடக்கம் தான். இன்னும் வர வேண்டியது இருக்கிறது... இப்பொழுது நீ இங்கே, உன் குழுவை விட்டுவிட்டு இருக்கிறாய். கூட்டுப் பண்ணை வேலையையும் சுருட்டி எடுத்து, ரஸ்மியோத்னவிடம் கொடுத்து விட்டு வந்திருக்கிறாய். ஆனால் இப்படிப் பட்ட நேரங்களில் அவனால் வேலையை ஈடு கொடுத்துச் செய்வது கடினம் என்பது உனக்கே தெரியும். இல்லையா? இருந்தும் அதைத்தான் நீ செய்திருக்கிறாய்!''

''துபியான்ஸ்கியில் வயலில் நீயே அறுவடை எந்திரத்தை ஓட்டினாயாம். முன்மாதிரியாக அதைச் செய்து காட்டினாய் அல்லவா?''

நெஸ்தெரேன்கோ அதை அசட்டை செய்யும் பாவனையில் சைகை செய்து ஒதுக்கிவிட்டார்: ''துபியான்ஸ்கியில் மக்களைப் புரிந்து கொள்வதற்காகச் சில மணி நேரங்கள் வேலை செய்தேன். ஆனால் அது வேறு சமாச்சாரம். நீயோ உன் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட குழப்பத்தால் இந்தக் குழுவுக்கு வந்துவிட்டாய் இல்லையா? வித்தியாசத்தைப் பாரேன்? என்னைக் கேட்டால், நீ லூஷ்கா நகூல்னவாவை விட்டு விலகி ஓடிக்கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்... என்ன, நான் சொன்னது சரிதானே?''

தவீதவின் முகத்தில் ரத்தம் உறைந்துவிட்டது. அவன் மறு பக்கம் திரும்பிக்கொண்டு புல்லுக்குள் யாதொரு நோக்கமுமின்றி விரலை விட்டுத் துழாவிக்கொண்டிருந்தான். ''சரி, மேலே சொல்லு...'' என்றான் கரகரப்பான குரலில்.

ஆனால் நெஸ்தெரேன்கோ அன்புடனும், பரிவுடனும் தனது கைகளை அவன் தோளில் போட்டு, தன் அருகில் இழுத்துக்கொண்டு மெதுவாக, ''குத்துவதாக நினைத்துக் கொள்ளாதே! எதற்காக உழவு சாலை நான் அளந்தேன் தெரியுமா? ஏனெனில் சில இடங்களில் டிராக்டரைக் காட்டிலும் ஆழமாக உழுதிருந்தாய்! நீ உன்னுடைய கோபத்தை பூமி மீது உழவில் காட்டியிருக்கிறாய். உன் தவறான உணர்ச்சிக்காக மாடுகள் சிரமப்பட்டிருக்கின்றன... உன்னைத் தெரிந்தவர்கள் சிலர் லூஷ்கா விஷயம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்று சொல்கிறார்களே. அது உண்மையா?''

''அது அப்படித்தான் தெரிகிறது.''

''இதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அன்புள்ள செமியோன், இதை விரைவில் முடித்து விடப்பார்! மக்கள் உன்னை விரும்புகிறார்கள். ஆனால் தொல்லை என்னவென்றால் உனக்காக அவர்கள் வருந்துகிறார்கள் புரிகிறதா? அவர்கள் உண்மையாகவே உனக்காக வருந்துகிறார்கள்! இந்தத் தப்பான முட்டாள்தனமான காரியத்தால்தான். ருஷ்ய நாட்டு மரபுக்கேற்ப சாதாரணமாக எல்லா விதமான விஷயங்களுக்காகவும் அனுதாபப்பட்டால் அது சாதாரண விஷயமாக இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒரு புத்திசாலிக்காக, அதுவும் அவர்களுடைய தலைவருக்காக, வருத்தப்பட்டால் அதைக்காட்டிலும் வேதனையும் வெட்கமும் பட வேண்டிய விஷயம் வேறு என்ன இருக்கிறது? சிறிது காலத்திற்கு முன்னர்வரை உன்னுடைய தோழன் ஒருவனின் மனைவியாக இருந்த ஒருத்தியுடன் நீ உறவு கொண்டு திரிவது உன்னையே பாழடித்துக் கொள்வதாகும்! உன்னுடைய வேலையிலும் நகூல்னவின் வேலையிலும் காணப்படும் மன்னிக்க முடியாத தவறுகளுக்கு வேறு எவ்வகையில் நாம் விளக்கம் கூறப் போகிறோம்? நீயாகவே பிசாசின் முடிச்சில் கட்டிக்கொண்டு விட்டாய். அதை நீயாகவேதான் கழற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு நீ லூஷ்கா

வுடனான இந்தப் பிரச்சினையை முடிவு செய்யா விட்டால், மாவட்டக் கட்சிக் குழு கத்தியைப் பயன்படுத்த நேரிடலாம். என்னுடைய வார்த்தைகளைக் கவனி!''

''கிரெமியாச்சி கிராமத்தை விட்டே கிளம்பி விடுவது தான் நல்லதோ?'' என்று தயங்கியபடி கேட்டான் தவீதவ்.

''கண்டபடி உளறாதே!'' என்று காட்டமாகச் சொன்னார் நெஸ்தெரேன்கோ. ''ஏதாவது தவறு செய்திருந்தால், நீ தான் அதை முதலில் சுத்தம் செய்து சரி செய்ய வேண்டும். அதற்குப் பிறகு வெளியேறுவது பற்றிப் பேசலாம். நீ என்னிடம் வேறு விஷயம் பற்றி சொல். உங்கள் கிராமத்துப் பள்ளியில் கற்பித்து வரும் இளம் கம்யூனிஸ்ட் சங்கத்தைச் சேர்ந்த யெகோரவாவை உனக்குத் தெரியுமா?''

''தெரியும். அவளை நான் சந்தித்திருக்கிறேன்.'' தவீதவின் முகம் புன்முறுவலால் மலர்ந்தது. குலாக்குகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தபொழுது, மிகவும் வெட்கப்படக்கூடிய இளம் ஆசிரியையுடன் கொண்ட முதல் சந்திப்பை நினைத்துக்கொண்டான்.

அவர்கள் அறிமுகம் செய்து கொண்டபொழுது, வியர்த்து விருவிருத்து நின்ற அந்தப் பெண், கைவிரல்களைச் சேர்த்து இணைத்து நேராக விறைப்பாகக் கைகுலுக்க நீட்டிக்கொண்டு வெட்கத்தால் பயத்துடன் கண்களில் நீர் துளிர்க்க, ''பள்ளி ஆசிரியை யெகோரவா லியூதா'' என்று மென்று விழுங்கிச் சொல்லி முடித்துவிட்டாள். நகூல்னவிடம் ''இந்தப் பெண்ணை உன்னுடைய குழுவில் சேர்த்துக் கொள். இந்த இளம் பெண் வர்க்கப் போர் என்றால் என்ன என்பதைப் பார்க்கட்டும்'' என்று தவீதவ் சொன்னான். ஆனால் தனது நீண்ட பெரிய பழுப்பு நிறக் கைகளைப் பார்த்துவிட்டு, ''அவளை நீயே வைத்துக்கொள். இப்படிப்பட்ட வேலைகளுக்கு அவள் லாயக்கில்லை! சிறுவர்களுக்கு அவள் சொல்லிக் கொடுக்கிறாள். ஆனால் யாராவது ஒருவர் மோசமான மதிப்பெண் வாங்கிவிட்டால், அந்தச் சின்னப் பிள்ளை அழுவது போலவே இந்தப் பெண்ணும் அழுகிறாள். இப்படிப்பட்ட பெண்ணை இளம் கம்யூனிஸ்ட் சங்கத்தில் யார்தான் சேர்த்தார்களோ? இவள் என்ன இளம் கம்யூனிஸ்டு? வெண்ணெய் மாதிரி மிருதுவாக இருந்தால் என்ன செய்வது?'' என்றான் நகூல்னவ்.

புருவத்தை நெருக்கிச் சுருக்கிக் கொண்டு, தவீதவ்

சொல்வதை ஒத்துக்கொள்ளாத வெறுப்பான பார்வையுடன் பார்த்த வண்ணம், ''எதற்காகச் சிரிக்கிறாய்? என்னுடைய கேள்வியில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்றார் நெஸ் தெரேன்கோ.

நேரங்கெட்ட நேரத்தில் தான் சிரித்ததற்கு விளக்கம் கொடுக்க அசட்டுத்தனமாக முயன்றான் தவீதவ். ''ஒன்றும் இல்லை. அந்தப் பெண்ணைப் பற்றி ஒரு சிறு விஷயம் நினைவுக்கு வந்தது... அவள் அவ்வளவு அடக்க ஒடுக்க மான...''

''சிறு விஷயம் நினைவுக்கு வந்தது! நீ சிரிப்பதற்கு நல்ல நேரம்தான் பார்த்திருக்கிறாய்!'' என்று எரிச்சலை மூடி மறைக்காமல் பேசினார் நெஸ்தெரேன்கோ. ''இந்த அடக்க ஒடுக்கமான ஆசிரியைதான் இந்தக் கிராமம் முழுவதற்குமே ஒரே இளம் கம்யூனிஸ்டு கழகத்தில் இருக்கிறாள்! அதை நினைத்துப் பார்த்தால் நல்லது. உங்களுடையதைப் போன்ற ஒரு பெரிய கிராமத்தில் இளம் கம்யூனிஸ்டு குழுவே இல்லை. இது சிறிய விஷயம் அல்ல! இதற்கு யார் பொறுப்பு? நகூல்னவ்தான் இதற்கு முதல் பொறுப்பு, நீயும் பொறுப்புத்தான். உங்களிருவருக்குமாக நானும் பொறுப்பு. நீ இங்கே உட்கார்ந்து குலுங்கிக் கொண்டிருக்கிறாய்... இது ஒரு மோசமான சிரிப்பு, செமியோன் தவீதவ்! உனக்குப் பல அவசர வேலைகள் இருந்தன என்று சொல்லாதே! நமக்குக் கட்சி சொல்கிற வேலைகள் எல்லாமே அவசரம்தான். அவற்றை எவ்வளவு விரைவாகச் செய்து முடிக்கிறோம் என்பது வேறு விஷயம்.''

தவீதவுக்குச் சிறிது கோபம் வந்து கொண்டிருந்தது. அதை அடக்கிக்கொண்டு, ''தோழர் நெஸ்தெரேன்கோ, நீ ஒரே ஒருநாள் கிரெமியாச்சி கிராமத்தில் இருந்திருந்தாய். அதற்குள்ளாக எங்கள் வேலையில் பல தவறுகளையும், என்னுடைய பழக்க வழக்கத்திலும் குறை கண்டுபிடித்து விட்டாய்... நீ ஜனவரியிலிருந்து இங்கிருந்திருந்தால்? ஒரு வாரத்துக்குக் கேட்கக்கூடிய குறைகளை அடுக்கியிருந்திருப்பாய். அதுதான் விஷயம்!''

தவீதவ் கடைசியாகச் சொன்னது நெஸ்தெரேன்கோவை நெகிழச் செய்து சிரிக்கவைத்துவிட்டது. கண்களை உருட்டி நெளித்துக்கொண்டே தோளில் லேசாக இடித்தார்.

''செமியோன், நான் கிரெமியாச்சிக்கு ஒரே ஒரு நாள்

போய்விட்டு வந்ததற்குப் பதிலாக, உன்னுடன், உன் பக்கத்திலிருந்தே வேலை செய்திருந்தால் இவ்வளவு தவறுகள் நிகழ்ந்திராது என்பதை ஒப்புக்கொள்கிறாயா?''

''குறைகள் குறைந்திருக்கும். இருந்தாலும் கொஞ்ச நஞ்சமாவது இருக்கத்தான் செய்யும். நீயும் தவறு செய்து தான் இருப்பாய். அதுதான் விஷயம்! நான் செய்யும் ஏராளமான தவறுகள் எனக்கே தெரிகிறது. ஆனால் அவற்றை என்னால் சரிபடுத்த முடியவில்லை. அவற்றை உடனடியாகவும் செய்து முடிக்க முடியாது. அதுதான் எனக்குள்ள தொல்லை. அதுதான் விஷயம்! இளவேனிற் காலத்தில், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் சிலரும், ஆசிரியரும் ஷிபீன் என்று பெயர், வயலெலிகள் பிடிக்க வயலுக்குப் போனார்கள். நான் வேகமாக கடந்து சேன்றேன். நின்று அவர்களுடன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அந்த ஆசிரியர் எப்படி வாழ்கிறார், அவரது தேவைகள், விருப்பங்கள் என்ன என்று நான் அப்பொழுதும் தெரிந்து கொள்ளவில்லை. இன்னும் புரிந்துகொள்ளவும் இல்லை... இன்னும் ஒரு மோசமான உதாரணம் பற்றி சொல்கிறேன். கடந்த குளிர் காலத்தில், தனக்கு விறகு கொண்டுவர வண்டி அனுப்புமாறு ஒரு குறிப்பு அனுப்பினார். நான் அனுப்பினேன் என்று நினைக்கிறாயா? நான் மறந்து விட்டேன். மற்ற காரியங்கள் என் மனத்தை விட்டே அந்தப் பெரியவரை மறக்கடித்துவிட்டன... நினைவே இல்லாமல் போய்விட்டது. இதை நினைத்தாலே இன்றைக்கும் வெட்கமாக இருக்கிறது! இளம் கம்யூனிஸ்டுகள் பற்றி நீ சொன்னதும் சரியே. அங்கும் சில முக்கியமானவற்றை நழுவ விட்டுவிட்டோம். நானும் குறை கூறப்பட வேண்டியவன்தான். உண்மையான விஷயம்.''

மனம் வருந்தி விஷயத்தைச் சொல்லிவிடுவதால் நெஸ்தெரேன்கோவைச் சுலபத்தில் இளகவைத்துவிட முடியாது.

''உன் தவறுகளை ஒப்புக்கொள்வது சரிதான்.வெட்கப்படுவதையும் விட்டுவிடவில்லை எனத் தெரிகிறது. இதனாலெல்லாம் இளம் கம்யூனிஸ்டுகள் சங்கம் பெரிதாகிவிடப் போவதுமில்லை. அல்லது ஆசிரியருக்கு விறகு கிடைத்துவிடப் போவதும் இல்லை... அன்புள்ள செமியோன், நீ செயல் பட வேண்டும். மனம் வருந்தினால் போதாது!'' என்று வற்புறுத்தினார்.

''நான் உண்மையாக உணர்வு பூர்வமாகச் சொல்கிறேன்; எல்லா விஷயத்தையும் சரிப்படுத்தி விடுகிறோம்! ஆனால் இளம் கம்யூனிஸ்டு சங்கத்தை உருவாக்க, அமைக்க நீங்கள் உதவ வேண்டும், அதாவது மாவட்டக் கட்சிக் குழு உதவ வேண்டும். கம்யூனிஸ்டு இளைஞர் சங்கத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு இளைஞர்களையும் ஒரு பெண்ணையும் தற்சமயம் அனுப்பி வையுங்கள். யெகோரவா, நான் அழுத்தமாகச் சொல்கிறேன், ஸ்தாபன அமைப்பாளர் என்ற முறையில் சரியானவள் அல்ல. அவள் மிகவும் பயப்படுகிறாள். அவள் இளைஞர்களை குறிப்பாக இங்கு கூடியுள்ள நம் போன்ற வாலிபர்களை எப்படி சமாளிக்க முடியும்?''

நெஸ்தெரேன்கோ இப்பொழுதுதான் மன நிறைவு பெற்றார். ''இது பேசுவதுதான் சரி!'' ''இளம் கம்யூனிஸ்டுகளைக் கொடுத்து நாங்கள் உதவி செய்கிறோம் என்று நான் உறுதி கூறுகிறேன். இப்பொழுது நீ சொன்னதன் பேரில் ஓரிரண்டு வார்த்தைகள் மட்டும் சொல்கிறேன். மே தினத்திற்கு முன்னால், நகரத்துக்குப் போய் சாமான் வாங்கிவர இரண்டு வண்டிகள் வேண்டுமென்று கூட்டுறவு பண்ட சாலை மேலாளர் கேட்டாரல்லவா?''

''ஆமாம். கேட்டார்.''

''நீ கொடுக்கவில்லை, அல்லவா?''

''சமாளிக்க முடியவில்லை. ஒரே சமயத்தில் உழுதுகொண்டும், விதைத்துக்கொண்டும் இருந்தோம். சாமான் வாங்க நேரமேது?''

''உன்னால் இரண்டு வண்டிகளைக்கூட ஒதுக்க முடியவில்லையா? சேச்சே! கேவலம்! பண்ணை வேலைக்கும் பங்கம் இல்லாமலே நீ அனுப்பியிருக்கலாம். ஆனால் நீ முயற்சிக்கவே இல்லை. 'இது பண்ணை உறுப்பினர்களின் எண்ணப் போக்கை எப்படிப் பாதிக்கும்?' இது பற்றி நீ நினைத்ததில்லை. இதன் விளைவாக, வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகளான சோப்பு, உப்பு, தீப்பெட்டி, மெழுகு வாங்குவதற்குக்கூட, அதுவும் ஒரு, பொது விடுமுறைக்கு முன்னால் கிரெமியாச்சிப் பெண்கள் நகரத்துக்குக் கால்நடையாகவே நடந்து செல்ல வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் ஒருவர் மற்றொருவரிடம் நமது சோவியத் ஆட்சி பற்றி என்ன பேசிக்கொள்வார்கள்? அல்லது இதைப்பற்றி உனக்குக்

கவலையில்லையா? நம்முடைய அருமை சோவியத் ஆட்சியை மக்கள் திட்டிக்கொண்டிருப்பதற்காக நாம் போராடவில்லை! நாம் அதற்காகவா போராடினோம்?'' என்று நெஸ்தெரேன்கோ உரத்த கீச்சுக் குரலில் சத்தம் போட்டார். பிறகு குசுகுசுக்கும் தொனியில், ''இப்படிப் பட்ட ஒரு சிறு உண்மையைக் கூடப் புரிந்துகொள்ள முடியாதா, செமியோன்? சுய புத்திக்கு வா அன்புள்ள தோழரே! கண்களைத் திற!..'' என்று முடிவாகக் கூறினார்.

தவீதவ் சிகரெட் நுனியை விரல்களுக்கிடையில் வைத்து நசுக்கினான். தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டே வெகுநேரம் அமைதியாக இருந்தான். தனக்குள் அலைக் கழித்த உணர்வுகளை வாழ்க்கை முழுவதும் கட்டுப்படுத்தியே வந்தவன் தவீதவ். வேறு என்ன குறை சொன்னாலும், குற்றம் சாட்டினாலும், உணர்ச்சி வயப்பட்டவன் என குற்றம் சாட்டிவிட முடியாது. இருப்பினும் அவனையே அறியாத ஒரு சக்தி அவனை உந்தித்தள்ள, நெஸ்தெரேன் கோவைப் பரிவுடன் தழுவிக்கொண்டு, மழித்திருந்த அவரது கன்னத்தில் உதடுகள் உராயுமளவுக்கு நெருங்கி உரசினான். உணர்ச்சியால் அவனது உதடுகள் துடித்தன. ''அன்பர் நெஸ்தெரேன்கோ! என்னுடைய ஆழ்ந்த நன்றி! நீ ரொம்ப நல்லவர். உன்னுடன் வேலை செய்வதும் சுலபம். கொர்ச்ழீன்ஸ்கியுடன் வேலை செய்வது மாதிரியல்ல. சில எரிச்சலூட்டும் விஷயங்களைச் சொல்லியிருக்கிறாய். ஆனால் அவை உண்மைதான், ஒத்துக்கொள்கிறேன்! ஆனால் ஆண்டவனே! எக்காரணங் கொண்டும் என்னைப் பயனற்றவன், ஒன்றுக்கும் லாயக்கற்றவன் என்று மட்டும் எண்ணி விடாதே! என்ன செய்யபட வேண்டுமோ, அதை நான் செய்து முடித்துவிடுகிறேன். நாங்கள் செய்ய முயற்சிப்போம். பல விஷயங்களைப் பற்றியும் நான் சிந்திக்கிறேன். அவை போதுமான அளவுக்கு ஏராளமாக இருக்கின்றன... என்னை நம்பு, தோழர் நெஸ்தெரேன்கோ!''

நெஸ்தெரேன்கோவும் உணர்ச்சியால் உந்தப்பட்டார். ஆனால் அதை அவர் காட்டிக்கொள்ளவில்லை. லேசாக செருமி விட்டு, அவரது பழுப்பு நிறக் கண்களைச் சுழற்றிக் கொண்டிருந்தார். அடுத்த சில நிமிடங்களில் இருவருமே பேசவில்லை. அவருக்கு உடம்பு புல்லரித்து நடுங்கியது. ''நான் உன்னையும் உன்னைச் சேர்ந்த இளைஞர்

களையும் நம்புகிறேன். நான் என்னை நம்பும் அளவுக்கு உங்களையும் நம்புகிறேன். செமியோன் தவீதவ், இதை நினைவில் நன்கு வைத்துக்கொள்! மாவட்டக் கட்சிக் குழுவையையும், என்னையும் கீழே விடாதீர்கள்! அதைச் செய்யவே கூடாது! கம்யூனிஸ்டுகளாகிய நாமெல்லாம் ஒரே ஒரு பட்டாளத்தின் பிரிவின் வீரர்களைப் போல, நாம் ஒருவர் மற்றொருவரிடம் ஒரு நிமிடங்கூட நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது! இது உனக்கு முழுக்க நன்றாகத் தெரியும். இது போன்ற மனத்திற்குச் சங்கடமான பேச்சுக்களை இனிமேல் தவிர்ப்போம். சனியன் தொலையட்டும்! எனக்கு இப்படிப்பட்ட பேச்சுக்கள் விருப்பமே இல்லை. ஆனால் சில சமயங்களில் அவையும் செய்தாக வேண்டும். இவ்வாறு ஒரு நண்பனுடன் இதே முறையில் பேசிவிட்டு, அன்று இரவு முழுவதும் கண் இமை மூடித் தூங்கவே முடியாது. ஒரு நண்பனுக்கு இது போன்ற வேதனையை உண்டாக்கிவிட்டு தூங்க முடியுமா?..'' என்றார் மெதுவாக அவர்.

நெஸ்தெரேன்கோவின் கையைப் பிடித்து தவீதவ் குலுக்கியபோது அவரது முகத்தை உற்று நோக்கினான், திகைத்துப் போனான். கதை சொல்லிக்கொண்டிருந்த அந்த ஆள் அல்ல; சர்வ சாதாரணமாக சுமுகமாக சிரித்துப் பழகி விளையாடிக்கொண்டிருந்த சகாவும் அல்ல; மல்யுத்தம் செய்த, பின்னர் தன் அருகில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தாரே அவரா: இவர்? களைத்துப்போன, வயதாகிப்போன ஒரு மூத்த தோற்றம் அவரது கண்களில் தெரிந்தது. நெஸ்தெரேன்கோவின் கண்கள் திடீரென வயதானவையாகத் தோன்றின. வாயின் இரு விளிம்போரங்களிலும் ஆழமான சுருக்கம் விழுந்து இருந்தது. பழுப்பு நிறத்தோடு சிவந்து போயிருந்த அவரது கன்னங்கள் கூட, ஒளியிழந்து மஞ்சள் ஏறிப்போய் சோகையாகக் காட்சி தந்தது. ஒரு சில நிமிடங்களில் நெஸ்தெரேன்கோ வேறு ஒரு புதிய மனிதராக மாறிவிட்டார்.

''நான் புறப்பட வேண்டும். எனக்கு நேரமாகிவிட்டது. நான் வந்ததற்கு மேல் தங்கிவிட்டேன்'' என்று எலி வளை குவித்திருந்த மண் மேட்டிலிருந்து எழுந்தவாறே சொன்னார் அவர்.

''உன் உடம்புக்கு என்ன? ஏதும் சுகமில்லாமல் படுத்துவிடப் போகிறாயா?'' தவீதவ் கவலையோடு கேட்டான்.

''திடீரென்று ஒருமாதிரி சோர்வுற்றுக் காணப் படுகிறாயே.''

''நீ யூகித்து விட்டாயே'' என்று நெஸ்தெரேன்கோ ஏக்கத்துடன் பதில் சொன்னார். ''மலேரியா தாக்கத் தொடங்கி விட்டது. மத்திய ஆசியாவில் பிடித்த நோய் இது. அதைத் தொலைத்துக் கட்ட முடியவில்லை.''

''மத்திய ஆசியாவில் என்ன செய்து கொண்டிருந்தாய்? அங்கு எதற்காகப் போனாய்?''

''அங்கு பீச் பழங்கள் வாங்கப் போனேன் என்று நீ நினைத்துக்கொள்கிறாய் என்னமோ? அங்கே நான் பாஸ்மாச் குண்டர் படையை நொறுக்கினேன். ஆனால் இந்த மலேரியாவை மட்டும் தொலைக்க முடியவில்லை. மருத்துவர்கள் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து பார்த்து விட்டார்கள். எனவே இனி நான் விரும்பினாலும் விரும்பலாம். அல்லது முழுகித் தொலைக்கலாம். அது வேறு விஷயம். கடைசியாக இதைத்தான் உனக்குச் சொல்லிவிட்டுப் போக விரும்புகிறேன். எதிர்ப் புரட்சிக்காரர்கள் இந்தப் பகுதியில் மீண்டும் உலவுகிறார்கள். ஸ்தாலின்கிராதுப் பகுதியிலும் இதே போலத்தான். அந்த அடி முட்டாள்கள் இன்னும் எதையோ நம்பிக்கொண்டிருக்கிறார்கள்! இந்தப் பாட்டைத் தெரியுமா? 'அவர்கள் நம்மைத் தோற்கடிக்க விரும்புகிறார்கள்; தோற்கடிக்க முயற்சியும் செய்தார்கள்...' ''

'' 'ஆனால் அவர்கள் நாம் அசந்திருக்கும் போது பிடித்து விட முடியவில்லை, நாம்தான் கண்களை அகல விழித்துக் கொண்டிருந்தோமே' ...'' என்று முடித்துக்கொண்டான் தவீதவ்.

''அது சரிதான். ஆனால் நாம் இன்னும் கவனமாக இருந்தாக வேண்டும்.'' நெஸ்தெரேன்கோ, புருவத்தைச் சுரண்டிக்கொண்டே ஆழமாகச் சிந்தித்தார். பிறகு மிகவும் சளித்த அருவருப்புடன், ''அதைக் கவனித்துக் கொள்ளலாம். நான் மிக மதிப்புள்ள ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போகிறேன்... நாம் இருவரும் நட்பால் பிணைக்கப்பட்டு விட்டோம். நீ இந்த சிறிய பொம்மையை பரிசாக எடுத்துக் கொள்வது நல்லது. இது உனக்குப் பயன்படலாம். நகூல்னவ் சுடப்பட்டிருக்கிறான். நீயும் அது பற்றிக் கவனிப்பது நல்லது. இல்லையெனில் விஷயங்கள் மோசமாகப் போகலாம்...''

பையிலிருந்து பளபளக்கும் 2ஆம் நீர் பரெளனிங் பிஸ் டல் ஒன்றை எடுத்து தவீதவ் கைமீது வைத்தார்.

''இந்தச் சிறிய பொருள் உனக்கு சமயத்துக்கு அருமையாக உதவும். மெக்கானிக்கின் தொழிற் கருவிகளைக் காட்டிலும் பாதுகாப்புக்கு இது நன்றாக உதவும்.''

தவீதவ் நெஸ்தெரேன்கோவின் கையை இறுகப் பற்றிக் கொண்டு, உணர்ச்சி ததும்பிய குரலில், ''உன் தோழமை மிக்க, எப்படிச் சொல்வது... நட்புரிமையுடன் நீ என்னிடம் காட்டிய பரிவுக்காகவும் அக்கறைக்காகவும் நன்றி கூறிக் கொள்கிறேன்! ஆமாம், உண்மையாகவே நட்புடன் நடந்து கொண்டமைக்காக என்னுடைய மனம் நிறைந்த நன்றி!''

''இதை வைத்துக்கொள்'' என்றார் நெஸ்தெரேன்கோ சிரித்துக்கொண்டே,''ஆனால் இதைத் தொலைத்துவிடாதே! ஆண்டுகள் ஆக ஆக வயதான வீரர்களுக்கு மறதி வந்துவிடு கிறது...''

''நான் உயிருள்ள வரையிலும் இதைத் தொலைக்க மாட்டேன். அவ்வாறு தொலைத்தால் என் தலையும் அத் துடன் போகும்.'' பிஸ்டலைத் தன் கால் சட்டையின் பின் புறப் பைக்குள் வைத்துக்கொண்டே தவீதவ் உறுதி கூறி னான்.

ஆனால் மறு விநாடி பிஸ்டலை வெளியில் எடுத்து கவலையோடு அதைப் பார்த்துவிட்டு, அடுத்து நெஸ்தெ ரேன்கோவையும் பார்த்தான்.

''இது ரொம்ப மோசம்... ஆயுதமின்றி நீ எப்படிக் சமாளித்துக்கொள்வாய்? திரும்ப எடுத்துக்கொள். எனக்கு இது தேவை இல்லை!''

நெஸ்தெரேன்கோ அவனுடைய கையை மெதுவாக ஒதுக்கித் தள்ளினார்.

''கவலைப்படாதே, என்னிடம் வேறு ஒன்றும் இருக் கிறது. அது ஒன்று கூடுதலாகவே உள்ளது. இன்னொன்று இருக்கிறதே. அது விலை மதிப்பற்ற சிறந்த பொருள். அது எனக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது. அதில் என் பெயர் கூட பொறிக்கப்பட்டுள்ளது. பட்டாளத்தில் ஐந்தாண்டு களாக வெறுமனே சண்டை போட்டுக்கொண்டிருந்தேன் என்று நினைத்தாயா?'' நெஸ்தெரேன்கோ கண்களைச் சிமிட்டிக்கொண்டு சிரிக்க முயன்றார். ஆனால் அவரது சிரிப்பில் நோயும் வேதனையும் நிறைந்திருந்தது.

மீண்டும் அவரது உடல் புல்லரித்து நடுங்கிற்று. நடுக்கத்தை நிறுத்த தோள்களை உலுப்பிக்கொண்டார். நிறுத்தி நிறுத்தி அவர் பேசினார். ''நீ கொடுத்த பரிசைப் பற்றி ஷாலீய் ஒரு நாள் மிகவும் பெருமையடித்துக் கொண்டிருந்தான். நான் அவனைப் பார்க்கப் போனபோது தேநீரும், அடைத் தேனும் கொடுத்தான். நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது, அலமாரிக்குப் போய், நீ கொடுத்த தொழிற்கருவி களை எடுத்து வந்தான். 'என் வாழ்க்கையிலேயே எனக்கு இரு பரிசுகள்தான் கிடைத்திருக்கின்றன. என் கிழட்டு வீட்டுக் காரி இருக்கிறாளே, அவள் சிறு பெண்ணாக இருந்த போது, இளம் கொல்லனாக இருந்த என்னைப் பார்த்துக் கொண்டிருந்த காலத்தில் எனக்குக் கொடுத்த சிறிய பை ஒன்று. அடுத்தது நான் வேலை செய்வதைப் பாராட்டி தவீதவ் கொடுத்த ஒரு தொகுதி தொழிற் கருவிகள். இவையே எனது நீண்ட வாழ்வில் கிடைத்த இரு பரிசுகள்! இதுவரை புகை மூட்டத்தில் கத்தியால் அடித்து எவ்வளவு இரும்பைப் பதப்படுத்தியிருப்பேன் தெரியுமா? எண்ணிப் பார்க்க முடியாது! எனவேதான் அவற்றை என் நெஞ்சில் வைத்துப் பாதுகாக்கிறேன்! அவை அலமாரியில்கூடக் கிடக்கலாம்' என்று சொன்னான். அவன் ரொம்ப நல்ல கிழவன்! நல்ல உழைப்பாளி. சிலர் சொல்வதைப்போல, கடவுள், எல்லார்க்குமே இந்த கொல்லரைப் போலவே பணி புரிய அருள் செய்யட்டும். எனவே உனது பரிசு, என்னுடைய பரிசைக் காட்டிலும் சிறந்தது.''

குழுவின் பந்தலை நோக்கிப் பேசிக்கொண்டே இருவரும் வேகமாக நடந்தனர். நெஸ்தெரேன்கோவின் எலும்பு ஒவ்வொன்றும் ஏற்கெனவே நடுங்கிக் கொண்டிருந்தது.

மேற்கிலிருந்து மீண்டும் மழை வந்து கொண்டிருந்தது. துண்டுதுண்டான மேகக் கூட்டங்கள் புல்வெளி மீது கீழ்மட்டத்தில் பறந்துசென்றன. மோசமான காலநிலையைக் காட்டும் முன்னோடி அறிகுறிகள் அவை. இளம் புல்லும், கருப்பு மண்ணும் ஒருவித வாசனை வீசின. சிறிது நேரத்துக்கு முன்னர் வரை மேகங்களினிடையே தனது ஒளியை வீசிக்கொண்டிருந்த சூரியன் இப்பொழுது மறைந்து விட்டது. புதிதாக வீசும் மென் தென்றலை தங்களது இறகுகளால் அநுபவித்தவாறே, இரு இளம் புல்வெளிக் கழுகுகள் பறந்து மிகமிக உயரமாக பார்வைக்கு அப்பால் போய்விட்

டன. மழையை வரவேற்கும் புல்வெளி அமைதி போர்வை போர்த்தாற்போன்று கவ்வியிருந்தது. ஒருசில வயலெலிகள் கூர்மையாக ஒலி எழுப்பி வரப்போகும் பெரு மழைக்கு முன்னறிவிப்புக் கொடுத்துக்கொண்டிருந்தன.

''நமது பந்தலில் உறங்கி விட்டு பிறகு போ. மழையில் நனைந்து போனால், பல மாதங்களுக்குப் படுக்க நேரிட லாம்'' என்று தவீதவ் வற்புறுத்தினான்.

ஆனால் நெஸ்தெரேன்கோ முற்றாக மறுத்துவிட்டார். ''முடியவே முடியாது. மூன்று மணிக்கு ஒரு கூட்டம் இருக் கிறது. இந்த மழையில் நான் அகப்பட மாட்டேன். என் னிடம் அருமையான குதிரை இருக்கிறதே!''

குதிரையின் சேணை வார்களின் முடிச்சை அவர் கழற் றிய பொழுது அவரது கைவிரல்கள் ஒரு கிழவனுடைய விரல்களைப் போல நடுங்கிக் கொண்டிருந்தன. தவீதவை வேகமாகத் தழுவிவிட்டு, எதிர்பாராத துடிப்புடன், பொறு மையிழந்து எவ்விக்கொண்டிருந்த குதிரை மீது தாவிக் குதித்து ஏறினார். ''போகிற பாதையிலேயே கணப்பு உண் டாகிக்கொள்ளும்!'' என்று கூறிவிட்டு, மிக வேகமாகப் புறப்பட்டுப் போனார்.

மெல்லிய குளம்போசை கேட்டு படபடவென்று வண்டியை விட்டு வெளிவந்த குப்ரியானவ்னா, வெளியில் தலையை நீட்டி, ''அவர் போய்விட்டாரே?! அவர் காலைச் சாப்பாடே சாப்பிடவில்லையே! ஐயோ இப்படிப் போய் விட்டாரே!'' என்று அங்கலாய்ப்புடன் கூறினாள்.

''அவருக்குச் நலமில்லை'' என்று நீண்ட நேரம் செய லாளர் போவதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தவீ தவ் சொன்னான்.

''ஐயையோ! நான் எவ்வளவு முட்டாள்!'' என்று குப்ரி யானவ்னா முணகினாள். ''எவ்வளவு நல்ல மனிதர். அவ ருக்குச் சாப்பிட ஒன்றுகூட கொடுக்கவில்லையே! அவரைப் பார்த்தால் ஏதோ அலுவலகத்தில் வேலை செய்பவரைப் போலத் தெரிகிறது. இருந்தும், நீ, தலைவரே, குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தபோது, முகத்தைச் சுளிக் காமல், உருளைக் கிழங்கை உரிக்க உட்கார்ந்தாரே. நம் முடைய கஸாக்குகள் மாதிரியல்ல! அவர் கால்தூசி ஆக மாட்டார்கள் இவர்கள்! ஏராளமான உதவியை நம்முடைய ஆட்களிடமிருந்து. நீங்கள் பெறுகிறீர்கள், பன்றி மாதிரிக்

கூட்டம் கூட்டமாக முண்டியடிப்பார்கள்! தங்கள் புகழையே பாடிக் கொண்டிருப்பார்கள். இதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்களே யன்றி, சமையல்காரிக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமே! அவர் என்னிடம் எவ்வளவு அருமையாகப் பேசினார் தெரியுமா? இவ்வளவு இனிமையான நினைவுகளை வேறு ஓர் ஆள் விடுமுறை மாத ஞாயிற்றுக் கிழமைகளில்கூட நினைக்க முடியுமா?'' அவள் தற்பெருமை அடித்துக் கொண்டே இருந்தாள். பற்களுக்கிடையில் உதட்டைக் கடித்துக்கொண்டு, இடையிடையே தன் பேச்சின் பிரதிபலிப்பைக் காண தவீதவையும் பக்கவாட்டில் பார்த்துக் கொள்வாள்.

தவீதவ் அவள் பேச்சைக் கேட்கவில்லை. நெஸ்தெரேன்கோவுடன் சற்றுமுன் தான் பேசிய பேச்சுக்களை நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் குப்ரியானவ்னா, ஒரு முறை பேசத் தொடங்கிவிட்டால் பிறகு நிறுத்தவே மாட்டாள். அதனால்தான் அவள் தொடர்ந்தாள்: ''நீ அப்படிப்பட்ட ஆள்தான், தவீதவ். அவர் போகப் போகிறார் என்பதை என்னிடம் சொல்லக் கூடாதா? அடேயப்பா! இதென்ன? அய்யையோ! நானும் அவரை விட்டு விட்டேன். நான் ஒரு முட்டாள்! அட பரிதாபமே! சமையல்காரி அவரிடமிருந்து பந்தலுக்குள் மறைந்து ஒளிந்து கொண்டாள் என்று நினைத்தாரோ என்னவோ? ஆனால் ஆரம்பம் முதலே என் உள்ளம் அவர் பால் போய்விட்டது...''

தவீதவ் தொடர்ந்து அமைதியாக இருந்தான். குப்ரியானவ்னா தடையின்றி தனது உணர்ச்சிகளை எல்லாம் அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தாள்: ''அவர் குதிரையில் எப்படி உட்கார்ந்து போகிறார் பார்! என்னவோ குதிரை மீதே பிறந்து, குதிரை மேல் வளர்ந்தவர் போலல்லவா போகிறார்! அசையக்கூடக் காணோமே; என் இளங்கழுகே! எங்காவது ஒரு கஸாக் உண்டென்றால், அவர் இவர்தான். அதுவும் பழைய பரம்பரை போலும்!'' என்று புகழ்பாடிக் கொண்டே மறைந்துகொண்டிருந்த குதிரைக்காரனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

''அவர் கஸாக் அல்ல. அவர் உக்ரேனியன்'' என்று சொன்னான் தவீதவ். பெருமூச்செறிந்தான். நெஸ்தெரேன்கோ போய்விட்டது குறித்து கவலையாக இருந்தான்.

அவன் சொற்களைக் கேட்ட குப்ரியானவ்னா வெடி மருந்து போலக் குபீரென்று பொங்கியெழுந்தாள்: ''இந்தக் கதையை எல்லாம் உன் பாட்டியிடம் வைத்துக் கொள். என்னிடம் சொல்லாதே! நான் சொல்வதைக் கேள்: அவர் ஒரு சரியான கஸாக்! உன் கண்களில் என்ன களிமண்ணா இருக்கு? அவர் சவாரி செய்வதிலிருந்தே, ஒரு மைலுக்கு அப்பாலிருந்து அவரைக் கஸாக் என்று சொல்லிவிடலாம். அவருடைய சுறுசுறுப்பில் இருந்தும், அருகிலிருந்தும் அப்படியே சொல்லிவிடலாம். ஒரு பெண்ணை நடத்துகிற முறையிலிருந்தும், அவரைக் கஸாக் என்று சொல்லிவிடலாம். இவர் தலைக்கனம் பிடித்த ஆசாமிகள் மாதிரி இல்லை...'' இதை அவள் முக்கியமாகச் சொன்னாள்.

''சரி, உன் விருப்பப்படியே வைத்துக்கொள். உனக்குக் கஸாக்காகத் தெரிந்தால், அவர் கஸாக்தான். இதைப் பற்றி எனக்கொன்றும் அக்கறை இல்லை'' என்று தவீதவ் ஒப்புக் கொண்டான். ''ஆனால் அவர் மிக நல்ல ஆள், இல்லையா? உனக்கு எப்படித் தோன்றுகிறது? என்னை எழுப்பும் வரை நீண்ட நேரம் அவருடன் அருமையாகப் பேசிக் கொண்டிருந்தாய், இல்லையா?''

இப்பொழுது குப்ரியானவ்னா பெருமூச்சு விட வேண்டியதாயிற்று. அவள் பெருமளவில் பொருமலுடன் விட்ட பெருமூச்சு விம்மலில், அவள் போட்டிருந்த பழைய ஜாக்கெட்டு கையடியிலிருந்து கீழே வரை தையல் பிரிந்து விட்டது.

''அவர் குறிப்பிடத்தக்க நல்ல மனிதர்!'' மிகுந்த உணர்ச்சியுடன் மெதுவாகப் பதில் சொன்னாள். பின்னர் எவ்விதக் காரணமும் இன்றி, மேசை மீதிருந்த சட்டி, பானை குவளை சாமான்களை அங்குமிங்குமாக எவ்வித நோக்கமும் இன்றி தடபுட எனப் போட்டு உருட்டினாள்...

அத்தியாயம் ஒன்பது

தவீதவ் நீளடி போட்டு நடந்து கொண்டிருந்தான். மேட்டின் உச்சியை அடைந்தவுடன், அவன் முகாமைத் திரும்பிப் பார்த்தான். அந்த நேரத்தில் வழக்கம் போல பாலைவனம் போல இருந்தது. அடிவானம் வரை எதிர்ப் பக்கம் உழுத புழுதிக் காடாய்க் கிடந்த நிலப் பகுதியை

யும் பார்த்தான். நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். கடந்த சில நாட்களாகவே ஒரே யடியாக வேலையில் மூழ்கிவிட்டான். ஓட்டுநர் வார்யாவோ, கொந்திராத்தின் மாடுகளோ அதிகப்படியான வேலை செய்ய வேண்டி நேரிட்டதற்காகக் மனத்தாங்கல் கொண்டுப் பயனில்லை... அக்டோபரில் இந்த நிலத்தைப் பார்க்க வேண்டும். குளிர்காலக் கோதுமைப் பயிர் பசுமையாக புதிர்போல வளர்ந்திருக்கும். காலைப் பனியோ அதைத் தொட்டு வெள்ளி போல மின்னிக்கொண்டிருக்கும். நண் பகலில் சூரிய ஒளிபட்டு மழைக்குப் பின்னால் மின்னு வதைப் போல லேசான நீலநிறந்துடன் ஒளிரும். வானவில் போல எல்லா நிறங்களும் பளபளக்கும். ஒவ்வொரு சொட் டும் முதிர் வேனிற்கால வானநிறத்தைப் பிரதிபலிக்கும். அதில் வெண்ணிறப் பஞ்சு போர்த்தாற் போன்ற மேகக் கூட்டங்களும், மறையும் சூரியனின் ஒளியும் அதிலே தெரி யும்...

பச்சைநிறப் புல்வெளிக்கருகில் பறந்து விரிந்து உழுது கிடந்த நிலம் தூரத்திலிருந்து பார்த்த பொழுது, கருப்புப் பட்டுத்துணி போலக் காட்சி தந்தது. வடக்குச் சாய்வு மேட்டில், செந்நிறக் களிமண் கிடந்த இடத்தில், மங்க லான சிவப்பு நிறத்தில் கரடுமுரடான வரப்பு இருந்தது. உழுது புரட்டிப் போட்டிருந்த கருப்புநில மண், உழுத கொழுப்பட்டு மின்னிக்கொண்டிருந்தது. உழுத சால் நெடு கிலும் பளபளத்தது. அதற்கு மேல் கருங்காகங்கள் வட்ட மிட்டுக் கொண்டிருந்தன. தூரத்தில், ஒரே ஒரு பனித்துளி விழுந்ததைப் போல, உழுது கிடந்த கருப்புநிற நிலத்தில் ஒரே ஓர் இடத்தில் நீலநிறத்திட்டு ஒன்று காணப்பட்டது. வேலையிலிருந்த விருப்பத்தையெல்லாம் இழந்துவிட்ட வார்யா ஹர்லாமவா, தலையைத் தொங்கப்போட்ட வண் ணம், முகாமை நோக்கி நடந்து வந்துகொண்டிருதாள். கொந்திராத் மய்தானிக்கவ் உழவு சாலில் ஆடாமல் அசை யாமல் உட்கார்ந்த வண்ணம் புகைத்துக் கொண்டிருந் தான். ஓட்டுநர் இல்லாமல் அவன்தான் என்ன செய்வான்? மாடுகளும், மாட்டு ஈக்கடி பொறுக்க முடியாமல் கைக் கெட்டாதபடி போய் விட்டன.

மேட்டின் உச்சியில் நின்றிருந்த தவீதவைப் பார்த்து வார்யாவும் நின்றாள். தலையிலிருந்த கைக்குட்டையைக்

கழற்றி அதை மெதுவாக வீசினாள். இந்த அமைதியான, வெகுளித்தனம் நிறைந்த நோக்கு தவீதவைச் சிரிக்கவைத்தது. அவனும் பதிலுக்குக் குல்லாயை ஆட்டிவிட்டு, திரும்பியே பார்க்காமல் மேலே நடந்தான்.

''தான் பிடித்த பிடியை விடாத அப்பாவிப் பெண் குழந்தை! மொத்தத்தில் நல்ல பிள்ளை தான். ஆனால் கெட்ட முறையில் வளர்க்கப்பட்டு, பிடிவாதம் பிடிக்கிறாள். அது தான் விஷயம்! ஆனால் கெடுக்கப்படாத பெண்பிள்ளை யாராவது இருக்கிறார்களா? தன்னைப் பற்றிப் பெருமையோடு நினைத்துக் கொண்டு நடவாத பெண்பிள்ளையை எங்காவது காண முடியுமா? என் கனவிலும், என் வாழ்க்கையிலும் நான் இப்படிப்பட்ட பெண்களைக் காணவில்லை... இந்தப் பெண்களில் நல்ல வாட்ட சாட்டமான பெண் யாராவது ஒருத்திக்குப் பதினாறு, பதினேழு வயதாகிவிட்டால் போதும், அவள் அவ்வளவுதான். இருக்கிற அழகைக் கூட்டிப் பெருக்கிக்கொள்ள என்னென்னவோ செய்து அதை நம் ஆண்களிடம் சோதிப்பாள். அதுதான் விஷயம்!'' என்று நடந்து போனபோது நினைத்தான் தவீதவ். ''இங்கே வார்யா என்னை வளைக்கப் பார்க்கிறாள். அவளுக்கு உள்ள வனப்பையும், சக்தியையும் அவள் என்மீது உபயோகப் படுத்திப் பார்க்கிறாள். ஆனால் இதில் அவளுக்கு ஒன்றும் நடக்கப்போவதில்லை. பால்டிக் கடற்படை வீரர்களாகிய நாங்களோ இந்த விளையாட்டில் மிகப் பழைய ஆட்கள்! இப்பொழுது எதற்காகக் முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறாள்? இவளாகவே போய்க்கொண்டிருக்கிறாள் போலும். கொந்திராத் அனுப்பியுள்ளதாகத் தெரியவில்லை. அவளாகவே ஏதாவதொரு அற்பத்தனமான காரணத்தைச் சொல்லி கோபித்துக் கொண்டு கிளம்பி விட்டாள் போலும். நான் அந்தக் குழுவிலிருந்து போய்விட்டதும் ஒரு காரணமாக இருக்கக்கூடும், என்னமோ? இதுதான் காரணம் என்றால், அதைக் காட்டிலும் வெட்கக்கேடு வேறு இல்லை. தொழில் ஒழுங்கை மீறும் மகா மோசமான போக்காகும்! அவள் சரியான, நியாயமான காரணத்துக்காகப் போனால், அவள் விருப்பப்படி எங்கும் போகட்டும். அவ்வாறு இல்லை என்றால், அடுத்த குழுக் கூட்டத்திலேயே இதைப் பற்றிச் சொல்லிவிட வேண்டும். அவள் இளம் வயதுக்காகவும், அழகுக்காகவும் விட்டுவைக்க முடியுமா? உழவு ஒன்றும்

ஞாயிற்றுக்கிழமை விளையாட்டல்ல. அதை அவள் ஒழுங்காகச் செய்தாக வேண்டும்'' என்று எரிச்சலோடு நினைத்தான் தவீதவ்.

அந்த நேரத்தில் அவனுடைய உணர்ச்சிகள் இரண்டும் விநோதமாகக் கலந்தன. ஒரு பக்கம், தன்னிச்சைப்படி நடந்து கொள்கிறாளே என்று வார்யா மீது கோபம் ஒரு புறமும் ஓர் ஆணுக்கு இருக்கும் மிடுக்கு, அவள் தனக்காகத்தான் தற்காலிகமாக வேலையை விட்டுவந்து விட்டாள் என்று நினைப்பதில் மகிழ்ச்சி மறு புறம்...

அவன், தன்னுடைய பழைய லெனின்கிராடு மாலுமித் தோழர் ஒருவரைப் பற்றி நினைத்துக் கொண்டான். அந்த நண்பன் எந்தப் பெண்ணையாவது அணுகும்போது, தனியாக அழைத்து ரகசியமாக குசுகுசுவென்று சதித்திட்டமிடுவது போல காதுக்குள், ''செமியோன், நான் பகைவனை வளைக்கப் போகிறேன். நான் சிரமத்தில் சிக்கிக் கொண்டால் அவசர உதவிகொடு. இல்லை நான் அடிபட்டுவிட்டால், நீ நல்ல ஆளாக நடந்து, என்னுடைய மானக் கேடான பின்வாங்கலை மறைத்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்வான். இவ்விதப் பழைய நினைவுகளை நினைத்து தவீதவ் புன்னகை செய்தான். ''வார்யா போன்ற 'பகைவனை' வளைப்பதில் பயனில்லை. அவளோ சின்ன வயதுப் பெண். வேறு ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவள்... நான் அவளைத் தொடர்ந்து ஒரு எட்டு எடுத்து வைத்தால் போதும். உடனே இந்தக் கூட்டுப்பண்ணை விவசாயிகள், பெண்களைக் கெடுப்பவன் என்று என்னைப் பற்றி நினைக்கத் தொடங்குவார்கள். ஆனால் கேவலம் லூஷ்காவுடன் கூடச் சமாளிக்க முடியாத நான் எப்படிப் பெண்களைக் கெடுப்பவனாக, மயக்குபவனாக இருக்க முடியும். இல்லை, இந்தப் பெண்ணை உண்மையாகவே காதலிக்க வேண்டும். வெறும் விளையாட்டுக்காக அவளைச் சுற்றுவதில் பயனில்லை. அருமையான காலைக் கதிரவனைப் போல அவள் களங்கம் இல்லாமலிருக்கிறாள். அவள் என்னைப் பார்க்கும் பொழுது அவளது கண்களில் தூய்மை நிறைந்து வழிகிறது... எனவே, நான் உண்மையாகவே காதலிக்கத் தெரியாமலிருந்தால், அந்தப் பக்கத்தை இன்னமும் புரிந்துகொள்ளாமலிருந்தால், சும்மா பெண்களின் தலையைப் போட்டு உருட்டிக் கொண்டிருப்பதிலே பய

னில்லை. விளையாட்டு வேலைகளுக்கு முடிவு கட்ட வேண்டி வந்துவிட்டது, கடற் படைக்கார தவீதவ், இதில் விரைவாக முடிவெடுத்தாக வேண்டும்!.. இனிமேல் இவளை விட்டு அதிகம் விலகியிருக்க வேண்டும் என்று நினைக் கிறேன். நானே, இதை மிக பக்குவமாகச் சொல்லி விடு கிறேன், அவளும் புரிந்துகொள்வாள். பிறகு விலகி விடு வாள்'' என்று விருப்பமில்லாத பெருமூச்சுடன் முடிவு செய்தான்.

கிரெமியாச்சி கிராமத்தில் தனக்கு அமைந்துள்ள மகிழ்ச்சி யற்ற வாழ்க்கையைப் பற்றியும், மாவட்டக் கட்சிக் குழு வின் புதிய செயலாளர் தனக்குக் கொடுத்துள்ள பொறுப் புகளைப் பற்றியும் நினைத்துப் பார்த்தபொழுது, அவ னுக்கு மீண்டும் லூஷ்காவைப் பற்றிய நினைவு எழுந்தது. ''மாலுமியின் இந்த முடிச்சை, பிறர் மனம் புண்படாதபடி எப்படி நான் கழற்றப் போகிறேன்? மக்கார் சொல்வது தான் சரி போலத் தெரிகிறது. ஒரு முடிச்சை உன் விரல் களாலோ, பற்களாலோ கழற்ற முடியாவிட்டால், வெட்டி விட வேண்டியதுதானே! சே! இதென்ன விஷயம்! அவளை நிரந்தரமாக விட்டுப் பிரிவது என்பது மிகவும் சிரமம் தான். ஆனால் ஏன்? மக்காருக்குச் இலேசாகப்படுவது, எனக்கு சிரமமாகத் தோன்றுவானேன்? எனக்குப் போது மான மன உறுதி இல்லை என்று பொருளா? இதை நானாக நினைத்திருக்கக்கூட மாட்டேன்! மக்காருக்கும் கூட இது சிரமமாகத்தான் இருந்திருக்கும், ஆனால் அதை அவன் காட்டிக் கொள்ளவில்லை இல்லையா? மக்கார் தன் னுடைய உணர்வுகளைச் சமாளித்து மறைத்துக்கொண் டான். ஆனால் எனக்குத்தான் தெரியவில்லை. ஆமாம், என்னால் முடியவில்லை, அது தான் விஷயம்!''

ஒன்றையும் கவனிக்காமல், தவீதவ் வெகுதூரத்தை கடந்துவிட்டான். சாலையை விட்டு விலகி அருகிலிருந்த ஒரு சாலி மரத்தின் நிழலில் படுத்து ஓய்வெடுத்துக்கொண்டு, புகைப்பிடிக்கக் தொடங்கினான். படுத்துக்கொண்டு, நகூல் னவ்மீது யார் சுட்டிருக்கக்கூடும் என யூகித்துப் பார்த்துக் கொண்டேயிருந்து விட்டு, வெகுநேரம் கழித்து சளிப்புடன் ஒன்றும் புரியாமால் விட்டுவிட்டான். ''இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்திராவிட்டலும்கூட, குலாக்குகளின் உடமையைப் பறிமுதல் செய்த பிறகு, சில கழிசடைகள் இந்தக்

கிராமத்தில் மிச்சம் சொச்சமாக ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லாருக்குமே தெரியும். மக்காரைப் பார்த்து எது, எப்படி நடந்தது என்று எல்லாவற்றையும் விவரமாக விசாரித்தால் ஒருவேளை விஷயம் புலப்படலாம். சும்மா மண்டையைப் போட்டு உருட்டிக் கொண்டிருப்பதில் பயனில்லை.''

பயண தூரத்தைக் குறைப்பதற்காகக் குறுக்கு வழியில், கன்னி நிலத்தின் வழியாக நடந்து சென்றான். அரை மைல் தூரம்கூட நடந்திருக்கவில்லை, அதற்குள்ளாக எல்லை தெரியாத ஏதோ ஒரு புது உலகுக்குள் நுழைந்து விட்டதைப்போலத் தெரிந்தது. தீவனத்துக்காக வளர்க்கப் பட்ட புல் அவனுடைய காலணிகளில் இப்பொழுது உராய வில்லை. பூக்களின் அழகை இப்பொழுது காணோம். வளர்ந்த தானியப் பயிரின் கம்மென்று வீசிய வாசனை இப்பொழுது மறைந்துவிட்டது. காற்றோடு கலந்துவிட்டது. கண்ணுக் கெட்டாத தூரம்வரை தெரிந்த வெட்ட வெளி ஒரே மங் கலாகவும் மந்தமாகவும் முடிவற்று அலுப்புத் தட்டு கிறாற்போலத் தோன்றிற்று.

கொஞ்சங்கூட மகிழ்வளிப்பதாய்த் தோன்றவில்லை அந்தத் தரிசு நிலம். இப்பொழுதுதான் தீப்பிடித்து அழிந்தது போல வெறிச் சென்றிருந்தது. தவீதவின் மனத்துக்குக் கஷ்ட மாக இருந்தது. தன்னைச் சுற்றிலும் பார்த்தபொழுதுதான் லான் பள்ளத்தாக்குப் பகுதியின் உச்சிக்கு வந்துவிட்டதை உணர்ந்தான். இது பற்றி நிர்வாகக் குழு கூட்டத்தில் யாக் கவ் லுக்கீச் ஒரு முறை சொன்னது நினைவுக்கு வந்தது: ''காக்கஸஸ் பகுதியில் உள்ள மலைகளையும் நிலப் பகுதி யையும், கருகிப்போகும் புல்பூண்டுடன் என்ன காரணமோ ஆண்டவன் படைத்தான். அங்கே நடக்கவோ, சவாரி செய்யவோ முடியாது. ஆனால் கிரெமியாச்சி கஸாக்கு களாகிய நம் தலையில் ஏன் இதைக் கட்ட வேண்டும்? அது தான் புரியவே இல்லை. அது பாதிக்கு மேல் உவர் மண் ணேறிப் போயிருக்கிறது. அதை யாராலும் உலக அழிவுக் காலம்வரையில் உழவோ, விதைக்கவோ முடியாது. மாரிக் காலத்தில் கொஞ்சம் புல் முளைக்கும். அதுவும் நீண்ட நாள் நிலைக்காது. பிறகு அடுத்த மாரிக்காலம்வரை அந்தப் பக்கம் தலைவைத்துக்கூட படுக்க வேண்டியதில்லை. பத்துப் பதினைந்து நாட்களுக்கு கிராமத்து ஆடுகளை

மேய்க்கலாம் அவ்வளவுதான். அதற்குப் பிறகு காகிதத்தில் தான் அது நமக்குச் சொந்தம், ஆனால் பல்லிகளும், பாம்பு களும்தான் அதை வைத்துக்கொள்கின்றன.''

தவீதவ் மெதுவாக நடந்தான். உப்பு மண் பொதிந்த குண்டு குழிகளையும், ஆடுமாடுகள் நாக்கால் நக்கி வள வளப்பாகியிருந்த, அவை மிதித்து குளம்பு விழுந்து பதித் திருந்த தடங்களையும் கடந்து சென்றான். இந்தக் குழி களில் கிடந்த உப்பு மண் மங்கலான சலவைக் கல் மாதிரிக் கிடந்தது.

வெட்டு குன்றுவரை ஏறத்தாழ ஐந்து கிலோமீட்டர்கள் வரை தரிசு நிலம் நீண்டு கிடந்தது. மங்கலான பழுப்பு வெண்ணிறப் புற்களின் பூவும், வெடித்துப் பிளவுண்டு கிடந்த உவர்நிலமும், நண் பகலின் கொதிக்கும் வெயி லில் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பதைப் போலத் தெரிந் தது. ஆனால் இந்தக் கட்டாந்தரைப் பொட்டல் வெளி யிலுங்கூட அழிக்க முடியாத உயிர் வாழ்க்கை இருக்கத்தான் செய்தது. சிவப்பு இறகுகளையுடைய விட்டில் பூச்சிகள் தவீதவின் காலடியிலிருந்து பறந்தன. மண் நிறம் போலவே இருந்த பல்லிகள் அமைதியாக ஊர்ந்து நகர்ந்தன. வய லெலிகள் குட்டிகள் ஒன்றுக்கொன்று எச்சரிக்கையாக ஒளி யொழுப்பிக் கொண்டன. ஒரு வல்லூறு பாய்ந்து பறந்து வந்து புல்லுக்குள்ளேயே மறைந்து விட்டதைப் போலத் தோன்றியது. ஆனால் அந்த வானம்பாடிகளோ அவை எட்டிப்பிடிக்கும் அளவு தூரம் வரும் வரை சும்மா இருந்து விட்டு திடீரென்று வேண்டா வெறுப்புடன் உயரப் பறந்து பால்நிற வான வெளியிலேயே மறைந்துவிடும். அங்கிருந்து அவை தங்களது இனிமையான கீதங்களை மீண்டும் காது குளிர இசைத்தன.

மாரிக்காலத்தின் தொடக்கத்தில், பனித்திட்டுகள் உரு கத் தொடங்கியவுடன், கவர்ச்சியற்றதாய் இருந்தும் அவற் றின் கவனத்தை ஈர்த்த அந்தப் பகுதிக்கு, இந்த வானம் பாடிகள் பறந்து வந்து, முதலாண்டு முளைத்து வாடிப் போன புற்களின் காய்ந்த சருகுகளை வைத்துக் கூடுகட்டி, தங்களது குஞ்சுகளை வளர்க்கும் மனிதன் தன் குழந்தைப் பருவம் முதல் கேட்டும் அநுபவித்தும் மகிழும் தங்களது இன்னிசையை, அந்தக் கவர்ச்சியற்ற புல்வெளியில் அவை முதிர் வேனிற்காலம் வரை இசைத்துக்கொண்டே இருக்

கும். குதிரைக் குளம்புபட்ட குழியில் மிகத் திறமையுடன் பின்னப் பட்டிருந்த ஒரு கூட்டின்மீது தவீதவ் காலால் மிதித்து விடப் போனான். காலை அவசரமாக எடுத்து விட்டு, குனிந்து பார்த்தான். அது ஒரு காலியான பழைய கூடு. மழைபட்டு ஒட்டியிருந்த சிறிய சிறகுகளையும், முட்டைத் தோளையும் பார்த்தான்.

''தாய்க்குருவி குஞ்சுகளை எல்லாம் தூக்கிக் கொண்டு போய்விட்டது போலும். வானம்பாடிக் குஞ்சுகள் எப்படி இருக்குமோ என வியக்கிறேன். நான் சின்னப் பையனாக இருந்தபோது பார்த்ததாகக்கூட எனக்கு நினைவில்லையே'' என்று எண்ணிக் கொண்டான் தவீதவ். பிறகு துக்கதோடு புன்னகை செய்தான். ''சின்னஞ்சிறு பறவை கூட கூடு கட்டு கின்றது. தன்னுடைய குடும்பத்தைத் தானாகவே வளர்க் கின்றது. ஆனால் நானோ இங்கு, கடந்த நாற்பதாண்டுகளாக பிரம்மச்சாரியாக காலத்தை ஒட்டிக் கொண்டிருக்கிறேன். நான் என்றைக்காவது என்னுடைய குழந்தைகளை வளர்க் கப் போகிறேனா?.. என்னுடைய தள்ளாத வயதில் தான் நான் திருமணம் செய்து கொள்வேன் போலும்?''

குப்ரியானவ்னா மாதிரி பருமனான உடலுடைய ஒரு பெண்ணுடனும், பல வயதுள்ள குழந்தைகளுடனும் கூட் டாகக் குடித்தனம் நடத்தும் ஒரு வாழ்க்கையை நினைத்த வுடன் திடீரென்று சிரித்துக் கொண்டான். இப்படிப்பட்ட படங்களை நகரங்களில் புகைப்படம் பிடிக்கும் ஸ்டுடி யோக்களில் வெளியில் காட்சிக்காகத் தொங்கவிடப்பட் டிருப்பதைப் பார்த்து இருக்கிறான். திடீரென்று திருமணத் தைப் பற்றி இவ்வாறு நினைத்தது அவமானமாகவும், முட் டாள்தனமாகவும் பட்டது. அருவருப்புடன் வேண்டாமென கையை ஆட்டிக்கொண்டே கிராமத்தை நோக்கி மகிழ்ச்சி யுடன் நடந்தான்.

வீட்டிற்கு நேராகப் போகாமல் கூட்டுப்பண்ணை அலு வலகத்துக்குப் போனான் தவீதவ். நகூல்னவைப் பார்த்து நடந்தவைப் பற்றி முழுவிபரம் அறிய அவன் துடித்தான்.

புல் மண்டிக் கிடந்த, நிர்வாக அலுவலகத்தின் பரந்த முற்றத்தில் சந்தடியே இல்லாமல் வெறிச்சோடிக் கிடந் தது. அக்கம் பக்கத்து வீட்டுக் கோழிகள் சில கொட்டடி அருகில் சாணத்தைக் கிளறிக் கொண்டிருந்தன. கொட்டடிக் கருகில் இருந்த வைக்கோற்போர் அருகில் அசையாமல்

ஆழ்ந்த தியானத்தில் நின்று கொண்டிருந்தது த்ரஃபீம் ஆட்டுக்கடா. தவீதவைக் கண்டவுடன் அது உயிர் பெற்றெழுந்தது. சவால் விடுவதைப் போல தாடியை ஆட்டிற்று. தரையில் கால்களைக் 'கொன்றிப்' போட்டது. குறுக்கிட முயலும் புதிய ஆள் மீது வேகமாகப் பாய முனைந்தது. பாதி தூரம் வந்தவுடன் தலையைக் கவிழ்த்தது. அதனுடைய குஞ்சவாலை உயர்த்தி பாய்ந்தது. தவீதவுக்கு அதனுடைய நோக்கம் புலப்பட்டு விட்டதால் புன்னகை செய்துக் கொண்டே நின்று, தாடிக்காரனின் சவாலை ஏற்கத் தயாரானான்.

''ஒகோ! கூட்டுப்பண்ணைத் தலைவரை நீ வரவேற்கும் முறை இதுதானா? கிழட்டுப் பிசாசே! இந்தத் தடவை உன்னைப் பந்தாடுகிறேனா இல்லையா என்று பார்?'' தவீதவ் சிரித்துக்கொண்டே இவ்வாறு சொல்லிவிட்டு, அதனுடைய வளைந்த சுருள் கொம்பைப் பிடித்தான். ''இப்பொழுது அலுவலகத்துக்குள் வா. ஷ்சுக்காருடைய நண்பரல்லவா நீ, சோம்பேறிக் கழுதை! வா, உனக்கு சரியானக் கொடுக்கிறேன்!''

த்ரஃபீம் முழுக்கப் பணிவடக்கத்துடன் நடந்துகொண்டது. தவீதவுக்குப் பின்னால் மூச்சுவிடாமல் நடந்தது. நடுநடுவே கொம்பை ஆட்டி விடுவித்துக் கொள்ள முயற்சித்துப் பார்த்தது. முற்றத்தின் முதற்படியில் ஏறும்பொழுது நான்கு கால்களையும் வைத்து முறித்து நின்றது. தவீதவ் இழுப்பதை நிறுத்தியவுடன் அவனிடமே நெருங்கி வந்தது. பழுப்புநிற நாக்கைத் துழாவிக்கொண்டு பையில் மோப்பம் பிடிக்கத் தொடங்கியது.

தவீதவ் தலையை ஆட்டிக்கொண்டே, ஆட்டுக்குப் புரிகிற தொனியில் கோபமாக, ''த்ரஃபீம், த்ரஃபீம்! இங்கே கவனி! நீயோ ஒரு கிழட்டு ஆசாமி. சொல்லப்போனால் ஓய்வுகால ஊதியம் பெறும் ஆட்களில் நீயும் ஒருவன். இருந்தாலும் நீ உன்னுடைய தந்திரத்தை விட மாட்டாய். நீ சந்திக்கிற ஒவ்வொரு ஆளுடனும் சண்டை போடப் பார்க்கிறாய். அது முடியாமற் போய்விட்டால் ரொட்டிக்காக மன்றாடத் தொடங்கி விடுகிறாய். நான் உன்னைப் பொருட்படுத்தவே இல்லை. ஆமாம்! உன்னைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. உண்மையாகத்தான்! அங்கே என்ன வாசனை வீசுகிறது?''

புகையிலைப் பை, தீப்பெட்டி இவற்றிற்கடியில் நீண்ட நாட்களாகக் காய்ந்த ரொட்டித் துண்டு ஒன்று கிடந்தது. அதில் ஒட்டியிருந்த புகையிலைத் துணுக்குகளை எல்லாம் நன்றாகத் துடைத்து விட்டு, என்ன காரணத்தாலோ தானும் முகர்ந்து பார்த்து விட்டு, கிடாய்க்குக் கொடுத்தான். கிடாய், தலையை ஒரு மாதிரி பார்த்துவிட்டு, கொடுத்த சிறிய ரொட்டித் துண்டை அலட்சியமாகப் பார்த்துப்பின் முற்றத்தை விட்டுக் கம்பீரமாக நடந்தது.

அடக்க முடியாத எரிச்சலுடன், ''உனக்குப் பசியாக இருக்க முடியாது. நீ பட்டாளத்தில் இருந்ததில்லை, சனியனே. இருந்திருந்தால் கொடுத்த இந்தச் சிறிய துண்டையும் மகிழ்ச்சியோடு ஏற்று இருப்பாய்! புகையிலை மணம் வீசுகிறதா? அதனால் என்ன? பெரிய ராஜ குடும்ப ரத்தம் ஓடுகிறாற் போல இருக்கிறது. மிகவும் பிகு பண்ணிக் கொள்கிறாயே! பொறுக்கியெடுத்துச் சாப்பிடுகிறாயே, பரவாயில்லையே. இதுதான் விஷயம்!'' என்று பொரிந்து விழுந்தான் தவீதவ்.

ரொட்டித் துண்டை விட்டெறிந்தான் தவீதவ். குளிர்ந்த பாதைவழியாக உள்ளே போனான். ஒரு குவளை நிறைய, இரும்புப் பானையில் இருந்த தண்ணீரை மொண்டு தாகத்தோடு குடித்தான். அப்பொழுதுதான் பயணமும், வெயிலும் எவ்வளவு களைப்பை ஏற்படுத்தின என்பதை உணர்ந்தான்.

அலுவலகத்தில் ரஸ்மியோத்னவையும், கூட்டுப்பண்ணைக் கணக்கனையும் தவிர வேறு யாருமே இல்லை. தவீதவைப் பார்த்தவுடன் ரஸ்மியோத்னவின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

''ஐயா பெரியவரே, திரும்பிவிட்டாயா? என் தோள்களில் எவ்வளவு பெரிய சுமை அப்பாடா! இந்தக் கூட்டுப் பண்ணை நிர்வாகப் பொறுப்பு ஒரு தலைவலி! இந்தப் பொறுப்பில் யாருமே மாட்டிக்கொள்ளக் கூடாது என்று நான் நினைக்கிறேன். அடுப்புக்குப் போதுமான நிலக்கரி இல்லை, தண்ணீர்க் குழாய் வெடித்து விட்டது. முதலில் ஒன்று, பிறகு அடுத்தது... அப்படியே படிப்படியாக இந்த வேலை எனக்கு ஒருபோதும் ஒத்துவராது. இங்கு, மேலும் ஒரு வாரம் இருந்தால் அவ்வளவுதான். என் உதறலையே நீங்கள் எல்லாம் வேடிக்கை பார்க்கலாம்!''

''மக்கார் எப்படி இருக்கிறான்?''

''உயிரோடிருக்கிறான்.''

''அது தெரியும். ஆனால் குண்டு அதிர்ச்சி எப்படி இருக்கிறது?''

ரஸ்மியோத்னவ் முகத்தைச் சுளித்தான். ''குண்டு பட்டு அதிர்ச்சியா? 'புல்லட்'டில் அதிர்ச்சி எப்படி வரும்? மூன்று அங்குலச் சுற்றளவுள்ள துப்பாக்கி வைத்து அவர்கள் அவனைத்தாக்க வில்லை. தலையை லேசாக ஆட்டிவிட்டு, கொஞ்சம்போல வோத்காவை அதன்மேல் ஊற்றிக்கொண்டு, மீதமிருந்ததைக் குடித்துக் காலி பண்ணிவிட்டான். அவ்வளவு தான்.''

''இப்பொழுது எங்கே இருக்கிறான்?''

''ஒரு குழுவிடம் போயிருக்கிறான்.''

''ஆனால் இது எப்படி நடந்தது?''

''ரொம்ப சாதாரணமாகத்தான். திறந்த சன்னலோரமாக இரவு நேரத்தில் மக்கார் உட்கார்ந்திருந்தான். மேசையின் மறு புறத்தில் நமது புதிய அறிஞரான ஷ்சுக்கார் அமர்ந்திருந்தான். யாரோ ஒருவன் ரைபிளை வைத்து இவனைக் குறி பார்த்துவிட்டான். யார் செய்ததோ? அந்த இருட்டு இரவுக்குத்தான் தெரியும். ஆனால் ஒன்று மட்டும் தெளிவு. ரைபிளைப் பயன்படுத்தியவன் ஓர் அசமந்தனாகத் தான் இருக்க வேண்டும்.''

''ஏன் தெளிவு என்கிறாய்?''

ரஸ்மியோத்னவின் புருவங்கள் வியப்பால் உயர்ந்து நின்றன.

'' 'ஏனா'? முப்பது எட்டுத்தூரத்தில் ரைபிளால் சுடும் பொழுது குறி தவறுவானா? காலையில் அவன் இருந்து சுட்ட இடத்தைப் பார்த்தோம். ஒரு காலித் தோட்டா அங்கு கிடந்தது. தூரத்தை நானே அளந்தேன். அந்த வேலியிலிருந்து வீடுவரை இருபத்தியெட்டு எட்டுக்கள் தான்.''

''இரவு நேரத்தில் முப்பது எட்டு தூரத்தில் கூட தவறலாமே.''

''இல்லை, முடியாது!'' என்று காட்டமாகப் பதில் சொன்னான் ரஸ்மியோத்னவ். ''நான் குறிதவறியிருக்க மாட்டேன்! நீ விரும்பினால், நாம் சோதித்துப் பார்த்து விடலாம். இன்றிரவு என் கையில் ஒரு ரைபிளைக் கொடுத்து

விட்டு மக்கார் உட்கார்ந்த இடத்தில் நீ போய் உட்கார்ந்து கொள். உன் கண்களுக்கிடையில் குண்டால் ஓர் அழகான ஓட்டை போட்டு விடுகிறேன். அதற்கு அருத்தம் என்ன? சுட்டவன் சரியான போர்வீரனே அல்ல.''

''சரி, மேலும் விவரங்களைச் சொல்லு.''

''நல்ல நடுநிசி. கிராமத்தில் துப்பாக்கி வெடிப்பது நள்ளிரவில் எனக்குக் கேட்டது. ஒரு ரைபிள் வேட்டு, பின்னர் பிஸ்டலின் இரண்டு மெதுவான சத்தங்கள், மீண்டும் ரைபிளிலிருந்து ஒரு வேட்டு, இதை எல்லாம் சத்தத்தில் இருந்தே சொல்லிவிடலாம். தலையணைக்கடியிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, கால்சட்டையைப் போட்டுக் கொண்டே ஓடினேன். துப்பாக்கிச் சத்தம் மக்கார் வீட்டிலிருந்து வருவதுபோல் கேட்டது. எனவே நான் அங்கு ஓடினேன். மக்கார் ஏதோ கிண்டல் செய்கிறான் என்றுதான் நினைத்தேன்...

''அங்கு போய்ச் சேர எனக்கு ஒரு நொடிகூடப் பிடிக்கவில்லை. கதவைத் தட்டினேன். கதவு பூட்டியிருந்தது. ஆனால் வேதனை தாங்காமல் யாரோ முணங்கும் சப்தம் உள்ளே பரிதாபமாகக் கேட்டது எனவே, தோளால் கதவில் இரண்டு இடி இடித்து, தாழ்ப்பாளை முறித்துக்கொண்டு உள்ளே போய் தீக்குச்சியைக் கொளுத்தினேன். சமையலறையில் படுக்கைக்கடியில் இரண்டு கால்கள் மட்டும் நீட்டிக்கொண்டிருந்தன. அவற்றைப் பிடித்து இழுத்தேன். அட கடவுளே! படுக்கைக்கடியில் இருந்து என்ன அலறல் அலறினான் தெரியுமா? சரியான பன்றி மாதிரி! எனக்குக் கொஞ்சம் பயம்தான், ஆனால் நான் விடவே இல்லை. சமையலறையின் மையம் வரை காலைப் பிடித்து இழுத்தேன். அது வேறுயாரும் அல்ல, ஓர் ஆண் கூட இல்லை. மக்காரின் வீட்டுக்கார கிழட்டு அம்மா. மக்கார் எங்கே என்று கேட்டேன். ஆனால் அவள் இருந்த பயத்தில் அவளால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை.

''எனவே மக்காரின் அறைக்குள் விரைந்தேன். ஏதோ மிருதுவான ஒன்றின்மீது தடுமாறி நின்றேன். 'மக்கார்தான் கொல்லப்பட்டுக் கிடக்கிறானோ, இதுதான் அவன்' என்ற எண்ணம் என் உள்ளத்தில் ஈட்டிபோலப் பாய்ந்துவிட்டது: எப்படியோ சமாளித்துக்கொண்டு மீண்டும் ஒரு தீக்குச்சியைக் கொளுத்தினேன். தரையில் ஷ்சுக்கார் தாத்தா படுத்துக்

கிடந்ததைப் பார்த்தேன். ஒரு கண் மூடியும், ஒரு கண் திறந்தவாறு என்னைப் பார்த்துக்கொண்டும் இருந்தது. அவனது நெற்றியிலும், கன்னத்திலும் ரத்தம் தோய்ந்திருந்தது. 'நீ உயிரோடிருக்கிறாயா?' 'மக்கார் எங்கே?' என்று கேட்டேன். அவனோ, 'அந்திரேய், கடவுள் பெயரால் கேட்கிறேன்: நான் உயிரோடிருக்கிறேனா என்று சொல்' என்று என்னைத் திருப்பிக் கேட்டான். அவன் குரல் மிக மிருதுவாகவும், தாழ்ந்த தொனியிலும் இருந்ததால், அவன் உயிர் போய்க் கொண்டிருக்கிறது போலும் என்று நினைத்து விட்டேன்... எனவே ஆறுதல் கூற எண்ணி, 'நீ நாக்கை பயன்படுத்துவதிலிருந்தே, உயிருடன் இருக்கிறாய் என்பது தெரியவில்லையா? ஆனால் உடல்தான் ஒரு மாதிரி பிண வாடை வீசத் தொடங்கி விட்டது...' என்றேன். அவன் மிகவும் அழுதுவிட்டான். 'என் ஆத்மா, என் உடலைவிட்டுப் போய்க் கொண்டிருக்கிறது போலும். அதுதான் அப்படி வாடை வீசுகிறது. நான் இப்பொழுது உயிருடன் இருக்கலாம். ஆனால் விரைவில் செத்துப் போவேன். என் தலையில் ஒரு குண்டு இருக்கிறதே.' ''

''என்ன சொன்னாய்?'' என்று தவீதவ் பொறுமையிழந்தவனாகக் குறுக்கிட்டான். ''ஆனால் அவன் முகத்தில் எப்படி ரத்தம் வந்தது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! அவனும் காயம்பட்டு விட்டானா, என்ன?''

குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக்கொண்டே ரஸ்மியோத்னவ் தொடர்ந்தான்: ''யாருமே காயம் பட்டிருக்கவில்லை. எல்லாமே நன்றாகப் போய்விட்டது. எதற்கும் முன்னெச்சரிக்கையாக சன்னல் கதவுகளை மூடிவிட்டு விளக்கைப் பொருத்தினேன். ஷ்சுக்கார் இன்னும் தரையில் படுத்துகொண்டுதானிருந்தான். இப்பொழுது அடுத்த கண்ணையும் மூடிக்கொண்டான். கைகளைக் குவித்து வயிற்றின் மேல் வைத்திருந்தான். சவப்பெட்டியில் கிடப்பவன் மாதிரி ஆடாமல் அசையாமல் கிடந்தான். அவ்வளவுதான்! சலனமே இல்லை. சவம் மாதிரியே கிடந்தான். மிகச் சின்னக் கீச்சுக் குரலில், 'கடவுளுக்குப் புண்ணியமாகப் போகட்டும். என் வீட்டுக்குப் போய் என் கிழவியைக் கூப்பிட்டுக் கொண்டுவா. நான் சாவதற்கு முன் அவளிடமிருந்து விடைபெற்றுக்கொள்ள வேண்டும்' என்று என்னிடம் கேட்டுக் கொண்டான்.

''ஆகையால் குனிந்து, அவன்மீது விளக்கைத் திருப்பி னேன்.'' ரஸ்மியோத்னவ் கொஞ்சம் செருமி, தும்மிச் சிரிப்பை அடக்கிக் கொண்டான். ''விளக்கு வெளிச்சத்தில், ஷ்சுக்காரின் நெற்றியில் ஒரு சிராய் பாய்ந்திருப்பதைப் பார்த்தேன்... சன்னல் கதவிலிருந்து அந்தக் குண்டு ஒரு சிராயைப் பிய்த்துக்கொண்டு போயிருந்தது. அது அவனது நெற்றியில் பாய்ந்திருந்தது. அது நெற்றித் தோலைக் கிழித்துவிட்டது. அவ்வளவுதான். குண்டு பட்டு விட்டது என்று நினைத்துச் சுருண்டு விழுந்தே விட்டான் அவன். என் கண் முன்னால் கிழவன் செத்துக் கொண்டிருந்தான். ஆனால் ஒரு கோளாறும் இல்லை. என்னால் சிரிப்பை அடக் கவே முடியவில்லை. நெற்றியில் இருந்த சிராயை உருவி எடுத்துவிட்டு, 'குண்டை உன் மூளையிலிருந்து எடுத்து விட் டேன். எழுந்திரு. சும்மா படுத்திராதே. மக்கார் எங்கே போயிருக்கிறான் என்பதை மட்டும் சொல்' என்றேன்.

''நான் மறுபடியும் ஷ்சுக்கார் தாத்தாவைப் பார்த்த போது அவன் தெளிவாகக் காணப்பட்டான். ஆனால் நானி ருக்கும் பொழுது எழுவதற்குக் கொஞ்சம் வெட்கப்பட்டது போலக் காணப்பட்டது. தரையிலேயே உருண்டு கொண் டிருந்தான், ஆனால் எழவே இல்லை. எனினும் படுத்துக் கொண்டே அந்த கோணிப் புளுகன் அவன் கதையை அளந்துவிடத் தொடங்கிவிட்டான். 'எதிரிகள் என்னை நோக்கிச் சுட்டார்கள். குண்டு சரியாக நெற்றியில் பாய்ந்து விட்டது. நெற்றியில் கோடரியால் அடிபட்டவன் மாதிரி நினைவிழந்து மூர்ச்சையுற்று நான் வீழ்ந்துவிட்டேன். விளக்கை அணைத்துவிட்டு நகூல்னவ் சன்னல் வழியாக குதித்து எங்கோ ஓடிவிட்டான். இப்படியும் ஒரு நண்பனைப் பார்த்தாயா? நான் ஏறத்தாழ சாகும் நிலையில் காயம் பட்டுக் கிடக்கிறேன். இவனோ, என்னை எதிரிகளிடம் விட்டு விட்டு தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓட்டம் எடுக் கிறான். அந்திரேய், என்னைக் கொல்லப் பார்த்த அந்தக் குண்டைக் காட்டேன் பார்ப்போம். கடவுள் புண்ணியத் தில் நான் உயிருடனிருந்தால், என் மனைவி தொழும் புனித பீடத்தடியில் இந்தக் குண்டைப் பத்திரப் படுத்தி வைப் பேன்!'

'' 'இல்லை, அது முழுக்க ரத்தம் தோய்ந்து இருக் கிறது. அதை நீ பார்த்தால் மயக்கம் போட்டு விழுந்தாலும்

விழுந்துவிடுவாய்' என்று நான் சொல்லிவிட்டு, 'இந்தப் புகழ்மிக்க குண்டை நாம் ரஸ்தோவ் நகரத்துக்கு அனுப்பி அங்கு இதை ஒரு நினைவுச் சின்னமாக வைக்கச் சொல்வோம்' என்றேன். இதைக் கேட்டு மேலும் உற்சாகம் அடைந்த கிழவன் படுக்கையில் ஒரு பக்கமாக உருண்டு படுத்தவாறே, 'இல்லையா அந்திரேய், எதிரிகளின் இந்தத் தாக்குதலில் இருந்து தப்பியதற்காகவும், வீரமிக்க இந்தக் காயத்திற்காகவும் மேலிடத்தில் இருப்பவர்கள் ஏதாவது பதக்கம் கொடுத்தாலும் கொடுக்கலாம் அல்லவா?' என் றான். ஆனால் அது என் பொறுமையைக் கொஞ்சம் அதிக மாகச் சோதிப்பதாக இருந்தது. எனவே சிராயை அவர் கையில் திணித்து, 'இதுதான் உன் குண்டு' என்றேன். 'இது ஒன்றும் அருங்காட்சியகத்திற்கு ஆகாது. இதைத் தொழு பீடத்தில் தான் வைக்கலாம். இப்பொழுது கிணற் றுக்குப் போய் உன் வீர மேனியைக் கழுவிச் சுத்தமாக எழுந்துவா, இப்பொழுது ஆட்டுக்கிடை நாற்றம் தான் நாறுகிறது' என்றேன்.

''அதன் பிறகு ஷ்சுக்கார் ஒன்றும் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. மக்கார் திரும்பி வந்தான். தூக்கி எறியப் பட்ட குதிரை மாதிரி பெருமூச்சு விட்டுக் கொண்டு மேசை யருகில் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் உட்கார்ந்தான். கொஞ்சம் மூச்சு வாங்கிக்கொண்டு, 'அயோக்கியன் தப்பி விட்டான்! இரு முறை சுட்டேன். இருட்டு ஆகையால் குறி பார்க்க முடியவில்லை. சும்மா ஒரு நிதானத்தில் சுட்டேன். தவறிவிட்டது. அவனும் ஒரு விநாடி நின்று மறுபடியும் ஒரு முறை என்னைச் சுட்டான், என் சட்டையை ஏதோ உராசிக் கொண்டு போனதை உணர்ந்தேன்'. அவன் சட் டையை இழுத்துக் காட்டினான். உண்மையாகவே இடை வார்க்கு மேல் வலது பக்கத்து மடிப்பில் ஓர் ஓட்டை போட்டுக்கொண்டு போயிருந்தது. நீ அவனை யாரென்று பார்க்கவில்லையா? என்று கேட்டேன். அவன் சிரித்தான். 'எனக்கு ஒன்றும் ஆந்தைக் கண்கள் இல்லையே. எனக்குத் தெரிந்ததெல்லாம்,அவன் ஓர் இளைஞன்.ஏனெனில் குறியை மிஞ்சி மிக விரைவாகத் தப்பிக்கிறான்! ஒரு கிழவனால் இப்படி ஓட முடியாது. நான் அவனைப் பின்தொடர்ந்து ஓடினேன். ஆனால் ஒன்றும் பயனில்லை! குதிரைக்காரன் கூட அவனைப் பிடித்திருக்க முடியாது' என்றான். 'எதற்

காக இத்தகைய சங்கடங்களில் மாட்டிக் கொள்கிறாய்? அவனுடன் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியாமல், அவனைப் பின் தொடர்ந்து ஓடுவதா? அவனைப் போலவே இரண்டு பேர், உனக்காக வேலியோரம் காத்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று யோசித்துப்பார்.ஒரே ஓர் ஆள் மட்டும் இருந்திருந்தால் கூட, கிட்ட நெருங்கவிட்டு சரியாகக் குறி பார்த்துச் சுட்டுத் தீர்த்திருப்பானே' என்று நான் சொன்னேன். ஆனால், இப்படி எல்லாம் பேசி மக்காரை ஒப்புக்கொள்ள வைக்க முடியுமா? 'நான் என்ன செய்திருக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாய்?' என்று அவன் கேட்டான். 'விளக்கை அணைத்துவிட்டு, கட்டிலடியில் நுழைந்துகொள்ளச் சொல்கிறாயா?' என்றான். இது தான் நடந்த முழு விபரம். இந்தக் குண்டு அடியால் மக்காருக்கு ஏற்பட்டது ஜலதோஷம் தான்.''

''ஜலதோஷத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''யாருக்குத் தெரியும்? அவன் அப்படிச் சொல்கிறான். எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. எதற்காக சிரிக்கிறாய்? உண்மையாகவே அந்தத் துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு அவனுக்குப் பயங்கரத் ஜலதோஷம்தான். ஆறு மாதிரித்தான் மூக்கு வடிந்துகொண்டிருந்தது. தும்மல் போட்டால் ஏதோ எந்திரத் துப்பாக்கி வெடிக்கிறது என்று யாரும் நினைப்பார்கள்.''

''படிப்புவாசனை இல்லாததன் விளைவு'' என்று இதை ஒப்புக்கொள்ளாத முறையில் குறுக்கிட்டுச் சொன்னான் கூட்டுப்பண்ணைக் கணக்கன். வயதில் மூத்தவனாகிய இவன் ஒரு காலத்தில் பட்டாளத்தில் எழுத்தராக இருந்தவன். வெள்ளி முலாம் பூசப்பட்ட மூக்குக் கண்ணாடியை நெற்றியில் ஏற்றிக்கொண்டு, ''இது தோழர் நகூல்னவ் தனது கல்வி அறிவின்மையைக் காட்டிக் கொண்டார். அவ்வளவு தான்!''

''இந்தக் காலத்தில் படிக்காதவர்கள் தான் தொல்லையை அநுபவிக்க நேரிடுகிறது'' என்று கடுப்புடன் சிரித்துக் கொண்டே சொன்னான் ரஸ்மியோத்னவ். ''நீ அதிகம் படித்த ஆள். அந்த மணிச் சட்டத்தை உருட்டி எண்ணிப் பார்த்துத்தான் கணக்குப் பார்க்கிறாய். ஆனால் உன்னைக் குறிபார்த்துச் சுடாமல், நகூல்னவைப் பார்த்தல்லவா சுட்டு இருக்கிறார்கள்...'' என்றான். பிறகு தவீதவைப் பார்த்து,

''நான் அதிகாலையில் அவனைப் பார்க்கப் போனேன். துணை மருத்துவரோடு ஏதோ விவாதித்துக் கொண்டு இருந் தான். எனக்குத் தலையும் புரியவில்லை வாலும் புரிய வில்லை! பனியில் இரவு நேரத்தில் வெகு நேரம் திறந்த சன்னலோரம் உட்கார்ந்திருந்ததால் தான் தடுமன் பிடித்துக் கொண்டது என்றார் துணை மருத்துவர். ஆனால் மூக் கிலிருக்கும் ஒரு நரம்பில் குண்டு உராசிவிட்டதால் தான் தடு மன் வந்தது என்றான் மக்கார். 'குண்டு உன் நெற்றியைத் தானே தடவிச்சென்றது, அப்படியிருக்க மூக்கு நரம்பை எப்படித் தொட முடியும்?' என்று துணை மருத்துவர் கேட்டார். இதற்கு மக்கார் சொல்கிறான். 'அது எப்படித் தொட்டது என்பது உனக்குத் தேவையில்லாத வேலை. தொட்டது என்பது உண்மை. இந்த நரம்புத் தடுமனை குணப்படுத்த வேண்டியது உனது வேலை. உனக்குத் தெரி யாத ஒன்றைப் பற்றி உன்னிடம் நான் விவாதிக்க வேண்டிய தில்லை.'

''கோவேறு கழுதை மாதிரி விடாப்பிடியாக நின்றான் மக்கார். ஆனால் அந்தக் கிழட்டு துணை மருத்துவரும் அதற்கும் மேலாக நின்றார். 'முட்டாள்தனமாக இப்படிப் பட்ட யோசனைகளை எல்லாம் சொல்லி என்னைத் தொந் தரவு செய்யாதே! நரம்பில் கோளாறு என்றால், ஒரு கண் தான் பாதிக்கப் படுமேயன்றி, இரண்டுமல்ல. ஒரு கன்னம் தான் பாதிக்கப் படுமேயன்றி இரு கன்னங்களும் அல்ல. அதுபோல, உனக்கு ஒரு மூக்கில் தடுமன் பிடிக்காமல், இரண் டிலும் சேர்த்துப் பிடித்திருப்பது ஏன்? நீ பனியில் இருந்தது தான் இதற்குக் காரணம்' என்றார் அவர்.

''மக்கார் ஒரு விநாடி அமைதியாக இருந்தான். பிறகு கேட்டான்: இங்கே பார், கம்பெனி துணை மருத்துவனே, உன் காதுகளில் யாராவது குத்துவிட்டது உண்டா?'

''ஏதாவது சங்கடம் நேர்ந்தால், உரிய நேரத்தில் கையைப் பிடித்து நிறுத்தலாம் என்று அவன் பக்கமாகப் போய் நான் நின்றேன். துணை மருத்துவனோ இதற்கு நேர் எதிர்மாறாக நகர்ந்தான். அவன் மக்காரை விட்டு அப்பால் நகர்ந்தான். கதவில் ஒரு கண் வைத்தவாறே, 'இல்—ல்—லை, கடவுள் அதிலிருந்து என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறார். அதைப்பற்றி ஏன் அறிய வேண்டும் என விரும்புகிறாய்?'

''மக்கார் மறுபடியும் கேட்டான்: 'சரி! நான் இப்பொழுது உன் இடது காதில் முட்டியால் குத்துவிடுகிறேன் என்று வைத்துக்கொள். உன் இடது காது மட்டும் தான் 'கொய்ங்' என்று இரையும் என நினைக்கிறாயா? நினைவிருக்கட்டும் இரண்டு காதிலும் இடியோசை கேட்கும், சாகும்வரை மறக்க முடியாது.'

''துணை மருத்துவர் நாற்காலியில் இருந்து எழுந்து கதவை நோக்கி நடந்தான். மக்கார் சொல்கிறான்: 'நிதானத்தை இழக்காது உட்கார். நான் ஒன்றும் உன்னைக் குத்தப் போவதில்லை. ஓர் உதாரணத்தைத் தான் சொல்லிக் கொண்டிருந்தேன் தெரியுமா?'

''துணை மருத்துவர் எதற்காகக் கோபப்பட வேண்டும்? அவன் தான் முன்னெச்சரிக்கையாகக் கதவை நோக்கி நடந்து கொண்டிருந்தானே. மக்கார் சொன்ன பிறகு அவன் நாற்காலியின் விளிம்பில் உட்கார்ந்தான், அப்புறமும் கதவைத் திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டிருந்தான்.. மக்கார் கைமுட்டியை உருட்டித்திரட்டி, அதை இதற்கு முன் பார்த்திராதவனைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, 'நான் மறுபடியும் மேலும் ஒரு குத்து காதில் விடுகிறேன் என்று வைத்துக்கொள். அப்பொழுது என்ன நடக்கும் என்று நினைக்கிறாய்?' துணை மருத்துவர் மீண்டும் எழுந்து கதவை நோக்கி நடந்தான். கதவுக் கை பிடியைப் பிடித்தவாறு நின்றுகொண்டு, 'நீங்கள் கொஞ்சங் கூட அறிவில்லாமல் உளறிக்கொண்டிக்கிறீர்கள்! உங்களுடைய கை முட்டிக்கும், மருந்துக்குமோ நரம்புகளுக்குமோ சம்பந்தமே இல்லை!' என்று சொன்னான். 'இல்லை, உண்டு' என்று பதில் சொன்னான் மக்கார். பழைய படியும் மருத்துவரை உட்காரச் சொல்லி நாற்காலியைக் காட்டினான். ஆனால் என்ன காரணமோ, துணை மருத்துவனுக்கு வியர்த்து கொட்டத் தொடங்கி விட்டது. அவன் அவசரமாக நோயாளிகளைப் பார்க்கப் போக வேண்டியிருப்பதாகச் சொன்னான். ஆனால் நோயாளிகள் சிறிது நேரம் காத்திருக்கலாம் எனவும், விவாதம் தொடர வேண்டும், தான் மருத்துவ விஞ்ஞானத்தில் ஒரு சிலவற்றை அவனுக்குக் விளக்க முடியும் என்றும் அவன் சொன்னான்.''

தவீதவ் அசட்டையுடன் சிரித்தான். கணக்கனோ கிழவிகளைப்போல குலுங்கிச் சிரித்தான், வாயைக் கையால்

மூடிக்கொண்டான். ஆனால் ரஸ்மியோத்னவ் இதை எல்லாம் பொருட்படுத்தாமல் தொடர்ந்து சொன்னான்:

"'இங்கே கவனி' என்றான் மக்கார், 'நான் இரண்டு குத்து விட்டால், ஒரு கண்ணில் மட்டும் தான் கண்ணீர் வரும் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். பழுத்த தக்காளிப்பழத்திலிருந்து சாறு வழிவது மாதிரி இரு கண்களில் இருந்தும் பொலபொலவென்று வடியும். இது குறித்து என்னை நீ நம்பலாம்! இது போலத்தான் நரம்புக் கோளாறால் வரும் தடுமனும். இடது மூக்கு வழிந்தால் வலது பக்கமும் ஒழுகித்தான் தீர வேண்டும். நான் சொல்வது புரிந்து விட்டதா?' துணை மருத்துவர் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு சொன்னான்: 'மருந்து பற்றி எதுவும் தெரியாவிட்டால் சும்மா இருங்கள். இப்படிக் கண்டதையும் போட்டுக் குழப்பி உளறக்கூடாது. நான் சொல்கிற மருந்தை உபயோகிக்க வேண்டும்'. இது மக்காரைக் குதிக்க வைத்துவிட்டது. முகட்டைக்கூடக் குதித்து இடித்து விட்டான் போல இருந்தது! பிறகு சத்தம் போட்டான், அது அவன் குரல் போலவே இல்லை. 'எனக்கு மருத்துவம் பற்றி ஒன்றும் தெரியாதா?! ஏ பழம் பொட்டலமே! ஜெர்மன் போரில் நான் நான்கு முறை குண்டுக் காயம் பட்டேன். இரண்டு முறை குண்டுச் சிதறகளின் தாக்குதலால் அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளேன். ஒரு முறை புகைத் தாக்குதலிலும் சிக்கியுள்ளேன். உள்நாட்டு போரிலும் மூன்று முறை காயம் பட்டுள்ளேன். நான் பலவிதமான முப்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் இருந்திருக்கிறேன். இருந்தும் எனக்கு மருத்துவம் பற்றித் தெரியாது என்கிறாயே? ஏ வயிற்றோட்ட மாத்திரை, என்னை எந்தெந்த மருத்துவர்கள், பேராசிரியர்கள் கவனித்தார்கள் என்பது உனக்குத் தெரியுமா? ஏ, கிழட்டு முட்டாளே! உன் கற்பனையில் கூட அப்படி ஆட்களை நீ நினைத்திருக்க முடியாது!' இப்பொழுது தான் துணை மருத்துவன் உண்மையாகவே பொறுமையை இழந்தான். தைரியத்தை எங்கிருந்துதான் வரவழைத்தானோ தெரியவில்லை. மக்காரை நோக்கி, அவன் உறுமினான்: 'உங்களை, ரொம்பப் படித்தவர்கள் கவனித்திருக்கலாம். ஆனால் ஒரு மரக்கட்டைக்கு மருத்துவம் எவ்வளவு தெரியுமோ அவ்வளவு தான் உங்களுக்கும் தெரியும்!' இதற்கு மக்கார் சொன்னான்: 'சுவரில் இருக்

கும் துவாரத்துக்கு எவ்வளவு மருத்துவம் தெரியுமோ அவ்வளவுதான் உனக்கும் தெரிந்திருக்கிறது! உனக்குத் தெரிந்ததெல்லாம் குழந்தைகளின் வயிற்றுக் கிழிசலைத் தைத்து விடவும், கிழவர்களுக்கு கோளாறுகள் ஏதாவது ஏற்பட்டால் கவனிக்கவும்தான்! ஓர் ஆட்டுக்குப் பைபிளைப்பற்றித் தெரிவதை விட குறைவாகத்தான் உனக்கு நரம்புகளைப் பற்றித் தெரியும்! விஞ்ஞானத்தின் அந்தப் பிரிவு பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாது என்று நினைக்கிறேன்!'

''இருவரும் வருவரையொருவர் சரமாரியாகப் பொறிந்து தள்ளினர். கடைசியாக கழன்ற நூல் கண்டு மாதிரி துணை மருத்துவர் மக்கார் வீட்டை விட்டுப் போய்விட்டான். மக்கார் சிறிது அமைதியான பிறகு என்னிடம், 'நீ அலுவலகத்திற்குப் போ, நான் வீட்டில் தயாரித்த மருந்தைக் கொஞ்சம் உபயோகித்துவிட்டு வருகிறேன். சமைக்கும் கொழுப்பை வைத்து, மூக்கைத் தேய்த்து விட்டு வருகிறேன்' என்று சொன்னான். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவன் இங்கு வந்தபொழுது நீ அவனைப் பார்த்திருக்க வேண்டும் தவீதவ்! அவனுடைய மூக்கு வீங்கி நல்ல முட்டைக் காளான் மாதிரிப் பெருத்து நீல நிறமாகியிருந்தது. அது ஒரு பக்கமாகச் சாய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவன் மூக்கைப் பிடித்துத் தேய்த்தபோது, அதை மூட்டில் இருந்து அசைத்து இடம் பெயர்த்துவிட்டான் போலும். அவன் மூக்கிலிருந்து வந்த அந்தக் கொழுப்பின் கருகல் நாற்றம் அப்பப்பா! இந்த அலுவலகமே நாறியது. அதைத் தேய்ப்பதன் மூலம் சுகமாக ஆகிவிடும் என்று அவன் நினைத்திருந்தான்... அவனை ஒரு முறைதான் ஏறிட்டுப் பார்த்தேன். அவ்வளவுதான். ஒரே ஓட்டமாக ஓடியே விட்டேன். அவன் தன்னையே உருக்குலைத்து கோரப்படுத்திக் கொண்டிருந்தான்! நீ என்ன செய்துகொண்டாய் என்று கேட்க விரும்பினேன். ஆனால் நான் சிரித்துக் கொண்டிருந்ததில் அதைக் கேட்கக் கூட முடியவில்லை. அவனுக்குப் மட்டு மீறிக் கோபம் வந்து விட்டது. 'சாலையில் ஏதாவது மினுமினுக்கும் பொத்தான் கிடந்ததா? எதற்காக இப்படி எகத்தாளமாக மகிழ்கிறாய்? ஏ, த்ரஃபீம் கிடாய்க் குட்டியே, த்ரஃபீம் ஆட்டுக்கிடாய்க்கு இருக்கிற அளவு மூளைதான் உனக்கும் இருக்கிறது. இந்த அழகில் நல்ல ஆட்களை

யெல்லாம் பார்த்துச் சிரிப்பு ஒரு கேடா?' என்று என்னைப் பார்த்துத் திட்டினான்.

''சொல்லிக் கொண்டே குதிரைக் கொட்டடிக்குப் போனான். நானும் பின் தொடர்ந்தேன். குதிரைச் சேணத்தை எடுத்து பலகை மீது வைத்துக் கொண்டிருந்தான். பிறகு கொட்டடியை விட்டு வெளியே இழுத்துச் சென்றான். இது வரை ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. நான் சிரித்து அவன் கோபத்தை அதிகப்படுத்தி விட்டேனில்லையா? 'எங்கே புறப்பட்டுவிட்டாய்?' என்று நான் கேட்டேன். அவன் என்னைப் பார்த்துப் பல்லைக் கடித்துக்கொண்டு, 'உன்னை அடிப்பதற்கு எங்கு ஒரு குச்சி கிடைக்குமோ அங்கு போகிறேன்!' என்றான். 'இதெல்லாம் எதற்காக?' என்று நான் கேட்டேன். ஆனால் அவன் ஒன்றும் சொல்லவில்லை. நான் அவன் கூடவே நடந்தேன். வீடுவரை பேசாமலேயே நடந்தோம். வீட்டு வாசலில் கடிவாளத்தை என்னிடம் வீசிவிட்டு உள்ளே போனான். மறு விநாடி, ஒரு வாரில் மிக ஒழுங்காக மாட்டிய ரவைகளும், சுழல் துப்பாக்கியுமாக வெளிவந்தான். கையில் ஒரு துண்டு வைத்திருந்தான்...''

''ஒரு துண்டா?'' என்று வியப்புடன் கேட்டான் தவீதவ். ''துண்டு எதற்காக?''

''பயங்கரமாக நீர் கோத்திருந்தது என்று நான் சொல்லவில்லையா? கைத்துண்டோ போதாது, அவனோ நம்மைப் போல் கண்ட இடத்திலும் சிந்த மாட்டான். புல் வெளியில் கூடத்தான்.'' இதைச் சொல்லிவிட்டு ரஸ்மியோத்னவ் நயத்துடன் சிரித்தான். ''அவனைக் குறைத்து மதிப்பிட்டு விடாதே. அவன் ஆங்கிலம் படித்துக்கொண்டிருக்கிறான். பண்பாடு தெரியாதவன்போல நடந்துகொள்ளலாமா?.. எனவேதான் கையில் துண்டை எடுத்துக்கொண்டு போனான். 'உன் தலையில் கட்டுப் போட்டு அந்தக் காயத்தை மறைத்துக் கொள்' என்று நான் சொன்னேன். 'இந்த சிராய்ப்பையா, காயம் என்கிறாய்?! சீ, கோழை! பெண்கள் மாதிரி பிதற்றாதே! நான் என் குழுவிடம் குதிரையில் போகும் போது, தூசி அதன்மீது விழுந்து அதை மூடிக்கொள்ளும். கிழட்டு நாயின் தோல் காய்வது போல அது தானாக மூடிக்கொள்ளும். மற்றவர்கள் விஷயத்தில் அநாவசியமாகத் தலையிடாதே. வீண் புத்திமதி வேண்டாம்!' என்றான்.

''துணை மருத்துவருடன் நடந்த மோதலுக்கும், என்னுடைய சிரிப்புக்கும் பிறகு, மிக மோசமான மனநிலையில் இருந்தான். எனவே, சுழற் துப்பாக்கியை வெளியில் தொங்கப் போட்டுக் கொண்டு போக வேண்டாம் என நான் புத்தி சொன்னேன். அதனால் என்ன பயன்? அவன் என்னைச் சபித்துவிட்டுச் சொல்கிறான்: 'எந்த நேரத்திலும் நான் சுடப்படலாம் என்று இருக்கும் பொழுது, சின்னப் பிள்ளைகளின் கவன்வில்லை வைத்துக்கொண்டு போகச் சொல்கிறாயா? கடந்த எட்டு ஆண்டுகளாக இந்தச் சுழற் துப்பாக்கியைப் பைக்குள் போட்டுக் கொண்டு வருகிறேன். எத்தனை சட்டைகளில் இது ஓட்டை போட்டிருக்கும் தெரியுமா? போதுமான அளவு என்று நினைக்கிறேன்! இனிமேல் இதை நான் வெளிப்படையாகத் தான் தொங்கப் போட்டுக்கொள்ளப் போகிறேன். இதை நான் திருடவில்லை. என் ரத்தத்தால் சம்பாதித்தது. அன்புக்குரிய நமது தோழர் ஃபிரூன்ஸேவின் சார்பாக இதைச் சும்மாவா கொடுக்கப்பட்டது? துப்பாக்கி அடி நுனியிலும் வெள்ளியால் பெயர் செதுக்கியுள்ளது. தோழனே, நீ எதையோ நினைத்துக் கொண்டு பேசுகிறாய். நீ மீண்டும் மற்றவர்கள் விஷயத்தில் அநாவசியமாகத் தலையிடுகிறாய்'. இதைச் சொல்லிவிட்டு அவன் குதிரை மீதேறிப் போய்விட்டான். கிராமத்தை விட்டகலும் வரை துண்டில் அவன் தும்மிக்கொண்டே போவது எனக்குக் கேட்டது. ஏதோ தாரை தப்பட்டை தட்டுவது போலக் கேட்டது. செமியோன், நீ அவனிடம் சுழற் துப்பாக்கி பற்றி ஒரு வார்த்தை சொல்வது நல்லது. நம்முடைய மக்கள் இதை விரும்ப மாட்டார்கள். அவன் உன் பேச்சைக் கேட்பான்.''

தவீதவ், இப்பொழுது ரஸ்மியோத்னவின் வார்த்தைகளைக் கவனித்துக் கொண்டிருக்கவில்லை. மேசையின் மீது இடையைச் சாய்த்து, தலையைக் கைகளின் ஏந்தியபடி, மை சிந்திக்கிடந்த மேசைப் பலகையை உற்று நோக்கிய வண்ணம் அர்ழானவ் சொன்னதையே சிந்தித்துக் கொண்டிருந்தான். ''ஒஸ்த்ரவ்னோவ் குலாக்காக இருக்கலாம், ஆனால் எதற்காக அவனை நான் வேண்டுமென்றே சந்தேகிக்க வேண்டும்? அவன் துப்பாக்கியைத் தானே உபயோகிக்க மாட்டான். அவன் அதிக வயதான கிழவனும் கூட, மேலும் அவன் புத்திசாலி; மக்கார் சொல்கிறபடி

பார்த்தால், ஓடியவன், மிக வேகமாக ஓடக் கூடிய ஓர் இளைஞன். ஒருவேளை லுக்கீச்சும் அவன் மகனும் கூட்டாக இருக்கக்கூடுமோ? அதே வேளை தக்க ஆதாரமின்றி விநியோக மேலாளர் பொறுப்பிலிருந்து லுக்கீச்சை நீக்க முடியாது. அவன் கலக்கமடைந்து வேறு சதிகளில் ஈடுபட்டிருந்தாலும் மறைத்துக்கொள்வான். மற்றவர்களும் விழித்துக் கொள்வார்கள். ஆனால் லுக்கீச் தானாக இப்படிப்பட்ட விஷயத்தில் இறங்க மாட்டான். அவன் புத்திசாலி. தனியாக வம்பை இழுத்துக்கொள்ள மாட்டான். நாம் எப்பொழுதும் போலவே அவனை நடத்தி வர வேண்டும். நாம் சந்தேகப்படுகிறோம் என்பதையே அவன் சந்தேகிக்காதவாறு நடந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் எல்லா காரியமும் கெட்டுவிடும். ஆனால் மிகவும் மெத்தனமாக இருந்துவிட்டோம்... விரைவில் மாவட்ட மையத்திற்குச் சென்று மாவட்டக் கட்சி செயலாளரிடமும், ரகசியப் போலீசாரிடமும் சொல்ல வேண்டும். ரகசியப் போலீசார் துப்புத் துலக்குவதற்கு முன்னர், இங்கு யாரோ ரைபிளால் இரவில் விளையாடத் தொடங்கி விட்டானே. இந்தத் தடவை மக்கார், அடுத்த தடவை நானோ, ரஸ்மியோத்னவோ. இல்லை, இது மாதிரி விஷயத்தை விட்டு வைக்கக் கூடாது. இதில் நாம் ஏதாவது செய்யாவிட்டால், மூவரையும், அந்த அயோக்கியன் ஒரு சில நாட்களில் தொலைத்து விடுவான்... ஆனால் இப்படிப்பட்ட எதிர்ப்புரட்சிச் சூதாட்டத்தில் லுக்கீச் ஈடுபடுவான் என்பது ஒரு போதும் இருக்க முடியாது தான். அவன் மிகவும் எச்சரிக்கையாகத் தான் இருக்கிறான், உண்மையாகத்தான்! இதனால் இவனுக்கு என்ன லாபம்? கூட்டுப்பண்ணையின் விநியோக மேலாளர், நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினர், வாழ்க்கைக்குத் தேவையான எல்லாம் அவனுக்கு இருக்கிறது. அவன் வாழ்க்கைக்கே திரும்புவான் என்பதை என்னால் எந்தவகையிலும் நம்பவே முடியவில்லை. இனித் திரும்பிப் போக முடியாது என்பதை அவன் உணர வேண்டும். அண்டை நாடு யாருடனாவது சண்டையிட்டுக் கொண்டிருந்தால், அவன் ஏதாவது முயற்சிக்கக்கூடும். நாம் சும்மா இருக்கும்போது, அவன் அப்படியெல்லாம் செய்வானா? இப்பொழுது அவன் தீவிரமாக இருப்பான் என்பதை நம்ப முடியவில்லை.''

ரஸ்மியோத்னவ் குறுக்கிட்டதால் தவீதவின் சிந்தனை தடைப்பட்டது. தொங்கப் போட்டுக் கொண்டிருந்த தனது நண்பனின் முகத்தைச் சிறிது நேரம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தவன் பிறகு, ''இன்று காலை ஏதாவது சாப்பிட்டாயா?'' என்று கேட்டான்.

''காலைச் சாப்பாடா? ஏன் கேட்கிறாய்?'' என்று தன்னை மறந்து கேட்டான் தவீதவ்.

''குச்சி மாதிரி மெலிந்து போயிருக்கிறாய்! கன்னத்தில் எலும்புகள்தான் துருத்திக்கொண்டு நிற்கின்றன. அவைகூட வெய்யிலில் கருகிவிட்டன.''

''பழையபடியும் அந்தப் பேச்சுத்தானா?''

''இல்லை. நான் கருத்தூன்றித் தான் கூறுகிறேன். நான் உண்மைதான் பேசுகிறேன்!''

''காலைச் சாப்பாட்டுக்கு நேரம் இருக்கவில்லை. எனக்கெதுவும் வேண்டாம். காலையில் வெயில் கடுமையாக இருக்கிறது.''

''எனக்குப் பயங்கரப் பசி. செமியோன், என்னுடன் வா. கொஞ்சம் சாப்பிடப் போகலாம்'' என்றான் ரஸ்மி யோத்னவ்.

தவீதவ் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டான்.

இருவரும் முற்றத்துக்குப் போனார்கள். உளுத்த மரத்து வாசனையுடன், புல் வெளியிலிருந்து வெக்கைக் காற்று வீசிற்று.

வாயிலண்டையில் தவீதவ் நின்று, ''அந்திரேய், நீ யாரை சந்தேகப்படுகிறாய்?'' என்று கேட்டான்.

ரஸ்மியோத்னவ் தோள்களைக் குலுக்கி இல்லையென விரித்தான்.

''சனியனுக்குத் தெரியும்! எனக்குத் தெரியவே இல்லை. நான் இது பற்றிப் பல முறை யோசித்துப் பார்த்தேன், எதுவும் கிடைக்கவில்லை. ஊரிலுள்ள ஒவ்வொரு கஸாக்காக நினைத்துப் பார்த்தேன், ஒரு பயனும் இல்லை. ஏதோ ஒரு பிசாசு இந்தச் சிக்கலை உண்டாக்கி விட்டது. இப்போ நாம் நினைக்க வேண்டும். மாவட்ட அரசியல் ரகசியப் போலீஸில் இருந்து ஒரு தோழர் இங்கு வந்திருந்தார். அவர் மக்கார் வீட்டைச் சுற்றிச் சுற்றி மோப்பம் பிடித்துப் பார்த்தார். மக்கார், ஷ்சுக்கார் தாத்தா, வீட்டுக்கார கிழவி ஆகியோரையும், என்னையும் விசாரித்தார். காலித்

தோட்டாவைப் பார்த்தார். அதில் எவ்விதக் குறியுமே இல்லை... அவ்வளவுதான். அவர் போய்விட்டார். 'யாரோ எதிரியின் கையாள் ஒருவன் உங்கள் பக்கம் வந்து உங்களைக் குறி பார்த்துவிட்டுப்போய் இருக்கிறான்' என்று சொன்னார். அதற்கு மக்கார், 'நீ என்றாவது நண்பர்களால் சுடப்பட்டது உண்டா? நீ இங்கிருந்து, நரகத்துக்காவது போ! இதை நாங்களே பார்த்துக்கொள்ளுவோம்' என்றான். அந்த விசித்திரமான மனிதன் இதைக் கேட்டுப் பெருமூச்சு விட்டானே ஒழிய வேறு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அதன் பின்னர் குதிரையில் ஏறிப் புறப்பட்டுப் போய்விட்டான்.''

''நீ என்ன நினைக்கிறாய்? ஒஸ்த்ரவ்னோவ் மக்காரைச் சுட்டிருக்கக் கூடாதா?'' என்று எச்சரிக்கையாகக் கேட்டான் தவீதவ்.

ஆனால் கதவின் இடுக்கியை எடுத்துவிடப்போன ரஸ்மியோத்னவ் கையைக் கீழே போட்டுவிட்டுச் சிரித்தான்.

''உனக்கு என்ன பைத்தியமா? யாக்கவ் லுக்கீச்சா? அவன் எதற்காக இதைச் செய்ய வேண்டும்? அவன் என்ன வண்டிச் சக்கரத்தின் கீச்சுச் சத்தத்தைக் கேட்டுப் பயப்படுகிறான். நீ சொல்கிறது வெட்டிப் பேச்சு! என் தலையை வேண்டுமானாலும் சீவு, ஆனால் அவன் இதைச் செய்ய மாட்டான்! வேறு யாரை வேண்டுமானாலும் சொல்லு, அவனை மட்டும் வேண்டாம்.''

''அவனுடைய மகன் எப்படி?''

''நீ மறுபடியும் தப்பாக நினைக்கிறாய். நீ கண்ட கண்ட இடத்திலும் விரலை விட்டால், கடைசியில் என்னையே தொட்டாலும் தொட்டு விடுவாய். இல்லை, இதில் ஒரு பெரிய புதிர் ஏதோ இருக்கிறது... இது ஓர் உண்மையான இணைப்பு வேலை.''

ரஸ்மியோத்னவ் தனது புகையிலைப் பையை எடுத்து புகையிலையைச் சிகரெட்டுக்காகச் சுருட்டினான். பெண்கள் பகல் வேளையில் நெருப்பு பற்றவைக்கக் கூடாது என்றும், ஆண்கள் தெருவில் புகை பிடிக்கக் கூடாது என்றும் தான் ஓரிரு நாட்களுக்கு முன்னர் உத்தரவு போட்டது நினைவுக்கு வந்தது, சிகரெட்டை வெறுப்புடன் நசுக்கிப் போட்டான். திகைப்புடன் தன்னை தவீதவ் பார்ப்பதைக் கண்ட ரஸ்மியோத்னவ், தன்னை மறந்தவனாக, யாரோ

இன்னொருவர் பேசுவதைப் போல: ''இந்தக் கெடுபிடிச் சட்டங்களை எல்லாம் போட்டுவிட்டார்கள்! நாம் இப் பொழுது தெருவில் புகைக்க முடியாது சரி, வா போக லாம். என் வீட்டுக்குள்ளே போய் நெருப்புப் பற்ற வைப் போம்.''

* * *

காலைச் சாப்பாட்டுக்கு வழக்கமாகத் தரும் தினைக் கஞ்சியைத்தான் ரஸ்மியோத்னவின் கிழவியான அம்மா கொடுத்தாள். சிறிது பன்றிக் கொழுப்பு கலந்திருந்தது. இதைப் பார்த்துப் பார்த்து தவீதவுக்குச் சளித்துப் போ யிருந்தது. ஆனால் ஒரு சட்டி நிறைய தோட்டத்திலிருந்து பறித்து வந்திருந்த புதிய வெள்ளரிக் காய்களைப் பார்த்த வுடன் மும்முரமானான். வெயிலும் மண்ணும் மணந்த இரண்டு காய்களைச் சாப்பிட்டுவிட்டு, பழ ரசத்தை விட்டுக் கழுவிவிட்டு எழுந்தான்.

''மிக்க நன்றி அம்மா. நிறைய சாப்பிட்டுக்கொண் டோம். குறிப்பாக வெள்ளரிக் காய் ரொம்ப அருமை. இந்த ஆண்டில் நான் ருசித்த முதல் வெள்ளரிக் காய் இதுதான். மிக அருமை. உண்மையாகத்தான்!''

பாசமுள்ள, அந்த வாயாடிக் கிழவி தனது கன்னத்தைத் தடவிவிட்டுக் கொண்டாள்: ''உனக்கு எப்படி வெள்ளரிக் காய்கள் கிடைக்கும்? நீ ஒரு அப்பாவிப் பிள்ளை, உனக்கு மனைவி உண்டா?''

''இன்னும் கிடைக்கவில்லை. தேட நேரம் இல்லை'' என்று முறுவலித்தான் தவீதவ்.

''உனக்கு மனைவி தேட நேரம் இல்லை என்றால் பிறகு சீக்கிரத்தில் வெள்ளரிக் காய்கள் கிடைக்காது. நீயாக செடிநட்டு அதைக் கவனித்துக் கொண்டிருக்க முடியுமா? இதோ என் அந்திரேய் இருக்கிறான். அவனுக்கும் மனைவி இல்லை. அவனைக் கவனித்துக்கொள்ள ஒரு அம்மா இல் லாது போயிருந்தால், இதற்குள் அவன் செத்தே போயிருப் பான். எப்படியோ அம்மா சமாளிக்கிறாள். உங்களையெல் லாம் பார்க்க எனக்குக் கவலையாக இருக்கிறது. அந்திரே யும் பிரமச்சாரி வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கிறான். மக்காரும், நீயும் அப்படியே. நீங்கள் மூவரும் வெட்கப்பட

வேண்டாமா? காளைகள் மாதிரி மூன்று பேர் ஊரைச் சுற்றுகிறீர்கள். ஆனால் பெண்கள் விஷயத்தில் யோக மில்லை. நீங்களெல்லாம் உண்மையிலேயே பிரமச்சாரிகள் தானா? இது மகாக் கேவலம்!''

''எங்களை யாருமே விரும்புகிறார்கள் இல்லையே அம்மா'' என்றான் குலுங்கிச் சிரித்துக் கொண்டே ரஸ்மி யோத்னவ், அம்மாவைச் சீண்டுவதற்காக.

''இன்னும் ஐந்தாண்டுகளுக்கு இப்படியே பிரமச்சாரி யாக இருந்தால், யாருமே விரும்ப மாட்டார்கள். நரைத்த முடியுடைய உங்களை எந்தப் பெண்தான் விரும்புவாள்? பிறகு இளமங்கை எப்படி விரும்புவாள்? இப்பொழுதே அவர்களை வசீகரிக்கும் வயதைக் கடந்துவிட்டீர்கள்!''

''பெண்பிள்ளைகளோ எங்களை ஏற்க மாட்டார்கள். அதை நீயே சொல்லிவிட்டாய். நாங்களோ விதவைகளை விரும்பவில்லை. மாற்றானின் பிள்ளைகளுக்கு நாங்கள் சோறு போட்டுக் கொண்டிருக்கவா? இதற்குச் சீழ்க்கை யடித்துக் கொண்டு திரியலாமே!'' என்று ரஸ்மியோத்னவ் வேடிக்கையாகப் பதில் சொன்னான்.

இப்படிப்பட்ட பேச்சு அவனைப் பொருத்தமட்டில் புதிது அல்ல. ஆனால் தவீதவ் ஒரு வார்த்தை கூடப் பேச வில்லை. அவன் ஏனோ சங்கடப்பட்டான்.

அன்புடன் உபசரித்து விருந்திட்டதற்கு நன்றி கூறி விடை பெற்று, கொல்லன் பட்டறைக்குப் போனான். குழு வரு வதற்கு முன்னதாக அறுவடை எந்திரங்கள், குதிரைப் பட் டயங்கள் இவற்றையெல்லாம் தானே சரிபார்க்க விரும் பினான். ஏனெனில் அதைச் சரிபார்ப்பதே அவனுடைய பாதி வேலையாக இருந்து வந்தது.

அத்தியாயம் பத்து

ஊரின் ஓரத்தே இருக்கும் நாள்பட்ட கொல்லன்பட் டறை வழக்கமான வாசனை, சத்தம், இவற்றினூடே அவனை வரவேற்றது. இப்பலீத் சீதரவிச்சின் கையசைவுக்கேற்ப, சாலியின் சுத்தி, பட்டறை மீது நடமாடிக் கொண்டிருந் தது. வெகுதூரத்திலிருந்துகூட இளைத்தபடி மூச்சு விடும் உலைத்துருத்தியின் ஓசையைக் கேட்கலாம். கருகிய நிலக்

கரியின் வாசனையும், ஆச்சரியமான ஆறவைக்கும் உலைக் கருவியின் அருமையான, மறக்க முடியாத வாசனையும் திறந்த வாசல் வழியாக குப்பென்று வீசின.

ஏகாந்தமான இந்த கொல்லன்பட்டறையைச் சுற்றி வெட்டவெளிதான், நடமாட்டமே இல்லை. கூட்டினால் புழுதி வாசனையும், பக்கத்துச் சாலையிலிருந்து புழுதி மண்டலமும் எழுந்துகொண்டிருந்தது. காட்டுப் புல்லும், கொடியும் நன்றாக வேயப்பட்ட கூரை முகட்டில் முளைத் துக்கொண்டிருந்தன. சிட்டுக்குருவிக் கூட்டம் அதை மொய்த்துக்கொண்டிருந்தது. குளிர்காலத்திலும் கூட அவை பட்டறைக் கூரையில் தான் வாழ்கின்றன. சுத்தியடி ஓசை யின் எதிரொலி போல அவையும் கீச்கீச்சென்று விடாமல் ஓயாமல் கத்திக் கொண்டே இருக்கும்.

ஷாலீய் மிகப் பழைய நண்பனைப் போல தவீதவை வரவேற்றான். ஊதுலை ஊதுகிற பையனோடு மட்டுமே நாட்களைக் கழித்துச் சளித்துப்போன ஷாலீய்க்கு தவீத வைக் கண்டது மகிழ்ச்சியாக இருந்தது. ''தலைவரே, உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சே!'' என்றான் பொங் கும் மகிழ்ச்சியுடன். இவ்வாறு சொல்லிக் கொண்டே தனது உறுதியான முரட்டுக் கையை நீட்டினான். ''நாங்கள் உன் னைப் பார்த்து எவ்வளவோ காலமாகி விட்டது. எங்க ளைப் பார்க்கக்கூட வர மாட்டேன் என்கிறாயே. உனக்குத் தலைக்கனத்துப் போச்சு தோழரே, அதுதான் விஷயம். இதோ பார்க்க வந்து விட்டேனே என்று தானே சொல்லப் போகிறாய். இல்லையில்லை! அறுவடை எந்திரங்களைப் பார்க்க வந்திருக்கிறாய். பையனே, உன்னை எனக்குத் தெரி யும்! சரி வா. அவற்றையெல்லாம் பார்வைக்காக வரிசை யாகக் கஸாக்குகளை மாதிரி நிறுத்தியிருக்கிறேன். வா, ஆனால் குறை சொல்லாதே. ஒரு சமயம் எனக்கு நீ உதவி யாளாக இருந்ததுண்டு. ; அதனால் இப்பொழுது எதன் மீதும் நீ உரிமை கொண்டாட முடியாது'' என்று சொன்னான்.

தவீதவ் ஒவ்வொரு எந்திரத்தையும் வெகுநேரம் கவன மாகப் பார்த்துக்கொண்டே போனான். ரொம்ப சிரமப் படுத்துகிற ஆள்தான் எனினும் செப்பனிட்ட வேலையில் ஒரு குறையும் கண்டுபிடிக்கவில்லை. ஓரிரு சின்னஞ்சிறு தவறுகள் தவிர, மற்றவை கட்காக அவனை வருத்தப்

படுத்திவிட்டான். ஷாலீய் தவீதவை ஒன்றுவிட்டு ஒன்றாக பின்பற்றிச் சென்றான். அவனது முகத்திலிருந்து வடிந்த வியர்வையை தோல் முன்றானையால் துடைத்துக் கொண்டே, ''நீ ரொம்பச் சீண்டுகிற தலைவரல்லவா! இது என்ன முள்மாதிரி குத்துகிற குற்றச்சாட்டுக்கள்... எதற்காக இப்படிச் சுற்றிச்சுற்றி மோப்பம் பிடிக்கிறாய்? அங்கே என்ன தேடிப்பார்க்கிறாய்? என்னை என்ன நாடோடி என்று நினைக்கிறாயா? என்ன தட்டுகிறாய்? உனக்கு கவலை என்ன? இங்கும் அங்கும் பார்த்து பார்த்து, பிறகு எங்கோ போகிறாய். இல்லை, நான் எனக்குச் செய்வது போல, அவ்வளவு முறையாக எல்லாவற்றையும் எச்சரிக்கையாகச் செய்திருக்கிறேன். எனவே சும்மா சுற்றிச் சுற்றிவந்து சொட்டை கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டாம்'' என்றான்.

''சீதரவிச், நான் ஒன்றும் குறை கண்டுபிடிக்க முயற்சிக்கவில்லை. நீ எதற்காக இப்படிப் பதறுகிறாய்?''

''குற்றங் கண்டுபிடிப்பதற்கு அல்ல என்றால் எப்பொழுதோ இந்த எந்திரங்களைப் பார்க்கிற வேலையை முடித்திருக்க வேண்டும். இல்லையெனில் ஒவ்வொரு எந்திரமாகப் போய் அதையும் இதையும் தொட்டுப் பார்ப்பானேன்?..''

''அது என் வேலை. நீ தொட்டுப் பார்க்கின்ற வரையில் நீ பார்ப்பதை நம்பு'' என்று வேடிக்கையாகப் பதில் சொன்னான் தவீதவ்.

மிகவும் இற்றுப் பழையதாகிவிட்ட ஓர் எந்திரத்திடம் போனவுடன் தவீதவ் அதை மிகவும் கவனமாகப் பார்க்கத் தொடங்கினான். இது கூட்டுப்பண்ணைச் சொத்தாக்குவதற்கு முன்பு, அன்தீப் கிராச்சிடமிருந்தது. ஷாலீயின் கவலையெல்லாம் ஒரு நொடியில் பறந்துவிட்டது, தாடியைத் தன் கையில் பிடித்துக்கொண்டு, யாரையும் நோக்காமல் ஏதோ ஒரு திசையில் முகத்தைக் கடுப்புடன் வைத்துக் கொண்டு, ''தவீதவ், நன்றாகக் கவனி. தரையில் படுத்துக் கொண்டு பாரு! எதற்காகச் சேவல் மாதிரி வளைய வருகிறாய்? கீழே உட்கார்ந்து குறுக்குக் கம்பியைப் பல்லால் கடித்துப் பாரு! எதற்காகத் தொட்டுப் பார்க்கிறாய்? அது என்ன பெண்பிள்ளை என்று நினைத்தாயா? உன் பல்லை உள்ளே விட்டுப் பாரு! பல்லைத் தான் சொல்கிறேன். நீ ஒரு கொல்லன் என்று சொல்லிக் கொள்கிறாய்? உன்னுடைய வேலையே உனக்குத் தெரியாதா? இதைச் செய்தது

நீதான்! சந்தேகமே இல்லை. நீ சரிசெய்ததையே நீ பார்க்கும் பொழுது உனக்குத் தெரிய மாட்டேன் என்கிறது. இரவில் திருமணம் செய்த பெண்ணை மறு நாள் காலையில் தெரியாத இளைஞன் மாதிரி அல்லவா இருக்கிறாய்...''

தன்னுடைய கிண்டலைத் தானே ரசித்தவராக பலமாகச் சிரித்தான் ஷாலீய். பிறகு கையை ஆட்டி இருமிக் கொண்டான். ஆனால் இதைப் பொருட்படுத்தாத தவீதவ், ''நீ சிரிக்க வேண்டியதில்லை சீதரவிச். இந்தச் சிறு நடுத்தர விவசாய எந்திரத்தை எனக்குப் பார்த்தால் தெரியுமே. இது என் வேலை என்பதும் தெரியும். இருந்தாலும் மற்றவர்களுடையதைப் பார்வையிடுவதைப் போலவே இதையும் கவனிக்கிறேன். ஏனெனில் அறுவடை நேரத்தில் காலை வாரிவிட்டுவிடக் கூடாதல்லவா? இது பழுதுபட்டு நின்று விட்டால், அறுவடைக்காரர்களுக்கும்கூட முந்தி, நீதான் முதல் ஆளாக, 'சரியாப் போச்சா! நான் தவீதவை நம்பி சுத்தியையும், உலையையும் கொடுத்தேனே, என்ன செய்திருக்கிறான் பாருங்கள்' என்பாய் இல்லையா?''

''ஆமாம்! நீ வேலை செய்தால், நீதான் பொறுப்பு.''

'' 'உன் வேலையே உனக்குத் தெரியவில்லை' என்று சொன்னாயல்லவா? எனக்குத் தெரியும். ஆனால் என்னுடைய பொறுப்பைக் காட்டிலும் உன்னுடையது பெரியது.''

''அதாவது உன்னை நீயே நம்ப மாட்டாயா?''

''சில தடவை இருக்கிறது...''

''அதுதான் சரி நண்பரே'' என்றான் ஷாலீய், தனது பழைய வேடிக்கைப் பேச்சை விட்டுவிட்டு. ''நாம் செய்யும் இரும்பு வேலை அவ்வளவு பொறுப்பு மிக்கது. நீங்கள் நினைத்த மாத்திரத்தில் அந்த வேலையில் நிபுணர்களாகிவிட முடியாது. யாராலும் முடியாது... சும்மாவா கொல்லர்களாகிய நாம் 'பட்டறைக் கூடத்தில், சுத்தியலில், கையில் நம்பிக்கை வை, ஆனால் இளைஞனாக இருக்கும்போது உன் புத்தியை மட்டும் நம்பாதே' என்று சொல்வதுண்டல்லாவா? பெரிய தொழிற்சாலையில் வேலை செய்தாலும், சிறிய தொழிலில் வேலை செய்தாலும் இரண்டும் ஒன்றுதான். ஒரே மாதிரி வேலைதான் இரண்டுமே முக்கியம் தான். மூலப்பொருள்கள் வழங்கு துறையின் மாவட்ட நிர்வாகி, கடந்த ஆண்டு இங்கே வந்து இருந்தார். மாவட்டப் பிரதிநிதியாக நமது கிராமத்துக்கு அவர் நியமிக்கப்பட்

டிருந்தார். நானும் என் மனைவியும் அவரை வரவேற்று எங்கள் குழந்தையைப் போல பார்த்துக் கொண்டோம். ஆனால் அவரோ ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டார். என்னிடமோ, என் மனைவியிடமோ பேச மாட்டார். அது அவர் தரத்துக்குத் தாழ்வு என்று நினைத்துக்கொண்டார். சாப்பிட மேசையில் உட்காரும் போதும் ஒரு வார்த்தை பேச மாட்டார். எழும்போது கூட ஒரு வார்த்தை பேச மாட்டார். கிராம சோவியத்திலிருந்து திரும்புவார். அப் பொழுதும் ஒரு வார்த்தை கிடையாது, மீண்டும் வெளியில் போகும்போதும் ஒரு வார்த்தை பேசணுமே. நான் என்ன பேசினாலும் சரி, அது அரசியலாகட்டும், அல்லது வீட்டு விவகாரமாகட்டும், பேசவே விரும்ப மாட்டார். 'கிழவனே, அது உனக்குத் தேவையில்லாத விஷயம்.' அவ்வளவுதான். இப்படி அமைதியாக வாயைத் திறக்காமல் மூன்று நாட் கள் இருந்து விட்டு, நான்காம் நாள் வாயைத் திறந்தார்... காலையில் எழுந்து நெஞ்சை உயர்த்தி நின்றுகொண்டு, 'உன் வீட்டுக்கிழவியிடம், உருளைக்கிழங்கை ஒரு கோப்பை யில் போட்டுக்கொண்டு வரச் சொல். சட்டியில் அள்ளிக் கொண்டு வர வேண்டாம். மேசைமீது நல்ல துணியாக விரிக்கச் சொல். கரித்துணியை விரிக்க வேண்டாம். தான் பண்பாடுமிக்க நபர் என்று என்னிடம் சொன்னார். இதற் கும் மேலாக நான் மாவட்டக் குழுவிலிருந்து வந்துள்ள பொறுப்பான கட்சிப் பிரதிநிதி. நான் இப்படிப்பட்ட சாதா ரணப் பழக்கவழக்கங்களை விரும்ப மாட்டேன்.'

''இது எனக்கு மிகுந்த கோபத்தை வளர்த்துவிட்டது. 'நீ நாகரிகமான ஆள் அல்ல, நாற்றம் பிடித்த ஈ! நீ நாகரிக மான ஆளாக இருந்திருந்தால் போட்டதைச் சாப்பிட்டு விட்டுப் போக வேண்டும். கொடுத்ததைக் கொண்டு கோப் பையைக் கழுவிவிட்டுப் போக வேண்டும். ஏனெனில் எங் கள் வீட்டில் மேசை விரிப்பு என்றைக்கும் இருந்ததில்லை. துடைப்புக்குட்டையும் இல்லை. கோப்பைகள் எல்லாவற் றையும் என் கிழவி உடைத்துவிட்டாள். நீ பற்றுக் கொள் கிற உணவுக்கு ஒரு கோபெக்கூட உன்னிடம் வாங்கவில்லை, என் மனைவிக்கு உன்னை எப்படித் திருப்தி செய்வது என் பது தெரியாது. நாற்காலியை எங்கு போடுவது, உன்னைச் சுகமாக படுக்கவைப்பது எப்படி என்பதெல்லாம் தெரிய வில்லை, நீயோ கூரைக்குமேல் மூக்கை நீட்டிப் படுத்துக்

கொள்கிறாய். 'நான் பொறுப்புள்ள தொழிலாளிதான்!' நீ எவ்வளவு பொறுப்புடனிருக்கிறாயோ, அவ்வளவு! நீ எவ்வளவு பொறுப்புடனிருக்கிறாய்? முயல், வெள்ளெலித் தோல்களை எடுத்து அலுவலகத்தில் பதம் போட்டுக் கொண்டிருப்பதுதான் உன் வேலை. அதுதான் உன் பொறுப்பு. நீ கொஞ்சங்கூட பொறுப்புடன் இல்லை, ஆனால் நான்! தலைவர், கட்சிச் செயலாளர் இவர்களுக்கடுத்து இந்த ஊரிலேயே மிக முக்கியமான ஆள் நான்தான். ஏனெனில் நானில்லாமல் உழவுமில்லை, அறுவடையும் இல்லை. என்னுடையது இரும்பு வேலை. உன்னுடையது தோல் வேலை. இதில் எது முக்கியம்? மிகப் பொறுப்பான தொழிலாளி என்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய். நானும் என்னை அப்படித்தான் நினைத்துக் கொள்கிறேன். நாமிருவரும் எப்படி ஒரே கூரையின் கீழ் சேர்ந்து ஒன்றாக வாழ முடியும்? முடியவே முடியாது! எனவே, தோல் பையை எடுத்துக்கொள் தம்பி, நீ புறப்படலாம். ஏனெனில் உன்னைப் போன்ற ஆள் எனக்கு எவ்விதப் பயனுமே இல்லை.''

தவீதவ் கண்களை செருகச் சுருட்டி, கண் பாப்பா மட்டும் குறுகிய இமைகள் வழியாகத் தெரிகிறாற்போல பார்த்துக்கொண்டு, சிரிப்புக் கலந்த குரலில் அமைதியாகக் கேட்டான்: ''ஆகவே அடித்துத் துரத்திவிட்டாயாக்கும்?''

''உறுதியாக! ஒரேயடியாக! அவன் போகும் பொழுது 'நன்றி' கூடச் சொல்லவில்லை. மிகவும் பொறுப்புள்ள ஆள் பாருங்கள் அயோக்கியப் பயல்.''

''நீ கெட்டிக்காரன் சீதரவிச்!''

''இதில் ஒன்றும் நன்மை இல்லை. ஆனால் அப்படிப் பட்டவனோடு சேர்ந்து நான் இருந்திருக்கக் கூடாது.''

அவர்கள் சற்றுநேரம் புகைப் பிடித்தபடி ஓய்வெடுத்த பின்னர் தவீதவ் எந்திரங்களை மீண்டும் பார்வையிடத் தொடங்கினான். முடிக்கும் பொழுது பிற்பகலாகிவிட்டது. விடைபெற்றுக் கொள்ள வணக்கம் சொல்லிவிட்டுப் புறப் படும் பொழுது கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு, ''இந்த வேலைக்காக எத்தனை வேலை நாட்களை உனக்கு ஒதுக்கி னார்கள்?'' என்று கேட்டான்.

முகத்தைச் சுளித்து மறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு,

''யாக்கவ் லுக்கீச் உனக்கு ஏராளமாக ஒதுக்குவான் போலும்...''

''இதற்கும் யாக்கவ் லுக்கீச்சுக்கும் என்ன சம்பந்தம்?''

''கணக்குப் பிள்ளையிடம் அவன் இட்டது தானே கட்டளை. அவன் சொன்னால் சொன்னதுதானே.''

''உனக்கு எவ்வளவு நாட்கள் கிடைத்தன?''

''ஒரு சில நாட்கள், பயனே.''

''என்ன? இது எப்படி? ஏன்?''

பொதுவாக சாதுவாக இருக்கும் கொல்லன் முகத்தில் இப்பொழுது கோபத் தீ பற்றி எரிந்தது. அவன் முன்னால் தவீதவுக்குப் பதிலாக, யாக்கவ் லுக்கீச்சே நிற்பதுபோல் இருந்தது.

''நான் செய்கிற வேலையை அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள். நான் உலைக்களத்தில் ஒரு நாள் இருந்தால், ஒருநாள் வேலை என்று போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் அங்கிருந்துகொண்டு வேலை செய்தேனோ, சிகரெட் உருட்டிக் கொண்டிருந்தேனா என்பதைப்பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை! செப்பனிடுகிற பணியில் ஐந்து நாள் வேலையை, நான், ஒரு நாளில் முடித்துவிடலாம். இருந்தும் ஒரு நாள் வேலை என்று தான் கணக்கில் சேர்ப்பார்கள். என் முதுகை நான் முறித்துக் கொண்டாலுங்கூட ஒரு நாள் வேலைதான். அதே போலத்தான் கூலியும். எவனும் கொழுத்துப்போய் விட மாட்டான். அவன் உயிரோடிருக்கலாம். ஆனால் திருமணம் செய்துகொள்ள விரும்ப மாட்டான்!''

''அது நான் தந்த கூலி அல்ல!'' என்றான் தவீதவ் கோபத்தோடு. ''அது கூட்டுப்பண்ணையின் கூலியும் அல்ல! இதை ஏன் எனக்கு இதற்கு முன்னரே சொல்லவில்லை?''

ஷாலீய் மிகவும் தயங்கினான். மிகுந்த தயக்கத்துடன், ''இதை எப்படிச் சொல்ல முடியும் தம்பி. அருவருப்பாக இருந்தது. எனக்கே ஒரு மாதிரி வெட்கமாக இருந்தது. நான் உன்னிடம் சொல்ல முடிவு செய்திருக்கலாம். ஆனால் ஒருவேளை 'இவன் பேராசையைப் பாருங்கள். இவனுக்குத் திருப்தியே இல்லை...' என்று சொல்லிவிட்டால் என்று நினைத்துப் பயந்தேன். எனவே அமைதியாக இருந்துவிட்டேன். ஆனால் இப்பொழுது சொல்கிறேன். இதையும் சொல்லி விடுகிறேன். கலப்பையைச் செப்பனிடுவது, எந்

திரங்கள், களையெடுக்கும் எந்திரங்கள் இவற்றைச் செப்பனிட்டால் அவற்றை வேலை என்று எழுதிக்கொள்கிறார்கள். ஆனால், குதிரைக்கு லாடமடித்தால், கதவுக்குத் தாழ்ப்பாள் போட்டுவிட்டால், கீல் செய்து கொடுத்தால், இவையெல்லாம் சிறிய வேலை என்று கணக்கிலேயே சேர்த்துக்கொள்ளப் படுவதில்லை.அதைக் காது கொடுத்துக் கேட்கவே மாட்டார்கள். இது தவறு என்று நினைக்கிறேன். ஏனெனில் நாம் அதற்கு எவ்வளவு நேரத்தை ஒதுக்குகிறோம்?''

''யாரை 'அவர்கள்' என்று குறிப்பிடுகிறாய்? அந்த 'அவர்கள்' யார்? கணக்கன் தனியாக வேலை செய்கிறான். கேட்டால் நிர்வாகத்துக்குப் பதில் சொல்கிறான்'' என்றான் தவீதவ்.

''கணக்கன் அவன் வேலையைத் தான் பார்க்கிறான். ஆனால் யாக்கவ் லுக்கீச் அவன் வேலையைத் திருத்துகிறான். எப்படி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி நீ சொல்கிறாய். ஆனால் எப்படி நடக்கிறது என்பதை நான் சொல்கிறேன்.''

''அவ்வாறானால் அது மிக மோசமான காரியமாச்சே.''

''இது என்னுடைய தவறல்ல தம்பி. இது உன்னுடைய தவறு.''

''நீ சொல்லாமலே எனக்குத் தெரியும். அதைச் சரிப்படுத்தியாக வேண்டும். விரைவிலேயே சரி செய்தாக வேண்டும். நாளைக்கே யாக்கவ் லுக்கீச்சை நிர்வாகக் குழுவுக்குக் கூப்பிட்டு அழைத்து விசாரிக்க வேண்டும்... முழுக்க விசாரிக்க வேண்டும்!'' என்று தவீதவ் கண்டிப்பாகச் சொன்னான்.

ஆனால் ஷாலீய் தன் தாடிக்குள்ளாகச் சிரித்துக் கொண்டான்.

''பேச்சு அவனிடம் ஒன்றும் பலனளிக்காது...''

''வேறு யாரிடம் பேச வேண்டும் என்கிறாய்? கணக்கனிடமா?''

''உன்னிடம்.''

''என்னிடமா? ம்... அப்படியானால் பேசேன்.''

தவீதவின் பலத்தை அளப்பவன் போல உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''துணிச்சலுடன் நில்லு தம்பி! நான்

சொல்லப்போவது மனத்தைக் குத்தும்... நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் சொல்லியாக வேண்டும். ஏனெனில் வேறு யாரும் துணிச்சலுடன் சொல்ல மாட்டார்கள் போல இருக்கிறது.''

''சரி சொல்லு'' என்று தவீதவ் உற்சாகப் படுத்தினான். பேச்சு இனிமையாக இருக்காது என்பது அவனுக்குத் தெரியும். லூஷ்காவுடன் தனக்குள்ள தொடர்பைப் பற்றிப் பேசுவானோ என்று பயந்தான்.

ஆனால் அவன் எதிர்பார்த்ததற்கு நேர் எதிர்மாறாக ஷாலீய் வேறு விஷயத்தைத் தொடக்கினான்.

''பார்த்தமட்டில், யாருமே உன்னைத்தான் தலைவர் என்பார்கள். ஆனால் கொஞ்சம் ஆழ்ந்து பார்த்தால் கூட்டுப்பண்ணையின் உண்மையான தலைவன் நீ அல்ல என்பது தெரியவரும். ஏதோ தொங்கிக்கொண்டு இருக்கும் ஆசாமி அவ்வளவுதான்.''

''ரொம்ப நல்லதாப் போச்சு!'' என்று தவீதவ் பாதிக்கப் பட்ட மகிழ்ச்சியுடன் சொன்னான்.

''இதில் நல்லது ஒன்றும் இல்லை'' ஷாலீய் கவலையுடன் சொன்னான். ''ஒன்றுமே இல்லை. உண்மையாகவே சொல்கிறேன். நீ எந்திரங்களுக்கடியில் ஊர்ந்து கொண்டு, அவற்றை, ஒரு தலைவர் பார்வையிட வேண்டிய முறையில் பார்வையிடுகிறாய். அது சரிதான். வயல்வெளிக்குப் போய் நீயே உழுகிறாய், ஆனால் அலுவலகத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பொருத்த மட்டில் உனக்கு ஒன்றுமே தெரியாது. நீ வயல்வெளியில் செலவழிக்கும் நேரத்தைக் குறைத்து, கிராமத்தில் அதிக நேரம் தங்க வேண்டும். எல்லாம் சரியாகிவிடும். இப்பொழுது இருக்கிறபடி நீ 'ஓர் உழவன், சொல்லன், எல்லாத் தொழிலும் கற்றவன்'. ஆனால் நிர்வாகத்தை நடத்துகிறவன் நீ அல்ல. யாக்கவ் லுக்கீச்தான். அதிகாரத்தை உன் கையிலிருந்து நழுவ விட்டு விட்டாய். அதை ஒஸ்த்ரவ்னோவ் பிடித்துக்கொண்டான்...''

''தொடர்ந்து பேசு'' என்று வறட்சியாகச் சொன்னான் தவீதவ். ''சும்மா பேசு, என்னைப் பொருட்படுத்த வேண்டாம்!''

''நீ விரும்பினால் சரி'' என ஒப்புக்கொண்டான் ஷாலீய். அறுவடை எந்திரப் பலகையில் நன்றாக உட்கார்ந்து கொண்டு, தவீதவையும் பக்கத்தில் வந்து உட்காரச்

சொன்னான். பாதையில் உட்கார்ந்து உலை ஊதுகிற பையன் தூங்கி வழிவதைக் கண்ட ஷாலீய் உரத்த குரலில், ''ஏ சின்னச் சனியனே! எழுந்து அந்தப் பக்கமாகப் போய்த் தொலை. ஒரு வேலைகூட உனக்கு இல்லையா? பன்றிக் குட்டி, எப்பொழுது பார்த்தாலும் தூங்கிக்கொண்டுதான் இருப்பான்! ஒரு நிமிடத்தில் என் வாரைக் கழற்றியடித் தால் அப்புறம் உனக்குத் தெரியும்! உன் காது செவிடாகி விடும். ஒன்றுக்கும் உதவாத சுத்த மண்டாங்கட்டிப் பயல்!''

அழுக்குப்படிந்த முகத்துடன் அந்தச் சின்ன பையன், சிரிக்கும் கண்களுடன் எலிக்குட்டி மாதிரி உலைக்களத்தை நோக்கி நழுவினான். உடனே உலை ஊதி பெருமூச்சு விடும் சத்தம் கேட்டது. உலையிலிருந்து செந்தீ கொழுந்துவிட் டெரிவதும் தெரிந்தது. ஏற்கெனவே நன்கு சிரித்துக் கொண்டிருந்த ஷாலீய் பேசலானான்: ''ஒரு கொல்லனுக்கு வேண்டியதை இவனுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண் டிருக்கிறேன். அவன் ஓர் அநாதை. பெரிய பையன்கள் சைதான்கள் யாருமே உலைக்கு வேலை செய்ய வருவ தில்லை. சோவியத் ஆட்சி அவர்களுக்குச் செல்லங் கொ டுத்து விட்டது! எல்லாருமே மருத்துவர்களாகவும் விவசாய நிபுணர்களாகவும் எஞ்சினியர்களாகவும் வரவே விரும்பு கிறார்கள். ஆனால் எங்களைப் போன்ற கிழவர்கள் இறந்த பின் இந்தத் தொழில் என்ன ஆகும்? யார் இவர்களுடைய காலணிகளைச் சரிசெய்வார்கள், கால் சட்டைகளைத் தைப் பார்கள், குதிரைகளுக்கு லாடம் அடிப்பார்கள்? அதே போலத்தான் என் நிலையும். ஒரு கொல்லனாக ஆக விரும் பும் ஒருவன் எனக்குக் கிடைக்க மாட்டேன் என்கிறான். மந்திரப் புகையைக் கண்டு ஓடும் பேய் போல, உலைக் களப் புகையைக் கண்டு இவர்கள் ஓடுகிறார்களே. இந்த வனியாத்காவைத்தான் நான் சேர்த்துக் கொள்ள வேண் டியதாயிற்று. இவன் கெட்டிக்காரப் பையன் தான். ஆனால் நான் இவனோடு மாரடிக்கிற தொல்லை இருக்கிறதே அதற்கு அளவே இல்லை! வார்த்தையால் சொல்ல முடியாது. கோடையில் யார் வீட்டுப் பழத் தோட்டத்துக்குள்ளாவது புகுந்துவிடுகிறான். பிறகு அவனுக்காக நான் பதில் சொல்லி யாக வேண்டும். ஒரு நாளைக்கு உலையைக் காயப் போட்டுவிட்டு மீன் பிடித்து விளையாடப் போய்விடுவான்,

அடுத்தப்படி ஏதாவது செய்வான். இவனோடு ஒரு காரியத்தைச் செய்ய முடியாது. இவன்கூட வாழ்கிற இவனுடைய சொந்த அத்தையால் கூட இவனைச் சமாளிக்க முடியவில்லை. எனவே இவனை வைத்து நான் கட்டியழ வேண்டி இருக்கிறது. இவனைத் திட்டத்தான் முடியும். ஓர் அநாதைப் பையனை அடிக்க முடியுமா? நிலைமைகள் இப்படித் தான் இருக்கின்றன, தம்பி. மற்றவர்களுடைய குழந்தைகளுக்கு அதிலும் குறிப்பாக அநாதைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது ரொம்பக் கஷ்டம். ஆனால் என் வாழ்க்கையில் பத்துப் பேரை முழுக் கொல்லர்களாக்கி விட்டிருக்கிறேன். இன்றைக்கு துபியான்ஸ்கி, வோய்ஸ்கவோய், போன்ற பல இடங்களில் உலையை வைத்து நடத்துபவர்களெல்லாம் என்னிடம் பயிற்சி பெற்றவர்கள். ஏஸ்தோவில்கூட ஒரு தொழிலாளி இருக்கிறான். அது ரொம்பப் பெரிய விஷயம், இல்லையா தம்பி? நீயே ஒரு தொழிற்சாலையில் வேலை செய்திருக்கிறாய் அல்லவா? எனவே யாரை எடுத்துக் கொள்வார்கள், யாரை எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பது உனக்குத் தெரியுமல்லவா? எனக்கு ஒரே மனத்திருப்தி, ஒரு நாளைக்கு நான் செத்துப்போனாலும் என்னிடம் படித்த பல இளைஞர்கள் வேலை செய்து கொண்டு இருப்பார்கள். நான் சொல்வது சரிதானே?''

''முதலில் நாம் பேசத் தொடங்கியதை எடுத்துக்கொள்வோம். என் வேலையில் வேறு என்ன தவறுகள் கண்டாய்?''

''உன்னிடம் ஒரே ஒரு தவறுதான் இருக்கிறது. அதாவது கூட்டத்தில் மட்டுந்தான் நீ தலைவராக இருக்கிறாய். அன்றாட வேலையில் ஒஸ்த்ரவ்னோவ் தான் தலைவனாக இருக்கிறான். அங்கு தான் தகராறே கிளம்புகிறது. இளவேனிற் காலத்தில் நீ உழவர்களுடன் இருந்தாக வேண்டும். எப்படிக் கூட்டாக வேலை செய்ய வேண்டும் என்பதைச் செய்து காட்ட வேண்டும். இவையெல்லாம் கூட்டுப்பண்ணைத் தலைவர் செய்ய வேண்டியவையே. இது கெட்டதல்ல, ஆனால் இப்பொழுது போய், எதற்காக வயல் வெளியில் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறாய்? இது எனக்கு புரியவே இல்லை. நீ வேலை செய்த தொழிற்சாலையின் நிர்வாகி கடைசல் பகுதியில் நாள் முழுக்க நின்று கொண்டிருப்பார் என்று சொல்லாதே. என்னால் அதை நம்ப முடியாது!''

ஷாலீய் பண்ணையில் இருந்த பல தொல்லைகளைப் பற்றி விரிவாகப் பேசினான். சில விஷயங்கள் தவீதவ் பார்த்த தில்லை. சில விஷயங்களை யாக்கவ் லுக்கீச்சும் கணக்கனும், பண்டசாலை பாதுகாவலரும் இவன் கண்ணில் படாமல் மூடி மறைத்து விட்டனர். ஷாலீயின் பேச்சு முழுவதும், கூட்டுப்பண்ணை தொடங்கிய நாள் முதல்,எழுந்த கேள்விக் குரிய எல்லா நிகழ்வுகளுக்கும் பின்னிருந்து இயக்கும் மூளை யாக விளங்குபவன், ஊரறியாமல் மறைந்து படாடோப மின்றி இருக்கும் யாக்கவ் லுக்கீச் தான் எனத் தெரிந்தது.

''நீ எதற்காக ஒரு கூட்டத்தில் கூடப் பேசவே இல்லை? உனக்குக் கூட்டுப்பண்ணை மிக அவசியம் என்கிறாய் அல் லவா? நான் 'தொழிலாளி வர்க்கம்!' என்று வேறு பேசு கிறாய், கூட்டத்தில் பேச அஞ்சுகிறாய் என்றால், நீ என்ன தொழிலாளி வர்க்கமா? கூட்டத்தில் உன்னை விளக்கு வைத்துத் தேட வேண்டி இருக்கிறதே?''

ஷாலீய் தலையைக் கவிழ்ந்து உட்கார்ந்த வண்ணம் கைவிரல்களில் புல்லைக் கசக்கிக்கொண்டிருந்தான். இது மிகவும் வியப்பாக இருந்தது. மிக சிறிய, அற்பப் பொரு ளாக, அவரது பெரிய கரிய விரல்களில் தெரிந்ததைக் கண்ட தவீதவால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. தன் காலடியில் இருந்ததையே மிகவும் கவனமாக உற்றுக் கவ னித்துப் பரிசீலித்தான். தான் சொல்லப்போகும் பதில் தனது பரிசீலனையைப் பொருந்து இருக்கிறது என்பதைப் போலக் கவனித்தான். நீண்ட நேர அமைதிக்குப் பிறகு அவன் கேட்டான்:

''கடந்த இளவேனிற்காலக் கூட்டத்தில், அதமன்சுகோ வைக் கூட்டுப்பண்ணையை விட்டு நீக்க வேண்டும் என்று நீ சொன்னாய் அல்லவா?''

''ஆமாம் சொன்னேன். அதற்கென்ன?''

''அவன் வெளியேற்றப்பட்டானா?''

''துரதிர்ஷ்டவசமாக இல்லை. ஆனால் அனுப்பப்பட் டிருக்க வேண்டும்.''

''அது துரதிர்ஷ்டவசமாக இருக்கலாம். ஆனால் அது வல்ல விஷயம்...''

''பின்னர் எதுதான் விஷயம்?''

''யார் எதிர்த்துப் பேசினார்கள் என்பதை நினைத்துப்

பார். உன்னால் முடியாதா? நான் நினைவூட்டுகிறேன்: ஒஸ்த்ரவ்னோவ், பண்டசாலைக் காப்பாளர் அஃபோங்கா, லுஷ்னியா, இன்னும் இருபது பேர் இருந்தார்கள். அவர்கள்தான் உன்னுடைய நல்ல யோசனையைத் தள்ளிவிட மக்களைத் தூண்டிவிட்டார்கள். ஆகையால் ஒஸ்த்ரவ்னோவ் மட்டும் அல்ல. இது உனக்குப் புரிகிறதா?''

''சரி. மேலே சொல்லு.''

''ஆகட்டும் சொல்கிறேன். பிறகு எதற்காகக் கூட்டங்களில் நான் பேசுவதில்லை என்று கேட்டாய்? ஏதோ ஒன்று, இரண்டு அல்லது மூன்று சமயங்களில் பேசலாம்.பிறகு சமாளிக்க முடியாது. இங்கே இதே உலையில் நான் காய்ச்சிக் கொண்டிருக்கும் இரும்பை வைத்தே, இதே சுத்தியலைக் கொண்டே தொலைத்துக்கட்டி விடுவார்கள். அநேகமாக என் பேச்சுக்கு அது முடிவு கட்டிவிடும். இல்லை தம்பி. முடியாத வகையில் நான் கிழவனாகிவிட்டேன். நீயும் அவர்களும் தனியாகவே பேசலாம். இந்த உலையின் வாசனையை நான் இன்னும் சற்று அதிகக் காலம் சுவாசிக்க விரும்புகிறேன்.''

''தந்தையே, அப்படியானால் இருக்கும் ஆபத்தை நீ அதிகப்படுத்திக் காட்டுகிறாய். உண்மையாகத்தான்!'' தவீதவ் நம்பிக்கையின்றிப் பேசினான். கொல்லன் சொன்னதிலேயே தவீதவ் மூழ்கிப்போயிருந்தான்.

ஆனால் அவனோ தவீதவைத் தனது துருத்திக்கொண்டிருந்த கரிய கண்களால் பார்த்துவிட்டு கிண்டலாகக் கண் சிமிட்டினான்: ''என்னுடைய தள்ளாத கிழப் பருவத்தில், கண் தெரியாத காலத்தில், நீ சொன்னதைப்போல நான் மிகைப் படுத்திக் கூறக்கூடும். ஆனால் தம்பி நீ அவர்களுடைய இந்த ஆபத்தைப் பார்க்கவில்லை. உனது இளமை விளையாட்டு மூளையை இருளடையச் செய்துவிட்டது. அதுதான் உண்மை.''

தவீதவ் பதிலே சொல்லவில்லை. சிந்தனையில் அழ வேண்டியவன் இப்பொழுது அவன் தான். எனவே நீண்ட நேரம் அமைதியான சிந்தனையில் மூழ்கினான். கையில் எதையோ வைத்து இப்பொழுது தவீதவ் முறுக்கிக் கொண்டிருந்தான். ஆனால் அது புல் அல்ல. தரையில் இருந்து எடுத்த துருப்பிடித்த இரும்பு... ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கும் போது பல மனிதர்கள் தங்கள் பார்வையில் முதலில்

படும் பொருளை வைத்துக்கொண்டு சுழற்றிக்கொண்டே இருப்பார்கள்...

கதிரவன் நடு வானை விட்டு அப்பால் போய்விட்டான். நிழல் சாய்ந்து விழுந்தது. கதிரவனின் கதிர்கள் செடி முளைத்துப்போன கூரையின்மீது சாய்வாக விழுந்தன. எந் திரங்கள் மீதும் சாலையோரம் இருந்த புல் மீதும் இவ் வாறே விழுந்தது. கிரெமியாச்சி லோக் கிராமமே பிற்பகல் அமைதியில் மூழ்கிக் கிடந்தது. வீட்டுப் பலகணிகள் மூடப் பட்டிருந்தன. தெருக்கள் வெறிச்சோடிக்கிடந்தன. காலை யிலிருந்து சுற்றிக்கொண்டு திரிந்த இளங்கன்றுகள்கூட ஆற்றுக்குப் போய்விட்டன. அங்கு நெருக்கமாக வளர்ந் துள்ள கோரைப்புல், புதர் இடையே மறைந்துகொண்டன. ஆனால் தவீதவும் ஷாலீயும் மட்டும் அந்தக் கொளுத்தும் வெயிலிலேயே உட்கார்ந்திருந்தனர்.

''உலைக்குப் பக்கமாகப் போய்விடலாம். அங்கே கொஞ்சம் குளிராக இருக்கும். எனக்கு இப்படி வெயிலில் இருந்து பழக்கமில்லை'' என்றான் ஷாலீய், முகத்திலிருந்து வியர்வையைத் துடைத்துக் கொண்டான். முகத்தில் ஒரு வழுக்கைத் தழும்பு இருந்தது. ''ஒரு கிழட்டுக் கொல்லர் ஒரு கிழ ராணியைப் போலத்தான். இருவருக்குமே வெயில் பிடிக்காது, இருவருமே வாழ்க்கை முழுக்க ஒரே மாதிரி நிழலை நாடுகிறார்கள்...''

இருவரும் உள்ளே போய் உலைக்கு உட்புறத்தில் கண கணப்பான தரையில் அமர்ந்தனர். ஷாலீய் தவீதவுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு அறுபட்ட நூலில் மாட்டிக் கொண்ட வலைப்பூச்சி மாதிரி முட்டி மோதத் தொடங்கிக் கொண்டிருந்தான்: ''ஹப்ரோவையும் அவன் மனைவி யையும் கொன்றார்கள் அல்லவா? ஆமாம். எதற்காகக் கொன்றார்கள்? குடித்துவிட்டு அடித்த கூத்தின் விளைவா? இல்லை தம்பி, அதில்தான் விஷயமிருக்கிறது... அதில் மர்மம் இருக்கிறது. யாருமே ஒன்றுமில்லாத காரியத் துக்கு ஓர் ஆளைக் கொல்வதில்லை. என்னுடைய கிழட்டு முட்டாள் புத்தியை வைத்துக்கொண்டு நான் இப்படித் தான் பார்க்கிறேன்: சோவியத் ஆட்சிக்கு வேண்டாதவன் என்றால் கைது செய்யப்பட்டு, வழக்கு மன்றத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும்.இப்படி மர்மக் கொலையாக நடக்காது. அவனும் அவன் மனைவியும் மர்ம

மாகக் கொல்லப்பட்டதில் இருந்தே, இவன் சோவியத்தின் விரோதிகளுக்கு உகந்தவனாக இருக்கவில்லை என்பது தெளிவு. வேறு மாதிரி இருக்க முடியாது! அவன் மனைவியையும் ஏன் கொல்ல வேண்டும்? உன்னைத்தான் கேட்கிறேன். அதிகாரிகளிடம் கொலைகாரர்களைக் காட்டிக் கொடுத்து விடக் கூடாது என்றுதானே. அவளுக்கு அவர்களைத் தெரியும்! செத்தவர்கள் பேசுவதில்லை. அவர்கள் தொல்லைத் தருவதில்லை தம்பி... இது வேறு மாதிரியாக இருந்திருக்க முடியாது என்று நான் உனக்கு உறுதியாகச் சொல்கிறேன்.''

''நீ சொல்லாமலே, நாங்களும் இப்படி நடந்திருக்கக் கூடும் என்று யூகித்தோம் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் கொன்றது யார்—அது தானே யாருக்குமே தெரியவில்லை.'' தவீதவ் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு மேலும் தந்திரமாக, ''இனியும் யாருக்கும் தெரியாது என்று நினைக்கிறேன்!'' என்றான்.

இந்தக் கடைசி வார்த்தைகளை ஷாலீய் கேட்டது போல தெரியவில்லை. பழுப்பேறிய தாடியைத் தன்கையில் பிசைந்து கொண்டே புன்னகை செய்தான்: ''இந்தக் குளிர்ச்சி மிக அருமையாக இருக்கிறது, இல்லையா? தம்பி, ஆரம்ப காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் சற்று முன் நினைத்துக் கொண்டேன். கோதுமை அறுவடைக்கு முன் ஒரு நாள் தாவ்ரியாவிலிருந்து வந்த ஒரு பணக்காரரின் வண்டிக்கு நாலு பட்டா போட்டேன். வாரத்து நாளில் ஏதோ ஒரு நாளன்று சக்கரங்களை எடுத்துப்போக வந்தான். அது ஒரு நோன்பு நாள். புதனோ, வெள்ளியோ தெரியவில்லை. எனக்குப் பணம் கொடுத்தான். என் வேலையைப் புகழ்ந்தான். தன்னுடன் வந்திருந்த ஓர் ஆளையும் சேர்த்து எல்லாருமாகக் குடித்தோம். ஒரு சுற்று குடித்தோம். அடுத்து நான் ஒரு சுற்றுக் கொடுத்தேன். அதையும் குடித்தோம். அவன் ஓர் உக்ரேனியன். பணக்காரன். ரொம்ப நல்ல பரந்த மனதுடையவன். அவன் அந்த நாளை மகிழ்ச்சியோடு கழிக்க விரும்பினான். ஆனால் எனக்கு வேலை நெருக்கடியான நேரம். எனக்குப் பலவிதமான வேலைகள் வந்திருந்தன. 'நீ, த்ரஃபீம் தெனீஸவிச் உன் ஆட்களுடன் குடித்துக் கொண்டிரு. என்னை மன்னி. எனக்கு அதிக வேலை இருக்கிறது. நான் போய்வரட்டு

மா?' என்றேன். அவன் ஒப்புக்கொண்டான். அவர்கள் வோத்கா குடித்துக்கொண்டிருந்தார்கள். நான் உலைக்குத் திரும்பிவிட்டேன். என் தலை சுழன்றது. இரைச்சலிட்டது. ஆனால் கால்கள் உறுதியாக இருந்தன. கைகளும் உறுதியாய் இருந்தன. ஆயினும் உண்மையில் குடித்துவிட்டு நான் உருண்டு கொண்டுதான் இருந்தேன். என் யோகத்தைப் பாரு. ஒரு மூன்று குதிரை வண்டி என் உலைப் பக்கம் போயிற்று. நான் வெளியில் வந்தேன். ஒரு குடையைப் பிடித்துக் கொண்டு சின்ன வண்டியில் ஸெலிவானவ் இருந்தான். எங்கள் மாவட்டத்திலேயே பெரிய நிலக்கிழார், கர்வம் பிடித்த ஆசாமி. இந்த உலகமே கண்டிராத அயோக்கியன்... அவனது வண்டிக்காரன் வெளுத்த காகிதம் மாதிரி இருந்தான். குதிரையைக் கழற்றி விடும் பொழுது அவன் கைகளெல்லாம் நடுங்கிக்கொண்டிருந்தன. அவன் கவனியாததால் அந்தச் குதிரை இடதுகால் லாடத்தை இழந்துவிட்டது. அதற்காக அந்த நிலக்கிழார் அவனை நிமிண்டிக் கொண்டிருந்தான்: 'டேய் அவனே, இவனே உன்னைச் சுட்டுத்தொலைக்கிறேனா இல்லையா பார். உன்னைச் சிறையில் போடுகிறேன். என் ரயிலைத் தவற விட்டு விட்டாயே' என்று இரைந்தான். தம்பி, உனக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும். இந்த தோன் பகுதி கஸாக்குகள் நாங்கள் நிலக்கிழார்களுக்குப் பயந்து நடுங்க மாட்டோம். மாவட்டத்திலேயே பெரிய நிலக்கிழார் என்றாலுங்கூட ஸெலிவானவை நான் பொருட்படுத்தவில்லை. உலைக்களத்தை விட்டு வோத்கா குடித்த மகிழ்ச்சியில் வெளிவந்தேன். வாசற் படியில் நின்று அவன் வண்டிக்காரனை ஏக வசனத்தில் திட்டுவதை நான் கேட்டேன். அது எனக்கு மிகக் கஷ்டமாக இருந்தது, தம்பி. என்னைப் பார்த்தவுடன் ஸெலிவானவ் 'ஏய் கொல்லரே இங்கே வா!' என்று கத்தினான். 'நான் தேவைப்பட்டால் நீ இங்கே வா' என்று சொல்ல விரும்பினேன். ஆனால் எனக்கு வேறு ஒரு எண்ணம் ஏற்பட்டதால், அவனருகில் போனேன். அவனுக்குக் கையைக் கொடுத்தேன், 'என்ன சகோதரனே, எப்படி இருக்கிறாய்?' என்றேன். அவன் பட்ட வியப்பினால் அவனது தங்கக் கண்ணாடிகூட அவன் மூக்கின்மீது விழுந்துவிட்டது! எனது தூசிபடிந்த அழுக்குக் கறுப்புக் கையை இன்னும் நீட்டிக்கொண்டுதான் நின்றேன். அதைப் பார்க்

காதவனைப்போல நடித்தான். எதையோ விழுங்கக் கூடா ததை விழுங்கிவிட்டதைப்போல என்னைக் கடுப்புடன் பார்த்துக்கொண்டு, ''நீ குடித்திருக்கிறாயா? உன் கையை யார் நீட்டச்சொன்னார்கள் ஏ, அழுக்கு மூட்டைப் பன்றி யே?' 'ஓ எனக்கு அது நன்றாகத் தெரியுமே!' என்றேன் நான். 'நீ யார் என்பது எனக்கு நன்கு தெரியும்! ஏன் தெரி யுமா? நாம் உடன் பிறந்த சகோதரர்களைப் போல. நீ குடையைப் பிடித்துக்கொண்டு அந்தப் பக்கம் நிற்கிறாய்: நான் உலைக்கள நிழலில் இங்கு நிற்கிறேன். நான் வார நாளில் கொஞ்சம் குடித்துத்தான் இருக்கிறேன். நீ சொன் னது சரி தான், ஆனால் உழைக்கும் மக்களைப்போல நீ ஞாயிற்றுக் கிழமையில் மட்டும் தான் குடிக்கிறாயா? உன் மூக்கு சிவந்து போயிருக்கிறதே... எனவே நாமிருவருமே ராஜ குடும்ப பரம்பரையாக இருக்க வேண்டும். சாதாரண ஆட்களாக இருக்க முடியாது. என் கை கறுப்பு, உன் கை வெளுப்பு என்பதால் என்னுடன் கைகுலுக்க விரும்பாவிட் டால் அது உன் விருப்பம், ஆனால் நாம் இருவருமே சாகும் போது சுண்ணாம்புக் கட்டி போல வெள்ளையாகத்தான் இருப்போம்.'

''ஸெலிவானவ் எதுவுமே பேசவில்லை. அவன் முகபா வம் மட்டுமே மாறிக்கொண்டிருந்தது. 'உனக்கு என்ன வேண்டும்?' என்று நான் கேட்டேன். 'குதிரைக்கு லாடம் அடிக்க வேண்டுமா? ஒரு விநாடியில் முடித்துவிடலாம். அதற்காக உன் வண்டிக்காரனைத் திட்ட வேண்டாம். அவன் நாக்கையிழந்தவன் மாதிரி போனானே. என்னை வேண்டு மானால் திட்டிப் பாரேன். உலைக்களத்துக்குள் வாயேன், கதவைப் பூட்டிவிடுகிறேன். அதன் பிறகு என்னைத் திட்டிப் பார். வம்பிழுத்துக்கொள்வோரை எனக்கு மிகவும் பிடிக் கும்.'

''ஸெலிவானவ் இன்னும் வாய் திறக்கவே இல்லை. ஆனால் முகம் மட்டும் ஒரு நிறத்திலிருந்து முற்றிலும் மாறு பட்ட நிறமாக, வெள்ளையும் சிவப்புமாக மாறிக்கொண்டே இருந்தது. ஆனால் அவன் எதுவுமே சொல்லவில்லை. குதி ரைக்கு லாடமடித்தேன். அவன் வண்டிக்குப் போனேன். என்னைப் பார்க்காதவனைப் போல இருந்தான். கையில் ஒரு வெள்ளி ரூபிளை வண்டிக்காரனிடம் கொடுத்தான், 'அந்தத் தண்டத்திடம் கொடு' என்றான். நான் அந்த

ரூபிளை வாங்கி ஜெலிவானவ் கால் வழியாக வண்டிக்குள் வீசி எறிந்தேன். பிறகு வியப்புக் கலந்த சிரிப்புடன், 'என்ன சகோதரனே இது? இப்படிப்பட்ட சின்ன விஷயங் களுக்கெல்லாம் சொந்தக்காரர்களிடமிருந்து பணம் வாங்கு வேன் என்று எதிர்பார்க்கலாமா? நான் உனக்குப் பரிசு கொடுக்கிறேன். எங்காவது ஒரு விடுதிக்குப் போய் என் நலனுக்காகக் குடி!' இதைக் கேட்டு அவனுடைய நிறம் சிவப்போ வெளுப்போ இல்லாத ஒரு புது நிறமாக மாறி விட்டது. 'உன்னுடைய நலனுக்காக... ஏ, தண்டம், சோஷ லிஸ்டா நீ!' என்று என்னைப் பார்த்துச் சீறினான். 'நான் உன்னைச் சாகடிக்கிறேனா இல்லையா என்று பார்! உள் ளூர் அதாமானிடம் சொல்கிறேன்! உன்னை ஜெயிலில் போட்டு வாட்டுகிறேன்!' ''

தவீதவ் சிரித்த சிரிப்பில் கூரையில் இருந்த குருவிகள் கூட பறந்துவிட்டன. தனது தாடிக்குள்ளேயே சிரிப்பை அடக்கிக்கொண்டு சிகரெட்டைச் சுற்றினான் ஷாலீய்.

''எனவே உனது 'சகோதரனுடன்' நீ மோதிக்கொள்ள வில்லையா?'' பேச முடியாமல் கேட்டான் தவீதவ்.

''இல்லை.''

''பணத்தை வண்டியை விட்டு வெளியே வீசி எறிந் தானா?''

''நான் அவனையே தூக்கி எறிந்திருப்பேன்... அவன் அந்த ரூபிளோடு வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட் டான். இது பண விஷயம் அல்ல, தம்பி...''

''அப்படியானால் என்ன விஷயம்?''

தவீதவ் சிரித்த சிரிப்பில் ஷாலீய்கூட மகிழ்ச்சியடைந் தான். இன்னும் குலுங்கிக்கொண்டே, ''நான் என்னையே கொஞ்சம் முட்டாளாக்கிக் காட்டினேன்...''

''மேலே சொல் சீதரவிச். எதற்காக இப்படி இழுத் தடித்துக் கொண்டிருக்கிறாய்?'' தவீதவ் நீர் நிறைந்த கண் களுடன் ஷாலீயை நேராகப் பார்த்தான்.

ஆனால் அவனோ கையை ஆட்டிவிட்டு, தாடி வாயைத் திறந்து பலமாகக் கடகடவெனச் சிரித்தான்.

''சரி, சரி. மேலே சொல்லு. என்னைக் காக்க வைக் காதே!'' என்று வேண்டுதலுடன் கேட்டான் தவீதவ். தங் களது பேச்சின் முக்கியத்தை மறந்து விட்டு சிரிப்பில் அவ னும் ஆழ்ந்திருந்தான்.

''சொல்ல என்ன இருக்கிறது... கேள் தம்பி! என்னைத் தடியன், அயோக்கியன் என்று வாய்க்கு வந்தபடி என் னென்ன உண்டோ அத்தனையும் சொல்லித் திட்டினான். கடைசியில் தொண்டையடைத்துப் போய் வண்டியில் ஏறி னான். 'அயோக்கிய சோஷலிஸ்டே! உன்னை ஜெயிலில் போடுகிறேன் பார்!' என்றான். அந்த நாட்களில் சோஷ லிஸ்ட் என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது... புரட்சி என்றால் அருத்தம் தெரியும். ஆனால் சோஷலிஸ்ட் என்றால் தெரியாது. திட்டுவதற்கு மகா மோசமான வார்த்தை அதுதான் போலும் என்று நினைத்துக்கொண் டேன்... எனவே நானும் பதிலுக்கு 'நீயும் ஒரு சோஷ லிஸ்ட்தான். பன்றிக் குட்டியே! உன்மீது நான் பாய்வதற்கு முன் போய்விடு என்றேன்!' ''

மீண்டும் சிரித்தபொழுது தவீதவ் மல்லாந்து படுத்து விட்டான். அவன் தன் நிலைக்குத் திரும்பும்வரை காத் திருந்து விட்டு ஷாலீய் தொடர்ந்து, ''மறு நாள் கிராம அதாமான் முன்னால் என்னைக் கொண்டு போய் நிறுத்தி னார்கள். என்ன நடந்தது என்று அவர் கேட்டார். கேட்டு நீ சிரிப்பதைப் போல சிரித்துக் கொண்டிருந்துவிட்டு தண்டிக்காமல் அனுப்பிவிட்டார். அவரும் ஒரு சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்தவர் தான். ஆகையால் ஓர் ஏழைக் கொல்லன் பணக்காரனிடம் இப்படி நடந்துகொண்டது மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். என்னை வெளி யில் அனுப்பும் முன் 'இனிமேல் வருங்காலத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேச வேண்டும். இல்லையென்றால் இரும்பை வைத்து இங்கு உலையில் வேலை செய்துகொண்டிருப் பதைப் போல, நாளைக்கு சைபீரியாவில் இரும்பு சுமக்க நேரிடலாம். உனக்குப் புரிகிறதா?' 'சரிதான் எஜமானரே' என்றேன் நான். 'சரி நீ போகலாம். இனி நான் உன்னைப் பார்க்கும்படி நடந்துகொள்ளாதே. ஸெலிவானவிடம் உன் தோலை உறித்துவிட்டதாக நான் சொல்லிக்கொள்கிறேன். நீ போகலாம்' என்றார். இப்படித் தான் விஷயங்கள் நடந் தன தம்பி...''

தவீதவ் போய்வருகிறேன் என்று சொல்ல எழுந்தான். ஆனால் வாயாடிக் கொல்லன் ஷாலீய் அவனுடைய சட் டையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்து, எதிர்பாராத

விதமாக, ''ஹப்ரோவ் குடும்பத்தைக் கொன்றது யார் என்பது யாருக்குமே தெரியாது என்கிறாய் அல்லவா? அந்த இடத்தில்தான் தவறு செய்கிறாய். அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள். சிறிது காலம் மட்டும் கொடுத்துப் பார்.''

இந்தக் கிழவருக்கு ஏதோ தெரியும் என்பது தெரிந்த தவீதவ் வெளிப்படையாகவே பேச முடிவு செய்தான்.

''சீதரவிச், நீ யாரைச் சந்தேகப்படுகிறாய்?'' என்று நேரடியாகக் கேட்டான் அவன். கருத்த, ரத்தம் நிறைந்த ஷாலீயின் கண்களைப் பார்த்துக் கொண்டான் தவீதவ்.

ஷாலீய் அவனை அவசரமாகப் பார்த்துவிட்டு, தப்பித்துக் கொள்ளக்கூடிய முறையில், ''இதுபோன்ற விஷயங்களில் தவறு செய்வது மிகவும் எளிது தான், இளைஞனே...''

''ஆனால் அதே நேரத்தில்?''

மேலும் எந்தத்தயக்கமும் இன்றி ஷாலீய் தனது கையை தவீதவின் முழங்கையில் வைத்து, ''இங்கு பார், நண்பனே, எதாவது நடந்தால் என்னைச் சொல்ல மாட்டாய் என்று உறுதி கூறுவாயா? ஏற்றுக் கொள்கிறாயா?''

''ஒப்புக்கொள்கிறேன்.''

''நல்லது, இதில் யாக்கவ் லுக்கீச்சுக்கும் பங்கு உண்டு. இதை உறுதியாக என்னால் கூற முடியும்.''

''ஓ, இல்லை, சகோதரா...'' என்று வேண்டா வெறுப்புடன் இழுத்தான் தவீதவ்.

'நான் ஸெலிவானவுக்குச் 'சகோதரனாக' இருந்தேன். ஆனால் உனக்குத் தந்தையாக இருக்கக்கூடிய வயதானவன் நான்'' என்று எரிச்சலோடு ஷாலீய் சொன்னான். ''யாக்கவ் லுக்கீச்சே, ஹப்ரோவ்களைக் கோடரியால் கொன்றான் என்று நான் சொல்லவில்லை. அவனுக்கு இதில் பங்குண்டு என்றேன். தம்பி, கடவுள் உனக்கு நல்ல மூளையைக் கொடுத்திருந்தாரானால், இதை நீ புரிந்துகொள்ள வேண்டும்.''

''உன்னிடம் என்ன ஆதாரங்கள் இருக்கின்றன?''

''ஏன் துப்பறியும் நிபுணராகலாம் எனப் பார்க்கிறாயா?'' எனக் கேலியாகக் கேட்டான் ஷாலீய்.

''நாம் முக்கிய விஷயத்தைப் பேசிக் கொண்டு இருக்கிறோம், சீதரவிச். இதிலிருந்து வேறு விஷயங்களுக்கு சிரிப்புக்காட்டி நழுவ வேண்டாம். உனக்குத் தெரிந்ததை

யெல்லாம் சொல்லு. குருட்டு மனிதர்கள் விளையாட்டை இனியும் நாம் விளையாடிக்கொண்டிருக்க முடியாது.''

''நீ ஒரு பெரிய துப்பறியும் நிபுணன் ஆக முடியாது, தம்பி'' ஷாலீய் திடமாகச் சொன்னான். ''என்னை அவசரப் படுத்தாதே. நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன், கடைசி விவரம்வரை சொல்லிவிடுவேன். கடைசியில் வேண்டு மானால் அவசரம் அவசரமாக நீ கண்களைக் கசக்கிக் கொள்ளலாம்... இப்பொழுது லூஷ்காவுடன் கலக்க வேண் டிய அவசரம் ஒன்றுமே இல்லை. அவளால் உனக்கு என்ன உபயோகம்? அந்தப் பன்றியை விட நல்ல பெண்களைப் பார்க்க முடியவில்லையா?''

''அது உனக்குத் தேவையில்லாத வேலை'' என்று காட்டமாகச் சாடினான் தவீதவ்.

''இல்லை தம்பி, அது என்னுடைய விஷயம் மட்டு மல்ல. அது கூட்டுப்பண்ணையின் மொத்த விஷயமாயிற்றே.''

''ஏன் என்றால் இது?''

''இந்தப் பெண் நாயோடு நீ சேர்ந்துவிட்டதால்தான் மோசமாக வேலை செய்யத் தொடங்கிவிட்டாய். உனக்கு மாலைக்கண் நோய் தாக்கி விட்டது... நீ இது என் விஷய மல்ல என்று சொல்கிறாய். இது உன்னுடைய துரதிர்ஷ்டம் மட்டுமல்ல, இந்தக் கூட்டுப்பண்ணை முழுமைக்குமான துரதிர்ஷ்டமாகும். லூஷ்காவுடன் நீ சுற்றுவது யாருக்குமே தெரியாது என்று நினைத்துக்கொண்டிருக்கிறாய். ஆனால் இந்த ஊரில் உள்ள எல்லார்க்கும் இது தெரியும். கிழவர் களாகிய நாங்கள் கூடிப்பேசும்போது கூட, லூஷ்காவிட மிருந்து உன்னை விடுவிப்பது எப்படி என்று பேசிகொள் வோம். அவளைக் கொள்ளைக் கொண்டுபோக! ஏன்? ஏனெ னில், லூஷ்கா மாதிரிப்பட்ட பெண்கள், ஆண்களை வேலை செய்ய உற்சாகப் படுத்தாமல் தள்ளி இழுத்துக்கொண்டு போவார்கள். அதனால் தான் நாம் கவலைப்படுகிறோம்... நீ நல்ல பையன். நிதானத்தோடு இருக்கிறாய் குடிப்ப தில்லை. சுருங்கச் சொன்னால் முரட்டுத்தனம் உன்னிடம் இல்லை. இந்த நல்ல இயல்பை லூஷ்கா தனக்குச் சாதக மாகப் பயன்படுத்திக்கொண்டாள். அவள் உன் பிடரியில் ஏறிக் கொண்டு உன்னைத் துரத்துகிறாள் என்பது எனக்குத் தெரியும். அவள் எதைக் காட்ட விரும்புகிறாள் தெரி யுமா? 'இங்கே பாருங்கள், நான் யாரைப் பிடித்துவிட்

டேன் என்று!' அவள் தன்து பெருமையை மற்றவர்களிடம் காட்டுகிறாள். ஏய் தவீதவ், தவீதவ், நீ தவறான பெண் ணைப் பிடித்துவிட்டாய்... ஒரு ஞாயிற்றுக்கிழமை பெஸ் ஹிலேப்னவ் வீட்டுத் திண்ணையில் கிழவர்கள் சிலர் உட் கார்ந்திருந்தோம். நீ எங்களைக் கடந்து அவசரமாகப் போனாய். பெஸ்ஹிலேப்னவ் கிழவன் உன்னைப் பார்த்து விட்டு, 'லூஷ்காவுடன் பழகும் முன்னர் எவ்வளவு எடை இருந்தார். இப்பொழுது எவ்வளவு நிறை இருக்கிறார் என்று நாம் பார்த்திருக்க வேண்டும். அவள் அவன் எடை யில் பாதிக்கு மேல் காலி செய்து விட்டாள். இது கூடாது. அவள் ஆட்டி எடுத்து பாதி மாவை எடுத்துக்கொள்ள, நமக்கு எஞ்சிய பாதி பொட்டுத்தான்...' இதை நான் கேட்ட போது உனக்காக அவமானப்பட்டுப் போனேன்! மிகவும் வெட்கமாகப்போய்விட்டது, தெரியுமா? நீ என் உலையில் வேலை பார்க்கிற ஆள் என்றால் கிராமத்தில் யாருமே முணுமுணுத்திருக்க மாட்டார்கள். ஆனால் நீயோ எங்கள் எல்லாக் குடும்பங்களுக்கும் தலை.. ஒரு தலைவனாவது மிகப் பெரிய விஷயம் தம்பி. ஆகையால் பழங்காலத்தில் கூட்டங்களில் பேசும்பொழுது, ஏதாவது ஒரு தவறுக்காக கஸாக்குகளைப் பிடித்து அடிக்கும் பொழுது, 'அவனது இடுப்பு சிவக்க அடியுங்கள். அப்பொழுதுதான் தலை சுத்த மாகும்' என்பார்கள். ஆனால் நம் கூட்டுப்பண்ணையின் தலையோ சரியில்லை. சற்று குழம்பியிருக்கிறது. லூஷ்கா வுடன் உரசி தாரைப் பூசிக்கொண்டு வந்துவிட்டது. நீ யாராவது ஒரு கௌரவமான பெண்ணையோ விதவை யையோ கைப்பிடித்திருந்தால் உனக்கு எதிராக யாரும் ஒரு வார்த்தை பேசியிருக்க மாட்டார்கள். ஆனால் நீயோ... ஏ தவீதவ், தவீதவ், உன் கண்கள் இருண்டு விட்டனவா! லூஷ்காவின் காதல் அல்ல உன்னை மெலிய வைத்தது. உன் மனச்சாட்சி என்றுதான் நான் நினைக்கிறேன். உன் மனச் சாட்சிதான் உன்னைக் கொன்றுகொண்டிருக்கிறது. அதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.''

உலைக் களத்திற்கு வெளியே உள்ள சாலையை தவீ தவ் உற்றுப் பார்த்தான். குருவிகள் புழுதியில் குளித்துக் கொண்டிருந்தன. அவன் முகத்திலே காணக் கூடியவாறு துயரம் தெரிந்தது. துருத்திக் கொண்டிருந்த கன்ன எலும்பு களில் நீல நிறப் புள்ளிகள் தெரிந்தன.

''அது சரி, பாக்கியை நீ விட்டுவிடலாம்!'' என்று சொல்லிய வண்ணம் ஷாலீயின் பக்கம் திரும்பி, ''நீ சொல்லாமலே எனக்கே அது வெறுப்பாகத்தான் இருக்கிறது, கிழவனே!'' என்றான்.

''எதையாவது ஒட்டிக்கொண்டிருந்தபோது அதை விட்டுவிட வேண்டும் எனக் கவலைப்பட்டால் அது நல்லதற்குத்தான்'' ஷாலீய் சாதாரணமாகச் சொன்னான்.

தனக்கு ஏற்பட்ட சங்கடத்திலிருந்தும் உணர்ச்சியிலிருந்தும் மீண்ட தவீதவ், வறட்சியாகச் சொன்னான்: ''ஒஸ்த்ரவ்னோவ் இதில் ஈடுபட்டான் என்பதற்கு எனக்கு ஆதாரங்களைக் காட்டு. ஆதாரங்கள் இல்லாமல் சொல்வது வெறும் அவதூறாகப்படுகிறது. ஒஸ்த்ரவ்னோவ் உனக்குத் தவறு செய்துவிட்டான். நீ பதிலடி கொடுக்கிறாய் போலும், உண்மையாகத்தான்! உன்னிடம் என்ன ஆதாரங்கள் உள்ளன? பேசேன் பார்ப்போம்!''

''நீ ஆகாயத்திலிருந்து கொண்டு பேசுகிறாய் தம்பி'' என்று ஷாலீய் கடுமையாகப் பேசினான். ''லுக்கீச்சுக்கு எதிராக எனக்கு என்ன இருக்கிறது? அந்தச் சம்பளமா? எனக்குக் கிடைக்கவேண்டியதை நான் எப்படியும் வாங்கிவிடுவேனே. என்னிடம் ஆதாரங்கள் ஒன்றும் இல்லை. ஹப்ரோவைக் கொன்றபொழுது, என் ஒன்று விட்ட சகோதரியான அவன் மனைவியையும் கொன்றபொழுது, நான் அவர்கள் கட்டிலின் அடியில் படுத்திருக்கவில்லை.''

அப்பொழுது சுவற்றின் மறு புறம் சரசரவென்ற ஓசை கேட்டது. திடீரென்று துடிப்புடன் தனது கனத்த உடலைத் தூக்கி எழுந்தான் கிழவன். ஒரு நிமிடம் கவனமாக நின்று கேட்டுவிட்டு, கடைசியில் தோல் முந்தானையை இழுத்துவிட்டுக் கொண்டு, ''சரி, வா தம்பி, என்னிடத்திற்குப் போகலாம், குளிரான இடத்தில் உட்கார்ந்துகொண்டு குளிர்ந்த பாலைக் குடித்துக் கொண்டே பேசலாம். நமது பேச்சை முடித்துக் கொள்ளலாம். நான் உனக்கு ரகசியமாகச் சொல்கிறேன்...'' தவீதவ் பக்கமாகச் சாய்ந்தான் அவன். அவன் பேசிய குசுகுசுப் பேச்சு அடுத்த வீட்டு முற்றங்களில் கூடக் கேட்டிருக்கும். ''என்னுடைய சின்னப் பையன் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்... எந்த துவாரத்திலும் அந்த ஆப்புக் கட்டையை மாட்ட முடியும். அவன் காது கொடுத்துக் கேட்காமல், நீ யாருடனும் பேச முடியாது. அட

கடவுளே! இவனோடு கட்டி அழுகிற தொல்லைகளுக்கு ஒரு கணக்குவழக்கு உண்டா? நாம் சொன்னதைச் செய்ய மாட்டான். மகாச் சோம்பேறி, மிகவும் கெடுக்கப்பட்டு விட்டான். ஆனால் எப்படியும் ஒரு கொல்லன் ஆகிவிடுவான். அது உறுதி! அந்தக் குட்டிச்சாத்தான் கைதொட்டால் எதையும் செய்துவிடுவான்! எல்லாவற்றிற்கும் மேலாக அவன் ஓர் அநாதை. ஆகையால்தான் அவனது தொந்தரவுகளைச் சமாளித்துக்கொண்டு இருக்கிறேன். அவனை ஒரு மனிதனாக்க வேண்டும். நல்ல கொல்லனாக்க வேண்டும்.''

உலைக்களத்துக்குள்ளே போனான் ஷாலீய். தோல் முந்தானையை எடுத்து ஒரு புகைபடிந்த பெஞ்சில் எறிந்து விட்டு, ''சரி வா, போகலாம்!'' என்று தவீதவிடம் சுருக்கமாகச் சொல்லி விட்டு வீட்டை நோக்கி நடந்தான்.

ஷாலீயிடம் கேட்ட ஒவ்வொன்றையும் சிந்திப்பதற்காகத் தனிமையிலிருக்க விரும்பினான் தவீதவ். ஆனால் ஹறப்ரோவ்களின் கொலை பற்றிய பேச்சு முடிவடையவில்லை. எனவே, அதைக் கேட்க பின்தொடர்ந்தான். தூக்கக் கலக்கத்துடன் கிராமத்துத் தெருவில் அசைந்து நடக்கும் கரடி மாதிரி பின்தொடர்ந்தான்.

அப்படிப் பின்தொடர்ந்து செல்வது அருவருப்பாகத் தெரிந்ததால், ''உன் குடும்பம் எப்படிப்பட்டது சீதரவிச்?'' என்று கேட்டான் தவீதவ்.

''கிழவியும், நானும் அதுதான் எங்கள் குடும்பம்.''

''குழந்தைகள்?''

''நாங்கள் இளமையாக இருந்தபொழுது இரண்டு குழந்தைகள் இருந்தன. ஆனால் அவை இந்த உலகத்தில் நிலைக்கவில்லை. மூன்றாவது குழந்தை செத்துப் பிறந்தது. அதன் பிறகு என் மனைவிக்குக் குழந்தைகளே இல்லை. அவள் நல்ல பலத்துடன், சுகத்துடன்தான் இருந்தாள். ஆனால் ஏதோ கோளாறு அதுதான் விஷயம்! நாங்கள் என்னென்னவோ செய்து பார்த்தோம் — முயற்சிகள் பல செய்தோம், ஆனால் ஒன்றும் பலன் தரவில்லை. கீவ் மாதா மடாலயம் வரை என் மனைவி குழந்தைக்காகக் கால்நடையாகவே சென்றாள். ஆனால் அதுவும் உதவவில்லை. அவள் என்னை விட்டுப் புறப்படும் பொழுது, 'அங்கிலிருந்து ஒரு சிறு உக்ரேனியனையாவது அழைத்துக் கொண்டு வா' என்றேன். ஷாலீய் உடம்பைக் குலுக்கிக்கொண்டு, முடித்தான்:

''என்னை ஒரு கரும் முட்டாள் என்று அழைத்தாள். தொழு பீடத்தை வணங்கிவிட்டுப் புறப்பட்டாள். அவள் இளவேனிற்காலம் முதல் முதுவேனிற்காலம் வரை போயிருந்தாள். பயன்தான் இல்லை. அன்றிலிருந்து அநாதைப் பையன்களை அழைத்துப் பட்டறை வேலை சொல்லிக் கொடுத்து வருகிறேன். எனக்குக் குழந்தைகள் என்றால் மிகவும் பிரியம். ஆனால் அந்த இன்பம் எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. சில சமயங்களில் இப்படியும் நடக்கும் தம்பி...''

முன்வராந்தாப் பகுதி அரை இருட்டில் அமைதியாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது. கதவடைப்பு இடுக்கண்களின் வழியாக கதிரவனின் கற்றை ஒளி மஞ்சளாகத் தெரிந்தது. கழுவப்பட்ட தரையிலிருந்து ஒரு விதக் குளுமையும் ஒரு வித மண் வாசனையும், உளுத்த மரவாசனையும் சேர்ந்து வீசின. ஷாலீய் நிலவறையிலிருந்து ஒரு ஜாடி நிறைய குளிர்ந்த பாலைக் கொண்டுவந்து மேசைமீது வைத்து, இரண்டு கோப்பைகளையும் வைத்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டான்.

''என் மனைவி காய்கறித் தோட்டத்துக்குப் போய்விட்டாள். அந்தக் கிழட்டு ஓணானை வெயில் ஒன்றும் செய்யாது... என்னிடம் என்ன ஆதாரங்கள் இருக்கின்றன என்று நீ கேட்டாய் அல்லவா? இப்பொழுது சொல்கிறேன், கேள். ஹப்ரோவ்கள் கொல்லப்பட்ட அன்று காலையில் அந்த உடல்களைப் பார்க்கப் போனேன். அவன் மனைவி என் ஒன்றுவிட்ட சகோதரி. ஆனால் யாரையும் உள்ளே செல்ல அநுமதிக்கவில்லை. வாயிலில் ஒரு மிலீஷியக்காரன் நின்று கொண்டிருந்தான். துப்பறியும் நிபுணன் வருவதற்காகக் காத்திருந்தான். எனவே நான் முற்றத்திலேயே நின்றேன்... நான் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தபோது, நான் எங்கோ பார்த்த கால்தடம் ஒன்றைப் படிக்கட்டுகளில் பார்த்தேன்... அந்தத் தடங்கள் அழிந்திருந்தன. ஆனால் ஒரே ஒரு தடம் மட்டும் கைப்பிடியோரம் அழியாமல் இருந்தது.''

''எதை வைத்து இதற்கு முன்னர் பார்த்ததைப் போல என்கிறாய்?'' தவீதவ் விரைந்து கேட்டான்.

''குதிகாலில் இருக்கும் ஆணியை வைத்து. அது அன்றிரவுதான் நடந்த புதிய தடம். எனக்கோ அந்த அடையாளம் தெரியும்... அப்படிப்பட்ட குதி ஆணி அணிந்தவர்கள்

அந்தக் கிராமத்திலேயே கிடையாது, ஒரே ஓர் ஆளைத் தவிர. நான் தப்பாகச் சொல்ல மாட்டேன். ஏனெனில் அவை என்னுடைய குதி ஆணிகள்.''

தான் குடித்துக்கொண்டிருந்த பால் கோப்பையை பொறுமையின்றி மேசையின்மீது வைத்தான் தவீதவ்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லை. கொஞ்சம் தெளிவாகச் சொல்.''

''சுலபமானதுதான் தம்பி. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், கூட்டுப்பண்ணை வருவதற்கு முன்னர், இளவேனிற் காலத் தொடக்கத்தில், யாக்கவ் லுக்கீச் ஒரு நாள் வந்து, தனது வண்டிக்குப் பட்டாப் போட சொன்னான். 'எனக்கு வேலை இல்லாதபோது,கொண்டு வா' என்றேன். அவன் கீழே கொண்டுவந்து அரை மணி நேரம் தங்கி எதை எதையோ பேசிக்கொண்டிருந்தான். அவன் புறப்படப் போகும் பொழுது, உலைக்கருகில் நான் குவித்திருந்த இரும்புச் சாமான்களைத் துழாவித் துழாவிப் பார்த்தான். காலணி குதிகாலில் சேரக்கூடிய இரண்டு மிதிகளை எடுத்துக் கொண்டான். அவற்றை நான் உள்நாட்டுப் போர்க் காலத்திலிருந்து வைத்திருக்கிறேன். அது ஆங்கிலக் காலணிக்கு நன்றாகச் சேரும். 'சீதரவிச், இந்த மிதிகளை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றான். 'இது என் காலணிகளுக்குச் சரியாக இருக்கும். நானோ கிழவனாகிக்கொண்டிருக்கிறேன். எனவே என் காலணிகளை அடிக்கடி தைக்க வேண்டிவருகிறது' என்றான். 'எடுத்துக்கொள். ஒரு நல்ல மனிதருக்குப் பழைய சாமான்களைக் கொடுக்கத் தயங்கலாமா, லுக்கீச்? இவை உருக்கால் ஆனவை. இது தேயாது, தொலைத்து விடாமல் மட்டும், நீ வைத்துக் கொள்ள வேண்டும்' என்றேன் நான். பையில் போட்டுக் கொண்டு அவன் போய்விட்டான். அவன் அதை மறந்திருக்கக்கூடும். ஆனால் நான் மறக்கவில்லை. அந்தக் குதியின் தடங்களைத்தான் நான் படிமீது கண்டேன்... இது என்னைச் சந்தேகப்பட வைத்தது. இந்தக் கால்தடம் இங்கு எப்படி வந்தது என்று நான் வியப்படைந்தேன்.''

''சரி, மேலே தொடர்ந்து சொல்'' என்றான் பொறுமையில்லாத தவீதவ்.

''பிறகு நான் 'லுக்கீச்சியிடம் போய், அவன் எத்தகைய காலணி போட்டுக்கொண்டு, எவ்விதமான தடங்களுடன்

நடக்கிறான் என அறிந்தால் என்ன' என்று நினைத்தேன். அவனைத் தனியாக கவனித்து கொழுவுக்கு இரும்பு தேட வந்தவனைப்போல பாவனை செய்தேன். பிறகு அவன் பாதங்களையும் பார்த்தேன். அவன் மிருதுவான காலணி களைப் போட்டிருந்தான்! இன்னும் பனி படிந்துதான் இருந் தது. ஏதோ கேட்பது போல, 'கொல்லப்பட்ட அப்பாவி களைப் பார்த்தாயா லுக்கீச்?' என்றேன். 'இல்லையே' என் றான். 'என்னால் இறந்த உடல்களைப் பார்க்க முடியாது. அதிலும் கொலை என்றால் பார்த்துச் சகிக்கவே முடியாது. எனக்குக் குடல் பதறும், இதயம் தாங்காது. ஆனால் நான் அங்கே போயாக வேண்டும் என்று நினைக்கிறேன்' என் றான். நாங்கள் ஏதோ பேசிக்கொண்டிருந்தபொழுது திடீ ரென, 'நீ இறந்தவனைப் பார்த்து அதிக நாளாயிற்றா?' என்று கேட்டேன். 'ஆமாம்' என்றான் அவன், 'போன வாரத்திலிருந்தே பார்க்கவில்லை. நம் மத்தியிலேயே எவ் வளவு அயோக்கியர்கள் வாழ்கிறார்கள் பார்த்தாயா? ஹப் ரோவ் போன்ற நல்ல வலுவான மனிதனையே கொன்று விட்டார்கள். எதற்காகக் கொன்றார்களோ? நல்ல அமைதி யானவன், தன் வாழ்நாளில் யாருக்குமே தீங்கு செய்து அறியாதவன், ஏன் தெரியவில்லையே. அவர்களின் கைகள் நாசமாகப் போக!'

''உனக்குத் தெரியுமா? இது என்னுள் நெருப்பு போலப் பற்றி எரிந்தது! அவன் யூதாஸ் மாதிரி நின்று பேசிக்கொண் டிருந்தான். என் கால்களோ ஒரு சேர ஆடிக்கொண்டிருந்தன. 'நேற்று இரவு, அயோக்கிய நாயே நீ அங்கு போயிருந்தாய். ஹப்ரோவை நீ கொலை செய்யாவிட்டாலும், நீ யாரையா வது அழைத்து கொண்டு போயிருப்பாய்' என்று நானாக நினைத்துக் கொண்டேன். ஆனால் நான் எதையுமே காட்டிக் கொள்ளவில்லை. அப்படியே பிரிந்துவிட்டோம். குதிரை லாடத்தில் மாட்டிக்கொண்ட கல் மாதிரி, அவன் குதி ஆணி அடையாளத்தைப் பார்க்க வேண்டுமே என்ற எண்ணம் என் மண்டையில் ஏறிக்கொண்டது. காலணி லிருந்து அந்த ஆணிகளைத் தொலைத்துவிட்டானா? இல் லையா? இரண்டு வார காலமாக அவன் தனது மிருதுவான செருப்பைக் கழற்றிவிட்டு, வழக்கமான காலணிகளைப் போடுவதற்காகக் காத்திருந்தேன். லேசாகப் பனி உருகிக் கொண்டிருந்தது. சிறிது ஈரம் நனைந்திருந்தது. என்னுடைய

உலையை விட்டுவிட்டு அலுவலகத்துக்கு வேண்டுமென்றே வந்தேன். லுக்கீச் காலணிகளைப் போட்டுக் கொண்டு அங்கு இருந்தான்! முற்றத்துக்கு அவன் தற்செயலாகப் போனான். நான் பின் தொடர்ந்தேன். பாதையை விட்டு விலகி கொட்டடிப் பக்கம் திரும்பினான், தடத்தைப் பார்த்தேன். அவை நான் கொடுத்த ஆணித் தடங்கள். இரண்டு ஆண்டுகளாகியும் அந்த ஆணிகள் வெளிவரவே இல்லை!''

''அந்தச் சமயத்தில் இதை ஏன் சொல்லவில்லை? குழம்பமா? இதை ஏன் புகார் செய்யவில்லை?'' தவீதவின் கன்னங்களில் ரத்தம் பாய்ந்தது. சலிப்புடன் மேசைமீது குத்தினான் அவன்.

ஆனால் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு ஷாலீய் கேட்டான்: ''உன்னைக் காட்டிலும் பெரிய முட்டாளைத் தேடுகிறாயா தம்பி? நீ சொல்வதற்கு முன்பே நானும் நினைத்துப் பார்த்தேன்... கொலை நடந்து மூன்று வாரங்கட்குப் பிறகு, புலன் விசாரணை அதிகாரியிடம் நான் சொல்வதாக வைத்துக் கொள்வோம்; எப்படிப் படிகள் மீதிருந்த தடத்தைப் பார்க்க முடியும்? நான் முட்டாளாக வல்லவா ஆகியிருப்பேன்.''

''நீ அன்றைக்கே சொல்லியிருக்க வேண்டும்! நீ ஒரு பயங்கரக் கோழை, நீ ஒஸ்த்ரவ்னோவைக் கண்டு பயப்படுகிறாய். அதுதான் விஷயம்!''

''ஆமாம் அதிலும் விஷயமிருந்தது'' என்று உடன்படுவது போல ஒப்புக்கொண்டான் ஷாலீய். ''ஒஸ்த்ரவ்னோவுடன் சண்டையிட்டுக்கொள்வது சங்கடமான காரியமாகும்... சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னால், அவன் இளைஞனாக இருந்தபொழுது, அன்தீப் கிராச்சுடன் புல்வெளியில் சண்டை பிடித்துக்கொண்டான். சண்டை போட்டதில் அன்தீப் சரியான அடி கொடுத்தனுப்பி விட்டான். ஒரு மாதம் கழித்து அன்தீப்பின் சமையலறை தீப்பற்றிக் கொண்டது. சமையலறை வீட்டோரமாக இருந்தது. காற்றும் வீட்டை நோக்கி அடித்துக்கொண்டிருந்தது, வீடும் தீப்பற்றிக்கொண்டது. மாட்டுக் கொட்டடி, தானியக் களஞ்சியம் எல்லாம் எரிந்துபோய்விட்டது. அன்தீப், நல்ல சுற்றுச் சுவரெல்லாம் கட்டிய அருமையான வீட்டில் தான் குடியிருந்து வந்தான். இப்பொழுது குடிசையில் வாழ்கிறான். லுக்கீச்சோடு வம்பிழுத்தால் இப்படித்தான் நடக்

கும். பழைய விரோத குரோதங்களையே மறக்க மாட்டான், என்றால், புதிய விரோதங்களைப் பற்றிச் சொல்வானேன். ஆனால் அதுவல்ல விஷயம் தம்பி. மிலீஷிய வீரனிடம் என் சந்தேகத்தை நான் உடனே சொல்ல விரும்பவில்லை. முதலில் நான் கொஞ்சம் கலக்கமடைந்தேன். அடுத்து, யாக்கவ் லுக்கீச் மட்டும்தான் அப்படி ஆணி அணிந்திருக்கிறான் என்பது என்ன நிச்சயம். நான் சரிபார்த்துக் கொள்ள வேண்டாமா? உள்நாட்டுப் போர் காலத்தில் ஊரில் பாதிப்பேர் ஆங்கிலக் காலணிதான் போட்டிருந்தார்கள். ஒரு மணி நேரம் கழித்துப் பார்த்தால் ஹப்ரோவ் வீட்டுப் படிக்கட்டு ஒரே அழுக்குப் படிந்து, பலர் நடந்து நடந்து தடமழிந்து போயிருக்கும். ஓர் ஓட்டகத்தின் தடத்தையும் குதிரைக் குளம்பையும்கூட வேறுபடுத்தி அங்கு பார்க்க முடியாது. இப்படித்தான் இருந்தது, தம்பி. நினைத்துப் பார்த்தால் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. நான் அறுவடை எந்திரத்தைச் சுற்றிப்பார்க்க உன்னை அழைக்கவில்லை. மனம் விட்டுப் பேசவே கூப்பிட்டேன்.''

''நீ ரொம்பக் காலங்கடந்து முடிவெடுத்திருக்கிறாய். ரொம்ப அசமந்தமான சிந்தனை...'' என்று எரிச்சலுடன் சொன்னான் தவீதவ்.

''இப்பொழுது ஒன்றும் காலங்கடந்து போய்விடவில்லை. கண்களை மூடிக்கொண்டிருப்பதைத் திறக்காவிட்டால், அது காலங்கடந்த ஒன்றுதான். என்னால் இதை உறுதியாகக் கூற முடியும்.''

தவீதவ் நொடிப்பொழுது தயங்கினான். பிறகு நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாகப் பொறுக்கி எடுத்துப் பேசினான்: ''சீதரவிச், என்னைப் பற்றியும் என் வேலையைப் பற்றியும் சொன்னாய். சொன்னவை எல்லாம் உண்மையே. அதற்காக நன்றி சொல்கிறேன். என் வேலைகளைச் சீரமைத்தாக வேண்டும். உண்மையாகத்தான்! தொழிலுக்குப் புதியவனாக இருந்து கொண்டு, எல்லாவற்றையும் அறிந்து கொள்வது என்பது சாத்தான் வேலைதான்!''

''இது உண்மைதான்'' என்று ஒத்துக்கொண்டான் ஷாலீய்.

''சரி, முதலில் உன்னுடைய வேலைக்கான கூலியைப் பார்த்து அதைச் சரிசெய்து கொடுத்துவிடுவோம். ஓஸ்த்ரவ்

னோவை நாம் கையும் களவுமாகப் பிடிக்காததால், அவனைத் தொடர்ந்து கவனித்து வர வேண்டும். நமக்கு அவகாசம் வேண்டும். நாம் பேசியதைப்பற்றி யாரிடமும் ஒரு வார்த்தைகூடச் சொல்ல வேண்டாம். கேட்கிறதா?''

''நான் புதைகுழி மாதிரி கம்மென்று இருப்பேன்!'' என்று உறுதி கூறினான் ஷாலீய்.

''இன்னும் சொல்வதற்கு ஏதாவது இருக்கிறதா? இல்லையென்றால் நான் பள்ளிக்கூடத்துக்குப் போய் அங்கே தலைமையாசிரியரைச் சந்தித்து சில விஷயங்கள் பற்றிப் பேச வேண்டும்.''

''ஆமாம், சொல்ல வேண்டியதிருக்கிறது. லூஷ்காவை விட்டுவிடு! அவள் உன்னை ஆபத்தில் கொண்டு போய் மாட்டி விடுவாள், தம்பி...''

''உன்னோடு சனியனாய்ப் போச்சு!'' என்று வெறுப்புடன் பொறுமினான் தவீதவ். ''நாம் அவளைப் பற்றிப் பேசிவிட்டோம். அதுபோதும். நீ முடிவாக ஏதாவது உபயோகமானதைச் சொல்வாய் என்று நினைத்தேன். ஆனால் நீயோ பழைய படியும் அதே கதையைத்தான் படிக்கிறாய்...''

''ஆத்திரப்படாதே தம்பி. கிழவன் சொல்வதைக் கவனமாகக் கேள். நான் உனக்குக் கெடுதல் சொல்ல மாட்டேன். அவள் சமீப காலமாக இன்னொருவனுடனும் சுற்றிக் கொண்டு திரிகிறாள்... உன் தலையில் குண்டு பாய வேண்டாம் என்று நினைத்தால், நீ அவளை விட்டுவிடுவது நல்லது!''

''யாரிடமிருந்து என் தலையில் குண்டு வாங்கப் போகிறேன்?''

தவீதவின் உதடுகளில் நம்பிக்கையின்மையின் எதிரொலியான நகைப்பு இழையோடியது. இதைக் கவனித்த ஷாலீயுக்குக் கோபம் பீறிட்டது.

''எதற்காக முறைக்கிறாய்? ஏ குருட்டு மனிதனே, நீ இன்னும் உயிரோடிருப்பதற்காக சாமியைக் கும்பிட வேண்டும்! அவன் உன்னைச் சுடாமல் மக்காரை ஏன் குறிபார்த்தான் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.''

''யார் 'அவன்'?''

''திமஃபேய் ரிவானிய், அவன்தான்! அவன் எதற்காக மக்காரைத் தேர்ந்தெடுத்தான் என்பது எனக்குப் புரியவில்லை. அதற்காகத்தான் உன்னை எச்சரித்தேன். நீ என்

வனியாத்காவைக் காட்டிலும் அதிகமாக முறைக்கிறாய்.''

பைக்குள் தன் கையைத் திணித்துக்கொண்டு தன்னை மறந்து மேசைமீது சாய்ந்தான் தவீதவ்.

''திமஃபேயா? அவன் எங்கிருந்து வந்தான்?''

''எப்படியோ தப்பிவிட்டான். இல்லையெனில் இங்கு எப்படி வர முடியும்?''

''நீ அவனைப் பார்த்தாயா?'' என்று மிகத் தாழ்ந்த தொனியில் குசுகுசுவெனக் கேட்டான் தவீதவ்.

''இன்றைக்கு என்ன, புதன்கிழமையா?''

''புதன்கிழமை.''

''போன வாரம் சனிக்கிழமை இரவு உன் லூஷ்காவையும் அவனையும் சேர்த்துப் பார்த்தேன். எங்கள் பசு மந்தையோடு சேர்ந்து வீடு திரும்பவில்லை. எனவே அந்தக் கிழத்தைத் தேடி நான் போனேன். நள்ளிரவில் அதைப் பிடித்துக் கொண்டு நான் திரும்புகையில், கிராமத்துக்குப் பக்கத்தில் அவர்களைப் பார்த்துவிட்டேன்.''

''நீ தப்பாகப் பார்த்திருக்க மாட்டாயே?''

''உன்னைப் போய் திமஃபேய் என்று நினைத்துக்கொண்டேன் என்று நினைக்கிறாயா?'' என்று கிண்டலாக பதிலடி கொடுத்தான் ஷாலீய். ''இல்லை, தம்பி. நான் கிழவன் தான். ஆனால் என் கண்கள் கூர்மையானவை. அவர்கள் பசு என்று நினைத்தார்கள். மாட்டுக்குப் பின்னாலிருந்த என்னைப் பார்க்கவே இல்லை. 'சீ பசுமாடுதான் இது, திமஃபேய். நான் கூட ஆளாக்கும் என்று நினைத்தேன்' என்று சொன்னாள் லூஷ்கா. அப்புறம் நான் வெளியில் வந்தேன். அவள் ஒரு குதிகுதித்தாள். திமஃபேய் பின்னாலேயே குதித்துவிட்டான். அவன் துப்பாக்கி விசையின் 'கிளிக்' சப்தம் கேட்டது. ஆனால் அவன் ஒன்றும் கூறவே இல்லை. 'எல்லாம் நல்லதுதான், பிள்ளைகளே! நான் உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன். நான் சும்மா பசுவைப் பிடித்துக்கொண்டு வருகிறேன். இது கிடை தவறிப் போய்விட்டது...' என்று நான் சொன்னேன்.''

''சரி, இப்போழுது எல்லாம் தெளிவாகிவிட்டது'' என்று ஷாலீய்க்குக்கூட அல்லாமல், தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் தவீதவ். களைப்புடன் எழுந்தான்.

தனது இடக்கையால் கொல்லரின் தோளைத் தழுவி அணைத்து வலது தோள்பட்டையை வருடினான்,

''அன்புள்ள இப்பலீத் சீதரவிச், மெராமப நன்றி!''

அன்று மாலை நகூல்னவிடமும் ரஸ்மியோத்னவிடமும் ஷாலீய் சொன்னவற்றை தவீதவ் சொன்னான். திமஃபேய் ரிவானிய் தப்பி ஊருக்கு வந்துள்ள செய்தியை மாவட்ட ரகசியப் போலீசுக்குத் தெரிவிக்க வேண்டுமெனவும் தவீதவ் யோசனையை எல்லையற்ற அமைதியுடன் கேட்ட நகூல்னவ் பதில் பேசினான்: ''இதைப்பற்றி எங்கும் புகார் செய்ய வேண்டியதில்லை. அவர்கள் எல்லாவற்றையுமே கெடுத்துவிடுவார்கள். திமஃபேய் ஒன்றும் முட்டாள் அல்ல. அவன் இந்த ஊரில் இருக்க மாட்டான். மாவட்ட ரகசியப் போலீசார் இங்கு வருவதை அவன் அறிந்தால் போதும், ஒரே ஓட்டமாக ஓடியே போய்விடுவான்.''

''அவர்கள் ரகசியமாக இரவு வேளையில் வந்தால் அவன் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?'' என்று ரஸ்மியோத்னவ் கேட்டான்.

நகூல்னவ் ஏளனம் கொப்பளிக்கும் கண்களுடன் அவனை நோக்கினான்: ''உனக்குச் சின்னப் பிள்ளை புத்தி, அந்திரேய். ஓநாய் எப்பொழுதுமே வேட்டைக்காரனை முதலில் பார்த்துவிடும் பிறகுதான் வேட்டைக்காரன் ஓநாயைப் பார்ப்பான்.''

''சரி, நீ என்ன யோசனை கூறுகிறாய்?'' என்று தவீதவ் கேட்டான்.

''எனக்கு ஐந்து அல்லது ஆறு நாட்கள் கொடுங்கள். நான் உங்களிடம் திமஃபேயை உயிருடனாவது செத்த பிணமாகவாவது ஒப்படைக்கிறேன். நீயும் .அந்திரேயும் இரவுகளில் சிறிது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இரவில் நேரங் கழித்து வெளியில் போகாதீர்கள். விளக்கை அநாவசியமாக ஏற்றி வைக்காதீர்கள். அவ்வளவு தான். மற்றவற்றை என்னிடம் விட்டுவிடுங்கள்.''

நகூல்னவ் தனது திட்டங்களை விளக்கிச் சொல்ல முற்றாக மறுத்து விட்டான்.

''நல்லது. நீ தொடரலாம்'' என்று ஒப்புதல் தந்தான் தவீதவ். ''ஆனால் பார். திமஃபேயை தெரிந்து கொள்வது போல் நடந்துகொண்டால், எங்காவது ஓடி ஒளிந்துகொள்வான். பிறகு நாம் அவனைக் கண்டுபிடிக்கவே முடியாது.''

''ஒன்றும் கவலைப்படாதே. அவன் தப்ப முடியாது'' என்று உறுதி தந்தான் நகூல்னவ் தனது கரிய விழிகளை கீழ்

நோக்கி உருட்டினான். இரண்டாம் முறையாகப் பளிச்சிட்ட மகிழ்ச்சியை அவன் கண்கள் வெளியிட்டன.

அத்தியாயம் பதினொன்று

லூஷ்கா இன்னும் அவளது அத்தையுடன் தான் வாழ்ந்து கொண்டிருந்தாள். ஆற்றுக்கு மேலிருந்த அந்த மேட்டின் ஓர் ஓரத்தில் தொங்குவது போல் ஒட்டி நின்ற குடிசையின் மஞ்சள் நிற அடைப்பான்கள் தளர்ந்து ஆடிக் கொண்டிருந்தன. அவசரத்தில் வேயப்பட்ட அந்தக் கூரைக் குடிசையின் சுவர்களோ வயதாகிவிட்ட காரணத்தால் சுருங்கியும் நெளிந்தும் உருக்குலைந்த நிலையில் நின்றன. அந்தச் சிறிய முற்றத்தில் புல்லும் களையும் ஓங்கி வளர்ந்திருந்தன. லூஷ்காவின் அத்தையான அலெக்ஸேயிவ்னாவுக்கோ அவளுடைய பசுவையும் சிறு கொல்லைப்புறத் தோட்டத்தையும் தவிர கவனிப்பதற்கென்று வேறு ஏதும் இல்லை. ஆற்றுப் பக்கத்தில், முற்றத்தை வளைத்திருந்த அந்தக் குட்டையான உயரமற்ற சுற்று வேலியில், இவளது வயதான அத்தை கோசுக்கீரை வெள்ளரிக் கொடி, தக்காளி ஆகியவற்றிற்கும் தண்ணீர் எடுத்துவரப் பயன் படுத்தி வந்த ஒரு சிறு தொடு பாலவழி இருந்தது.

அடர்ந்து வளர்ந்திருந்த காட்டுப் புதர் ஒன்றிலிருந்து பொன்னிற ஊதா வண்ண காட்டுரோஜா மலர்கள் பெருமையோடு மலர்ந்து வளர்ந்து அந்தத் தொடுபாலத்தைச் சுற்றி ஆடிக்கொண்டிருந்தன. சுற்று வேலியின் தடுக்குகளில் பூசணிக் கொடி வளைந்து நுழைந்து பின்னிப் படர்ந்திருந்தது. இடையிடையே தனது மஞ்சள்நிறப் பூவுடனும் அழகு செய்தது. காலை நேரங்களில் வேலியில் படரும் ஒருவகைப் படர்கொடியின் நீல நிறப் பூக்கள் இதழ் விரிக்கும். சற்று தூரத்தே நின்று பார்த்தால் மிக நுணுக்கமாகப் பின்னப் பட்ட ஒரு சால்வையைப் போல் காட்சியளித்தது. இது நடைபாதைக்கு வெகு தூரத்துக்கு அப்பால் விலகி இருந்தது. அன்று காலை ஆற்றங்கரை வழியாய், அலெக்ஸேயிவ்னாவின் முற்றத்தைக் கடந்து சென்ற நகூல்னவின் கண்களில் இது பட்டுவிட்டது.

அவனைப் பிடித்திருந்த சளி போகட்டும் என இரண்டு நாட்கள்வரை ஒன்றுமே செய்யாமல் காத்திருந்தான்,

ஆனால் மூன்றாம் நாள் இருட்டத் தொடங்கியவுடன், முன் பக்கம் திறக்கக் கூடிய உப்பிய சட்டை ஒன்றைப் போட்டுக் கொண்டு, வீட்டை விட்டு மிக மெதுவாகக் கிளம்பி ஆற்றை நோக்கிப் புறப்பட்டான். நிலவற்ற, இருள் நிறைந்த இரவு முழுவதும் அந்தத் தொடுபாலப் பாதை வழி அருகிலிருந்த காட்டுப் புதர் அருகிலேயே காத்திருந்தான். ஆனால் யாரும் தென்படவே இல்லை. விடியும் வேளையில் மக்கார் வீட்டிற்குப் போய் சில மணிநேரம் தூங்கிவிட்டு, அப்பொழுது தான் புல் அறுக்கத் தொடங்கியிருந்த முதல் குழுவினருடன் இருந்துவிட்டு, மீண்டும் இருட்டியவுடன் தொடு பாலத்துக் கருகில் தனது இடத்திற்குப் போய்விட்டான்.

நடுச்சாமத்தில் அந்தக் குடிசையின் கதவு மெதுவாக கிரீச்சிட்டது. அந்த சுற்றுவேலியின் வழியாக, சால்வையால் முழுக்க மூடிப் போர்த்துக் கொண்ட ஒரு பெண் கறுப்பு உருவில் வெளிவருவது தெரிந்தது. மக்கார் லூஷ்காவை அடையாளம் கண்டு கொண்டான்.

அவள் அந்தப் படிகளில் மெதுவாக இறங்கி வந்தாள். சிறிது நேரம் தயங்கி நின்றாள். பின்னர் முற்றத்தைத் தாண்டி தெருவில் நடந்தாள். பத்து எட்டுப் பிந்தி ஓசை செய்யாமல் மக்கார் பின்தொடர்ந்து சென்றான். எவ்விதச் சந்தேகமும் இல்லாமல், திரும்பிக்கூடப் பார்க்காமல் புல்வெளியை நோக்கி நடந்துகொண்டிருந்தாள் லூஷ்கா. அவர்கள் ஏற்கெனவே ஊரைக் கடந்துவிட்டனர். ஆனால் பாழாய்ப்போன அந்தச் சளி அவனைக் காலைவாரி விட்டு விட்டது. அவன் பலமாகத் தும்மிவிட்டான். உடனே கீழே அப்படியே விழுந்து படுத்துக்கொண்டான். லூஷ்கா விர்ரென்று சுற்று முற்றும் பார்த்தாள்.ஒரு விநாடி ஆடாமல் அசையாமல், இடத்தை விட்டு நகராமல், மார்பில் கைகளை வைத்து அழுத்திப் பிடித்துக்கொண்டு திகைப்பால் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றாள். அவள் போட்டிருந்த மார்புடை திடீரென்று அவள் உடம்பை இறுக்க ஆரம்பித்தது. அவள் ரத்தம் நெற்றியில் கட்டுவதுபோல் தெரிந்தது. கடைசியாக குழப்பம் தெளிந்து, மக்கார் இருந்த திசையை நோக்கி மெதுவாக நடந்தாள். முழங்கைகளை ஊன்றிப் படுத்திருந்த அவன் அடிக்கண் வழியாக அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். லூஷ்கா தயங்கி நின்றாள்.

''யாரது?'' என்றாள் மிகவும் கலங்கிய பயந்த குரலில்.

கால்களையும் கைகளையும் மடக்கி ஊன்றி நான்கு கால்பாய்ச்சலில் அமர்ந்து இருந்த மக்கார் ஜாக்கெட்டின் ஒரு துணியை இழுத்து முகத்தை மூடிக்கொண்டான். தன்னை அடையாளம் கண்டுகொள்வதை அவன் விரும்பவில்லை.

''அட கடவுளே!'' என்றாள், மிகவும் பயங்கலந்த தொனியில். பின்னர் ஊரை நோக்கி விரைந்தாள் லூஷ்கா.

...விடியும் முன் மக்கார், ரஸ்மியோத்னவைத் தட்டி எழுப்பினான். ஒரு பெஞ்சின் மேல் கவலையோடு உட்கார்ந்து கொண்டு, ''ஒரு தடவை தும்மியதால் காரியம் முழுவதுமே கெட்டுவிட்டது!.. அந்திரேய், எனக்கு நீ துணை செய்ய வேண்டும். இல்லையேல் நாம் திமஃபேயைத் தவறவிட நேரிடலாம்!''

அவர்களிருவரும் இரு குதிரைகள் பூட்டிய வண்டி ஒன்றில், அலெக்ஸேயிவ்னா குடிசையை நோக்கிப் போனார்கள். ரஸ்மியோத்னவ் குதிரைகளை வேலியில் கட்டிவிட்டு, முற்றத்தில் அவன்தான் முதலில் நடந்துபோய் அந்த வளைந்த கதவைத் தட்டினான்.

''யாரங்கே?'' என்று தூக்கம் கலந்த குரலில் கேட்டாள் வீட்டுக்காரி. ''உங்களுக்கு யார் வேண்டும்?''

''பால் கறக்க நேரமாகிவிடாதா? எழுந்திரம்மா அலெக்ஸேயிவ்னா'' என்று உற்சாகத்தோடு பேசத் தொடங்கினான் ரஸ்மியோத்னவ்.

''யாரது?''

''நான்தான், ரஸ்மியோத்னவ், சோவியத்தின் தலைவன்.''

''இந்த இரவு நேரத்தில் இங்கு எதற்காக வந்தாய்?'' என்று அந்தப் பெண் ஏளனமாகக் கேட்டாள்.

''ஒரு விஷயமாக உன்னைப் பார்க்க வேண்டும், கதவையைத் திற!''

தாழ்ப்பாளின் கிரீச் சப்தம் கேட்டது. ரஸ்மியோத்னவும் நகூல்னவும் சமையலறைக்குள் நுழைந்தனர். அந்த வீட்டுக்காரி அவசர அவசரமாக ஆடைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டு விளக்கை ஏற்றினாள்.

''இந்த வீட்டில் தங்கியிருப்பவள் இருக்கிறாளா?'' என்று

பக்கத்துக்கூடத்தின் கதவைக் கண்களால் சுட்டிக்காட்டி ரஸ்மியோத்னவ் கேட்டான்.

''ஆமாம், இருக்கிறாள். இந்த அதிகாலையில் அவளை ஏன் தேடுகிறாய்?''

எவ்வித பதிலும் சொல்லாமல் கதவைத் தட்டினான் ரஸ்மியோத்னவ். உரத்த குரலில், ''ஏ லூஷ்கா! சீக்கிரம் எழுந்து உடைகளைப் போட்டுக்கொள். ராணுவத்தில் இருப்பது போல உனக்கு ஐந்து நிமிடங்கள் கொடுக்கிறேன்!'' என்று கத்தினான் அவன்.

வெறுங்கால்களுடன் வெளிவந்த லூஷ்கா, தோள்களில் ஒரு சால்வையை மட்டும் போர்த்தியிருந்தாள். அவளுடைய வழவழப்பான பழுப்புநிறக் கால்களின்மேல் பூத்தையல் இழை பின்னிய அவளது பாவாடையின் நுனி தெரிந்தது.

''போய்ச் சட்டையைப் போட்டுக்கொண்டு வா'' என்று ரஸ்மியோத்னவ் உத்தரவிட்டான். தலையை மிகவும் ஆத்திரத்துடன் ஆட்டிக்கொண்டே, ''குட்டைப் பாவாடையை போட்டுக்கொண்டு வந்திருக்கக் கூடாதா? சீ, நீ ஒரு வெட்கங்கெட்ட மூளி!'' என்று இரைந்தான்.

வந்திருந்தவர்களை லூஷ்கா ஏதோ குறியுடனும் தெரிந்து கொள்ளும் ஆர்வ நோக்குடனும் உற்றுப் பார்த்து விட்டு, அவர்களைப் பார்த்துச் சிரித்தாள்.

''நாம் எல்லாம் உற்றார் உறவினர் தானே, நான் ஏன் வெட்கப்பட வேண்டும்?'' என்றாள்.

அந்தச் சனியன் லூஷ்கா பாதித்தூக்கக் கலக்கத்தில் இருந்தாலும், இளங்குமரியின் மெருகோடு, கவர்ச்சியாகத் தான் தோன்றினாள்! ரஸ்மியோத்னவ் புன்னகை பூத்தவண்ணம் தனது சிரிப்பையும் மறைத்துக்கொள்ள முயற்சிக்காமல், அமைதியாக அவள் அழகை ரசித்துக்கொண்டிருந்தான். அடுப்படிக்குப் போய்விட்ட அந்த வீட்டுக்காரக் கிழவியை மக்கார் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

பசப்புக்காரிக்கு இயல்பாகத் தனது தோள்களை அசைத்து, போர்வையைச் சரி செய்துகொண்டு, ''அன்புள்ள விருந்தாளிகளே, உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் இங்கு தவீதவைத் தேடி வந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித் தானே?'' என்றாள்.

இப்பொழுது அவள் இறுமாப்போடு சிரித்துக்கொண் டிருந்தாள். தனது முன்னாள் கணவனை வெற்றிக்களிப் புடன் கண்களைச் சுருக்கிக்கொண்டு பார்த்தாள். ஆனால் தன் முகத்தை அவளுக்கு நேராகத் திருப்பிக்கொண்டு மிக வும் அமைதியாக உறுதியுடனிருந்த மக்கார், அதே உறுதி யுடன், ''நாங்கள் இங்கு தவீதவைத் தேடி வரவில்லை. திமஃபேய் ரிவானியைத் தேடிக் கொண்டிருக்கிறோம்'' என்றான்.

''அவனைத் தேட இதுவல்லவே இடம்'' என்று அலட்சிய மாகக் கூறினாள் லூஷ்கா. ஆனால் அவளது தோள்கள் குளிர்பட்டதுபோல் நொடிப் பொழுது துணுக்குற்றன. ''அவனை சைபீரியாவில் போய்த்தேடுங்கள். நீங்கள் அங்கு தானே என் கட்டழகனை அனுப்பிவைத்தீர்கள்...''

''பாசாங்கை நிறுத்து'' தனது உணர்ச்சியை இழந்து விடாமல், அதே அமைதியோடு மக்கார் சொன்னான்.

லூஷ்காவுக்கு அவனது உறுதியான அமைதி வியப்பாக இருந்தது. எனவே பொறுமையிழந்தவளாய், அவனைத் தாக்கத் தொடங்கினாள்.

''நேற்றிரவு ஊரைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்த போது என்னைப் பின் தொடர்ந்து வந்தது நீ தானா என் கணவனே?'' என்று கேட்டாள்.

''ஓ, நீ என்னை அடையாளம் கண்டு கொண்டாயா?'' உதட்டிலே ஓர் ஏளனச் சிரிப்பு தவழக் கேட்டான் மக்கார்.

''இருளில் என்னால் பார்க்க முடியவில்லை என் அன்பே. ஆனால் நீ என்னை பயமுறுத்தி சாகடிக்கத்திரிந்தாய்! ஊருக்குத் திரும்பிய பிறகுதான் அது நீயாக இருக்கக்கூடும் என யூகித்தேன்.''

''உன்னைப் போன்ற தரங்கெட்ட நாய் எதற்காக பயப்பட வேண்டும்?'' என்று திமிருடன் முரட்டுத்தனமாக ரஸ்மியோத்னவ் கேட்டான். சுண்டி இழுத்த லூஷ்காவின் மயக்கும் அழகிலிருந்து விடுபடவே, இக் கேள்வியை வேண்டு மென்று கேட்டான்.

அவள் தனது இடைகளின் மீது கைகளை வைத்துக் கொண்டு பொசுக்குவது போல பார்த்துக் கொண்டு நின் றாள்.

''என்னை நாயாகப் பார்க்காதே! வேண்டுமானால் உன் மரீனாவிடம் போய் அப்படி பேசு. ஊமை தெமீத், உனக்கு

என்றும் மறக்காதவாறு ஏதாவது கொடுப்பான். எனக்கு என்ன பெயரையும் வைத்து நீ கூப்பிடலாம். ஏனெனில் எனக்காக உன்னை யார் அடிக்கப் போகிறார்கள்?..''

''தேவைக்கு மேல் அதிகம் நீ வைத்திருக்கிறாய்'' என்று சொல்லி முறுவலித்தான் ரஸ்மியோத்னவ்.

இவனைக் கொஞ்சங்கூடச் சட்டை செய்யாமல், லூஷ்கா மக்காரைப் பார்த்துப் பேசத் தொடங்கிவிட்டாள்: ''என்னை ஏன் பின் தொடர்ந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? நான் ஒரு பறவை போல சுதந்திரமாக இருக்கிறேன். எங்கும் என் விருப்பப்படி போவேன். என்னுடைய நண்பர் தவீதவ் என்னுடன் இருந்திருந்தால், எங்களைப் பின் தொடர்ந்து எங்களுக்கு இடையூறு செய்ததற்கு நன்றி கூறியிருக்க மாட்டார்!''

மக்காரின் கன்னங்களுக்குக் கீழிருந்த தாடை விம்மிப் புடைத்தது. ஆனால் மிகவும் சிரமப்பட்டு தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு ஒன்றும் சொல்லாதிருந்துவிட்டான். அவன் முட்டியை மடக்கியபொழுது எலும்புச் சந்திப்புக் கள் முறிவது போல் கேட்டது. மிகவும் அபாயகரமான திருப்பத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த உரையாடலை ரஸ்மியோத்னவ் சுருக்க அவசரப்பட்டான்.

''சரி, நாம் போதுமான அளவுக்குப் பேசிவிட்டோம். போதும்! லூஷ்கா, அலெக்ஸேயிவ்னா இருவரும் ஆடை அணிந்துகொள்ளுங்கள். நீங்கள் இருவரும் கைதுசெய்யப் பட்டிருக்கிறீர்கள். நாங்கள் உங்களை மாவட்டத் தலைமை இடத்துக்கு அழைத்துச் செல்கிறோம்.''

''எதற்காக?'' என்று கேட்டாள் லூஷ்கா.

''அதெல்லாம், அங்கு போனவுடன் தெரிந்து விடும்.''

''நான் மறுத்தால்?''

''ஆட்டுக் குட்டியைத் தூக்கிக் கொண்டு போவதுபோல் முடக்கிப்போட்டு எடுத்துக் கொண்டுபோய் விடுவோம். நீயொன்றும் துள்ள முடியாது. சரி சீக்கிரம்.''

சில விநாடிகள் லூஷ்கா தயங்கி நின்றாள். பின்னர் மெதுவாகத் திரும்பி கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய் அதனைச் சாத்தி தாழிட முயன்றாள். ஆனால் அதற்குள்ளாக எவ்வித தயக்கமுமின்றிக் கதவைத் திறந்து கொண்டு மக்கார். அந்த அறைக்குள் சென்று மிகவும் உரத்த குரலில், ''நாங்கள் இங்கு விளையாட வரவில்லை!

சீக்கிரம் ஆடையணிந்து கொண்டு புறப்படத் தயாராகு. ஓட முயலாதே. நான் உன்னைத் துரத்தி ஓடி வரமாட்டேன். ஆனால் இந்தத் துப்பாக்கிக் குண்டு முட்டாள் உன்னைத் தொடர்ந்துவரும். புரிகிறதா?''

குவிந்து குலைந்து கிடந்த தனது படுக்கையின் மீது உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள் லூஷ்கா.

''சரி, வெளியில் போ. நான் உடையணிந்து கொள்ளப் போகிறேன்'' என்றாள்.

''உடையைப் போட்டுக்கொள். நீ வெட்கப்பட ஒன்றும் இல்லை. உன்னை நான் எல்லா நிலையிலும் பார்த்திருக்கிறேன்.''

''ஓ, சனியன் தொலை'' கோபமில்லாமல் களைப்புடன் சொன்னாள் லூஷ்கா.

அவளது இரவு உடைகளையும் உள்பாவாடையையும் கழற்றிவிட்டாள். தனது கட்டான, பருவ வனப்புடன் சிறிதும் கூச்சநாச்சமின்றி நிர்வாணமாக லூஷ்கா அலமாரியிடம் போய் அதைத் திறந்தாள். மக்கார் அவளைப் பார்க்காமல், அசட்டையாக வைத்த கண் வாங்காமல் சன்னலையே பார்த்துக்கொண்டு நின்றான்...

ஐந்து நிமிடங்களுக்குப் பின்னால், அகலக் கையுடைய நூலாடை ஒன்றை அணிந்து கொண்டு, ''நான் தயார் அருமை மக்கார்'' என்றாள் லூஷ்கா. அவளது பார்வையில் சோர்வும் கவலையும் தேங்கி நின்றன.

இதற்குள்ளாக ஆடை அணிந்து தயாராகிவிட்ட அலெக்ஸேயிவ்னா, ''யார் இந்த வீட்டைப் பார்த்துக் கொள்வார்கள்? யார் பால் கறப்பார்கள்? யார் இந்த தோட்டத்தைப் பார்ப்பார்கள்?'' என்று கேட்டாள்.

''நாங்கள் கவனித்துக்கொள்கிறோம், அம்மா. நீ திரும்பும்பொழுது இப்பொழுது இருப்பது போலவே எல்லாம் சரியாக இருக்கும்'' என்று ரஸ்மியோத்னவ் உறுதியளித்தான்.

அவர்கள் முற்றத்திற்குப் போய் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். கடிவாளங்களைக் கையில் எடுத்து சாட்டையைச் சுண்டிவிட்ட, ரஸ்மியோத்னவ், குதிரைகளை மிக வேகமாகவே ஓட்டினான். கிராம சோவியத்துக்கு வெளியில் வண்டியை நிறுத்தி விட்டுக் கீழே குதித்து இறங்கினான்.

''போங்கள், பெண்களே!'' என்று சொல்லிக் கொண்டே கட்டிடத்துக்கு வழி காட்டினான். ஒரு தீக்குச்சியை உரசி விட்டு, அந்த இருட்டறையின் கதவைத் திறந்தான். ''உள்ளேபோய் வசதியாக இருங்கள்'' என்றான்.

''எப்பொழுது மாவட்டத்துக்குப் போகிறோம்?'' என்று கேட்டாள் லூஷ்கா.

''விடிந்த பிறகு போவோம்.''

''பிறகு எதற்காக இத்தனை வேகமாக வண்டியில் கொண்டுவந்தாய்? நடத்தியே கூட்டிவந்திருக்கலாமே'' என்று மீண்டும் லூஷ்கா கேட்டாள்.

''கௌரவமாகச் செய்ய வேண்டும்'' என்று சொல்லி விட்டு அந்த இருட்டின் இருளில் சிரித்தான் ரஸ்மியோத்னவ்.

கிராம சோவியத்துக்கு அழைத்துவரும்பொழுது யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் வண்டியில் கொண்டுவந்தோம் என்பதை அவன் அவர்களுக்குச் சொல்லி யிருக்க வேண்டுமா?

''நாங்கள் இந்த தூரம் நடந்தே வந்திருப்போம்'' என்று சொல்லியவாறு சிலுவைக் குறி போட்டுக்கொண்டே அறைக்குள் வந்தாள் அலெக்ஸேயிவ்னா.

பெருமூச்சை அடக்கிக்கொண்டு லூஷ்கா பின் தொடர்ந் தாள். ரஸ்மியோத்னவ் கதவைச் சாத்திவிட்டான். அதன் பிறகு மிகவும் சத்தமாகவே அவர்களிடம் பேசினான்.

''லூஷ்கா, கேள். உங்களுக்குச் சோறும் தண்ணீரும் தருவோம். தேவையானால் கதவுக் கருகில் ஒரு வாளி இருக் கிறது. அமைதியாக உட்கார்ந்திருங்கள். சத்தம் போட் டாலோ கதவைத் தட்டினாலோ, கடவுள் சத்தியமாகச் சொல்கிறேன். நாங்கள் உங்கள் வாயைக் கட்டி அடைத்து விடுவோம். இது மிக முக்கியமான விஷயம். சரி நேரமாகி விட்டது! காலையில் வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

கட்டிடத்தின் பெரும் வாயில் கதவுக்கு இரண்டாவது பூட்டுக் கீலையும் போட்டான் அவன். நகூல்னவிடம் அவன் பேசியபொழுது அவனது குரலில் கெஞ்சல் தொனித்தது. படியில் நின்றுகொண்டிருந்த நகூல்னவிடம், ''நான் இவர் களை இங்கு மூன்று நாட்கள் வைத்திருப்பேன். அதற்கு மேல் என்னால் முடியாது. நீ, எதை வேண்டுமானாலும்

சொல்லிக்கொண்டிரு. ஆனால் இந்த விஷயம் தவீதவுக்கு எட்டினால் எக்கச்சக்கமாக மாட்டிக்கொள்வோம்!''

''அவருக்குத் தெரியாது. குதிரைகளை அந்தப் பக்கம் கொண்டு போய்விடு. அந்தத் தற்காலிகக் கைதிகளுக்குச் சாப்பிடுவதற்கு ஏதாவது கொடு. சரி, நன்றி. நான் வீட்டுக்குப் போகிறேன்...''

...விடிந்துகொண்டிருந்த அந்த அதிகாலையின் நீலநிற இருளில் கிரெமியாச்சி கிராமத்தின் ஆள் நடமாற்றம் இல்லாத வீதிகளில் நடந்துசென்ற மக்கார் நகூல்னவ், எதற்கும் அஞ்சாமல் நெஞ்சுயர்த்தி நடக்கும் பழைய மக்கார் அல்ல... துவண்ட தோள்களுடன் அவன் மெதுவாக நடந்து சென்றான். அவனது பெரிய முரட்டுக் கையால் தனது இடது மார்பை அடிக்கடி அமுக்கிக் கொண்டான்...

* * *

தவீதவின் கண்களில் படாமல் தப்பிக்க வேண்டும் என்பதற்காக நகூல்னவ் களையெடுப்போருடன் இருந்து விட்டு, இரவில்தான் கிராமத்துக்குத் திரும்புவான். மறு நாள் மாலை மீண்டும் தனது பதுங்கிடத்துக்குப் போகும் முன்னர் ரஸ்மியோத்னவைப் பார்த்து,

''தவீதவ் என்னைத் தேடினானா, தேடவில்லையா?'' என்று கேட்டுவிட்டுப் போனான்.

''இல்லை. நானே அவனைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. அந்த ஆற்றின்மீது கட்டும் பாலத்தைப் போய்ப் பார்க்கவும், மீண்டும் திரும்பிவந்து இந்தக் கைதிகளைப் பார்க்கவுமே எனக்கு நேரமிருக்கிறது.''

''அவர்கள் எப்படி இருக்கிறார்கள்?''

''நேற்று பகற் பொழுதில் லூஷ்காவுக்கு வெறி தலைக்கேறிவிட்டது. நான் கதவருகே போகும் ஒவ்வொரு தடவையும் எனக்கு ஒரு புது பெயர் சொல்லி அழைத்தாள். குடிகார கஸாக்கைக் காட்டிலும் கடுமையாக வசைபாடுகிறாள்! இவ்வளவையும் அவள் எங்கு கற்றாளோ தெரியவில்லை! அவளை அமைதிப் படுத்துவது எனக்குப் பெரும் பாடாகி விட்டது. இப்பொழுது சும்மா இருக்கிறாள். அழுதுகொண்டிருக்கிறாள்.''

''அவள் அழட்டும். விரைவில் அவளது இறந்து போன காதலனுக்காகத் துடிப்பாள்.''

''திமஃபேய் வரப் போவதில்லை'' என்று சந்தேகத்தோடு பேசினான் ரஸ்மியோத்னவ்.

''அவன் கட்டாயம் வருவான்!'' முழங்காலைத் தனது கையால் தட்டிவிட்டுக்கொண்டு, கனத்த இமைகொண்ட கண்களில் ஒளி பறக்க மிகவும் நம்பிக்கையோடு பேசினான் நகூல்னவ். ''லூஷ்காவை விட்டுவிட்டு அவனால் இருக்க முடியுமா? அவன் வருவான்!''

...திமஃபேய் வந்தான்தான். மூன்றாம் நாள், அதிகாலை இரண்டு மணிக்கு, எச்சரிக்கையை மறந்து, ஓடைமீதிருந்த கடவேணியில் வந்து நின்றான். பொறாமை இவனை இக்கிராமத்தை நோக்கி இழுத்து வந்ததா? அல்லது பசியா? ஒரு வேளை இரண்டுமாக இருக்கலாம். வேதனை தாங்க முடியாத கொடுமையாக இருந்தது. எனவே வந்தான்...

ஆற்றின் ஓரமாக ஓசை செய்யாமல், ஒரு மிருகம் போல ஊர்ந்து வந்தான். மக்கார் தனது காலடியிலிருந்த களிமண் மிதிபட்ட ஓசையையோ, நாணல்கள் காற்றில் சலசலப்பதையோ கேட்கவில்லை. தனக்கு ஐந்து எட்டுக்கு அப்பால் ஒரு மனிதனுடைய தோற்றம் தெரிந்தவுடன் திடீரென எச்சரிக்கையாகிக் கொண்டான் மக்கார்.

தனது வலது கையில் ஏந்தி இருந்த ரைபிளுடன் ஆடாமல் அசையாமல் நின்று கவனித்தான் திமஃபேய். அந்த அடர்ந்த புதருக்குள் மூச்சை அடக்கிக் கொண்டு மக்கார் கிடந்தான். ஒரு விநாடி அவனது நெஞ்சம் நின்றது. பிறகு மீண்டும் சரியாக அடிக்கத் தொடங்கியது. அவனது வாய் வறட்சியாகவும் கசப்பாகவும் இருந்தது.

வயலில் ஊடாடும் பறவை ஒன்று ஆற்றிலிருந்து வீச்சென்று கத்திற்று. கிராமத்தின் மறு முனையிலிருந்து மாடு ஒன்று கத்தியது. கவுதாரி ஒன்று தண்ணீர் மேட்டிலிருந்து கொண்டு தனது கீச்சுக் குரலில் கீரிட்டுக் கத்தியது.

மக்காருக்கு குறி சரியாக இருந்தது. திமஃபேய், தனது இடது புறத்தை முழுக்கக் காட்டிக்கொண்டு அமைதியாக இன்னும் எச்சரிக்கையாக கவனித்துக்கொண்டு நின்றான்.

மக்கார் ரிவால்வாரின் குழாயைத் தனது இடது கைமீது வைத்துக் குறி பார்க்கத் தயாரானான். அவனுடைய சட்டையின் கை நுனி பனியில் நனைந்திருந்தது. ஒரு விநாடி மக்கார் தயங்கினான். இல்லை, எதிரியை முதுகில் சுடுவதற்கு நகூல்னவ் குலாக் பன்றியில்லை. தன்னுடைய நிலை

யை மாற்றிக்கொள்ளாமல், உரத்த குரலில், ''ஏ நச்சுப் பாம்பே, திரும்பு, சாவை ஏற்றுக் கொள்!'' என்று உறுமினான்.

ஏதோ ஒரு விசைப் பலகையிலிருந்து தூக்கி எறியப் பட்டவனைப் போல் திமஃபேய் ஒரு பக்கமாக முன்னால் குதித்தான். குதிக்கும்போதே தனது ரைபிளை எடுத்துக் கொண்டான். ஆனால் அவனுக்கு மக்கார் இன்னும் விரைவாக இருந்தான், அந்த ஈரஞ்செறிந்த அமைதியில் ரிவால்வரின் வேட்டு, சப்தமாகக் கேட்காமல், ஓசை அடங்கிக் கேட்டது.

ரைபிளைக் கீழே போட்டுவிட்டு, முழங்காலை மடக்கி, மெதுவாக, பின்புறமாக விழுந்தான் திமஃபேய். மக்காரும் இப்படித்தான் பின்புறம் விழுந்தான். அந்த நடைபாதையில் தலை பொத்தென்று விழுந்து அடிபட்டதை மக்காரும் கேட்டான்.

அதற்குப் பிறகு சுமார் பதினைந்து நிமிடங்கள் மக்கார் அசையாமல் கிடந்தான். ''ஒரு பெண்ணைப் பார்க்க ஆண்கள் கூட்டமாகச் செல்ல மாட்டார்கள். ஆனால், இவனுக்காக இவனுடைய நண்பர்கள் சிலர் ஆற்றடியில் காத்துக் கொண்டிருக்கக் கூடும் என்னமோ?'' என்று அவன் நினைத்து, காதைத் தீட்டிக்கொண்டு கவனித்தான். ஆனால் அவனைச் சுற்றிலும் முழு அமைதிதான் நிலவியது. வேட்டு ஓசை கேட்டதும் தனது இரைச்சலை நிறுத்திக்கொண்ட வயலில் ஊடாடும் பறவை மீண்டும் மருட்சியோடு கூவத் தொடங்கியது. விடியும் வேளையும் வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. கருஞ்சிவப்பான வான வெளியைக் கலைத்துக் கொண்டு கிழக்கில் பழுப்பு நிற ஒளி படர்ந்துகொண்டிருந்தது. ஆற்றின் அடுத்த கரையிலிருந்த புதர் வரிசைத் தெளிவாகத் தென்பட்டது. மக்கார் எழுந்து திமஃபேயை நோக்கி நடந்தான். அவன் மல்லாந்து வீழ்ந்து கிடந்தான். வலது கை விரித்துக் கிடந்தது. இறந்துவிட்ட, நிலைக்குத்தி நின்ற, திறந்த கண்களில், இயற்கையான ஒளி இன்னும் இருந்தது. தெளிவற்று மறைந்து கொண்டிருந்த நட்சத்திரங்களையும், நிறம் மாறும் மணிவகை போன்ற சிறிய மேகங்களையும், அவைகளுக்குக் கீழே வெள்ளிக் கற்றைகளையும், எல்லையற்ற விரிந்தவானப் பரப்பையும், காற்றில் ஊசலாடும் மெல்லிழைச் சிலந்தி நூல் போன்ற மூடு

பனியையும் மகிழ்ச்சியோடு உற்று நோக்குவது போல அவை காணப்பட்டன.

தனது காலணியின் நுனியால் இறந்தவனின் உடலை மிதித்து, ''என்ன சனியனே, நீ வளையமிட்ட நாட்கள் ஒய்ந்துவிட்டன?'' என்று அமைதியாக மக்கார் சொன்னான்.

பெண்களின் அன்புக்குரிய அவன் சாவிலும் எடுப்பாகக் காணப்பட்டான். வெந்நிற நெற்றியில் கருப்பு மயிர்க் கற்றை ஒன்று விழுந்து கிடந்தது. தனது அழகை இழந்து விடாதிருந்த அம்முகத்தில் சூரிய ஒளி இன்னமும் படவில்லை. கருப்பு நிற சிறிய மீசைக்குக் கீழே, ஈரமான பற்களைக் காட்டியபடி, உதடு வளைந்து சற்று தூக்கிக் கொண்டிருந்தது. சில நாட்களுக்கு முன்னர் பேராவலோடு லூஷ்காவை முத்தமிட்ட மலர்ச்சிமிக்க அந்த உதடுகள் மங்கிய ஒளியில் வியப்புற்றுச் சிரிப்பது போலத் தோன்றியது. ''நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்திருப்பாய் போலிருக்கிறதே நீ பயலே!'' என்று மக்கார் நினைத்தான்.

இறந்து போனவனின் உடலை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த, மக்காருக்குச் சமீப காலமாக வரும் கோபமோ மனநிறைவோ ஏற்படவில்லை. அவனை வாட்டும் சோர்வும் களைப்பும்தான் தோன்றின. நீண்ட பல நாட்களாக, பல ஆண்டுகளாக, ரத்தம் கொதித்து நெஞ்சுக்குள் ஓடச் செய்த அந்தக் கோபம், பொறாமை, வேதனை இவையெல்லாம் இப்போது காணோம். திமஃபேயின் சாவோடு அவை எங்கோ போய்விட்டன. இனி அவை திரும்பவே மாட்டா.

அவன் ரைபிளை மிகுந்த வெறுப்புடன் எடுத்து இறந்தவனின் பைகளைச் சோதனையிட்டான். அவனது சட்டையின் இடது பையில் முட்டை வடிவ கை வெடிகுண்டு இருந்தது. வலது பையில் நாலு கோர்வை ரைபிள் குண்டுகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. திமஃபேயிடம் எந்த விதமான குறிப்புகளும் இல்லை.

மக்கார் திரும்பும் முன்னர், கடைசி முறையாக அந்த உடலைத் திரும்பிப் பார்த்தான். அப்பொழுதுதான் அவனது பூவேலை நிறைந்த சட்டை சலவை செய்யப்பட்டிருந்ததும், முழங்காலில் கிழிந்திருந்த காக்கிக் கால்சட்டை நன்றாக மூட்டப்பட்டிருந்ததையும் கண்டான். இது ஒரு பெண்ணின்

கை வேலை என்பதைக் காட்டியது. ''ஓகோ, உன்னை இப்படி பெருமைப் படுத்தினாளோ'' என்று மக்கார் கடுந் துயருடன் நினைத்தவாறே, தனது கனத்துப்போன கால்களை மிகுந்த சிரமப்பட்டு, கடவேணியின் மீது தூக்கி வைத்தான்.

அந்த அதிகாலையையும் பொருட்படுத்தாமல் ரஸ்மியோத்னவ், மக்காரை வாசலருகே சந்தித்தான். ரைபிள், குண்டுகள், கை வெடிகுண்டு இவற்றை வாங்கிக்கொண்டு மிகவும் மனநிறைவுடன், ''ஆக, நீ அவனை முடித்துவிட்டாய்? அவன் எப்பொழுதுமே துணிச்சல்காரன். ஆபத்து கண்டு அஞ்ச மாட்டான்... நீ சுடுவதைக் கேட்டேன். எனவேதான் எழுந்து உடையணிந்துகொண்டேன், நான் அங்கு ஓடி வருவதாக இருந்தேன். அதற்குள்ளாக நீ வருவதைப் பார்த்தேன். நிம்மதி ஏற்பட்டது.''

''கிராம சோவியத்தின் சாவிகளைக் கொடு'' என்றான் மக்கார்.

என்ன செய்யப் போகிறான் என்பதை ஊகித்துக் கொண்ட ரஸ்மியோத்னவ், எதையும் கிளறாமல், ''என்ன லூஷ்காவை வெளியில் விடப் போகிறாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம்.''

''நீ விடக் கூடாது!''

''நிறுத்து! நான் அவளை இன்னமும் காதலிக்கிறேன். அந்தப் பன்றிக் குட்டியைத் தான்...'' என்று முரட்டுத் தொண்டையில் பேசினான் மக்கார்.

அவன் சாவிகளை எடுத்துக்கொண்டு அமைதியாகத் திரும்பி, கிராம சோவியத்தை நோக்கி நடந்தான்.

* * *

அந்த இருண்ட நடைபாதையில் மக்காருக்குப் பூட்டைக் கண்டு பிடிப்பது சிரமமாக இருந்தது. கடைசியாக பண்டசாலை அறையின் கதவைத் திறந்துவிட்டு, ''லூஷ்கா ஒரு நிமிடம் வெளியில் வா'' என்றான் மெதுவாக.

ஒரு மூலையில் வைக்கோல் சலசலக்கும் ஓசை கேட்டது. ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் லூஷ்கா முற்றத்தில் வந்து நின்றாள். அவள் தலையிலிருந்த வெண்ணிறக் கைக்குடையைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

''படிக்கட்டிற்கு வெளிக்குப் போ'' என்று சொல்லி விட்டு வழிவிட்டு விலகி நின்றான் மக்கார். வராந்தாவில் கைப்பிடிக் கம்பியில் அமைதியாகச் சாய்ந்து நின்றாள் லூஷ்கா. அவளுக்குப் பிடி ஒன்று தேவைப்பட்டது போலும்? ரஸ்மியோத்னவைப் போலவே அவளும் இரவு முழுக்கத் தூங்கவில்லை. விடியும் வேளையில் மெல்லிய வெடிச்சத் தத்தை அவளும் கேட்டிருக்கிறாள். மக்கார் என்ன சொல்லப் போகிறான் என்பதை அவளே யூகித்துக் கொண்டாள். அவளது முகம் வெளுப்பேறிப்போயிருந்தது. அவளது வறண்ட கண்கள் ஏதோ இதற்குமுன் மக்கார் கண்டறி யாத ஒரு புதிய உணர்வைக் காட்டியது.

கவலை தோய்ந்த அவளது கரிய கண்களுக்குள் நேரடி யாக உற்று நோக்கியவண்ணம், ''நான் திமஃபேயைக் கொன்று விட்டேன்'' என்றான் மக்கார். ஆசையூறும் வா யின் குறும்புத்தனம் குமிழியிடும் ஓர விளிம்பையே பார்த்துக் கொண்டு நின்றான் மக்கார். ''நேராக வீட்டிற்குப் போய், உன் மூட்டை முடிச்சுகளை எல்லாம் கட்டிக்கொண்டு, இந்த ஊரை விட்டு ஒரேயடியாக ஓடிவிடு. இல்லையேல் அது உனக்கு ஆபத்தாகும்... நீயும் விசாரிக்கப்படுவாய்!'' என்றான் மக்கார்.

லூஷ்கா பேசவில்லை. மக்கார் தனது பைக்குள் அரு வருப்பான முறையில் தேடித் தடுமாறி அழுக்குப் பிடித்த சுருட்டிக் கசக்கிய பூவேலை செய்யப்பட்ட கைக்குட்டை ஒன்றை எடுத்து நீட்டினான்.

''இது உன்னுடையது. என்னை விட்டு நீ போனபோது இதைப் போட்டுவிட்டுப் போய்விட்டாய். இதை எடுத்துக் கொள். எனக்கு இப்போது இது தேவையில்லை.''

உணர்வற்ற விரல்களால் அந்தக் கைக்குட்டையைத் தனது கசங்கிய சட்டைக்குள் லூஷ்கா திணித்தாள். மக் கார் ஒரு பெருமூச்சை இழுத்துக் கொண்டு, ''நீ அவனைப் பார்க்க விரும்பினால், உன் வீட்டு, முற்றத்தை அடுத்து கடவேணி அருகில் கிடக்கிறான்'' என்றான்.

இருவரும் அமைதியாகப் பிரிந்தனர். இனி ஒருவரை யொருவர் பார்ப்பதில்லை என்றே பிரிந்தனர். முற்றத்தின் படிகளை விட்டு இறங்கும்பொழுது மக்கார் அசட்டையாக விடை பெறும் முறையில் தலையை ஆட்டிவிட்டுப் போ னான். அவன் போவதை லூஷ்கா பார்த்துக்கொண்டு நின்

றாள். பின் கர்வம் மிக்க தன் தலையால் வணங்கினாள். இந்தக் கடைசிச் சந்திப்பில், அவள் இந்த பிடிவாதமான மனிதனிடத்தில் ஒரு தனிக் குணத்தைக் கண்டிருக்கக்கூடும். யாருக்குத் தெரியும்?..

அத்தியாயம் பன்னிரண்டு

நன்றாக வெயில் அடித்த நாட்கள், புல்வெளிகளில் இருந்த புல் முற்றிப் பழுப்பேற உதவிற்று. கிரெமியாச்சி கிராமத்தின் கடைசியும், மூன்றாவதுமான கூட்டுப்பண்ணைக் குழுவினரும், புல் அறுவடையில் பங்கு கொண்டனர். வெள்ளிக்கிழமை காலை இந்த அறுவடை ஆட்கள் புல் வெளிக்குப் போனார்கள். சனி மாலை, நகூல்னவ் தவீதவை அவன் இருப்பிடத்தில் சந்திக்கப் போனான். சிறிது நேரம் பேசாமலேயே உட்கார்ந்திருந்தான். முகம் மழிக்காமலும் உடம்பு உடைந்தும் காணப்பட்ட நகூல்னவ், கடந்த சில நாட்களிலேயே மிகவும் வயதாகிவிட்டவனைப்போலத் தோன்றினான். காதோரம் துருத்திக் கொண்டு நின்ற தாடை எலும்பின்மீது அடர்த்தியாகப் படர்ந்திருந்த கறுப்பு ரோமம் வெளுத்துப் போயிருந்ததை முதன் முதலாக தவீதவ் பார்த்தான்.

விருந்தாளியும், விருந்தளிப்பவனும் ஏறத்தாழ பத்து நிமிடங்கள் ஒன்றும் பேசாமல் புகைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தனர். உரையாடலை முதலில் துவக்க இருவருமே விரும்பவில்லை. இருப்பினும் புறப்படவேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்த நகூல்னவ் வினவினான். ''லூபிஷ்கினுடைய குழுவினர் அனைவரும் புல் அறுக்கப் போய்விட்டார்கள் போலத் தெரிகிறது. நீ கவனித்தாயா?''

''இந்த வேலைக்கென ஒதுக்கப்பட்டவர்கள் போயிருக்கிறார்கள், அதனால் என்ன?''

''நீ நாளைக்காலையில் அவர்களைப் போய்ப்பார்ப்பது நல்லது. அவர்கள் என்ன செய்கிறார்கள் எனப் பார்க்க வேண்டும்.''

''இன்னும் போய்ச் சேர்ந்திருக்க மாட்டார்கள். அதற்குள் சோதனையா? இது மிகவும் முன்கூட்டிச் செய்வதாக இல்லை?''

''நாளை ஞாயிற்றுக்கிழமை.''

''நல்லது?''

ஏளனக் குறிகள் நகூல்னவின் வறண்ட உதடுகளின் ஓரங்களில் சுழியிட்டன.

''அவனுடைய குழுவில் உள்ள ஏறத்தாழ அனைவரும் தெய்வபக்தி மிக்கவர்கள். மாதா கோயில் கஞ்சாவுக்கு அடிமைப் பட்டவர்கள். அதுவும் குறிப்பாக அந்தப் பெண்கள். அந்தக் குழுவினர் புல்வெளியில் இருந்தாலும்கூட, ஞாயிறு கோயில் நாளாதலால், யாருமே வேலை செய்ய மாட்டார்கள்! அவர்கள் வேலை செய்தால் அப்புறம் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். இதற்கும் மேலாக, அங்குள்ள சில பெண்கள், துபியான்ஸ்கி மாதா கோவிலுக்கு நிச்சயம் போவார்கள். நமக்கோ நேரம் போதாது என்பது உனக்குத் தெரியும். காலநிலை மாறினால் நாம் அறுத்து வைத்துள்ள வைக்கோல் நாய் படுப்பதற்குத்தான் பயன் படும்'' என்றான் நகூல்னவ்.

''சரி, நாளை காலை நான் போகிறேன். நான் அங்கு இருந்தால் அவர்கள் நழுவிப் போக முடியாது! என்னை எச்சரித்ததற்கு நன்றி. ஆனால் லூபிஷ்கினுடைய குழுவினர் ஏறத்தாழ அனைவருமே பக்திமான்கள் என்கிறாயே ஏன்?''

''எல்லாக் குழுக்களிலுமே ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் மூன்றாவது குழுவில் தான் கூட்டமாகச் சேர்ந்து விட்டார்கள்.''

''தெரியும். நாளைக்கு நீயே என்ன செய்யப் போகிறாய்? நீ முதல் குழுவினிடம் போனால் என்ன?''

நகூல்னவ் சுணங்கியபடி பதில் சொன்னான்: ''நான் எங்கும் போகவில்லை. சில நாட்கள் வீட்டிலேயே இருக்கப் போகிறேன். ஏதோ தள்ளாடுவது போல உணர்கிறேன்... மாவறைக்கும் ஆலையில் வேலை செய்தாற்போல் இருக்கிறது...''

கிரெமியாச்சி கட்சிக்கிளை, வயல்வெளியில் வேலை உள்ள பொழுதெல்லாம், கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வயலில் இருக்க வேண்டும் என்று அவர்களுக்குள்ளாகவே ஒரு கட்டுப்பாட்டை விதித்திருந்தனர். மாவட்டக் கட்சித் தலைமைக் குழுவிடமிருந்து உத்தரவு ஏதும் வருவதற்கு முன்பாகவே அவர்கள் வயலுக்குப் போனார்கள். இப்பொ

ழுதோ, நகூல்னவ் ஒரு குழுவில் இருக்க வேண்டியது அவ சியமாயிற்று. ஆனால் தனது தோழரின் மனநிலையை நன்கு புரிந்துகொண்ட தவீதவ். ''அது சரி மக்கார். நீ வீட்டில் இரு. அது தான் நல்லது. கிராமத்திலும் ஏதாவது நடந்தால் தீர்மானிக்க அதிகாரபூர்வமான ஒருவர் இருப்பது நல்லது தானே.''

அந்தக் கடைசி வாக்கியத்தை தவீதவ் வேண்டுமென் றேதான் சேர்த்துச் சொன்னான். மக்காருக்கு தான் அநு தாபப் படுவதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள அவன் விரும்பவில்லை. தான் வந்ததே இதற்குத் தான் என் பது போல்—ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் மக்கார் வெளியே எழுந்து போய்விட்டான்.

ஒரு நிமிடம் ஆவதற்குள் அவன் அந்த அறைக்கு திரும்ப வந்தான். மன்னிப்புக்கோரும் பாங்கில் முறுவலித்து, ''இப்பொழுதெல்லாம் ஓட்டையுள்ள பை போல ஆகி விட்டது என்னுடைய நினைவு. போய்வருகிறேன் என்று சொல்லக் கூட மறந்துவிட்டேன். நீ திரும்பியவுடன் அந்த உண்மையான பக்தர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை நீ எனக்குச் சொல். தங்களது குதிரைகளின் குளம்பை அதிகம் பார்க்கிறார்களா, துபியான்ஸ்கி மாதா கோயிலில் உள்ள சிலுவையையா என்று பார்ப்போம். அந்த ஞானஸ் நானம் பெற்ற மலைவிழுங்கிகளுக்கு இயேசுநாதர் பழங் காலத்தில், பஞ்சத்துக்குத் திருவுணவு பெய்யச் செய்தார் என்பதைச் சொல். அவரது வாழ்வில் ஒரே ஒரு முறை தான் செய்தார் எனவும் சொல். இந்தப் பனிகாலத்தில் இந்தக் கஸாக்கியர்களுக்காக அவர் வைக்கோலில் கூட கிடக்க மாட்டார்! வேறு வார்த்தைகளில் சொல்வதானால், உன்னுடைய முழுமத எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் ஏவி விடு! இத்தகைய நிகழ்வுகளில் என்ன சொல்ல வேண்டும் என்பது உனக்குத் தெரியும். நாம் உன்னுடன் வராதது குறித்து வருத்தப்படுகிறேன். மத எதிர்ப்புக்கு, நான் வந் தால் ஏராளமான குறிப்புகளைக் கொடுத்து உதவுவேன். நான் பெரிய பேச்சாளன் அல்ல. ஆனால் என்னுடைய முட்டி, தடி, இவை விவாதத்துக்கு உறுதுணையாக இருக் கும்! தாடையில் ஓர் இடி சரியாகக் கொடுத்தால் பிறகு அவன் விவாதிப்பதாவது? நின்று கொண்டிருந்தால்தானே பேசுவான். கீழே வீழ்ந்துகிடக்கும்போது விவாதிப்பானா?

கீழே கிடப்பவனின் உரையை நாம் எடுத்துக் கொள்ளப் போவதில்லை!'' என்றான் மக்கார்.

திடீரென்று புத்துணர்வு பெற்றவனைப் போலக் காணப் பட்ட நகூல்னவின் கண்களில் மகிழ்ச்சி ஒளி வீசிற்று, ''செமி யோன், நானும் உன்னுடன் வருவதாக வைத்துக் கொள் ளேன்! மத விஷயமாக பெண்களுடன் தகராறு வந்தால் சிக்கலில் மாட்டிக் கொள்வாய், உனக்கு என்ன செய்வ தென்று தெரியாது. நான் உனக்கு அச்சமயங்களில் மிகவும் உதவியாக இருப்பேன். உனக்கு நம் பெண்களைத் தெரி யும். கடந்த மாரிக்காலத்தில் உன்னைச் சாகுமளவுக்கு ஒன் றும் அவர்கள் கொத்தவில்லை, ஆனால் அடுத்த தடவை அதை நிச்சயம் செய்வார்கள். நானிருந்தால் எல்லாம் உனக்குச் சரியாக இருக்கும்! அந்தப் பிசாசுக் கூட்டத் தோடு எப்படி நடந்து கொள்வது என்பது எனக்குத் தெரியும்!''

தனது சிரிப்பை அடக்கப் பெரும்பாடுபட்டுக் கொண் டிருந்த தவீதவ், கையை உதறிக் கொண்டே, ''இல்லை, இல்லை! உன் உதவி ஒன்றும் தேவையில்லை. நானே சமாளித்துக்கொள்வேன். ஒன்றுமில்லாததற்கெல்லாம் நீ வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாய். கூட்டுப்பண்ணை தொ டங்கிய மாதங்களில் இருந்ததைக் காட்டிலும் மக்கள் இப் பொழுது அதிக அரசியல் உணர்வு பெற்றுள்ளார்கள், உண் மையாகத்தான்! ஆனால் மக்கார் நீ பழைய அளவுகோலை வைத்துத் தான் இன்னமும் அளந்து கொண்டிருக்கிறாய். இதுவும் உண்மையாகத்தான்!'' என்றான் தவீதவ்.

''சரி, அது உன் பாடு. நான் அங்கே போக முடியும் ஆனால் போக மாட்டேன். நான் உனக்கு உதவியாக இருப் பேன் என்று நினைத்தேன், ஆனால் நீ இப்படிப்பட்ட கௌ ரவ வீரன் என்றால் நீயே சமாளித்துக்கொள்.''

''உடனே முதுகைக் காட்டாதே மக்கார்'' என்று தவீ தவ் அமைதியான முறையிலே பேசத் தொடங்கினான். ''சமயம் குறித்த தப்பெண்ணங்களை எதிர்த்துப் போராட நீ சரியான வீரன் அல்ல. இந்த விஷயத்தில் நீ அதிகமான கெடுதல்தான் செய்ய முடியும். அய்யோ, அதிகமான கெடுதல் தான்!''

''இப்பிரச்சினைப் பற்றி உன்னோடு விவாதிக்க நான் விரும்பவில்லை'' என்றான் நகூல்னவ். ''ஆனால் பார், தப்பு

வேண்டாம்! நேற்றைய உடமைவர்க்கத்தாருடன் சேர்ந்து நிற்பது உனக்குப் பழக்கமாகிவிட்டது. நீ அவர்களிடம் தாராள மனிதனைப் போலப் பழகுகிறாய். என்னைப் பொருத்தமட்டில் அவர்களைக் கொரில்லா உணர்வோடு கண்காணித்து வரவே விரும்புகிறேன். சரி நான் போய்வருகிறேன். எல்லாம் நல்லபடி நடந்தால் சரி!''

நீண்ட பிரிவுக்காகக் கைகுலுக்கு வதைப்போல இருவரும் ஆண்களுக்கே உரிய உறுதியோடு கைகளைக் குலுக்கிக் கொண்டனர். நகூல்னவின் கை குளிர்ந்து, கல்லைப் போல இருந்தது. சற்று நேரத்துக்கு முன்னால் அவன் கண்கள் பெற்றிருந்த உயிரோட்டமான ஒளியையும் மகிழ்ச்சியையும் இழந்துவிட்டன. மறைந்திருந்த, வெளிப்படாத அந்த வேதனை அவனை மீண்டும் கவ்விக்கொண்டது. அவன்மீது இயற்கையாகப் பொங்கிய இரக்க உணர்ச்சியுடன், ''இப்பொழுது அவன் ரொம்பவும் வேதனைப்படுகிறான்...'' என்று நினைத்தான் தவீதவ்.

கதவின் கைபிடியைப் பிடித்துக்கொண்டு பாதித் திரும்பியபடி நின்றான் நகூல்னவ். ஆனால் தவீதவைப் பார்க்காது அறையின் ஒரு மூலையை உற்றுநோக்கியபடி கரகரத்த தொனியில், ''என்னுடைய மனைவியாகவும் உன்னுடைய சிநேகிதியாகவும் இருந்தாளே, அவள் இந்த கிராமத்தை விட்டே எங்கோ போய்விட்டாள். இது தெரியுமா?'' என்று கேட்டான்.

அவள் நினைவை விட்டு நீங்காத மிகவும் விரும்பிய கிராமத்தையும், இடங்களையும் விட்டுவிட்டு, கிரெமியாச்சி கிராமத்துக்கு ஒரேயடியாக விடைகொடுத்துவிட்டு சில நாட்களுக்கு முன்னரே லூஷ்கா போய்விட்டாள் என்பதைக் கேள்விப்படாதிருந்த தவீதவ் மிகவும் திகைப்புற்றுப் போனான். ''அது உண்மையாக இருக்க முடியாது! தஸ்தாவேஜுகள் இல்லாமல் அவள் எப்படிப் போக முடியும்? அவள் தனது அத்தையுடன் வசித்துக் கொண்டிருக்க வேண்டும். திமஃபேய் குறித்த பேச்சுக்கள் அடங்கட்டும் எனக் காத்துக்கொண்டிருப்பாள். பகிரங்கமாக இப்பொழுது வெளியில் வர வெட்கப் படுகிறாள் என்று நினைக்கிறேன். திமஃபேயிடம் அவளுக்கிருந்த தொடர்பு மிகக் கேவலமாக முடிந்துவிட்டது...'' என்று உறுதியுடன் சொன்னான் தவீதவ்.

மக்கார் மூக்கை நெளித்தான். ''நம்முடன் இருந்தது தான் மிகவும் நன்றாக முடிந்ததா?'' எனக் கேட்க விரும்பி யவன், ஆனால் வேறு எதையோ சொன்னான்: ''அவளுக்கு பாஸ்போர்ட் கிடைத்துவிட்டது. அவள் புதன்கிழமையே கிராமத்தை விட்டுப் போய்விட்டாள். நீ என்னிடமே கேட்டுக் கொள்ளலாம். காலைக் கருக்கலில் ஊரைவிட்டு அவள் போகும் போது, அவளை நானே பார்த்தேன். கையில் ஒரு சிறிய மூட்டையுடன் போனாள். அது அவ ளது துணி மூட்டையாக இருக்கும் என்று நினைக்கிறேன். மலையடி போனவுடன் ஒரு நிமிடம் நின்று திரும்பி கிரா மத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள். அதன் பிறகு அந்தப் பிசாசு போயே போய் விட்டது! அவள் எங்கு போகிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள, அவள் அத்தை யிடம் கேட்டுப்பார்த்தேன். ஆனால் அத்தைக்கும் ஒன் றுமே தெரியவில்லை. ''நான் எங்கேயோ போகிறேன்'' என்று லூஷ்கா அவளுக்குச் சொன்னாள். அவ்வளவுதான். இப்படித்தான் அந்தக் கெட்ட பெண் நாயின் வாழ்க்கை நடந்து வந்திருக்கிறது...''

தவீதவ் ஒன்றும் பதில் சொல்லவில்லை. மக்காருக்கு தீங்கு செய்துவிட்ட குற்ற உணர்வு மீண்டும் புதிய விச்சு டன் அவனைக் கவ்விக் கொண்டது. மக்காரின் முகத்தைப் பாராமல் எதையோ சொல்வதைப்போல் ''சரி, தொலை யட்டும்! யாரும் அவளுக்காகக் கவலைப்பட மாட்டார்கள்'' என்றான் மெதுவாக தவீதவ்.

''தனது வாழ்க்கையில், அவள் யாருடைய பரிவையும் பெற விரும்பியதில்லை, ஆனால் இந்தக் காதல், ஓரறைத் துணை ஆகிய வியாபாரங்களில் திமஃபே, நம்மையெல் லாம் சுருட்டி எறிந்த குல்லாயாக்கி விட்டான். அதை உன் பாணியில் சொல்வதானால். 'உண்மையாகத்தான்!' ஏன் மூஞ்சியை ஒரு மாதிரி வைத்துக்கொள்கிறாய்? என் பேச்சு பிடிக்கவில்லையா? எனக்கும் இந்த விஷயம் பிடிக்கவில்லை தான். ஆனால் உண்மையை என்ன செய்ய முடியும்! நீயும் நானும் லூஷ்காவை இழுந்துவிட்டோம். ஏன் தெரியுமா? அவள் ஒருவகையான—பெண்ணல்ல—அவள் ஒருவகைப் பேய்! அவள் உலகப் புரட்சியைப் பற்றிக் கவலைப்பட்டாள் என நினைக்கிறாயா? இல்லை! கூட்டுப்பண்ணைகள் அர சாங்கப்பண்ணைகள், அல்லது சோவியத் ஆட்சி எதையும்

அவள் கண்டிக்காமல் இருந்ததில்லை! தன்னைச் சுற்றியுள்ள ஆண்களோடு ஏதாவது விளையாட வேண்டும், எவ்வளவு குறைவாக வேலை செய்ய வேண்டுமோ, அவ்வளவு குறை வாக வேலை செய்ய வேண்டும், அதுதான் அவளது கட்சிக்கு அப்பாற்பட்ட கொள்கைத் திட்டம்! இப்படிப்பட்ட ஒரு பெண்ணோடு வாழ வேண்டுமானால், கைகளில் நன்றாகக் கோந்தைத் தடவிக்கொள்ள வேண்டும். அவளது சட்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உலகத்தின் ஒவ்வொன்றையும் மறந்துவிட வேண்டும். ஆனால் அப்பொழுதும்கூட ஒரு நொடி அசந்தால் போதும்; பாம்பு தன் சட்டையிலிருந்து உருவிக்கொண்டு போவது மாதிரி இவள் நம் பிடியிலிருந்து நழுவிச் சென்று கிராமத்துப் புல் வெளியில் பிறந்த கோலத்தில்—ஆட்டம் போட்டுக்கொண்டிருப்பாள். அவள் அத்தகைய பெண்! ஆகையால் அவள் திமஃபேயை விரும்பினாள். இந்தக் கிராமத்தை வாரக் கணக்கில் தனது அக்கார்டியனோடு திமஃபேய் சுற்றிக்கொண்டிருந்த காலங்கள் உண்டு. அவனைப் பார்த்து விட்டால் அவ்வளவுதான், நான் வீட்டை விட்டுப் போக மாட்டேனா எனத் துடித்து அவளுக்குக் காய்ச்சல்கூட வந்துவிடும். இப்போது இப்படிப்பட்ட நாலுகால் மிருகத்தை நீயாவது, நானாவது வைத்துக்கொண்டிருக்க முடியுமா? இவளுக்காக நமது புரட்சியையும் சோவியத் வேலையும் களையும் நிறுத்திவைக்க முடியுமா? அப்பறம் ஒரு அக்கார்டியன் வாங்குகிற வேலையில் இறங்க முடியுமா? அவ்வளவு தான் தொலைந்தோம்! சரியான பூர்ஷுவா ஆகிவிடுவோம்! அவள் பார்க்கிற முதல் மரக்கிளையில் தூக்கிட்டுக்கொண்டு அந்தச் சனியன் செத்துத் தொலையட்டும். இப்படிப்பட்டவளுக்காக நீயோ நானோ, கட்சி உணர்வைவிட்டுவிட முடியாது!''

நகூல்னவுக்கு மகிழ்ச்சி மீண்டும் திரும்பியது. அவனது தோள்பட்டைகளை அகல விரித்து நின்றான். உணர்ச்சியால் அவனது கன்னங்கள் உப்பி நின்றன. கதவருகிலிருந்த தூணில் சாய்ந்தவண்ணம், ஒரு சிகரெட்டைச் சுருட்டி, அதைப் பற்றவைத்து இரண்டு, மூன்று தடவை ஆழமாக இழுத்துப் புகை விட்டுவிட்டு அமைதியான குரலில் தாழ்ந்த தொனியில், சில சமயங்களில் கிசுகிசுப்பது போலும் நகூல்னவ் பேசத் தொடங்கினான். ''செமியோன், உண்

மையைச் சொல்கிறேன் கேள். இறந்து கிடக்கும் திமஃ பேயைப் பார்த்தவுடன், என்னுடைய முன்னாள் மனைவி வீறிட்டு அரற்றுவாள் என்று நான் பயந்து போயிருந்தேன்... ஆனால் இல்லை! கண்களில் ஒரு துளி நீர்கூட இல்லாமல் அழாமலும் அவனிடம் போய், அவனருகில் மண்டியிட்டு, 'என்னைத் தேடி ஓடிவந்த வல்லூறே, ஆனால் சாவைத் தேடிச் சேர்ந்துவிட்டாயே... உன்னைப் காப்பாற்ற முடியாமல் போனதற்காக என்னை மன்னித்துவிடு' என்று அவள் அமைதியாகச் சொன்னதாக, அவளுடைய அத்தை சொல்கிறாள். பின்னர் தன் கைக்குட்டையைக் கழற்றினாள், தலையிலிருந்து சீப்பை எடுத்தாள், திமஃபேயின் முன் தலைமயிரைச் சீவிவிட்டாள், உதடுகளில் முத்தமிட்டுவிட்டு நடந்து போய்விட்டாள். பேசாமல் நடந்துபோன அவள், ஒரு முறை கூடத் திரும்பிப் பார்க்கவேயில்லை!''

கொஞ்ச நேரம் கழித்து மக்கார் தனது கரகரத்த தொனியில் உரத்த சத்தத்தில் பேசினான். அவனது குரலில் பொதிந்திருந்த கர்வத்தை தவீதவ் திடீரென்று பார்த்தான்.

''அதுதான் அவளது பிரியா விடை. மிக நன்றாக இருக்கிறதல்லவா? துணிச்சல் மிக்கவள் அந்தச் சனியன் பிடித்த பெண்! சரி, நான் போய்வருகிறேன். வாழ்த்துக்கள்!''

ஓகோ, இதற்குத்தான் நகூல்னவ் வந்தானா... என்று நினைத்தபடியே வாசற்படி வரை தவீதவ் மக்காருடன் போனான். தனது அறைக்குத் திரும்பியவுடன் சட்டையையும் கழற்றாமல் அப்படியே படுத்துக்கொண்டான். அவன் எதையுமே நினைத்துப்பார்க்க விரும்பவில்லை. எல்லாவற்றையும் மறந்து விரைவில் தூங்க விரும்பினான். ஆனால் தூக்கம் வரவேயில்லை.

அவசரப்பட்டு முட்டாள்தனமாக லூஷ்காவுடன் தான் ஏற்படுத்திக்கொண்ட புத்திசாலித்தனமற்ற தொடர்புக்காகத் தன்னைத்தானே திரும்பத் திரும்ப சபித்துக்கொண்டிருந்தான்! காதலின் ஒரு கீறல்கூட அவர்களிடையே ஏற்பட்டு இருக்கவில்லை... ஆனால் திமஃபேய் மீண்டும் வந்தவுடன் அவனைப் பிடித்துக்கொண்டு மறு சிந்தனைக்கே இடமில்லாமல், தவீதவை விட்டு விலகி, தனது காதலன் கைகளில் தானே போய் விழுந்தாள். முதற் காதல்தான் மறக்க முடியாதது... இப்பொழுது கிராமத்தை விட்டுப்

போகும் போதும் விடை பெற்றுக் கொள்ளாமல் கூடச் சென்று விட்டாள். ஆனால் உண்மையாக, தவீதவ் அவளுக்குத் தேவைப்படுகிறானா? அவள் யாரை விரும்பினாளோ அவனுக்கு விடை கொடுத்து விட்டுத்தான் போனாள். திமஃபேய் செத்துப் போயிருந்தாலுங்கூட! ஆனால் தவீதவோ? தவீதவ் அவளுக்கு ஒரு பொருட்டல்ல. இது நடந்திருக்க வேண்டியதுதான். லூஷ்காவுடன் தவீதவ் கொண்டிருந்த தொடர்பு, உடல் நலத்திற்கு ஒவ்வாத ஒன்று, தொடங்கிய பாதியிலே ஒரு வார்த்தையில் முடிந்த கடிதத்தை போல்தான். அதற்குமேல் ஏதும் இல்லை!

தனது ஒடுக்கமான படுக்கையில் புரண்டு படுத்தபடி பெருமூச்சு விட்டுக்கொண்டு கிடந்த தவீதவ் புகைப்பதற்காக இரு முறை எழுந்தான். விடியும்வரை அவனுக்குத் தூக்கமே வரவில்லை. முழு வெளிச்சம் வந்தவுடன் எழுந்தான். அவனது சிறு தூக்கம் அவனுக்குப் புத்துணர்ச்சியைத் தரவில்லை! குடித்துவிட்டு வெறியாட்டம் போட்டுக் கிடந்துவிட்டு எழுந்தது போன்ற ஓர் உணர்வுடன் இருந்தான். தொண்டை வறண்டு தாகமெடுத்தது. தலைவலியோ தாங்க முடியவில்லை, வாயும் வறண்டு காய்ச்சல் அடிப்பது போலிருந்தது. அசந்தாற்போல முழந்தாளிட்டு மேசைக் கடியில் தனது காலணிகளைத் தேடினான். வெற்று மூலையிலும் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான், நிமிர்ந்து எழுந்த பிறகுதான் அதைத் தன் காலில் போட்டுக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. ''சரிதான் மாலுமி! வாழ்த்துக்கள் இந்தத் தடவை அடித்தளத்திற்கே அமிழ்ந்து விட்டாய். அதுதான் உண்மை! மறைந்த அந்த லூஷ்கா! அவள் இந்தக் கிராமத்தை விட்டுப் போய் நான்கு நாட்கள் ஆகியும் அவள் என்னுடன் இருக்கிறாள்...'' என்று கோபத்தோடு முணுமுணுத்தான் அவன்.

மார்புவரை தனது சட்டையைக் கழற்றிவிட்டு கிணற்றிலிருந்து குளிர்ச்சியான தண்ணீரை முதுகிலும் தலையிலும் அள்ளி அள்ளிக் கொட்டிக் கொண்டான். சற்று நேரத்தில் நன்கு இருப்பதாக உணர்ந்த அவன், உடனே கூட்டுப் பண்ணை லாயங்களை நோக்கிப் புறப்பட்டான்.

அத்தியாயம் பதின்மூன்று

ஒரு மணி நேரங்கழித்து அவன் மூன்றாவது குழுவினரின் கூடாரத்திற்கருகில் வந்துவிட்டான். தூரத்தில் வரும் பொழுதே அங்கு ஒழுங்கு மீறியிருப்பது தெரிந்தது. பாதிக்கு மேற்பட்ட அறுவடை எந்திரங்கள் வெறுமனே கிடந்தன. கழற்றிவிட்ட குதிரைகள் புல்வெளியில் சுற்றிக்கொண்டு திரிந்தன. காய்ந்து கொண்டிருந்த புல்லை யாரும் கட்டு வதைக் காணவில்லை. தொடுவானம் வரை எங்கும் ஒரு வைக்கோல் போர்கூட காணப்படவில்லை...

அந்தக் குழுவினருடைய வண்டிக்கு அருகில், வீட்டில் நெசவு செய்த போர்வையின் மீது அமர்ந்து ஆறு பேர் சீட்டுவிளையாடிக் கொண்டிருந்தனர். ஏழாவது ஆள் காலணியைத் தைத்துக் கொண்டிருந்தான். எட்டாவது ஆள் வண்டியின் சக்கரத்துக்குப் பின்னால் ஒரு குளுமையான நிழலில் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய முகத்தை சுருட்டி கசக்கிய அழுக்கான கருங்கித்தானால் மூடியிருந் தான். தவீதவைப் பார்த்தவுடன் அப்பொழுது விளையாட்டில் நட்டமடைந்து போன ஒருவனைத் தவிர மற்றவர்கள் சோம்பேறித்தனமாக எழுந்தனர். அவன் மட்டும் சீட்டு களைக் கலைத்துக் கொண்டிருந்தான்.

கோபத்தால் வெளிறிய முகத்துடன் தவீதவ் வேகமாக அவர்களை நோக்கிக் குதிரையில் போனான். ''ஓகோ! இது தான் வேலையா?!'' என்று உறுமினான். ''ஏன் புல் அறுக்க வில்லை? லூபிஷ்கின் எங்கே?''

''இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா?'' என்று சீட்டாட் டக்காரன் ஒருவன் தயக்கத்துடன் சொன்னான்.

''கால நிலை உங்களுக்காக காத்திருக்கும் என்று நினைக் கிறீர்களா?! மழைபெய்தால் என்ன செய்வது?!''

தவீதவ் குதிரையை வேகமாக சுழற்றித் திருப்பியதால், அது போர்வைமீது தன் காலை வைத்துவிட்டது. புதிதாக போர்வை காலில் பட்டவுடன், பின்காலைத் திடீரென்று உயர்த்தி வேறொரு திசையில் குதித்தது. தவீதவ் ஒரு பக் கம் சாய்ந்து விட்டான். கால் மிதியையும் விட்டுவிட்டான். ஆனால் சமாளித்து சேணத்தின் மீதே இருந்து விட்டான். பின்புறமாகச் சாய்ந்து, கடிவாளத்தை இழுத்து அந்த பலத் தில் சரியாக உட்கார்ந்து கொண்டான். இவ்வாறு சமா

ளித்துக் கொண்டவுடன் இன்னும் உரத்த குரலில், ''லூபிஷ் கின் எங்கே?!'' என்று கேட்டான்.

''புல் அறுக்கப் போய்விட்டான். மலைக்கு இடதுபுறத்தில் அறுப்பவர்களில் இரண்டாவது ஆள் தான் லூபிஷ்கின். தலைவரே, நீ எதற்காக இப்படி சத்தம் போடுகிறாய்? நீ கவனமாக இராவிட்டால் உன் தொண்டைபோய் விடும்...'' என்று கிண்டலாகச் சொன்னான் உஸ்தீன் ரிகாலின். நடுத்தர வயது, பருமனான உடல், அம்மைக் குழிகள் விழுந்த வட்ட முகம், மூக்கு நெற்றியில் சந்திக்குமிடத்தில் படர்ந்து பரவிக் கிடந்த புருவங்கள் இவையே அவனது தோற்றமாகும்.

''ஏன் நீங்கள் இப்படி அசட்டை செய்கிறீர்கள்? உங்களைத்தான் கேட்கிறேன்!'' தவீதவின் தொண்டையே கோபத்தில் சத்தம் போட்டதால் கம்மியது.

தவீதவுக்கு அடுத்த வீட்டில் இருந்த அலெக்சாந்தர் நெச்சாயெவ் என்ற அமைதியான, மெலிந்த இளைஞன், ''குதிரைகளை ஓட்ட ஆட்கள் இல்லை. அதுதான் இப்பொழுது தொல்லை. பெண்களும், சில இளம் பெண்களும்கூட சர்ச்சுக்குப் போய்விட்டார்கள். எனவே நாங்கள் விடுமுறை எடுத்துக் கொள்ள கட்டாயப் படுத்தப்பட்டோம்... அந்தச் சனியன்களைப் போகாதீர்கள் என்று சொல்லிப் பார்த்தோம். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. அவர்களுக்கு உடனே கோபம் வந்துவிட்டது! நம் தலையை மொட்டை அடிப்பார்கள் போல இருக்கிறது, அவர்களை எந்த வகையாலும் நிறுத்த முடியாது. நாங்கள் எவ்வளவோ முயன்றோம், ஆனால் பயனில்லை. இதுதான் உண்மை நம்பு, தோழர் தவீதவ்!'' என்றான்.

''சரி, நான் நம்புகிறேன். ஆனால் ஆண்களாகிய நீங்கள் ஏன் வேலை செய்யவில்லை?'' தவீதவ் இப்பொழுது அமைதியாகத்தான் சொன்னான். ஆனால் தேவைக்கும் அதிகமான அது உரத்துக் காணப்பட்டது.

அவனுடைய குதிரை கலக்கமடைந்து இருந்தது. அது பின்னங்காலில் சாய்ந்துகொண்டே இருந்தது. காதுகள் பயத்தால் விரைத்து நின்றன. மேல் புல்லரித்தது. குதிரையின் கழுத்தைத் தடவிக்கொடுத்து, கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பதிலுக்காகக் காத்திருந்தான் தவீதவ். ஆனால் இந்த முறை அமைதி அதிக நேரம் நீடித்தது...

''எங்களுடன் வேலை செய்யத்தான் ஆட்கள் இல்லை.

பெண்கள் போய்விட்டனர், என்று ஏற்கெனவே சொன்னேனே'' என்று மற்றவர்களையும் தனக்கு ஆதரவுக்காகப் பார்த்துக்கொண்டு நெச்சாயெவ் அப்பாவி போல பேசினான்.

''உங்களுடன் வேலை செய்ய ஒருவரும் இல்லையா? இங்கே எட்டுப் பேர் உட்கார்ந்துகொண்டு ஒன்றும் செய்யாமலிருக்கிறீர்கள். நான்கு புல் அறுவடை எந்திரங்களை நீங்கள் ஓட்டியிருக்கலாமா? இருக்கலாம்! சீட்டு விளையாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். நமது பொது வேலையில் இவ்விதம் நடந்துகொள்வீர்கள் என நான் எதிர்பார்க்க இல்லை. அதுதான் உண்மை!''

''வேறு என்ன எதிர்பார்த்தாய்? எங்களைக் கால்நடை என்று நினைத்தாயா?'' என்று பொறுமலுடன் கேட்டான் உஸ்தீன்.

''அப்படி என்றால், நீ என்ன சொல்ல விரும்புகிறாய்?''

''தொழிலாளர்கட்கு விடுமுறை உண்டா?''

''ஆமாம், உண்டு, ஆனால் தொழிற்சாலைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை செய்யாமல் நின்றுவிடுவதில்லை. தொழிலாளர்களும் அங்கே உள்ள பெஞ்சில் உட்கார்ந்து சீட்டு விளையாடுவதில்லை. என்ன நான் சொல்வது புரிகிறதா?''

''ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களுக்கு மாற்றுவேலை முறை இருக்கிறது. சபிக்கப்பட்ட ஆட்களைப் போல அத்தனை நேரமும் நாங்களே தானே வேலை செய்ய வேண்டி இருக்கிறது! திங்கள் முதல் சனிமுடிய எங்கள் கழுத்து நுகத்தடியில்தானே இருக்கிறது. இப்பொழுது ஞாயிற்றுக் கிழமையிலும் ஓய்வு கிடையாது. இது என்ன முறையோ? இப்படித்தான் சோவியத் அரசு ஆட்சி செலுத்துகிறதா? அது உழைக்கும் மக்களிடையே எதுவும் வேற்றுமைகள் இருக்கக் கூடாது என்கிறது. ஆனால் உங்களுக்கு ஏற்றாற்போல் சட்டத்தைத் திருத்திக் கொள்கிறீர்கள்.''

''இது என்ன சுத்தப் பிதற்றல்? என்ன வாய்பேச்சு?'' என்றான் தவீதவ் கோபமாக. ''மாரிக்காலத்தில் நமது கூட்டுப்பண்ணை மாடுகளுக்கும், உங்களது மாடுகளுக்கும் சேர்த்தேதான் போதுமான புல்லை அறுத்து சேர்க்க விரும்புகிறேன். புரிகிறதா? இது என் வசதிக்கு ஏற்றதா? இதில் எனக்கு என்ன லாபம்? ஆனால் சும்மா வாய்க்குவந்த

படி பிதற்றுகிறாய். நீ என்ன சொல்கிறாய், சுத்தக் காற்றுப் பை?!''

அருவருப்புடன் உஸ்தீன் கையை ஆட்டினான்: ''உங்களுடைய கவலையெல்லாம் திட்டத்தை நிறைவேற்றுவது தான். மற்ற எதைப்பற்றியும் உங்களுக்கு அக்கறை இல்லை. எங்கள் கால்நடையைப் பற்றிக் கவலைப்படுகிறாயா? இருக்க முடியாது! இளவேனிற் காலத்தில் நிலையத்திலிருந்து வோய்ஸ்கவோய்க்கு விதை அனுப்பியபோது நெடுகிலும் எத்தனை காளைகளைக் கொன்றார்கள்? உன்னால் எண்ணக்கூட முடியாது! நீ எங்கள் கண்களிலேயே மண் தூவப் பார்க்கிறாய்!''

''உன்னைப் போன்றவர்கள் தானியத்தைத் தரையில் பூட்டிவைத்ததன் விளைவுதான் வோய்ஸ்கவோய் கூட்டுப் பண்ணை மாடுகள் வழியில் செத்துமாண்டன. கூட்டுப்பண்ணையில் சேர்ந்தீர்கள், ஆனால் தானியத்தை மறைத்துக் கொண்டீர்கள். விதைக்க நமக்கு ஏதாவது தேவைப்பட்டது, இல்லையா? எனவேதான் அந்த மோசமான காலத்தையும் பொருட்படுத்தாமல் மாடுகளை விதைக்காக ஓட்டிக் கொண்டுவர நேரிட்டது. ஆகவே அவை செத்தன. அதுதான் உண்மை! இது உனக்குத் தெரியுமா?''

''உங்களுக்குத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், அதுதான் வைக்கோலைப்பற்றி இவ்வளவு அக்கறை காட்டுகிறாய்'' என்று முணகினான் உஸ்தீன்.

''இந்த வைக்கோலை நானே தின்னப் போகிறேன் என்று நீ நினைத்தாயா? பொது நன்மைக்காக என்னால் ஆனதைச் செய்துவருகிறேன்! திட்டம் இதற்கு என்ன செய்யும்?'' தவீதவ் உணர்ச்சி வசப்பட்டவனாகக் கத்தினான்.

''தலைவரே, இப்படியெல்லாம் சத்தம் போடாதே. இந்த இடி மின்னலுக்கெல்லாம் இங்கு யாரும் பயப்பட மாட்டோம். நான் தரைப்படையில் பணி செய்திருக்கிறேன். சரி, நீ சொல்கிறபடியே, பொதுநன்மைக்காகவே வேலை செய்வதாக வைத்துக் கொள்வோம். பிறகு எதற்காக மனிதர்களை இரவு பகலாக வேலை வாங்கி சாகடிக்க விரட்டுகிறாய்? அந்த இடத்தில் தான் திட்டம் வந்து சேருகிறது! நீ மாவட்ட அதிகாரிகளுக்கு உன்னால் முடிந்ததைச் செய்துகாட்ட விரும்புகிறாய். மாவட்ட அதிகாரிகள் மாநில

அதிகாரிகளுக்குக் காட்ட விரும்புகிறார்கள். கடைசியாகச் சிரமப்பட்டு உழைக்கிறவர்கள் நாங்கள் தான். பொதுமக்கள் எதையும் பார்க்க மாட்டார்கள் என்று நினைக்கிறாயா? அவர்களை குருடர்கள் என்று நினைத்தாயா? ஒவ்வொன்றையும் பார்க்கிறார்கள். ஆனால் உன்னைப்போல மேலே ஏற விரும்புகிறவர்களை விட்டுத் தள்ளியும் நிற்க முடியவில்லை! நாங்கள் உன்னையும் உன்னைப்போல மனிதர்களையும் எங்களால் தள்ள முடியுமா? முடியாது! எனவே இப்படிப்பட்டவர்கள் விரும்பியபடி எல்லாம் செய்யலாம். மாஸ்கோவும் வெகு தூரத்திலிருக்கிறது. இங்கு என்ன தந்திரம் செய்கிறீர்கள் என்பது மாஸ்கோவுக்குத் தெரியாது...''

நகூல்னவ் அநுமானத்திற்கு மாறாக பெண்களால் தவீதவிற்கு எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் அது வேலையை எந்த வகையிலும் எளிதாக்கி விடவில்லை, மற்ற கஸாக்குகளின் அமைதியிலிருந்தே, தனது குரலை உயர்த்திப் பயனில்லை, உரத்துக் கூச்சல் போடுவதால் கெடுதல்தான் அதிகரிக்கும் என்பதை தவீதவ் விளக்கிக்கொண்டான். அவன் தன் பொறுமை அவ்வளவையும் சேர்த்துக் கூட்டி அவர்களைத் திருத்த முயன்றான். உஸ்தீனுடைய மலர்ந்த முகம் கவலை தோய்ந்து தொங்கிக்கொண்டிருந்ததைப் பார்த்த பொழுது, ''நல்ல வேளையாக நகூல்னவைக் கொண்டுவரவில்லை! இதற்குள் என் முன்னே சண்டை தூள் பறந்திருக்கும்...'' என்று நினைத்துக்கொண்டான் தவீதவ்.

கொஞ்ச அவகாசம் தேடிக்கொண்டு, அவர்களில் தனக்குச் சாதகமான சிலரையாவது தன் பக்கம் இழுப்பதற்கான திட்டம் தீட்டும் நோக்குடன், தவீதவ், ''உஸ்தீன் மிஹாய்லவிச், கூட்டுப்பண்ணைத் தலைவர் தேர்தல் நடந்த பொழுது, எனக்காக நீ வாக்களித்தாயா?'' என்று கேட்டான்.

''இல்லை, நான் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை! நான் எதற்காக உனக்கு வாக்களிக்க வேண்டும்? அவர்கள் ஒரு பையில் பூனையைப் போல உன்னைக் கொண்டு வந்தார்கள்...''

''இல்லை, நானாகவே தான் வந்தேன்.''

''அதனாலென்ன? என்னைப் பொருத்தவரையில் நீ ஒரு பூனை மாதிரி வந்தாய்! எப்படிப்பட்ட குணமுடையவன்

என்பதைத் தெரியாமல் நான் எதற்காக உனக்கு வாக்களிக்க வேண்டும்!''

''இப்பொழுது நீ எனக்கு எதிராக இருக்கிறாயா?''

''ஆமாம்! இதைத் தவிர நீ வேறு எதை எதிர்பார்க்கிறாய்?''

''அப்படியானால் எல்லா உறுப்பினர்களும் கூடும் கூட்டுப்பண்ணைக் கூட்டத்தில் என்னை நீக்க வேண்டும் என்ற கேள்வியைக் கிளப்பு. அக்கூட்டத்தினுடைய முடிவு இறுதியானதாக இருக்கும். ஆனால் உன் வாதத்துக்கு ஏற்ற சில காரணங்களை நீ தேடிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நீயே கேலிப்பொருளாக மாறி விடுவாய்!''

''நான் கேலிப்பொருளாகமாறி விடுவதில்லை, கவலைப் படாதே. நான் ஒன்றும் குறுக்கிட விரும்பவில்லை. உன்னுடைய விஷயத்தை இன்னும் பொறுக்கலாம். அதற்கு இன்னும் நேரமிருக்கிறது. ஆனால் இப்பொழுது நீ தலைவராக இருக்கும்பொழுது, எங்களது விடுமுறைகள் என்னவாயின என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.''

பதில் சொல்வதற்கு இது மிகவும் எளிய கேள்வி. ஆனால் தவீதவை இதற்குப் பதில் சொல்ல உஸ்தீன் விடவில்லை.

''மாவட்டத் தலைநகரிலும், நகரத்திலும் ஞாயிற்றுக் கிழமையில் பெண்கள் தங்கள் முகத்திற்குச் சுண்ணம் போட்டு, உதட்டுச் சாயம் பூசிக் கொண்டு, ஊர் சுற்றவும், ஆடவும் பாடவுமாக இருக்கிறார்கள். ஆனால் எங்கள் பெண்களும், இளம் குமாரிகளும் மட்டும் வியர்வை சொட்ட ஞாயிற்றுக்கிழமையிலும் ஏன் வேலை செய்ய வேண்டும்?''

''இது கோடைக்காலம், நெருக்கடியான வேலை நேரம்...''

''எங்களுக்கு எப்பொழுதுமே நெருக்கடி வேலைக் காலம்தான். அது மாரிக்காலமாகட்டும், கோடையாகட்டும், எல்லாம் ஒன்றுதான். ஆண்டு முழுவதும் வேலைதான்.''

''நான் என்ன சொல்கிறேன் என்றால்...''

''ஒன்றும் சொல்ல வேண்டாம்! உன்னால் ஒன்றும் சொல்ல முடியாது!''

தவீதவ் எச்சரிக்கை விடும் முறையில் கையை உயர்த்தி, ''உஸ்தீன், ஒரு நிமிடம் நிறுத்து!'' என்றான்.

ஆனால் உஸ்தீன் விரைந்து பேசி அவன் பேச்சில் குறுக்கிட்டான்: ''நான் ஒரு கூலிக்காரனைப் போல உன் முன்னால் நின்றுகொண்டு தானிருக்கிறேன். ஆனால் நீ தான் நிலக்கிழார் மாதிரி குதிரைச் சேணத்தை விட்டு இறங்க மறுக்கிறாய்.''

''நான் சொல்வதைக் கேள். ஒரு நிமிடம் நிறுத்து. ஒரு மனிதனிடம் பேசுவதைப் போல உன்னிடம் பேச முடியாதா?''

''பொறுத்து என்ன பயன்? இன்று முழுக்கக் காத்திருந்தாலும், எந்த உண்மையையும் உன்னிடமிருந்து நான் கேட்க முடியாது!''

''நீ என்னைப் பேச விடுகிறாயா?'' என்று கோபமாகக் கத்தினான் தவீதவ்.

''என்னைக் கண்டு உறுமாதே! நான் லூஷ்கா அல்ல!'' என்று தனது முரட்டுத் தொண்டையில் மூக்கு விடைக்கக் கத்தினான் உஸ்தீன். ''நீ எங்களைத் திட்டித் தீர்க்க நாங்கள் அனுமதிக்க முடியாது! நீ எவ்வளவு பேச விரும்பினாலும், கூட்டத்திலே பேசித் தொலைக்கலாம். ஆனால் இங்கு நாங்கள்தான் பேசுவோம். நாங்கள் சீட்டு விளையாடியதற்காக எங்கள்மீது சீறாதே! கூட்டுப்பண்ணையில் எல்லாருமே அவரவருக்கு எசமானர்கள் தான். நாங்கள் நினைத்தால் வேலை செய்வோம். நினைத்தால் ஓய்வெடுப்போம். நீ எங்களை விடுமுறை நாட்களில் வேலை செய்ய வைக்க முடியாது. அதற்கு உனக்குத் துணிவு போதாது!''

''சரி முடித்துவிட்டாயா?'' தன்னையே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கேட்டான் தவீதவ்.

''இல்லை, நான் இன்னும் முடிக்கவில்லை. இதைச் சொல்லி முடித்து விடுகிறேன்: எங்களுடைய போக்கு உனக்குப் பிடிக்காவிட்டால், நீ வந்த இடத்துக்கே திரும்பிப் போய்விடலாம். இந்தக் கிராமத்துக்கு வரும்படி உன்னை யாரும் அழைக்கவில்லை. நாங்கள் எப்படியாவது சமாளித்துக் கொள்கிறோம். கடவுள் கிருபையுடன் நீ இல்லாமலே கூட இருப்போம்! நீ ஒன்றும் எங்களுக்கு ஒளிவிளக்கல்ல!''

இது வெறும் ஆத்திரமூட்டல்தான். உஸ்தீன் எதை நம்பி நிற்கிறான் என்பதை தவீதவ் நன்கு விளங்கிக்கொண்டான். ஆனால் அவனால் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உஸ்தீனுடைய வட்ட முகத்தையும், அடர்ந்த

புருவத்தையும் பார்த்த பொழுது தவீதவின் கண்கள் முன்னால், கருப்புநிற வட்டங்கள் சுழன்றன. அவனது வலது கையிலிருந்து சவுக்கைப் பிடித்திருந்த நரம்புகள் புடைத்தன. ரத்தம் கொப்பளித்தது. விரல் வலித்தது.

கால்சட்டைப் பைகளுக்குள் கையை விட்டுக்கொண்டு, கால்களை அகல விரித்து நின்றான் உஸ்தீன்... மீண்டும் முன் மாதிரியே நின்றுகொண்டான் உஸ்தீன். கஸாக்குகளின் அமைதியான ஆதரவைத் தெரிந்துகொண்டான். தன்னுடைய சக்தியிலும் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. அவன் கர்வத்துடன், தனது கரு நீல நிறக் கண்களைச் சுருக்கிக் கொண்டு முறுவலித்தான். தவீதவின் முகம் வெளுத்துவிட்டது. அவனுடைய உதடுகள் ஓசையின்றி அசைந்தன. ஆனால் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவன் தன்னையே அடக்கிக்கொள்ளப் போராடிக் கொண்டிருந்தான். தனக்குள்ளேயே இருந்த காரணமற்ற, அந்தக் குருட்டுத்தனமாக கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்றான். உஸ்தீனுடைய வார்த்தைகள் வெகு தொலைவிலிருந்து வருவதைப் போலக் கேட்டது. அதிலே கேலியும், கிண்டலும் தொனித்தது தெளிவாகத் தெரிந்தது...

''தலைவரே, எதற்காக மீன் மாதிரி வாயைத் திறந்து கொண்டிருக்கிறாய்? நாக்கை விழுங்கிவிட்டாயா? அல்லது பதிலே கிடைக்கவில்லையா? நீ ஏதோ சொல்லப் போகிறாய் என்று நினைத்தேன், ஆனால் மறந்துவிட்டதைப் போலத் தெரிகிறது... உண்மைக்கு எதிராக வாதிடுவது சுலபமான காரியமல்ல. இல்லை தலைவரே. எங்களோடு வாதிட வீணாக முயற்சிக்காதே. வீணான விஷயங்களுக்காகப் பொறுமையை இழக்காதே. அந்தக் குதிரையை விட்டு இறங்கிவந்து எங்களுடன் சீட்டு விளையாடுவதுதான் நல்லது. நாம் 'பாசிங் தி பக்' விளையாடலாம் வா. அது ஒன்றும் கூட்டுப்பண்ணை நடத்து வதைப்போல அல்ல. புத்திசாலிகளின் விளையாட்டு அது...'' என்றான் உஸ்தீன்.

உஸ்தீனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு விவசாயி சிரித்துக்கொண்டே அந்த இடத்தை விட்டுப் போய் விட்டான். அந்த வண்டியைச் சுற்றிலும் சிறிது நேரம் கெட்ட அமைதி நிலவியது. தவீதவின் பெரு மூச்சும், தூரத்தே அறுவடை செய்து கொண்டிருந்த அறுவடை எந்திரங்களின் சத்தமும், மனத்திற்கு இதமூட்டும் கவலையற்ற

குயில்களின் கீதமும்தான் கேட்டுக்கொண்டிருந்தன. அந்த வண்டியைச் சுற்றி உணர்ச்சிவசப்பட்டு நின்ற அந்த மனிதர்களிடையே என்ன நடந்தது என்பதைப் பற்றி அவைகளுக்குக் கவலையில்லை...

சாட்டையை தலைக்குமேல் உயர்த்தி தனது குதிகாலால் குதிரையைத் தட்டிவிட்டான். உஸ்தீன் முன்னால் குதித்தோடி வந்தான் சேணத்தின் வாரைக் கையால் பிடித்துக் கொண்டு தவீதவ் காலின்மீது சாய்ந்தான். ''நீ என்னை அடிக்க முயன்றாயா? நீ அடித்துப் பார்!'' என்று எச்சரிக்கை விடுபவனைப் போல மெதுவாகச் சொன்னான்.

அவனது தாடை எலும்புகள் முகத்தில் துருத்தி எழுந்து நின்றன. மகிழ்ச்சியில் அவனது கண்கள் ஒளிவீசின. எதையோ எதிர்பார்ப்பது அவன் கண்களில் தென்பட்டது.

ஆனால் தவீதவ் சவுக்கை தனது முரட்டுக் கால்களின் மீது கொண்டுவந்து நிறுத்தினான். உஸ்தீனைப் பார்த்துச் சிரிப்பதற்கு வீணாக முயற்சித்துவிட்டு, ''இல்லை உஸ்தீன், நான் உன்னை அடிக்க மாட்டேன், இல்லை! அதை எதிர் பார்க்காதே, வெண்ணிற வீரனே! பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் உன்னைச் சந்திக்க நேரிட்டிருந்தால் விஷயமே வேறு... எதிர்ப்புரட்சிக்காரா! நீ என்றும் பேசாதவாறு உன் வாயை அடைத்திருப்பேன்,'' என்றான் தவீதவ்.

உஸ்தீனைத் தனது காலால் லேசாகத் தள்ளிவிட்டு கீழே இறங்கினான் தவீதவ்.

''சரி, உஸ்தீன் மிஹாய்லவிச், நீதான் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீயே போய் குதிரையைக் கட்டிவிட்டு வா. என்னை உங்களுடன் சீட்டு விளையாட வேண்டும் என்றாய், அல்லவா? நல்லது, மகிழ்ச்சியானது! நாம் விளையாடுவோம் வா, உண்மையாகத்தான்!''

இது எதிர்பாராத திருப்பமாக மாறியது... கஸாக்குகள் ஒருவரையொருவர் பார்த்தனர். தயங்கினர், பின்னர் போர்வையைச் சுற்றிலும் உட்கார்ந்தனர். வண்டிச் சக்கரத்தில் குதிரையைக் கட்டிவிட்டு கால்களை மடக்கிக் கொண்டு குந்தி உட்கார்ந்தான் உஸ்தீன். தவீதவுடன் ஏற்பட்ட மோதலில் தான் தோற்றதாக அவன் கருதவே இல்லை. ஆகவே அந்தப் பேச்சைத் தொடரவே அவன் விரும்பினான்.

''தலைவரே, நீ விடுமுறை நாளைப் பற்றி ஒன்றும் சொல்லக் காணாமே! அந்தக் கேள்வியை மூட்டை கட்டிப் போட்டுவிட்டாய்...''

''நானும் நீயும் அப்புறம் விவாதிப்போம்'' என்று பொருள் பொதிந்தமுறையில் உறுதி சொன்னான் தவீதவ்.

''நான் இதை எப்படி எடுத்துக்கொள்வது? இது அச்சுறுத்தல் மாதிரி இருக்கிறதே!''

''இதில், எதற்காக பயமுறுத்தல்? நாம்தான் சீட்டு விளையாட உட்கார்ந்துவிட்டோமே. இனி மற்ற விஷயங்கள் காத்திருக்க வேண்டியது இல்லை. அப்புறம் நமக்குப் பேச இன்னமும் நேரம் இருக்கிறது...''

ஆனால் இப்பொழுது தவீதவ் அமைதியாக இருக்க உஸ்தீன் ஆத்திரப்பட்டான். அவன் விளையாடி முடிப்பதற்குள்ளாக, கையிலிருந்த சீட்டுகளை எல்லாம் எரிச்சலோடு போர்வையின்மீது எறிந்துவிட்டு காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தான் உஸ்தீன்.

''இந்த விளையாட்டை விடுங்கள். நாம் விடுமுறை நாளைப்பற்றிப் பேசுவோம். மனிதர்கள் மட்டுந்தான் இந்த விடுமுறைநாளைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறாய், தலைவரே? இல்லை! நேற்றுக் காலை, பெண் குதிரையைப் பூட்டப் போனேன். அந்தக் குதிரை பெருமூச்சோடு என்னிடம் மனிதக் குரலில் சொல்லிற்று: 'என்ன உஸ்தீன், இந்தக் கூட்டுப்பண்ணை வாழ்வை என்னவென்று நினைக்கிறாய்! அவர்கள் என்னிடம் ஒரு கிழமை முழுக்க வேலை வாங்குகிறார்கள். இரவு பகலாக வாட்டி வதைக்கிறார்கள். விடுமுறையில் கூட சும்மா விடமாட்டேன் என்கிறார்கள். பழைய நாட்களில் நிலைமையே வேறு! ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை வாங்கவே மாட்டார்கள். எங்காவது திருமணம் மாதிரி இடங்களுக்கு வேண்டுமென்றால் வண்டி போடுவார்கள். பழங்காலத்தில் என் வாழ்க்கை மிகவும் எளிதாக இருந்தது!'''

அமைதியாக, ஆனால் ஒரே சமயத்தில் கஸாக்குகள் சிரித்தனர். அவர்கள் உஸ்தீன் பக்கம் இரக்கம் காட்டுவதாகத் தோன்றியது. தனது தொண்டை முடிச்சின்மீது விரலை வைத்துக்கொண்டு,''கூட்டுப்பண்ணைக்கு வருவதற்கு முன்னர், இந்த அதிசயப் பெண் குதிரை யாரிடம் இருந்

தது?'' என்று தவீதவ் கேட்டபோது ஒருவித எதிர் பார்க்கும் மூச்சு மட்டுமே கேட்டது.

உஸ்தீன் கண்களைச் சுழற்றினான். தவீதவைப் பார்த்துக் கண் சிமிட்டினான். ''அந்தக் குதிரை என்னுடையது, எனவே என்னைப்போலப் பேசுகிறது என்றுதானே நினைத் தாய்? தலைவரே, அந்த இடத்தில் தான் தவறு செய்து விட்டாய். அது தித்தோக்கினுடையது, அவனுடைய சொத்துக்களை எடுத்த பொழுது அவனிடமிருந்து பறிமுதல் செய்தது. நாமெல்லாம் சொந்தமாகப் பண்ணை வைத் திருந்த பொழுது அது வளர்க்கப்பட்ட முறையே வேறு. இப்பொழுது பொதுவான பிறகு வைக்கப்படும் தீனியே வேறு. மாரிக்காலத்தில் கூட அது வைக்கோல் வாடை யைப் பார்த்தறியாதது. அதனுடைய முதல் பல்லில் இருந்து கடைசிப்பல் வரை ஓட்சைத் தவிர வேறு எதையும் ருசித்தது கிடையாது. அது உல்லாசமாக ஆடம்பரச் செல்வத்தில் வளர்ந்தது.''

''அது தன்னுடைய கடைசிப் பல்லையும் போட்டிருந் தால், கிழட்டுக் குதிரையாக இருக்க வேண்டுமே?'' என்று சாதாரண முறையில் கேட்டான் தவீதவ்.

''ஆமாம், அது வயதானதுதான், பல்லாண்டு ஆகிவிட் டது'' ஒத்துக்கொண்டான் உஸ்தீன், தனக்கு விரிக்கப்பட்ட வலையைப் புரிந்துகொள்ளாமல்.

''அப்படியானால் அந்தக் கிழட்டுக் குதிரை சொல்வதை நீ ஏன் கேட்க வேண்டும்?'' என்றான் உறுதியாக தவீதவ்.

''ஏன் கூடாது?''

''ஏனெனில் குலாக்குகளின் குதிரைகள் குலாக்குகளின் பாணியில்தானே பேசும்.''

''ஆனால் இப்பொழுது அது கூட்டுப்பண்ணையில் இருக் கிறதே...''

'' நீ கூட, இப்பொழுது கூட்டுப்பண்ணை விவசாயி தான். ஆனால் உண்மையில் நீ குலாக்குகளின் ஆதரவாளன்.''

''தலைவரே, இப்போது நீ வரம்பு மீறிப் போ கிறாய்...''

''இல்லை, அப்படியில்லை. உண்மை—உண்மைதான். இது கிழட்டுக் குதிரையானால் அதன் பேச்சை நீ ஏன் கேட்க வேண்டும்? கிழட்டுத்தனத்தில் புத்திசாலித்தனத் தையும் இழந்திருக்கிறது! அது கொஞ்சம் இளமையாகவும்

புத்திசாலித்தனமாகவும் இருந்திருந்தால் உன்னிடம் வேறு விதமாகச் சொல்லியிருக்கும்!''

''வேறு என்ன சொல்லியிருக்கும்?'' என்று எச்சரிக்கையாய் கேட்டான் உஸ்தீன்.

''இதைத்தான் அது சொல்லியிருக்க வேண்டும்: 'ஏ, உஸ்தீன், நீ இன்னும் குலாக்கிய குணத்தை விட்டு விடபடவில்லை! மாரிக்காலத்தில் நீ வேலை செய்யவில்லை. ஏ நாய்க் குட்டியே, நீ இளவேனிற்காலத்திலும் வேலை செய்யவில்லை. சும்மாவாவது காய்ச்சல் போல நடித்தாய். இப்பொழுதும் எந்த வேலையையும் செய்ய நீ விரும்பவில்லை. எப்படி மாரிக்காலம் முழுவதும் உன்னுடைய குதிரையைக் காப்பாற்றப் போகிறாய்? உன்னுடைய சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறாய்? இப்படி வேலை செய்தால் இருவரும் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்!' இப்படித்தான் அது உன்னிடம் சொல்லியிருக்க வேண்டும்!''

தவீதவின் கடைசி வார்த்தைகள் எழுந்த வெடிச் சிரிப்பொலியில் மறைந்துவிட்டன. நெச்சாயெவ் பெண்பிள்ளை போல குலுங்கி குலுங்கி கீச்சுக் குரலில் அடக்க முடியாமல் சிரித்தான். கெராசிம் ஸியாப்லவ் எழுந்தே நின்றுவிட்டான். சிரிப்பை அடக்க முடியாமல் குதிமேல் நின்றுகொண்டு நடனமாடுவதுபோல அசைந்தான். அவனால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவே இல்லை. தீகன் ஒஸெத்ரோவ் கிழவன் தனது நரைத்த தாடியைக் கையில் பிடித்துக் கொண்டு, ''கீழே படுடா உஸ்தீன்! அப்படியே கிட, தவீதவ் சரியான விடு விட்டானே! போ! கிட!'' என்று சொல்லிக் கொண்டே சிரித்தான்.

உஸ்தீன் அமைதியாக கலக்கமடையாமல் இருந்தான். அவனாகச் சிரித்துக் கொண்டான். அந்தச் சிரிப்பு வீம்புக்கு வரவழைக்கப்பட்டது அல்ல. தவீதவ் இது கண்டு வியப்படைந்தான்.

அதைத் தொடர்ந்து மீண்டும் அமைதி நிலவியவுடன் உஸ்தீன் தான் முதலில் பேசினான்: ''தலைவரே, என்னை நீ தோற்கடித்து விட்டாய்... என் பிடியிலிருந்து இவ்வளவு நளினமாகத் தப்பி விடுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆனால் குலாக்கிய முறையின் எச்சம் என்று என்னை அழைத்திருக்க வேண்டாம். கடந்த இளவேனிற்

காலத்தில் நான் வேலை செய்யவில்லை என்பதும் உண்மையல்ல. உண்மையாகவே நான் காய்ச்சலாக இருந்தேன். தலைவரே, என்னை மன்னித்து விடு. நீ பொய் சொல்கிறாய்!''

''நிரூபிக்க முடியுமா?''

''நான் எப்படி நிரூபிப்பது?''

''ஆதாரங்களை வைத்துத்தான்.''

''ஆதாரமா? நாம் விளையாட்டுக்காகத்தானே பேசிக் கொண்டிருந்தோம்.'' இப்பொழுது சற்று அக்கறையுடனே பேசினான் உஸ்தீன்.

''முட்டாளாக்காதே!'' என்று கோபத்தோடு சொன்னான் தவீதவ். ''நாம் ஒன்றும் விளையாடவில்லை, இங்கு நீ ஆரம்பித்தது ஒன்றும் விளையாட்டுக்காக அல்ல. அந்தத் தூணைப்போல தெளிவானது ஆதாரமே. நீ கூட்டுப்பண்ணையில் வேலை செய்வதே இல்லை. அங்குள்ள பிற்போக்காளர்களை யெல்லாம் உன் பக்கம் இழுக்க நீ முயற்சிக்கிறாய். நீ பேசுகிற முறை உன்னை ஆபத்தில் கொண்டுபோய் விடப் போகிறது. உதாரணமாக இன்று வேலை தொடங்குவதை ஆரம்பத்திலேயே நீ கெடுத்துவிட்டாய். உன்னுடைய முயற்சியால், பாதிக்கு மேற்பட்ட குழுவினர் அறுவடை செய்யவே இல்லை. இதிலே கேலி எங்கிருந்துவரும்?''

சிரித்ததால் விரிந்துகொண்டிருந்த உஸ்தீனுடைய புருவங்கள் மூக்கின் சந்திப்பின் மேல் ஒன்றாய் இணைந்து நேர்கோடாயின.

''நான் ஒய்வுநாளைப் பற்றிப் பேசினால், உடனே குலாக்கு ஆகிவிடுகிறேன். எதிர்ப்புரட்சிக்காரனாகிவிட்டேன். நான் அப்படியா? நீ ஒருவர் தான் பேச அநுமதிக்கப் பட்டிருக்கிறாயா, நாங்கள் எல்லாம் பேசாமல் சட்டை நுனியால் வாயைத் துடைத்துக் கொண்டு இருக்க வேண்டியதுதானா?''

''இல்லை. அது ஒன்றுமட்டும் காரணம் அல்ல!'' என்று பதிலடி கொடுத்தான் தவீதவ். ''உன்னுடைய நடத்தையில் தொடக்கம் முதல் முடிவுவரை நாணயமாக இல்லை, இது உண்மைதான்! ஒய்வு என்று எதற்காகக் கத்துகிறாய்? கடந்த குளிர்காலத்தில் ஒரே மாதத்தில் இருபது நாட்கள் ஒய்வெடுத்துக் கொண்டாய்! நீ மட்டுமல்ல, இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் சகலரும்தான். விதையைத் தரவாரி பிரித்

தது, மாட்டைக் குளிப்பாட்டியது. இவை தவிர வேறு வேலை என்ன செய்தீர்கள்? ஒன்றுமில்லை! ஆண்டினுடைய மிக நெருக்கடியான வேலை நேரத்தில் ஓய்வு கேட்பதற்கு உங்களுக்கு உரிமை ஏது? இந்த நேரத்தில் ஒவ்வொரு விநாடியும் நமக்கு முக்கியமல்லவா? கொஞ்சம் நாணயமாவதுவேண்டாமா? சொல்லுங்கள்!''

உஸ்தீன் கண்ணைச் சிமிட்டாமல் தவீதவைப் பார்த்தான். ஆனால் பதில் ஏதும் சொல்லவில்லை. தீகன் ஒஸெத்ரோவ் அவனுக்காக பதில் பேசினான். ''கஸாக்குகளே, இது வாயடிப்பதற்கான நேரம் அல்ல. தவீதவ் சொல்வதுதான் சரி. தவறு செய்தவர்கள் நாம்தான். அதைச் சரி செய்ய வேண்டியதும் நாம்தான். நம்முடைய இந்த மாதிரி வேலையில் ஓய்வெடுப்பது என்பது கஷ்டமான காரியமே. நமக்கு ஓய்வு மாரிக் காலத்தில்தான் கிடைக்கும். தனியார் பண்ணை நடத்திய காலத்திலும் இது தான் நிலைமை. இதைவிட்டு விட்டு, பண்ணை வேலை செய்தவர்கள் உண்டா? தானியத்தை அடித்துச் சேர்த்தவுடன், உடனே அடுத்த உழவுபோட வேண்டும். தவீதவ் சொன்னது போல, நமது பெண்களைச் சர்ச்சுக்குப் போக நாம் விட்டிருக்கக் கூடாது. நாமும் இங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டு இதற்கு வேறு காரணம் கூறுவது மன்னிக்கப்பட முடியாதது... நாம் தவறைச் செய்து விட்டோம்! நமக்கே தீங்கு செய்து கொண்டிருக்கிறோம். உஸ்தீன், அத்தனையும் நீ செய்த தவறுதான். நீதான் எங்களை வழி தவறி இழுத்துச் சென்று விட்டாய், பிசாசே!''

உஸ்தீன் வெடிமருந்து போல குபீரென்று கொதித்தான். அவனது நீலநிறக் கண்கள் இருண்டன. பொறாமைத் தீ படர்ந்தது. ''உன் மண்டையில் ஏதாவது மூளை இருக்கிறதா? ஏ தாடி வைத்த முட்டாளே! மூளையை வீட்டிலேயே போட்டுவிட்டு வந்துவிட்டாயா?''

''ஆமாம், ஆமாம். அப்படித்தான் செய்து விட்டேன் போலும்...''

''அப்படியானால் ஊருக்குத் திரும்ப ஓடி, எடுத்துக் கொண்டுவா!''

நெச்சாயெவ் தனது சிறு கையால் வாயை மூடி சிரிப்பை அடக்க முயன்றான். கலங்கிப் போய் நின்ற ஒஸெத்ரோவைப் பார்த்து உரத்த குரலில், ''அதைப் பத்திரமான

இடத்தில் போட்டுவிட்டு வந்தாயா, தீகன் கர்தேயிச், உன்னுடைய மூளையா?'' என்று கேட்டான்.

''அதனால் உனக்கு என்ன கவலை?''

''ஏனென்றால், இன்று ஞாயிற்றுக்கிழமை...''

''அதனாலென்ன?''

''ஏனென்றால், இன்று காலை உன் மருமகள் தரை, வீடு அனைத்தையும் கூட்டிப் பெருக்கி இருப்பாள். ஆகையால், பெஞ்சு, நாற்காலி, இவற்றினடியில் உன்னுடைய சிறு மூளையைப் போட்டிருந்தால், அவள் பெருக்குமாற்றில் பெருக்கி முற்றத்தில் தள்ளி இருப்பாள். அதைக் கோழிக் குஞ்சுகள் ஒரு விநாடியில் கொத்திப் பிய்த்துத் தின்றிருக்கும்... அப்புறம், உன் வாழ்க்கை பூராவும் நீ அந்த மூளையும் இல்லாமலேதான் வாழ நேரிடும். அது பற்றித்தான் நான் கவலைப்பட்டேன்...''

தவீதவ் உட்பட அனைவரும் சிரித்தார்கள். ஆனால் கஸாக்குகளின் சிரிப்பு அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை... ஆனால் சற்றுமுன் இருந்த பதட்ட நிலைமை சீராகிவிட்டது. பொதுவாக எல்லா இடங்களிலும் நடப்பதைப் போலவே இங்கும் ஒரு கேலிச் சிரிப்பு சண்டையைத் தவிர்த்து விட்டது. கேலிக்கு ஆளாக்கப்பட்ட ஒஸெத்ரோவ் சற்று நேரம் கழித்து நெச்சாயெவைப் பார்த்து, ''அலெக்சாந்தர், நான் பார்த்தமட்டில், வீட்டில் விட்டு வைப்பதற்கோ தலையிலேயே வைத்துக் கொள்வதற்கோ ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. என்னைக் காட்டிலும் புத்திசாலியாக எதிலாவது காட்டிக் கொண்டது உண்டா? உன்னுடைய மனைவி துபியான்ஸ்கி சர்ச்சுக்கு நடைபோட்டுக் கொண்டிருக்கிறாள். நீயோ சீட்டு விளையாடுவதற்கும் முடியாதென்று சொல்லவில்லை.''

''ஆமாம், நானும் குற்றம் சாட்டப்பட வேண்டியவன்தான்!'' என்றான் நெச்சாயெவ் நகைச்சுவையோடு.

ஆனால் அந்த விவாதத்தின் முடிவு தவீதவுக்கு முழு மன நிறைவைத் தரவில்லை. அவன் உஸ்தீனை வளைக்கவே விரும்பினான்!

''சரி, ஓய்வு நாட்களைப் பற்றி சற்று ஆழமாகவே நாம் பேசுவோம்.'' உஸ்தீனை நேராக முறைத்துப் பார்த்துக் கொண்டு சொன்னான் அவன். ''உஸ்தீன் மிஹாய்லவிச், மாரிக்காலத்தில் நீ அதிக வேலை செய்தாயா?''

''எனக்குச் சொன்னவற்றை எல்லாம் செய்தேன்.''

''ஆனால் எவ்வளவு?''

''நான் ஒன்றும் எண்ணவில்லை.''

''எத்தனை உழைப்பு நாட்கள் உன் கணக்கில் இருக்கக் கூடும்?''

''எனக்கு நினைவில்லை. உன் கேள்விகளால் களைத்துப் போனேன். உனக்கு வேறு வேலை இல்லை என்றால் நீயே உட்கார்ந்து எண்ணிக் கொண்டிரு.''

''எனக்குத் தேவையில்லை. நீ மறந்து இருக்கலாம். ஆனால் நான் கூட்டுப்பண்ணையின் தலைவன். நான் இதையெல்லாம் மறக்க முடியாது.''

தவீதவ் தூக்கிக் கொண்டே திரிந்த அந்த கனத்த குறிப்பேடு எவ்வளவு பயனுள்ளது என்பது அப்பொழுதுதான் தெரிந்தது! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளின் விளைவாக அவனது விரல்கள் இன்னும் நடுங்கிக் கொண்டு இருந்தன. மூலை மடங்கியிருந்த அந்த குறிப்பேட்டின் பக்கங்களைப் புரட்டிய பொழுதும் அவன் விரல்கள் நடுங்கின.

''இதோ உன்னுடைய பெயர் இருக்கிறது, இதோ நீ எவ்வளவு சேர்த்திருக்கிறாய் என்ற கணக்கு இருக்கிறது, பெரிய உழைப்பாளி! இதோ, இங்கேயே உன் சம்பளம்: ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே—எல்லாம் சேர்த்து. இதோ ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். மொத்தத்தில் இருபத்தொன்பது உழைப்பு நாட்கள். இவ்வளவுதான். இதில் விரல்கள் எலும்பாக உழைத்தேன் என்கிறாய்.''

''இது அவ்வளவு நன்றாக இல்லையே, ரிகாலின்!'' என்று இடித்துரைக்கும் பாங்கில் ஒரு கஸாக்கியன் உஸ்தீனைப் பார்த்தபடி சொன்னான்.

ஆனால் உஸ்தீன் விடுவதாக இல்லை. ''எனக்கு இன்னும் ஆறுமாதம் இருக்கிறது. எல்லா முட்டைகளும் பொறித்த பிறகு குஞ்சுகளை எண்ணலாம்.''

''கோழிக் குஞ்சுகளைப் பொறித்தவுடன் எண்ணலாம், ஆனால் நாம் உழைப்பை ஒவ்வொரு நாளும் எண்ண வேண்டும்'' என்று தவீதவ் கோபத்துடன் சொன்னான். ''இந்தா! இதைப் போட்டுப் புகைப் பிடி, உஸ்தீன். கூட்டுப்பண்ணையில் உழைக்காமல் ஏமாற்றுபவர்களை நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம்! இப்படிச் சீர்குலைப்போரைக் கழுத்

தைப் பிடித்துத்தள்ளி வெளியேற்றுவோம்! எங்களுக்கு ஒத்தடம் வைப்போர் தேவையில்லை. எதற்கு வந்தோம் என்பதை நீ எண்ணிப் பார். ஒஸெத்ரோவுக்கு ஏறத்தாழ இருநூறு உழைப்பு நாட்கள் கணக்கில் இருக்கிறது. உங்கள் குழுவில் உள்ள அனைவருக்குமே நூறுக்கு மேற்பட்ட நாட்கள் இருக்கின்றன. நெச்சாயெவ் போன்ற நோயாளி கூட நூறு நாட்களை நெருக்கிவிட்டான். ஆனால் உனக்கு மொத்தமே இருபத்தொன்பது நாட்கள்தான்! இது கேவலம் தான்!''

''என்னுடைய மனைவிக்கு நலமில்லை. அவளுக்கு ஏதோ பெண்களுக்கு இருக்கும் தொல்லை வந்து தொலைத்திருக்கிறது. அது வந்தால் வாரக்கணக்கில் படுத்துவிடுகிறாள். இதில் ஆறு குழந்தைகள் வேறு உள்ளன'' என்று அடக்கத்தோடு சொன்னான் உஸ்தீன்.

''உன்னைப் பற்றி என்ன?''

''நானா?''

''நீ ஏன் முழுக்க வேலை செய்யவில்லை?''

உஸ்தீனுடைய கன்னங்கள் சிவந்து தாடை எலும்புகள் விம்மி நின்றன. கருநீல நிறக் கண்களை சுருக்கிக் கொண்டான்.

''எதற்காக என்னையே முறைத்துப் பார்க்கிறாய்? என்னுடைய கண்களையும், முகத்தையும் பார்ப்பதைத் தவிர உனக்கு வேறு வேலையே இல்லையா?!'' எனது இடது கை முட்டியை உருட்டிக்கொண்டு, வேகமாக வீசிக்கொண்டு பேசினான். அவனது கழுத்து நரம்புகள் நீலம்பாய்ந்து நின்றன. ''என்னை என்ன லூஷ்கா அல்லது உன்னை நினைத்தே நெஞ்சுருகிக் கொண்டிருக்கிறாளே வார்யா ஹர்லாமவா என்று நினைத்தாயா?! என்னுடைய கைகளைப் பார், அதற்குப்பிறகு எவ்வளவு வேலை செய்தேன் என்று கேள்!''

அவன் கைகளை விரித்துக்காட்டிய பொழுதுதான், வலது கரத்தில் ஒரே ஒரு விரல் இருப்பதும், மற்ற விரல்கள் இருந்த இடத்தில் பழுப்புநிற தழும்புமட்டுமே இருந்ததைக் கண்டான் தவீதவ்.

திகைப்பினால் மூக்கைச் சொரிந்து கொண்டான் தவீதவ்.

''ஓ அப்படியா?.. நீ எங்கே உன் விரல்களை இழந்தாய்?''

''கிரிமியாவில், விராங்கெல் போர்முனையில் நடந்தது.

நீ என்னை வெள்ளையனே என்று அழைத்தாய். ஆனால், நானோ தண்ணீர்ப்பழம் மாதிரி சிவந்துபோயிருக்கிறேன். நான் வெள்ளையர்களுடன் இருந்திருக்கிறேன். பச்சையர்களுடனும் மோதியிருக்கிறேன். சிவப்பர்களுடனும் இருந்தேன். நான் வெள்ளையர்களுக்கு வேலை செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. எனவே பின்னணியிலேயே முடங்கிக் கிடப்பேன். அவர்களுடன் சண்டை போடத் தொடங்கி, சண்டை போடும்போது விரல்களை இழந்துவிட்டேன். என்னுடைய இடது கை, கண்ணாடிக் குவளையைத் தூக்கிப் பிடிக்கும் கை, அது முழுமையாக இருக்கிறது. ஆனால் வலது கைதான் அள்ளி எடுக்கும் விரல்களை இழந்துவிட்டது. இதோ பாரேன்!..''

''வெடிச் சிதறலின் அடியா?''

''கைவெடி குண்டு.''

''உனது சுட்டு விரலை எது காப்பாற்றியது?''

''இது விசையின் மீதிருந்தது. அதுதான் காப்பாற்றப் பட்டது. அன்று, இரண்டு விராங்கெலின் நபர்களை நான் கொன்றேன். அதற்காக இதைக் கொடுக்க நேரிட்டுவிட்டது. நான் அவ்வளவு மனித ரத்தத்தைச் சிந்தியதால் அந்தப் பழைய கடவுளுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக நான்கு விரல்களை ரத்தப்பலியிட வேண்டியதாகிவிட்டது. லேசாகவே தப்பிவிட்டேன். அவன் உண்மையிலேயே கோபப்பட்டு, என் தலையிலேயே பாதியைக் கொண்டு போயிருக்கக் கூடும்...''

உஸ்தீனை நோக்கி தவீதவ் பார்த்துக்கொண்டே இருந்தான், நெருக்க உணர்வு வளர்ந்தது. பேச்சின் அமைதி நிலைமை வளரவே, அவனது ரத்தமும் குளிர்ந்து, உதடுகளிலே கிண்டல் சிரிப்புத் தெரிந்தது.

''உன்னுடைய கடைசி விரலையும், ஏன் தியாகம் செய்யவில்லை? இந்தக் கடைசி விரலால் உனக்கு எந்த வகையில் பயன்?''

''தலைவரே, மற்றவர்கள் விஷயத்தில் நீ தாராளமாக இருப்பாய் போலிருக்கிறதே! இந்த ஒரு விரல், வீட்டு வேலைக்கு மிகவும் உதவியாக இருக்கிறது.''

''எதற்காக?'' என்றான் தவீதவ் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

''எல்லா வேலையும்தான்... என் மனைவி ஏதாவது

தப்புச் செய்தால், இரவு நேரத்தில் இதை ஆட்டிக் காட்டு கிறேன். பகல் நேரத்தில் பல்குத்திக் கொள்ள இது உதவு கிறது. அப்பாவி மக்களைத் திகிலடையச் செய்யவும் இது உதவுகிறது. ஆண்டிற்கு ஒரு முறைதான், என்னைப் போன்ற ஏழைகள் தங்களது சூப்பில் கறியையே பார்க்க முடியும். ஆனால் நான் தெருவில் போகும் பொழுதெல்லாம் பல்லைக் குத்திக்கொண்டு, எச்சிலைத் துப்பிக்கொண்டே போவதால், 'இதோ, உஸ்தீன் மிக அருமையான வாழ்க்கை நடக்கிறான்! நாள்தோறும் கறிசாப்பிடுகிறன், இன்னும் சாப்பிட வைத்திருக்கிறான்!' என நினைக்கிறார்கள். இந்த ஒரு விரல் எதற்கு உதவும் என்று நீ கேட்கிறாய்... இது தனது வேலையைச் செய்கிறது! நான் பணக்காரன் என்று ஊரே நம்புகிறது. இது எனக்கு மிகப் பிடிக்கும்!''

''சரியான நாக்கு வைத்திருக்கிறாய்'' என்று தன்னால் அடக்க முடியாமல் சிரித்துக்கொண்டே சொன்னான் தவீதவ். ''சரி, இன்று ஏதாவது புல் அறுக்கப் போகிறாயா?''

''இந்த அருமையான பேச்சுக்குப் பிறகு போகாமலா இருப்பேன்.''

தவீதவ் ஒஸெத்ரோவ் பக்கம் திரும்பி, அங்கிருந்தவர் களிலேயே மூத்தவன் என்ற முறையில், ''அந்தப் பெண்கள், துபியான்ஸ்கிக்குப் போய் அதிக நேரமாகிவிட்டதா?'' என்று கேட்டான்.

''ஒரு மணி நேரம் இருக்கும் அதற்கும் மேலிராது.''

''நிறையப் பேரா?''

''சுமார் பன்னிரண்டு பேர் இருக்கும். பெண்கள் தானே ஆட்டு மந்தைதான். ஒன்று போனால் மற்றவை பின் தொடர வேண்டியது தானே. சில சமயங்களில் கருப்பு ஆடே முதலில் போகும்... நாங்கள் கூட உஸ்தீனுக்கு இரை யாகி விட்டோம். சனியன் பிடிக்க! நல்ல புல் அறுவடை சமயத்தில் ஓய்வு நாளாம்!''

உஸ்தீன் கபடமற்ற சிரிப்புச் சிரித்தான்: ''என்ன, நான் தான் மீண்டும் தவறு செய்தவனா? ஏ நீண்ட தாடி! பழியை எல்லாம் என்மேலே போடாதே! பெண்கள் தொழுவதற்குப் போனால் அதற்கு நான் என்ன செய்வது? அந்தக் கிழட்டு அதமன்சுகோவாவும், இன்னும் ஒரு கிழட்டுப் பெண்ணும் தான் எல்லாரையும் இழுத்துக்கொண்டு நேராகக் கிளம்பி விட்டார்கள். அந்த இரண்டு பேரும்தான் அதிகாலையில்

இங்கு பேச வந்தார்கள்! இன்று புனிதர் கிலிக்கேரியா நாள். இன்று தொழப் போகாமல், புல் அறுக்கப் போகிறீர் களா பெண்களே. இது பெரிய பாவமல்லவா என்று சொன் னார்கள். ஆகவே எல்லாரும் போய்விட்டார்கள். அந்தக் கிழட்டுப் பெண்களிடம் கிலிக்கேரியா என்றால் என்ன என்று கேட்டேன். ஒருவேளை லூஷ்காவோ என்னவோ? அவள் உண்மையிலேயே புனிதமான தியாகி. இவன் அல்லது அவன் என்று யாரவது ஒருவருடன் வாழ்க்கை முழுவதும் சிரமப் பட்டாள்... அந்தக் கிழட்டுப் பெண்கள் போனதும் எனக்கு அப்படித்தான் பட்டது! அதமன்சுகோவா கிழவி தடியை எடுத்து என்னை அடிக்கக்கூடத் தயாராகிவிட்டாள். நல்ல வேளை அந்த நேரம் தான் பதுங்கிவிட்டேன். இல்லையேல் சரியாக டச்சு வாத்தளவு என் தலை புடைத்திருக்கும். நாய் வாலில் ரோமம் பற்றியிருப்பது மாதிரி அத்தனை பெண்களும் என்னைப் பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். அவர் களிடமிருந்து தப்பிப்பதே பெரும்பாடாகிவிட்டது... நம் மைப் பிடித்த யோகம்? இன்றைக்கு எனக்கு துரதிர்ஷ்டம் பிடித்த நாள்! இன்றைக்கு அந்தக் கிழவிகளோடு சண்டை போட்டிருக்கிறேன். அப்புறம் அந்த இளம் பெண்களோடு சண்டை போட்டேன். தலைவரோடும், ஒஸெத்ரோவோடும் இங்கு வம்பு அந்தத் தாடிக் கிழவரோடு. இப்படி எல்லாம் இன்று காலையிலிருந்து நடக்கிறது. இதெல்லாம் கொஞ்சம் வேலை தானே!''

''நீ இதையெல்லாம் செய்யலாம்! ஆனால் உனக்கு இதைச் சொல்லித் தர ஆளா வேண்டும்? இளைஞனாக இருந்த காலத்திலிருந்து யாருடனும், எதற்கெடுத்தாலும் சண்டைக்கோழி மாதிரி எகிறிப் பாய்வதே உன் வேலை யாகிவிட்டது, ஆனால் என் வார்த்தைகளைக் கேள்: சண் டைக் கோழியின் கொண்டையில் எப்பொழுதும் ரத்தம் சொட்டிக் கொண்டே இருக்கும்...'' என்று எச்சரித்தார் ஒஸெத்ரோவ்.

ஆனால் உஸ்தீன் இதைக் கேட்காதவனைப் போல இருந்தான். பயம் ஏதுமற்ற சலனமற்ற கண்களுடன் தவீ தவைப் பார்த்துக் கொண்டு, ''கிளர்ச்சிக்காரர்களுக்கு இன்று நல்ல நாள். அவர்கள் கால்நடையாகவும், குதிரை யிலும் வருகிறார்கள்... ரயில்வே பக்கத்திலிருந்தால் நீராவி என்ஜினில் ஏறிக்கொண்டும் நமக்கருகில் வந்திருப்பார்கள்!

ஆனால் தலைவரே, நல்ல முறையில் பிரச்சாரம் செய்ய நம்முடைய கிழவிகளிடமிருந்தான் படித்துக் கொள்ள வேண்டும்... அவர்கள் உன்னைக் காட்டிலும் வயதானவர்கள், தந்திரமுடையவர்கள், அநுபவமும் அதிகம், மிக அமைதியாகப் பேசுவார்கள், அன்பாகவும் பேசுவார்கள். மிகவும் நளினமாகப் பேசுவார்கள். இப்படிப் பேசித்தான் அவர்கள் காரியத்தைச் சாதிப்பார்கள்.ஒரு காரியம்கூட அவர்களுக்குப் பழுது போவதில்லை! ஆனால் நீ எப்படிச் செய்கிறாய்? நீ இங்கு வந்து சேருவதற்கு முன்பே உச்சக் குரலில் சத்தம் போட்டுக்கொண்டே வந்தாய். 'நீங்கள் ஏன் வேலை செய்யவில்லை?!' இப்படி இந்தக் காலத்தில் யாராவது சத்தம் போட்டுக்கொண்டு வரக் கண்டதுண்டா? சோவியத் ஆட்சியோ வந்துவிட்டது. மறைந்து கிடந்த தன்மான உணர்வை தங்களது நெஞ்சுக்குள்ளிருந்து தோண்டி எடுத்துவிட்டார்கள் சோவியத் மக்கள். இச்சமயத்தில் அவர்களிடம் போய் சப்தம் போடுவதை விரும்புவார்களா? தலைவரே! தவறான முறையில் அவர்களுடன் யாரும் உராய்வதை அவர்கள் விரும்புவதில்லை. ஜார் காலத்தில் கூட, அதாமான்கள், கஸாக்குளைப் பார்த்துக் சப்தம் போட மாட்டார்கள். மூத்தவர்களை அவமதித்துவிடக் கூடாதே என எச்சரிக்கையாக இருந்தனர். நீயும், நகூல்னவும் திருந்துவது நல்லது, காலமோ மாறிவிட்டது. உங்களது பழைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டால் நல்லது... இன்றைக்கு நீ வந்திராவிட்டால், நான் புல் அறுவடைக்குக் கிளம்பியிருப்பேன் என்று நினைக்கிறாயா? இல்லவே இல்லை! ஆனால் உனக்கே கடிவாளம் போட்டுக் கொண்டாய். கெட்ட உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, எங்களுடன் சீட்டு விளையாடவும் உட்கார்ந்தாய். நீ மிகவும் பொறுப்போடு பேசினாய். எனவேதான் நானும் இந்நிலையில் இருக்கிறேன்! இப்பொழுது என்னை எதுவும் செய்யச் சொல்லலாம். சீட்டு விளையாட்டிலிருந்து வைக்கோல்போர் அடுக்குவது வரை எதையும் செய்யத் தயார்.''

உஸ்தீன் பேசுவதை கவனமாகக் கேட்ட தவீதவ் தன்னைத்தானே வெறுக்கவும் கோபப்படவும் செய்தான். சில விஷயங்களில் முற்றிலும் நம்பத் தகுந்த இந்தக் கஸாக் சொல்வது உண்மைதான். கூடாரத்துக்கு வரும்பொழுதே தவீதவ் சத்தம் போட்டு சபித்துக்கொண்டே வந்திருக்கக்

கூடாது என்பது மட்டுமாவது உண்மைதானே. அதனால் தான், உஸ்தீன் சொன்னதைப் போல, ஒரு நல்ல தொடக்கத் துக்கே இடமில்லாது செய்து விட்டது. அந்திரேய் ரஸ்மி யோத்னவ் கூறுவது போல தன்னைத் தானே ஏன் அடக்கிக் கொள்ள முடியாது? தன்னையறியாமலே மக்களை நகூல் னவ் முறையில் நடத்தத் தொடங்கி விட்டதை தவீதவ் பகி ரங்கமாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதுவே அதன் விளைவு. யாரோ சில கிழவிகள், அவர்கள் விரும்பியதைப் பெற கவனமாக தந்திரமாக, நடந்துகொள்கிற முறையைப் பார்த்துப் படித்துக்கொள்ளும்படி புத்திமதி பெற்றிருக்க வேண்டும். மடைக் கம்பம்போல அது மிகத் தெளிவாகத் தெரிந்தது! அமைதியாகக் கூடாரத்துக்கு வந்து, இப்பொ ழுது ஒய்வெடுக்கக் கூடாது என்று சொல்லி, அவர்களை ஒத்துக்கொள்ள வைத்திருக்க வேண்டும். அதற்கு மாறாக அவர்களைப் பார்த்து இரைந்தான், ஒரு சமயம் சவுக்கைக் கூடத் தூக்கி விட்டான். கூட்டுப்பண்ணையைக் கட்டுகிற வேலையை ஒரு நொடியில் உடைத்து நொறுக்க இருந் தான். அவ்வாறு செய்திருந்தால் அவனுடைய கட்சி அட் டையை மாவட்டக் கட்சித் தலைமையிடம் ஒப்படைத் திருக்க வேண்டும்... அது உண்மையிலேயே அவனுக்கு ஒரு பெரும் பேரிடியாக இருந்திருக்கும்!

தன்னைத்தானே அடக்கிக் கொண்டிராவிட்டால், என்ன நடந்திருக்கக்கூடும் என்பதைப் புரிந்துகொண்டே, தவீத வுக்கு உடம்பே புல்லரித்து விட்டது. அதிர்ச்சியால் உடல் குலுங்கிற்று...

இந்த உணர்ச்சிகளில் மூழ்கிவிட்ட தவீதவ் சிதறிக் கிடந்த சீட்டுகளை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின் றான். உள்நாட்டுப் போர்க் காலத்தில் 'யோகச் சீட்டாட்ட விளையாட்டின்' மீது அவனுக்கிருந்த ஆசையையும் இப் பொழுது திடீரென்று நினைவுபடுத்திக் கொண்டான். ''இந்தத் தடவை கைக்கு வீண்சுமை தேடிவிட்டேன்! ஏற் கெனவே பதினாறு இருக்கும்போது அதற்குமேல் பத்து வாங்கிவிட்டேன்,' உண்மையாகத்தான்!'' தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமற் போனதை ஒப்புக் கொள்வது இனிமைதரும் விஷயம் அல்ல. உள்ளூர அதற்கு எதிர்ப்பும் இருந்தாலும், அவ்வாறு செய்ய அவனுக்குத் துணிவு ஏற்பட்டது. ஆனால் இவற்றிற்கும் அப்பால், ''நான்

உங்களிடம் அநாவசியமாக இரைத்திருக்க வேண்டாம். உஸ்தீன், அதுபற்றி நீ சொன்னது முழுக்க முழுக்க சரி!'' என்றான் தவீதவ். ''ஆனால் நீங்கள் வேலை செய்யாமல் இருந்தது என் மனத்தை மிகவும் வருத்தியது. இது உனக்கே தெரியவில்லையா? நீ என்னிடம் முணகக்கூட இல்லையே. நாம் ஒருவர் மாற்றி ஒருவர் குரைக்காமலேயே உடன்பாட்டுக்கு வந்திருக்கலாம். சரி, அது போதும்! ஏதாவது ஒரு வண்டியில் உங்களிடம் உள்ள வேகமாகச் செல்லும் குதிரையைப் பூட்டு. நெச்சாயெவ் அந்த வண்டியில் ஒரு ஜோடியை மாட்டு.''

தன்னுடைய வியப்பை அடக்காமல், ''பெண்களைத் துரத்தப் போகிறாயா?'' என்று கேட்டான் உஸ்தீன்.

''ஆமாம்.அந்தப் பெண்களைப் போய்ப் பார்த்து ஒப்புக்கொள்ள வைத்து, இன்று வேலை செய்ய வைக்கலாம் என முயற்சி செய்யப் போகிறேன்.''

''ஆனால் அவர்கள் உனக்குக் கீழ்ப்படிவார்களா?''

''பார்க்கலாம். ஏற்றுக்கொள்ள வைப்பது என்பது உத்தரவு ஆகாது.''

''சரி, எல்லா பெரிய கடவுள்களும், எல்லாச் சிறிய கடவுள்களும் சேர்ந்து உனக்கு உதவுவார்களாக! ஏய் தலைவரே, என்னையும் அழைத்துக்கொண்டு போக முடியுமா? என்ன?''

தவீதவ் தயக்கமின்றி ஒப்புக்கொண்டான்.

''சரி, வா போகலாம். ஆனால் அந்தப் பெண்களை ஏற்றுக்கொள்ள வைப்பதில் உதவுவாயா?''

உஸ்தீன் தன்னுடைய உதடுகளை நெளித்த வண்ணம், ''என்னுடைய உதவியாளர் உதவுவான். அவனையும் என்னோடு கூட்டி வருகிறேன்!'' என்றான்.

''எந்த உதவியாளர்?'' என்று திகைப்புடன் கேட்டான் தவீதவ்.

பதில் கூறுவதற்குப் பதிலாக, நேராக வண்டியை நோக்கிப் போனான் உஸ்தீன். வண்டியில் கிடந்த மேலாடைக் குவியலை விலக்கி விட்டு, சவுக்கு ஒன்றை எடுத்தான். அதன் கைப்பிடியில் தோல் பின்னியிருந்தது.

''இதோ, உதவியாளர் இருக்கிறான். மிக அருமையானவன், இல்லையா? அருமையாக ஒப்புக்கொள்ள வைக்கக் கூடியவன்! ஒரு சுண்டுச் சத்தம் கேட்டால் போதும். காரியம்

முடிந்துவிடும். இடது கைப் பேர்வழி என்றெல்லாம் கவலைப்படாதே!''

தவீதவ் முகத்தைச் சுளித்தான்: ''அதைக் கீழே போடு! பெண்கள் மீது ஒரு விரல் படக்கூட அநுமதிக்க மாட்டேன். ஆனால் அந்த உதவியாளனை உன் முதுகில் சோதிக்க மகிழ்ச்சியடைவேன்!''

ஆனால் உஸ்தீன் பதிலுக்குக் கிண்டலாக முறுவலித்தான்.

''ஒரு காலத்தில் எங்க தாத்தா பாயசத்தைக் குடிக்க முயற்சித்தார். ஆனால் துரதிர்ஷ்டம் அதற்குள் வீட்டிலிருந்த பாலை நாய் குடித்துவிட்டது... போரினால் முடமானவன் என்ற முறையில் எனக்குச் சலுகை உண்டு. சவுக்கடி எப்பொழுமே பெண்களைப் பெருக்க வைக்கவும் இசைய வைக்கவும் உதவுகிறது. இதை என் மனைவியிடமிருந்தே தெரிந்திருக்கிறேன். யார் யாரை அடிக்க வேண்டும்? பெண்களைத்தான்! எதற்காக திகைக்கிறாய்? ஒன்றிரண்டு பேரைத் தட்டினால் போதும், மற்றெல்லாருமே காற்றுப் போல வண்டிக்குள் உடனே ஏறிவிடுவார்கள்!''

பேச்சு முடிந்தது போல தெரியவே, குன்றுக்குப் போய் குதிரைகளைப் பிடித்துவர, ஒரு சாட்டைக் கம்பை வண்டியடியிலிருந்து எடுத்துக் கொண்டு கிளம்பினான். நெச்சாயெவும் மற்ற கஸாக்குகளும் அவனைப் பின் தொடர்ந்தனர். ஒஸெத்ரோவ் மட்டும் போகவில்லை.

''தீகன் கர்தேயிச், நீ ஏன்புல் அறுவடைக்குப் போகவில்லை?'' என்று கேட்டான் தவீதவ்.

''உஸ்தீனுக்காக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். முடியுமா?''

''சொல்லேன்.''

''அவன்மீது கோபப்படாதே. அவன் ஒரு முட்டாள். கடவுள் சத்தியமாக அப்படித்தான்! அவன் காதிலே ஈ பட்டால் போதும், முழு முட்டாள் ஆகிவிடுகிறான்'' என்று ஒஸெத்ரோவ் அவனுக்காகப் பரிந்து பேசினான்.

ஆனால் தவீதவ் அவனைத் தடுத்து விட்டான். ''அவன் ஒன்றும் முட்டாள் இல்லை. கூட்டுப்பண்ணை முறைக்கே அவன் பகிரங்க எதிரி! இதற்கு முன்னர் இத்தகையவற்றை எதிர்த்து நாம் சண்டையிட்டதைப் போலவே இவனை எதிர்த்தும் போராடுவோம்!''

''எதிரியா?'' என்று வியப்போடு கேட்டான் ஒஸெத்ரோவ். ''நான் சொல்வதைக் கேள்: அவனுக்குக் கோபம் வந்துவிட்டால், என்ன செய்கிறோம் என்பதே அவனுக்குத் தெரியாது. அவனை நான் அவனுடைய இளமையிலிருந்து அறிவேன். அவனைத் தொட்டால் சுர்ரென்று வந்து விடும். புரட்சிக்கு முன்னர், நமது கிராமத்துப் பெரியவர்கள் அவனை நூற்றுக்கணக்கான தடவைகள் நையப் புடைத்திருக்கிறார்கள். அவனை அடித்த அடியில் அவனால் உட்காரவும் முடியாது, நிற்கவும் முடியாது. இருந்தும் பொருட்படுத்த மாட்டான்! ஒரு வார காலம் காற் சட்டையைக் கொஞ்சம் 'தொள தொள' என்று மாட்டிக்கொண்டு திரிவான். அது முடிந்தவுடன் பழையபடியும் ஆரம்பித்துவிடுவான். யாரையும் சும்மாவிட மாட்டான். யாரிடமும் குறை கண்டு பிடித்துக்கொண்டே இருப்பான்! நாய் ஈயைப் பிடிக்கப் பதுங்குவது மாதிரி குறை கண்டு பிடிப்பதில் முனைந்திருப்பான்! கூட்டுப்பண்ணைக்கு அவன் ஏன் விரோதியாக இருக்க வேண்டும்? அவன் வாழ்க்கை முழுவதுமே பணக்காரர்கட்கு ஒரு முள்ளைப்போல் இருந்து வந்தவன். அவன் எப்படி வாழ்கிறான் என்பதையும் பார்! அவன் குடிசை இற்று விழப்போகிறது. அவன் சொத்தெல்லாம் ஒரு பசுவும், தொத்தல் ஆடுகளும் தான். எப்பொழுதுமே அவன் கையில் பணம் இருந்ததில்லை. இப்பொழுதும் இல்லை. ஒரு பையிலே குழவி. அடுத்த பை ஓட்டை. அது தான் அவன் சொத்து! இப்பொழுது அவன் மனைவிக்கு நோய். குழந்தைகளும் ஒரே தொல்லை. வறுமை, அவனை மிகவும் நொறுக்கிக்கொண்டிருக்கிறது.. இதனால்தான் எல்லார் மீதும் மோதுகிறான் போலும். இவனைப் போய் எதிரி என்று கூறுகிறாயே. உளறு வாயன், அவ்வளவுதானே ஒழிய எதிரியல்ல.''

''அவன் உனக்குச் சொந்தக்காரனா? அவனுக்காக நீ ஏன் மன்றாடுகிறாய்?''

''அதனால்தான் அவன் எனக்கு சகோதரன் பிள்ளை.''

''அதுதான் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டாயா?''

''அதுவும் ஒருவகையில் உண்மைதான், தோழர் தவீதவ். அவன் கழுத்தைப் பிடித்து ஆறு குழந்தைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன, ஆனால் அவன் நாக்கு மட்டும் மாவரைக்கும் கல் மாதிரி இருக்கிறது. நானும் பல முறை

'உஸ்தீன், வாய்க்குக் கடிவாளம் போட்டுக் கொள்! தவறாகப் பேசி மாட்டிக்கொள்ளாதே! ஏதாவது ஊளறிக் கொண்டிராதே. எதையாவது சொல்ல வேண்டாததைச் சொல்லி மாட்டிக் கொண்டு சைபீரியாவுக்குப் போய் விடாதே. அப்புறம் கைகாலை உதறி அழுது பயனில்லை!'' என்று சொன்னேன். ஆனால் அதற்கும் அவன் என்ன சொல்கிறான் தெரியுமா? 'சைபீரியாவில் இருக்கும் மக்கள் மற்ற மக்களிடமிருந்து அதிகம் வேறுபட்டவர்களா? அந்தக் குளிர் என்னை ஒன்றும் செய்துவிடாது. ஏனெனில் ஏற்கெனவே என் தோல் அதிலெல்லாம் பழக்கப்பட்டுப்போய் விட்டது!' என்கிறான். இப்படிப்பட்ட முட்டாளோடு என்ன செய்வது? ஆனால் அவனுக்காக அவன் குழந்தைகள் எதற்காகச் சிரமப் பட வேண்டும்? அவர்களை வளர்ப்பதுதான் கஷ்டம். ஒரு நொடியில் அநாதைகளாக்குவது சுலபம்...''

தவீதவ் கண்களை மூடி ஆழ்ந்து சிந்தித்தான். அந்த நேரத்தில் தன்னுடைய துரதிர்ஷ்டம் பிடித்த தனது இளமைக்கால சோக வாழ்வை நினைத்துக் கொண்டிருந்திருந்தானா?

''இவனுடைய முட்டாள்தனமான பேச்சுக்காக அவன் மீது கோபப்படாதே'' என்று மீண்டும் வற்புறுத்தினான் ஒஸெத்ரோவ்.

தவீதவ் தன் முகத்தைக் கையால் தடவிக்கொண்டான். அவன் தூக்கத்திலிருந்து விழித்து எழுதுவது போலிருந்தது.

''இங்கே கவனி தீகன் கர்தேயிச்'' என்று மெதுவாகத் தாழ்ந்த தொனியில் பேசத் தொடங்கினான் தவீதவ். ''நான் உஸ்தீனை ஒன்றும் தற்பொழுது தொடப் போவதில்லை. அவனால் என்னென்ன வேலைசெய்ய முடியுமோ அவற்றை அவன் கூட்டுப்பண்ணையில் செய்யட்டும். அவன் மீது அதிகமான பாரத்தைச் சுமத்த மாட்டோம். அவனால் முடிந்ததை அவன் செய்யட்டும். ஆண்டு இறுதியில் வேலை நாட்கள் குறைந்தால் அதற்கும் நாம் உதவி செய்வோம். நம்முடைய பொது தானியத்திலிருந்து அவனுடைய குழந்தைகளுக்கென்று கொஞ்சம் தனியாக ஒதுக்குவோம். புரிகிறதா? ஆனால் நீ அவனைத் தனியாகப் பார்த்து, இங்குள்ள மக்களைக் கிளப்பிவிட்டுத் தவறான பாதையில் திருப்பி ஏதாவது குறும்பு செய்தால் மாட்டிக்கொள்வான் என்பதைத் தெளிவுபடுத்தி விடு. காலம்கடந்து போகும்முன்

புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளச் சொல்! இனிமேல் அவனுடன் எனக்கு விளையாட்டு கேலி ஒன்றும் இல்லை. நான் உஸ்தீனுக்காகக் கவலைப்படவில்லை. ஆனால் அவனுடைய குழந்தைகளுக்காகக் கவலைப்படுகிறேன்!''

''தோழர் தவீதவ், இந்த அன்பான, ஆறுதலான வார்த்தைகளுக்காக நன்றி! உஸ்தீன் மீது வெறுப்புக் கொள்ளாதிருப்பதற்கும் நன்றி'' என்று தலைவணங்கிக் கூறினான் ஒஸெத்ரோவ்.

ஆனால் தவீதவ் திடீரென்று சீறிப்பாய்ந்தான்: ''எதற்காக என்னிடம் தலைவணங்குகிறாய்? நான் என்ன பலி பீடமா? நான் சொன்னதைச் செய்வேன். நீ வணங்காமலே அதைச் செய்வேன்!''

''இது ஒரு பழைய பழக்கம். யாருக்காவது நன்றி சொன்னால் தலைவணங்க வேண்டும்'' என்று கௌரவத்தோடு சொன்னான் ஒஸெத்ரோவ்.

''அப்படியானால் சரி கிழவனே. இதைச் சொல்லு: உஸ்தீனுடைய குழந்தைகள் சட்டை துணி மணிகளுக்கு என்ன செய்கிறார்கள்? எத்தனை குழந்தைகள் பள்ளிக்குப் போகின்றன?''

''மாரிக் காலத்தில் கணப்பு அடுப்பருகேதான் அத்தனை குழந்தைகளும் கிடக்கும். வெளியில் போக அவர்களுக்குத் துணி ஏது? கோடைக்காலத்தில் கந்தையோடு திரிவார்கள். குலாக்குகளிடம் சொத்துப் பறிமுதல் செய்தபொழுது கொஞ்சம் துணி இவர்களுக்கும் கிடைத்தது. ஆனால் இவர்களுக்கு அவை போதவில்லை. கடந்த மாரிக்காலத்தில் அவனுடைய கடைசிப் பையனையும் பள்ளியிலிருந்து அழைத்து வந்துவிட்டான். ஏனெனில் அவன் போட்டுக்கொள்ள சட்டையோ, செருப்போ இல்லை. பையனது வயதும் கூடிக்கொண்டே போகிறது. இப்பொழுது பன்னிரண்டு வயதிருக்கும். அவன் நாடோடி போல் கந்தை உடையில் வெளியே போக வெட்கப்படுகிறான்...''

தவீதவ் பின்தலையைச் சொறிந்து கொண்டே அடுத்த பக்கம் திரும்பிவிட்டான். ''சரி, புல் அறுக்கப் போ.''

அவனது குரலில் மகிழ்ச்சியற்ற தொனி கரகரத்தது... நெளித்துக் கொண்டு நின்ற தவீதவின் தோள்களைப் பார்த்துக் கொண்டே, மீண்டும் தலைவணங்கிவிட்டு,

ஒஸெத்ரோவ் புல் அறுப்பவர்களை நோக்கி மெல்ல நடந்தான்.

இந்த உணர்விலிருந்து தவீதவ் மீண்ட போது ஒஸெத்ரோவ் போவதைப் பார்த்துக்கொண்டே நின்றான். ''இந்தக் கஸாக்குகள் மிக வேடிக்கையான மனிதர்கள்!'' என்று நினைத்துக் கொண்டான். ''கொஞ்சம் முயன்றால் உஸ்தீன் போன்ற ஆட்களைப்பற்றி முழுக்கத் தெரிந்துகொண்டு விடலாம். இவன் உண்மையிலேயே எதிரிதானா? வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டும் வெறும் முரடன் மட்டும் தானா? முதலில் வாய்க்கு வந்ததைக் கொட்டி விடுவானோ? ஒவ்வொரு நாளும் எனக்கு ஒரு குறுக்கெழுத்துப் போட்டி நடத்துகிறார்கள்... அவற்றை நான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நான் புரிந்து கொள்ளத் தான் போகிறேன்! இவர்களோடு சேர்ந்து இதற்காக ஒரு மூடை உப்பைச் சாப்பிட்டாலும் சரி, விடப் போவதில்லை, இது உண்மை!''

இவனுடைய சிந்தனைகள் குதிரைமீது பாய்ச்சலில் வந்த உஸ்தீனால் நிறுத்தப்பட்டது. அவன் கையில் இன்னொரு குதிரையையும் பிடித்து வந்திருந்தான்.

''ஒரு நல்ல வண்டியை எதற்காக நாம் உபயோகிக்க வேண்டும், தலைவரே? நாடோடிகள் வண்டியையும் பூட்டிக் கொள்ளலாமே. பெண்கள் திரும்பிவர ஒப்புக்கொண்டாலும், இந்த வண்டி அதிக ஆட்டம் இல்லாமல் இருக்கும்!'' என்றான் உஸ்தீன்.

''இல்லை, நல்ல வண்டியை மாட்டு'' என்றான் தவீதவ்.

இதற்குள்ளாக எல்லாவற்றையும் யோசித்து வைத்திருந்தான் அவன். அந்த நல்ல வண்டி வந்தால் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று நினைத்தான் தவீதவ்.

சுமார் நாற்பது நிமிட வேகமான ஓட்டத்திற்குப் பிறகு, விழாக் கோலத்தில் ஆடையணிந்திருந்த பெண்கள் கூட்டம், ஒரு சிற்றோடையின் மறுகரை மேட்டின்மீது நடந்து போய்க் கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

உஸ்தீன் தவீதவோடு சமமாக வந்து சேர்ந்தான்.

''தலைவரே, உறுதியாக நில்! இப்பொழுது பெண்கள்

அடுத்த சோதனையை உனக்குக் கொடுக்கப் போகிறார்கள்!..''

'' 'பார்க்கலாம்!' என்று குருடன் சொன்னாற்போல இல்லையா?'' என்று தவீதவ் உற்சாகமாகச் சொன்னான். சவுக்கால் குதிரையை லேசாகத் தொட்டுக் கொண்டே.

''உனக்குப் பயமாக இல்லையா?''

''நான் ஏன் பயப்பட வேண்டும்? அவர்கள் என்ன பன்னிரண்டு பேர் அல்லது இன்னும் ஒரு சிலர் அதிகம் இருக்கலாம்.''

''நானும் அவர்களுக்கு உதவினால்?'' என்றான் உஸ்தீன் புதிர்போட்டு முறுவலித்துக்கொண்டே.

தவீதவ் அவன் முகத்தை உற்று நோக்கினான். உண்மையாகச் சொல்கிறானா? விளையாட்டுக்குச் சொல்கிறானா என்பது புரியவில்லை.

''அப்படி இருந்தால் நிலைமை எப்படி ஆகும்?'' என்று மீண்டும் கேட்டான் உஸ்தீன். இப்பொழுது அவன் முறுவலிக்கவே இல்லை.

தவீதவ் குதிரைகளைத் தயக்கமற்று நிறுத்தினான். நாடோடி வண்டியை விட்டிறங்கி நல்ல வண்டியை நோக்கி நடந்தான். அவனது வலது பைக்குள் கையை விட்டு, பிஸ்டலை எடுத்தான். அது நெஸ்தெரேன்கோ கொடுத்தது. அதை உஸ்தீனின் முழங்கால் மீது வைத்தான்.

''இதை எடுத்து எங்காவது வை. அப்பொழுதுதான் இதை நான் பயன்படுத்தாமல் இருப்பேன். நீ பெண்கள் பக்கம் சேர்ந்தால், நான் என் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல், உன் தலையில் குண்டு பாய்ச்ச நேரிடலாம்.''

பிறகு உஸ்தீனுடைய வியர்த்த கையிலிருந்த சாட்டையையும் பக்குவமாகப் பிடுங்கி சாலைக்கு அப்பால் வீசி எறிந்தான்.

''இப்பொழுது நாம் போகலாம்! ஓர் அடையாளம் போட்டுவிட்டு வா, உஸ்தீன் மிஹாய்லவிச்; எந்த இடத்தில் உன் சாட்டை விழுந்தது என்பதையும் கவனித்துக்கொள். நாம் திரும்பும் பொழுது எடுத்துக் கொள்வோம், அது உண்மை! நாம் முகாமுக்குத் திரும்பியவுடன் என் பிஸ்டலைக் கொடுத்துவிடு. போகலாம்!''

பெண்களை நெருங்கியவுடன், நாடோடி வண்டியை வளைத்து ஓட்டி, அவர்கள் முன்பாக பாதையில் மடக்கி

நிறுத்தினான் தவீதவ். அந்த வண்டிக்கு அடுத்தாற்போல் நல்ல வண்டியை உஸ்தீன் நிறுத்தினான்.

''வணக்கம் அழகான பெண்களே!'' என்று சர்ச்சுக்குச் சென்றுகொண்டிருந்த பெண்களுக்கு முகமன் கூறினான் தவீதவ்.

''இது கேலி அல்ல என்றால், உனக்கும் எங்கள் வணக்கம்'' என்றாள் அவர்களுள் மிகவும் சுறுசுறுப்பான பெண்ணொருத்தி.

தவீதவ் வண்டியை விட்டுக் குதித்து, குல்லாயைக் கழற்றி, தலைவணங்கினான்: ''கூட்டுப்பண்ணையின் சார்பில், அதன் பெயரால் நீங்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய ஆட்கள் தான் என்னை அனுப்பினார்கள். அவர்கள் ஏற்கெனவே புல்லறுக்கத் தொடங்கி விட்டார்கள்.''

''நாங்கள் கோயிலுக்குப் போகிறோம்.விளையாடுவதற்கு அல்ல!'' ஒரு கிழட்டுப் பெண் வியர்த்த முகத்துடன் கத்தினாள்.

தவீதவ், கசங்கிய தனது குல்லாயை மார்பில் வைத்து இரு கைகளாலும் அழுத்தினான்.

''புல் அறுவடைக்குப் பின்னர் நீங்கள் எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு தொழலாம். ஆனால் இது சரியான நேரமல்ல. மேகங்கள் கூடுவதைப் பாருங்கள். இன்னும் ஒரு வைக்கோற் போர் கூடப் பிடிக்கவில்லை. எல்லாத் தாளும் கெட்டுவிடுமே! எல்லாம்தான். தாள் பூராவும் கெட்டுவிட்டால், மாரிக்காலத்தில் கால்நடைகள் எல்லாம் செத்துவிடும். என்னைக் காட்டிலும் உங்களுக்குத்தான் இது நன்றாகத் தெரியும்!''

''எங்கே நீ மேகங்களைப் பார்த்தாய்?'' என்று ஏளனத்தோடு பதிலடி கொடுத்தாள் ஓர் இளம்பெண். ''ஒரு துணுக்கைக்கூட வானில் காணோமே!''

''மழைமானி மழைவரும் எனக் காட்டுகிறது, மேகங்களைப்பற்றிக் கவலையில்லை''என்று வாதிட்டான் தவீதவ். ''மழை நிச்சயமாக வரப்போகிறது! என்னோடு திரும்பி விடுங்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீங்கள் போய் தொழலாம். இதனால் என்ன வித்தியாசம் ஏற்படப் போகிறது? வண்டியில் ஏறுங்கள். காற்றைப் போல நான் ஓட்டிச்

செல்கிறேன்! அருமை பெண்களே, குதித்தேறுங்கள். இழப்பதற்கு நேரமில்லை.''

தவீதவ் கூட்டுப்பண்ணைப் பெண்களிடம் பக்குவமான சொற்களைப் பயன்படுத்தி வாதிட்டான். அவர்களுக்குள் ஊசலாட்டம் கண்டது. குசுகுசுவென்று அவர்களுக்குள் பேசத் தொடங்கினர். தவீதவ் முற்றாக அதிசயிக்கும் வகையில், உஸ்தீன் இந்தச் சமயத்தில் அவனுக்குத் துணை வந்தான். உயரமான, கட்டான உடலுடைய நெச்சாயெவின் மனைவியின் பின்னால் வந்து, அவளைக் கைகளில் தூக்கிக் கொண்டு, தன்மீது விழுகின்ற அடியையும் பொருட்படுத்தாமல், வண்டியை நோக்கி ஓடினான். வண்டியின் பின் பக்கத்தில் மெதுவாக இறக்கிப் போட்டான். பெண்கள் அலறியபடி சிதறி ஓடினர்.

''நாடோடி வண்டிக்குள் நீங்களாகவே ஏறிவிடுங்கள். இல்லையேல் நான் சாட்டையை எடுக்க நேரிடும்!'' என்று உரத்த குரலில் உறுமினான் உஸ்தீன். கண்களைப் பயங்கரமாக உருட்டி விழித்தான். பிறகு அவனாகவே சிரித்துக் கொண்டான். ''நீங்களே ஏறிவிடுங்கள். உங்களை நான் தொடமாட்டேன். ஆனால் சீக்கிரம் ஏறுங்கள், ஏ நீண்ட வால்களே! சீக்கிரம்!''

நெச்சாயெவின் மனைவி உயரமாக நின்று கொண்டு, தனது தலையிலிருந்த முகத் திரைத் துணியைச் சரிப்படுத்திக் கொண்டு, ''சீக்கிரம் ஏறுங்கள் பெண்களே! உங்களுக்காக நான் காத்திருக்க வேண்டுமா? இது என்ன நேரம்? பாருங்களேன்: நமது கூட்டுப்பண்ணைத் தலைவரே வந்திருக்கிறார்!'' என்று உரத்த குரலில் கத்தினாள்.

மூன்று பக்கங்களில் இருந்தும் பெண்கள் நெருக்கியடித்துக்கொண்டு வந்தார்கள். தவீதவை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டே, அலட்டிக் கொள்ளாமல் வண்டியில் ஏறினார்கள். இரண்டே இரண்டு கிழவிகள் மட்டுந்தான் சாலையில் நின்று கொண்டிருந்தனர்.

''துபியான்ஸ்கி வரை நாங்கள் தனிமையாக நடக்கவா, ஏ சனியனே!'' என்று கத்தினாள் கிழவி அதமன்சுகோவா. தவீதவின் விழிகளைப் பிடுங்கி விடுவதைப்போல் வெறுப்புடன் உற்று நோக்கினாள்.

தவீதவ் மாலுமிக்கு உரிய தனது எல்லா வலிமையையும் வரவழைத்துக் கொண்டு, குதிகால் படபடக்க,

தலை வணங்கி, ''நீங்கள் ஏன் நடக்க வேண்டும், பாட்டிகளே? இந்த நல்ல வண்டி உங்களுக்காகவே கொண்டு வரப்பட்டது. உள்ளே ஏறுங்கள், போங்கள். முழுக்க, தொழுது விட்டு வாருங்கள். உஸ்தீன் மிஹாய்லவிச் வண்டி ஓட்டிக் கொண்டு வருவான். வழிபாடு முடியும்வரை அவன் காத்திருந்து, பின்னர் ஊருக்கு அழைத்து வருவான்'' என்றான் தவீதவ்.

இந்தக் கிழவிகளின் ஒப்புதலுக்காகக் காத்துக் கொண்டிருக்க முடியவில்லை. நேரம் அவ்வளவு அரிதாக இருந்தது! அவர்கள் ஒவ்வொருவரையும் கையால் பிடித்து, நல்ல வண்டியை நோக்கி இழுத்துச் சென்றான் தவீதவ். அதமன்சுகோவ் கிழவி பின்னால் தொங்கினாள். ஆனால் உஸ்தீன் மிக மரியாதையாகப் பின்னாலிருந்து தள்ளிக் கொண்டு போனான். எப்படியோ சமாளித்து கிழவிகளை வண்டியில் ஏற்றிவிட்டனர். சாட்டையை எடுத்து வண்டியை ஓட்டும் முன்னர், ''தவீதவ், நீ சரியான தந்திரசாலி!'' என்று உஸ்தீன் மிகவும் அமைதியாகச் சொன்னான்.

அவன் தலைவரைப் பெயர் சொல்லி அழைப்பது இது தான் முதல் தடவை.

இதை தவீதவ் கவனித்து லேசாகச் சிரித்தான். தூக்கமற்ற இரவு, ஓய்வற்ற கடந்த சில மணி நேர வேலை, இவையனைத்தும் அவனை அமுக்க அப்படியே அசந்து தூங்கி விட்டான்.

அத்தியாயம் பதினான்கு

''இந்த ஆண்டு அருமையான புல் அறுவடை! மழை பெய்து சகலத்தையும் கெடுக்காமல் இருந்தால், இப்படியே வறட்சியாக இருக்கும்போதே நாம் தாள் அறுவடையை முடித்துவிட்டால் நமக்கு ஏராளமாகத் தீவனம் கிடைத்து விடும்!'' தவீதவின் சிறிய அலுவலகத்திற்குள் நுழைந்து அங்கிருந்த பெஞ்சின்மீது களைப்புடன் உட்கார்ந்த அகஃபோன் துப்த்ஸோவ் கூறினான்.

கொஞ்சம் வசதியாக உட்கார்ந்த பின்னர், சாயம் வெளிறிய தனது குல்லாயைப் பக்கத்தில் போட்டான். அம்மைத் தழும்பு விழுந்து வெயிலில் கன்றிப்போன முகத்தில் படர்ந்திருந்த வியர்வையை, தனது சட்டையின் கை நுனியால்

துடைத்துவிட்டுக் கொண்டான். தவீதவ், ஒஸ்த்ரவ்னோவ், கணக்கன் ஆகியோரைப் பார்த்து முறுவலித்துக்கொண்டே பேசத் தொடங்கினான்.

''தலைவரே வணக்கம். உங்களுக்கும் தான் எழுத்தர்களே!''

''விவசாயி துப்த்ஸோவ் வந்துவிட்டார்!'' என்றான் கிண்டலாகக் கணக்கன். ''இவரை நன்றாக கூர்ந்து நோக்குங்கள், தோழர் தவீதவ்! அகஃபோன், நீ விவசாயி என்று எப்படி அழைப்பது?''

''அப்படியானால், நான் யார், என்னவென்று தான் நினைக்கிறாய்?'' என்று கணக்கனை முறைத்துப் பார்த்து துப்த்ஸோவ் கேட்டான்.

''எப்படியானாலும் சொல்லிக்கொள். ஆனால் ஒரு விவசாயி என்று மட்டும் சொல்லாதே.''

''பிறகு என்னவாம்?''

''நான் உண்மையாகவே சொல்ல விரும்பவில்லை...''

துப்த்ஸோவின் அச்சுறுத்தும் கருத்த முகம் மேலும் கோபத்தால் கறுத்தது. பொறுமை இழந்தவனாக, ''நம்மிடம் உன்னுடைய தந்திரம் ஒன்றும் வேண்டாம். நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாயோ அதை அப்படியே சொல். சீக்கிரம் சொல். தொண்டையில் அடைபட்டுக் கொண்டது என்றால் முதுகிலே ஒன்றிரண்டு தட்டுத் தட்டி விடுகிறேன். பிறகு பேசலாம்!''

''நீ ஒரு சரியான நாடோடி!'' என்று உறுதியாகச் சொன்னான் கணக்கன்.

''நான்—நாடோடியா? உன்னை எது இப்படிச் சொல்ல வைத்தது?''

''எனக்குக் காரணங்கள் உண்டு.''

''கொசுவுக்குக்கூடக் கடிப்பதற்குக் காரணம் உண்டு. இப்பொழுது உன்னுடைய தரங்கெட்ட தாக்குதலுக்கான காரணத்தைச் சொல்லு.''

கணக்கன் கண்ணாடியைக் கழற்றிவிட்டு, பென்சிலால் காதைச் சுரண்டினான்.

''அகஃபோன், நீ கோபப்படாதே. பொறுமையாக நான் சொல்வதைக் கொஞ்சம் கேள். விவசாயிகள் வயலில் தான் வேலை செய்வார்கள். இல்லையா? ஆனால் நாடோடிகள் ஊர் சுற்றுவார்கள், பிச்சை எடுப்பார்கள், சமயம்

கிடைத்தால் திருடுவார்கள்... அப்படித் தான் நீயும். எதற்காக ஊருக்கு வந்தாய்? நிச்சயமாகத் திருடுவதற்கல்ல என்று நினைக்கிறேன். ஏதோ கேட்பதற்காக வந்திருக்கிறாய். அப்படித்தானே?''

''ஏதாவது கேட்கவா?..'' சந்தேகம் கலந்த தொனியில் கேட்டான் துப்த்ஸோவ். ''நான் உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கக் கூடாதா? சும்மா இந்த ஊருக்கு வரக் கூடாதா? ஏதாவது ஒரு வேலையாகத்தான் வர வேண்டுமா? ஏ உருண்டைக் கண்ணா! என்னை இந்த ஊருக்குள் வரவிடாமல் தடை செய்யப் போகிறாயா?''

''ஆனால் உண்மை சொல், எதற்காக வந்தாய்?'' என்று முறுவலித்துக்கொண்டே கேட்டான் தவீதவ்.

ஆனால் துப்த்ஸோவ் இது கேளாதவன் போல பாவனை செய்தான். அந்த இருண்ட சிறிய அறையைச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு ஒரு பொறாமைப் பெருமூச்சு விட்டான்:''சில பேர், சொகுசாக வாழ்கிறார்கள்! நல்ல கனத்த மெத்தையில் அவர்கள் உட்கார்ந்திருக்கலாம். இங்கே கதவை எல்லாம் சாத்தி தாழ்போட்டுவிட்டு, தரைக்குக் குளிர்ந்த நீர் தெளித்து உட்கார்ந்திருக்கிறார்கள். இருட்டாகவும் குளிராகவும் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். ஒரு ஈ, ஒரு கொசு இருக்க வேண்டுமே... ஆனால் ஸ்டெப்பி புல்வெளிக்குப் போனால் காலை முதல் மாலை வரை வெயில் சுள்ளென்று கொளுத்துகிறது. பகலில் கொசு மாட்டைக் கடிப்பதுபோல கடித்து ரத்தத்தை ஒழுக விடுகிறது. பிடித்துக்கொண்டு விடாமல் தொடருகிற மனைவி மாதிரி, ஈ ஒட்டிக்கொள்கிறது. இரவிலோ கண்ணை ஒரு நொடி மூட முடியாது. அவ்வளவு கொசுக்கள். அவை சாதாரண கொசுக்கள் அல்ல. நம்முடைய காவற் காரர்கள் அளவு அது இருக்கும் போலிருக்கிறது! இதை எல்லாம், நம்பமாட்டீர்கள் இளைஞர்களே! ஒவ்வொரு கொசுவும் ஒரு சிட்டுக்குருவி அளவு இருக்கிறது, அவை நம்முடைய ரத்தத்தைக் குடித்தவுடன் சிட்டுக்குருவியைக் காட்டிலும் பெரியவை ஆகி விடுகின்றன. அதுதான் உண்மை! அந்தக் கொசுக்கள் மஞ்சள் நிறத்திலிருக்கின்றன. ஓர் அங்குலநீளக் கொடுக்கு இருக்கிறது. கடவுள் சத்தியமாக! இந்தத் தொல்லைகளை எல்லாம் அநுபவித்து, இவை குடிக்கும் ரத்தத்தையும் கணக்கெடுத்தால், அப்பப்பா! உள்நாட்டுப்

போரில் நாம் சிந்திய ரத்தத்தைக் காட்டிலும்கூட அதிகம் என்பேன்!''

''அகஃபோன், கதையை நன்றாகச் சொல்லத் தெரிந்திருக்கிறாய்! என்று குலுங்கிக் கொண்டே ஒஸ்த்ரவ்னோவ் சொன்னான். ''நமது ஷ்சுக்கார் தாத்தாவைக்கூட இதிலே நீ தோற்கடித்து விடுவாய்.''

''நாய் மாதிரி நான் ஏன் கதை சொல்ல வேண்டும்? உனக்கு என்ன? இந்தக் குளிரான இடத்தில் பஞ்சு மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாய். நீயே சற்று ஸ்டெப்பியில் போய் நீயாகவே பார்த்துவா''. என்று திருப்பி பதிலடி கொடுத்தான் துப்த்ஸோவ். ஆனால் அவனது பேய்க் கண்களில் இன்னும் சிரிப்புத் தேங்கி நின்றது.

இப்படிப்பட்ட தொல்லைகள், சோதனைகள் இவற்றை தொடர்ந்து அதே நாடக பாணியில் சோகக் கதையை அவன் நீட்டிச் சொல்லியிருப்பான். ஆனால் தவீதவ் குறுக்கிட்டு, ''போதும்! சும்மா அழுது கொண்டு வந்து எங்கள் கண்களில் மண்ணைத் தூவப் பார்க்காதே. எதற்காக வந்தாய் என்பதைச் சொல். சும்மா பேத்தாதே. உனக்கு ஏதாவது உதவி வேண்டுமா?'' என்று சொன்னான் அவன்.

''அது எந்தத் தீங்கும் செய்யாது...''

''நீ யாரைத் தொலைத்துவிட்டாய், அநாதைக் குழந்தையே? அப்பா, அம்மாவையா?''

''கேலி செய்வதிலே நீ கெட்டிக்காரன் தான் தவீதவ். ஆனால் நம் பிறப்பிலேயே மகிழ்ச்சியும் சிரிப்பும் கலந்து தானே இருக்கிறது.''

''சரி, கண்டிப்பாகக் கேட்கிறேன்: உனக்கென்ன தேவை? ஆட்கள் குறைகிறார்களா?''

''ஆட்களும் குறைவுதான். பிளாக்தார்ன் மேட்டுப்பக்கம், நீயே பார்த்திருக்கிறாயே, அங்கு அருமையாகப் புல் வளர்ந்திருக்கிறது. ஆனால் அந்த சாய்வு மேட்டில் எந்திரத்தைப் பயன்டுத்த முடியாது. கையாலேயே இயக்கும் புல்வெட்டி எந்திரங்களும் எங்களிடம் குறைவு. அந்தப் புல் வீணாகப் போகிறதே என்பதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது!''

''முதல் குழுவிடமிருந்து இரண்டு மூன்று புல்வெட்டி எந்திரங்களை வாங்கித் தர வேண்டும் எனக் கேட்கிறாயா?'' என்று குறை கூறுவதுபோலக் கேட்டான் தவீதவ்.

துப்த்ஸோவ் பெருமூச்சுவிட்டுவிட்டு தவீதவைக் கவலையோடு பார்த்தான். கொஞ்ச நேரம் கழித்துப் பழைய படியும் பெருமூச்சு விட்டுக்கொண்டு, ''நான் ஒன்றும் மறுக்க மாட்டேன். கிழவிக்கு ஒரு கண் குருடன் புருஷனாகக் கிடைத்தால் வேண்டாம் என்பாளா?.. அதை நான் எப்படிப் பார்க்கிறேன் என்றால் கூட்டுப்பண்ணையில் நாம் அனைவரும் பொதுவான வேலையைத்தானே செய்கிறோம். எனவே, இந்த உதவியை மற்றவர்களிடம் இருந்து பெறுவதிலே என்ன தவறு? என்ன சரிதானே?''

''ஆமாம், அப்படித்தான். ஆனால் மற்றவர்களின் குதிரையை வைத்து இரண்டு நாள் புல் அறுவடை செய்வது வெட்கமான செயல் இல்லையா?''

''மற்றவர்களுடையது என்கிறாயே, அதன் பொருள் என்ன?'' என்று வியப்போடு கேட்ட துப்த்ஸோவ் பேச்சைக் கேட்டு தவீதவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''என்ன, உனக்குத் தெரியாதோ? லூபிஷ்கினுடைய இரண்டு ஜோடிக் குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்ததை ஓட்டிக்கொண்டு போனது யாரென்று உனக்குத் தெரியாதோ? நமது கணக்கன் சொல்வது சரியாகத்தானிருக்கும். உன்னிடம் கொஞ்சம் நாடோடியின் புத்தி இருக்கத்தான் செய்கிறது. ஏதாவது சாமான் கேட்பதிலே உனக்கு ஆசை, அதுவும் மற்றவர்களின் குதிரையை ஓட்டிச் செல்வதென்றால் இன்னும் அதிக ஆசை...''

துப்த்ஸோவ் மறு பக்கம் திரும்பி அருவருப்புடன் துப்பினான்: ''அவை குதிரைகளா? அந்த முட்டிதட்டிய குதிரைகள் எங்கள் முகாமுக்குள் எப்படியோ வந்து விட்டன. யாரும் ஓட்டிக்கொண்டு வரவில்லை. எப்படியும் போகட்டும். எதற்காக யாருடைய குதிரையோ என்கிறாய். அவை நம்முடைய கூட்டுப்பண்ணைக் குதிரைகள் தானே?''

''அப்படியானால் உடனே நேராக மூன்றாவது குழுவுக்கு அனுப்பியிருக்கலாம் அல்லவா? அங்கிருந்து ஆள் வரும் வரை காத்திருப்பானேன்? வந்து எந்திரத்தில் பூட்டியிருந்ததைக் கழற்றிக்கொண்டு போவானேன்?''

துப்த்ஸோவ் சிரித்தான்.

''அவைகளுக்கு நல்ல சொந்தக்காரர்கள்! தங்களுடைய சொந்த மாவட்டத்திலேயே தங்களுடைய குதிரைகளை இரண்டு நாட்களாகக் கண்டு பிடிக்க முடியவில்லையாம்!

இவர்களா சொந்தக்காரர்கள்? சுத்த முட்டாள்கள்! அதற்கும் மேலே அது போகட்டும். நானும் லூபிஷ்கினும் இது விஷயமாகச் சந்தித்துப் பேசி எல்லாவற்றையும் முடித்து விட்டோம். எனவே கடந்த விஷயங்களை மீண்டும் கிளற வேண்டாம். நான் இங்கு யாருடைய உதவியும் கேட்டு வரவில்லை. வேறு ஒரு முக்கிய விஷயமாக வந்தேன். புல் அறுவடையை விட்டுவிட்டு முக்கியமான விஷயம் இல்லையென்றால், இங்கு வருவேன் என்று நினைத்தீர்களா? மிகவும் மோசமாகப் போனால் எவ்வித உதவியும் இல்லாமலே சமாளித்துக்கொள்வோம். இந்தப் பேனாப்புலியும், அந்தக் கணக்கனும் என்னை நாடோடி என்று அழைக்கிறார்கள். இது நியாயம் அல்ல என்று நான் கருதுகிறேன்! எங்களுக்குத் தவிர்க்க முடியாத அவசியத் தேவை எழும்போது தான் நாங்கள் உதவி கோரி வருகிறோம். இதைக் கேட்க எங்கள் சுயமரியாதை இடங்கொடாதபோது பல்லைக்கடித்துக் கொண்டுதான் வேலை செய்கிறோம்... ஆனால் அந்த அப்பாவி மிஹேயிச்சுக்கு விவசாயத்தைப்பற்றி என்ன தெரியும்? அவன் ஒரு மணிச்சட்டத்தில் பிறந்தவன், அதிலேயே அவன் சாவான். என்னிடம் ஒரு வாரத்திற்கு அவனை அனுப்பு, தவீதவ். ஓர் அறுவடை எந்திரத்தில் உட்காரவைத்து நானே குதிரையை ஓட்டுகிறேன். வேலை செய்ய நான் கற்றுக் கொடுக்கிறேன்! அவனுடைய பிதுங்கிய விழிகளில் அவன் வாழ்வில் ஒரு தடவையாவது வியர்வை கொட்ட வேண்டாமா?''

அரைகுறைக் கேலியும் கிண்டலுமாக இருந்த விவாதம் சண்டையாக முற்றும்போல இருந்தது. ஆனால் தவீதவ் குறுக்கிட்டு ஒரு கேள்வியைக் கேட்டு இதைத் தடுத்துவிட்டான். ''அது என்ன, உன்னைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கும் முக்கியமான விஷயம், அகஃபோன்?''

''அதாவது... பாருங்கள்... எங்களுக்கு என்னவோ அது மிக முக்கியமான விஷயம். ஆனால் நீங்கள் அதை எப்படிப் பார்க்கிறீர்கள்?.. நான் மூன்று விண்ணப்பங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். உண்மையில் அவை மையால் எழுதப் பட்டிருந்தன. அழியாமல் எழுதும் பென்சில் ஆணியை, நேரம் குறிப்பவரிடமிருந்த கேட்டு வாங்கி, அவற்றை நொறுக்கித் தூளாக்கிக் கலந்து இந்த விண்ணப்பத் தாள்களை எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன்.''

துப்த்ஸோவினுடைய, சர்க்கரை வாய்ப்பேச்சுக்கு ஓர் அடிகொடுத்து திருத்த விரும்பிய தவீதவ், ''என்ன விண் ணப்பத்தாள்கள்?'' என்று வியப்போடு கேட்டான்.

அந்தக் கேள்வியைப் பொருட்படுத்தாமல், ''நான் நினைத்தபடி, நகூல்னவிடம் தான் நான் போயிருக்க வேண் டும். ஆனால் நகூல்னவ் வீட்டில் இல்லை. அவன் முதல் குழுவிடம் போய்விட்டான். எனவே இந்த விண்ணப்பங் களை உன்னிடமே கொடுக்க முடிவு செய்துவிட்டேன். நான் இதைத் திருப்பி எடுத்துக்கொண்டு போக முடியுமா?''

''எதைப் பற்றிய விண்ணப்பங்கள் அவை?'' என்று பொறுமை இல்லாதபடி திரும்பவும் கேட்டான் தவீதவ்.

துப்த்ஸோவ் விளையாட்டுச் சிரிப்பு அனைத்தையும் விட்டுவிட்டு கண்டிப்புடன் காணப்பட்டான். பைக்குள் இருந்து ஒடிந்த சீப்பின் ஒரு துண்டுப் பகுதியை எடுத்து, வியர்வை படிந்த தனது முன் கேசத்தைச் சீவி விட்டுக் கொண்டபின், ஓய்வாக உட்கார்ந்துகொண்டு, ஆத்திர உணர்வையும் அடக்கி விட்டு, சொற்களைப் பொறுக்கி யெடுத்துப் பேசினான்:''அதாவது நாங்கள் எல்லாம், நாங்கள் மூவரும் தான் கட்சியில் சேர விரும்புகிறோம். நம்முடைய கிரெமியாச்சி கட்சியில் எங்கள் மூவரையும் சேர்த்துக்கொள் ளும் படி வேண்டுகிறோம். இதுபற்றி இப்படி, அப்படி பல இரவுகள் பேசிவிட்டோம். இதை எல்லாக் கோணத் திலிருந்தும் பரிசீலித்து விட்டோம். எல்லாவிதமான வாதப் பிரதிவாதமும் நடத்தி விட்டோம். இப்பொழுது ஒருமன தாக சேர முடிவு செய்து விட்டோம்! இரவு திரும்பும் முன், புல்வெளியில், கட்சியில் சேரக் கூடாது என்பதற்கான எங் களுடைய குறைகளை எண்ணிப் பார்த்தோம். ஆனால் திரும்பும்பொழுது சேரலாம் என்ற முடிவுடன் திரும்பி னோம். இப்பொழுது முடிவு செய்ய வேண்டியது உங்க ளுடைய பொறுப்பு. எங்களில் ஓர் ஆள்தான் வெள்ளையர் களுடன் செய்த சேவையைச் சொன்னான். அவனிடம் 'நீ உன் மனச்சாட்சிக்கும், விருப்பத்திற்கும் எதிராக வெள் ளையர்களுக்குத் தொண்டனாகப் பணிபுரிந்தாய். அதுவும் ஐந்து மாதங்கள். ஆனால் அதன் பிறகு நீயாகவே செஞ் சேனைக்குப் போய் அங்கு ஒரு பிரிவின் தலைவனாக இரண் டாண்டுகள் பணியாற்றினாய். எனவே கடைசியாக நீ செய்த சேவை முதலில் செய்ததை ஈடு செய்துவிட்டது. எனவே

நீ கட்சியில் சேரத் தகுதியுடையவன்தான்' என்று நான் சொன்னேன். நீண்ட நாட்களுக்கு முன்பே கட்சியில் சேரு கிறாயா என்று நீ தவீதவ் கேட்டதாக அடுத்தவன் சொன் னான். அதற்கு அவன் மறுத்துவிட்டானாம். ஏன் தெரியுமா? அவன் மாடுகள் மீது அவன் வைத்திருக்கும் ஆசைதான் அதற்குக் காரணம். ஆனால் இப்பொழுது என்ன சொல் கிறான் தெரியுமா? 'குலாக்குகளின் பையன்கள் துப்பாக்கி ஏந்தியவண்ணம் பழைய காலத்தை மீண்டும் கொண்டு வர முயலும்போது, நான் எப்படி சும்மா இருக்க முடியும்? மாடுகள் மீதும் மற்ற கால்நடைகள் மீதும் நான் வைத் திருந்த ஆசையைக் கைவிடுகிறேன். நான் இப்பொழுது கட் சியில் சேர விரும்புகிறேன். கம்யூனிஸ்டுத் தோழர்களுடன் தோளோடு தோள் நின்று சோவியத் ஆட்சியைக் காக்க பத்து ஆண்டுகட்கு முன்னர் போராடியதைப் போலவே மீண்டும் போராடப் போகிறேன்' என்கிறான். நானும் அப்படித்தான் நினைக்கிறேன். எனவே விண்ணப்பங்களை எழுதிக்கொண்டு வந்துவிட்டோம். அவை ஒன்றும் தெளி வாக எழுதப்பட்டிருக்க வில்லை, ஆனால்...'' இப்படிச் சொல்லிகொண்டிருக்கும் போதே துப்த்ஸோவ் மிஹேயிச்சை ஒரு பக்கப் பார்வை பார்த்துக் கொண்டே, ''எங்களைப் பொருத்தமட்டில் நாங்கள் கணக்கன்களாக, எழுத்தர் களாக இருக்கவோ பழகவில்லை. ஆனாலும் இந்தத் தாளில் நாங்கள் எழுதியிருப்பது எல்லாம் முழு உண்மை'' என் றான் துப்த்ஸோவ்.

துப்த்ஸோவ் மீண்டும் அமைதியாக இருந்துவிட்டான். அவன் மறுபடியும் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டான். கொஞ்சம் குனிந்து, கால்சட்டையின் வலது பைக்குள் கையை விட்டு ஒரு செய்தித்தாளில் சுருட்டி வைத்திருந்த மூன்று விண்ணப்பதாள்களையும் எடுத்தான்.

எதிர்பாராத இந்த சம்பவங்களால் அந்த அறையில் ஒரு நிமிடம் பூரண அமைதி நிலவியது. அங்கிருந்தோர் யாரும் ஒரு வார்த்தை பேசவில்லை. ஆனால் ஒவ்வொரு வரும் அவர்களுக்கு உரிய வகையில் துப்த்ஸோவின் கருத்தை விமர்சித்தனர். வயல்களிலிருந்து கடைசியாக வந்திருந்த அறிக்கைகளைப் படித்துக் கொண்டிருந்ததை நிறுத்தி விட்டு, மூக்குக் கண்ணாடியை நெற்றி வரை உயர்த்தி, துப்த்ஸோவையே வியப்போடு உற்றுப் பார்த்துக்கொண்டு

உட்கார்ந்தான் கணக்கன். தனது அலட்சியச் சிரிப்பை சன்னல் பக்கம் திரும்பிக் சிரித்துக் கொண்டிருந்தான் யாக்கவ் லுக்கீச். மகிழ்ச்சி தாங்க முடியாமல் முகமெல்லாம் ஒளியுடன் மிளிர, நாற்காலியில் வேகமாக தவீதவ் சாய்ந்ததில் அது முன்னும் பின்னும் ஆடியது. நாற்காலி 'கிரீச்' சத்தமிட்டது.

''எங்கள் மனுக்களை எடுத்துக்கொள் தோழர் தவீதவ்'' என்று வேண்டிய துப்த்ஸோவ் செய்தித்தாளிலிருந்து பல துண்டுக் காகிதங்களை எடுத்தான். பள்ளிக்கூட குறிப்பேடு ஒன்றிலிருந்து கிழிக்கப்பட்ட பல காகிதங்களில் கோணல் மாணலாக நீட்டி நெளித்து அதில் கிறுக்கி இருந்தது.

''யார் யாருடைய விண்ணப்பங்கள்?'' என்று தவீதவ் மணியோசை போன்ற குரலில் கேட்டான்.

''இளைஞன் பெஸ்ஹிலேப்னவ், நான், கொந்திராத் மய்தானிக்கவ் ஆகியோர்தான்.''

தவீதவ் மனுக்களைப் பெற்றுக்கொண்டு, உணர்ச்சியையும் அடக்கிக்கொண்டு, ''தோழர் துப்த்ஸோவ், இது மிகவும் உணர்ச்சிமிக்க நிகழ்ச்சியாகும். இது உனக்கும், மய்தானிக்கவுக்கும், பெஸ்ஹிலேப்னவுக்கும் கிரெமியாச்சி கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவுக்கும் பெரும் நிகழ்ச்சியாகும். இன்றைக்கே இதை நகூல்னவுக்கு நான் அனுப்பிவிடுகிறேன், ஞாயிறன்று விரிவடைந்த கட்சிக் கூட்டத்தில் இவை விவாதிக்கப்படும். இப்போது நீ வேலைக் குழுவுக்குச் சென்று இது பற்றித் தோழர்களிடம் தெரிவி. பள்ளிக்கூடத்தில் மாலை ஆறு மணிக்குக் கூட்டத்தைத் தொடக்குவோம். யாரும் காலதாமதமாக வரக்கூடாது. எனவே நீ குறித்த காலத்தில் வர முயற்சி செய். ஆனால் நீ அவ்வாறு செய்வாய் என்று நம்புகிறேன். நீங்கள் மூவரும் சாப்பிட்டு முடிந்த உடனேயே அங்குள்ள குதிரைகளிலேயே நல்ல குதிரைகளைப் பிடித்துக்கொண்டு விரைந்து வந்து சேர வேண்டும். மற்றுமோர் விஷயம். கட்டை வண்டியைக் காட்டிலும் விரைந்து போக வேறு ஏதேனும் வழி வைத்திருக்கிறாயா?''

''ஒரு நல்ல வண்டி இருக்கிறது.''

''சரி, கிராமத்துக்கு அதிலே வந்து சேர்.'' தவீதவின் முகம் மறுபடியும் மலர்ந்து குழந்தைச் சிரிப்புடன் காணப்பட்டது. பிறகு துப்த்ஸோவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டே, ''மணமகன்கள் போல நன்கு உடையணிந்து

வரவேண்டும்! இது வாழ்க்கையில் ஒரே ஒரு தடவை தான் நடக்கும், தம்பி. இது ஒரு பெரும் சம்பவம், சகோதரனே... இது இளமை மாதிரி வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் வரும் அன்புள்ள பையா...''

விவரிக்க வார்த்தையே கிடைக்காதவர் போலக் காணப் பட்டான். மீண்டும் உணர்ச்சி பெற்றவனாய், ''அந்த நல்ல வண்டி பார்க்க நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''நல்ல வண்டி அதற்கு நான்கு சக்கரங்கள் இருக்கின் றன. ஆனால் அது சாணம் ஏற்றத்தான் பயன்படும். பக லில் அதில் பயணம் செய்ய முடியாது, அவமானமாக இருக் கும். இரவில் இருளில் தான் பயணம் செய்யலாம். எல் லாம் கீறல் விழுந்து இடிபட்டு குண்டும் குழியுமாக இருக் கிறது. அதற்கு என் வயது இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் மய்தானிக்கவ் இது மாஸ்கோவுக்கருகில் நெப் போலியனிடமிருந்து எங்கள் ஊர் கஸாக்குகளால் பறிமுதல் செய்யப்பட்டது என்கிறான்...''

''அது பயன்படாது!'' என்று தவீதவ் உறுதியாகச் சொன் னான். ''ஷ்சுக்கார் தாத்தாவை அழைத்துவர உங்களை நல்ல வண்டியில் அனுப்புகிறேன். இது வாழ்க்கையில் ஒரே ஒரு முறை நிகழக்கூடிய சம்பவம் என்று சொல்லவில்லை யா?''

தவீதவ் தான் மிகவும் விரும்பிய, நம்பிய இந்த ஆட்கள் கட்சியில் சேரும் அந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண் டாட விரும்பினான். அந்த நாளில் வேறு என்னதான் செய்ய முடியும் என்று அவன் நினைத்தான். அதனைச் செய்து பார்ப்பது குறித்தே சிந்தனை செய்துகொண்டிருந்தான்.

''பள்ளிக்கூடத்தின் சுவரையெல்லாம் பூசி மெழுகி ஞாயிற்றுக்கிழமைக்குள்ளாக வெள்ளையடித்து விட வேண் டும். அது புதிதுபோல தோற்றமளிக்க வேண்டும்'' என்று ஒஸ்த்ரவ்னோவைப் பார்த்துக் கொண்டே சொன்னான் தவீ தவ். ''முற்றத்தையும் கூட்டிப் பெருக்கி, விளையாட்டுத் திடலில் கொஞ்சம் புது மணலையும் பரப்ப வேண்டும். லுக்கீச் கேட்கிறதா? பெஞ்சுகளையும், தரையையும் சுத்த மாகச் சுரண்டித் தேய்த்துவிட வேண்டும். முகட்டைக்கூடக் கழுவி விட வேண்டும். அறைகளையும் காற்றோட்டமாக இருக்கும்படி செய்ய வேண்டும். அந்த இடமே ஒரு கப்பல் போன்ற தோற்றத்திலிருக்க வேண்டும்!''

''ஏராளமான மக்கள் இருந்தால் அவ்வளவு பேரும், உள்ளே நுழைந்தால், பள்ளியில் உட்கார இடமிராதே என்றால் பிறகு என்ன வேண்டும்?'' என்று ஒஸ்த்ரவ்னோவ் கேட்டான்.

''நாம் ஒரு பொழுதுபோக்கு மையத்தைக் கட்ட முடியுமானால் நன்றாகத்தானிருக்கும்!'' என்று கனவில் போல மெதுவாக முணுமுணுத்தானே ஒழிய தவீதவ், பதில் பேசவில்லை.ஒரு விநாடி கழித்து மீண்டும் எதார்த்தமாகப் பேசினான்: ''குழந்தைகளையும், இளைஞர்களையும் உள்ளே விட வேண்டாம். அவ்வாறு செய்தால் இடம் போதும். ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் கண்ணாடி மாதிரி பளிங்கு போல பளிச்சென்று... அந்தப் பெரிய நாளுக்குத் தகுதியுடையதாக இருக்க வேண்டும்!''

''ஆனால் எங்களுக்காக யார் பரிந்துரை செய்து உறுதி கொடுப்பார்கள்?'' என்று போகும்முன் கேட்டான் துப்த்ஸோவ்.

தவீதவ் அவனது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு முறுவலித்தான். ''பரிந்துரை குறித்து நீ கவலைப்படுகிறாயா? நாங்கள் அவற்றைப் பார்த்துக் கொள்கிறோம். இன்று மாலையே நாங்கள் உங்களுக்குப் பரிந்துரைகள் எழுதிவிடுகிறோம், அதுதான் உண்மை! சரி, அதிர்ஷ்டம் அடிக்கட்டும். புல் அறுவடை செய்பவர்களுக்கு எங்கள் வணக்கத்தைச் சொல்லவும். புல் நீண்டகாலம் வீணாக நிற்க வேண்டாம். வீணாகக் காய்ந்து கெட்டுவிடவும் வேண்டாம். இரண்டாவது குழுவை நம்பி இருக்கலாமல்லவா?''

''எங்களை எப்பொழுதும் நம்பலாம் தவீதவ்'' என்று வழக்கத்திற்குமாறான முனைப்புடன் சொல்லிவிட்டுப் பிரிந்து சென்றான் துப்த்ஸோவ்.

* * *

மறுநாள் அதிகாலை வீட்டுக்காரர் தவீதவை எழுப்பிவிட்டான். ''எழுந்திரு தோழரே. போர்க் களத்தில் இருந்து வரும் தூதுவனைப்போல ஒருவன் வந்திருக்கிறான்... விரல்கள் இல்லாத முட்டியையுடைய உஸ்தீன் மூன்றாவது குழுவிலிருந்து அப்பொழுதுதான் விருவிருக்க வேகமாக வந்

திருந்தான். ஏதோ கொஞ்சம் கலக்கமாக, அடிபட்டவனைப் போல இருந்தான். சரியாக சட்டைகூடப் போட்டிருக்க வில்லை...''

வீட்டுக்காரர் காதுமாற்றி காதில் ஊதிக்கொண்டிருந் தார். ஆனால் அப்பொழுதுதான் விழித்த தவீதவுக்கு, ஆரம் பத்தில் ஒன்றுமே புரியவில்லை. சுருண்ட தலையணையிலி ருந்து தலையைத் தூக்கிய தவீதவ், ''என்ன விஷயம்?'' என்றான்.

''ஓர் ஆள் தூது வந்திருக்கிறான். அடிபட்டவனைப் போல இருக்கிறான். உதவி கேட்டு வந்திருக்கிறான் போலும்.''

கடைசியாக வீட்டுக்காரர் சொன்னதை ஒருவாறாகப் புரிந்து கொண்டு, அவசரம் அவசரமாக சட்டைகளை இழுத்து மாட்டிக்கொண்டான் தவீதவ். வாளியில் இருந்த தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்டு முற்றத்திற்குப் போனான். இரவு பூராவும் இருந்தும் அந்தத் தண்ணீர் குளிர்ந்து போகாமல் இருந்தது.

அவனுக்குக் கீழ்ப்புறத்தில், ஒரு கையில் கடிவாளத்தை யும், மறு கையால் ஓடிவந்த வெக்கை குறையாமலிருந்த பெண் குதிரையைத் தட்டிக்கொடுத்துக் கொண்டும் உஸ் தீன் ரிகாலின் நின்றான். சாயம்போன, அவனது நீலநிற பருத்திநூல் சட்டை தாறுமாறாகக் கிழிபட்டு, அதிசயிக்கக் கூடிய வகையில் தோள்களில் தொங்கிக்கொண்டிருந்தது. அவனது இடது கன்னம் கருநீலம் பாய்ந்து போயிருந்தது. இடது கண்ணோ வீங்கிப் புடைத்துப் போயிருந்தது. வலது கண்ணோ கோபத்தால் தீப்பொறியைக் கக்கிக்கொண்டிருந் தது.

''இதையெல்லாம் எப்படிச் சேர்த்தாய்?'' என்று உற் சாகத்தோடு கேட்ட தவீதவ் வணக்கம் சொல்லக்கூட மறந்துவிட்டு, படிகளில் இறங்கிப் போனான்.

''திருட்டு, தோழர் தவீதவ்! பட்டப்பகல் மோசடி, பலாத்காரம்!'' உஸ்தீன் உரத்த குரலில் கத்தினான். ''இவ் வளவு கேவலமான காரியத்தைச் செய்தது எந்த நாய்க் குட்டிகள், தெரியுமா?! சுத்தச் சனியன் பிடித்த தரித்திரப் பேர்வழிகள்!'' என்று அவன் திரும்பவும் குதிரைப் பக்கமாக சுழன்று திரும்பினான். அது அவன் காலில் மிதிக்கத் தெரிந் தது.

''அறிவோடு பேசு'' என்று தவீதவ் அவனிடம் சொன்னான்.

''அதில் அறிவு இருக்கத்தான் செய்கிறது! அண்டை வாசிகளாம்! எரிந்து சாம்பலோடு சாம்பலாகட்டும்! திருட்டுப் பயல்களை நோய்நொடி கொள்ளை கொண்டு போகாதா? இதை எப்படி நினைக்கிறாய்? நம்முடைய பக்கத்து ஊர் துபியான்ஸ்கி பேர்வழிகள் இருக்கிறார்களே, அவர்கள், நேற்று இரவு கலீனவிய் ஊகல் என்கிற பள்ளத்துக்கு வந்து சுமார் முப்பது வைக்கோல் போர்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு போய்விட்டார்கள். இன்று காலை எழுந்தவுடன், அவர்களது கடைசி இரண்டு வண்டிகளில் நம் விளைச்சலில் அறுவடையான புல்லை ஏற்றுவதைப் பார்த்தேன். ஒரு படப்பைக்கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. ஆகவே குதிரை மீதேறி, அவர்களிடம் பாய்ந்து சென்றேன், 'ஏ அவனே, இவனே, என்னடா இப்படிச் செய்கிறீர்கள்?! எந்த அதிகாரத்தில் எங்கள் வைக்கோலை அள்ளிச் செல்கிறீர்கள்?!' என்றும் கேட்டேன். வண்டிக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அந்த பன்றிக்குட்டி சிரித்துக்கொண்டே 'இது உங்களுடையதாக இருந்திருக்கலாம், இப்பொழுது எங்களுடையது. மற்றவர்களுடைய நிலத்தில் அறுவடை செய்துகொண்டு வராதே' என்று சொல்கிறான். 'என்ன சொல்கிறாய்? மற்றவர்களுடையதா? எல்லைக் கல் எங்கிருக்கிறது பார்த்தாயா?' என்றேன். அதற்கு அவன் சொல்கிறான்: 'தொலை நோக்கியை எடுத்து, கல் எங்கிருக்கிறது என்று பார். இந்த நிலம் ஆண்டாண்டாக துபியான்ஸ்கி நிலந்தான். சிரமப்பட்டு இந்தப் புல்லை அறுத்துப் போட்டதற்காகக் கடவுள் உனக்கு அருள் புரிவாராக' என்கிறான். ஓகோ இப்படியா விஷயம்? எல்லைக் கல்லில் கை வைக்கிறீர்களா? எனவே அவனை வண்டியிலிருந்து இழுத்து கண்களுக்கு இடையில் ஒரு குத்து விட்டேன். மற்றவர்களின் நிலத்தில் தலையிடாமல் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளட்டுமே என்றுதான் குத்து விட்டேன்... சரியான குத்து. நிற்க முடியாமல் தடுமாறிக்கொண்டே தள்ளாடினான். அப்புறம் மூன்று பேர் ஓடி வந்தார்கள். மேலும் ஒருவனைக் குத்தித் தரையில் வீழ்த்தினேன். ஆனால் மற்றவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனெனில் அதற்குள்ளாக மற்றவர்கள் அனைவரும் சேர்ந்து என்னை நையப்

புடைத்துக் கொண்டிருந்தார்கள். நாலு பேருக்கெதிராக ஓர் ஆள் என்ன செய்வது? நம்முடைய ஆட்கள் அங்கு வந்து சேருவதற்குள்ளாக சட்டைத் தாறுமாறாகக் கிழித்து, அடித்துநொறுக்கிய முட்டைபோல ஆக்கிவிட்டனர். எப்படிப் பட்ட பன்றிக்குட்டிகள்! இந்தக் கோலத்தில் எப்படி என் மனைவியைப் பார்ப்பது? என்னை அடித்தாலும் பரவா யில்லை, ஆனால் எதற்காக என் சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழிக்க வேண்டும்? இப்பொழுது நான் என்ன செய்வது? நான் இதை ஒரு சோளக்கொல்லைப் பொம் மைக்குக் கொடுத்தால் அதுகூட இதை அணிந்துகொள்ள வெட்கப்படும். பெண்கள் ரிப்பன் செய்யக்கூட இது உத வாது. துணியும் அதற்குத் தகுதியில்லை... துபியான்ஸ்கி ஆள் யாராவது ஒருவனைப் புல்வெளியில் நான் தனியாகச் சந்திக்கும்வரை பொறுத்திருங்கள்! அவன் என்னைக் காட்டி லும் செம்மையாக உதை வாங்கி அவன் மனைவியிடம் திரும்புகிறான் என்று பாருங்கள்!''

தவீதவ் உஸ்தீன் கழுத்தைச் சுற்றி கையைப் போட்டு வளைத்துக்கொண்டு சிரித்தான்: ''ரொம்பவும் மனசை அலட்டிக் கொள்ளாதே. வேறு ஒரு சட்டை சம்பாதித்துக் கொள்ளலாம். புண்களும் கல்யாணத்துக்குள் ஆறிவிடும்.''

''யார் உன் கல்யாணத்திற்குள்ளாகவா?'' என்று களிப் போடு கேட்டான் உஸ்தீன்

''இந்தக் கிராமத்திலே நடக்கும் திருமணத்துக்குத் தான். நான் ஒன்றும் பெண் பார்க்க யாரையும் அனுப்ப வில்லை. உன்னுடைய மாமா போன ஞாயிற்றுக்கிழமை என்ன சொன்னார் என்பது நினைவிருக்கிறதா? 'சண்டைக் கோழியின் கொண்டை ரத்தம் கொட்டிக் கொண்டுதானிருக் கும்' ''

தவீதவ் முறுவலித்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தான்: ''உஸ்தீன், என் அன்புமிக்க உஸ்தீன், மிக அருமையான காரியம் நடந்திருக்கிறது. உனக்காக அல்லாமல். கூட்டுப் பண்ணை வைக்கோலுக்காகச் சண்டை போட்டிருக்கிறாய். உண்மையிலேயே உள்ளத்தை உலுக்கும் நிகழ்ச்சி!''

ஆனால் உஸ்தீன் அவனை உலுக்கிவிட்டான்: ''நீ சிரிக் கலாம் தவீதவ், ஆனால் என் எலும்பு மூட்டுகளெல்லாம் வலிக்கின்றன. சும்மா சிரித்து மழுப்பப் பார்க்காதே, குதி ரையில் ஏறிக்கொண்டு, துபியான்ஸ்கி போய் வைக்கோலைக்

காப்பாற்று. அந்த இரண்டு வண்டிகளையும் ஓட்டிக் கொண்டு வந்துவிட்டோம். ஆனால் இரவில் எவ்வளவு ஏற்றிக்கொண்டு போனார்களோ?! ஒழுங்காக வைக்கோலை நம்முடைய கிராமத்திலேயே திரும்பக் கொண்டுவந்து கொடுத்துவிடச் சொல்லு. அவர்கள் திருடியதற்கு அது தான் நியாயமும் கூட.'' வெடித்து வீங்கியிருந்த உதடுகளை சிரமப்பட்டு விரித்து சிரித்தான். ''நீயே பார். பெண்கள் தான் வைக்கோல் கட்டைக் கொண்டு வருவார்கள். நம் முடைய ஊருக்கு ஓர் ஆண்பிள்ளை கூட வர மாட்டான். ஆனால் திருடியதெல்லாம் அந்த முரட்டுப் பேர்வழிகள் தான். அந்த முரடர்கள் தங்கள் முட்டியைத் திரட்டி குத்துவிட்டதில் என் உள் எலும்பு நொறுங்கியே விட்டது... நான் கெஞ்சியும் கூட, கீழே விழ அநுமதிக்க மறுத்துவிட் டார்கள்! ஓர் ஆள் மாற்றி ஓர் ஆள், நம்முடைய ஆட்கள் வரும் வரையில் அடித்துக் கொண்டே இருந்தார்கள். நானும் குத்துவிட்டுக் கொண்டே தானிருந்தேன். ஆனால் பல கைகள் முன்னால் ஒரு கை என்ன செய்யும்.''

உஸ்தீன் மீண்டும் சிரிக்க முயன்றான். ஆனால் அவன் முகம் நெளிந்தது. அவன் கையை வீசி, ''நம்முடைய லூபிஷ் கினை நீ பார்த்திருக்கவேண்டும், தோழர் தவீதவ். எங் களைச் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டே இருந்தான். வேலிக் கம்பியை தாண்ட வளையம்போடும் நாய் மாதிரி ஓடினான். அவன் போட்ட சத்தம் அவனைக் கொல்லப் போதுமானது. 'இளைஞர்களே, நையப்புடையுங்கள், அடியுங்கள், அடித்து நொறுக்குங்கள், வரிசையாக அடியுங்கள்! அவர்களால் அடி தாங்க முடியும்!' ஆனால் அவன் சண்டையில் கலந்து கொள்ளவே இல்லை. என் ஒஸெத்ரோவ் மாமாவுக்குக் கோபம் வந்து, 'ஏ பெரும் பிசாசே! வந்து எங்களுக்கு உதவி செய்! முதுகிலே சிலந்திக் கட்டி வந்திருக்கிறதா?!' என்று கத்தினான். லூபிஷ்கின் கண்களில் நீர் ததும்பிற்று, 'நான் முடியாது! நான் ஒரு கட்சி அங்கத்தினன். ஒரு குழுவின் தலைவனும்கூட! நீங்கள் அடித்து நொறுக்குங்கள். நான் சமாளித்துக் கொள்கிறேன்!' என்றான். அவன் எங்களைக் சுற்றிச்சுற்றி ஓடிக்கொண்டே இருந்தான். கோபத்தை அடக்க பற்களை நரநரவென்று கடித்துக்கொண்டான்... நாம் நேரத்தை வீணாக்க வேண்டாம். போய்ச் சாப்பிடு. நான் போய் ஒரு குதிரை பார்த்து வருகிறேன். நாம் இரு

வருமே முகாமிற்குப் போவோம். நீ இல்லாமல் நான் அங்கு வந்து முகத்தைக் காட்டக் கூடாது என்று ஊரில் உள்ள பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் வளர்த்த நமது தாளை, நச்சுப்பூச்சிக் கூட்டத்துக்காக விட்டு விடப்போகிறோமா?''

துபியான்ஸ்கிக்குப் போவதை முடிவுகட்டி விட்டாற்போல குதிரையை அங்கு கட்டிவிட்டு, அலுவலகத்தின் முற்றத்திற்குப் போனான் உஸ்தீன். ''துபியான்ஸ்கி கூட்டுப் பண்ணையின் தலைவர் பொலியனீத்ஸாவைப் பார்க்க வேண்டும்'' என தவீதவ் நினைத்தான். ''அவனுக்குத் தெரிந்து இந்த வைக்கோலை எடுத்திருந்தால், அப்புறம் சண்டை தான். கழுதை மாதிரி பிடித்த பிடிவாதத்தைவிட மாட்டான். ஆனால் அவனையும் எப்படியும் சமாளித்தாகவேண்டும்.''

தவீதவ் ஒரு கோப்பைப் பாலையும் அவசரமாகக் குடித்தான். ரொட்டித் துண்டையும் மென்று விழுங்கிவிட்டு புறப்பட்டான். புதிய சட்டை ஒன்றைப் போட்டுக்கொண்டு, உஸ்தீன் நகூல்னவின் மட்டக்குரையில் சவாரி செய்து கொண்டுவந்தான்.

அத்தியாயம் பதினைந்து

மாவட்டக் குழுக் கூட்டங்களில் ஒரு சில முறையே சந்தித்திருந்தாலும், கேள்வி மூலமே அறிமுகமாகி இருந்தும் கூட, துபியான்ஸ்கி, ''செங்கதிர்'' கூட்டுப்பண்ணைத் தலைவர் பொலியனீத்ஸா, தவீதவை மிகப்பழகிய நண்பரைப் போல வரவேற்றார். தினேப்ரபெத்ரோவ்ஸ்க் என்ற நகரத்தில் எஞ்சினியரிங் வேலையில் டர்னராக வேலை செய்த இவன் கிராமப்புறங்களில் பணியாற்றவந்த இருபத்தி ஐயாயிரம் அங்கத்தினர்களில் ஒருவனாகும்.

''ஓ, வர வேண்டும், வர வேண்டும், தோழர் தவீதவ். பால்டிக் மாலுமி! எல்லா வகையிலும் பின்தங்கியுள்ள எங்கள் கூட்டுப்பண்ணைக்கு எப்படி வந்திருக்கிறாய்? உள்ளே வந்து உட்கார். வரவேண்டிய விருந்தினன் நீ!'' என்று உபசரித்தான்.

சுருக்கு விழுந்த அவனது முக மடிப்புகள் தந்திரச் சிரிப்பைக் காட்டிக்கொண்டு தான் இருந்தன. செயற்கையான

வரவேற்பும் தென்படாமல் இல்லை. அவனுடைய கரிய கண்கள் வரவேற்பால் மகிழ்ச்சியுடன் காணப்பட்டன போலிருக்கிறது. இந்த மிகைப்பட்ட வரவேற்பால், தவீதவ் எச்சரிக்கையாகி விட்டான். சாதாரணமாக திரும்ப முகமன் கூறிவிட்டு மேசைக்கருகில் உட்கார்ந்து சுற்றுமுற்றிலும் மெதுவாகப் பார்த்தான்.

தலைவருடைய அலுவலகம் ஒரு விநோதமாக, தவீதவுக்குக் காட்சியளித்தது. தொட்டிகளிலும், மண் சட்டிகளிலும் வைத்திருந்த பலவிதச் செடிகள் தூசி படித்துப் பலவிதமாகத் தொங்கிக்கொண்டிருந்தன; பழைய மர நாற்காலிகள் அழுக்குப் படிந்த ஸ்டூல்களுடன் சேர்ந்து கிடந்தன; ஒரு அலங்கோலமான சோபா ஒன்று, சுருள் கம்பிகள் பிதுங்கிக் கொண்டு வெளிவரும் கோலத்துடன் கதவடியில் கிடந்தது. ''நீவா'' சஞ்சிகையில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட படங்கள் சுவர் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன. கீவில் இருந்த ருஷ்யர்கள் கிறிஸ்தவர்களாக ஞானஸ்நானம் செய்யப் படுதல் செவஸ்தோப்பல் முற்றுகை, ஷீப்கா போர், 1904இல் லியாவொயானில் ஜப்பானிய தரைப்படை முற்றுகை, ஆகிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் சாதாரண ஓவியங்களும் தொங்கின.

தலைவரின் மேசைக்கு மேலே மஞ்சள் ஏறிப்போன ஸ்தாலினுடைய படம் ஒன்று தொங்கிற்று. மரோஸவ் கயிறுத் தொழிற்சாலையின் படம், வண்ணம் பூசப்பட்டது எதிர்ச் சுவரில் தொங்கியது. துணிச்சல் மிக்க ஸ்பானிய மஞ்சுவிரட்டு வீரன் ஒருவன் குறுங்கைத் தளருடையணிந்து, காளை ஒன்றின் கொம்புகளில் நூல் கயிற்றை மாட்டி ஒரு கையால் பிடித்துக்கொண்டு, கத்திமீது சாய்ந்து கம்பீரமாக அமர்ந்து இருந்தான். அவனுடைய காலடியில், பிரிக்கப்படாத வெள்ளை நூல் கண்டு ஒன்று ''எண் 40'' என்று குறிக்கப் பட்டவாறு கிடந்தது.

தகரத் தட்டுகளை வைத்த சாமான் அடுக்களை அறையில் பெரிதாக இருந்தது. உண்மையில் பொலியனீத்ஸா இதைத்தான் அலமாரியாகப் பயன்படுத்தி வரவேண்டும் போல இருக்கிறது. ஒரு பெரிய கதவின் கைப்பிடியும், பூட்டும், அதுதான் அவர் முக்கியமான ஆவணங்களை வைத்துப் பூட்டுவதற்காகப் பயன்படுத்தியது என்பதைக் காட்டியது.

இந்த அலுவலகத்தைப் பார்த்த தவீதவால் சிரிப்பை

அடக்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் பொலியனீத்ஸா அதை அவனுக்கே உரிய முறையில் எடுத்துக் கொண்டான்.

''பார், இங்கு எல்லா வசதியையும் எனக்குத் தேடிக் கொண்டேன்'' என்று நிறைவோடு சொன்னான் அவன். ''முன்னாள் குலாக்கினுடைய எல்லா உடைமைகளையும் அப்படியே வைத்து இருந்தேன். இந்த அறையின் தோற்றத்தை அப்படியே காத்து வைத்தேன். இங்கிருந்த மெத்தையையும், தலையணையையும் கூட்டிக் கழுவும் பெண் வீட்டிற்குத் தள்ளிவிட்டேன். ஆனால், மொத்தத்தில் மற்ற எல்லா வசதிகளையும் அப்படியே காப்பாற்றி வைத்துள்ளேன். வறட்டுத்தனமான அலுவலக முறை எனக்குப் பிடிக்காது! எனக்கு வீட்டிலிருப்பது போல இருப்பதுதான் பிடிக்கும். என்னைப் பார்க்க வருகிறவர்கள் வசதியாகக் கருத வேண்டும் என நான் விரும்புகிறேன். அது சரி தானே இல்லையா?''

தவீதவ் பதில் சொல்லாமல் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். பின்னர் நேராகவே, ''உன்னுடன் எனக்கு ஒரு விவகாரம் பேச வேண்டியுள்ளது தோழரே!'' என்றான்.

பொலியனீத்ஸாவின் வஞ்சகமான சிறு கண்கள், தோல் இமைக்குள் பதுங்கி, சத்தற்ற நிலக்கரித் துண்டு போல தவீதவைப் பார்த்து மின்னியது. அவனது தடித்த கரிய புருவங்கள் நெற்றிமேல் விரிவடைந்தன.

''விவகாரமா? இவ்வளவு நெருக்கமாக உள்ள அக்கம் பக்கத்தாருக்குள்ளா? என்னை பீதி அடைய வைக்கிறாயா தவீதவ்! இவ்வளவு நாளும் எவ்வளவு இணக்கமாக இருந்து வந்திருக்கிறோம். இப்பொழுது வந்து தகராறா? இதை என்னால் நம்பவே முடியவில்லையே! நான் நம்பவே மாட்டேன்!''

தவீதவ், பொலியனீத்ஸாவின் கண்களுக்குள் கவனமாக உற்று நோக்கினான். ஆனால் அவற்றின் வெளிப்பாட்டைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பொலியனீத்ஸாவின் முகம் எப்பொழுதும் போல நன்றாகவே இருந்தது. அவனது உதடுகளில் வரவேற்கும் சிரிப்பு நெகிழ்ந்துகொண்டு தான் இருந்தது. ''செங்கதிர்'' கூட்டுப்பண்ணையின் தலைவர், பிறவி நடிகராக இருக்க வேண்டும். தன்னை அடக்கிக்கொள்ளும் கலையிலும் வல்லவராயிருந்தல் வேண்டும். ஏதாவது ஒரு பாத்திரத்தில் நடிப்பதிலும் கெட்டிக்காரர்தான்.

''உன்னுடைய உத்தரவின்படிதான், எங்களுடைய வைக்கோல் நேற்று இரவு வண்டியிலே ஏற்றிவரப்பட்டதா?'' என்று தவீதவ் நேரடியாகவே கேட்டான்.

பொலியனீத்ஸாவின் புருவங்கள் மேலும் ஏறின.

''என்ன வைக்கோல், நண்பரே?''

''வழக்கமான, அந்த புல்வெளித்தாள்தான்.''

''இப்பொழுது தான் முதல் தடவையாக அதைக் கேள்விப்படுகிறேன்! வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்ததாகச் சொல்கிறாயா? யார் செய்தது? என்னுடைய ஆட்களா? நிச்சயம் இராது! அதை நான் நம்ப மாட்டேன்! என்னைச் சுடு, தூக்கிலிடு, ஆனால் நான் நம்பவே மாட்டேன்! செமியோன், எங்களுடைய ''செங்கதிர்'' கூட்டுப்பண்ணை விவசாயிகள், சோஷலிஸ்ட் பண்ணைகளில் வேலை செய்பவர்களிலேயே மிகவும் கண்ணியமானவர்கள். நீ சந்தேகப்படுவது, அவர்களைமட்டுமல்ல, கூட்டுப்பண்ணையின் தலைவன் என்ற முறையில் எனக்கும் இழிவு! இதை நினைவுபடுத்திக் கொள்ளும்படி உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.''

தனது எரிச்சலை வெளிக்காட்டாது, ''அழகு நயமிக்க எனது நண்பரே, இங்கே கொஞ்சம் கவனி. நான் ஒன்றும் லித்வீனவ் அல்ல. நீ ஒன்றும் சேம்பர்லேனும் அல்ல. நமக்குள் ராஜதந்திரப் பேச்சு முறைவேண்டாம். நீ அந்த வைக் கோலை ஏற்றிவரும்படி சொன்னாயா?'' என்றான் தவீதவ்.

''நான் திரும்பவும் கேட்கிறேன்: எந்த வைக்கோலைப் பற்றிப் பேசுகிறாய்?''

''இது தொந்தி விழுந்த நாய்கள் கதை மாதிரி இருக்கிறது!'' என்று கோபமாக எரிந்து விழுந்தான் தவீதவ்.

''கவனமாகக் கேள் நண்பனே. எந்த வைக்கோலைப் பற்றி நீ பேசிக் கொண்டிருக்கிறாய்?''

''கலீனவிய் ஊகல் என்ற பள்ளத்திலிருந்த தாளைப் பற்றித்தான். நம்முடைய புல்வெளிப் பகுதிகள் இரண்டும் அடுத்தடுத்து இருக்கின்றன. குறிப்பிட்ட அந்த இடத்தில் ஒன்றுசேருகின்றன, அங்கு அறுத்துப் போட்டிருந்ததைத் திருடிக்கொண்டு வந்து விட்டீர்கள். அதுதான் உண்மை!''

ஏதோ விளங்காமலிருந்த தவறான விஷயத்தை மிக எளிதாகத் தீர்த்துவிட்டவரைப்போல, மெலிந்த தொடைப்

பக்கத்தைப் படாரென்று தட்டிக்கொண்டு, பொலியனீத்ஸா உரக்கச் சிரித்தான்:

''இதைத்தான் நீ தொடக்கத்திலேயே சொல்லி இருக்க வேண்டும், தோழரே! ஏதோ வைக்கோல் அது, இது என்றால், எந்த வைக்கோல் என்ற கேள்வி பிறக்காதா? இந்தப் பள்ளத்தில் தெரிந்தோ, தெரியாமலோ, என்ன காரணமோ, நீங்கள் எங்கள் நிலத்தில் புல் அறுத்திருக்கிறீர்கள். எனவே, சட்டப்படி அதை நாங்கள் வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து விட்டோம். புரியவில்லையா நண்பனே?''

''இல்லை, அழகு நயமிக்க நண்பரே, புரியவில்லை. அது உங்களுடைய வைக்கோலாக இருந்தால் இரவில் பதுங்கி வண்டியில் ஏற்றி வருவானேன்?''

''அதை அந்தக் குழுத் தலைவரிடம் கேட்க வேண்டும். மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் இரவிலே வேலை செய்வது நல்லது. ஏனெனில் குளிராக இருக்கும். இதனால்தான் இரவில் ஏற்றிக் கொண்டு வந்தார்கள் என்று நினைக்கிறேன். உங்களுடைய ஆட்கள் இரவில் வேலை செய்வது இல்லையா? அது தப்பா! இரவில் வேலை செய்வது சுலபம், அதிலும் வெளிச்சமாயிருந்தால், பகலில் தகிக்கும் வெயிலில் வேலை செய்வதை விட அது எப்பொழுதுமே நல்லது.''

தவீதவ் அசட்டையாகச் சிரித்தான்: ''இப்பொழுதெல்லாம் இரவுகள் மிகவும் இருட்டாக அல்லவா இருக்கின்றன. இது உண்மை!''

''இருண்ட இரவிலும் வாய்க்கு கை போகும் பாதை தெரியத்தானே செய்கிறது.''

''ஆமாம், குறிப்பாக அடுத்த வீட்டுச் சாப்பாட்டை எடுத்து விழுங்கும்போது அது தேவையில்லை...''

''நண்பரே, அதை அத்துடன் விட்டுவிடு! உன்னுடைய குத்தல் பேச்சு இங்குள்ள, அரசியல் உணர்வுமிக்க கட்சித் தோழர்களையும், அவர்களது தலைவனாகிய என்னையும் கேவலப்படுத்துவதாக இருக்கிறது. நாங்கள் திருடர்கள் அல்ல, அதை நினைவில் வைத்துக்கொள். நாங்கள் உழைப்பாளிகள். கவனமிருக்கட்டும்!''

தவீதவின் கண்கள் கொதித்தன. ஆனால் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு, ''கற்பனை நண்பரே, பெரும் பேச்சை விட்டுவிடு. விஷயத்துக்கு வா. கலீனவிப் பள்ளத்தில் ஓடைக்கரையின் இரு புறத்திலும் மூன்று

எல்லைக் கற்கள் நாட்டப்பட்டிருந்தது உனக்குத் தெரியுமா? உங்களுடைய கண்ணியமான கூட்டுப்பண்ணை விவசாயிகள் அவற்றை அகற்றி, நீட்டி, நான்கு அல்லது ஐந்து ஹெக்டர் அளவு நிலத்தை வளைத்துப் போட்டுக்கொண்டார்கள். இது தெரியுமா உனக்கு?''

''நண்பரே! எது அப்படி உன்னை நினைக்க வைத்தது? உன்னுடைய சந்தேகம், குற்றமற்ற அவர்களை அவமானப் படுத்துவதாக...''

''இந்த இரட்டை நாக்குப் பேச்சை நிறுத்து!'' என்று தவீதவ் குறுக்கிட்டான். அவன் தன்னையறியாமல் கோப மடைந்துகொண்டிருந்தான். ''என்னைச் சுரண்டல்காரன் என்று நினைத்தாயா? நான் காரியத்தோடு பேசிக்கொண் டிருக்கிறேன். ஆனால் நீ நடித்துக்கொண்டு, உன்னுடைய பொன்னான மனம் புண்படுவதாகச் சொல்கிறாய். கலீன விய் பள்ளத்துக்கு வரும் வழியில் நானே போய், கூட்டுப் பண்ணை விவசாயிகள் சொன்னது உண்மைதானா என்று பார்த்து விட்டு வருகிறேன். வைக்கோலை எடுத்திருக் கிறார்கள். எல்லைக் கற்கள் மாற்றப்பட்டுள்ளன. அது தான் விஷயம்! அதிலிருந்து நீ தப்ப முடியாது.''

''ஆனால் நான் ஒன்றும் தப்ப முயலவில்லை! வாழ்க் கை எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியதாக இதோ நிற்கிறேன். உன் வெறும் கைகளால் என்னை எடுத்துக் கொள்ளலாம்.. ஆனால் அவ்வாறு முயற்சிப்பதற்கு முன்னர் கொஞ்சம் கோந்து எடுத்துக் கையிலே தடவிக்கொள்வது நல்லது! நண்பனே சரியாகத் தடவிக்கொள். இல்லையென் றால் ஆறா மீன் நழுவதைப்போல் தப்பி விடுவேன்...''

''துபியான்ஸ்கி ஆட்கள் செய்தது என்னவென்றால் நிலப்பறி ஆகும். ஆனால் அதற்கு நீயே, பொலியனீத்ஸா மட்டுமே பதில் சொல்லியாக வேண்டும்!''

''நிலத்தின் எல்லைக் கற்களைத் தள்ளி வைத்ததை இன்னும் நிரூபிக்க வேண்டியுள்ளது, நண்பரே! இப்பொழுது இப்படி நடந்துள்ளதாக உன் தரப்பிலிருந்து நீ சொல்லி யிருக்கிறாய். உன் வைக்கோலுக்கு ஒன்றும் குறி போட் டிருக்கவில்லை.''

''குறியிட்ட ஆடுகள் கூட ஓநாயால் திருடப்பட்டு விடு கின்றது.''

பொலியனீத்ஸா ஓர் அசமந்தச் சிரிப்பு சிரித்துக்கொண்டு

அருவருப்புடன் தலையை ஆட்டிக்கொண்டு, ''உச்! உச்! இப்பொழுது எங்களை ஓநாய்களுடன் ஒப்பிடுகிறாய்! என்ன வேண்டுமானாலும் சொல். ஆனால் எல்லைக் கற்களைத் தோண்டி யாரும் தள்ளியிருப்பார்கள் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை.''

''வெளியில் போய் நீயே பார்த்துக்கொள். பழைய குறிகள் இன்னும் அங்கு இருக்கின்றன, தரை பொதபொத வென்று கிடக்கிறது. புல்லும் குட்டையாகத் தானிருக் கிறது, சுற்றுப் பள்ளம் எங்கு இருக்கின்றன என்பதை நீயே பார்த்துக்கொள்ளலாம், அதுதான் விஷயம்! அதற்கு என்ன சொல்லப் போகிறாய்? நீ செல்ல விரும்பினால் நாம் சேர்ந்தே போகலாம். போகலாமா? தோழர் பொலியனீத் ஸா என்னிடம் தட்டிக்கழிக்க முடியாது! சரி, நாம் போ கிறாமா? இல்லையா?''

தவீதவ் பதிலை எதிர்பார்த்தவாறு அமைதியாகப் புகைத்துக் கொண்டிருந்தான். பொலியனீத்ஸாவும் புன் னகை செய்தபடி இருந்தான். செடி நிறைந்த அந்த அறை புழுக்கமாக இருந்தது. பூச்சிகள், அழுக்குப்படிந்த சன்னல் தட்டுகளில் முட்டி மோதி, விடாமல் பறந்து கொண்டிருந் தன. அடர்த்தியாக வளர்ந்திருந்த தொங்கு படர் கொடி களின் ஓர் இடைவெளியின் ஊடே, வயதுக்கு சற்று அதிக பருமனுடன், ஆனாலும் அழகிய தோற்றத்துடன் காணப் பட்ட ஓர் இளம்பெண், இரவு உடையை மடக்கிவிட்டுக் கொண்டு முன் முற்றத்தின் வாசலுக்குப் போவதைக் கண் டான். நெற்றியில் கையை வைத்து தெருவைப் பார்த்து நின்றவள், திடீரென்று கீச்சுக் குரலில் ஆத்திரத்தோடு, ''ஃபெங்கா! ஒன்றுக்கும் பயனில்லாதவளே! கன்றுக்குட்டி யைக் கொண்டுவா! கிடையிலிருந்து பசு வந்துவிட்டதை நீ பார்க்கவில்லையா?'' என்று அலறினாள்.

பொலியனித்ஸாவும் சன்னல் வழியாக, அந்தப் பெண் ணின் உப்பி ஊதிய வெந்நிற தோளையும், தலைத்துணிக் கடியில் தொங்கிய வெள்ளிநிற சுருள்கூந்தல் தென்றலில் ஆடியதையும், பார்த்துவிட்டு ஏதோ காரணத்தால் உதட் டைக் கடித்துப் பெருமூச்சுவிட்டான்.

''அவள்தான் நிர்வாகத்தின் வேலைக்காரப் பெண். அவள் இங்குதான் வசிக்கிறாள். இதைப் பெருக்கி சுத்தம் செய்கிறாள். அவள் ஒன்றும் மோசமானவள் அல்ல. ஆனால்

உரக்கக் கத்துவதில் விருப்பங் கொண்டவள். இந்தப் பழக்கத்திலிருந்து அவளை என்னால் திருத்த முடியவில்லை... நான் ஒன்றும் வயலுக்குப் போக வேண்டியதில்லை தவீதவ். நீ ஏற்கெனவே வெளியில் போய் நீ பார்க்கவேண்டியது அனைத்தையும் பார்த்துவிட்டு வந்துவிட்டாய். நான் வைக்கோலைத் திருப்பித் தரப்போவதில்லை. அப்படியென்றால் அப்படித்தான். இது பிரச்னைக்குரிய ஒன்று! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இங்கு நில அளவையாளர் வந்திருந்தனர். துபியான்ஸ்கி கிரெமியாச்சி கிராமங்களுக்கிடையே தகராறைத் தீர்த்து வைக்கும் பிரச்னையை நாம் தொடக்க வேண்டியதில்லை.''

''அப்படியானால் வேறு யார் செய்வது?''

''மாவட்ட அதிகாரிகள்.''

''சரி, நான் ஒத்துக்கொள்கிறேன். நிலத் தகராறு ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் வைக்கோலைத் திருப்பக் கொடுத்தாக வேண்டும். நாங்கள்தான் அரிந்தோம். மேலும், அது எங்களுக்குத் தான் சொந்தம்.''

அர்த்தமற்ற உரையாடல் என்று கருதிய இந்த விவாதத்துக்கு ஒரு முடிவு கட்ட விரும்பினான் பொலியனீத்ஸா. அவன் இப்பொழுது சிரித்துக்கொண்டிருக்கவில்லை. மேசை மீது வெறுமனே வைத்து இருந்த அவனது விரல்களை, எடுத்துவிட்டு பெருவிரலை அடுத்து இரண்டு விரல்களுக்கிடையில் கட்டை விரலை மடக்கிக்கொண்டான். அவன் கண்களிலேயே இந்த இணைப்பை எடுத்துச் சொல்லியபடி, அவனுடைய சொந்த உக்ரேனிய மொழியில், ''தெரிகிறதா? இல்லை என்று பொருள். அதுதான் என் பதில்! எனவே வணக்கம். என்னை அமைதியாக இருக்கவிடு, போய் வரலாம். நல் வாழ்த்துக்கள்!''

தவீதவ் கொஞ்சம் சிரித்தான்: ''விவாதிப்பதற்கு நீ ஒரு விநோதமான ஆள்... சந்தைக்கடைப் பெண்ணைப் போல கைக்குறி காட்டுகிறாயே! வார்த்தை கிடைக்காமல் போய்விட்டதா? இதுவாதமல்ல தோழா! திருடுபோன எங்கள் வைக்கோல்பற்றி அரசு வழக்குரைஞரிடம் நான் புகார் செய்யட்டுமா?''

''நீ விரும்பும் யாரிடமும் புகார் செய்யலாம்! அரசு வழக்குரைஞர் அல்லது மாவட்டக் குழு, யாரிடமானாலும் சரி. என்னைப் பொருத்தமட்டில் வைக்கோலையோ, நிலத்

தையோ கொடுக்கப் போவதே இல்லை.'' இதை மீண்டும் ருஷ்ய மொழியிலேயே சொன்னான் பொலியனீத்ஸா.

இதற்குமேல் சொல்ல ஒன்றும் இல்லை. தவீதவ் எழுந்து அவனைச் சிந்தனையோடு பார்த்தான்.

''பொலியனீத்ஸா, உன்னைப் பார்க்கும்போது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஒரு தொழிலாளியும், ஒரு போல் ஷெவிக்குமாகிய நீ சிறிய உடைமைக்காரனைப் போல, எப்படி இவ்வளவு கீழாக இறங்கி விட்டாய்? குலாக்கின் சகல சாமான்களையும் கொண்டு அறையைப் பாதுகாத்து வைத்திருப்பதைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதுடன் பேச்சைத் தொடங்கிவிட்டாய். என்னைக் கேட்டால் குலாக்கு களின் சாமான்களை மட்டுமல்ல, அந்த வாசனையையும் அப்படியே காப்பாற்றி வருகிறாய் என்பேன், உண்மைதான்! இன்னும் ஆறு மாதங்களில் அந்த நாற்றத்தில் நீயே வாடு வாய்! இருபது ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்திருந்தால், நீயொரு சரியான குலாக்காக இருந்திருப்பாய். இது தான் விஷயம்!''

பொலியனீத்ஸா தோள்களை உலுப்பிக்கொண்டான். சதைச் சுருக்குகளுக்குள் மீண்டும் விழிமறைந்து கொண்டது.

''என்னைப் பொருத்த மட்டில் நானொரு குலாக்கா இல்லையா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் தவீதவ் நீ அருமையான பாதிரியாகவாவது, குறைந்தபட்சம் சர்ச் மேற்பார்வையாளனாவது மாறியிருப்பாய்!''

''ஏன்?'' என்று உண்மையான வியப்புடன் கேட்டான் தவீதவ்.

''முன்னாள் மாலுமியான நீ சமயக்கொள்கையில் கழுத் தளவு மூழ்கியிருக்கிறாய். மாவட்டச் செயலாளனாக நான் இருந்தால், நீ உன் கட்சி அட்டையை, இந்தத் தந்திர விளையாட்டுக்கு, மேசைமீது போட்டுவிட்டுப் போக நேரி டும்.''

''என்ன தந்திரம்? எதைப்பற்றிப் பேசுகிறாய்?'' என்று தோள்பட்டைகளை நெருக்கிக்கொண்டு வியந்தான் தவீதவ்.

''சும்மா ஒன்றுமறியாத அப்பாவியைப் போல நடிக்காதே! நான் என்ன பேசுகிறேன் என்பது உனக்கு நன்கு தெரியும். நாங்கள் இங்கு மதத்தை எதிர்த்துச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். கூட்டுப்பண்ணையின் பொதுக் கூட் டத்தில் இருமுறை சர்ச்சை மூடுவது பற்றி விவாதித்தோம்.

கிராமக் கூட்டத்திலும் ஒருமுறை அவ்வாறு செய்தோம். ஆனால் நீ என்ன செய்துகொண்டு இருக்கிறாய்? ஒவ்வொரு தடவையும் எங்கள் பாதையில் முட்டுக் கட்டை போடுவதே உன் வேலையாகிவிட்டது!''

''பேசு, மேலே தொடர்ந்து பேசு. என்ன விதமான முட்டுக்கட்டை என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.''

''எவ்விதமான முட்டுக்கட்டையா?'' கோபம் வந்தவனாய் பொலியனீத்ஸா தொடர்ந்தான்: ''கூட்டுப்பண்ணைக் குதிரைகளை, ஞாயிற்றுக்கிழமைகளில் கிழவிகள் சர்ச்சுக்குப் போக வண்டியில் பூட்டிக் கொடுக்கிறாய்; இதுதான் உன் வேலை! இதை நினைவில் கொள்: எங்கள் பெண்கள் இதைத் தூக்கி என் மூஞ்சியில் வீசுகிறார்கள்: 'நீ அவனே, இவனே அது, இது' என்கிறார்கள். 'சர்ச்சை இழுத்து மூடி, அதைப் பொழுதுபோக்கு மையமாகப் பார்க்கிறாய்; ஆனால் கிரெமியாச்சி கிராமத்தலைவர், பெண் சமய நம்பிக்கையாளர்களை மதித்து நடக்கிறார். ஞாயிற்றுக்கிழமைகளில் குதிரை வண்டிகளில் கோயிலுக்குக்கூட அனுப்புகிறார்' என்கிறார்கள்.''

தவீதவ் தன்னையடக்க முடியாமல் சிரித்தான்.

''ஓகோ இதுதானா? இதுதான் அந்த மதநம்பிக்கையா? ஏன் தப்பு? இதில் ஒன்றும் பயங்கரம் இல்லையே!''

''உனக்குப் பயங்கரமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் கவனமிருக்கட்டும், இதைக் காட்டிலும் மோசம் வேறு கிடையாது!'' என்று கோபத்தோடு சொன்னான் பொலியனீத்ஸா. ''நீ கூட்டுப்பண்ணை விவசாயிகளுடன் ஒட்டிக்கொண்டு எல்லாரையும் திருப்தி செய்யப்பார்க்கிறாய். அவ்வாறு செய்யும் பொழுது, நம்முடைய மத எதிர்ப்பு இயக்கத்தைக் கெடுத்துவிடுகிறாய். அருமையான கம்யூனிஸ்டு என்றுதான் கூற வேண்டும்! மற்றவர்களை மட்டும் சிறு சொத்துக்காரர்கள் மாதிரி என்று திட்டிவிட்டு, தனக்குமட்டும் ஒரு வழி. அந்த வழி சாத்தானுக்குத்தான் வெளிச்சம். எங்கே உன் அரசியல் உணர்வு? உன்னுடைய போல்ஷெவிக் குணங்களெங்கே? மதசகிப்பின்மை என்ன வாயிற்று?''

''ஒரு நிமிடம் பொறு, தத்துவத்தை உருட்டாதே! கவனமாகப் பேசு!.. 'ஒட்டிக்கொண்டு' என்றாயே அதன் பொருள் என்ன? அந்தக் கிழவிகளை வண்டியில் ஏன் அனுப்

பினேன் தெரியுமா? என்னுடைய நோக்கம் என்னவென்று தெரியுமா?''

''உன்னுடைய ஒப்பற்ற உயரிய லட்சிய விளக்கத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை! நீ எப்படியும் விரும்பலாம். ஆனால் பாதிரிகளை எதிர்த்து நாங்கள் சண்டைபோடுவதில் தலையிட வேண்டாம். என்ன வேண்டுமானாலும் சொல், ஆனால், நான் மாவட்டக்குழுவின் கவனத்திற்கு உனது இந்தச் செயலைக் கொண்டு வரத்தான் போகிறேன். இதையும் நினைவில் வைத்துக்கொள்!''

''சரி, அதிகம் புத்திசாலியாய் இருப்பாய் என்று நினைத்தேன் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்'' என வருத்தத்துடன் கூறிவிட்டு, போய்வருவதாகச் சொல்லிக் கொள்ளாமல் கூடப் புறப்பட்டான் தவீதவ்.

அத்தியாயம் பதினாறு

கிரெமியாச்சி கிராமத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்த பொழுது, நிலப்பறி வழக்கையும் வைக்கோல் திருட்டையும் அரசு வழக்குரைஞரிடம் எடுத்துச் செல்ல வேண்டாம் என முடிவு செய்தான் தவீதவ். இது பற்றி மாவட்டக் குழுவிடம் போகவும் விரும்பவில்லை. கலீனவிய் ஊகல் என்ற பள்ள நிலம் உண்மையிலே யாருக்குச் சொந்தம்? அந்தப் பிரச்சினை எப்பொழுது தீர்க்கப்பட்டது என்பது போன்றவற்றை மீண்டும் நன்றாகப் பார்க்க வேண்டும் என்று உறுதி செய்துகொண்டான். அதன் பிறகே நடவடிக்கை எடுக்க விரும்பினான்.

பொலியனீத்ஸாவுடன் நடந்த கசப்பான விவாதத்தை நினைவு படுத்திக்கொண்டே திரும்பிய தவீதவ் இப்படி நினைத்துக்கொண்டான்: ''அவன் செடிகொடி மீது, வைத்துள்ள ஆசையையும், வீட்டு வசதியையும் பார்த்தால், நமக்கு அது ஒரு மாதிரித்துணுக்கு! அவனை ஒரு பெரிய அறிவாளி என்று சொல்ல முடியாது. சில முட்டாள்களைப் போல, ஏதோ ஒரு வகைத்தந்திர புத்தி இருக்கிறது. ஆனால் அவனைச் சமாளிப்பதில் நாம் திறமையாக நடந்துகொள்ள வேண்டும்... வைக்கோலை அவன் ஒப்புதலுடன்தான் எடுத்திருக்கிறார்கள். ஆனால் அது முக்கியமான விஷயம் அல்ல. முக்கியமான விஷயம் எல்லைக் கற்கள், அவற்றை அவன்

அறிவுரைப்படி நகற்றப்பட்டிருக்க முடியாது. அவன் அந்த அளவுக்குப் போகமாட்டான், அது சங்கடத்தில் மாட்டி விடாதா? ஆனால் நகற்றப்படும் விஷயம் தெரிந்தும் வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண்டிருந்தால் அது மிக மோசம்! அவனது கூட்டுப்பண்ணை வேலை செய்யத் தொடங்கி ஆறு மாதங்கள் தான் ஆகின்றன. அதற்குள் பக்கத்திலுள்ள நிலங்களைப் பறிக்கவும், திருடவும் தொடங்கினால், கூட்டுப்பண்ணைகள் உடைந்து நொறுங்கிவிடும்! இது மீண்டும் அவர்களைப் பழைய வாழ்க்கைக்குத் தள்ளுவதாகும். முன்னர்போல அவரவருக்கு முடிந்த அளவு நிலத்தை அபகரித்துக் கொள்வது. அது நடக்காது! இந்த நிலம் யாருடையது என்பதை அறுதி செய்துகொண்டவுடன் மாவட்டக் குழுவிடம் போக வேண்டியதுதான். அவர்கள் இருவருக்குமே மூளை வைத்தியம் செய்யட்டும். கிழவிகள் தொடர்பாக எனக்கும், கூட்டுப்பண்ணை விவசாயிகளின் மண்டையில் தவறான கருத்துக்களை ஏற்றியமைக்காக பொலியனீத்ஸாவுக்கும் இந்தவைத்தியம் செய்யப்படட்டும்.''

ஒரே சீராக குதிரை அசைந்து ஆடிவந்தது தவீதவுக்குத் தூக்கத்தைக் கொண்டு வந்துவிட்டது. துபியான்ஸ்கியில் முற்றத்தில் நின்று கொண்டிருந்த தடித்த பெண்ணின் உருவம் அந்தத் தூக்கக் கலக்கத்தில் நினைவுக்கு வந்தது. உதட்டை அருவருப்புடன் நெளித்துக் கொண்டு, ''அவளுக்குத் தேவைக்குமதிகமாக உடம்பிலே இருந்த சதைப் பிடிப்பு'' என்று நினைத்தான். ''இந்த வெயிலில் வியர்த்துக் கொட்ட அவள் சென்றிருக்கவேண்டும். அது தான் விஷயம்!'' அவனுடைய நினைவின் முன்னால், லூஷ்காவின் கட்டான உடலமைப்பும், இளமை வடிவும், இதம் தரும் நடையும், அவளுடைய கூந்தலை நீவிவிடும் ஆசையூட்டக் கூடிய அவளது கரங்களும், அடிவிழிகளால் புருவத்தை நெளித்துக்கொண்டு ஆசையொழுகப் பார்க்கும் கிண்டல் நிறை பார்வையும் இவை எல்லாவற்றையும் அவளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான்... ஏதோ ஒரு திடீர்த்தாக்குதலில் இருந்து விழித்துக் கொண்டவனைப் போல, சேணத்தில் சரியாக உட்கார்ந்துகொண்டு, கோபமாக சாட்டையால் இரண்டு சொடுக்குவிட்டு வேகமாகப் போகத் தொடங்கினான்...

வரவர அவனுடைய நினைவு, அவனுக்கே தொல்லை கொடுக்கத் தொடங்கிவிட்டது. வேண்டாத வேளைகளி

லெல்லாம், ஒரு முக்கியமான பேச்சுவார்த்தையின்போது, சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது, கனவில், இப்படியெல்லாம் லூஷ்காவின் நினைவு மீண்டும் மீண்டும் நினைவுக்கு வரும். அவளை மறக்க வீண்முயற்சி செய்து கொண்டிருந்தான்...

நண்பகலில் கிரெமியாச்சி வந்து சேர்ந்தான். ஒஸ்த்ரவ்னோவும், கணக்கனும் ஏதோ சுவைபடப் பேசிக் கொண்டிருந்தனர். இவன் கதவைத் திறந்தவுடன் ஏதோ உத்தரவு போட்டது போல உடனே அமைதி நிலவியது. வெயிலாலும், பயணத்தாலும் களைத்துப் போன தவீதவ் பெஞ்சில் உட்கார்ந்தான். ''எதைப் பற்றிய பேச்சு? நகூல்னவ் அலுவலகத்துக்கு வந்தானா?'' என்று கேட்டான்.

''இல்லை. அவன் வரவில்லை'' என்று ஒஸ்த்ரவ்னோவ் சொல்லிவிட்டு, கணக்கனைத் திடீரென்று ஒருமுறை பார்த்தான். ''நீங்கள் கற்பனை செய்தபடி நாங்கள் விவாதித்துக் கொண்டிருக்கவில்லை தோழர் தவீதவ். நாங்கள் கூட்டுப் பண்ணை பற்றிய சில விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தோம். அது சரி, துபியான்ஸ்கி ஆட்கள் நம்முடைய வைக்கோலைக் கொடுக்கப்போகிறார்களா? இல்லையா?''

''அவர்கள் இன்னும் அதிகம் கேட்கிறார்கள்... உன்னுடைய கருத்துப்படி... அது யாருடைய நிலம் யாக்கவ் லுக்கீச்?''

ஒஸ்த்ரவ்னோவ் உலுக்கிக்கொண்டான். ''அதை யார் சொல்ல முடியும், தோழர் தவீதவ். இது ஒரு சிக்கலான பிரச்னை. முதன் முதலில் அந்த நிலம் துபியான்ஸ்கி கிராமத்துக்குத் தான் ஒதுக்கப்பட்டது. இது புரட்சிக்கு முன்னர் நடந்தது. ஆனால் சோவியத் அரசு, கலீனவிய் ஊகலில், பாதிக்குமேல் நமக்குக் கொடுத்துவிட்டது. 1926இல் துபியான்ஸ்கி மக்கள் மேலும் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் அப்போது அந்தக் கல் எந்த இடத்தில் நடப்பட்டது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் என்னுடைய நிலம் மறு பக்கம் இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தித்தோக் அங்கு கொஞ்சம் புல் அறுத்தான். அவனாக அதை அறுத்துக் கொண்டுவந்தானா ஏதாவது ஓர் ஏழையிடமிருந்து வாங்கினானா என்பதை என்னால் கூற முடியாது. எனக்குத் தெரிந்த நல்ல வழி, மாவட்ட நில அளவையர் தோழர் ஷிபர்த்னோயை அழைத்து இதை

கவனிக்க வேண்டியதுதான். பழைய வரை படங்களை வைத்து, எங்கே கல் இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து விடுவார். அவர்தான் இருபத்து ஆறில் இதை அளந்தார். எனவே அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.''

தவீதவ் மகிழ்ச்சியோடு கைகளைத் தேய்த்துக்கொண்டான்: ''அருமையான யோசனை! ஷபர்த்னோவுக்கு இது யாருடைய நிலம் என்பது தெரிந்திருக்கும், அதுதான் விஷயம். நான் கூட, இங்கு வந்த யாரோ சில நில அளவைக் குழுக்களால் அளக்கப்பட்டதாக நினைத்தேன். ஷ்சுக்கார் கிழவனைப் பிடித்து குதிரைகளைப் பூட்டிக் கொண்டு நேராக மாவட்டத் தலைநகருக்குப் போய், ஷிபர்த்னோவை அழைத்து வரச் சொல். நானும் ஒரு குறிப்பு எழுதி வைக்கிறேன்.''

வெளியில் போன ஒஸ்த்ரவ்னோவ் ஐந்து நிமிடங்கள் கழித்துத் திரும்ப வந்தான். அவனது சிரிப்பு மீசைக்குள் முண்டிக்கொண்டிருந்தது. விரலால் சைகை காட்டி, ''வைக்கோல் போர்ப் பக்கம் வந்து ஒரு பெரும் அதிசயத்தைப் பாருங்களேன்...'' என்றான்.

அலுவலகத்தின் முற்றம், கிராமம் முழுவதையும் போலவே, அந்த நண்பகலில், வெயில் காலத்தில் இருக்க வேண்டிய முறையில் வெறிச்சோடிக் கிடந்தது. காற்றில் வெயிலில் காய்ந்த புல்லின் மணமும், குதிரைச்சாண வாசனையும், மூக்கைத் துளைத்தன. ஆனால் தவீதவ் நுழைந்தபொழுது அப்பொழுதுதான் செதுக்கிப்போட்ட புல்லின் வாசனை மூக்கைத் துளைத்தது. நுனி கருகியும், ஆனால் பூ விட்டுக் கொண்டும் இருந்தது. ஒரு விநாடி புல் வெளியில் அதன் பசுமையான புதியபடப்பருகில் மணத்தை அநுபவித்துக் கொண்டு நிற்பதைப் போல இருந்தது. இரட்டைக் கதவை மிகவும் கவனமாகத் திறந்த ஒஸ்த்ரவ்னோவ், தவீதவ் உள்ளே வருவதற்காக சற்று விலகி நின்றான். தவீதவிடம் குசுகுசுவென, ''இந்த இரண்டு புறாக்களையும் பாருங்களேன். ஒரு மணி நேரத்திற்கு முன்னால், இவர்கள் இரண்டு பேரும் சாகிறாற்போல சண்டை போட்டுக் கொண்டார்கள் என்றால் நம்புவீர்களா? தூங்கும்பொழுது ஏதோ ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது போலும்...''

இருட்டிலே இன்னும் பழக்கப்படாததால் முதல் நிமிடம் தவீதவுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஏனோதானோ

வென்று குவிக்கப்பட்டிருந்த வைக்கோலின் மேல் எங்கோ ஒரு வெடிப்பின் வெளியாக ஒளி வீசிக்கொண்டிருந்தது. அதன் பின்னர் ஷ்சுக்கார் தாத்தா தூங்கிக்கொண்டிருப்பதையும், அவன் அருகில் த்ரஃபீம் ஆட்டுக்கிடாய் பந்துபோல் சுருண்டு தூங்கிக் கிடப்பதையும் கண்டான்.

''காலையெல்லாம் இந்தக் கிடாயை சாட்டை எடுத்துக் கொண்டு ஷ்சுக்கார் கிழவன் தேடிக்கொண்டு திரிந்தான். இப்பொழுது இருவரும் ஒன்றாகத் தூங்குகிறார்கள்'' என்று குரலைத் தணிக்காமலே ஒஸ்த்ரவ்னோவ் சொன்னான்.

ஷ்சுக்கார் தாத்தா எழுந்தான். அவன் கையை ஊன்றி எழும் முன்னர், த்ரஃபீம் ஒரு குதியில் எழுந்து, தரைமேல் நின்ற மறு விநாடி தலையைக் குனிந்து, தாடியை ஆட்டிக் கொண்டு, அச்சுறுத்திக்கொண்டு வந்தது.

''நல்ல மனிதர்களே, கொம்பு முளைத்த இது என்ன பேயோ, என்று பார்த்தீர்களா?'' என்று கலங்கிய குரலில், படபடப்புடன், மோதவரும் கிடாயைக் காட்டிக்கொண்டு பேசினான் ஷ்சுக்கார். ''இரவெல்லாம் இங்கே வைக்கோலையே சுற்றியது. அதைப் போட்டுக்கொண்டு, தும்மிக் கொண்டு, பல்லைக் கடித்துக்கொண்டே திரிகிறது. கண்ணை இமை மூடவிடமாட்டேன் என்கிறது இந்த சனியன்! இன்று காலையில் எத்தனை தடவை சண்டை போட்டேன் தெரியுமா? அப்புறமும் பாருங்கள், பதுங்கி வந்து இங்கேயே படுத்துக் கொண்டது. இது பேய்வேலைதான் இல்லையா? இப்பொழுது தூக்கம்விட்டு எழுந்தவுடன் சண்டைபோடத் தயாராகிவிட்டது இந்தத் தொலைகிற சனியன். இந்தத் தொல்லையில் நான் எப்படி வாழ்வதோ? ஒன்று நான் அதைத் தீர்த்துக் கட்ட வேண்டும், அல்லது அது என் வயிற்றில் பாய்ந்துவிடும் அவ்வளவுதான். அதுவே ஷ்சுக்கார் தாத்தாவுக்கு இறுதிவிடை கொடுத்ததாகிவிடும்! கதையைச் சுருக்கிச் சொல்வதென்றால், நம்மில் யாராவது ஒருவர் இந்த கொம்பு முளைத்த பேயிடம் பலியாகி, இங்கு பிணமாகப் போகிறோம்...''

ஷ்சுக்கார் கிழவன் கையில் திடீரென்று ஒரு சாட்டை தென்பட்டது. ஆனால் அதை அவர் உயர்த்தும் முன்னர், த்ரஃபீம் இரண்டு குதிகுதித்து, அங்கிருந்த இருண்ட மூலையில் போய் நின்றது. கால்களைப் பிறாண்டிக்கொண்டு, ஒளி நிறைந்த கண்களால் குத்தி ஊடுருவி விடுவதைப்

போலப் பார்த்தது. கிழவர் சாட்டையை அருகே போட்டு விட்டுக் கவலையுடன் தலையை அசைத்தான்.

''இது எவ்வளவு தந்திரக்கார கிடாய் பாருங்கள். சாட்டை கையிலிருந்தால்தான் இதைத் துரத்த முடியும். நான் எப்பொழுதுமே சாட்டையை வைத்துக்கொண்டிருக்க முடியுமா? ஏனென்றால் நாம் எதிர்பார்க்காத இடங்களில் எல்லாம் இது எனக்காகப் பதுங்கி எதிர்பார்த்துக் கிடக்கும்! எந்த நேரமும் கையில் சாட்டையை வைத்துக்கொண்டே இருக்க வேண்டியதாகிறது. இந்த ஆடு என்னைப்பின் தொடராமல் நானும் எங்கும் நகர முடியாது! நீங்கள் எங்கு விரும்பவில்லையோ அங்குதான் வந்துநிற்கும். உதாரணமாக நேற்று எடுத்துக்கொள்ளுங்கள். இந்த படப்புக்கு அப்பால் ஒரு மூலைக்கு அவசரத் வேவையை முன்னிட்டுப் போனேன். நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒரு கிடாயும் இல்லை. இதற்காக நானே 'கடவுளுக்கு நன்றி சொல்லிச் சொல்லிக் கொண்டேன். எங்கோ குளிரான இடத்தில் த்ரஸ்பீம் ஓய்வெடுத்துக் கொண்டு, அல்லது வெளியில் எங்கோ மேய்ந்துக் கொண்டு புல்லைக் கடித்துக் கொண்டிருக்கலாம்' என்று எனக்குள் நானாகவே சொல்லிக்கொண்டேன். நிம்மதியான இந்த எண்ணத்துடன், படப்புக்குப் பின்னால் போய் உட்கார்ந்தேனோ இல்லையோ? அங்கே இது கொம்பைச் சாய்த்து என் இடையில் ஒரு குத்துவிட வந்துவிட்டது. உடனே நான் எழ வேண்டியதாகிவிட்டது... சாட்டையை எடுத்து அடித்து விரட்டிவிட்டு உட்கார்ந்தவுடன் மீண்டும் வந்து விட்டது... எத்தனை தடவை என்னைத் தாக்கிற்று தெரியுமா? அடிவாங்காமல் தப்பி விடுகிறது இது என்ன வாழ்க்கையோ? எனக்கோ காலில் வாதம். காலை மடக்கி குனிந்து பட்டாளத்து வீரனைப்போல நிற்க முடியுமா? என் கால்கள் நடுங்குகின்றன. பின்பக்கமும் ஊசி குத்தினாற் போல வலிக்கிறது. இந்தக் கிடாயால் என் உடல்நலமே கெட்டுவிட்டது. இதனால் நான் ஏதாவது ஓர் அசந்தர்ப்பமான இடத்தில் செத்தாலும் வியப்படைய மாட்டேன்! கழுகு மாதிரி ஒரு நாள் முழுவதும் வட்டமிட்டுக்கொண்டே திரிந்த நான், என்னை யாராவது பிடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவேண்டும் போலிருக்கிறது.. இவ்வளவு கேவலத்தை இந்த த்ரஸ்பீம் எனக்குக் கொடுத்துவிட்டது. அப்பப்பா!''

ஷ்சுக்கார் கோபத்தோடு காரி உமிழ்ந்து கொண்டு, வைக்கோலில் ஏதோ முண்டியடித்துத் தேடினான். தன்னைத் தானே திட்டிக் கொண்டான்.

''கொஞ்சம் நாகரிகமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். கழிவறையை உபயோகிக்க வேண்டும். படப்புக்குப் பின்னால் போகலாமா?'' என்று குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டே சொன்னான் தவீதவ்.

ஷ்சுக்கார் அவனைக் கவலையோடு பார்த்துக் கொண்டு அர்த்தமற்ற சைகை காட்டினான்.

''என்னால் முடியாது! என் மனச்சாட்சி இடந்தராது. நான் ஒன்றும் உங்களைப் போல நகரவாசியல்ல. நல்ல திறந்த வெளிக்காற்றில் தான் என் அவசரத் தேவைகளைக் கழிக்கப் போவது என் வாழ்க்கை முழுவதுமான பழக்கம்! எனக்குக் காற்று வீசிக் கொண்டே இருக்க வேண்டும். கடுங்குளிர் காலத்தில்கூட என்னை அந்த சுரங்கத்துள் தள்ள முடியாது. நீ சொல்கிற அந்த 'சரியான' இடத்துக்குப் போனால் அந்த நாற்றம் என்னை மயக்கம் போட வைத்து விடுகிறதே.''

''அப்படியானால் உனக்கு நான் எந்த வகையிலும் உதவி செய்ய முடியாது. நீயே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியதுதான். இப்பொழுது குதிரைகளை அந்த வண்டியில் மாட்டி, நகரத்திற்குப் போய், நில அளவையாளரை அழைத்து வர வேண்டும். நமக்கு அவர் அவசரமாக வேண்டும். லுக்கீச், ஷிபர்த்னோயின் வீடு எங்கிருக்கிறது என்று தெரியுமா?''

பதில் கிடைக்காததால் தவீதவ் சுற்றுமுற்றும் பார்த்த பொழுது ஒஸ்த்ரவ்னோவைக் காணோம். ஷ்சுக்கார் கிழவன் குதிரையை மாட்ட எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அநுபவத்தில் உணர்ந்திருந்ததால், அவனே குதிரையைப் பூட்டப் போய்விட்டான்.

''நகரத்திற்குப் போக எனக்கு நேரம் பிடிக்காது!'' என்றான் ஷ்சுக்கார்.

''ஆனால், தோழர் தவீதவ், எனக்கு ஒன்றை விளக்க வேண்டும். எதற்காக முன்னாளைய குலாக்குகளினுடைய கால்நடைகளும், அவர்களது எஜமானர்களைப் போலவே குணமுடையவையாயிருக்கின்றன? ஏன் அவை தந்திரமும் தீங்கு செய்பவையாகவும் இருக்கின்றன? அந்தச் சனியன் த்ரஃபீமை எடுத்துக்கொள்ளுங்கள். எதற்காக அது எப்பொ

ழுதும் யாக்கவ் லுக்கீச்சை முட்டியதில்லை? ஆனால் என்னையே முட்டப் பார்க்கிறது. ஏனென்றால் அவனிடம் அந்த குலாக்குகளின் வாசனையைக் காண்பதால் தொடுவதில்லை. அதற்குப் பதிலாக என்மீதே எல்லா ஆத்திரத்தையும் கொட்டுகிறது.

''அல்லது ஒரு முன்னாளைய குலாக்கின் பசுவை எடுத்துக் கொள். கூட்டுப்பண்ணைக் கறவைக்காரிக்கு,அது தன்னுடைய முன்னாள் எஜமானுக்குக் கொடுத்த அளவு கொடுக்காது. ஆனால் அது சரியாகவே படுகிறது. ஏனெனில் அவளுடைய முன்னாள் எஜமானி, பீட் கிழங்கும் வேறு பலவகை உணவும் கொடுத்தாள். ஆனால் இப்பொழுது கறவைக்காரி ஒரு கை வைக்கோலை சுருட்டிப் போட்டுவிட்டு, காம்புக்கருகில் உட்கார்ந்து பால் வரும் என்று கண்டால் வருமா?

''எந்த முன்னாளைய குலாக்கின் நாயையும் எடுத்துக் கொள். எப்பொழுது பார்த்தாலும் ஏன் ஏழையையும், கந்தையிலிருப்பவர்களையும் துரத்துகிறது? உதாரணமாக என்னையே எடுத்துக் கொள்வோம். இது மிக முக்கியமான கேள்வி. இது பற்றி மக்காரிடம் கேட்டேன். அவன் சொல்கிறான்: 'இதுதான் வர்க்கப் போராட்டம்' என்று. ஆனால் இது, எந்த விதமான வர்க்கப் போராட்டம் என்பதை அவன் விளக்கவில்லை. வெறுமனே சிரித்துவிட்டு அவன் வேலையைக் கவனித்துக்கொண்டு போய்விட்டான். நான் என்ன சொன்னேன் என்றால், என்ன சனியன் பிடித்த வர்க்கப் போராட்டமோ; கிராமத்திலே எந்த வீதியில் நடந்தாலும், நாயைக் கண்ட இடத்தில் எல்லாம் கழுத்து ஒடியத் திரும்பப் பார்த்துக் கொண்டேதான் திரிய வேண்டுமா? எந்த நாய்க்காவது இது நாணயமான நாய், இது உடைமை பறிமுதல் செய்யப்பட்ட குலாக்கினுடைய நாய் என்று அடையாளம் உண்டா? ஆனால் அது என்னைப் பார்த்தவுடன், மக்கார் சொல்வது போல குலாக்குகளின் வர்க்கவிரோதி என்பதைக் கண்டுகொள்கிறது. அதற்கு நான் என்ன செய்வது? சொத்தைப் பறிக்கலாம்! ஆனால் எப்படிப் பறிமுதல் செய்வது? உடம்பு மேலே இருக்கும் முடித்தோலைக் கழற்றிவிடலாம். ஆனால் பிறகும் உயிரோடு இருந்தால்! இது சாத்தியமல்ல. அது உன்னுடைய தோலை முதலில் உறித்துவிட்டுவிடும். எனவே விஷயம் தெளிவாக இருக்கிறது. முதலில் இந்த

வர்க்க விரோதியைக் கொன்றுவிட்டு, அதற்குப் பிறகுதான் தோலை எடுக்கப் போக வேண்டும். இப்படித்தான் மக்காரிடம் நான் யோசனை சொன்னேன். 'அந்த முறையில் பார்த்தால் ஊரில் உள்ள பாதி நாய்களைக் கொல்லவேண்டியிருக்குமே. கிழட்டு முட்டாளே!' என்றான். இதில் யார் முட்டாள்? அதுதான் தெரியவில்லை. அதுதான் இப்பொழுது கேள்வி. என்னைப் பொருத்தமட்டில் மக்கார் தான் 'ஒரு மாதிரி' எனக்கு ஒன்றும் இல்லை... கிட்டங்கி அலுவலகத்தில் பதனப்படுத்த நாய்த்தோலை வாங்குகிறார்களா? வாங்குகிறார்கள்! இந்த நாட்டில் முன்னாளைய குலாக்குகளின் எத்தனை நாய்கள் எஜமானர்களோ, மேற்பார்வையோ இல்லாமல் திரிகின்றன? லட்சக்கணக்கில்! இத்தனையையும் தோலாக்கி, அவற்றை பதப்படுத்தி, அந்த ரோமத்தை காலுறையாகப் பயன்படுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? பாதி ருஷ்யா தோல் காலணியில் நடந்து கொண்டிருக்கும். நாய் மயிர் காலுறை போட்டுக்கொண்டால் கால்வாத நோய்தீர்ந்துவிடும். இந்த நிவாரணத்தை நீண்ட காலத்திற்கு முன் என் பாட்டியிடம் கேட்டிருக்கிறேன். அதை நானே செய்து பார்த்திருக்கிறேன். நீ இதை அறிய விரும்பினால் அதைக் காட்டிலும் சிறந்தது இல்லை. வார்த்தைகளை ஏன் வீணாக்க வேண்டும். நானே வாத நோயால் துயருற்று இருக்கிறேன். நாய் மயிர்காலுறை போட்டுத்தான் பிழைத்தேன். இது இல்லாமல் இருந்திருந்தால் எப்போதோ நான் நான்கு கால்களில் ஊர்ந்து செல்லத் தொடங்கி இருப்பேன்'' என்று முழக்கினான் ஷ்சுக்கார்.

''நகரத்துக்கு இன்றைக்குப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறாயா?'' எனக் கேட்டான் தவீதவ்.

''ஆமாம், கண்டிப்பாகப் போகத்தான் போகிறேன். ஆனால் என் பேச்சில் குறுக்கிடாது நான் என்ன சொல்கிறேன் என்பதை கவனமாகக் கேள். நாய்த்தோலை பயன்படுத்துவது குறித்து எனது அரிய யோசனை இதுதான். இரண்டு இரவுகளாக என்னால் தூங்கவே முடியவில்லை. இதன் வாயிலாக அரசுக்கும் குறிப்பாக எனக்கும் எவ்வளவு பணம் கிடைக்கும் என்று சிந்தித்தேன். என் கைகள் நடுங்காது இருக்குமேயானால், நானே அதிகாரிகளுக்கு எழுதியிருப்பேன். இதனால் ஏதாவது வந்து சேரும் என்பது உனக்குத் தெரியாது? என்னுடைய மூளை முயற்சிக்காக

அதிகாரிகள் எனக்கு ஏதாவது தருவார்கள். அதற்குப் பிறகு தான் மக்காரிடம் இதுபற்றிச் சொல்ல முடிவுசெய்தேன். நான் பேராசைக்காரன் அல்ல. எனவே அவனிடம் போய் முழு விவரத்தையும் கூறினேன். 'ஏய் மக்கார்! நானோ கிழவன். எனக்குப் பணமோ, பரிசோ இந்த வயதில் தேவை யில்லை. ஆனால் உனது எஞ்சிய வாழ்க்கை முழுதும் உன்னை மகிழ வைக்க நினைக்கிறேன். மத்திய அதிகாரிகளுக்கு எழுது. போர்க் காலத்தில் பெற்றது போன்ற ஒரு பெரிய பதக்கத்தை நீ பெறலாம். அவர்கள் உனக்கு பணம் பரி சாகக் கொடுத்தால், நாமிருவரும் முறையாகப் பகிர்ந்து கொள்ளலாம். உனக்கு வேண்டுமென்றால் ஒரு பதக்கம் கேட்டு எழுது. எனக்கு ஒரு பசுதான் வேண்டும். இல்லை யென்றால் ஒரு கிடாரி வாங்கப் போதுமான பணம் கிடைத் தால் அதுவே எனக்குப் போதும்.

''வேறு ஆளாக இருந்தால் காலில் விழுந்து எனக்கு நன்றி சொல்லி இருப்பான். ஆனால் அந்த மக்கார் இருக் கிறானே, நன்றி சொன்னான்... நாற்காலியிலிருந்து எப் படிக் குதித்தான் தெரியுமா? எப்படி என்னைத் திட்டினான்! 'நீ கிழவனாக ஆக, முட்டாளாகவும் ஆகிக் கொண்டு வரு கிறாய்!' என்று உறுமுகிறான். 'உன் தோள் மேல் தலைக்குப் பதிலாக காலிக்குடத்தை வைத்துவிட்டார்கள்!' என்கிறான். ஒவ்வொரு வார்த்தைக்கும் அப்படியும், இப்படியும், எல்லா வகையிலும் திட்டிக் குவித்துவிட்டான். அந்த அறையே அவன் வசைமொழிக் காற்றாக நிறைந்து ஒரு ஈ பறந்தால் கூட செத்துவிடும்! என் மூளையைப் பற்றித் திட்டுகிறான்! எனக்குப் பிடிக்கிறது, நான் சொல்லத்தான் செய்வேன்! அவன் என்ன பெரிய பேச்சாளர், பார்த்தீர்களா? மகாப் பெரிய புத்திசாலி! வைக்கோலைக்காத்த நாய் மாதிரி. சரி பேசிக் குதித்து ஓயட்டும் என்று நினைத்துக்கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தேன். அப்புறமும் என்ன? 'குதித்துக் கூப் பாடு போடுவதற்கு முன்னர் எந்த பாகத்தை வைத்து நாற் காலியில் உட்கார்ந்தானோ அப்படித்தான் மீண்டும் உட் கார வேண்டியது ஆயிற்று' என்று நான் நினைக்கிறேன்.

''கொஞ்ச நேரங்கழித்து, திட்ட முடியாமலும், சபிக்க முடியாமலும் களைத்துப் போய்விட்டான். பிறகு 'போது மா?'' என்று கேட்டான். எனக்குப் பொறுமை இழந்து விட் டது. நாங்கள் நெடுநாள் நண்பர்கள் தான். பிறகு நான்

'இப்படி அகங்காரமாகத் திட்டுவது என்றால், நீ ஓய்வெடுத்துவிட்டு பழையபடியும் பேசலாம், நான் காத்திருக்கத் தயார். எனக்கு அவசரமில்லை. ஆனால் இது என்ன இப்படி கண்டபடி திட்டுகிறாய் மக்கார்? நான் உனக்கு உதவ விரும்புகிறேன். என்னுடைய யோசனையால் உனது பெயர் சோவியத் ருஷ்யாவில் உள்ள அத்தனை பத்திரிகைகளிலும் வந்திருக்கும்' என்றேன். அவ்வளவுதான்! வெந்நீரை அவன் காலில் நான் ஊற்றி விட்டதைப்போல படாரென்று கதவைச் சாத்திவிட்டு வெளியே ஓடிவிட்டான்!

''அன்று மாலைப் பள்ளி ஆசிரியர் ஷ்பீன்யாவிடம் இது பற்றிப் பேசப் போனேன். அவர் நன்கு படித்தவர். அவரிடம் எல்லாவற்றையும் சொல்லி, மக்காரைப் பற்றியும் புகார் செய்தேன். ஆனால், இந்தப் படித்த ஆட்களுக்கெல்லாம் மூளை கழன்று இருக்கிறது. மிகவும் கழன்று இருக்கிறது! அவர் என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா? அவர் மூஞ்சியைச் சுளித்துக்கொண்டு 'பெரிய பெரிய மனிதர்களெல்லாம், தங்களது கருத்துக்களுக்காகத் துன்பப்பட்டிருக்கிறார்கள். அதுபோல உன் கருத்துக்காகத் தாத்தா நீயும் கஷ்டப்பட்டுத்தான் தீர வேண்டும்' என்கிறார். இது நல்ல ஆறுதல் மொழிதான்! இல்லை! அவர் ஒரு ஆசிரியர் அல்ல, கயவன்! கஷ்டப்பட்டு எனக்கு என்ன பயன்? என் கையிலே ஒரு பசு இருந்தது. இப்பொழுதோ அதன் வால் கூடத் தென்படவில்லை... எல்லாம் மக்காரின் எதிர்ப்பின் விளைவு! இவன் நண்பன் என்று சொல்லிக் கொள்கிறான். சனியன்! இவனால் வீட்டிலே தொல்லை தவிர வேறு ஒன்றும் கிட்டவில்லை... வீட்டிலே கிழவியிடம், என்னுடைய மூளை முயற்சிக்காக எல்லாம் வல்ல கடவுள் ஒரு பசுவைக் கொடுக்கப் போவதாக பெருமையாகச் சொல்லிவிட்டு வந்தேன். கொஞ்ச நம்பிக்கை! இப்பொழுது அந்தக் கிழவி என்மீது அறுவைக் கத்தி மாதிரி பாய்கிறாள், 'எங்கே உன்னுடைய பசு? இது உனது வேறொரு கதையா?' என்கிறாள். அவளது எல்லா அட்டூழியத்தையும் சகிக்க வேண்டியுள்ளது. எல்லாப் பெரிய மனிதர்களுமே இப்படி எல்லாம் போக வேண்டும் என்றால், அவர்களோடு நானும் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்று சொல்வேன்...

''இவ்வாறாக எனது அருமையான யோசனை ஒன்றுக்குமில்லாமல் வீணாகிவிட்டது... இருந்தாலும் நான் என்ன

செய்ய முடியும்? நீ சொல்வதைப்போல நாம் நம்முடைய விஷயத்துக்காகவே குதிக்க முடியுமா?..''

தவீதவ் கதவில் சாய்ந்தவாறு சிரித்துக் கொண்டு பதில் பேசாது இருந்தான். ஷ்சுக்கார், தவீதவைப் பொருட்படுத் தாமல், தன்னுடைய காலணிக் கயிற்றை இறுக்கிக்கொண்டு, கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தான்.

''கால்வாதத்துக்கு நாய்த்தோல் காலுறை நிவாரணம் தரும் நல்ல நேரடி மருந்து! கடந்த மாரிக்காலம் முழு வதும் அதைப் போட்டுக்கொண்டேதான் இருந்தேன். அதை ஒரு முறைகூட கழற்றவே இல்லை. என் கால்கூட ஒரு மாதிரி மரத்துவிட்டது. கழற்றாமல் போட்டுக்கொண்டே இருந்ததால், நாய்தோல் நாற்ற மெடுத்தது. கிழவி வீட்டை விட்டுத் துரத்தினாள். இருந்தாலும் நான் விடவில்லை. ஒரு மாதமாக கோழியை விரட்டும் சேவல் மாதிரி ஓடியாடிக் கொண்டிருந்தேன். இதனால் என்ன பலன்? ஒன்றுமில்லை! ஏனெனில் இளவேனிற்காலத்தில் என் காலை நனைத்து விட்டேன். அது கெட்டுப் போனது! ஆனால் இது அதி கம் நீடிக்காது. அந்த வியாதிபற்றி நான் அதிகம் பயப்பட வில்லை. நல்ல கத்தையான ரோமம் வைத்திருக்கும் ஒரு நல்ல நாயை அடுத்துக் கண்டவுடன் அதை வெட்டி இதைத் தயாரித்து விடுவேன். அவ்வளவுதான் ஒரு நொடியில் வியாதி பறந்துவிடும்! இப்பொழுது எப்படி நடக்கிறேன் என்று பாரு. நிறைய பார்லி சாப்பிட்ட வாத்து மாதிரி தத்தளிக்கிறேன். ஆனால் நாய்த்தோல் காலுறை போட்டுக் கொண்டவுடன் பழையபடியும் இளைஞனைப்போல கம்பீ ரமாக நடப்பேன். இதில் என்ன தொல்லை என்றால், என் மனைவி, இனிமேல் நாய் ரோமத்தில் காலுறை நெய்து கொடுக்கமாட்டாள். நாய் ரோம நாற்றம் அவள் தலை யைச் சுற்றவைத்து மயக்கம்போட வைப்பதால் நெசவுச் சக்கரத்திலேயே சுருண்டு விழுந்து விடுகிறாள். முதலில் இருமத் தொடங்குவாள். இருமி இருமி கடைசியில் உள்ளே இருப்பதெல்லாம் வெளிவரும்வரை இருமுகிறாள். கடவுள் அருளால், நான் அவளை அந்த வேலை செய்யுமாறு வற் புறுத்துவதில்லை. நானேதான் அந்த ரோமத்தை துவைத் தேன். சூரிய ஒளியில் காய வைத்தேன், நூற்றேன், நானே நெய்தேன். தேவை ஏற்பட்டால் தம்பி, எந்த கஷ்டமான வேலையையும் கற்றுக்கொண்டு விடலாம்.

''ஆனால் இது பாதித் தொல்லைதான். முதல் விஷயம், என் வீட்டுக்கிழவி இருக்கிறாளே, அவள் ஒரு கண்ணாடி விரியனும், வல்லூறும் சேர்ந்ததைப்போல! போன கோடையில் என் கால்கள் கொடுமையாக வலித்தன. நான் செய்யலாம்? அதன் பிறகுதான் நாய் ரோம காலுறையைப் பற்றி நினைத்தேன். எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் நாயை ஒருநாள் ஆசை காட்டி என் வீட்டுக்கு இழுத்தேன். தீனியைப் போட்டு, வீட்டில் வைத்து, அதன் ரோமத்தை எல்லாம், கைதேர்ந்த நாவிதனைப்போல மழித்து எடுத்துவிட்டேன். இரண்டு காதுகளிலும் பார்வைக்காக குஞ்சம்போல கொஞ்சம் ரோமத்தை விட்டுவைத்தேன். அதேபோல வால் குஞ்சத்தையும் ஈ ஓட்டுவதற்காக விட்டுவைத்தேன். நீ நம்பமாட்டாய். பதினாறு பவுண்டு ரோமம் அதிலிருந்து எடுத்தேன்!''

தவீதவ் கைகளால் முகத்தை மூடி மறைத்துக் கொண்டு சிரித்தவண்ணம், ''ஒரு நாளில் இது அளவுக்கு அதிகமாக இருக்கிறதே!'' என்றான்.

ஆனால் இதைக் காட்டிலும் குத்தலான கேள்விகள் கூட ஷ்சுக்காரின் பேச்சை நிறுத்த முடியவில்லை. அசட்டையாகத் தோள்களை உலுப்பிக் கொண்டே கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் பேசினான்: ''ஒருவேளை பத்து அல்லது பன்னிரண்டு பவுண்டு இருக்கலாம். அதை நான் நிறுக்கவில்லை. அந்த நாய்க்கு மெரினோ ஆடு மாதிரி அவ்வளவு அடர்த்தியாக ரோமம் இருந்தது! அதிலிருந்து எடுத்த ரோமம் என் வாழ்நாள் முழுக்கச் சரியாகப்போகும் என்று நான் நினைத்தேன். ஆனால் ஒரு கிஞ்சித்தும் இல்லை. ஒரே ஒரு காலுறை பின்னுவிட்டு, மற்றவற்றை முற்றத்தில் தோண்டிப் புதைத்துவிட்டாள் கிழவி! அவள் ஒரு பெண்ணா? மனிதனை வேட்டையாடும் வேங்கை! த்ரஃபீம் சனியன் மாதிரி பயங்கரமானவள். இவளும் த்ரஃபீமும் ஒரேமாதிரிப் பிறவிகள், ஆமாம்! கதையைச் சுருக்கிச் சொன்னால், நான் சேர்த்திருந்ததை எல்லாம் கெடுத்துவிட்டாள்! நான் முடியை வெட்டி எடுக்கும்போது அது ஆடாமல் ஓடாமல் இருக்க ஒரு சாக்கு ரொட்டித்துண்டைப் பயன்படுத்தினேன். ஆமாம் அப்படித்தான் நடந்தது...

''அந்த நாயும் ரொம்ப அதிர்ஷ்டம் பிடித்தது அல்ல. அது முடிவெட்டியதுடன் என்னை விட்டு ஓடியது. அத

னுடைய கூடுதலான மயிர்ச் சுமையை நான் குறைத்துவிட்டேன் என்று அதற்கு மகிழ்ச்சிபோலும். அதனுடைய வால் குஞ்சத்தையும் நன்றியோடு ஆட்டியது. அதன் பின் ஆற்றுக்கு ஓடியது. ஆற்றில் தன் கோலத்தைப் பார்த்ததோ இல்லையோ வெட்கத்தால் ஊளை போட்டுக் கதறத் தொடங்கிவிட்டது... அந்த ஆற்றின் கரையில் அது மேலும் கீழும் திரும்பத்திரும்ப நடந்ததாகவும், ஆற்றில் மூழ்கிச் சாக முயன்றதாகவும் பார்த்த மக்கள் சொல்கிறார்கள். நம்முடைய ஆற்றில்தான் குருவி குளிக்கக்கூடப் போதுமான நீர் இல்லையே. கிணற்றில் குதிக்கவோ அதற்குத் துணிவு போதாது. அதனிடமிருந்து எதை எதிர்பார்க்க முடியும்! சொல்லப் போனால் ஒரு மிருகம், ஒரு பிராணிதானே, மண்டையில் கொஞ்சம்தான் மூளை இருக்கும், மனித மூளை போல இராதல்லவா?..

''பக்கத்து வீட்டுக்காரரின் படப்புக்கு அடியில் போய் இந்த நாய் மூன்று நாட்களாகப் பதுங்கிக்கொண்டது. அது ஊளையிட்டுக் கொண்டு அங்குமிங்கும் ஓடிக்கொண்டே இருந்ததேயன்றி அந்த இடத்தைவிட்டு வெளியேறவேயில்லை. வெளிப்படையாக அந்தக் கோலத்தில் வெளி வரவே இல்லை. அதற்கு அது பற்றி அவ்வளவு மான உணர்ச்சி. வெட்க உணர்வைப் பாருங்களேன். கடைசியாக கிராமத்தைவிட்டே ஓடிவிட்டது. மாரிக்காலம் வரை எங்கோ ஒளிந்திருந்து ரோமம் பழையபடி வளர்ந்ததும் திரும்பவும் தன் எஜமானனிடம் வந்துவிட்டது. பெண்களைக் காட்டிலும்கூட அதற்கு மான உணர்வு அதிகம். கடவுள் சத்தியமாகச் சொல்கிறேன்!

''இனிமேல் நாய் முடி எடுக்க வேண்டி வந்தால், பெண்நாய்களை நான் தொடப்போவதில்லை. அவற்றின் பெண்மை உணர்வை அவமதிக்கக் கூடாது. இனி ஆண் நாயைத்தான் பிடிக்கவேண்டும். இவை மான மிக்கவை அல்ல. ஒரு கத்தியை எடுத்து முழுக்க மழித்தாலும் அது கண்ணைக்கூடச் சிமிட்டாது.''

''சரி உன்னுடைய கற்பனைக் கதைகளை விரைந்து முடிப்பாயா?'' என்று தவீதவ் குறுக்கிட்டான். ''நீ பயணம் போக வேண்டும். புறப்படு!''

''ஒரு நிமிடம்! என்னுடைய காலணிகளைப் போட்டுக் கொண்டு தயாராகி விடுகிறேன். ஆண்டவன் பெயரால்

கேட்கிறேன்: என்னிடம் குறுக்கிட வேண்டாம். குறுக்கிட்டால், நான் பேசிக்கொண்டிருப்பதை விட்டு மூளை வேறு திசையில் திரும்பிவிடும். நான் சொன்னபடி, மக்கார் என்னைச் சுத்த மட்டி என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அவன் நினைப்பது தவறு! என்னோடு ஒப்பிடும் பொழுது அவன் ஒரு கோழிக்குஞ்சு; அவனுக்கு இந்த வியாபார வித்தை எல்லாம் தெரியாது. நானோ, கிழட்டுப் பறவை ஆயிற்றே, என்னிடம் புதிர் போட்டு ஏமாற்ற முடியுமா? என்னுடைய மூளையை மக்கார் கடன் வாங்குவதால் அவனுக்கு ஒரு கெடுதலும் வராது. இதுதான் நான் சொல்வது.''

ஷ்சுக்கார் தாத்தாவின் வழக்கமான தாக்குதல்களில் இதுவும் ஒருவகை. ரஸ்மியோத்னவ் சொன்னதைப் போல ஷ்சுக்கார்தாத்தா 'முருக்கேறி இருக்கிறான்.' எனவே அவனை நிறுத்துவது என்பது சிரமம் மட்டும் அல்ல, முடியாத காரியமும் கூட. தூரதிர்ஷ்டம் பிடித்த இந்தக் கிழவனிடம் மிகுந்த பரிவுடன் அன்பாக நடந்துவந்த தவீதவ் கூட, இப்பொழுது இந்தக் கதையைத் தடுக்க விரும்பினான்.

''சரி போதும் நிறுத்து. தாத்தா! அதற்கு ஓய்வுகொடுத்துவிட்டு, நகரம் போய் நில அளவையர் ஷிபர்த்னோயை அழைத்துவரப் புறப்படு. அவரை உனக்கு தெரியுமா?''

''உனது ஷிபர்த்னோயை மட்டுமின்றி, அந்த ஊரில் உள்ள ஒவ்வொரு நாயையும் எனக்குத் தெரியும்.''

''நாய்கள் விஷயத்தில் நீ பெரிய நிபுணர்தான்! ஆனால் இப்பொழுது எனக்கு ஷிபர்த்னோய் வேண்டும் புரிந்ததா?''

''இங்கே அவரைக் கொண்டு வருவதாக நான் சொல்லிவிட்டேன். மணப் பெண்ணை அழைத்து வந்து சர்ச் வாயிலில் விடுவதைப்போல கொண்டுவந்து ஒப்படைக்கிறேன். ஆனால் என்னிடம் குறுக்கிடாதே. அடுத்தவன் விஷயத்தில் குறுக்கிடுகிற இந்தக் கெட்ட பழக்கம் உன்னிடம் இருக்கிறது. தவீதவ், நீ மக்காரைக் காட்டிலும் மோசம். மக்காராவது திமஃபேயைச் சுட்டு வீழ்த்தினான். அவன் ஒரு வீரக் கஸாக். எனவே அவன் குறுக்கிட்டால் நான் மரியாதை செய்வேன். ஆனால் நீ என்ன வீரச் செயல்கள் செய்திருக்கிறாய்? உன்னை எதற்காக நான் மதிக்க வேண்டும்? ஒன்று கூட இல்லை! இப்பொழுது உன் கைத் துப்பாக்கியை

எடுத்து என்னைத் தொந்தரவு செய்யும் இந்தக் கிடாயைச் சுட்டு வீழ்த்தினால் நான் என் வாழ்நாள் பூராவும் நன்றி யுடையவனாக இருப்பேன். ஆமாம்! மக்கார் ஒரு வீரன். அவன் எல்லா விஞ்ஞானங்களையும் கற்றுவிட்டு, இப்பொ ழுது ஆங்கிலம் படித்துக்கொண்டிருக்கிறான். என்னைப் போலவே அவனும் எல்லா விஷயங்களையும் விளங்கிக் கொள்கிறான். சேவல் கூவலைக் கணக்கிடுவதில் மிகத் திற மைசாலி. அவன் அந்த லூஷ்காவையும் துரத்தியடித்தான். அவளை நீ இழுத்துக்கொண்டு திரிந்தாய். கடைசியாக அந்த அயோக்கியன் திமஃபேயை ஒரே ஒரு குண்டால் சுட்டுத் தொலைத்தும் விட்டான்...''

''உன்னுடைய காலணிகளை வேகமாகப் போட்டுக் கொள்ள முடியாதா? எதற்காக இப்படித் தொங்கிக் கொண்டிருக்கிறாய்?'' தவீதவ் பொறுமையிழந்துபோய்க் கேட்டான்.

''நான் வார்பட்டையை இழுத்துப் மாட்டிக்கொண் டிருக்கிறேன், தெரியவில்லையா?'' என்று ஷ்சுக்கார் தாத்தா முணகினான். ''இருட்டில் வாரை மாட்டினால், சனியன் இப்படித்தான்'' என்று சொல்லிக்கொண்டான்.

''ஏன் நீ வெளிச்சத்துக்கு வரக் கூடாதா?''

''இங்கேயே எப்படியாவது மாட்டிவிடுகிறேன். அந்த மக்காரும் அப்படித்தான். அவன் தான் மட்டும் படித்துக் கொள்வது இல்லை, எனக்கும் சொல்லிக் கொடுக்கிறான்...''

''என்ன?'' என்று முறுவலித்தபடி கேட்டான் தவீதவ்.

''எல்லாவிதமான படிப்பும்தான்'' என்று தப்பித்துக் கொள்வது போல் பதில் சொன்னான் ஷ்சுக்கார். அவன் விஷயத்துக்குள் உள்ளே போகவிரும்பவில்லை. தயக்கத் தோடு, ''எல்லா வகை படிப்பும்தான் என்று சொல்கிறேன் புரிகிறதா? அயல்மொழி வார்த்தைகளை நானும் படிக்கத் தொடங்கியிருக்கிறேன். எப்படி என் வேலை?''

''எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன அயல்மொழி வார்த்தைகள்?''

''நீ அவ்வளவு மண்டு என்றால், நீ கேட்டுப் பயன் இல்லை'' மிகவும் ஆத்திரமும், அருவருப்பும் கலந்தமுறை யில் பேசத் தொடங்கினான் ஷ்சுக்கார்.

''தாத்தா, உனக்கு அயல்மொழி, செத்தவனுக்கு சுடு நீரில் ஊறவைத்த ரொட்டி எவ்வளவு முக்கியமோ

அவ்வளவுதான் முக்கியம்; கொஞ்சம் மகிழ்ச்சியாக இரு. இருப்பாயா?'' தவீதவ் சிரித்துக்கொண்டேகெஞ்சினான்.

கோபமடைந்த பூனை மாதிரி ஷ்சுக்கார் சீறினான். ''இன்னும் கொஞ்சம் சிரிக்கவா? பேச்சைப் பார்! கவனமாக எப்பொழுது இருக்க வேண்டும். ஏதாவது பூச்சி பிடிக்கும்போதும், இருட்டு வேளையில் அடுத்தவன் மனைவியுடன், அவள் புருஷன் துரத்தி வரும்போது அப்படிச் செய்ய வேண்டும்... என் சாட்டையைக் காண முடியவில்லை, சனியன் எங்கு தொலைந்ததோ! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அது என் கையில் இருந்தது. அதற்குள் எங்கோ ஒளிந்து கொண்டது, என்னிடம் சாட்டை இல்லாமல், அந்தக் கிடாய் இருக்கும்வரையில் ஓர் அடி எடுத்துவைக்க முடியாது... அப்பாடா கடவுளுக்கு நன்றி! இதோ கிடைத்துவிட்டது. ஐயையோ, என் குல்லாய் எங்கே? என்னுடைய குல்லாயைப் பார்த்தாயா, தோழர் தவீதவ்? என் தலைக்கு அருகில்தான் கிடந்தது... வரவர எனக்கு நினைவு சல்லடை போல ஆகிவிட்டது அப்பாடா... ஆண்டவா! என் குல்லாயும் கிடைத்துவிட்டது. இனி என் மேலங்கியைத் தான் தேட வேண்டும். அது கிடைத்தவுடன் புறப்பட்டு விடுவேன். அந்த சனியன், த்ரஃபீம் காலால் மிதித்து வைக்கோலுக்குள் தள்ளியிருக்கக்கூடும்! இனி இன்றைக்குப் பூராவும் அதைத் தேடிக்கொண்டு தானிருக்க வேண்டும்... ஆ! இப்பொழுது நினைவுக்கு வருகிறது! மேலங்கியை வீட்டிலே விட்டுவிட்டு வந்துவிட்டேன்... சரி, இந்த வெயிலில் அந்த மேலங்கி எதற்கு? எதற்காக அதை நான் இங்கு கொண்டு வர வேண்டும்?''

கதவின் வழியாக தவீதவ் பார்த்தபொழுது, ஒஸ்த்ரவ்னோவ் குதிரையை வண்டியில் பூட்டிவிட்டு; அவன் அதைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே முணகிக் கொண்டிருந்தான்.

''யாக்கவ் லுக்கீச் ஏற்கெனவே பூட்டிவிட்டா ; நீ இன்னுமா தயார் செய்து கொண்டு இருக்கிறாய்! அசைந்தாடிக் கொண்டிருப்பதை எப்பொழுது நிறுத்தப்போகிறாய்? நீ ஒரு சரியான ஏமாற்றுப் பேர்வழி'' என்று குத்தலாகக் கேட்டான்.

ஷ்சுக்கார் தாத்தா மிக உரத்த குரலில் வெகுநேரம் கத்தத் தொடங்கினான்.

‘‘இன்றைக்குக் கரிநாள், சனியன்! நான் இன்றைக்கு நகரத்துக்குப் போகவே கூடாது. சகுனங்கள் சரியில்லை! என் குல்லாயை எப்படித் தேட வேண்டியிருந்தது பார்த்தீர்களா? இப்பொழுது புகையிலைப் பையைக் காணோம். இது நல்ல சகுனமா? இப்படி நினைக்கவே கூடாது. போகிறது... இப்பப் பாருங்கள்! என்னுடைய புகையிலைப் பையைக் காணவில்லை! த்ரஃபீம் விழுங்கிவிட்டதோ என்னவோ? அப்பாடா! ஆண்டவா! கடைசியாகக் கண்டு பிடித்து விட்டேன். இனிப் புறப்படலாம்... ஆனால் இந்தப் பயணத்தை நாளை வரை ஒத்திப் போடலாமா? சகுனங்கள் எல்லாம் எதிராகவே இருக்கின்றன. ரொம்ப மோசமாய் உள்ளன... பைபிளில், மத்தேயு சுவிசேஷத்தில்... எந்த இடத்திலென்று தெரியவில்லை. அதனாலென்ன, தெரியாவிட்டால் போகிறது. வேத நூலில் ‘நீ பயணமாகப் புறப்படுகிறாயா? பயணியே, சகுனங்கள் சரியில்லை என்றால் ஓர் அங்குலம்கூட நகராதே’ என்று கூறுகிறது. தோழர் தவீதவ் இப்பொழுது தீர்மானமாகச் சொல்லு: நான் போகவா? வேண்டாமா?’’

‘‘தாத்தா, புறப்படு உடனே!’’ என்று கண்டிப்புடன் சொன்னான் தவீதவ்.

பெருமூச்சு விட்டுக்கொண்டே, ஆனால் ஏதும் விவாதிக்காமல், வைக்கோலை விட்டு மெதுவாக நகர்ந்தான் ஷ்சுக்கார். வயதான தள்ளாடும் நடையுடன், சாட்டையைப் பின்புறமாகத் தொங்கவிட்டவாறே, கிடாய் வருகிறதா என்று எச்சரிக்கையோடு பார்த்துக்கொண்டே கதவை நோக்கி நடந்தான் ஷ்சுக்கார்.

அத்தியாயம் பதினேழு

கடைசியாக ஷ்சுக்கார் தாத்தாவை வழியனுப்பிவிட்டு பள்ளிக்கூடத்திற்குத் தானே நேரில் போய் ஞாயிற்றுக் கிழமை நிகழ்ச்சிக்காக, இன்னும் அதை எந்தெந்த வழிகளிலெல்லாம் அலங்கரிக்கலாம் என்று பார்க்க தவீதவ் முடிவு செய்தான். பள்ளியின் ஆசிரியரையும் சந்தித்துப் பேசி அவரது உதவியுடன் வேலையை எப்பொழுது தொடங்கலாம், எவ்வளவு சாமான்கள், என்னென்ன சாமான்கள் வேண்டும், பள்ளி ஆண்டு தொடக்கத்திற்கு முன்பு இதை

முழுமையாக முடித்துவிட வேண்டும் என்பவற்றை எல்லாம் அவரிடம் பேசி முடிவு செய்யப் புறப்பட்டான்.

கிரெமியாச்சி கிராமத்திற்கு தவீதவ் வந்ததிலிருந்து மிக சுறுசுறுப்பான, வேலை நெருக்கடியான காலம் இப்பொழுதுதான் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை கடந்த சில நாட்களாகவே உணர்ந்திருந்தான். புல்லறுவடை முடிந்திருக்கவில்லை, கதிர் அறுப்புத் தொடங்க இருந்தது. ரை தானியம் விளைந்து தங்க நிறமாகிக் கொண்டிருந்தது. பார்லியும் பழுப்பேறிக்கொண்டிருந்தது. களையும் பற்றிப் படர்ந்து கொண்டிருந்தது. முன்பெல்லாம் சின்னஞ்சிறு பகுதிகளில் விளைந்த சூரியகாந்திப்பூவுக்கும், மக்காச் சோளத்திற்கும் பதிலாக மிகப்பரந்த அளவில் கூட்டுப்பண்ணை வயல்களில் அவற்றிற்குக் களை எடுப்புத் தேவைப்பட்டது. கோதுமையும் விரைவிலே அறுவடை செய்யப்பட்டு களஞ்சியத்திலே சேர்க்கப்பட இருந்தது.

தானிய அறுவடைக்கு முன்பு செய்ய வேண்டிய வேலைகள் ஏராளம் இருந்தன. வைக்கோலை எல்லாம் கிராமத்திற்கு வண்டியிலேற்றிச் செல்ல வேண்டியிருந்தது. களத்தை செப்பனிட வேண்டியிருந்தது. முன்னர் குலாக்குகளின் உடைமையாயிருந்த அறுவடை களஞ்சியங்களையெல்லாம் ஒன்று திரட்டுவதை விட்டுவிட்டு, கூட்டுப்பண்ணையின் ஒரே ஓர் அறுவடை எந்திரத்தினை சரியான முறையில் இயங்க வைக்க வேண்டும். இவை எல்லாம் ஒருபுறமிருக்க வேறு பல சிறிய, பெரிய, தொல்லைகளும், கடமைகளும் தவீதவின் தலையிலே வீழ்ந்ததோடு, கவனத்தையும் இடைவிடாது இழுத்தன.

பள்ளிக்கூடத்தின் அசைந்தாடிக் கிறீச்சிட்ட பழைய படிக்கட்டுகளில், பள்ளியின் முற்றத்தை நோக்கி நடந்தான் தவீதவ். களங்கமற்ற தேன் போன்ற தோற்றமும் உறுதியுமுடைய கால்களில் காலணி ஏதுமணியாத பத்து வயதுப் பெண் குழந்தை, இவன் உள்ளே போக வழிவிட்டு விலகி நின்றது.

''நீயும் ஒரு பள்ளி மாணவியா குழந்தாய்?'' என்று அன்பாகக் கேட்டான் தவீதவ்.

''ஆமாம்'' என்று அமைதியாகப் பதில் சொல்லிவிட்டு அவனைத் துணிச்சலுடன் ஏறிட்டுப் பார்த்தாள் அந்த மாணவி.

''பள்ளி ஆசிரியர் எங்கே குடியிருக்கிறார்?''

''அவர் வீட்டில் இல்லை. ஆற்றைக் கடந்து அவர்களது முட்டைக் கோசுக்குத் தண்ணீர் பாய்ச்ச தனது மனைவியுடன் போய்விட்டார்.''

''அட பாவமே... பள்ளியில் யாராவது இருக்கிறார்களா?''

''ஆமாம் எங்கள் ஆசிரியை லுத்மீலா செர்கேயிவ்னா இருக்கிறாள்.''

''அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள்?''

அந்தச் சிறுமி முறுவலித்தாள்.

''பின் தங்கி உள்ள மாணவர்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறாள். ஒவ்வொரு நாள் சாப்பாட்டிற்கு பிறகும் அவர்களை அழைத்துக்கொண்டு போய் இப்படித்தான் செய்கிறாள்.''

''அதாவது அவர்களுக்கு இப்படி உதவுகிறாளா?''

அந்தச் சிறுமி தலையாட்டினாள்.

''அதுதான் வழி!'' என்று தவீதவ் சொல்லிக் கொண்டே மங்கலான இருள் கவ்விக்கொண்டிருந்த முற்றத்திற்குள் போனான்.

வராந்தாவின் ஒரு மூலையிலிருந்து குழந்தைகளின் குரல்கள் கேட்டன. காலியாகவிருந்த ஒவ்வொரு வகுப்பறையையும் மெதுவாகப் பார்த்துக்கொண்டே போனான் தவீதவ். அரைகுறையாகத் திறந்திருந்த கடைசி அறையின் கதவு வழியாக நெருங்கி இழுத்துப் போடப்பட்டிருந்த பெஞ்சுகளின் முன்னால் பத்துப் பன்னிரண்டு குழந்தைகள் உட்கார்ந்திருக்க, அவர்களுக்கு முன்னால் அந்த ஆசிரியை உட்கார்ந்திருப்பதை தவீதவ் கவனித்தான். மெலிந்து குட்டையான வடிவம், குறுகிய தோள்கள், வனப்பான தோற்றம், குட்டையான சுருள் கூந்தல். இப்படியாக ஒரு பருவப் பெண்போல இருந்தாளேயன்றி ஆசிரியை போல இல்லை.

ஒரு வகுப்பறையில் நின்று தவீதவுக்கு எவ்வளவோ காலமாகிவிட்டது. அந்த வாசலில் நின்ற போது ஏதோ ஓர் உணர்ச்சி அவனைக் கவ்வியது. சாயம்போன குல்லாயை இடது கையில் பிடித்தவாறே நின்றான். பள்ளி பற்றிய அவனது பழைய மரியாதை, இனிமையான குழந்தைப் பருவ நினைவுகள் மீண்டும் தலை தூக்கின...

கதவைத் திறந்துவிட்டு லேசாக இருமிக் கொண்டே, ''நான் உள்ளே வரலாமா?'' என்று ஆசிரியையிடம் கேட்டான்.

''தயவுசெய்து உள்ளே வாருங்கள்.''

ஆசிரியை இவன் பக்கம் திரும்பி புருவத்தை விரித்து வியப்புடன் பார்த்தாள். இவனைப் பார்த்து அடையாளங் கண்டு கொண்டவுடன் நாணத்தோடு எழுந்தாள்.

''தயவுசெய்து உள்ளே வாருங்கள்.''

தவீதவ் ஒரு மாதிரியாகத் தலைவணங்கினான்.

''வணக்கம். குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஆனால் ஒரு நிமிடம் தான் இருப்பேன்... பள்ளியை பழுது பார்ப்பது சம்பந்தமாக இந்த அறையைப் பார்த்து விட்டுப் போக வந்தேன். நான் கொஞ்சநேரம் காத்திருக்கவும் தயார்.''

குழந்தைகள் அனைவரும் எழுந்து நின்று முன்னும் பின்னுமாக அவனுடைய வணக்கத்திற்குப் பதில் வணக்கம் கூறினர். தவீதவ் அவர்களது ஆசிரியையைப் பார்த்தான், ''நான் பழங்காலத்து பள்ளிக் காப்பாளர்களைப் போல இருக்கிறேன். அவர்களைப் போலவே விறைப்பான பணக்காரப் பார்வை என்னிடம் இருக்கிறது போலும்... குழந்தை ஆசிரியை எவ்வளவு பயந்து வெட்கப்படுகிறது'', என்ற எண்ணம் அவனது மூளையில் பளிச்சிட்டது. ''இந்த நேரத்தில் எதற்காக வந்து நான் புகுந்தேன்?''

அந்தப் பெண் அவனிடம் வந்தாள்.

''தோழர் தவீதவ் தயவு செய்து உள்ளே வந்து உட்காருங்கள்! நான் இன்னும் சில விநாடிகளில் பாடத்தை முடித்துவிடுவேன். இவான் நிக்கலாயெவிச்சிற்கு ஆள் அனுப்பட்டுமா?''

''அவர் யார்?''

''எங்கள் தலைமை ஆசிரியர் இவான் நிக்கலாயெவிச் ஷ்பீன்யா. அவரைத் தெரியாதா உங்களுக்கு?''

''எனக்குத் தெரியும், நீங்கள் ஒன்றும் சிரமப்பட வேண்டாம். நான் காத்திருக்கிறேன். நீங்கள் பாடத்தை நடத்தும் போது நான் இங்கே இருக்கலாமா?''

''தாராளமாக! உட்காருங்கள் தோழர் தவீதவ்.''

தவீதவைப் பார்த்து, அவனுடன் பேசிக் கொண்டிருந்தும் அவளால் தனது தடுமாற்றத்திலிருந்து விடுபட முடிய

வில்லை. அவள் வெட்கத்தாலும், நாணத்தாலும் குறு கினாள். அவளது தோள்பட்டை எலும்புகள்கூட சிவப் பேறிப் போய்விட்டன. காதுகள் வெளுத்துப் போய் விட்டன.

தவீதவால் சமாளிக்க முடியாத விஷயங்களில் இதுவும் ஒன்று! அவனால் அதைத் தாங்க முடியவில்லை. வெட்கப் படும் பெண்ணைப் பார்த்து இவனுக்கும் தடுமாற்றம் ஏற் பட்டது. இது இவனுக்குக் குழப்பத்தை உண்டு பண்ணிற்று.

ஒரு மேசையருகே போடப்பட்ட நாற்காலியில் அமர்ந் தான். அந்தப் பெண் மீண்டும் சன்னலருகே போய், தனது மாணவர்களுக்கு வார்த்தை வார்த்தையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''அம்மா சமைக்கிறாள்... எழுதிவிட்டீர்களா குழந் தைகளே? அவள் நமக்கு உணவு சமைத்துக் கொண்டிருக் கிறாள். கொண்டிருக்கிறாள், என்ற வார்த்தைக்குப் பிறகு முற்றுப்புள்ளி வையுங்கள். இப்போது திரும்பவும் கூறு கிறேன்...''

அந்த வாக்கியத்தை இரண்டு தடவை எழுதிய பிறகு, குழந்தைகள் தவீதவை முறைத்து வேடிக்கை பார்த்தன. மேல் உதட்டில் மீசையைத் தடவிக் கொடுப்பவனைப் போல விரலால் வருடிவிட்டு, குழந்தைகளைப் பார்த்து நட்புணர்வுடன் கண்சிமிட்டினான். அவர்கள் முறுவலித்தனர் இருவருக்கிடையே நட்புறவு உருவாகி வருவது போலிருந்த சமயம், ஆசிரியை மறுபடியும் பாடம் தொடங்கினாள். வார்த்தை வார்த்தையாக நிறுத்திச் சொல்ல, பிள்ளைகள் தங்களது பயிற்சி ஏடுகளில் குனிந்து எழுதினார்கள்.

வகுப்பறையில் வெக்கையும், தூசியும், வறட்டுக் காற்று மணமும் வீசியது. சன்னலடியில் முளைத்துப் புதராய்க் கிடந்த கனகாம்பரச் செடியும், அரளிச் செடியும் நிழல் கொடுக்கவில்லை. காற்றடித்து இலைகளைத் தூக்கிய பொழுது இடிந்து குண்டுங் குழியுமான தரையில் சூரிய ஒளி விழுந்தது.

புருவத்தை நெறித்த வண்ணம் தவீதவ் சில கணக்கு களைப் போட்டுக் கொண்டிருந்தான். ''இரண்டு கியூபிக் மீட்டர் கருங்கல் மண்ணாவது இந்தத் தரைப்பலகையைச் சரிசெய்ய வேண்டும். சன்னல் சட்டங்கள் பரவாயில்லை. ஆனால் மாரிக்காலத்துக்கெனப் போட்டவை எப்படி இருக்

கின்றன எனப் பார்க்க வேண்டும். ஒரு கண்ணாடி மட்பாண்டம் வாங்க வேண்டும். பண்டசாலையில் ஒரு கண்ணாடித் துண்டுகூட உபரி இல்லை என்று நினைக்கிறேன். சின்னப் பிள்ளைகள் விளையாடும்போது கண்ணாடி சன்னல்கள் உடைவது இயற்கைதான்! கொஞ்சம் வெள்ளைசாயம் கிடைத்தால் நல்லதுதான். சன்னல் சட்டம், கதவு, முகடு இவற்றிற்கு எவ்வளவு ஆகும்? அதைத் தச்சர்களிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும். முன் கூடாரத்தைத் திருப்பிக் கட்ட வேண்டும். நம்முடைய மரங்களை வைத்தே இந்த வேலையைச் செய்து விடலாம். ஏதோ இரண்டு நூலாம் படையைப் பார்த்து விட்டுப் போய் விட்டால் வேலை முடிந்துவிடும். முழு வேலையும் பார்த்தால் நிறையச் செலவாகும்... மரக் கொட்டடி மறுபடியும் கூரை வேயப்பட வேண்டும். ஓகோ, ஏராளமான வேலை பாக்கியிருக்கிறது, அதுதான் விஷயம்! நல்லது, முதலில் களஞ்சிய வேலையை முடிக்கலாம். அதன்பின் தச்சுக்குழு முழுவதையுமே இந்த வேலைக்குத் திருப்பிவிடலாம். இந்தக் கட்டிடத்து முகட்டுக்குக்கூட சாயம் பூசியாக வேண்டும்... ஆனால் எங்கிருந்து பணம் வரும்? பள்ளிக் கூடத்துக்காக எப்படியாவது பெற்றாக வேண்டும். அதனால் நான் நொறுங்கினாலும் சரி. அதுதான் விஷயம்! ஆனால் ஏன் அப்படி நடக்க வேண்டும்? காலம் முழுவதும் உழைத்த அந்த மாடுகள் இரண்டையும் விற்றுவிடலாம். விற்று விட்டால் பணம் இருக்குமே. மாவட்ட நிர்வாகக் குழுவுடன் அந்தக் காளைகள் பற்றி ஒரு சர்ச்சை இருக்கும்... ஆனால் நம்மைப் பொருத்தமட்டில் உறுதிதான். இப்பொழுது சும்மா இருக்கையில் அந்த மாடுகளை விற்றால் வம்புதான்... இருந்தாலும் என்ன! செய்ய வேண்டியதுதான்... என்ன, நெஸ்தெரேன்கோ எனக்குத் துணையாக நிற்கவில்லையா?''

தவீதவ் தனது குறிப்பேட்டை உருவி எடுத்து, ''பள்ளிக் கூடப் பலகைகள், ஆணிகள், ஒரு கண்ணாடி மட்பாண்டம்'' என்று எழுதினான். ''கூரைக்கு பாரிஸ் பச்சை வர்ணம் வெள்ளைச் சாயம், எண்ணெய்...''

கடைசி வார்த்தையை எழுதும்பொழுது முகத்தைச் சுளித்தான். கடித்துச் சுருட்டிய காகித உருண்டை ஒன்று குழாயில் வைத்து அடித்தது மாதிரி தவீதவின் நெற்றியில் வந்து அடித்தது. தவீதவ் வியப்புடன் விழித்தான். திடீ

ரென்று ஒரு பள்ளிப் பையன் தனது உள்ளங்கையைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினான். பெஞ்சிலிருந்து மெது வாகச் சிரிப்பொலி கேட்டது.

''என்ன அங்கே?'' என்று ஆசிரியை அதட்டினாள்.

அடக்கப்பட்ட அமைதிதான் பதிலளித்தது.

நெற்றியிலடித்த காகிதப் பந்தை எடுத்து முறுவலித்துக் கொண்டே பையன்களைப் பார்த்தான் தவீதவ். சிறு குழந் தைகளின், சிறிய தலைகள், செந்நிற, கருப்புநிறத் தலை கள் பெஞ்சில் கவிழ்ந்திருந்தன. ஆனால் சூரிய வெயிலில் கன்றிப்போன ஒரு சிறு கையாவது எழுத வேண்டுமே...

''குழந்தைகளே முடித்துவிட்டீர்களா? அடுத்த வாக் கியத்தை எழுதுங்கள்...''

கவிழ்ந்திருந்த குழந்தைகளின் தலைகளை தவீதவின் சிரித்த கண்கள் பார்த்துக்கொண்டே இருந்தன. ஒரு சிறு பையன் மெதுவாக, போக்கிரித்தனமாக தலையைத் தூக் கினான். தவீதவ் தனது பழைய தொடர்பை நினைவுபடுத் திக் கொண்டான். கடந்த இளவேனிற் காலத்தில் வயலில் தான் பார்த்த ஃபெதோத் உஷக்கோவ், தனது கண் இடுக் கின் வழியாக தவீதவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது சிவந்த வாய் தடுக்க முடியாத சிரிப்புடன் அகலத் திறந்துகொண்டிருந்தது. அந்தச் சின்னஞ்சிறு முகத்தைப் பார்த்து தவீதவ் சிரிக்க முயன்றான், ஆனால் அவனாகவே நிறுத்திக்கொண்டான். குறிப்பேட்டிலிருந்து ஒரு தாளைக் கிழித்து வாயில்போட்டு மென்றான். ஆசிரியையும் ஒரு கண் ணால் பார்த்துக்கொண்டே ஃபெதோத்தைப் போக்கிரித் தனமாகப் பார்த்தாள். பையன் தனது அகன்ற கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் புன்னகையை மறைக்க வாயைக் கையால் பொத்திக்கொண்டான்.

ஃபெதோத்தின் இந்த விளையாட்டை ரசித்தவண்ணம், பல்லால் கடித்த காகிதத்தை அவசரமின்றி உருட்டிய தவீ தவ், இடது கைப் பெருவிரல்மீது அதை வைத்து கண்ணைச் சாய்த்துச் சுருட்டிக் குறிபார்ப்பதைப்போல் பார்த்தான். ஃபெதோத் கன்னத்தை உப்பென்று ஊதிக் கொண்டு, தலையைத் தோள்பட்டைகளுக்கிடையில் சாய்த்துக்கொண் டான். காகிதப்பந்து சிறிதாகத் தெரியாது, கனமாகத் தெரிந்தது... சந்தர்ப்பம் பார்த்து தவீதவ் பந்தைச் சுண்டி விட்டான். பந்து வருவதைக் கண்டு ஃபெதோத் திடீரென்று

குனிந்தான். அவசரத்தில் பெஞ்சில் நெற்றியால் பலமாக இடித்துக் கொண்ட அவன் நிமிர்ந்து உட்கார்ந்து, ஆசிரியையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்தான். சிவந்துபோன நெற்றியைக் கையால் தடவிக் கொடுத்துக்கொண்டான். சிரிப்பை அடக்க முடியாத தவீதவ், மறுபுறம் திரும்பி, தன் கைகளுக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

அவனுடைய செயல் மன்னிக்க முடியாத சிறுபிள்ளைத் தனமாக இருந்தது. தான் எங்கிருக்கிறோம் என்பதையாவது அவன் யோசித்திருக்க வேண்டும். தன் நிலை உணர்ந்து தெளிந்த தவீதவ் ஆசிரியையை வெட்கமிகுதியால் பார்த் தான். ஆனால் அவளும் சன்னல் பக்கம் திரும்பி நின்று சிரிப்பை மறைக்க முயன்று கொண்டிருந்தாள். அவளுடைய மெல்லிய தோள்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. கசங்கிய கைக்குட்டையை வைத்து அவள் கண்களில் மல்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

''பள்ளிக் கூடத்துக்கு எவ்வளவு கண்டிப்பான புரவலர் வந்து சேர்ந்தேன் பார்த்தாயா!..'' என்று தவீதவ் நினைத் தான். ''பாடம் முழுவதையும் நான் கெடுத்துவிட்டேன் போலும். இங்கிருந்து நான் போய்விடுவது நல்லது.''

முகத்தை முறைப்புடன் வைத்துக் கொண்டு ஃபெதோத் தைப் பார்த்தான். பாப்பாத்திப் பூச்சி மாதிரி இருந்த அந்த சின்னப் பையன், பெஞ்சில் பதுங்கி, தன் வாயைத் திறந்து காட்டினான். பல்லில்லாமல் ஓட்டையாக இருந்த இடத்தில் வெண்ணிறப் பற்கள் இரண்டு முளைவிட்டுக் கொண்டிருந்தன; அவை வளர்ந்து முற்றுப் பெறாமலிருப் பதே ஒரு தனி அழகாய்த்தானிருந்தன. அதைப் பார்த்து தவீதவ் வலிந்து முறுவலித்தான்.

குழந்தைகளின் முகங்களைப் பார்ப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான் தவீதவ். பல நிறத் தலைகள் பல கையில் குனிந்து எழுதியவண்ணமிருந்தன. தானும், வெகு காலத்திற்கு முன்பு, இவர்களைப்போலவே சிறு பையனாக இருந்தபொழுது, ஃபெதோத்துக்குப் பக்கத்திலிருக்கும் பையனைப்போல, எழுதும்போது தலையை மிகவும் கீழாகக் கவிழ்ந்து, நாக்கைத் துருத்திக்கொண்டு எழுதுவது வழக் கம். நாக்கை நீட்டிக்கொண்டு எழுதுவது, இயலாத செயலை முடிக்க அது உதவுவது போல ஓர் உணர்வு. இளவேனிற்காலத் தில் ஃபெதோத்தைப் பார்த்தபொழுது, ''குழந்தைகளே

உங்களது வாழ்க்கை எங்களுடையதைப் போல அல்லாது எளிமையாக இருக்கும் என்று நினைத்தேன். இப்பொழுதும் நீங்கள் அதை அடைந்துவிட்டீர்கள். நான் வேறு எதற்காகச் சண்டை போட்டேன்? நான் சிறு குழந்தையாக இருந்த பொழுது வாழ்ந்த நரக வாழ்க்கை நிச்சயமாக உங்களுக்கு வேண்டாம் என்பதற்காகத்தானே!''

இந்தக் கற்பனைக் கனவு நினைவிலிருந்து ஃபெதோத் உலுப்பிவிட்டான். பெஞ்சில் நெளிந்து வளைந்துகொண்டிருந்த ஃபெதோத் தவீதவின் பல், முளைத்து வளர்ந்து கொண்டிருக்கிறதா என்பதைக் காட்டும்படி அடையாளம் செய்தான். அந்நேரத்தில் ஆசிரியை மறுபுறம் திரும்பியிருந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கைகளை விரித்துக் கவலையுடன் பற்களைத் திறந்து காட்டினான். தவீதவின் வாயில் ஏற்கெனவே உள்ள ஓட்டை இருப்பதைக் கண்ட ஃபெதோத் சிரிப்புத் தாங்காமல் வாயை உள்ளங்கையால் மூடிக்கொண்டான். அவன் கண்கள் அகல விரிந்தன. முகமோ முழு நிறைவால் சிரிப்பாக மலர்ந்தது. அவன் சிரிப்பு, வார்த்தைகளைக் காட்டிலும்கூடத் தெளிவாக, ''மாமா, உன்னை நான் தோற்கடித்துவிட்டேன்! எனக்காவது பல் முளைத்துவிட்டதே, ஆனால் உனக்குப் பல் முளைக்களையே!'' என்று சொல்லிச் சிரிப்பதுபோல இருந்தது.

ஒரு நிமிடம் கழித்து நடந்த ஒரு நிகழ்ச்சியை அவன் வாழ்க்கையில் வெகுநாட்கள் வரையில் மறக்க முடியாது. நினைக்கும் போதெல்லாம் உடம்பே உதறலெடுக்கும். கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து, தவீதவின் கவனத்தைத் திருப்புவதற்காக பெஞ்சின் மீது தட்டினான் ஃபெதோத். அப்புறம், பின்புறமாகச் சாய்ந்து, காற்சட்டைப் பைக்குள் கையை விட்டு ஒரு நாட்டு வெடிகுண்டை எடுத்துக்காட்டிவிட்டு, மறு விநாடியே அதை மீண்டும் உள்ளே தள்ளிவிட்டான். இவை எல்லாம் கண் இமைக்கும் நேரத்திற்குள்ளாக நடந்துவிட்டது. தவீதவ் திருதிருவென விழித்துக் கொண்டு செயலற்று நின்றான். பிறகுதான் முகமோ வெளுத்து வெளிறிப் போய்விட்டது...

''இவன் எங்கிருந்து இதை எடுத்தான்?! இது விசை மாட்டி மருந்து செருகப்பட்டிருந்தால்?! இவன் உட்கார்ந்திருக்கும் பெஞ்சில் இடித்துவிட்டால், அப்புறம்... அட சனியனே! இப்பொழுது நான் என்ன செய்யலாம்?!'' நெற்றி

யிலும், கழுத்திலும், கன்னத்திலும் துளிர்த்து நின்ற வியர்வையைக்கூட உணராமல் கண்களை இறுகமூடி அச்சத்தோடு, யோசித்தான் தவீதவ்.

ஏதாவது சீக்கிரம் செய்தாக வேண்டும். ஆனால் என்ன செய்வது? எழுந்துபோய் பலாத்காரமாகக் குண்டைப் பறிமுதல் செய்துவிடலாமா? ஆனால் ஒருவேளை, அந்தக் குழந்தை பயந்து இந்தக் குண்டை வீசினால் என்னமோ... இந்தக் குண்டு தனக்கும், தன்னைச் சுற்றியுள்ள ஏராளமான குழந்தைகளுக்கும் எமனாக முடியும் என்ற உண்மை தெரியாமல் தூக்கி எறிந்தால்... சே சே! அது சரியான முறையல்ல. அந்தத் திட்டத்தை தவீதவ் நிராகரித்து விட்டான். கண்களை இறுக மூடிக்கொண்டு இதற்கு ஒரு தீர்வுகாண முயற்சித்துக் கொண்டிருந்தான். அவன் சிந்தனையில் மூழ்கியிருந்த போதே, அவனது கற்பனையில், மஞ்சள் நிறத் தீப்பொறியும், அதையொட்டி ஒரு வெடி வேட்டும், அதன் விளைவாக அவயவங்கள் துண்டிக்கப்பட்ட குழந்தைகளின் உடல்கள் கண்முன் தோன்றின...

நெற்றியிலிருந்து வியர்வை, மூக்கு விளிம்பின் வழியாக வழிவதையும், கண்குழிமீது சொட்டுவதையும் மெல்ல உணர்ந்தான். பையில் கைக்குட்டையைத் துளாவியபொழுது, தனது நண்பன் பல ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த பேனாக்கத்தி ஒன்று அகப்பட்டது. ஒரு நொடியில் ஓர் எண்ணம் பிறந்தது. ஒரு கையால் பேனாக்கத்தியை எடுத்துக் கொண்டே, மறு கையால் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டான். அதன் பின்னர் கத்தியைக் கூர்மையாகப் பார்த்தான். தன் வாழ்விலேயே இப்படி ஒரு பொருளை இதற்கு முன்னர் பார்த்தறியாதவன் மாதிரி சுழற்றிச் சுழற்றிப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவ்வப்பொழுது ஃபெதோத்தையும் பார்த்துக் கொண்டான்.

அது மிகவும் பழைய கத்தி. தேய்ந்து போனாலுங்கூட, அதன் பக்கவாட்டின் மேல் பதித்திருந்த முத்து, சூரியனின் ஒளியில் லேசாக மின்னிற்று. அதில் இரண்டு அரிய கத்திக் கூர் இருந்தது. அதிலேயே ஒரு திருப்புளியும், ஒரு மூடி திறப்பானும் பொருத்தப்பட்டிருந்தது. இத்தனைக்கும் மேலாக இரு சிறு கத்தரிகள் வேறு இருந்தன. இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஃபெதோத்துக்கு எடுத்துக் காட்டினான் தவீதவ். பையன் வைத்த கண் வாங்காமல்

கத்தியையே மயக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான். அது வெறும் கத்தியல்ல, விலைமதிப்பற்ற செல்வம்! அது போன்ற அழகானதை அவன் கண்டதே இல்லை. தன் குறிப் பேட்டிலிருந்து ஒரு தாளைக் கிழித்து, கத்திரியால் ஒரு குதிரைத் தலையை அதில் வெட்டியவுடன்; ஃபெதோத்துக்கு, தவீதவ் மீது எல்லையற்ற மரியாதை ஏற்பட்டது!

பாடமும் முடிந்தபோது, ஃபெதோத் அருகில் சென்று தவீதவ், ''என் கத்தியைப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

ஃபெதோத் மென்று விழுங்கியவாறு, தலையை அசைத்தான்.

அவனிடம் குனிந்து, ''அந்தப் பொருளை மாற்றிக் கொள்ள விரும்புகிறாயா?'' என்று குசுகுசுவென்று சொன்னான் தவீதவ்.

''எதைக் கொடுத்து வாங்க?'' என்று இன்னும் அதிக அமைதியோடு பையன் முணுமுணுத்தான்.

''உன் பையில் வைத்திருக்கிறாயே ஓர் இரும்பு உருண்டை அதற்கும் என் கத்திக்கும்.''

ஃபெதோத் ரொம்ப அவசரமாகச் சரியென்று தலையை ஆட்டினான். அவன் பட்ட அவசரத்தை நிறுத்த தவீதவ் அவன் நாடியைப் பிடித்துக்கொண்டான். கத்தியை அவன் கையில் கொடுத்து விட்டு மிக எச்சரிக்கையுடன் கைவெடி குண்டை வாங்கினான். அதில் இன்னும் திரி இல்லை. தவீதவ் ஒரு நீண்ட மூச்சுடன் நிமிர்ந்து நின்றான்.

''என்ன உங்கள் இரண்டு பேருக்குள் ஏதோ ரகசியம் போலிருக்கிறதே'' என்று சொல்லி முறுவலித்தபடி போனாள் ஆசிரியை.

''நாங்கள் பழைய நண்பர்கள். நாங்கள் ஒருவரையொருவர் நீண்ட நாட்களாகப் பார்த்துக் கொள்ளவே இல்லை... மன்னிக்க வேண்டும், லுத்மீலா ஸெர்கேயிவ்னா'' என்று மரியாதையுடன் பேசினான் தவீதவ்.

''நான் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது, நீங்கள் இருந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்'' என்றாள் ஆசிரியை வெட்கத்துடன்.

அவள் குழப்பத்தைப் புரிந்துகொள்ளாத தவீதவ், ''தயவு செய்து, தோழர் ஷ்பீன்யாவிடம், இன்று மாலை நிர்வாக அலுவலகத்தில் என்னை வந்து பார்க்கச் சொல்

லுங்கள். அவர் வரும் முன் பள்ளிக்கூடத்தை மராமத்து செய்ய எவ்வளவு செலவாகும்? என்னென்ன தேவை என் பதை யோசித்து வரும்படி கூறுங்கள். சொல்வீர்களா?''

''நல்லது, எல்லாவற்றையும் சொல்கிறேன். நீங்கள் மறு படியும் எங்களைப் பார்க்க வருவீர்களா?''

''கட்டாயம் ஒரு நிமிடம் ஓய்விருந்தாலும் வருவேன், உண்மையாகத்தான்!'' இதைச் சொல்லிவிட்டு, பேசியதற் கும் எதற்கும் தொடர்பே இல்லாத முறையில், ''நீங்கள் எங்கே குடியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''அகாஃபியா கவ்ரீலவ்னா பாட்டி வீட்டில் குடியிருக் கிறேன். பாட்டியைத் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும். எவ்வளவு பெரியது உங்கள் குடும்பம்?''

''என்னுடைய அம்மாவும், இரு தம்பிகளும் நவசெர் காஸ்கில் இருக்கிறார்கள். ஆனால் இதை யெல்லாம் எதற் காகக் கேட்கிறீர்கள்?''

''உங்களைப்பற்றி ஏதாவது தெரிந்துகொள்ள வேண் டும், இல்லையா? உங்களுடைய பெண் ரகசியங்களைத் தெரிந்துகொள்ள நான் கேட்கவில்லை'' என்றான் தவீதவ் கேலியாக.

முற்றத்து வழியில் ஃபெதோத்தைப் பையன்கள் வளைத்து நெருக்கிக் கொண்டு, கத்தியை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். தவீதவ் மகிழ்ச்சிமிக்க கத்தியின் உரிமையாளனை ஒரு புறமாக அழைத்து, ''உனது அந்த பொம்மையை எங்கே எடுத்தாய் ஃபெதோத் தெமீ திச்? எந்த இடத்தில்'' என்று கேட்டான்.

''அந்த இடத்தைக் காட்டட்டுமா, மாமா?''

''கட்டாயம் காட்ட வேண்டும்!''

''இப்பொழுதே வா. இல்லையெனில் எனக்கு அப்புறம் நேரமிருக்காது'' என்று காரியக்காரன்போல முன்மொழிந் தான் ஃபெதோத்.

தவீதவின் விரலைப் பிடித்து நடந்து வழிகாட்டிக் கொண்டு போவதில் அவனுக்கு ஏகப்பெருமை. அவன் சாதாரணமாக, வளர்ந்த பெரிய மனிதனுக்கு மட்டுமல்ல, கூட்டுப்பண்ணையின் தலைவருக்கே அல்லவா வழிகாட்டு கிறான். தெருவழியே நடந்துபோகும் பொழுது அடிக்கடி மற்ற பையன்களைப் பெருமையோடு பார்த்துக்கொண் டான்.

மெதுவாக நடந்து சென்றார்கள். இடையிடையே ஏதாவது பேசிக்கொண்டார்கள்.

''நீ திருப்பி வாங்கிக்கொள்ள மாட்டாயே?'' என்று கொஞ்ச தூரம் முன்னால் ஓடிப்போய் நின்று, தவீதவின் கண்களைப் பார்த்தவாறு கேட்டான் ஃபெதோத்.

''நிச்சயமாக இல்லை! நாம் தான் கொடுக்கல் வாங்கலை முடித்துவிட்டோமே'' என்று உறுதி கூறினான் தவீதவ்.

ஐந்து நிமிடங்கள் எதுவுமே பேசாமல் அமைதியாகவே நடந்து சென்றார்கள். ஃபெதோத் தவீதவின் கையைப் பிடித்தபடியே சிறிது தூரம் முன்னால்போய் திரும்பி ''கத்திக்காக நீ கவலைப்படவில்லையா? அதைக் கொடுத்துவிட்டோமே என்று வருத்தப்படவில்லையா?'' என்று கேட்டான்.

''ஒரு துளி கூட இல்லை!'' என்று உறுதியாகச் சொன்னான் தவீதவ்.

மீண்டும் அமைதியாகவே நடந்தார்கள். தவீதவுக்கு மிகவும் பாதகமான முறையில் இந்த பேரம் அமைந்து விட்டதே என்று ஃபெதோத் சிறிய மனம் பதைபதைத்தது. எனவே மறுபடியும், ''நான் என் கவைவில்லையும் தரட்டுமா? வைத்துக்கொள்கிறாயா?'' என்று பரிவோடு கேட்டான்.

ஃபெதோத் புரிந்துகொள்ள முடியாத பெருந்தன்மையுடன், ''இல்லை, எதற்காக நான் வாங்கிக்கொள்ள வேண்டும்? நமது பேரம் சுத்தமான பேரம்தான், இல்லையா?'' என்றான் தவீதவ்.

'' 'சுத்தமான' பேரமா? அப்படியென்றால் என்ன?''

'' 'சரிசமமான' கொடுக்கல் வாங்கல், புரிந்ததா?''

ஃபெதோத்துக்கு இதெல்லாம் ஒன்றும் புரியவில்லை. அவனுக்கு ஒரே திகைப்புத்தான். இவ்வளவு பெரிய ஆள் சர்வசாதாரணமாக பேரத்தில் ஏமாந்துவிட்டாரே என்று நினைத்துக்கொண்டான்... பளபளக்கும் ஓர் அழகிய கத்திக்கு ஓர் இரும்புக் குண்டு ஈடா? இல்லை, இதில் எங்கோ ஒரு விஷயம் மறைந்திருக்கிறது! ஃபெதோத் மறுபடியும் மற்றொரு யோசனை சொன்னான்: ''உனக்கு என்னுடைய கவைவில் வேண்டாம் என்றால், என்னுடைய கிட்டிக் குச்சியைத் தரட்டுமா? கொஞ்சம் நின்று பாரேன். புத்தம் புதிது!''

''உன் கிட்டிக் குச்சியும் வேண்டாம்'' என்று பெருமூச்சுடன், தனக்குள் சிரித்துக்கொண்டே சொன்னான் தவீதவ். ''இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் என்றால் நான் மறுத்திருக்க மாட்டேன். அப்பொழுது இருந்திருந்தால், அதைத் தட்டிப் பறித்துக்கொண்டுபோய் இருப்பேன். ஆனால் இப்பொழுது அவை எனக்குத் தேவையில்லை ஃபெதோத் எதற்காகக் கவலைப்படுகிறாய்? இனிமேல் கத்தி உன்னுடையதுதான், அது தான் விஷயம்!''

மீண்டும் அமைதி. சில நிமிடங்கள் கழித்துப் பழையபடியும் ஒரு கேள்வி.

''மாமா, உன்னிடம் கொடுத்தேனே, உருண்டையா என்னமோ? அது என்ன முறம் செய்யவா?''

''நீ அதை எங்கே கண்டாய்?''

''இப்போது நாம் போய்க்கொண்டிருக்கும் அதோ அந்தக் களஞ்சியத்திற்குப் பக்கத்தில்தான்.அங்கு ஒரு முறத் தடியில் கிடந்தது. அது ஒரு பழைய முறம். தேய்ந்து, ஓட்டையாய்ப்போன பழைய முறம். அதனடியில்தான் கிடந்தது. நாங்கள் ஒளிந்து மறைந்து விளையாடிக்கொண்டிருந்தோம். நான் அந்த இடத்தில் ஓடி ஒளியப் போனேன் அங்கே இது கிடந்தது எடுத்து வந்தேன்.''

''அப்படியானால் முறத்திலிருந்து தான் இது வந்திருக்க வேண்டும். அதற்குப் பக்கத்தில் ஒரு சிறு இரும்புத்துண்டு கிடந்ததைப் பார்த்தாயா?''

''இல்லை, அங்கு வேறெதுவுமில்லையே.''

''நல்லவேளையாய்ப் போச்சு, கடவுள் புண்ணியத்தில் எடுக்கவில்லை. எடுத்திருந்தால் மறு ஜென்மத்தில்கூட மறக்க முடியாத சம்பவம் நடந்திருக்கும்'' என்று தவீதவ் நினைத்தான்.

''முறத்திலிருந்து அந்த சாமான் உனக்கு அவசியம் தேவையா?'' என்று ஃபெதோத் கேட்டான்.

''ஆமாம், மிகவும் தேவை.''

''பண்ணைக்கா? இன்னொரு முறம் செய்யவா?''

''அப்படித்தான்!''

''பண்ணைக்காகத்தான் என்றால் உனது கொடுக்கல் வாங்கல் சரிதான். நீ கவலைப்பட வேண்டியதில்லை. அப்புறம் இன்னொரு கத்தி வாங்கிக்கொள்ளலாம்'' என்று சிறிது

நேர அமைதிக்குப் பிறகு ஃபெதோத் கரகரத்த குரலில் சொன்னான்.

வயதுக்கு மீறிய பகுத்தறிவுடன் காணப்பட்ட சிறுவன் ஃபெதோத் இந்த முடிவுக்கு வந்தவுடன், ஏதோ பாரம் குறைந்தவன்போல முறுவலித்தான். இப்பொழுது அவன் சிந்தனை அமைதி பெற்றது போல் தோன்றியது.

அவர்கள் நடந்து சென்றபொழுது இவ்வளவுதான் பேச வேண்டியதாக இருந்தது. ஆனால் அவர்கள் பேரத்திற்கு இது ஒரு முத்திரை வைத்துவிட்டது...

ஃபெதோத் இப்பொழுது தன்னை எங்கு அழைத்துச் செல்கிறான் என்பது தவீதவுக்குத் தெரிந்துவிட்டது. முன்பு திமஃபேய் ரிவானியின் தந்தை இருந்த வீட்டின் முன்புறப் பகுதிகள் தெரிந்தன. வீதியின் இடது கோடியில் கூரையால் வேயப்பட்ட கொட்டடி தெரிந்தவுடன் விரலை நீட்டி, சுட்டிக் காட்டி, ''அங்குதானே நீ எடுத்தாய்?'' என்று தவீதவ் கேட்டான்.

''ஆமாம், எவ்வளவு சரியாக யூகம், மாமா!'' என்று வியந்து கூறினான் ஃபெதோத். அவன் தவீதவின் விரல்களை விட்டுவிட்டான். ''இப்போது நானில்லாமலே உனக்குப் பாதை தெரியும். நீயே போ, ஆனால் எனக்கு அவசரம் நான் ஓட வேண்டும்!'' என்றான்.

அவனது சிறிய கரத்தை தன்னுடைய கையில் பிடித்துக் கொண்டு பெரிய மனிதன் கையை குலுக்குவதுபோல குலுக்கிக்கொண்டே, ''மிக்க நன்றி, ஃபெதோத் தெமீதிச் சரியான இடத்துக்கு என்னை அழைத்துக்கொண்டுவந்து விட்டாய். ஒய்வுள்ளபோது நீ என்னை வந்து பார். பார்க்காம லிராதே, நான் வருத்தப்படுவேன். நான் மட்டுந்தான் இருக்கிறேன்...'' என்றான் தவீதவ்.

''ஆகட்டும். ஒருநாள் வருகிறேன்'' என்று ஒப்புக் கொண்டு பேசினான் ஃபெதோத்.

ஒருகாலை ஊன்றி, அரைவட்டம் சுழன்று. தன் நண்பர்களை அழைப்பதற்காக இரு விரல்களை மடக்கி வாயில் வைத்து பலமாகச் சீட்டியடித்தான். மறுவிநாடி அவன் ஓடிய வேகத்தில் குதிகால் தெரியாது புழுதி பறந்தது.

தமாஸ்கவின் முற்றத்தைத் தாண்டி நிர்வாக அலுவலகக் கட்டிடத்திற்குப் போனான் தவீதவ். வழக்கமாக நிர்வாகக் குழு கூடும் மங்கலான இருட்டுக் கவ்விய அறையில்,

ஒஸ்த்ரவ்னோவும், கணக்கனும் தாயக்கட்டம் ஆடிக்கொண்டிருந்தார்கள். தன்னுடைய குறிப்பேட்டிலிருந்து கிழித்த ஒரு தாளில் மேசைமீது உட்கார்ந்து தவீதவ் எழுதினான்: ''பண்ட சாலை மேலாளர் யா.லு. ஒஸ்த்ரவ்னோவுக்கு; பள்ளி ஆசிரியை லு.ஸெ. யெகோராவாவுக்கு 32 கிலோ கடலை மாவு, 8 கிலோ கோதுமை மாவு, 5 கிலோ பன்றிக் கொழுப்பு, ஆகியவை கொடுக்கவும் என் பற்றில் அந்தக் கணக்கை எழுதவும்.'' எழுதிக் கையெழுத்துப் போட்டு விட்டு, நாடியில் கையை வைத்துத் தாங்கிய வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு ஒஸ்த்ரவ்னோவைப் பார்த்து, ''அந்தப் பள்ளி ஆசிரியை யெகோரவா எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டான்.

''வாய்க்கும் கைக்கும், சரியாக இருக்கும் போலிருக்கிறது'' ஏதோ ஒரு சிறு துண்டுச் சாமானை நகர்த்தியபடி சுருக்கமாகச் சொன்னான் ஒஸ்த்ரவ்னோவ்.

''நான் சிறிது நேரத்துக்கு முன்னால் பள்ளிக்குப் போய், மராமத்துப் பற்றி விசாரித்துவிட்டுத் தான் வருகிறேன். நான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன்... பாவம் மிகவும் மெலிந்து விட்டாள். முதிர்வேனிற் காலத்து இலை மாதிரி உடல் இளைத்துப் போயிருந்தாள், உடலை ஊடுருவிக் கூடப் பார்க்கலாம் போல இருந்தது. சாப்பிடப் போதுமான அளவு கிடைப்பதில்லை! நான் எழுதியிருப்பது எல்லாம் அவள் வீட்டுக்கு கிடைப்பது போலப் பார்த்துக்கொள், உண்மையாகத்தான்! நாளை நான் சரி பார்ப்பேன், கேட்கிறதா உனக்கு?!'' என்றான்.

சீட்டை மேசைமீது வைத்துவிட்டு நேராக கொல்லர் ஷாலீயைப் பார்க்கப் போனான்.

* * *

அவன் போனவுடன், தாயக்கட்டக் கற்களை எல்லாம் கூட்டி எடுத்துக்கொண்ட ஒஸ்த்ரவ்னோவ் வாயிற்படியைத் தாண்டும் பொழுது அவற்றைத் தோளில் போட்டுக் கொண்டான். ''சரியான ஊர்மேயும் நாய் வந்து மாட்டிவிட்டது! முதலில் லூஷ்கா நகூல்னவா, பிறகு வார்யா ஹர்லாமவா. இப்பொழுது பள்ளி ஆசிரியைக்குத் தாவி இருக்கிறான். தன்னுடைய எல்லாப் பெண் நாய்களையும் கூட்டுப்பண்

ணைச் செலவிலேயே தீனிபோட்டு வளர்க்கிறா... அவனது பெண்களால் நம்மை மொட்டையாக உறிஞ்சி விட்டுத்தான் விடுவான்!'' என்று முனகினான் லுக்கீச்.

''ஹர்லாமவாவுக்கு அவன் ஒன்றுமே தரவில்லையே. ஆசிரியைக்கும் அவன் தன் சொந்தச் செலவில்தானே கொடுக்கிறான்'' என்று மறுத்துச் சொன்னான் கணக்கன்.

ஒஸ்த்ரவ்னோவ் இரக்கங் காட்டுவது போல முறுவலித்தான்: ''வார்யாவுக்கு ரொக்கமாகவே கொடுத்துவிடுகிறான் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஆசிரியைக்குக் கொடுப்பதற்குப் பண்ணைதான் பணம் கொடுத்தாக வேண்டும். லூஷ்காவுக்கு அவனுடைய ரகசிய உத்தரவின் மேல் மட்டும் எவ்வளவு உணவு கொடுத்திருக்கிறேன் தெரியுமா? நீயே அதிர்ச்சியுற்றுப் போவாய்!''

திமஃபேய் ரிவானிய் சாகும்வரையில், அவனுக்கும், லூஷ்காவுக்கும், கூட்டுப்பண்ணை பண்டசாலையிலிருந்து மிகத் தாராளமாக பொருள்களைக் கொடுத்து வந்தான் ஒஸ்த்ரவ்னோவ். கணக்கனிடம், ''லூஷ்கா கேட்பதையெல்லாம் கொடுக்குமாறு தவீதவ் எனக்கு உத்தரவு போட்டுள்ளான். 'நீயாவது, கணக்கனாவது, இதுபற்றி ஒரு வார்த்தை பேசினால் நேராக சைபீரியாவுக்குப் போக நேரிடும்!' என்று தவீதவ் அச்சுறுத்தி உள்ளான்'' என்று ஒஸ்த்ரவ்னோவ் சொல்லி விடுவான். ''எனவே நீ அந்த மாவு, தேன், கொழுப்பு எல்லாவற்றையும் எடைபோடாமல் கொடு. நம்முடைய அதிகாரியைக் கேள்வி கேட்க, நமக்கு அதிகாரம் ஏது?'' என்று சொல்லி வைத்தான் ஒஸ்த்ரவ்னோவ்.

ஒஸ்த்ரவ்னோவ் கேட்டதையெல்லாம் பண்டசாலை மேலாளர் சொடுத்தான். பண்டசாலையில் நடந்த திருட்டுகளை, தவறுகளைக் குழுத்தலைவர்கள் அறியாதவண்ணம் மூடிமறைத்தான்.

எனவே இந்த அருமையான வாய்ப்பனைத் தையும் தவீதவை இழிவுபடுத்த ஒஸ்த்ரவ்னோவ் பயன்படுத்திக் கொள்ளமாட்டானா?

செய்வதற்கு உருப்படியான வேலை ஏதும் இல்லாததால், ஒஸ்த்ரவ்னோவும், கணக்கனும், நகூல்னவ், தவீதவ் மற்றும் ரஸ்மியோத்னவ் ஆகியோரைப் பற்றித் தாறுமாறாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையில் தவீதவும், ஷாலீயும் வேலைசெய்து

கொண்டிருந்தனர். தவீதவ் கூரைமீதேறி, கவையால், வெளிச்சம் உள்ளே வரவேண்டும் என்பதற்காக இரண்டு தட்டிகளை எடுத்துவிட்டான்.

''என்ன பெரியவரே, முன்னைக்கு இப்பொழுது வெளிச்சம் பரவாயில்லையா?'' என்று கேட்டான்.

''கூரையையே பிரித்துவிடு போதும்! இங்கு இப்பொழுது பகல் மாதிரி வெளிச்சம் இருக்கிறது'' என்று உள்ளே கொட்டடியில் இருந்து ஷாலீய் சத்தம் போட்டான்.

உத்தரத்தில் ஒரு சில எட்டுகள் எடுத்து வைத்த பின்னர் மெதுவாகக் கீழே குதித்தான் தவீதவ்.

''சீதரவிச், நாம் எங்கிருந்து தொடங்கலாம்?'' என்று கேட்டான் தவீதவ்.

''நாம் தொடக்கத்திலிருந்து ஆரம்பிப்பது தான் நல்லது, எனவே சுவரிலிருந்து ஆரம்பிப்போமே'' என்றான் கொல்லனாகிய இப்பலீத் கிழவன்.

உலைக்களத்தில் அவசர அவசரமாக ஷாலீய் அடித்துக் கொண்டுவந்த இரும்புத் தமுர்களை வைத்துக்கொண்டு கொட்டடியில் இருவரும் வேலை செய்தார்கள். எதிர் வீட்டுச் சுவர் ஓரமாகக் கிடந்த முறம் வரைக்கும் தரையில் இரும்புத் தமுரால் ஆணிகளைத் தரையில் இறக்கிக் கொண்டே போயினர். முறம் கிடந்த இடத்திற்குச் சில அடி தூரத்துக்கப்பால் தவீதவ் தமுர் போட்ட பொழுது, அது கைப்பிடி வரை பொதக்கென்று உள்ளே போய்விட்டது. அது ஏதோ ஓர் உலோகத்தில் தட்டி நின்றது.

''ஆகா, ஒரு புதையல் அகப்பட்டுவிட்டது போல இருக்கிறதே'' என்று தவீதவ் தனக்குத்தானே சிரித்துக் கொண்டு, மண்வெட்டியைத் தூக்கியவாறு சொன்னான்.

ஆனால் தவீதவ் அவன் கைகளினின்றும் மண்வெட்டியை வாங்கிக்கொண்டான்.

''நானே தோண்டுகிறேன், சீதரவிச், நான் தானே வயதில் குறைந்தவன்.''

ஒரு மீட்டருக்குக்கீழ் ஒரு பொட்டலம் தென்பட்டது. மசகு தடவிய கித்தானில் கவனமாகச் சுற்றிவைக்கப்பட்ட எந்திரத் துப்பாக்கி ஒன்று இருந்தது. இருவருமாகச் சேர்ந்து அதைக் குழியை விட்டு இழுத்தனர். கித்தானை அமைதியாகப் பிரித்தனர். அமைதியாகவே ஒருவரையொருவர்

பார்த்துக்கொண்டனர், அமைதியாகவே புகைபிடிக்கத் தொடங்கினர்.

இரண்டு இழுவைப் புகையை விட்டு, ''இந்த ரிவானிய்கள் உண்மையாகவே சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போராட முயன்றிருக்கிறார்கள், பார்த்தாயா?..'' என்றான் ஷாலீய்.

''அவர்கள் எந்திரத் துப்பாக்கியை எவ்வளவு அன்புடன் கவனித்து இருக்கிறார்கள் பார்த்தாயா? ஒரு சொட்டுத் துருவாவது பிடித்திருக்கிறதா? சும்மா தோட்டா வாரை மாட்டிக்கொண்டு வேட்டுக் கிளப்பவேண்டியது தான்! கொஞ்சம் பொறு; குழிக்குள் இன்னும் வேறு ஏதாவது நமக்குக் கிடைக்கிறதா என்று பார்க்கலாம்...'' என்றான் தவீதவ்.

அரைமணி நேரம் கழித்து நான்கு தகரப்பெட்டிகள் நிறைய தோட்டாவார்கள், ரைபிள், திறக்கப்பட்ட ரைபிள் தோட்டாக்கள் அடங்கிய பெட்டி ஒன்று, எட்டு கைவெடி குண்டுகள், ஓர் எண்ணெய்க் காகிதத்தில் சுற்றிவைக்கப்பட்ட திரிகள், ஆகியவற்றை எடுத்து வைத்தான். கல் சுவரடியில் போன அந்தச் சுரங்கக் குழியில் கைத் தயாரிப்புப் பெட்டி ஒன்று காலியாகக்கிடந்தது. அதனுடைய நீளத்தைப் பார்த்தபொழுது அதில் முன்னர் ஒரு ரைபிள் இருந்ததாகத் தெரிந்தது.

மாலைக்கதிரவன் மறையும் வரையில் ஷாலீயும், தவீதவும், அந்த எந்திரத்துப்பாக்கியை எடுத்து அங்கம் அங்கமாகத் துடைத்து எண்ணெய் போட்டுக்கொண்டிருந்தனர். மாலை வேளையின் மங்கிய ஒளி, கிரெமியாச்சி கிராமத்தைக் கவ்விக்கொண்டிருந்தது. இரவின் இருள் படர்ந்தவுடன் துப்பாக்கி வேட்டுச் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. ஒரு நீண்டவெடி, பிறகு இரு சின்ன வெடிகள், மீண்டும் ஒரு நீண்டவெடி, மறுபடியும் கிராமத்திலும் புல்வெளியிலும் அமைதி தவழ்ந்தது. பகல் வெயிலில் இருந்தும் புல்லின் மென் மணத்திலும், கிராமமும் புல்வெளியும் ஆழ்ந்த அமைதியில் மூழ்கின.

தவீதவ் எழுந்து, ''நல்ல எந்திரம்! மிக அருமையான எந்திரம்!'' என்றான்.

''இந்த விநாடியே ஒஸ்த்ரவ்னோவ் வீட்டுக்குப் போகலாம்'' என்று கோபத்தோடு சொன்னான் ஷாலீய். ''நம்

முடைய தமுர்களை எடுத்துக் கொண்டுபோய், அவன் வீட்டு முற்றம், வெளிவீடு எல்லாவற்றிலும் துவாரம் போடுவோம்! அவன் வீட்டை உச்சி முதல் அடித்தளம் வரை ஆராய்ச்சி செய்வோம். அவனை அதிகமாகவே விளையாட அனுமதித்து விட்டோம்.''

''உனக்குச் சரியாக வெறியே பிடித்து விட்டது, கிழவனே!'' என்றான் நிதானமாக தவீதவ். ''அப்படிச் சோதனையிட நமக்கு யார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்? அப்படிச் செய்தால் இந்த ஊரே விழித்துக்கொள்ளாதா? இல்லை, உனக்கு மூளை கெட்டுப்போய்விட்டது, உண்மையாகத்தான்!''

''ரிவானியின் வீட்டில் ஓர் எந்திரத் துப்பாக்கி கிடைத்தால் ஒஸ்த்ரவ்னோவ் வீட்டில் ஒரு ஆறு அங்குல விட்டமுள்ள பீரங்கியாவது இருக்கும்! இப்பொழுது நான் ஒன்றும் மூளை கழன்று இருக்கவில்லை. நீதான் உன்னையே முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறாய். நான் நேரடியாகவே சொல்கிறேன்! நீ பொறுத்துக் கொண்டிரு. யாக்கவ் லுக்கீச் அவனுடைய பீரங்கியைத் தோண்டி எடுத்து உன் வீட்டிற்கெதிராகவே குறிபார்த்து நீட்டட்டும்; அப்பொழுதுதான் உனக்கு 'உண்மையானதாக' இருக்கும்!''

தவீதவ் சிரித்துக் கொண்டே கிழவனின் தோளில் கையைப் போட்டுத் தழுவப் பார்த்தான். ஆனால் ஷாலீய் திரும்பி அப்பால் நகர்ந்தான். காரி உமிழ்ந்து விட்டு விடை பெற்றுக் கொள்ளாமலேயே எதையோ முணுமுணுத்தபடி ஊரை நோக்கியபடி நடந்தான்.

அத்தியாயம் பதினெட்டு

அண்மைக் காலங்களில் ஷ்சுக்கார் தாத்தா தான் எடுத்துக் கொண்ட எல்லா விஷயங்களிலுமே துரதிர்ஷ்டம் பிடித்தவனாக இருந்து வந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக இன்றோ, பெரிதும் சிறிதுமான எத்தனையோ ஏமாற்றங்கள், தோல்விகள், நெருக்கடிகள் ஒன்றன் பின் ஒன்றாய்த் தொடரவே, ஷ்சுக்கார் மனமொடிந்து, வழக்கத்திற்கு அதிகமாகவே சகுனங்களிலும், விதிவழியிலும் நம்பிக்கை கொண்டான்... இன்றைய நாளின் தொடக்கத்திலிருந்தே தொட்ட சகுனமெல்லாம் தனக்கு எதிராகவே இருந்ததைப் பார்த்த

பிறகு தான் மாவட்டத் தலைநகருக்கு பயணம் ஏற்கமாட்டேன் என தவீதவிடம் நேரடியாகச் சொல்லியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்...

நிர்வாக அலுவலகக் கட்டிடத்தை விட்டு இரண்டு வரிசைக் குடிசைகளைக்கூடத் தாண்டவில்லை, கடிவாளத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தி, அதன்மீது சாய்ந்தவண்ணம் சிந்தனையில் மூழ்கினான்... அவன் ஆழ்ந்த தியானத்தில் மூழ்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன. ''விடிவதற்கு முன்னால் தன்னைக் கருப்பும் வெள்ளையும் விழுந்த ஓநாய் ஒன்று துரத்துவதைப் போலக் கனவு கண்டான். ஆனால் அது கருப்பு, வெள்ளை ஓநாயாக ஏன் இருக்க வேண்டும்? அது என்னை ஏன் துரத்தி வரவேண்டும்? இந்த உலகிலேயே என்னைத் தவிர வேறு ஆளே இல்லையா? யாராவது ஓர் இளமையும், துடிப்பும் உள்ள இளைஞனைத் துரத்தியிருந்தால், நானும் வேடிக்கை பார்த்திருப்பேன் அல்லவா? தூக்கத்தில் கூட, இந்த உலகத் துன்பங்கள் அனைத்தையும் நான் அநுபவிக்க வேண்டுமா? இதுவா வாழ்க்கை? நான் எழுந்தபோது அது படபடவென்று துடித்து, பூசணிபோல் வீங்கி, வாய்வழியாக வெளிவந்து விடுவது போலல்லவா இருந்தது? இப்படிப்பட்ட கனவு காண்பது மகிழ்ச்சியான விஷயம் என்று நான் நினைக்கவில்லை. அந்த ஓநாயும் இயற்கையான சாம்பல் நிறத்தில் இல்லாமல், கருப்பும் வெள்ளையுமாக ஏன் இருக்க வேண்டும்? அது நல்ல அறிகுறியா? வாழ்க்கைக்குப் பொதுவாக இல்லை. அது தான் இருப்பதிலேயே மட்டமான, மோசமான குறி. இது நிச்சயமாக நம்மை இந்தப் பயணம் ஆபத்திலேயே கொண்டு போய் விடும். நிச்சயம் நடக்கும். நான் தூங்காமலிருக்கும் போது என்ன நடந்தது? முதலில் என் குல்லாயைத் தேட முடியவில்லை. பிறகு எனது புகையிலைப் பையைக் காணோம். அதன் பிறகு என் மேலங்கியைக் காணவில்லை... இவையெல்லாம் எந்த வகையிலும் நல்ல அறிகுறிகள் அல்ல.. தவீதவ் சொன்னபடி நான் கேட்டிருக்கவே கூடாது. களஞ்சியத்தை விட்டு ஓர் அடி வெளியே எடுத்து வைத்திருக்கக் கூடாது!'' வெறிச்சோடிக் கிடந்த வீதியைப் பார்த்தவண்ணம் இதேபோன்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். வேலி நிழலடியில் கன்றுகள் படுத்திருந்தன. சாலைப்புழுதியில் குருவிகள் தாவிக் குதித்துக் கொண்டிருந்தன.

திரும்பிச் செல்ல அவன் முடிவு செய்திருந்த போது, சமீபத்தில் தான் தவீதவுடன் மோதிக்கொண்டது, நினைவுக்கு வந்தது. எனவே மனத்தை மாற்றிக்கொண்டான். இன்று போலவே, அன்றும், பயங்கரமான பல கனவுகளைக் கண்டதால், தவீதவ் முதல் குழுவுக்கு வண்டியில் ஏற்றிச் செல்ல மறுத்துவிட்டான். முதல் நாள் இரவு கண்ட கெட்ட கனவுகள் காரணமாகத்தான் அன்பும், பரிவும் உள்ள தவீதவின் கண்கள் குளிர்ந்து, விறைத்து நின்றன. ஷ்சுக்கார் பயந்துபோய், கெஞ்சுகிற முறையில், ''அருமைத் தம்பி செமியோன்! உன் கண்களிலிருந்து குத்தும் ஊசிகளை அகற்றிவிடு! முடியாதா? அவை கட்டிப்போட்ட நாய் மாதிரி முறைத்துக்கொண்டு பயங்கரமாக இருக்கின்றன. நல்ல மனிதர்களைப் பார்த்துக் குரைக்கும் அந்த நாய்களைப்பற்றி எவ்வளவு மோசமான கருத்துக் கொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியும். நாம் ஏன் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்? நீ அவ்வளவு பிடிவாதமாக இருந்தால், போவது பற்றி எனக்கு மறுப்பு இல்லை. போகும் வழியில் ஏதாவது நடந்தால், அதற்கு நான் பொறுப்பாக மாட்டேன்!''

இந்தக் கூற்றைக் கேட்டவுடன் தவீதவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.அவன் கண்கள் மறுபடியும் அன்புடன் துடித்தன. ஷ்சுக்காரின் வெற்றொலி கிளப்பும் முதுகிலே ஒரு தட்டுதட்டி, ''இப்படிப் பேசுவதுதான் முறையானது, உண்மைதான்! உன் வீட்டுக் கிழவியிடம் உனது முழுமையான பாதுகாப்பு பற்றி நான் சொல்லிக் கொள்கிறேன். நீ எதற்கும் கவலைப்படத் தேவையில்லை'' என்று தவீதவ் சொன்னான்.

இவை அனைத்தையும் எண்ணிப் பார்த்த ஷ்சுக்கார் முறுவலித்துக் கொண்டான். மறு விநாடி தயக்கமின்றி கடிவாளத்தால் குதிரைகளைத் தட்டிவிட்டான். ''ஆமாம், நான் அந்த ஊருக்குப் போகத்தான் போகிறேன்! இந்தச் சகுனங்கள் எல்லாம் சனியனாகப் போக! ஏதாவது நடந்தால் தவீதவ் பதில் சொல்லட்டும். சாலையில் ஏதாவது நடந்தால் அதற்கு நான் பொறுப்பாகப் போவதில்லை! என்ன இருந்தாலும், தவீதவ் நல்லவன். அவனைக் நான் கோபப்படுத்துவது நல்லதல்ல.''

எருவட்டிப் புகை கிராமத்துக் கூரைகளில் வளையமிட்டது. வீட்டுப் பெண்கள் காலைச் சமையலை முடித்துவிட்

டதை இப்புகை எடுத்துக் காட்டிற்று. இளந் தென்றல் பூக்களின் மணத்தைச் சுமந்து வந்தது. மாட்டுக் கொட்டடி களைக் கடந்து சென்றபொழுது, சாணவாசனையும், பால் மணமும் கம்மென்று வீசிற்று. இந்த வாசனையை ஷ்சுக்கார் தனது குழந்தைப் பருவத்திலிருந்து அநுபவித்ததுதான். கண் களைச் செருகிக் கொண்டு, குறுகலாகப் பார்த்த வண்ணம், காற்றில் பறந்து கொண்டிருந்த தாடியைப் பிடித்துக் கொண்டு, அவன் மிகவும் விரும்பிய கிராமத்தின் எளிய வாழ்வை ரசித்துக் கொண்டே போனான். வண்டி போய்க் கொண்டிருந்த பாதையில், பின்னிப் பிணைந்து தீவிரமாகச் சண்டை போட்டுக்கொண்டிருந்த குருவிகள் சக்கரத்தில் மாட்டிவிடாமலிருக்க, தனது சோம்பேறித் தனத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், சாட்டையைச் சுழற்றி அவற் றைத் துரத்தினான். அன்தீப் கிராச்சின் முற்றத்தைக் கடந்து செல்கையில் ரொட்டி சுடும் வாசனை மூக்கைத் துளைத்தது. கிரெமியாச்சிப் பெண்கள் வழக்கமாக ரொட் டியை முட்டைக்கோஸ் இலையில் சுடுவதுதான் வழக்கமாக இருந்தது, எனவே அது எரிந்து கருகிய வாசனை நன்றாக வீசிற்று. முதல் நாள் நண்பகல் தொடக்கம் தான் சாப்பிட வில்லை என்பதையும் நினைத்துக்கொண்டவுடன் திடீ ரென்று பசி உணர்வு ஏற்படவே, அவனது பொக்கை வாயில் அவனை அறியாமலே எச்சில் ஊறியது, வயிற்றையோ பசி கவ்வியது.

அந்த ஊருக்கு புறப்படும் முன்னர் சாப்பிட எதையாவது எடுத்துக்கொள்ள, வீட்டை நோக்கி, பக்கத்துச் சந்துவழி யாக குதிரைகளைத் திருப்பினான். சிறிது தூரத்திலிருந்து பார்த்த பொழுதே, வீட்டில் புகைப் போக்கியில் புகை வரவில்லையென்பது தெரிந்தது. ''சமையல் வேலையை முடித்துவிட்டு, என் கிழவி தூங்கிக்கொண்டிருக்கிறாள்'' என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்ளும் முறையில் நினைத்து முறுவலித்துக் கொண்டான். ''என்னுடன் ஓர் இளவரசி மாதிரிதான் வாழ்க்கை நடத்துகிறாள். எந்தவிதத் தொல்லையும், துன்பமும் அவளை அணுகாது...''

ஷ்சுக்கார் தாத்தா, கவலை நிறைந்த சிந்தனையிலி ருந்து நல்ல மகிழ்ச்சி நிறைந்த உணர்வுக்குத் திரும்பச் சற்று நேரமே பிடிக்கும். அப்படிப்பட்ட குழந்தைத்தன மான இயல்பு கொண்டவன் தான் ஷ்சுக்கார். கடிவாளத்

தைப் பிடித்தவாறே, ''இவளுக்கென்ன இப்படிப்பட்ட இன்ப வாழ்வு, சுவர்க்கத்துப் பறவை மாதிரி?'' என்று நினைத்தான். ''உண்மையில் எனக்குத்தான் நன்றி பாராட்ட வேண்டும்! கடந்த மாரிக்காலத்தில் அந்தக் கன்றை நான் கொன்றது சரிதான். கடவுளுக்கே நல்லது! ஒரு கன்று இல்லாததால் இப்பொழுது என் கிழவி எவ்வளவு ஓய்வுடன் வாழ்கிறாள்! சமைத்து முடித்த உடனேயே தூங்கப் போய்விடுகிறாள். நான் அந்தக் கன்றை கொல்லாதிருந்தால், அது இந்நேரம் பசுவாகி இருக்கும். அதிகாலையில் எழுந்து பால் கறக்க வேண்டும். பிறகு கிடைக்குத் துரத்திக்கொண்டு போகவேண்டும். பகலெல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு, மாலையில் ஈக்கடி பொறுக்க முடியாமல் வீட்டுக்குப் பாய்ந்து ஓடிவரும். அவைப் பழையபடியும் துரத்த வேண்டும். மீண்டும் மாரிக்காலத்துக்குத் தீவனம் சேகரித்துவைக்க வேண்டும். மாட்டுக் கொட்டடியைச் சுத்தம் செய்ய வேண்டும். கூரையை நாணற்புல்லாவது, வைக்கோலாவது போட்டு வேய வேண்டும்... ஒரே தொந்தரவு! ஆடுகளும் வேண்டாமென்று முடிவு கட்டிவிட்டு விட்டது நான் செய்த மற்றொரு நல்ல காரியம்! இவற்றை மேய்ச்சலுக்கு ஓட்டிக் கொண்டுபோய், சனியன் பிடித்தவைகளைத் திட்டிக் கொண்டு, தப்பித்தவறி அவை மந்தையை விட்டு விலகிப் போய் ஓநாய் பிடித்துக்கொண்டு போனாலோ, நினைத்து நான் கவலைப்படத் தேவையில்லை. இப்படி விஷயத்துக்கெல்லாம் என் வாழ்நாள் முழுவதும் கவலைப்பட்டிருந்தால், என் இதயமே கால்மிதித் துணி மாதிரி ஒரே துவாரமயமாகி இருக்கும். எங்கள் வீட்டில் குட்டி பன்றியும் இல்லை. அதுவும் நல்லதாப் போச்சு! குட்டி பன்றி எனக்கு எதற்காக என்று நான் கேட்கலாம் அல்லவா? பன்றிக் கொழுப்பைக் கொஞ்சம் அதிகமாக நான் சாப்பிட்டால் எரிச்சல் உண்டாகிறது. இரண்டாவதாக, எனக்கே இரண்டு பிடி மாவுக்கு மேல் இல்லாதிருக்கும்போது, அதை இதை வைத்து எப்படி வளர்ப்பது? அதுவும் பட்டினி கிடந்து சாகும், கீச்சொலி எழுப்பி என் உயிரையும் வாங்கும்... மேலும் பன்றி அருவருப்பாக வளர்ச்சி அடையும் ஒரு மிருகம். ஒன்று நோய் வந்து சாகும், அல்லது ஏதாவது உடம்பெல்லாம் புண் வந்து நோகும். அப்படி ஏதாவது வந்தால் அன்றோ மறுநாளோ காலியாகி விடும். அதனால் வரும் நாற்றத்தை

யாராலும் தாங்க முடியாது. நம்மால் மூச்சே விடமுடியாது. பன்றி இல்லாமல் சுத்தமான காற்று என்னைச் சுற்றி வீசுகிறது. இப்பொழுது நான் புல்லின் மென் மணத்தையும், காய்கறிகளின் வாசனையையும், பூண்டுகளின் நாற்றத்தையும் நுகர்ந்து ரசிக்கிறேன். ஆமாம், இந்தப் பாவி எனக்குச் சுத்தமான காற்று என்றால் உயிர்! ஒரு பன்றியை வளர்க்க நேரிட்டால் அதை நகரத்துக்கே தள்ளிவிடுவேனேயன்றி, வளர்ப்பதென்றால், நான் செத்து ஒழிந்தே போவேன்! எங்களிடம் இரண்டு சுத்தமான சிறு கோழிகளும், ஒரு நல்ல சேவலும் இருக்கின்றன. எங்களிருவருக்கும், எங்கள் வாழ்க்கை முழுவதற்கும் அவை ஏராளம். இளைஞர்கள் வேண்டுமானால் பணக்காரர்கள் ஆகட்டும். எங்களுக்குப் பணம் தேவையில்லை. மக்கார்கூட என்னைப் பாராட்டுகிறான். அவன் சொல்கிறான்: 'தாத்தா, நீ முழுக்க பாட்டாளி வர்க்கம் ஆகிவிட்டாய். உனது சிறிய சொத்தைக்கூட விட்டுவிட்டாதே!' இதை அவன் சொல்ல, நான் கேட்டபோது, மனநிறைவுடன் 'பாட்டாளி வர்க்கம் என்று சொல்லப்படுவது கேட்க நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் என் வாழ்க்கை முழுவதும் வெந்த கஞ்சியிலும் கொழுப்பில்லாத வெறும் சூப்புப் போட்டுக் குடிக்க முடியுமா? தொழிலாளி வர்க்கத்துக்கு நன்மையுண்டாகட்டும். உழைக்கும் நமக்குக் கொழுப்புக் கிடைக்கவில்லையென்றால், மாரிக்காலத்துக்கு உள்ளாக என் காலியானாலும் ஆகிவிடும். அதற்கப்புறம் பாட்டாளி வர்க்கம் என்ற பட்டத்தால் எனக்கென்ன பயன்? முதிர்வேனிற் காலத்தில் எவ்வளவு வேலை நாட்கள் என்னுடையது என்று கணக்குத் தெரிந்து விடும். அது போதவில்லையென்றால், மீண்டும் சிறிது சொந்தமாக சொத்து வைத்துக் கொள்ளத் தொடங்க வேண்டியது தான்.' ''

ஷ்சுக்கார் தாத்தா கண்களை மூடிச் சிந்தித்த வண்ணம், உரத்த குரலில், ''ஆமாம். இந்தத் தலைகீழ் வாழ்க்கையில் நாம் பலவற்றைச் சகித்துக்கொண்டுதான் வாழ நேரிடுகிறது! எல்லாமே புதிய பாதையில் போகின்றன. எல்லாமே வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கிறது. நடன ஆட்டக்காரி போல ஒரே நெளிவு சுளிவு வளைவாகத்தானிருக்கிறது...'' என்றான்.

குதிரைகளை வேலியில் கட்டிப் போட்டு விட்டு குச்சிக்

கதவைத் திறந்தான். வீட்டு எசமானனின் அதிகார உரிமை யோடு, மெதுவாக, யோசனையுடன், புல்முளைத்த பாதை யில் குடிசையை நோக்கி நடந்தான்.

சமையலறை பாதி இருட்டாக இருந்தது. வரவேற்பு அறைக் கதவு சாத்தியிருந்தது. பெஞ்சின்மீது, தனது அழுக்கு ஏறிய தப்பட்டைக் குல்லாயை வைத்தான். த்ரஃபீ முக்குப் பயந்துகொண்டு விநாடியும் கீழே போடாமல் வைத் திருந்த சாட்டையையும் அங்கே வைத்தான். சுற்று முற்றும் பார்த்து விட்டு, ''ஏ கிழவி! என்ன, இன்னும் உயிரோடு தான் இருக்கிறாயா?'' என்று கேட்டான்.

வரவேற்பு அறையிலிருந்து ஆற்றலற்ற ஒரு குரல் கேட் டது: ''இப்பொழுதுதான்... நேற்று இரவிலிருந்து இங்கு தான் படுத்துக் கிடக்கிறேன். என்னால் தலையைத் தூக்க முடியவில்லை. உடம்பிலுள்ள எலும்பெல்லாம் வலிக்கிறது. இவ்வளவு கனத்த மேலங்கி போட்டிருந்தும் கூட உடம்பே நடுநடுங்கிக் கொண்டிருக்கிறது... எனக்குக் காய்ச்சலாகத் தான் இருக்கும் என்று நினைக்கிறேன்... பெரியவரே, நீ எதற்காக வந்தாய்?''

ஷ்சுக்கார் அறையின் கதவைத் திறந்து விட்டு, ''நான் பெரிய ஊருக்குப் போய்க்கொண்டு இருக்கிறேன். புறப் படும் முன் ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.''

''எதற்காக அங்கே போகிறாய்?''

பெருமையோடு ஷ்சுக்கார் தாத்தா தாடியைத் தடவி விட்டுக்கொண்டான். தயக்கத்தோடு, ''அது மிக முக்கிய மான காரியம். நில ஆய்வாளரை அழைத்துவரப் போகி றேன். 'தாத்தா நில ஆய்வாளரை நீ போய் அழைத்து வராவிட்டால், வேறு யாராலும் முடியாது' என்று தவீதவ் என்னிடம் சொன்னான். இந்த மாவட்டம் முழுவதிலுமே ஒரே ஒரு நில அளவையர் தான் இருக்கிறார். ஷிபர்த் னோய் எனக்குப் பழக்கமானவர், நான் அழைத்தால் அவர் வந்துவிடுவார்'' என்று சொல்லிவிட்டு, திடீரென்று தொ னியை மாற்றி, ''சாப்பிட ஏதாவது கொண்டுவா, நேரம் காத்திராது'' என்று அவசரப்படுத்தினான்.

கிழவியின் முணகல் சத்தம் அதிகரித்தது: ''ஐயோ! என் அன்பே! உனக்கு நான் எதைப் போடுவேன்? நான் அடுப் பையே மூட்டவில்லையே. இன்று சமைக்கவும் இல்லையே.

தோட்டத்தில் போய் தண்ணீர்க் குமுட்டிப் பழங்களைப் பிடுங்கி வா. நம்முடைய பக்கத்து வீட்டுக்காரி நேற்றுக் கொடுத்த புளித்த பால் இருக்கிறது'' என்று சொன்னாள்.

தன் மனைவி சொன்னதையெல்லாம், கோபத்தை அடக்கிக்கொண்டு கேட்டான் ஷ்சுக்கார். கடைசியாக கோபத்துடன், ''தண்ணீர்க் குமுட்டியும், புளித்த பாலுமா? ஏ, கிழட்டுக் கூளக்கிடாய்,* உனக்கென்ன பைத்தியமா? நீ என்னதான் செய்துகொண்டிருந்தாய்? கொஞ்சமிருக்கும் என் மானம் மரியாதையையும் இழக்க வேண்டும் என்கிறாயா? என் வயிறு சரியில்லை என்பது உனக்குத் தெரியும். இந்த லட்சணத்தில் நீ சொல்லும் இந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டால் வழிநெடுக வயிற்றோட்டம்தான். பிறகு அந்த ஊருக்கு எப்படிப் போவது? காற் சட்டையைக் கையில் கழற்றிப் பிடித்துக்கொண்டு போகவேண்டியதுதான். குதிரைகளையும் ஒரு விநாடிகூட விட்டுவிட முடியாது. இப்பொழுது நான் என்ன செய்வது? என்னிடமுள்ள கொஞ்சநஞ்ச மரியாதையையும் நடுத்தெருவில் இழக்கவேண்டியது தான். ரொம்ப நன்றிதான் போ! தண்ணீர்க் குமுட்டிப் பழத்தை நீயே சாப்பிடு, புளித்த பாலையும் குடி. நான் சாப்பிடத் தயாரில்லை! என்னுடையது மிக முக்கியமான வேலை. தவீதவையே வண்டியில் கூட்டிச் செல்கிறேன். எனவே, வினையை விலைக்கு வாங்கிகொள்ள நான் தயாரில்லை, புரிகிறதா கிழமே?''

கட்டிலில் கிரீச் சத்தம் கேட்டவுடன் ஷ்சுக்கார் தாத்தா எச்சரிக்கையாகி விட்டான். ஷ்சுக்கார் தன்னுடைய பேச்சை முடிப்பதற்குள் கிழவியிடம் ஒரு திடீர் மாற்றம் பிறந்தது. தன் படுக்கையிலிருந்து விருவிருப்புடன் எழுந்து இடுப்பில் கையை வைத்துக்கொண்டு கிழவரை நோக்கி கோபத்தோடும் தீர்மானத்தோடும் பாய்ந்தாள். அவளுடைய மெல்லிய குரல் மாறி, வெண்கலக் குரலில், கைக்குட்டையைச் சுருட்டிப் பிடித்த வண்ணம், ''ஏ மொட்டுக்கட்டை! உனக்கு முட்டைக் கோசில் கறிபோட்ட சூப் வேண்டுமா? இல்லை கேக்கும் பால்கட்டியும் கிடைக்கும் என்று நினைத்தாயா? உன்னுடைய அடுக்களையில் எலிக்குட்டியைத் தவிர வேறு

---

* நாரை போன்ற பெரிய பறவை. அலகின் அடியில் ஒரு பெரிய தோல்பை போன்ற இரைப்பை தொங்கும்.

எதுவும் இல்லாதபோது, இதையெல்லாம் எங்கிருந்து சமைப்பது? அந்த எலிக்குட்டியும் செத்துக்கொண்டிருக்கிறது! காதால்கூட கேள்விப்பட்டிராத இந்த வார்த்தைகளை வைத்து எத்தனை நாளைக்குத்தான் என்னை அவமானப் படுத்தப் போகிறாய்? எந்த முறையில் என்னைக் கூளக்கிடாய் என்றும், கத்துக்குட்டி என்றும் சொன்னாய்? மக்கார் நகூல்னவ் இப்படிப்பட்ட மட்டமான புத்தகங்களைப் படிக்க உனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறான். நீயொரு முட்டாள், அவனை இப்படிச் செய்ய அநுமதித்திருக்கிறாய். நான் ஒரு நாணயமான மனைவியாக உன்னுடன் வாழ்ந்து வந்திருக்கிறேன். இந்தத் தள்ளாத வயதில் என்னை நீ அவமானப்படுத்த என்றே என்னென்னவோ வார்த்தைகளால் திட்டுகிறாய்?!'' என்று புலம்பினாள்.

எதிர்பாராதவிதமாக என்னென்னவோ சம்பவங்கள் ஷ்சுக்காருக்கு நிகழ்ந்துவிட்டன. சமையலறையின் மூலைக்கே திரும்பினான். திறமையோடு பின்னடித்துக்கொண்டே, சரி செய்யக்கூடிய முறையில், ''இப்போது இது போதும், இது போதும், பெரியம்மா! இவை வசைமொழி வார்த்தைகளே அல்ல. ஒருவகையான அன்புக்குரிய விஞ்ஞான மொழி. கூளக்கிடாய் என்றால் 'என் அன்பே' என்று பொருள்... சாதாரணமாக பிரியமுள்ளவரே என்று சொல்வதை புத்தக பாணியில் 'கத்துக்குட்டியே' என்கிறோம், நான் பொய் சொல்லவில்லை. மக்கார் என்னிடம் படிக்கக் கொடுத்த அந்தப் பெரிய புத்தகத்தில் அப்படித்தான் போட்டிருந்தது. அதை என் கண்களால் நானே படித்தேன். நீ என்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறாய். உனது கல்வி அறிவின்மையை முழுமையாகப் போக்க வேண்டும். நான் படிப்பதைப் போலவே நீயும் படிக்க ஆரம்பித்தால் என்னை மாதிரியே வார்த்தைகளை நீயும் உபயோகிக்கலாம், தெரிகிறதா? இது உண்மை!'' என்றான் ஷ்சுக்கார்.

ஷ்சுக்காரின் குரலில் தொனித்த உறுதியும், நம்பிக்கையும் அவளை சாந்தப்படுத்தி அமைதிகொள்ளச் செய்தன. தன்னுடைய கணவனை இன்னும் நெருக்கமாகப் பார்த்துக் கொண்டு, ''காலங்கடந்த காலத்தில் இப்பொழுது என்னால் ஒன்றும் படிக்க முடியாது. படிக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஏ பனிப்பூனை, நீ முதலில் உன் சொந்த மொழியிலேயே பேசு. உன்னைப் பார்த்து மக்கள் எல்லாம்

பேதையைப் பார்த்துச் சிரிப்பதைப் போலச் சிரிக்கிறார்கள்'' என்றாள்.

''சிலரால் அப்படி இருக்க முடியாது'' என்று ஷ்சுக்கார் பெருமையோடு சொல்லிவிட்டு, அதற்கு மேல் விவாதத்தை நீட்டவில்லை.

காய்ந்த ரொட்டித் துண்டு ஒன்றை புளித்த பாலில் அமுக்கி நனைத்து சன்னல் வழியாக அடிக்கடி வெளியே பார்த்தவண்ணம், ''நான் எதற்காக அந்த ஊருக்கு அவசரமாகப் போக வேண்டும்?'' என்று நினைத்துக்கொண்டான். சாப்பாட்டையும் மிக மெதுவாக ரசித்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ''எவனாவது சாகப் போகிறான் என்றால் அவன் சாகும் முன் அவஸ்தை ஞானஸ்நானம் கொடுப்பதற்காகப் பாதிரியாரை அவசரமாக அழைத்துவர வேண்டியது தான். ஆனால் ஷிபர்த்னோய் ஒரு நில அளவையாளர் தான், பாதிரியார் அல்ல. தவீதவும் இப்பொழுது என்ன சாகவா போகிறான்? பிறகு எதற்காகக் காலை ஒடித்துக்கொண்டு நான் ஏன் ஓட வேண்டும்? அடுத்த உலகத்திற்கு அவரவர் போக வேண்டிய காலத்தில் போய்த்தான் தீர வேண்டும்... அதற்காக வரிசைக் கிரமமாக ஒருவர் போய் நிற்க வேண்டியதில்லை. நான் இந்த ஊரைவிட்டு அப்பால் நகர்ந்தவுடன், ஆள் அரவமற்ற ஓர் ஓடையில் போய் நிம்மதியாகத் தூங்கப் போகிறேன். நான் தூங்கும்போது அந்தக் குதிரைகள் கொஞ்சம் புல்லையும் மேய்ந்து கொள்ளலாம். இரவு துப்த்ஸோவின் குழுவுடன் சேர்ந்துகொள்வேன். அங்கு தாரியா நிச்சயம் இரவுச் சாப்பாடு கொடுப்பாள். பிறகு இரவில் குளிர்ந்த நேரத்தில் அந்த ஊருக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போவேன். கடவுள் காப்பாராக! ஒருவேளை தவீதவ் இதைத் தெரிந்துகொண்டு கேட்டால் நான் நேரடியாகவே, 'அந்த எழவெடுத்த த்ரஃபீமை முதலில் தொலைத்துக்கட்டு. பிறகு நான் சாலையில் தூங்க மாட்டேன். இரவு முழுக்க என்னைச் சுற்றிச் சுற்றியே வளையம் வந்து கொண்டிருந்தால், எப்படி ஒரு மனிதன் தூங்க முடியும்? வேறு என்ன செய்வது! நரகவேதனை!' என்று சொல்லி விடுகிறேன்'' என்று நினைத்துக் கொண்டான் ஷ்சுக்கார்.

துப்த்ஸோவின் குழுவிற்குப் போவதாக நினைத்த மாத்திரத்திலேயே ஷ்சுக்கார் கிழவனுக்கு சிரிப்பு வந்து விட்டது.

ஆனால் அந்த மகிழ்ச்சியையும் அவன் மனைவி கெடுத்துவிட்டாள். ''எதற்காக இப்படி மென்று, அசை போட்டுக் கொண்டிருக்கிறாய்? உன் தாடைக்கு என்ன பூட்டா போட்டு இருக்கிறது? உன்னை எங்காவது அனுப்பி இருந்தால், நீ அங்கு போகாமல், இங்கு, குப்பைத்தொட்டி சாணிப்புழு மாதிரி நெளிந்து கொண்டிருக்கிறாயே. புறப்படுகிற வழியைப் பார். புத்தகத்தில் படித்த வார்த்தைகளை எல்லாம் இனிமேல் என்னிடம் சொல்லக்கூடாது. அவற்றை மறந்து விட வேண்டும். என்னிடம் மறந்து சொன்னாலுங்கூட குச்சியை எடுத்துக் கொண்டு முதுகிலே விளாசி விடுவேன். நினைவிருக்கட்டும் கிழட்டு முட்டாளே!'' என்று எச்சரித்தாள்.

''குச்சிக்கு இரு முனைகள் உண்டு'' என்று ஷ்சுக்கார் கிழவன் மெதுவாக முணகினான்.

கம்பீரமாக நின்ற தன் மனைவியின் முகத்தில் கோபத்தின் அறிகுறியாக புருவங்கள் நெளிவதையும், சுருக்கங்கள் விரிவதையும் கண்ட ஷ்சுக்கார், பாலை அவசரமாகக் குடித்துவிட்டு புறப்படத் தயாரானான்.

''என் அன்பே! நீ இங்கேயே படுத்திரு. சும்மா தேவையின்றி எழாதே. உன் மனதாரக் காய்ச்சலாகப் படுத்திரு. நான் வரட்டுமா?'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

''சரி, போய் வா!'' என்று அன்புணர்ச்சி ஏதுமின்றி முதுகைத் திருப்பிக்கொண்டு சொன்னாள் கிழவி.

* * *

சிவப்புக் கணவாயின் தலைமாடு வரை, கிராமத்தில் இருந்து சுமார் ஆறு கிலோமீட்டர்கள் வரை தூங்கி வழிந்தவாறு மெதுவாக வண்டியை ஓட்டிச்சென்றான் ஷ்சுக்கார். அடிக்கடி தலையை ஆட்டிக்கொண்டு, இனிமையான அரைத் தூக்கத்திலிருந்தான். மதிய வெயிலின் கொடுமை தாங்காமல் ஏறத்தாழ ஒன்றும் செய்ய முடியாமல் நொறுக்குண்டவரைப் போல உணர்ந்தான். ஏதாவது ஓர் இடம் பார்த்து இறங்காவிட்டால், ''நான் விழுந்தாலும் விழுந்து விடுவேன்'' என நினைத்து, ஓடைப்பக்கமாக வண்டியைத் திருப்பினான்.

கணவாயின் அடிப்பகுதியில் ஏதோ ஓர் இனந்தெரியாத

மணங்கமழும் புல் நிறைய முளைத்திருந்தது. ஓடை நீர் கணவாயின் மேலே இருந்து, களிமண்ணைக் கீழே தள்ளிக் கொண்டு வந்து விட்டிருந்தது. நீர் கண்ணாடிபோல தெளி வாகவும், குதிரைகள்கூட பல்லை வைத்து விட்டுவிட்டு உறிஞ்சிக் குடிப்பது போல, குளிராகவும் ஓடிக்கொண்டிருந் தது. ஓடைக் கரையோ, மதியவெயில் ஊடுருவ முடியாத படி நிழல் போர்த்தி இருந்தது. குதிரைகளைக் கழற்றி விடும் போதே, ''அருமையான இடம்!'' என்று ரசித்தான் ஷ்சுக்கார். குதிரைகளின் முன்னங்காலை மடக்கிக் கட்டி மேயவிட்ட பின்னர், ஒரு முட்புதரின் அடியில் மேலங்கியை விரித்து மல்லாந்து படுத்துக்கொண்டான். வெப்பத்தால் வெளிறிய நீல வானத்தை, கிழடுதட்டிவிட்ட தனது நீலக் கண்களால் பார்த்தவண்ணம், உலகு பற்றிய சிந்தனையில் மூழ்கினான்:''இப்படிப்பட்ட ஓர் இடத்திலிருக்கும் என்னை, இன்று மாலைவரை ஊசி வைத்துக் குத்தித் தேடினாலும் எழுப்ப முடியாது. நான் அருமையாகத் தூங்கிவிட்டு, மாலை வெயிலில் குளிர்காய்ந்து கொள்வேன். பிறகு துப்த் ஸோவிடம் போய், துழவை வாங்கிச் சாப்பிடுவேன். காலை யில் எனக்கு வீட்டில் சாப்பிட நேரமில்லை என்றுசொல்லி விட்டால், நிச்சயமாகச் சாப்பாடு போடுவார்கள். அது நிச்சயம். நடக்கும்! முகாமில் இருப்பவர்கள் வெறும் சாதாரண துழவை வைத்திருக்க மாட்டார்கள். சட்டியைச் சுரண்டிப் பத்தைப்போட்டு முடித்துவிடவும் மாட்டார்கள். புல் அறுவடைக் காலத்தில் சாப்பிடாமல் இருக்கக் கூடி யவர் அல்ல துப்த்ஸோவ். அந்த அம்மைத் தழும்பு விழுந்த மனிதன், ஒரு நாள்கூட கறியில்லாமல் சாப்பிட மாட்டான். யாருடைய கிடையிலிருந்தாவது ஓர் ஆட்டைப் பிடித்துக் தன்னுடைய குழுவினருக்குப் போட்டுவிடுவான்... அடடா! ஒரு சின்ன ஆட்டுக்குட்டி நாலு வீசை என்று கூட வைத்துக் கொள்வோமே! சாப்பாடு எப்படி இருக்கும் தெரியுமா? நிச்சயமாக மோசமாக இராது. கொஞ்சம் கொழுப்பைத் தடவி வாட்டியிருந்தால் இன்னும் நன்றாக இருக்கும். பன் றித் தொடையும் முட்டையும் என்றாலும் மோசமில்லை. அவை கொஞ்சம் தாராளமாக மட்டும் கிடைக்க வேண் டும்... அது இல்லாவிட்டாலும், புளித்த பால் கட்டியும், ஆப்பிள் போண்டாவும் இருக்கவே இருக்கிறது. அது புனித மான சாப்பாடு, கடவுள் பிரசாதத்தைக் காட்டிலுங்கூடப்

புனிதமானது. சிறுசிறு பழங்களைக் கோப்பையில் அடுக்கி, மேன்மேலும் அடுக்கி அவை பெரிய அளவில்கூடிய பின்னர், பிறகு கோப்பையைப் பிடித்துக் குலுக்கினால், மேலே இருந்து கீழேவரை உள்ள எல்லாப் பழங்களிலும், போண் டாக்களிலும் பால்கட்டி படும். இவற்றைத் தட்டில் வைக் காமல், ஒரு கோப்பையில் போட்டுக்கொண்டால் இன்னும் நன்றாக இருக்கும். அப்படி இருந்தால் நிறையப் பிடிக்கும், கரண்டி போடவும் நன்கு இடமிருக்கும்!''

ஷ்சுக்கார் தாத்தா எப்பொழுதுமே பெருந்தீனிக்காரன் அல்ல. அவனுக்குப் பசி அவ்வளவுதான். அவனுடைய துர திர்ஷ்டம் பிடித்த நீண்ட நெடிய வாழ்வில் ஒரு நாள்கூட சுவையான உணவை, முழுமையாக உண்டதில்லை. இனிமை யான உணவு என்று நினைப்பதை எல்லாம் கற்பான செய்து, கற்பனையிலேயே விழுங்கியும் மகிழ்வான். சில சமயங்களில் ஆட்டுக்குட்டிக் கறியைச் சாப்பிடுவதுபோல நினைத்துக் கொள்வான். சிலசமயம் நல்ல பெரிய கேக்கை, பால் கட்டியில் தடவி, முழுக்க முழுக்க விழுங்குவது போலக் கற் பனை செய்வான். சில சமயம் நல்ல வாத்து சூப்பை சூடாகக் குடித்துக்கொண்டே இருப்பதாகக் கற்பனை செய்வான்... உண்மையில் இரவு நேர கற்பனைகளுக்கு ஒரு முடிவே இல்லை. பசி நீடிக்கும்வரை அவையும் நீடிக்கும். சில சம யங்களில் எழுந்து சிலுவையைப் போட்டுக்கொண்டு, ''அட சனியனே! எவ்வளவு மோசமான கனவுகளை எல்லாம் காண்கிறாய்!'' என்று நினைத்துக்கொள்வான். ''வாழ்க்கை ஒரு வெறும் கேலிக்கூத்து, கற்பனையில், கனவில், கோப்பை கோப்பையாக முடிவற்ற முறையில் எதை எதையோ விழுங்குகிறாய். விழித்தெழுந்தாலோ, கருகிப்போன கருப்பு ரொட்டியையும், வெங்காயம் கொஞ்சம் சேர்ந்த நீரும் கொடுக்கிறாள் கிழவி. கண்ணறாவி!''

இப்படிப்பட்ட கனவுகளுக்குப் பின்னர், ஷ்சுக்கார் தாத்தா, தனது காய்ந்த உதடுகளைக் காலைச் சாப்பாடு வரை நக்கிக் கொண்டே இருப்பான். எளிமையான காலைச் சாப்பாட்டில் உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டே இருப்பான். தன்னுடைய மரக் கரண்டியை விட்டுத் துழாவி சட்டியில் ஏதாவது உருளைக்கிழங்கு கிடக்கிறதா என்று தேடுவான்.

முட் புதரடியில் படுத்துக்கொண்டே, நீண்ட நேரம்,

அந்த முகாமுக்குப் போனவுடன் என்ன சாப்பாடு கிடைக்கக் கூடும் என்பதைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டிருந்தான். அவன் புறப்பட நேரமாகிவிட்டது. ஒஸ்த்ரவ்னோவின் தாய் இறந்தபொழுது எழவு வீட்டில் போட்ட சாப்பாடு நினைவுக்கு வந்தது. ஒருகாலத்தில் சாப்பிட்டவைகளை எல்லாம் நினைத்துக் களைத்துப்போன, ஷ்சுக்காருக்குத் திடீரென்று பசி வயிற்றைக் கிள்ளியது. தூக்கம் ஏதோ ஒரு மந்திரத்தால் கலைந்ததைப்போல் கலைந்தது. கோபமாக எச்சலைத் துப்பினான், தாடியைத் தடவிவிட்டுக் கொண்டான், சுருங்கிப்போன வயிற்றைத் தடவி விட்டுக் கொண்டான். பிறகு உரத்த குரலில், ''ஒரு ரொட்டித் துண்டும், ஒரு கோப்பை புளித்த பாலும் மட்டுமா உற்பத்தி செய்யும் ஒருவனுக்குக் கொடுக்கப்படும் சாப்பாடு? காற்றைக் காட்டிலும் இது எந்த வகையில் சிறந்தது! ஒரு மணி நேரத்துக்கு முன்னர், என் வயிறு, சரியாக நரிக்குறத்தியின் சுரக்குடுக்கை மாதிரி இருந்தது. ஆனால் இப்பொழுது வயிறு முதுகோடு ஒட்டுக்கொண்டது. தேவாதி தேவா! வாழ்க்கை பூராவும் உன் வயிற்றை நிரப்புவது எப்படி என்றே நீ கவலைப்பட்டுச் சாகிறாய், உன் வாழ்க்கையோ விரல் வழியாக தண்ணீர் வடிவதைப் போல கழிந்து கொண்டே இருக்கிறது. எவ்வளவு விரைவில் இது முடியப் போகிறது என்பதை நீ உணர்வதே இல்லை... இந்த சிவப்புக் கணவாய்க்கு நான் வந்து எவ்வளவு நேரமாகி விட்டது? இந்த முட்புதரெல்லாம் பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்தது. இந்த ஓடை வெண்ணுரை தள்ளி ஓடிக் கொண்டிருந்தது. காற்றடித்தால், புதரிலிருந்து பூக்கள் சூறாவளியில் உதிரும் பனிக்கட்டிபோலப் பறக்கும். பாதையெல்லாம் வெள்ளையாகப் பூவால் மூடப்பட்டிருந்தது. எந்தப் பெண்ணின் முகப் பூச்சைக் காட்டிலும் கூட, தரையின் வாசனை மென்மணம் கமழ்வதாக இருந்தது. ஆனால் அந்த இள வேனிற்காலப் பூக்கள் பூத்து மறைந்துவிட்டன. எல்லாமே உதிர்ந்து விட்டன! இப்படித்தான் எனது பயனற்ற வாழ்க்கையும் உதிர்ந்துபோய் விட்டது. தேய்ந்து தேய்ந்து போன ஷ்சுக்கார் தாத்தாவின் வாழ்வில், நினைவுக்கென்று வைத்துக் கொள்ள என்ன மிஞ்சப் போகிறது?..''

இத்தருணத்தில் ஷ்சுக்காரின் தத்துவ விசாரணைகளும் உணர்ச்சிமயமான தியானங்களும் ஒரு முடிவுக்கு வந்தன.

தன்னைப் பற்றியே பரிதாபப்பட்ட ஷ்சுக்கார் தனக்காக அழுதுகொண்டு, மூக்கை சிந்திவிட்டு, சிவந்த கண்களைச் சட்டை நுனியால் துடைத்துக்கொண்டு, தூங்கி விட்டான். துயர நினைவுகள் அவனை எப்பொழுதும் தூக்கத்தில் ஆழ்த்துவது உண்டு.

தூங்கி வழியும்போதே, அவன் குணத்திற்கேற்ப மன நிறைவோடு முறுவலித்துக்கொண்டு பனி படர்ந்தது போன்ற தூக்கத்தின் ஊடே கண்களை மூடிக் கனவு கண்டான். ''துப்த்ஸோவின் குழு நிச்சயமாகச் சாப்பாட்டுக்கு, புதுக் கறி சமைத்திருப்பார்கள். அதை என் எலும்பு உணர்ந்து சொல்கிறது! உண்மையில் நான்கு பவுண்டு கறியை ஒரே நேரத்தில் என்னால் சாப்பிட முடியாது. ஆனால் மூன்று அல்லது மூன்றரை பவுண்டு என்றால் எப்படியாவது கண்ணைச் சிமிட்டாமல் சமாளித்துவிடுவேன்! மேசை மீது கறி இருக்கும்வரையில் இந்த ஷ்சுக்கார் விட மாட்டான். எப்படியும் வாயில் போட்டு முடித்து விடுவான் நிச்சயமாக!'' என்று நினைத்துக் கொண்டான்.

பிற்பகல் மூன்று மணிக்கு வெப்பம் உச்சத்தை அடைந்தது. ஒரு வறண்ட வெப்பக் காற்று கணவாய் வழியே சுழன்று விர்ரென்று வீசியது. மரநிழலிலிருந்த எஞ்சிய குளிரையும் அது அடித்துக்கொண்டு போய்விட்டது. கதிரவன் மேற்குத் திசையில் சாய்ந்தவுடன், அது ஷ்சுக்காரைத் துரத்துவதுபோல் தோன்றியது. ஷ்சுக்கார் வயிற்றை வைத்து, மேலங்கியைச் சுருட்டி அதில் தலையை வைத்துப் படுத்திருந்தான். முதன் முதலாக சூரியக் கதிர்கள் அவனைத் தொட்டு, சட்டையை ஊடுருவி, மெலிந்துபோன அவனது கிழ முதுகில் சுட்டவுடன், கொஞ்சம் நெளிந்து சுருண்டு நிழலில் புரள்வான். சில விநாடிகளில் சூரியன் விடாப்பிடியாகச் சுட, பழையபடியும் நெளிந்து புரள்வான். மூன்று மணி நேரத்துக்குள்ளாக அந்த முட்புதரை விழிக்காமலேயே அரைவட்டம் போட்டுவிட்டான். கடைசியாக, வெயில் வேக்காட்டில் களைத்துப்போன ஷ்சுக்கார், வியர்வையோடு எழுந்து, கையை வைத்து மறைத்துக்கொண்டு சூரியனைப் பார்த்தான். மிகக் கோபத்தோடு, ''கடவுளின் கண் நம்மைப் பார்த்துக்கொண்டே இருக்கிறது! கடவுளே என்னை மன்னியும். புதருக்கடியில்கூட மறைய முடியாது போல இருக்கிறதே. இன்று பிற்பகல் பூராவும் இந்தப் புதருக்கடி

யில், முயலை விரட்டினாற் போல வட்டம்போட வைத்து விட்டதே. இதைத் தூக்கம் எனலாமா? இது தூக்கமே அல்ல—தண்டனை! புல்வெளியில் ஏதாவது பள்ளத்தில் படுத்திருக்க வேண்டும். ஆனால் கடவுளின் இந்தக் கண்கள் அங்கும் துரத்தியிருக்கும். திறந்த புல்வெளியிலும் கூட தப்பிக்க வழி இல்லை. தப்பிப்பதற்கு இடத்தையே காணோம்!''

முனகிக்கொண்டும், பெருமூச்சுவிட்டுக்கொண்டும், அவசரமில்லாமல், பயனற்றுத் தேய்ந்து போன தனது காலணிகளைக் கழற்றிவிட்டு, கால்சட்டையை மடக்கிவிட்டு, நீண்ட நேரம் சுருக்கு விழுந்த தனது கால்களையே பார்த்துக் கொண்டும், தலையை ஆட்டிக்கொண்டும் கவலையோடு இருந்தான். அதற்கு பிறகு ஓடைக்குப் போய் குளிர்ந்த தண்ணீரில் வியர்த்த முகத்தைக் கழுவிக்கொள்ளப் போனான்.

அப்பொழுதுதான் தொடர்ச்சியாக இடர்ப்பாடுகளுக்கு ஆளானான்...

புல் செடிகளைக் கடந்து தண்ணீரில் இரண்டு அடி எடுத்து வைத்தான். நடு ஆற்றில் அவனது இடதுகால் குதியில் ஏதோ வழுக்கையாக நெறுக்கென்று தட்டுப்பட்டது. அத்துடன் முழங்காலருகே லேசாக ஏதோ கடிபட்டது. அவனது வழக்கத்திற்கு மாறான சுறு சுறுப்புடன் தண்ணீரை விட்டு காலை எடுத்தான். அடுத்த காலில் இந்தக் காலை ஊன்றி மடக்கி நின்றான். நடுச் சதுப்பு நிலத்தில் காலை மடக்கி ஒற்றைக் காலில் நிற்கும் கொக்கு மாதிரி ஷ்சுக்கார் நின்றான். தனது இடது காலோரம் இருந்த பச்சைச் செடி கொடிகள் சிறிது ஆடி அசைந்தன. ஒரு நெளிவு தென்பட்டது. அந்தச் செடிகளைப் போலவே ஷ்சுக்காரின் கண்களும் பச்சையாகிவிட்டன. குழியிலிருந்து பிதுங்கி வெளிவருவதுபோல கண்கள் பிதுங்கின...

தனது இளமைத் துடிப்பை கிழவன் ஷ்சுக்கார் எப்படித்தான் கண்டானோ தெரியவில்லை! நீண்ட காலத்திற்கு முன்பு மறைந்து போய்விட்ட இளமை திடீரென மீண்டதைப் போலத்தெரிந்தது. இரண்டே தாவில் கரைக்குப் போய்விட்டான். ஒரு களிமண் மேட்டில் உட்கார்ந்து காலில் இரண்டு சிறு சிவப்பு அடையாளங்களை உற்று நோக்கினான். இடையிடையே அந்த அபசகுனம் பிடித்த ஆற்

றையும் மாறிமாறிப் பயத்துடன் பார்த்துக் கொண்டான்.

முதலில் ஏற்பட்ட பய உணர்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்ட ஷ்சுக்கார், அறிவு உணர்வுடன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்: ''இப்போது ஆரம்பமாகிவிட்டது, எனவே கடவுளே என்னைக் காப்பாற்றும். அந்த கெட்ட அடையாளங்கள் இதைத்தான் சொல்லின! அந்த தவீதவ் முட்டாளிடம், அதனால் தான் இன்றைக்கு அந்த ஊருக்குப் போக மாட்டேன் என்று சொன்னேன். ஆனால் அவன் மூளையில் ஏறிவிட்டால் நான் போய்த்தானே ஆகவேண் டும். இப்பொழுது நான் தொலைந்தேன். அவன் அடிக்கடி 'நான் தொழிலாளி வர்க்கத்தின் அங்கத்தினன்' என்கிறான். ஆனால் எது இந்தத் தொழிலாளி வர்க்கத்தை இவ்வளவு விடாப்பிடியாக, உறுதியாக இருக்க வைக்கிறது? அவன் மூளையில் ஏதாவது ஒன்று ஏறிவிட்டால், அவ்வளவு தான், நாம் செத்தால் அன்றி, அல்லது அவன் அதை அடைந்தா லன்றி விட மாட்டான்! அந்த நாய்க்குட்டி செய்த வேலை இது. இப்பொழுது நான் என்ன செய்வேன்?''

பிறகு ஷ்சுக்கார் தாத்தாவுக்கு திடீரென ஒரு எண்ணம் பிறந்தது. ''இந்தக் காயத்திலிருந்து ரத்தத்தை உடனே உறிஞ்சிவிட வேண்டியதுதான்! என்னைக் கடித்தது நச்சுப் பாம்புதான். அது புதருக்குள் நெளிந்துபோன முறையில் இருந்தே இது தெளிவாகத் தெரிகிறதே. வேறு பாம்பாக இருந்தால், புல்பாம்பாக இருந்தால் மெதுவாக, நிதான மாக அல்லவா நெளிந்து சென்றிருக்கும். இது மின்னல் போல ஓடி மறைந்து விட்டதே. என்னைக் கண்டு அதற்கு அவ்வளவு பயம்! ஆனால் யாருக்கு அதிக பயம், அதற்கா? எனக்கா?''

இதைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருக்க ஷ்சுக் காருக்கு நேரமில்லை. அவன் தன் உடலை எவ்வளவு வளைக்க முடியுமோ அந்தளவுக்கு வளைத்தும் கடிவாயை உதடுகளால் தொட முடியவில்லை. பிறகு குதிகாலைப் பல மாக உறுதியாகப் பிடித்துக்கொண்டு பின்புறமாகத் தூக்கி மடக்கினான். ஏதோ ஒன்று 'சொடக்' என்று சப்தம் கேட் டது. வலி தாங்க முடியாமல் கிழவன் மல்லாந்து விழுந் தான். ஐந்து நிமிடங்கள் வரையில் அசையாமல் படுத்துக் கிடந்தான். தன் உணர்வு வந்தவுடன் பாதங்களை ஆட்டி அசைத்து மடக்கி நீட்டிக்கொண்டு, மிகுந்த எரிச்சலுடன்

தனக்குள் தானேகாரணம் கற்பித்துக் கொண்டான்: ''பாம்புக்கடியில் முதலில் ஆரம்பமாகி இப்பொழுது... ஒரு மனிதன் தன் முழங்காலைத் தானே முறித்துக்கொண்ட விந்தையை இப்பொழுதுதான் முதல் முறைவாக நான் பார்க்கிறேன். இதை யாரிடமாவது நீங்கள் சொல்லிப் பாருங்கள், அவர்கள் நம்பவே மாட்டார்கள். 'ஷ்சுக்கார் திரும்பவும் கயிறு திரிக்கிறான்!' என்றுதான் சொல்வார்கள். இதோ, இந்தச் சகுணங்கள் பார்த்தாயா? இனி என்னவோ?.. அந்த தவீதவைக் கொள்ளை கொண்டு போக! நானும் முடிந்தளவு அவனிடம் சொல்லிப் பார்த்தேன். இப்பொழுது நான் என்ன செய்வது? அந்தக் குதிரைகளை எப்படிப் பூட்டுவது?''

இருப்பினும் வீணாக்க அவனுக்கு அதிக நேரம் இல்லை. ஷ்சுக்கார் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு எழுந்தான். தனது இடது காலை மிக எச்சரிக்கையுடன் தரையில் வைத்தான். அவனுடைய மட்டற்ற மகிழ்ச்சியைத் தூண்டக்கூடிய முறையில் வலி இல்லாது, அதிகச் சிரமமில்லாமலும் நடக்கவும் முடிந்தது. கையில் ஒரு பிடி களிமண்ணை எடுத்து எச்சில் போட்டு நனைத்து, அதை கடிபட்ட கீறல் மீது தடவி விட்டு, அந்தக் காலின்மீது பாரத்தை வைக்காமல் நொண்டியபடி குதிரையை நோக்கி நடக்கத் தொடங்கிய போது, ஓடையின் மறுகரையில், நான்கு மீட்டர் தூரத்தில் ஒரு காட்சியைக் கண்டான். இது அவன் கண்களில் அடக்க முடியாத கோபக்கனல் பற்றி எரியச் செய்தது. மறு கரையில் ஒரு சிறு மேட்டின் மீது, பந்து போல் சுருண்டு, சுகமாகப் படுத்துறங்கிக் கொண்டிருந்தது, ஓர் ஓலைப் பாம்பு. அது ஓலைப் பாம்புதான் என்பதில் எந்த வகையிலும் சந்தேகமில்லை. அதன் தலை மீது மஞ்சள் நிறக் ''கண்கள்'' ஒளிர்விட்டுக்கொண்டிருந்தன.

ஷ்சுக்கார் கோபத்தால் பொங்கினான். இவ்வளவு கோபத்துடன் ஷ்சுக்கார் இந்த மாதிரி இதற்கு முன்னர் பேசியது கிடையாது. முறிவுபட்ட காலை முன்னால் வைத்து கையை முன்னே நீட்டியபடி நடுங்கும் குரலில், ''ஏ ஊர்ந்து திரியும் சனியனே! சோம்பேறிப் பன்றி, மஞ்சள் கண் கொண்ட பிளேக் நோய்! என்னைப் போன்ற ஓர் உற்பத்தி செய்பவனை, அச்சுறுத்த உனக்கு எவ்வளவு தைரியம்?! நான் ஒரு முட்டாள், ஏதோ பெரிய நச்சுப் பாம்பு கடித்து

விட்டதோ என்று பயந்துவிட்டேன்! நன்றாக யோசித்தால் நீ யார்? ஊர்ந்து திரியும் ஒரு புழு, அவ்வளவு தான்! அதற்கும் மேல் ஒன்றும் இல்லை. உன்னை ஒரு மிதி மிதித்து நசுக்கி மண்ணோடு மண்ணாக, சாம்பலாக்க வேண்டியதுதான். என் கால்மட்டும் முறியாமல் இருந்திருந்தால் அப்படித் தான் செய்வேன்; இதை மண்டையில் ஏற்றிக்கொள்.''

ஷ்சுக்கார் மூச்சுவாங்கிக்கொண்டு, சிரமப்பட்டு எச்சிலை விழுங்கிக்கொண்டான். அந்த ஓலைப்பாம்பு தனது பள பளக்கும் கறுப்பு நிறத் தலையைத் தூக்கி, தன்னிடம் முதன் முறையாக பேசும் மனிதக் குரலை கவனமாகக் கேட்டது. ஷ்சுக்கார் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு, ''ஏ, பூச்சாண் டியே! உன் வெட்கமற்ற கண்களால் என்னை ஏன் பேந்தப் பேந்தப் பார்க்கிறாய்? இப்படியே ஓடிவிடலாம் என்று நினைக்கிறாயா? இன்றைக்கு நீ செய்த வேலை அத்தனைக் கும் உனக்கு சரியான பரிசு கொடுக்காமல் விடுவேனா? பெரிய தளபதி என்ற நினைப்போ? நான் ஒரு போடு போட்டவுடன் சட்டினி ஆகிறாயா, இல்லையா என்று பார், இது தான் உண்மை!'' என்றான்.

சிவப்புப் பள்ளத்தாக்கின் உச்சியிலிருந்து ஓடை இழுத் துக்கொண்டுவந்து குவித்திருந்த கூழாங்கற்களை நோக்கி னான் ஷ்சுக்கார். அவற்றின் நடுவில் ஒரு பெரிய உருண் டைக்கல் கிடந்தது. முறிந்த காலைப் பற்றிய நினைவில் லாமல் வேகமாக முன்னோக்கி நடந்தான். காலை ஊன்றிய வுடன் தாங்க முடியாத வலி உடம்பையே குலுக்கிற்று. கல்லைக் கீழே போட்டுவிடாமல் சொல்ல முடியாத அள வுக்கு வசைபாடியபடி அப்படியே சாய்ந்து விழுந்தான்.

அவன் முணகி எழுந்து நின்று திட்டுவதற்குள் பாம்பு எங்கோ ஓடி மறைந்துவிட்டது. அது மாயமாய் மறைந்து விட்டதுபோலத் தோன்றியது! ஷ்சுக்கார் தனது ஆயுதத் தைப் போட்டுவிட்டு, மிகுந்த ஏமாற்றத்துடனும், திகிலுட னும் கைகளை உதறிக்கொண்டு நின்றான்.

''இப்படி ஒரு காரியத்தை என்றைக்காவது பார்த்த துண்டா? இது குட்டிக்கருப்பு வேலைதான். இந்தக் குட்டிச் சாத்தான் எங்கே போய்விட்டது? பழையபடியும் தண்ணீருக் குள் போயிருக்க வேண்டும். ஒரு தடவை யோகமில்லாமல் போனால், அவ்வளவு தான். தொடர்ச்சியாகவே யோகம் இராது. இதற்கு ஒரு முடிவே இல்லைபோலும்... நான்

இவனோடு பேச்சுக் கொடுத்திருக்கக் கூடாது. நான் தான் முட்டாள்தனம் செய்து விட்டேன். ஒரு கல்லை எடுத்து, நேராகத் தலையில் போட்டு சத்தமில்லாமல் நசுக்கியிருக்க வேண்டும். முதலடியிலேயே அடித்திருக்க வேண்டும். ஏன் என்றால் இரண்டாவது அடிக்கு அது இல்லாமல் தப்பி யிருக்கும்.இப்பொழுது ஓடி மறைந்து விட்டதே, இனி என்ன செய்வது? அதுதானே பெரிய பிரச்சினை!''

ஓடையின் ஓரத்திலே சிறிதுநேரம் தலையைச் சொறிந்து கொண்டே நின்றான். பின்னர் நொண்டிக் கொண்டே குதி ரைகளைப் ஓட்டப்போனான். ஓடையை விட்டு வெகு தூரம்போகும் வரையில் உறுதிசெய்வதற்காக, ஓரிரு முறை ஓடையைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான். ஆமாம் கொஞ்சம் பயம்...

...உழுது அறுத்துப்போட்ட புல்லின் வாசனை, பரந்த புல்வெளியில் கடுமையான நாற்றத்துடன் காற்றுப் பரவி வீசியது. சாலையின் ஓரங்களில் ஓங்கி வளர்ந்திருந்த மதுர மரங்களின் இலைகள் காய்ந்து சருகாய் செத்துக்கிடந்தன. ஆனால் அவற்றிற்கிடையிலும் புதிதாக முளைக்கும் புல் தலை தூக்கி நின்றது. காய்ந்த மதுர மரச் சருகுகளின் இற்றுப்போன வாசனையும் கலந்தது. ஆனால் முந்திய ஆண்டு துளிர்த்த இலைகள் இளமையுடனும், இளவேனிற் கால நினைவுகளுடனும், மணத்தது. இப்படிப் பலவித வாசனைகள் ஒன்றாகக் கலந்தால் அதுவும் குறிப்பாக புல் வெளியில் தனிமையிலிருக்கையில் கலந்தால், நிச்சயமாக சாதாரணமான மனிதனுக்குக் கவலையும், மன உலைவுமே ஏற்படும்... ஆனால் ஷ்சுக்கார் தாத்தா அப்படி அல்ல' மேலங்கியை மடித்து அதன் மீது பிசகிய காலை வசதி யாக வைத்துக்கொண்டு, வண்டியில் ஒரு புறமாகச் சாய்ந்து உட்கார்ந்தபடி பொக்கை வாயைத் திறந்து சிரித்து, காலத் தால் மங்கிய கண்களைச் சுழற்றிச் சொருகினாற்போல பரந்த புல்வெளியைப் பார்த்து இதமான வாசனையை பேராவலோடு உறிஞ்சி மகிழ்ந்தான்.

வாழ்க்கையில் அவன் ஏன் மனநிறைவு பெறக் கூடாது? கால்வலி கொஞ்சம் குறைந்துவிட்டது. கிழக்கே தொலை வில் ஒரு மேகம் சூரியனை மூடிக்கொண்டது. அது வெகு நேரம் மூடியிருக்கலாம். கருஞ்சிவப்பு நிழல் புல்வெளி, முழு வதிலும் ஓடை, சிறு குன்று அனைத்தையும் போர்த்தி

நின்றது. மூச்சுவிடுவது சுகமாக இருந்தது. அங்கு அவனுக்காக முதல் தரமான இரவுச் சாப்பாடு காத்திருக்கிறது... நீங்கள் என்னவேண்டுமானாலும் சொல்லுங்கள். தற்சமயம் தவிர, ஷ்சுக்கார் உண்மையாகவே நல்ல இன்பமான வாழ்க்கைதான் நடத்துகிறான்!

குன்றின் உச்சிக்குவந்து, குழுவினரின் குழாமையும் வண்டியையும் பார்த்தவுடன், மெதுவாக நடந்து வந்த குதிரைகளை நிறுத்திவிட்டு வண்டியை விட்டுக் கீழே இறங்கினான். காலில் இன்னும் சிறிது வலி இருந்தது. ஆனாலும் காலை ஊன்றி நிற்க முடிந்ததை ஷ்சுக்கார் தன்னைத்தானே உறுதிப் படுத்திகொண்டான்: ''வருவது தண்ணீர் வண்டிக்காரன் அல்ல, கூட்டுப்பண்ணையின் வண்டிக்காரன் எனக் காட்ட வேண்டும். தவீதவ், மக்கார் நகூல்னவ் மற்றும் முக்கியமான அதிகாரிகளுக்கும் வண்டி ஓட்டி அல்லவா நான்? ஒரு மைலுக்கப்பால் வரும்போதே என்னைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படும்படி நடந்து கொள்ள வேண்டும்!''

வாய்க்குவந்தபடி திட்டிக்கொண்டு, குதிரைகளை இறுகப் பூட்டினான். முகாமை நெருங்கிவிட்டதையும், இரவு ஓய்வு கிடைக்கும் என்பதையும் விளங்கிக்கொண்டு குதிரைகள் நிமிர்ந்து நின்றன. ஷ்சுக்கார் கால்களை அகல விரித்து சிப்பாய்க் கம்புகளின் மேல் உறுதியாக நின்றான். கடிவாளத்தை இழுத்துப் பிடித்து 'ஓய் ஓய்' என்று உரத்துக் கத்தித் துரத்தினான், குதிரைகள் சுழன்று கிளம்பின. இறக்கத்தில் போனதால் வண்டியின் வேகம் கூடிற்று. காற்றடித்ததில் ஷ்சுக்காரின் சட்டைகள் ஊதிப் புடைத்து நின்றன. ஆனாலும் குதிரைகளை வேகமாக விரட்டினான் ஷ்சுக்கார். கால்வலியைச் சமாளித்துக்கொண்டு, வலது கையால் சாட்டையைச் சுழற்றி வீசிக்கொண்டு, ''அருமைக் குதிரைகளே, உங்கள் வேகத்தைக் காட்டுங்கள்! உங்கள் தரத்தைக் காட்டுங்கள்!'' என்று கத்தினான்.

அகஃபோன் துப்த்ஸோவ் தான் இவனை முதன் முதலாக முகாமிலிருந்து பார்த்தான்.

''கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, ஏதோ ஒரு பேயோ பிசாசோ நிற்கிறது பார். பிரியானிஷ்னிகாவ், நம்மைப் பார்க்க வருகிறவர் யாரென்று உனக்குத் தெரிகிறதா?''

முடிவுபெறாத வைக்கோல் போரின் முகட்டில் நின்ற பிரியானிஷ்னிகாவ், ''நம்முடைய பிரச்சாரக் குழுதான் வரு கிறது. நம்முடைய ஷ்சுக்கார் தாத்தா தான் வருகிறான்.'' என்று சொன்னான்.

''ரொம்ப நல்லதாகப் போச்சு'' என்று மனநிறைவாகச் சிரித்தபடி சொன்னான் துப்த்ஸோவ். ''நமக்கு வரவர சலிப்பு ஏற்படத் தொடங்கிவிட்டது, கிழவன் நம்மோடு தான் சாப்பிடுவான். சகோதரர்களே, இரவு அவனை தங்க வைக்க வேண்டும்...''

இவ்வாறு சொல்லிக்கொண்டே வண்டியின் அடியிலிருந்த சாக்கிலிருந்து ஏற்கெனவே உடைக்கப்பட்ட வோத்கா பாட் டில் ஒன்றை எடுத்துத் தன் பைக்குள் திணித்துக்கொண்டான்.

அத்தியாயம் பத்தொன்பது

சிறிது கொழுப்புக் கலந்த கோதுமைக் கஞ்சியை இரண் டாம் தடவையும் குடித்துக் காலி பண்ணிய பிறகுதான் ஷ்சுக்காருக்கு முழுமையான மன நிறைவும் லேசாகத் தூக்க மும் ஏற்பட்டன. தாராள பெருந்தன்மையான சமையல் காரியிடம், ''நீங்கள் கொடுத்த நல்ல சாப்பாட்டுக்கும், வோத்காவுக்கும் நன்றி. எல்லாருக்கும் நன்றி. குறிப்பாக தாரியா குப்ரியானவ்னா, உனக்கும் நன்றி, நீ அறிந்து கொள்ள விரும்பினால் சொல்கிறேன் கேள். நீ சாதாரணப் பெண்அல்ல. தங்கச் சுரங்கம் நீ. அது தான் உண்மை. சோறு சமைக்கும் இவ்வளவு திறமையை வைத்துக்கொண்டு, நீ எங்களைப் போன்ற விவசாயிகளுக்குச் சமைத்துக் கொண் டிருக்கக் கூடாது. ஆனால் மிகயீல் இவானவிச் கலீனின் போன்றவர்களுக்குச் சமைக்கவேண்டும். ஓராண்டு முடி வதற்குள் உன் உடம்பில் ஒரு பதக்கம், அதிகமான வேலை செய்ததற்காகக் கிடைத்துவிடும். அல்லது சிறப்புப் பதவி யைக் குறிக்கும் கோடு உன் சட்டையில் ஏறும். ஏதாவது உன் சட்டைக்குக் கிடைக்கும். என்னை நம்பு. அவர் நிச்சய மாக உனக்குக் கொடுப்பார். அது உண்மையாக நடக்கும், வாழ்க்கையில் எது முக்கியம் என்று தெரிந்தவன் உண் டென்றால் அது நான் தான்...''

''அப்படியா, அது என்ன?'' என்று ஷ்சுக்காருக்குப் அரு கில் உட்கார்ந்திருந்த துப்த்ஸோவ் அவசரமாகக் கேட்டான்.

''உன்னுடைய கருத்துப்படி வாழ்க்கைக்கு எது முக்கியம் தாத்தா?'' என்று வினவினான்.

''சாப்பாடுதான்! அதுதான் உண்மை!! சாப்பாடு அது தான் மிக முக்கியமானது தம்பிகளே.''

''தாத்தா, நீ தவறு செய்கிறாய்'' என்று துப்த்ஸோவ் கவலையுடன் சொன்னான். தன்னைச் சுற்றியிருந்த தோழர் களை குறக் கண்களால் பார்த்துக்கொண்டே கேட்டான்: ''நீ மிகப் பெரும் தவறு செய்கிறாய். இந்தத் தள்ளாத வயதில் நீ சாப்பிட்ட இந்த கோதுமை கஞ்சி மாதிரித் தான் உனது சிறிய மூளையும் இருக்கிறது. உன் மூளை தண் ணீராகிவிட்டது, அதனால் தான் தவறு செய்கிறாய்...''

ஷ்சுக்கார் தாத்தா ஏற்கிற முறையில் முறுவலித்தான். ''மூளை தண்ணீராகப் போனது உனக்கா, எனக்கா என் பதுதான் கேள்வி. வாழ்க்கையில் எது மிக முக்கியமானது என்று நீ நினைக்கிறாய்?''

''காதல்'' என்று மூச்சு விடுகிற அளவில் சத்தமின்றிச் சொன்னான் துப்த்ஸோவ். கனவு காண்பவனைப் போலக் கண்களைச் சுழற்றினான். குப்ரியானவ்னாவின் அம்மைத் தழும்பு விழுந்த பழுப்பு நிற முகத்தை உற்று நோக்கினான்.

மழை வாசனை பிடித்த குதிரை மாதிரி தலையை ஆட்டிச் சிரித்துக்கொண்டு, தன் சட்டைக் கை நுனியால் தனதுசிவந்த முகத்தை அவள் மூடிக்கொண்டாள்.

''காதலா? ப்பூ!'' ஷ்சுக்கார் வெறுப்புடன் சீறினான். ''நல்ல சாப்பாடு இல்லாமல் உன் காதல் என்ன செய்யும்? ஏமாற்று வேலை! ஒரு வாரத்துக்குச் சாப்பாடு போட வில்லை என்றால், உன் மனைவிகூட உன்னைக் கைவிட்டு விடுவாள். தாரியா குப்ரியானவ்னாவைப் பற்றிச் சொல் லவே வேண்டாம்.''

''அது ஆளைப் பொருத்தது'' என்று துப்த்ஸோவ் வற் புறுத்தினான்.

''யாரையும் பொருத்தது அல்ல. எனக்கு அதைப்பற்றி எல்லாம் தெரியும்'' என்று குறுக்கிட்டுச் சொல்லி, முன் விரலை அருத்தத்துடன் நீட்டிக் காட்டினான் ஷ்சுக்கார் தாத்தா. ''நான் உங்களுக்கொரு கதை சொல்கிறேன் கேளுங்கள். அதைக் கேட்ட பிறகு பட்டப்பகல் போல் எல்லாம் வெளிச்சமாகிவிடும். அதற்குப் பிறகு விவாதத் துக்கே இடமிராது.''

இதைப்போல காது கொடுத்துக் கேட்க உட்கார்ந்த கூட்டத்தை ஷ்சுக்கார் இதற்கு முன்னர் கண்டது அரி தென்றே கூறவேண்டும். நெருப்பைச் சுற்றி சுமார் முப் பது பேர் உட்கார்ந்திருந்தனர். கதையில் ஒரு வார்த்தை கூடத் தவறிவிடக் கூடாதே என கவனமாகக் கேட்டனர். அப்படித்தான் அவனுக்குக் தோன்றியது. இந்தக் கிழவனிட மிருந்து வேறு என்ன எதிர்ப்பார்க்க முடியும்? கூட்டங்களில் பேச அவனுக்கு வாய்ப்புக் கிடைத்ததில்லை. வண்டியில் எங்கேயாவது பயணம் போகும்போது தவீதவ் தனது சொந்த யோசனையில் ஆழ்ந்து அமைதியாக இருப்பான். ஷ்சுக்காரின் மனைவியோ, அவளது இளம் வயதில்கூட அதிகம் பேசக் கூடிய பெண் அல்ல. பிறகு யாரிடம் இந்த ஏழைக் கிழவன் மனத்தைத் திறந்து கொட்ட முடியும்? எனவே, கேட்பதற்குக் கூட்டம் கூடியவுடன், நல்ல சாப் பாட்டுக்குப் பிறகு அருமையான மனநிலையில் முழுக் கதை யையும் கொட்டத் தயாரானான். கால்களை மடக்கிப் போட்டு வசதியாக உட்கார்ந்து கொண்டான். தாடியைத் தடவி விட்டுவிட்டு, மிகவும் மெதுவாகத் தனது கதையைச் சொல்லத் தொடங்கினான். துப்த்ஸோவ் குறுக்கிட்டு, போலிக் கோபத்துடன் ''தாத்தா, உண்மையைச் சொல்ல வேண்டும். கதை அளக்கக்கூடாது! பொய் சொல்பவர்களை நாங்கள் என்ன செய்வோம் என்பது தெரியுமா? ஒரு ஜோடி கடிவாளத்தை எடுத்துக் கட்டிப்போட்டு பதனப்படுத்தி விடுவோம்'' என்றான்.

ஷ்சுக்கார் தாத்தா ஒரு நீண்ட பெருமூச்சை விட்டு விட்டு, இடது கை முழங்கையைத் தட்டி விட்டுக்கொண் டான்.

''அகஃபோன், என்னைப் பயமுறுத்த முயற்சிக்காதே. இன்று ஏற்கெனவே ஒரு முறை சாகடிக்கப்படுவது போல் பயமுறுத்தப்பட்டுள்ளேன்... அது சரி, இது தான் நடந் தது. கடந்த வேனிற்காலத்தில் தவீதவ் என்னை அழைத்து, 'தாத்தா, இரண்டு சாக்கு நிறைய ஓட்சை பண்ட சாலை யிலிருந்து எடுத்துக்கொள். உனக்குச் சாப்பாடும் எடுத்துக் கொள். குதிரைகளில் வறட்டு பாறைக்குப் புறப்பட்டுப் போ. நம்முடைய பெண் குதிரைகளும் கிடரிகளும் அங்கு மேய்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு ஒரு ஜோடி ஆண் குதிரைகளைக் காட்ட வேண்டும். செவிடர் வசீலி

பாப்கின் அந்தக் குதிரைக்கூட்டத்தைக் கவனித்து வரு கிறான். அந்தக் கிடையை இரண்டாகப் பிரித்து ஒன்றை நீயும், மற்றொன்றை வசீலியும் கவனித்துக் கொள்ளுங்கள். உற்பத்தியாளர்களுக்கு நீ தான் பொறுப்பு, அவர்களை ஓட்ஸ் கொடுத்துக் கவனிக்க வேண்டியது உன் வேலை' என்று கூறினான் தவீதவ். உங்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், எனக்கு உற்பத்தியாளர் என்றால் என்ன வென்றே தெரியாது. இந்த வார்த்தையை இதற்கு முன்னர் கேட்டதே இல்லை. ஆண் குதிரையைத் தெரியும். பெண் குதிரையையும் தெரியும். கோவேறு கழுதையையும் தெரி யும். எனவே நான் கேட்டேன்: 'உற்பத்தியாளர் என்றால் என்ன?' 'ஏதாவது ஒன்றைப் புதிதாக உருவாக உற்பத்தி செய்கிற, பெறுகிற யாருமே உற்பத்தியாளர்தான்' என்று அவன் பதில் சொன்னான். 'அப்படியானால் ஒரு காளையை உற்பத்தியாளர் என்று சொல்லலாமா எனக் கேட்டேன்?' சிறிது முகத்தைச் சுளித்துவிட்டு, 'வேண்டுமானால், நீ சொல்லிக்கொள்' என்றான். மீண்டும் நான் கேட்டேன்: 'நாமெல்லாம் உற்பத்தியாளர்களா?' அவன் கடகடவென்று சிரித்து விட்டு, 'தாத்தா, இதற்கு அவரவர்தான் பதில் சொல்ல வேண்டும்' என்றான். எப்படியிருந்தாலும் சரி, நீ ஒரு சிட்டுக் குருவியாக இருந்தாலும், மிருகமாக இருந் தாலும், மனிதனாக இருப்பினும், ஆண்பாலாக இருந்தால், சத்தியமாகச் சொல்கிறேன், நிச்சயமாக உற்பத்தியாளன் தான். 'ஆகா! மிக அருமை' என்று நானாக நினைத்துக் கொண்டேன். மேலும் ஒரு கேள்வி: 'தானியங்களை உற் பத்தி செய்கிறார்களே அவர்களெல்லாம் யார்? உற்பத்தி யாளர்களா? இல்லையா?' என்று கேட்டேன். அவன் ஒரு பெருமூச்சுடன், 'தாத்தா, நீ ரொம்பக் காலங்கடந்து வாழ் கிறாய்' என்றான். நான் அதற்குப் பதிலாக, 'செமியோன், நீ தான் காலங்கடந்து தாமதமாக வாழ்கிறாய். ஏனென் றால், நான் உனக்கு நாற்பதாண்டுகளுக்கு முன்னர் பிறந் தவன். நீ எனக்குப் பிறகு பிறந்தவன். எனவே நீ தான் காலங்கடந்து, பிந்தி வாழ்கிறாய்' என்றேன். இவ்வாறு தான் எங்கள் தர்க்கம் முடிந்தது.''

தாரியா மூச்சுவிட முடியாத நிலையில், ''ஏன் தாத்தா, அப்படியானால் நீயும் ஓர் உற்பத்தியாளனா?'' எனக் கேட் டாள்.

''பிறகு என்னை வேறு என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று பெருமையுடன் ஷ்சுக்கார் கேட்டான்.

''அடேயப்பா!'' என்று கத்திய தாரியாவால் அதற்கு மேல் ஒரு வார்த்தை கூடச் சொல்ல முடியவில்லை. சட்டை முகப்பை வைத்து முகத்தை மூடிக்கொண்டாள். அவள் மூச்சு வீடும் ஓசை மட்டுமே கேட்டது.

''தாத்தா, நீ ஒன்றும் அவளை கவனிக்காதே. நீ உன் பாட்டுக்கு உன் கதையைச் சொல்லு'' என்று பரிவுடன் தூண்டிவிட்டான் கொந்திராத் மய்தானிக்கவ். அவன் நெருப்பைவிட்டு மறு பக்கமாகத் திரும்பிக் கொண்டான்.

''என் வாழ்க்கை முழுவதுமே, நான் இந்தப் பெண் களைப் பொருட்படுத்தியதில்லை. அப்படி இருந்திருந்தால், நான் இவ்வளவு நீண்ட நாள் வாழ்ந்தே இருக்க முடியாது'' என்றான் ஷ்சுக்கார் தாத்தா.

அவன் கதையை மீண்டும் தொடங்கினான்: ''நல்லது, நான் போய் மந்தையைச் சுற்றிப் பார்த்தேன். எத்தகைய காட்சி அது! சுற்றிலும் ஒரே கிளர்ச்சி. நான் நிரந்தரமாக அங்கேயே கூட இருந்திருப்பேன்! நீலநிற அந்தப் புல்வெளி எங்கிலும் ஒரே மலர்கள் மயம், இளம் புல், இளம் புல்லை மேயும் குதிரைக் கிடாரிகள், அருமையான சூரிய ஒளி, ஒரு வார்த்தையில் சொன்னால்; நீங்கள் விரும்பக் கூடிய அத் தனை கிளர்ச்சிகளும் உண்டு!''

''அந்த ஒரு வார்த்தை என்ன சொன்னாய்?'' என்று பெஸ்ஹிலேப்னவ் விசாரித்தான்.

''கிளர்ச்சியா? அதாவது சுற்றியுள்ள அனைத்தும் உயிர் பெற்றுத் திகழும் போது ஏற்படுவது. கிளர்ச்சி என்றால், வாழ்க்கையை மகிழ்ச்சியோடு வாழ்வது, அதுதான் அதன் பொருள். எதைப்பற்றியுமே நாம் கவலைப்படாமல், நாமா கவே மகிழ்தல். இது சிறந்த படிப்பாளிகளின் சொல்'' என்று தயக்கமின்றிப் பதில் சொன்னான் ஷ்சுக்கார்.

''இந்த வார்த்தைகளை எல்லாம் எங்கிருந்து கற்றாய்?'' என்று ஆர்வம் மிக்க பெஸ்ஹிலேப்னவ் வற்புறுத்தினான்.

''மக்கார் நகூல்னவிடமிருந்துதான். நாங்கள் இருவரும் இணைபிரியா நண்பர்கள். அவனும் இப்பொழுது ஆங்கிலம் படிக்கிறான், அவனுடன் சேர்ந்து நானும் படிக்கிறேன். தாரியா மாதிரி ஒரு பெரிய புத்தகத்தை எனக்குக் கொடுத்

திருக்கிறான். அதற்கு 'அகராதி' என்று பெயர். அ, ஆ சொல்லித்தரும் பாப்பாப் பாடப் புத்தகம் அல்ல. அது ஓர் அகராதி. நீண்ட காலம் படிக்கும் ஆட்களுக்குத்தான் உபயோகமாகும் புத்தகம் அது. அதை என்னிடம் கொடுத்து, 'தாத்தா, இதைப் படி. உனது வயதான காலத்தில், இது மிகவும் உதவும்' என்று சொன்னான். எனவே நானும் கொஞ்சம் படிக்கிறேன். அக்கீம், குறுக்கிடாதே. குறுக்கிட்டால் நான் சொல்வதை மறந்துவிடக்கூடும். அந்தப் அகராதியைப் பற்றி அப்புறம் சொல்கிறேன். சரி, நான் உங்களிடம் சொல்லிக் கொண்டிருந்ததைப் போல, எனது இடத்திற்கு உற்பத்தியாளர்களுடன் வந்தேன். ஆனால் என்னைப் பிடித்த துரதிர்ஷ்டம், அந்த உற்பத்தியாளர்களிடமோ, சுற்றி வாழ்ந்த வாழ்விலோ எனக்குக் கிளர்ச்சி ஏற்படவில்லை... எனது அருமை நண்பர்களே, அந்தச் செவிடர் வசீலியைத் தெரிந்தவர்களைக் காட்டிலும், தெரியாதவர்கள் நிச்சயமாக பத்து ஆண்டுகள் கூடுதலாக வாழலாம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

''அந்த மொட்டுக்கட்டை இருக்கே, அவனோடு நம் ஊமையன் தெமீதை ஒப்பிட்டால், தெமீத் எவ்வளவோ பெரும் பேச்சாளி. அந்தப் புல்வெளியில் இந்த ஊமைக் கோட்டானோடு நான் பட்ட வேதனையைக் கற்பனைகூட செய்துபார்க்க முடியாது! நான் பெண் குதிரைகளுடன் பேசி நேரத்தைக் கழிக்க முடியுமா? முடியாதல்லவா? அந்த வசீலி இருக்கிறானே, அவன் பல நாட்களுக்கு வாயே திறக்க மாட்டான். எதையாவது மெல்லும்போதுதான் சத்தம் கேட்கும், மற்றபடி தூங்கும் போது விழித்த படியே பார்வைக் கடியில் மரக்கட்டை மாதிரி ஆடாமல் அசையாமல் கிடப்பான். அவ்வப்பொழுது கண்களை மட்டும் இமைத்துக் கொள்வான். ஆனால், அவனிடமிருந்து ஒரு முணுமுணுப்புக் கூட கேட்காது. எனவே எனக்கு இது ஒரு தீர்க்க முடியாத பிரச்சினையாகிவிட்டது. ஏதோ கல்லறையில் பிணங்களுடன் இருப்பது மாதிரி மூன்று நாட்களும், மூன்று இரவுகளும் இருந்தேன். என்னிடம் நானே பேசிக்கொண்டேன். ஓகோ இது நடக்காது, வேண்டாம்! இது நீடித்தால், என்னைப் போன்று சரளமாகப் பழகும் இயல்புடைய ஒருவன் நிச்சயம் பைத்தியமாகக்கூடப் போக முடியும்.

''தோழர் நகூல்னவ், ஆண்டு விடுமுறை நாட்களின்

போதும், மே தினம், நவம்பர் ஏழாம் தேதி போன்ற நாட்களில் எழுந்து நின்று மணிக்கணக்கில், உலகப் புரட்சி பற்றி, எனக்குப் புரியாத பல சொற்களைப் போட்டுப் பேசுவதை நான் எவ்வளவு வெறுத்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும் அந்தப் பேச்சைக்கூட, குயிலின் கீதமென நினைத்துக்கொண்டோ, நடு இரவில் சேவலின் கூவல் என்று நினைத்துக்கொண்டோ இருபத்தி நான்கு மணி நேரம் வேண்டுமென்றாலும், விருப்பத்தோடு நான் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்க முடியும். இந்தச் சேவல் கூவலைப் பற்றி குடிமக்களே உங்களுக்கு ஏதாவது தெரியுமா? சர்ச்சில் சங்கீதம் பாடுவது போலத்தான், சேவல்கள் தொடர்ந்து கூவுவது இருக்கும். உள்ளத்தைத் தொடக்கூடிய முறையில் அமைந்திருக்கும்...''

''சோறின்றிக் காதலித்த அந்தக் காதல் கதையைச் சொல்லு. சேவல்கள் கூடுவதைப் பற்றி வேண்டாம்'' என்று குழுவினரின் நேரத்தைக் கணக்கிடுபவன், ஷ்சுக்காரின் பேச்சால் பொறுமையிழந்து குறுக்கிட்டான்.

''குடிமக்களே, பொறுமை இழக்காதீர்கள். பலவகையான காதல்களைப் பற்றியும், இதோ சொல்கிறேன். ஆனால் அதுவல்ல பிரச்சினை. நான் செவிடன் வசீலியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவன் ஊமையாகவே வாயைத் திறக்காமல் இருந்திருந்தால் பரவாயில்லை. ஆனால் இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, பெருந்தீனிக்காரனாக இருந்தான். இவனோடு என் பாடு பெரும் பாடாயிற்று. ஏதாவது கஞ்சி அல்லது பழங்களை நறுக்கி வைத்திருப்போம், இது எதற்கு ஆகும்? நான் ஒரு கரண்டி எடுப்பதற்குள் அவன் ஐந்து கரண்டி விழுங்கிவிடுவான். ஒரு நீராவி எந்திரத்தினுடைய பிஸ்டன் மாதிரி அவனுடைய கரண்டியைக் கோப்பைக்குள் விடுவான். சும்மா உள்ளே வருவதும், மேலே போவதுமாய் தொடர்ந்து படபடவென்று நடக்கும். சிறிது நேரத்தில் நான் பார்த்தால், கோப்பையில் அடியில் ஏதாவது ஒட்டிக்கொண்டிருக்கும். நான் பசியோடு எழுவேன், அவனோ வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டுத் தூங்குவான். படுத்து அவன் ஏப்பம்விடத் தொடங்கிவிட்டால் அக்கம்பக்கத்தில் யாரும் தூங்க முடியாது. இரண்டு மணிநேரம் ஏப்பம் விட்டுக் கொண்டே இருப்பான். அதற்குப் பிறகு குறட்டை விடத் தொடங்கிவிடுவான், அந்தச்

சனியன். அவன் விட்ட குறட்டை கேட்டு, கூடாரத்தைச் சுற்றி மேய்ந்துகொண்டிருந்த குதிரைகள்கூட பயந்து ஓடி விட்டன. மாரிக்காலத்தில் முடக்கித் தூங்கும் எலிக்குட்டி மாதிரி நாளெல்லாம் படுத்துத் தூங்குவான்.

''ஆமாம் இப்படிப்பட்ட கொடுமையான வாழ்க்கை தான் நான் அங்கு வாழ்ந்தேன். தெருப்பொறுக்கி நாய் மாதிரி ஒரே அலைச்சல், பசியுடன் பேச்சுத் துணைக்கோ ஓர் ஆளுமில்லை... இரண்டாம் நாள் என் இரு கைகளை யும் குவித்து அவன் காதில் வைத்து மிக உரத்த குரலில், 'உன் காது போரில் கெட்டுப்போய்விட்டதா? அல்லது சிறு பிள்ளையாக இருக்கும்போது கண்டமாலை நோய் கண் டதா?' என்று கேட்டேன். அவன் நான் போட்ட சத்தத்தைக் காட்டிலும் அதிக சத்தத்துடன், 'போரில் தான்! 1919இல், செஞ்சேனையினர் ஆயுதமேற்றிய' அவர்களது ரயிலில் இருந்து வீசிய குண்டு ஒன்று எனக்கு மிக அருகாமையில் விழுந்தது. நான் ஏறியிருந்த குதிரை செத்து வீழ்ந்தது. எனக்கு குண்டடி அதிர்ச்சி ஏற்பட்டது. அன்றிலிருந்து இடி செவிடாகிவிட்டேன்' என்று கத்தினான். அதன் பிறகு, 'வசீலி! எதற்காக, ஏதோ பைத்தியம் பிடித்தவன் மாதிரி கபகபவென்று சோற்றை அள்ளி விழுங்குகிறாய்? அதுவும் குண்டடி அதிர்ச்சியின் விளைவுதானோ!' என்று கேட்டேன். அதற்கு அவன், ''ஆமாம் கொஞ்சம் மேகம் தென்படு கிறது. அது நல்லது. நமக்கு மழை ரொம்ப அவசியம்!' என்றான். இப்படிப்பட்ட ஓர் ஆளோடு பேசிப் பாருங் களேன்...''

''காதலைப் பற்றி எப்பொழுது சொல்லப் போகிறாய்?'' என்று பொறுமையிழந்த துப்த்ஸோவ் கேட்டான்.

ஷ்சுக்கார் எரிச்சலுடன் முகத்தைச் சுளித்தான். ''அட சனியனே! உன் மூளையில், முழுக்க, காதல் விஷயத்தை ஏற்றிக் கொண்டாயாக்கும். நான் என் வாழ்க்கை பூராவும் அதிலிருந்து விலகி நிற்க, விடுபட முயன்று வந்திருக்கிறேன். என்னுடைய வயதான அப்பா, விடாமல் வற்புறுத்திக் கொண்டே இருந்ததால்தான் நான் திருமணம் கூடச் செய்து கொண்டேன். இல்லையென்றால் திருமணமே செய்து கொண்டிருக்க மாட்டேன்.இப்பொழுது என்னிடம் காதலைப் பற்றி பேச்சு சொல்கிறீர்கள். விவாதிப்பதற்கு அருமையான விஷயம்தான்... உங்களுக்காகச் சொல்கிறேன்.

சோறு இல்லாத காதலால் நடந்த சோகக் கதை இது தான்...

''நான் எனது குறியிலக்கை அடைந்தவுடன், மந்தையை இரண்டாகப் பிரித்தேன். ஆனால் நான் அழைத்துச் சென்ற 'மாப்பிள்ளைகள்' பெண் குதிரைகளைப் பார்க்ககூட மறுத்துவிட்டன. அவை எதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து இடைவிடாமல் புல் மேயத் தொடங்கிவிட்டன, ஓய்வுகூட எடுக்கவில்லை...'மணப் பெண்களை' பற்றி துளி யாவது அக்கறை வேண்டுமே! நல்ல வேளையாப்போச்சு என்று நான் நினைத்துக்கொண்டேன்! இந்த உற்பத்தியா ளர்களை வைத்துக்கொண்டு நான் முட்டாளாகத்தான் போகிறேன் என்று நினைத்துக்கொண்டேன். நானும் ஓட்சை வைத்தெல்லாம் தீனி போட்டுப் பார்த்தேன். அவை பெண் குதிரைகளை ஏறிட்டே பார்க்கவில்லை.

''அவை முதல் நாளும் ஒன்றும் செய்யவில்லை. இரண் டாம் நாளும் அப்படியே. எனக்கு இது மிகவும் அருவருப் பாகப் போய்விட்டது. குதிரைகளைப் பார்க்காது எனது முகத்தைத் திருப்பிக்கொள்ள வேண்டியதாயிற்று. அந்தக் குதிரைகளின் கண்களைப் பார்க்கவே முடியவில்லை! நான் என் வாழ்க்கையில் இதற்கு முன்னர் வெட்கப்பட்டதோ, நாணிக் கோணியதோ கிடையாது. இப்பொழுது அதைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். தண்ணீருக்கு அவைகளை ஓட்டிக்கொண்டுபோக நெருங்கும்போது பெண்பிள்ளை மாதிரி வெட்கித் தலைகுனிந்து கொள்வேன்...

''கடவுளே, மூன்று நாட்களில் இந்த உற்பத்தியாளர்கள் ஏற்படுத்திய அவமானம் வெறும் மொட்டைச் சுவரில் முட்டிக்கொள்ளலாமா என்று கூட நினைத்தேன்! மூன்றாம் நாள் என்ன நடந்தது தெரியுமா? என்னுடைய 'பூ'வுடன், அதை நான் அப்படித்தான் பெயரிட்டு அழைப்பேன், நெற் றியில் நீண்ட வெள்ளை, இடது குதியிலும் வெண்மை படர்ந்தது, ஓர் இளம் குதிரை நெருங்கி காதல் செய்யத் தொடங்கிற்று. அந்தப் பெண் குதிரை என்னுடைய 'பூ'வைச் சுற்றிச் சுற்றி வளைய வளைய வந்தது, உரசியது, மென் மையாக முட்டியது, திரும்பித் திரும்பி அன்போடு கடித்தது. எத்தனையோ வகையில் அது தனது அன்பைக் காட்டிப் பார்த்தது. இருந்தும் எனது 'பூ' இருக்கிறதே, அது, தனது கண்களை மூடி, தலையை மேலே தூக்கிக்கொண்டு

நின்றுவிட்டது... இப்படி மோசமான ஒன்றை நான் பார்த்ததே இல்லை. கோபத்தால் நான் நடுங்கினேன். அந்தப் பெண் குதிரைகளும், கிடரிகளும் என்னைப் பற்றி என்ன நினைக்கும்? அவை ஒருவேளை 'இந்தக் கிழவன் இருந்திருந்து கொண்டுவந்தானே'; இப்படிப்பட்ட இடிதடி என்று மோசமாகக்கூட நினைத்திருக்கலாம்.

''அந்த அப்பாவிக் கிடரி பொறுமையை இழந்துவிட்டது. பின்புறமாகத் திரும்பி, பூ மீது காலால் ஓர் உதை விட்டது. அது உள்ளே குடலைக் கலக்கியிருக்கும். அப்புறம் நான் ஓடிப்போய், சாட்டையைக் காட்டி அதைத் துரத்தி விட்டேன். என் கண்களில் நீர்கூட வந்துவிட்டது. 'நீ உற்பத்தியாளர் என்றால், அப்படி இருந்தால் அதன்படி நடக்க வேண்டும். இல்லை என்றால் இந்த கிழ வயதில் உங்களுக்கும் எனக்கும் எதற்காக இழிவைத் தேடித்தர வேண்டும்?' என்றேன் நான்.

''என்னுடைய பூ இருக்கிறானே அவன் இருபது கெஜ தூரம் வரை ஓடி நின்று வலி தாங்க முடியாமல் பரிதாபமாகக் கனைத்தைக் கேட்டதும் என் இதயம் கலங்கிவிட்டது. இரக்கம் மேலிட கண்ணீர் சிந்தி அழுதேன். எனவே சாட்டை இல்லாமல் அதனருகில் போய் முகத்தை வருடிக் கொடுத்தேன். என் தோள்மீது அது தன் தலையை வைத்துப் பெருமூச்சுவிட்டது...

''பிறகு அதன் பிடரி மயிரைப் பிடித்துக் கூடாரத்துக்கு இழுத்துச் சென்றேன். 'எனது சிறிய பூவே, வா; நாம் வீட்டுக்குப் போகலாம். இங்கு அருத்தமில்லாமல் இருந்து அவமானத்தையும் கேவலத்தையும் நாம் அள்ளிக் கட்டிக்கொள்ள வேண்டாம்...' என்றேன். எனவே அவற்றைப் பூட்டிக்கொண்டு ஊரை நோக்கித் திரும்பினேன். செவிடன் வசீலி, 'தாத்தா, அடுத்த ஆண்டும் இங்கே வா. இரண்டு பேரும் இங்கே ஸ்டெப்பியில் ஒன்றாக இருப்போம், துழவையைப் பங்குபோட்டுக்கொள்வோம். அதற்குள்ளாக உன்னுடைய குதிரைகளும் திரும்பச் சத்துப்பிடித்துவிடும். மேலும் தொத்தலாகி விடாமல் பார்த்துக் கொள்' என்று கத்தினான்.

''நான் கிராமத்திற்குத் திரும்பிவிட்டேன். நடந்த விவரங்கள் எல்லாவற்றையும் தவீதவிடம் தெரிவித்தேன். அவன் தன் தலையில் கை வைத்து, 'நீ அவற்றைச் சரி

யாகக் கவனிக்கவில்லை!' என்று சத்தம் போட்டான். 'இதற்கு நானல்ல பொறுப்பு. நான் நன்றாகத் தான் கவனித்து வருகிறேன். ஆனால் மேன்மை தங்கிய பெரியவராகிய நீயும், மக்காரும், ரஸ்மியோத்னவும்தான் அதைச் சாகும் வேகத்தில் ஓட்டிக் கெடுக்கிறீர்கள். அந்தக் குதிரைகள் நுகத்தடியை விட்டு சும்மா இருப்பதில்லை. ஒஸ்த்ரவ்னோவிடம் ஒரு பிடி ஓட்சுக்கு குனிந்து பணிந்து மண்டியிட்டாலும் கிடைக்காது. பொலி குதிரைகளை வண்டியில் பூட்டுவதுதான் யார்? அவை உற்பத்தியாளர்கள் என்றால், வேலை இல்லாமல் சும்மா நிறுத்தி, நல்ல தீனி வைக்க வேண்டும். இல்லையென்றால் நமக்குச் சிக்கல்தான்.' நல்ல வேளையாக பெரிய ஊரிலிருந்து இரண்டு பொலி குதிரைகளை அனுப்பி, அந்தக் குதிரைகளின் பிரச்சினையைத் தீர்த்துவிட்டார்கள். நல்ல சாப்பாடு இல்லாமல் செய்கிற காதலுக்கும் இது தான் கதி என்றேன். அட, முட்டாள்களே, இது விளங்குகிறதா? இதைக் கேட்டு சும்மா சிரிக்காதீர்கள். நாம் மிக முக்கியமான விஷயத்தை விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.''

தன்னைச் சுற்றிலும் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தவர்களைப் பெருமிதத்தோடு ஒரு நோட்டம் விட்டான் ஷ்சுக்கார். சிறிது அவகாசம் எடுத்துக்கொண்டு மேலும் தொடர்ந்தான்: ''சாணத்திலிருக்கும் வண்டு மாதிரி, எப்பொழுது பார்த்தாலும் பூமியையே கிளறிக்கொண்டிருந்தால், உங்களுக்கு வாழ்க்கை என்ன தெரியும்? நானாவது, வாரம் ஒரு முறை, சில சமயங்களில் பல முறை, பெரிய ஊருக்குப் போகிறேன். அம்மா தாரியா, நீ எப்பொழுதாவது கம்பியில்லாத் தந்தி மூலம் பேசுவதைக் கேட்டிருக்கிறாயா?''

''நான் பெரிய ஊருக்குப் போயே பத்து ஆண்டுகள் ஆகிறதே. அதை நான் எப்படிக் கேட்டிருக்க முடியும்.''

''அதைத்தான் நானும் சொல்கிறேன்! நான் அங்கு போகும் போதெல்லாம் வேண்டியதை எல்லாம் கேட்டுக் கொள்கின்றேன். அதுவும் ஓர் ஓட்டை உடைசல் சமாச்சாரம்தான்!'' ஷ்சுக்கார், தலையை ஆட்டிவிட்டு, மெதுவாகச் சிரித்துக்கொண்டான்: ''மாவட்டக் குழு அலுவலகத்துக்கு முன்னால், ஒரு கம்பத்தில், கருப்பாக ஏதோ ஒன்று தொங்குகிறது. அடேயப்பா அது போடுகிற சத்தம்!

அதைக் கேட்டால், மயிர்க் கூச்சலிட்டு அவையெல்லாம் புல்லரித்து குத்திட்டு நின்று விடும். நல்ல வெயில் காலத்தில்கூட, உடம்பே கிடுகிடுவென்று நடுங்கிவிடும்! நான் அந்தக் கம்பத்தினடியில் தான் இரண்டு குதிரைகளையும் கழற்றி விட்டேன். கூட்டுப்பண்ணை, தொழிலாளி வர்க்கம் பற்றிய எல்லாவிதமான பேச்சுக்களையும் கேட்டுக்கொண்டு நின்றேன். இதற்குப் பிறகு ஓட்ஸ் மூட்டைக்குள் தலையை விட்டுக் கொள்ளலாமா என்றிருக்கும். ஏனெனில், மாஸ்கோவிலிருந்து, குதிரை கனைப்பது போன்ற தொனியில், 'மீண்டும் ஒரு முறை கோப்பையில் நிரப்புங்கள், மீண்டும் ஒரு முறை நாம் குடிப்போம்' என்று ஒருவன் கத்துவான். இதை நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் இதைக் கேட்ட பிறகு, என்னால், குடிக்காமல், எந்த வேலையுமே செய்ய முடியாது! பெரிய ஊருக்கு, எப்பொழுது புறப்பட்டாலும் சரி, வீட்டிலிருந்து எப்படியாவது ஒரு டஜன் முட்டையை என் கிழவியிடமிருந்து அழுத்திக்கொண்டு போய்விடுவேன். நேராக சந்தைக்குப் போவேன். முட்டைகளை விற்றுவிட்டு, பிறகு வோத்கா வாங்கிக் குடிப்பேன். குடித்துவிட்டு, பாட்டுக்களை நின்று ரசித்துக் கேட்பேன். அதற்குப் பிறகு நாள் முழுவதும் என்றாலும்கூட, பொருட்படுத்தாமல் தவீதவுக்காகக் காத்திருப்பேன். நான் ஊருக்குப் புறப்படுவதையறிந்து, என் வீட்டுக் கிழவியும் என் மீது ஒரு கண் வைத்திருப்பாள், முட்டைகளை எடுத்து மறைத்துவிடுவாள். அத்தகைய நேரங்களில் மாவட்டக் குழு அலுவலகத்திற்குச் சென்று 'அருமைத் தம்பி செமியோன்! குடிப்பதற்கு ஏதாவது வாங்கித் தர மாட்டாயா? வெறுமனே உனக்காக எவ்வளவு நேரம் காத்துக்கொண்டு இருப்பது' என்று ஓசையில்லாமல் சொல்வேன். அவன் மிகவும் நல்லவன். எனக்குக் கொடுக்க எப்பொழுதுமே மறுத்ததில்லை. நேராகப் போய்க் கொஞ்சம் குடிப்பேன். வெயிலில் சற்றுநேரம் தூங்குவேன் அல்லது எனது உற்பத்தியாளர்களைக் கவனித்துக்கொள்ளுமாறு யாரிடமாவது சொல்லிவிட்டு, தீர்க்க முடியாத எனது பல பிரச்னைகளைத் தீர்க்க நான் பெரிய ஊருக்குப் போய்விடுவேன்.''

''பெரிய ஊரில் உனக்கு எந்தவிதமான பிரச்னைகள் இருந்தன?'' என்று கேட்டான் அக்கீம் பெஸ்ஹிலேப்னவ்.

ஷ்சுக்கார் தாத்தா ஒரு பெருமூச்சுவிட்டான். ''உனக்கு

குடும்பம் என்று ஒன்றிருந்தால், பிறகு எப்போதுமே தொந் திரவுகளும் உண்டு. ஏதாவது ஒரு பாட்டில் மெழுகு, அல் லது சில தீப்பெட்டிகளாவது வாங்க வேண்டியிருக்கும். அந்தப் படித்த பெரிய வார்த்தைகளைப் பற்றியும், அக ராதியைப் பற்றியும் கேட்டுக்கொண்டிருந்தார்கள்! அந்த அகராதியில் வார்த்தைகள் இப்படித்தான் அச்சிடப்பட்டுள் ளன. அந்தப் பெரிய வார்த்தை நல்ல பெரிய எழுத்துக் களில் அச்சிடப்பட்டிருக்கும், அதைப் படிக்க எனக்குக் கண் ணாடி தேவையில்லை. ஆனால் அதையடுத்து அவற்றின் விளக்கமோ மிகச் சிறிய எழுத்துக்களில் இருக்கும். விளக்க மில்லாமலே எனக்குப் பல வார்த்தைகளை என்னால் புரிந்துகொள்ள முடியும். 'மானாபலி' என்றால் பொருள் என்ன? அப்படியென்றால் சத்திரம் என்று பொருள். 'அடாப்டர்' என்றால், முதுகெலும்பு இல்லாதவன். சரி யான ஊர்காலி என்று பொருள் 'அக்கோரல்' என்றால் அழகான பெண்; நான் நினைப்பது போன்ற உருவில் என்று பொருள். ஆனால் 'பாபிள்' என்றால், இதற்கு நேர்மாறான பொருள், தன்னைத்தானே விபச்சாரி ஆக்கிக்கொள்பவள் என்று பொருள். அவ்வளவு தான். 'மெஸ்ஸானைன்' செய் வது, என்றால், அகஃபோன் நீ வெறிபிடித்து அலைவதைப் போல காதல் செய்வது என்று பொருள். ஆனால் எப்படியும் எனக்குக் கண்ணாடி தேவைப்பட்டது. நானும் தவீதவும் பெரிய ஊருக்குப் போனோம். நான் போய் ஒரு ஜோடி வாங்கலாம் என்று நினைத்தேன். அது மிக முக்கியமான தால், கிழவி அதற்குப் பணம் கொடுத்திருந்தாள்.

''மருத்துவமனை என்று நினைத்துக்கொண்டே, நான் ஓர் இடத்திற்குப் போனேன். ஆனால் அது ஒரு மகப்பேறு மனையாகிவிட்டது. ஓர் அறையில் பெண்கள் முக்கி முணகிக் கொண்டும், 'வீல்' என்று அலறிக்கொண்டும் இருக்க, மறு புறத்தில் பூனைக் குட்டிகள் மாதிரி குழந்தைகள் 'உங்கா உங்கா' என்று கத்திக்கொண்டிருந்தன. இங்கு நமக்குக் கண்ணாடி கிடைக்காது, தவறான இடத்துக்கு வந்துவிட் டோம் என்பதைப் புரிந்துகொண்டேன். ஆகவே மற்றொரு மருத்துவமனைக்குப் போனேன். அங்கே முற்றத்தில் இரு பையன்கள் உட்கார்ந்து தாயவிளையாட்டில் ஒருவரை யொருவர் முறியடிக்க முயன்று கொண்டிருந்தனர். நான் போய் வணக்கம் சொல்லிவிட்டு, 'ஒரு ஜோடி கண்ணாடி

கள் இங்கு வாங்க முடியுமா?' எனக் கேட்டேன். அவர் களில் ஒருவன் கிண்டலுடன் உரத்த குரலில் சிரித்துக் கொண்டே, 'தாத்தா, இங்கே கொடுக்கிற கண்ணாடியைப் போட்டுக்கொண்டால், உன் கண்களேப் பிதுங்கி வெளி வந்துவிடும். இது பெண் வியாதி வந்தவர்களைக் கவனிக் கும் விடுதி. நீ எவ்வளவு சீக்கிரமாக இந்த இடத்தை விட்டுப் போக முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக இந்த இடத்தை விட்டுப் போய்விடுவது நல்லது, இல்லையென் றால் கட்டாயப்படுத்தி உனக்குப் பண்டுவம் செய்யத் தொடங்கி விடுவார்கள்' என்றான்.

''எனக்கோ, பயமாகிவிட்டது. என்னால் எவ்வளவு வேக மாக வெளியே ஓட முடியுமோ, அவ்வளவு வேகமாக ஓடி விட்டேன். ஆனால், அந்த இரண்டு முட்டாளும் என்னை வெளி வாசல்வரை விரட்டிக்கொண்டு வந்தார்கள். ஒரு வன் சீட்டி அடிக்கத் தொடங்கினான். இன்னொருவன்: 'எ, கிழமே, இன்னும் வேகமாக ஓடு. இல்லையென்றால் உன் னைப் பிடித்துவிடுவார்கள்!' என்று கத்தினான். இதைக் கேட்டு பந்தயக் குதிரை மாதிரி நான் குதி தெறிக்க ஓடி னேன்! கடவுள் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுதுதானே பிசாசுகள் வேலை செய்கின்றன. நம்மைப் பிடித்திருந்தால், பிறகு மருத்துவர்களிடம் நாமல்லவா சமாதானம் சொல்ல வேண்டும்?

''பிறகு நான் ஒரு ரசாயன நிபுணரிடம் ஓட்டமாக ஓடி னேன். என் மூச்சேகூட நின்று விடும் போலிருந்தது. ஆனால் அங்கும் கண்ணாடிகள் கிடைக்கவில்லை. 'தாத்தா, நீ மீல் லெரோவோவுக்காவது ரஸ்தோவுக்காவது போக வேண் டும். யாராவது கண் மருத்துவர் குறிப்புச் சீட்டு எழுதிக் கொடுத்தால் தான் மூக்குக் கண்ணாடி கிடைக்கும்' என்று சொன்னார்கள். நான் அங்கு போகும்பொழுது உன்னால் என்னைப் பிடிக்க முடியாது என்று நினைத்துக்கொண் டேன்... உங்களுக்கே சொல்கிறேன் கேளுங்கள், இந்த அக ராதியைப் படிக்கும் பொழுது, நான் ஏராளமாக யூகிக்க வேண்டியுள்ளது. மூக்குக் கண்ணாடி வாங்குவதுகூட தீர்க்க முடியாத பிரச்சினையாகி விடுகிறது.

''பெரிய ஊரில் இப்படிப்பட்ட பல அதிர்ச்சிச் சம்பவங் கள் எனக்கு ஏற்படுவது உண்டு, அவற்றை எண்ணக்கூட முடியாது!''

''தாத்தா, நேரடியாக எல்லாவற்றையும் நீ சொல்லி விடுவது நல்லது. சிட்டுக்குருவி மாதிரி ஒவ்வொரு கிளை யாகத் தாண்டிக் கொண்டிருக்கிறாய். எங்களுக்கு முதலிலி ருந்து முடிவைச் சொல்ல முடியாதுபோல இருக்கிறதே'' என்று துப்த்ஸோவ் வற்புறுத்தினான்.

''நான் நேரடியாகத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீ குறுக்கிடாமல் இருந்தால் நல்லது. நீ மீண்டும் குறுக்கிட் டால், விஷயத்தை விட்டுவிட்டு குழப்பத்திற்குள் நான் மாட்டிக்கொண்டு விட்டால், இங்குள்ள யாருமே என்னு டைய நிலையைப் புரிந்துகொண்டு கதையைப் பின்பற்ற முடியாது. பெரிய ஊரில் ஒரு நாள் நான் நடந்து போய்க் கொண்டிருந்தேன். என்னை நோக்கி ஓர் இளம்பெண் வந்து கொண்டிருந்தாள். கையிலே ஒரு பையுடன், நகரப்பாணி உடையில், ஒரு நவநங்கை இளம் ஆடுபோல அருமையாக வந்தாள். உயர்ந்த குதிகால் செருப்பு அணிந்து, டக்டக் என்று தாளம் போட்டு, ஆட்டுக் குளம்போசை எழுப்புவது போல நடந்துவந்தாள். இந்தத் தள்ளாத வயதிலும், புதிது எதுவானாலும் நான் பெருவிருப்புடன் நோக்குவேன். இது எனக்கு திகிலாக இருந்தது! இளைஞர்களே, நான் சைக் கிள் ஓட்டக்கூட முயன்றேன். ஓர் இளைஞன் சைக்கிள் ஓட்டிக்கொண்டு போவதைப் பார்த்த நான், 'மகனே, உனது அந்த எந்திரத்தை நான் ஓட்டிப் பார்க்கட்டுமா?' என்று கேட்டேன். அவன் அதை கொஞ்சமும் மறுக்கவில்லை. அந்த இரு சக்கர வண்டியில் என்னை ஏற்றி உட்கார வைத்து, கால்மிதியை மிதித்து நான் கடினமாகத் தள்ளும்வரை பிடித்துக்கொண்டு இருந்தான். நான் அந்தப் பையனிடம், 'நான் கடவுள் பெயரால் சொல்கிறேன், என்னைப் பிடித்துக் கொண்டு நிற்காதே. நானே ஓட்டிப் பார்க்க விரும்புகிறேன்' என்றேன். அவன் என்னை விட்டானோ இல்லையோ, அவ்வளவுதான் சைக்கிள் கைப்பிடிக் காம்பு ஒரு திருப்பு திரும்பியது. நான் நேராக ஓர் இளம் வேலம் புதரில் போய் விழுந்தேன். அந்தப் புதரில் குத்திய முட்களின் எண்ணிக்கையை எண்ணிச் சொல்ல முடியாது! இந்த முட் களை யெல்லாம் பிடுங்கி எடுக்க, எனக்கு ஒரு வாரகாலம் ஆயிற்று. என் காற்சட்டையும் ஒரு மரக்கிளையில் மாட்டிக் கிழிந்து போய்விட்டது.''

''காற்சட்டைபோனால் போகிறது, தாத்தா, அந்த

இளம் பெண்ணைப்பற்றிச் சொல்லு'' என்று துப்த்ஸோவ் கோபமாகக் குறுக்கிட்டுச் சொன்னான். ''உன்னுடைய காற் சட்டை என்ன ஆயிற்று என்று நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா?''

''நீ மீண்டும் குறுக்கிடுகிறாய்'' என்றான் ஷ்சுக்கார் ஒரு பெருமூச்சுடன். இருந்தாலும் மேலே தொடர்ந்து சொல்லத் தொடங்கினான். ''நான் சொல்லிக்கொண்டிருந் ததைப்போல, இளம் ஆடு போன்ற அந்தப் பெண், ஒரு பட்டாளத்து வீரன் மாதிரி கையை வீசி நடந்துவந்தாள். இவளோடு கைகோர்த்து கொஞ்ச தூரமாவது போக வேண் டுமே, எப்படிச் சொல்லலாம் என்று இந்தப் பொல்லாத கிழவன் ஆலோசனை செய்தேன்.என் வாழ்வில் நான் யாருட னுமே கைகோர்த்து நடந்ததில்லை. ஆனால் பெரிய ஊரில் அவ்வாறு இளைஞர்கள் கைகோர்த்து நடந்து செல்வதை அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஒன்று இவள் அவன் கையைப் பிடித்திருப்பாள் அல்லது அவன் இவள் கையைப் பிடித் திருப்பான். குடிமக்களே! உங்களிடம் சொல்வதற்கென்ன? இப்படிப்பட்ட இன்பத்தை நான் எங்கு பெறமுடியும்? கிராமப்புறத்தில் இப்படி நடப்பது வழக்கமல்ல. இவ்வாறு நடந்தால் கிராமத்து மக்கள் நம்மைப் பார்த்துச் சிரிப்பார் கள். பிறகு எங்கு இதைச் செய்வது?

''இந்த அழகிய பெண்ணுடன் எப்படி நடப்பது என்ற பிரச்சினை எனக்கு வந்துவிட்டது. எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நான் குனிந்து வளைந்து தெருவில் உள்ள எல் லாருக்கும் கேட்பது போல், முணங்கத் தொடங்கினேன். அவள் ஓடோடியும் வந்து, 'என்ன விஷயம் தாத்தா? என்று கேட்டாள். 'எனக்கு உடம்பு சுகமில்லை என் அன்பே, என் முதுகெல்லாம் முறிந்து விட்டது. என்னால் மருத்துவ மனைக்கு நடந்து செல்ல முடியாது...' என்றேன். 'நான் அழைத்துப் போகிறேன்' என்றாள். 'என் மேல் சற்றே சாய்ந்து கொள்ளுங்கள்' என்றாள். ஆகவே அவள் கையை நான் துணிச்சலாகப் பிடித்துக் கொண்டு, எங்கள் பயணத் தைத் தொடர்ந்தோம். மிக அருமையாக இருந்தது. கடை நெருங்கியவுடன் நான் நிமிர்ந்து. அவள் சிந்திப்பதற்கே நேரமில்லாதபடி அவள் கன்னத்தில் ஒரு பெரிய முத்தத் தைக் கொடுத்துவிட்டு, நான் வாங்க வேண்டியது ஒன்று மில்லாதிருந்தும் கடைக்குள் நழுவிவிட்டேன். அவள் என்னை

முறைத்துப்பார்த்து கத்தினாள்: 'நீங்கள் ஒரு காலிப்பயல், ஏமாற்றுப் பேர்வழி தாத்தா!' எனவே நான் நின்று, 'தேவை, இன்னும் மிக மோசமான காரியங்களைக் கூடச் செய்யத்தூண்டும் என் அன்பே!' என் வாழ்நாளில் ஓர் அழகிய இளம் பெண்ணுடன் கைகோர்த்து நான் நடந்ததே இல்லை. நான் விரைவிலேயே கட்டையைப் போட்டுவிடவும் இருக்கிறேன்' என்றேன். பிறகு நான் கடைக்குள் புகுந்துவிட்டேன். ஏனெனில் அவள் யாராவது மிலீஷியாக்காரனைக் கூப்பிடலாமல்லவா? ஆனால் அவளோ சிரித்துவிட்டு, தனது உயர்ந்த குதிகால் செருப்பு தாளம்போட நடந்து போய்விட்டாள். நான் கடைக்குள் ஓடிய வேகத்தில் என்னால் மூச்சுவிடக்கூட முடியவில்லை. 'எங்கேயாவது தீப்பிடிக்கிறதா, தாத்தா?' என்று விற்பனையாளன் கேட்டான். 'அதிலும் மோசம். ஒரு பெட்டி தீப்பெட்டி கொடு' என்று நான் சொன்னேன்.''

இவ்வாறு தனது முடிவற்ற கதைகளை ஷ்சுக்கார்தாத்தா சொல்லிக்கொண்டே இருந்திருப்பான். கதை கேட்டவர்களோ பகலெல்லாம் உழைத்துக் களைத்துப் போயிருந்தவார்கள். அவர்கள் ஒவ்வொருவராக நழுவிவிட்டனர். இன்னும் சில கதைகளை இருந்து கேட்குமாறு ஷ்சுக்கார் கெஞ்சிப் பார்த்தான். ஆனால் சிறிது நேரத்துக்குள்ளாக அணைந்து கொண்டிருந்த நெருப்புக் கங்குகளைத் தவிர அங்கு ஆட்கள் யாருமே இல்லை.

ஷ்சுக்கார் தாத்தாவுக்கு பலத்த ஏமாற்றம். மனமும் புண்பட்டுவிட்டது. மாட்டுக்காடிப் பக்கம் நடந்து சென்று, ஒன்றில் ஏறி, நடுக்கமாக இருந்ததால் மேலங்கியைச் சுற்றிப் படுத்துக்கொண்டான். நட்ட நடுநிசியில் பனி கொட்டத் தொடங்கியது. நடுக்கும் குளிரில் எழுந்தான் ஷ்சுக்கார். ''கஸாக்குகளிடம் போய், என்னையும் வண்டிக்குள் அநுமதியுங்கள் என்று கேட்கலாம்'' என நினைத்தான். ''இல்லை என்றால் தெருப்பொறுக்கி நாய் மாதிரி நானும் குளிரில் நனைந்து சுருண்டு செத்துப்போனாலும் போகக்கூடும்.''

தவிர்க்க முடியாத முறையில், படிப்படியாக ஷ்சுக்காரின் திடீர் சாகசச் செயல்கள் ஒவ்வொன்றாக கழன்று விழத் தொடங்கின... விதைப்பு நடந்த இளவேனிற் காலத்தில் ஆண்கள் வண்டியில் தூங்கியதை அறிவான் ஷ்சுக்கார். ஆனால் அதன் பிறகு இந்த இரண்டு மாத காலத்தில் வேறு

மாறுதல் ஏற்பட்டிருக்கலாம் என்பதை, தூக்கக் கலக்கத்தில் இருந்த ஷ்சுக்காரால் உணர முடியவில்லை. கைகளையும் கால்களையும் ஊன்றி ஊர்ந்து உள்ளே போய், தனது காலணிகளைக் கழற்றிவிட்டு சுவர் ஓரமாகப் படுத்தான். கணகணப்பில் உடனே உறங்கி விட்டான். ஆனால் மூச்சுத் திணறுவதுபோல இருந்ததால் உடனே விழித்தான். அவனது மார்புமீது யாரோ ஒருவன் தனது வெறுங் காலை தூக்கிப்போட்டபடி தூங்கிக்கொண்டிருப்பதாக நினைத்தான்: ''மிகுந்த அருவருப்புடன் இந்த ஆட்கள் தூங்குகிற கோலத்தைப் பார்! குதிரையில் குதித்து ஏறுகிறவர்கள் மாதிரி காலை இப்படித் தூக்கிப் போடுகிறார்களே!''

அந்தக் காலை அகற்ற ஷ்சுக்கார் முயன்றபொழுதுதான், அது ஓர் ஆணுடைய கால் அல்ல என்பதும், அது தாரியாவின் கை என்பதையும் உணர்ந்தான். அவளது இதமான மூச்சு இவனது கன்னத்தில் பட்டது. இதைத் திடீரென கண்டுபிடித்து விட்டான் ஷ்சுக்கார். அன்றுஇரவு அந்த வண்டியில் பெண்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்...

கலக்கமடைந்த ஷ்சுக்கார் பல நிமிடங்கள் ஆடாமல் அசையாமல் கிடந்தான். வியர்த்துக் கொட்டிற்று, காலணிகளைக் கையில் வாரிக்கொண்டு, திருட்டுப் பூனை மாதிரி ஓசை செய்யாமல் ஊர்ந்து வெளியேறி தனது வண்டியை நோக்கி நடந்தான். இவனுடைய குதிரைகளை இதற்கு முன்னர் என்றுமே இவ்வளவு சுறுசுறுப்புடன் இவன் பூட்டியதே இல்லை! சாட்டையை எடுத்துக் கொடுக்கிவிட்டான். போகும் பொழுது வெளுத்துக்கொண்டிருந்த வானத்தைப் பின்னணியாகக் கொண்டு நின்றிருந்த வண்டியையும் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே போனான்.

''நல்ல வேளையாகப் போயிற்று, நான் நேரத்திலே விழித்து விட்டேன். நான் நேரங்கழித்துத் தூங்கியிருந்து, மற்ற பெண்கள் நான் தாரியாவின் அருகில், அவளது பெரிய கைஎன்மேல் விழுந்தபடி தூங்கியதைக் கண்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்?.. கருணை நிறைந்த கன்னி மாதாவே, என் மீது இரக்கங்கொண்டு என்னைக் காத்தருள்க! நான் அவ்வாறு தூங்கியிருந்தால், இந்த உலகின் ஊழிக்காலம் வரை அவர்கள் சிரித்துக்கொண்டே இருந்திருப்பார்கள்!''

கோடைக்காலவிடியல் விரைந்து வந்தது. வண்டி கண்ணிற் படாது மறைந்துவிட்டது. குன்றின் மறு புறத்தில்

ஷ்சுக்காருக்கு மேலும் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. ஷ்சூக்கார் தனது காலைப் பார்த்தபோழுது, காலில் ஒரு பெண்ணின் புத்தம்புதிய காலணி ஒன்றை அணிந்திருந்தான். அதிலே பூ முடிச்சுப் போட்டிருந்தது. தையல் மிக நேர்த்தியாக இருந்தது. அதன் அளவைப் பார்த்தபொழுது அது தாரியாவினுடையதாகத் தானிருக்க முடியும் எனத் தெரிந்தது...

அச்சத்தால் நடுநடுங்கிப்போன ஷ்சுக்கார். ''இரக்கமுள்ள தேவனே! இப்படி ஏன் என்னைச் சோதிக்கிறாய்?! இருட்டில் காலணிகளை மாற்றி எடுத்துவிட்டேன் போலும். என் கிழவி முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? ஒரு காலில் எனது காலணி, இன்னொரு காலில் ஒரு பெண்ணின் காலணியா? இதுவும் தீர்க்க முடியாத ஒரு பிரச்சினையாயிற்றே!'' என்று நினைத்தான்.

ஆனால் அது தீர்க்கக்கூடிய பிரச்சினையாகத்தானிருந்தது. பெரிய ஊருக்கு வெறுங்காலுடனோ, வேடிக்கையான செருப்புகளையோ போட்டுக்கொண்டு போக முடியாது என்ற நல்ல முடிவுக்கு வந்துவிட்டான். ஷ்சுக்கார் குதிரைகளைக் கிராமத்தை நோக்கித் திருப்பினான். ''நில, அளவையர் என்னவானால் நமக்கென்ன? அவர் இல்லாமலே சமாளிக்க முடியும். எல்லா இடத்திலுமே சோவியத் ஆட்சி தான் இருக்கிறது. எல்லா இடங்களிலும் தான் கூட்டுப்பண்ணைகள் இருக்கின்றன. கொஞ்சம்போல புல்வெளி நிலத்தை அந்தக் கூட்டுப்பண்ணையிலிருந்து இந்தக் கூட்டுப்பண்ணை எடுத்துக்கொள்வதால் யாருக்கு நட்டம்? இதனாலென்ன மோசம் போய் விடும்?'' என்று கிரெமியாச்சி கிராமத்தை நோக்கித் திரும்பு கையில் கவலையோடு சிந்தித்த வண்ணம் திரும்பினான்.

கிராமத்துக்கு இரண்டு கிலோமீட்டர் தொலைவில் வந்தவுடன், மேலும் ஒரு துணிகரமான முடிவுக்கு வந்தான். சாலையின் ஓரமாக ஒட்டினாற்போல ஒரு பெரிய கரை அந்த இடத்தில் இருக்கிறது. காலணிகளைக் கழற்றினான். சுற்றுமுற்றும் பார்த்தான். கரைக்கப்பால் காலணிகளை தூர வீசினான். ''உங்களால் நான் சாக வேண்டுமா?'' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு வீசினான்.

தனக்கு எதிராக இருந்த எல்லா தடையங்களையும் நீக்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் தெம்புடன் இருந்த

ஷ்சுக்கார், செருப்பு, மர்மமாக மறைந்துபோனது பற்றி தாரியா, எவ்வளவு வியப்புறுவாள் என நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

ஆனால் அவசரப்பட்டு மகிழ்ச்சியடைந்துவிட்டான். வீட்டிலே இரண்டு பயங்கரமான, நொறுக்கித் தீர்க்கும் இடிகள் இவனுக்காகக் காத்திருந்தன...

முற்றத்தை நோக்கிப் போனபொழுது அங்கே கிளர்ச்சியுற்ற பெண்கள் கூட்டம் ஒன்று நின்றது. ''கிழவி செத்து விட்டாளா? இல்லையே?'' என்று ஷ்சுக்கார் திடுக்கிட்டான். கூட்டத்தை விலக்கி விட்டு, அமைதியாக சமைலறைக்குப் போன ஷ்சுக்கார், சுற்று முற்றும் பார்த்தான். கண்ட காட்சி கால்களை நடுங்க வைத்தது. சிலுவைக் குறியைப் போட்டுக் கொண்டு தைரியத்தை வரவழைத்து ''இது என்ன?'' என்று ஈனசுரத்தில் கேட்டான்.

அவன் மனைவியின் கண்கள் சிவந்து போயிருந்தன. அவள் தனது மடியில் கந்தையில் சுற்றிய குழந்தை ஒன்றை வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தக் குழந்தை பெரிதாக வீறிட்டுக்கொண்டிருந்தது...

''இங்கு என்ன நடக்கிறது?'' என்று சற்று உரத்த குரலில் கேட்டான் ஷ்சுக்கார்.

வீங்கிப் புடைத்துப்போயிருந்த கண் இமைகளை அகல விரித்து, ஷ்சுக்காரை வெறித்து நோக்கிய வண்ணம், ''உன் குழந்தையை நம் மீது திணித்து விட்டார்கள்! ஏ படித்த அசடே! மேசைமீதிருக்கும் காகிதத்தைப் படி!'' என்றாள் அவள்.

ஷ்சுக்காரின் கண் முன்னால் உலகமே இருட்டிக் கொண்டு வந்தது. எப்படியோ சமாளித்துக்கொண்டு கடிதத்தைப் பார்த்தான். ''தாத்தா! இந்தக் குழந்தையின் தந்தை நீங்கள்தான். ஆதலால், இதை நீங்களே பராமரித்து வளர்க்க முடியும்'' என்று எழுதியிருந்தது.

. . . .

அன்று மாலைக்குள்ளாக ஷ்சுக்கார் தொண்டை காயக் கத்திக் கத்தி, குழந்தை பிறப்புக்கும் தனக்கும் எந்தவகையிலும் தொடர்பில்லை என்று தன் மனைவியை நம்ப வைத்துவிட்டான். ஆனால் அந்நேரம் பார்த்து, லூபிஷ்கினின் எட்டு வயதுப் பையன் சமையலறை வாசற்படி வழியாகத் தோன்றினான். ''தாத்தா, இன்று காலையில்

நான் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபொழுது, நீங்கள் கரையோரம் இந்த செருப்புகளைப் போட்டுவிட்டு வந்ததைப் பார்த்தேன். நான் தேடி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். இதோ அவை'' என்று சொல்லிவிட்டு, அந்த இரண்டு வகையான, துரதிர்ஷ்டம் பிடித்த காலணிகளைக் காட்டினான்...

ஷ்சுக்காரின் நெருங்கிய நண்பனும், செருப்புத் தைக்கும் தொழிலாளியுமான லொகதேயெவ் சொன்னதைப் போல, அடுத்து நடந்தவை எல்லாம் என்னவோ 'மூடுமந்திரமாகவே' இருக்கின்றன. அதற்குப் பிறகு நாமறிந்த வகையிலே நடந்தது இதுதான். ஷ்சுக்கார், வீங்கிய கண்களுடன் கன்னங்களில் கட்டுப் போட்டுக்கொண்டு நடந்து திரிந்தான். இந்தக் காட்சியைப் பார்த்து சிரிப்பை அடக்க முடியாத ஒருவர், கன்னத்திலே என்ன கட்டு என்றால், எனக்கிருந்த ஒரே பல்லும் வலிக்கிறது. அடேயப்பா பயங்கரமாக வலிக்கிறது, என்னால் பேசக்கூட முடியவில்லை என்று சொல்லிவிட்டுப்போய் விடுவான்...

அத்தியாயம் இருபது

தானிய அறுவடை, வைக்கோல் போர் அமைப்பு, இவை பற்றிய அறிப்பையைத் தயார் செய்யும் நோக்குடன் அதிகாலையிலேயே ரஸ்மியோத்னவ் கிராம சோவியத்துக்கு வந்துவிட்டான். பல குழுக்களிடமிருந்தும் வந்திருக்கக்கூடிய அறிக்கைகளை அவன் பார்த்து முடிப்பதற்குள்ளாக, கதவை யாரோ பலமாகத் தட்டுவது கேட்டது.

அறிக்கைகளைப் படித்துக் கொண்டிருந்ததிலிருந்து, தன் தலையை நிமிர்த்திக்கூடப் பார்க்காமல், ''உள்ளே வரலாம்!'' என்று உரக்கச் சொன்னான் ரஸ்மியோத்னவ்.

அறிமுகமில்லாத இருவர் அறைக்குள் நுழைந்தவுடன் அங்கு கூட்டம் பெருத்துவிட்டதைப் போல் தோன்றியது. ஒருவர் புதிய 'மாகின்டாஷ்' சட்டை போட்டிருந்தார். அவர் குட்டையாக, கட்டான உடற்கட்டுடன், வட்ட முகம், நன்கு மழிக்கப்பட்ட முகத்துடன், சாதரணமான தோற்றத்துடன் காட்சியளித்தார். அவர் ரஸ்மியோத்னவை நோக்கிப் புன்முறுவலுடன் வந்து, பாறை போன்ற உறுதியுடைய கையால், அந்திரேயின் கையைக் குலுக்கினார்;

''போய்கோ, பலிகார்ப் பெத்ரோவிச், ஷாஹ்தின்ஸ்க் விநியோகத் துறையின் மேலாளர். இவர் என்னுடைய துணையாளர். இவர் பெயர் ஹிழ்னியாக்'' என்று அறிமுகம்செய்து கொண்டார். கதவருகே நின்ற தனது உதவியாளர் பக்கம் பெருவிரலால் சுட்டிக் காட்டினார்.

வாயிற்படியருகில் நின்ற மனிதன் வெளித் தோற்றத்தில் ஓர் இடையனைப் போலவும், மாட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவனைப் போலவும், தோன்றினான். அழுக்குப் படிந்த சாக்குத்துணி மேலங்கி அத்துடன் சேர்ந்த தலைமூடி, அகன்ற மேல்தோல் கொண்ட காலணிகள், நசுங்கிச் சுருங்கிய குல்லாய், கையில் இருந்ததோல் முடிச்சுகளுடன் கூடிய சாட்டை, இவையனைத்தும், இவன் கால்நடை வியாபாரி என்பதை சொல்லாமல் சொல்லும் சாட்சியங்களாய் விளங்கின. ஆனால் ஹிழ்னியாக்கின் முகமோ, அவனது புறத் தோற்றத்தோடு இணையாமல் தனித்து நின்றது. அறிவொளி வீசும் கண்கள், நெளிவோடு சிரிப்பைக் காட்டும் உதடுகளின் ஓரங்களை ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தை உற்றுக் கேட்பதுபோல இடது புருவத்தை நெளித்து ஏற்றி கேட்கும் பாணியில் பார்க்கும் கண்கள், இத்துடன் புத்தி சாலித்தனத்தைக் காட்டக்கூடிய மிடுக்கும் துடிப்பும், இவன் கால்நடை வியாபாரத்திலோ, விவசாயத்திலோ சம்பந்தப் படாதவன் என்பதைக் காட்டிற்று. ரஸ்மியோத்னவ் இதை விரைவில் கவனித்து விட்டான். ஹிழ்னியாக்கின் முகத்தை ஒரு முறைதான் மேலோட்டமாகப் பார்த்தான். பின்னர் அவனது பரந்த தோள்களைப் பார்த்துவிட்டு, தானாகவே சிரித்துக் கொண்டிருந்தான். ''அருமையான பொருள் காவலர்கள்...'' என்று நினைத்தான். ''இவர்கள் இருவரையும் பார்த்தால் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் மாதிரியல்லவா இருக்கிறது. இவர்கள் கால்நடைகளையா வாங்குவார்கள். ஏதாவது பாலத்தினடியில் படுத்திருந்து சோவியத் வியாபாரிகளின் மண்டைகளைப் பிளப்பார்கள்...'' முகத்தைச் சிரமப்பட்டு ஒரு நிலைப் படுத்திக்கொண்டு, ''என்னிடம் என்ன உதவியை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''கூட்டுப்பண்ணை விவசாயிகள் தனியாக வளர்க்கும் கால்நடைகளை நாங்கள் விலைக்கு வாங்குகிறோம். நாங்கள் மாடு ஆடுகளையும், பன்றிகளையும் வாங்குகிறோம்.

இப்போதைக்கு எங்களுக்குப் பறவைகள் வேண்டாம். குளிர் காலத்தில் வேண்டுமானால் வாங்குவோம், ஆனால் தற் பொழுது இல்லை. நாங்கள் கூட்டுப்பண்ணை விலையையே கொடுக்கிறோம். நல்ல கொழுத்த கால் நடைகளுக்குச் சற்றுக் கூடுதலாகவே விலை கொடுக்கிறோம். தலைவருக்குத் தெரியாதா? சுரங்க வேலை கடுமையான வேலையல்லவா? எனவே சுரங்கத் தொழிலாளருக்கு, அவர்களுக்கு வேண்டிய முழு அளவு உணவுப் பங்கீடு நாங்கள் கொடுக்க வேண்டாமா?

''உங்கள் அடையாளச் சீட்டுகள்'' என்று கூறி, தனது விரிந்த உள்ளங்கையால் மேசை மீது தட்டினான் ரஸ்மி யோத்னவ்.

உணவுப் பொருட்களைத் தருவிப்பதைத் தொழிலாகக் கொண்ட அவர்கள் இருவரும் அடையாளச் சீட்டுகளை மேசை மீது வைத்தனர். எல்லாமே முறையாகக் கையெழுத் திடப்பட்டு, முத்திரை இடப்பட்டு ஒழுங்காக இருந்தன. எனினும் ரஸ்மியோத்னவ் அதை விடாமல் உற்றுக் கவ னித்து கொண்டே இருந்தான். இதற்கிடையில் போய்கோ தனது உதவியாளனிடம் சிமிட்டிக் கொண்டதையோ, கண நேரம் அவர்களது முகங்களில் தோன்றிய புன்னகையோ அவன் பார்க்கத் தவறிவிட்டான்.

''அவை மோசடி என்று நினைக்கிறீர்களா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்ட போய்கோ, சன்னலருகே இருந்த நாற்காலியில், யாரும் சொல்லாமல் தானாகவே அமர்ந்தான்.

''இல்லை. உங்கள் சீட்டுகள் மோசடி என்று நான் நினைக்கவில்லை... ஆனால், நீங்கள் எங்கள் கூட்டுப்பண் ணைக்குக் குறிப்பாக வந்தது ஏன்? உங்களை அழைத்து வந்தது எது என்று வியப்புறுகிறேன்'' என்று காரியமாகப் பேசுகிற தொனியிலேயே கேட்ட ரஸ்மியோத்னவ், போய் கோவின் கிண்டலைப் பொருட்படுத்தாது கருத்தூன்றிய படியே உரையாடினான்.

''விசேடமாக உங்கள் கூட்டுப்பண்ணைக்கா? நாங்கள் உங்கள் கூட்டுப்பண்ணையை மட்டும் பார்க்கப் போவதி தில்லை. நாங்கள் ஏற்கெனவே பக்கத்திலுள்ள ஆறு கூட்டுப் பண்ணகளைப் பார்த்து விட்டோம். மூன்று ஜோடி கிழடு தட்டிப்போன மாடுகள், சில கன்றுகள், சில மலட்டுப் பசுக்கள், சில ஆடுகள், முப்பது பன்றிகள் உட்பட, மொத்

தம் ஐம்பது கால்நடைகளை இதுவரை வாங்கி இருக்கிறோம்...''

''முப்பத்தி ஏழு'' என்று தனது தலைவரைத் திருத்தினான், கதவருகே நின்ற பரந்த தோள்களையுடைய அவர் உதவியாளன்.

''முற்றிலும் சரி. முப்பத்தியேழு பன்றிகள் வாங்கினோம். நல்ல நியாயமான விலை கொடுத்தோம். இங்கிருந்து நாங்கள் வேறு சில கிராமங்களுக்கும் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''நீங்கள் கைமேல் ரொக்கமாகவா கொடுக்கிறீர்கள்?'' என்று கேட்டான் ரஸ்மியோத்னவ்.

''நிச்சயமாக! உண்மையில் நாங்கள் நிறையப் பணத்தைக் கையில் தூக்கிச் செல்வதில்லை. இப்பொழுதெல்லாம் குழப்பமான காலமாயிற்றே. என்ன நடக்குமென்று எப்படிச் சொல்ல முடியும், தோழர் ரஸ்மியோத்னவ்... அம்மாதிரி பிரச்சினைக்காக வங்கியிலிருந்து செக் கொண்டு வந்திருக்கிறோம்.''

ரஸ்மியோத்னவ் நாற்காலியில் சாய்ந்து கொண்டு பலமாகச் சிரித்தான். ''வழிப்பறி நடந்துவிடுமென அஞ்சுகிறோம் என்று சொல்கிறீர்களா? நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்தால் யாருடைய பையையும் காலி செய்து விடலாமே!'' என்றான் அந்திரேய்.

போய்கோ நிதானமாகச் சிரித்தான். இரண்டு முகப் பருக்கள் அவனது சிவந்த கன்னங்களில் தென்பட்டன. ஹிழ்னியாக், இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டான் என்பதைக் காட்டுவதுபோல சன்னல் வழியாக வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். சன்னலை நோக்கி அவன் முகம் திரும்பியவுடன், அவனது இடது கன்னத்தின் தாடையிலிருந்து காதைத் தொடும் வரையில் ஒரு வெட்டுக்காயத் தழும்பு இருப்பதை ரஸ்மியோத்னவ் பார்த்தான்.

''இது போரின் நினைவாகக் கிடைத்த சின்னமா?'' என்று ரஸ்மியோத்னவ் கேட்டான்.

ஹிழ்னியாக் நொடிப்பொழுது சிரித்தபடி அவன் பக்கம் விரைந்து திரும்பினான். ''போருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நான் பிறகு பெற்றேன்...''

''இது பட்டாக்கத்தியின் வெட்டு என்று நினைக்க இல்லை. உன் மனைவி பிராண்டி விட்டாளா?'' அந்திரேய்.

''இல்லை. என் மனைவி மிகவும் அமைதியானவள். நான் குடித்துக்கொண்டிருந்த போது நண்பனொருவன் கத்தியால் கீறிவிட்டான்...''

''பார்க்க நல்ல ஆளாகத் தோன்றுகிறாய். உன் மனைவி தான் பிராண்டினாளோ என்று நினைத்தேன். அல்லது வேறொரு பெண் தொடர்பாக, காதல் விவகாரமாக இருக்குமோ?'' என்றுதனது பண்பற்ற கேள்விகளை ரஸ்மியோத்னவ் அடுக்கிக் கொண்டே இருந்தான். தனக்குத் தானே சிரித்துக் கொண்டு, மீசையை வருடிவிட்டுக்கொண்டான்.

ஹிழ்னியாக் சிரித்துக்கொண்டே, ''நீ மிகவும் சுறுசுறுப்பானவராகத்தான் தோன்றுகிறாய், தலைவரே...'' என்றான்.

''நான் என் வேலையைச் செய்ய வேண்டாமா?.. உன் கன்னத்திலிருக்கும் வடு கத்தியினால் ஏற்பட்டதல்ல. அது குதிரைப்படையினரின் வாளால் ஏற்பட்டது. இவை பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். நான் பார்த்தமட்டில், நீ எப்படி உணவுப் பொருள் தருவிப்பவரோ அதுபோல நானும் ஒரு பாதிரி... உன் முகம் எந்த வகையிலும் இல்லை. இது சாதாரண மனிதனுடைய முகமாக இல்லை. உன் கைகள்கூட அப்படித்தான். உன் வாழ்நாளில் உன் கைகள் எந்த மாட்டின் கொம்பையும் தொட்டுப் பார்த்திருக்க முடியாது என்பதை என்னால் சொல்ல முடியும்... இவை பெரிய இடத்து மனிதர்களின் கைகள். அவை பெரியனவாக இருக்கலாம். ஆனால் வெள்ள வெளேரென்றுதான் இருக்கின்றன... கைகளை கொஞ்சம் வெயிலில் காயவிட்டோ மாட்டுச் சாணத்தில் தேய்த்துக்கொண்டோ வந்திருந்தால் உணவுப் பொருள் தருவித்துக் கொடுப்பவர் என்று நான் கொஞ்சம் நம்புவேன். நீ கையிலே வைத்துள்ள சாட்டையும், காரியத்துக்குத் தேவையானதாகத் தெரியவில்லை. சாட்டையைக் காட்டி என்னை முட்டாளாக்க முடியாது!''

''தலைவரே, நீ மிகவும் சுறுசுறுப்பானவர் தான்'' என்று திரும்பவும் கூறினான் ஹிழ்னியாக். இப்பொழுது அவன் சிரித்துக் கொண்டிருக்கவில்லை. ''நீ ஒரு விஷயத்தில் தான் கெட்டிக்காரராக இருக்கிறாய். இது வாள்வெட்டின் தழும்புதான். ஆனால் அதை நான் ஒத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் வெள்ளைப் படையில் ஒரு காலத்தில் பணிபுரிந்தேன். அப்பொழுது தான் இதைப் பெற்றுக் கொண்

டேன். ஆனால் அப்படிப்பட்ட விஷயங்களை நினைவுகூர யார்தான் விரும்புகிறார்கள்? என் கைகளைப் பொருத்த மட்டில் நான் கால்நடை வணிகன் அல்ல. உணவுப்பொருள் தருவிப்பவன் தான். என் வேலை பணத்தை எண்ணுவது தானே ஒழிய, கன்றுக்குட்டிகளின் வால்களைத் திருகுவது இல்லை. தோழர் ரஸ்மியோத்னவ், என் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்பட்டாயா? நான் நீண்ட நாட்களாக உணவுப்பொருள் தருவிப்பனாக இருந்தவன் அல்ல. அதற்கு முன் விவசாய நிபுணனாக இருந்தேன். குடித்ததற்காக நான் வெளியேற்றப்பட்டேன். எனவே எனது தொழிலை நான் மாற்றிக் கொள்ள வேண்டிதாயிற்று... இப்பொழுது புரி கிறதா தலைவர் அவர்களே? என்னைச் சொல்லும்படி வைத் துவிட்டாய், நானும் முழுக்க ஒப்புவித்து விட்டேன்...''

''ஒரு நாய்க்கு ஐந்தாவது கால் வேண்டுமா? எனக்கும் உனது ஒப்புதல் வாக்கு முலம் தேவையில்லை. ரகசிய போலீஸ் இலாகா ஒப்புதல் வாக்கு மூலம் பெற்று புனித உறுதிமொழி கொடுக்கட்டும். இது பற்றி எனக்கு அக்கறை யில்லை'' என்று பதிலடி கொடுத்தான் ரஸ்மியோத்னவ். தலையைத் திருப்பாமலே, ''மாரியா, இங்கே வா!'' என்று கத்தினான்.

கிராம சோவியத் வேலையைக் கவனித்து வந்து பெண் பக்கத்து அறையிலிருந்து வந்து மெதுவாக நுழைந்தாள்.

''ஓடிப் போய் நகூல்னவை அழைத்து வா. அவன் உட னடியாக இங்கு வர வேண்டும் என நான் சொன்னதாகச் சொல். இங்கு ஓர் அவசர அலுவல் இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு முதலில் ஹிம்ஷ்னியாக்கையும், அடுத்து போய் கோவையும் பார்த்தான்.

எரிச்சலடைந்த ஹிம்ஷ்னியாக் தனது பலத்த தோள்களை உலுக்கிக்கொண்டு, பெஞ்சில் உட்கார்ந்து மறு பக்கம் திரும்பிக்கொண்டான். ஆனால் சிரிப்பை அடக்க முடியா மல் பாம்பு மாதிரி நெளிந்து கொண்டிருந்த போய்கோ உச்சக் குரலில், ''ஓகோ, இதுதான் கண்காணிப்பு! அதைத் தான் நான் பார்க்க விரும்புகிறேன்! தோழர் ஹிம்ஷ்னியாக், பிடிபட்டு விட்டோமா? கோழிக் குஞ்சு குழம்புக்கு அகப் பட்டதைப் போல மாட்டிக்கொண்டு விட்டாயா?'' என் றான் போய்கோ.

அவன் தனது சதைப் பிடிப்பான முழங்காலைத் தட்டிக் கொடுத்துக்கொண்டு, தன்னையறியாமல் சிரித்தது கண்டு ரஸ்மியோத்னவ் திகைத்துப் போனான்.

''ஐயா குண்டு, எதற்காகச் சிரிக்கிறாய்? நீங்கள் சரியாக நடந்துகொள்ளா விட்டால், பெரிய ஊரில் நீங்களிருவரும் அழுதுகொண்டிருக்க நேரிடும்! நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, மாவட்டத் தலைநகருக்கு உங்களை, உங்களது அடையாளச் சோதனைக்காக அனுப்பப் போகிறேன். உங்களைப் பார்த்தால், உணவுப் பொருள் தருவித்துக் கொடுப்பவர்கள் என்பதில் எனக்குக் கொஞ்சம் சந்தேகமாக இருக்கிறது.''

கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்து விட்டு, அடக்க முடியாமல் சிரிப்பை அடக்கி நெளிந்து கொண்டிருந்த உதடுகளுடன், ''எங்கள் அடையாளச் சீட்டுகளுக்கு என்ன? நீ சோதித்துவிட்டு, அவை சரியாக இருப்பதாகச் சொன்னாயே, இல்லையா?!'' என்றார் போய்கோ.

''உங்கள் சீட்டுகளெல்லாம் சரியாகத்தான் இருக்கின்றன, ஆனால் உங்களது தோற்றங்களை நான் ஒப்புவதாகயில்லை'' என்று கூறிவிட்டு, சிகரெட்டுக்காகப் புகையிலையைச் சுருட்டினான் ரஸ்மியோத்னவ்.

இதே சமயம் நகூல்னவ் வந்து சேர்ந்தான். வந்திருந்தவர்களைத் தலையை அசைத்தபடி, ''இவர்கள் யார்?'' என்று கேட்டான்.

''நீயே கேள்.''

நகூல்னவ் அவர்களுடன் பேசினான், சீட்டுகளைப் பார்த்தான். ரஸ்மியோத்னவ் பக்கம் திரும்பி, ''பிறகு என்ன விஷயம்? எதற்காக என்னை அழைத்தாய்? இவர்கள் கால்நடைகள் வாங்க வந்திருக்கிறார்கள், வாங்கட்டுமே'' என்றான்.

ரஸ்மியோத்னவின் கண்கள் அகல விரித்தன. தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, ''நான் அவர்களது அடையாளம் குறித்த எனது சோதனையை முடிக்கும் வரையில், அவர்கள் கால்நடைகள் வாங்க முடியாது. இவர்கள் தோற்றத்தை என்னால் நம்புவதற்கில்லை. அதுதான் விஷயம். இவர்களை பெரிய ஊருக்கு நேராக அனுப்பி, சோதிக்கப் போகிறேன். அதற்குப் பிறகு அவர்கள் எதையும் வாங்கட்டும்.''

போய்கோ மிக அமைதியாக, ''தோழர் ரஸ்மியோத்னவ், உங்களது பணியாளை கொஞ்சம் வெளியே போகச் செல்லுங் கள். நாங்கள் சொல்ல வேண்டியது இருக்கிறது,'' என்றான். சோதித்துவிட்டு, அவை சரியாக இருப்பதாகச் சொன்னயே, இல்லையா?!'' என்றார்.

''உன்னுடன் பேசவேண்டிய ரகசியம் எனக்கு ஒன்றும் இல்லை.''

''நான் சொன்னபடி செய்'' என்று அதே அமைதியான குரலில், ஆனால் உத்தரவு போடும் அதிகாரத் தொனியில் சொன்னான் போய்கோ.

ரஸ்மியோத்னவ், சொன்னபடியே செய்தான். அவர்கள் அந்த வீட்டில் தனியாக இருந்தபொழுது, போய்கோ தனது சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு சிவப்பு அட்டையை எடுத்து ரஸ்மியோத்னவிடம் புன்னகையுடன் நீட்டினான்.

''அதைச் சரியாகப் படி, நீ ஒரு கூர்மையான ஆள்தான்! எங்கள் வேடப்பொருத்தம் வெற்றி பெறாததால், நாங் கள் இந்த அட்டைகளை மேசையில் கட்டாயம் வைக்க வேண் டியதாகி விட்டது. இவ்வளவுதான் விஷயம் தோழர்களே: நாங்கள் இருவரும் மண்டல் ரகசிய போலீஸ் இலாகா வின் உறுப்பினர்கள். நாங்கள் இங்கே ஒரு பயங்கரமான அரசியல் எதிரியை, நம் அரசுக்கெதிரான சதிகாரனை, எதிர்ப் புரட்சிக்காரனைத் தேடி வந்திருக்கிறோம். நாங்கள் உணவுப் பொருள் தருவித்துக் கொடுப்பவர்கள் போல, கவனத்தைக் கவராதபடி நடந்துகொள்ள விரும்பினோம். இது எங்கள் வேலையை எளிதாக்கும். நாங்கள் வீடுவீடாகச் சென்று, ஒவ்வொரு ஆளுடனும் பேசிக்கொண்டே போவ தால், வெகு சீக்கிரத்திலேயே சரியான தடத்தைக் கண்டு பிடித்துவிடுவோம்,'' என்றான் போய்கோ.

''தோழர் கிலூஹவ், நீங்கள் யார் என்பதை முதலி லேயே ஏன் சொல்லவில்லை? வீண் சந்தேகம் எழுந்திரா தல்லவா?'' வியப்புற்றான் ரஸ்மியோத்னவ்.

''ரகசியம், பாதுகாப்பு, எனதருமை ரஸ்மியோத்னவ்! நாங்கள் உன்னிடம், சொன்னால் பிறகு தவீதவிடம் சொல்லி நகூல்னவிடம் கூறி, ஒரு வாரத்துக்குள்ளாக கிரெமியாச்சி கிராமம் முழுவதுக்குமே நாங்கள் யார் என்பது தெரிந்து விடும். நாங்கள் உங்களை நம்பவில்லை என்றுமட்டும் தயவு செய்து தவறாக எண்ணி வருத்தப்படாதீர்கள். எனவே,

மிக முக்கியமான விஷயம் என்று நாங்கள் கருதி இறங்கியுள்ள வேலையில், ஏதும் தவறு நிகழ்ந்துவிட அநுமதிக்க எங்களுக்கு உரிமையில்லை'' என்று போய்கோ-கிலூஹவ் எல்லாவற்றையும் கருணை காட்டுகிற முறையில் விளக்கிவிட்டு, நகூல்னவிடமும் தனது சிவப்பு அட்டையைக் காட்டிவிட்டு அதையும் பைக்குள் போட்டுக்கொண்டார்.

''நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ளலாமா?'' என்று கேட்டான் நகூல்னவ்.

தனது பெரிய கைப்பைக்குள் கையை விட்டு அமைதியாகத் துளாவி ஒரு புகைப்படத்தை எடுத்து அதைத் தனது உள்ளங்கையில் வைத்துக் காட்டினார் போய்கோ-கிலூஹவ். அது ஒரு பாஸ்போர்ட் அளவுப் படமாக இருந்தது.

ரஸ்மியோத்னவும், நகூல்னவும் மேசைமீது சாய்ந்தார்கள். அந்த அட்டையில், புன்சிரிப்புடன் கூடிய சாதாரணத் தோற்றமுள்ள முகமும், நேரான தோள்களும், சரியான முரட்டுக் கழுத்தையுமுடைய ஒரு மனிதனின் படமாக அது இருந்தது. செயற்கையாக வரவழைக்கப்பட்ட அன்பு ததும்பும் பார்வைக்குக் கொஞ்சம்கூட ஒத்துவராத முறையில், ஓநாய் மாதிரி நெளிந்து நின்ற புருவங்கள், ஆழப் பதிந்து சலனமற்றுக் காய்ந்து நின்ற கண்கள், சதுர வடிவத் தாடைகள்; இவற்றைக் கண்ட நகூல்னவ் உதட்டை 'உச்' கொட்டினான். தனது தலையை ஆட்டியபடி ரஸ்மியோத்னவ், ''அவ்வளவு நல்ல கவர்ச்சிகரமான மாமாவாகத் தோன்றவில்லை...'' என்றான்.

''அந்த ''மாமாவை'' தான் நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம்'' என்றார் போய்கோ-கிலூஹவ். சிந்தனைவயப்பட்டபடி அந்தப் படத்தை சிறிது அழுக்குப் படிந்த அதே காகிதத்தில் மடக்கி, உள்ளே கைப்பைக்குள் திணித்துக்கொண்டார். ''இவனுடைய பெயர் பொலவ்த்ஸெவ், இவனது முதல் பெயர் அலெக்சாந்தர் அனீசிமவிச். வெள்ளையர் படையின் முன்னாள் ஸார்ஜென்ட் மேஜர். பத்தியோல்கவ், கிரிவஷ்லீக்கவ் செஞ்சேனைப் படைப் பிரிவுகளைக் கொன்று தீர்ப்பதில் பங்கெடுத்தவன் இவன்தான். கடந்த முறை ஒரு பொய்யான பெயரில் ஆசிரியராக இருந்தான். பிறகு தன்னுடைய ஊரில் சிறிது காலம் குடியிருந்தான். இப்பொழுது மீண்டும் தலைமறைவாகிவிட்டான். சோவியத் ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி நடத்த ஓர் இயக்

கத்தை உருவாக்கத் தீவிரமான ஈடுபட்டிருப்போரில் இவனும் ஒருவன். நமக்குக்கிடைத்துள்ள தகவல்களின் படி அவன் உங்கள் மாவட்டத்தில் தான் எங்கோ ஓர் இடத்தில் மறைந்து கொண்டிருக்கிறான். எங்களால் இவ்வளவு அடையாளங்களைத்தான் சொல்ல முடியும். தவீதவிடம், நாங்கள் உங்களிடம் சொன்னதையெல்லாம் சொல்லுங்கள். ஆனால் வேறு யாரிடமும் வேண்டாம்! உங்களை நம்பியிருக்கிறேன், தோழர்களே. மீண்டும் சந்திக்கும் வரையில் வணக்கம். ஏதாவது முக்கிய விஷயம் இருந்தாலன்றி நாம் அடிக்கடி சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏதாவது எங்களுக்குத் தேவையான விஷயம் உங்களுக்குத் தெரிய வந்தால், எங்களைப் பகல் நேரத்தில் சோவியத்துக்கு அழையுங்கள். பகலில் தான் வரவழைக்க வேண்டும். மக்களிடம் வீண் சந்தேகத்தைக் கிளறாமலிருக்க அதுதான் வழி. கடைசியாக ஒன்று: மிக எச்சரிக்கையாக இருங்கள். இரவு நேரங்களில் நீங்கள் வெளியில் உலவாமல் இருப்பது உங்களுக்கு நல்லது. பொலவ்த்ஸெவ் பலாத்காரச் செயலில் ஈடுபட மாட்டான். அவன் தன்னைத் தானே காட்டிக்கொடுத்துக் கொள்ள விரும்ப மாட்டான். இருப்பினும் கவனமாக இருப்பது நல்லது. இரவு நேரத்தில் வெளியில் போகாதிருப்பதே நல்லது. அவ்வாறு போக நேரிட்டால் தனிமையில் போக வேண்டாம். எப்பொழுதும் ஆயுதத்தோடு இருங்கள். ஏற்கெனவே அப்படித்தான் செய்துவருகிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் ஹிழ்னியாக்குடன் பேசிக்கொண்டிருந்த பொழுது, உன் பைக்குள் துப்பாக்கியின் விசையை ஏற்றிய சத்தத்தை நான் கேட்கவில்லையா, தோழர் ரஸ்மியோத்னவ்?''

ரஸ்மியோத்னவ் கண்களைச் சுழற்றிக் கொண்டே, இந்தக் கேள்வியையே கேளாதவன் போல மறு பக்கம் திரும்பிக் கொண்டான். நகூல்னவ் அவன் உதவிக்கு வந்தான்.

''என்னைக் குறிவைத்த நாளில் இருந்தே, நாங்கள் எப்பொழுதும் தற்காப்புக்குத் தயாராகவே இருந்துவருகிறோம்'' என்றான் அவன்.

போய்கோ-கிலூஹவ் லேசாகச் சிரித்தார்.

''தற்காப்புக்கு மட்டுமல்ல. தாக்குதலுக்குக் கூடத்தான் போலிருக்கிறது... தார்ன் என்று அழைக்கப்பட்ட திமஃபேய் தமாஸ்கவ், உன்னால் சுட்டுக்கொல்லப்பட்டவன்,

ஒரு சமயம் இதே பொலவ்த்ஸெவ் இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தவன் தான். உங்கள் கிராமத்திலேயே அவனுடைய இயக்கத்தின் அங்கத்தினர்கள் இருந்து வருகிறார்கள்,'' என்றார் போய்கோ. ''ஆனால் சிறிது காலத்திற்குப் பின் ஏனோ காரணத்தால் அந்த இயக்கத்தை விட்டு வெளியேறி விட்டான். காரணம் நமக்குத் தெரியவில்லை. உன்னைக் குறிபார்த்ததுகூட பொலவ்த்ஸெவ் உத்தரவுப்படி அல்ல. சொந்தக் காரணமாகத்தான் இருக்கும்...''

நகூல்னவ் தலையை அசைத்தான். போய்கோ-கிலூஹவ் ஏதோ ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவதைப்போல நிதானமாகப் பேசிக்கொண்டே போனார்: ''திமஃபேய் தமாஸ்கவ், தவீதவ் கண்டுபிடித்த, அவனுடைய வீட்டுக் கொல்லையில் புதைத்து வைத்திருந்த எந்திரத் துப்பாக்கியை உள்நாட்டுப் போர்காலத்தில் இருந்தே, பொலவ்த்ஸெவ் கூட்டத்தினர்க்குக் கொடுக்காமல் இருந்ததிலிருந்தே, அவன் அந்தக் கூட்டத்திலிருந்து விலகிவிட்டான் என்பதைக் காட்டுகிறது. அவன் ஏதோ காரணத்திற்காக விலகி, தனிக் கொள்ளைக்காரனாகவே இருந்திருக்கிறான். அது முக்கிய விஷயம் அல்ல. நாம் நமது வேலைகளைப் பற்றி நான் சற்று கூறுகிறேன். பொலவ்த்ஸெவைத் தனியாகவோ உயிருடனோ நாம் பிடித்தாக வேண்டும். இப்போதைக்கு இது போதுமானது. அவனுடைய குழுவைச் சேர்ந்த தொண்டர்களை பின்னர் ஆயுதம் அற்றவர்களாக்கிவிடலாம். பொலவ்த்ஸெவ் வெறுமனே ஓர் இணைப்புக் கண்ணிதான். ஆனால் மிக முக்கியமான கண்ணி என்று சொல்லலாம். அதனால்தான் இந்த கண்டுபிடிக்கும் வேலை எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வேலையை மாவட்ட ஐ. ஜி.பி.யு. விடம் ஒப்படைக்கவில்லை... நாங்கள் உங்களிடம் விஷயத்தை மறைக்க முயன்றதாக நினைத்து நீங்கள் வீணாக வருத்தப்பட வேண்டாம். நாங்கள் இங்கு வந்திருப்பதை இந்த மாவட்டத்திலேயே உங்களைத் தவிர இந்த மாவட்ட அரசியல் ரகசியப் போலீஸ் (ஜி.பி.யு) அதிகாரி மட்டுமே அறிவார். தோழர் நெஸ்தெரேன்கோவுக்குக்கூடத் தெரியாது. அவரோ மாவட்டக் கட்சிக் குழுவின் செயலாளர். அவர் உணவுப் பொருள் தருவித்துக் கொடுக்கும் இந்த இரண்டு பேரைப் பற்றிக் கவலைப்பட வேண்டுமா? அவர் அவருடைய கட்சி வேலைகளைச் செய்து கொண்டிருக்

கட்டும். நாங்கள் எங்கள் வேலைகளைச் செய்கிறோம்... நாங்கள் இதுவரை பார்த்த கூட்டுப்பண்ணைகளில் எல்லாம், நாங்கள் சொன்ன படியே அவர்கள் நம்பும்படி நடந்து வந்துவிட்டோம். தோழர் ரஸ்மியோத்னவ்தான், என்னையும் ஹிம்னியாக்கையும் உண்மையான உணவுப் பொருள் தருவிப்பவர்கள் அல்ல என்று சந்தேகப்பட்டு விட்டான். உன்னுடைய நுண்ணறிவுக்கு இது ஒரு பாராட்டுத்தான். என்ன இருந்தாலும், இன்னும் இரண்டு நாட்களில் நாங்கள் யார் என்பதை நான் சொல்ல நேரிட்டிருக்கும். என்னுடைய தொழிலறிவு, பொலவ்த்ஸெவ் இங்குதான், உங்கள் கிராமத்தில் எங்கோ ஓர் இடத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று சொல்கிறது.. ஜெர்மானிய போரிலும், உள்நாட்டுப் போரிலும் அவனது முன்னாள் ராணுவத் தோழர்களையும் தேட முயலப் போகிறோம். எந்தெந்தப் பிரிவுகளில் பொலவ்த்ஸெவ் பணிபுரிந்தான் என்று விவரங்கள் எங்களுக்குத் தெரியும். அவனது பழைய போர்க்காலத் தோழர்களுடன் தொடர்பு கொண்டிருக்க முடியும். சுருக்கமாக இவ்வளவு தான் விஷயம். நாங்கள் போவதற்கு முன்னர், நாம் ஒருவரை யொருவர் சந்திப்போம். சரி போய் வரட்டுமா? வணக்கம்!''

வாசற்படியருகில் சென்றவுடன் போய்கோ ஹிம்னியாக் நகூல்னவை ஏறிட்டுப் பார்த்தார்.

''உன் மனைவி என்ன ஆனாள் என்று தெரிந்துகொள்ள வேண்டுமா?'' என்று கேட்டார்.

மக்காரின் கன்னங்கள் உப்பிச் சிவந்தன. கண்கள் இருண்டன. தொண்டையைச் சரிசெய்து கொண்டு அமைதியாகக் கேட்டான்: ''எங்கிருக்கிறாள் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரியும்.''

''நல்லது?''

''ஷாஹ்தி நகரில் இருக்கிறாள்.''

''அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாள் அங்கு அவளுக்குச் சுற்றத்தாரோ, நண்பர்களோ இல்லையே.''

''அவள் வேலை பார்க்கிறாள்.''

உற்சாகமற்ற ஒரு சிரிப்புடன், ''அவளுக்கு என்ன வேலை?'' என்று மக்கார் கேட்டான்.

''சுரங்கத்தில் வண்டி தள்ளுகிற வேலை. எங்கள் அமைப்

பைச் சேர்ந்த உறுப்பினர்கள் தான் அவளுக்கு வேலை தேடித்தந்தார்கள். ஆனால் உண்மையில் யார் உதவியது என்பது பற்றி அவள் அறிய மாட்டாள்.. அவள் மிக அருமையாக வேலை செய்து வருகிறாள். மிக நன்றாக வேலை செய்கிறாள் என்றே சொல்வேன்! மிக நல்ல முறையில் தான் வாழ்க்கையும் நடத்துகிறாள். புதிய உறவு எதுவும் அவள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பழைய கூட்டாளிகள் யாரும் கூட இதுவரை அவளை வந்து பார்க்கவில்லை.''

''வேறு யார் வந்து பார்க்கக்கூடும்?'' என்று அமைதியாகக் கேட்டான் நகூல்னவ்.

அவன் போக்கு முற்றிலும் அமைதியாகவே இருந்தது. இடது கண் இமை மட்டும் துடித்துக்கொண்டிருந்தது.

''எல்லா வகையான ஆட்களும்தான்... உதாரணமாக, திமஃபேயின் பழைய கூட்டாளிகள் வரலாமல்லவா? இது நடக்க முடியாத விஷயம் என நினைக்கிறாயா? ஆனால், அவள் புதிய நோக்குடன் வாழத் தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது. புதிய அத்தியாயத்தைத் தொடங்கிவிட்டாள், தோழர் நகூல்னவ், நீ அவளுக்காகக் கவலைப்படத் தேவையில்லை.''

''நான் கவலைப்படுவதாக நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?'' என்று முன்னிலும் அமைதியாக, தனது நீண்ட கரங்களை மேசையின் நுனியில் ஊன்றி நின்றவாறு கேட்டான் நகூல்னவ்.

அவன் முகம் சுண்ணாம்புக் கட்டிபோல் வெளுத்துவிட்டது. கன்னமோ படபடவெனத் துடித்தது. வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்து நிதானமாக, ''சொற்பொழிவாளரே, நீ! ஒரு வேலை செய்யத்தானே வந்திருக்கிறாயா? நல்லது, போய் அதைச் செய். எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எனக்கு உனது தேற்றுதல் தேவையில்லை! உன்னுடைய எச்சரிக்கைகளும் எங்களுக்குத் தேவையில்லை. இரவோ, பகலோ, வெளியில் சென்றால், அதைக் கவனித்துக்கொள்ள வேண்டியது எங்களது வேலை. எந்த முட்டாளின் புத்திமதியும், பெண்ணின் தாலாட்டுமின்றியே, சமாளிக்க எங்களுக்குத் தெரியும்! உனக்கு புரிகிறதா? தெரிகிறது என்றால் போடா. நீ தேவைக்கும் அதிகமாகவே எங்களிடம் பேசிவிட்டாய், மனம் திறந்து பேசுவதாகச் சொல்லி, ரொம்ப ரொம்பப் பேசிவிட்டாய்.

நீ ரகசியப் போலீஸ் என்று வேறு சொல்லிக்கொள்கிறாய்—அல்லது நீ நடிப்பதுபோல—கால்நடை வியாபாரி, தரகா, அல்லது கழிபொருள் வணிகர் என்று வேறு சொல்லிக் கொள்கிறாய்...'' என்றான் நகூல்னவ்.

கலக்கமடைந்து நின்ற தனது மேலதிகாரியை ஹழ்னியாக் ஓர் அலட்சியச் சிரிப்புடன் பார்த்தான். மேசையை விட்டு நகூல்னவ் அகன்றான், நிமிர்ந்து நின்று சட்டையை இடைவாருக்கு அடியில் சரியாக இழுத்து விட்டுக்கொண்டு, கதவை நோக்கி நடந்தான். பட்டாளத்து வீரன் என்ற செருக்கோடு நிமிர்ந்து நேராக, விருவிருப்புடன் நடந்தான்.

அவன் போன பின்னர் ஓரிரு நிமிடங்கள் ஒருவித அசட்டுத்தனமான அமைதி நிலவியது.

மூக்கைத் தனது சுண்டுவிரல் நகத்தால் சுரண்டிக் கொண்டே, ''ஒருவகையில் அவன் மனைவியைப் பற்றி நான் பேசியிருக்கக் கூடாது'' என்றார் போய்கோ-கிலூஹவ். ''அவனுக்கு அவளைப் பிரிந்த கவலை இன்னும் இருக்கிறது போலிருக்கிறது...''

''நீ சொல்லியிருக்கக் கூடாது'' என்று ஒப்புக்கொண்டான் ரஸ்மியோத்னவ். ''மக்கார் கொஞ்சம் தொட்டாற் சுணங்கி மாதிரி தான். தன்னுடைய தூய்மையான உள்ளத்தில் அழுக்கான கால்களை யாரும் வைப்பதை அவன் விரும்புவதே இல்லை.''

''பரவாயில்லை. அவன் மறந்துவிடுவான்'' என்றான் ஹிழ்னியாக், கதவின் கைபிடியைப் பிடித்தவாறு கூறினான் ஹிழ்னியாக்.

விஷயத்தைச் சுளுவாக்க, ரஸ்மியோத்னவ்,

''தோழர் கிலூஹவ், இந்தக் கால்நடைகளை வாங்கி என்ன செய்யப் போகிறீர்கள்? உண்மையாகவே கால்நடைகளை வாங்குகிறீர்களா? வெறுமனே விலையை மட்டும் பேரம் பேசிவிட்டுப் போகிறீர்களா?''

சூதுவாதற்ற இந்த அப்பாவித்தனமான கேள்வி கிலூஹவிற்கு பழையபடி மகிழ்வான மனநிலையை உண்டாக்கி விட்டது. அவர் கன்னத்திலிருந்த பருக்கள் மின்னின.

''சரியான எசமான்தானய்யா நீ! ஆமாம், நாங்கள் உண்மையாகவே கால்நடைகளை வாங்கிக்கொண்டு, முழு விலையையும் கொடுத்து வருகிறோம். அதுபற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். நாங்கள் ஷாஹ்தியில் உள்ள

சுரங்கத் தொழிலாளர்கட்கு அவற்றை அனுப்பிவிடுகிறோம். அவர்களுக்கு இறைச்சி சாப்பிடுவதில் மகிழ்ச்சி தானே. ஆனால் அவர்கள் எங்களுக்கு நன்றி சொல்ல மாட்டார்கள். ஏனெனில் இந்தக் கொழுத்த கால்நடைகளை எல்லாம் எவ்வளவு முக்கிய நிறுவனம் அவர்களுக்காக வாங்கியது என்பதை அவர்கள் அறிவார்களா? அதுதான் விஷயம், சகோதரனே!''

பார்வையாளர்கள் போன பின்பு வெகுநேரம் வரை கன்னத்தில் கை ஊன்றியவாறு, ரஸ்மியோத்னவ் தனது பரந்த தோள்களை அகல விரித்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். ''பொலவ்த்ஸெவுடன் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் யார்தான்?'' என்று சிந்தனையால் குழம்பிப் போனான். கிரெமியாச்சி கிராமத்திலுள்ள ஒவ்வொரு ஆளாக நினைத்துப்பார்த்தான். அவனால் யாரையுமே சந்தேகிக்க முடியவில்லை...

ரஸ்மியோத்னவ் கால்களை உதறி விட்டுக்கொள்வதற்காக கதவுக்கும் மேசைக்குமாக இரண்டு, மூன்று முறை நடந்தான். நடந்து கொண்டே இருக்கையில் பாதிவழியில் ஏதோ காண முடியாத தடையைக் கண்டவன்போல நின்றுவிட்டான். ''அந்தப் பருத்த மனிதன் மக்காரின் மனத்தை மீண்டும் அந்த நினைவில் தள்ளிவிட்டு விட்டானே'' என்று வருத்தத்துடன் நினைத்தான். ''எதற்காக அவனிடம் அந்தச் சனியன் லூஷ்காவைப்பற்றிச் சொல்ல வேண்டும்? மக்கார் அவளைப் பார்க்க வேண்டுமென்று ஷாஹ்திக்குக் குதிரையில் புறப்பட்டுவிட்டால்?.. கொஞ்ச காலமாக அமைதியாகவும் ஒழுங்காகவும் இருந்துவந்தான். ஆனால் இரவு நேரங்களில் குடித்துக்கொண்டிருந்தான் போலிருக்கிறது...''

ரஸ்மியோத்னவ் சில நாட்கள் அச்ச உணர்வோடு வாழ்ந்தான். மக்கார் என்ன செய்வான்? சனிக்கிழமை மாலை, தவீதவின் முன்னிலையில், மாவட்டத் தலைமை, தன்னை, மர்தீனவ்ஸ்கயா என்ற பெரிய ஊருக்குப் போய், அங்கு தோன் பகுதியின் முதல் டிராக்டர் எந்திரத் தொழிற்சாலையைப் பார்த்துவர அநுமதி தந்துள்ளதாக, மக்கார் சொன்னதுமே, ரஸ்மியோத்னவ் தனக்குள் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்: ''மக்கார் தொலைந்தான்! லூஷ்காவைப் பார்க்கப்போகிறான்! இவன் சுயமரியாதை எங்கே போய் விட்டது?..'' என்று நினைத்தான் ரஸ்மியோத்னவ்.

அத்தியாயம் இருபத்தியொன்று

கடந்த இளவேனிற் காலத்தில் வேலியின் வட பகுதியில், பனிக்கட்டி ஆவியாக உருகி, ஈரம் கசிந்து தரையில் படிந்து கொண்டிருந்த சமயம், ரஸ்மியோத்னவ் வீட்டின் பின் புறத்தின்மீது இரு மாடப்புறாக்களுக்கு ஆசை பிறந்துவிட்டன. வெகு நேரம்வரை அவை அந்த வீட்டிற்கு மேலேயே வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்தன. கடைசியாக பந்தல் வழியாக கீழே இறங்கின. மீண்டும் அவை பறந்து மேலே போய் வீட்டுக் கூரைமீது உட்கார்ந்துகொண்டன. நீண்ட நேரமாக உட்கார்ந்துகொண்டு வெறுமனே எல்லாத் திசைகளிலும் தலையைத் திருப்பித் திருப்பி, அந்தப் புதிய சுற்றுச் சூழ்நிலையை அறிமுகமாகிக் கொள்ள பார்த்துக்கொண்டிருந்தன. அதன் பிறகு, ஆண்புறா தனது பவளநிறக் கால்களைக் கூர்நனிச் சுவையுடன் தூக்கி நின்றது. புகைப்போக்கி ஓரம் கிடந்த சுண்ணாம்புக்கட்டித் தூள்களின்மீது அழகாக நடைபோட்டது. தலையை உள்ளே இழுத்து, அதனுடைய வானவில் நிறத்துக் குஞ்சம் போன்ற கழுத்து மயிர் மின்ன, கூவியது. அதனுடைய பெட்டை கூரைக்கடியில் நெளிந்து நுழைந்து, சிறகால் இரண்டு அடி அடித்து, ஓர் அரை வட்டமிட்டு விட்டு, செட்டையடித்துப் பறந்து, ரஸ்மியோத்னவின் வரவேற்பு அறையின் சன்னல் மீதிருக்கும் மரக்கட்டைமீது அமர்ந்தது. அது அவற்றை விட்டு சற்று நீட்டிக் கொண்டிருந்தது. இறக்கையை இரண்டு அடி அடித்துவிட்டு உள்ளே வந்தது, தன்னைப் பின்தொடர்ந்து வர துணைவிக்கு விடுத்த அழைப்பாக அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?

மதியச் சாப்பாட்டிற்காக ரஸ்மியோத்னவ் வீட்டிற்கு உள்ளே நுழைய ஒருக் கதவருகில் வந்த பொழுது, வீட்டு வாயிற்படி அருகில் இரு மாடப்புறாக்கள் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். பனி உருகிப் பெருகியிருந்த சிறிய குட்டையைச் சுற்றி பெண் புறா வட்டமிட்டு நடந்துகொண்டிருந்தது. தனது சிங்காரக் கால்களால் விரைந்து நடந்து போகும் பொழுதே ஆங்காங்கு இரை கண்ட இடத்தில் கொத்தி எடுத்துக்கொண்டும் குழியில் நிறைந்திருந்த தண்ணீரைச் சுற்றி வந்தது. ஆண் புறா அதனைத் துரத்தி ஓடும். அருகில் போனவுடன், கழுத்தில் காத்துப் பையை ஊத

வைத்து ''குக்கூகூகும்...'' என்று கூவும். மூக்கைத் தரை வரை கொண்டுபோய் நிறுத்திக்கொண்டு ஒரு வட்டம் போடும். பழைய படியும் துரத்தி ஓடும். மீண்டும் குமாளிக்கும், வால் சிறகுகளை அகல விசிறி போல விரித்து தரையில் ஊன்றி முன்னால் தாவும் உடம்பே தரையைத் தழுவுகிறாற் போல உராய்ந்து கொண்டுபோகும்போது ''உம் உம்'' என்று குமாளிக்கும். தண்ணீர் நிறைந்திருந்த குழிப் பக்கமாகவேபோய், பெண்புறாவைக் குழியினருகில் விடாமல் தொடர்ந்து தடுத்துக் கொண்டே இருந்தது.

ரஸ்மியோத்னவ் அவற்றைக் கடந்து இரண்டு எட்டுகள் எடுத்து வைத்துவிட்டான். அந்த ஒரு புறாக்களும், மெதுவாக அப்பால் நகர்ந்துவிட்டனவேயன்றி, பறந்து போவது போலத் தோன்றவே இல்லை. கதவருகில் ரஸ்மியோத்னவ் போய்ச் சேர்ந்தவுடன், ''இவை இனி எங்கும் போகாது, இங்கேயே தங்க வந்துள்ளன!'' என்று, சிறு பையனைப் போல மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். இங்கேயே கூடு கட்டப் போகின்றன. தனக்குத்தானே சிரித்துக் கொண்டு, ''நான் இதுவரை எதிர்பார்த்த நல்ல யோகம் வந்துவிட்டது போலும்...'' என்று நினைத்தான்.

தானியப் பெட்டியிலிருந்து ஒரு கைப்பிடி கோதுமையை அள்ளி சன்னலோரமாகத் தூவிவிட்டான்.

காலை நேரம் முழுக்க ரஸ்மியோத்னவ் சோர்வுடனும், கடுகடுப்பாகவும் உட்கார்ந்திருந்தான். விதைப்புக்கும் விதைப் பிரிப்பதற்குமான தயாரிப்பு வேலைகள் சரிவர நடைபெறவில்லை. தவீதவ் பெரிய ஊருக்கு அழைக்கப் பட்டு விட்டான். விதைப்பை நேரில் பார்வையிட நகூல்னவ் வயலுக்குப் போய்விட்டான். குழுவின் இரண்டு தலைவர்களோடும், பண்டசாலைக் காப்பாளரோடும் ரஸ்மியோத்னவ் தகராறு இழுத்துக் கொண்டான். வீட்டிலே சாப்பிட உட்கார்ந்த அவன் சூப்பு ஆறுவதையும் மறந்து அமர்ந்திருந்தான். இளவேனிற்காலத்துக் காற்றில் சிவந்து போயிந்த அவனது முகம், புறாக்களைக் கண்டவுடன் மலர்ந்தது, ஆனால் முகம் மலர்ந்தும், அகம் என்னவோ மேலும் கசந்து கனத்தது...

நீர்மல்கிய கண்களுடன் மலர்ந்த முகத்துடன், அவசரமாக கோதுமையைக் கொத்தி விழுங்கிக்கொண்டிருந்த பெண்புறாவையும், அதன் முன்னால், தன் சக்தியைக்

களைப்பின்றிக் காட்டிக்கொண்டு சுற்றிச் சுற்றி ஓடிவந்த ஆண்புறாவையும் கண்டான். ஆனால் அது ஒரு தானிய மணியைக்கூடத் தொடவில்லை.

இருபது ஆண்டுகட்கு முன்னர் அந்திரேயும் தன் ஆருயிர்க் காதலியின் முன்னால், இதே ஆண் புறாவைப்போல, ஆடிக்களித்தது உண்டு. அன்று இளமையும், துடிப்பும் இருந்தது. பின்னர் திருமணம், ராணுவத்தில் சேவை, போர்... இப்படியாகத் தொடர்ந்தது. ஏமாற்றமளிக்கக் கூடிய எத்தனை அவசர வேகத்தில் இந்த வாழ்க்கை ஓடிவிட்டது! தன் மனைவியையும், மகளையும் நினைத்த ரஸ்மியோத்னவ், ''நீங்கள் உயிரோடு இருந்தபொழுது நான் அடிக்கடி உங்களைப் பார்த்ததே இல்லை. என் அன்பே! இப்பொழுதும் கூட உங்களை நான் அடிக்கடி வந்து பார்ப்பதில்லை...'' என்று துயரத்துடன் முணுமுணுத்தான்.

ஏப்ரல் மாதத்தின் இனிமையான நாளில் கூட, ஆண் புறாவுக்குச் சாப்பிட நேரம் இல்லை. ரஸ்மியோத்னவுக்கும் அன்று அப்படித்தான். இப்பொழுது கண்களிலே நீர் மல்கி நிற்கவில்லை. சன்னல் வழியாக வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த அந்திரேயின் கண்களில் கண்ணீரே வடிந்தது. புறாக்களை அவன் கண்கள் காணவில்லை. இளவேனிற் காலத்தின் இளநீல வானின் மங்கிய ஒளிக்கற்றைகளையும் காணவில்லை. தான் உண்மையாகக் காதலித்த அந்த பெண்ணின் உருவைத்தான் கண்டான். வாழ்க்கையைக் காட்டிலும் அதிகமாக அவளைக் காதலித்தான். அந்தக் காதலின் முழுத் தன்மையை அன்று அவன் உணர்ந்திருக்கவில்லை. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இதே போன்ற ஒரு ஏப்ரல் நாளில்தான் கொடுஞ்சாவு அவளைப் பிரித்துவிட்டது...

கோப்பையருகில் தலையை மிகக் கவிழ்ந்து குனிந்தவாறே சிறிய ரொட்டித் துண்டை கடித்துக்கொண்டிருந்தான் அந்திரேய். அவன் கன்னங்களில் வடிந்து கொண்டிருக்கும் கண்ணீரை அவன் தாய் பார்க்க வேண்டாமெனவிரும்பினான். ஏற்கெனவே உப்பு போடப்பட்டிருந்த கோஸ் சூப்புக்கு மேலும் உப்பைச் சேர்த்துக்கொண்டிருந்தான். இரு முறை கரண்டியை எடுத்தான். இரு முறையும் அவனது நடுங்கும் கைகள் அதை மேசை மீது நழுவவிட்டுவிட்டன.

மனிதர்களின் மகிழ்ச்சி அல்லது பறவைகளின் குறுகிய மகிழ்ச்சி, மனிதர்களின் புண்பட்ட உள்ளங்களில் பொறாமையை ஊட்டுவதுமில்லை அல்லது அதனை அநு பவித்து புன்முறுவல் செய்யச் செய்வதுமில்லை மாறாக மனத்தை வருத்தும், கவலை தரும் நினைவுகளே நிழலாடு கின்றன... ரஸ்மியோத்னவ் மேசையிலிருந்து தீர்மானத் தோடு எழுந்தான். சட்டையைப் போட்டுக்கொண்டான். ஆட்டுத்தோல் குல்லாயைக் கையில் சுருட்டிக்கொண்டு நடந்தான்.

''ஆண்டவரே எங்களோடிரும்!.. அம்மா, இன்றைக்கு எனக்குப் பசி இல்லை''.

''சூப் உனக்குப் பிடிக்கவில்லையென்றால், துழவையும், புளித்த பாலும் கொடுக்கட்டுமா?''

''இல்லை, எனக்கு ஒன்றுமே வேண்டாம்.''

''உனக்கு ஏதாவது கஷ்டமா?'' என்று எச்சரிக்கையுடன் கேட்டாள் அம்மா.

''என்ன சிரமம்? எனக்குக் கஷ்டமே இல்லை. எனக்கு ஒரு சமயம் கஷ்டம் இருந்தது. இப்பொழுது எல்லாம் தீர்ந்து விட்டன.''

''நீ எப்பொழுதுமே மூடுமந்திரமாக வைத்துக்கொள் கிறாய் அந்திரேய்... உன்னுடைய அம்மாவுக்கு நீ எதை யுமே சொல்வதில்லை. குறைபட்டுக்கொள்வதுமில்லை... உன் மனது என்ன கல்லா?..''

''நீ தானே என்னை இந்த உலகிற்குக் கொண்டுவந் தாய், எனவே குறை இருந்தால் அதற்கு உன்னைத்தான் குற்றம் சொல்ல வேண்டும். நீ தான் என்னை அப்படி ஆக்கிவிட்டாய். இதற்கு நான் என்ன செய்ய முடியும்?''

''அப்படியானால் போய் வா'' என்று தனது உலர்ந்து போன உதடுகளைக் கடித்துக்கொண்டு சொன்னாள் கிழவி.

ரஸ்மியோத்னவ் கதவைத் தாண்டிப் புறப்பட்டான். வலது புறம் கிராம சோவியத்தை நோக்கித் திரும்பாமல், இடது புறத்தில் திரும்பினான். மெதுவாக, கையை ஆட்டிக் கொண்டு புல்வெளியை நோக்கி நடந்தான். வயல்களைக் கடந்து கிரெமியாச்சியின் மற்றொரு பகுதியை நோக்கி அவசரமின்றி நடந்தான். அங்கு இறந்து போனவர்கள் நிம்மதியாகவும் கூட்டமாகவும் குடிபுகுந்த இடம் இருக் கிறது. அந்தக் கல்லறை சுற்றுவேலி இல்லாமல் இருந்

தது. சிரமமான அந்த ஆண்டுகளில் இறந்தவர்கள் இருந்தவர்கள் பற்றி அவ்வளவாக அக்கறை காட்டவில்லை... அங்கு ஊன்றப்பட்டிருந்த கருப்பு ஏறிப்போன சிலுவைகள் ஒடிந்தும், விழுந்தும் கிடந்தன. சில குப்புற விழுந்தும் சில மல்லாந்தும் கிடந்தன. ஒரு கல்லறைகூட ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவில்லை. களிமண் மேட்டில் காய்ந்து கருகிக் கிடந்த பூண்டுச் செடிகளையும் உளுத்துக் கிடந்த மரக் கட்டைகளையும் உராய்ந்தபடி கீழைக் காற்று வீசியது. இற்று விழும் மரக்கட்டைகளின் வாசனை, காய்ந்து கருகும் புல், பனியுருகும் கருப்பு மண்ணின் வாசனை, எல்லாம் கலந்த ஒருவித வாசனை நிரந்தரமாக அங்கு வீசிக் கொண்டே இருந்தது.

வாழும் மனிதனுக்கு, எந்தக் கல்லறையும் ஆண்டின் எந்தக் காலத்திலும் கவலையைத்தான் கொடுக்கும். ஆனால் இளவேனிற் காலத்தின் தொடக்கத்திலும், கூதிர்காலத்தின் இறுதியிலும் தான் இந்தக் கவலை நிலைத்து நீடித்து நிற்கும்.

கால்நடைகளின் தடத்தின் வழியாக, கல்லறையின் வடக்கு எல்லை ஓரமாக ரஸ்மியோத்னவ் நடந்து சென்று தற்கொலை செய்து கொண்டவர்களை வழக்கமாகப் புதைக்கும் இடத்தில் வந்து நின்றான். அவனுக்குப் பழக்கமான ஒரு குழிவிழுந்த கல்லறைக்கு வந்தவுடன், நரை விழுந்த தலையிலிருந்து குல்லாயைக் கழற்றிவிட்டு தலை குனிந்து நின்றான். மறந்துபோன அந்தப் பகுதியில் நிறைந்து நின்ற துயரமிகுந்த அமைதியை வானம்பாடிகள் குலைத்தன.

இந்த இளவேனிற் காலத்தின், கதிரவனின் பூரண ஒளியில் வாழ்க்கை முழுத் துடிப்போடு விளிம்புவரை நிறைந்து பொங்கும் நேரத்தில் அந்திரேய் இங்கே ஏன் வந்தான்? மறந்துபோன தனது இளமை நாட்களையும், சொற்ப காலமே நீடித்த அந்த மகிழ்ச்சியையும், மங்கித் தெரியும் வானவெளியில் உற்று நோக்கிப் பார்க்க முயல்கிறவனைப் போல, கைவிரல்களைப் பிசைந்துகொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டு, கண்களைப் பாதி மூடியவாறு நின்றான். இதற்காகத்தான் அவன் நின்றான் போலும். இறந்து போன அன்புக்குரியவர்களை, எப்பொழுதும் ஒரு கல்லறையிலிருந்து காண முடியும் அல்லது தூக்கமற்ற இரவின் மங்கலான இருளிலும் காணலாம்...

அதிலிருந்து புறாக்கள் இரண்டையும் தனது தீவிரப் பாதுகாப்பில் வைத்துக் கொண்டான் அந்திரேய். சன்னலருகே ஒரு நாளைக்கு இரு முறையாவது கையளவு கோதுமையைத் தூவிவிட்டு, புறாக்கள் திருப்தியாகத் தின்று முடிக்கும்வரை கோழிகள் குறுக்கிடாமல் 'சூசூ' என்று நின்று விரட்டிக்கொண்டே இருப்பான். களஞ்சிய முற்றத்தில் காலை நேரத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்து, புதுக்குடித்தனக்காரர்கள், குச்சி, புல், செத்தைகளைத் தூக்கிப் போவதைப் புகைத்துக் கொண்டு அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பான். சன்னல் மூலையில் அணில்கள் கூடு கட்டிக் கீழே போட்டுவிட்ட ரோமக் கற்றைகளையும் அவை தூக்கிச் சென்றன. சீக்கிரத்தில் தாறுமாறான முறையில் ஒரு கூடு தயாராகி விட்டது. ரஸ்மியோத்னவ் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்: ''அவை தங்களுக்கென வீடு கட்டிக்கொண்டு விட்டன! இனி அவை பறந்து போகாது.''

இரண்டு வாரங்களுக்குப் பின்னால் பெண் புறா இரை பொறுக்க கீழே பறந்து வரவில்லை. ''எங்கள் வீட்டிற்கு கூடுதலாக ஆள் வரவிருக்கிறது என்பது போல அது உட்கார்ந்து இருக்க வேண்டும்'' என்று ரஸ்மியோத்னவ் தனக் குத்தானே புன்னகை செய்தான்.

இந்தப் புறாக்கள் வந்ததிலிருந்து அவனது வேலைகள் அதிகரித்துவிட்டன. அவற்றிற்குச் சரியான நேரத்தில் இரை போட வேண்டும், சட்டியில் தண்ணீரை மாற்ற வேண்டும். ஏனெனில் வீட்டுக்கு முன்னால் இருந்த குழியோ, மிக விரைவில் வற்றி வறண்டுவிடும். எல்லாவற்றிற்கும் மேலாக, இரங்கத்தக்க ஆதரவற்ற இந்தப் பறவைகளைக் காத்து நிற்க வேண்டியதும் அவன் கடமையாகிவிட்டது.

வயல்வெளிக்குப் போய்விட்டு ஒரு நாள் வீடு திரும்புகையில், அம்மாவின் அன்புக்குரிய பூனை, கூரைமீது வயிற்றை வைத்து ஊர்ந்து பதுங்கிச் செல்வதையும், அரை பாதியாகத் திறந்திருந்த மேல் சன்னல் வழியாக மெதுவாகக் குதித்துத்தாவி உள்ளே ஏறி, வாலைச் சுருட்டி மடக்கி நிறுத்தித் தாவத் தயாராகிக் கொண்டிருப்பதை ரஸ்மியோத்னவ் பார்த்தான். சில அங்குலத் தொலைவில் சாவு தன்னை நெருங்கிக் கொண்டிருப்பதையும், வரும்

பேராபத்தையும் அறியாமல், கூட்டில் மறுபுறம் தலை வைத்து, பூனை வரும் திசையில் வாலை நீட்டி அசைவற்று உட்கார்ந்திருந்தது அந்தப் புறா.

பையிலிருந்து துப்பாக்கியை எடுத்து விசையை ஏற்றிக் கொண்டு, நுனிக்காலில் ஓசை செய்யாமல் பூனைமீது வைத்த கண் எடுக்காமல் அங்கே ரஸ்மியோத்னவ் ஓடினான். மூச்சுக் கூட விடாமல் அடக்கிக்கொண்டான், பூனை உடலைச் சிறிது பின்வாங்கி சுருக்கி, முன்கால்களை உயர்த்தியபோது ஒரு வேட்டு ஒலியும் சன்னல் லேசாக அசைந்த ஓசையும் கேட்டது. புறா பறந்துவிட்டது. பூனை தலைகீழாகக் கீழே வீழ்ந்தது. வீட்டைச் சுற்றியிருந்த மண்மேட்டின்மீது விழுந்த பூனையின் உடலை ஒரு குண்டு ஊடுருவிக்கொண்டு போயிருந்தது.

வேட்டுச் சத்தம் கேட்டு ரஸ்மியோத்னவின் தாய் வெளி முற்றத்தை நோக்கி ஓடினாள்.

''மண்வெட்டி எங்கேயம்மா இருக்கிறது?'' என்று ஒன்றுமே நடவாதது போலக் கேட்டான் ரஸ்மியோத்னவ்.

செத்துப்போன பூனையை அருவருப்புடன் வாலைப் பிடித்துத் தூக்கி நின்றுகொண்டிருந்தான்.

கையைப் பிசைந்துகொண்டு, கிழவி புலம்பத் தொடங்கி விட்டாள். ''ஏ கொலைகாரா! எந்த உயிர் மீதும் உனக்கு இரக்கம் இல்லை! உனக்கும் மக்காருக்கும், ஆளைச் சுடு வதும், பூனையைச் சுடுவதும் ஒன்றுதான்! உங்களுக்கு இது பழக்கமாகிவிட்டது. ரத்தவெறி பிடித்த பிசாசுகள் புகை யிலை இல்லாமல் இருக்க முடியாததைப் போல, உங்களால் நாள்தோறும் ஒன்றைக் கொல்லாமல் இருக்க முடியாது!'' என்று அலறினாள்.

''பிறகென்ன, சும்மா அலட்டிக் கொள்ளாதே!'' என்று சற்றுக் கோபமாகவே குறுக்கிட்டுச் சொன்னான். ''இனி மேல் நம் வீட்டில் பூனைகளே கூடாது! மக்காரையும் என் னையும் இனி திட்டக்கூடாது. எங்களுக்குக் கெட்ட கோபம் வருகிறது. மற்ற உயிர்களை வாழவிட மறுக்கும், இந்தக் கேடுகெட்ட மிருகங்களை, அவை இரண்டு கால்களானா லும் சரி, நான்கு கால்கள் ஆனாலும் சரி, நாங்கள் அன்பின் காரணமாகவே இவற்றைச் சுட்டுத் தீர்க்கிறோம். இது புரி கிறதா அம்மா? இப்போது உள்ளே போங்கள். கதவைத் தாழிட்டுக் கொண்டு துக்கம் கொண்டாடுங்கள். கிராம

சோவியத்தின் தலைவன் என்ற முறையில், இங்கு குழப்பம் ஏற்படுத்தி முற்றத்தில் என்னைத் திட்ட முயல்வதையும் திட்டமாகத் தடை செய்கிறேன்.''

அந்திரேயுடன் அவனுடைய அம்மா ஒரு வாரம் வரை பேசவே இல்லை. ஆனால் இந்த அமைதி ரஸ்மியோத்னவுக்கு சாதகமாகவே அமைந்தது. இந்த ஒரு வார காலத்தில் அக்கம் பக்கம், சுற்றுவட்டாரத்திலிருந்த ஆண், பெண் பூனைகள் பலவற்றையும் சுட்டுத் தள்ளி, தன் புறாக்களின் பாதுகாப்பை நீண்ட காலத்துக்கு உறுதிப் படுத்திக்கொண்டான். கிராம சோவியத்துக்கு ஒரு நாள் வந்த தவீதவ், ''என்ன, அக்கம்பக்கத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே வேட்டும் வெடியுமாக இருக்கிறதே! நாள்தோறும் துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. எதற்காக மக்களைக் கலவரமடைய வைத்துக் கொண்டிருக்கிறாய்? உன் துப்பாக்கியைச் சோதிக்க விரும்பினால் புல்வெளிக்குப் போய் ஆசை தீர சுட்டுத் தீர்த்துவிட்டு வா. இங்கே நீ செய்கிற காரியம் நன்றாக இல்லை, அந்திரேய். அதுதான் விஷயம்!'' என்றான் அவன்.

''நான் பூனைகளை ஒழித்துக் கட்டிக் கொண்டிருக்கிறேன்'' என்று துயரம் நிரம்பச் சொன்னான் ரஸ்மியோத்னவ். ''இந்தச் சனியன்கள் பிடித்த மிருகம் பயங்கரமான தொந்தரவு பிடித்தவை!''

வெயிலில் கன்றிப்போன தனது புருவங்களை அகல விரித்துத் திறந்தான் தவீதவ்.

''என்ன... பூனைகள்?''

''எல்லாவகைப் பூனைகளும்தான். கருப்பு சாம்பல் கருப்பு வெள்ளை. என் கண்ணில் படும் பூனை எதுவாக இருந்தாலும்.''

தவீதவின் மேல் உதடு துடிக்கத் தொடங்கின. அடக்க முடியா வெடிச் சிரிப்பை அடக்க முயன்றுகொண்டிருப்பதன் முதல் அடையாளம் அது. இதனைக் கண்ட ரஸ்மியோத்னவ், எச்சரிக்கையாகக் கையை நீட்டி ஆட்டிக் காட்டினான்.

''மாலுமியாரே! சிரிப்பதற்கு முன்னால் விஷயம் என்ன என்று கேட்டுத் தெரிந்துகொள்.''

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் தவீதவ். சிரிப்பை அடக்க முடியாமல், உடம்பு குலுங்க ஆடி, கண்களில் நீர்

மல்கியது. ''தோல் திட்டத்தை நிறைவேற்றி விட்டாயா? போதுமான அளவுக்குத் தோல்கள் வரவில்லையா? அதனால் தான் உன் பங்கைச் செய்ய முடிவு செய்துவிட்டாய் போலும். ஏ, அந்திரேய்! இனி என்னால் தாங்க முடியாது... உடனே சொல்லிவிடு, இல்லையேல் இப்படியே உன் மேசை மீது விழுந்து செத்தாலும் செத்துவிடுவேன்...'' என்றான் தவீதவ்.

தவீதவ் தலையைக் கவிழ்த்து கைகள்மீது வைத்துக் கொண்டான். தோள்பட்டைகள் இரண்டும் துடித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, ரஸ்மியோத்னவ் கொடுக்கால் கொட்டப்பட்டவனைப் போல, திடீரென்று குதித்தெழுந்து, ''ஏ முட்டாளே! பட்டணத்தில் வளர்ந்த படுமுட்டாளே! என் புறாக்கள் அடை காக்கின்றன. விரைவில் அவை குஞ்சு பொரித்துவிடும் தோல் சேகரிப்பு வேலையில் ஈடுபட்டிருக் கிறேன் என்று நீ சொல்கிறாய். எனக்கும் அந்தச் சனியனுக் கும் என்ன சம்பந்தம்?.. தோல் ரோமக் கத்தை, குளம் புகள், இன்னும் மற்றவைபற்றி எனக்கென்ன கவலை? என் னுடன் வசிப்பதற்குச் சில புறாக்கள் வந்துள்ளன. அவற்றை நான் சரியாகக் கவனிக்க வேண்டாமா? இப்பொழுது உன் மனமாரச் சிரி!'' என்றான்.

மேலும் கோபத்தோடு பேச இருந்த ரஸ்மியோத்னவ், தன் பேச்சு தவீதவின் முகத்தில் ஏற்படுத்திய மாற்றத்தைக் கண்டு வியப்புற்றுப் போனான். தவீதவ் அவசரமாகக் கண் களைத் துடைத்துக் கொண்டு, பரபரப்புடன், ''என்ன புறாக்கள்? எங்கே இருந்து உனக்குக் கிடைத்தன?'' என்று கேட்டான்.

''என்ன புறாக்கள்? என்ன பூனைகள்? உனக்கு அவை எங்கே கிடைத்தன?.. இப்பொழுதெல்லாம் மிகவும் பைத் தியக்காரத்தனமான கேள்விகளைக் கேட்கத் தொடங்கியி ருக்கிறாய், செமியோன்!'' என்று ரஸ்மியோத்னவ் வெறுப் புடன் பொறுமினான். ''இரண்டு கால்கள், இரு இறக்கை கள், ஒரு தலையோடு கூடிய சாதாரணப் புறாக்கள்தான். மறு ஓரத்தில் அவற்றிற்கு ஒரு வாலுண்டு. அவை கால ணிகள் அணிவதில்லை, சிறகுகளுடன் தானிருக்கின்றன. குளிர்காலத்தில்கூட வெறுங்காலுடன்தான் போகின்றன. அவை அவ்வளவு ஏழைகள், போதுமா? திருப்திதானே உனக்கு?''

''நான் அதைக் கேட்கவில்லை. அவை நல்ல இனமா? இல்லையா? என்பதைத்தான் கேட்டேன். நான் சிறுவனாக இருந்தபொழுது நானே புறாக்களை வைத்திருந்தேன். அதுதான் விஷயம். ஆகையால்தான் அவை என்ன இனம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினேன். கரணமிடும் புறாவா, புடைத்த மார்புடைப் புறாவா? அல்லது அவை மடத்துத் துறவியா, நீள சிறகும் தோலடியும் உடைய இனமா? இவை எங்கிருந்து உனக்குக் கிடைத்தன?''

இந்நேரத்தில் மீசையை வருடிய வண்ணம் சிரித்துக் கொண்டிருந்தான் ரஸ்மியோத்னவ். ''யாரோ ஒருவரது கூட்டடிப்பு களத்திலிருந்து அவை பறந்துவந்தன. எனவே அவற்றை 'கூட்டடியார்' என்று அழைக்கலாம். ஆனால் அழைப்பின்றியே அவை வந்திருப்பதை வைத்து ''அழையா விருந்தினர்'' என்றோ 'சட்டிசுரண்டி' என்றோ அழைக் கலாம். ஏனெனில் என் வீட்டு தானியத்தைத்தான் தின்று கொண்டு இருக்கின்றனவேயன்றி, இரை தேடப் போவதே இல்லை... சுருங்கச் சொன்னால், அவற்றிற்கு நீ விரும்பும் எந்த இனத்தாலும் அழைக்கலாம்.''

''அவை என்ன நிறம்?'' என்று தவீதவ் அக்கறையோடு கேட்டான்.

''வழக்கமான புறா நிறம்தான்.''

''அதாவது?''

''யாரும் தொடுவதற்கு முன்பு இருக்கும், பழுத்த பழம் மாதிரி. அதாவது புகை போல நீல நிறம்.''

''ஓகோ, மாடப் புறா'' என்று ஏமாற்றத்தோடு எதி ரொலித்தான் தவீதவ். ஆனால் மறு விநாடியே, பரபரப் புடன் கைகளைத் தேய்த்துக்கொண்டிருந்தான். ''மாடப் புறாக்கள் கூட, சில சமயங்களில் கூட்டிக்கையானவையாக இருக்கக்கூடும்! நான் பார்க்கவேண்டுமே. இது மிகவும் ஆர்வமூட்டுவதாக உள்ளது, அதுதான் விஷயம்!'' என்றான் தவீதவ்.

''வா, மகிழ்ச்சியோடு வரவேற்பேன்!''

இந்த உரையாடல் நடந்த சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள், சில சிறுவர்கள் ரஸ்மியோத்னவை தெருவில் நிறுத்தினார்கள். அவர்களில் துணிச்சல்காரப் பையன் ஒரு வன், பாதுகாப்பான தூரத்தில் நின்றுகொண்டு, சீச்சுக் குர

லில், ''அந்திரேய் மாமா, விற்பனைக்காகப் பூனைகளைச் சுடுவது நீங்கள் தானா?'' என்று கேட்டான்.

''எ...ன்...ன?'' என்று கோபத்துடன் பயமுறுத்திக் கொண்டு அவர்களை நோக்கி நடந்தான் அந்திரேய்.

நாலா திசைகளிலும் சிறுவர்கள் சிதறி ஓடினார்கள். ஆனால் ஓரிரு நிமிடங்கள் கழித்து அதே கூட்டம் மீண்டும் கூடிற்று.

''பூனையைப் பற்றி உங்களுக்கு யார் சொன்னது'' என்று கோபத்தை அடக்கிக்கொண்டு கேட்டான் ரஸ்மியோத்னவ்.

ஆனால் குழந்தைகள் தலைகளைக் கவிழ்த்து கொண்டார்கள். ஆண்டின் முதற் புது புழுதியின் மீது, சாலையில் வெறுங்கால்களால் கோடுகளைத் தீட்டியவாறு நின்றார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் முதன் முதலாகப் பேசிய பையன் மீண்டும் துணிவை வரவழைத்துக்கொண்டான். அவனது சிறு தோள்களின் பக்கம் தலையை இழுத்தவாறு, ''துப்பாக்கியால் பூனைகளைச் சுட்டுவருவதாக, அம்மா சொன்னார்களே'' என்றான்.

''ஆமாம், சுடுகிறேன். ஆனால் அவற்றை நான் விற்றுக் கொண்டிருக்கவில்லை! அது வேறு விஷயம் தம்பி!''

'' 'பூனைகளையெல்லாம் விற்பனை செய்வது போல நமது தலைவர் சுட்டுத் தள்ளிக் கொண்டிருக்கிறார். நம் வீட்டிலிருக்கின்ற பூனையும், புறாக்களைத் துரத்தித் திரிவதால், அதையும் சுட்டு விடுவது நல்லது' என்று அம்மா சொன்னார்கள்.''

''ஓகோ! இது வேறு விஷயம் தம்பி!'' என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னான் அந்திரேய். ''உங்கள் பூனை, புறாக்களைத் துரத்திக்கொண்டு திரிகிறதா? அப்படித்தானா? நீ யார் வீட்டுப் பையன் தம்பி? உன் பெயர் என்ன?''

''என் தந்தையின் பெயர் செபகோவ் யெரஃபேய் வசீலிச், என் பெயர் திமோஷ்கா.''

''சரி, திமோஷ்கா, என்னை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போ. அந்தப் பூனைக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து முடித்துவிடுவோம். உங்கள் அம்மாவே விரும்பி நம்மிடம் சொன்ன பிறகு விடலாமா?''

செபகோவ் வீட்டிலிருந்த புறாக்களைக் காப்பாற்ற ரஸ்

மியோத்னவ் எடுத்துக்கொண்ட உயரிய முன் முயற்சிகள், அவனுக்கு வெற்றியைத் தேடித் தரவுமில்லை; புகழை உயர்த்தவுமில்லை. இதற்கு நேர் எதிர்மாறாகத்தான் நடந்தது... கசமுசவென்று கீச்சுக் குரலில் பேசிக்கொண்டு வந்த சிறு பையன்கள் புடை சூழ யெரஃபேய் செகோவ் வீட்டுக்குச் சென்ற ரஸ்மியோத்னவ் அங்கே மகிழ்ச்சியைத் தராத ஏதோ ஒரு நிகழ்ச்சி காத்திருக்கிறது என்பதை துளியும் எதிர்பார்க்கவே இல்லை. தன்னைச் சுற்றிச் சூழ்ந்து வந்த சிறுவர்களின் கால்களை மிதித்து விடாமல் நடக்க எச்சரிக்கையுடன் அடியெடுத்து நடத்துகொண்டிருந்த ரஸ்மியோத்னவ் தெருமூலையைக் கூடக் கடக்கவில்லை, அதற்குள் மிகவும் வயதான யெரஃபேயின் அம்மா, வீட்டுப் படிகளில் தோன்றினாள்.

வாயிற்படியின் மீது, உயர்ந்து வீறார்ந்த தோற்றமுடைய அந்தக் கிழவி, கடுகடுத்த முகத்துடன், ஒரு பெரிய பூனையை இரு கையாலும் அணைத்த வண்ணம், கம்பீரமாக நின்று கொண்டிருந்தாள். அந்தப் பூனையைப் பார்த்தாலே, அது, தான் விரும்பும் அனைத்தையும் பெற்றிருக்கிறது என்பது தெரிந்தது.

''வணக்கம் பாட்டி!'' என்று அந்தக் கிழவியின் வயதுக்குக் காட்டவேண்டிய மரியாதையைக் காட்டியபடி, ஆட்டுத் தோல் குல்லாயில் கைபடுவதுபோல வணக்கம் செய்கிற முறையில் குல்லாயை விரலால் தொட்டான் ரஸ்மியோத்னவ்.

''ஆண்டவர் நாமம் வாழ்க! கிராமத் தலைவரே, எதற்காக இங்கு வந்தாய்? சீக்கிரம் சொல்'' என்று அடித் தொண்டையில் பேசினாள் கிழவி.

''பூனை விஷயமாக வந்தேன். பூனை புறாக்களைத் துரத்துவதாக இந்தப் பையன்கள், இப்பொழுதே, விசாரித்துத் தீர்ப்புக் கொடுத்து விடுகிறேன். நான் என்ன சொல்வேன் தெரியுமா? 'தண்டனை உறுதி? மேல்முறையீடு அநுமதிக்கப்பட மாட்டாது!' என்பேன்.''

''இது என்ன சட்டம்? பூனைகள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும் என்று சோவியத் ஆட்சி சட்டம் ஏதாவது போட்டுள்ளதா?''

ரஸ்மியோத்னவ் புன்முறுவல் செய்தான்: ''என்ன மண்ணாங்கட்டிக்கு உங்களுக்கு சட்டம் வேண்டும்? இந்தப்

பூனை ஒரு கொள்ளைக்காரனாக இருந்து, பறவைகளை வழிப்பறி செய்தால், நேராக தூக்குத் தண்டனை கொடுத்து முடிக்க வேண்டியது தானே! கொள்ளைக்காரர்களுக்கு நாம் ஒரே சட்டம்தான் வைத்திருக்கிறோம். 'நமது புரட்சி மனச் சாட்சிப்படி' நடத்தி முடிக்க வேண்டியதுதான் அவ்வளவு தானே! சரி, அநாவசியமாகச் சுற்றிவளைத்துப் பேசிக் கொண்டிராமல், அந்த பூனையை இப்படிக் கொடு. நான் வேலையைச் சுருக்காக முடித்து விடுகிறேன்.''

''களஞ்சியத்தில் எலிகளை யார் பிடிப்பது? அந்த வேலையைச் செய்ய நீ வருகிறாயா?''

''எனக்கு என் வேலையே நிறைய இருக்கிறது. உனக்குத்தான் வேலை அதிகம் இல்லை. எனவே, வீணாக, பலி பீடத்தின் முன்னால் மண்டியிட்டு குனிந்து வழிபாடு செய்து நேரத்தைக் கெடுப்பதற்குப் பதிலாக, எலிகளை நீயே பிடித்துவிடு.''

''எனக்குப் பாடம் சொல்லித் தர உனக்கு வயது போதாது!'' என்று உறுமினாள் கிழவி. ''நம்முடைய கஸாக்குகள், உன்னைப் போன்ற உதவாக்கரையை, எப்படித் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்? முன்காலத்தில் எல்லாம், எந்தத் தலையாரியும் என்னுடன் அதிகாரம் செய்துவிட்டுத் தப்பியது இல்லை என்பது உனக்குத் தெரியுமா?! ஒரு நிமிடத்தில் உன்னைக் கட்டித் தூக்கி முற்றத்தில் வீசினேன் என்றால் தெருவில் உன்னால் எழுந்திருக்கும் வரை என்ன நடந்ததென்று உனக்குத் தெரியாது!'' என்று கத்தினாள்.

கருப்பும் வெள்ளையும் விழுந்த நாய்க்குட்டி ஒன்று, கிழவியின் முரட்டுச் சத்தத்தைக் கேட்டு, களஞ்சியத்தின் அடியிலிருந்து ஊர்ந்து வெளியே வந்து பலமாகக் குரைத்தது. ரஸ்மியோத்னவ் படிக்கட்டில் நின்றவாறே, அமைதியாக சிகரெட்டைச் சுருட்டிக் கொண்டிருந்தான். அதனுடைய அளவையும் பருமனையும் பார்த்தபொழுது, அவன் அந்த இடத்தை விட்டு சீக்கிரத்தில் நகருவதாக இல்லை என்பதாகத் தோன்றியது. நடுவிரலைப்போல மிக நீளமாகவும், தடிமனாகவும் இருந்த சிகரெட்டைப் பார்க்கும் பொழுது நீண்ட நேர முழு விவாதத்துக்கு அவன் தயாராகிவிட்டதைப் போல் தோன்றியது. ஆனால் விதி வேறுவிதமாக இருந்தது...

ரஸ்மியோத்னவ் மெதுவாகவும் இதமாகவும் பேசத் தொடங்கினான்: ''நீ சொல்வது சரிதான், பாட்டி! இந்தக் கஸாக்குள் கிறுக்குப் பிடித்துப் போய்த்தான் என்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். அதனால் தானே 'கஸாக்கிய மூளையை ஏறுக்குமாறாகக் கொண்டிருப்பதாகச்' சொல்கிறார்கள்... இதனால் நீ வருத்தப் படாதே. நான் விரைவில் என் பதவியிலிருந்து விலகி விடுவேன்.''

''ஆமாம், இப்பொழுதே அதிக நாட்களாகிவிட்டது!''

''ஆமாம், நானும் அதைத்தான் சொல்கிறேன். ரொம்ப நேரமாகிவிட்டது. அது ஒரு புறமிருக்க, இப்பொழுது இறுதி வணக்கம் சொல்லிவிட்டு, அந்தப் பூனையைத் தலைவர் கையில் ஒப்படைத்து விடு.''

''இப்பொழுதே நீ இந்தக் கிராமத்திலிருந்த எல்லாப் பூனைகளையும் சுட்டுக் கொன்றுவிட்டாய். இனி எலிகள் பல்கிப் பெருகி அதிகரித்து, கடைசியாக இரவில் உன் கால் நகங்களையே அவை கடிக்கப் போகின்றன.''

''இல்லையில்லை, முடியவே முடியாது!'' என்று உறுதி சொன்னான் ரஸ்மியோத்னவ். ''என்னுடைய நகங்கள் எவ் வளவு கடினமானவை தெரியுமா? அவற்றை உன் வேட்டை நாய் கடித்தால்கூட, அவற்றின் பல்தான் போய்விடும். சரி, இப்பொழுது பூனையை என்னிடம் ஒப்படைத்துவிடு. உன் னோடு வாதாடிக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. சிலுவைக் குறியிட்டுவிட்டு அந்தப் பூனையை என்னிடம் பக்குவமாக ஒப்படைத்துவிடு.''

கிழவி, தனது மங்கிய மஞ்சள்நிற விரல்களாலும், கட்டை விரலாலும் தர முடியாது எனக் குறிப்பது போலக் காட்டினாள். அவளது இடது கை அணைப்பில் இறுகிய பூனை கீச்சென்று கத்திக்கொண்டு, ஆடித்துள்ளி, எச்சி லைத் துப்பியது, பிராண்டவும் தொடங்கியது. ரஸ்மியோத் னவைச் சுற்றிச் சுவர் போல் நின்ற குழந்தைகள் மகிழ்ச்சி யோடு சிரித்தார்கள். அவர்கள் பரிவெல்லாம் ரஸ்மியோத் னவ் பக்கமே இருந்தது. மிரண்டு போயிருந்த பூனையை சாந்தப்படுத்தி விட்டு, கிழவி உரத்த குரலில், ''இந்த இடத்தை விட்டு உடனே போய்விடு. ஏ பிசாசே! சனியன் பிடித்த நாத்திகனே! இப்பொழுது நேரம் நன்றாக இருக் கும்பொழுதே போய்விடு! இல்லையென்றால் சரியான

பாடத்தைக் கற்பிக்க நேரிடும்!'' என்று உறுமியவுடன் பையன்கள் பேச்சுமூச்சின்றி அடங்கிவிட்டார்கள்.

சிகரெட்டின் ஒரு நுனியை மடக்கி விட்டுவிட்டு, பத்திரிகைக் காகிதத்தின் விளிம்போரமாக நாக்கால் தடவி விட்டான். கீழிருந்து மேலாக கண்களை உருட்டி புருவத்தை நெறித்துப் பார்த்துக்கொண்டே, அசட்டையாகச் சண்டை போட நின்ற கிழவியைப் பார்த்துச் சிரித்தான். உண்மை என்னவெனில், தன் தாயைத் தவிர, அந்தக் கிராமத்திலிருந்த அத்தனை கிழவிகளுடனும் வாய்ச் சண்டையைக் கிளறுவதில் அவன் பேரின்பம் கண்டுவந்தான். அவனுக்கு வயதாகியும்கூட, கலாக்கிய இளைஞனின் குறும்புத்தனமும், கிண்டலில் இன்பம் காணும் உணர்வுப் பொறியும் அழியாமல் இருந்தன. இப்பொழுதும்கூட அவன் அந்தக் குணம் மாறாதவனாக அப்படியேதான் இருந்து வந்தான். சிகரெட்டைப் பற்றவைத்து அடுத்தடுத்து இரண்டு இழு இழுத்துவிட்டு, மிகவும் நட்புணர்வோடு சிரித்துக்கொண்டே பேசினான். ''இக்னாதியெவ்னா பாட்டி, என்ன இனிமையான, அருமையான குரல் உனக்கு! உன் குரலை நூறு ஆண்டுகள் கூடக் கேட்க முடியும். அதற்கு மேலும் கேட்கவே விரும்புகிறேன். நான் சாப்பிடவோ, தண்ணீர் குடிக்கவோ மாட்டேன். உன்னைக் காலையிலிருந்து இரவு வரை சத்தம் போடவிட்டுக் கொண்டே இருப்பேன்... ஆமாம், குரல் என்றால் அதுவல்லவா குரல்! இது என்ன விளையாட்டா! பெரிய ஊரில் உள்ள முதிய திருக்கோயில் மணியக்காராரின் உரத்த கம்பீரமான குரலைப் போன்றதல்லவா உன்னுடையது. அல்லது நமது கூட்டுப்பண்ணையில் மலர் என்று அழைக்கிறோமே அந்தக் குதிரையின் குரல் போல இருக்கிறது... இப்பொழுதிருந்து உன்னை நான் 'இக்னாதியெவ்னா பாட்டி' என்று அழைக்காமல் 'மலர்ப்பாட்டி' என்று அழைக்கப் போகிறேன். நாம் ஓர் ஒப்பந்தத்துக்கு வருவோமா? நாம் மக்களைக் கூப்பிட வேண்டிய தேவை ஏற்பட்டால், நீ தான் உரத்த குரலில் கூவவேண்டும். அப்படி நீ கூப்பிட்டால், இரண்டு நாள் வேலை நாட்களாக அவற்றை நாங்கள் கணக்கு வைத்துக்கொள்கிறோம்...''

ரஸ்மியோத்னவ் அந்த வாக்கியத்தை முடிக்கவே முடியவில்லை. கோபமடைந்த கிழவி, பூனையின் கழுத்தைப் பிடித்து, ஓர் ஆண்மகனின் வேகத்தோடு, கையை சுழற்றிப்

பூனையை வீசினாள். எச்சரிக்கையாகத் தடுக்க முயன்றான் ரஸ்மியோத்னவ். நான்கு கால்களையும் பரக்க விரித்தவாறு பச்சை நிறக் கண்கள் மிரள, மெல்லிய குரலில் வயிற்றி லிருந்து மியாவ் மியாவ் என்று கத்திக்கொண்டு, இவனைக் கடந்து பறந்து சென்று, நரிவால் போன்ற தனது வாலைத் தூக்கி, சுருள் கம்பி மாதிரி ஆடி அசைந்து தரையில் இறங் கியது. விழுந்ததும் காய்கறிப் பாத்தியை நோக்கி வேகமாக ஓடியது. காதை ஆட்டிக்கொண்டு, வீல்வீல் என்று குரைத் துக் கொண்டு நாய்க்குட்டி அதைத் துரத்தியது. நாய்க் குட்டியின் பின்னால் பையன்களின் கூட்டம் தொடர்ந்தது... காற்றிலே பறப்பதைப் போல அந்தப் பூனை வேலியைத் தாண்டிவிட்டது. இவ்வளவு பெரிய தடையைத் தாண்ட முடியாத நாய்க்குட்டி, அதன் வழக்கமான தப்பியோடும் துவாரத்தை நோக்கி ஓடிற்று. பையன்களின் கூட்டு மோத லால் அலங்கோலமான அந்த வேலி நொறுங்கி கிரீச்சிட்டு தரையில் சாய்ந்தது.

வெள்ளரிக்காய் பாத்திகளின் வழியாகவும், தக்காளிச் செடிகள், முட்டைக் கோஸ் இவற்றினூடே மின்னல் மாதிரி ஓடிற்று. ரஸ்மியோத்னவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு, கால்களைத் தட்டிய வண்ணம், ''பிடியுங்கள் ஓட விடாதீர்கள்! பிடியுங்கள்! அது என்ன செய்யக் காத்திருக்கிறது என்பது எனக்குத் தெரி யும்!..''

ரஸ்மியோத்னவுக்கு வியப்பு தாங்க முடியவில்லை. ஏனென்றால், முற்றத்தைப் பார்க்க நேரிட்ட போது, இக் னாதியெவ்னா விம்மிப்புடைக்கும் நெஞ்சை அமுக்கிப் பிடித் துக் கொண்டு, குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக்கொண்டிருந் தாள். கைக்குட்டையின் நுனியால் கண்களைத் துடைத்துக் கொண்டு குலுங்கிக் கொண்டிருந்த சிரிப்புடன், முரட்டுக் குரலில், ''அந்திரேய் ரஸ்மியோத்னவ்! ஏற்பட்ட சேதத் துக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்போவது நீயா, கிராம சோவி யத்தா இன்று மாலைக் குள்ளாக நீ எத்தனைக் கொள்ளைக் காரர்களைக் கொண்டு வந்தாய், எத்தனை பேர் மிதித்து உழட்டி அடித்துவிட்டார்கள் என்பதைக் கண்டுபிடித்து விடு வேன். பிறகு நீயே கணக்குப் பார்த்துக் கட்டிவிடலாம்!''

அந்திரேய் படிகள்வரை போய், கிழவியைக் கெஞ்ச லுடன் பார்த்துக்கொண்டு, ''நான் என்னுடைய தலைவர்

சம்பளத்தில் இருந்து கொடுத்து விடுகிறேன். அல்லது காய்கறித் தோட்டத்திலிருந்து கொடுத்துவிடச் சொல்கிறேன்! ஆனால் இதற்குப் பதிலாக, இந்தப் பூனை திருடிய கூட்டிலிருந்த புறாக்களை எனக்கு நீ கொடுத்துவிட வேண்டும். என்னுடைய புறாக்களும் விரைவில் ஒரு ஜோடி குஞ்சுகள் பொறித்துவிடும். உன் புறாக்களும் சேர்ந்துவிட்டால் ஒரு முழுமையான குடும்பமாகிவிடும்.''

''கடவுள் பெயரால் சொல்கிறேன், எடுத்துக்கொள். விருப்பப்பட்டால் எல்லாவற்றையுமே எடுத்துக்கொள். எனக்கு அவற்றால் பயனில்லை. அவற்றால் என் பறவைகள் தான் பட்டினியாகக் கிடக்கின்றன.''

ரஸ்மியோத்னவ் காய்கறித் தோட்டத்துப் பக்கம் திரும்பி, ''தம்பிகளே, பூனையோடு உங்கள் விளையாட்டை நிறுத்துங்கள்!'' என்று கத்தினான்.

பத்து நிமிடங்கள் கழித்து அவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். ஆனால் வீது வழியாகச் செல்லவில்லை; அவன் கிரெமியாச்சிப பெண்களின் பார்வையிலிருந்து தப்பிக்க விரும்பி, ஆற்றங்கரை வழியாகவே நடந்து சென்றான்... ஒரு மாதிரிக் குளிர்ந்த, புதுக் காற்று வீசிக்கொண்டிருந்தது. ஆட்டுத் தோல் குல்லாயில், கணகணப்பான, கனத்த புறாக்களை வைத்து, சட்டை நுனியால் குல்லாயை மூடிக் கொண்டான். அவன் அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் பரபரப்புடன் பார்த்துக்கொண்டு போனான், வடக்கிலிருந்து வீசிய குளிர் காற்று, முகத்தின் பக்கம் தொங்கிக் கொண்டிருந்த கற்றைச் சுருள் கேசத்தை ஆட்டிவிட்டுச் சென்றது.

அத்தியாயம் இருபத்திரண்டு

கட்சிக் கூட்டம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, கூட்டுப்பண்ணையைச் சேர்ந்த ஆறு பெண்கள் நகூல்னவைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் வந்த நேரம் அதிகாலையாக இருந்ததால், கூட்டமாகக் குடிசைக்குள் போய் தொந்தரவு செய்ய வேண்டாமெனக் கருதி, வராந்தாப் படிகளிலும், வீட்டுச் சுவரையொட்டி போடப்பட்டிருந்த ஓட்டுமண் சுவர்மீது சிலரும் உட்கார்ந்தனர். கொந்திராத் மய்தானிக்கவின் மனைவி, தனது சுத்தமான நீல நிறக் கைக்குட்டையைச் சரி செய்துகொண்டு, ''பெண்களே,

நான் உள்ளே போய் அவனைப் பார்த்துவிட்டு வரட்டுமா!'' என்று கேட்டாள்.

கீழ்ப் படிக்கட்டில் அமர்ந்திருந்த அகஃபோன் துப்த்ஸோ வின் மனைவி எல்லாருக்குமாகச் சேர்த்து, ''சரி, நீயே போக முன்வந்துவிட்டதால் போய் வா'' என்றாள்.

மக்கார் தனது அறையில் மழித்துக் கொண்டிருந்தான். ஒரு பூந்தொட்டியில் அந்தர நிலையில் சாத்தியிருந்த சின் னஞ்சிறு கண்ணாடியில் பார்த்துக் கொண்டு, உடம்பை இரண்டாக ஒடித்து வளைத்து நெளித்து அருவருக்கத் தக் கவாறு உட்கார்ந்திருந்தான். மக்காரின் முகத்தில் அடர்த் தியாக முளைத்திருந்த முடியை, பழைய மழுங்கிய கத்தியை வைத்துக் கொண்டு இழுத்தான். அதனுடைய மின்சார வெட்டின் வலி தாங்காமல் வேதனையோடு முகத்தைச் சுளித்தான். சில சமயம் முக்கி முணகினான். கண்களிலே துளிர்த்த நீரையும் உள்சட்டை நுனியால் துடைத்துக் கொண்டான். முகத்தில் பல இடங்களில் மக்கார் தானாகவே வெட்டிக்கொண்டான். அதன் விளைவாக, அவனது வெள் ளையான முகம், பல வெட்டுக் காயங்களுடன் சிவந்து போய் விட்டது. கண்ணாடியில் தெரிந்த அவனது மங்கிய முகத் தோற்றம், சோர்வுற்று, சலிப்படைந்த முகத்தையும், வேதனையுடன் எரிச்சல்பட்ட முகபாவத்தையும் காட்டின. அவன் விடாப்பிடியாகச் செய்து கொண்டே இருந்ததைப் பார்க்கும் பொழுது, சவரக் கத்தியாலேயே தற்கொலை செய்து கொள்ள உறுதிபூண்டவன் போலக் காணப்பட்டான்.

மய்தானிக்கவின் மனைவி சத்தமின்றி வணக்கம் சொல் லிக்கொண்டே உள்ளே நுழைந்தாள். ரத்தம் தோய்ந்து, வேதனை தாங்க முடியாமல், கடுகடுத்திருந்த முகத்தை மக்கார் அவள் பக்கம் திருப்பியவுடன், அவள் பயந்துபோய் கதவுப் பக்கம் பின்வாங்கினாள்.

''ஐயோ பாவமே, எப்படி இவ்வாறு உன் மேலேயே ரத்தத்தைக் கொட்டிக் கொண்டாய். போய் முகத்தைக் கழுவிக்கொள், அடிபட்ட பன்றி மாதிரி ரத்தம் வடிகிறது'' என்றாள்.

''ஏ கந்தல் மூட்டையே, ஒன்றுக்கும் பயப்படாதே, உட்கார்,'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் மக்கார். ''இந்த சவரக்கத்தி மழுங்கியிருக்கிறது ஆகையால்தான் வெட்டிக்கொண்டேன், இதை எப்போதோ நான் தூக்கி

எறிந்திருக்க வேண்டும், ஆனால் என்னால் செய்ய முடிய வில்லை. இந்தச் சனியனோடு பழகிப்போய்விட்டது. இரு போர்களின் போதும் என்னோடு இருந்திருக்கிறது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக இது என்னை அலங்காரம் செய்து வந்துள்ளது. இப்பொழுது, இதைவிட்டு நான் எப்படிப் பிரிய முடியும்? நீ உட்கார். கண நேரத்தில் வந்துவிடு கிறேன்.''

வேறு என்ன சொல்வதென்று தெரியாத மய்தானிக் கவின் மனைவி, ''உன் சவரக்கத்தி மழுங்கியிருக்கிறதா?'' எனக் கேட்டுவிட்டு அவனைப் பார்க்காதவாறு, ஒரு பெஞ் சின்மீது உட்கார்ந்தாள்.

''ரொம்ப மழுங்கட்டை! அதாவது...'' வார்த்தையை முடிக்காமல் விழுங்கிவிட்டான் மக்கார். இரு முறை இறு மினான். மிகவும் அவசரமாக, ''சுரண்டிச் சீவி என்னையே குருடாக்கிக் கொள்வேன் போல இருக்கிறதே! ஆனால் விடிந்தும் விடியாத இந்த நேரத்தில் நீ இங்கு வந்தது ஏன்? என்ன தொல்லை? கொந்திராத்துக்கு ஏதாவது நோயா?''

''இல்லையில்லை. அவர் சுகமாகத்தானிருக்கிறார். நான் தனியாக வரவில்லை. நாங்கள் ஆறு பேர் உன்னைப் பார்க்க வந்திருக்கிறோம்.''

''எதற்காக?''

''நாளை மறுநாள் எங்கள் கணவன்மாரை உங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ளப் போகிறாய் அல்லவா? எனவே பள்ளிக்கூடத்தை அந்த நாளுக்கே சுத்தம் செய்து வைக்க வேண்டுமே என்று வந்தோம்.''

''நீங்களாகவே யோசித்து இந்த முடிவுக்கு வந்தீர்களா? அல்லது உங்கள் கணவன்மார் சொன்னார்களா?''

''எங்களுக்கொன்று சொந்த மூளை இல்லையா? எங் களை மிகவும் கேவலமாக நினைக்கிறாய், தோழர் நகூல் னவ்!''

''அதை நீங்களாகவே நினைத்திருந்தால், அது அருமை யான யோசனைதான்!''

''நாங்கள் உள்ளேயும், வெளியேயும் சுண்ணாம்பு பூசி வெள்ளையடிக்க விரும்புகிறோம்.''

''அருமை! எனது முழுமையான ஒப்புதலைத் தருகி றேன். ஆனால் இதை வேலையாகக் கணக்கிட மாட்டோம். இதைச் சமூக வேலையாகத்தான் நீங்கள் செய்கிறீர்கள்.''

''நாங்கள் எந்தக் கூலியையும் எதிர்பார்க்கவில்லை. அன்பு காரணமாகவே இதைச் செய்கிறோம். ஆனால் எங்கள் குழுத் தலைவர் வந்து, வயலுக்குப்போகச் சொல்லி நச்சரிக்காமல் மட்டும் பார்த்துக் கொள். நாங்கள் ஆறு பேர் இருக்கிறோம். எனவே எங்கள் பெயர்களை ஒரு தாளில் குறித்துக்கொள்.''

''எதையும் எழுத வேண்டிய தேவை இல்லை. நானே உங்கள் குழுத் தலைவரிடம் கூறிவிடுகிறேன். போதுமான அளவுக்கு சிவப்பு நாடா முறை இருக்கவே இருக்கிறது. எழுதிக் குவித்தது போதும்.''

மய்தானிக்கவின் மனைவி எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நின்றாள். ஒரு பக்கவாட்டில் நகூல்நவைப் பார்த்தவாறு முறுவலித்தாள்.

''எங்கள் வீட்டுக்காரரும் உன்னை மாதிரி தனிப்போக்கானவர். இன்னும் மோசமென்றுகூடச் சொல்ல வேண்டும்... வயலில் கூட தினந்தோறும் சவரம் செய்துகொள்கிறார் என்று ஆட்கள் சொல்கிறார்கள். இங்கு திரும்பியவுடனும் நாள்தோறும் சட்டைகளைப் போட்டுப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்... மொத்தத்தில் இருக்கிற சட்டைகள் மூன்றே மூன்று தான். அதில் ஒன்றை மாற்றி ஒன்றை மாற்றி ஒன்றைப்போட்டுப் பார்க்கிறார். ஞாயிற்றுக் கிழமை கட்சியில் சேருகிற நாளன்று எந்தச் சட்டையைப் போடலாம் என அவரால் முடிவுக்கு வர முடியவில்லை. 'நீ என்ன, திருமணம் செய்து கொள்ளப் போகிறபுதுப் பெண் மாதிரி' என்று சொல்லிச் சிரித்தேன். அவருக்கு அவ்வளவு ஆத்திரம்! ஆனால் அவர் காட்டிக்கொள்ளவில்லை. நான் அதிகம் கேலி செய்திற சமயங்களில்தான் காட்டுவார். அந்நேரங்களில் ஒருமாதிரி பார்ப்பார். அந்தப் பார்வையிலிருந்தே கடினமான, பயங்கரச் சொற்கள் பறக்கப் போகின்றன என்பதையறிந்து, அவரை மிகவும் ஆத்திரமூட்டக் கூடாதே என்று, நான் அப்பால் நகர்ந்துவிடுவேன்...''

மக்கார் லேசாகச் சிரித்தான். அவன் கண்கள் கலங்கின.

''ஒரு பெண் திருமணம் செய்துகொள்வதைக் காட்டிலுங்கூட, உன் கணவனைப் பொருத்தமட்டில் இந்த விஷயம் மிக முக்கியமானதாகும். திருமணம் என்பது ஒரு நச்சுப் பிடித்த வேலை! 'திருமணமாகிப் பாழாகாதே' என்று

சொல்லப்படுவதுபோல, அது தானே முடிவாகிவிடும், ஆனால் கட்சி என்றாலோ, அந்தச் சொல்லிலேயே இனிய இசை இருக்கிறது... ஆமாம் இசை இருக்கிறது... ஆனால் உன்னால் புரிந்து கொள்ள முடியாது. கட்சியின் கோட்பாடுகளையும் விவாதங்களையும் உன்னால் புரிந்து கொள்ள முடியாது. கோஸ் சூப்பில் மாட்டிக்கொண்ட கரப்பான் பூச்சி மாதிரித்தான் உன்னுடைய நிலை இருக்கும். உன்னோடு பேசி எனக்கென்ன பயன்? ஆவிதான் வீணாகிறது. சுருங்கச் சொன்னால், கட்சி ஒரு மிகப்பெரும் விஷயமாகும். அதுதான் என் கடைசி வார்த்தையுங்கூட, இப்பொழுது தெளிவாகிவிட்டதா?''

''சரி தான் மக்கார். பத்து வண்டி களிமண் கொண்டு வரவேண்டும் என்பதைச் சொல்ல மறந்துவிடாதே.''

''ஆகட்டும். செய்கிறேன்.''

''சுவருக்குக் கொஞ்சம் வெண் சுண்ணாம்புக் கட்டியும் வேண்டும்.''

''ஆகட்டும். செய்கிறேன்.''

''ஒரு ஜோடிக் குதிரைகளும், களிமண்ணை மிதிக்க சில பையன்களும் தேவை.''

''ரஸ்தோவ் என்ற நகரத்திலிருந்து ஒரு டஜன் சுவர் பூச்சுக்காரர்களையும் கூட்டி வந்துவிட வேண்டுமா?'' என்று குத்தலாக ஒரு வெட்டுக் கேள்வியைப் போட்டுக்கொண்டே, சவரக் கத்தியைத் தூக்கிப்பிடித்தவாறு ஓநாய் மாதிரி உடலைத் திருகி வளைத்து அவளிருந்த பக்கம் திரும்பினான்.

''பூச்சு வேலையை நாங்களே கவனித்துக் கொள்கிறோம். ஆனால் குதிரைகளைக் கொடுக்காவிட்டால், ஞாயிற்றுக் கிழமைக்குள்ளாக எங்களால் சமாளிக்க முடியாது.''

மக்கார் பெருமூச்சுவிட்டான். ''மற்றவர்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்வதில், பெண்களாகிய நீங்கள் அதிசாமர்த்தியசாலிகள் தான்... சரி, உங்களுக்குக் குதிரைகளைக் கொடுத்து விடுகிறோம். பிறவற்றையும் கொடுத்து விடுகிறோம். ஆனால், உனக்குப் புண்ணியமாகப் போகட்டும், தயவு செய்து போய்விடு! இன்றைக்கு ஏற்கெனவே இரு முறை, உன்னால் என் முகத்தை வெட்டிக்கொண்டேன்! இன்னும் இரு நிமிடங்கள் உங்களோடு தொடர்ந்து

பேசிக்கொண்டிருந்தால், முகத்தில் சதையே இல்லாமல் போய்விடும். தெளிவாகிவிட்டதா?''

மக்காரின் பேச்சில் தொனித்த கெஞ்சல் முறையைக் கேட்டு மய்தானிக்கவின் மனைவி அவசரமாகத் திரும்பி, ''சரி, போய் வருகிறேன். வணக்கம்!'' என்று கூறி அறையை விட்டு அகன்றாள். ஆனால் ஒரு விநாடி கழித்து மீண்டும் கதவு திறந்தது.

''மன்னிக்கணும் மக்கார்...''

''இன்னும் என்ன வேண்டும்?'' என்று கேட்ட மக்காரின் குரலில் எரிச்சல் தொனித்தது.

''உனக்கு மிக்க நன்றி சொல்ல மறந்துவிட்டேன்.''

கதவு ஓசையுடன் மூடியது. மக்கார் கன்னக் கதுப்புக்குள் கத்தியைப் பதித்து வெட்டிக்கொண்டான்.

''முட்டாளே, உனக்கும், உங்களுக்கும் நன்றி. எனக்கு நன்றி எதற்காக!'' என்று சத்தம் போட்டான் மக்கார். பின்னர் கொஞ்ச நேரம் கழித்துச் சிரித்தான்.

இச் சிறு நிகழ்ச்சி, எப்பொழுதுமே கடுகடுத்த முகத்துடன் இருக்கும் மக்காரைக்கூட மகிழ்ச்சியடைய வைத்துவிட்டது. நேரங்கெட்ட நேரத்தில் அதிகாலையில் வந்து தன்னைச் சந்தித்த அந்தப் பெண் ''உனக்கு மிக்க நன்றி'' என்று சொல்லிவிட்டுப்போன நிகழ்ச்சியை நினைத்துச் சிரித்தான்.

* * *

இப்போது போல காற்று அடிக்காமல் நல்ல வெயிலடித்துக் கொண்டிருக்கும் அருமையான காலநிலை மிக அரிதாகத்தான் அமையும். சனிக்கிழமை மாலைக்குள்ளாக, பள்ளியின் வெளிச்சுவர் வெள்ள வெளேரென்று மின்னிற்று. உட்புறத்தளமும், உடைந்த செங்கற்களால் சுரண்டித் தேய்க்கப்பட்டிருந்தால், உள்ளே நுழைவோர் கால்விரலை ஊன்றி நடக்க வேண்டும் என்பது போன்ற எண்ணத்தைத் தூண்டும் அளவுக்கு பளபளப்புடன் சுத்தமாக இருந்தது.

கட்சிக் கூட்டம் மாலை ஆறு மணிக்குத் தொடங்குவதாக இருந்தும் கூட, மாலை நான்கு மணிக்கே நூற்றி ஐம்பது பேருக்கு மேல் பள்ளியில் கூடிவிட்டார்கள். சன்னல்கள், கதவுகள் எல்லாமே திறந்து வைக்கப்பட்டிருந்தும்கூட, ஆண்களின் உடம்பிலிருந்து வியர்வை நாற்றமும்,

வீட்டில் தயாரித்த புகையிலை நெடியும், முழுப்பக்குவம் செய்யப்படாத மது வாசனைபோல வீசின. விலை குறைந்த முகப்பூச்சுக்களின் வாசனையும், மட்டரக சோப்பின் மணமும், கூட்டமாகத் திரண்டிருந்த இளமங்கைகள், நடுத்தர வயதுப் பெண்களிடமிருந்து குப்பென்று வீசி அந்த அறை முழுவதையும் நிறைத்தது.

கிரெமியாச்சி லோக் கிராமத்தில் புதிய உறுப்பினர்களைக் கட்சியில் சேர்ப்பது குறித்து முதன் முறையாக வெளிப்படையாகக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. புதிய உறுப்பினர்கள் அனைவருமே உண்மையான கிராம மக்கள். ஆகவே கிராமத்து மக்கள் திரண்டிருந்தனர். படுக்கையில் கிடந்தவர்களையும், குழந்தைகளையும் தவிர, கிராமமே திரண்டுவந்து பள்ளிக்குள்ளோ, பள்ளிக்கூடத்தைச் சுற்றியோ மாலை ஆறு மணிக்குள் உட்கார்ந்து விட்டனர். வயல் வெளிகளிலிருந்து முகாம்கள் காலியாகி வெறிச்சோடிக் கிடந்தன. எல்லாருமே கிராமத்துக்கு வந்துவிட வேண்டி இருந்தது. ஊர் மந்தைக்காரரான அகேய் தாத்தாகூட, மந்தைகளைத் தன் பையனின் கண்காணிப்பில் விட்டுவிட்டு தனது ஞாயிற்றுக்கிழமைக்கான சிறந்த உடைகளை அணிந்து கொண்டு, மேல் பக்கம் பலூன் மாதிரி ஊதிப்புடைத்த, அலங்கோலமாகத் தைக்கப்பட்ட காலணிகளையும் போட்டுக் கொண்டு, கிராமத்துப் பள்ளிக்கூடத்துக்கு வந்துவிட்டான். அவன் தனது தாடியை நன்றாக சீவி வாரி விட்டிருந்தான். அவன் காலணிகளைப் போட்டுக்கொண்டு, மிகவும் எடுப்புடன் வந்திருந்த காட்சியையும், கையில் சாட்டையில்லாமல், தோளில் கான்வாஸ் பையும் இல்லாமல் வந்திருந்த காட்சியையும் பார்த்து, முதிய கஸாக்குகள் யாரோ அயலவர் என அடையாளம் காண முடியாமல் திகைத்து வரவேற்றனர்.

சரியாக ஆறு மணிக்கு மக்கார் நகூல்னவ், சிவப்புப் பட்டு விரிப்பு விரிக்கப்பட்ட மேசையருகில் எழுந்து நின்று, பெஞ்சுகளில் நெருக்கியடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த கூட்டுப்பண்ணை விவசாயிகளையும், நடைவெளியில் நின்று கொண்டிருந்தோரையும் உற்றுநோக்கினான். குசுகுசுப் பேச்சும், பெண்களின் சிலிர்க்கும் சிரிப்பொலியும், பின் பகுதியில் இன்னும் முற்றாக அடங்கிவிடவில்லை. மக்கார் தனது கையை உயர்த்தினான்.

''இப்பொழுது, கொஞ்சம் உட்காருகிறீர்களா? அதோ! உரத்த குரலில் பேசிக்கொண்டிருக்கும் பெண்களே குறிப்பாக உங்களைத்தான் சொல்கிறேன்! தயவுசெய்து எவ்வளவு அமைதியாக இருக்க முடியுமோ, அவ்வளவு அமைதியாக இருங்கள். அனைத்து சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின், கிரெமியாச்சி கிளையின் பகிரங்கக்கூட்டம் தொடங்குகிறது எனஅறிவிக்கிறேன். முதலில் உரை நிகழ்த்துபவர் தோழர் நகூல்னவ்தான். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் நான்தான். நமது நிகழ்ச்சி நிரலில் ஒரே ஒரு விஷயம் தான் உள்ளது. கட்சிக்கு புதிய அங்கத்தினர்களைச் சேர்ப்பது. நமக்குச் சில விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று தோழர் மய்தானிக்கவினுடையது. நீங்கள் உங்களையே அறிந்திருப்பது போல அவனையும் அறிவீர்கள். ஆனால் கட்சி விதிப்படி நாம் இதை விவாதித்தாக வேண்டும். எனவே, தோழர்களே, குடிமக்களே, நீங்கள் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, இல்லையெனினும் சரி, தோழர் கொந்திராத் பற்றி என்ன கருதுகிறீர்கள்? என்ன நினைக்கிறீர்கள்? யார் 'ஆதரவாகவும்?' யார் 'எதிராகவும்' நினைக்கிறீர்கள் என்பது குறித்துப் பேசலாம். எதிர்த்துப் பேசினால் அது மறுப்பாகக் கருதப்படும். 'மய்தானிக்கவுக்கு எதிராக நான் மறுத்துரைக்கிறேன்' என்று நீங்கள் சொல்ல முடியும். பின்னர் அவன் கட்சி உறுப்பினராவதற்குத் தகுதியற்றவன் என்பதற்கான காரணங்களைக் கூறவேண்டும். நமக்கு பெருங்கேடு தரும் ஆதாரங்கள் வேண்டும். நாம் அப்படிப்பட்டவற்றைத் தான் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வோம். ஆதாரமில்லாமல், ஒரு மனிதன்மீது வேண்டுமென்றே அவதூறுச் சேற்றை அள்ளி வீசினால், அது நேரத்தை வீணடிக்கும் செயலாகும். அப்படிப்பட்ட உளறல்களை நாம் கவனிக்கப் போவதில்லை. தொடக்கமாக நான் மய்தானிக்கவின் விண்ணப்பத்தை வாசிக்கிறேன். அதையடுத்து அவன் தனது சொந்த வாழ்க்கை விவரங்களை நமக்குக் கூறுவான் அதாவது தனது பழைய, இன்றைய, வருங்கால வாழ்வை விவரிப்பான். அதற்குப் பிறகு உங்களால் முடிந்த அளவுக்கு, மய்தானிக்கவ் தொடர்பானவற்றைப் பேசலாம். என்ன செய்ய வேண்டும் என்பது தெளிவாகிவிட்டதா? ஆமாம். மிகவும் நல்லது.

நான் தொடருகிறேன். அதாவது விண்ணப்பத்தைப் படிக்கிறேன்.''

விண்ணப்பத்தை நகூல்னவ் வாசித்துவிட்டு, அதை மேசைமீது வைத்து தனது கரிய கையை அதன்மேல் வைத்தான். பள்ளிக் குறிப்பேட்டிலிருந்து கிழித்து ஏழுதப்பட்ட, அந்தத் தாள் கொந்திராத் மய்தானிக்கவுக்கு எத்தனை தூங்காத இரவுகளையும், வேதனை தந்த சிந்தனையையும் கொடுத்தன தெரியுமா?.. மேசையருகிலும், தனக்கருகிலும், உர்ரென்று உட்கார்ந்திருந்த கம்யூனிஸ்டுகளையும் பார்த்தபொழுது, மய்தானிக்கவின் முகமே துளித்துளியாக வியர்த்து, மழை நீர் சிதறியடிக்கப்பட்ட முகம் போல காட்சியளித்தது.

கடுகடுத்த முகத்துடனும், சிரித்துக்கொண்டும், மிகச் சிரமப்பட்டு வார்த்தைகளைத் தேடி எடுத்து தட்டுத் தடுமாறித் தன் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லி முடித்தான் மய்தானிக்கவ். ஓரபிஷ்கினால் பொறுக்க முடியவில்லை.

''எதற்காக இப்படி வாய்க்குள்ளேயே முணகிக்கொண்டிருக்கிறாய்? எதை மென்றுகொண்டிருக்கிறாய்? நீ அருமையான வாழ்க்கை வாழ்ந்துவிட்டாய். அதை இன்னும் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்லக் கூடாதா கொந்திராத்?'' என்று கத்தினான்.

''நான் சொல்லவேண்டியதெல்லாம் இவ்வளவுதான்'' என்று மெதுவாகக் கூறிவிட்டு, தோள்களை உலுப்பிக் கொண்டு உட்கார்ந்தான் மய்தானிக்கவ்.

நல்ல கணகணப்பான குடிசைக்குள்ளே இருந்துவிட்டு மேலங்கிக்கூடப் போட்டுக் கொள்ளாமல், நடுக்கும் குளிருக்குள் நுழைந்துவிட்டவனைப் போன்ற உணர்வில் இருந்தான்...

சிறிது நேரங்கழித்து தவீதவ் எழுந்து நின்றான். அவன் சுருக்கமாக, மய்தானிக்கவைப் பாராட்டிப் பேசினான். கூட்டுப்பண்ணையில், மய்தானிக்கவின் கடும் உழைப்பு எவ்வாறு மற்றவர்கட்கு எடுத்துக்காட்டாகவும், உயிர்ப்பூட்டக் கூடியதாகவும் இருந்தது என்பதைக் கூறிவிட்டு, மிகவும் அழுத்தமான நம்பிக்கையுடன், ''இவன் நம் கட்சியில் உறுப்பினராக முழுக்க தகுதி பெற்றிருக்கிறான். அது தான் உண்மை!'' எனக் கூறினான்.

மேலும் பலர் மய்தானிக்கவைப் பாராட்டி, நற்பண்பு

களைப் புகழ்ந்து பேசினர். இடையிடையே, அவற்றை ஆதரிக்கும் வகையில் குரல்கள் கேட்டன.

''ஆமாம், அது சரிதான்!''

''அவன் நல்ல விவசாயி!''

''பண்ணையின் நலன்களில் அக்கறையும் உள்ளவன்.''

''பொதுமக்களின் பணத்தில் ஒரு கோபெக் வீணாக்க மாட்டான். அவ்வாறு செய்துவிட்டால், அதற்குப் பதில் இரண்டு காசுகளைச் சேர்த்துக்கொடுப்பான்.''

''அவனுக்கெதிரான ஒரு குறையும் சொல்ல முடியாது, யாரும் நம்ப மாட்டார்கள்!''

உணர்ச்சியால் வெளிறிப்போன முகத்துடன், தன்னைப் பற்றிப் பலரும் பலபடப் பாராட்டிப் பேசியதைக் கேட்டுக் கொண்டே இருந்தான் கொந்திராத். அந்தக் கூட்டத்தில் ஒருமனதான கருத்தாக இது காணப் பட்டது. ஆனால் முற்றிலும் திடீரென்று ஷ்சுக்கார் தாத்தா எழுந்து குதித்து நின்றான்.

''அன்புக்குரிய குடிமக்களே கிழவிகளே! நான் மீண்டும் கொந்திராத்தை முழுக்க எதிர்க்கிறேன்! நான் மற்றவர் களைப் போன்றவன் அல்ல. நட்புறவில் எனக்கு நம்பிக்கை உண்டு, ஆனால் தீர்ப்புக்கூற அதைக் குறுக்கிட விடமாட் டேன். நான் அப்படிப்பட்ட ஆள்! நீங்கள் எல்லாருமே, கொந்திராத்தை மேலுலகத்தில் இருக்கும் புனித யோகி யாக வருணித்துக் கொண்டிருந்தீர்கள்! ஆனால் குடிமக் களே, உங்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நம் மைப் போன்றே பாவங்களைச் செய்யும் கொந்திராத் எப்படி புனித யோகியாக முடியும்?''

''தாத்தா, நீ வழக்கமாகச் செய்வது போல, விஷயங் களை போட்டுக் குழப்பத் தொடங்கிவிட்டாய். நாம் அவனை சொர்க்கத்தில் அநுமதிக்கவில்லை, கட்சியில் தான் சேர்த்துக்கொண்டிருக்கிறோம்'' என்று இன்னும் அமைதி யாகக் கூறி கிழவனைத் நிறுத்தினான் நகூல்னவ்.

ஆனால், ஷ்சுக்கார் தாத்தாவை, இப்படிப்பட்ட பதி லால் உட்காரவைக்கவோ, எதிர்த்துக் குற்றஞ்சாட்டவோ முடியுமா? ஒரு கண் முரட்டுச் செந்நிறக் கைக்குட்டையால் மூடிக்கட்டியிருக்க, பளபளக்கும் மறு கண்ணால் நகூல்ன வை முறைத்துப் பார்த்தான்.

''மக்கார், நீ அருமையான பையன். நல்லவர்களைக்

கசக்கிப் பிழிவதில் நீ ரொம்ப சாமர்த்தியசாலி! நீ ஓர் எண்ணெய்த் தொழிற்சாலையில் வேலை பார்க்க வேண்டியவன், சூரியகாந்திப் பூவைக் கசக்கி எண்ணெய் எடுக்கும் வேலை செய்ய வேண்டியவன்... எதற்காக ஒரு வார்த்தை கூடச் சொல்லவிடாமல் என் வாயை மூடப்பார்க்கிறாய்? நான் உன்னை எதிர்த்து, உனக்கு எதிராக ஒன்றும் சொல்லவில்லையே, இல்லையா? எனவே அமைதியாக இரு, விமரிசனம், சுயவிமரிசனத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று கட்சி சொல்கிறது. சுயவிமரிசனம் என்பதன் பொருள் என்ன?.. சொந்த வீட்டிலிருந்து தொடங்க வேண்டும் என்பதுதானே பொருள். அப்படி யென்றால் அதன் பொருள் என்ன? அதாவது, உன் சகத்தோழனை, எந்த இடத்தில் வேண்டுமானாலும், அது வலியெடுக்கும்வரை குத்து என்பதுதானே! பன்றிக்குட்டியின் மகனைக் கிள்ளிப்பிடுங்க வேண்டும்! அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை உப்பு வியர்வை கொட்டக் கொட்டக் கிள்ள வேண்டும். சுயவிமரிசனம் என்றால், இதுதான் பொருள் என்பதாக நான் புரிந்து வைத்திருக்கிறேன்.''

''தாத்தா, போதும்!'' என்று சொல்லி நகூல்னவ் உறுதியுடன் குறுக்கிட்டான். ''வார்த்தைகளை உன் விருப்பப்படியெல்லாம் திரித்துவளைத்துச் சொல்லாதே! சுயவிமரிசனம் என்றால், தன்னைத்தானே, உன்னை நீயே, விமரிசனம் செய்துகொள்வது என்று பொருள். கூட்டுப்பண்ணைக் கூட்டம் ஏதாவது நடக்கும் பொழுது நீ எழுந்து நின்று, நீ உன்னைப் பற்றி, எவ்வளவு வேண்டுமோ, எங்கு வேண்டுமோ, அவ்வளவுக்கு கிள்ளிக்கொள். ஆனால் இப்போது சும்மா உட்கார்ந்தால் போதும்.''

''இல்லை, நீயே சும்மா நிறுத்து, என் விமரிசனத்தைத் தடுத்து, என் தொண்டைக்குள்ளேயே அவற்றைத் தள்ளிவிடலாம் என முயற்சிக்காதே'' எனப் பொறுமையிழந்து உணர்ச்சி வசப்பட்ட ஷ்சுக்கார் தாத்தா, உச்சக் குரலில் கத்தினான். ''மக்கார் தம்பி, நீ வரவர ரொம்பக் கெட்டிக்காரனாகிக்கொண்டு வருகிறாய்! எதற்காக நான் என்னையே திட்டிக்கொள்ள வேண்டும்? சோவியத் ஆட்சியில் எல்லா முட்டாள்களுமே செத்துவிட்டார்கள்!.. கிழவர்கள் செத்துவிட்டார்கள், ஆனால் எண்ணமுடியாத, புதியவர்கள், பிறந்திருக்கிறார்களே! யாரும் இப்பொழுது அவர்

களை விதைப்பதில்லை, ஆனால், அவர்கள் தாங்களாகவே காற்றிலே பறந்து விதைகள் பரவுவது மாதிரி, பல்கிப் பெருகி வருவதால் யாராலும் அறுவடைகூடச் செய்ய முடிவதில்லை! உதாரணமாக, மக்கார், உன்னையேகூட எடுத்துக் கொள்ளேன்...''

''என்னை விட்டுவிடு, இப்பொழுது என்னைப் பற்றி நாம் விவாதம் நடத்தவில்லை'' என்று கண்டிப்புடன் சொன்னான் மக்கார். ''கொந்திராத் மய்தானிக்கவைப் பற்றித் தான் பேசவேண்டும். அதைப்பற்றிச் சொல்ல உனக்கு ஒன்றுமே இல்லையென்றால், நாகரீகமான மற்ற கிராமத்தார்களைப் போல, வாயை மூடிக்கொண்டு சும்மா உட்கார்.''

''ஓகோ, நீ மிகவும் நாகரீகமானவன், நான் இல்லையாக்கும்'' என்று வருத்தத்துடன் சொன்னான் ஷ்சுக்கார்.

இச் சமயத்தில் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது: ''பொறுப்புள்ள பெரிய தாத்தா! இந்தத் தள்ளாத வயதில் அந்தக் குழந்தையை எங்கிருந்து எடுத்தாய்? ஏன் ஒரு கண்ணால் மட்டுமே பார்க்கிறாய்? மறு கண் சிராய்த்து புடைத்திருப்பதேன்? வேலியில் ஏறி நின்று கூவும் சேவலைப் போல, மற்றவர்களைப் பற்றிக் கொக்கரிக்கிறாயே, உன்னைப் பற்றி மட்டும் வாயைத் திறக்காமல் மூடிக் கொள்கிறாய். தந்திரக்காரக் கிழமே சொல்லேன்!''

பள்ளிக்கூடமே அதிர்வது போல ஏழுந்த சிரிப்பொலி தவீதவ் பேச தனது இருப்பிடத்தை விட்டு எழுந்தவுடன் அடங்கியது. அவன் முகம் களையிழந்து இருந்தது. அவன் குரலில் கோபம் தொனித்தது: ''தோழர்களே, நாம் இங்கே வேடிக்கை விளையாட்டுக்காகக் கூடவில்லை. இது கட்சிக் கூட்டம், உண்மையாகத்தான்! யாராவது சிரிக்க விரும்பினால், ஊருக்கு வெளியே புல்வெளிக்குப் போய்விடலாம். தாத்தா, நீங்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றி மட்டும் பேசுகிறீர்களா? தொடர்ந்து கோமாளி வேலை செய்யப் போகிறீர்களா?''

ஷ்சுக்கார் தாத்தாவை, நாசூக்காகக் கொட்டுவது போல, தவீதவ் பேசியது இதுதான் முதல்தடவை. ஆகையால் தான் ஷ்சுக்கார் தாத்தா, உணர்ச்சி வசப்பட்டவனாய், சண்டைக்கு முன்னால் எகிறிக் குதித்து எழுந்து நிற்கும் கீரிப்பிள்ளை மாதிரி, பெஞ்சுக்கு அருகில் நிமிர்ந்து நின்றான். அவனது சிறிய தாடி கோபத்தால் துடித்தது.

''யார் கோமாளி? நானா? எனக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டு முட்டாள்தனமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் அந்த அரைவேக்காட்டு ஆளா? வெளிப்படையாக, ஒரு வார்த்தை சொல்லவிட மாட்டீர்கள் என்றால், இது என்ன பகிரங்கக் கூட்டம்? என்னை யார் என்று நினைக்கிறீர்கள்? என்னுடைய வாக்குரிமையைப் பறித்து விட்டீர்களா? நான் என்ன சொல்கிறேன் என்றால், கொந்திராத்துக்கு எதிராக எனது பெரும் மறுப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஆட்கள் நமது கட்சிக்குத் தேவையே இல்லை. நான் சொல்ல வேண்டியதெல்லாம் அவ்வளவுதான்!'' என்று கூறிமுடித்தான்.

''ஏன் வேண்டாம், தாத்தா?''என்று சிரித்துக் குலுங்கிக் கொண்டே கேட்டான் ரஸ்மியோத்னவ்.

''ஏனென்றால், கட்சியிலிருப்பதற்கு அவனுக்குத் தகுதியில்லை. ஏ வெள்ளைக் கண்ணா, எதற்காக என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்? தெருவில் நடந்து செல்லும்பொழுது, ஒரு பொத்தானைக் கண்டெடுத்துவிட்டால், பணக்காரனாகிவிடலாம் என நீ நினைக்கிறாயா? கட்சியில்இருப்பதற்கு கொந்திராத் ஏன் தகுதியற்றவன் என்பதை உன்னால் புரிந்து கொள்ள முடியாவிட்டால், நானே நேரடியாக விளக்கிச் சொல்லி விடுகிறேன். ஓட்ஸ் கொட்டி வைத்த தட்டில் நரநரவென்று அலகைப் போட்டு அலசும் பெரிய வாத்து மாதிரி எதற்காக என்னைக் கரித்துக் கொட்டுகிறாய்?.. மற்றவர்களைப் பற்றிப் பேசுவதில் நீங்கள் கெட்டிக்காரர்கள்தான். ஆனால் உங்கள் சங்கதி என்ன? கிராம சோவியத்துக்கு நீ தான் தலைவர். மிக முக்கியமான மனிதருங்கூட. இங்குள்ள பெரியவர்கள், சிறியவர்கள், அனைவருக்கும் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டியவன் நீ; ஆனால் நீ எப்படி நடந்து கொள்கிறாய்? வான்கோழிச் சேவல் மாதிரி முகம் நீலம் பூத்துப் போகும்வரை கூட்டத்தில் விழுந்து விழுந்து சிரிக்கிறாய்! எப்படிப்பட்ட தலைவரையா நீ? கொந்திராத்தின் தலைவிதி நூலிழையில் தொங்கிக்கொண்டிருக்கும் பொழுது சிரிக்கிறாயே! இதைப் பற்றிக் கொஞ்சம் பொறுமையாக யோசித்துப் பார். மிகவும் முனைப்பாக இருப்பது நீயா? நானா? நான் அகராதியில் படித்த அந்நிய மொழிச் சொற்களை எல்லாம் பயன்படுத்தக் கூடாது என்று மக்கார் தடை செய்துவிட்டான். இல்லை

யென்றால், அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினேன் என்றால், உன்னால் ஒன்றையுமே விளங்கிக்கொள்ள முடியாது! நான் மீண்டும் சொல்கிறேன், கொந்திராத் கட்சியில் சேருவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்கிறேன். ஏனெனில், அவனொரு சிறிய சொத்துடைமைக்காரன். செக்கில் போட்டு கசக்கினாலும்கூட அவன் மாறமாட்டான். என்ன கிடைக்கும் தெரியுமா? விஞ்ஞான ரீதியாகப் பேசினால், 'உமி' தான் மிஞ்சும். ஆனால், ஒருபோதும், ஒரு கம்யூனிஸ்டு மட்டும் கிடைக்க மாட்டான்!''

''தாத்தா, ஏன் என்னிடமிருந்து ஒரு கம்யூனிஸ்டைப் பெற முடியாது?'' என்று புண்பட்ட மய்தானிக்கவ் நடுங்கும் குரலில் கேட்டான்.

ஷ்சுக்கார் தாத்தா கண்களைத் தந்திரமாகச் சுழற்றிச் சொருகிக்கொண்டான்.

''ஏன், உனக்குத் தெரியாதோ?''

''எனக்கு தெரியாது. எனக்கும், மற்ற குடிமக்களுக்கும் நான் எப்படிக் கட்சியிலிருக்கத் தகுதியற்றவன் என்பதைத் தெளிவாக்கினால் நல்லது. ஆனால், உண்மையை, அப்பட்டமாக, அப்படியே சொன்னால் நல்லது, கயிறு மட்டும் நீ திரிக்க வேண்டாம்.''

''நான் எப்பொழுதுதாவது பொய் சொல்லி இருக்கிறேனா? எப்பொழுதாவது கயிறு திரித்திருக்கிறேனா?'' ஷ்சுக்கார் ஏக்கத்துடன் விட்ட பெருமூச்சு பள்ளி முழுவதும் கேட்டது. தலையையும் வெறுப்புடன் ஆட்டினான். ''எனது நீண்ட நெடும் வாழ்க்கை முழுவதும் மக்களுக்கு உண்மையைச் சொல்லிக்கொண்டே இருந்திருக்கிறேன். கொந்திராத் இதனால்தான் இந்த உலகில் ஒரு சிலர் என்மீது மரியாதை வைத்திருக்கிறார்கள். உன்னுடைய காலஞ்சென்ற தகப்பனார்கூட, 'ஷ்சுக்கார் பொய்க்காரன் என்றால், இந்த உலகில் உண்மை சொல்ல யார் இருக்கிறார்கள்?' என்று சொல்வது வழக்கம். என்மீது அவ்வளவு உயர்வான எண்ணம் வைத்து இருந்தார்! துரதிர்ஷ்டவசமாக அவர் இறந்துவிட்டார். இல்லையெனில் இங்கு நான் சொல்வதற்கு அவரே சாட்சியாக, சான்றாக இருந்திருப்பார். கடவுள் அவர் ஆன்மாவைச் சாந்தி அடையச் செய்யட்டும்!''

ஷ்சுக்கார் சிலுவைக் குறி போட்டுக்கொண்டான். கண்

ணீர் வடிக்கவும் போனான். ஆனால் திடீரென மனத்தை மாற்றிக்கொண்டான்.

''என்னைப் பற்றி, என்ன நினைக்கிறாய் என்பதை விளக்கிச் சொல். என் தந்தையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். எனக்கு எதிராக என்ன இருக்கிறது என்று சொல்லேன்'' என்று விடாப்பிடியாக வற்புறுத்தினான் கொந்திராத்.

இதை விரும்பாது அதிகரித்த முணுமுணுப்பின் சில வார்த்தைகளைக் கேட்டபொழுது, அவை ஷ்சுக்காரைத் தான் குறிப்பிடுகின்றன என்பது தெரிந்தது. ஆனால் அது ஷ்சுக்காருக்கு எவ்வித தடுமாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை. பெரிய தேன் கூட்டிலிருந்து கண்டபடி பறந்து கொண்டு, 'உஷ்ஷ்' என்று தேனீக்கள் ரீங்காரமிட்டுப் பறந் தாலும், அதைப் பொருட்படுத்தாமல் நடந்து செல்லும், பழக்கமான தேனீ வளர்ப்பாளனைப்போல, இந்த முணு முணுப்பையும், ரகளையையும் ஷ்சுக்கார் கவனிக்கவே இல்லை. தனது கையை உயரத் தூக்கிக்கொண்டு, ''ஒரு நிமி டம் பொறுங்கள். விஷயங்களை விளக்கிச் சொல்கிறேன். குடிமக்களே, அன்புக்கிழவிகளே, உங்களது பேச்சை நிறுத் துங்கள். ஏனெனில் நீங்கள் என்ன பேசிய போதிலும், எனது சிந்தனைத் தொடர் ஓட்டம் தடைபடப்போவதில்லை. ஏன் சற்று முன்னர் பின்புறத்தில் ஏதோ ஒன்று என் மீது சீறிற்று. அது பாம்புபோலக் கேட்டது. 'இந்தக் கிழப்பிசாசுக்குச் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. அதனால் தான்...' என்று சொல்லக் கேட்டேன். ஆனால், அவ்வாறு எந்தப் பாம்பு சொல்லியது என்பது எனக்குத் தெரியும். அன்புக்குரிய குடி மக்களே, கிழவிகளே, கீழுலகத்திலிருந்து அகஃபோன் துப்த்ஸோவ்தான் அப்படிப் பாம்பைப் போலச் சீறினான்! எனது நினைவைக் குழப்பி, அவனைப்பற்றி ஒன்றும் சொல் லாமல் விடட்டும் என அவன் விரும்புகிறான். ஆனால், இதனால் எல்லாம் அவன் என்னுடமிருந்து எவ்வித சலு கைகளையும் பெற முடியாது. அதற்குத் தவறான ஆளைத் தேர்ந்தெடுத்துவிட்டான்! வீட்டிற்குள்ளே ஊர்ந்து நுழைந்து பாலையோ, மதுவையோ குடிக்க முயலும் பாம்பைப் போல, அகஃபோனும் கட்சிக்குள்ளே நுழைய முயல்கிறான். ஆனால், இன்னும் ஒரு நிமிடத்துக்குள்ளாக, நான் இப் பொழுது கொந்திராத்துக்கு எதிராக கிளப்பிக்கொண்டிருக்

கும் எதிர்ப்பைக் காட்டிலும் கடுமையான எதிர்ப்பைக் கிளப்பப் போகிறேன். அகஃபோனைப்பற்றியும் ஓரிரண்டு விஷயங்கள் எனக்குத் தெரியும். அதைக் கேட்டவுடன் செத்து நடுங்குவது போல உங்களைத் திகைக்க வைக்கப் போகிறேன்'' என்றான் ஷ்சுக்கார்.

காலி கண்ணாடிக் குவளையில் பென்சிலால் தட்டிக் கொண்டே நகூல்னவ் குறுக்கிட்டு, ''கிழவனே, உனது குழப்ப மான சிந்தனையில், நீ சிக்கலாக மாட்டியிருக்கிறாய்! எனவே இப்பொழுது முடித்துவிடுகிறாயா தாத்தா! இந்தக் கூட்டத்தின் நேரத்தையெல்லாம் நீயே எடுத்துக்கொண்டு விட்டாய்; கொஞ்சமாவது மனிதனுக்கு மனச்சாட்சி வேண் டாமா?'' என்றான் மக்கார்.

''மீண்டும் என் வாயை அடைக்கப் பார்க்கிறாயா, மக் கார்?'' என்று கண்ணீர் விடுவது போல் கதறினான் ஷ்சுக் கார். ''நீ கட்சிச் செயலாளராக இருப்பதால், என் மீது உட் காரலாம் என்று நினைக்கிறாயா? உன்னால் முடியாது! ஒரு கிழ மனிதனைச் சொல்லவிடாமல் தடை செய்யக்கூடிய விதி எதுவுமே கட்சியில் இல்லையே! எனக்கு அது தெரியும். எனக்கு மனச்சாட்சியில்லை என்று நீ எப்படிச் சொல்ல லாம்? இப்படி எவ்வாறு சொல்ல முடிந்தது? உன்னை விட்டு லூஷ்கா பாவாடையைச் சுருட்டி மடக்கிக் கொண்டு, புறப் படுவதற்கு முன்னால், அவளுக்கு மனச்சாட்சியை நீ கொடுத் திருக்க வேண்டும். அவள் எங்கு போனாளென்றே யாருக் கும் தெரியாது. என் வீட்டுக் கிழவி கூட, எனக்கு மனச்சாட்சி இல்லை என்று சொன்னதில்லை. மக்கார் தம்பி, இது எனக்கு அழிக்க முடியாத கேவலம்!''

ஷ்சுக்கார் தனது புனிதமான கண்ணீரைக் கடைசியாகச் சிந்தினான். சட்டை நுனியால் துடைத்துவிட்டு, மீண்டும் பழைய ஆர்வத்துடன் தொடங்கினான்.

''மனத்தில் உள்ளதை மறைக்காமல் பேசுகிற ஆள் நான். அடுத்த கட்சிக்கூட்டத்தில் உன் வாலைப் பிடித்து முறுக்கப் போகிறேன், மக்கார்! அதை முறுக்குகிற முறுக் கில் நீ என்னை விட்டு நெளியக்கூட முடியாது! நீ தவறான ஆளைத் தேர்ந்தெடுத்துவிட்டாய். ஆத்திரமூட்டப்பட்டால், நான் ரொம்பப் பொல்லாதவன்! இது யாருக்காவது தெரிந் திருக்க வேண்டும். நாம் மிக நெருங்கிய நண்பர்கள். அதை இந்தக் கிராமமே அறியும். நீ என்னுடைய விமரிசனம் சுய

விமரிசனம் என்ற பாதையை விட்டு விலகி நிற்பது நல்லது! நான் யாரையும் நழுவ விடுவது இல்லை. கட்சிக்குள் கழிசடைகளை எல்லாம் உள்ளே நுழையவிட நினைப்பவர்களே, இவற்றை மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்!''

தனது இடது புருவத்தை உயர்த்தியவாறு தவீதவின் காதில், ''இவனை வெளியில் தள்ளுவோமா? இவன் இந்தக் கூட்டத்தைக் கெடுத்துவிடுவான்! இவனை ஏதாவது ஒரு வேலையாக இன்றைக்கு அனுப்பியிருக்கக் கூடாதா? காதுக்குள் ஈ புகுந்து கொண்ட ஆள் மாதிரி கத்திக்கொண்டே இருப்பான். இவன் பேச்சை முடிக்கவே மாட்டான்...'' என்றான் மக்கார்.

ஆனால், தவீதவோ ஒரு கையால் செய்தித்தாளைப் பிடித்து முகத்தை மூடிக்கொண்டு, மறு கையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டிருந்தான். சிரிப்பால் பேச முடியாமலிருந்தவன், தலையை மட்டும் ஆட்டினான். கடும் வெறுப்புடன் தோள்களை நெறித்துக்கொண்டு, நகூல்னவ், ஷ்சுக்காரைக் கோபத்துடன் வெறித்து நோக்கினான். கிழவனோ, இன்னும் விடாமல் பேசிக்கொண்டே இருந்தான். அவன் பேசிய வேகத்தில் மூச்சுக்கூடத் திணறிற்று.

''கொந்திராத், இது பகிரங்கக் கூட்டமாக இருப்பதால், நீ ஒளிவுமறைவின்றி திறந்து பேச வேண்டும். நீ கூட்டுப் பண்ணையில் சேர்ந்து, உனது காளைகளை அங்கே ஒப்படைக்க இழுத்துச்சென்ற பொழுது, நீ தேம்பித் தேம்பி அழுதாயா? இல்லையா?''

''இந்தப் பிரச்சினைக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை!'' என்று உஷக்கோவ் சத்தம் போட்டான்.

''இது அர்த்தமற்ற கேள்வி! எதற்காக ஓட்டை உடைசலையெல்லாம் கிளறிக்கொண்டிருக்கிறாய்?'' என்று உஸ்தீன் ரிகாலின் அவனை ஆதரித்துப் பேசினான்.

''இது அர்த்தமற்ற கேள்வி அல்ல! நான் குப்பை கூளங்களைக் கிளறவில்லை, நான் உண்மையைக் கேட்கிறேன்! சமாதானத் தூதுவர்களே, நீங்கள் வாயை மூடலாம்!'' என்று ஷ்சுக்கார் தாத்தா உறுமினான். தான் பேசுவது பிறருக்குக் கேட்க வேண்டுமென்ற முயற்சியில் அவனது முகமே சிவந்துவிட்டது.

மீண்டும் அமைதி நிலைநாட்டப்பட்டவுடன், மிகவும் சாந்தமாக, குத்தலான தொனியில், ''உனக்கு அது நினை

வில் இல்லாமலிருக்கலாம், கொந்திராத். ஆனால் எனக்கு நினைவிருக்கிறது. நீ பொதுமந்தைக்கு, உன்னுடைய மாடு களை ஓட்டிச்சென்றது எனக்கு நினைவு இருக்கிறது. எப் படி ஓட்டிச் சென்றாய்? உன் கண்களெல்லாம் ஏன் கை முட்டியளவு வீங்கிவிட்டது? சரியான முயல்கண் மாதிரி அல்லது நன்றாகத் வீங்கி எழுந்த கிழட்டு நாயின் கண்கள் மாதிரித்தான் அன்றைக்கு உன் கண்கள் இருந்தன. பாதிரி யாரிடம் ஒப்புதல் சாட்சி கொடுப்பது போல என்னிடம் சொல்லிவிடு. அன்று அவ்வாறு நடந்ததா? இல்லையா?''

மய்தானிக்கவ் எழுந்து நின்றான். சட்டையை தடு மாற்றத்தோடு இழுத்துவிட்டுக்கொண்டான். ஷ்சுக்காரை நீர் மல்கிய கண்களுடன் பார்த்தான். ஆனால் மிகவும் உறுதி யான குரலில், நிதானமாக நிறுத்திப் பதில் சொன்னான்: ''ஆமாம்! அது நடந்தது. நான் அழவில்லை என்று பாசாங்கு செய்யமாட்டேன். அவற்றை விட்டுப்பிரிவது எனக்கு வருத்த மாகத்தான் இருந்தது. அந்த மாடுகள் என் தாய் தந்தை யர் விட்டுச்சென்ற சொத்தல்ல. அது, என் வியர்வையைச் சிந்தி வாங்கப்பட்ட மாடுகள்! அது அவ்வளவு சுலபமான காரியமா? ஆனால் அதுவும்கூட கடந்த கால சமாச்சாரம். நான் கடந்த காலத்தில் அழுது சிந்திய கண்ணீரால், கட் சிக்கு இப்போது என்ன ஆபத்து, வந்து விடும், தாத்தா?'' என்று கேட்டான்.

''என்ன கெடுதலா?'' என்று ஷ்சுக்கார் வெறுப்புடன் பொறுமினான். ''தம்பி, அந்தக் காளை மாடுகளோடு நீ எங்கே போனாய்? நீ, கண்ணே, சோஷலிஸத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாய். ஆமாம், அதை நோக்கித்தான் போனாய்! சோஷலிஸத்துக்கு அடுத்து நாம் எங்கே போவோம்? அடுத்து முழுமையான கம்யூனிஸத்தை நோக் கிப் போவோம். அடுத்து அது தான், நான் நேரடியாகச் சொல்லிவிட்டேன்! நான் மக்கார் நகூல்னவ் வீட்டிலே வளர்ந்தவன்—நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள் என்பதை இங்குள்ள அனைவரும் அறிவீர்கள். அங்கு நான் ஏராளமான அறிவைச் சேகரித்துக் கொண்டேன். என்னால் முடிந்த அளவு சேர்த்துக்கொண்டேன். இரவு நேரங்களில் நான் பல்வேறு கனத்த புத்தகங்களைப் படிப்பேன். படமே இல்லாத கடினமான புத்தகங்கள் அல்லது அகராதியைப்

படித்து, அதிலுள்ள வார்த்தைகளை எல்லாம் மனத்தில் வைத்துக்கொள்ள விரும்புவேன். ஆனால் என் முதுமை என்னைக் காலைவாரி விடுகிறது! ஓட்டைப் பைச் சட்டையைப் போட்டுக்கொண்டவன் கதையாகிவிட்டது. எதைப் போட்டாலும் அவை எல்லாமே ஒழுகி விழுந்துவிடும்! ஆனால் சிறிய புத்தகம் ஏதாவது அகப்பட்டால் கைநழுவ விடுவதே இல்லை! அதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் நினைவில் வைத்துக்கொள்வேன்! நான் எப்படி ஆள் என்று தெரியுமா? படிக்கத் தொடங்கிவிட்டால் அவ்வளவு தான்! நான் இங்கு பல விளக்க நூல்களைப் படித்திருக்கிறேன். நிச்சயமாகச் சொல்கிறேன். நான் இங்குள்ள யாருடனும் விவாதிக்கத் தயார். சோஷலிஸத்துக்கு அடுத்து கம்யூனிஸம்தான் வரும். இதை நான் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்! ஆனால் தம்பி கொந்திராத், எனக்கு அங்கேதான் சந்தேகம் வருகிறது... நீ சோஷலிஸத்துக்குள் நுழையும்போதே, கண்ணீரைச் சிந்திக்கொண்டே உள்ளே போனாய். கம்யூனிஸத்துக்குள் எப்படி நுழையப் போகிறாய்? கடவுள் இருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு உறுதியாக, நீ கண்ணீரில்தான் நீந்திச் செல்வாய். இதுதான் நடக்கும்! என்னால் இப்பொழுதே அதைப் பார்க்க முடிகிறது.எனவேதான் குடிமக்களே, அன்புக் கிழவிகளே! இப்படிப்பட்ட அழுமூஞ்சிக் குழந்தையால் கட்சிக்கு என்ன லாபம் என்று கேட்கிறேன்?''

கிழவன் கடகடவென்று சிரித்துக் கொண்டு, தனது பொக்கை வாயை ஒரு கையால் மூடிக்கொண்டான்.

''இப்படிப்பட்ட துடிதுடிப்பில்லாத பேர்வழிகளை என்னால் சகிக்கவும் தாங்கிக் கொள்ளவும் முடியாது! நிச்சயமாக கட்சியில் அநுமதிக்க முடியாது. இப்படிப்பட்ட அழுமூஞ்சிகளால் கட்சிக்கு என்ன லாபம்? இவர்கள் மூஞ்சியைத் தொங்கப்போட்டுக்கொண்டு கட்சியில் உள்ள நல்லவர்களையும் கெடுத்து, கட்சி விதிகளையும் பாழாக்கி விடுவார்கள். அப்படியானால், பேசாமடந்தை தெமீதையும் ஏன் கட்சியில் சேர்த்துக்கொள்ளக் கூடாது? கட்சி அணிகள் மத்தியில் சாவின் அமைதியைக் கொண்டுவரக் கூடிய ஓர் ஆள் இருக்கிறான்! நான் பிறந்த நாளிலிருந்து அவனைக் காட்டிலும் கடுகடுப்பாக இருக்கும் பேர்வழியைப் பார்த்ததே இல்லை! நாம் கட்சியில் மகிழ்ச்சியானவர்களை, என்

போன்றவர்களைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கருது கிறேன். ஆனால் இங்கோ எல்லாக் கழிசடைகளையும் போட்டு நிரப்புகிறார்கள். இவர்களால் என்ன பயன்? உதார ணமாக மக்காரை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் பிறந்த நாளிலிருந்து, ஏதோ, அடுப்பில் வைக்கும் குறட்டியை 1918 இல் விழுங்கிவிட்டவனைப் போலவும், சதுப்புநிலக் காட் டில் நீட்டி நிமிர்ந்து நடந்து திரியும் நாரை மாதிரியும் நடந்து திரிகிறான். ஒரு கிண்டலோ, ஒரு சிறு வேடிக்கைக் கதையோ அவனுடமிருந்து கிடைக்குமா? சோகமும், கவ லையும், ஒரு பெரும் வடிவமெடுத்து, கால் சட்டைகளை மாட்டிக் கொண்டு திரிவதுபோலத்தான் மக்கார் இருக் கிறான்!'' என்றான் ஷ்சுக்கார்.

''தாத்தா, என்னைப் பற்றிப் பேச வேண்டாம். என் னுடைய குணநலன் பற்றிய பரிசீலனையில் இறங்க வேண் டாம். இல்லையெனில் நான் நடவடிக்கை எடுக்க நேரி டும்'' என்று கண்டிப்பாக எச்சரித்தான் நகூல்னவ்.

ஆனால் கிழவனோ விட்டபாடில்லாது சிரித்துக் கொண்டே, தானே தனது பேச்சில் லயித்தவனாய், தொ டர்ந்து பொரிந்து தள்ளினான்: ''நான் உன்னைப் பற்றி துளி கூட பேசவில்லை! இப்பொழுது கொந்திராத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இவனை எப்படியும் மதித்துக்கொள்ளுங்கள், குதிரையில் சவாரி செய்வது போல பென்சிலை வைத்துக் கொண்டு சவாரி நடத்திக்கொண்டிருக்கிறான். எதையாவது எழுதிக்கொண்டும், எண்ணிக்கொண்டுமே இருக்கிறான். இந்த வேலையைச் செய்ய வேறு ஆளே இல்லை என்ற நினைப்புப் போலும். இவற்றையெல்லாம் மேலும் கீழுமா கத் தெளிவாக எழுதிக்கொடுக்க மாஸ்கோவில் திறமை மிக்க அறிவாளிகள் இருக்கவே இருக்கிறார்கள். இவனைப் போன்ற ஆட்கள் எதற்காக வீணாக உடம்பை அலட்டிக் கொள்ள வேண்டும்? மாட்டு வாலை முறுக்கவேண்டியது தானே இவனுடைய வேலை. அதைவிட்டுவிட்டு, மாஸ்கோ வில் உள்ள புத்திசாலிகள் செய்கிற காரியத்தில்போய் குள றுபடி பண்ணுவானேன்... குடிமக்களே, அன்புக் கிழவிகளே, என்னைக் கேட்டால், அவனுடைய மூளை உணர்வின்மை காரணமாகத்தான் இதைச் செய்கிறான் என்று நான் சொல் வேன். கொந்திராத்துக்கு இன்னும் அரசியல் வளர்ச்சி போதாத இந்த நிலையில், கட்சிக்குள் சேர வேண்டும்

என்று அவசரப்படாமல், வீட்டில் உட்கார்ந்து அமைதியாக தன்னைத் தானே வளர்த்துக்கொள்வது நல்லது. கொந்திராத் என்மீது எரிந்து விழலாம். ஆனால் என் எதிர்ப்பைத் தெட்டத் தெளிவாக்கி விட்டேன். அவனுக்கெதிராக என் மறுப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்!''

இந்த சமயத்தில், பக்கத்து வகுப்பறையிலிருந்து வார்யா ஹர்லாமவாவின் குரல் வருவதை தவீதவ் கேட்டான். அவளைப் பார்த்து நெடுநாட்களாகிவிட்டது. அவளது இனிமையான குரலைக் கேட்டும் நாட்கள் பலவாகிவிட்டன...

''நான் பேசலாமா?''

''நாங்கள் எல்லாம் பார்ப்பது போல, முன்னால் வா'' என்று ஆலோசனை சொன்னான் நகூல்னவ்.

நெருக்கியடித்துக் கொண்டிருந்த கூட்டத்தில் துணிச்சலாக முண்டியடித்துக்கொண்டு முன்னால் மேசையருகில் வந்து வார்யா நின்றாள். வெயிலில் கன்றிப்போன தனது கரத்தால், கூந்தலைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுக்கொண்டாள். தவீதவ் அவளை வியந்து பார்த்து முறுவலித்தான். அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. சில மாதங்களுக்கு உள்ளாகவே வார்யா அடையாளம் தெரியாதபடி மாறியிருந்தாள். அவள் இன்னும் பழைய பருவக் குமரியல்ல. இப்பொழுது அவள் ஓர் இளவயதுப் பெண். நீலநிறக் கைக் குட்டையால் தனது கற்றைக் குழலைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு, தலைநிமிர்ந்து நின்றாள். அவள் இப்பொழுது வளர்ந்து கம்பீரமாக இருந்தாள். அவள் மேசைப் பக்கம் பாதி திரும்பி நின்றாள். கூட்டத்தினரின் சப்தமும் பேச்சும் ஓயட்டும் என எதிர்ப்பார்த்து, பரந்த புல்வெளியை உற்று நோக்குகிறவள் போல கூட்டத்தினரைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அவளது கண்களின் கடைக் கோடிகள் துடித்தன. ''அப்பாடியோ! கடந்த மாரிக் காலத்திற்குப்பின், முழுப் பெண்ணாக வளர்ந்துவிட்டாளே!'' என்று தவீதவ் நினைத்துக்கொண்டான்.

பரபரப்பால் வார்யாவின் கண்கள் மின்னின. என்றைக்குமே முகத்தூளோ, முகப்பசையோ பார்த்தறியாத, அவளது வியர்த்துக்கொண்டிருந்த முகமும் பளபளத்தது. அவளையே பார்த்துக்கொண்டிருக்கும் பலரது பார்வையின் முன்னால், அவளது துணிச்சல் அவளை விட்டு அகன்றது.

அவளுடைய கை அவளையறியாமல் நடுக்கத்துடன் அவளது கைக் குட்டையை இழுத்தன. முகமும் சிவந்துவிட்டது. அவளது கணீரென்ற குரலும், ஷ்சுக்கார் பக்கம் திரும்பிப் பேசும் பொழுது அதிர்ச்சியடைந்திருந்தது.

''தாத்தா, தோழர் மய்தானிக்கவைப் பற்றி நீங்கள் சொல்வது ரொம்பத் தப்பு! கட்சியில் இருக்க அவர் தகுதியற்றவர் என்று நீங்கள் சொன்னதை, இங்குள்ள யாருமே நம்பவில்லை! மாரிக்கால உழவின்போது, நான் அவருடன் வேலை செய்தேன். அவர் மற்றவர்களைக் காட்டிலும், அதிகமாகவும், நன்றாகவும் உழுதார்! கூட்டுப்பண்ணைக்காக அவர் தன்னாலான எல்லாவற்றையும் செய்கிறார். நீங்களோ, அவருக்கு எதிராகப் பேசுகிறீர்கள்... நீங்கள் ரொம்ப பெரியவர். ஆனால் பைத்தியக்காரப் பையனைப் போல வாதிடுகிறீர்கள்!''

''இப்படிச் சொல்லு! சூடாகக் கொடு வார்யா! கன்றுக் குட்டியின் கழுத்தில் கட்டிய மணிமாதிரி கொணகொண என்று அரட்டிக்கொண்டே இருப்பான். தனது இரைச்சலால் எந்த மனிதர் பேசுகிற ஒரு நல்ல வார்த்தையையும் நம்மைக் கேட்க விடமாட்டான்'' என்று லூபிஷ்கின் தனது முரட்டுத் தொண்டையில் சொன்னான்.

''வார்யா சொல்வது சரி. கூட்டுப்பண்ணையிலேயே அதிகமான வேலைநாட்களைக் கொண்டவன் கொந்திராத் தான். அவன் ஒரு சரியான உழைக்கும் கஸாக்!'' என்று பெஸ்ஹிலேப்னவ் கிழவன் குறுக்கிட்டுச் சொன்னான்.

நடைபாதையில் இருந்த ஓர் இளைஞன் கரகரத்த குரலில், ''கொந்திராத் மாதிரி ஆட்களைக் கட்சிக்குள் எடுத்துக்கொள்ளா விட்டால், நீங்கள் ஷ்சுக்கார் தாத்தாவைச் சேர்த்துக் கொள்வது நல்லது! கூட்டுப்பண்ணையும் தாத்தா தலைமையில் சிறப்பாகப் பணியாற்றத் தொடங்கிவிடும்...'' என்று கத்தினான்.

பேசிய பேச்சாளர்களைக் கூடத்திரும்பிப் பாராமல், தனது சிறிய தாடிக் கற்றையைத் தடவிய வண்ணம், அங்கேயே வேர்விட்டு விட்டவனைப் போல நின்று கொண்டே இருந்தான் ஷ்சுக்கார். மீண்டும் அமைதி நிலைநாட்டப்பட்டவுடன் ஷ்சுக்கார் பேசத் தொடங்கினான்:

''வார்யா இங்கு வந்திருக்கவே கூடாது. ஏனெனில் அவளுக்கு வயது போதாது. அவள் எங்காவது ஒரு கொட்டடி

யில் பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்க வேண்டும். இந்தக் கரிக்குருவிக் குஞ்சு இங்கு வந்து, என்னைப் போன்ற வயதான, அறிவில் சிறந்தவர்களைப் பார்த்து, என்ன நினைக்க வேண்டும், என்ன நினைக்கக் கூடாது என்று புத்திமதி சொல்கிறது. வாழ்க்கை எல்லாமே தலைகீழாக மாறிக்கொண்டு வருகிறது! குஞ்சுகள் தாய்க் கோழிக்கு புத்திசொல்லத் தொடங்கிவிட்டன... மற்றவர்களும் ரொம்ப நல்லவர்கள் தான். மற்றவர்களும் என்ன, நல் லவர்களா? 'ஓ, அவன் உழைப்பு நாட்கள் ஏராளம். அதை வண்டியில்கூட ஏற்ற முடியாது' என்று பேசுகிறார்கள்... ஆனால், நான் உங்களைக் கேட்கிறேன்: உழைப்பு நாட் களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இதுவும் பேராசை யிலிருந்து தான் வருகிறது. சிறிய சொத்துரிமையாளர்க ளுக்குப் பேராசை எப்பொழுதுமே அதிகம். இதை ஒரு தட வைக்கு மேல் பல முறை மக்காரே சொல்லியிருக்கிறான். இன்னொரு உளறுவாயன், ஷ்சுக்கார் தாத்தாவைக் கட் சியில் சேர்த்துக் கொள்ளுங்கள், அதற்குப் பிறகு கூட்டுப் பண்ணை சிறப்பாக வேலை செய்யும் என்று சொல்கிறான்... நீங்கள் ஒன்றும் சிரிக்க வேண்டாம். உங்களில் சிலருக்கு எங் கோ மரை கழன்றிருக்கிறது, அதனால் தான் இந்த சத்தம். எனக்குப் படிக்க முடியுமா? ஆமாம், நிச்சயமாக முடியும்! நீ எதைச் சொன்னாலும் என்னால் படிக்க முடியும். என் பெயரையும் சுலபமாகக் கையெழுத்திட்டு விடுவேன். கட்சி விதிகளை நான் ஏற்றுக்கொள்கிறேனா? ஆமாம்! நான் ஏற் கிறேன். இதன் திட்டங்களை நான் ஏற்கிறேனா? ஆமாம் அதற்கு எதிராக எதுவுமே இல்லை. சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு, ஒரு கிழவனாகிய என்னுடைய சக்திக் கேற்ற வேகத்தில் நான் பாய்ந்து செல்வேன். நான் விரைந்து வேகமாகச் செல்லமுடியாது. ஏனென்றால் மூச்சுவிட முடி யாமல் போய்விடக் கூடாதல்லவா? நான் ஏற்கெனவே கட்சி யில் சேர்ந்திருப்பேன். இப்பொழுது என் கக்கத்தில் ஒரு சிறிய பெட்டியை இடுக்கிக்கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், அன்புக் குடிமக்களே, அன்புக்கிழவிகளே! கடவுள் முன்னிலையில் நின்று சொல்வதைப் போலச் சொல்கிறேன்: நான் கட்சியில் இருப்பதற்கு இன்னமும் தகுதியுடை யவன் அல்ல... உங்களைக் கேட்கிறேன்: ஏன் கூடாது? ஏனென்றால், என்னை ஆட்கொண்டுள்ள மதத்தின் பிடிப்

புத்தான். அதை முக்காலும் சபிக்க வேண்டும்! எங்காவது வானத்தில் ஓர் இடி முழக்கம் கேட்டுவிட்டால் போதும். உடனே, 'கடவுளே! இந்தப் பாவியைக் காப்பாற்றும்!' என்று என் வாய் என்னையறியாமல் சொல்லத் தொடங்கி விடும். உடனே சிலுவைக் குறியிட்டுக் கொண்டு, இயேசு பெருமான், அன்னை மரி, இன்னும் என்னால் அப்போது நினைக்க முடிந்த அத்தனை தெய்வங்களையும் தொழுவேன், ஒவ்வொருவராகத் தொழுவேன். சில சமயங்களில் முழந் தாளிட்டு வணங்கக்கூடப் போய்விடுவேன். இடி முழக்கம் கேட்டால் அப்படி...''

தனது பேச்சிலேயே லயித்துப்போன ஷ்சுக்கார் கையை உயர்த்தி நெற்றியில் சிலுவைக் குறி போட்டுக்கொள்ள, நெற்றிவரை உயர்த்திவிட்டான். ஆனால் அந்தச் சமயத்தில் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, நோக்கம் ஏதுமின்றி, விரல் களை நெற்றியைச் சுரண்டவிட்டான். தன்னையறியாமல் வெட்கத்துடன் சிரித்துக்கொண்டான்.

''இப்பொழுது நான் எப்படிச் சொல்வேன்... பயம் என்னை அச்சுறுத்தும்போது எனக்கு இத்தகைய எண்ணங்க ளெல்லாம் பிறக்கின்றன. எலியா தீர்க்கதரிசி அடுத்து என்ன செய்வாரோ. இது இந்தப் பிசாசுகளுக்குத் தான் வெளிச்சம் என்று நினைப்பேன். சும்மா வேடிக்கைக்காகவாவது ஒரு மின்னல் வெட்டை, என் மொட்டைத் தலையில் போட்டுப் பார்க்கிறார் என்று வைத்துக்கொள்வோம். பிறகு என்ன நடக்கும்? ஷ்சுக்கார் கதை அவ்வளவு தான். என் குளம் புகளைக் கழற்றி அலமாரியில் அடுக்கிவிட வேண்டியது தானே! ஆனால் எனக்கு அப்படி ஆகக்கூடாது. நான் கம் யூனிஸத்தை நோக்கி முன்னேற விரும்புகிறேன. அந்தப் பஞ்சனை வாழ்க்கை வேண்டும். ஆகையால்தான் தேவைப் படும் பொழுதெல்லாம் பாதிரியாரிடம் ஏதாவது ஒன்றி ரண்டு கோபெக்குகளைக் கொடுத்து, கடவுளை என்னிடம் அநாவசியமாகக் கோபப்படாமல் பார்த்துக் கொள்ளும்படி சரிக்கட்டி வைத்துக் கொள்கிறேன். பாதுகாப்பாக இருக்க வேண்டாமா?.. பாதிரியார் நமக்காக சாமியை வேண்டிக் கொள்வார் என்று நினைப்பது முட்டாள்தனம் என்று நீங் கள் நினைக்கலாம். விஷயத்தை ஆராய்ந்தால், செத்துப் போனவன் ஒரு பெண்ணுக்கு, மிகவும் கற்றறிந்த மொழி யில் சொல்வதென்றால், கற்றைக் குழலாளுக்கு, எந்த அளவு

அன்புகாட்ட முடியுமோ, அவ்வளவு அன்பைத்தான் இவரும் காட்டுவார். அந்தச் சாகப்போகும் பாதிரி, உன்னுடைய காசில் குடிக்கத் தான் பார்ப்பானே ஒழிய, உனக்காகத் தொழ மாட்டான். விரிவாகவும் சுருக்கமாகவும் சொன்னால் அவ்வளவுதான். மகிழ்ச்சிவாய்ந்த சமயக் கருத்தைக் கொண்ட நான் எப்படிக் கட்சியில் சேர முடியும்? எனது அன்பிற்குரிய அதை திரித்துப் புரட்டிச் சொல்லிக்கொண்டு, திட்டங்களையும், என்னையும் புரட்டிச் சொல்லலாமா? உங்களுக்கு எல்லாம் என் நன்றி. என்னை அத்தகைய பாவத்தில் தள்ளாதீர்கள்! அதனால் எனக்கு நன்மையே இல்லை. நான் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன்!''

''தாத்தா, பழையபடியும் திசை திருப்புகிறாய்!'' என்று ரஸ்மியோத்னவ் சத்தம் போட்டான். ''சரியான பாதைக்கு வா. சாக்கடைக்குள் இறங்கி உழல வேண்டாம்!''

இதற்குப் பதில் உரைக்கக்கூடிய முறையில் ஷ்சுக்கார் தனது கையை மட்டும் உயர்த்தினான்.

''அந்திரேய், நான் பேச்சை முடிக்கப்போகிறேன். நீ சத்தம் போட்டு என்னை எங்காவது விரட்டித் தள்ளி விடாதே. நான் முடிக்க முடியாமல் எங்காவது போய் விடப் போகிறேன். நீ அமைதியாக உட்கார்ந்து நான் சொல்லும் அறிவுரைகளைக் கேள். அவற்றை நினைவில் கொள்ள முயற்சிசெய். ஏனெனில் அவை உன் பிற்கால வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும். நான் எப்பொழுதுமே விஷயத்தை விட்டு விலகுவதில்லை. ஆனால் நீயும், மக்காரும், மாறி மாறிப் போடுகிற சத்தத்தில் நான் என் விருப்பத்திற்கு நேர்மாறாக எங்கோ போய்விடுகிறேன். நான் கட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கம்யூனிஸத்துக்குப் போய் விடுவேன். கொந்திராத் மாதிரி, வேண்டா விருப்பாக அழுது கொண்டல்ல, ஆடிக்கொண்டு சிரித்துக் கொண்டு போவேன். ஏனெனில் நான் ஒரு பாட்டாளி! சிறிய சொத்துடைமைக் காரன் அல்ல. அதுதான் நேரடியாகவே சொல்கிறேன்! நான் எங்கோ படித்தவாறு, பாட்டாளி இழப்பதற்கு சங்கிலியைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. ஆனால் என்னிடம் சங்கிலியே கிடையாது. நான் பணக்காரனாக இருந்தபொழுது நாயைக் கட்டுவதற்காக வைத்திருந்த பழைய சங்கிலியைத் தவிர வேறு சங்கிலியே கிடையாது. ஆனால் என் வீட்டுக்கிழவி இருக்கிறாளே! அவள் சங்கிலிகளைக் காட்

டிலும், கைதிகளுக்குப் போடப்படும் விலங்கைக் காட்டிலும் மோசமானவள்... ஆனால் என் கிழவியையும் எந்த வகையிலும் இழக்க நான் விரும்பவில்லை. அவள் என்னுடன் வாழட்டுமே, எனக்கு என்ன கெடுதல்? ஆனால். நான் கம்யூனிஸத்துக்குப் போகிற பாதையில் அவள் குறுக்கிட்டால், நான் அவளை விட்டுவிலகி ஓடிப் போய்விடுவேன்! நீங்கள் இதை உறுதியாக நம்பலாம்! அவள் என்னை எட்டிப்பிடிக்க முடியாமல் மூச்சுத்திணறி விடுவாள். எனக்குக் கோபம் வந்துவிட்டால் நான் அபார துணிச்சல்காரனாகி விடுவேன். எனவே என் வழியில் யாரும் குறுக்கிடக் கூடாது! ஒன்று மிதித்துக் கொன்றுவிடுவேன் அல்லது அவளைக் கடந்து நான் போகிற வேகத்தில், என்னை ஏறிட்டு விழித்துக் கூட அவளால் பார்க்க முடியாது!'' என்றான் ஷ்சுக்கார்.

''தாத்தா, நிறுத்து. நேரம் சரியாகிவிட்டது!'' என்று மேசையைத் தட்டிக்கொண்டே நகூல்னவ் அறிவித்தான்.

''மக்கார், நான் இப்பொழுது முடித்துக்கொண்டிருக்கிறேன்! உன்னுடைய கையை வைத்து அப்படித் தட்டாதே. நீயே புண்படுத்திக்கொண்டாலும் புண்படுத்திக் கொள்ள நேரிடும். இதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் எல்லாரும் கொந்திராத்துக்கு ஆதரவாக இருப்பதால், எனக்கு மட்டும் என்ன கவலை? நானும் அவனுக்கு எதிராக இல்லை. எங்கள் கட்சியில் அவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள். நான் எப்பொழுதும் சொல்வதைப்போல, அவன் ஒரு கௌரவமான, கடின உழைப்பாளி. விஷயங்களை ஆழமாக ஆராய்ந்து, சரியானபடி மதிப்பிட்டால், கொந்திராத் நம் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவன் தான். இதில் சந்தேகமே இல்லை. இதை நான் தெட்டத்தெளிவாகச் சொல்லிடுகிறேன். சுருங்கச் சொன்னால், கொந்திராத் கட்சியிலிருக்க முழுக்கத் தகுதியுடையவன். இவ்வளவு தான் நான் சொல்ல வேண்டியது எல்லாம்!'' என்றான் ஷ்சுக்கார்.

''ஆளைப் புதைக்கத் தொடங்கி, இறுதியாக நன்றாக வாழ வாழ்த்தி முடித்துவிட்டாயா?'' என்று கேட்டான் ரஸ்மியோத்னவ்.

எல்லாரும் சேர்ந்து சிரித்தசிரிப்பில், இவனுடைய வார்த்தைகளை யாரும் கேட்கவே இல்லை.

தன்னுடைய செயலில் முழுமன நிறைவு பெற்றவனாக,

வியர்த்துக்கொட்டிய தாடி மீசையை சட்டை நுனியால் துடைத்துக்கொண்டு, பக்கத்திலிருந்த அன்தீப் கிராச்சிடம், ''நான் என்ன... சரியான விமரிசனம் தான் இல்லையா?'' என்று ஷ்சுக்கார் தாத்தா கேட்டான்.

''தாத்தா, நீ ஒரு பெரிய நடிகனாவது நல்லது'' என்று அன்தீப் அவனது காதருகே சொன்னான்.

ஷ்சுக்கார் பக்கவாட்டில் தனது பார்வையைச் செலுத்தினான். தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரின் கருந்தாடியில் மறைந்திருந்த சிரிப்பை அவனால் பார்க்க முடியவில்லை.

''நான் எதற்காக அதற்குப் போக வேண்டும்?'' என்று கேட்டான்.

''ஏனென்றால் காசில் புரளலாம் மண்வெட்டியில் அள்ளி அள்ளிப்போடுகிற அளவுக்குக் கிடைக்கும்! இதைப் போல சொகுசான தொழிலே வேறு இல்லை! சில வேடிக்கைக் கதைகளைச் சொல்லி, மக்களைச் சிரிக்கவைத்தால் போதும் நீ செய்ய வேண்டியதெல்லாம் அவ்வளவுதான். நீ எவ்வளவு தற்புகழ்ச்சியாக பெருமை பேச வேண்டுமோ, அவ்வளவு பேசிக் கொள்ள வேண்டும். மிகச் சுலபமாகப் பணம் கிடைக்கும். உன் கையில் அழுக்குப்படவே தேவையில்லை'' என்று கூறினான் அன்தீப்.

ஷ்சுக்கார் தாத்தா விறைப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். பெஞ்சின் மீது அசைந்து நெளிந்தான். சிரித்துக் கொண்டான். அவனது உணர்ச்சி மாற்றங்கள் வெளிப்படையாகவே தெரிந்தன.

''என்னுடைய அன்தீப் கண்ணே! ஷ்சுக்கார் எப்பொழுதுமே வெற்றியாளன் தான்! அவன் ஏதாவது சொன்னால், அதிலே விஷயமிருக்கும் என்று நிச்சயமாக நீ நம்பலாம். சரியாகக் குறியிலடிக்கும். குறிதவறி எங்கோ அடிக்கிற ஆள் அல்ல நான்! நீ என்ன நினைக்கிறாய்? எல்லாமே மோசத்திலும் மோசமாகிக் கொண்டுபோனால், வயதாகி அதற்கு இரையாக நேரிட்டால், நான் நிச்சயமாக நடிகனாகிவிடலாம். சிறு பையனாக இருந்த காலத்திலிருந்தே, அதற்கென தனித்தகுதி கொண்டவன் நான். இப்பொழுது முழுக்க சரியாகிவிட்டேன்! கண்களை மூடிக்கொண்டு என்னால் செய்ய முடியும்.''

பல்லில்லாத தனது வாயைக் கடித்துக் கொண்டு, ஆழ்ந்த

சிந்தனையில் மூழ்கினான் கிழவன். பின்னர் கேட்டான்: ''நடிகர்களுக்கு எப்படிச் சம்பளம் கொடுக்கிறார்கள் என்பதை நீ எங்குமே கேட்டதில்லையா? துண்டு துக்காணி வேலையா? அல்லது எப்படி? ஒவ்வொரு மனிதனுக்கும் கூலி எவ்வளவு? மண்வெட்டியில் தள்ளுகிற அளவுக்கு என்று சொன்னாயே, ஆகையால் எல்லாமே கோபெக்குகளில் இருக்குமோ? அப்படி என்றால் எனக்குப் பிடிக்காதே. சில கிழடுகள் தான் ஒரு கோபெக்கைக்கூட பணம் என்று எண்ணிக் கொண்டிருக்கும்.''

''நீ என்ன கதாபாத்திரமாய் நடிக்கிறாயோ அதற்கு ஏற்றாற் போல கிடைக்கும். தலைக்கனத்துக்கு போனஸ் கிடைக்கும்'' என்று அன்தீப் குசுகுசுத்தான். ''நீ எந்த அளவுக்கு தலைக் கர்வத்தோடு, அகங்காரத்தோடு நடந்து கொள்கிறாயோ, அந்த அளவுக்கு சம்பளம் கூடக் கிடைக்கும். இந்த நடிகர்கள், சாப்பிடுவது, குடிப்பது, ஊர்விட்டு ஊர் சுற்றுவது இதைத் தவிர வேறு எதுவுமே செய்வதில்லை. இது மிகவும் சொகுசான வாழ்க்கை. பறவை மாதிரி சுதந்திரமாக இருக்கலாம்.''

''அன்தீப் தம்பி, வெளியில் போய் புகைபிடிக்கலாமா?'' என்று கூட்டத்தில் விருப்பம் இழந்தவனாகச் சொன்னான் ஷ்சுக்கார்.

நெருக்கடியாக இருந்த வகுப்பறையை விட்டு தள்ளிக் கொண்டு வெளியேறி, வெயிலில் சூடேறிய தரையில் வேலியோரமாக உட்கார்ந்து கொண்டு சுருட்டைக் கொளுத்தினார்கள்.

''அன்தீப் தம்பி, நீ எப்போதாவது இங்கே நடிகர்கள் யாரையாவது பார்த்திருக்கிறாயா?''

''நிறையப் பார்த்திருக்கிறேன். கிரோத்னோவில் நான் பணிபுரிந்தபொழுது ஏராளமான பேர்களைப் பார்த்திருக்கிறேன்.''

''அது சரி, எப்படி இருக்கிறார்கள்?''

''வெறுமனே சாதாரணமாகத்தான்.''

''நன்றாகச் சாப்பிட்ட ஆட்கள் மாதிரி இருக்கிறார்களா?''

''காயடித்த பன்றிகள் மாதிரி கொழுத்து இருக்கிறார்கள்!''

ஷ்சுக்கார் பெருமூச்சு விட்டான்.

''மாரிக்காலம், கோடைக்காலம், எல்லாக்காலத்திலுமே நல்ல சாப்பாடு சாப்பிடுகிறார்கள். இல்லையா?''

''அதைக் காட்டிலும் என்ன வேலை?''

''அவர்களோடு எங்கே போய்ச் சேர்ந்து கொள்வது?''

''ரஸ்தோவில் தான், அண்மையில் வேறு இடம் கிடையாது.''

''அது ரொம்ப தூரத்தில் இல்லையே... இந்த எளிதான வேலையைப் பற்றி இதற்கு முன்னரே என்னிடம் ஏன் சொல்லவில்லை? வெகுகாலத்திற்கு முன்னரே இதை நான் ஏற்றிருப்பேன் அல்லவா? நடிப்பது போன்ற எளிதான வேலைகளில் நான் மகா சமர்த்தன் என்பது தெரியுமா? என்னுடலில் உள்ள கோளாறால், பண்ணை வேலை போன்ற கடுமையான வேலைகளைச் செய்ய முடிவதில்லை. சரியான சட்டி மண்டையப்பா நீ! எளிதான வாழ்க்கைக்கு வழிகாட்டாமல் விட்டுவிட்டாயே!'' என்று ஷ்சுக்கார் ஏக்கத்தோடு கத்தினான்.

''இதற்கு முன்னர் நாம் இதுபற்றி பேசவே இல்லையே'' என்று வாதிட்டான் அன்தீப்.

''வெகுகாலத்துக்கு முன்னரேயே நீ இதை எனக்குச் சொல்லியிருக்க வேண்டும். இப்பொழுது நான் ஒரு நடிகனாக அநுபவித்துக் கொண்டிருப்பேன். நான் இந்தக் கிழவியைப் பார்க்க வரும்போதெல்லாம்... அப்பாடா! மேசையில், உன் அரிய ஆலோசனைக்காக உனக்கு ஓர் வோத்கா பாட்டில் காத்துக் கொண்டிருக்கும்! நான் விரும்புகிற சாப்பாடு பூராவும் எனக்குக் கிடைக்கும். உனக்குக் குடிக்கக் கிடைக்கும். ரொம்ப அருமையாக இருக்கும் இல்லையா?.. ஆகா! அன்தீப்... நாம் ஓர் அரிய வியாபாரத்தைத் தவற விட்டு விட்டோம். இன்று மாலையே கிழவியிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன். அப்புறம் அடுத்த மாரிக் காலத்தில் சம்பாதிக்கப் போய்விடலாம். தவீதவும் பொருட் படுத்த மாட்டான். கிடைக்கும் உபரிப்பணமும் வீட்டிற்குப் பெரிதும் உதவும். எனக்கு ஒரு பசு, ஒரு டஜன் ஆடுகள், ஒரு பன்றிவாங்கிக் கொள்வேன். பிறகு எல்லாமே நன்றாகத்தோன்றும்...'' ஷ்சுக்கார் தாத்தா கற்பனை உலகில் ஆழமாகக் குதித்துவிட்டான். அன்தீப் அமைதியாக இருந்ததால் மேலும் தொடர்ந்தான்: ''அந்தப் பொலி குதிரைகள் இருக்கின்றனவே, அவற்றால் எனக்கு அலுப்புத்தட்டி

இளைத்துவிட்டேன். என்னால் பனியைத் தாங்க முடியாது. முன்னைப்போல என் உடம்பு இல்லை. சருக்கு வண்டியில் ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்தால் பனியில் என் நாடி நரம்புகள் எல்லாம் கட்டிதட்டிப் போய்விடுகின்றன. பனிக்காற்றில் மாட்டிக் கொண்டால் வயிற்றில் கோளாறு வந்துவிடும். அல்லது இறந்துபோல ஹரிதோன் மீது நரம் புத்தாக்குல் ஏற்பட்டதுபோல ஏற்பட்டாலும் ஏற்படலாம். நான் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின் றன! கம்யூனிஸத்தை நோக்கிப் போக, பாதியில் திமிறிக் கொண்டு போக வேண்டுமெனில், நான் போகத்தான் போகிறேன்!''

கிழவனின் சின்னப் பிள்ளைத்தனமான எதையும் எளி தில் நம்பிவிடுகின்ற தன்மையை ரசித்துக்கொண்டிருந்த அன் தீப் களைத்துப் போய் இந்த கேலி விளையாட்டுக்கு ஒரு முடிவுகட்ட விரும்பினான்.

''நீ நடிகனாக ஆக கையெழுத்துப் போடுவதற்கு முன் னால், ஆழமாக யோசித்துக்கொள்வது நல்லது...'' என் றான் அன்தீப்.

''யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று தன்னம் பிக்கையோடு அறிவித்தான் ஷ்சுக்கார். ''இந்த மாரிக்காலத் தில் தாராளமாகப் பணம் புழங்கினால் நான் அங்கு இருப் பேன். அது என்ன ரொம்ப சிரமமா? கூடுகிற மக்களுக்கு ஏதாவது ஓரிரண்டு கதைகளைச் சொல்ல வேண்டியது தானே!''

''பணத்தில் ஒருவகை தொடுவதற்குக் கூட தகுதி யற்றது இருக்கிறது...''

''என்ன சொல்கிறாய்?'' என்று நிதானமாகக் கேட்டான் ஷ்சுக்கார்.

''நடிகர்கள் அடிக்கப்படுகிறார்கள்...''

''அடிக்கப்படுகிறார்களா? யாரால்?''

''கட்டணம் செலுத்தி நுழைவுச் சீட்டு வாங்கும் மக் களால்தான்.''

''அவர்கள் எதற்காக அடிக்கிறார்கள்?''

''அதுவா. யாராவது நடிகர் ஏதாவது தவறாக சொல்லி விட்டால் அல்லது அவர்களுக்கு பிடிக்காவிட்டால் அல்லது அவனுடைய பேச்சு பிடிக்கா விட்டாலும்கூட அடிப்பார் கள்.''

''உண்மையாகவே அடிப்பார்களா? அல்லது சும்மா... விளையாட்டுக்காக... அச்சுறுத்த அடிப்பார்களா?''

''கேலியாவது, கிண்டலாவது! அந்த அப்பாவியை பொது மக்கள் அடிக்கிற அடியில், சில சமயங்களில் அரங்கிலிருந்து நேராக மருத்துவ மனைக்கோ, சுடுகாட்டுக்கோ தான் தூக்கிக்கொண்டு போக நேரிடுகிறது. முன்னர் என் கண்முன்னாலேயே இது நடக்க நான் பார்த்திருக்கிறேன். ஒரு நடிகரின் காதைக்கடித்து எடுத்துவிட்டார்கள். இன்னொரு நடிகரின் பின்னங்காலைத் திருகி குதியைத் திருப்பி விட்டார்கள். அப்படியே அவன் வீட்டுக்குப்போக வேண்டியது ஆகிவிட்டது பாவம்...''

''ஒரு நிமிடம் பொறு! இதெப்படி? பின்னங்காலா? அப்படியானால் அவனுக்கு நான்கு கால்களா?''

''அவர்களிடம் எல்லாவகையும் உண்டு... அதையெல்லாம் காட்சிக்காக அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் நான் ஒரு தவறு செய்துவிட்டேன். இடது கால் என்று சொல்வதற்குப் பதிலாக, இடது பின்னங்கால் என்று சொல்லிவிட்டேன். இடதுகால் அவ்வளவுதான். காலைத்திருகி முன்னுக்குப் பின்னாகத்திருப்பிவிட்டதால் அவன் நடந்து செல்லும்பொழுது எப்பக்கமாகப் போகிறான் என்று யாராலும் ஊகிக்க முடியாது. பாவம் அந்த ஆள்! என்ன கூச்சல் போட்டான் தெரியுமா? அந்த நகரம் முழுக்க அவன் குரல் கேட்டது நீராவி எந்திரம் மாதிரி அவன் மூச்சு விட்டுக்கொண்டு போனதைப் பார்த்து என் தலைமயிரெல்லாம் மயிர்க்கூச்செரிந்து நின்றுவிட்டது!'' என்றான் அன்தீப்.

அன்தீப்பின் முகத்தை ஆழ்ந்து உற்று நோக்கினான் ஷ்சுக்கார். இந்த கசப்பான நினைவுகளால் முகமே பேயறைந்தாற் போலாகிவிட்டது. கடைசி கடைசியாக சொன்ன உண்மைகளை ஏற்றுக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தான்.

''இந்தப் போலீசார் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? நாசமாப்போக!'' என்று வருத்தத்துடன் கேட்டான். ''இதை எப்படி சும்மா பார்த்துக்கொண்டே நின்றார்கள்?''

''இந்த அடிதடியில் போலீசாரும் சேர்ந்துகொண்டார்கள். ஒரு போலீஸ்காரர் இடது கையால் வாயில் ஊதலை வைத்து ஊதிக்கொண்டே, வலது கையால் அந்த நடிகரைக் குத்திக்கொண்டிருந்ததை என் கண்ணாலேயே கண்டேன்.''

''தம்பி அன்தீப், இது ஜார் ஆட்சிகாலத்தில் நடந்திருக்

கலாம். ஆனால், சோவியத் ஆட்சியில் மிலீஷியாவினரை சண்டை போட அநுமதிப்பதில்லையே.''

''மிலீஷியா சாதாரண மக்களைத் தொடுவதில்லை என்பது உண்மைதான். ஆனால் நடிகர்களை அடிக்கிறார்கள். ஏனெனில் அடிக்க இவர்கள் அநுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது நினைவு தெரிந்த நாள் தொட்டே இருந்துவரும் பழக்கம். இதை உன்னால் ஒன்றும் செய்ய முடியாது.''

ஷ்சுக்கார் தாத்தா ஒரு கண்ணை சந்தேகத்தோடு செருகினான்.

''அன்தீப், பிசாசு பெற்ற பிள்ளையே! நீ சின்னப் பிள்ளை விளையாட்டு விளையாடுகிறாயோ? உன்னை ஏனோ என்னால் நம்ப முடியவில்லை... இப்பொழுதும் நடிகர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று உன்னால் எப்படிச் சொல்ல முடிந்தது? நீ கடந்த முப்பது ஆண்டுகளாக நகரத்துக்குப் போனதே இல்லை. இந்தக் கிராமத்தை விட்டு அப்பால் நகர்ந்ததே இல்லை. உன்னால் எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டான் ஷ்சுக்கார்.

''என் ஒன்றுவிட்ட சகோதரன் ஒருவன் நவசெர்காஸ்கில் இருக்கிறான். அவன் நகர வாழ்க்கையைப் பற்றிக் கடிதங்களில் எழுதுகிறான்'' என்று அன்தீப் உறுதியாகச் சொன்னான்.

''ஒன்றுவிட்ட சகோதரரா? அவருக்குத் தெரிந்திருக்கலாம்...'' ஷ்சுக்கார் தயக்கத்தோடு சொன்னான். ஆழ்ந்த பெருமூச்சுவிட்டான். முகம் வாடிற்று. ''அப்படி ஒரு வலை இருக்கிறது அன்தீப்... நடிகராக இருப்பது ஆபத்தான வேலை போல இருக்கிறதே... மக்கள் நடிகர்களைக் கொல்கிறார்கள் என்றால் அந்த இடம் எனக்குச் சரியில்லை. அப்படிப்பட்ட சொகுசான வாழ்க்கை ஆழ் நரகுக்கே போகட்டும். எனக்கு வேண்டாம்!''

''காலத்தில் உன்னை எச்சரிக்க வேண்டும் என்று விரும்பினேன். முதலில் உன் விட்டுக் கிழவியிடம் பேசிவிட்டு, அதன் பிறகு வேலை தேடுவது பற்றிப் பேசினால் நல்லது.''

''கிழவிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை'' என்று துடிப்பின்றி சொன்னான் ஷ்சுக்கார். ''ஏதாவது தவறாக நடந்தால் அவளா உதை வாங்கப் போகிறாள்? அவளுடைய யோசனையை நான் ஏன் கேட்க வேண்டும்?''

''அப்படியானால் நீயே ஒரு முடிவுக்கு வா'' என்று கூறி

விட்டு எழுந்த அன்தீப் சிகரெட்டைக் காலால் மிதித்து நசுக்கினான்.

''இப்பொழுது எனக்கொன்றும் அவசரமில்லை. மாரிக் காலத்துக்கு இன்னும் நிறைய நாட்கள் இருக்கின்றன. என்ன இருந்தாலும், அந்தக் குதிரைகளை விட்டுப் பிரிய எனக்கு மனம் வரவில்லை. கிழவியும் தனிமையில் சங்கடப் படுவாள்... அன்தீப் தம்பி, நான் சிறுவனாகப் பிறந்ததிலிருந்தே நான் இல்லாமலேயே அந்த நடிகர்கள் சமாளித்துக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். சுலபத்தில் கிடைக்கும் அந்தப் பணம் வேண்டாம்! நன்றாக நினைத்துப் பார்த்தால், அதுவும் சுலபத்தில் கிடைக்கிற பணம் அல்ல. கையில் கிடைப்பதை எடுத்துக் கொண்டு நாள்தோறும் மக்கள் அடிப்பார்கள். மிலீஷியாவும், பாதுகாப்பிற்குப் பதிலாக குத்துவிடுவார்கள் என்றால், அது வேண்டாம்! உனது அன்புக்கு மிக்க நன்றி! அந்தப் பழங்களை எல்லாம் நீயே சாப்பிடு! நான் சிறுவனாகப் பிறந்ததிலிருந்தே துன்புறுத்தப்பட்டவன்! வாத்துக்கள், காளைகள், நாய்கள், இன்னும் எத்தனையோ, நினைவில்லை; அத்தனையும் என்னை வாட்டி வதைத்திருக்கின்றன. என் கையில் எவளோ ஒருத்தி, ஒரு குழந்தையை வேறு திணிந்துவிட்டாள். இது எல்லாம் நல்ல விஷயம் என்றா நினைக்கிறாய்? இந்தத் தள்ளாத வயதில், நான் கொல்லப்பட்டால், அல்லது என் உடலுறுப்பு முறுக்கி திருகப்பட்டால், அப்பப்பா! வேண்டாம்! அன்புடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு வேண்டாம்! மீண்டும் கூட்டத்துக்குப் போவோம். அங்குதான் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. நடிகத்கள் தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்வார்கள். அவர்கள் சரியான முரட்டு இளம் பிசாசுகள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே! இந்த அடி உதையெல்லாம் அவர்களை மேன்மேலும் உப்பி ஊதவைக்கிறது. ஆனால் எனக்கோ வயதாகிறது. அங்கே நல்ல சாப்பாடு கிடைக்கிறது போலும். ஆனால், எனக்கு ஒரு ஜோடி கிடைத்தால் உயிரைக்கூட விட்டுவிடத் தயார். அந்த சொகுசான வாழ்க்கையால் எனக்கு என்ன பயன்? நடிகர்களை அடிக்கும் இந்த மடையர்கள், என்னை நிச்சயமாக பிய்த்து எடுத்துவிடுவார்கள். இல்லை, நான் நடிகனாக விரும்பவில்லை. நீயும், ஏ கருந்தாடிப் பிசாசே! என்னை அநாவசி

யமாக ஆசை காட்டி மயக்கி, மொத்தமாக விழவைத்து விடாதே! அந்த முட்டாள் அவன் காதைக் கடித்தான் என்றும், காலைத் திருகினான் என்றும் நீ இப்பொழுது கூறினாயல் லவா? அதைக் கேட்ட பிறகு என் காது வலிக்கிறது. காலும் நோகிறது. எலும்பெல்லாம் வலி எடுக்கிறது. என் காதைக் கடித்து, என்னை அடித்து உதைத்து அந்த இடத்தைச் சுற்றி லும் இழுத்தாற்போல வலிக்கிறது... இப்படிப்பட்ட பயங் கரக் கதைகளைக் கேட்டால் நான் மிகவும் பாதிக்கப்படு வேன். குண்டடிபட்ட அதிர்ச்சி போல. எனவே, கூட்டத் துக்கு நீ மட்டும் திரும்பப் போ. நான் சிறிது நேரம் இங்கு உட்கார்ந்து ஓய்வெடுத்து, நரம்புகளை எல்லாம் சரிப் படுத் திக்கொண்டு வருகிறேன். பிறகு உள்ளே வந்து துப்த்ஸோ வுக்கு எதிராக எனது மறுப்பைக் கிளப்புகிறேன். ஆனால், அன்தீப் தம்பி, இப்பொழுது நான் பேசுவது போல இல்லை. ஒரு மாதிரியான நடுக்கம் மேலும் கீழுமாக முதுகுத் தண்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. முழங்காலும் நடுங்குகிறது. அவை நடுங்கி ஒன்றோடொன்று இடித்துக் கொள்ளும்போல இருக் கிறது. இப்பொழுது என்னால் உறுதியாக நிற்கக்கூட முடியவில்லை...''

ஷ்சுக்கார் புதிய சிகரெட் ஒன்றைச் சுருட்டினான். அவன் கைகள் நடுங்கிய நடுக்கத்தில், வீட்டில் விளைவித்த புகை யிலைத் துணுக்குள் தாளிலிருந்து கீழே விழுந்தன. கண் ணீர் மல்க அவன் முகம் அதைப் பார்த்தது. அன்தீப் கிழ வனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''தாத்தா, நீ இவ்வளவு உணர்ச்சிவசப்பட்ட ஆள் என் பது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், நடிகர்கள் நடத்தும் சோக வாழ்வைச் சொல்லி இருக்க மாட்டேன்... இல்லை தாத்தா, உனக்கு நடிப்பு வேண்டாம்! சும்மா அடுப் படியில் உட்கார், பெரிதாகப் பணம் சேர்க்க முயல வேண் டாம். இந்தச் சமயத்தில் உன் வீட்டுக்கிழவியை விட்டுச் செல்ல முடியுமா? அவளது வயதை நினைத்துப் பார்...''

''நான் அவளுக்காக நடிகனாகப் போகாமல் விட்டுவிட் டேன் என்பதைக் கேள்விப்பட்டால் அவளே நன்றி பாராட் டுவாள்! அவளது நன்றிக்கும், பாராட்டுதலுக்கும் ஒரு முடிவே இராது!''

இந்த மகிழ்ச்சி நிறைந்த செய்தியை தன் மனைவியிடம் சொன்னவுடன், அவள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இதனை

வரவேற்பாள் என்பதை நினைத்துப் புன்முறுவல் பூத்தான். ஆனால், தலைக்கு மேல் புயல் சுழன்றுகொண்டிருந்தது. அது வீசியடிக்க வேண்டியதுதான்...

ஷ்சுக்காரின் நெருங்கிய நண்பன் மக்கார், கிராமத்துப் பையன் ஒருவனை அரைமணி நேரத்துக்கு முன்னதாக ஷ்சுக்காரின் மனைவியிடம் அனுப்பி கண்டிப்பாக அவள் வந்து, ஷ்சுக்காரை ஏதாவது ஒரு காரணம் சொல்லி கூட்டத்தை விட்டு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று மக்கார் செய்தியனுப்பியிருந்தது கிழவனுக்குத் தெரியாது.

''அவளைப் பற்றி ஆட்கள் பேசிக்கொண்டிருப்பது உன் வீட்டுக் கிழவிக்குத் தெரியும்!'' என்று சொல்லிவிட்டு அன்தீப் மனநிறைவோடு சிரித்தான்.

ஷ்சுக்கார் தாத்தா தலையைத் தூக்கினான். ஈரத் துணியை வைத்து முகத்தைத் துடைத்தது போல, அவன் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்தது! குர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு அடக்கியாளும் துடிதுடிப்புடனும், கடு கடுப்புடனும் கிழவி அவனை நோக்கி வந்துகொண்டு இருந்தாள்.

''நாசமாய்ப் போக!..'' என்று ஷ்சுக்கார் குசுகுசுத்தான். ''இவள் எங்கிருந்து வந்தாள்? ஒரு நிமிடத்துக்கு முன்னால் தானே, தலையைத் தூக்க முடியாதபடி காய்ச்சலாகப் படுத்துக் கிடந்தாள். இப்பொழுது இங்கு வந்து நிற்கிறாள். எந்தச் சனியன் இவளை இங்கு கொண்டு வந்தது?''

''வீட்டுக்குப் போகலாம்'' என்று ஆணையிட்டாள் கிழவி. மறுப்புச் சொல்வதற்கு முடியாத தொனியில் குரல் இருந்தது.

பாம்பைப் பார்க்கும் முயல் மாதிரி, தரையில் உட்கார்ந்திருந்த ஷ்சுக்கார் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

''கூட்டம் இன்னும் முடியவில்லை, என் அன்பே. நான் பேச வேண்டும். கிராமத் தலைவர்களின் அன்பு வேண்டுகோள் அது'' என்று சமாளித்துச் சொல்லிவிட்டு செருமினான்.

''நீ இல்லாமலே அவர்கள் சமாளித்துக் கொள்வார்கள். போகலாம்! வீட்டில் வேலை இருக்கிறது.''

கிழவி, கணவனை விட ஒரு தலை உயரம் அதிகம் வளர்ந்தவள்; எடையோ இரு மடங்கு இருந்தாள். அவள் கிழ

வன் தோளைப் பிடித்துத் தூக்கி ஆட்டி நிறுத்தினாள். ஷ்சுக்கார் தாத்தா உணர்வு பெற்றவனாய், கால்களை ஊன்றி, கோபத்தோடு நின்றான். ''நான் வரவில்லை! என்னைப் பேசவிடாமலிருக்க உனக்கு உரிமையில்லை! இது ஒன்றும் பழைய காலமல்ல!'' என்று பொறுமினான்.

மறு வார்த்தை சொல்லாமல், வீட்டை நோக்கித் திரும்பி நடந்தாள் கிழவி. நீண்ட வேகமான எட்டுகளைப் போட்டு நடந்து சென்ற அவளருகில் தட்டுத்தடுமாறி நடந்து சென்ற ஷ்சுக்கார். இடையிடையே எதிர்த்து முறைத்துப் பார்த்தான். ஆனால் முழுத்தோற்றமோ, குருட்டுத்தனமாய் விதிக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைக் காட்டுவதாக இருந்தது.

அன்தீப் இதைக் கவனித்து, ஓசையில்லாமல் சிரித்துக் கொண்டிருந்தான். பள்ளிப்படிகளில் மீண்டும் ஏறியபொழுது தன்னையும் அறியாமல், ''இந்தக் கிழவன் செத்துப் போனால் இந்தக் கிராமமே சிரிப்பில்லாத, பொலிவிழந்த ஊராகி விடுமே!'' என தங்கினான்.

அத்தியாயம் இருபத்திமூன்று

ஷ்சுக்கார் தாத்தா பள்ளியை விட்டுப்போன பிறகு கூட்டத்தின் குணாம்சமே மாறிவிட்டது. துப்த்ஸோவின் மனு மீதான விவாதத்தில், கூட்டுப்பண்ணை விவசாயிகள் நறுக்குத் தெரித்தார் போல வியாபார ரீதியில் பேசியதை சிரிப்பு வெடிகள் ஏதும் தடை செய்யவில்லை. புயலடிப்பதற்கு முன்னர் வரும் அமைதிபோல, எல்லாரையும் வியப்பில் ஆழ்த்திக்கொண்டு இப்பலீத் ஷாலீய் எழுந்து பேசத் தொடங்கினான்...

கட்சி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டிய மனுக்கள் குறித்த விவாதம் எல்லாக் கோணங்களில் செய்யப்பட்டன. மூன்று நபர்களுமே ஒருமனதாக பொதுவாக்கெடுப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். ஆறு மாதம் சோதனைக் காலம். இச்சமயத்தில் ஷாலீய் எழுந்து பேச அநுமதிக்கும்படி கேட்டான். சன்னலருகே இருந்த ஒரு பெஞ்சியிலிருந்து எழுந்தான். சன்னல் கம்பியின் மீது தன் முதுகைச் சாய்த்துக் கொண்டு, ''நமது பண்டசாலை மேலாளர் லுக்கீச்சிடம் நான் ஒரு சிறு கேள்வி கேட்க முடியுமா?'' என்று கேட்டான்.

''விரும்பினால் இரண்டு'' என்றான் மக்கார் நகூல்னவ் மகிழ்ச்சியோடு.

ஷாலீயின் பக்கம் யாக்கவ் லுக்கீச் ஒஸ்த்ரவ்னோவ் வேண்டா விருப்பாகத் திரும்பினான். அவன் முகம் அமைதி யாக, எதிர்பார்த்தே இருந்தது.

''இங்கே கட்சியில் ஆட்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார் கள். அவர்கள் அதனுடன் வாழ விரும்புவது மட்டுமல்ல, அதனுடனேயே வாழ விரும்புகிறார்கள். அதன் இன்ப துன் பத்தை அநுபவிக்க விரும்புகிறார்கள்'' என்று தனது கரிய கண்களை யாக்கவ் லுக்கீச் மீதே பதித்தவனாக தனது கர கரத்த கனத்த குரலில் பேசினான் ஷாலீய். ''எனவே, கட் சியில் சேர நீயும் ஏன் மனுச் செய்யக் கூடாது, லுக்கீச்? நான் நேரடியாகவே கேட்க விரும்புகிறேன். நீ ஏன் தயங்கி பின்வாங்குகிறாய்? பனிக்கட்டி அடியில் சிக்கிய மீன், வெளி வரத் துடிப்பதைப்போல, நல்வாழ்வை அமைக்கப் போரா டிக்கொண்டிருக்கும் கட்சியைப் பற்றி நமக்குக் கவலை யில்லை என்று நினைக்கிறாயா? ஆனால், நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? நல்ல அருமையான நிழலிலே இருக் கிறாய். அதை உனக்காக வெப்பப்படுத்தக் கூடிய ஆளும் இல்லை. மற்றவர்கள். உனக்கு வேண்டிய சாமான்களைத் தட்டில் வைத்துக் கொண்டு வந்து உனக்குக் கொடுக்கட்டும் என்று இருக்கிறாயா? உன்னுடைய பாத்திரம்தான் என்ன? பொதுமக்களுக்கு மிக வேடிக்கையான, அறிவுபுகட்டக் கூடிய பாத்திரமாக நீ காட்சியளித்து வருகிறாய்... உனக்குத் தெரிய வேண்டுமானால், உன் பாத்திரம், இங் குள்ள ஒவ்வொருவருக்கும் பெரிதும் அறிவுபுகட்டுவதாக இருந்து வருகிறது!''

''என் வாழ்க்கைக்கு நானே சம்பாதித்துக்கொள்கிறேன். நான் உன்னிடம் எதையுமே இதுவரை கேட்டதில்லையே!'' என்று கோபத்தோடு பதில் சொன்னான் ஒஸ்த்ரவ்னோவ்.

இந்தப் பயனற்ற வாதத்தைத் தள்ளிவிடுவதுபோல இடது கையால் சைகை காட்டிக் கொண்டே, ''சம்பாதிப் பதில் பல வழிகள் உண்டு. தோளில் கோணியைப் போட்டுக் கொண்டு பிச்சை கேட்டுப் போனாலும், பட்டினு கிடக்க வேண்டாம். ஆனால் நான் அதைப்பற்றிப் பேசவில்லை, லுக்கீச். கவையில் மாட்டிக்கொண்ட பாம்பு மாதிரி நெளி யாதே. நான் சொல்வது உனக்குப் புரியுந்தானே! முன்

னைய நாட்களில் நீ வேலை செய்வதில் பெரு வேட்கை யுடையவனாக இருந்தாய். ஒரு கோபெக் அதிகம் கிடைக்கு மென்றால், ஓநாய் மாதிரி அந்த வேலைக்குப் போய்வாய்; ஆனால் இப்பொழுதோ வேலைகளை பொறுப்பில்லாமல் குருடன் செய்வது மாதிரி செய்கிறாய்... ஆனால் அதுகூட விஷயமில்லை. இப்படி வேலையில் மழுப்புவது குறித்தும் உனது மர்மமான வாழ்க்கை பற்றியும் பதில் கூறவேண்டிய நாள் இன்னும் வரவில்லை. அந்தநாள் வரத்தான் போகிறது! நீ பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். ஆனால் இப் போது கட்சியில் நீ ஏன் சேரவில்லை என்பது பற்றிச் சொல்'' என்று கேட்டான் ஷாலீய்.

''கட்சியில் சேருவதற்குப் போதுமான கல்வியறிவு எனக்கு இல்லை,'' என்று அமைதியாகப் பதில் சொன்னான் லுக்கீச். அவன் மெதுவாகச் சொன்னதால், அவனருகில் இருந்தவர்களைத் தவிர பள்ளியிலிருந்த மற்றவர்கட்குக் கேட்கவே இல்லை.

பின்னாலிருந்து யாரோ ஒருவன் அதட்டிக் கேட்கிற முறையில், ''உரக்கப் பேசு, நீ முணகுவது எங்களுக்குக் கேட்கவில்லை! பழையபடியும் திருப்பிச் சொல்!'' என்று சத்தம் போட்டான்.

இவ்வாறு சொன்னதைக் கேட்காதவன் போல, நீண்ட நேரம் வரை லுக்கீச் பதிலே சொல்லவில்லை. எதிர்பார்த் திருந்த அமைதியில், உருண்டு ஓடும் நீரோடையில் இருந்து தவளைகள் கத்துவதும், வெகு தூரத்துக்கப்பால் இருந்த பழைய காற்றாலையில் இருந்து கிறீச்சொலி ஆந்தை ஒன்று அலறுவதும், இரவுப் பறவைகள் சன்னலடியில் இருக்கும் சாலிமுள் மரங்களிலிருந்து கிளப்பும் சோக கீதமும் கேட் டது.

அமைதியை மேலும் நீடிப்பது லுக்கீச்சுக்கே சங்கடமாக இருந்திருக்கும். எனவே உரத்த குரலில் ''கட்சியில் இருக்க, எனக்குப் போதுமான கல்வியில்லை'' என்று திரும்பவும் சொன்னான்.

''பண்டசாலையின் மேலாளராக இருக்கக் கல்வி போதும். ஆனால் கட்சியில் சேர மட்டும் போதாதாக்கும்?'' என்று அழுத்தமாகக் கேட்டார் ஷாலீய்.

''ஒன்று பண்ணை, மற்றது அரசியல். இந்த இரண்டிற்கு மிடையில் உன்னால் வித்தியாசம் காணமுடியாவிட்டால்,

என்னாலுமா முடியாது?'' குழப்பத்திலிருந்து மீண்டுவிட்ட ஒஸ்த்ரவ்னோவின் குரல் தெளிவாகவும் சத்தமாகவும் இருந்தது.

ஆனால் ஷாலீய், இதனாலெல்லாம் அயரவில்லை. ஒரு சிறு வறட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, ''இங்குள்ள நமது கம்யூனிஸ்டுகள், பண்ணையையும், அரசியலையும் சேர்த்துக் கவனிக்க வேண்டும். நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி அவர்கள் இரண்டையும் தான் செய்து வருகிறார்கள்! ஒன்று மற்றொன்றில் குறுக்கிடுவதில்லை போலத் தோன்றுகிறது நீ எதையோ மறைக்கப் பார்க்கிறாய். உண்மையைப் பேச மாட்டேன் என்கிறாய்... நீ உண்மையை மூடிமறைக்கப் பார்க்கிறாய். ஆகையால்தான் மழுப்புகிறாய்!''

''நான் எதையும் மறைக்கவில்லை. மறைக்க என்னிடம் ஒன்றும் இல்லை'' என்று தழுதழுத்த குரலில் சொன்னான் லுக்கீச்.

''இல்லை, நீ மறைக்கிறாய்! உன் மனத்தில் என்னவோ ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகையால் தான் நீ கட்சியில் சேர விரும்பவில்லை... ஆனால் நான் தவறாகக்கூட இருக்கலாம். அப்படியானால், நீ என்னைத் திருத்துவது நல்லது!''

கூட்டம் ஏற்கெனவே நான்கு மணி நேரம் நடந்துவிட்டது. மாலைக் குளிர் இருந்தும், பள்ளிக்கூடம் புழுக்கமாக இருந்தது. சில சிறிய மேசை விளக்குகள் வராந்தாவிலும் பெஞ்சுகள் மீதும் இருந்தன. அவை இதை மேலும் புழுங்க வைத்துக் கொண்டிருந்தன. வியர்த்து விறுவிறுத்துப்போன கூட்டத்தினர் ஆடாமல் அசையாமல், ஷாலீய்க்கும், ஒஸ்த்ரவ்னோவுக்கும் இடையே திடீரென எழுந்த வாய்ச் சண்டையைக் கேட்டுக்கொண்டிருந்தனர். இந்த வார்த்தைகளுக்குப் பின்னால், பேசப்படாத பல மர்மங்கள், கேவலமான சம்பவங்கள் இருக்கும் என்று எதிர்பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தனர்...

''என் மூளையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது? நீ எல்லாவற்றையும் அவ்வளவு தெளிவாகப் பார்க்கக்கூடியவன் என்றால், நீயே, அது என்ன என்று சொல்வேன்'' என்று கேட்டான் லுக்கீச். இழந்திருந்த தனது சக்தியையும், நம்பிக்கையையும் மீண்டும் பெற்றவனாக, தற்காப்பிலிருந்து தாக்குதலைத் தொடங்கினான் அவன்.

''நீயே பேசேன், லுக்கீச். உனக்காக நான் ஏன் பேச வேண்டும்?''

''உனக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றும் இல்லை!''

''எனக்குச் சொல்ல வேண்டாம். மக்களிடம் பேசு... மக்களிடம் பேசு!''

''உன்னைத்தவிர என்னை வேறு யாரும் கேட்கவில்லை.''

''என்னுடைய கேள்விக்கு உன்னால் முடிந்த அளவு பதில் சொல். நீ பேச விரும்பவில்லையா? பரவாயில்லை. நாங்கள் காத்திருப்போம். இன்றிரவு நீ பேசாவிட்டால் நாளை நீ பேசலாம்!''

''இப்பலீத், என்மீது ஏன் இப்படிப் பாய்கிறாய்? நீ ஏன் கட்சியில் சேரவில்லை? என்னிடம் இருந்து மனச்சாட்சி ஒப்புதல் வாக்கு மூலத்தை பெறுவதை விட்டுவிட்டு, நீயே கட்சியில் சேருவது தானே! நீ ஒன்றும் பாதிரியார் இல்லையே!''

''நான் கட்சியில் சேரவில்லை என்று உனக்கு யார் சொன்னது?'' ஷாலீய் மெதுவாக, ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி நிதானமாக, தன்னுடைய நிலையை மாற்றிக் கொள்ளாமல் பேசினான்.

''நீயோ கட்சியில் சேரவில்லை. எனவே கட்சியில் சேர விரும்பவில்லையென்று தானே பொருள்.''

இதைக் கேட்டவுடன், ஷாலீய் ஓர் உறுமலுடன், சாய்ந்திருந்த சன்னலை விட்டு நகர்ந்தான். கிராமத்தார் அவனுக்காகப் பாதையை விட்டு விலகினர். மேசையருகே நிதானமாக நிமிர்ந்து நடந்து சென்றான். ''நான் இதற்கு முன்பு சேரவில்லை என்பது உண்மை. ஆனால் இப்பொழுது சேருகிறேன். லுக்கீச், நீ சேரவில்லையென்றால், நான் சேர வேண்டும் என்று பொருள். இப்பொழுது நீ சேர்ந்து இருந்தால், நான் விலகி இருப்பேன். நீயும் நானும், ஒரே கட்சியில் வாழ முடியாது! நாம் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள்...''

ஒஸ்த்ரவ்னோவ் பதிலே சொல்லவில்லை. அவன் வெறுமையாகச் சிரித்துக் கொண்டிருந்தான். ஷாலீய் மேசையருகே சென்றான். தவீதவின் ஒளிமிகுந்த நன்றி பாராட்டும் முகத்தைப் பார்த்தான். ஒரு பழைய மஞ்சள் தாளில் விண்ணப்பத்தை எழுதி நீட்டினான். ''எனக்குப் பரிந்து

ரைக்க ஆள் இல்லை. அதை எப்படியாவது சமாளிக்க வேண்டும்... உங்களில் யார் எனக்காக பரிந்துரை செய்யத் தயார்? யாராவது ஒருவர் எழுதுங்கள்'' என்று சொன்னான்.

ஆனால் இதற்கு முன்னரே தவீதவ் பரிந்துரையை அவசரமாக எழுதிக்கொண்டிருந்தான். அதன் பின் நகூல்னவ் அவன் பேனாவை வாங்கி எழுதினான்.

இப்பலீத் ஷாலீயும் ஒருமனதாக கட்சி உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டான். வாக்கெடுப்புக்குப் பின்னர், கிரெமியாச்சி கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை உறுப்பினர்கள் எழுந்து நின்றுகைதட்ட கூட்டத்தினரும் சேர்ந்து எழுந்து உழைத்துக்கன்றிப் போன தங்களது கைகளால் ஒரே மாதிரியாக அல்லாமல், பல தாளங்களில் மெதுவாகத் தட்டினார்கள்.

ஷாலீய் திகைப்பால் விழித்துக்கொண்டு நின்றான். அவன் கண்களில் ஒரு புது ஒளி பிறந்தது. தனது சக கிராம மக்களைப் பார்த்தபொழுது கண்கள் பூரிப்படைந்தன. ரஸ்மியோத்னவ் அவன் காதருகில், ''மாமா இப்பலீத், மக்களுக்கு ஏதாவது இரண்டு நல்ல வார்த்தை சொல்கிறாயா?'' என்று கேட்ட போது, கிழவன் தலையை ஆட்டினான்.

''வார்த்தைகளை விரயம் செய்யக்கூடாது! இருப்பினும் ஒரு சில நல்ல வார்த்தைகள் இல்லை... அவர்கள் எப்படிக் கைதட்டுகிறார்கள் பார்? நான் சொல்லாமலே, அவர்களுக்கு எது, என்ன என்பது எல்லாமே தெரியும்.''

இந்தச் சில விநாடிகளுக்குள்ளாக பெருத்த மாற்றத்திற்குள்ளான இந்த மனிதனின் தோற்றம், புதிதாகக் கட்சியில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரைவிட கட்சிச் செயலாளர் மக்கார் நகூல்னவினுடையது தான் பெரிதும் மாற்றமடைந்திருந்தது. தவீதவ் இப்படி இதற்கு முன்னர் அவனைப் பார்த்ததே இல்லை. மக்கார் வாயைத் திறந்து பெரிதாகச் சிரித்துக்கொண்டிருந்தான். மேசையருகில் நிமிர்ந்துநின்று, ஏதோ பரபரப்படைந்தவனாகச் சட்டையைச் சரிசெய்து கொண்டு, தனது பட்டாளத்து வார்ப்பூட்டை வெறுமனே தடவிக் கொண்டு, கால்விட்டு கால் மாறி நின்றுகொண்டு, முன் இரு வரிசைப் பற்களும் தெரியச் சிரித்துக்கொண்டு நின்றான். எப்பொழுதுமே இறுக மூடியிருக்கும் அவனது உதடுகள், கடைக் கோடிகளில் துடித்து குழந்தைச் சிரிப்புச் சிரித்தன. சாமியார் மாதிரி

முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு இருக்கும் மக்கார் சிரித்துக்கொண்டிருப்பதை, எல்லாருக்கும் முன்னதாகக் கண்ட உஸ்தீன் ரிகாலின், ''எங்கள் மக்காரைப் பாருங்களேன், நல்ல மனிதர்களே. சிரித்துக் கொண்டிருக்கிறான்! எத்தகைய காட்சி இது! என் வாழ்நாளில் இது போல முன்னர் கண்டதே இல்லை!..'' என்று வியந்து சொன்னான்.

நகூல்னவ் தனது புன்முறுவலை மூடி மறைத்துக்கொள்ள முயற்சிக்கவில்லை.

''ஓகோ! யாரோ ஓர் ஆள் பார்த்து விட்டாராக்கும்!'' என்று பதில் சொன்னான் அவன். ''நான் ஏன் சிரிக்கக் கூடாது? நான் மகிழ்ச்சியோடு இருக்கிறேன், எனவே சிரிக்கிறேன். நான் சிரிக்கவே கூடாது என்று யார் சொன்னது? அன்புள்ள குடிமக்களே, கிராமத்து மக்களே! நம்முடைய பகிரங்கக் கட்சிக் கூட்டம் முடிந்தது என்று நினைக்கிறேன். நிகழ்ச்சி நிரலும் நிறைவேறிவிட்டது.''

வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் நேராக நிமிர்ந்து நின்றுகொண்டு, விறைப்பான தோள்களுடன், மேசையை விட்டு முன்னால் வந்து, கணீரென்ற குரலில், ''கட்சிக்குழுவின் செயலாளன் என்ற முறையில், நம்முடைய மாபெரும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்துள்ள நமது அன்புள்ள தோழர்களைப் பார்க்க விரும்புகிறேன். இந்த மேதகைமை மிக்க வேளையில் உங்களைப் பாராட்ட விரும்புகிறேன்!'' மீண்டும் உதட்டைக் கடித்துக் கொண்டு ஓர் இராணுவக் கமான்டரைப் போல ''என்னிடம் வா!'' என்று அவன் உத்தரவிட்டான்.

கொந்திராத் மய்தானிக்கவ்தான் அவனிடம் முதலில் வந்தான். அவன் சட்டை தோளிலிருந்து இடைவரை வியர்த்து நனைந்து ஒட்டியிருந்ததை அவனுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தவர்கள் பார்த்திருந்தனர். ''ஏதோ பாதி வயலை உழுதவனைப் போல இருக்கிறான். இல்லையா?'' என்று பல் இல்லாத கிழவி ஒருத்தி பேசிக் கொண்டிருந்தாள். ''ஆமாம், இன்று மாலை கொந்திராத் உழுதுவிட்டுத்தான் வருகிறான்!'' என்று குறுக்கிட்டுச் சொன்னான் ஒருவன்.

தலையைக் குனிந்து, கொந்திராத் நீட்டிய கரங்களைப் பற்றிய நகூல்னவ், பரபரப்பால் வியர்த்துப் போயிருந்த உள்ளங்கைகளை இறுகப் பற்றி, நெருக்கிக் குலுக்கி

கொண்டே, நடுங்கும் குரலில், ''தோழரே! சகோதரனே! நல்லது செய்தாய்! கம்யூனிஸ்டுகளாகிய நாங்களனைவரும், நீ ஓர் அருமையான போல்ஷெவிக்காக இருப்பாய் என்று நம்புகிறோம். அப்படியே இரு!'' என்று மக்கார் சொன்னான்.

கரடி மாதிரி நடந்துகொண்டு கடைசி ஆளாக இப்பலீத் ஷாலீய் வந்தான். தான் தான் அங்கிருந்த அனைவரது கவனத்தையும் கவர்ந்தவன் என்பதை அறிந்து, கூச்சமடைந்தவனாய் நடந்துவந்தான். உழைத்துக் கருத்த தனது நீண்ட கையை, மேசையருகே வரும் முன்பே நீட்டினான். நகூல்னவும் முன்னால் நடந்து வந்து ஷாலீயைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

''இப்பலீத் மாமா, இது மிக அருமை! என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துக்கள்! எங்களது மற்ற கம்யூனிஸ்டுகளும் உன்னை வாழ்த்துகிறார்கள். நீண்ட நாட்கள் நோயின்றி வாழ வேண்டும். மேலும் ஒரு நூறாண்டு இந்தச் சுத்தியலை சோவியத் ஆட்சியின் நன்மைக்காகவும், நமது கூட்டுப் பண்ணையின் நலனுக்காகவும் பயன்படுத்து. நீ எவ்வளவு நீடித்து வாழ்கிறாயோ, அவ்வளவுக்கு எல்லாருக்கும் மனம் மகிழ்ச்சியாக இருக்கும். அதுதான் உண்மை!'' என்று கூறி வாழ்த்தினான்.

கட்சியின் நான்கு புதிய உறுப்பினர்களும் ஒரு சிறு கூட்டமாக நின்றுகொண்டு மற்ற கம்யூனிஸ்டுகளுடன் கைகளைக் குலுக்கிக் கொண்டனர். மற்றவர்களும் கதவருகில் கூடி ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் தவீதவ். ''குடிமக்களே, ஒரு நிமிடம் பொறுக்க வேண்டும்! என்னை சில வார்த்தைகள் சொல்ல விடுங்கள்'' என்று உரக்கப் பேசினான்.

''தலைவரே, பேசு. ஆனால் சுருக்கமாகப் பேசு. ஏனெனில் ஏற்கெனவே இங்கு வியர்த்துப் போய் உட்கார்ந்திருக்கிறோம்! இது ஏதோ குளியலறை மாதிரி இருக்கிறது!'' என்று கூட்டத்திலிருந்து ஒருவன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

கூட்டுப்பண்ணை விவசாயிகள் திரும்பவும் தங்களது முன்னைய இடங்களில் போய் உட்கார்ந்தார்கள். சில விநாடிகள் இரைச்சலாக இருந்தது. பின்னர் அமைதி ஏற்பட்டது.

''கூட்டுப்பண்ணையைச் சேர்ந்த ஆண்களே, பெண்

களே! குறிப்பாகப் பெண்களே! இதற்கு முன்னர் கண்டிராதது போல, இங்கு எல்லா உறுப்பினர்களுமே வந்திருக்கிறார்கள்...'' என்று தொடர்ந்தான் தவீதவ். ஆனால் வராந்தாவிலிருந்து உஷக்கோவ் குறுக்கிட்டுக் கத்தினான்.

''தவீதவ், நீயும் ஷ்சுக்கார் தாத்தா மாதிரித்தான் தொடங்குகிறாய்! அவனும், 'அன்பார்ந்த பெரியோர்களே! அன்புக் கிழவிகளே! என்பான். அதே போல நீயும் தொடங்குகிறாய். இருவரும் ஒரே பாணியில் தொடங்குகிறீர்களே.''

''அவர்களிருவரும் ஒருவரிடமிருந்து ஒருவர் படித்துக் கொள்கிறார்கள். தவீதவின் 'அதுதான் விஷயம்!' என்பதை ஷ்சுக்கார் பிடித்துக் கொண்டான். தவீதவோ, 'அன்புள்ள குடிமக்களே, கிழவிகளே!' என்பதை ஷ்சுக்காரிடம் இருந்து எடுத்துக் கொண்டான்,'' என்று ஒப்னீஸவ் தாத்தா குறுக்கிட்டுச் சொன்னான்.

இதைக் கேட்டு எழுந்த களங்கமற்ற சிரிப்புகளின் காற்றால் விளக்குகள் தாறுமாறாக எரிந்தன. ஒரு விளக்கு அணைந்தே போய்விட்டது. எப்போதும் செய்வது போல பல் விழுந்த தனது ஓட்டை வாயைத் தனது விரிந்த கையால் மூடிக்கொண்டு தவீதவ் சிரித்தான். நகூல்னவ் மட்டுந்தான் கோபத்துடன், ''இங்கே என்ன நடக்கிறது?! இந்தக் கூட்டத்தில் யாரும் அக்கறை காட்டவில்லை போல இருக்கிறதே! இந்த அக்கறை எங்கே? வியர்வையோடு உங்களது அக்கறையும் போய் விட்டதா?''

இது எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவது போலாயிற்று. வகுப்பறைகளில் எல்லாம் ஊடுருவிப் பரவி மீண்டும் எதிரொலித்தது. மக்கார் எதையும் கவனியாதவன் போல அடுத்த பக்கம் சன்னலைப் பார்த்துத் திரும்பிக் கொண்டான்.

அவனது கன்னங்களில் தாடை மீதிருந்த சதை நெளிவதும், இடது கண் புருவம் நெளிவதும், அவனாலும், எதையும் கவனியாதவன் போல இருக்க முடியவில்லை என்பதைக் காட்டின!

மறு விநாடி, எல்லாமே அமைதியாக இருந்தபொழுது, திடீரென்று பூச்சி கடிக்க, துடித்து உட்காருகிறவனைப் போல, மக்கார் குதித்து உட்கார்ந்தான். காரணம் பின்னாலிருந்து ஷ்சுக்கார் தாத்தாவின் சின்ன குரல் கேட்டது.

''உங்களைத்தான் நான் கேட்கிறேன், அன்புக் குடிமக்

களே! கிழவிகளே! என்று நான் ஏன் அழைக்கிறேன், தெரியுமா?'' என்று தனது முரட்டுக் குரலில் கேட்டான் ஷ்சுக்கார்.

கிழவன் தனது பேச்சை முடிப்பதற்குள்ளாக, மீண்டும் வெடித்த சிரிப்பில் மேலும் இரு விளக்குகள் அணைந்து விட்டன. பாதி இருட்டில் யாரோ ஒருவர் விளக்குக் கண்ணாடியை உடைத்துவிட்டு, கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தான். இன்னொரு பெண் இதைக் கேட்டுக் கோபம் அடைந்தவளாய், ''ஒழுங்காக நடந்து கொள்! இருட்டாக இருப்பதால் எதையும் பேசலாம் என்று நினைக்காதே, முட்டாள்!'' என்று கத்தினாள்.

சிரிப்பொலி மெதுவாக அடங்கியது. மீண்டும் அமைதியைக் கலைத்துக்கொண்டு ஷ்சுக்கார் கரகரத்த குரலில் பேசுவது கேட்டது: ''ஒரு முட்டாள் இருட்டில் கெட்ட வார்த்தை பேசுகிறான். மற்றவர்களும் காரணமில்லாமலே சிரிக்கிறார்கள்... இப்பொழுதெல்லாம் வாழ்க்கை வேடிக்கையாகிவிட்டது! ஒரு மனிதனைக் கூட்டங்களுக்குப் போக விடாமல் தடுக்க இது போதும்! நான் இப்பொழுது ஏனென்று விளக்கிச் சொல்லப் போகிறேன். 'அன்பார்ந்த குடிமக்களே! கிழவிகளே!' ஏனென்றால், கிழவிகள் பாது காப்பானவர்கள் நம்பிக்கையானவர்கள். எந்தக் கிழவியையும் எடுத்துக் கொள்ளுங்கள். நமது அரசு வங்கி மாதிரி. குரங்குத்தனமே கிடையாது. இந்தத் தள்ளாத வயதில் குறும்பு விளையாட்டுக்களை அவர்களிடமிருந்து நான் எதிர்பார்க்கவில்லை. இளம் பெண்களையும், குமரிகளையும் பொருத்த மட்டில் என்னால் அவர்களைப் பார்க்கவே சகிக்காது! உங்களை ஏனென்று கேட்கிறேன்? என் கையிலே குழந்தையைப் போட்டுவிட்டவள் யாரோ ஒரு மரியாதைக்குரிய கிழவியாக இருக்க முடியாது. அது கிழவின் வேலையல்ல. நல்ல கட்டுடலுடைய கிழவியால்கூட ஒரு குழந்தையைப் பெற முடியாதல்லவா? யாரோ ஓர் இளம் பெண், அவள் ஆட வேண்டிய விளையாட்டையெல்லாம் ஆடிவிட்டு, குழந்தையை என் தலையில் கட்டிவிட்டாள். இப்பொழுது நான் தந்தையாம்! ஆகையால்தான் இந்த இளம் பெண்களைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. இவர்களில் யாரையுமே பார்த்துக் கண் அடிக்கக்கூட மாட்டேன்! எனக்கு அவ்வளவு கெடுதல் செய்துவிட்டார்கள். யாராவது

அழகிய இளம் பெண்ணைக் கண்டால் கிடுகிடுப்பே வருகிறது. அவர்கள் இந்தப் பாவியை அந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டார்கள்!.. இதற்குப் பிறகு அவர்களை நான் எப்படி அழைப்பேன் என்று எதிர்பார்க்கிறீர்கள். 'எனது அன்பார்ந்த ஒழுக்கம் நிறைந்த இளம் பெண்களே! குமாரிகளே!' என்றழைக்கட்டுமா? அவர்களுக்கு நான் அருமையான புகழ்மாலை சூட்ட வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா? இந்த உலகமே கிடைப்பதாயினும், முடியாது!''

பொறுமையிழந்த நகூல்னவ், புருவங்களை நெறித்து உயர உயர்த்தி, மிகுந்த வியப்போடு, ''தாத்தா, நீ எங்கிருந்து முளைத்தாய்? ஒரு மணி நேரத்திற்கு முன்னர் தானே உன் வீட்டுக் கிழவி உன்னை வீட்டுக்கு இழுத்துக்கொண்டு போனாள். திரும்பவும், எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?''

''வீட்டிற்கு இழுத்துக்கொண்டு போனாளா? அதனால் என்ன?'' ஷ்சுக்கார் பெருமையோடு பதில் சொன்னான். ''அதனால் உனக்கு என்ன? அது எங்கள் சொந்த விஷயம், அது கட்சி விஷயமல்ல. தெளிவாயிற்றா?''

''இல்லை, உன்னை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனால், அதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டுமல்லவா? இப்பொழுது நீ வீட்டில்தானே இருந்திருக்க வேண்டும்.''

''நான் வீட்டில்தானிருந்தேன், ஆனால் இப்பொழுது இல்லை, மக்கார் தம்பி! எனக்கு யாரும் உத்தரவு போடமுடியாது. நீயோ, எங்கள் வீட்டுக் கிழவியோ போடக் கூடாது. சனியனாய்ப் போக! என்னைத் தனிமையில் விட்டு விடுங்கள்.''

சிரிப்பை அடக்க முடியாத தவீதவ், ''எப்படி நழுவி வந்தாய் தாத்தா?'' என்று கேட்டான்.

வரவர, ஷ்சுக்காரை வைத்துக்கொண்டு தவீதவால் சிரிப்பை அடக்கவே முடிவதில்லை. அவனைப் பார்த்தால் கூட சிரிக்காமல் இருக்க முடியாது. கிழவனின் பதிலுக்காகக் காத்திருந்தான். கண்களைச் சிமிட்டிக்கொண்டு, கையால் வாயைப் பொத்தியிருந்தான். நகூல்னவ் தனது எரிச்சலை மறைக்காமல் ரகசியமாக, ''செமியோன், என்ன சமாச்சாரம்? கிச்சுக் காட்டினால் சிரிக்கிற குமரிப்பெண் மாதிரி சிரிக்கிறாயே, ஏன்? நீ ஓர் ஆண்பிள்ளையே இல்லை!''

தவீதவின் கேள்வியால் தைரியமடைந்த ஷ்சுக்கார்

வகுப்பறையிலிருந்த கூட்டத்தை இடித்துக் கொண்டு மேடையை நோக்கி முன்னால் நடந்துவந்தான்.

''தாத்தா! நீ என்ன செய்கிறாய்?'' என்று நகூல்னவ் கத்தினான். ''மக்கள் தலைமீதா நடக்கிறாய்? நீ இருக்கிற இடத்திலிருந்தே பேசு. பேச நாங்கள் அநுமதி கொடுக்கிறோம். ஆனால் சுருக்கமாகப் பேசு!''

பாதி வழியில் நின்ற ஷ்சுக்கார் கோபத்தோடு கத்தினான்: ''எங்கிருந்து பேச வேண்டும் என்பதை உன் பாட்டியிடம் சொல்லு. எனக்கு எங்கிருந்து பேச வேண்டும் என்று தெரியும்! நீ மேடையிலிருந்து என்னென்னவோ உளறுகிறாய். ஆனால், நான் மட்டும் மக்களுக்குப் பின்னாலிருந்து ஏன் பேச வேண்டும்? இங்கிருந்து ஒரு முகத்தைக்கூடக் காண முடியாது. இங்கிருந்து நான் யாரிடம் பேச முடியும்? தலைகளையும் முதுகுகளையும் பார்த்துக் கொண்டா பேசுவது? நீ விரும்பினால், நீ வேண்டுமானால் இங்கு வந்து பேசு! ஆனால், நான் பேசும்போது மக்களின் முகத்தைக் கண்ணால் பார்த்துக்கொண்டு பேச விரும்புகிறேன்! புரிகிறதா? கொஞ்ச நேரம் வாயை மூடிக்கொண்டிரு. நான் தொடர்ந்து பேசவிடாமல் குறுக்கிடாதே. முன் கூட்டியே என் பேச்சில் குறுக்கிடுவது உனக்குப் பழக்கமாகிவிட்டது. நான் வாயைத் திறப்பதற்குள், நீ சத்தம் போட்டு என்னை விமர்சனம் செய்யத்தொடங்கிவிடுகிறாய். இல்லை தம்பி! இது நாம் போக வேண்டிய பாதை அல்ல!''

மேசையருகில் வந்தவுடன், தனது ஒரு கண்ணால் மக்காரை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டு, ''மக்கார் தம்பி. எங்காவது ஒரு பெண், ஓர் ஆளை அவசரமான முக்கியமான அலுவலில் இருக்கும் போது குறுக்கிட்டு அழைத்துப்போவது உண்டா? நேர்மையாகப் பதில் சொல்ல வேண்டும்!''

''தீ விபத்தோ, பெரும் விபத்தோ ஏற்பட்ட நேரங்களில் அப்படி நடந்திருக்கும். கூட்டத்தைக் கெடுக்காதே, தாத்தா. தவீதவ் பேசி முடிக்கட்டும். கூட்டம் முடிந்தவுடன் நீயும், நானும் வீட்டுக்குப் போய், நீ விரும்பினால் விடியும்வரை பேசிக்கொண்டே இருப்போம்.''

வணங்கா முடியான நகூல்னவ், கூட்டத்தை நீட்டிக் கொண்டே போகவிடாமல் முடித்து வைக்க ஷ்சுக்கார் கிழவனுடைய பேச்சை முடிக்க வேண்டும் என்ற நோக்குடன், அவனுக்கு விட்டுக் கொடுத்தே பேசினான். ஆனால் அவன்

எதிர்பார்த்திராத வெற்றி பெற்றான். ஷ்சுக்கார் தாத்தா ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, சட்டை நுனியால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, மெய்யான உணர்ச்சியுடன் பேசினான்: ''இன்றைய இரவை குதிரைகளோடு கழிப்பதும், உன்னோடு கழிப்பதும் எனக்கு ஒன்றுதான். ஆனால், இன்றிரவு என் வீட்டில் முகத்தைக் காட்டவே முடியாது. என்னுடைய கிழவியோடு பெரிய போராட்டமே காத்திருக்கிறது. என் வீட்டு வாசற்படியிலேயே முளையறையப் படலாம். அது மிகவும் சுலபத்தில் நடந்துவிடும்!''

தவீதவ் பக்கம் ஷ்சுக்கார் அவித்த ஆப்பிள் பழம் மாதிரி சுருங்கிய சிவந்த முகத்தைத் திருப்பி மிக உறுதியான குரலில் பேசினான்: ''வீட்டை விட்டு எப்படி வந்தேன், என்று கேட்கிறாய் அல்லவா செமியோன். அது சுலபமானது என்று நினைக்கிறாயா? ஓரிரு வார்த்தைகளில் கூட்டத்தினர்க்கு அதை விளக்கிவிடுகிறேன். ஒரு நிமிடம்கூடப் பிடிக்காது. என்னுடைய பயங்கரமான கிழவியைப் பற்றிச் சொல்லி விடுகிறேன். மக்களிடமிருந்து கொஞ்சம் இரக்கத்தை நான் பெற்றாக வேண்டும். அவ்வாறு நான் பெறாவிட்டால், ஷ்சுக்கார், இந்த ஈர மண்ணிலேயே வீழ்ந்து இங்கேயே நீ மடிந்துவிடுவது நல்லது! கடவுள் உன்னோடு இருப்பாராக! இந்தச் சிரமமான வாழ்க்கைச் சுழற்சி என்னை அந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டது... ஒரு மணி நேரத்துக்கு முன்னால், எனது விருப்பப்படி, வெளியில் உட்கார்ந்திருந்து அன்தீப்புடன் புகை பிடித்துக்கொண்டு, நடிகர்களைப் பற்றியும், நமது வாழ்க்கை பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். நாசமாய்ப் போன சூன்யக்காரி அங்கே வந்தாள். என் கையைப் பிடித்துப் பரபரவென்று, ஏதோ முரட்டுக் குதிரை கலப்பையைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு போவது மாதிரி இழுத்துக் கொண்டு போனாள். ஒரு ரோமம்கூட கூச்செரிந்து நிற்கவில்லை முணகவும் இல்லை. அசதியால் மூச்சுவிடவும் இல்லை. இரு கால்களையும் ஊன்றி என்னாலானவரை முயன்றும் பலனில்லை.

''உங்களுக்குத் தெரிய வேண்டுமானால் சொல்கிறேன். என் வீட்டுக் கிழவியை உழவுக்கோ, வண்டி இழுக்கவோ பயன் படுத்தலாம். இவளுக்கு என்னை இழுத்துக் கொண்டு போவதென்பது ஒரு சின்னப்பிள்ளை விளையாட்டு. அவ்வளவு வலிமை அந்த சூன்யக்காரிக்கு! கடவுளுக்குப் பொது

வாகச் சொல்கிறேன், வண்டிக் குதிரை அளவு சக்தி அவளுக்கு உண்டு! நான் பொய் சொல்லவில்லை. அவளுக்கு எவ்வளவு சக்தி உண்டு என்று யாருக்காவது தெரியுமென்றால், அது எனக்குத்தான். என் தோலிலேயே அதை உணர்ந்திருக்கிறேன்...

''அவள் என்னை இழுத்துக் கொண்டே போனாள், என்னால் என்ன செய்ய முடியும்? வலிமை வலிமைதானே. எனவே நான் அவள் பின்னால் ஓடினேன். 'பிறந்த குழந்தையைத் தாயின் மார்பிலிருந்து எடுத்துச் செல்வதைப் போல, கூட்டத்தை விட்டு என்னை ஏன் இழுத்துச் செல்கிறாய்? எனக்கு அங்கு வேலை இருக்கிறது!' என்று சொன்னேன். அதற்கு அவள் 'வா கிழமே. நம் வீட்டு சன்னல் கொய்யாக் கட்டை உடைந்துவிட்டது. அதைச் சரி செய்யாவிட்டால், ராத்திரிக்குக் காற்றடித்து சன்னல் உடைந்து விடும்' என்று சொன்னாள். இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? உனக்கு நல்ல சமாச்சாரம்தான்! 'நாளைக்கு அந்தத் தாழ்ப்பாள் கட்டையைச் சரிசெய்து கொள்ளக் கூடாதா?' என்று நான் சொன்னேன். 'உனக்கு புத்தி சரியில்லை. நீ ஒரு முட்டைக் கோசுக் கட்டை!' என்றேன். அதற்கு அவள் 'நான் காய்ச்சலாக இருக்கிறேன். நானே காய்ச்சலாக இருந்து எனக்குச் சளித்துவிட்டது. எனவே என்னோடு கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தால் உனக்கு என்ன மோசமாம்' என்றாள். இதுவும் சரிதான் என்று நான் நினைத்துக் கொண்டேன்! எனவே அவளிடம் 'யாராவது ஒரு கிழவியைக் கூப்பிட்டு உன் அருகில் உட்கார வைத்துக்கொள். நான் கூட்டத்துக்குப் போய் அகஃபோன் துப்த்ஸோவுக்கு எதிராக என் மறுப்பைத் தெரிவித்துவிட்டு வருகிறேன்' என்றேன். அதற்கு அவள் 'நீ என்னோடு இருக்க வேண்டும். எனக்கு ஒரு கிழவியும் வேண்டாம்' என்றாள். இந்த மூன்று பதில்களைத்தான் அவளிடமிருந்து நான் பெறமுடிந்தது!

''நான் என்ன செய்யலாம்? மனிதனது மேன்மையை விட்டுக்கொடுத்து நடப்பதா? தாண்ட முடியாத முட்டாள்தனத்திலிருந்து நானே வெளியேற்றிக் கொள்வதா? அதைத்தான் நான் செய்தேன். நானாகவே என்னை வெளியேற்றிக் கொண்டேன். நாங்கள் வீட்டுக்குள் நுழைந்தவுடன், மீண்டும் முற்றத்திற்கு நழுவினேன். அடுத்துப் படிகளுக்குப் போனேன். அவசரம் அவசரமாக கதவுத் தாழ்ப்பாளைப்

பூட்டினேன். பழையபடியும் பள்ளிக்கூடத்துக்கு ஓடி வந்துவிட்டேன்! எங்கள் குடிலின் சன்னல்கள் மிகவும் சிறியவை, குறுகியவை. என் வீட்டுக் கிழவியோ மிகவும் பெரியவள், கனமானவள் என்பது உங்களுக்கே தெரியும். எதன் வழியாகவும் அவளால் வெளி வரவே முடியாது. வந்தால் வேலியின் சிறிய உடைப்பில் மாட்டிக்கொண்ட கனத்த பன்றி மாதிரி மாட்டிக்கொள்வாள். இதை சோதித்துவிட்டோம். இதற்கு முன்னரே ஒரு முறை முயன்று மாட்டிக் கொண்டாள். புரட்சிக் காலத்திற்கு முன்னால் கழிவுத் தண்ணீர்த் தொட்டியில் உட்கார்ந்திருக்குமே பிசாசு அது மாதிரி அவள் வீட்டில் உட்கார்ந்து இருக்கிறாள்! யாராவது இரங்கினால் அவனே போய் அவளைத் திறந்துவிடட்டும். எக்காரணங்கொண்டும் அவள் முன்னால் என்னால் போய் இனி நிற்கவே முடியாது. இரண்டு நாட்களுக்குத் தற்காலிகமாக நான் யார் வீட்டிலாவது தங்கப் போகிறேன். அவள் கோபம் சற்றுத் தணியும்வரை நான் அங்கு போகமாட்டேன். என் வாழ்வைப் பணயம் வைத்து அவளிடம் போய், இந்தப் போராட்டங்களில் நான் மாட்டிக் கொள்ள மாட்டேன். அவளுடைய ஆத்திர புத்தியில் என்னைக் கொன்றுவிட்டால், பிறகு என்ன செய்வது? அரசு வழக்குரைஞர் என்னை இறந்த கணக்கில் எழுதிவிட்டு விடுவார்! ஐயையோ! அதுதான் முடியாது. அதையெல்லாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்! இதையெல்லாம் விளக்கிச் சொல்லாமலே, ஒரு புத்திசாலி தெரிந்துகொள்வான். ஆனால் ஒரு முட்டாளுக்கு நீங்கள் எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும், அவன் செத்து, அவனைச் சுவப்பெட்டியில் வைக்கும் வரையில் அவன் அப்படித் தான் இருப்பான்!''

''தாத்தா, நீ முடித்துவிட்டாயா?'' என்று ரஸ்மியோத்னவ் அமைதியாகக் கேட்டான்.

''நான் முடிக்காமலிருக்க முடியாது. ஏனெனில் அகஃபோனுக்கு எதிராக மறுப்பைத் தெரிவிக்க மிகவும் சுணங்கிவிட்டது. நம் கட்சிக்குள்ளும் அவனை விட்டுவிட்டீர்கள். எல்லாம் நன்மைக்காகவே இருக்கலாம். நானும்கூட உங்களுடன் ஒத்துப் போகக்கூடும். நான் என் கிழவியைப் பற்றி விளக்கிச் சொல்லிவிட்டேன். இங்கு உட்கார்ந்துள்ள உங்கள் எல்லாருடைய கண்களையும் பார்க்கும்பொழுது, நீங்கள் எனக்காகப் பெரிதும் கவலைப்படுவது தெரிகிறது.

ஆக, எனக்கு இதற்கு மேல் என்ன வேண்டும்? என் மன மாரப் பேசிவிட்டேன். எல்லா நேரமும் குதிரைகளுடனேயே பேசிக் கொண்டிருக்க முடியுமா? இப்பொழுது முடியுமா? அவைகளைக் காட்டிலும் இங்குள்ளவர்கள் ஓரளவு சுமா ராகவே விளங்கிக் கொள்கிறீர்கள்...''

''சரிதான் கிழவா, உட்கார். மீண்டும் பேசத் தொடங்கி விடுவாய்'' என்று உத்திரவிட்டான் நகூல்னவ்.

எல்லாரும் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, வழக்கமான மறுப்பு ஏதும் சொல்லாமல் அமைதியாகத் தனது இடத் துக்குப் போனான் ஷ்சுக்கார். ஆனால் அவனது சிரிப்பில் இருந்த மனநிறைவு, கிளர்ச்சி, அவனது ஒரு கண்ணில் பொங் கிய இன்பம், புத்தொளி, இவையெல்லாம் தெட்டத் தெளி வாக, வெற்றி பெற்றவனாகக் காட்டியதேயன்றி, தோற்ற வனாகக் காட்டவில்லை. அவன் போனபோது நட்புரிமை யான சிரிப்புகள் வரவேற்றன. கிரெமியாச்சி கிராம மக்கள் இந்தக் கிழவனிடம் தனி அன்பு செலுத்தித் தான் வந்திருக் கின்றனர்.

அகஃபோனால் தனக்குக் கிடைத்த வாய்ப்பை வைத்து, கிழவனின் மகிழ்ச்சியைக் கெடுக்காமலிருக்க முடியவில்லை. ஷ்சுக்கார், தன்னைப் பற்றியே பெரிதாக நினைத்துக் கொண்டு, இவனைக் கடந்து சென்றபொழுது, அகஃபோன் தனது அம்மைத் தழும்புவிழுந்த முகத்தைக் கோரமாக பயங்கரமாக வைத்துக்கொண்டு, குசுகுசு குரலில், ''ஐயோ கிழவா!.. இந்தத் தடவை நீ செய்துவிட்டாய். சரி நாம் விடைபெற்றுக் கொள்வோம்!''

ஷ்சுக்கார் திடீரென நின்று, தனது உதடுகளை மென்று கொண்டே நின்றான். கடைசியாக போதிய துணிவை வர வழைத்துக் கொண்டு, நடுங்கும் குரலில், ''எப்படி... என்ன சொல்கிறாய் அகஃபோன்? நாம் ஏன் விடை பெற்றுக் கொள்ள வேண்டும்?''

''நான் என்ன சொல்கிறேன் என்றால், உனக்குக் கொஞ்ச நேரம் தான் ஆயுள் இருக்கிறது... இந்த உலகத்திலே உனக்கு ஒரே ஒரு முறை மூச்சுவிடவும், ஒரு சுற்றுச் சுற்றிப் பார்க்கவும் தான் நேரம் இருக்கிறது. நீ தெரிந்து கொள் வதற்கு முன்னதாகவே, நீ சவப்பெட்டியில் இருக்கப் போ கிறாய்...''

''அகஃபோன், இது... இது எதற்காக?''

''இதிலே ஒரு மர்மமும் இல்லை! அவர்கள் உன்னைக் கொல்லப் போகிறார்கள்.''

''யார்?'' ஷ்சுக்கார் மூர்ச்சையடைந்து விடாமல் சமாளித்துக் கொண்டான்.

''ஏனா? கொந்திராத் மய்தானிக்கவும், அவன் மனைவியும்தான். அவளை ஏற்கெனவே வீட்டிற்கு அனுப்பிக் கோடரியைக் கொண்டுவரச் சொல்லிவிட்டான்.''

ஷ்சுக்காரின் கால்கள் நடுங்கின. தளர்ந்து போய் பக்கத்திலிருந்த பெஞ்சில் உட்கார்ந்தான். துப்த்ஸோவ் அவனுக்கு இடம் விட்டு நகர்ந்தான்.

''எதற்காக என் உயிரை எடுக்க வேண்டும் என்று அவன் முடிவு செய்தான்?''

''உன்னால் ஊகிக்க முடியவில்லையா?''

''அவனுக்கெதிராக மறுப்பை எழுப்பியதாலா?''

''ஆமாம், அதுதான்! விமரிசனத்துக்காக அவர்கள் எப்போதுமே கொன்றுவிடுவார்கள். சில சமயங்களில் கோடரியாலும், சில சமயங்களில் அறுக்கப்பட்ட ரைபிளாலும், கொல்வார்கள். நீ எதனால் கொல்லப்பட விரும்புகிறாய்? துப்பாக்கிக் குண்டாலா? கோடரியாலா?''

''நான் எதை விரும்புகிறேனா? நல்ல மாதிரிக் கேட்கிறாயே! இது போன்ற சம்பவத்தை யார் விரும்புவார்கள்?!'' ஷ்சுக்கார் வெறுப்போடு பேசினான். ''நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நீ கூறினால் நல்லது. அந்தப் படு முட்டாளிடமிருந்து நான் எப்படி என்னைக் காப்பாற்றிக் கொள்வது?''

''நீ உயிரோடு இருக்கும்போதே அதிகாரிகளிடம் சொல்வது நல்லது.''

''நீ சொல்வதுதான் சரியாகப் படுகிறது'' என்று சிறிது நேர யோசனைக்குப் பிறகு சொன்னான் ஷ்சுக்கார். ''மக்காரிடம் நேராகப் போய் புகார் செய்கிறேன். ஆனால், இந்தக் கொந்திராத் என்னைக் கொலை செய்வதால் வரும் கடுந்தண்டனை பற்றிக் கவலைப்படவே இல்லையா?''

''ஷ்சுக்காரைக் கொல்வதற்காக, எனக்கு ஓராண்டுக்கு மேல் தண்டனை தரமாட்டார்கள் என்று சொல்கிறான். இல்லையென்றால் அதிகமாக இரண்டு ஆண்டுகள். அதை நான் பொறுத்துக்கொள்வேன்... இப்படிப்பட்ட கிழங்களுக்காக அதிகத் தண்டனை கொடுக்க மாட்டார்கள். அது

வும் கோழிக்குஞ்சு மனம் படைத்த ஆளுக்காக நிச்சயம் இருக்காது என்கிறான்.''

''நாய்க் குட்டிக்குப் பிறந்தவன்! அவன் பேசிய பேச்சுக்கே என்ன பாடுபடப் போகிறான் பார். அவன் மொத்தமாகப் பத்து ஆண்டுகள் வாங்கப் போகிறான். இது எனக்கு நன்கு தெரியும்!'' என்று ஷ்சுக்கார் கோபமாகக் கூவினான்.

இது கேட்டு, நகூல்னவ் ''பாதிக் கழுத்தறுபட்ட ஆடு மாதிரி மீண்டும் நீ அலறினால், உடனே கூட்டத்தை விட்டு விரட்டியே விடுவோம்!'' என்று கடுமையாக எச்சரித்தான்.

''தாத்தா, சும்மா உட்கார். இங்கிருந்து வீட்டிற்கு உன்னை நான் கொண்டுபோய் விடுகிறேன். உனக்கு ஒரு துன்பமும் வரவிடமாட்டேன்!'' என்று துப்த்ஸோவ் முணுமுணுத்தபடி உறுதி சொன்னான்.

பதிலுக்கு ஷ்சுக்கார் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. முழங்காலை மடித்து அதன்மீது தோள்களைச் சாய்த்து தலையைத் தொங்கப்போட்டு உட்கார்ந்திருந்தான். அவன் எதையோ தீவிரமாக சிரித்துக்கொண்டிருந்தான். புருவங்கள் வேதனையால் நெளிந்தன. திடீரென குதித்தெழுந்து, தலைவரது மேசையை நோக்கி ஓடினான். நகூல்னவிடம் குனிந்து காதோடு காதாக ஏதோ சொல்லி, முதலில் துப்த்ஸோவையும், அடுத்து மய்தானிக்கவையும் சுட்டிக்காட்டினான்.

நகூல்னவைச் சிரிக்க வைப்பது என்பது மிகவும் கடினமான காரியம், முடியாத செயலும் கூட. அப்படியிருந்தும் துப்த்ஸோவை வெறுப்புடன் பார்த்தவாறு நகூல்னவ் முறுவலித்தான். அவனது உதடுகளின் கடைக்கோடிகள் நெளிந்து சிரித்தன. ''இங்கே உட்கார். சும்மா படபடக்காதே. இல்லை என்றால் தொல்லைக்குள் நீயாகவே மாட்டிக்கொள்வாய்'' என்று முணுமுணுத்துத் தனக்குப் பின்னால் ஷ்சுக்காரை இழுத்து உட்கார வைத்தான்.

கொஞ்ச நேரம் கழித்து, வெற்றிகண்ட உறுதிபெற்ற ஷ்சுக்கார், மய்தானிக்கவை இடது பக்கமாக வளைந்து பார்த்து கண்ணைப் பிதுக்கி உருட்டிக் காட்டினான். வியப்படைந்த கொந்திராத் புருவங்களை நெறித்து உயர்த்தினான், மக்காரின் பாதுகாப்பில் இருந்த ஷ்சுக்கார் இரு முறை கண்களை உருட்டி விழித்துக் காட்டினான்.

''எதற்காக இந்தக் கிழவன் உன்னைப் பார்த்து கண்களை உருட்டுகிறான்?'' என்று மய்தானிக்கவுக்கு அருகிலிருந்த அன்தீப் கேட்டான்.

''ஒன்றும் புரியவில்லையே, எதற்காக இப்படிச் செய்கிறான்?'' என்று எரிச்சலுடன் கொந்திராத் பதில் சொன்னான். ''இப்பொழுதெல்லாம், அவனுக்கு எதைக் சொன்னாலும் சர்ரென்று வந்துவிடுகிறது என்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இப்பொழுது நேரமாகிவிட்டது. அவன் என்ன கோழிக்குஞ்சா? இன்று காலைமுதல் மிகவும் சிரமப்பட்டிருக்கிறான், அந்த அப்பாவி! அதற்கு முன்னெல்லாம் நாங்கள் இரண்டு பேருமே நன்றாக ஒத்துப் போய்த்தான் வந்தோம், ஆனால் இப்பொழுது அவன் எனக்கு விரோதமாக ஏதோ ஒன்றை வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. என்ன என்று அவனைக் கேட்க வேண்டும்.''

சந்தர்ப்பவசமாக ஷ்சுக்கார் சற்று நேரத்துக்கு முன்னால் உட்கார்ந்திருந்த வரிசைப் பக்கம் திரும்பிப் பார்த்தான் கொந்திராத். அருகிலிருந்த அன்தீப்பை முழங்கையால் லேசாக இடித்து விட்டு அமைதியாகச் சிரித்தான்.

''இவன் அகஃபோனுக்கு அடுத்து உட்கார்ந்து இருக்கிறான். இந்த பிசாசு அகஃபோன் என்னைப் பற்றி ஷ்சுக்காரின் காதில் ஏதாவது ஓதியிருப்பான், ஏதாவது கற்பனைக் கதையைத் திரித்திருப்பான். அவ்வளவு தான் கிழவன் நடுங்கிவிட்டான். ஆனால் என் வாழ்க்கையில் அவனை நிலைகுலையும்படி ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. அவன் ஒரு சின்னக் குழந்தை மாதிரி, யார் என்ன சொன்னாலும் நம்பிவிடுகிறான்'' என்றான் கொந்திராத்.

மேசையருகில் நின்றிருந்த தவீதவ், கிராமத்து மக்கள் மெதுவாக தங்கள் தங்கள் இடத்தில் போய் உட்காருவதற்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

''ஆரம்பி தவீதவ்! எங்களைக் காக்க வைக்காதே!'' என்று பொறுமையிழந்த உஷக்கோவ் கத்தினான்.

தவீதவ் ரஸ்மியோத்னவிடம் ஏதோ முணுமுணுத்து விட்டு அவசரமாகத் தொடர்ந்தான். ''நான் உங்களை நீளக் காக்கவைக்க மாட்டேன், அதுதான் விஷயம்! நான் பெண்களைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பதற்குக் காரணம், இது இவர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். இன்று கூட்டுப்

பண்ணை விவசாயிகள் அனைவரும் வந்துள்ளனர். கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஆலோசனை செய்து, இந்தத் தீர்மானத்தை உங்கள் முன்னர் வைக்கிறோம். தொழிற்சாலைகளில், வெகு நாட்களாகவே, குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையங்களும், கிண்டர்கார்டன்களும் இருக்கின்றன, காலை முதல் இரவு வரை குழந்தைகளுக்கு உணவு கொடுத்துக் கவனித்துக் கொள்கிறார்கள். அநுபவமுள்ள ஆசிரியர்களும், நர்சுகளும் குழந்தைகளைக் கவனித்துக் கொள்கின்றார்கள். அது தான் உண்மை, தோழர்களே! இதற்கிடையே வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் குழந்தைகளைப் பற்றிக் கொஞ்சமும், கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. தங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டியது இல்லை என்பதால் அவர்களுக்குத் தொல்லை இல்லை. நாமும் நமது பண்ணையில் அது போன்ற ஒரு கிண்டர்கார்டனை ஏன் அமைக்கக் கூடாது? இரண்டு குலாக்குகளின் வீடுகள் காலியாகின்றன. பால் இருக்கிறது. ரொட்டி, கறி, தானியம், இன்னும் வேறு சில பொருள்களும் நமது பண்டசாலையில் இருக்கின்றன. அது தான் விஷயம்! நம்முடைய சின்னஞ்சிறு குடிமக்களுக்கு வேண்டிய உணவையும்,பராமரிப்பையும் நம்மால் கொடுக்க முடியும். பின்னர் நம்மை எது தடுக்க முடியும்? தானிய அறுவடை நெருங்கி விட்டது. இப்பொழுது பெண்கள் வேலை செய்துகொண்டிருக்கிற முறையே பிடிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒன்றுமே பயனில்லை. நான் நேரடியாகவே சொல்கிறேன், அது உங்களுக்கே தெரியும். என்ன, கூட்டுப்பண்ணையின் பெண் விவசாயிகளே, எங்களது ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறீர்களா? இப்பொழுது வாக்கெடுப்பு நடத்துவோம். பெரும்பான்மையினர் நம் பக்கம் இருந்தால் இந்த முடிவை அமுல் படுத்திவிடுவோம். இதற்காக மற்றொரு கூட்டத்தை மீண்டும் கூட்ட வேண்டியதில்லை, அல்லவா? ஆதரிப்பவர்கள் யார்? தயவு செய்து கையை உயர்த்துங்கள்.''

''இந்த அரிய கருத்துக்கு எதிராக யார் இருப்பார்கள்?'' என்று பெரிய குடும்பத்தைக் கொண்ட தூரீலினின் மனைவி சொன்னாள். சுற்றியிருந்த பெண்களைப் பார்த்துக் கொண்டே தனது மெலிந்த கையை உயர்த்தினாள்.

நெருக்கமாக வளர்ந்த காடு மாதிரி வகுப்பறையில்

நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் இருந்த ஆண் களும் பெண்களும் தங்களது கைகளை உயர்த்தினார்கள். யாரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. தவீதவ் கைகளைத் தேய்த்துக்கொண்டு, மனநிறைவோடு முறுவலித்தான்.

''ஒரு கிண்டர்கார்டனைத் தொடங்க வேண்டும் என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது! அன்புள்ள தோழர்களே, குடிமக்களே! இப்படிப்பட்ட ஒன்றுபட்ட முடிவைக் காண்பது மிகவும் அருமையானது. இந்தத் தடவை சரியாகக் குறிபார்த்து அடித்துவிட்டோம், இதுதான் உண்மை! நாளை வேலைக்காக உட்கார்ந்து விடுவோம். நிர்வாக அலுவலகத்துக்கு, நாளைக் காலை, சமையலை முடித்துவிட்டு, சுமார் ஆறுமணி வாக்கில் தாய்மார் வந்து உங்கள் குழந்தைகளைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும். பெண்களே, உங்களுக்குள்ளேயே பேசி, சுத்தமாக, நன் றாகச் சமைக்கக்கூடிய ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுங்கள். அதே போல இரண்டு மூன்று, சுறுசுறுப்புள்ள துடிப்பான, குழந்தைகள் மீது அன்பு காட்டக் கூடிய பெண்களையும் நர்சுகளாகப் பணிபுரியத் தேர்ந்தெடுங்கள். மாவட்டத் தலைமை அலுவலகத்திலிருந்து நமக்கு ஒரு பெண் மேலா ளரை அழைத்துக் கொள்ளலாம், ஏனென்றால் அவளுக்கு எழுதப்படிக்கவும், கணக்கு வைக்கவும் தெரிய வேண்டும். நாம் இந்தக் காரியத்தைப் பரிசீலித்து விட்டோம். மேற் கொண்டு பார்க்கலாம். சமையல்காரிக்கும், நர்சுகள் ஒவ் வொருவருக்கும் தினசரி வேலைக்கு ஓர் உழைப்பு நாள் என்று கணக்கிட்டுக் கொள்வோம்.பெண் மேலாளருக்கு அரசு நிர்ணயப்படி நிரந்தரமான குறிப்பிட்ட சம்பளத்தைக் கொடுப்போம். அது ஒன்றும் நம்மைக் கெடுத்துவிடாது, அதுதான் விஷயம்! இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பணம் செலவழிக்க நாம் தயங்கக் கூடாது. ஏனெனில் இதனால் வேலைக்கு வருகிற பெண்களின் எண்ணிக்கை கூடும். இதை நான் நிரூபித்துக் காட்டக்கூடிய நாள் வரும். அது தான் விஷயம்! இரண்டு முதல் ஏழு வயது வரையுள்ள குழந்தைகளை நாம் ஏற்போம். ஏதாவது கேள்விகள் உண்டா?''

''ஓர் உழைப்புநாள் என்று குறிப்பிடுவது அதிகமில் லையா? குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது என்பது, கதிரடிப்புக்காலத்தில் வண்டியடிப்பது போல சிரமமான

காரியமா?'' என்று அந்தக் கிராமத்திலேயே கடைசியாக கூட்டுப்பண்ணையில் சேர்ந்த யெஃபீம் க்ரிவஷேயெவ், தனது சந்தேகங்களை வெளிப்படையாக உரத்த குரலில் சொன்னான்.

இது கேட்டு ஆத்திரமடைந்த பெண்கள் அவன் காதே செவிடுபடும் படியாகக் கரித்துக்கொட்டினார்கள். முகத்தை மூடிக்கொண்டு, தேனீக்களை விரட்டுகிறவனைப்போல கையால் ஓட்டிக்கொண்டிருந்தான் யெஃபீம். எனினும் ஆரம்பத்தில்தான் இப்படி இருந்தது. வரும் ஆபத்தைப் புரிந்தவனாய் மேசை மீது தாவி ஏறி நின்று கூவினான்: ''அன்புள்ள பெண்மணிகளே! தயவு செய்து கொஞ்சம் விலகி நில்லுங்கள்! இயேசுவுக்குப் பொதுவாகக் கேட்கிறேன்! சற்றே விலகி நில்லுங்களேன். ஏதோ தெரியாத்தனமாக வாய் தவறி வந்து விட்டது! என்னுடைய மதிகெட்ட நாக்கு என்னை முட்டாளாக்கிவிட்டது. என்னை விட்டுவிடுங்கள். முட்டியால் என் முகத்தில் இடிக்க வராதீர்கள்! தோழர் தவீதவ், கூட்டுப்பண்ணையின் புதிய அங்கத்தினனுக்கு உன் ஆதரவைக் கொடு. ஒரு வீரனுடைய சாவு எனக்கு நேர விடாதே! நம்முடைய பெண்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது தான் உனக்குத் தெரியுமே!''

பெண்கள் ஏக ரகளையும் குழப்பமும் செய்துவிட்டார்கள்: ''ஏ கிழட்டு முட்டாளே, நீ என்றைக்காவது குழந்தைகளைக் கவனித்தது உண்டா?!''

''இந்தக் காயடித்த பன்றியை சமைக்கப் போடுங்கள்!''

''நர்சாகப் போடுவது நல்லது!''

''அது என்ன என்று தெரிந்தால், இரண்டு உழைப்பு நாட்கள் என்பதைக்கூட ஏற்றுக்கொள்ள மாட்டான். இந்தத் தேய்ந்த பழைய மறை நம்மை மட்டும் அந்த வேலை செய்யச் சொல்கிறான்!''

''பெண்களே, அவனுக்கு நல்ல பாடம் சொல்லிக் கொடுங்கள். அப்பொழுது நாக்குக்கு எப்படிக் கடிவாளம் கோட்டிருக்க வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும்!..''

எல்லாமே ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கும். ஆனால் விளையாட்டாக யெஃபீம் போட்ட சத்தம் ஓர் எதிர்பாராத சூழ்நிலையையும் பதட்ட நிலையையும் உண்டாக்கிவிட்டது. கீச்சுக்குரலில் கத்திக்கொண்டும், சிரித்துக்கொண்டும் பெண்கள் யெஃபீமை பெஞ்சிலிருந்து இழுத்துப்போட்டார்கள்.

கருப்பு மண் நிறக் கை ஒன்று அவனது செந்நிறத் தாடியைப் பிடித்தது. அவனது பட்டுச் சட்டை, தையல் தையலாகப் பிரிந்த போது கிழியும் ஓசையும் கேட்டது. நகூல்னவ், பெண்களை ஒழுங்குபடுத்துவதற்காக பயனின்றிக் கத்திக்கொண்டிருந்தான். இந்த சச்சரவு சிறிது நேர ம்தொடர்ந்தது. ஓரிரு நிமிடங்கள் கழித்து, சிரித்துச் சிவந்த முகத்துடனும், கூச்சத்துடனும் வராந்தாவில் விடப்பட்டான் யெஃபீம். சட்டைக் கைகள் இரண்டும் வகுப்பறையின் தளத்தில் கிடந்தன. சட்டையும்கூட, பொத்தான் ஏதுமின்றி கழுத்துப்பட்டையிலிருந்து கீழேவரை சாட்டை சாட்டையாகத் தொங்கிக்கொண்டிருந்தது.

மூச்சுவிட முடியாமல் சிரித்துக்கொண்டே, பெஃபீம், கலவரமடைந்திருந்த கஸாக்குகள் மத்தியில் நின்றான்.

''அடேயப்பா! இந்தப் பெண்களுக்கு எவ்வளவு சக்தி, ஆட்சி இருக்கிறது! இப்பொழுதுதான் இவர்களுக்கு எதிராக நான் ஒன்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் என்னை என்ன பாடு படுத்திவிட்டார்கள், பாருங்கள்...'' என்று சொன்னான். கிழிந்து தாறுமாறாகத் தொங்கிய சட்டையைச் சுருட்டிப் பிடித்து வயிற்றின்மீது வைத்துக்கொண்டு ஏக்கத்தோடு, ''என் மனைவியின் முன்னால், எந்த முகத்தோடு இந்தக் கந்தலுடன் காட்சி கொடுப்பேன்? இது போல வீணடித்ததற்காக அவள் என்னை வீட்டை விட்டே மிதித்துத் துரத்தி விடுவாளே! நானும் ஷ்சுக்காரோடு சேர்ந்து, யாராவது ஒரு விதவையிடம் தற்காலிகமாக சில நாட்கள் தங்க வேண்டியதுதான். வேறு வழியே இல்லை!'' என்று பொறுமினான்.

அத்தியாயம் இருபத்திநான்கு

நள்ளிரவு கழிந்து வெகு நேரத்துக்குப் பின்னர்தான் கூட்டம் முடிந்தது. முக்கிய வீதிகளிலும், சந்துகளிலும் மக்கள் காரசாரமாகப் பேசிக்கொண்டே மெதுவாக நடந்தனர். ஒவ்வொரு முற்றத்திலும் கதவுகள் கிரீச்சிட்டன. அமைதியான வேளையில் கதவுத்தாழ்ப்பாள்கள் திறந்த ஓசை பெரிதாகக் கேட்டது. இங்குமங்குமாகச் சிரிப்பொலியும் கேட்டது. இந்த நேரத்தில் இது போன்ற கூட்டத்தைப் பார்த்திராத கிரெமியாச்சி கிராம நாய்கள் இரைச்சலிட்டுக் குரைத்தன.

பள்ளியை விட்டுப் புறப்பட்ட கடைசி ஆட்களில் தவீதவும் ஒருவன். வகுப்பறையில் வியர்த்து விறுவிறுத்துக் கொண்டிருந்த நிலைக்கு நேர்மாறாக, வீதியில் வீசிய குளிர் காற்று போதை தருவதாக இருந்தது. அவனது பேராசைக் கொண்ட நாசி, இளந் தென்றலில் மண்வாசனையைச் சேர்த்துப் பிடிப்பதுபோல இருந்தது.

இரு உருவங்கள் இவனுக்கு முன்னால் நடந்துசென்று கொண்டிருந்தன. அவர்களது குரலை இனங்கண்டவுடன் தன்னையறியாமல் தவீதவ் புன்னகை செய்தான்.

ஷ்சுக்கார் தாத்தா மிகவும் உரத்த குரலில், ''அவனை நம்பிய நான் ஒரு முட்டாள். அந்த உளறுவாய்ப் பிசாசு, நான் செய்த விமரிசனத்துக்காகவும், சுயவிமரிசனத்துக்காகவும் கொந்திராத் என்னைக் கொல்லப் போகிறான் என்று சொன்னதை நான் நம்பிவிட்டேன். என்னை எவ்வளவு பயமுறுத்திவிட்டான் தெரியுமா? 'ஓகோ, அவனுடைய கைகளில் கோடரியா? ஐயோ!' என்று நானாக நினைத்துக் கொண்டேன். 'அவன் அமைதியான ஆளாகத்தான் தெரிகிறான். போலிருக்கிறது. ஆனால் சனியனை எப்படிச் சொல்ல முடியும்... கோபத்தில் என்மீது பாயக்கூடும் தர்பூஸ்பழத்தைப் பிளப்பது மாதிரி என் தலையை இரண்டாகப் பிளந்துவிட்டால்!' அந்த பிசாசு துப்த்ஸோவ் பேச்சை நான் ஏன்தான் கேட்டேனோ?! எனக்குத் தீமை செய்யாமல் அவனால் ஓர் அடி எடுத்துவைக்க முடியாது! வேலிமேல் காயப்போட்ட கம்பளி மாதிரி வாழ்க்கை முழுக்க நாக்கை நீட்டிக்கொண்டே இருந்திருக்கிறான். இந்தப் பாதகன்தான் த்ரஃபீமின் ஆட்டுக் குட்டிக்கு, என்னைப் பார்க்கிற இடத்திலெல்லாம் முட்டுவதற்குச் சொல்லிக் கொடுத்தவன். நான் உடல் நலமில்லாதவனாக இருந்தும் அதைக் கவனிக்கவில்லை. இது எனக்கு விளக்கமாகத் தெரியும்! அந்தக் கிடாய்க்கு இந்தத் தந்திரத்தைச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்ததை என் கண்ணாலேயே நான் கண்டேன், என் வாழ்க்கையைச் சுருக்குவதற்காக இந்தத் தந்திரத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்று நான் நினைக்கவே இல்லை.''

''அவனை நம்பாதே! அவன் சொல்கிற ஒரு வார்த்தையைக் கூட நம்பாதே. எப்பொழுதும் சந்தேகங் கொண்டே அவனைப் பார்! அகஃபோன் எல்லாவிதமான தந்திரங்களையும் கடைப்பிடிக்கக் கூடியவன். அவன் எல்லாருடைய

காலையும் வாரிவிடுவான்'' என்று நகூல்னவ் தனது கரகரத்த அடித் தொண்டையில் உறுதி கூறிக்கொண்டிருந்தான்.

இருவரும் கூட்டத்தில் பேசத் தொடங்கிய உரையாடலைத் தொடர்ந்துபேசிக்கொண்டே நகூல்னவின் வீட்டிற்குள் நுழைந்தனர். தவீதவும் அவர்களுடன் போகத் தூண்டப்பட்டான். ஆனால் மனத்தை மாற்றிக்கொண்டான்.

அடுத்த சந்து வழியாக தவீதவ் திரும்பி சில அடிகள் கூட எடுத்துவைக்கும் முன்னர், வார்யா ஹர்லாமவா வேலியில் சாய்ந்து நிற்பதைக் கண்டான். அவள் இவனை நோக்கி வந்தாள்.

தேய்பிறையின் மங்கலான ஒளியில் வார்யாவின் உதடுகளில் வெட்கம் நிறைந்த, மகிழ்ச்சியற்ற சிரிப்பை தவீதவ் கண்டான்.

''நான் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்... நீங்கள் வழக்கமாக இந்த வழியாகத்தான் வீடு போவீர்கள் என்பது எனக்குத் தெரியும். தோழர் தவீதவ், உங்களைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டன...''

''ஆமாம், சின்ன துயர வார்யா, நாம் வெகு நாட்களாகச் சந்திக்கவில்லை!'' என்று மகிழ்ச்சியோடு பதில் சொன்னான் தவீதவ். ''நீ ரொம்ப வளர்ந்துவிட்டாய். இப்பொழுது அழகாக இருக்கிறாய். அதுதான் உண்மை! இவ்வளவு நாட்களும் எங்கே இருந்தாய்?''

''களை பிடுங்க, புல் அறுக்க வேண்டியிருந்தது; வீட்டிலும் நிறைய வேலை... நீங்கள் ஒரு முறைகூட என்னைப் பார்க்க வரவே இல்லையே. என்னைப் பற்றி நினைத்திருக்கவே மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்...''

''நீ ஒரு தொட்டாற்சிணுங்கி! என்னைத் திட்டாதே, எனக்கு எந்நேரமும் வேலை, நேரமே கிடைக்கவில்லை. வாரத்துக்கு ஒரு முறை சவரம், ஒரு நாளைக்கு ஒரு வேளைச் சாப்பாடு. இது தான் உனது அறுவடை. ஆனால் எனக்காக நீ ஏன் காத்துக் கொண்டிருந்தாய்? ஏதாவது சொல்ல வேண்டுமா? நீ ஏதோ கவலையோடு இருப்பதாகத் தெரிகிறதே. இல்லை, நான் தவறாக நினைக்கிறேனா?''

அவளுடைய தோள்பட்டையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு விட்டு, கண்களைப் பரிவோடு உற்று நோக்கினான்.

''உனக்கு ஏதாவது சிரமமா? சொல்லிவிடு!''

''நீங்கள் வீட்டிற்கா போகிறீர்கள்?''

''இந்நேரத்தில் நான் வேறு எங்கு போக முடியும்?''

''எங்கும் போகலாம். எல்லா வீட்டுக் கதவுகளும் உங்களுக்காகத் திறந்திருக்கும்... நீங்கள் வீட்டிற்குப் போவதென்றால், நமது பாதை ஒன்றுதான். என் வீட்டுவாசல் வரை வந்து விடுவீர்களா?''

''நிச்சயமாக! நீ ஒரு வேடிக்கையான பெண்! எங்காவது ஒரு மாலுமி, அதாவது ஒரு முன்னாள் மாலுமி, ஓர் அழகான பெண்ணிடம் இருந்துவரும் வேண்டுகோளை நிராகரிக்கக் கேள்விப்பட்டது உண்டா?'' என்று தவீதவ் வேடிக்கையான உற்சாகத்தோடு அவளது கையைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டே சொன்னான். ''சரி, வா போகலாம்! சரியாக நடைபோடு! இடது, வலது! இடது, வலது! சரி, உன்னுடைய சிரமம்தான் என்ன? வாய்விட்டுச் சொல்லிவிடு, தலைவனுக்கு எல்லாம் தெரிய வேண்டும், அது தான் விஷயம்! உள்ளும் புறமும், எல்லாமே தெரிய வேண்டும்!''

திடீரென தனது விரல்களுக்கடியில் வார்யாவின் தோள்கள் நடுங்குவதைக் கண்டான். நடை தடுமாறிற்று திடீரெனத் தேம்பினாள்.

''என்ன வார்யா, நீ ரொம்ப கஷ்டப்படுகிறாய்! என்ன சமாச்சாரம்?'' தனது கேலியும் கிண்டலுமான தொனியை விட்டு விட்டு, கவலையோடு மெதுவாகக் கேட்டான் தவீதவ். மீண்டும் நின்று அவள் கண்களுக்குள் உற்று நோக்கினான்.

தவீதவின் பரந்த நெஞ்சின்மீது கண்ணீர் தோய்ந்த வார்யாவின் முகம் உராய்ந்தது. தவீதவ் அசையாமல் நின்றான். முகம் சில சமயங்களில் கோபமாகத் தோன்றியது, சில சமயங்களில் புருவங்கள் வியப்பால் விரிந்தன. அவளது ஏக்கப் பெருமூச்சுக்கிடையில் அவள் பேசியதில் சமாளித்துக் கேட்டது இதுதான்: ''என்னைத் திருமணம் செய்து கொடுத்துவிடப் போகிறார்களாம்... வாஞ்கா ஒப்னீஸவுக்கு... அம்மா என்னை இரவு பகலாக நச்சரிக்கிறாள்: 'அவனை திருமணம் செய்து கொள்! அவர்கள் அருமையான வாழ்க்கை நடத்துகிறார்கள்!' என்கிறாள். பல நாட்களாக அவள் அடக்கியடக்கி வைத்திருந்த கவலையெல்லாம் வேதனையோடு அழுகையாகப் பீறிட்டது: ''அட கடவுளே, நான் என்ன செய்வேன்?!''

ஒரு விநாடி அவளது கை தவீதவின் தோளில் இருந்தன.

பிறகு நழுவி விழுந்துவிட்டது. அவை அவள் உடலில் தொங்கிக்கொண்டிருந்தன.

இப்படிப்பட்ட செய்தியொன்று, தன்னை முழுக் குழப் பத்தில் ஆழ்த்தும் என்று தவீதவ் நினைக்கவே இல்லை! கலக்கமடைந்தவனாக, வியப்பில் உணர்வற்றுப்போக, மனம் வேதனையால் குத்த, வார்யாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, ஓர் அடி பின்னால் வைத்துவிட்டு, அவள் முகத்தை உற்று நோக்கினான். அவளிடம் என்ன சொல்வதென்று தெரி யாமலே, தனக்குத்தானே தெரிந்து கொள்ளாமல் இந்தப் பெண்ணைக் காதலித்து வந்திருக்கிறோம் என்ற உண்மை இப்பொழுதுதான் தெரிந்தது. இவ்வளவு அநுபவமுள்ள ஆளாக இருந்தும் கூட, இந்தக் காதல் முற்றிலும் புதுமை யாகவும், தூய்மையாகவும் இருந்தது. பொதுவாக எல்லா உண்மைக் காதலையும் பிடிக்கும் இரு துயர்மிகு தோழர் களான, பிரிவும்—இழப்பும், அவனுக்கு முன்னால் இப் போது நின்றன...

தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு, கரகரத்த குரலில், ''ஆனால் நீயோ? திருமணம் பற்றி என்ன நினைக் கிறாய்?''

''நான் அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்ப வில்லை! விரும்பவில்லை, புரிகிறதா?''

நீர் மல்கிய கண்களால் தவீதவை ஏறிட்டுப் பார்த்தாள் வார்யா. அவளது வீங்கிய உதடுகள் பரிதாபமாகத் துடித்துக் கொண்டிருந்தன. இதற்குப் பதில் சொல்வதைப் போல தவீதவின் இதயம் நடுங்கிற்று. வாய் ஈரமின்றி உலர்ந்தது. உமிழ்நீரைச் சிரமப்பட்டு விழுங்கிக்கொண்டு, ''அப்படியா னால் நீ அவனைத் திருமணம் செய்து கொள்ளாதே, உண் மையாகத்தான்! உன்னை யாரும் வற்புறுத்த முடியாது.''

''என் தாய்க்கு ஆறு குழந்தைகள், எல்லாரும் என்னைக் காட்டிலும் இளையவர்கள். அம்மாவோ நோய்வாய்ப்பட்டு இருக்கிறாள். நான் வேலை செய்து என்னையே கொன்றா லும்கூட இந்தக் கூட்டத்துக்கு எப்படிச் சோறுபோட முடி யும்? இதை உன்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை யா, என் அன்பே?''

''நீ திருமணம் செய்துகொண்டால், உன் கணவன் உதவு வானா?''

''அவன் எங்களுக்கு உதவ தனது கடைசிச் சட்டையை

யும் கூடக் கொடுப்பான்! இரவு பகலாக வேலை செய்வான்! என்னை எவ்வளவு காதலிக்கிறான் என்பது தெரியுமா? அவன் என்மீது பைத்தியமாக இருக்கிறான்! ஆனால் நான் தான் அவன் காதலையும், உதவியையும் எதிர்பார்க்கவில்லை! ஒரு துளிக்கூட அவனை நான் விரும்பவில்லை! என்னால் அவனைச் சகிக்கவே முடியவில்லை! அவனுடைய வியர்த்துப்போன கைகளால் என்னைத் தொட்டால் எனக்குக் காய்ச்சலே வந்துவிடுகிறது. நான் கூட... ஆனால் பேசிப் பயன் என்ன? அப்பா உயிரோடிருந்தால் நான் இது பற்றி யோசிக்கக் கூட மாட்டேன். நான் உயர்நிலைக் கல்வி கற்கப் போயிருப்பேன்...''

நிலவொளியில் மங்கலாகத் தெரிந்த அவளது கண்ணீர் நிறைந்த முகத்தை தவீதவ் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவளது உதட்டின் கோடுகளில் கவலை தேங்கி நின்றது. கண்கள் கவிந்திருந்தன. கண் இமைகள் கருநீலமாயிருந்தன. அவளும் அமைதியாக, கைக்குட்டையைத் தனது கைகளில் வைத்துக் கசக்கிக் கொண்டிருந்தாள்.

''உங்கள் குடும்பத்துக்கு நாங்கள் ஏதாவது உதவி செய்தால்?'' தவீதவ் சிறிது நேர யோசனைக்குப்பின் தயக்கத்தோடு சொன்னான். ஆனால் அவன் சொல்லி முடிப்பதற்குள், அவளது கண்ணீர் மாறி, முகம் கோபக்கனலாயிற்று. அவளது மூக்கு துடித்தது. ஓர் ஆண்மகனின் கனத்த குரலில், ''உன் உதவி பாழாய்ப்போக! உதவியும் நீயும்! புரிகிறதா?!'' என்று அவள் பொங்கினாள்.

மீண்டும் சற்றே அமைதி நிலவியது. எதிர்பாராத அடியால் திகைத்துப்போன தவீதவ், ''ஏன்?'' என்று கேட்டான்.

''ஆகவேதான் நான் அப்படிச் சொல்கிறேன்!''

''எதற்காக?''

''எனக்கு உன் உதவி வேண்டாம்!''

''என்னுடைய உதவி அல்ல. உன்னுடைய தாய் ஒரு விதவை. உன் அம்மா பெரிய குடும்பத்தோடு இருப்பதால், கூட்டுப்பண்ணையே உங்களுக்கு உதவி செய்யும். தெரியுமா? நான் குழுவிலே சொல்கிறேன். நாம் முடிவெடுப்போம். புரிகிறதா, சின்ன துயர வார்யா?''

''கூட்டுப்பண்ணையின் உதவியும் எனக்கு வேண்டாம்!''

தவீதவ் எரிச்சலுடன் தோள்களை நெறித்துக்கொண்

டான். ''நீ ஒரு வேடிக்கையான பேர்வழி. அது தான் விஷயம்! முதலில் அவளுக்கு உதவி வேண்டும். அதைப்பெறுவதற்காக, அதைத் தரக்கூடிய எந்த இளைஞனோடும் முதலில் ஒட்டிக் கொள்ளத் தயார் என்கிறாய். பிறகு உதவியே வேண்டாம் என்கிறாய்... நான் உன்னையே புரிந்து கொள்ள முடியவில்லை! நம்மிருவரில் யாரோ ஒருவருக்கு இன்றிரவு மூளை குழம்பியிருக்கிறது, உண்மையாகத்தான்! உனக்கு வேறு என்ன தான் வேண்டும்?''

அவனுடைய அமைதியான, அறிவுக்கொத்த குரலும் பேச்சும், அல்லது அதுபோல வார்யாவுக்குத் தோன்றிய தவீதவின் பேச்சு அவளைத் தன்னம்பிக்கையற்று ஆத்திரம் கொள்ளச் செய்தது. அவள் தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள். முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு திடீரென தவீதவை விட்டுத் திரும்பி, தெருவழியே நடந்தாள். சிறிது தூரம் சென்றவுடன் ஓடத் தொடங்கினாள். முகத்தை மூடிக்கொண்டு முன்னால் குனிந்தபடி ஓடினாள்.

ஓடிப்போய் தவீதவ் அவளைப் பிடித்தான். அவளது தோள்களைப் பற்றிக்கொண்டு, கோபத்தோடு, ''இங்கே பார், சின்ன துயர வார்யா! சும்மா விளையாடாதே. நான் வினயத்தோடு கேட்கிறேன்: என்ன விஷயம்?''

இதைக் கேட்டவுடன் வார்யா, தனது மங்கைக்குரிய கோபம், ஆத்திரம், நம்பிக்கையின்மை அனைத்துக்கும் ஆளாகிவிட்டாள். அவள் வெறியோடு, ''குருட்டு முட்டாளே! நீ இவ்வளவு குருடாகவா இருப்பாய்! உன்னால் எதையுமே பார்க்க முடியாது! நான் உன்னைக் காதலிக்கிறேன். கடந்த இளவேனிற் காலத்திலிருந்தே நான் உன்னைக் காதலித்து வந்திருக்கிறேன். ஆனால் நீ... நீயோ, இரு கண்களையும் மூடிக்கொண்டு போகிறாய்! என்னுடைய சிநேகிதிகள் எல்லாம், ஏன் எல்லாருந்தான் என்னைக் கேலி செய்து சிரிக்கிறார்கள்! நீ என்ன குருடா? உனக்காக எவ்வளவு கண்ணீர் வடித்திருப்பேன் தெரியுமா பிச்சைக்காரா?.. எத்தனை இரவுகள் இமை மூட முடியாமல் கழித்திருக்கிறேன்—உனக்காக! இருந்தும் உன்னால் ஒன்றையுமே பார்க்க முடியவில்லை! உன்னிடமிருந்தோ, கூட்டுப்பண்ணையிலிருந்தோ நான் எப்படி உதவியைப் பெற முடியும்? நான் உன்னைக் காதலிக்கும்பொழுது இப்படிச் செய்ய முடியுமா?! ஏ, பேயே! வாயைத் திறந்து இப்படி எவ்வாறு உன்னால்

பேச முடிந்தது?! பட்டினியாவது கிடப்பேனே ஒழிய உன்னிடம் இருந்து உதவிபெற மாட்டேன்! நான் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். இப்பொழுது திருப்திதானே. இதற்காகத்தானே காத்து கொண்டிருந்தாய்? என்னை விட்டுவிட்டு உன்னுடைய லூஷ்காவிடம் போகலாம். எனக்கு நீ தேவையில்லை. உன்னைப் போன்ற நனையாக் கற்குவியல், இதயமற்ற பேய் எனக்குத் தேவையே இல்லை!''

அவள் தவீதவின் பிடியிலிருந்து பலத்தோடு விடுவித்துக் கொண்டு போகத் திமிறினாள். ஆனால் தவீதவோ அவளை இறுக்கமாகப் பிடித்திருந்தானே ஒழிய, எதுவும் பேசவில்லை. சில நிமிடங்கள் அவர்கள் அமைதியாக நின்றனர். பின்னர் வார்யா, தனது கைக்குட்டை நுனியால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்; சாதாரணமான குரலில், ஆனால் களைத்துப்போன தொனியில், ''என்னைப் போக விடு'' என்றாள்.

''இவ்வளவு சத்தமாகப் பேசாதே. யாராவது கேட்கப் போகிறார்கள்'' என்று வேண்டினான் தவீதவ்.

''நான் மெதுவாகத்தான் பேசுகிறேன்.''

''நீ கொஞ்சங்கூட எச்சரிக்கையாக இருக்கிறாயில்லையே...''

''எனக்குப் போதும்! நான் ஆறுமாதங்களாக எச்சரிக்கையாகத்தான் இருந்தேன். சரி, என்னைப் போக விடு சீக்கிரத்தில் விடிந்துவிடும். நான் பால் கறக்கப் போக வேண்டும். உனக்குக் கேட்கிறதா?''

தவீதவ் தனது தலையைக் கவிழ்த்தான். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. அவளது மென்மையான தோள்களை அவனுடைய வலது கரத்தால் அணைத்துக்கொண்டு தானிருந்தான். இளம் பெண் உடலின் கதகதப்பையும் கூந்தல் வாசனையையும் அவனால் உணர முடிந்தது. ஆனால் ஒரு புதிய உணர்வை இப்போது அவன் அநுபவித்தான். அவன் எவ்வித உணர்ச்சியும் அடையவில்லை. ரத்தத்தில் காய்ச்சல் அடிக்கவில்லை, வேட்கையும் இல்லை. பனித்திரை மூடியிருப்பதைப்போல, அவன் மனத்தைக் கவலை கவ்வியிருந்தது. ஏதோ காரணத்தால் அவன் சுவாசிக்கக் கஷ்டப்பட்டான்...

உணர்வற்ற நிலையை உடைத்துக் கொண்டு, அவளது வட்ட முகத்தின் கன்னத்தை இடது கையால் தொட்டு,

முகத்தை சற்று மேலே உயர்த்திப்பிடித்து புன்னகை செய்தான்: ''வார்யா என் அன்பே, உனக்கு நன்றி! நீ என் னுடைய அன்புள்ள சின்ன துயர வார்யா!''

''எதற்காக?'' என்று அவனுக்குமட்டும் கேட்பது போல கேட்டாள்.

''நீ கொடுக்கும் இன்பத்துக்காக, என்னைத் திட்டு வதற்காக, என்னைக் குருடன் என்று அழைப்பதற்காக... ஆனால், உண்மையிலேயே நான் குருடன் என்று நினைத்து விடாதே! நான் சில வேளைகளில் நினைப்பதுண்டு, அடிக் கடி நினைப்பதுண்டு, என் சொந்த இன்பமெல்லாம், கேளிக் கையெல்லாம் காலாவதியாகிவிட்டன, சென்றொழிந்துவிட் டன என்று நினைத்தேன்... சென்ற காலத்திலேயே போய் விட்டது என்று நினைத்தேன். கடந்த காலத்திலும்கூட எனக்கு அந்த இன்பம் மிகக் குறைவாகத் தான் கிடைத் தது...''

''எனக்கு அதிலும் குறைவு!'' என்று அமைதியாகச் சொன்னாள் வார்யா. கொஞ்சம் உரத்த குரலில், ''தலை வரே, முதல் தடவையாகவும், கடைசித் தடவையாகவும் எனக்கு முத்தம் கொடு. விடியப்போவதால் நாம் பிரிந்தாக வேண்டும். நம்மை யாரும் பார்ப்பதை நான் விரும்பவில்லை; எனக்குக் கேவலமாகப் போய்விடும்.''

பெரு விரல்களை ஊன்றி நின்று கொண்டு, தலையைப் பின்னுக்குச் சாய்த்து உதடுகளைக் காட்டினாள். தவீதவோ, ஏதோ ஒரு குழந்தையை முத்தமிடுவது போல, அவளது நெற்றியில் முத்தமிட்டான். பிறகு அவன் உறுதியாகச் சொன்னான்: ''கவலைப்படாதே வார்யா, எல்லாம் சரி யாகப் போய்விடும்! நான் உன்னை வீடுவரை அழைத்துக் கொண்டு வரவில்லை, இது வேண்டாம், உண்மையாகத் தான். நாளைக்கு நாம் சந்திப்போம். ஒரு கடுமையான சிக் கலைத் தீர்க்க வேண்டிய வேலையை எனக்குக் கொடுத்து விட்டாய்... ஆனால் விடியும் முன் நான் இதைத் தீர்வு கண்டு விடுகிறேன், நிச்சயமாக! நாளை மாலை உன் அம் மாவை எங்கும் போய்விட வேண்டாம் எனச் சொல். ஏனெ னில் நான் சூரியன் மறையும் வேளையில் வந்து சந்திக்க விரும்புகிறேன். நாம் பேசவேண்டும். நீயும் வீட்டிலிருக்க வேண்டும். வணக்கம் என் அன்பே!.. என்மீது கோபங் கொள்ளாதே... உன்னைப் பற்றியும், என்னைப் பற்றியும்

என்ன செய்வது என நான் யோசிக்க வேண்டாமா? அது சரிதான் இல்லையா?''

அவளுடைய பதிலுக்காகக் காத்திருக்காமல், அமைதி யாக வீட்டை நோக்கி தன்னுடைய வழக்கமான வேகத்தில் அவன் திரும்பினான்.

காதலர்களாகவோ அந்நியர்களாகவோ அல்லாமல் அவர்கள் பிரிந்திருக்கக் கூடும். ஆனால் வார்யா அவனை மெதுவாக அழைத்தாள். தயக்கத்தோடு தவீதவ் நின்றான். மிகத் தாழ்ந்த தொனியில், ''என்ன?''

தன்னை நோக்கி அவள் வருவதைக் கிஞ்சித்தும் பரபரப் பின்றிக் கவனித்துக் கொண்டிருந்தான். ''பிரிந்த இந்தச் சில நிமிடங்களுக்குள்ளாக அவள் என்ன புதிய முடிவுக்கு வந்திருக்க முடியும்? கவலை எந்த முடிவுக்கும் கொண்டு வரலாம், உண்மையாகத்தான்?''

வார்யா தலைகீழாக ஓடிவந்து அவனிடம் நெருங்கி, அழுத்திக்கொண்டு நின்றாள். அவன் முகத்திலேயே மூச்சை விட்டுக்கொண்டு, ஆர்வத்தோடு பேசினாள்: ''என் அன்பே, நீ எங்களைப் பார்க்க வரவேண்டாம், அம்மாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம்! விரும்பினால் லூஷ்கா மாதிரி நான் உன்னோடு வாழப் போகிறேன். நாம் ஓராண்டுக்குச் சேர்ந்து வாழ்வோம். பிறகு வேண்டுமென்றால், என்னை நீ விட்டு விடலாம்! பிறகு நான் வாஞ்காவை மணந்து கொள்கிறேன். அவன் நான் எப்படி இருந்தாலும் என்னை ஏற்றுக்கொள் வான். முந்தாநாள் அவன் அப்படித்தான் சொன்னான்: 'என்ன நேர்ந்தாலும் நீ எப்போதும் எனது அன்புக்குரிய வளாக இருக்க வேண்டும்!' இதை நீ விரும்புகிறாயா?''

யோசனை செய்யக்கூட நிற்காமல், கோபத்தோடும் வெறுப்போடும், அவளைத் தள்ளிவிட்டபடி, ''நீயொரு முட் டாள்! கேவலமான முட்டாள்! மடச்சி! நீ என்ன சொல் கிறாய் என்பதாவது உனக்குத் தெரிகிறதா? உனக்கு என்ன வெறியா? புத்தியாயிரு. வீட்டுக்குப் போ! தூங்கு, புரிகிறதா? மாலையில் நான் வருவேன்; ஒளிய முயற்சிக்காதே உன்னை எங்கிருந்தாலும் கண்டு பிடித்துவிடுவேன்!''

புண்பட்ட அமைதியோடு அவள் திரும்பியிருந்தால், அவர்கள் அவ்வாறே பிரிந்திருக்கக்கூடும். ஆனால் கலக்க மடைந்த மென்குரலில் அவள் கேட்டாள்: ''செமியோன், என் அன்பே, நான் என்ன செய்யட்டும்?''

மீண்டும் அவன் மனம் குறுகியது. ஆனால் இரக்கத்தினால் அல்ல. அவனது கைகள் அவளைச் சுற்றி அரவணைத்தன. கவிந்திருந்த அவளது தலையை அவனது கைகள் சில முறை வருடி விட்டன.

''நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். எனக்குக் கோபம் வந்துவிட்டது... ஆனால் நீ எப்படிபட்டவள்! அத்தகைய தியாகத்தை கற்பனை செய்து பார்... வார்யா, அன்பே, இப்பொழுது நீ போய்த் தூங்கு. இன்று மாலை நாம் சந்திப்போம். சரிதானா?''

''அது சரி'' என்று பணிவோடு சொன்னாள் வார்யா. பிறகு அவனிடமிருந்து அச்சத்தோடு பிரிந்தாள்: ''அட கடவுளே! விடிந்து கொண்டிருக்கிறது! நான் சிக்கிக்கொள் வேனே...''

மிக அமைதியாக ஓசையின்றி விடியல் நுழைந்தது. இப்பொழுதுதான் விழித்து எழுந்தவனைப் போல தவீதவ் வீடுகளைப் பார்த்தான். களஞ்சியங்கள், கூரைகள், பழத் தோட்டங்களில் குவிந்திருந்த பச்சை மரப் புதர்க்கூட்டம் ஆகியவற்றையும், கிழக்கு திசையில் மங்கலாக வெடித்து வெளி வந்து கொண்டிருந்த கதிரவனின் ஒளிக்கதிர்களையும் கண்டான்.

* * *

''என் இன்பமெல்லாம் செத்துப்போய்விட்டதே'' என்று தவீதவ் வார்யாவிடம் தற்செயலாகச் சொன்னதில் பெருமளவு உண்மையும் இருந்தது. இந்த ஏறுக்குமாறான வாழ்வில் என்றாவது உண்மையான இன்பத்தைக் கண்டதுண்டா? அநேகமாக இல்லை.

விடியற்காலம் வெகுநேரம் வரையில் சன்னலோரம் உட்கார்ந்துகொண்டு, ஒன்றன்பின் ஒன்றாக சிகரெட்டுகளைப் புகைத்துத் தள்ளியவாறு தனது பழைய காதல் வாழ்க்கையை எல்லாம் நினைவுகூர்ந்தபடி இருந்தான். ஒவ்வொன்றாக நினைத்து, ஆராய்ந்து பார்த்தபொழுது, நன்றி பாராட்டவோ, கவலைப்படவோ, மனம் வருந்தும்படியாகவோ நினைக்க எதுவுமே இல்லை. ஏதோ போகிற போக்கில் சில பெண்களைச் சந்திப்பது, ஆழமான இணக்கம் இன்றி பிரிந்து விடுவது; அவ்வளவுதான்... சாதாரணமாகச் சந்தித்தார்கள்; சாதாரணமாகவே பிரிந்தார்கள்.

சிரமமோ, கவலைதரும் வார்த்தைகளோ, இன்றித்தான் பிரிந்தார்கள். ஒரு வாரம் கழித்து அயலார் போலச் சந்திப் பார்கள். வறட்டுச் சிரிப்பு ஒன்றைச் சிரித்துக்கொண்டு, ஒப்புக்குப் பொருளற்ற சில சொற்களைச் சொல்லிக்கொள் வார்கள். முயல் காதல் தான்! இதை நினைத்துப் பார்த்த போதுகூட தவீதவ் வெட்கப்பட்டான். தனது பழைய காதல் அநுபவங்களை மனத்திற்குள் நினைத்துக்கொண்டு, ஒன்றன்பின் ஒன்றாய் கடந்து வரும்பொழுது, சிலவற்றுக் காக, ஒரு மாலுமியின் புத்தம் புதிய சீருடையில் எண் ணெய்க் கறை என்று சொல்வது போல முகஞ்சுளிப்பான். இந்த மகிழ்வற்ற நேரங்களை மறக்க அடுத்த சிகரெட்டை அவசரமாகப் பற்றவைப்பான். ''ஆகவே இது குப்பையும் கூளமுமாகத்தான் போய்ச்சேரும்...'' என்று நினைத்துக் கொண்டான். ''அதுதான் விஷயம்! கழியின் நுனியில் இருக் கிறாய் மாலுமி. பெண்களோடு மிக நன்றாக நடந்து கொண் டிருக்கிறாய். நாயைக் காட்டிலும் கேவலம்!''

எட்டு மணிக்குள்ளாக மனத்தில் ஒரு முடிவு கட்டிவிட் டான். ''சரி, நான் வார்யாவைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன். இந்தப் பிரமச்சாரி வாழ்க்கையை மூட்டை கட்டவேண்டிய நேரம் வந்துவிட்டது மாலுமி! எல்லாம் நன் மைக்காகத்தான் இருக்கும். அவளை ஒரு விவசாயக் கல்லூரியில் சேர்த்து விடுகிறேன். இரண்டு ஆண்டுகளில் அவளை நம் பண்ணைக்கே ஒரு விவசாயத்துறை நிபுணராக நியமித்துக் கொள்ளலாம். பிறகு இருவரும் சேர்ந்து வாழ லாம். மற்றவற்றைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.''

ஒரு முடிவை எடுத்தபிறகு அதைத் தள்ளிப் போடு கிற ஆளோ, தயங்குகிறவரோ அல்ல. தவீதவ் குளித்து விட்டு ஹர்லாமவாவின் வீட்டுக்கு நேராகப் போனான்.

வார்யாவின் அம்மாவை முற்றத்தில் கண்டு மரியாதை யாக வணக்கம் தெரிவித்தான்.

''வணக்கம் அம்மா! எப்படியிருக்கிறது வாழ்க்கை?''

''வணக்கம் தலைவரே! நாங்கள் அவ்வளவு மோச மாகப் போய்விடவில்லை. உனக்கு என்ன தேவை? இந்தக் காலை நேரத்தில் இங்கு எதற்காக வந்தாய்?''

''வார்யா வீட்டிலிருக்கிறாளா?''

''அவள் தூங்குகிறாள். நீங்கள் கூட்டங்களில் இரவு வெகுநேரம் தங்கிவிட்டீர்களா.''

''நாம் உள்ளே போகலாம். அவளை எழுப்பு நான் உங்களுடன் பேச வேண்டும்.''

''உள்ளே போவோம்.''

சமையலறையில் அவர்கள் நுழைந்தார்கள். தவீதவை எச்சரிக்கையோடு பார்த்துக்கொண்டே, ''இங்கே உட்காரு. வார்யாவை நான் போய் உசுப்புகிறேன்'' என்றாள் வீட்டுக்காரி.

இச்சமயத்தில் வார்யா வந்தாள். அவள் தூங்காதவளைப் போலவே இருந்தாள். கண்ணீரால் அவளது கண்கள் உப்பியிருந்தன. ஆனால் முகமோ உள்ளார்ந்த பாசத்தை வெளிக்காட்டுவது போல இளமைப் பொலிவோடு இருந்தது. புருவங்களைத் தாழ்த்தி தவீதவை ஆர்வத்தோடு உற்று ஊடுருவிப் பார்த்தாள்.

''வணக்கம், தோழர் தவீதவ்! காலையில் கடைசியாக எங்களைப் பார்க்க வரவேண்டிய விருந்தாளி நீங்கள்!''

தவீதவ் பெஞ்சின் மீது உட்கார்ந்தான். இழிந்த படுக்கையில் கூட்டமாகத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகளைப் மேலோட்டமாகப் பார்த்தான்.

''நான் விருந்தாளியல்ல. நான் இங்கொரு காரியமாக வந்திருக்கிறேன். அம்மா, இங்கே ஒரு காரியம்...'' ஒரு நிமிடம்வரை தவீதவ் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தான். களைத்துப்போன கண்களால் கிழவியைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

அடுப்பருகில் அவள் நின்றுகொண்டு இருந்தாள். மார்பருகே கைகள் சட்டையைச் சுருட்டி கசக்கிக்கொண்டிருந்தன.

''இங்கே கவனி, அம்மா'' என்று திரும்பவும் சொன்னான் தவீதவ். ''வார்யா என்னைக் காதலிக்கிறாள். நானும் அவளைக் காதலிக்கிறேன். முடிவு இதுதான்: மாவட்டத் தலைநகருக்கு அவளை நான் அழைத்துக்கொண்டு போய், அங்குள்ள விவசாயக் கல்லூரியில் பயிற்சி கொடுக்கிறேன். விவசாய நிபுணராகட்டும். இரண்டு ஆண்டுகளில் படித்துத் தேர்ச்சி பெற்று, மீண்டும் கிரெமியாச்சி கிராமத்துக்குச் சேவை செய்ய வந்துவிடுவாள். இந்த முதுவேனிற்காலத்தில், அறுவடை முடிந்தவுடன் நாம் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம். நான் வருவதற்கு முன்பு ஒப்னீஸவ் வீட்டார் கேட்டு வந்தனர் என்பது தெரியும். ஆனால் நீ பெண்ணை வலியுறுத்த வேண்டாம். அவளே அவள் வாழ்க்

கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். அதுதான் விஷயம்'' என்றான்.

அந்தப் அம்மையாரின் முகம் கடுகடுத்தது. தன் மகள் பக்கம் திரும்பினாள்.

''வார்யா?!''

''அம்மா!'' வார்யாவால் அவ்வளவுதான் சொல்ல முடிந்தது. அம்மா அருகே ஓடிவந்து, குனிந்து கொண்டு உழைத்து இளைத்துப்போன அவளது கைகளை எடுத்து முத்தமிட்டத் தொடங்கினாள். கண்களில் நீர்மல்கியது.

தவீதவ் சன்னல் பக்கமாகத் திரும்பிக்கொண்டான். விம்மலுக்கிடையே அவள் கிசுகிசுத்தது இவனுக்குக் கேட்டது.

''அம்மா, என் அன்பே! இவரோடு இந்த உலகின் கடைக் கோடிக்கேகூட நான் போகத் தயார்! அவர் என்ன சொன்னாலும் செய்வேன். வேலையாகட்டும் அல்லது படிப்பாகட்டும், செய்வேன்!.. வாஞ்கா ஒப்னீஸவை மட்டும் திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தாதே! என்னால் அதைச் சகிக்க முடியாது...''

சிறிது நேர அமைதிக்குப் பின்னர் வார்யாவின் அம்மாவின் நடுங்கும் குரலை தவீதவ் கேட்டான். ''உனது அம்மாவின் ஒப்புதல் இன்றியே நீ முடிவெடுத்துவிட்டதாகத் தெரிகிறது. சரி, கடவுளே உனக்கு வழிகாட்டியாக இருக்கட்டும், வார்யா. மகிழ்ச்சியாக இருப்பதற்குக் குறுக்கே நிற்க மாட்டேன். ஆனால், மாலுமி, என் மகளைக் கேவலப்படுத்திவிடாதே! என்னிடம் உள்ளதெல்லாம் இவள்தான்! இந்த வீட்டிலேயே மூத்தவள் இவள்தான், இந்த வீட்டின் தலைவி, தலைவர், எல்லாம்... கவலை, குழந்தைகள், ஏழ்மை இவற்றோடுதான் என் வாழ்க்கை. பார்க்கிறாயா, என் வயதுக்கு முந்தியே நான் கிழவியாகிவிட்டேன்! போர்க் காலத்தில் மாலுமிகளை நான் பார்த்திருக்கிறேன். நீங்கள் எப்படிப் பட்டவர்கள் என்று எனக்குத் தெரியும்... ஆனால் எங்கள் குடும்பத்தை நாசப்படுத்திவிடாதே!''

தவீதவ் அவளைச் சுற்றி வந்து அவளது கண்ணுக்கு நேராகப் பார்த்தான். ''மாலுமிகளை விட்டுவிடு, அம்மா! நாங்கள் எப்படிச் சண்டை போட்டு உங்களது கஸாக்கிய இளைஞர்களை முறியடித்தோம் என்பதைப்பற்றி ஒரு நாளைக்கு யாராவது எழுதத்தான் போகிறார்கள், உண்மையாகத்தான்! சாதாரணப் பொது மக்களது தன் மானத்

தையும், உண்மையையும் விட எங்களது தன்மானமும் காதலும் சிறந்தது! வார்யாவைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நான் அவளுக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டேன். நாங்கள் வாழ்வதைப் பொருத்தமட்டில், உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். நாங்கள் திருமணம் செய்வதை நீ ஒப்புக்கொண்டுவிட்டால், நாளையே அவளை மீல்லெரொவோவுக்கு அழைத்துப்போகப் போகிறேன். பள்ளியில் சேர்க்க வேண்டும். இப்போதைக்கு திருமணம் ஆகும்வரை, நான் இங்கே உங்களுடன் வந்து இருக்கிறேன். அயலாருடன் இருப்பதைக் காட்டிலும் இங்கு எனக்கு நன்றாக இருக்கும். எப்படியும் உங்கள் குடும்பத்தையும் நான் காப்பாற்றியாக வேண்டுமல்லவா? வார்யா இல்லாமல் குழந்தைகளை உன்னால் கவனிக்க இயலாதல்லவா? எனவே, உங்கள் அனைவரையும் கவனிக்கும் பொறுப்பை என் தோள்களில் நானே ஏற்றுக்கொள்கிறேன். அவை பரந்த தோள்கள்—தாங்கும்.' இதுதான் விஷயம்! பின்னர் எல்லாம் சரியாகி விடும். என்ன எல்லாம் சரியாகிவிட்டதா?''

தவீதவ் முன்னால் நடந்துபோய் அவளது தளர்ந்த தோள்களைத் தழுவிக்கொண்டான். கண்ணீரில் நனைந்த உதடுகளால் அவள் அவனது கன்னத்தில் முத்தமிடுவதை உணர்ந்த தவீதவ், கவலையோடு பேசினான்: ''பெண்களுக்குக் கண்ணீரென்றால் ஏக விருப்பம் போலிருக்கிறது! கல் மனத்தைக் கூட உங்கள் கண்ணீரால் கரைத்துவிடுவீர்கள். சரியம்மா, இப்படியே நடத்திவிடலாமா? சரிதானே, அவ்வளவுதான் விஷயம்!''

கருத்தூன்றாமல் பைக்குள் திணிக்கப்பட்டிருந்த ஒரு கத்தை நோட்டை தவீதவ் வெளியில் எடுத்தான். கசங்கிய ஆபாசமான மேசைத் துணிக்கடியில் அதைத் திணித்துவிட்டு, ஒரு மாதிரி அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, ''இது தான் தொழிற்சாலையில் வேலை பார்த்தபொழுது சேமித்த பணம். இப்பொழுது எனக்குக் கொஞ்சமே தேவைப்படும். பிறகு புகையிலைக்கு வேண்டும்...குடிக்கிற பழக்கம் எனக்கு இல்லை. வார்யா புறப்பட ஏற்பாடு செய்யப் பணம் வேண்டாமா? குழந்தைகளுக்கும் ஏதாவது வாங்குங்கள்... அவ்வளவுதான். நான் போய்வருகிறேன். மாவட்டத் தலைநகருக்கு இன்றைக்கு நான் போயாக வேண்டும். இன்று மாலை திரும்பியவுடன் பெட்டிகளைக்

கொண்டுவந்து விடுகிறேன். வார்யா நீ தயாராயிரு. நாளைக் காலை நாம் மாவட்டத்துக்குப் போகிறோம். சரி போய் வருகிறேன் என் அன்பே.'' வார்யாவும் அம்மாவும் அவனிடம் ஓடிவந்தார்கள். இருவரையும் கைகளில் அணைத்துக் கொண்டான். பிறகு கதவை நோக்கித் திரும்பினான்.

வழக்கம் போலவே உறுதியாகவும் நிதானமாகவும், மாலுமியின் கம்பீரத்தோடு நடந்து சென்றான். ஆனால் அவனை நன்கு தெரிந்தவர்கள் உற்றுக் கவனித்திருந்தால், இதில் ஏதோ கொஞ்சம் புதிது இருப்பதை அந்த கணத்தில் கண்டிருப்பார்கள்...

* * *

அன்றே மாவட்டத் தலைநகருக்குப் போய் கட்சியின் மண்டலக் குழுவைச் சந்திக்க நெஸ்தெரேன்கோவிடம் அநுமதி வாங்கிக்கொண்டான் தவீதவ்.

''அங்கே வீண்காலம் கழித்துக்கொண்டிராதே'' என்று நெஸ்தெரேன்கோ எச்சரித்தார்.

''தேவைப்படுவதற்கு மேல் ஒரு மணி நேரம்கூட அங்கு நான் தங்க மாட்டேன். மண்டலச் செயலாளருக்குத் தொலை பேசியில் செய்தி சொல்லிவிடு. ஹர்லாமவாவை விவசாயப் பள்ளியில் சேர்க்க அவர் உதவி தேவைப்படும்.''

நெஸ்தெரேன்கோ கண்களைச் சுருக்கினார். ''மாலுமி, என்னைத் தோட்டத்திற்கு அழைத்துச் செல்ல மாட்டாய் போலத் தெரிகிறதே! இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாமல் என்னைக் கைவிட்டால், நீ உன்னைத்தான் குறை பட்டுக்கொள்ள வேண்டும்! இந்த 'அர்ச்சுனன்' விளையாட்டு விளையாட உன்னை இரண்டாம் முறை அநுமதிக்க மாட்டோம்! லூஷ்காவோடு அது எளிதாகப் போய் விட்டது, அவளாவது, விவாக ரத்து செய்யப்பட்டவள், ஆனால் அது முழுக்க வேறுவிதமான சமாச்சாரம்!..''

நெஸ்தெரேன்கோவை தவீதவ் சீற்றத்தோடு பார்த்தான். அவர் பேச்சை முடிக்குமுன் குறுக்கிட்டு, ''செயலாளரே, நீ என்னைப்பற்றி மிகவும் மோசமான மதிப்பீடு கொண்டிருக்க வேண்டும்! அதுதான் விஷயம்! நான் அவள் அம்மாவுடன் பேசி, சட்டப்படி இதை தொடங்கியிருக்கிறேன்! இதற்கு மேல் என்ன வேண்டும்? என்னை ஏன் நம்பக்கூடாது?''

நெஸ்தெரேன்கோ அமைதியாகக் கேட்டார்: ''செமி யோன், கடைசியாக ஒரு கேள்வி. இந்தப் பெண்ணோடு இதற்குள் சேர்ந்து இருந்திருக்கிறாயா? அப்படியானால், கிராமத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் அவளை ஏன் பதிவுத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது? லெனின் கிராடிலிருந்து யாரையாவது எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறாயா? உதாரணமாக உன் முன்னாள் மனைவி யாரா வது? உன் சகோதரன் என்ற முறையில் உன்னைப் பற்றி நான் எவ்வளவு கவலைப்படுகிறேன் தெரியுமா? நீ ஒரு நாணயமான மனிதன் என்பதில் எனக்குச் சந்தேகம் வந் தால் அது எவ்வளவு பெரிய ஏமாற்றமாக இருக்கும் என் பதை யோசித்துப் பார்... ஏதோ சோம்பேறித்தனமான ஆர்வத்தால் உன் சொந்த வாழ்க்கையில் தலையிடுகிறேன் என்று நினைக்காதே... சும்மா, ஒன்றும் முதுகைக் காட்டி விடாதே. இதோ கடைசியாக ஒரு விஷயம். உன் கைகள் சுதந்தரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் அவளை விவசாயப்பள்ளியில் சேர்க்க வேண்டும் என்கிற யா? அவள் பக்கத்திலிருப்பதிலிருந்து உன்னை விடுவித்துக் கொள்ளவா?.. இப்படி நீ தப்பிவிட முடியாது, தம்பி!''

வேகமாக சவாரி செய்து வந்ததால் தவீதவின் கால் கள் விறைத்துப்போயிருந்தன. களைப்போடு நெஸ்தெ ரேன்கோ உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு எதிரில் இருந்த பழைய நாற்காலியில் பலமாகச் சாய்ந்தான். நாற்காலி யின் கைப்பிடியிலிருந்த தச்சு வேலைகளை உற்றுக் கவ னித்துக்கொண்டே, சாலிச் செடிகளிலிருந்து கூவிய சிட்டுக் குருவிகளின் இரைச்சலைக் கேட்டான். நெஸ்தெரேன்கோ வின் மஞ்சள் முகத்தையும், அவருடைய பழைய சட்டை யையும், அருமையாகத் தையல் போட்டிருந்த சட்டைக் கைநுனியையும் பார்த்தான். பிறகு சொன்னான்: ''கடந்த இளவேனிற்காலத்தில் உன்னுடன் நட்புறவாடியது தப்பு என்று நினைக்கிறேன்... ஏனெனில், நீ யாரையுமே நம்புவதில்லை என்ற பழக்கத்துக்கு வந்திருப்பதாகத் தெரி கிறது... அது தொலையட்டும், செயலாளரே! நீ உன்னை மட்டும்தான் நம்புகிறாய் என்று நினைக்கிறேன். அதுவுங்கூட, விடுமுறை நாட்களின்போது, மற்றவர்களைப் பொருத்த மட்டில், உன்னுடன் நண்பர்களாகப் பழகுகிறவர்களை யும் கூட, நீ ஏதாவது சந்தேகித்துக்கொண்டு தான் இருப்

பாய் போல இருக்கிறது... இப்படி இருக்கும் பொழுது, உன்னால் எவ்வாறுதான் மாவட்டக் கட்சிக் குழுவை நடத்த முடிகிறதோ? முதலில் உன்னைப் பற்றி உறுதிப்படுத்து. பிறகு மற்றவர்களைச் சந்தேகிக்கலாம்!''

நெஸ்தெரேன்கோவின் முகம் வேதனையால் நெளிந்தது.

''முதுகைக் காட்டத் தொடங்கிவிட்டாயே. வேண்டாம் என்று சொன்னேனே!''

''ஆமாம்!''

''அப்படியானால் நீ ஓர் அப்பாவிப் பூச்சி!''

உட்கார்ந்ததைக் காட்டிலும், சிரமத்தோடு எழுந்தான் தவீதவ்.

''நான் புறப்படுவது நல்லது. இல்லையென்றால் சச்சரவு பண்ணிக் கொண்டிருப்போம்...''

''நாம் செய்ய வேண்டாம்—மாட்டோம்'' என்று நெஸ்தெரேன்கோ விடையளித்தான்.

''நானும் அப்படித்தான்.''

''இன்னுமொரு ஐந்து, பத்து நிமிடங்கள் பொறுத்திரு! எல்லாவற்றையும் பிரித்து அடுக்கிவிடுவோம்.''

''அது சரி'' என்று சொல்லிவிட்டு தவீதவ் உட்கார்ந்தான். ''நான் அவளுக்கு எவ்விதத் தீங்கும் செய்யவில்லை. அது தான் உண்மை! அவள் படிக்க வேண்டும். அவள் குடும்பம் பெரிது. அவள்தான் மூத்தவள். குடும்ப பாரமே அவள் மீதுதான்... புரிகிறதா?''

''புரிகிறது'' என்று கூறிய நெஸ்தெரேன்கோ, அவர் தொடர்ந்து ஒரு மாதிரியாக தவீதவைப் பார்த்தார்.

''பள்ளியில் அவள் சேர்ந்து எல்லாம் சரியான பிறகு, இலையுதிர்கால அறுவடைக்குப் பிறகு திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறேன். அறுவடைக்குப் பிறகு அது விவசாயிகளின் திருமணமாக இருக்கும்'' என்று தளர்வுடன் சொல்லி முடித்தான் தவீதவ். நெஸ்தெரேன்கோவின் முகம் சாந்தமடைந்திருப்பதையும், பேச்சைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருப்பதையும் கண்ட தவீதவ் முன்பிருந்த கூச்சத்தையும், வெறுப்பையும் விட்டுவிட்டு, விருப்பத்தோடு சொல்லத் தொடங்கினான். ''லெனின்கிராடிலோ வேறு எங்குமோ எனக்குத் திருமணம் ஆகவில்லை. வார்யாவிடம்தான் முதன் முதலாக இந்தச் சோதனையை செய்து

பார்க்கப் போகிறேன். எனக்கு அதிக வயதாகிவிட்டது. சீக்கிரமே நாற்பதாகப் போகிறது.''

''முப்பது வயதுக்கு மேல், ஒவ்வொரு வயதையும் பத்தாகக் கணக்கிட்டு வருகிறாயா?'' என்று நெஸ்தெரேன்கோ புன்னகையுடன் வினவினார்.

''உள்நாட்டுப் போர்க் காலத்தைப்பற்றி என்ன சொல்கிறாய்? ஒவ்வொரு ஆண்டையும் பத்து ஆண்டாகத் தான் நான் எண்ணிக்கொண்டு வந்தேன்.''

''கொஞ்சம் அதிகம்...''

''உன்னையே கொஞ்சம் பாரு. நான் சொல்லுவது சரியாக இருக்கும்.''

பெஞ்சுக்குப் பின்னாலிருந்து நெஸ்தெரேன்கோ எழுந்தார். அறையில் குறுக்காக நடந்தார். கதகதப்பு ஏற்படுத்த கைகளைத் தேய்த்துக்கொண்டே, ''இது இப்படி, அப்படி இருக்கலாம்... செமியோன், நாம் அதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கவில்லையே. லூஷ்கா நகூல்னவோடு விளையாடிவிட்டு கைகழுவியதைப்போல, இப்பொழுது செய்ய மாட்டாய் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் தடவை நீ சிறிது புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதாகத் தெரிகிறது. நீ நல்ல தொடக்கத்தைத் தொட்டிருக்கிறாய். உனக்கு நல்ல பேறு வாய்க்க வாழ்த்துகிறேன்!''

''இலையுதிர்காலத்தின்போது நடைபெறும் திருமணத்துக்கு நீ வருவாயா?'' என்று புத்தெழுச்சியோடும், புது நம்பிக்கையோடும், தவீதவ் கேட்டான்.

''நான் முதல் விருந்தாளியாக இருப்பேன்!'' என்று நெஸ்தெரேன்கோ சொல்லும்போதே, மீண்டும் அவரது சிரிப்பில் குறும்பு தவழ்ந்தது. கண்களில் சந்தேக ரேகை தெரிந்தது. ''முக்கியத்துவத்தைக் கருதி முதல் ஆள் அல்ல. ஆனால் எல்லாருக்கும் முன்னதாக நான் வந்துவிடுவேன். தேதி தெரிந்தவுடன் வருவேன்.''

''அப்படியானால் சரி. வணக்கம்! மண்டலச் செயலாளருக்கு செய்தி கொடு.''

''நான் இன்றைக்கே செய்தியனுப்பி விடுகிறேன். அங்கே அதிக காலம் தங்காதே.''

''மின்னல் வேகத்தில் திரும்பி விடுவேன்.''

அவர்கள் கைகளைக் குலுக்கினார்கள்.

வெயிலில் சூடேறிய தெருப்புழுதியில் தவீதவ் நடந்

தான். ''அவர் உடம்புக்கு நன்றாக இல்லை! காய்ச்சல்போல இருந்தது. மஞ்சள் முகமும், குழி விழுந்த கன்னங்களும், பிணத்தின் கண்களும்... அதனால் தான் அவர் என்னிடம் அவ்வாறு பேசினார் போலும்...'' என்று நினைத்தான் அவன்.

தவீதவ் குதிரையில் ஏறப்போனபோது, சன்னல் வழியாகத் தலையை வெளியே நீட்டி தவீதவை அழைத்தார் நெஸ்தெரேன்கோ.

''ஒரு நிமிடம், செமியோன்!''

தவீதவ் தயக்கத்தோடு திரும்பினான். படிக்கட்டில் ஏறினான்.

நெஸ்தெரேன்கோவின் உடம்பு மேலும் கூனிக்குறுகி இருந்தது. உடல் தளர்ந்திருந்தது. அவர் தவீதவைப் பார்த்து, ''உன்னோடு கொஞ்சம் காரசாரமாக இருந்துவிட்டேன் போலும். ஆனால் அதையெல்லாம் நீ பொருட்படுத்தக் கூடாது. நான் ரொம்ப சிக்கலில் இருக்கிறேன். எனக்கு இருக்கிற மலேரியாக் காய்ச்சல் போதாதென்று காசநோய் வேறு மிக மோசமாக என்னை வாட்டி வதைக்கிறது. இரண்டு நுரையீரல்களிலும் அரிப்பு, புண். நாளை சுகாதார நிலையத்திற்குப் போகிறேன். மண்டலக்குழு என்னை அனுப்புகிறது. அறுவடைக்கு முன்னால் மாவட்டத்தை விட்டு விட்டு நான் போக விரும்பவில்லை. ஆனால் போகவேண்டியதாகிவிட்டது. இது ஒன்றும் மகிழ்ச்சியான பயணம் அல்ல. ஆனால், உன் திருமணத்திற்குத் திரும்ப வந்துவிட முயற்சிக்கிறேன். நான் மிகவும் மட்டுமீறி நடந்துகொள்வதாக நினைக்கிறாயா?.. என்னுடைய நண்பனோடு சேர்ந்து என் துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆசைதான். இது எதிர்பாராத ஒன்று...''

தவீதவ் பெஞ்சைச் சுற்றிப்போய், நெஸ்தெரேன்கோவை இறுக்கமாகக் கட்டித்தழுவினான். அவரது வெதுவெதுப்பான வியர்த்த கன்னத்தில் முத்தமிட்டான். ''போய் ஏதாவது மருந்து சாப்பிடு! இளைஞர்கள் தான் இந்த வியாதியால் மடிவார்கள். நம்மைப்போன்ற வயதானவர்களை ஒன்றும் செய்ய முடியாது?''

''நன்றி'' என்று நெஸ்தெரேன்கோ கூறிவிட்டார்.

தவீதவ் வீதியில் நடந்தான். குதிரையைக் கழற்றினான், பாய்ந்து சேணத்தின்மீது அமர்ந்தான். இதற்கு முன்னர்

எப்போதும் செய்திராத முறையில், எடுத்த எடுப்பிலேயே தாவி ஓடும்படியாக சாட்டையால் சொடுக்கினான். அந்த நகரத்தின் தெருமுனைக்கு வந்தபொழுது, பல்லைக் கடித்துக் கொண்டு, ''ஏ, காதுநீண்ட பிசாசே! தூங்காதே!..'' என்று அதட்டினான்.

* * *

சாப்பாட்டுக்குப் பிறகு கிராமத்துக்கு வந்து சேர்ந்த தவீதவ், ஹர்லாமவாவின் வீட்டுக்கு நேராகப் போனான். வாசற்படியில் குதிரையை விட்டிறங்கி, அநாவசியமான அவசரமின்றி உள்ளே நடந்தான். வீட்டில் இருந்தவர்கள் அவனை ஏற்கெனவே பார்த்திருக்க வேண்டும். முற்றத்தில் காலை மடக்கி இறங்கிய தவீதவ், நெடுந்தூரம் வந்த களைப்பினால் முகத்தைக் கடுப்பாக வைத்திருந்தான். அவனது வருங்கால மாமியார் அவனைச் சந்திக்க வெளியே வந்தாள். அவள் ஏற்கெனவே பழகியவளைப்போல, புதிய முறையில், நட்புணர்வோடு பழகினாள்.

''மகனே, நீ மிகவும் களைத்துப்போய்விட்டாய் போல இருக்கிறதே? இவ்வளவு விரைவாக உன்னால் எப்படித் திரும்ப முடிந்தது? பெரிய ஊருக்குப் போய்த் திரும்புவதென்றால், அவ்வளவு பக்கம் இல்லையே?'' என்று கால்களை முடக்கிக்கொண்டு முற்றத்தில் நடந்துவந்த தவீதவைக் கவலை நிறைந்த பரிவோடு பார்த்துக் கொண்டு சொன்னாள். அவளது வருங்கால மருமகன், மிக லாவகமாக சாட்டையை ஆட்டிக்கொண்டு வருவதைக் கண்டு உள்ளூர ரசித்தாள். ஒரு கஸாக்கிய பெண் என்ற முறையில், ''ருஷ்ய'' குதிரைவீரர்கள் சவாரி செய்கிற முறையை நன்கு அறிவாள்...

இத்தகைய பரிவின் தன்மையை எல்லாம் புரிந்தவனாக, உள்ளூரச் சபித்துக்கொண்டு, தவீதவ் சற்று வறட்டுத்தனமாகவே, ''அதெல்லாம் வேண்டாம் அம்மா! வார்யா எங்கே?'' என்று கேட்டான்.

''ஏதோ உடைதயாரிப்பவரைப் பார்க்கப் போயிருக்கிறாள். அவள் வெளியில் போட்டுக்கொண்டு போவது போல, இருக்கிற பழைய சட்டைகளிலிருந்து, ஏதாவது தைக்க வேண்டாமா? தம்பி, நீ சரியான மணமகளாகப் பார்த்துவிட்டாய்! ஒரு பழைய குட்டைப் பாவாடை ஒன்று

தான் அவளிடம் இருக்கிறது! உன் கண்களை எங்கு வைத்துக்கொண்டிருந்தாய்?''

''நான் ஒன்றும் குட்டைப் பாவாடை கேட்கவில்லை. உங்கள் மகளைத்தான் கேட்டேன்'' விரிந்திருந்த உதடுகளை நக்கிக் கொண்டே தவீதவ் சொன்னான். ''குடிக்க குளிர்ந்த நீர் இருக்கிறதா? பாவாடைகளை வாங்கிக்கொள்ளலாம். கொஞ்ச நேரம் அதையெல்லாம் விட்டுவிடுங்கள். எப்பொழுது அவள் திரும்பி வருவாள்?''

''யாருக்குத் தெரியும்? உள்ளே வா! வார்யாவைப் படிக்க வைப்பதைப்பற்றி உங்களுடைய மேலதிகாரியிடம் பேசிவிட்டாயா?''

''ஆமாம், பேசிவிட்டேன். நாளை மண்டல அலுவலகத்துக்குப் போகிறோம். எனவே, நீண்டதூரப் பயணத்துக்கு உன் மகளைத் தயார் செய். இது என்ன அம்மா? மீண்டும் குழாயைத் திறந்துவிடப் போகிறாயா? இது காலங்கடந்த வேலை!''

உண்மையாகவே, அந்த அம்மாவுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. தேற்ற முடியாதபடி வேதனை குத்திற்று. ஆனால் அவற்றைத் தாங்கிக்கொண்டவுடன், கண்களை ஓர் அழுக்குத் துணியால் துடைத்துவிட்டுக்கொண்டு, ''வீட்டுக்குள் போ, அன்புள்ள கடவுள் உன்னைக் காப்பாராக! இதை வீட்டு முற்றத்திலிருந்தா பேசுவது?!''

தவீதவ் குடிசைக்குள் போனான். ஒரு பெஞ்சின் மீது உட்கார்ந்தான். சாட்டையைக் கீழே போட்டான்.

''அம்மா, பேச வேண்டியது என்ன இருக்கிறது? எல்லாமே தெளிவாக இருக்கிறது. முடிவும் செய்து விட்டோம். இப்போது நாம் இவ்வாறு செய்யலாம். கடந்த ஒரு சில நாட்களில் நான் களைத்தே போய்விட்டேன். எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடு. பிறகு சிறிது நேரம் கண் அயர்ந்து கொள்கிறேன். எழுந்தவுடன் நாம் பேசலாம். யாராவது ஒரு குழந்தையிடம், குதிரையைக் கொட்டடியில் விட்டு விடட்டும்.''

அவளது முகம் சாந்தமடைந்தது. ''குதிரையைப் பற்றிக் கவலைப்படாதே. குழந்தைகள் கவனித்துக்கொள்வார்கள். கொஞ்ச நேரம் பொறு. உனக்கு நான் குளிர்ந்த பால் கொஞ்சம் கொண்டுவருகிறேன். நிலவறையில் இருந்து எடுத்து வருகிறேன்.''

களைப்பும், தூக்கமின்மையும் தவீதவை இளைக்க வைத்துவிட்டன. இவனுக்குப் பாலும் கிடைக்கவில்லை. குளிர்ந்த ஜாடியில் அக்கிழவி பாலைக் கொண்டுவந்து பார்த்தபோது, தான் உட்கார்ந்திருந்த பெஞ்சின்மீது சாய்ந்து தூங்கிவிட்டான் தவீதவ். அவன் வலது கை தொங்கிக்கிடந்தது. வாய் லேசாகத் திறந்திருந்தது. அவனை எழுப்ப அவள் முயற்சிக்க இல்லை. ஆடிக்கொண்டிருந்த தலையைக் கொஞ்சம் தூக்கி ஒரு நீலநிறத் தலையணை மீது வைத்தாள்.

குடிசையின் இறுக்கமான வெப்பநிலைமையாலும், அவனுடைய சொந்தக் களைப்பாலும் தவீதவ் இரண்டு மணி நேரம் அயர்ந்து தூங்கினான். குழந்தைகளின் முணுமுணுப்பைக் கேட்டும், பெண்பிள்ளைகள் கையைத் தொடுவதை உணர்ந்தும் எழுந்தான். கண்களைத் திறந்த பொழுது வார்யா பக்கத்தில் உட்கார்ந்து முறுவலித்துக் கொண்டிருந்தாள். இவனைச் சுற்றி ஐந்து குழந்தைகள், எல்லாமே ஹார்லாமவா வீட்டுக் குழந்தைகள் நின்று கொண்டிருந்தார்கள்.

இருந்தவர்களிலேயே மிகவும் சிறியவன், ஆனால் ரொம்பவும் துணிச்சல்காரனான பையன், தவீதவின் பெரிய கையைத் தனது சிறிய விரல்களில் பற்றிக்கொண்டு, ''செமியோன் மாமா, நீ எங்களோடு குடியிருக்கப் போகிறாயாமே, இல்லையா?'' என்று வினவினான்.

தவீதவ் கால்களை பெஞ்சுக்கப்பால் நழுவி நகர்த்திக் கொண்டே,தூக்கக்கலக்கத்தில் முறுவலித்தான்.''ஆமாண்டா மகனே! உண்மைதான். வார்யா படிக்கப் போகிறாள். யார் உங்களுக்குச் சோறு போடுவது? துணி கொடுப்பது? இனிமேல் அது என்னுடைய வேலை. அதுதான் விஷயம்!'' என்று கூறியவாறே குழந்தையின் பரட்டைத் தலையில் கையை வைத்தான்.

அத்தியாயம் இருபத்தைந்து

மறுநாள், விடிவதற்கு வெகு நேரத்திற்கு முன்னதாகவே, ஷ்சுக்கார் தாத்தாவை வைக்கோல் போரிலிருந்து எழுப்பி, குதிரைகளைப் பூட்ட தவீதவ் உதவினான். ஹார்லாமவா வீட்டுக்கு வண்டியை ஓட்டிக் கொண்டு போனார்கள். பாதி

மூடியிருந்த மேல் சன்னலின் வழியாக சமையலறையில் விளக்கெரிவது தெரிந்தது.

வார்யாவின் அம்மா சமைத்துக்கொண்டிருந்தாள். குழந்தைகள் தூங்கிக்கொண்டிருந்தனர். குழந்தைகள் ஒரு மரப் பலகைப் படுக்கையில் குறுக்கும் நெடுக்குமாய்க் கிடந்தன. வார்யா, சட்டையைப் போட்டுக்கொண்டு, பயணத்துக்குத் தயாராய் ஏற்கெனவே உட்கார்ந்திருந்தாள். அவள் வீட்டுப் பெஞ்சிலேயே, யாரோ ஒரு பெண் மாதிரி, அவளுக்கும் அந்த வீட்டுக்கும் இனிமேல் சம்பந்தமில்லாதது போல, யாரோ விருந்தாளி மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

தவீதவை மகிழ்ச்சியோடு வரவேற்று வணங்கினாள். ''உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன், தலைவரே'' என்றாள்.

''முதல் கோழி கூவும்போதே அவள் புறப்படத் தயாராகி விட்டாள்'' என்று அவளுடைய அம்மா தவீதவுக்கு வணக்கம் தெரிவித்தபோது சொன்னாள். ''இவள் அவர்கள் செய்தது மாதிரியே பச்சையாக இருக்கிறாள்! கபடமற்றவளாகவும் இருக்கிறாள்—அதைச் சொல்லவே தேவையில்லை!.. இன்னும் ஓரிரு நிமிடங்களில் காலை உணவு தயாராகிவிடும். வா, உட்காரு, தோழர் தவீதவ்.''

முதல் நாள் தயாரித்த முட்டைக்கோசு சூப்பும் உருளைக் கிழங்குப் பொரியலையும் சாப்பிட்டுவிட்டு, பாலைக் குடித்தார்கள். தவீதவ் வார்யாவின் அம்மாவுக்கு நன்றி சொல்லிவிட்டு, மேசையை விட்டெழுந்தான். ''புறப்பட நேரமாகி விட்டது. வார்யா, உங்கள் அம்மாவுக்கு வணக்கம் சொல்லிக்கொள். அதற்கு அதிக நேரம் எடுக்காதே. அழுது கண்ணீர் சிந்த வேண்டாம். நீ ஒன்றும் நிரந்தரமாகப் பிரியவில்லை. அடுத்த முறை, மண்டலத் தலைமை அலுவலகத்துக்குப் போகும்பொழுது, விவசாயப் பள்ளிக்கு உன்னையும் அம்மா அழைத்துப் போகிறேன்... சரி, குதிரைகளிடம் நான் போகிறேன்.'' வாயிற்படியில் நின்றுகொண்டு, ''ஏதாவது கம்பளித் துணியை உன்னுடன் எடுத்து வருகிறாயா?'' என்று தவீதவ் கேட்டான்.

வார்யா கூச்சத்தோடு சொன்னாள்: ''ஒரு பழைய ஒட்டுப் போட்ட ஜாக்கெட் இருக்கிறது. அதுவும் ரொம்பப் பழையதுதான்...''

''பரவாயில்லை. நீ நடனமாடும் இடத்துக்குப் போக வில்லை. இதுதான் விஷயம்.''

ஒரு மணி நேரம் கழித்துக் கிராமத்தை விட்டு அவர்கள் வெகுதூரம் போய்விட்டார்கள். ஷ்சுக்காருக்கு அடுத்து தவீதவ் உட்கார்ந்திருந்தான். வார்யா மறு பக்கத்தில் உட் கார்ந்தாள். அவ்வப்பொழுது தவீதவின் கையைப் பிடித்துக் கிள்ளி விட்டுவிட்டு மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்துவிடு வாள். அவள் தனது குறுகிய வாழ்நாளில் என்றைக்குமே கிராமத்தை விட்டு வெளியே போய்த் தங்கி இருந்ததில்லை. பெரிய ஊருக்கு ஓரிரு தடவைகள்தான் போயிருக்கிறாள். இரயிலையே அவள் பார்த்தது இல்லை. எனவே தான் நகரத்தை நோக்கிப் போகும் இந்த முதல் பயணம் அவளது இளம் நெஞ்சிற்குக் குழப்பத்தையும் துடிதுடிப்பையும் கொடுத்தது. குடும்பத்தையும், நண்பர்களையும் விட்டுப் பிரிவதை நினைத்து அவளுக்குக் கொஞ்சம் கவலை இருந் தது. கண்ணீர்கூட வெடித்துக் கிளம்பிற்று.

தோன் நதியைப் படகில் கடந்த பிறகு, ஆற்றின் மறு புறத்துக் குன்றில், குதிரைகள் மெதுவாக நடந்தன. தவீ தவ் வண்டியை விட்டிறங்கி, வார்யா அருகிலேயே நடந்து சென்றான். வண்டியின் வெளிப் பக்கத்தில் ஒட்டியிருந்த பனிக்கட்டிகளைத் தட்டிவிட்டான். காலை நேரத்தில் அது பெறும் நிறத்தைக்கூடப் பெறாமல், நிறமில்லாமலேயே இருந்தது. அது சூரிய ஒளியில் வானவில் நிறத்தைப் போல மின்னும். அடிக்கடி அவன் வார்யாவைப் பார்த்து, உற் சாகமூட்டக்கூடிய முறையில் முறுவலித்துக் கொண்டிருந் தான்.

''வார்யா, உன் கண்களை எங்காவது உலர்ந்த இடத் தில் வைத்திரு'' என்றோ, ''நீ இப்பொழுது பெரிய பெண். வளர்ந்த பிள்ளைகள் அழக் கூடாது, என் அன்பே!'' என் றான்.

கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் வார்யாவும் அவ ளது ஈரக் கன்னங்களை நீலநிறக் கைக்குட்டையால் துடைத்துக்கொள்வாள். உதடுகளை ஓசையின்றி அசைத்துக் கொண்டு, அவனுக்குக் கீழ்ப்படியக்கூடிய முறையில், சிரிப்பாள்.

தோன் நதிக்கு இப்பக்கமாக இருந்த மலையடிவாரத் தில் இன்னமும் மஞ்சுமூட்டம் கவ்வியிருந்தது. மலைப் பாதையிலும் பஞ்சு மேகம் மூடியிருந்தது.

நெடுஞ்சாலையோரம் மண்டியிருந்த புதர்களின் மணமோ, மரப்பட்டைகளின் வாசனையோ, சாலையின் விளிம்பு வரை குவிந்திருந்த தானியங்களின் மணமோ, இந்தக் காலை நேரத்தில் பரவவே இல்லை. எல்லா வல்லமையும் படைத்த உளுத்த கட்டையின் மணம்கூட வீசவில்லை. பனியில் எல்லா வாசனையும் அடங்கிட்டது. ஜூலை மாதத்து மழை பெய்து ஓய்ந்தது மாதிரி பனி கொட்டி நனைந்திருந்தது. எனவே இந்த அமைதியான காலை வேளையில் இரு சாதாரணமான வாசனைதான் பரவிக் கொண்டிருந்தது. ஒன்று பனியின் வாசனை. மற்றொன்று பனி அடக்கிக் கொண்டிருந்த சாலைப் புழுதியின்மணம்.

ஷ்சுக்கார் தாத்தா, ஒரு மிகப் பழைய கித்தான் மழை மேலங்கியைப் போட்டு மூடிக்கொண்டிருந்தான். மேலும் அவனது இடையை ஒரு சிவப்புப் பழைய துணியால் இறுக்கிக் கட்டியிருந்தான். வழக்கத்திற்கு மாறாக சாட்டையைச் சுழற்றும்போதும், சீட்டியடித்து குதிரைகளை விரட்டும்போதும் தவிர மற்ற நேரத்தில் ஷ்சுக்கார் அமைதியாக இருந்தான்.

சூரியன் எழுந்தவுடன், ஷ்சுக்காரும் நிமிர்ந்து உட்கார்ந்து, ''என்ன செமியோன், நீ வார்யாவைத் திருமணம் செய்துகொள்ளப் போவதாகக் கிராமத்தில் ஒரு வதந்தி அடிபடுகிறதே உண்மைதானா?'' என்று வினவினான்.

''உண்மைதான் தாத்தா.''

''அது சரிதான். ஆண்களாகிய நாம், என்ன செய்தாலும் திருமணம் செய்துகொள்ளாமல் தப்பிவிட முடியாது'' என்று பழமொழி வழங்குவதாகச் சொன்னான் ஷ்சுக்கார். ''காலஞ்சென்ற எனது பெற்றோர் எனக்கு பதினேழாவது வயதிலேயே திருமணம் செய்து வைத்துவிட்டார்கள். ஆனால் அப்பொழுதுகூட நான் ரொம்பச் சூட்டிக்கையானவன்தான். திருமணம் என்றால், எப்படிப்பட்ட சனியன் பிடித்த வேலை என்பது எனக்குத் தெரியும்... இந்த உலகத்திலுள்ள யாரையும் காட்டிலும், நான்தான் மிக அதிகமாக, இந்தத் திருமணத்தை விட்டுத் தப்புவதற்காக முயற்சித்தவன்! திருமண வாழ்க்கை என்பது ரோஜாப் படுக்கையல்ல என்பதை நானறிவேன்! செமியோன் தம்பி, நான் என்ன செய்து கொண்டேன் என்று தெரியுமா? மூளைக்

கோளாறானவனைப் போலவும், இழுப்பு வியாதி உள்ள வனைப் போலவும் பாவனை செய்து பார்த்தேன். என் தந்தை மிகவும் கண்டிப்பான பேர்வழி. எனக்கு மூளைக் கோளாறு என்றதற்காக, என்னை இரண்டு மணி நேரம் சவுக்கால் அடித்தார். சவுக்குக் கைப்பிடி என் முதுகில் உடைந்த பிறகு தான் விட்டார். இழுப்பு என்பதற்காக, கடிவாளத் தால் இரண்டு அடிகள் விட்டார். நான் காய்ச்சலென்று படுத்துக்கொண்டு, உள்ளே ரொம்ப வலிப்பதாக பாவனை செய்யத் தொடங்கினேனோ இல்லையோ, அவர் ஒரு வார்த் தைகூடப் பேசாமல் வெளியே போய், சறுக்கு வண்டி யிலிருந்து சிப்பாய்க் கம்பை எடுத்துக்கொண்டு வந்தார். கொட்டடி வரை போய் சறுக்கு வண்டியிலிருந்து இந்த சிப்பாய்க் கம்பை, இதற்காகப் போய்க் கழற்றிக்கொண்டு வந்திருக்கிறார். அப்படிப்பட்ட ஆள் அவர். அவர் ஆத்மா சாந்தி அடைவதாக! சிப்பாய்க் கம்பைக் கையில் வைத்துக் கொண்டு, அன்போடு கூறுவார்: 'எழுந்திரு மகனே, உனக்கு நான் பண்டுவம் பார்க்கவேண்டும்...' கொட்டடி வரை போய் இந்த சிப்பாய்க் கம்பை எடுத்து வருவார் என்றால், நிச்சயமாக நம் உயிரையும் பண்டுவம் பார்க்கிற முறையில் எடுத்துவிடுவார் என்று நினைத்தேன். அவர் கையில் அப் படி ஒரு கழி இருந்தால், அது படுமோசம் என்று அருத்தம். அந்தக் கிழவருக்கு மூளையில் எங்கோ கோளாறு. நான் சிறு பையனாக இருந்தபொழுதே இதனைக் கவனித்திருக் கிறேன்... எனவே, யாரோ என்மீது வெந்நீரைக் கொட்டி விட்டதைப் போலக் குதித்து எழுந்தேன். திருமணமும் செய்துகொண்டேன். அந்த முட்டாள் கிழவருக்கு எதிராக நான் என்ன செய்ய முடியும்? என் வாழ்க்கை பூராவுமே தலைகீழாக, ஏறுக்கு மாறாகத்தான் நடந்து வருகிறது! என் மனைவி இப்பொழுது இருநூறு பவுண்டு எடை இருக் கிறாள். ஆனால் அந்தக் காலத்தில்...'' கிழவன் உதட்டை வாயில் மடித்து மென்றான். கண்களை மேலே உயர்த்தி, ''இரு நூறு ஐம்பதுக்குக் குறையாமல் இருந்தாள். கட வுள் சத்தியமாகச் சொல்கிறேன்!'' என்று உறுதியாகச் சொன்னான்.

சிரிப்பை அடக்க முடியாத தவீதவ், ''அது மிக அதிக மாயிற்றே?..'' என்று கேட்டான்.

இதற்கு, ஷ்சுக்கார் முழுநம்பிக்கையுடன், ''இதனால்

என்ன? அரை நூறு அதிகமாகவோ, அரை நூறு குறைவாகவோ இருந்தால் உனக்கு என்ன? நீயா அத்தனை போராட்டத்தையும், வேதனையையும் தாங்கியது? நான் தானே அவற்றையெல்லாம் தாங்கியது! திருமண வாழ்வில் நான் பட்ட சிரமத்துக்கு, பேசாமல் தூக்குப் போட்டுக் கொண்டு செத்திருக்கலாம். ஆனால் அவள் தவறான ஆளைத் தேர்ந்து எடுத்துவிட்டாள்! ஆத்திரமூட்டப்பட்டால் நான் படுமோசமான ஆளாக மாறிவிடுவேன்! அப்படிப் பட்ட மோசமான ஆத்திர வேளைகளில், 'இல்லை அன்பே! நீ போய் தூக்குப் போட்டுக்கொள், நான் வேண்டுமானால் உன்னைப் பின் தொடர்கிறேன்' என்று நினைத்துக் கொள்வேன்...''

தான் சொல்லும் கதையை கவனமாகக் கேட்கிறார்கள் என்பதையறிந்த ஷ்சுக்கார் தாத்தா, தலையை மகிழ்ச்சியோடு ஆட்டிக்கொண்டு, குலுங்கிச் சிரித்துக் கொண்டே, தனது எல்லாவகையான பழைய பல நினைவுகளை நினைத்துக்கொண்டே கதையை மேலும் தொடர்ந்தான்.

''அன்பார்ந்த குடிமக்களே—நீயும்தான் வார்யா! இளமையில் எங்கள் காதல் தீவிரமாகவும், வேகமாகவும் இருந்தது! ஏன் அப்படி இருந்தது என்று கேட்கிறேன்? ஏனென்றால், எங்கள் வாழ்க்கை முழுவதுமே கோபம்தான். கோபமும் வெறியும் ஒன்றுதான் என்று மக்காருடைய பெரிய அகராதியில் நான் படித்திருக்கிறேன்.

''இரவு நேரத்தில் நான் விழித்தால், என் வீட்டுக்கிழவி சிரித்துக் கொண்டோ, அழுதுகொண்டோ இருப்பாள். 'பண்ணே; என் அன்பே! நன்றாக அழு! பெண்களின் கண்ணீர்தான் சொர்க்கத்தின் பனி நீராகும் என்று நானாக நினைத்துக்கொள்வேன். நான் உன்னுடன் தேன் போன்ற இனிமையான வாழ்க்கையா நடத்திக்கொண்டிருக்கிறேன்? ஆனால் அது குறித்து நான் அழுவதில்லை.'

''திருமணமான ஐந்தாவது ஆண்டு இது தான் நடந்தது. பட்டாளத்திலிருந்து எனது அண்டை வீட்டுக்காரன் பலிகார்ப் வீடு திரும்பிவந்து சேர்ந்தான். இவன் அதாமான் பட்டாளப் பிரிவில், காவலாளனாக வேலை செய்து வந்தவன். அங்கே இவனுக்கு மீசையை முறுக்கச் சொல்லிக் கொடுத்துவிட்டார்கள். அவன் வீட்டுக்கு வந்தவன் என் கிழவியிடமும் மீசையை முறுக்கிக் காட்டத் தொடங்கிவிட்

டான். ஒரு நாள் மாலை நான் வந்தபோது என்ன கண்டேன் தெரியுமா? வேலியின் ஒரு பக்கம் கிழவியும், மறு பக்கம் அவனுமாக நின்று கொண்டிருந்தார்கள். நான் அவர்களைப் பார்க்காத குருடன்போல நடித்துக்கொண்டே வீட்டிற்குள் போய்விட்டேன். மறு நாள் மாலையும் அவர்களிருவரும் அதே இடத்தில் நின்றனர். ஆகா! இது மோசமான காரிய மாயிற்றே என்று நான் நினைத்தேன். மூன்றாவது நாள் ஒரு காரியமாக நான் போனேன். மாலை நேரம் மங்க லான ஒளி இருக்கும் போது நான் திரும்பி வந்தேன். அவர் களிருவரும் மீண்டும் அங்கே நின்றுகொண்டிருந்தனர்! இது ஓர் அரிய விஷயமல்லவா! இதற்கு எதாவது செய்ய வேண்டு மென்று நினைத்தேன். ஒரு துண்டில் மூன்று பவுண்டுக் கனமுள்ள கட்டியைப் போட்டு எடுத்துக்கொண்டு, காலில் செருப்புப் போடாமல் ஓசையின்றி பலிகார்ப் வீட்டு முற்றத் தில் நடந்தேன். அவன் மீசையை முறுக்கி விட்டுக்கொண் டிருந்தபோது, பின்னந்தலையில் ஒரு போடு போட்டேன். மரக்கட்டை மாதிரி வேலியோரம் சுருண்டு விழுந்தான்.

''சில நாட்கள் சென்று பலிகார்ப்பைச் சந்தித்தேன். மண்டை எல்லாம் கட்டுப் போட்டிருந்தான். ரொம்பவும் எரிச்சலுடன், 'என்னைக் கொன்றிருக்கலாமே, முட்டாள்!' என்றான். அதற்கு நான்: 'யார் முட்டாள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இந்த வேலியோரம் பதுங்கியிருந்த ஆளா? வேலி யோரம் நின்ற ஆளா? என் பதைத் தெரிந்துகொண்டு விடலாம்,' என்று சொன்னேன்.

''இந்த மருந்து மாய வேலைபோல வேலை செய்தது! வேலியோரம் நிற்பதையே விட்டுவிட்டார்கள். இதற்குப் பிறகு இரவு நேரங்களில் என் கிழவி பல்லை நரநரவென்று கடிக்கத் தொடங்கி விட்டாள். இந்த இடிபடு கடிச்சத்தம் கேட்டு எழுந்து, 'என்ன சமாச்சாரம்? பல்வலியா?' என்று கேட்பேன். அதற்கு அவள், 'என்னை சும்மா விட்டுவிடு, முட்டாள்!' என்பாள். படுத்துக்கொண்டு எனக்குள் 'நானா கவே இதிலே யார் பெரிய முட்டாள் என்பதை பொறுத்துப் பார்க்க வேண்டும். பல்லைக் கடிக்கிறவளா? தொட்டிலில் தூங்குகிறவளா? தொட்டிலில் தூங்குகிற குழந்தை மாதிரி அமைதியாகத் தூங்குகிற ஆளா?' என்று நினைப்பேன்.''

கிழவன் மனத்தைப் புண்படுத்தி விடக் கூடாதே என் பதால் இருவரும் அமைதியாகக் கேட்டனர், வார்யா சத்த

மில்லாமல் குலுங்கி குலுங்கிச் சிரித்தாள். ஷ்சுக்காரை விட்டு மறு பக்கம் தவீதவ் திரும்பிக்கொண்டு, முகத்தைக் கையால் மூடிச் சிரித்தான். அவன் ஒருவிதமான இருமலால் சிரமப் படுவது போலத் தோன்றியது. ஆனால், இதையெல்லாம் கவனியாமல் ஷ்சுக்கார் உற்சாகமாகத் தொடர்ந்தான்.

''இந்தத் தீவிரக் காதல் சில சமயங்களில் இப்படித் தான் இருக்கும்! சுருங்கச் சொன்னால், இந்தத் திருமணங் களால் ஒரு பலனுமே இல்லை. ஒரு கிழவனுடைய கண் ணோட்டத்திலிருந்து சொல்கிறேன். அல்லது இதை உதாரண மாக எடுத்துக்கொள்ளுங்கள். எங்கள் கிராமத்தில் அந்தக் காலத்தில் ஓர் இளம் பள்ளி ஆசிரியர் இருந்து வந்தார். அவனுக்கு ஒரு பெண் பார்த்திருந்தது. அவள் நமது கிரா மத்தைச் சேர்ந்த வியாபாரியின் மகள். மிக எடுப்பாக சட்டை போட்டுக்கொண்டு மிடுக்காக இருப்பான். நடப் பதற்குப் பதிலாக பெரும்பாலும் சைக்கிளிலேயே தான் சவாரி போவான். அப்பொழுதுதான் அவை வந்திருந்தன, கிராமத்திலிருந்த மக்களுக்கு அது ஒரு வியப்பானதாக இருந் தது. நாய்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? பளபளக்கும் அந்த சைக்கிள் சக்கரம் தெருவில் தெரிந்து விட்டால் போதும், நாய்கள் எல்லாம் பைத்தியம் மாதிரி பாய்ந்து வரும். இதிலிருந்து தப்பிப்பதற்காக சைக்கிள்மீது குனிந்து உடம்பை வளைத்துக்கொண்டு, அதிவேகமாக கால்மிதியை மிதிப்பதால், கால் சுழல்வதைக்கூடப் பார்க்க முடியாது. எத்தனையோ சிறிதுகள் மீது வண்டியை ஏற்றிவிட்டான். இதனால் பெரிய சிக்கலிலும் மாட்டிக்கொண்டான்!

''ஒரு நாள் காலை, பொட்டலைத் தாண்டிச் சென்று புல்வெளியில் குதிரை மேய்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கப் போனேன். என்னை நோக்கி நாய்க்கூட்டம் ஒன்று வந்தது. முன்னால் ஒரு பெண் நாயும், அதைத் தொடர்ந்து நாய்கள் கூட்டம் ஒன்றும் வந்தது. அதிகமில்லை என்றால் ஏறத்தாழ முப்பது இருக்கும். அந்தக் காலத்தில், சனிய னாய்ப் போன நமது கிராமத்து மக்கள், அவ்வளவு நாய் களை வளர்த்தார்கள். அவற்றை எண்ணக்கூட முடியாது. ஒவ்வொரு முற்றத்திலும் இரண்டு மூன்று வேட்டை நாய் கள் இருக்கும். அதுவும் எத்தகைய வேட்டை நாய்கள் தெரியுமா? ஒவ்வொன்றும் புலியைவிட பயங்கரமானவை, ஒவ்வொன்றும் ஒரு கன்று அளவு இருக்கும். அதன் உரிமை

யாளர்கள் தங்களது பணப்பெட்டகங்களையும், நிலவறைகளையும் பாதுகாப்பதில் அத்துணை அக்கறை கொண்டிருந்தனர். ஆனால் என்ன உணர்வோடு என்று நினைக்கிறீர்கள்? போர் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கித் துடைத்து விட்டது... இங்கோ நாய்களின் கல்யாணக் கூட்டமென்று என்னை நோக்கி வந்தது. நான் முட்டாள் அல்ல. உடனே என்ன செய்தேன் தெரியுமா? சாட்டையை வீசி விட்டெறிந்துவிட்டு, ஒரு தந்திக் கம்பத்தில் மிக வேகமாக ஏறும் பூனை மாதிரி பரபரவென்று ஏறினேன். கால்களைச் சுருட்டி அங்கேயே உட்கார்ந்து விட்டேன். அந்நேரம் பார்த்து, நல்ல வேளையாக நம்முடைய பள்ளி ஆசிரியர் தனது சைக்கிளில், அதன் கைப்பிடி பளபள என மின்ன ஓட்டிக்கொண்டு வந்தார். உண்மையில் அவை அவரைச் சூழ்ந்து வட்டமிட்டன. சைக்கிளை விட்டுவிட்டு குதித்தவர். அந்த இடத்திலேயே குதித்துக்கொண்டு நின்றார். ஆகவே நான் சத்தம் போட்டு, 'ஏ முட்டாளே, இங்கே வா. உன்னை நார்நாராகக் கிழிக்கப் போகின்றன!' என்றேன். அந்த அப்பாவி ஓடிவந்து கம்பத்தில் ஏற முயன்றார். ஆனால், கொஞ்சம் காலதாமதமாகிவிட்டது. அவர் கம்பத்தைப் பிடித்ததும், அவருடைய சட்டையை அவை பிடித்துப் பிராண்டிக் கிழித்துவிட்டன. அவருடைய எதிரெதிர்ச் சாய்வுப் பாணியில் தைக்கப்பட்ட கால்சட்டை, முதல் தரமான சட்டை, அதிலிருந்த தங்கப் பொத்தான்கள் உள்ளாடைகள் எல்லாம் காலி. சில வெறி பிடித்த நாய்கள் அவர் உடலையும் பிடுங்கின.

''அவரோடு வேண்டிய மட்டும் விளையாடி விட்டு, அவை அப்பால் போய்விட்டன. கம்பத்தைப் பிடித்துக் கொண்டு நின்ற அவருடைய தலைக்குல்லாயைத் தவிர அவரிடம் வேறு எதுவுமே கிடையாது. அந்தக் குல்லாயும் கூட அவர் கம்பத்தில் ஏற முயன்ற போது முட்டிக் கிழிந்துவிட்டது.

''எங்களுடைய தோல்விக்குப் பிறகு நாங்களிருவரும் இறங்கினோம். அவர் முன்னால் இறங்க, நான் பின்னால் இறங்கினேன். நான் கம்பிகளுக்கு சற்று மேலாக உட்கார்ந்திருந்தேன். முறைப்படி வரிசைக் கிரமத்தில் இருவரும் இறங்கினோம். அவர் நிர்வாணமாக நின்றார். நானோ ஒரு சட்டையுடனும், நார்மடி காற்சட்டையுடனும் இருந்தேன்.

அவர் என்னிடம் கெஞ்சத் தொடங்கினார்: 'உன் காற்சட்டையைக் கொடு மாமா. நான் அரைமணி நேரத்தில் திரும்பக்கொண்டுவந்து விடுகிறேன்.' நான் அவரிடம் சொன்னேன்: 'என்ன நல்ல மனிதனே, என் காற்சட்டையைக் கொடுத்துவிட்டு நான் எப்படிச் சும்மா இருக்க முடியும்? காற்சட்டையைப் போட்டுக் கொண்டு, சைக்கிளில் நீ போய்விடுவாய். இங்கே பட்டப் பகலில், காற்சட்டையில்லாமல் இந்தக் கம்பத்தைச் சுற்றி நின்று நான் நடனமாடிக் கொண்டிருப்பதா? என் சட்டையை வேண்டுமானால் கொடுக்கிறேன். ஆனால் என் காற்சட்டைகளைக் கொடுக்க முடியாது.' எனவே, அவர் என் சட்டையை வாங்கி, சட்டைக் கைகளுக்குள் காலை விட்டுக்கொண்டு மெதுவாக நடந்து போனார். அவர் குதித்துக்கொண்டு ஓடி இருக்க வேண்டும். ஆனால், கால் கட்டப்பட்ட குதிரை மாதிரி மாட்டிக்கொண்ட அவரால் எப்படி ஓட முடியும்? அந்த வியாபாரியின் மகள், இவரது வருங்கால மனைவி, இவரை இந்தக் கோலத்தில் பார்த்துவிட்டாள்... அன்றைக்கே அவர்களது காதலும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. அவசரமாக அடுத்த பள்ளிக்கு மாற்றிக்கொண்டு போய்விட்டார். இது நடந்து ஒரு வாரத்துக்குப் பின்னால், இந்த அவமானம், நாய்களால் ஏற்பட்ட பீதி, அந்தப் பெண் அவரைக் கைவிட்டதும், அவர்களது காதல் மண்சட்டிபோல் உடைந்தது, இவை எல்லாமாகச் சேர்ந்து, அவருக்குப் பயங்கர எலும்புருக்கிநோய் வந்து இறந்தே போனார். அவர் எதற்காகச் செத்தார் என்பதற்குள் நான் அதிகம் போக விரும்பவில்லை. ஆனால் அச்சமும், அவமானமும்தான் காரணமாக இருக்க வேண்டும் தேய்கின்ற இந்தக் காதல் இதைத்தான் கொண்டுவரும், திருமணவிழாக்களைப்பற்றியும், திருமணங்களைப் பற்றியும் சொல்வானேன். செமியோன், வார்யாவைத் திருமணம் செய்யும் முன்னர் நீயும் நூறு தடவையாவது யோசிக்க வேண்டும். எல்லாரும் ஒரே மட்டையால் சாயம் பூசப்பட்டவர்கள் தான் தெரியுமோ? மக்காராலும், என்னாலும் இவர்களைச் சகிக்கவே முடியாது தெரியுமோ? எங்களுக்கு அதற்கான காரணங்களும் உண்டு!''

''அது சரிதான் தாத்தா. நான் மீண்டும் யோசிக்கிறேன்'' என்று தவீதவ் கிழவனுக்கு மீண்டும் உறுதியளித்துவிட்டு, ஷ்சுக்கார் சிகரெட்டைப் பற்றவைத்தபொழுது, வார்யாவை

அருகில் இழுத்து, காற்றினால் மென்மயிர் அலைந்து கொண்டிருந்த நெற்றியில் முத்தமிட்டான்.

கதை சொன்னதினால் களைத்துப்போயோ, ஒருவேளை பழைய நினைவுகள் காரணமாகவோ ஷ்சுக்கார் கண்ணயர்ந்தான். ஷ்சுக்காரின் இளைத்துப்போன கைகளிலிருந்து தவீதவ் கடிவாளத்தை எடுத்துக்கொண்டான். தூக்கக் கலக்கத்தில் ஷ்சுக்கார், ''தம்பி, நல்ல பிள்ளை! உன் அன்புக்கு நன்றி. சாட்டையை எடுத்துக்கொண்டு, கொஞ்ச நேரம் குதிரைகளை ஓட்டு, அதற்குள் ஒரு கோழித்தூக்கம் போட்டுக் கொள்கிறேன். சனியன் பிடித்த கிழட்டு வயசு! சூரியன் கொஞ்சம் சூடு அதிகமானால் எனக்குத் தூக்கம் வந்துவிடுகிறது... மாரிக்காலத்திலோ எவ்வளவு குளிர்கிறதோ அவ்வளவுக்கு அதிகமாகத் தூக்கம் வருகிறது. நீ கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்காவிட்டால், தூக்கத்தில் குளிர்ந்து விறைத்தேகூடப் போகலாம்.''

வார்யாவுக்கும் தவீதவுக்கும் இடையில், தனது சிறிய மெலிந்த உடலுடன் சாட்டை மாதிரி வண்டியில் குறுக்குவாக்கில் கிடந்தான் ஷ்சுக்கார். தூங்கிய மாத்திரத்தில் குறட்டைவிட்டு 'தர்புர் ரென்று' மூச்சுவிடத் தொடங்கினான்.

இந்நேரத்தில் சூரியவெப்பத்தில் புல்வெளியிலிருந்த பல்வேறு வகைப் புல்பூண்டுகளின் மாறுபட்ட மணங்கள் கமழத் தொடங்கிவிட்டன. சாலைப் புழுதியின் வாசனையும், உழுது காய்ந்த புல் வாசனையும் கலந்து வீசின. வெகு தூரத்தில் வானில் நீலநிறக் கீற்றுகள் தோன்றின. தோன் நதிக்கு அப்பாலிருந்த, முற்றிலும் புதியதும் அறிந்திராததுமான உள்ளத்தைப் பறிக்கும் அன்பிற்குரியதுமான பரந்து விரிந்த புல்வெளியை வார்யா ஆர்வக் கண்களோடு அகலத் திறந்து பார்த்தாள்.

* * *

மாலைக்குள்ளாக நூறு கிலோமீட்டருக்கும் அதிகமான தூரத்தைக் கடந்துவிட்டார்கள். அன்றிரவு ஒரு வைக்கோல் போர் அடியில் இரவைக் கழித்தனர். வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த கொஞ்சப் பொருட்களைக் கொண்டு இரவுச் சாப்பாடு தயாரித்தனர். சிறிது நேரம் விண்மீன்கள் தெளித்த வானவெளியை அவர்கள் வண்டியில் உட்கார்ந்து வெறித்துப் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

''நாம் நாளைக் காலை மற்றுமொரு பயணம் புறப்பட்டாக வேண்டும். எனவே, இப்பொழுது தூங்கலாம். வார்யா, நீ வண்டியில் படுத்துக்கொள். என்னுடைய மேலங்கியை எடுத்துப் போர்த்திக்கொண்டு வசதியாகத் தூங்கு. தாத்தாவும் நானும் வைக்கோல்போர் அடியில் படுக்கிறோம்'' என்று சொன்னான் தவீதவ்.

''அதுதான் சரியான முடிவு செமியோன்'' என்று அதை ஏற்றுக்கொண்டு பேசினான் ஷ்சுக்கார். தவீதவ் தன்னோடு படுக்கப் போகிறானே என்ற மகிழ்ச்சி அவனுக்கு.

உண்மை என்னவென்றால், இந்தப் புதிய இடத்தில், புல்வெளியில், தனிமையில் இரவைக் கழிக்க பயந்துகொண்டு இருந்தான் கிழவன்.

தவீதவ் கைகளைத் தலைக்குப் பின்னால் வைத்து, தனக்கு மேலாக வெள்ளிகள் பூத்து நின்ற வான்வெளியை வெறித்துப் பார்த்தபடி மல்லாந்து படுத்தான். விண்மீன் பெரிய கரடியைப் பார்த்துவிட்டு, பெருமூச்சுவிட்டான். பிறகு காரணம் ஏதுமின்றி தனக்குத்தானே சிரித்துக்கொண்டான்.

நள்ளிரவுக்குப் பிறகுதான், பகலில் ஏறிய சூரிய வெப்பத்தை பூமி இழந்து, உண்மையான குளிர் அடிக்கத் தொடங்கியது. மிக அருகாமையிலேயே, ஒரு நீரோடையில், ஒரு குளமோ, புல்வெளி ஏரியோ இருந்தது. அங்கிருந்து ஈர மண்ணின் வாசனையும், புதரின் மணமும் வீசின. கவுதாரியினப் பறவை ஒன்று மிக அருகிலிருந்து கிரீச்சிட்டது. தவளைகள் கத்தும் சத்தம் அதுவும் சில தவளைகள் மட்டும் கத்தும் சத்தம் கேட்டது. ''தூங்குகிறேன், தூங்குகிறேன்!'' என்று ஒரு சிறிய ஆந்தை இரவிலே மென்மையாகக் கத்திற்று...

தவீதவ் அப்போதுதான் கண்ணயர்ந்தான். ஆனால், அந்த சமயம் பார்த்து ஒரு சுண்டெலி வைக்கோலில் சரசர வென்று ஓடிற்று. ஷ்சுக்கார் அலறிப் புடைத்து எழுந்தான்.

''கேட்டாயா, செமியோன்?!'' என்று தவீதவை உலுப்பிக் கொண்டே கத்தினான். ''நல்ல இடமாகத் தேர்ந்தெடுத்தோம்! நாசமாய்ப் போக! இந்த வைக்கோல் படப்பு முழுவதும் ஒரே பாம்புகளும் தேள்களும்தான் போலிருக்கிறது. உனக்கு அது கேட்கவில்லையா? சுடுகாட்டிலிருந்து ஆந்தை வேறு அலறுகிறது... ஐயையோ! இந்த சாவுக்கிடங்கிலிருந்து

வேறு எங்காவது போய்விடலாம் வா!'' என்றான் ஷ்சுக்கார்.

''சும்மா தூங்கு தாத்தா. கதையெல்லாம் வேண்டாம்'' என்று தூக்க மயக்கத்தில் சொன்னான் தவீதவ்.

ஷ்சுக்கார் மீண்டும் படுத்தான். வெகு நேரம் வரை அலட்டிக்கொண்டே கிடந்தான். மழை மேலங்கியைச் சுற்றிப் போர்த்திக்கொண்டு முணகிக்கொண்டே கிடந்தான். ''நான் கூட்டு வண்டியிலே போகலாம் என்று சொன்னேன். ஆனால் ஒத்தச்சாரட்டு வண்டியில் வேகமாகப் போய்விடலாம் என்று சொன்னாய். இப்பொழுது நீயே அநுபவி! கூட்டு வண்டியில் வந்திருந்தால், நம் வீட்டு வைக்கோலைப் போட்டுக் கொண்டு வந்திருக்கலாம், நல்ல நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு வசதியாக வந்திருக்கலாம். மூன்று பேரும் உள்ளேயே படுத்திருந்திருக்கலாம். இப்பொழுது பார், வீடில்லாத அநாதை நாய் மாதிரி வைக்கோல் போரில் படுத்துக் கிடக்கிறோம். வார்யாவுக்கு என்ன, பரவாயில்லை. மேலே பத்திரமாகத் தூங்குகிறாள். ஒரு ராணி மாதிரிப் படுத்துத் தூங்குகிறாள். ஆனால் இங்கோ, உன் தலையைச் சுற்றி ஒன்று சரசரவென்று கேட்கிறது, பக்கத்திலும் சரசரவென்று கேட்கிறது, காலைச் சுற்றி சரசரவென்கிறது. எது இப்படி சரசரவென்று ஊர்ந்துகொண்டிருக்கிறதென்று கடவுள் தான் அறிவார். கொஞ்சம் பொறு. நீ தூங்கியவுடன் பாம்பாவது, வேறு ஏதாவது வந்து உன் மர்மஸ்தானத்தில் ஒரு பிடுங்கு பிடுங்கிவிட்டுப் போகட்டும். அவ்வளவுதான், உன் திருமணக் கோலாகலம் எல்லாம் முடிவுக்கு வந்துவிடும்! உனக்குத் தெரியாது. சில இடங்கள் இருக்கின்றன. அங்கே பாம்புகள் கடித்தால் வேலை முடிந்தே போகும். அப்புறம் வார்யா குடம் குடமாகக் கண்ணீர் வடிப்பாள். அழுவாளா? மாட்டாளா? இதனால் என்ன பலன்?.. என்னை ஒரு பாம்பும் கடிக்காது. கிழட்டு உடம்புக்காரன். அத்தோடு த்ரஃபீம் என்னோடு தானே படுத்துத் தூங்குகிறது. பாம்புகளுக்குக் கிடாய் வாசனையென்றால் பிடிக்காது. எனவே என்னைக் கடிக்காது உன்னைத்தான் கடிக்கப் போகிறது... வேறு எங்காவது நாம் போய்விடலாம்!''

''தாத்தா, இன்றைக்கு இரவு எப்பொழுதாவது தூங்குவாயா?'' என்று பொறுமையிழந்து தவீதவ் கேட்டான். ''நடு இரவில் நாம் எங்கே நகர முடியும்?''

ஷ்சுக்கார் தாத்தா கவலையோடு பேசினான்: ''சாவு

வட்டமிடும் இடத்துக்கு என்னை நீ கூட்டிக்கொண்டு வந்து விட்டாய். எனக்கு இது தெரிந்திருந்தால், வீட்டுக் கிழவி யிடமாவது முன்கூட்டியே விடை பெற்றுக்கொண்டு வந்திருப் பேன். ஆனால் அது தெரியாததால், வழக்கம்போல திரு மணம் ஆகாதவன் போல வந்து விட்டேன். நிச்சயமாக நீ நகரப் போவதில்லையா தம்பி?''

''இல்லை, தூங்கு தாத்தா!''

சிலுவைக் குறி போட்டுக்கொண்டு பெருமூச்சுவிட்ட ஷ்சுக்கார், ''தூங்க வேண்டுமென்றால் எனக்கும் மகிழ்ச்சி தான், செமியோன். ஆனால்,எனக்குப் பயமாக இருக்கிறதே. இதயமோ படக்படக் என்று துடித்துக்கொண்டிருக்கிறது. சனியன் தொண்டையடைத்துச் சாக...''

ஷ்சுக்கார் தாத்தாவின் பிலாக்கணப் புலம்பலுக்கு ஏற்ப தவீதவ் நன்றாகத் தூங்கிவிட்டான்.

கதிரவன் எழும் முன் தவீதவ் எழுந்து விட்டான். வார்யா அவன் அருகில் கால்களை மடக்கி உட்கார்ந்து, அவனது நெற்றியில் விழுந்திருந்த கேசத்தைக் பிரித்து வருடிக் கொண்டிருந்தாள். அவள் தொட்ட மென்மையில் தவீதவ் விழித்துக் கொண்டிருந்தபோதுகூட அதை உணர முடியா மல் இருந்தான். வண்டியில் அவள் இடத்தில் ஷ்சுக்கார் படுத்து தவீதவ் மேலங்கிக்குள் சுருண்டு தூங்கிக்கொண் டிருந்தான்.

புத்துணர்வுடன், பவள நிறத்தில் ஜூலை மாத இளங் காலை நேரம்போல் தோன்றிய வார்யா, ''குளத்திற்குப் போய் அதிகாலையிலேயே முகங்கழுவி வந்துவிட்டேன். ஷ்சுக்கார் தாத்தாவை எழுப்பு, புறப்படலாம்!'' என்று சொன்னாள். தவீதவின் முரட்டுக் கன்னத்தில் லேசாக உதடுகளைப் பதித்து முத்தமிட்டுக்கொண்டே குதித்து எழுந்தாள். ''நீயும் போய் முகங்கழுவி வருகிறாயா, செமி யோன்? குளத்திற்குப் போகிற வழியை நான் காட்டு கிறேன்'' என்றாள்.

தூக்கம் மறையாத கனத்த தொனியில், ''நான் அதிக நேரம் தூங்கிவிட்டேன், வார்யா. போகிற வழியில் ஏதா வது ஓர் இடத்தில் கழுவிக்கொள்கிறேன். இந்தக் கிழட்டு வயலெலி உன்னை அதிகாலையிலேயே எழுப்பிவிட்டதா?''

''அவன் என்னை எழுப்பவில்லை. காலையில் நானே தான் எழுந்தேன். கால்களை முடக்கிக் கைகளை வளைத்துப்

பிடித்து உனக்கு அருகில் உட்கார்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தான். 'ஏன் தாத்தா தூங்கவில்லை?' என்று நான் கேட்டேன். 'இரவு முழுக்க தூங்கவில்லை. இந்த இடத்தில் ஒரே பாம்பு மயம். புல்வெளியில் சிறிது நடந்து விட்டுவா. நான் உனது இடத்தில் சற்று தூங்கிக்கொள் கிறேன்' என்று சொன்னான். எனவே நான் எழுந்து குளத் துக்குப் போய் முகங்கழுவி விட்டு வந்தேன்.''

நண்பகலுக்கு முன்னரே அவர்கள் மீல்லெரொவோ வந்து சேர்ந்து விட்டார்கள். அரைமணி நேரத்துக்குள்ளாக மண்டல அலுவலகத்தில் வேலைகளை முடித்துவிட்டு புன் னகை செய்தபடி மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் தவீ தவ் வெளியே வந்தான்.

''மண்டலச் செயலாளர், அவர் வேலை செய்யவேண் டிய முறையில், சுருக்காகக் காரியத்தை முடித்தார். மண்டல இளைஞர் கம்யூனிஸ்ட் சங்கத்தைச் சேர்ந்த சில பெண்கள், உன்னை அவர்களது பகுதியில் சேர்த்துக்கொள்வார்கள். என் அன்பே வார்யா, இப்பொழுது நாம் உனது விவசாயப் பள்ளிக்குப் போய், உனது புதிய தங்கும் இடத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருவோம். உதவி இயக்குநருடைய ஒப்பு தல் நமக்கு ஏற்கெனவே கிடைத்துவிட்டது. நுழைவுத் தேர்வு வரைக்கும், உனக்குப் பயிற்சியாளர்கள் சொல்லிக் கொடுப்பார்கள். முதிர் வேனிற்காலத்திற்குள்ளாக நீ ஜம் மென்று ஆகிவிடுவாய். மண்டலக் குழுவிலிருந்து வரும் பெண்கள் உன்னைக் கவனித்துக் கொள்வார்கள். அவர் களோடு இது பற்றி தொலைபேசியில் பேசிவிட்டேன்'' என் றான் தவீதவ். தனது வழக்கமான முறையில் கைகளைத் தேய்த்துக்கொண்டே, ''நம்முடைய கிராமத்து இளைஞர் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குச் செயலாளராக யாரை அனுப்பி இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா, வார்யா? யார் என்று நினைக்கிறாய்? இவான் நய்தியோனவ். பிரச் சாரக் குழுவில் கடந்த குளிர்காலத்தில் வந்தானே அவன் தான். அவன் மிகவும் கெட்டிக்காரப் பையன். அவனைப் பார்க்க வேண்டும் என்று ஆசை, இனி இளைஞர் கம்யூ னிஸ்ட் இயக்கத்தில் கொஞ்சம் முன்னேற்றம் இருக்கும்— அதை நிச்சயமாகச் சொல்கிறேன்!'' என்றான்.

இரண்டு மணி நேரத்திற்குள்ளாக விவசாயப் பள்ளி யில் எல்லா வேலையும் முடித்து பிரிய வேண்டிய வேளை

நெருங்கியது. தவீதவ் உறுதியாகப் பேசினான்: ''போய் வருகிறேன், வார்யா. சும்மா அழாதே. நன்றாகப் படி. எங்களைப்பற்றிக் கவலைப்படாதே.''

முதன் முறையாக அவளது அதரங்களில் முத்தமிட்டான். பிறகு தாழ்வாரத்தின் வழியாக நடந்தான். கத வருகே போனவுடன் ஒரு முறை திரும்பினான். ஏதோ ஒருவித ஏக்கமும், இரக்கமும் நெஞ்சைக் கவ்வ தன் கால்கள் ஊன்றி நின்ற தரையே, கப்பல் தளம்போல் ஆடுவதாகத் தோன்றியது. வார்யா சுவற்றில் நெற்றியை ஊன்றி முகத்தைக் கைகளால் மூடி நின்றாள். அவளது நீலநிறக் கைக்குட்டை தோள்பட்டையில் நழுவி வீழ்ந்தது. அவளது தோற்றம் மாற்றம் அனைத்துமே, செயலற்ற நிலையைக் காட்டி வருத்தின. தவீதவ் பெருமூச்சு விட்டுக்கொண்டே முற்றத்திற்கு வெளியே விரைந்தான்.

கிரெமியாச்சியை விட்டுப்போன அவன் மூன்று நாட்களுக்குப் பின்னர் மீண்டும் கிராமத்துக்குத் திரும்பினான்.

வெகுநேரமாகியும், நகூல்னவும் ரஸ்மியோத்னவும் அலுவலகத்தில் காத்திருந்தனர். நகூல்னவ் கிளர்ச்சியற்ற நிலையில் வரவேற்றுவிட்டு, அதைக் காட்டிலும் சோர்வாக, ''கடந்த சில நாட்களாக உன்னை வீட்டிலேயே காண முடியவில்லையே. முதலில் மாவட்டத் தலைமையிடம்... பிறகு மண்டலக் குழு மீல்லெரொவோவுக்கு என்ன காரியமாகப் போனாய்?''

''எல்லாம் நல்ல நேரத்தில் கூடியிருக்கிறோம். கிராமத்தில் ஏதாவது விசேஷம் உண்டா?''

ரஸ்மியோத்னவ் பதில் சொல்வதற்குப் பதிலாக, ''நீ கதிரைப் பார்த்தாயா? எப்படி இருக்கிறது? இன்னும் முற்ற வேண்டுமா?''

''பார்லியை சில இடங்களில் தேர்ந்தெடுத்து அறுவடை செய்யலாம். ரையும் அதே மாதிரி தான். உண்மையில் ரை முழுவதையும் உடனடியாகக் கொண்டுவந்து சேர்த்து விடலாம். ஆனால் நமது அக்கம் பக்கத்தார் தயங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.''

தனக்குத்தானே பேசிக்கொள்கிறவன் மாதிரி, ''அப்படியானால் நாம் அவசரப்படத் தேவையில்லை. காலம் நன்றாக இருந்தால் ரை அறுவடை செய்யலாம். அது கதிர்

விளைந்து விட்டது. மழை பெய்தால்? அப்புறம் எல்லாம் கெட்டு விடும்'' என்றான் ரஸ்மியோத்னவ்.

நகூல்னவ் அவன் சொன்னதை ஒத்துக்கொண்டான். ''நாம் இன்னும் மூன்று நாட்களுக்குக் காத்துக்கொண்டிருக் கலாம். ஆனால் நாம் வெறி பிடித்தது போல அறுவடை செய்ய வேண்டும். இல்லையென்றால் என்னையும், அந்தி ரேயையும் பிச்சுப் பிடுங்கி, நம்மையெல்லாம் மாவட்டத் தலைமை உயிரோடு சாப்பிட்டுவிடும், செமியோன்... அது போகட்டும், உனக்கு ஒரு செய்தி வைத்திருக்கிறேன். அரசாங் கப் பண்ணையில், என்னுடைய பழைய பட்டாளத்து நண்ப னொருவன் இருக்கிறான். நான் அவனைப் பார்க்க நேற்றுப் போனேன். அவன் என்னை வெகுநாளாக அழைத்துக்கொண் டிருந்தான். போகத்தான் முடியவில்லை. ஆனால் நேற்று எப்படியாவது போய் ஒரு நாளை அவனோடு கழிப்பது என்று முடிவு செய்தேன். நண்பனையும் பார்த்துவிட்டு, அவர்களது டிராக்டர்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதையும் பார்த்துவிட்டு வரலாமல்லவா? டிராக்டரை என் வாழ்க்கை யில் நான் பார்த்ததில்லை. எனவே, பார்க்க ஆவலோடு இருந்தேன்! அவர்கள் உழுதுகொண்டிருந்தார்கள். நான் அவர் களுடனே அன்று முழுவதும் சுற்றிக்கொண்டிருந்தேன். நண் பர்களே, 'போர்ட்சன்' இருக்கிறதே, அது சரியான எந் திரம் என்பதை நான் சொல்லியாக வேண்டும்! பொட்டல் நிலத்தை என்ன வேகமாக உழுகிறது தெரியுமா? ஆனால் எங்காவது ஒரு மூலையில் கட்டாந்தரையில் தட்டிவிட் டால், உழ முடியாமல் நின்று போய் விடுகிறது. பாவம்! வேலியோரம் இடக்குப் பண்ணுகிற குதிரை மாதிரிதான் உழவு போடுகிறது. கட்டாந்தரையில் மாட்டிக்கொண்டால் ஓரிரு நிமிடங்கள் பார்த்துவிட்டு, சக்கரம் உழுத காட்டுக்கே திரும்பிவிடுகிறது. கன்னி நிலமென்றால் வாய்க்குப் பிடிக் காதுபோலும்!... நம்முடைய பண்ணையில்கூட இதைப் போல இரண்டு ஜோடி குதிரைகள் வைத்திருந்தால் கெடு தல் இல்லை. அதைப் பற்றித்தான் நான் யோசித்துக்கொண் டிருக்கிறேன். பண்ணையில் இதுமாதிரி ஒன்று இருக்க வேண் டும் என்று அதிக ஆவலாக இருக்கிறது! இதைப் பார்த்து வியந்து பூரித்துப் போனதால், என் நண்பனோடு சேர்ந்து ஏதும் குடிக்கக்கூட நேரம் கிடைக்கவில்லை. வயலிலிருந்து நேராக இங்கு திரும்பி வந்து விட்டேன்.''

''மர்தீனவ்ஸ்கயா டிராக்டர் எந்திர நிலையத்தைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று நினைக்கவில்லையா?'' என்று ரஸ்மியோத்னவ் கேட்டான்.

''அதற்கும், அரசாங்கப் பண்ணைக்குமுள்ள வித்தியாசம் என்ன? டிராக்டர்கள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி தானே இருக்கும். மேலும் அது அதிக தூரமாயிற்றே. இங்கே அறுவடை வேலை இருக்கும் பொழுது, அவ்வளவு தூரம் போக முடியுமா?''

ரஸ்மியோத்னவ் ஒரு மாதிரி கண்ணைச் சிமிட்டினான்.

''மக்கார், உன்னைப் பற்றி நான் மிகவும் மோசமாக நினைத்துக்கொண்டிருந்தேன் என்பதை, ஒப்புக்கொள்ள வேண்டும். நீ மர்தீனவ்ஸ்கயாவிலிருந்து வரும்பொழுது சாக்தியில் இறங்கி லூஷ்காவைப் பார்த்துவிட்டு வருவாய் என்று நினைத்தேன்...''

''அது என் மூளையில் படவே இல்லை!'' என்று அழுத்தமாகச் சொன்னான் மக்கார். ''நீ என்றால் செய்திருப்பாய்; செய்திருக்க மாட்டாயா? உன்னை எனக்குத் தெரியும், என் நண்பா!''

ரஸ்மியோத்னவ் பெருமூச்சு விட்டவாறே, ''அவள் என் முன்னாள் மனைவியாக இருப்பாளேயானால், நான் பார்க்க இறங்கியிருப்பேன். உண்மையில், குறைந்தது ஒரு வாரம் அவளுடனே தங்கியிருப்பேன்'' என்று சொல்லிவிட்டு, வேடிக்கையாக, ''நான் என்ன உன்னைப்போல துணியடைத்த பொம்மையா?'' என்று கேட்டான்.

''எனக்கு உன்னைத் தெரியுமே'' என்று திருப்பிச் சொன்னான் நகூல்னவ். சிறிதுநேர யோசனைக்குப் பின்னால், ''நீ ஒரு வெறிபிடித்த பிசாசு! நான் உன்னைப் போல பெண் பிள்ளைப் பொறுக்கி இல்லை!'' என்றான்.

ரஸ்மியோத்னவ் தோள்களை நெறித்துக் கொண்டான். ''நான் மனைவியை இழந்தவனாகக் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இருந்து வருகிறேன். என்னிடம் நீ எதை எதிர்பார்க்கிறாய்?''

''ஆகையால்தான் நீ பெண்களைத் துரத்திக்கொண்டு திரிகிறாய்.''

சிறிது நேர அமைதிக்குப்பின் ரஸ்மியோத்னவ் வினயத்தோடும், அமைதியாகவும், ''இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளிலும் நான் யாராவது ஒரே பெண்ணைக் காதலித்துக்

கொண்டிருக்க வேண்டும், என்று நினைக்கிறாயா?''

''நீயா? நம்ப வேண்டும் என நீ எதிர்பார்க்கிறாயா!''

''ஆமாம், உண்மை!''

''யாருடன்? மரீனா பொயார்கவா?''

''அது உனக்கு வேண்டாத வேலை. எனவே நீ தலையிட வேண்டாம்! நான் ஏதாவது கலக்கத்தில் இருக்கும் போது, உன்னிடம் சொல்லியிருப்பேன். நான் காதலித்த, காதலித்துக்கொண்டிருக்கும் பெண்ணைப் பற்றி. ஆனால்... நீ ஓர் அசமந்தம். உன்னோடு பேசிப் பயனில்லை. நீ எந்த மாதம் பிறந்தாய்?''

''டிசம்பரில்.''

''நான் அப்படித்தான் நினைத்தேன். உன்னை, உன் அம்மா, ஐஸ் கட்டிக்குப் பக்கத்திலிருந்த துவாரத்தில் பெற்றாளோ? தண்ணீருக்குப் போயிருப்பாள், அங்கே இது நடந்திருக்கக்கூடும் என நினைக்கிறேன். ஆகையால் உன் வாழ்க்கை முழுதுமே இப்படித் தரங்கெட்டவனாக நீ இருக்கிறாய். எப்படி உன்னுடன் யாராவது மனந்திறந்து பேச முடியும்?''

''அப்படியானால், நீ ஒரு சூடான அடுப்பின் மீது பிறந்திருப்பாயோ?''

ரஸ்மியோத்னவ் விருப்பத்தோடு ஆமாம் என ஏற்றான். ''இருக்கலாம்! ஆகையால்தான் எப்போதும் கோடைக் காலம் மாதிரி சூடாக இருக்கிறேன் ஆனால் நீ ஓர் அலாதி ரகம் ''

''அது சரி! போதும் விடு!'' என்று எரிச்சலோடு நகூல்னவ் சொன்னான். ''நாம் போதுமான அளவுக்கு நம்மைப் பற்றியும், பெண்களைப் பற்றியும் பேசியாகிவிட்டது. இனி அறுவடையின்போது, நீயும் நானும் எந்தக் குழுக்களோடு போவது என்பதைப் பற்றிப் பேசுவோம்.''

''இல்லை, முடியாது'' என மறுத்த ரஸ்மியோத்னவ். ''நாம் முதலில் தொடக்கியதை முடித்து விடுவோம். எந்தக் குழுக்களுடன் நாம் சேர்வது என்பதைப் பற்றிப் பேச நமக்கு ஏராளமான நேரம் கிடைக்கும். இதுபற்றி அமைதியாக யோசித்துப்பார் மக்கார். நீ என்னை பெண் லோலன் என்றாய். ஆனால், உங்களிருவரையும் என் திருமண விழாவிற்கு அழைக்கப் போகிற நான் எப்படி அவ்வாறு இருக்க முடியும்?..''

''என்ன திருமணவிழா?'' என்று நகூல்னவ் கோபமாகக் கேட்டான்.

''என்னுடைய திருமணம்தான். அம்மாவோ இப்போது கிழவியாகிவிட்டாள். அவளால் வீட்டை இனி கவனித்துக் கொள்ள முடியாது. எனவே என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறாள்.''

''நீ அவள் சொன்னபடி நடக்கப் போகிறாயா? அட முட்டாள் கிழவா!'' நகூல்னவால் கோபத்தையும், எரிச் சலையும் அடக்கவே முடியவில்லை.

''என்னால் என்ன செய்ய முடியும்?'' என்று ஈனக் குர லில் தயங்கிச் சொன்னான் ரஸ்மியோத்னவ்.

''நீ ஒரு முழுமுட்டாள்!'' என்று சொல்லியவாறு மூக் கின் தண்டைச் சுரண்டிக்கொண்டே, தவீதவிடம், ''நாம் எங்காவது ஓர் இடத்தை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு ஒன்றாக வாழ வேண்டும். இல்லையென்றால், தனிமை சங் கடப் படுத்தும். அந்த வீட்டின் முன்னால், ஓர் அறிவிப்பை 'பிரம்மச்சாரிகளுக்கு மட்டும்' என்று போட்டு விடுவோம்.''

ஆனால் தவீதவ் உடனே ''இல்லை, மக்கார். நானும் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன். அதற்காகத்தான் மீல்லெரொவோவுக்குப் போனேன்'' என்று சொன்னான்.

இதைச் கேலி செய்கிறார்களா எனத் தெரிந்து கொள்ள இருவரையும் உற்று நோக்கினான் மக்கார். பின்னர் மெது வாக எழுந்தான். மூக்கு விடைப்பாக நின்றது. முகம் ஆத் திரத்தால் வெளுத்து விட்டது.

''உங்கள் இருவருக்கும் என்ன பைத்தியமா?! உங்களைக் கடைசியாகக் கேட்கிறேன்: நீங்கள் காரியமாகத் தான் பேசுகிறீர்களா? அல்லது என் காலைவாரிவிடப் பார்க்கிறீர் களா?'' என்று கேட்டுவிட்டு, பதிலுக்குக் காத்திராமல், தரையில் கோபமாக எச்சிலைத் துப்பிவிட்டு, அறையை விட்டுப் பாய்ந்து வெளியேறினான்.

அத்தியாயம் இருபத்தாறு

சளித்துப் புளித்துப்போன வாழ்க்கையால் அலுப்புத் தட்டிப்போய், தனிமைப்படுத்தப்பட்ட செயலற்ற வாழ் வால், ஒவ்வொரு நாளும், பொலவ்த்செவும், லியதியேவ்ஸ் கியும் ஒஸ்த்ரவ்னோவின் நெரிசலான சிறிய கொட்டடியில் இரவு, பகலை எண்ணிக் கழித்துத் தேய்ந்து வந்தனர்.

வரவர அவர்களைத் தூதுவர்கள் வந்து பார்ப்பதும் குறைந்தது; ஆட்சி எதிர்ப்பு கிளர்ச்சியாளர் மையத்திலிருந்து வாக்குறுதிகள் தந்து ஊக்கு விக்கப்பட்டன—வாக்குறுதிகள் மிக எளிமையான முறையில், ஆனால் துல்லியமாக முத்திரையிடப்பட்ட பொட்டலங்களில் அனுப்பப்பட்டன. அவைகளும் கூட மதிப்பை இழந்து விட்டன.

இவர்களிருவரில் பொலவ்த்ஸெவ், நீண்டகால தனிமை வாழ்வுக்குத் தகுதியுடையவனாகக் காணப்பட்டான். வெளித் தோற்றம்கூட பெருமளவு துணிச்சல்காரனைப் போலக் காட்டிற்று. ஆனால் லியதியேவ்ஸ்கி அடிக்கடி தனது கட்டுப்பாட்டை இழந்தான். அது ஒவ்வொருபொழுதும் அவனுக்கே உரிய முறையில் வெளிப்படும். சில நாட்களுக்குத் தொடர்ந்து பேசாமலே, சுவரைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து விடுவான், இல்லையென்றால் வழமைக்கு மாறாக தடுக்க முடியாமல் பேசிக்கொண்டே இருப்பான். இத்தகைய நேரங்களில் பொலவ்த்ஸெவ், வெப்பத்தைப் பொருட்படுத்தாமல், தன் தலைக்கு மேலே போர்வையை இழுத்துப்போட்டுக் கொள்வான். அவ்வப்பொழுது அது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்படும் அதை வெற்றி கொள்வது மிகச் சிரமமான ஒன்று. கத்தியை உறையுள் இருந்து உருவி லியதியேல்ஸ்கியின் நன்கு வாரப்பட்ட தலைக்கு நேராக சுழற்றுவான். ஒரு நாள் இரவு, லியதியேவ்ஸ்கி வீட்டிலிருந்து நழுவிச் சென்று விட்டு, விடிவதற்கு சற்று நேரத்திற்கு முன்னதாகத்தான் திரும்பினான். வரும்பொழுது கைநிறைய பனித்துளிகள் படிந்த பல வண்ண மலர்க்கொத்தை எடுத்து வந்தான்.

தன் கூட்டாளி இல்லாமலிருப்பது கண்டு அஞ்சிய பொலவ்த்ஸெவ் இரவு முழுவதும் தூங்கவே இல்லை. பயங்கர ஆர்வத்தோடு வெளியிலிருந்து வந்த ஒவ்வொரு சிறிய ஓசையையும் கேட்டுக்கொண்டே இருந்தான். இரவுக் காற்றை நுகர்ந்து நடந்ததால் பெற்ற எழுச்சியோடு, மிக உற்சாகமாக இருந்த லியதியேவ்ஸ்கி, ஒரு வாளித் தண்ணீரை உள்ளே கொண்டுவந்து அதிலே மலர்களை முறையாக வைத்தான். கனத்துப் புழுக்கமாய் இருந்த காற்று, திடீரென மலர்களின் மணத்தால் நிரம்பி புத்துயிர் பெற்றது. பொலவ்த்ஸெவுக்கே தெரியாத பலவகையான, இனிய புகையிலை, இரவு மல்லிகை, இன்னும் போதையூட்டும்

வேறு பலவகையான பூக்களின் வாசனை கலந்துவீசின. இதையடுத்து எதிர்பாராத ஒன்று நடந்தது: பாதி மறந்து போய்விட்ட இந்த மலர்களின் வாசனையை நுகர்ந்தவுடன், இரும்பு இதயம் படைத்த ஸார்ஜென்ட் மேஜர் பொலவ்த்ஸெவ் திடீரென்று கண்ணீர் விட்டான்... நாற்றமெடுக்கும் அவனது படுக்கையில், விடியப்போகும் பாதி வெளிச்சத்தில், முகத்தை வியர்வை படிந்த கையால் மூடிக்கொண்டு சாய்ந்திருந்தான். அடக்க முடியாத ஏக்கப்பெருமூச்சு வெடித்து வெளிக்கிளம்பியவுடன், சுவர்ப் பக்கமாகத் திரும்பி, தலையணையின் மூலையில் வெறுப்போடு வேகமாகக் காரித்துப்பினான்.

லியதியேவ்ஸ்கி வெறுங்காலுடன் தரைப்பலகை மீது நடந்துகொண்டிருந்தான். மென்மையான வாழ்வின் உணர்வுகள் அவனுக்குத் திரும்பின. நடனக் குழுவின், பல பாடல்களை மெதுவாக சீட்டியடித்தான். எதையும் பாராதவன் போல பாவனை செய்து கொண்டான்...

காலைப் பதினோரு மணிக்கு, தனது நிம்மதியற்ற தூக்கத்திலிருந்து விழித்த பொலவ்த்ஸெவ், தன்னைக் கேட்காமல், சொல்லிக்கொள்ளாமல் நழுவிச் சென்றதற்காக, லியதியேவ்ஸ்கியைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுந்தான். ஆனால் அவ்வாறு செய்வதற்கு பதிலாக, ''வாளித்தண்ணீரை மாற்றிவிடுவது நல்லது... இல்லையென்றால் அவை செத்துவிடும்'' என்றான்.

''உடனே செய்து விடுகிறேன்'' என்று மகிழ்ச்சியோடு பதில் சொன்னான் லியதியேவ்ஸ்கி.

ஒரு ஜாடி நிறைய குளிர்ந்த கிணற்றுத் தண்ணீரைக் கொண்டுவந்தான், வாளியில் இருந்த தண்ணீரை தரையில் ஊற்றிவிட்டான்.

''இந்த மலர்கள் உங்களுக்கு எங்கே கிடைத்தன?'' என்று பொலவ்த்ஸெவ் கேட்டான்.

தனது பலவீனத்தை வெளிக் காட்டி, இரவில் கண்ணீர் சிந்தியது, இவற்றையெல்லாம் நினைத்துச் சங்கடப் பட்டவனாய் பாராமலேயே பேசிக்கொண்டிருந்தான்.

லியதியேவ்ஸ்கி உடம்பை நெறித்துக்கொண்டான். ''திருவாளர் பொலவ்த்ஸெவ், 'கிடைத்தது' என்பது சரியான வார்த்தை அல்ல. 'திருடியது' என்பது சற்றே வெறுப்பான வார்த்தையாக இருக்கலாம், ஆனால் அது தான்

பொருத்தமான சொல். நான் கிராமத்துப் பள்ளியைக் கடந்து வந்தபொழுது, இன்பமயமான போதை தரும் மலர் களின் மணம் என் மூக்கைத் துளைத்தது. எனவே ஆசிரியர் ஷ்பீன்யா வீட்டுத் தோட்டத்திற்குள் வேலியைத் தாண்டிப் போய், இரண்டு பூத்தொட்டிகளில் பாதியைக் காலி செய்துவிட்டேன். இழிந்த வாழ்க்கை நடத்தும் நம்முடைய அறைக்கு ஒரு சிறிதாவது அழகு கொண்டுவரவே செய் தேன். இனிமேல் தொடர்ந்து புதிய பூக்களைக் கொண்டு வந்து கொடுக்கிறேன்.''

''வேண்டாம் நன்றி!''

''மனித உணர்ச்சிகள் சிலவற்றை இன்னும் நீங்கள் இழக்கவில்லை என்பதை உணரவேண்டும்'' என்று அமைதி யாகச் சொன்ன லியதியேவ்ஸ்கி, பொலவ்த்ஸெவை நேராக உற்றுநோக்கினான்.

பொலவ்த்ஸெவ் ஒன்றும் சொல்லவே இல்லை. கேட்காத வனைப் போல பாவனை செய்து கொண்டான்...

நேரத்தைக் கொல்ல அவரவர் சொந்த வழி வைத்து இருந்தனர். பொலவ்த்ஸெவ், நேரத்தைப் போக்க, எண் ணெய்க் கசிவு படிந்த சீட்டுக் கட்டை, ஒவ்வொன்றாகத் தனது முரட்டு விரலால் பிதுக்கிப் பிதுக்கி எடுத்துப் போட் டுக்கொண்டே இருப்பான். இதே சமயம் லியதியேவ்ஸ்கி படுக்கையில் படுத்துக்கொண்டு இருபதாவது தடவையாக சென்கேவிசின் ''கோவாடிஸ்'' என்ற புத்தகத்தை ஒவ் வொரு வார்த்தையாகப் படித்து ரசித்துக் கொண்டிருப் பான்.

சில சமயங்களில் பொலவ்த்ஸெவ் சீட்டை போட்டு விட்டு, ஒரு சிறு கருங்கித்தானை விரித்து அதற்கு முன்னால் மங்கோலியர் போல காலை மடித்துப்போட்டு உட்கார்ந்து ஏற்கெனவே மிகச்சுத்தமாக இருந்த, மெல்லிய எந்திரத் துப்பாக்கியை சுத்தம் செய்யத் தொடங்கிவிடுவான். அவன் ஒவ்வொரு உறுப்பையும் சுத்தம் செய்வான். பின்னர் அறை யில் இருந்ததால் சூடேறியிருக்கும் துப்பாக்கி எண்ணெ யைத் தடவுவான். பிறகு மெதுவாக ஒவ்வொன்றாக மாட்டு வான். இப்பக்கமும், அப்பக்கமுமாக தலையை ஆட்டி பல்வேறு கோணங்களில் துப்பாக்கியை வைத்து ரசித்து மகிழ்வான். பிறகு ஒரு பெருமூச்சுடன், அதை ஒரு கருங் கித்தானில் சுற்றி, படுக்கைக்கு அடியில் பத்திரமாக

வைத்துக் கொள்வான். அதையடுத்து துப்பாக்கியின் அடி பாகத்தை எடுத்து கிரீஸ் தடவி, தோட்டா போட்டு நிரப்புவான். மீண்டும் தனது இடத்தில் உட்கார்ந்தவுடன், பாய்க்கு அடியிலிருந்த தனது வாளை உருவி அது கூர்மையாக இருக்கிறதா என்று பெருவிரல் நகத்தால் உரசிப் பார்ப்பான். பிறகு வழக்கம்போல் தீட்டுக் கல்லில் பளபளக்கும் அந்த வாளை மீண்டும் தீட்டுவான். ''சவரக்கத்தி மாதிரி!'' என்று நிறைவுடன் முணுமுணுத்துக்கொள்வான்.

இப்படிப்பட்ட சமயங்களில் லியதியேவ்ஸ்கி புத்தகத்தை அப்பால் போட்டுவிட்டு, தனது, ஒற்றைக் கண்ணை உருட்டி, கிண்டலாக இவனைப் பார்ப்பான்.

''எனக்கு மலைப்பாக இருக்கிறது. உங்களுடைய முட்டாள்தனமான, ஆசாபாசத்தைப் பார்த்து, நான் பெரிதும் திகைக்கிறேன்! உங்களுடைய வாளை வைத்துக்கொண்டு, சின்னக் குழந்தை பொம்மையை ரசிப்பது மாதிரி ரசிக்கிறீர்களே! இப்பொழுது 1930ஆம் ஆண்டு என்பது நினைவிருக்கட்டும். வாள், வேல், ஈட்டி மாதிரி இரும்பு ஆயுதங்களின் காலம் மலையேறி விட்டது. பீரங்கிகள்தான் கடந்த போரில் எல்லாவற்றையும் முடிவு செய்தது. குதிரை மீதிருந்த பொம்மை வீரர்களோ, அவர்கள் இல்லாமலோ அல்ல. இனி வரும் போர்களையும் அதுதான் தீர்மானிக்கப் போகிறது. பீரங்கிப்படையில் இருந்தவன் என்ற முறையில் நான் இதை அழுத்தமாகச் சொல்கிறேன்!''

பொலவ்த்ஸெவ், வழக்கம்போல தலையைக் கீழே இறக்கி பல்லை நரநரவென்று கடித்தான். ''குட்டையான பீரங்கிவகைத் தளவாடத்தின் உடனடி உதவியை வைத்துக்கொண்டு கிளர்ச்சியைத் தொடக்கப் போகிறோமா? தரைப் படை வீரர்களின் ஈட்டி முனையை வைத்துக் கொண்டா? எனக்கு ஒரு மூன்று அங்குல நவீன பீரங்கி கொடுங்கள், இந்தக் கத்தியை வேண்டுமென்றால் ஒஸ்த்ரவ்னோவ் மனைவியிடம் மகிழ்ச்சியோடு கொடுத்து விடுகிறேன். அது வரை சிறிது வாயைப் பொத்திக் கொண்டு இருங்கள். ஐயா தற்பெருமை தம்பட்டம், சும்மா இருங்கள். உங்களுடைய பேச்சு என்னை நோயாளி ஆக்குகிறது. பீரங்கிகளின் பெருமையை உங்கள் போலந்து பெண்களிடம் பேசுங்கள், என்னிடம் அளக்க வேண்டாம். போலந்து பிரதிநிதியே, நீங்கள் எல்லா நேரத்திலும் தவறான முறையிலேயே பேச

முயல்கிறீர்கள். உங்களுடைய குரலும், உங்கள் பேச்சுக் களும் நாற்றமடிக்கிறது. 1920இல் கூட உங்களுடைய மாபெரும் நாட்டைப்பற்றி 'போலந்து இன்னும் அழுகி விடவில்லை. ஆனால் அது ஏற்கெனவே நாற்றமெடுக்கத் தொடங்கி விட்டது...'' என்று மக்கள் பேசிக்கொள்வதுண்டு.

''அட கடவுளே! என்ன அறிவு கெட்டதனம்!'' என்று நாடகபாணியில் லியதியேவ்ஸ்கி தனது வியப்பைக் காட்டினான். ''சீட்டும், வாளும், சீட்டு... நீங்கள் கடந்த ஆறு மாதத்தில் அச்சிடப்பட்ட ஓர் எழுத்தைக் கூட படிக்கவே இல்லை. இங்கே நீங்கள் அடிப்படைக்கே போய்விட்டீர்கள்! ஆனால் நீங்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியராகவும் இருந்தீர்கள், அல்லவா?..''

''தேவை காரணமாக நான் ஆசிரியராக இருந்தேன், அன்புள்ள திருவாளர்! மிகுந்த அவசியத் தேவையின் காரணமாக!''

''கஸாக்குகளைப் பற்றி சேகவ் ஒரு கதை எழுதியிருக்கிறார் என்று நினைக்கிறேன். ஓர் அறிவு கெட்ட, முட்டாள் கஸாக்கிய நிலப்பிரபு இருக்கிறான். அவனுடைய வயது வந்த இரு முட்டாள் பையன்களுக்கு ஒரே ஒரு தொழில் தான் உண்டு. ஒரு பையன் அவர்கள் வீட்டுச் சேவலைத் தூக்கி மேலே வீசுவான், அடுத்தவன் துப்பாக்கியால் அதைச் சுட்டு வீழ்த்துவான். இப்படியாக நாட்களைக் கழித்து வந்தார்கள். புத்தகம் கிடையாது, கலாசாரம், ஆன்மீக ஆர்வம் கிடையாது... சில சமயங்களில், அந்த இரண்டு பையன்களில் நீங்கள் ஒரு ஆளோ என்று நினைக்கிறேன்... இல்லை, நான் சொல்வது தவறா?''

பொலவ்த்ஸெவ் பதில் சொல்லாது, தனது உயிரற்ற எஃகு வாளின் மீதே மூச்சை விடுவான். மெல்லிய நீல நிறம் வாளின் மீது படர்ந்து மறைவதைக் கண்டு மகிழ்வான். பின்னர் வாளை தன் சட்டை நுனியால் கவனத்தோடு, பெரும்பாலும் விருப்பத்தோடு துடைத்துவிட்டு, உறைக்குள் வாளைப் போட்டுவிடுவான்.

* * *

அவர்களது, திடீர் வாய்ச் சண்டைகள் எல்லாமே அமைதியாக முடிந்து விடுவதில்லை. மேல் சன்னல் இல்லாது அறை

புழுக்கமாக இருந்தது. வறட்சியான கால நிலைமை, ஒஸ்த்ரவ்னோவ் வீட்டில் அவர்களது வாழ்க்கையை மேலும் சகிக்க முடியாதது ஆக்கி வந்தது. நாற்றமெடுத்த தனது படுக்கையில் இருந்து பொலவ்த்ஸெவ் அடிக்கடி குதித்தெழுந்து மிகுந்த வருத்தத்துடன் புலம்புவான்: ''இது ஒரு சிறை! நான் இந்த சிறையிலேயே மடிந்து விடுவேன்!'' இரவு நேரத்தில் உளறும்போதுகூட அந்த அமங்கலச் சொல்லைக் கூறுவான். கேட்டுக் கேட்டு பொறுமையிழந்த லியதியேவ்ஸ்கி அவனிடம் கூறினான்: ''திருவாளர் பொலவ்த்ஸெவ், உங்களுக்கு மிகக் குறைந்த வார்த்தைகளே, அதிலும் இந்த ''சிறை'' என்பதைத் தவிர உங்களுக்கே வேறு வார்த்தையே தெரியாதோ என்று ஒருவர் எண்ணக் கூடும். அந்தப் புனிதமான அற நிறுவனத்தின் மீது உங்களுக்கு அவ்வளவு வேட்கை என்றால், இன்றைக்கே ரகசியப் போலீஸ் இலாகாவின் மாவட்டத் தலைமை அலுவலகத்துக்குப் போய், சுமார் இருபது ஆண்டுகளுக்காவது உங்களை அங்கே போடச் சொல்லுங்கள். உங்களது விருப்பம் மறுக்கப் படமாட்டாது என்று நான் உறுதி கூறுகிறேன்!''

''இதுதான் போலந்து நாட்டுக் கேலியா?'' என்று மோசமான முறுவலிப்புடன் பொலவ்த்ஸெவ் கேட்டான்.

லியதியேவ்ஸ்கி தோள்களைக் குலுக்கினான். ''என்னுடைய நகைச்சுவை எடுபடவில்லையா?''

''நீங்கள் ஒரு சரியான கால்நடை'' என்று அசட்டையாகச் சொன்னான் பொலவ்த்ஸெவ்.

லியதியேவ்ஸ்கி தோள்களை மீண்டும் குலுக்கிக்கொண்டு, ஒரு வறட்டுத்தனமாக முறுவலித்தான்.

''இருக்கலாம். ஆனால் உங்களோடு நீண்ட நாட்களாக வாழ்ந்து வருவதால் நான் எனது மனித உருவை இழந்திருக்கக்கூடும்...''

இந்த உரையாடல் சண்டைக்குப் பிறகு மூன்று நாட்கள் வரை இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசிக்கொள்ளவில்லை. ஆனால், நான்காம் நாள், அவர்களது விருப்பத்திற்கு மாறாக இருவரும் கட்டாயம் பேசிக் கொள்ள வேண்டியதாகியது...

அதிகாலைநேரத்தில், ஒஸ்த்ரவ்னோவ் வேலை செய்யப் புறப்படுவதற்கு முன்னர், இரண்டு புதிய மனிதர்கள் முற்றத்திற்குள் நுழைந்தார்கள். ஓர் ஆள் தூசிபடிந்த கருங்

கித்தான் மழை மேலங்கி அணிந்திருந்தான். இன்னொரு ஆள் புதிய மழை மேலங்கி போட்டிருந்தான். ஒருவன், தன்னுடைய கை இடுக்கில் ஒரு சிறு கைப்பொட்டியை இடுக்கியிருந்தான். இன்னொருவன், ஒரு புதிய கைப்பிடி வாளுடன் கூடிய சாட்டையை தோளில் போட்டுக்கொண்டு வந்தான். இந்த இரு புதியவர்களும் நடையனில் விரைந்து வருவதைக் கண்ட யாக்கவ் லுக்கீச், நீண்டகாலப் பழக்கப்படி பொலவ்த்ஸெவ் மற்றும் லியதியேவ்ஸ்கி வசித்து வந்த அறைக் கதவை எச்சரிக்கைக்காக இரு முறை தட்டவும், அவர்களை வரவேற்க மீசையைத் தடவி விட்டுக்கொண்டு படிகளில் இறங்கிப் போனான்.

''என்ன, நல்ல| மனிதர்களே, என்னைப் பார்க்கவா வந்தீர்கள்? கூட்டுப்பண்ணை பண்டசாலையிலிருந்து உங்களுக்கு ஏதாவது வேண்டுமா? நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?''

இருந்த பெட்டியை இடுக்கிக் கொண்டிருந்த குட்டையான, ஆள் கிளர்ச்சியூட்டும் படி சிரித்தான். பெண்களின் கன்னத்தைப்போல சிவந்த கன்னங்கள் புடைத்தெழ முறுவலித்தான். குல்லாயைத் தொட்டு வணக்கம் செய்தான். ''நீங்கள் தான் இந்த வீட்டின் எஜமானரா? நல்வணக்கம், யாக்கவ் லுக்கீச்! உங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் தான் அனுப்பினார்கள். நாங்கள் உணவுப்பொருட்களைத் தருவித்துக் கொடுப்பவர்கள். கால்நடைகளை வாங்குகிறவர்கள். சுரங்கத் தொழிலாளர்கட்காக வாங்குகிறோம். அவர்களது தினசரி உணவுப் பங்கீட்டிற்காக நாங்கள் மாடுகளை வாங்குகிறோம். நாங்கள் நல்ல விலை கொடுக்கிறோம். அரசு விலையைக் காட்டிலும் அதிகம் கொடுக்கிறோம். சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஒழுங்காக உணவுப் பங்கீடு கொடுக்க வேண்டுமென்பதற்காக அதிக விலை கொடுத்துக்கூட வாங்குகிறோம். நீங்கள் கூட்டுப்பண்ணைப் பண்டசாலையின் மேலாளர் ஆயிற்றே. எனவே நாங்கள் எதற்காக வந்துள்ளோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்... ஆனால் கூட்டுப்பண்ணை பண்டசாலைலிருந்து எங்களுக்கு ஒன்றும் தேவையில்லை. நாங்கள் தனியார் வளர்க்கும் கால்நடைகளைத்தான் வாங்குகிறோம். உங்களிடம் ஓர் ஆண்டு கன்று ஒன்று இருப்பதாகச் சொன்னார்கள். உங்களுக்கு விற்க விருப்பமிருக்கலாமல்லவா? அதிலே சதைப் பிடிப்பு மட்டும்

கொஞ்சம் இருந்தால் விலையைப் பற்றிய விவாதமே தேவையில்லை.''

ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லாமல் புருவத்தைச் சுரண்டிக்கொண்டே நின்றான் யாக்கவ் லுக்கீச் தாராள புத்திக்காரர்களாகக் காணப்படும் இவர்களிடம் எவ்வளவு கறக்கலாம், சந்தைக்கு ஓட்டிக் கொண்டுபோய் சிரமப்படுவானேன், என்று யோசித்துக்கொண்டே இருந்த லுக்கீச், மாட்டிற்கு நல்ல விலை பெற, திறமைமிக்க எல்லா விவசாயிகளுமே சொல்வதைப் போல லுக்கீச்சும், ''விலைக்கு விற்கிறாற்போல் என்னிடம் மாடு ஒன்றுகூட இல்லையே'' என்றான்.

''நாங்கள் பார்த்துவிட்டு விலை பேசலாமா? மீண்டும் நான் சொல்கிறேன்: நாங்கள் நல்ல, அதிக விலை கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.''

ஒரு நிமிடம் அமைதியாக இருந்துவிட்டு, அதிகமான பாதிப்பை ஏற்படுத்த மீசையைத் தடவி விட்டுக்கொண்டே, வார்த்தைக்கு வார்த்தை இடைவெளி விட்டு தனக்குத் தானே பேசிக் கொள்கிறவனைப் போல, ''என்னிடம் ஒரு கன்று இருக்கிறது. வெண்ணெய் மாதிரி பெருத்துப் போயிருக்கிறது! ஆனால் அது எனக்கு வேண்டும். எங்களுடைய பசுவுக்கு இந்த மலை மாதிரி வயதாகிவிட்டது. அதை மாற்ற வேண்டும். பாலுக்கும், வெண்ணெய்க்கும் அருமையான ஜாதி. இல்லை, தோழர்களே, நான் விற்பதாக இல்லை!''

சிறு கைப்பெட்டியை வைத்திருந்த பருமனானவன் ஏமாற்றமடைந்தவனைப் போலப் பெருமூச்சுவிட்டான்: ''உடையவனுக்குத் தான் அதன் அருமை தெரியும்... தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டும். நாங்கள் மற்ற இடங்களைப் பார்த்துவிட்டு வருகிறோம்'' கிழிந்த தனது குல்லாயைத் தொட்டு மீண்டும் வணங்கிவிட்டு, திரும்பி நடந்தான்.

பரந்த தோள்களையுடைய கனத்த ஆள் அவனைத் தொடர்ந்தான். தோளில் சாட்டையை ஆட்டிக்கொண்டு, வீட்டின் முற்றம், வெளிக்கட்டிடம், சன்னல்கள், ஒட்டியிருந்த அறையின் இறுக்கிப் பூட்டப்பட்டிருந்த கதவு அனைத்தையும் பார்த்துக்கொண்டே போனான்...

யாக்கவ் லுக்கீச்சின் கஞ்சம் பிடித்த மனத்தால் இதற்கு மேல் தாங்க முடியவில்லை. அவர்களை கதவு வரை போக விட்டு விட்டு, பிறகு அழைத்தான்: ''கொஞ்சம் பொறு,

ஏ யாரது! மாடு வாங்கும் தோழரே, உன்னைத்தான்! ஒரு கிலோகிராம் எடைக்கு எத்தனை ரூபாய் வீதம் கொடுப்பீர்கள்?''

''அது, அதையதைப் பொருத்திருக்கிறது. நான் முன்னாலேயே சொன்னது போல, நாங்கள் இறுக்கிப் பிடித்து கெடுபிடி வியாபாரம் நடத்துகிற ஆட்கள் அல்ல. பணத்தைச் செலவழிப்பது எங்கள் இஷ்டம். அதற்காகச் சும்மா வீசிவிட்டெறிந்து விடுவோமா? தகுதியுள்ளவற்றுக்குக் கொஞ்சம் கூட்டிக்கொடுக்க நாங்கள் தயங்கமாட்டோம்'' என்று கனத்த ஆள் பெருமையோடு பெட்டியில் தட்டிக் கொண்டே சொன்னான்.

யாக்கவ் லுக்கீச் படிகளில் உறுதியுடன் இறங்கி வந்தான்.

''மந்தையோடு போவதற்கு முன்னால் கன்றை வந்து பாருங்கள். ஆனால் நான் மட்டமான விலைக்கு விற்க மாட்டேன். நினைவிருக்கட்டும். நீங்கள் நல்ல பிள்ளைகளாகக் கஞ்சத்தனம் இல்லாதவர்களாகத் தெரிவதால் இந்த உதவியைச் செய்கிறேன். கஞ்சம் பிடித்த எந்த வியாபாரியும் என் முற்றத்தில் கால்வைக்கவே கூடாது!''

இரண்டு வியாபாரிகளும், கன்றைத் தொட்டுத் தடவிப் பிடித்துக் கவனமாகப் பார்த்தனர். தடியாக இருந்த ஆள் பேரம் பேசத் தொடங்கினான். சாட்டையை வைத்துக் கொண்டிருந்தவன், சீட்டியடித்துக் கொண்டே, வெளிப்புற வீடுகள், கோழிக்கூடு, காலியாயிருந்த குதிரை லாயம், போன்ற பிற தேவையற்ற இடங்கள் எல்லாவற்றையும் பார்த்தான். ஒஸ்த்ரவ்னோவுக்குத் திடீரென ஒரு எண்ணம் தோன்றியது: ''ஆகா! இவர்கள் சாதாரண மாட்டு வியாபாரிகள் அல்ல!'' என்று.

உடனே எழுபத்தி ஐந்து ரூபிள் என்று விலையைப் பேசி முடித்தான். ''அது சரி, நட்டத்தில் விற்கக்கூட நான் தயார். சுரங்கத் தொழிலாளர்களுக்காக அதைச் செய்யலாம். ஆனால் மன்னிக்கவேண்டும். நான் அலுவலகத்துக்கு உடனே போயாக வேண்டும். வீணடிக்க நேரமில்லை, கன்றை இப்பொழுதே பிடித்துக்கொள்கிறீர்களா? காசை இப்பொழுதே கீழே வையுங்கள்!''

கதவருகே நின்ற வியாபாரி, மெதுவாக, சுண்டு விரலை நக்கி நனைத்துக்கொண்டு வங்கி நோட்டை அவசரமின்றி

எண்ணினான். பேசியதற்கு மேல் பதினைந்து ரூபிள் கொடுத்தான். திகிலடைந்திருந்த யாக்கவ் லுக்கீச்சின் கையைப் பிடித்துக் குலுக்கினான். கிண்டலாகக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே, ''வியாபாரம் நடந்ததற்கு அடையாள மாக ஏதாவது குடிக்க வேண்டாமா? என்ன லுக்கீச்? கைவசம் எப்பொழுதுமே ஒரு பாட்டில் வைத்தே இருக்கிறோம்.'' அவசரமில்லாமல் பையிலிருந்து ஒரு வோத்கா சாராயப் பாட்டிலை எடுத்தான். அது காலை வெயிலில் மங்கலாக மின்னிற்று.

முகமலர்ச்சியை காட்டிக்கொள்ள யாக்கவ் லுக்கீச் பெரிதும் முயன்றான். ''இன்று மாலை. இன்று மாலை வைத்துக் கொள்வோம், நண்பர்களே! இன்று மாலை சந்திப்போம். அப்பொழுது குடிக்கலாம். எங்கள் வீட்டிலும் மகிழ்ச்சியூட்டும் இந்த மது கொஞ்சம் இருக்கத்தான் செய் கிறது. நான் ஒன்றும் அது இல்லாத அளவுக்கு ஏழை அல்ல; ஆனால் இப்பொழுது என்னை மன்னித்து விடுங்கள். காலை நேரத்தில் குடிப்பதற்கு என் உடல் நலம் அநுமதிக்காது. அத்துடன் என் வேலைக்கும் அது ஒத்து வராது. கூட்டுப் பண்ணையில் வேலை செய்ய நான் உடனே புறப்பட்டாக வேண்டும். மாலையில் சூரியன் மறைந்தவுடன் வாருங்கள். அப்புறம் குடிக்கலாம்.''

''வீட்டிற்குள் கூட எங்களை அழைத்து உட்காரச் சொல்லி, இந்தக் கன்றின் தாய்ப்பாலைக் கூட, எங்களுக்குக் கொடுக்க மாட்டாயா?'' என்று தடியாக இருந்தவன் கேட் டான். அவனது கன்னங்கள் பூரித்து உப்பின. ஒஸ்த்ரவ்னோ வின் மனத்தை ஆட்டுமளவுக்கு அவை அவனை உலுக்கின.

ஆனால் தன் மன உறுதியை ஒரு சிறிய பந்தைப் போல உருட்டி திரட்டிக்கொண்டான் யாக்கவ் லுக்கீச். ஒருமுகப் படுத்திய மனத்தோடு, ஒத்துக்கொள்ள ஒரேயடியாக மறுத்து விட்டான். ''நமது கஸாக்குகளின் விருந்தோம் பலை யாரும் கேட்டுப் பெற முடியாது. அது அப்படிப் பட்ட சரக்கல்ல'' என்று ஏளனமான தொனியில் கூறினான். ''நாங்கள் அழைத்தபோதுதான் எங்கள் விருந்தாளிகள் வருகிறார்கள். ஆனால் நீங்கள் தனிரகம் போலும்? இப் பொழுது எங்கள் முறைகளை யொட்டித்தான் நீங்கள் நடந்து கொள்ளவேண்டும். நாம் இன்று மாலை சந்திக்க

ஒப்புக் கொண்டோம், இல்லையா? பிறகு காலை நேரத்தில் எதற்காக வார்த்தைகளை வீணாக்கிக் கொண்டிருக்க வேண்டும்? சரி, வரட்டுமா. வணக்கம்!''

வியாபாரிகளை விட்டுவிட்டுத் திரும்பினான். கன்றைக் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. கனத்த வியாபாரி மிக மெதுவாகக் கன்றைக் கயிற்றால் கட்டிக்கொண்டிருந்தான். ஒஸ்த்ரவ்னோவ் வராந்தாவுக்கு நடந்து போய்விட்டான். இரு முவதைப் போலவும், முக்கி முணகுவதைப் போலவும் பாவனை செய்து கொண்டு, முதுகில் கையை வைத்தவாறே படிகளில் ஏறினான். வராந்தாவுக்குப் போனவுடன் தனது பாவனையை விட்டுவிட்டு நெஞ்சில் கைவைத்து, கண்களை மூடியவாறு ஒரு நிமிடம் நின்றான். ''சனியன்கள், நீங்களெல்லாம் தொலையட்டும்!'' என்று வெளிறிப் போன உதடுகளிடையே முணகினான். குத்துப்பட்டதைப் போலிருந்த வலி தணிந்தது. கலக்கமும் தீர்ந்தது. யாக்கவ் லுக்கீச் மேலும் சில விநாடிகள் அமைதியாக நின்றான். பின்னர் மரியாதையுடனும், தீர்க்கமாகவும் பொலவ்த்ஸெவ் இருந்த வீட்டுக் கதவைத் தட்டினான்.

வீட்டுத்தளத்தை மிதித்தவுடன் ''மாண்புமிகு திருவாளரே, நாம் ஆபத்திலிருக்கிறோம்!..'' என்று சொல்லிக் கூட முடிக்கவில்லை, ஏதோ புயலடித்த இரவொன்றின் போது, திடீரென வீசிய மின்னல் ஒளியில் தன்னை நோக்கி நீட்டி நிற்கும் துப்பாக்கிக் குழாயைக் கண்டவன் போல, பொலவ்த்ஸெவின் துருத்திய தாடையையும், லியதியேவ்ஸ்கி படுக்கையில் கவலையீனமாக ஆனால் முதுகை சுவற்றில் சாய்த்து, முழங்காலில் எந்திரத் துப்பாக்கியைக் கதவுக்கு நேராக, லுக்கீச்சின் மார்புக்கு நேராக வைத்து உட்கார்ந்திருப்பதைக் கண்டான்... ஒஸ்த்ரவ்னோவ் இவையனைத்தையும் ஒரு நொடிக்குள் கண்டான். லியதியேவ்ஸ்கியும் சிரிப்பையும், அவனது ஒற்றைக் கண்ணின் ஒளியையும் கூடக் கண்டான். ''அன்புள்ள எஜமானரே, நீ இங்கே அழைத்து வந்தவர்கள் யார்?'' இந்தக் கேள்வி எங்கோ வெகு தூரத்திலிருந்து வருவதைப் போலக் கேட்டது.

திகிலடைந்திருந்த ஒஸ்த்ரவ்னோவால் குரலைக் கூட இனந் தெரிந்து கொள்ள முடியவில்லை. கண்ணுக்குத் தெரியாத யாரோ ஒரு மூன்றாவது மனிதன், மிகத்தாழ்ந்த தொனியில் கத்துவது போல் கேட்பதாகத் தோன்றியது.

ஆனால் ஏதோ ஒரு புறசக்தி இந்தக் கிழவனின் நிலையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. நிமிர்ந்து காவலர் போல கைகளைச் சேர்த்து நின்றவன், கைகளைத் தளரவிட்டான். உடம்பும் சுருங்கி வாடியது. அவன் தொடர்ந்து மூச்சு விட்டுக்கொண்டே தொடர்பற்றுப் பேசினான். ஆனால் குரல் மாறி விட்டது. ''நான் யாரையும் கொண்டுவரவில்லை. அவர்கள் தாங்களாகவே தான் வந்தார்கள். அழையாமல் தான் வந்தார்கள் அதிகாரிகளே. எத்தனை நாளைக்கு என்னைப் பார்த்து இப்படி சத்தம் போட்டுக்கொண்டே இருக்கப் போகிறீர்கள், நல்ல திருவாளர்களே? என்னை ஒரு சிறு பையன் மாதிரி வேலை ஏவிக்கொண்டே இருக்கப் போகிறீர்கள்? நான் களைத்துப் போய்விட்டேன்! உங்களுக்கு ஒன்றுமில்லாமல் சும்மாதான் சோறு போட்டுக்கொண்டிருக்கிறேன். மற்ற வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறேன். என் வீட்டுப் பெண்கள் உங்களுக்குத் துணிமணி துவைத்துப் போடுவதும், சோறு சமைத்துப் போடுவதும் எல்லாம் சும்மாதான்!.. என்னை வேண்டுமானால், இப்பொழுதே, இந்த விநாடியே கொன்றுவிட முடியும். ஆனால் இனி உங்களோடு இந்த வீட்டில் வாழ்வது என்பது பெரிய சுமை! உங்களுக்கு எப்படியாவது சாப்பாடு போட வேண்டுமென்பதற்காக என்னுடைய கன்றுக் குட்டியையும் விற்று விட்டேன். உங்களுக்கு வெறும் கோசு சூப் போட்டால் போதுமா? அதிலே கறியும் போட வேண்டுமே. எப்பொழுதும் வோத்கா வேறு கேட்டுத் தொல்லை பண்ணுவீர்கள்... இந்த ஆட்கள் வந்த பொழுதே உங்களை எச்சரித்தேன். வந்திருப்பவர்கள் நாம் விரும்பக்கூடிய வியாபாரிகள் அல்ல என்பதைத் தெரிந்தவுடன் அவர்களை வெளியில் அனுப்பிவிட்டேன். 'கன்றுக்குட்டியைச் சும்மா பிடித்துக்கொண்டு போனால் கூட பரவாயில்லை. நீங்கள் போனால் போதும்!' என்று நினைத்தேன். நீங்களோ, மாண்புமிகு... கடவுளே, உங்களிடம் சொல்லி என்ன பயன்?'' ஒஸ்த்ரவ்னோவ் வெறுப்படைந்து சைகையைக் காட்டிவிட்டு கதவுக்கம்பத்தில் சாய்ந்தான். முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டான்.

சமீப காலமாகவே அவனிடம் காணப்பட்டு வந்த அசட்டை மனப்பான்மையுடன், ஆச்சரியப்படத்தக்க வகையில், உயிரற்ற முறையில் பேசினான் போலவ்த்ஸெவ்: ''திருவா

ளர் லியதியேவ்ஸ்கி அவர்களே, இந்தக் கிழவன் சொல்வது சரிதான் என்று நினைக்கிறேன். சூழ் நிலை சரியாக இல்லை. நாம் இந்த இடத்தை விட்டு அகன்று போய்விடுவது தான் நல்லது. காலதாமதமாகக் கூடாது. உங்கள் கருத்து என்ன?''

''நாம் இன்றே போய்விட வேண்டும்'' என்று திட்டவட்டமாக லியதியேவ்ஸ்கி சொன்னான். எந்திரத் துப்பாக்கியைக் கவனமாகப் படுக்கையின் மீது இறக்கி வைத்தான்.

''தொடர்புகள் என்ன ஆவது?''

''அதைப்பற்றி அப்புறம் பேசுவோம்'' என்று ஒஸ்த்ரவ்னோவ் இருப்பதை லியதியேவ்ஸ்கி தலையசைத்து சைகை காட்டினான். பிறகு கண்டிப்புடன், ''லுக்கீச், கிழவி மாதிரி நடிப்பதை விட்டுவிடு! வந்தவர்களுடன் நீங்கள் என்ன பேசினீர்கள்? பணத்தை மொத்தமாகக் கொடுத்து விட்டார்களா? அந்த வியாபாரிகள் மீண்டும் வரமாட்டார்களா? வருவார்களா?''

ஒஸ்த்ரவ்னோவ் சிறு பிள்ளையைப் போலத் தேம்பினான். வார் அணியாமல் தொளதொள என இருந்த அவனது சட்டைக் கை நுனியால் மூக்கைத் துடைத்து விட்டு, மீசையையும் தாடியையும் கையால் துடைத்து விட்டு, கண்களை உயர்த்தாமலே, மாட்டு வியாபாரிகளுடன் நடந்த பேச்சு, ஒரு மாட்டுக்காரன் சந்தேகப்படக்கூடிய வகையில் நடந்துகொண்டது, அத்துடன் மறக்காமல், அவர்களிருவரும் அன்று மாலை மீண்டும் திரும்ப வருவார்கள் ஆகியவற்றைச் சொன்னான்.

இதைக் கேட்டவுடன் பொலவ்த்ஸெவும், லியதியேவ்ஸ்கியும் அமைதியாக ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

''ஆகா அருமை'' என்று சொல்லிவிட்டு எரிச்சலோடு முறுவலித்தான் லியதியேவ்ஸ்கி. ''உங்கள் வீட்டிற்கு அழைப்பதைக் காட்டிலும் வேறு புத்திசாலித்தனமான காரியம் ஒன்றைச் செய்திருக்கக் கூடாதா? நீ ஓர் அடிமுட்டாள், பிசாசு!''

''நான் ஒன்றும் அழைக்கவில்லை. அவர்களே என்னைக் கட்டாயப் படுத்தினார்கள். இப்பொழுதே உள்ளே வர விரும்பினார்கள். இன்று மாலை பொறுத்துக் கொள்ளுமாறு

சமாளித்து விட்டேன். மாண்பு மிகு திருவாளரே, அல்லது உங்களை அங்குள்ளவர்கள் என்ன பெயரிட்டு அழைத்தாலும் சரியே. என்னைத் திட்டித் தீர்க்க வேண்டாம். என்னை முட்டாளாக்க வேண்டாம்... அட கடவுளே! எந்தச் சனியனுக்காக, நீங்கள் இங்கே மறைந்திருக்கும்போது, நான் அவர்களை உள்ளே அழைக்க வேண்டும்? நீங்களும் சுடப்பட்டு, நானும் சுடப்படுவதற்கா?''

நீர் நிறைந்த ஓஸ்த்ரவ்னோவின் கண்கள் வறண்டன, கோபத்தை மறைக்காமல் சொன்னான்: ''1917 வரை, அதிகாரிகளே, நீங்கள் மட்டுந்தான் அதி புத்திசாலிகள் என்றும், ராணுவவீரர்கள் மற்றும் கஸாக்கியத் தொண்டர்கள் முட்டாள் கூட்டம் என்று கருதினீர்கள். செங்கொடியினர் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருந்திருக்கிறார்கள், ஆனால் நீங்கள் எதையுமே கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. கற்றுக் கொடுத்ததும், அடித்ததும், எல்லாம் உங்களைப் பொருத்த மட்டில் வீணாகிவிட்டன!..''

பொலவ்த்ஸெவ், லியதியேவ்ஸ்கியைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான். அடுத்தவன் உதட்டைக் கடித்துக் கொண்டே சன்னல் பக்கமாக மறுபுறம் திரும்பிக்கொண்டான். பொலவ்த்ஸெவ் ஓஸ்த்ரவ்னோவை நோக்கி நடந்து சென்று, அவனை சமாதானப் படுத்தக்கூடிய முறையில் அவனது தோளில் கையை வைத்து முறுவலித்தபடி பேசினான்: ''இங்கே கவனி, லுக்கீச். ஒன்றுமில்லாத விஷயத்துக்கெல்லாம் உன்னை அலட்டிக்கொள்ளாதே. கோபமான நேரத்தில் ஒரு மனிதன் கண்டதையும் உளறக்கூடும். நாங்கள் சொல்கிற எல்லாவற்றையும் எண்ணிப்பார்த்து சொல்லவேண்டும் எனச் சொல்லவில்லை. ஒரு விஷயத்தில் நீ சொல்வது சரி தான். இங்கே மாடுவாங்க வந்த வியாபாரிகள் இருக்கிறார்களே, அவர்கள், என்னை நான் பிஷப் என்றால் எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை அவர்கள் மாட்டு வியாபாரிகள் என்பதும். அவர்கள் இருவருமே ரகசியப் போலீசார். லியதியேவ்ஸ்கி ஓர் ஆளைப் பார்த்தவுடனேயே அடையாளம் கண்டு பிடித்துவிட்டான். புரிகிறதா? அவர்கள் எங்களைத் தான் தேடித் திரிகிறார்கள். ஆனால் அவர்கள் இருட்டில் தான் தடவிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகையால் தான் இப்பொழுது மாறுவேடத்தில்

வந்து இருக்கிறார்கள். இப்பொழுது போய், அந்த வியாபாரிகளுடன் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தைக் கழிக்கப் பார். நீ அவர்களுடன் என்ன செய்தாலும் சரி. வீட்டிலிருக்கும் நண்பன் ஒருவனைப் பார்த்து அவன் வீட்டிற்கு இவர்களை அழைத்துக்கொண்டு போய், வோத்காவைக் குடி, பேசு, ஆனால் அதிகமாகக் குடித்து, குடிமயக்கத்தில் எதையும் உளறிவிடாதே! அப்படி ஏதாவது தெரிந்தால், உங்களைக் கொன்றே விடுவேன்! இது நினைவிருக்கட்டும்! நீ அவர்களைக் குடிக்க வைத்துக்கொண்டிருக்கும்போதே பின் கதவு வழியாக ஓடைக்குப் போய், புல்வெளிப் பகுதிக்கு ஓடிவிடுகிறோம். பிறகு அவர்கள் நமக்காக சீட்டியடிக்கட்டும்! உன் மகனிடம் சொல்லி, என்னுடைய வாள், எந்திரத் துப்பாக்கி, துப்பாக்கியின் அடிப்பகுதி, இருவருடைய ரைபிள்கள் எல்லாவற்றையும் மாட்டுச் சாணக் குப்பையிலே புதைத்து மறைத்து வைக்கச் சொல்.''

''உங்களுடைய ரைபிளை மட்டுந்தான். என்னுடைய ரைபின் என்னிடமே இருக்கவேண்டும்'' என்று லியதியேவ்ஸ்கி குறுக்கிட்டுச் சொன்னான்.

பொலவ்த்ஸெவ் அவனை அமைதியாகப் பார்த்துவிட்டு, ''அவன் எல்லாவற்றையும் சுற்றிக் கொண்டு கொட்டடிக்குப் போகட்டும், முதலில் சுற்றுமுற்றும் பார்த்துக் கொள்ளச் சொல். வீட்டில் எதையும் ஒளித்து வைக்கவேண்டாம்.இன்னும் ஒரு வேண்டுகோள். சொல்லப்போனால் உத்தரவு. களஞ்சியத்தில் கிடக்கும் மாவரைக்கும் கல்லுக் கடியில், எனக்கு வரும் பொட்டலங்களைப் போட்டு வைத்து விடு. எப்பொழுதாவது இரவு நேரங்களில் வந்து எடுத்துச் சென்று விடுவோம். எல்லாம் விளங்கிவிட்டதா?''

''ஆமாம். எல்லாம் விளங்கிவிட்டது'' என்று முணுமுணுத்தான் ஒஸ்த்ரவ்னோவ்.

''சரி போ. அந்த வியாபாரிகள் உன் பார்வையை விட்டு அகன்று விடாமல் நீ பார்த்துக்கொள்ள வேண்டும்! இங்கிருந்து எவ்வளவு தூரம் தள்ளி அழைத்துக்கொண்டு போக வேண்டுமோ, அவ்வளவு தூரம் அழைத்துக்கொண்டு போய் விடு. இன்னும் இரண்டு மணிநேரத்தில் நாங்கள் போய் விடுவோம். மாலையில் அவர்களை நீ இங்கே அழைத்துவரலாம். பக்கத்து அறை ஏதாவதொன்றில் இந்தப் படுக்கைகளைப் போட்டுவிடு. காற்றோட்டமாக விட்டுவிடு. ஏதாவதொரு

பழைய போர்வைகளைத் திரையாகத் தொங்க விட்டுவிடு. பிறகு அவர்கள் கேட்டால், முழு வீட்டையும் நீ காட்டலாம்... ஏதாவது ஒரு சாக்குச் சொல்லிக்கொண்டு இதைச் செய்யத்தான் அவர்கள் முயல்வார்கள்... நாங்கள் ஒரு வாரத்துக்கு வெளியே போகிறோம். ஒரு வாரம் கழித்து மீண்டும் வருவோம். நாங்கள் சாப்பிட்ட சோற்றுக்காக எங்கள் மீது வசைமாரி பொழியாதே! நமது வெற்றி தினம் வரும்போது, உனக்குப் பன்மடங்கு பரிசு வழங்குவோம். ஆனால், மீண்டும் நான் இங்கு திரும்பி வந்தாக வேண்டும். ஏனெனில் கிளர்ச்சியை கிரெமியாச்சி கிராமப் பகுதியிலிருந்து தான் நான் தொடக்க வேண்டும். அந்தக் காலமோ நெருங்கிவிட்டது!'' பொலவ்த்ஸெவ் இதைச் சொல்லிவிட்டு, ஒஸ்த்ரவ்னோவைத் தழுவிக் கொண்டான். ''கிழவரே, போய்வாரும். கடவுள் உனக்குத் துணை புரிவாராக!''

* * *

ஒஸ்த்ரவ்னோவ் போனபின் கதவு சாத்தப்பட்டவுடன், பொலவ்த்ஸெவ் மேசையில் உட்கார்ந்து, ''இந்த போலீஸ்காரனை நீங்கள் எங்கு பார்த்தீர்கள் உங்களுக்கு நிச்சயமாகத் தெரிகிறதா? தவறு செய்ய மாட்டீர்களா?''

லியதியேவ்ஸ்கி ஒரு முக்காலியை இழுத்து போட்டு, பொலவ்த்ஸெவ் பக்கமாகக் குனிந்து கூறத் தொடங்கினான். அவர்களிருவரும் அறிமுகமான நாளிலிருந்து இன்றைக்குத் தான் ஒருவரிடம் ஒருவர் கிண்டலும், குத்தலும் இல்லாமல் நெருக்கமாகப் பேசினர்.

''மேரி மாதாவே! நான் எப்படித் தவறு செய்ய முடியும்? நான் சாகும்வரை அவனை நினைவில் வைத்திருப்பேனே! அவனுடைய கன்னத்தில் இருந்த தழும்பைப் பார்த்தீர்களா? என்னைக் கைது செய்தபொழுது, கத்தியால் நான் கிழித்துவிட்டது தான் அது. எனது இடது கண் இருக்கிறதே, இதை விசாரணையின்போது அவன் குத்திக் கலக்கி விட்டான். அவனுடைய முட்டிகளைப் பார்த்தீர்களா? இது நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், கிராஸ்னதாரில் நடந்தது. ஒரு பெண் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டாள். அவள் இறந்துவிட்டாள். கடவுள் காப்பாராக! நான் சிறையிலிருக்கும்போதே அவளது குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. நான் தப்பிய இரண்டாவது நாளே அவள் உயிர் பிரிந்தது

அவள் ஓர் அழகான இளம் பெண்தான். குபான் கஸாக்கியப் பெண், இல்லை, ஒரு குபான் பெண் நாய். இதுதான் நடந்தது... நான் எப்படித் தப்பினேன் என்று தெரியுமா?'' லியதியேவ்ஸ்கி தன்னிறைவோடு முறுவலித்தான். அவனது சிறிய மெலிந்த கைகளைத் தேய்த்துக்கொண்டான். ''எப்படியும் என்னைச் சுட்டுவிடுவது என்று முடிவாகிவிட்டது. எனவே எனக்கு இழப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆகையால் ஒரு துணிச்சலான முடிவுக்கு வந்தேன், ஒரு கீழ்ச்செயலைக் கையாண்டேன்... என்னை விசாரித்தவர்களைக் குழப்பியடித்து, நான் இந்த விளையாட்டில் ஒரு பகடைக்காய் என்பதாக நம்ப வைத்துவிட்டேன். என்னைத் தனிச் சிறையில் ஒதுக்கி வைத்தார்கள். இறுதியில், எனது கடைசித் தந்திரத்தைக் கையாண்டேன். கொரேனவ்ஸ்கயா என்ற பெரிய ஊரில் உள்ள நமது கஸாக்கியன் ஒருவனைக் காட்டிக் கொடுத்தேன். அவன் நம்முடைய அமைப்பில்தான் இருந்தான். ஆனால் இந்தச் சங்கிலித் தொடரில் அவன் கடைசிக் கண்ணி. அந்தக் கிராமத்தில் இருந்த மற்றும் மூன்று பேரைத் தான் அவனால் காட்டிக்கொடுக்க முடியும். அவனுக்கு அந்த மூவரைத் தவிர வேறு யாரையும் தெரியாது. எனவே, 'இந்த நான்கு முட்டாள்களையும் வேண்டுமென்றால் இவர்கள் சுட்டுத் தள்ளட்டும். அல்லது நாடு கடத்தட்டும். நான் தப்பிக்கவேண்டியது மிக முக்கியம். இயக்கத்துக்கு நான் மிகவும் தேவை. இந்த நான்கு விலங்குகளும் எக்கதியானால் நமக்கென்ன. இயக்கத்துக்கு இந்த மாடுகளால் என்ன பயன்?'' உண்மையில், குபான் பகுதியில் இத்தொடர் வேலையில் நான் மிக முக்கியமான பொறுப்பில் இருந்தேன். 1922க்குப் பிறகு ஐந்து முறைகள் நான் எல்லையைக் கடந்திருக்கிறேன் என்றால் பார்த்துக்கொள்ளேன். கடந்து சென்ற ஐந்து தடவைகளும் பாரிசில் குதேப்பவை நான் சந்தித்தேன். அந்த நான்கு பகடைக்காய்களையும் தூக்கியெறிந்துவிட்டு, விசாரணையதிகாரியை சரிக்கட்டி விட்டேன். மற்ற கைதிகளோடு என்னையும் உள் பகுதியில் உடற்பயிற்சி செய்துகொள்ள அநுமதி தந்தார். வீணாக்க நேரமில்லை. புரிகிறதா? அன்று மாலை, விசாரிக்கப்பட்ட வேண்டிய பல குபான் 'பூசணிக்காய்களோடு' நானும் நடந்துகொண்டு இருந்தேன். வைக்கோல் போருக்கும் தரைக்குமாக ஓர் ஏணி இருப்பதைக் கண்டேன். அங்கே அது அப்போது தான்

வந்திருக்க வேண்டும். அது புல் அறுவடைக்காலம். போலீஸ்காரர்கள் அவர்களது குதிரைகளுக்கு புல்லைக் கொண்டு வந்து சேர்த்துக்கொண்டிருந்தார்கள். கைகளைப் பின்னால் கட்டியவாறு நான் நடந்து கொண்டிருந்தேன். ஏணியை நோக்கி நடந்தேன். கைகளைப் பின்னால் கட்டியபடியே ர்க்கஸ் பாணியில் ஏணியில் மெதுவாக ஏறத் தொடங்கினேன். கைகளைப் பின்னால் கட்டியவாறே ஏறினேன்... திருவாளர் பொலவ்த்ஸெவ், நான் போட்ட கணக்கு சரியாகி விட்டது! மனோதத்துவப்படி சரியாகிவிட்டது. என்னுடைய துணிச்சலைக் கண்டு திகைத்துப்போன காவலர்கள் என்னை எட்டுப் படிகள்வரை ஏறவிட்டு விட்டார்கள். எட்டாவது படியில் ஏறும்மோதுதான் ஒரு வீரன் 'நில்!' என்று கத்தினான். நான் வேகமாகக் குனிந்து கடைசி இரண்டு படிகளையும் ஒரே தாண்டில் தாண்டிவிட்டேன். கிடாய் மாதிரி கூரைமீது தாவிக்குதித்தேன். கண்டபடி சுட்டார்கள். சத்தமும் திட்டுக்களும் வேறு கேட்டது! மேலும் இரண்டே தாவில் கூரையின் விளிம்புக்குப் போய் விட்டேன். அவ்வளவு தான் ஓடியேவிட்டேன்! மறுநாள் காலை மய்கோப் என்ற நகரத்தில் ஒரு நம்பிக்கையான ஆளிடம் பாதுகாப்பாக இருந்தேன்... என்னைக் கோரப் படுத்திய அந்த இடிதடியனுடைய பெயர் ஹிழ்னியாக். அந்தக் கல் உருவம் மாதிரி காற்சட்டைப் போட்டுக்கொண்டு வந்தானே. இப்பொழுது நீங்கள் பார்த்தீர்களே அவனே தான். இவனை உயிரோடு விட்டுவிடுவேன் என விரும்புகிறீர்களா? இல்லை, எனது ஒரு கண்ணைக் கெடுத்ததற்காக, அவன் தனது இரண்டு கண்களையும் இழக்க வேண்டும்! ஒரு விழிக்கு இரு விழிகள்!''

''நீங்கள் என்ன பைத்தியமா?! உங்கள் சொந்தப் பழி வாங்கலுக்காக நம் புனிதமான இயக்கத்தையே சீர் குலைக்கப் பார்க்கிறீர்களா?!'' என்று வெறுப்புடன் வியந்து கேட்டான் பொலவ்த்ஸெவ்.

''ஒன்றும் கவலைப் படாதீர்கள் ஹிழ்னியாக்கையும் அவனது நண்பனையும் நான் இங்கு கொல்ல மாட்டேன். கிராமத்திலிருந்து சற்று தூரத்திற்கப்பால் நான் பதுங்கியிருப்பேன். நான் அவர்களது பணத்தை எடுத்துக் கொள்கிறேன். அவ்வளவுதான்! மோசமான வியாபாரிகளுக்கெல்லாம் நிகழக்கூடிய சமாச்சாரம் தானே... ஊரபிளை

மறைத்து வையுங்கள், நான் என்னுடையதை மேலங்கிக்குள் ஒளித்துக்கொண்டு வருகிறேன். பேசி இதை மாற்றி விடலாம் என்று நீங்கள் நினைக்காதீர்கள். கேட்கிறீர்களா? என் முடிவு இறுதியானது நான் இப்போது புறப்படுகிறேன். நீங்களோ, என்னைப் பின் தொடரலாம். சனிக்கிழமை அந்திக்குப் பின் நாம் துபியான்ஸ்கிக்கு அருகில் உள்ள காட்டில், நீரோடையருகில் நாம் சந்தித்தோமே. அதே இடத்தில் சந்திப்போம். சரி வருகிறேன். கடவுள் பெயரால் கேட்கிறேன். என் மீது கோபப்பட வேண்டாம், திருவாளர் பொலவ்த்ஸெவ்! இங்கிருந்தபொழுது நாமிருவருமே தாங்கிக்கொள்ளும் சக்தியின் இறுதிக் கோட்டைத் தொட்டுவிட்டோம். நான் சில சமயங்களில் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்.''

''சரி, இருக்கட்டும்... நம்மிடையே உணர்ச்சிகளுக்கு இடமில்லை'' பொலவ்த்ஸெவ் குழப்பத்தில் முணகினான். லியதியேவ்ஸ்கியை ஆரத்தழுவி, ஒரு தந்தையைப் போல அவனது சரிவான நெற்றியில் முத்தமிட்டான்.

திடீரென்று வெளிக்காட்டப்பட்ட இந்த உணர்ச்சியால் லியதியேவ்ஸ்கி பெரிதும் நெகிழ்ந்து போனான். ஆனால், தன் உணர்ச்சியைக் காட்டிக்கொள்ள விரும்பாமல் கதவுக் கைப்பிடியை பிடித்த வண்ணம், பொலவ்த்ஸெவ் பக்கம் திரும்பாமல் முதுகைக் காட்டி நின்று, ''துபியான்ஸ்கியைச் சேர்ந்த மக்சீம் ஹரிதோனவை நான் அழைத்துக்கொண்டு போகிறேன். அவனிடம் ஒரு ரைபிள் இருக்கிறது. நெருக்கடியான நேரங்களில் அவனை நம்பலாம். உங்களுக்கு மறுப்பு ஏதாவது உண்டா?''

பொலவ்த்ஸெவ் சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு, ''ஹரிதோனவ் என்னுடைய குழுவில் ஸார்ஜெண்டாக இருந்தவன். நீங்கள் நல்ல ஆளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். அவனை அழைத்துக்கொள்ளுங்கள். அவன் கெட்டிக்கார குறிகாரன். அப்படித்தான் இருந்தான். உங்கள் உணர்ச்சிகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படிதான் செய்கிறீர்கள், ஆனால் கிரெமியாச்சி கிராமத்துக்கருகிலோ, வேறு கிராமத்துக்கருகிலோ இதனைச் செய்துவிட வேண்டாம். புல்வெளியில் ஏதாவதொரு இடத்தில் செய்துவிடுங்கள்...''

''அது சரி. போய் வருகிறேன்.''

''வாழ்த்துக்கள்.''

லியதியேவ்ஸ்கி பாதைக்குப் போனான். தோள்களில் ஒஸ்த்ரவ்னோவின் பழைய மேலங்கி ஒன்றைத் தூக்கிப் போட்டுக்கொண்டான். கதவின் ஒரு வெடிப்பு வழியாக பக்கத்துத் தெருவை உற்றுக் கவனித்தான். ஒரு நிமிடம் கழித்து அவசரமில்லாமல் முற்றத்தைக் கடந்தான். தனது இடது கைப் பக்கம், குதிரைப் படையினரின் குட்டை ரைபிளை இடுக்கிக்கொண்டு, கொட்டடியின் மூலையிலிருந்து மறைந்துவிட்டான். ஓடைக்குள் குதித்தவுடன், அவன் உருவே மாறிவிட்டது. மேலங்கியின் கைக்குள் கையை விட்டு ரைபிளை எடுத்து, விசையை ஏற்றி வைத்துக்கொண்டான். பசியெடுத்த மிருகம் இரை தேடி இரண்டு பக்கமும் கவனமாகப் பார்த்துக்கொண்டு போவதுபோல ஒவ்வொரு சிறு சத்தத்தையும் உற்றுக் கேட்டுக் கொண்டே ஏறினான். காலை நேரத்தில் இளம் நீல நிறம் படர்ந்திருந்த கிராமத்தைத் திரும்பிப்பார்த்துக் கொண்டே போனான்.

* * *

இரண்டு நாட்களுக்குப் பிறகு வெள்ளிக் கிழமை காலை சாலையில் துபியான்ஸ்கிக்கும், வோய்ஸ்கவோய்க்கும் இடையில், மாப்பிள் ஓடையிலிருந்து அறுபது அடிகளுக்கு அப்பால், இரு மாட்டு வியாபாரிகளும், அவர்களுடைய குதிரைகளில் ஒன்றும் கொல்லப்பட்டுவிட்டது. கஸாக்கிய வண்டி ஓட்டி எஞ்சிய குதிரையை கழற்றி அதில் சவாரி செய்து கொண்டு வோய்ஸ்கவோய்க்கு ஓடிவிட்டான். அவன்தான் கிராம சோவியத்தில் இந்த விபரங்களைச் சொன்னவன்.

உள்ளூர் மிலீஷியாவும், கிராம சோவியத்தின் தலைவரும், அதே வண்டி ஓட்டியும், சாட்சிகளும், கொலை நடந்த இடத்துக்குப் போனார்கள். கீழ்க் கண்ட முடிவுக்கு வந்தார்கள். கொள்ளைக் கூட்டத்தார் காடுகளில் ஒளிந்திருந்து பத்து முறை ரைபிளால் சுட்டிருக்கிறார்கள். முதலில் பருமனாக இருந்த வியாபாரியைச் சுட்டிருக்கிறார்கள். முகங் குப்புற விழுந்த அவனது இதயத்தில் குண்டு ஊடுருவி இருக்கிறது. அடுத்த கனத்த ஆள் வண்டி ஓட்டியை வேகமாக ஓட்டும்படி தூண்டினான். அவன் சாட்டையைப் பிடுங்கி வலது குதிரையைத் தட்டிவிட கையை ஓங்கினான். ஆனால் அவன் குதிரையைத் தட்டுவதற்குள்ளாக அவனை இரண்

டாவது குண்டு கீழே வீழ்த்திவிட்டது. இடது காதுக்கு மேல் தலையில் குண்டு பாய்ந்திருந்தது. குதிரைகள் அலறிப் புடைத்தன. தனது கூட்டாளி கிடந்த இடத்துக்கு இருபது அடிகள் அப்பால் தள்ளிப்போய் உருண்டு கிடந்தான் அடுத்த ஆள். இரு ரைபிள்களிலிருந்து ஏககாலத்தில் மேலும் சில வேட்டுக்கள் தொடர்ந்தன. இடது பக்கமிருந்த குதிரை சுடப்பட்ட வேகத்திலே தரையில் பாய்ந்தது. சிப்பாய்க் கம்பையும் ஒடித்துக்கொண்டு, வண்டியைக் கவிழ்த்து விழ்ந் தது. எஞ்சியிருந்த குதிரையை வெட்டிக் கழற்றிக்கொண்டு வண்டி ஒட்டி ஊரை நோக்கிப் பாய்ந்தான். இவனைத் தொடர்ந்தும் சில வெடிகள் சுடப்பட்டன. ஆனால் அவை இவனை அச்சுறுத்தவே சுடப்பட்டனவே அன்றி, சுடுவதற் காக அல்ல. தலைக்குமேல் சீறிக்கொண்டு குண்டுகள் சென் றன என்று அவனே சொன்னான்.

பலியான இருவரின் பைகளும் காலி செய்யப்பட்டிருந் தன. காகிதங்கள் ஏதும் மிச்சம் விடப்படவில்லை. சாலை ஓரத்தில் புல்வெளியில், ஒருவருடைய பெட்டி காலி செய் யப் பட்டுக் கிடந்தது. அவர்கள் சோதனையின்போது புரட்டி எடுக்கையில், கொள்ளையர்கள் காலணியின் குதியால் மிதித்து ஒருவரது இடது கண்ணைக் கலக்கிப் பிடுங்கியிருப் பது தெரிந்தது.

கொதிப்படைந்திருந்த கிராம சோவியத்தின் தலைவர், இரண்டு போர்களில் பங்கெடுத்தவர் மிலீஷியாவிடம்: ''லுக்கா நஸாரிச், இங்கே பாரு. இறந்து போன ஓர் ஆளை, அந்தப் பன்றிகளில் ஒன்று உதைத்திருக்கிறது! பழைய பழி யைத் தீர்த்திருப்பான் போலத் தெரிகிறது. ஏதாவது பெண் விஷயமாக இருக்குமோ, என்னவோ? சாதாரண கொள் ளைக்காரர்கள் இப்படியெல்லாம் செய்வதில்லை...'' என்று சொன்னார். விழி தோண்டப்பட்டிருந்த செந்நிறக் குழி யையும், கன்னத்தில் வடிந்து படர்ந்திருந்த செந்நிறச் சதைச் சிதறலையும் காணச் சகிக்காமல், கைக்குட்டை யைப் போட்டு இறந்தவனின் முகத்தை மூடி விட்டு, ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்து நின்றார். ''இந்தக் கொள்ளைக் காரர்கள் வரவர மோசமாகி விட்டார்கள்! அவர்கள் பணத் துக்காக வந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன். சில ஆயிரமாவது எடுத்துப் போயிருக்க வேண்டும் என்று நினைக் கிறேன்... பயங்கரமான பேர்வழிகள்! கேவலம் பணத்துக்

காக இவ்வளவு நல்ல வீரர்கள் இருவரைக் கொன்று விட்டார்களே...''

ஹிழ்னியாக்கும், போய்கோ-கிலூஹவும் கொல்லப்பட்ட வதந்தி கிரெமியாச்சி கிராமத்தை எட்டியவுடன், தவீதவிடம், நகூல்னவ் நிர்வாக அலுவலகத்தில் தனியாக இருந்த பொழுது, ''காரியங்கள் எப்படி நடந்து கொண்டிருக்கின்றன என்று பார்த்தாயா, செமியோன்?''

''உன்னைப் போலவே நானும் உணர்கிறேன். பொலவ்த்ஸெவ் அல்லது அவனுடைய ஆட்களின் கைவரிசையாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அது தான் விஷயம்!''

''உண்மைதான். ஆனால் ஒரே ஒரு விஷயம் தான் எனக்குப் புலப்பட மாட்டேன் என்கிறது. இவர்கள் யார் என்று அவர்களுக்கு எப்படித் தெரிந்தது? அது தான் பெரிய கேள்வி இதை யார் செய்திருக்க முடியும்?''

''அந்தச் சிக்கலை நம்மால் தீர்க்க முடியாது. புள்ளி தெரியாத இருபக்க சங்கிலியை வைத்துக்கொண்டு கணக்குத் தீர்க்க முடியுமா? உனக்கும் எனக்கும் அல்ஜிப்ராவும் தெரியாது, எண்சுவடிக் கணக்கும் தெரியாது, இல்லையா?''

ஒரு கால்மேல் மற்றொரு காலைப் போட்டு நகூல்னவ் அமைதியாக உட்கார்ந்திருந்தான். தூசிபடிந்த தனது காலணியைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, ''தெரியாத ஒரு பக்கத்தின் அளவு எனக்குத் தெரியும்...''

''எது?''

''எந்த ஓநாயும் தன் குகைக்கருகிலேயே எதையும் கொல்வதில்லை...''

''அதனால், இதற்கு அருத்தம் என்ன?''

''கொலை செய்தவர்கள், துபியான்ஸ்கியிலிருந்தோ, வோய்ஸ்கவோயிலிருந்தோ வந்தவர்களில்லை, அது மட்டும் உறுதி!''

''ஷாஹ்தி அல்லது ரஸ்தோவிலிருந்து இருக்கும் என்று நினைக்கிறாயோ?''

''அவசியமில்லை. நம்முடைய ஊரிலேயே இருந்து கூட இருக்கலாம். ஏன் கூடாது?''

''இருக்கக் கூடும்'' என்று சற்று சிந்தித்து விட்டுச் சொன்னான் தவீதவ்: ''உன்னுடைய அறுதியுரைதான் என்ன மக்கார்?''

''கம்யூனிஸ்டுகள் கண்களைத் திறந்துகொண்டு இருக்க வேண்டும். இரவு நேரங்களில் தூக்கத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். கிராமத்தை மெதுவாக சந்தடியின்றிச் சுற்றிவர வேண்டும். உன்னிப்பாக சுற்றுமுற்றும் கவனிக்க வேண்டும். இந்த பொலவ்த்ஸெவையோ சந்தேகத்திற்குரிய அவனது கூட்டாளிகளையோ சந்திக்கும் வாய்ப்பு நமக்கு ஒருவேளை கிடைக்கக்கூடும், ஓநாய்கள் இரவுகளில்தான் வேலை செய்கின்றன...''

''ஓநாய்களுடனா நம்மை ஒப்பிடுகிறாய்?'' என்று தவீதவ் இலேசாக முறுவலித்தபடி சொன்னான்.

ஆனால் பதிலுக்கு நகூல்னவ் சிரிக்கவில்லை. அடர்த்தியாக இருந்த புருவத்தை நெறித்துக்கொண்டு, ''அவர்கள் தான் ஓநாய்கள். நாம் ஓநாய்களை வேட்டையாடுகிறவர்கள். இது புரிய வேண்டும்!''

''நீ ஆத்திரப்படாதே. நான் உன்னை ஒப்புக்கொள்கிறேன், அது தான் விஷயம்? இப்பொழுதே நம்முடைய கம்யூனிஸ்டுகள் எல்லாரையும் ஒன்றாகக் கூட்டிவிடு.''

''இப்பொழுது வேண்டாம். மக்கள் தூங்கிய பிறகு சிறிது நேரங் கழித்துக் கூட்டலாம்.''

''அதுவும் சரி'' என்று தவீதவ் ஒப்புக்கொண்டான். ''ஆனால், ஊரை ரோந்து சுற்றுவது போல் நாம் புறப்பட்டு விடக் கூடாது. இல்லையென்றால் கஸாக்கியர்களைக் கலவரப்படுத்தி விடுவோம். நாம் பதுங்கிக் காத்திருக்க வேண்டும்.''

''ஒகோ, ஆனால் எங்கே காத்திருக்க முடியும்? அதனால் பயனில்லை! திமஃபேய்க்காகக் காத்திருப்பது என்பது எனக்கு எளிது. லூஷ்கா ஒருத்திதான் அவன் தேடிவரக் கூடிய ஆள். ஆனால் இவர்களுக்காக நாம் எங்கே காத்துக் கிடப்பது? இந்த உலகம் பரந்தது. இந்தக் கிராமத்திலும் பல வீடுகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் நாம் கவனிக்க முடியுமா?''

''தேவையில்லை.''

''பின்னர் எப்படித் தேர்ந்தெடுப்பது?''

''அந்த வியாபாரிகள் எங்கே மாடு வாங்கினார்களோ, அந்த வீடுகளைக் கண்காணிக்க வேண்டும். சந்தேகப்பட்டவர்களைக் கவனித்துக்கொண்டுதான், மாடுகள் வாங்குவதைப் போல இறந்துபோன நமது தோழர்கள் நடித்து

வந்தனர்... கொள்ளைக்காரர்கள் அங்குதான் பதுங்கியிருப் பார்கள்... புரிகிறதா?''

''நீ ரொம்ப மூளைக்காரன் தான் தம்பி!'' என்று நகூல் னவ் நம்பிக்கையோடு சொன்னான். ''சில சமயங்களில் உன் மண்டையிலிருந்து நல்ல யோசனைகள் பிறந்து விடுகின் றன!''

அத்தியாயம் இருபத்தேழு

பொலவ்த்ஸெவும் லியதியேவ்ஸ்கியும் மீண்டும் ஒஸ்த்ரவ் னோவின் வீட்டிற்கு வந்துவிட்டனர். அவர்கள் அங்கு தங்கி யிருந்த நாலாவது நாளில் ஒஸ்த்ரவ்னோவ் வீட்டுக்கு அருகில் இருந்த பழத்தோட்டத்தில் இருந்து, களைத்துப் போன ரஸ்மியோத்னவ், கடைசியாக ஒரு கொட்டாவியை விட்டுவிட்டு வீட்டுக்கு மெதுவாக எழுந்துபோனதற்கு அரை மணி நேரத்திற்குப் பின்னால் விடியும்போது அவர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். ''செமியோனுக்குச் சில சமயங்களில் வேடிக்கையான எண்ணங்கள் பிறந்துவிடுகின்றன!'' என்று நினைத்துக்கொண்டான் ரஸ்மியோத்னவ். மற்றவர்களின் வீட்டு முற்றங்களை வளையமிடுவதும், குதிரைத் திருடர் கள் மாதிரி மறைந்து பதுங்கி இருப்பதும், அல்லது பொது வான திருடர்கள் மாதிரி இரவு பூராவும் பதுங்கியிருப்பது, கடைசியில் ஒன்றுமே காணாமலிருப்பது, இது என்ன வேடிக் கை என்று நினைத்தான்! எங்கே இருக்கிறார்கள் இந்தக் கொள்ளைக்காரர்கள்? நாம் நம்முடைய நிழலையே துரத்திக் கொண்டு இருக்கிறோம்... எழுந்து நடந்து விடுவது நல்லது. இல்லையென்றால் காலையில் பால்கறக்க எழுந்துவரும் பெண் யாராவது நம்மைப் பார்த்து விடக்கூடும். பின்னர் 'ரஸ்மியோத்னவ் விடிய விடிய அங்கே கிடந்தான்' என்று பேச்சு அடிபடும். இது ஊர் பூராவும் பரவிவிடும். 'எந்தப் பெண்பேய் இவனை இப்படி அலட்டியது. விடியும் வரை கண்விழிக்க முடியாமல் கிடந்தானாமே என்பார்கள்?' இந்தப் பேச்சுத் தொடங்கிவிட்டால் போதும், என்னுடைய அதிகா ரத்தின் செல்வாக்குப் போய்விடும்... இது நிறுத்தப்பட்டாக வேண்டும்! ரகசியப் போலீசார் கொள்ளையர்களைப் பிடிக் கட்டுமே. அவர்களுடைய வேலையை நாம் மேற்கொள்வது சரியல்ல. இரவு பூராவும் விழித்து இப்படிக் கண்களைஅலை விட்ட பிறகு இனி நான் எந்த வேலைக்குத் தான் லாயக்கு?

அலுவலகத்தில் எனது மேசை மீது தூங்கி விழுவேன். முழித்து முழித்து ஆட்களைப் பார்க்கவா? பிறகு என்ன சொல்வார்கள்? 'இரவு முழுக்க ஓடையில் கழித்துவிட்டு இங்கு வந்து கொட்டாவி விடுகிறான்!' என்பார்கள். இப் படிப்பட்ட வேலை என் செல்வாக்கைப் பாழடித்துவிடும்...''

சந்தேகங்களால் அலைக் கழிக்கப்பட்டு, இரவு முழுதும் தூங்காததால் சோர்வடைந்து, ஏறத்தாழ இந்த திட்டமே தோற்று விட்ட முடிவுக்கு வந்தவனாய், ரஸ்மியோத்னவ் தனது முற்றத்திற்குள் நுழைந்தான். அதே சமயம் வாசற்படியில் வெளியே வந்துகொண்டிருந்த அம்மாவோடு மோதத் தெரிந்தான்.

''நான் தான் அம்மா'' என்று முணகினான் ரஸ்மியோத்னவ். உள்ளே வராந்தாவிற்குள் அவளைப் போக விட்டான்.

ஆனால் கிழவி பாதையை அடைத்துக்கொண்டு, ''நீ தான் என்று தெரிகிறது. நான் குருடியல்ல... இரவு நேரங்களில் இப்படி நீ சுற்றுவதை நிறுத்திக் கொள்ள மாட்டாயா, அந்திரேய்? நீ ஒன்றும் இளைஞன் அல்ல. உன் திருவிளை யாடல்கள் எல்லாம் வெகுநாட்களுக்கு முன்பே முடிந்திருக்க வேண்டும். உன் அம்மாவும், மற்றவர்களும் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி நீ யோசிக்க வேண்டாமா? திருமணம் செய்துகொள். உனக்கு நீயே கடிவாளமும் போட்டுக்கொள். உனக்கு இது போதும்!''

''இப்பொழுதே திருமணம் செய்துகொள்ளட்டுமா? சூரிய உதயம்வரை காத்திருக்கட்டுமா?'' என்று எரிச்சலுடன் கேட்டான் அந்திரேய்.

''அது மூன்று தரங்கூட உதிக்கட்டும். உன்னை நான் அவசரப்படுத்தவில்லை. ஆனால் இனியும் காலந்தாழ்ந்தாதே'' என்று, தன் மகனின் கிண்டலையும் பொருட்படுத்தாமல் நிதானமாகவும் வினயமாகவும் சொன்னாள் அம்மா. ''என்னுடைய தள்ளாத வயதைப்பற்றி நினைத்துப் பார்! இந்தக் கிழட்டு வயதில், வலியையும், வேதனையையும் தாங்கிக்கொண்டு, பால்கறக்கவும், சமைக்கவும், உனக்குத் துணி துவைத்துப் போடவும், தோட்டத்தைக் கவனிக்கவும், மற்ற வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்வது கஷ்டமாக இருக்கிறது... மகனே, இது உனக்குத் தெரியவில்லையா? இந்த வீட்டு வேலைக்காக உன் சுண்டு விரலைக்

கூட அசைக்க மாட்டேன் என்கிறாய்! எனக்கு நீ என்ன உதவி? ஒரு வாளித் தண்ணீர் கூட கொண்டுவர மாட்டாய். நீ சாப்பிட்டுவிட்டு, யாரோ ஓர் அயலானைப்போல, தங்கியிருப்பவனைப்போல உன் வழியில் போய்விடுகிறாய்... புறாக்களை மட்டும்தான் நீ கவனிக்கிறாய். புறாக்களைச் சுற்றி சிறு பையன் மாதிரி நடனமாடுகிறாய். இது ஓர் ஆணின் வேலையா? சின்னப் பையன்களின் விளையாட்டு விளையாடுவதைப்பற்றி நீ வெட்கப்பட வேண்டும்! எனக்கு நியூர்கா மட்டும் உதவிகள் செய்யாமல் இருந்திருப்பாளேயானால், நான் எப்பொழுதோ கல்லறைக்குப் போயிருப்பேன்! அவள் எப்பொழுதும் இங்கே வந்து வேலை செய்கிறாள் என் பதைக் கூட பார்க்க முடியாத குருடனா நீ? பசுவிடம் பால் கறப்பாள், இல்லையென்றால் காய்கறிச் செடிக்குத் தண்ணீர் விடுவாள் அல்லது களைபிடுங்குவாள். இதுபோல வேறு வேலையும் செய்வாள். இந்த ஊரிலேயே அவளைப் போல அருமையான, பாசமுள்ள ஒரு பெண்ணை உன்னால் பார்க்கவே முடியாது! உன் மீது வைத்த கண்ணை அவளால் எடுக்கக்கூட முடியாது. ஆனால், உன்னால் அதை எல்லாம் பார்க்க முடியாது. ஏனென்றால் நீ தான் இப்படி ஊர்சுற்று கிறாயே! இப்பொழுது நீ எங்கே போயிருந்தாய்? உன்னையே பார்! உனது உடம்பெல்லாம், ஊர்சுற்றும் நாய்மீது ஒட்டியிருப்பது மாதிரி ஒட்டுப்புல் ஒட்டியிருக்கிறது! சனியனே, கொஞ்சம் குனி, எல்லாம் எனக்குத் தொல்லை, எங்கேபோய் இப்படிப் பண்ணிக்கொண்டு வந்தாயோ?..''

கிழவி தன் மகனுடைய தோளில் தனது கையை வைத்து, குனியுமாறு செய்தாள். அந்திரேய் தலையைக் கவிழ்த்ததவுடன், நரைத்துக் கொண்டிருந்த தலை முடியில் ஒட்டியிருந்த ஒட்டுப் புல் செத்தைகளை எடுத்து விட்டாள்.

கோபமடைந்திருந்த அம்மாவின் முகத்தை உற்று நோக்கிய வண்ணம், அந்திரேய் நிமிர்ந்து பார்த்து முறுவலித்தான்

''அம்மா, என்னைப்பற்றித் தவறாக நினைக்காதீர்கள்! இந்த ஒட்டுப் புல்லுக்குள் நான் காரியமில்லாமல் படுத்திருக்கவில்லை. ஒரு காரியமாகத் தான் படுத்து இருந்தேன். இப்பொழுது உங்களுக்கு அது புரியாது. ஆனால் சமயம் வந்தவுடன் நீங்களே விளங்கிக்கொள்வீர்கள். என்னுடைய திருமணத்தைப் பொருத்தமட்டில், மூன்று நாட்கள் என்று நீங்கள் சொன்னது மிக அதிகம். நாளை நியூர்காவை இங்கு

கொண்டு வந்து விடுகிறேன். ஆனால் அம்மா, நீங்கள் தான் உங்கள் மருமகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். மறந்து விடாதீர்கள். எனவே அவளுடன் சண்டை சச்சரவில்லாமல் சமாளித்துக் கொள்ளவேண்டும். என்னைப் பொருத்த மட்டில், என்னைத் தொந்தரவு செய்யாதவரையில் வம்பு இல்லை... இப்பொழுது என்னை விடுங்கள். வேலைக்குப் போகும் முன்னர் ஒரு மணி நேரமாவது தூங்க வேண்டும்.''

கிழவி சிலுவைக் குறியிட்டுக் கொண்டே விலகினாள்.

''என் தள்ளாத வயதின் மீது இரக்கம் கொள்ள வைத்த பிதாவுக்கு தோத்திரம். போ மகனே, போ. போய்த் தூங்குடா மகனே. காலைச் சாப்பாட்டுக்கு தோசை சுட்டு வைக்கிறேன். உனக்குக் கொஞ்சம் பால்கட்டி வைத்திருக்கிறேன். எனக்குக் கொடுத்த மகிழ்ச்சிக்காக உனக்கு என்ன கொடுப்பதென்றே எனக்குப் புரியவில்லை!''

அந்திரேய் கெட்டியாகக் கதவைத் தாழிட்டுக் கொண்டான். இருந்தும், தன் பக்கத்திலேயே மகன் நின்றுகொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டு அவள் அமைதியாகப் பேசினாள்: ''இந்த உலகத்தில் எனக்குள்ளதெல்லாம் நீ ஒருவன்தானடா!'' என்று சொல்லிவிட்டு அழுதாள்.

ஆக, அன்று காலையில் ஒரே நேரத்தில் கிராமத்தின் பல பகுதிகளில்—அந்திரேய் ரஸ்மியோத்னவ், அதமன்சுகோவ் வீட்டு முற்றத்தைக் கண்காணித்த தவீதவ், பான்னிக் வீட்டை இடைவிடாது கண்காணித்த நகூல்னவ், ஓஸ்த்ரவ்னோவின் வீட்டிற்குள் பாதுகாப்பாக நுழைந்த பொலவ்த்ஸெவ், லியதியேவ்ஸ்கி ஆகிய எல்லாரும் தூங்கப் போயினர்.

கோடைக்காலத்தின் பனித்திரை படர்ந்த காலையில், குணத்தாலும், மனத்தாலும் வேறுபட்டும் மாறுபட்டும் இருந்த பல்வகையான இந்த ஆட்கள், வெவ்வேறு கனவுகளைக் கண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் எல்லாரும் ஒரே நேரத்தில் தான் தூங்கினார்கள்...

அந்திரேய் ரஸ்மியோத்னவ் தான் முதலில் எழுந்தவன். முகத்தை மழித்துக் கொண்டான். தலையைக் கழுவினான். சுத்தமான சட்டை போட்டுக் கொண்டான். மரீனா பொயார்கவாவின் முன்னாள் கணவனிடமிருந்து இவனுக்கு நேரடியாக வந்த முறுக்கிய கம்பளி காற் சட்டைகளை அணிந்து கொண்டான். பட்டாளத்து பழைய மேலங்கித் துணிக் கந்தை ஒன்றை வைத்துக் கொண்டு, எச்சிலைத் துப்பி

காலணிக்குப் பளபளப்பு ஏற்றிக் கொண்டிருந்தான். அவசரமில்லாமல், நிதானமாக ஒப்பனை செய்து கொண்டான்.

இந்தத் தயாரிப்புகளெல்லாம் எதற்கு என்று அவள் யூகித்துக் கொண்டாள். ஆனால் கேள்வி ஏதும் கேட்கவில்லை. மகனின் மனநிலை கலைந்துவிடுமோ என்ற அச்சம். அடுப்படியிலேயே சும்மா வளையமிட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, அடிக்கடி இவனைப் பார்த்துக் கொண்டாள். அமைதியாகவே காலைச் உணவை முடித்தனர்.

''இன்று மாலை வரை என்னை எதிர்பார்க்காதீர்கள், அம்மா'' என்று சாதாரணமாக எச்சரித்து விட்டுப் புறப்பட்டான்.

''கடவுள் உன்னைக் காப்பாராக!'' என்று அம்மா பதில் சொன்னாள்.

''ஓகோ, கடவுள் எனக்கு உதவுவாரா?..'' என்று ரஸ்மியோத்னவ் கிண்டலாகப் பேசினான்.

தவீதவைப் போல அல்லாமல், விஷயத்தைப் பத்தே நிமிடத்தில், வேலையுண்டு தானுண்டு என முடித்துவிட்டான். இருப்பினும் நியூர்காவின் வீட்டில் நுழைந்தவுடன், அவளது பெற்றோருக்கு பரம்பரைப் பழக்கத்துக்கு ஒப்ப மரியாதை காட்டினான். இரண்டு நிமிடங்கள் வரை அமைதியாகச் சிகரெட்டைப் புகைத்துக்கொண்டே இருந்தான். அறுவடை, காலநிலை ஆகியவை பற்றி நியூர்காவின் தந்தையிடம் சில விமர்சனங்களைப் பறிமாறிக் கொண்டான். பின்னர், வெகு காலத்துக்கு முன்னரே முடிவு செய்யப்பட்டதைப் போல, திடீரென யோசனையை முன் வைத்தான்.

''நியூர்காவை நாளைக்கே நான் அழைத்துச் செல்கிறேன்.''

வேடிக்கை உணர்வுள்ள மணமகளின் தந்தை, ''எதற்காக? சோவியத் அலுவலகத்தில் தூதுவன் வேலையா?'' என்று கேட்டார்.

''இன்னும் மோசம். என் மனைவியாக்க.''

''அதை அவளே தீர்மானிக்க வேண்டும்...'' குழப்பத்தால் முகஞ் சிவந்து போயிருந்த நியூர்காவை ஏறிட்டுப் பார்த்த ரஸ்மியோத்னவ் முனைப்போடு ''நீ ஏற்றுக் கொள்கிறாயா?'' என்று வினவினான்.

''பத்து ஆண்டுகளாகவே நான் விருப்புடன் தான் இருக்கிறேன்'' என்று உறுதியாகச் சொன்னாள் நியூர்கா. அந்தி

ரேய் மீது அவளது வட்டக் கண்கள் அன்போடு பதிந்திருந் தன.

''அவ்வளவுதான் பேச்சு'' என்று நிறைவோடு சொன் னான் அந்திரேய்.

வழக்கத்திற்கேற்ப, பெற்றோர்கள், தங்களது தயக்கத் தைக் காட்டிக் கொண்டனர். ஆனால், அந்திரேய் அடுத்த சிகரெட்டையும் பற்றவைத்து அவர்களது பாசாங்கை உடைத்து விட்டான்.

''உங்களிடமிருந்து வரதட்சணையோ, வேறு எதுவுமோ நான் கேட்டு வரவில்லை. என்னிடமிருந்து பிழிந்தெடுக்க உங்களுக்கு என்ன இருக்கிறது? புகையிலைப் புகையா? பெண்ணைத் தயாராக வைத்திருங்கள். இன்று மாலையே பெரிய ஊருக்குப் போய் பதிவு செய்துவிட்டு, நாளை திரு மணத்தை நடத்திவிடுவோம். சரிதானா? அவ்வளவு தான்!''

''இப்படித் திடீரென்று உனக்கென்ன இவ்வளவு அக் கறை?'' என்று பெண்ணின் தாய் பரபரப்புடன் கேட்டாள்.

ஆனால் ரஸ்மியோத்னவ் அவளை அமைதியாகப் பார்த் துக் கொண்டே, ''நான் எதற்காக கவலைப்பட்டேனோ, அது எல்லாம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே எரிந்து சாம்பலாகிவிட்டது... நான் அவசரப் படுவதற்குக் காரணம், அறுவடை வந்துவிட்டது. வீட்டு வேலையில் இருந்து கிழவி முழுக்க ஒதுங்க விரும்புகிறாள். எனவே இப்படிப் பேசி முடிப்போம். பெரிய ஊரிலிருந்து நான் வோத்கா சாராயம் கொண்டு வருகிறேன்—இருபது பாட் டில்களுக்கு மேல் கொண்டு வர மாட்டேன். நீங்கள் சாப் பாடு தயார் செய்து அதற்கு ஏற்ப விருந்தினர்களுக்கு அழைப்பு விடுங்கள். என் தரப்பிலிருந்து மூன்று பேர் வரு வார்கள். அம்மா, தவீதவ், ஷாலீய் அவ்வளவு தான்.''

''நகூல்னவ் என்ன ஆவது?''

''அவனுக்குக் காய்ச்சல்'' அந்திரேய் பொய் சொன் னான். மக்கார் எப்படியும் திருமணத்துக்கு வர மாட்டான் என்பதில் உறுதியாக இருந்தான்.

''நாம் ஓர் ஆடு வெட்டலாமா, அந்திரேய் ஸ்தெபா னிச்?''

''அது உங்கள் விருப்பம். ஆனால் பெரிய ஆடம்பரம் ஏதும் வேண்டாம். நான் அப்படி ஏதும் செய்யக் கூடாது. என் வேலையும் போய்விடும். கட்சியிலிருந்தும் கடுமையான

கண்டனம் வரும். பன்னிரண்டு மாதங்களுக்குக் குவளையைத் தூக்கிப் பிடித்த அதே விரல்களில் ஊதிக்கொண்டிருக்க வேண்டியதாகிவிடும்.'' மணப்பெண் பக்கம் திரும்பினான். ஒரு வீரனைப் போல கண்ணைச் சிமிட்டினான், பெருந் தன்மை இல்லாதபடி புன்னகை செய்தான். ''நான் அரை மணி நேரத்தில் திரும்ப வந்துவிடுகிறேன். நியூரா, நீ அதற்குள் நன்றாக ஆடையணிந்து கொள். நீ கிராம சோவி யத்தின் தலைவரை மணந்து கொள்கிறாய். வெறுமனே சாதாரண ஆளை அல்ல!''

* * *

அது ஒரு துயரமான திருமண விழாதான். பாட்டு, நடனம், கிண்டல், கேலி எதுவும் இல்லை. எந்தக் கஸாக் கியத் திருமணத்திலுமிருக்கும் கேளிக்கை விளையாட்டும், மண மக்களுக்கான வாழ்த்துக்களும், சில சமயங்களில் தாராளமாகவும், மிகமிகத் தாராளமாகவும் இருக்கக்கூடி யது, எதுவுமில்லை... ரஸ்மியோத்னவ் தான் அந்த முறை யைத் தொடக்கி வைத்தான். தேவையற்று வினயமாகவும், வரவழைத்துக் கொண்ட சோகத்துடனும் இருந்தான். எந்தப் பேச்சிலுமே அவன் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. வெகுநேரம் பேசாமலேயே இருந்தான். பரபரப்பை விரும் பும் கூட்டத்தினர், ஊடே, ''புளிக்கிறது!'' என்று வழக் கம் போலக் கத்திய போது மட்டுமே, தனது இளம் மனைவி பக்கம் திரும்பி அவளது கன்னத்தில் தனது குளிர்ந்த உதடு களைத் தயக்கத்தோடு பதிப்பான். எப்பொழுதும் துடிப் புடன் இருக்கும் அவனது கண்கள்கூட, வெகுதூரத்துக்கப் பால், வெகுகாலத்துக்கு முன்னால் நடந்த ஏதோ ஒன்றை நினைத்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

அத்தியாயம் இருபத்தெட்டு

இதே காலத்தில், கிரெமியாச்சி கிராமத்திலும் அதைச் சுற்றியும் வாழ்க்கை வழக்கம்போல மெதுவாக, கம்பீர மாக ஓடிக்கொண்டே இருந்தது. அவ்வப்பொழுது, வெண் ணிற, பனி போன்ற வெள்ளை மேகங்கள் கிராமத்தின் மீது பறந்தன, சில சமயங்களில் அதன் நிறம் மாறி நிழ லும் மாறி, நீல நிறமாக சில வேளைகளில் காட்சியளிக்கும்.

இன்னும் சில வேளைகளில் திறமே இல்லாமல் போய்விடும். மாலையில் சூரியன் மறையும் நேரங்களில் நெருப்புப் பற்றி எரிவதைப்போல வெளிச்சமாக இருக்கும். அவை வரப் போகும் காற்றுக் காலத்துக்கு முன் அறிகுறியாக விளங்கின. வீட்டுத் தலைவர்களிடமிருந்தோ, தலைவர்களாக வரக் கூடியவர்களிடமிருந்தோ, பெண்களும், குழந்தைகளும், ஒவ்வொரு வீட்டிலும், முற்றத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன், ''இப்படிப்பட்ட காற்று நேரத்தில் தூற்றி என்ன பயன்?'' என்று சொல்வதைக் கேட்கலாம். மேசையின் கோடியில் உட்கார்ந்திருக்கும் வயதான ஒருவர், அல்லது அண்டை வீட்டுக்காரரர் சிறிது நேரம் பொறுத்திருந்துவிட்டு, ''நீ முயற்சி செய்யாமல் இருப்பது நல்லது! எல்லாம் காற்றிலே பறந்து போய்விடும்!'' என்பார். இப்படிப்பட்ட பயங்கர கிழக்குக் காற்று மேலே வீசுகிறபொழுது, கீழே நிர்ப்பந்திக்கப்பட்ட சோம்பேறித்தனம் நிலவுகிற சூழ்நிலையில் இருக்கின்ற முந்நூறு வீடுகளிலும் எப்பொழுதோ மறைந்த கிராமத்து ஆள் ஒருவரைப் பற்றிய கதை பேசப்படும். இவான் இவானவிச் தெஷ்றியரோவ், வெகு காலத்திற்கு முன்பு ஒருமுறை, இந்தக் கிழக்குக் காற்று வீசிக்கொண்டிருக்கும்பொழுது வயலிலிருந்து, களத்துக்குக் கதிர்களைக் கொண்டுவந்து சேர்க்க முயன்றானாம். ஆனால், கதிர்க் கட்டுகள் காற்றிலே தூக்கி அடிக்கப்படுவது கண்டு, இதை எதிர்த்து போராட முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, முக்காலி கவையில் ஒரு பெரிய கத்தைக் கதிர் கட்டைத் தூக்கி கிழக்குப் பக்கமாகத் திரும்பி, காற்றை நோக்கி, ''வா இங்கே! உனக்கு சக்தி இருந்தால், இதைத் தூக்கிக்கொண்டு போ பார்க்கலாம்! சனியன் பிடித்த காற்றே தூக்கிச் செல்!'' என்று கோபமாகக் கத்தினானாம். வண்டியில் ஏற்றியிருந்ததையெல்லாம் காற்று அலைக்கழித்ததால் இழந்துவிட்டு, வெறுங்கையுடன் வீடு திரும்பினானாம்.

கிரெமியாச்சி கிராமத்தில், வாழ்க்கை வழக்கம்போல எவ்வித பரபரப்புமின்றி, நிதானமான வேகத்திலேயே போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு பகலும் இரவும் அக் கிராமத்தில் இருந்த முன்னூறு வீடுகளில் இருந்த யாராவது ஓரிருவர்க்கு கொண்டுவந்து சேர்த்த பெரிய, சிறிய இன்பம், ஏமாற்றம், ஏக்கம் மற்றும் துயரம் ஆகியன அவ்வளவு

சீக்கிரத்தில் மறையவில்லை... கிராமத்தின் மந்தையை சிறிதுகாலம் மேய்த்துக் கொண்டிருந்த அகேய் தாத்தா கிராமத்திற்கு வெளியே புல் வெளியில் திங்கட்கிழமை காலை இறந்து போனான். மந்தையை விட்டு சண்டித்தனம் செய்து கொண்டு ஓடிக் கொண்டிருந்த ஒரு கிடாரியைத் தடுக்க அவன் ஓடினான். கிழவனால் வெகுதூரம் ஓட முடியவில்லை. கொஞ்ச தூரம் ஓடியவுடன் சாட்டைக் கம்பை நெஞ்சில் அழுத்தியபடி நின்றான். முழங்கால்கள் பின்னின, குடிகாரனைப்போல் தள்ளாடித் தடுமாறினான். சாட்டையைக் கீழே போட்டுவிட்டு திரும்பி மெதுவாக நடந்தான். பசுவை ஓட்டிக் கொண்டு வந்த பெஸ்ஹிலேப்னவின் மருமகள், ஓடிப் போய் கிழவனின் கையைப் பிடித்தாள். அவனது சலனமற்ற கண்களைக் கண்ட அவள், ''தாத்தா, உனக்கு உடம்புக்கு சரியில்லையா?!'' என்று கேட்ட அவள் குரல், மறுவிநாடி, ''ஐயையோ! தாத்தா உன்னை நான் எப்படிக் காப்பாற்றப் போகிறேனோ?!'' என்று வீறிட்டு அலறியது.

அகேய் தாத்தா சிரமப்பட்டு சில வார்த்தைகளை மட்டும் சொன்னான்: ''பயப்படாதே அம்மா!.. என் கையைப் பிடித்துக்கொள். இல்லையென்றால் விழுந்துவிடுவேன்...''

பின்னர் வலது கால் பக்கமாக விழுந்து. மறு பக்கம் உருண்டான். இப்படித்தான் அவன் இறந்து போனான். எல்லாம் முடிந்தது. சாப்பாட்டு நேரத்தில் கூட்டுப்பண்ணையைச் சேர்ந்த இரண்டு பெண்கள் ஒரே சமயத்தில் குழந்தைகளைப் பெற்றார்கள். ஒருத்திக்குக் கெட்ட நேரம். முதலில் கிடைத்த சக்கடா வண்டியை மாவட்ட மருத்துவருக்காக, தவீதவ், வோய்ஸ்கவோய்க்கு விரைந்து அனுப்ப வேண்டியதாகிவிட்டது. இறந்து போன அகேய் தாத்தாவின் வீட்டில் தனது இறுதி மரியாதைகளைத் தெரிவித்துவிட்டு அப்போதுதான் திரும்பிய தவீதவைப் பார்க்க பண்ணையின் இளம் உறுப்பினனான மிஹேய் குஸ்னெத்ஸோவ் ஓடோடியும் வந்தான். வெளிறிப்போன முகத்துடன் வாசற்படியிலிருந்து சத்தம் போட்டான்: ''அன்புள்ள தோழர் தவீதவ்! கடவுளுக்காக எங்களுக்கு உதவ வேண்டும்! என் மனைவி ஒரு நாளாக வேனைப் பட்டுக்கொண்டிருக்கிறாள். அவளால் பிள்ளை பெற முடியவில்லை. எனக்கு இரண்டு குழந்தைகள். என்னால் அவளை இழக்கவே முடியாது. ஏதாவது சில குதிரைகள் கொடு, போய் மருந்துவரை

அழைத்து வந்தாக வேண்டும். கிழவிகளால் அவளுக்கு ஒன்றுமே செய்ய முடியாது...''

''சரி வா!'' என்று சொல்லி முற்றத்திற்குச் சென்றான் தவீதவ்.

வைக்கோல் ஏற்றிவருவதற்காக ஷ்சுக்கார் தாத்தா புல் வெளிக்கு வண்டியோடு போய்விட்டான்; எல்லாக் குதிரை களுமே வெளியே போய்விட்டன.

''நாம் உன் வீட்டுக்குப் போவோம். நாம் முதலில் சந்திக்கிற வண்டியை வோய்ஸ்கவோய்க்கு அனுப்பிவிடு வோம். நீ உன் மனைவியிடம் திரும்பிப்போ. வருகிற முதல் வண்டியை உனக்கு அனுப்பிவிடுகிறேன்.''

மகப்பேறு நடக்கிற இடத்தில் ஓர் ஆண் காத்துக்கொண் டிருப்பது சரியல்ல என்பது தவீதவுக்கு நன்றாகத் தெரி யும். ஆனால் வீட்டின் முன்னால் மேலும் கீழுமாக நடந்து கொண்டு வெறிச்சோடிக் கிடந்த தெருவையே உற்று நோக்கிக் கொண்டிருந்த தவீதவ், உள்ளே இருந்து கேட்கும் பெண்ணின் முக்கல் முணகலையும் வேதனைக் குரலையும் கேட்டு, இது போன்ற வேதனையைக் கண்டறியாத தவீதவ் தனக்குள்ளாகவே வேதனைப்பட்டு, மாலுமிகள் பேசிக் கொள்ளும் தரங்கெட்ட வார்த்தைகளைச் சொல்லித் திட் டினான். குழுவுக்குத் தண்ணீர் கொண்டு வந்து தரும் பதி னாறு வயதுப் பையன் அந்திரேய் அக்கீமவ் மிகச் சாவதான மாக வண்டியை ஓட்டிக்கொண்டு தெருவில் வந்ததைப் பார்த்ததும் வண்டியை நோக்கி சின்னப் பையன் மாதிரி தவீதவ் ஓடினான். வண்டியை நிறுத்தி பீப்பாயில் இருந்த தண்ணீர் முழுவதையும் சிரமப்பட்டுக் காலி செய்து விட்டு, பலமாக மூச்சு விட்டுக்கொண்டே, ''இங்கே பார் தம்பி. ஒரு பெண் இங்கே சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறாள். உன் னிடம் நல்ல குதிரைகள் இருக்கின்றன. வோய்ஸ்கவோய்க்கு எவ்வளவு வேகமாக போக முடியுமோ அவ்வளவு வேகமாக ஓட்டிக் கொண்டு போய் ஒரு மருத்துவரை, உயிராகவோ, பிணமாகவோ அழைத்துக் கொண்டு வா! குதிரைகளை நீ கொன்றுவிட்டால் அதற்கு நான் பொறுப்பு, உண்மையாகத் தான்!''

மீண்டும் நடுப்பகல் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு பெண்ணின் தாங்க முடியாத உயிர்போகும் வேதனைக்

குரல் பீறிட்டு வந்தது. தவீதவ் பையனின் முகத்தைப் பார்த்து, ''கேட்டாயா தம்பி? சரி புறப்படு!'' என்றான்.

வண்டியில் எழுந்து நிமிர்ந்துநின்ற பையன், ஒரு பெரிய மனிதனின் பார்வையோடு தவீதவைப் பார்த்தான்.

''நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது, செமியோன் மாமா. ஆனால் குதிரைகளைப் பற்றி கவலைப்படாதீர் கள்!''

குதிரைகள் நாலு கால் வேகத்தில் பாயந்தன. இன்னும் நின்று கொண்டே இருந்த பையன், ஓங்கி சீட்டியடித்தான். சாட்டையைச் சுழற்றினான். வண்டிச் சக்கரத்தின் கீழ் கிளம்பிய புழுதியையே பார்த்துக் கொண்டிருந்த தவீதவ், கையைப் பிசைந்து கொண்டு அலுவலகக் கட்டிடத்தை நோக்கி நடந்தான். போய்க் கொண்டிருக்கும் போதே, மீண்டும் அந்த அலறும் குரலைக் கேட்டான். சிறிது தூரம் போனவுடன், எரிச்சலுடன், ''எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு வேலையை ஒழுங் காகச் செய்ய முடியாது! உண்மையாகத்தான்!'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

அலுவலகத்துக்குப் போய், அன்றாட வேலைகளைத் தொடங்கினான். அப்பொழுது ஒரு கூச்சப்பட்ட இளைஞன், கூட்டுப்பண்ணையின் பழைய உறுப்பினனான அப்ராமவின் மகன், தவீதவ் முன்னால் கால் மாற்றி கால் நின்று கொண்டே, ''தோழர் தவீதவ், இன்றைக்கு ஒரு திருமண விழா நடத்துகிறோம். எங்கள் குடும்பமே உங்களை அழைக்க விரும்புகிறது. விருந்தில் நீங்கள் இல்லையென் றால் நன்றாக இராது'' என்றான்.

தவீதவ் பொறுமையை இழந்தான். நாற்காலியை விட்டுக் குதித்தெழுந்து, ''இந்த ஊருக்கே பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன? சாவு, குழந்தை பெறுவது, கல் யாணம் நடத்துவது எல்லாம் ஒரே நாளிலா? இது என்ன சதியா?!'' என்று கத்தினான்.

தன் சத்தத்தைக் கேட்டுத் தானே சிரித்துக் கொண்டு அமைதியாக, ''எதற்காக இப்படிப் பேய் மாதிரி அவசரப் பட வேண்டும்? நீ முதிர்வேனிற்காலத்திலேயே திருமணம் செய்து கொண்டிருந்திருக்கலாமே. திருமணவிழாவிற்கான காலம் முதிர்வேனிற் காலம்தான்'' என்றான்.

அனற்கங்கின் மீது நிற்பவனைப்போலப் பையன் துடித்

தான்: ''இருக்கிற நிலைமை அதுவரை எங்களை அனுமதிக்காது.''

''என்ன நிலைமை?''

''உங்களுக்குப் புரியவில்லையா, தோழர் தவீதவ்?..''

''ஓகோ அதுவா?.. நிலைமையை முன்கூட்டியே முடிவு செய்ய வேண்டும்'' என்று புத்தி சொன்ன தவீதவ் மறு விநாடி, 'அது குறித்துப் பேச தனக்கே கூட உரிமை இல்லை' என்பதை நினைத்துச் சிரித்தான்.

சிறிது நேர அமைதிக்குப்பின், ''சரி நீ போ! இன்று மாலை நாங்கள் எல்லாருமே வருகிறோம். ரஸ்மியோத்னவிடமும், நகூல்னவிடமும் சொல்லிவிட்டாயா?''

''நான் ஏற்கெனவே அவர்களை அழைத்துவிட்டேன்.''

''சரி, நாங்கள் மூன்று பேரும் வருகிறோம். ஒரு மணி நேரம் போல தங்குவோம். நாங்கள் அதிகம் குடிக்க மாட்டோம். இது அதற்கு உகந்த காலமல்ல. எனவே ஏமாற வேண்டாம், இப்பொழுது நீ போகலாம். உனக்கு வாழ்த்துக்கள். இன்று மாலை உன்னை வந்து நாங்கள் வாழ்த்துவோம்... அவள் தடிப்பானவளா?''

''அவன் ஒன்றும் பெரியவளல்ல. ஆனால் அது அப்படிக் காட்டுகிறது...''

''வெளியில் தெரிந்துவிட்டால் எப்போதுமே நல்லது'' என்று தவீதவ் குறிப்பிட்டான். புத்தி சொல்கிறவனாக மீண்டும் மாறிவிட்டதையும், தன் வாதத்தில் உள்ள குறையையும் நினைத்து முறுவலித்தான்.

ஒரு மணி நேரங்கழித்து, அன்றைய அறிக்கையில் தவீதவ் கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்தபொழுது, மகிழ்ச்சியோடு மிஹேய் குஸ்னெத்ஸோவ், ஓடோடியும் வந்து, தவீதவைத் தனது கைகளில் தூக்கி நன்றி வார்த்தைகளால் மழையெனப் பொழிந்தான்:

''இயேசு உன்னைக் காப்பாராக, தலைவரே! அந்திரேய் சரியான நேரத்தில் மருத்துவரை அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். ஏறத்தாழ என் மனைவி கடைசி மூச்சு விட்டுவிட்டாள். ஆனால், அவனுடைய உதவியில் எனக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுத்துவிட்டாள். அவன் ஓர் இளங்கன்று மாதிரி இருக்கிறான். தூக்கக்கூட முடியாது. சரியான வழியில் பிள்ளை பிறக்கவில்லை என்று மருத்துவர் சொல்கிறார். ஆனால் எப்படி வந்தான் என்பதைப்பற்றி

எனக்குக் கவலை இல்லை. இப்பொழுது எங்கள் குடும்பத்துக்கு ஒரு பையன் கிடைத்துவிட்டான்! தோழர் தவீதவ் இனி நீதான் ஞானத் தந்தை!''

தவீதவ் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். ''ஆகட்டும், ஞானத் தந்தையாக நானிருக்கிறேன். கடைசியில் உன்னுடைய மனைவி சுகமாகி விட்டது குறித்து நான் உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். உனக்கு ஏதாவது தேவைப்பட்டால், நாளை ஒஸ்த்ரவ்னோவைப் பார். அவனுக்கு உத்தரவு போடுகிறேன், அதுதான் விஷயம். பையன் தவறான வழியில் வந்தது... அதனால் ஒன்றுமில்லை. ஏராளமான பையன்கள் சரியான வழியில் வந்தவர்கள் அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள். உண்மையான பையன்களைத்தான் சொல்கிறேன். அதாவது...'' இந்தத் தடவை அவன் புன்னகைகூடச் செய்யவில்லை. ஏனெனில் புத்திமதி சொல்வது போல பேசிய தனது தொனியைக்கூட அவனால் உணர முடியவில்லை. ஆனால் அதை உணர்ந்து தான் சிறிது நேரத்துக்கு முன்பு சிரித்தான்.

மற்றவர்களின் மகிழ்ச்சியில் நமது மாலுமியும் ஈடு பாட்டோடு பங்கு கொள்வான். தாயின் பிரசவ வேதனையிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக முடிந்துவிட்டதைக் கேட்டு, மனம் மகிழ்ந்து கண்களில் நீர் பெருக அமர்ந்திருப்பான். கண்களில் நீர் பெருகுவது கண்டு, அவற்றைக் கைகளால் மூடிக் கொண்டான். ''நீ போகலாம். உன் மனைவி உனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். உனக்கு ஏதாவது தேவைப்பட்டால் இங்கு வா. ஆனால், இப்பொழுது போகலாம். வீணாக்க எனக்கு நேரமில்லை. எனக்கு ஏராளமான வேலையிருக்கிறது என்பது உனக்கே தெரிகிறதல்லவா?'' என்றான்.

அன்று மாலை, ஒரு மிக முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. கிராமத்திலிருந்த யார் கண்ணிலுமே அது படாமல் போய் விட்டாலுங்கூட, கிரெமியாச்சி கிராமத்தைப் பொருத்த மட்டில் அது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல. ஏறத்தாழ ஏழு மணியளவில், ஒஸ்த்ரவ்னோவ் வீட்டுக்கு மிடுக்கான ஒரு சிறு வண்டி வந்தது. அதனை இரு அருமையான குதிரைகள் இழுத்து வந்தன. நடுத்தர உயரமுள்ள, பட்டுச் சட்டையும், காற்சட்டையும் போட்டிருந்த ஓர் ஆள் வாயிலருகே இறங்கினான். தூசி படிந்திருந்த காற் சட்டை

மடிப்புகளை, ஒரு கிழவனிடம் தடுமாற்றத்தோடு தட்டி விட்டுகொண்டான். பின்னர், ஓர் இளைஞனைப்போல படி களில் ஏறி, முற்றத்தை நோக்கி நடந்தான். அங்கே, ஆவ லோடு காத்திருந்தான் ஒஸ்த்ரவ்னோவ். வந்தவன் தனது மெலிந்த கரங்களால் ஒஸ்த்ரவ்னோவின் தோள்களை இறுகப் பற்றினான். நேச பாவத்தோடு சிரித்தான். அதில் அவனது புகைக்காரை படிந்த பற்கள் தெரிந்தன.

''அலெக்சாந்தர் அனீசிமவிச் இருக்கிறாரா? நீ தான் வீட் டின் சொந்தக்காரர் என்பது தெரிகிறது. யாக்கவ் லுக்கீச் தானே? சரியா?''

வந்திருந்தவனின் தோற்றம், பாவனை, இவற்றோடு, பட்டாளத்து வீரன் என்ற முறையில் தனக்கே தோன்றிய உணர்வாலும், இவன் உயர்ந்த தகுதியுடையவன் என் பதைப் புரிந்துகொண்ட ஒஸ்த்ரவ்னோவ், தனது கிழிந்த காலணிகளை அடித்து நின்று, மரியாதையாக, ''மேன்மை தங்கிய கனவான் அவர்களே! நீங்களா? அடேயப்பா! அவர் கள் உங்களுக்காக எவ்வளவு காத்துக் கொண்டிருக்கிறார் கள் தெரியுமா?''

''உள்ளே வழி காட்டு!''

தனது இயல்புக்கு முற்றிலும் மாறுபட்ட முறையில், மிகுந்த பணிவோடு பொலவ்த்ஸெவும் லியதியேவ்ஸ்கியும் இருந்த அறைக் கதவை ஒஸ்த்ரவ்னோவ் திடீரெனத் திறந் தான்.

''அலெக்சாந்தர் அனீசிமவிச் முன்கூட்டியே எச்சரிக் காமல் திறந்ததற்காக மன்னிக்க வேண்டும். நாம் விரும்பும் விருந்தாளி வந்துள்ளார்!''

விருந்தாளி உள்ளே நுழைந்து, நாடக பாணியில் இரு கைகளையும் அகல விரித்து நின்று, ''வாழ்த்துக்கள், கைதி களே! இங்கே நாம் சாதாரணமாகப் பேசலாமல்லவா?'' என்றான்.

மேசையில் அமர்ந்திருந்த பொலவ்த்ஸெவும், வழக்கம் போல அலங்கோலமாகக் கட்டிலில் படுத்திருந்த லியதி யேல்ஸ்கியும் குதித்து காவலர்கள் நிற்பதுபோல் நின்றனர்.

பொலவ்த்ஸெவைத் தழுவிக்கொண்ட பார்வையாளன் இடது கையால் மட்டும் லியதியேவ்ஸ்கியைச் சுற்றி வளைத் துக் கொண்டு, ''திருவாளர்கள் அதிகாரிகளே, தயவுசெய்து உட்காருங்கள். நான் தான் கர்னல் ஸெதோய். உங்களுக்கு

உத்தரவுகள் அனுப்பிக் கொண்டிருக்கும் ஆள் நான் தான். நான் அதிர்ஷ்டவசமாக, மண்டல விவசாயக்குழுவில், விவசாய நிபுணனாகப் பணியாற்றி வருகிறேன். மேற்பார்வையிடும் சுற்றுப்பயணத்தில் இருக்கிறேன். எனக்குக் குறித்த அளவு நேரம்தான் இருக்கிறது. இருக்கின்ற நிலைமையை உங்களுக்கு நான் சொல்லியாக வேண்டும்.''

மிகைப்படுத்தப் பட்ட நட்புணர்ச்சியைக் காட்டிக் கொண்டு, இன்னும் சிரித்தவாறே தனது புகைபடிந்த பற்களைக் காட்டியவண்ணம், வந்திருந்த விருந்தாளி தொடர்ந்தான்: ''நீங்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. விருந்தாளிக்குக்கூட உங்களிடம் ஒன்றுமில்லை போலத் தெரிகிறது... விருந்தோம்பல் பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருக்க இது நேரம் இல்லை. நான் வேறு ஓர் இடத்தில் சாப்பிட்டுக் கொள்கிறேன். வண்டி ஓட்டியை இங்கே மேசைக்கு அழையுங்கள். காவலுக்கு ஏற்பாடு செய்யுங்கள். அல்லது குறைந்தது கண்காணித்துக் கொள்ளவாவது செய்யுங்கள்'', என்றான்.

பொலவ்த்ஸெவ் கதவை நோக்கி விரைந்தான். ஆனால் அதற்குள்ளாக, நன்றாக வளர்ந்து கம்பீரமாகக் காணப்பட்ட வண்டி ஓட்டி ஏற்கெனவே உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். பொலவ்த்ஸெவுக்குக் கையை நீட்டிக் கொண்டே ''திருவாளர் ஸார்ஜெண்ட் மேஜர், சல்யூட்! ருஷ்ய வழக்கப்படி நிலைப்படிக்கு இப்பால் நின்று கைகுலுக்கக் கூடாது...'' என்றான். கர்னலைப் பார்த்து, ''நானும் கலந்து கொள்ளலாமா? கண்காணிக்க ஆளைப்போட்டு விட்டேன்'' என்று மரியாதையாக வினவினான்.

பொலவ்த்ஸெவையும், லியதியேவ்ஸ்கியையும் உற்றுப் பார்த்து முறுவலித்துக்கொண்டே இருந்தான் கர்னல். ''இவர் தான் கேப்டன் கஸான்த்ஸெவ். திருவாளர் கஸான்த்ஸெவ், உங்களுக்கு இவர்களைத் தெரியுமல்லவா? சரி, இப்பொழுது வேலைக்கு வருவோம், திருவாளர்களே. உங்களது பிரமச்சாரி மேசையில் நாம் உட்காரலாம்.''

பொலவ்த்ஸெவ் பணிவுடன், ''உங்களுக்கு எங்களாலும் ஏதாவது சாப்பிடக் கொடுக்க முடியுமா? எங்களிடமுள்ள அற்ப உணவை ஏற்றுக்கொள்வீர்களா, திருவாளர் கர்னல்?''

''இல்லை, வேண்டாம். நன்றி. விஷயத்தைக் கவனிப்போம். எனக்கு நேரமில்லை. வரைபடம், காப்டன்.''

காப்டன் கஸான்த்ஸெவ், அஸோவ்-கருங்கடல் பகுதியைக் காட்டும் ஜார் கால ராணுவ வரைபடம் ஒன்றைப் பைக்குள்ளிருந்து எடுத்தான். மேசை மீது படத்தை விரித்தான். நான்கு பேரும் மேசை மீது குனிந்து நின்றனர்.

விருந்தாளி, சட்டையின் பொத்தான் இல்லாத கழுத்துப் பட்டையை சரி செய்துகொண்டான். ஒரு நீலநிறப் பென்சிலை எடுத்து மேசை மீது தட்டிக்கொண்டே, ''என்னுடைய பெயர் உங்களுக்கு நினைவிருக்குமென்று நினைக்கிறேன். ஸெதோய் அல்ல... நிகோல்ஸ்கி என்பது தான் என் பெயர். மாட்சிமை மிக்க மன்னரின் ராணுவத்தில் கர்னலாக இருந்தவன். இது ஒரு சிறு வரைபடம்தான். ஆனால் நாம் மேற்கொள்ளப்போகும் சிறிய அளவுப் படையெடுப்புக்கு இது போதுமானது. இதுதான் உங்களுக்கு ஒதுக்கப்படும் வேலை. உங்களிடம் கத்தி பொருத்தப்பட்ட இருநூறு துப்பாக்கிகள் உண்டு. உள்ளூர் கம்யூனிஸ்டுகளை முதலில் ஒழித்துக்கட்ட வேண்டும். ஆனால், எக்காரணங்கொண்டும் தேவையற்ற சண்டையில் இழுபறி வேலை நடத்திக்கொண்டிருக்கக் கூடாது. அடுத்து, 'கிராஸ்னயா ஸரியா' சிவப்பு காலை நட்சத்திரம் அரசாங்கப் பண்ணையை நோக்கிச் செல்ல வேண்டும். போகும் வழியில் உள்ள எல்லாத் தொடர்பு சாதனங்களையும் துண்டித்துவிட வேண்டும். அங்கே உங்களிடம் எதிர்பார்ப்பதை நீங்கள் ஒழுங்காகச் செய்ய வேண்டும் நாற்பது ரைபிள்களைக் கைப்பற்ற வேண்டும். அதற்கேற்ற வெடி மருந்துகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது இது தலையாய கடமை. உங்களுடைய சகலவிதமான துப்பாக்கிகள், எந்திரத் துப்பாக்கிகள், கவனமாக வைத்துக்கொண்டு அரசாங்கப் பண்ணையில் நாற்பது லாரிகளைக் கைப்பற்றிக் கொண்டு மீல்லெரொவோ மீது படையெடுக்க வேண்டும். இன்னும் மற்றுமொரு முக்கியமான வேலை. எத்தனை முக்கியப் பணிகளை உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று பார்த்தீர்களா?.. உங்களுக்கு உத்தரவிடுகிறேன், ஸார்ஜென்ட் மேஜர். மீல்லெரொவோவிலுள்ள பட்டாளப் பிரிவை திடீரெனச் சுற்றி வளைத்துக்கொள்ள வேண்டும். ஒரே அடியில் நொறுக்கிவிட்டு, ஆயுதமற்றவர்களாக்கி, துப்பாக்கிகளையும், தளவாடங்களையும் கைப்பற்றுங்கள். உங்களுடன் சேரத் தயாராக இருக்கும் எந்த செஞ்சேனை வீரனையும் சேர்த்துக்கொள்ளுங்

கள். பின்னர் ரஸ்தோவ் நகரத்தை நோக்கி லாரிகளில் புறப்படுங்கள். நான் உங்களுக்கு மேலெழுந்த வாரியான திட்டவடிவத்தைத்தான் கொடுக்கிறேன். ஆனால் பெரும் பகுதி இதைப் பொருத்துத்தான் இருக்கிறது. ஏதாவது தடங்கல், சிரமம் ஏற்பட்டால், எதிர்ப்புக் கிளம்பினால், மீல்லெரொவோவை விட்டு காமென்ஸ்க் நகரத்துக்குக் குறுக்கு வழியில் போய் விடுங்கள். நான் உங்களை என் படைப் பிரிவுடன் காமெஸ்ஸ்கில் சந்திக்கிறேன்'' என்றான்.

சிறிது நேர இடைவெளிக்குப் பின்னர் தொடர்ந்தான்: ''வடக்கிலிருந்து லெப்டினன்ட் கர்னல் ஸவ்வதேயெவிடமிருந்து உங்களுக்கு உதவி கிடைக்கக்கூடும். ஆனால் நீங்கள் அதை அதிகம் நம்பியிருக்கக்கூடாது. தனித்தே செயல்படுங்கள் நீங்கள் எடுக்கிற முயற்சியில் வெற்றி பெறுவதைப் பொருத்துத்தான் நமது காரியங்கள் நடக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். மீல்லெரொவோவில் உள்ள பட்டாளத்தை நிராயுதபாணியாக்கி, துப்பாக்கிகளையும், தளவாடங்களையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். அங்கு துப்பாக்கிப் படைப் பகுதி ஒன்று இருக்கிறது. அது கிடைத்தால் நமக்கு மிகப் பெரும் உதவியாக இருக்கும். காமென்ஸ்கிலிருந்து ரஸ்தோவைப் பிடிக்க முயற்சிக்கலாம், குபான், தேரெக் பகுதிகளிலிருந்து நமக்கு உதவிகள் வரக்கூடும். பிறகு நமக்குத் துணைபுரியும் நேச சக்திகளிடமிருந்து உதவி கிடைக்கும். அப்புறம் தென்பகுதியின் எஜமானர்கள் நாம் தான். நம்முடைய திட்டத்தில் ஆபத்துக் காத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். ஆனால் நமக்கு மாற்று வழியே கிடையாது! 1930இல் வரலாறு தரும் வாய்ப்புக்களைப் பயன் படுத்திக்கொண்டு, நாம் ஏதாவது செய்யாவிட்டால், இனிமேல் ஜார் நாட்டைக் கைப்பற்றுவதை மறந்துவிட்டு, சிறிய அளவில் பயங்கரவாதத்தில் இறங்கி விட வேண்டியதுதான்... இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். ஸார்ஜென்ட் மேஜர் பொலவ்த்ஸெவ், ஏதும் சொல்ல வேண்டியிருந்தால் இப்பொழுது நீங்கள் பேசலாம். நான் இன்னும் கிராம சோவியத்துக்குப் போய், வந்திருப்பதைக் கூறிவிட்டு, மாவட்டத் தலைமை அலுவலகத்துக்குப் போக வேண்டும். சொல்லப்போனால் நான் ஓர் அதிகாரியாயிற்றே. விவசாய வாரியத்தில் இப்பொழுது நான் ஒரு விவசாய நிபுணன். உங்கள் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லலாம்.''

பொலவ்த்ஸெவ் அவனைப் பார்ப்பதைத் தவிர்க்காமல், கரகரத்த குரலில், ''திருவாளர் கர்னல், எனக்கு, திட்ட வட்டமான விவரங்களைச் சொல்லாமல், மிகப் பெரிய கடமைகளை ஒதுக்கியிருக்கிறீர்கள். அரசாங்கப் பண்ணையை நான் கைப்பற்றுகிறேன். அதற்குப் பிறகு, கஸாக்குகளை நாம் தட்டியெழுப்ப வேண்டும் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், நீங்களோ செஞ்சேனையைப் போய்ச் சந்திக்கச் சொல்கிறீர்கள். என்னிடமுள்ள படை பலத்தை வைத்துப் பார்க்கும்போது, இது முடியாத காரியம் என்பது உங்களுக்கே தெரியவில்லையா? ஒரு தனிப்பட்ட படைப்பிரிவு இப்படி மோதிக்கொண்டால்... அது நான் தொலந்துபோகட்டும் என்று கூறுவது மாதிரி இல்லையா?!''

கர்னல் நிகோல்ஸ்கி மேசைமீது முட்டியைக் குத்தி மெல்ல முறுவலித்தான்.

''உங்களுக்கு ஸார்ஜென்ட் மேஜர் அந்தஸ்து கொடுத்த போது, ஏதோ தவறு நடந்துவிட்டது என்று நினைக்கிறேன். நெருக்கடியான நேரத்தில் நீங்கள் தயங்கி, நமது தாக்குதல் திட்டத்தில் நம்பிக்கை இழந்தால் நீங்கள் ருஷ்யப் படையில் இருப்பதற்கே தகுதியில்லாதவர்! உங்கள் சொந்தத் திட்டங்களை நிறைவேற்ற நீங்கள் முயற்சிக்கவில்லையென்று நினைக்கிறேன்! உங்கள் வார்த்தைகளை நான் எப்படி எடுத்துக்கொள்வது? உத்தரவுபடி நடக்கப் போகிறீர்களா? அல்லது நான் உங்களை இங்கே, இப்பொழுதே பதவி நீக்கம் செய்யட்டுமா?''

பொலவ்த்ஸெவ் எழுந்தான். அவனது பெரிய தலையை அசைத்தவாறே அமைதியாக, ''உங்கள் உத்தரவை நிறைவேற்றுகிறேன், கர்னல்... ஆனால்... இந்தத் தாக்குதலில் தோல்வியடைந்தால், உங்களைத் தான் நீங்கள் குறை சொல்லிக்கொள்ள வேண்டும் அல்லாமல், என்னையல்ல!''

''திருவாளர் ஸார்ஜென்ட் மேஜர், அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்!'' என்று நிகோல்ஸ்கி மகிழ்ச்சியின்றி முறுவலித்து விட்டு எழுந்து நின்றான்.

காப்டன் கஸான்த்ஸெவும் எழுந்தான்.

பொலவ்த்ஸெவைக் கையில் பிடித்துக் கொண்டு, ''துணிச்சல், இதற்கு மேலும் துணிச்சல்! இது தான் நமது பழைய சக்கரவர்த்தியின் பட்டாளத்து அதிகாரிகளிடம் இல்லை! ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாகவும், விவசாய

நிபுணர்களாகவும் ஆகி உங்கள் வேலையில் அசமந்தமாகி விட்டீர்கள். நம்முடைய பாரம்பரியம் எப்படிப்பட்டது? புகழ்மிக்க ருஷ்ய ராணுவத்தின் பாரம்பரியம்? இவைகளை நீங்கள் மறந்து விட்டீர்களா? ஆனால் பரவாயில்லை. சரி, உங்களுக்காகச் சிந்திப்போர் உத்தரவிட்டிருப்பது மாதிரி நீங்கள் தொடங்கலாம்... சாப்பிடச் சாப்பிடத்தான் பசிக்கும்! உங்களை, திருவாளர் ஸார்ஜென்ட் மேஜர் நவரஸ்ஸீய்ஸ்கில் மாஸ்கோ என்றே வைத்துக்கொள்வோமே, எதிர் கால மேஜர் ஜெனரலாகச் சந்திக்க வேண்டும். உங்களது தீக்கண்களைப் பார்க்கும்பொழுது உங்களுக்கு அதிகமான திறமை இருக்க வேண்டுமே! காமென்ஸ்கில் சந்திப்போம். கடைசியாக ஒன்று, தொடங்க வேண்டிய உத்தரவு, ஒரே சமயத்தில் எல்லா இடங்களுக்கும் தனியாக அறிவிக்கப் படும். காமென்ஸ்கில் சந்திக்கும்வரை, வணக்கம்!''

பொலவ்த்ஸெவ் ஒப்புக்கு அவர்களைத் தழுவிக்கொண்டான். கதவைத் திறந்தான். வாசலில் ஆர்வத்தோடு காத்து நின்ற ஒஸ்த்ரவ்னோவின் முகத்தைப் பார்த்தான். விருந்தினர் போன பிறகு படுக்கையில் உட்காராமல், பொத்தென்று வீழ்ந்தான். சிறிது நேரங் கழித்து, சன்னலில் சாய்ந்து நின்று கொண்டிருந்த லியதியேவ்ஸ்கியைப் பார்த்து, ''இவனைப் போல ஓர் அயோக்கியனை எங்காவது பார்த்திருக்கிறீர்களா?'' என்று வினவினான்.

லியதியேவ்ஸ்கியோ வெறுப்போடு தோள்களைக் குலுக்கிக்கொண்டு, ''மேரி ஏசுவின் மாதாவே! இந்த ருஷ்ய வீரர்களிடமிருந்து நீங்கள் வேறு என்ன எதிர்பார்க்கிறீர்கள்?! நீங்கள் என்னைக் கேட்கிறீர்கள் ஏன் உங்களுடன் சேர்ந்தேன், திருவாளர் பொலவ்த்ஸெவ்?!''

இன்னொரு துக்க நிகழ்ச்சி அன்று நடந்தது: த்ரஃபீம் கிடாய் கிணற்றில் வீழ்ந்து முழ்கிவிட்டது. இரவு நேரங்களிலும் கிராமத்தைச் சுற்றிக்கொண்டே திரியும் வழக்கமுடைய த்ரஃபீம், நாய்க்கூட்டத்தில் எங்கோ போய் மாட்டிக்கொண்டது. அவை அதனைத் துரத்தவே, அது நிர்வாக அலுவலகக் கட்டிடத்தில் உள்ள கிணற்றைத் தாண்டிக் குதிக்க வேண்டியதாகிவிட்டது. ஷ்சுக்கார் தாத்தா அன்று மாலை மறதியாக கிணற்றை மூட மறந்துவிட்டான். அதனால், கொஞ்சம் குறைவாகத் தாவிவிட்ட த்ரஃபீம் கிணற்றில் விழுந்து மூழ்கிவிட்டது.

மாலையில் வைக்கோல் பாரத்தைக் கொண்டு வந்து இறக்கிவிட்டு, குதிரைகளுக்குத் தண்ணீர் மொள்ள ஷ்சுக்கார் தாத்தா போனான். தண்ணீரை இறைக்க முயன்றபோது, வாளியில் ஏதோ ஒன்று மெதுக்கெனத் தட்டுப்பட்டது. கயிற்றை அப்படியும், இப்படியுமாக ஆட்டி வாளியைப் போட்டுப் பார்த்தும், தண்ணீரை இறைக்க முடியவில்லை. தன்னுடைய நிரந்தர எதிரியான கிடாய், முற்றத்திலாவது, வீட்டுக் கூரையிலாவது இருக்கக்கூடும் என்ற பயங்கர நினைவோடு சுற்றும் முற்றும் பார்த்தான். ஆனால் வீணாகத்தான் அப்படித் தேடினான்—த்ரஃபீமை எங்கும் காண முடியாது, ஷ்சுக்கார் தாத்தா வைக்கோல் போருக்குப் போனான், பின்னர் வாயிலை நோக்கி நடந்தான். த்ரஃபீம் எங்கும் காணப்படவில்லை... கண்ணீர் மல்க, ஆழ்ந்த கவலையுடன். தவீதவ் இருந்த அலுவலகத்துக்குள் நுழைந்து சோர்வாக பெஞ்சில் சாய்ந்தான். ''நமக்குப் புதியதொரு தொல்லை வந்திருக்கிறது, செமியோன். நம்முடைய த்ரஃபீம் கிணற்றில் வீழ்ந்து மூழ்கி இறந்துவிட்டது போலத் தெரிகிறது. எங்காவது ஒரு துறட்டிதேடி எடுத்துப் போட்டு, கிடாயை வெளியில் இழுக்க வேண்டும்.''

''எதற்காக இப்படிச் சோர்ந்து கலக்கமடைந்து போயிருக்கிறாய்?'' என்று புன்னகையுடன் கேட்டான் தவீதவ். ''நீ தான் அதன் கழுத்தை அறுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டேயிருந்தாயே.''

ஷ்சுக்கார் தாத்தா கோபத்தோடு, ''அதனால் என்ன? நாமா கொன்றோம்? அதில்லாமல், நான் எப்படி வாழ முடியும்? அது என்னை ஒவ்வொரு நாளும், பயந்து நடுங்கிக் கொண்டிருக்க வைத்தது. என் தற்காப்புக்காக, கீழே போடாமல் எந்நேரமும் கையில் சாட்டையை வைத்தபடியே இருந்தேன். இப்போழுது எப்படிப்பட்ட வாழ்க்கையை நான் நடத்தப் போகிறேன்? தனிமையில் நான் வாடுவதா? நானும் அந்தக் கிணற்றில் விழுந்து விடுவதே மேல்... த்ரஃபீமுக்கும் எனக்கும் இடையே இருந்த நட்பு எந்த மாதிரியானது? நட்பே இல்லை. தொடக்கம் முதல் முடிவுவரை ஒரே சண்டைதான். சில சமயங்களில், அந்தப் பிசாசைக் கொம்பைப் பிடித்து நிறுத்திக் கொள்வேன். 'த்ரஃபீம், பிறந்தவனே' என்பேன். 'நீ ஒன்றும் இளம் கிடாய் இல்லை. இவ்வளவு சக்தி உனக்கு எங்கிருந்து வந்

தது? உனக்கு எங்கிருந்து தான் இந்தக் குறும்புத் தனம் பிறக்கிறதோ? ஒரு விநாடிகூடத் தூங்கவிட மாட்டேன் என்கிறாயே. எப்பொழுது பார்த்தாலும் எங்காவது ஒளிந்திருந்து என் முதுகிலே குத்தப் பார்க்கிறாய். நான் ஒரு நோயாளி என்பது உனக்குத் தெரியாதா? என் மீது கொஞ்சமாவது இரக்கம் காட்டக் கூடாதா?..' என்பேன். அப்படியே என்னை முறைத்துப் பார்க்கும். அதிலே மனிதத் தன்மையே இருக்காது. எனவே, சாட்டையால் ஒரு சொடுக்குவிட்டு, அதைப் பார்த்து சத்தம் போடுவேன். 'ஏ, கிழட்டு, போக்கிரியே ஓடிப்போ! உன்னைப் பிசாசு பிடிக்கட்டும்! உன்னிடமிருந்து புத்திசாலித்தனத்தை எதிர்பார்க்கலாமா?' ஒரு பத்து அடி தள்ளி ஓடி நின்று, பசியாக இருப்பது போல புல்லைக் கடித்துத் தின்னும் அந்த அயோக்கியன். ஆனால், எப்பொழுதும் என்மீது கண் வைத்துக் கொண்டே இருந்து. பழையபடியும் என்மீது பாயப் பார்க்கும். அதோடு நான் நடத்திய வாழ்க்கை மிக வேடிக்கையானது. ஏனெனில் அந்தக் கிழட்டு முட்டாளிடமிருந்து ஒரு புத்திசாலித்தனத்தையும் எதிர்பார்க்க முடியாது. இப்பொழுதோ மூழ்கிவிட்டது. அதற்காக வருத்தப்படுகிறேன்? இது என் வாழ்க்கை முழுவதையுமே கெடுத்துவிட்டது...'' என்று சொல்லிவிட்டு ஷ்சுக்கார் தாத்தா பரிதாபமாகப் பெரு மூச்சுவிட்டான். அழுக்குச் சட்டை நுனியால் கண்ணீரைத் துடைத்துகொண்டான்.

தவீதவும், ஷ்சுக்காரும், பக்கத்து வீட்டில் ஒரு துறட்டி வாங்கி கிணற்றில் விழுந்து, ஊதிக்கிடந்த த்ரஂஃபீமை வெளியில் எடுத்தார்கள். ஷ்சுக்காரை விட்டு மறுபுறம் திரும்பிய தவீதவ், ''சரி, என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

இன்னும் பெருமூச்சு விட்டுக்கொண்டே கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த ஷ்சுக்கார், ''செமியோன், நீ போய் அரசாங்க வேலைகளைச் செய். நான் புதைத்துவிட்டு வருகிறேன். உன்னைப் போன்ற இளம் வயது ஆட்கள் அந்த வேலையைச் செய்யக்கூடாது. அது கிழவனுடைய வேலை. நான் ஆழமாகத் தோண்டிப் புதைத்து விடுகிறேன். முறைப்படி செய்துவிட்டு, உட்கார்ந்து அழுதுவிட்டும் வந்துவிடுகிறேன்... இதை வெளியில் எடுக்க உதவியதற்காகக் கடவுள் உன்னை ஆசிர்வதிப்பாராக. நான் ஒருவனாக இதைச் சமாளிக்க முடியாது. இது முப்பது வீசை இருக்கும்போல இருக்

கிறது. இலவசச் சாப்பாட்டில் கொழுத்துப் போய்விட்டது. அது தான் விழுந்து மூழ்கிவிட்டது. இது கொஞ்சம் கனம் குறைவாக இருந்திருந்தால், கிணற்றைத் தாண்டி இருக்க லாம். நாய்கள் விரட்டி பயமுறுத்தி மூளையைக் கலக்கி இப்படிச் செய்ய வைத்திருக்கக்கூடும். இந்த உடைந்த பானையிடமிருந்து என்ன மூளையை எதிர்பார்க்கிறாய்? ஒரு புட்டி வோத்கா வாங்கக் காசு கொடு, செமியோன். இன்று இரவு வைக்கோல் போரில் இதன் நினைவாக நான் குடிக்க வேண்டும். இன்று நான் கிழவியிடம் போவதென்பது புத்தி சாலித்தனமான காரியமல்ல. அப்படிச் செய்தால் என்ன நடக்கும் தெரியுமா? அவ்வளவுதான், எல்லாமே கெட்டு விடும். இல்லையென்றால், இன்னொரு சண்டை. இந்த வயதில் எனக்கு அது வேண்டாம். எனவே, அமைதியாகக் குடித்துவிட்டு, குதிரைக்குத் தண்ணீர் காட்டி விட்டு, தூங்கப்போய் விடுவேன். அதுதான் விஷயம்!''

சிரிப்பையடக்க தன்னாலான அத்தனையையும் செய்த தவீதவ், ஷ்சுக்காரிடம் பத்து ரூபிள் நோட்டைக் கொடுத்து விட்டு, அவனது தோள்களில் கையை வைத்து, ''தாத்தா, இது பற்றி ரொம்பவும் வருத்தப்படாதே. நீ விரும்பினால், இன்னொரு கிடாயையும் வாங்கிவிடுவோம்.''

தலையை ஆட்டிக்கொண்டே, ஷ்சுக்கார் தாத்தா, ''இது மாதிரி ஒரு கிடாயை உங்களால் எவ்வளவு பணம் கொடுத் தாலும் வாங்க முடியாது. இது மாதிரிக் கிடாய் இந்த உலகிலேயே இருந்ததில்லை! நானே எனக்குள் கவலைப் பட்டுக்கொள்கிறேன்'' என்று கூறிய அவன் ஒரு மண் வெட் டியைத் தேடிப் புறப்பட்டான். கொஞ்சம் வளைந்த சிறிய உருவம், மிகவும் பெரிய அளவில் பாதிக்காத நிலையில் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

மிகப்பெரிதும், சிறிதுமான நிகழ்ச்சிகள் ஒரு நாளில் இவ்வாறு நடந்து முடிந்தது.

அத்தியாயம் இருபத்தொன்பது

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு, தவீதவ் தன்னுடைய அறைக்குப் போய் அஞ்சலகலகத்திலிருந்து* வந்திருந்த

* சோவியத் யூனியனில் சந்தாதார்களுக்குப் பத்திரிகை கள் அஞ்சலகம் வாயிலாகவே விநியோகிக்கப் படுகிறது. —மொ-ர்.

பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது சன்னல் விளிம்பின் ஓரத்தில் மெதுவாகத் தட்டும் சப்தம் கேட்டது. அவன் சன்னலைத் திறந்தான். குடிசைச் சுவரின் திட்டு ஒன்றில் ஒரு காலை மிதித்து நின்றுகொண்டு அவனிடம், ''ஒரு வேலை செய்ய வேண்டி இருக்கிறது! உள்ளே வருகிறேன். நான் உனக்குச் சொல்லவேண்டியது இருக்கிறது...'' என்றான் நகூல்னவ்.

அவனது பழுப்புவண்ண முகம் வெளிறிப்போய் பதட்டத்துடன் காணப்பட்டது. சன்னல் வழியாக காலைத் தூக்கிப் போட்டு, ஒரே எட்டில் நாற்காலிக்குப் போய்விட்டான். முழங்காலைக் கையால் தட்டிக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

''செமியோன், நான் எச்சரித்தபடியே நடந்துவிட்டது. அப்படித்தான் நடந்தது! நான் ஓர் ஆளைப் பார்த்துவிட்டேன். ஒஸ்த்ரவ்னோவின் வீட்டுக்கு வெளியில், இரண்டு மணிநேரம் காத்துக் கிடந்தேன். ஒரு குட்டை ஆள், ஓணான் மாதிரி ஊர்ந்துகொண்டு வந்தான். அந்தத் திருடர்களில் அவனும் ஒருவனாக இருப்பான் என்று நினைக்கிறேன்... நான் குறிபார்ப்பதில் சற்று நேரமாகிவிட்டது. இருட்டும் பயங்கரம். நான் வயல்வெளிக்குப் போயிருந்தேன். இன்னொருவனும் இவனுக்கு முன்னால் வந்திருக்கக் கூடும், என்னமோ? எப்படியிருப்பினும் சரி. நாம் போகலாம். போகும் வழியில் ரஸ்மியோத்னவை நாம் அழைத்துக் கொள்வோம். நேரத்தை இனி வீணாக்கக் கூடாது. ஒஸ்த்ரவ்னோவ் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது பிடித்துவிடுவோம்! அவர்கள் எல்லாரையும் பிடிக்க முடியாவிட்டால், இந்த ஓர் ஆளை மட்டுமாவது பிடிப்போம்'' என்றான் மக்கார்.

தவீதவ் தலையணைக்கடியில் கையை விட்டு வெளியில் பிஸ்டலை எடுத்தான்.

''எப்படிப் பிடிப்போம்? முதலில் அதை முடிவு செய்து கொள்வோம்.''

நகூல்னவ் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு லேசாகப் புன்னகை செய்தான்.

''இது மாதிரி வேலையை நான் இதற்கு முன்னரே செய்திருக்கிறேன். இங்கே கவனி. அந்தக் குட்டையான ஆள் கதவைத் தட்டவில்லை. மாறாக, நான் இப்பொழுது

தட்டியது மாதிரி சன்னலைத் தட்டினான். முற்றத்தைப் பார்த்தபடி ஒஸ்த்ரவ்னோவ் வீட்டில் ஒரு சன்னல் இருக்கிறது. அந்த அழிவுக்காரன் ஒரு மேலங்கியோ, கையற்ற தளர்மேற்சட்டையோ அணிந்திருந்தான். இருட்டில் அது என்ன என்று சரியாகத் தெரியவில்லை. அவன் சன்னலைத் தான் தட்டினான். யாக்கவ் லுக்கீச்சோ, அவனது மகனோ, கொஞ்சமாகக் கதவைத் திறந்தான். அவன் உள்ளே போனான். உள்ளே போகும்பொழுது, ஒரு முறை சுற்று முற்றும் பார்த்துவிட்டுப் போனான். கதவுக்குள் நுழையும் பொழுதும், மீண்டும் திரும்பிப் பார்த்து விட்டுப் போனான். நான் அங்கு படுத்துக்கொண்டுதான் இத்தனையையும் பார்த்தேன். நல்லவர்கள் இப்படியா போவார்கள்? செமியோன், இவ்வளவு கண்காணிப்பு தேவையில்லை அல்லவா? அவர்களைப் பிடிக்க இந்தத் திட்டத்தை நான் சொல்கிறேன். நீயும் நானும் கதவைத் தட்டுவோம். முற்றத்தில் சன்னலருகே எச்சரிக்கையுடன் அந்திரேய் பதுங்கியிருக்கட்டும். நமக்கு யார் கதவைத் திறப்பார்கள் என்பது நிச்சயமில்லை. வராந்தாவில் வலது கைப்புறம் தான் முதல் இருப்பதாக நினைவு. அது பூட்டியிருந்தால் உடைத்துத்தள்ள வேண்டியது தான். நாமிருவரும் உள்ளே போவோம். யாராவது சன்னல் வழி குதித்தால், அந்திரேய் கவனித்துக்கொள்ளட்டும். இந்த இரவுப் பறவைகளை உயிரோடு கண் சிமிட்டுகிறாற் போலப் பிடித்துவிடலாம்! நான் கதவைத் தள்ளிக் கொண்டு போகிறேன். நீ எனக்குப் பின்னால் நில். ஏதாவது தவறாக நடந்தால், அறைக்குள்ளிருந்து வரும் எந்தச் சத்தமாயிருந்தாலும் அதை நோக்கி சுட்டுத்தள்ளு. கேள்வியே தேவையில்லை!''

தவீதவை மக்கார் உற்று நோக்கினான். அவனது உதடுகளில் மீண்டும் முறுவலிப்புத் தெரிந்தது.

''உன் துப்பாக்கியை வைத்துக்கொண்டிருக்கும் பொழுதே, அதில் தோட்டா இருக்கிறதா என்று சரி பார்த்துக் கொள்வது நல்லது. சன்னல் வழியாகவே நாம் வெளியே போய் விட்டு, அடைப்பானை வெளியிலிருந்து போட்டுவிடுவோம்.''

மக்கார் இடைவாரைச் சரிப்படுத்திக்கொண்டான். சிகரெட்டுத் துண்டைத் தரையில் போட்டுவிட்டு, தூசி படிந்த

காலணிகளின் நுனிகளையும், அதில் ஏறியிருந்த அழுக்கையும் பார்த்துவிட்டு மீண்டும் முறுவலித்தான்.

''இந்த அயோக்கியர்களுக்காக நான் என்னையே நாய்க்குட்டி மாதிரி ஆக்கிக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. அவர்களுக்காக நான் எல்லா நேரமும் தரையில் படுத்திருக்க வேண்டியதாகிவிட்டது... இப்பொழுது ஓர் ஆள் வந்து சேர்ந்து விட்டான்... இரண்டு, மூன்று பேராவது இருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். ஒரு சிறு சேனைப்பகுதியாக நிச்சயமாக இராது.''

தவீதவ் பிஸ்டலை மடக்கி, உள்ளே தோட்டாவை மாட்டிவிட்டு, மீண்டும் பைக்குள் போட்டுக்கொண்டான்.

''மக்கார், இன்றைக்கு ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறாயே? இங்கே ஐந்து நிமிடந்தான் உட்கார்ந்திருந்தாய், அதற்குள்ளாக மூன்று தடவைகள் முறுவலித்து விட்டாயே...''

''செமியோன், மிகவும் மகிழ்ச்சிதரக்கூடிய வேலை காத்திருக்கிறது. நான் காரணத்தோடு தான் சிரிக்கிறேன்.''

சன்னல் வழியே அவர்கள் வெளியேறினர். பலகணி நழுவடைப்புச் சட்டங்களை மூடிவிட்டு, கண நேரம் வெறுமனே நின்றார்கள். இரவு கணகணப்பாக இருந்தது. நீரோடையிலிருந்து குளிர்ந்த மென்காற்று வீசிற்று. கிராமமே தூங்கிக்கொண்டிருந்தது. பகல் நேரக் கவலைகள் இப்பொழுது இல்லை. எங்கோ இருந்து ஒரு கன்று 'ம்மா' எனக் கத்திற்று. கிராமத்தின் மறு ஓரத்திலிருந்து சில நாய்கள் குரைத்தன. நேரந் தெரியாத ஒரு சேவல் தூக்கக் கலக்கத்தோடு திடீரெனக் கூவிற்று. ஒரு வார்த்தைகூடப் பேசிக்கொள்ளாமல் ரஸ்மியோத்னவ் வீட்டுக்கு இருவரும் நடந்தனர். ஒரு விரலை மடக்கி, அதனால் அவன் விட்டு சன்னலில் தட்டினான். கண நேரங் கழித்து மங்கிய ஒளியில் அந்திரேயின் முகம் தெரிந்தது. மக்கார் ரிவால்வரைக் காட்டி வருமாறு சைகை செய்தான்.

வீட்டிற்குள்ளிருந்து, கம்மிய கரகரத்த குரல் ஒன்று பேசுவதை தவீதவ் கேட்டான். ''அது சரி. இதோ வந்து விட்டேன்.''

ரஸ்மியோத்னவ் உடனே வெளியில் படிமீது வந்து நின்றான். கதவைச் சாத்திக்கொண்டே, ''நியூரா, நீ எல்லாவற்றையும் அறிய விரும்புகிறாயா! சோவியத் அலுவலகத்திற்கு

அவசர வேலைக்கு என்னை அழைக்கிறார்கள். சும்மா விளையாடப் போகவில்லை! போய்த்தூங்கு. பெருமூச்சுவிடாதே. சீக்கிரம் திரும்பிவிடுகிறேன்'' என்று நச்சரிப்பது போலக் கூறினான்.

மூவரும் ஒன்றாகக் கூடினார்கள். ரஸ்மியோத்னவ் மிகுந்த மகிழ்ச்சியோடு, ''அவர்களைக் கண்டுபிடித்து விட்டீர்களா?'' என்று கேட்டான்.

நகூல்னவ் குசுகுசுவென நடந்ததை விவரித்தான்.

...அமைதியாக ஒஸ்த்ரவ்னோவ் வீட்டு முற்றத்திற்குள் நுழைந்தார்கள். ரஸ்மியோத்னவ், வெளியில் சன்னலுக்கருகில் சுவரில் முதுகைச் சாய்த்து, முழங்கால் மீது ரிவால்வரை வைத்துக் கொண்டு கிடந்தான். மணிக்கட்டு வலியெடுக்காமலிருக்க வேண்டுமென்பது அவனது ஆசை.

நகூல்னவ்தான் முதலில் வராந்தாவில் ஏறினான். கதவருகே போனான். கொண்டி சடசட என ஆடிற்று. வீடும், வராந்தாவும், மிக அமைதியாக இருந்தது. ஆனால் இந்த அமைதி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. வராந்தாவிலிருந்து வந்துகொண்டிருந்த ஒஸ்த்ரவ்னோவின் குரல் கேட்டது: ''இந்த இரவு நேரத்தில் எந்தப் பிசாசு இங்கே வருகிறதோ?''

''இந்நேரத்தில் எழுப்புவதற்கு வருத்தப்படுகிறேன், லுக்கீச்; இது மிக அவசரம். இப்பொழுதே அரசாங்கப் பண்ணைக்குப் போயாக வேண்டும். காத்திருக்க முடியாது'' என்று நகூல்னவ் விடையளித்தான்.

ஒரு நிமிடம் கலக்கம் நிறைந்த அமைதி.

பொறுமையிழந்த நகூல்னவ், ''நீ என்ன? சீக்கிரம் திற!'' என்று கத்தினான்.

''மிகவும் நேரங்கெட்ட நேரத்தில் வந்திருக்கிறீர்களே, தோழர் நகூல்னவ். இங்கு ஒரே இருட்டாக இருக்கிறது... எங்கே தாழ்ப்பாளையும்... லேசில் கண்டுபிடிக்க முடியாது. உள்ளே வாருங்கள்.''

ஒரு பெரிய இரும்புத் தாழ்ப்பாள் சுழன்று அகன்றது, கதவு திறந்தது.

முழுவீச்சோடு இடது தோளால் கதவை முட்டித் தள்ளினான் நகூல்னவ். ஒஸ்த்ரவ்னோவைச் சுவர்ப் பக்கம் தள்ளிவிட்டு உள்ளே நடந்த நகூல்னவ், தோளுக்கு மேலாக தவீதவிடம், ''அவன் அசைந்தால் சுட்டுத்தள்ளு!'' என்று சொல்லிவிட்டு உள்ளே நடந்தான்.

மனிதர்கள் நடமாட்டத்தைக் காட்டும் வெதுவெதுப்பு நிறைந்த காற்று அறை முழுவதும் நிறைந்து, நகூல்னவின் மூக்கை துளைத்தது. ரிவால்வரை வலது கையில் பிடித்துக் கொண்டு, பக்கத்திலிருந்த வீட்டுக் கதவைத் தேடினான். அது சரியாகத் தாழ்ப்பாள் போடப்பட்டிருக்கவில்லை, அதை உதைத்துத் திறந்தான்.

''யார் உள்ளே? சுடுவேன்!''

இவனது சத்தத்தோடு சேர்ந்து ஒருகை வெடி குண்டு வாசற்படியில் விழுந்து வெடிப்பதும், அதே சமயத்தில் காது செவிடுபடும்படியாக எந்திர துப்பாக்கியின் வேட்டுகளும் தொடர்ந்து கேட்டன. இரவு நேரத்தில் பயங்கரம் பரவியது. கண்ணாடிகள் உடைந்து நொறுங்கும் சப்தம். வராந்தாவிருந்து ஒரே வேட்டு. தொடர்ந்து ஒரு சப்தம்...

பிரமித்து நின்ற நகூல்னவை கைவெடி குண்டுச் சிதறல்கள் அதே இடத்தில் உடம்பைச் சிதைத்துக் கொன்றுவிட்டன. இவனைத் தொடர்ந்து பாய்ந்த தவீதவ், இருள் கவ்வியிருந்த அறைக்குள் இரு முறை சமாளித்துச் சுட்டான். ஆனால் அதற்குள் எந்திரத் துப்பாக்கியின் குண்டு ஒன்று அவனையும் சுட்டு வீழ்த்தியது.

நினைவிழந்த தவீதவ் தரையில் தள்ளாடிச் சாய்ந்தான். வேதனை தாங்க முடியாமல் தலை பின்னால் தொங்கிற்று. குண்டடித்துக் கதவிலிருந்து பிய்த்துக்கொண்டு வந்த ஒரு சிப்பியைக் கையில் பிடித்தவாறே தள்ளாடினான்.

* * *

மெதுவாக, ஓ! மிகவும் மெதுவாக, குறுக்கு நெடுக்குவாக்கில் நான்கு இடங்களில் சுட்டு ஊடுருவப்பட்ட பரந்த மார்பிலிருந்து அவனது உயிர் கொஞ்ச கொஞ்சமாக வெளியேறிக் கொண்டிருந்தது... இருட்டில் தடுமாறி உள்ளே நுழைந்த அவனது நண்பர்கள், புண்பட்ட அவனை ஆட்டி அலைக்கழிக்காமல் தூக்கிச் சென்றனர். தூக்கி வந்ததிலிருந்து ஒரு முறைகூட அவனுக்கு உணர்வு திரும்பவே இல்லை. பதினாறு மணி நேரமாக அவன் சாவோடு இறுதிப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தான்...

குதிரைகளுக்கு நுரைதள்ள, மாவட்ட அறுவை சிகிச்சை மருத்துவர் வண்டியில் வந்து இறங்கினார். வயதுக்கும் மிகைப்பட்ட வினயம் உள்ளவராகக் காணப்பட்ட ஓர்

இளைஞர் தவீதவ் இருந்த அறையில் பத்தே நிமிடங்கள் தான் இருந்தார். கிரெமியாச்சி கிராமத்தில் இருந்த கம்யூனிஸ்டுகள், அவனிடம் அன்பு கொண்டிருந்த கம்யூனிஸ்டு அல்லாத கூட்டுப்பண்ணை விவசாயிகளான தவீதவின் நண்பர்கள் எல்லாரும் பதட்டத்துடன் அமைதியாக சமையலறையில் நின்றிருந்தனர். தூங்குகிறவன் விடுகிற மூச்சு மாதிரி ஒரு சத்தம்—மூச்சுமட்டும் வெளியில் கேட்டுக்கொண்டே இருந்தது. அறுவைசிகிச்சை மருத்துவர் சமையலறைக்குள் நுழைந்தார். சட்டைக் கைகளை மடக்கி விட்டுக்கொண்டு, ஒரு துண்டில் கையைத் துடைத்தார். அவரது முகம் வெளிறிப் போய், வெளித் தோற்றத்திற்கு அமைதியாக இருந்தது. கேட்காமல் கேட்கப்பட்ட அந்தக் கேள்விக்கு அவர் கூறிய பதில், ''நம்பிக்கையில்லை. என்னுடைய உதவி தேவைப் படவில்லை. ஆனால், அபார சக்தி இருக்கிறது! இவரை நகர்த்த வேண்டுமென்று நினைக்காதீர்கள். சொல்லப்போனால் தொடவே தொடாதீர்கள். கிராமத்தில் ஐஸ் கிடைக்குமா?.. இல்லையென்றால் பரவாயில்லை. ஆனால், அவருக்குப் பக்கத்திலேயே யாராவது ஓர் ஆள் இருக்க வேண்டும்.''

ரஸ்மியோத்னவும், மய்தானிக்கவும் அவரைத் தொடர்ந்து அறையை விட்டு வெளிவந்தனர். ரஸ்மியோத்னவின் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன. சமையலறையில் கூடியிருந்த கூட்டத்தை அவனது கண்கள் பொருளற்ற முறையில் வெறித்துப் பார்த்தன. மய்தானிக்கவ் தலையைத் தொங்கப் போட்டு இருந்தான். கழுத்திலே முடிச்சு முடிச்சாகச் சுருண்டிருந்த நரம்புகள் புடைத்து விம்மி நின்றன. நெற்றியில் இருந்த இரு ரேகைகளும் ரத்தக்கீறல் மாதிரி சிவந்து போயிருந்தன. மய்தானிக்கவைத் தவிர மற்றவர்களனைவரும் வராந்தாவுக்குப் போனார்கள். வாசற்படிக் கதவில் சாய்ந்து தலையைத் தொங்கப் போட்டு நின்றான் ரஸ்மியோத்னவ். அவனது தோள்பட்டைகளின் மீது கழுத்து சாய்ந்திருந்தது. கிழவன் ஷாலீய் வேலியோரம் போய் இனந்தெரியாத வெறியுடன், ஏக்கக் கோபத்துடன் கண்களை மூடிக்கொண்டு, ஒரு கம்பத்தைப் பற்றி நின்றான். தியோம்கா உஷக்கோவ் குற்றம் செய்த பள்ளிப் பையன் மாதிரி களஞ்சியச் சுவர்ப் பக்கம் முகத்தைத் திருப்பி, மழைநீர்க் கறை படிந்த சுவர்ப்பக்குகளை நகத்தால் கீறி

எடுத்துக்கொண்டு, கன்னங்களில் வடிந்த கண்ணீரைத் துடைக்கக்கூடக் கவலைப்படாது நின்றான். தங்களது நண்பனின் இழப்பை நினைத்து ஒவ்வொரு வரும் அவரவர்க்கு உரிய முறையில் தங்களது வேதனையைக் காட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் எல்லாரையும் வாட்டி வதைத்த பெரும் வேதனை பொதுவானது தான்.

அன்றிரவு தவீதவ் இறந்தான். சாவதற்கு முன்னர் அவனுக்கு ஒரு முறை உணர்வு திரும்பிற்று. படுக்கைக்கு அருகே அமர்ந்திருந்த ஷ்சுக்கார் தாத்தா மீது ஒரு விநாடி அவனது கண்கள் படிந்து நின்றன. "எதற்காக அழுகிறாய், தாத்தா?" என்று மெதுவாக தளர்ந்த குரலில் சொன்னான். ஆனால் அதற்குள்ளாக வாயில் ரத்தம் கொப்புளித்துவிட்டது. சிரமத்துடன், உடலை நெளித்து அதை விழுங்க முயன்ற தவீதவின் வெண்ணிறக் கன்னங்கள் தலையணையில் சாய்ந்தது. அந்த வாக்கியத்தை எப்படியோ சொல்லி முடித்தான்: "அழுவதற்கு அவசியமே இல்லை..." என்று கூறி முடித்தான். புன்னகை செய்யக்கூட முயன்றான்.

நீண்ட வேதனை முணகலுக்குப் பின் அமைதியாகி விட்டான்...

...அன்புடன் நெஞ்சார நேசித்த தவீதவுக்கும், நகூல்னவுக்கும், தோன் பகுதிக் குயில்கள் இறுதி வணக்கப் பாடல்களை இசைத்தன, முதிர்ந்து விளைந்து கொண்டிருந்த கோதுமைகள் முணுமுணுத்தன, எங்கோ இருந்து கிரெமியாச்சிக்கு மேலே உள்ள பள்ளத்தாக்கிலிருந்து ஓடும் பெயர் தெரியாத நீரோடையின் அடியில் கிடக்கும் கூழாங்கற்களும் கிசுகிசுத்தன... அவ்வளவு தான்!

* * *

இரண்டு மாதங்கள் கடந்தன. வெண்ணிற மேகங்கள், முதிர்வேனிற் காலத்திற்கு உரிய முறையில் கூட்டம் கூட்டமாக, கிரெமியாச்சி கிராமத்துக்கு மேல், உயர்வானில் அலைந்து கொண்டிருந்தன. கோடை வெயில் அவைகளின் நிறத்தையெல்லாம் அபகரித்துவிட்டன. ஆனால் ஆற்றங் கரையில் இருந்த பாப்ளார் மரங்களின் துளிர் இலைகள் இளஞ் சிவப்பிலும், தங்க நிறத்திலும் மின்னின. ஆற்றின் நீரும், சுத்தமாகவும், குளிர்ச்சியாகவும் ஓடியது. பள்ளிக்கூடத்துக்கு அதிகத் தொலை வில்லாத கிராமத்து சதுக்

கத்தில் இருந்த தவீதவ், நகூல்னவ் ஆகியோர் புதைக்கப் பட்ட கல்லறைகளின் மீது, முதிர்வேனிற்கால வெயிலில் சில சின்னஞ்சிறு புற் பூண்டுகள் பச்சையாக முளைத்திருந் தன. புல்வெளியில் துளிர்க்கும் ஒரு கொடியும், வேலியில் வளைந்து வளர்ந்து ஒரு பூவோடு நின்று, தனது சோக வாழ்வை பறைசாற்றி நின்றது. சமாதிக்கு அருகாமை யிலேயே, ஆகஸ்டு மழைக்குப்பிறகு முளைத்த மூன்று சூரிய காந்திப் பூச்செடிகள், சிரமப்பட்டு பாதி வளர்ச்சியை எட்டிவிட்டு, தரையிலிருந்து வீசும் மென்காற்றில் ஆடிக் கொண்டு நின்றன.

இந்த இரண்டுமாத காலத்தில் கிரெமியாச்சி ஓடையில் எவ்வளவோ நீர் ஓடிவிட்டது. கிராமத்திலும் எவ்வளவோ மாற்றங்கள். தனது நண்பர்கள் இருவரையும் புதைத்த பிறகு, ஷ்சுக்கார் தாத்தாவின் தோற்றத்தில் பெரிய மாறு தல்கள் ஏற்பட்டன. முதுமையால் அடையாளம் தெரியாத அளவு காணப்பட்டான். யாரோடும் உறவாடாமல் தனி மையில் அமைதியாக, முன்னெப்போதையும் விட அழுது கொண்டே இருந்தான்... சமாதியில் தனது தோழர்களைப் புதைத்த பிறகு வீட்டுக்குப் போய் நான்கு நாட்கள்வரை படுக்கையிலேயே கிடந்தான். ஒரு முறை கூட எழவில்லை. நாலாம் நாள் எழுந்தபொழுது அவனது வாய் ஒரு மாதிரிக் கோணிப் போய் இருந்ததையும், முகத் தோற்றமே மாறிப் போய் இடது பக்கமாக இழுபட்டு இருந்ததையும் கண்டு அவன் மனைவி அஞ்சினாள்.

கிழவி பயத்தோடு கையை நீட்டி, ''உனக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

வாயடைத்தவனாய் சிறிது நேரம் அமைதியாக நின்ற ஷ்சுக்கார் தாத்தா, வாயின் இடது கோடியில் வடிந்த எச் சலைத் துடைத்துக்கொண்டு, ''ஒன்றுமில்லை. இறந்து போன அந்த இளைஞர்களைப் பார். எனக்கும் ஓய்வு எடுக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. தெளிவாகிவிட்டதா?'' என்றான்.

மேசையை நோக்கி மெதுவாக நடந்தபொழுது, அவனது இடது காலை இழுப்பதுபோலத் தோன்றியது. இடது கையை சிரமத்தோடு தூக்கி சிகரெட்டைச் சுருட்டினான்.

''என்ன கிழவி, பார்த்தாயா? பச்சைவாதம் என்னைப் பற்றிக் கொண்டு விட்டதுபோலும், பிசாசே! சிறிது நேரத்

துக்கு முன்னாலிருந்த மனிதனாக இப்பொழுது நான் இல்லை.'' என்று வியந்தவனாய் இடது கையைப் பார்த்துக் கொண்டே பெருமூச்செறிந்தான்.

இருப்பினும், ஒரு வாரத்தில் தனது சக்தியை மீண்டும் பெற்றுவிட்டான். அவனால் காலை ஊன்றி நடக்க முடிந்தது. இடது கையையும் சிரமமின்றி உபயோகிக்க முடிந்தது. ஆனால், திட்டவட்டமாக வண்டி யோட்ட மட்டும் மறுத்துவிட்டான். அலுவலகத்துக்குப் போய் புதிய தலைவர் கொந்திராத் மய்தானிக்கவிடம் தனது முடிவைத் தெரிவித்து விட்டான்.

''கொந்திராத் தம்பி, நான் வண்டியோட்டிய காலமெல்லாம் முடிந்து விட்டது. குதிரைகளை என்னால் இனி கட்டி மேய்க்க முடியாது.''

''தாத்தா, உன்னைப் பற்றி ரஸ்மியோத்னவும், நானும் யோசித்துக்கொண்டு தானிருந்தோம்'' என்று மய்தானிக்கவ் பதில் சொன்னான். ''கிராமப் பண்ட சாலையின் இரவுக் காவலர் வேலையை ஏற்றுக் கொள்கிறாயா? ஒரு சிறு அறை கட்டி உள்ளே கணப்பு அடுப்பு, படுக்கை எல்லாம் போட்டுக் கொடுத்துவிடுகிறோம். குளிர் காலத்துக்கு ஒரு மேலங்கி, ஆட்டுத்தோல், நல்ல காலணிகள் எல்லாம் கொடுக்கிறோம். அந்த வேலை உனக்குச் சரியாக இருக்குமா? உனக்குக் கூலியும் கிடைக்கும், வேலையும் சுலபம், எல்லாவற்றிற்கும் மேலாக செய்வதற்கென்று ஒரு வேலையும் உனக்கு இருக்குமல்லவா? என்ன சொல்கிறாய்?''

''கடவுள் உன்னைக் காப்பாராக, அது எனக்கு பொருந்தும். கிழவனை மறக்காமலிருப்பதற்கு நன்றி. எந்தவகையிலும் இப்பொழுது வரவர எனக்குத் தூக்கமே வர மாட்டேன் என்கிறது. அந்த இளைஞர்களுக்காக உருகி உருகித் தேய்ந்து கொண்டே இருக்கிறேன். எனக்குத் தூக்கமே வருவதில்லை... சரி, நான் போய் குதிரைகளிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வருகிறேன், பிறகு வீட்டுக்குப் போக வேண்டும். இந்த வேலையை யார் மேற்கொள்ளப் போகிறீர்கள்?''

''பெஸ்ஹிலேப்னவ் கிழவன்தான்.''

''ஆகா, அவன் சரியான ஆள். நான் கொஞ்சம் இளைத்துப் போய்விட்டேன். அவர்கள் என்னைக் கைவிட்டு விட்டார்கள். தவீதவும், மக்காரும் என் உயிரின் ஒரு பகுதியை

எடுத்துச் சென்று விட்டனர். அவர்கள் இருந்திருந்தால் அவர்களோடு சேர்ந்து, ஓர் ஆண்டோ, இரண்டு ஆண்டு களோ இந்த உலகில் வாழ்ந்திருக்க முடியும். அவர்கள் இல்லாமல் உலக வாழ்க்கை சிரமமாகிவிட்டது...'' என்று குல்லாய் நுனியால் கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே ஷ்சுக்கார் கிழவன் சொன்னான்.

அன்றிரவே காவற்காரனாக அவன் பணியைத் தொடங்கினான்.

அவனது நண்பர்கள் இருவருடைய சமாதியும் மிக அருகாமையில் தான் இருந்தது. பண்டசாலைக்கு எதிர்புறத்தில் இருந்தது ஷ்சுக்கார் ஒரு கோடரியையும், ரம்பத்தையும் எடுத்து சிறு பெஞ்சு ஒன்று செய்து கொண்டான். சமாதியைச் சுற்றி இருந்த வேலியோரமாக அதைப் போட்டு இரவு நேரத்தில் அங்கு தான் உட்கார்ந்து கொள்வான்.

''எனது நண்பர்களிடம் எவ்வளவு நெருக்கமாக இருக்க முடியுமோ அவ்வளவு நெருக்கமாக இருக்கிறேன்...'' என்று ரஸ்மியோத்னவிடம் சொன்னான். ''நான் அவர்கள் பக்கத்தில் இருப்பதால், அவர்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். எனக்கும் நிம்மதியாக இருக்கிறது. என் வாழ்வில் எனக்குக் குழந்தைகளே இருந்ததில்லை, அந்திரேய். இப்பொழுது, எனக்கு இரண்டு பையன்கள் இருந்து, இருவரையும் ஒரே தடவையில் இழந்து விட்டதாகக் கருதுகிறேன்... இரவும், பகலும், அவர்களை நினைத்து என் நெஞ்சம் வலிக்கிறது. எனக்கு அமைதியைக் காண முடியவில்லை!''

தன்னுடைய கருத்தையெல்லாம் மய்தானிக்கவுடன், கட்சியின் புதிய செயலாளரான ரஸ்மியோத்னவ் பறிமாறிக் கொண்டான்.

''நமது ஷ்சுக்கார் தாத்தா இப்பொழுது எவ்வளவு பெரிய அளவுக்கு மாறிப்போய்விட்டான் என்பதைப் பார்த்தாயா, கொந்திராத்? இளைஞர்களுக்காகவே வருந்தித் தேய்கிறான். அவன் முன்னைப்போல இல்லை. கிழவன் சீக்கிரம் செத்துவிடுவான் போல இருக்கிறது... தலை ஆடத் தொடங்கிவிட்டது, கைகளும் முழுக்கக் கருப்பாகிவிட்டன. இவனை இழப்பதென்றால், பரிதாபமாக இல்லையா? கிழவனோடு, மிகவும் பழகிப் போய்விட்டோம். அவனில்லாமல் இந்தக் கிராமமே வெறிச் சோடிப்போய் விடுமே'' என்று துயரத்துடன் சொன்னான் ரஸ்மியோத்னவ்.

பகற்காலம் சுருங்கிற்று. காற்று மேலும் தெளிவாயிற்று. இப்பொழுது, காற்று இற்றுப்போன மரவாடையைக் கொண்டுவரவில்லை. மாறாக, கிராமத்துக்கப்பால் களத்தில் வைக்கப்பட்டிருந்த வைக்கோலின் வாடையைத் தாங்கி வந்தது.

கதிரடிப்பு நடந்தபொழுது ஷ்சுக்கார் தாத்தாவின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்தது. தானியத்தைத் தூற்று கிறவர்கள் இரவு வெகுநேரம் வரை வேலை செய்தார்கள். இரவெல்லாம் மாவரைக்கும் கல்லை ஓட்டிக்கொண்டே இருப்பார்கள். குதிரை கனைக்கிற சத்தமும் ஆட்கள் பேசு கிற இரைச்சலும் கேட்டுக்கொண்டே இருந்தது. ஆனால், இப்பொழுது அவையும் ஓய்ந்து விட்டன. இரவுவேளை நேரம் **நீண்டது**. இருள் மேலும் கருப்பாயிற்று. வேறு குரல் கள் கேட்டன. சதுப்பு நிலத்திலிருந்து கொக்குகள் முணகும் குரல் கேட்டது. முக்குளிப்பான் பறவை ஒன்று கத்துவதும், அதற்கு மற்றொன்று பதில் சொல்வதும் கேட்டது. வாத்துக் கள் அடக்கமாகக் கத்துகிற சத்தமும் கேட்டது. சிறவிப் பறவையின் இறகுகள் சிறகடிக்கும் ஓசையும் கேட்டது.

''நல்ல, வெட்பமான பகுதிகளை நோக்கிப் பறவைகள் புறப்பட்டுவிட்டன போலும்'' என்று ஷ்சுக்கார் தாத்தா தனிமையில் முணுமுணுத்துக் கொண்டான்.

ஒரு நாள் மாலை நேரத்துக்குப் பின், இருள் கவ்விய பிறகு, கரு நிறத் துணியால் தலையைப் போர்த்திக்கொண்டு ஒரு பெண் ஷ்சுக்கார் தாத்தா முன் வந்து அமைதியாக நின்றாள்.

''யாரம்மா நீ?'' என்று ஷ்சுக்கார் தாத்தா, வீணாக அவளைப் பார்க்க முயற்சித்தபடி கேட்டான்.

''நான் தான் தாத்தா, வார்யா...''

தன்னால் எவ்வளவு வேகமாக எழ முடியுமோ அவ் வளவு வேகத்தில் எழுந்தான் ஷ்சுக்கார் தாத்தா.

''ஓ! என் சின்னஞ்சிறிய தூக்கணாங்குருவியே, வந்துவிட் டாயா? நீ எங்களை எல்லாம் மறந்துவிட்டாயோ என்று நினைத்தேன்... வார்யா, நம்மையெல்லாம் எப்படி இவன் இவ்வாறு அநாதை ஆக்கினான்? இந்த வாயில் வழியாக போம்மா. அதுதான் அவனது சமாதி... நீ சிறிது நேரம் அவனோடு இரு. அதற்குள்ளாக பண்ட சாலைக்குப் போய், பூட்டெல்லாம் சரியாக பூட்டப்பட்டிருக்கிறதா என்று

பார்த்துவிட்டு வருகிறேன்... இந்தத் தள்ளாத வயதிலும் நான் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது...'' என்று வேத னையோடு சொன்னான்.

பொட்டலைக் கடந்து நொண்டிக்கொண்டே நடந்து சென்ற ஷ்சுக்கார் தாத்தா ஒரு மணி நேரம் கழித்துத் தான் வந்தான். தவீதவினுடைய சமாதியின் தலைமாட்டிற்கரு கில் முழந்தாவிட்டு உட்கார்ந்திருந்தாள் வார்யா. ஷ்சுக்கார் தாத்தாவின் சாமர்த்தியமான செருமலைக் கேட்டு அவள் எழுந்தாள். வார்யா எழுந்து வாசல் வழியே வெளியே வந்தாள். திடீரென்று சாய்ந்து திரும்பி, வேலியைப் பிடித்துக் கொண்டு நின்றாள். அவள் அமைதியாக நின்றாள். கிழவ னும் அமைதியாக நின்றான். பின்னர் வார்யா மெதுவான குரலில் சொன்னாள்: ''நன்றி தாத்தா. அவரோடு சிறிது நேரம் தனிமையில் இருக்க அநுமதித்ததற்காக நன்றி...''

''இதிலென்ன இருக்கிறது? இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்?''

''காரியமாகத்தான் திரும்பி வந்துவிட்டேன். காலையி லேயே வந்துவிட்டேன், இருட்டட்டும் என்று இருந்து விட்டு இப்பொழுதுதான் வருகிறேன். அப்போதுதான் ஆட்கள் என்னைப் பார்க்க மாட்டார்கள்...''

''உன் படிப்பு என்ன ஆயிற்று?''

''விட்டுவிட்டேன். நானில்லாமல், வீட்டைச் சமாளிக்க முடியாது.''

''செமியோன் இதை விரும்பியிருக்க மாட்டான் என்று நினைக்கிறேன்.''

''ஆனால், நான் என்ன செய்ய முடியும், தாத்தா?'' என்று சொன்னபோது அவள் குரல் படபடத்தது.

''நான் என்ன யோசனை சொல்லப் போகிறேன். நீயாகத் தான் உன்னைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். அவன் செய்ய விரும்பியதற்குத் தவறு செய்து விடாதே. அவன் உன்னைக் காதலித்தான், உண்மையாகத்தான்!''

வார்யா திரும்பி நடக்காது ஓடத் தொடங்கிவிட்டாள். கிழவனிடம் போய் வருகிறேன் என்று கூட சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிட்டாள்.

காலை விடியல் வரை இரவு முழுக்க, முக்கலும் முனக லும், கேட்டுக்கொண்டே இருந்தது. பெஞ்சின்மீது முதுகை வளைத்து விடியும்வரை தூங்காமல் ஏக்கத்தோடு பெரு

மூச்சு விட்டுக்கொண்டே கண்ணீர் வடித்தவாறு ஷ்சுக்கார் உட்கார்ந்திருந்தான்...

* * *

எதிர்ப்புரட்சிக்காரர்களின் சதிவலைப் பின்னல் கொஞ்சம் கொஞ்சமாக முடிச்சு அவிழ்ந்து வந்தது. தோன் பகுதிக் கிளர்ச்சிக்கான திட்டமும் வெட்ட வெளிச்சமாயிற்று.

தவீதவ் இறந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, மண்டல அலுவலக ரகசியப் போலீசார், ரஸ்தோவிலிருந்து, கிரெமியாச்சி கிராமத்துக்கு வந்தனர். ஒஸ்த்ரவ்னோவின் முற்றத்தில் ரஸ்மியோத்னவ் சுட்டு வீழ்த்திய ஆள், ரகசியப் போலீசாரால் நீண்ட காலமாகத் தேடப்பட்ட கொலைகாரன் லியதியேவ்ஸ்கி தான் என்பது வெளிப்பட்டது. அவன் வெள்ளை ராணுவப் படையைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினன்.

மூன்று வாரங்களுக்குப் பிறகு, தாஷ்கெந்துக்கு அருகில் உள்ள, அரசாங்கப் பண்ணையில், அண்மையில் கணக்கனாகச் சேர்ந்த கலாஷ்னிக்கவ் என்ற வயதான ஆளிடம் சாதாரணமாக உடையணிந்த ஒருவன் வந்தான். கிழவன் அமர்ந்திருந்த மேசையின் மீது குனிந்து, ''திருவாளர் பொலவ்த்ஸெவ். இங்கு மிக வசதியாக இருக்கிறீர்கள்... நிதானமாக இருங்கள்! கண நேரம் நாம் வெளியே போகலாமா? முன்னால் நடங்கள்!''

நரைத்த முடியுடன் வெளிவராந்தாவில் இவர்களுக்காக சாதாரண உடையணிந்த இன்னொரு ஆள் காத்துக்கொண்டிருந்தான். உள்ளே வந்த இளந்தோழரைப் போல, இவர் ஆரவாரமில்லாத அமைதியான பண்பாட்டுடன் நடந்து கொள்ளவில்லை. பொலவ்த்ஸெவைப் பார்த்தவுடன், விழிகள் உருள, வெளுத்த முகத்துடன், வெறுப்புக் கக்கும் போக்குடன் நெருங்கினான்.

''ஏ கேடுகெட்ட பாம்பே! நீ வெகுதூரம் ஊர்ந்து நெளிந்து வந்துவிட்டாய்... இந்த வளையில் எங்களுக்குத் தெரியாமல் நுழைந்துகொண்டு விடலாம் என்று நினைத்தாயோ? கொஞ்சம் பொறு! ரஸ்தோவில் நாம் கொஞ்சம் பேசிக்கொள்வோம்! நீ சாவதற்கு முன்னால் உன்னைத் துடித்துக் கதறவிடுகிறேனா இல்லையா...''

''ஓகோ, எவ்வளவு பயங்கரம்! அடேயப்பா என்னை

எப்படி பயமுறுத்துகிறாய்! கொழுந்து இலை மாதிரி பயத்தால் நடுநடுங்கி நிற்பதைப் பார்த்தாயா?'' என்று பொலவத்ஸெவ் கிண்டலாகப் பதிலடி கொடுத்தான். படிமீது நின்று ஒரு மட்டரக சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். ரகசியப் போலீசாரை வெறுப்பு உமிழும் ஏளனச் சிரிப்போடு பார்த்தான்.

அந்த இடத்திலேயே அவனை சோதனை செய்தார்கள். பணிவோடு ஒவ்வொரு பக்கமாகத் திரும்பினான். ''இங்கே கவனி, உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்! என்னிடம் ஆயுதங்கள் இல்லை—எதற்காக அவற்றை நான் என்னோடு தூக்கிக்கொண்டு திரிய வேண்டும்? என்னுடைய பிஸ்டல் எனது தங்குமிடத்தில் பத்திரமாக இருக்கிறது. வாருங்கள் போகலாம்!''

போகிற பாதையில் அமைதியாகவும், ஒழுங்கான முறையிலும், ரகசியப் போலீசாரிடம் பேசிக்கொண்டே வந்தான்.

''ஐயா அப்பாவி என்னை எப்படி பயமுறுத்தலாம் என்று நினைக்கிறாயா? சித்திரவதை செய்தா? அது ஒன்றும் நடக்காது. நான் எதற்கும் தயார். நான் எதையும் தாங்கிக்கொள்ளவும் தயார். ஆனால், சித்திரவதைக்கே அவசியமில்லை. ஏனெனில், நானே எதையும் மூடி மறைக்காமல், ஒளிவு மறைவின்றிச் சொல்லப் போகிறேன்! ஓர் அதிகாரி என்ற முறையில் உனக்கு நான் இந்த வாக்குறுதியைக் கொடுக்கிறேன். என்னை இரு முறை உன்னால் கொல்ல முடியாது. ஒரு சாவுக்கு நான் எப்பொழுதோ தயாராகிவிட்டேன். நாங்கள் தோற்றுவிட்டோம். இனி வாழ்க்கையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. வாய்ச் சொல்லாட முயல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். நான் அப்படிப்பட்ட ஆர்ப்பாட்டமான வேலைகளை விரும்புகிறவன் அல்ல. இது மிகத் தெளிவான கசப்பான உண்மை. தோற்றவன் அதனை ஒப்பி ஈடு செய்ய வேண்டுவதே கௌரவமான முறையாகும். நான் என் உயிரையும் அதற்கு ஈடாகக் கொடுக்கத் தயார். சாவு என்னை பயமுறுத்தாது!''

''வாய்ச் சவாரி போதும். சும்மா வாயை மூடு. உன்னைச் சரியான முறையில் கக்க வைக்கத்தான் போகிறோம்'' பொலவத்ஸெவின் பேச்சைக் கேட்ட அந்த நபர் அறிவுரை சொன்னார்.

அவன் தங்கியிருந்த அறையைச் சோதனையிட்டபோது,

பிஸ்டலைத் தவிர வேறு தவறான சதிவேலைக்கான சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை. மட்டரக ஒட்டுப் பலகைப் பெட்டியில் எந்தவித குறிப்பேடுகளும் இல்லை. ஆனால், மேசைமீது லெனினுடைய இருபத்தைந்து தொகுதிகளும் வரிசையாக, அழகாக அடுக்கப்பட்டிருந்தன.

''இவை உங்களுக்குச் சொந்தமானவையா?''

''ஆமாம்.''

''இந்தப் புத்தகங்களை எதற்காக வைத்திருக்கிறீர்கள்?''

அவன் அகங்காரத்துடன் சிரித்தான். ''எதிரியைத் தோற்கடிக்க அவனுடைய ஆயுதங்களைத் தெரிந்திருக்க வேண்டாமா?..''

அவன் தன் வார்த்தையைக் காப்பாற்றினான். விசாரணையின்போது. கர்னல் ஸெதோய்-நிகோல்ஸ்கி என்ற சிடானையும், கேப்டன் கஸான்த்ஸெவையும் காட்டிக் கொடுத்தான். கிரெமியாச்சி கிராமத்திலும், சுற்றுவட்டத்திலும் இருந்த தனது இயக்கத்தைச் சேர்ந்த ஆட்களின் பெயர்களை நினைவிலிருந்தே சொன்னான்.

நிகோல்ஸ்கி மற்றவர்களைக் காட்டிக் கொடுத்தான்.

அஸோவ் கருங்கடல் பகுதியில் பெருவாரியான கைது வேலை நடந்தது. ஒஸ்த்ரவ்னோவும அவனது மகனும் உட்பட, சுமார் அறுநூறுக்கு மேற்பட்ட கஸாக்குகளுக்கு, இந்த சதிவேலையில் ஈடு பட்டதற்காக பல்வேறு தண்டனைகள் விதிக்கப்பட்டன. நேரடியாக பயங்கரச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மட்டுமே சுடப்பட்டார்கள். பொலவ்த்ஸெவ், நிகோல்ஸ்கி, கஸான்த்ஸெவ், ஸ்தாலின்கிராது பகுதியைச் சேர்ந்த லெப்டினன்ட் கர்னல் ஸவ்வதேயெவ், அவனது இரு உதவியாளர்கள், ஒன்பது வெள்ளைப்படை அதிகாரிகள், மாஸ்கோவில் புனைபெயரில் வாழ்ந்துவந்த ஜெனரல்கள் ஆகியோர்க்கு, மரணதண்டனை விதிக்கப்பட்டது. மாஸ்கோவுக்கு அருகில் கைது செய்யப்பட்ட ஒன்பது பேர்களில், ஒருவன் கஸாக்கிய லெப். ஜெனரல். இவன் தெனீகின் ராணுவத்தில் மிகப் பிரபலமாக விளங்கியவன். இவன்தான் இந்த சதித்திட்டத்துக்கு எல்லாம் தலைவனாக இருந்து வந்தான். வெளிநாட்டு ராணுவங்களோடும் தொடர்பு கொண்டிருந்தான். மைய அமைப்பைச் சேர்ந்த நான்கே நான்கு பேர்தான் கைதாகாமல் தப்பி அகப்படாமல் எப்படியோ எல்லையைக் கடந்து ஓடிவிட்டனர்.

தென் ருஷ்யாவில், சோவியத் அரசுக்கு எதிராகக் கிளப்ப முயற்சிக்கப்பட்ட எதிர்ப்புரட்சி, வரலாற்றின் முன்முடிவுப் படி, இவ்வாறாக அழிந்து முடிவுக்கு வந்தது.

* * *

வார்யா ஊர் திரும்பிய சில நாட்களுக்குப் பிறகு, ஷாஹ்திக்குப் பயணம் போய் இருந்த ரஸ்மியோத்னவ் கிராமத்திற்குத் திரும்பினான். ஒரு கதிரடிக்கும் எந்திரம் வாங்க, மய்தானிக்கவ் அவனை அனுப்பி இருந்தான். ரஸ்மி யோத்னவ், மய்தானிக்கவ், கிராமத்தில் புதிதாக உருவாக்கப் பட்ட இளைஞர் கம்யூனிஸ்ட் சங்கத்தின் செயலாளரான இவான் நய்தியோனவ் ஆகிய மூவரும் அன்று மாலை பின் னேரத்தில் அலுவலகக் கட்டிடத்தில் கூடினர். போய்வந்த விபரத்தையும், கதிரடிப்பு எந்திரம் வாங்கியதையும் விவர மாகக் கூறிய ரஸ்மியோத்னவ் பிறகு கேட்டான்: ''வார்யா ஹர்லாமவா கிராமத்துக்குத் திரும்பிவிட்டதாக அவர்கள் சொல்கிறார்கள், தனது பயிற்சியை விட்டுவிட்டாள் என் கிறார்கள். துப்த்ஸோவிடம் அவன் குழுவில் தன்னை எடுத்துக் கொள்ளச் சொல்லிக் கேட்டாளாமே? இது உண்மையா?''

மய்தானிக்கவ் பெருமூச்சு விட்டான். ''ஆமாம், அது உண்மைதான். அவள் அம்மாவும், அவர்கள் குடும்பத்தில் உள்ள குழந்தைகளும் வாழ வேண்டாமா? எனவே படிப்பை விட்டுவிட்டாள். அவள் மிகக் கெட்டிக்காரப் பெண்.''

ரஸ்மியோத்னவ் இதுபற்றி ஏற்கெனவே யோசித்து முடித்து விட்டான். தான் சொன்னால் இப்பொழுது அனை வரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு பேசி னான்.

''அவள் நம் செமியோனைத் திருமணம் செய்துகொள் வதாக இருந்தாள். இவள் கட்டாயம் போய்ப்படிக்க வேண் டும். அவன் அதைத்தான் விரும்பினான். எனவே நாம் அதைச் செய்தாக வேண்டும். நாளை அவளை இங்கே அழைப்போம். அவளோடு பேசி பள்ளிக்கே திரும்ப அனுப்பி விடுவோம். கூட்டுப்பண்ணையின் பொறுப்பில் அவளது குடும் பத்தை வைத்துக்கொள்வோம். நமது அருமைத் தோழன் செமியோன் இப்போது நம்மிடையே இல்லை. அவனது குடும்பப் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்வோம். எதிர்ப்பு ஒன்றும் இல்லையே?''

மய்தானிக்கவ் அமைதியாகத் தலையை அசைத்தான். உற்சாகமடைந்த இவான் நய்தியோனவ், ரஸ்மியோத்னவின் கையைப்பிடித்துக் குலுக்கிக்கொண்டே, ''அந்திரேய் மாமா, மிக அருமையாகச் செய்தாய்!''

இச்சமயம் ரஸ்மியோத்னவ் திடீரென்று எதையோ நினைத்தான்.

''நண்பர்களே. ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேன்... ஷாஹ்தியின் தெருவில் நான் யாரைச் சந்தித்தேன் என்று தெரியுமா? யார் என்று நினைக்கிறீர்கள்? லூஷ்கா நகூல்னவாவைத் தான்! ரொம்ப கனத்து, தடித்து, சதைப்பிடிப்போடு, ஒரு வழுக்கைத்தலை ஆளோடு பார்த்தேன்... அவளைப் பார்த்தேன். ஆனால் அவள் தானா, இல்லையா என்று என்னால் ஒரு விநாடி முடிவு செய்ய முடியவில்லை! எப்படிக் கனத்து விட்டாள் தெரியுமா? கண்கூட உள்ளே மடிப்புக்குள் போய் கீரல் மாதிரித் தெரிகிறது. மூன்று பேர் கூடி கைகோர்த்தால்தான் அவளைச் சுற்றிப்பிடிக்க முடியும். ஆனால் அவள் நடந்து கொண்ட முறையில் இருந்துதான் அவளைத் தெரிந்து கொண்டேன். எனவே, அவளிடம் போய், 'எப்படி இருக்கிறாய் லூஷ்கா?'' என்று கேட்டேன். 'நீ தானா?!' என்றும் கேட்டேன். அவள் திரும்பி, 'நீங்கள் யார் என்று தெரியவில்லையே, குடிமகனே' என்றாள். எனவே நான் சிரித்தேன். 'ஏது, உன்னுடைய சொந்த ஆட்களையே இவ்வளவு சீக்கிரம் மறந்து விட்டாயே! நீ லூஷ்கா நகூல்னவா இல்லையா?' என்றேன். நகர்ப்புறத்து ஆட்கள் செய்வது போல் உதட்டை நெளித்துக் கடித்துக் கொண்டு, 'நான் நகூல்னவாக இருந்தேன். லூஷ்காவாகவும் இருந்தேன். ஆனால், இப்பொழுது நான் திருமதி லுகேர்யா நிகீதிச்னா ஸ்விரீதவா. இவர்தான் என் கணவர். சுரங்க எஞ்சினியர் ஸ்விரீதவ்? என்றாள். எனவே அவர் கையைக் குலுக்கினேன். அவர் என்னை அருவருப்போடு பார்த்தபடி என் மனைவியுடன் இப்படிப் பாதி வழியில் பேசிக்கொண்டிருக்கும் இவன் யார் என்பது போலப் பார்த்தார். பின்னர் அவர்கள் போய் விட்டனர். இருவரும் நல்ல கனம். அவர்களுக்கு பரமதிருப்தி போலும். 'இந்தப் பெண்கள் பலே பேர்வழிகள்!' என்று தான் நினைத்துக் கொண்டேன். 'மக்கார் வாழ்க்கை முழுக்க இவர்களை எதிர்த்துச் சண்டை போட்டுக் கொண்டிருந்ததில் வியப்பேதுமில்லை!

திமஃபேய், மக்கார் இருவரையும் இப்பொழுது தான் புதைத்தாள், இதோ மூன்றாவது ஆளுடன் ஒட்டிக்கொண்டுவிட்டாள்!' அவள் ஒட்டிக் கொண்டதில் வியப்பில்லை. ஆனால், இப்படிப் பயங்கரமாக அவளால் எப்படிக் கனக்க முடிந்தது?! இதைப் பற்றி யோசித்துக் கொண்டே தெருவில் நின்றுவிட்டேன். ஏதோ ஒரு வகை இரங்கல் கவலை பிறந்துவிட்டது. அந்தத் துடிப்பு நிறைந்த அழகி லூஷ்காவுக்காக வேதனைப் பட்டேன். எல்லாம் கனவு போலத் தெரிந்தது. இந்த ஊரில் அவளோடு வாழாதவன் போலும், அவளை எனக்குத் தெரியாதது போலவும்... ஒரு கனவுபோல'' ரஸ்மியோத்னவ் பெருமூச்செறிந்தான். ''ஓகோ இப்படி இருக்கிறாயா! வாழ்க்கையின் சுழற்சி இப்படி ஆக்கி விட்டதா? நாமே முயன்றாலும், நினைத்தாலும் செய்ய முடியாத இடத்துக்கு அது நம்மைக் கொண்டுபோய் விட்டுவிடும். அது சரி! இப்பொழுது நாம் போலாமா?'' என்று பேச்சை முடித்தான் ரஸ்மியோத்னவ்.

படிகளில் போனார்கள். தோன் பகுதியின் மறுபுறத்தில் இருள் கவ்விய புயல் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன. மின்னல் ஒளியோடு பாய்ந்தது. இடியோசை கடகடவென வெடித்தோடியது.

''இந்த ஆண்டு இடி மழை மிகவும் காலதாமதமாக வந்துள்ளது. இல்லையா?'' என்றான் மய்தானிக்கவ். சற்று பார்த்து ''ரசிப்போமா?'' என்றான்.

''நீங்கள் ரசித்துக்கொண்டிருங்கள். நான் போய் வருகிறேன்.'' ரஸ்மியோத்னவ் வணக்கம் சொல்லிவிட்டு படிகளில் மெதுவாக ஓடினான். கிராமத்தை விட்டு அப்பால் வெளியில் போனான். கிராமத்து மயானத்தை நோக்கி நடந்தான். குறுக்கும் நெடுக்குமாக உடைந்து கிடந்த சிலுவைகள், வேலிகள், இவற்றையெல்லாம் சுற்றிவளைத்துத் தாண்டி தான் விரும்பிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான். குல்லாயை எடுத்தான். நரைத்த தலையைத் தடவிவிட்டுக் கொண்டான். குழி விழுந்திருந்த சமாதியைக் குனிந்து பார்த்தவண்ணம், ''நீ கடைசியாக தஞ்சமடைந்த இடத்தை நான் சரியாகக் கவனிப்பதில்லை, யெவ்தக்கீயா?..'' என்றான். குனிந்து ஒரு கைபிடி உலர்ந்த களிமண்ணைக் கையால் எடுத்துக்கொண்டு கரகரத்த குரலில், ''ஆனால். நான் இன்னும் உன்னைக் காதலிக்கிறேன். நீ ஒருத்தி தான்

எனக்கு. உன்னை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்... எனக்கு நேரம் இல்லை. அது தான்... நாம் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை... உனக்கு நான் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்துவிடு, கண்ணே... சாவிலும் உன்னை வருத்திய எதையாவது நான் செய்திருந்தாலும் மன்னித்துவிடு...''

வெறுந் தலையுடன், ஏதோ பதிலை எதிர்பார்ப்பது போல வெகுநேரம்வரை நின்றான். ஆடாமல் அசையாமல், தோள்களைத் தொங்கப்போட்டு, கிழவனைப்போல நின்றான். முகத்தில் மென் காற்று வீசிற்று. மழையும் பெய்யத் தொடங்கியது... தோன் பகுதிக்கப்பால் மின்னல் பளீர் பளீர் என மின்னிற்று. இப்பொழுது அவனது கண்கள், குழிவிழுந்திருந்த அவனது அன்புக்குரிய சமாதியின் மூலையை கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பூமியைத் தொடும் விண்ணின் விளிம்புக்கு அப்பால், கண்ணுக்கெட்டாத தூரத்தில், வான்வெளியில் பாதி ஒரே நெருப்புக் கோளமாய்த் தெரிந்தது. இயற்கை புது வாழ்வுக்குத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தது. அந்த ஆண்டின் கடைசிப் புயல் மழை, முழுக் கோபத்துடன், ஆவேச வெறி வேகத்தில், கோடை மழை போல கொட்டு கொட்டெனக் கொட்டிற்று.

முற்றும்

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை; திருநெல்வேலி ஜங்ஷன்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்